உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று
மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

இருபத்தொன்றாந்தொகுதி.

VOL-XXI.

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்
பதிப்பு.

1922-23.

செந்தமிழ்

இருபத்தொன்றாந்தொகுதியின்

உள்ளுறை.

இத்தொகுதியில் வெளிவந்தநூல்கள்.

(முற்றுப்பெறுதவை.)

1. கூடற்புராணம்:—உதவிப்பத்திராதிபர் (பகுதி) க, உ, ங, ச.
2. பெருந்தொகை:—ஸ்ரீமத். மு. இராகவையங்கார் (பகுதி) கஉ

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவு கணக்கு (பகுதி) சு, எ, அ, கூ.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி-ஹு கார்த்திகை-மீ [பகுதி க.
Vol. XXI. November–December–1922. No. 1.

விஞ்ஞானதீபம்.

உற்பத்திவிளக்கம்.

சூரியசந்திரோற்பத்தி.

"ஆயிரங்கதிராழியொருபுறந்தோன்றகலத்தான்
மாயிருந்திசைசூழவருகின்றவரவுணர்த்த
மனக்கலமலரிணையுமலர்த்துவான்றனுத
லினக்கமலமுணர்த்துவபோன்றெவ்வாயும்வாய்திறப்பக்
குடதிசையின்மறைவதூஉமறையென்றுகொள்ளாமைக்
கடவுளர்தமுறங்காதகண்மலரேகரிபோக
ஆரிருளும்புலப்படுவானவனேயென்றுலகறியப்
பாருலகத்திருள்பருகும்பரிதியஞ்செல்வதேள்!

மண்டலத்தினிடைநின்றுவாங்குவார்வைப்பாராய்
விண்டலத்திற்கடவுளரைவெவ்வேறுவழிபடுவார்
ஓங்குலகமுழுதுபொரத்திருவுருவினொன்றாகி
ஆங்கவரைவேறுவேறளித்தியென்றறியாரால்;

மின்னுருவத்தாரகைநீவெளிப்பட்டவிடியல்வாய்
நின்னுருவத்தொடுங்குதலானெவிசும்பிற்காணுதா
ரெம்மீனுங்காலைவாயிடைகரந்துமாலைவாய்
அம்மீனைவெளிப்படுப்பாய்நீயேயென்றறியாரால்;

தவாமதியர்தொறுநிறையத்தண்கலையக்கலைதேயா
துவாமதியமுன்னுவெந்தொன்றாகுமென்றுணரார்

தம்மதியினொளிபுக்கவிருளகற்றுத்தவற்றாற்கொல்
அம்மதியம்படைத்தாயுநீயேயென்றறியாரால்;
நீராகிநிலம்படைத்தனை—நெருப்பாகிநீர்பயந்தனை
வளியொழிவிற்காற்றெழுவினை—ஒளிகாட்டிவெளிகாட்டினை;
கருவாயினை-விடராயினை-கதியாயினை-விதியாயினை
உருவாயினை-அருவாயினை-ஒன்றாயினை-பலவாயினை;

எனவாங்கு,

விரிதிரைப்பெருங்கடலமிழ்தத்தன்ன
ஒருமுதற்கடவுணிற்பரவுதுந்திருவொடு
சுற்றந்தழீஇக்குற்றநீங்கித்
துன்பர்தொடராவின்பமெய்திக்
கூற்றுத்தலைபணிக்குமாற்றல்சான்று
கழிபெருஞ்சிறப்பின்வழிவழிபெருகி
நன்றறிபுலவர்நாப்பண்
வென்றியொடுவிளங்கிமிகுகம்யாமெனவே"

என்னும் இப்பாலிப்பாட்டு இவ்வதிகாரத் துள்ளுறைபொருளைத் தருவ தோடு தெய்வவணக்கமுங் கூறுதலாற் பாயிரமாகுந் தகைமையது.

2. "மதியம்படைத்தாயுநீ" என்பதனை ஆராய்வாம். இந்நூல் விஞ்ஞானநூலாதலின் இதன்கட்கூறப்படும் பொருளனைத்தும் காட்சி யளவை கருத்தளவை என்னும் எல்லையிகந்துவருதல் கூடாது. இவ் விரண்டளவையுங்கொண்டு மதியம் பரிதியினாற் படைக்கப்பட்டதென் னும் உண்மையை நிச்சயிப்பாம். முற்பக்கநாட்களிற் சூரியாஸ்தமன காலத்திற் சந்திரன் வானமண்டலத்திற் பொருந்திநிற்கிற நிலையையும் அவனது கலையளவையுங் கருதிநோக்குவோமாக. படுசுடரமயத்து மதியம் வானத்துச்சியில் நிற்கின்றநாள் முற்பக்கத்து எட்டாநாளாகும். இந்நாளிற் சந்திரவிம்பம் அரைவட்டஉருவாகத் தோற்றும், ஒளிபெற்ற பாகம் சூரியனை நோக்கிநிற்கும். எட்டாநாளுக்கு முந்தியநாட்களில் எற்படுகாலையிற் சந்திரன் மேற்றிசைக்கண்ணே அரைவட்டத்திற் குறைந்த பிறைவடிவாகத் தோற்றுவன். உச்சிவானந் (Zenith)தொட்டு அடிவானம் (Horizon) வரையுமுள்ள வட்டவாரத்தை (வட்டவாரம், வட்டத்தின் நாலிலொருபங்கு, (Quadrant,) வட்டபாகம் Semi-circle)த் தொண்ணூறுபாகை (Degree)யாகப் பிரிப்பாம், உவா

(அமாவாஸ்யை) நாளிற் சூரியனை அடைந்துநின்ற மதியம் தினமொன்றுக்குச் சராசரி பன்னிரண்டுபாகை யகன்று ஏறக்குறைய ஏழரைநாட்களில் உச்சிவானத்தை யடைகிறது. சந்திரதரிசனஞ்செய்தநாட்டொடங்கி அட்டமிநாள்வரையும் சூரியாஸ்தமனகாலத்திற் சந்திரனுடைய பாகையகற்சியையுங் கலையளவையும் நோக்கிவருவோமாயின் சந்திரன் மேற்கினின்று கிழக்குநோக்கி யகலுகிறானென்னு முண்மையினையும் அகலஅகலக் கலைவளர்ச்சி கூடுகிறதென்ற உண்மையினையும்உணர்ந்துகொள்வோம். பத்தாநாளிற் சந்திரன் மேற்குத்திசையடிவானத்திலிருந்து நூற்றிருபதுபாகை அதாவது கிழக்குத்திசையடிவானத்திலிருந்து அறுபதுபாகை யகன்று நிற்பதையும், விம்பம் மூன்றிலிரண்டுபாகம் நிறைவுற்றிருப்பதையுங் காண்போம். பூரணைநாளிற் சந்திரவிம்பம் முழுவட்டமாயிருப்பதையும் சூரியாஸ்தமனகாலத்திற் சந்திரோதயமாவதையுங் காண்போம். இந்நிலையிற் கோளமாகிய பூமி வடக்குத்தெற்குநோக்கிக்கிடக்கும் தனது நாராசத்தில் (Axis) வண்டிச்சக்கரம்போலவும் ஆடுகின்ற பம்பரம்போலவும் இடமாக அதாவது மேற்கிலிருந்து கிழக்குநோக்கிச் சுழலுகிறதென்னும் உண்மையினை மனதிற் சிந்திப்போமாயின் சூரியசந்திரர் நிலைபெயராதிருப்பினும் பூமியினது சுழற்சியினாற் சூரியசந்திரர் பூமியை வலம்வருவதாகத் தோற்றுதல்கூடுமென்பது புலப்படும். எங்ஙனமோவெனின், புகைவண்டியிலிருப்போனுக்கு வண்டியினசைவுதோற்றாது மலையும் மரனும் அசைவதாகத்தோற்றும் பொய்த்தோற்றம்போலவென்க. சந்திரதரிசனமானநாட்டொடங்கிப் பூரணைநாள்வரையும் சூரியாஸ்தமனகாலத்திற் சந்திரனை நோக்கிவருவோமாயின் மேற்றிசையடிவானத்திலிருந்து கீழ்த்திசையடிவானத்துக்குச் சந்திரன்வரப் பதினைந்துநாட்கள் செல்லுமென்பது புலப்படும். வட்டபாகத்திற்குப் பதினைந்துநாட்கள் வேண்டியிருந்தமையால் முழுவட்டத்துக்கும் முப்பது நாட்கள் வேண்டும். ஆகவே ஏறக்குறைய ஒருமாதத்திற் சந்திரன் பூமியை இடமாகச் சுற்றிவருகிறதென்பது பெறப்படுகின்றது. சூரியகிரணங்கள் சந்திரன்மேற்பட அதனால் ஒளிபெற்றபாகம் பூரணைநாளில் முற்றாகத்தோற்றும், அந்நாளிற் சூரியனும் சந்திரனும் மேற்கிலுங் கிழக்கிலுமாகப் பூமியினோடு ஒரேமட்டத்திலிருத்தல் காரணமாக அமாவாசைதினத்திலும் இவைமூன்றும் ஒரேமட்டத்திலிருப்பினும் சந்திரன் பூமிக்குஞ் சூரியனுக்கு மிடையில் நிற்றலால், சூரியப்பிரகாசம்பட்ட

பாகம் பூமியிலிருப்போர்க்குத் தோற்றுதபாக மாகிறது. அகலஅகலச் சிறிதுசிறிதாகக் கலைகூடிப் பூரணைத்தினத்திற் கலைநிறைந்து பின்பு அறுகஅறுகக் கலைகுறைந்து அமாவாசைத்தினத்திற் கலை யற்றுப் போகிறது. இதனாற் சந்திரன் சுயம்பிரகாசமற்றதென்றும் சூரியப்பிரகாசம் தன்மேற்படுவதனால் ஒளிபெறுவதென்று மறிகின்றோம். அறிவுவிளக்கமில்லாத மாந்தரே இதனையறியார் என்னும் பொருடோன்றத் "தம்மதியிலொளிபுக்கங்கிருளாகற்றுத்தவற்றாற்கொல்,—அம்மதியம்படைத்தாயுநீயேயென்றறியாரால்" என்றார். சந்திரனுடைய ஒளியைமாத்திரமல்ல; உடலையுந் தந்தவன் சூரியனும் என்பதனைப் பின்னர்க் காட்டுதும்.

3. மாலைக்காலத்தில் மேற்குத்திசையிலேனும், அதிகாலையிற் கிழக்குத்திசையிலேனும் தோற்றுகிற அழகுவாய்ந்த சுக்கிரநக்ஷத்திரம் வானமண்டலத்துக்கு ஓர் அணிகலமாக விளங்குவது. நக்ஷத்திரம் என்னும் பொதுமொழி அசுவினிமுதல் இருபத்தேழு உடுக்கூட்டங் (Constellation) களுக்கும் சிறப்பாக வுரியது. புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழம், சனி, குபேரன், (Uranus), வருணன் (Neptune) ஆகிய ஏழும் கிரகங்கள் என்னும் சிறப்புப்பெயருடையன. இவற்றுக்கும் உடுக்கூட்டங்களுக்கும் உள்ள பேத மென்னையெனில், உடுக்கூட்டங்கள் சூரியனேபோன்று சுயம்பிரகாசமுடையன; கிரகங்கள் சந்திரனைப் போன்று சூரியனுடையவொளி தம்மேற்படுவதனாற் கட்புலனுக்குத் தோற்றுவன. இஃ தெங்ஙனம் அறிவமெனில், சுக்கிரன், வியாழன், முதலிய கிரகங்களனைத்தும் சூரியனை அணுகஅணுகக் கலைகுறைந்து சந்திரனைப் போலப் பிறைவடிவாகவும், அரைவட்டவடிவாகவுந் தோற்றுதலா லறிவோமென்க. இங்ஙனம் தோற்றுகிற தோற்றத்தைத் தூரதரிசனியென்னுங் கண்ணாடிமூலமாகப் பார்க்கலாம். கண்ணொளிகுறைந்தோர் மூக்குக் கண்ணாடியிட்டுக்கொள்வதுபோலக் கழிபெருந்தூரத்திலிருக்கும்பொருள்களை நோக்குவதற்குத் தூரதரிசனியென்னுங்கண்ணாடி பயன்படுகிறது. அதனாற்கண்டகாட்சியுங் கட்புலனாற்கண்டகாட்சியேயாகிறது. இக்கண்ணாடியினமைப்பை ஒளியியலுட் கூறுவாம். கிரகங்கள்யாவும் பூமிக்குஞ் சூரியனுக்கும் அணித்தாகவிருக்கின்றன. உடுக்கூட்டங்கள் சேய்மைக்கண் ணிருக்கின்றன. இதனை யெங்ஙனம் அறிவமோவெனில், கிரக உடுக்கூட்டக்களின் சாய்வினை இருவேறுகாலங்களில் நுணுக மட்டிட்டு

முக்கோணகணித (Trigonometry) முறையினல் அநுமானித்து அறிவோம். பாந்த ஒருவாவியின்மத்தியில் ஒரு செந்தாமரைமல ரிருப்ப தாகவும், வாவிக்கரையில் மீன்பிடிகாரர்கையிற் பந்தவெளிச்சங்களும் சமீபத்திலிருக்கிறவீடுகளில் விளக்குவெளிச்சங்களும் இருப்பதாகவும் நினைப்போம். தாமரைமலரின் நடுவே சூரியனும்; பொகுட்டினுள் இருக்கிறவிதைகளே கிரகங்களாம்; கரையிலிருக்கும். வெளிச்சங்களே உடுக்கூட்டங்களாம்என்று கருதல்கூடும். உடுக்களிற்பல சூரியனைப்பார்க் கிலும் பெரியன. ஒன்றரைக்கோடிசூரியர்கள்சேர்ந் தொன்ருகிய அள வினையுடைய உடுக்களும் உண்டு. இவை யேன் மிகுந்தபிரகாசமாகத் தோற்றவில்லையெனின், தூரத்தில் மலையுச்சியிற்ருேற்றுகிற காட்டெரி யானது விளக்குச்சுடர்மாத்திரமாகத் தோற்றுதல் கண்டிலமோ, அது போல இவையும் மிகுந்ததூரத்திலிருத்தலால், சிறிய அளவினவாகத் தோற்றுவவெனப்போம். சூரியனுடையஒளி பூமியை அடைவதற்கு எட்டு மினிற்றும் இருபதுசெக்கண்டும் செல்லுமென அறிவோம்—ஒளியினது வேகம் ஒரு செக்கண்டுக்கு ஒருலக்ஷத்து எண்பத்தாறுயிரமைலாகும்; இதனை அளந்தறியும் மார்க்கத்தை ஒளியியலுட்கூறுவாம். சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தை மேற்சொன்னகுறிப்பினை ஆதாரமாகக் கொண்டு கணித்தறியலாகும். சிலநாளைக்குமுன் புதிதாகக் கண்டுபிடித்த உடுவொன்றினது தூரம் எவ்வளவிற்று என அநுமானிக்கப்புகுந்த வானநூலோர் அவ்வுடுவினின்றும் உலகுக்கு ஒளிவருதற்குப் பதினயிர வருஷஞ்செல்லுமென அறிந்தார்கள். இதனல் அதன்தூரத்தை மட்டிட்டறியலாகும். மிகவுஞ் சமீபமான உடுக்களினின்றும் உலகுக்கு ஒளிவருதற்கு இரண்டரைவருஷஞ்செல்லும் என்றல் நக்ஷத்திரங்களின் தூரத்தைப்பற்றி வேறுபேசவேண்டுவதென்ன. வாவியின்மத்தியிலுள்ள செந்தாமரைப்பொகுட்டினை மீட்டும் நினைப்பாம். அல்லியின் எல்லைக் குள் சூரியனும், பூமியும், ஏனையகிரகங்களும், பூமியைச்சுற்றியோடுஞ் சந்திரனும், ஏனைய கிரகங்களைச்சுற்றியோடுஞ் சந்திரர்களும் ஆகிய இவையெல்லாம் அமைந்திருக்கின்றன. இவற்றினுட் சுயம்பிரகாச முடையது சூரியஃமாத்திரமே. உடுக்கள் சூரியர்களாக அவற்றைச் சுற்றியோடுங் கிரகங்களுண்டென்பது சொல்லாமலேவிளங்கும்.

4\. சூரியன் மத்தியிலிருக்க அதற்கு மிகவும்அணித்தாயிருப்பது புதன், அதற்கப்பாற் சுக்கிரன, அதற்கப்பாற் பூமி, அதற்கப்பாற் செவ்

வாய், அதற்கப்பால் வியாழம், அதற்கப்பாற் சனி, அதற்கப்பாற் குபேரன், அதற்கப்பால் வருணன். இவற்றின் தூரம், இவை சூரியனைச் சுற்றிப்போதற்குச் செல்லுங் காலம், இவற்றின் அளவு முதலியவிஷயங்களையும், உபக்கிரகங்களாகிய சந்திரர்களினியல்பையும், ராகு கேதுக்களினியல்பையும் பின்னர்க் கூறுவாம். கிரகங்களும் உபக்கிரகங்களும் சூரியனிடமிருந்து ஒளியைமாத்திரமல்ல உடலையும் பெற்றனவாம் என்பதனை இப்பொழுது ஆராய்வாம்.

“ தொன்முறையியற்கையின்மதியொ
... ... மரபிற்றாகப்
பசும்பொனுலகமுமண்ணும்பாழ்பட
விசும்பினூழியூழ்செல்லக்
கருவளர்வானத்திசையிற்றோன்றி
உருவறிவாராவொன்றனூழியும்
உந்துவளிகிளர்ந்தவூழூழியுஞ்
செந்தீச்சுடரியவூழியும்பனியொடு
தண்பெயறலைஇயவூழியுமவையிற்
றுண்முறைவெள்ளமூழ்கியார்தருபு
மீண்டும்பீடுயர்பீண்டியவற்றிற்கும்
உள்ளீடாகியவிருநிலத்தூழியும்
நெய்தலுங்குவளையுமாம்பலுஞ்சங்கமு
மையில்கமலமும்வெள்ளமுநுதலிய
செய்குறியீட்டங்கழிப்பியவழிமுறை
கேழறிகழ்வரக்கோலமொடுபெயரிய
வூழியொருவினையுணர்த்தலின்முதுமைக்
கூழியாவருமுணரா
ஆழிமுதல்வநிற்பேணுதுந்தொழுது ”

என்பது சங்கச்செய்யுளாகிய கீரந்தையார்பாட்டு (பரிபாடல். 2)

“ மண்ணுலகமும் பசும்பொனுலகமும் பாழ்பட ஒன்றற்கொன்று மாறிவருதலாகிய பழையஇயல்பினையுடையமதியமும் ஞாயிறுங் கெடுதலால் அழிந்தழிந்த இயல்பிற்றாக விசும்புகெட்டவூழிகள் முறைமுறையாகக் கழிந்தனவாக, தன்குணமாகிய ஒலியுடனேதோன்றி உருவுகாணப்படாத வளிமுதற்பூதங்களின் பரமாணுக்கள்வளர்கின்ற வானமாகிய முதற்பூதத்தினது வூழியும், அவ்வானத்தினின்று எல்லாப்பொருள்களையுஞ் சலிப்பிக்குங் காற்றுத்தோன்றிய முறைமுறையாகிய வூழி

களும், அக்காற்றினின்று செந்தீத்தோன்றிய ஊழிகளும், அத்தீயினின்றுந் தோன்றிப் பனியும் மழையும் பெய்த ஊழிகளும், அவற்றிற்குப் பின்பு அப்புனலினின்றுந்தோன்றுதலான் மீண்டும் வெள்ளத்தினுட் கிடந்து முன்றோன்றிய நான்குபூதங்கட்கும் உள்ளீடாகிய இருநிலத்தினூழியும் என் றிவ்வூழிகளானே செய்தலுங் குவளையும் ஆம்பலும் சங்கமும், கமலமும் வெள்ளமும் என எண்குறித்திட்ட பெயர்களாது கால வீட்டங் கழிந்தபின் உயிர்களுளவாதற்பொருட்டு அந்நிலத்தினை எடுத்திட்ட கேழற்கோலத்தாற் றிகழ்வாப் பெயர்பெற்ற இவ்வாராககற்பம் நின்செயல்களுள் ஒருசெயலின் பெயராமதனை யுணர்த்துதலின் அச்செயல்கள் பலவற்றையுஞ்செய்கின்ற நின் முதுமைக்குள்ளகற்பங்கள் யாவாரானும் அறியப்படாத ஆழிமுதல்வ! நின்னையார் தொழுது பேறுதும்" என்பது உரை. இதனால் ஞாயிறும் மதியமும் ஒருகாலத்து இல்லாமற் போவனவாம் எனவும், அழகிழந்தவிசும்புங்கெட்டுப்போகுமெனவும், பின்னர்த் தோற்றக்கிரமத்தில் முதற்பூதமாகிய வானந் தோற்றிப் பலவூழிக் காலங்களுக்கு வானமாத்திரமே தனித்திருக்குமெனவும், பின்னர் வானினின்று வளிதோற்றிப் பலவூழிக்காலங்களுக்கு வானும் வளியும் ஆகிய இருபூதங்களே யிருப்பனவாமெனவும், பின்னர் வளியினின்று தீயும் தீயினின்றுநீரும், நீரினின்று நிலனுந் தோற்றுவனவாமெனவும், பின்னர் உயிர்க்கூட்டங்களுள் ஓரறிவுயிர் தோற்றுவனவாமெனவும் ஓரறிவுயிரினின் ஈரறிவுயிரும், ஈரறிவுயிரினின்று மூவறிவுயிரும் பிறவும் முறை முறையாகத் தோற்றுவனவாமெனவும் அறிகின்றோம். உயிர்த்தோற்றத்தைப்பற்றித் தாவரசங்கமோற்பத்தி என்னும் மூன்றும் அதிகாரத்தினுள் விரிவாகக் கூறுவாம். மணிமேகலைநூலாரும்.

"ஆகாயம்வெளிப்பட்டதன்கண்
வாயுவெளிப்பட்டதன்கணங்கி
யானதுவெளிப்பட்டதன்கணப்பின்
றன்மைவெளிப்பட்டதின்மண்வெளிப்பட்டு
....
பூதவிகாரத்தான்மலைமாமுத
லோதியவெளிப்பட்டுலகாய்நிகழ்ந்து
வந்தவழியேயிவைசென்றடங்கி
யந்தமில்பிரளயமாயிறுமளவும்
ஒன்றுயெங்கும்பரந்துநித்தியமாம்,"

என்றார். இது விஞ்ஞான நூலாகலின், பிறநூன்முடிபுகள் ஆதாரமாவவையேயன்றிப் பிரமாணமாகா. வானினின்று வளியும், வளியினின்று தீயும், தீயினின்று நீரும், நீரினின்று நிலனும் தோற்றும் விதத்தையும், பின்னர் நிலத்தினுள் நீரும், நீரினுட் டீயும், தீயினுள் வளியும், வளியினுள் வானும் அடங்கும்விதத்தினையும் கண்கூடாகக் (பிரத்தியக்ஷமாக) காட்டல்வேண்டும்; ஆகலின், அகப்பூதம், அகப்புறப்பூதம் என்பனவற்றைப் பின்னராராயவைத்துக்கொண்டு இப்பொழுது புறப்பூதத்தையாராய்வா னெடுத்துக்கொள்வாம். கல், மணல், மரம், பொன முதலிய கட்டிப்பொருள்களனைத்தும் நிலன் என்னும் வகையின; நீர், நெய், உருகியபொன், உருகியவெண்ணெய் அனைத்தும் நீரின்வகைய; விளக்குச்சுடர், ஆவியுருவமாகத்தோற்றுகிற நீராகிய மேகம் இவையெல்லாம் தீயின்வகைய; தோற்றமில்லா நீராவி, காற்று, கரிவளி (Carbonic Acid Gas) இவையெல்லாம் வளியின்வகைய; அனைத்துப்பூதங்களும் தோற்றுதற்கிடனாயிருக்கும் மின்னுரு (Electrom) வானின்வகைத்து. எரிந்துகொண்டிருக்கிற மெழுகுதிரியொன்றில் உண்டாகிற வேறுபாடுகளை யாராய்வாம். கட்டிப்பொருளாகிய மெழுகு வெப்பத்தினால் உருகி நீர்ப்பொருள் ஆகிறது; நீர்ப்பொருள் சுடராக மாறுகிறது; சுடராகிய தீ கட்புலனுக்குத் தோற்றாத கரிவளியும் நீராவியும் ஆகிறது, வளி மின்னுருவாகும் மார்க்கத்தினை மின்னியக்கவியலினுட் கூறுவாம். கட்புலனாகா நீராவி குளிர்ந்து கட்புலனாகிய மேகமாகிறது; மேகங் குளிர்ந்து நீராகிறது; நீர் குளிர்ந்து ஆலங்கட்டியாகிறது. கட்புலனாகா நீராவி வளியின்வகையது; கட்புலனாகும் மேகம் தீயின்வகையது; ஆலங்கட்டி நிலத்தின்வகையது; இவைபோல வேறுபல உதாரணங்களையும் ஆராய்ந்தறிந்துகொள்க. வான்குளிர வளியாகும்; வளி குளிரத் தீயாகும்; தீ குளிர நீராகும்; நீர்குளிர நிலனாகும்; என்னும் இவ்வுண்மைகள் மேலையுதாரணங்களால் அறியக்கிடக்கின்றன. வெப்பம் மிக்கால் கட்டிப்பொருளெதுவும் உருகி நீர்ப்பொருளாய்விடும் என்பதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறோம். எரிமலை தீக்கொப்புளிக்கிற சமயங்களிற் கல்லு முருகியோடுவனவாம். உருகியபொருள் மீண்டும் வெப்பமிக்கிருப்பின், கட்புலனும் ஆவியாகிய தீயாக மாறும்; இது வளியாகமாறும். வளி வானாகுமென்பதனை மின்னியக்கவியலினுள் ஆராய்வாம்.

5. சூரியனும் கிரகங்களும் உபக்கிரகங்களும் ஒன்றுசேர்ந்து தீப்பிழம்பாயிருந்தகால மொன்றுண்டு. இதனையே கீரந்தையார் "செந்தீச்சுடரிய வூழியும்" எனக் குறிப்பிட்டார். இந்தவூழியில் வானும், வளியும், தீயும் ஆகிய மூன்று பூதங்களே யிருந்தன; நீரும் நிலனும் இருந்ததில்லை. இதற்குமுந்தி வானும் வளியும் இருந்த வூழிகளும், வானமாத்திரம் தனித்திருந்த வூழிகளும் பலவாகக் கழிந்தன. செந்தீச்சுடரிய வூழியிற் சூரியனும் கிரகங்களும் ஒன்றுபட்டு அனற்பிழம்பாயிருந்த தோற்றத்தையனைய அழற்பிழம்புகள் (Nebula) இன்றும் வானமண்டலத்தி லுள்ளன. அனற்பிழம்பு சுழன்றுகொண்டிருந்தமையினாற் கோளவடிவாயிற்று. வெப்பங் குறைபக்குறைய அளவிற் சுருங்கிக்கொண்டுபோன கோளத்தினின்று ஒருபாகம் பிரிந்து தன்னைத் தானே சுழல்வதும் தான் முன்னின்று பிரிந்த பெரியகோளத்தைச் சுற்றிவருவதுமாயிருந்தது. இங்ஙனேபிரிந்த சிறியகோளம் சிறிதாதலிற் சீக்கிரத்திற்குளிர்ந்து நீர்த்தன்மையையும், பின்னும்இறுகி நிலத்தன்மையையும் அடைந்தது. அங்ஙனமாயினும், சில தனிப்பொருள்கள் நீராகவும் வேறு சில தீ, வளியாகவும் நிலைபெற்றிருந்தன. இது எக்காரணத்தினாலாயிற்று என்பதனை அடுத்தபிரிவினுள் ஆராய்வாம். இங்ஙனந் தோற்றியதே வருணன் என்னுங் கிரகமாகும். அனற்பிழம்பாகிய பெரியகோளத்தினின்று பின்னும் ஒரு சிறுபகுதிபிரிந்து குபேரனென்னுங்கிரகமாயிற்று; பின்னர் இம்முறையே சனி, வியாழம், செவ்வாய், பூமி, சுக்கிரன், புதன் இவையுற்பத்தியாயின; நடுவினின்ற அனற்பிழம்பு சூரியனென நிலைபெற்றது. உபக்கிரகங்கள் தோற்றியமுறையைச் சொல்லுவதற்கு, சந்திரனது உற்பத்தியை ஆராய்வாம். பூமி "செந்தீச்சுடரிய" பிழம்பாகச் சுழன்றுகொண்டிருந்தகாலத்தில் அதனினின் றொருபாகம் பிரிந்து பூமியைச்சுற்றிச்செல்லுகிற உபக்கிரகமாகிய சந்திரனாயிற்று. சிற்றளவினதாகிய சந்திரன் அறக்குளிர்ந்துவிட்டமையால் நீர், வளி, தீ இவை யாவும் அங்கு, நிலனுப்விட்டன. ஆதலால் அங்கு காற்றுவீசுவது மில்லை; புற்பூண்டு முளைப்பது மில்லை; மிருகமானிடசஞ்சாரமு மில்லையென் றெண்ணவேண்டியிருக்கிறது. கிரகங்களில் நம்மையொத்த மானிடர் வசித்தல்கூடும். (காசிகாண்டத்திற் சிவசன்மாவென்னும் வேதியன் பலவுலகங்களையுஞ் சென்று கண்டதனை ஆராய்க) சூரியன் அனற்பிழம்பாக நடுநிற்கக் கிரகங்களெல்லாம் சுற்றிவருகின்றன. பின்னும் ஓர் ஊழியில் நம்முடையபூமி சந்திரனைப்போலக் குளிர்ந்து நீரும் வளியும் அற்று உயிர்ச்சஞ்சார மில்லாதுபோய்விடும். சூரியனிலிருந்து பிறகிரகங்களும் உபக்கிரகங்களும் பிறப்பன. கடையூழியிற் சூரியனே அறக்குளிர்ந்து ஒளியிழந்து நிலனுந்தன்மையை யடைய அழகிழந்த விசும்புங் கெட்டு யாண்டும் இருட்பிழம்பாகிய தோற்றம் வந்தெய்தும்.

6. "நீராகிநிலம்படைத்தனை, நெருப்பாகி நீர்பயந்தனை; அருவாயினை, உருவாயினை, ஒன்றாயினை, பலவாயினை" என "ஆயிரங்கதிராழி"

வென்னும் பாணிப்பாட்டினுட் கூறியிருக்கும் உண்மைகள் இங்ஙனே தெளியப்படுவனவாம். வெப்பமுந் தட்பமுமே தோற்ற ஒடுக்கத்துக்குக் காரணமாயிருத்தலை யாராய்ந்தனம். இனி வெப்பதட்பநிலையை யளந்து கொள்ளும்விதத்தினையும் இவற்றின் எல்லையினையும் ஆராய்வாம். நீர், மண்ணெய் முதலியவற்றின் வெப்பதட்பநிலையை யளக்கக்கருவியாகநிற்பது பாதரசத்தசமானி, (Mercury Thermometer). பாதரசம் வெப்பத்தினால் அளவு அகலும் என்னும் ஆதாரத்தைக்கொண்டு இக்கருவி யமைக்கப்பட்டது. கண்ணாடிக்குழாய் பொன்றினுட் பாதரசத்தை யடைத்து அலங்கட்டியினுள்வைக்கக் குறுகி ஓர் எல்லையு ணிற்கும். பின்னர்க் கொதிக்கின்றஜலத்தின்மேலுள்ள நீராவியினுள்வைக்க வேறோ ரெல்லையு ணிற்கும். இவற்றை முறையே சுன்னமும் நூறுமாகக் கொண்டு இடையேயுள்ள அளவை நூறுபாகை (Degree) யாக்கிக் கொள்ளுவாம். நீருறைகின்ற எல்லை (Freezingpoint) சூன்யபாகை யாகவும், நீர் கொதிக்கின்ற எல்லை (Boiling point) நூறுபாகையாகவுங் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு பொருளுக்கும் உறைகின்ற எல்லையும் கொதிக்கின்ற எல்லையும் உண்டு. சூனியபாகையிற் குறைந்ததட்ப நிலையையும் குறைபொன்று, குறையிரண்டு என்று அளந்து காணலாம். (Minus Plus என்னும் ஆங்கிலமொழிகளைக் "குறை," "மிகை" எனக் குறியிடுசெய்வாம்; "சய," "சக" என்னும் வடமொழிகளை வழங்குவதும் ஏற்புடைத்து) தட்பநிலையின் கீழெல்லை குறை இருநூற்றெழுபத்துமூன்றாகும். இவ்வெல்லைவருமுன் நம்மைச்சூழவிருக்கும் வளி தானும் ஆவியாகி நீராகிக் கட்டியாய்விடும். சூரியகோளம் ஏழாயிரம் பாகையின்மேற்பட்ட வெப்பநிலையுடையது. இவ்வெப்பநிலையில் உலகிலுள்ள நீர்ப்பொருளும், நிலப்பொருளும், தீ, வளி ஆகிய நிலையை யடைவன. சாதாரணநிலையிற் கட்டியாயிருக்கிறபொருள்கள் வெப்ப ஏற்றத்தினால் நீராதலும் ஆவியாகவிருக்கிறபொருள்கள் தட்பத்தினால் நீராதலும் இயற்கையாயிற்று. உலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் எண்பதின்மேற்பட்ட தனிப்பொருள் (Element) ஆகவும், கோடிக் கணக்கான கூட்டப்பொருள்கள் (Compounds) ஆகவும் பிரிக்கலாம். ஒவ்வொரு பொருளுக்கும் கொதியெல்லை உறையெல்லை வேறுபட்டிருப்பதனால் ஓர் தாபநிலையிற் சில நிலனாகவும், சில நீராகவும், சில தீயாகவும், சில வளியாகவும் தோற்றுவன அங்ஙனமாயினும், அருக்கனது வெப்பநிலையையொத்த வெப்பநிலையில் அனைத்துப்பொருளும் "செந்தீச் சுடரிய" நிலையி லிருப்பன. கீழெல்லையாகிய குறை இருநூற்றெழுபத்து மூன்று என்னும் பாகையில் அனைத்துப்பொருளும் நிலனாய்விடுவன. இவற்றின்விரிவினை அளவியலினுள்ளும் ரசாயனவியலினுள்ளும் கூறுவாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர்,
சென்னை.

பண்டித-மயில்வாகனன்,
B. Sc. (Lond.)

வடமொழியும் தமிழும்: ஓர் எதிருரை.

பாணினீய—லகுதீபிகையின் முன்னுரையைக்குறித்து, ஸ்ரீமாந் சு. இராஜையனவர்கள் சென்ற ஆவணிமாதச் செந்தமிழ்ப்பத்திரிகையில் எழுதியிருப்பனவற்றை நன்முகக் கவனித்து வாசித்தேன். ஐயனவர்களது உரையினைமட்டும் நோக்கிய அளவில் செந்தமிழ்நேயர்கள் முன்னுரையின்கருத்தைப் பிழைபட வுணர்தல்கூடும் என்றெண்ணி எதிருரையொன்று விரைந்து எழுதலாயினேன்.

நமது தாய்மொழிக்கும் வடமொழிக்கும் ஏற்பட்டுள்ள அடிப்பாட்டுத் தொடர்பினைக் குறித்து இருவேறுகொள்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. சிலர் தமிழ் ஒரு தனிப்பாஷை யென்பர்; இக்கொள்கையுடையார் பிஷப் கால்டுவெல் (Bishop Caldwell) முதலிய பாஷா சாஸ்த்ர விற்பந்நர்கள். சிலர் வடமொழியினின்றும் பிறந்த வொரு பாஷையே தமிழ் என்பர்; இக்கொள்கையுடையார் ஸ்ரீமாந் R. சுவாமிநாத ஐயரவர்கள் முதலிய அறிஞர்கள். 'நற்றாய்' என்று முன்னுரையிற் சுட்டியொழித்தது இவ் இரண்டாவதுவகைத் தொடர்பினையே. ஒன்றற்கொன்று முற்றும் மாறுபட்ட இக்கொள்கைகள் சிலகாலத்திற்கு முன் மிக்க வாதப்பிரதிவாதங்களுக்குக் காரணமாயிருந்தனவெனப் பலரும் அறிவர். மேன்மேலும் வந்துபெருகிக் குவிந்துகொண்டிருக்கும் நூதன வியவகாரங்களினலே முற்றும் புதையுண்டுகிடக்கும் இவ்விவாத விஷயத்தை யிப்போது கிண்டிக் கிளறி வெளிக்கொணர்ந்து சொற்போராடுவது எனது நோக்கமேயன்று. லகுதீபிகையின் முன்னுரை அத்தகைய விவாதத்திற்கு இடங்கொடுப்பதுமன்று. வடமொழியால் நமது தமிழ்மொழி பண்டைக்காலந்தொட்டுப் பலபிரகாரத்தானும் போஷிக்கப்பட்டு வளர்ந்துவந்திருக்கிறதென்ற ஒரு விஷயமே யான் கூறவமைந்தது. யான் கூறியுள்ளதும் இதுவே. 'செவிலித்தாய்'நிலை யென்று எனதுமுன்னுரைகுறிக்கின்றதும் இதனையேயாகும். வேறு யாதொரு தொடர்பினையும் உட்கொள்ளாது 'போஷித்துவளர்த்தல்' என்ற ஒரு கருத்தினைமாத்திரம் தந்துநிற்பது செவிலித்தாய் நிலை. 'செவ்வியின் வளர்த்த தாதி செவிலி கோடாய் கைத்தாயாம்' என்பது சூடாமணி

நிகண்டு. இச் செவிலித்தாய்நிலைக்கும் நற்றாய்நிலைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. தமிழுக்கு 'நற்றாய்' என்று வியவகரிக்கும்பொழுது தமிழ்ப்பாஷையின் உற்பத்தியைப்பற்றிய ஆராய்ச்சியே பிரதானமாகும். இவ் ஆராய்ச்சிக்குத் தமிழ், தெலுங்கு, கன்னடம், ஸம்ஸ்கிருதம் முதலிய பல பாஷைகளையும் கற்றுணர்தல் அத்தியாவசியமாக வேண்டப்படுவது; பாஷாசாஸ்த்ரவிசாரணா மார்க்கத்தில் தக்கபயிற்சியும் வேண்டும்; இத் தகுதியுடையாரே 'நற்றாயோ? அன்றோ?' என்னும் விசாரணையை மேற்கொள்ளுதற் குரியர். விசாரணையின்முடிபும் வெகுகாலம்வரை கேவலம் 'கொள்கை'மாத்திரமாகத்தான் இருத்தல்கூடும். தமிழுக்குச் செவிலித்தாய் என்று வியவகரிக்கும்பொழுது மேற்கூறியவற்றிற் பெரும்பாலன வேண்டப்படுவனவல்ல. இதற்கு உற்பத்தியைப்பற்றிய ஆராய்ச்சி அநாவசியகம்; தமிழ், வடமொழி யென்ற இருபாஷைகளின் உணர்ச்சியே போதியதாகும்; பாஷாசாஸ்திரப்பயிற்சியும் அத்தியாவசியமாக வேண்டப்படுவதன்று. இதற்குரிய விசாரணையின்முடிபு கேவலம் கொள்கைமாத்திரம் ஆதலின்றிச் சுலபசாத்தியமாய் யாவரும் அங்கீகரிக்கத்தகுவதோர் உண்மையாயும் நிற்கக்கூடியது. தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாய்நிலையிலுள்ளதென்று தெளிவித்தலே முன்னுரையின் முழுநோக்கமாகும்.

மேலேகாட்டிய வேறுபாட்டினை ஐயனாரவர்கள் நன்கு அறிந்தவர்களாகக் காணவில்லை. 'தெய்வச்செந்தமிழ்மொழிக்குச் செவிலித்தாயென வடமொழியைக்கூறுதலே பொருந்துவதாகுமெனப் பிள்ளையவர்கள் கூறினும் அவர்கள் நுணுக்கவுரையின்கட் கருத்தொருப்படுகின்றிலேம்' என்று ஐயனாரவர்கள் எழுதுதலால் 'செவிலி' என்றதன்கருத்து நிராக்ஷேபமாயுள்ளதென அவர்கள் ஒருவாறு உணர்ந்தமைதோன்றும். இவ்வாறு ஊகித்தல் சரியாயின், 'தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?' என்று தமது மறுப்புரைக்கு மகுடஞ்சூட்டி அவ்வுரையின் இறுதியில் 'இன்னிசைவாய்ந்து உலகெங்கணும் தன்னிசைபரப்பிய கரையிறந்த கடலன்ன நஞ்செந்தமிழ்க்கு மதிவளம்பெருக்குஞ் சிறப்பியல்பு ஒருசிறிதுமில்லா வடமொழியைச் செவிலித்தாயெனல் பொருந்தாமைபறிக' என்று அவர்கள் கூறிமுடித்ததின்கருத்து அறிதற்கரிதாயிருக்கின்றது. உலகமெங்கணுந் தன்னிசைபரப்பிய செந்தமிழ்! கரையிறந்த கடலன்ன செந்தமிழ்! மதிவளம்பெருக்குஞ் சிறப்பியல்பு ஒரு

சிறிதுமில்லா வடமொழி! இவைபோன்றன உண்மையாமெனநம்புவாரை இவ் விருபதாம்நூற்றாண்டிற் காணுத லரிது. எனது தாய்மொழியின் புகழ் உலகெங்கும் பரவவேண்டுமென்ற ஆசை மிகவுடையேன். எனது தாய்மொழியில் அளவற்றநூல்கள் இயற்றப்பட்டு அவை கடல்போற் பெருகவேண்டுமென்ற விருப்பமும் மிகவுடையேன். ஆனால், ஏற்கனவே இவ்வாசைகள் நிறைவேறிவிட்டன என்றெண்ணுதல் உருவெளித்தோற் றங் கண்டதனோடொக்குமென்று ஐயனாரவர்களுக்கு அன்புடன் தெரி வித்துக்கொள்ளுகிறேன்.

‘செவிலித்தாய்’என்ற கருத்தினை ஐயனாரவர்கள் தெளிவாயுணர்ந்து கொள்ளவில்லையென்றேன்: இதன் உண்மை வேறுவழியாலும் வெளி யாகின்றது. மறுப்புரையின் தொடக்கத்தில் ‘வடமொழியே தமிழ்க்குத் தாய்மொழி’யென்பது எனக்கு உடம்பாடென்றும் அதனை வலியுறுத்து தற்கே யான் ஏதுக்கள் காட்டியிருக்கிறேன் என்றும் கூறுகின்றார்கள். அன்றியும், ‘தமிழ்மொழி மிகப் பழையதாதலும் அஃதொரு தனித்த முழுமுதற்சொல்லாதலுங் கருதாத’வனாவேனென்று என்னையவர்கள் குறிப்பதோடு, அவர்களது மறுப்புரையில் 10-பக்கங்கள்வரை தமிழின் முழுமுதற்றன்மையினையும் அதன் பழமையினையும்பற்றி விரித்தெழுது கின்றார்கள். ஈண்டெல்லாம் ‘செவிலி’யென்பது பிழைபட வுணரப்படு கின்றது. தமிழின் முழுமுதற்றன்மையை யான் மறுத்ததுமில்லை; வடமொழியே தமிழ்க்குத் தாய்மொழி யென்பதில் யான் உடன்பட்டது மில்லை. இக்கருத்துக்கள் என்னுடையனவே யல்ல.

இங்ஙனமாக, யான் கருத்திற்கொள்ளாதனசிலவற்றை எனது கருத்துக்களெனத் தாமே நூதனமாகப் படைத்து ஏறட்டுக்கொண்டு அவற்றைமறுத்தல் ஐயனாரவர்கள் புதிதாய்க்கண்ட தருக்கநெறிபோலும்! என்னைப்பிழைபடவுணர்ந்து எனது முன்னுரையிற் காரணங்களால் வலி யுறுத்துநிறுவிய பிரதான முடிபினை அறவே கைந்நெகிழவிட்டு ஏதோசில எழுதுகின்றார்கள். மறுப்புரையின் முக்யகதி இதுவே.

யான் தந்துள்ள ஏதுக்களையேனும் சரியாக வுணர்ந்திருக்கின்றார் களா வென்பதை நோக்குவோம். தமிழ்மொழியை வடமொழி போஷித்து வந்திருக்கிறதென்பது மூன்றுவாயில்களால் அறியலாகும். அவை: (i) தமிழிலுள்ளசொற்கள் [Vocabulary] (ii) தமிழ்நூல்விஷயங்கள்

[Subject-matter] (iii) தமிழிலக்கியமரபு [Literary tradition.] என்பனவாம். இவற்றிற்கு அடிப்படையாக வடமொழியோடு ஒத்து நிற்கக்கூடிய அளவில் தமிழை வளம்படுத்தவேண்டுமென்ற பேரவா தமிழ்நாட்டில் வேரூன்றிக் கிடந்தது. தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுக்கப்புகுந்த நூல்கள்தாமும் வடமொழிவியாகரணங்களுக்குப் பெரிதும் கடப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வடமொழியோடு தமிழ் மிக நெருங்கிய தொடர்புடையதாயிருத்தல்பற்றித் தமிழிற் பாண்டித்தியம் பெறவிரும்புவோர்க்கு வடமொழியுணர்ச்சி யின்றியமையாததாகும். எனது முன்னுரையின் ஸாராம்சம் இவ்வளவே. சொற்கடனைப்பற்றிக் கூறுமிடத்துச் சுவாமிநாததேசிகரது கருத்தும் எனதுகருத்தோ டொத்திருப்பதனை யெடுத்துக்காட்டினேன். இலக்கணவிஷயத்தில் வடமொழிவியாகரணங்களுக்கு நாம் கடப்பட்டிருக்கிறோ மென்பதை யுணர்த்துமிடத்து, சுப்பிரமணியதீக்ஷிதர் அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் முறையே பாணினீயமும் ஐந்திரமும் முதனூல்களாமெனக் கொள்வரென்றும் பரஞ்சோதிமுனிவர்முதலானோர் பிறவாறு கொள்வரென்றுங்கூறி, இஃது எவ்வாறாயினும் வடமொழியிலுள்ள புராதன வியாகரணங்களுக்குத் தொல்காப்பியம் முதலியன கடப்பட்டுள்ளன வென்பது மேற்குறித்த அனைவர்க்கும் அங்கீகாரமாம் என்றேன். வடமொழியுணர்ச்சி தமிழிற் பாண்டித்தியம்பெறவிரும்புவோர்க்கு இன்றியமையாததாமென வுரைக்குமிடத்து ஆசிரியர் சிவஞானசுவாமிகளும் இங்ஙனமே கருதினரெனச் சுட்டினேன். தேசிகர், தீக்ஷிதர், சுவாமிகள் ஆகிய மூவரும் கூறியுள்ளன எனது முடிபிற்கு ஏதுக்களாமென என்னால் தரப்படவேயில்லை. உண்மை யிவ்விதமிருக்க, இப்பெரியோர் மூவரும் கூறியன என்னால் ஏதுக்களாகக் காட்டப்பட்டனவென்று ஐயனாரவர்கள் எழுதுதல் யாது காரணம்பற்றியென அறியக்கூடவில்லை. ஒருவரது கொள்கைக்கு அல்லது முடிவிற்குப் பிறரொருவரது கருத்து ஒருபொழுதும் ஏதுவாதலில்லை. அவையிரண்டும் உண்மையென்று தெளியப்பட்ட விஷயங்களை (facts) அடிப்படையாகக்கொண்டு பிறத்தல்வேண்டுமென்பது நியமம்.

இனி, இம்மூவரும் தந்துள்ள கருத்துக்களை யெவ்வாறு தருக்கித்துத் தங்கருத்தை நிலையிடுகின்றார்களென நோக்குதல்வேண்டும். ஒன்றேயாயினும் தனித்தமிழுண்டோ?’ என்று தேசிகர் வினவியதனை

8 பக்கங்களில் (401-408) ஆராய்கின்றார்கள். ஆனால் அஃது ஓரிடத்தும் மறுக்கப்படவேயில்லை. 'தமிழ்முதுமக்கள் வழங்கிவந்த தமிழிற் பிறமொழிச் சொற்களும் வந்துகலத்தல் இயல்பே' யென்பதுதான் ஐயனாரவர்களது முடிபு. எனது முன்னுரையில் 'இதனைத் தமிழிற்கோர் குறைபாடாகக் கருதுதல்தவறு. தமிழ்மக்களது அறிவுவளர்ச்சிகாரணமாகவும் நாகரிகமுதிர்ச்சி காரணமாகவும் சொற்கடன் ஏற்பட்டுளது' என்று எழுதியிருந்தேன். ஐயனாரவர்களும் யான் கூறியதனையே மேற்கொண்டு அதற்கு 'விருத்தியுரை' யொன்று பெருக்கி யெழுதியிருக்கின்றார்கள்.

அகத்தியத்திற்கும் தொல்காப்பியத்திற்கும் முதனூல் முறையே பாணினீயமும் ஐந்திரமும் ஆமென்று சுப்பிரமணியதீக்ஷிதர்கூறியதனை 5 பக்கங்களில் (411-415) விசாரணை செய்கின்றார்கள். இங்ஙனம் 'முதனூல்' எனக் கூறுதல் முற்றும் பிழையென்பது சிவஞானசுவாமிகளால் நன்கு எடுத்துக்காட்டப் பட்டுளது. முதனூல் என்ற கருத்து வேறு; ஒன்றற்குப் பிறிதொருநூல் கடப்பட்டுள்ளது என்ற கருத்து வேறு. இதனை நாம் ஞாபகத்தில் வைத்தல்வேண்டும். ஐந்திரம் முதலியன நமது தமிழிலக்கணங்கட்கு முதனூல்களாமெனக்கூறுவார் இக்காலத்து யாரும் இரார் என்றெண்ணுகிறேன். ஆனால் ஐயனாரவர்கள் முதனூல்களல்லவென்பதனோடமட்டுந் திருப்தியடையவில்லை. 'பாணினீயமுதலிய வடமொழிவியாகரணங்கட்குத் தொல்காப்பியம் முற்பட்டுள்ள தென்பதும், அதுவே சரித்திரநூல்வல்லா ரெல்லார்க்கும் ஒப்ப முடிந்ததென்பதும்' காட்டமுயன்றார்கள். 'பாணினீயமுதலிய வடமொழிவியாகரணங்கள்' என் றெழுதப்படுகின்றது. இங்கே வியவகரிக்கப் பட்டுள்ளனவெல்லாம் இரண்டே வியாகரணங்கள்: ஐந்திரமும் பாணினீயமும். ஐந்திரவியாகரணத்திற்கும் முற்பட்டது தொல்காப்பியமெனல் அவர்களது கருத்தாகவேண்டும்! சிறிதுமுன்பு 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன்' என அவர்கள் தாமே எடுத்துக்கூறிப் பின்னர் ஐந்திரத்திற்கும் முற்பட்டது தொல்காப்பியமெனக் கருதும்படி யெழுதுவது வியப்பாகவிருக்கின்றது. சரித்திரநூல்வல்லார்க்கெல்லாம் ஒப்பமுடிந்த தென்றார்கள். இவ்வாறு கூறியவர்கள் சரித்திரநூல் வல்லாரில் ஒருவரையாவது எடுத்துக்காட்டினார்களில்லை.

தொல்காப்பியம் பாணினீயத்திற்கு முற்பட்டதென ஐயனாரவர்கள் தெளிவிக்குமுறையினைச் சிறிது நோக்குவோம். இக் கொள்கை, தமிழபிமானிகள்சிலரால் இக்காலத்து வெளியிடப்பட்டுவருகிறதெனினும், கர்ணபரம்பரையிற் கேட்கப்படும் வரலாற்றிற்கு விருத்தமாயுள்ளது. சிவஞானசுவாமிகள் தமது பாயிரவிருத்தியிற் 'பாணினீயமுதலிய வியாகரணங்களுமுளவாக ஐந்திர நிறைந்த தொல்காப்பியனென்று' பனம்பாரனார்கூறினமைக்குக் காரணந் தருகின்றார்கள். இதனால் தொல்காப்பியனார்காலத்துப் பாணினீயம் உளதாதல் சுவாமிகளுக்கு உடன்பாடாம். வடமொழியிலக்கணத்தைப் பாணினியார்க்கு மேனாளுணர்த்ததுபோலத் தமிழ்மொழியிலக்கணத்தை அகஸ்தியருக்கு உணர்த்தி வடமொழியோடு தமிழைச் சமமாக்கியருளினார் சிவபெருமானென்பர் பரஞ்சோதி முனிவரும். இதனால் அகத்தியத்திற்குமுற்பட்டே பாணினீயமுளதாதல் முனிவருக்குக் கருத்தாகும். கர்ணபரம்பரையாகவேனும் கொள்ளத் தக்க இவ்வரலாற்றையொழித்துத் தமது நூதன கொள்கையை அங்கீகாரஞ்செய்தற்கு இரண்டு காரணங்கள் தருகின்றார்கள். அவற்றுள் ஒன்று மிகவும் புதுமைவாய்ந்தது. 'இலக்கண ஆராய்ச்சிக்கு இன்றியமையாப் பெருஞ்சிறப்பினதாய சொல்வரலாற்றுமுறையை'த் தொல்காப்பியர் கூறவில்லை; ஆகவே அம்முறையைக் கூறியுள்ள பாணினிக்கு 400 வருடங்கட்கு அவர் முற்பட்டவராதல்வேண்டும்: என்பதுதான் அக்காரணம். இதன் வன்மை மென்மைகளை யாராய்தல் அநாவசியகம்; இதுபோன்ற காரணங்கூறித் தமிழுலகை அவமதியாதிருக்கும்படி ஐயனாரவர்களைப் பிரார்த்திக்கிறேன். அவர்கள்கூறுவது தொல்காப்பியம் ஒரு நிரம்பிய இலக்கணமன்று எனக் கொள்ளுதற்குத் தக்ககாரணமாகலாம். வேறொருமுடிபும் அதினின்றுபெறுதல் ஏலாது. 'முற்றத்துறந்து முழுத்தவம் எய்தி முழுமுதலறிவினராய் விளங்கியவ'ரெனத் தொல்காப்பியரை யோரிடத்துக்கூறிப் பிறிதோரிடத்துச் சொல்வரலாற்றுமுறையைப் பாணினியாலன்றிப் பிறவாறு அறிந்து கூறமாட்டாதவராயினாரென்று பெறவைத்தல் பரஸ்பரவிரோதமென்றுகூட ஐயனாரவர்கள் உணரவில்லை. இவ் அரிய காரணங்கொண்டு பாணினியத்திற்கு முற்பட்டது தொல்காப்பியமெனத் துணிந்து, பாணினியின்காலத்தை ஆராய்ச்சியால் வரையறுத்து, தொல்காப்பியர் இற்றைக்கு 3200 வருஷங்கட்குமுன் புள்ளவர் என முடிக்கின்றார்கள். ஐயனாரவர்களது இரண்டாவது

காரணம் இன்னும் 1100 வருஷங்களுக்குமுன்பாகத் தொல்காப்பியரைக் கொண்டுசெல்ல உதவுகின்றது. தொல்காப்பியர்காலத்தே குமரியா றுண்மையும், அது கடல்கோட்பட்டகாலம் இற்றைக்கு 4300 வருஷங் கட்கு முன்னென்பது பௌத்த வம்சாவளியால் தெரிகின்றமையும், அக்காலம் பைபிளிற் கூறப்படும் 'நோவா' என்பவர்காலத்தோடு ஒத் திருக்கின்றமையும், ஆகவே தொல்காப்பியனார்காலம் 4300 வருஷங் கட்குமுன் னென்று தெளியப்படுகின்றமையும் அவர்களால் விரித் துரைக்கப்படுகின்றன. தமதுகொள்கைகளை எவ்வகையாலாயினும் நிறுவவேண்டுமென்று துணிந்து வெளிவந்திருக்கும் ஒருசிலர் கால வாராய்ச்சிசெய்யுமுறையை இது நன்கு உதகரிக்கின்றது. மேலைக் காரணத்தில் அமைந்த தொடர்களுள் ஒவ்வொன்றும் சந்தேக ஆஸ்பதமா யுள்ளதாகும். முதலாவதாக, தொல்காப்பியர்காலத்தே குமரியாறு இருந்தமை நிச்சயித்தல் ஏலாது. 'குமரி' யென்றே கூறப்பட்டுளது; 'ஆறு' என்றேனும் 'மலை'யென்றேனும் அன்றி 'முனை' யென்றேனும், தொல்காப்பியநூல்கொண்டு அறிதற்கில்லை. இப்பொழுதும் இந்தியா வின் தெற்குக்கோடி 'குமரி' யென்னும் பெயரால் வழங்குகின்றது. பனம்பாரனார் இத் தெற்குக் கோடியினையே கருதியிருத்தலுங்கூடும். இரண்டாவதாக, அவ் யாறொன்றிருந்ததெனக் கொண்டவிடத்தும் அது கடல்கோட்பட்டகாலம் நிர்ணயித்தல்கூடாது. வம்சாவளிகளில் அநேக கடல்கோள்கள் கூறப்படுகின்றன. எக்காலத்து நிகழ்ந்த கடல்கோளாற் குமரியாறு கடல்வாய்ப்பட்டதென்று அறிதல் ஏலாது. 4300 வருஷங் கட்குமுன் நேர்ந்ததொரு கடல்கோளால் அங்ஙனமாயிற்றென ஐயனாரவர் கள் கருதுகின்றார்கள். இது பொருந்தாது; ஏனெனின் அக்கடல் கோளால்தான் சிங்களம் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டதாக இலங் கைச் சரித்திரங்கள் உணர்த்துகின்றன. சிங்களம் இந்தியாவோடு சேர்ந்திருந்தகாலத்தில் இயற்றப்பட்டதெனத் தமிழ்நூல்களுள் எதனை யுஞ் சொல்லுதற்கு ஆதாரமே யில்லை. மூன்றாவதாக, மேற்கூறிய கடல் கோள் நோவாவின்காலத்து நிகழ்ந்ததெனப் பைபிள்தெரிவிக்கும் பிரளய மாதல்வேண்டுமென்று ஐயனாரவர்கள் கருதுகின்றார்கள்! தமது அன் பிற்குப்பாத்திரனான நோவாவும் அவனாற் பாதுகாக்கப்பட்ட உயிர் களும்தவிர, உலகத்திலுள்ள மற்றையுயிர்க ளனைத்தையும் ஒருசேர அழிக்கக்கருதிக் கடவுள் நாற்பதுநாள் இரவும் பகலும் இடைவிடாது

மழைபெய்வித்துப் பிரளயம்நிகழ்வித்தார் என்னும் பைபிள் கதைக்கும் இலங்கைச் சரித்திரங்கள் கூறும் கடல்கோளுக்கும் யாது சம்பந்தம்! ஒரு விஷயத்திலேனும் பொருந்தக் காணவில்லையே! ஈரிடத்துங்கூறப் படுஞ் செய்திகளிற்போலும் ஒற்றுமையில்லையே! பைபிளிற் காணும் பிரளயம் சரித்திர விஷயமாகக் கொள்ளுதற்குரியதன்று; சரித்திரவிஷயமெனக்கொண்டவிடத்தும் மக்கள்வாழ்க்கைச்சரித்திரத்தில் எப்போதென்று கணித்தற்கரிய புராதனகாலத்தில் ஒரு ஜலப்பிரளயம் நேர்ந்ததென்றதற்கு அறிகுறியாகக் கொள்ளலாமேயன்றிப் பிறவாறு அதனைக் கொள்ளுதற் கில்லை. இப்பிரளயம் நிகழ்ந்தகாலமும் பைபிளைக்கொண்டு நிச்சயித்த லரிது. பலர் பலவாறு கணக்கிட்டுக் கூறுகின்றனர். ஒரு கணக்கில் கி. மு. 2105-ல் அது நிகழ்ந்ததென்று கூறப்படுகின்றது; வேறொருகணக்கில் கி. மு. 3153-ல் என்று எழுதப்படுகின்றது. நிச்சயமென்பது சிறிதுமில்லாத இவ்விஷயத்தில் ஒன்றுந் துணிதற் கிடமேயில்லை.

இங்ஙனமாக எங்குநோக்கினும் சந்தேகமயமாயுள்ள சில போலிக் காரணங்களைச் சரித்திர ஆதாரமுள்ளனபோல எடுத்துக்காட்டிக் கர்ண பரம்பரையிற் கேட்கப்படும் வரலாற்றினை ஐயரவர்கள் அநாதரவுசெய்கின்றார்கள். வரலாற்றுமுறையை மறுக்கும்விதம் இவ்வாறாயிற்று. தொல்காப்பியத்தின்கண், பாணினியாரது கருத்துக்கள் சில காணப்படுதற்கு இரண்டு உதாரணங்கள் என்னாற்காட்டப்பட்டன. அவற்றை மறுத்து யாதொன்றுங் கூறினார்களில்லையென்பது செந்தமிழ்நேயர்கள் சிந்திக்கற்பாலது.

இதனையடுத்து, சிவஞானசுவாமிகள் 'வடமொழியுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது' என்றுகூறியதனைப்பற்றி ஐயரவர்கள் எழுதுவனவற்றை நோக்குவோம். அவ் வாக்கியத்தின்பொருளை 2 பக்கங்களில் (415-416) விளக்குகின்றார்கள். பொருள்விளக்கமொன்று எழுதும் ஆவசியகந்தான் உண்டோவெனப் பலரும் ஐயுறுதற்கு நியாயம் உளது. சுவாமிகள் தமது ஆராய்ச்சித்திறத்தாலும் கருத்துக்கள் தெளிவுபெறநிகழ்கின்ற இயல்பாலும், நிரம்பியசொல்வன்மையாலும், யாண்டும் பொருண்மயக்கஇடமின்றி நயம்பட எழுதுந்தன்மையாளர். இவ்வியல்பிற்கேற்பவே ஈண்டும் வாக்கியம் தெளிவாக அமைந்திருக்கின்

றது. எனினும் அது பிழைபடவுரைக்கப்படுகின்றது. 'பாணினீயம் முதலிய வடமொழிவியாகரணங்களுக்கில்லாதசிறப்புத் தமிழிற்குப் பெரிதும் உண்'டாதலாலே 'தெய்வச்செந்தமிழின் தொன்மையும் பெருமையும் உணர்ந்து இன்பமுறல்வேண்டுவார்க்கு வடமொழிப்பயில்வும்வேண்டப்படுவ தொருதலையா'மென்று காரணங்காட்டி, இக்காரணம்பற்றியே சுவாமிகள் மேற்குறித்தவாக்கியத்தை எழுதியுள்ளார்கள் என்பதேதான் ஐயனாரவர்களது விளக்கப்பொருள். ஆனால், வாக்கியத்திற்குநேரே முந்தியிருக்குந்தொடர் இவ்விளக்கவுரை பிழையென்பதைத் தெளிவாகக்காட்டுகின்றது. 'யாம் கூறியதே வடநூலார்க்கும் உடன்பாடாதல் மாபாடியம் வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்பதே அத்தொடர். இதனால் தாம் கூறியதற்கு ஆதாரமாக வடநூற்கருத்துக்களைத் தருகின்றாரென்பது புலனும். சுவாமிகளது முதற்சூத்திரவிருத்தியிற் பலவிடங்களிலும் இங்ஙனம் ஆதாரங்காட்டுதலைக் காணலாம். தமிழிலக்கணவுணர்ச்சிக்கு வடநூல்வியாகரணங்கள் பெரிதும் பயன்படுவனவாமென்பதே அவர்களதுகொள்கை. அனதுபற்றியே தமிழ்நூலொன்றேவல்ல உரையாசிரியர் முதலியோரைச் சிறிது கடிந்துரைத்தும் இருமொழியினும்வல்ல சேனாவரையரைப் புகழ்ந்துரைத்தும் செல்வர். உதாரணம் முதற்சூத்திரவிருத்தியில், 26-ம் பக்கத்திற் காண்க. ஆகவே, 'சிறப்பில்லா மொழியொன்றினையறிந்தவர்க்கே சிறப்புடைய பிறிதொருமொழியின் பெருமையுணரலாகும்: என்ற வேற்றுமைநயம்பற்றியன்று சுவாமிகள் மேலைவாக்கியம் எழுதியது. இவ்வுண்மையை 'யோகிகளியற்றிய நூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க' என்று ஐயனாரவர்கள் எழுதிய வாக்கியங்கொண்டே அவர்களுக்குப் புலப்படுத்த நேர்ந்தமைக்குப் பெரிதும் மனம் உளைகின்றேன். முடிவில் 'உலகியற்பொருளறிவும் பிறவும் கைவந்தவர்க்குத் தமிழுணர்வொன்றுமே போதாது, வடநூலுணர்வும் வேண்டப்படும் என்பது சிவஞானசுவாமிகளுக்கும் கருத்தாகும்' என்று யான் நினைப்பதாக எழுதியிருக்கிறார்கள். யான் ஓரிடத்தும் இங்ஙனம் எழுதியதில்லை. அன்றியும், இத்தொடர் பலபொருள்களையுட்கொண்டதாகவும் மிகப் பொதுவாகவும் உள்ளது ; பொருள் நிச்சயமில்லா இவ்வாக்கியத்தைபெழுத எவருந் துணியமாட்டார்கள். வேறொருவிஷயமும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சுவாமிகள் 'ஒன்றுபற்றி யோரோவிடத்துக்கூறியதுகொண்டு பிள்ளையவர்கள் வடநூல்வழீஇயது

தமிழ்நூலெனக் குறித்தார்கள்' என்று ஐயனுரவர்களால் எழுதப்பட்டுள்ளது. இக்கருத்தும் எனக்குப் புதுமையேயாகும். வடநூல் வழிவித் தமிழ்நூலாயிற்றென்பதிற் பொருள் யாதும் இல்லை; அர்த்தமில்லாத தொடர்களையும் யான்கூறுதனவற்றையும் என்பாற்படுத்துவது ஐயனுரவர்களுக்குத் தகாது. வடநூல்வழியது தமிழ்நூலென்பது அவர்கள் கூறக்கருதியதாயின், அவ்வகையும் யான் ஓரிடத்தும் எழுதியதில்லை.

இதுகாறும், எனது முடிபிற்கு ஏதுவாதலின்றி எனதுகருத்துக்களில் இரண்டினை ஆதரிப்பனவாக யான்தந்த இருவாது கூற்றுக்களையும், எனக்கு உடன்பாடன்றெனினும் அபிப்பிராயம் இத்துணைசென்றுளது எனக்காட்டற்குமாத்திரம் யான்கூறிவிடுத்த நீக்ஷிதாது கொள்கையினையும், ஐயனுரவர்கள் ஆராய்ந்துமுடித்த பரிசு இவ்விதமென வுணர்த்தினேன். இனி, யான்தந்த ஏதுக்கள் மூன்றனுள், தருக்கித்தற்கென அவர்கள் எடுத்துக்கொண்ட இரண்டனையும் எவ்வாறு ஆராய்ந்திருக்கிறார்களென நோக்குதல்வேண்டும். முதலாவதாக, தமிழிலுள்ள சொற்களில் ஒருபெரும்பகுதி வடமொழிப்பதங்களாமென்றேன். இதனை 4-பக்கத்தில் (398-401) விசாரணை செய்கின்றார்கள். ஆனால் வடமொழியினின்றும் பிறந்ததே தமிழ் என்று யான் கருதுவதாகக் கூறிக்கொண்டு அதனையே மறுக்கிறார்கள்! ஓரிடத்தும் யான் தந்த கருத்து மறுக்கப்படவேயில்லை. எனதுமுடிபினையே அவர்களும் வலியுறுத்துகின்றார்கள். சங்கச்செந்தமிழ்நூல்களில் ஆரியச்சொற்கள் காணப்படுதலும் அவை பிற்றைஞான்றைத் தமிழ்நூல்களிற் பெருவரவினவா யுண்மையும் அவர்களுக்கும் உடன்பாடே. ஆனுல் ஆரியருந் தமிழ்மக்களும் 'நெருங்கிவாழாது வேறாயிருந்தகாலத்தே எழுதப்பட்டநூல்களில் விரவிய சொல்வழக்குக் காணப்படுதல் சிறிதும் இல்லையென்க' என்றுமட்டுஞ் சேர்த்திருக்கின்றார்கள். இடைச்சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலெனக்கூறப்பட்டுள்ள தொல்காப்பியத்தின்கண்ணே, செய்யுளீட்டச் சொல்வகைகளுள்ளே, வடசொல்லும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. 'இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொலென்—றனைத்தே செய்யுளீட்டச் சொல்லே' என்பது தொல்காப்பியம். ஆகவே இடைச்சங்கநூல்களிலும், கடைச்சங்கநூல்களிலும் வடசொற்கள் பயின்றிருந்

தமை தெரியலாகும். முதற்சங்கத்தாரது நூலென அகத்தியம் கூறப் பட்டிருக்கின்றது. 'பலவி னியைந்தவு மொன்றெனப் படுமே—அடிசில் பொத்தகம் சேனை யமைந்த—கதவ மாலை கம்பல மனைய' என்றது அகத்தி யச் சூத்திரமாகப் பழைய வுரைகாரர்களால் தரப்பட்டிருக்கின்றது. இச்சூத்திரத்தினுள்ளே வடசொற்கள் பயின்றுவந்திருத்தல் காணலாம். எனவே முதற்சங்கத்து நூலினும் வடசொற்கள் ஆளப்பட்டுள்ளமை விளங்கும். முதற்சங்ககாலத்துக்குமுன் தமிழ்நூல்கள் இருந்தனவாகக் கூறுதற்கு ஆதாரமில்லை. ஆரியரோடு விரவாதகாலத்துத் தமிழ்மக்க ளிடையே நூல்க ளிருந்தனவெனற்கும் ஆதாரமில்லை. நூல்களிருந்தன வென்றுகொண்டவிடத்தும் அவற்றைப்பற்றி யொன்றும் கூற வலாது. இக்காரணங்களால் ஐயரவர்கள் சேர்த்தெழுதியிருப்பது பொருந்தாது.

எனது ஹேதுக்களி லிரண்டாவதாக, 'நூற்குரியவிஷயங்களெனத் தமிழில் எடுத்தாளப்பட்டவற்றுள், பெரும்பாலன வடமொழி நூல்விஷ யங்களாம்' என்று யான்கூறியதனை 5 பக்கங்களில் (407—411) மறுத் தெழுதுகின்றார்கள். ஐயரவர்கள் மறுக்கும் முறையை இப்பகுதி நன்கு விளக்குகின்றது. யான் தந்துள்ள ஹேது அவர்களாற் கீழ் வரும் ரூபத்தில் தரப்படுகின்றது:—

'செந்தமிழ்நல்லிசைப்புலவர் நூற்குரியபொருள்களெனக்கொண்டு உரைத்தவெல்லாம் வடமொழி நூற்குரிய பொருள்களாமன்றித் தனித் தமிழ்க்கென ஒருபொருள் ஏற்பாடு இல்லை.'

இதற்கும் யான்கூறியதற்கும் பெரிதும் வேறுபாடு உளது. பெரும்பாலன வடமொழி நூல்விஷயங்களா மென்றேன்; அவர்கள் எல்லாம் வடநூற்குரியபொருள்களாம்' என்று தமக்கு ஏற்றவாறு மாற் றிக்கொண்டார்கள். இவ்வாறு மாற்றியது கைப்பிசகுமன்று. வேண்டு மென்றே மனமாரக்கருதிக்கொள்ளப்பட்டதா மெனல் 'தனித்தமிழ்க்கென ஒரு பொருளேற்பாடு இல்லை'யென்று எதிர்மறைமுகத்தானும் அவர்கள்

கூறுதலால் விளங்கும். யான் கூறுததனையும் கருதாததனையும் கூட்டியமைத்துக்கொண்டதனோடு அவர்கள் நிற்கவில்லை. தமிழ்க்கெனவுரிய பொருள் ஏற்பாட்டினைப்பற்றி விரிவாய் ஆராய்கின்றார்கள்! பொருட்பாகுபாட்டினைப்பற்றி யான் யாதும் கூறவில்லை. நூற்குரிய விஷயமென்றதனால் யான் கருதியதுவேறு; ஐயனாரவர்கள்கொண்ட பொருட்பாகுபாடு வேறு. இங்ஙனம் எனது முக்கியமானகருத்தினையும் திரித்துணர்ந்து கொள்கின்றார்கள். இத்திரிபுணர்ச்சி எனது முதல் உதாரணமாகிய திருக்குறளைநோக்கிப் பிறந்ததாகும். யான் காட்டிய இரண்டொரு உதாரணங்களை பொருவகையான் மறுத்துவிட்டால், பலவுதாரணங்களினின்றும் திரட்டப்பெற்ற வெ ா ரு மு டி பு மறுக்கப்பட்டதாகுமென நினைத்தார்கள்போலும்! முதலுதாரணமாகிய திருக்குறளை எடுத்துக் கொண்டு அதன்கண் தமிழ்நூற்குரிய பொருட்பாகுபாடே காணப்படுவது என நிறுவமுயல்கின்றார்கள். நிறுவுமுறை வருமாறு:—

1. அகம் புறம் என்றது தமிழ்ப்பாகுபாடு: இது தொகை.

2. அறம் பொருள் இன்பம் வீடு என்பது மேலதன் விரி.

3. இங்ஙனம் விரித்தும் தொகுத்தும் கூறும் மரபு தனித் தமிழிற்கே உரியது.

4. அறமுதலிய நாற்பொருட்பாகுபாடு செந்தமிழ்மரபிற்கே உரியது.

5. வள்ளுவர் வீடுங் கூறியுள்ளார்; நாற்பொருட்பாகுபாட்டினை முற்றும் எடுத்தாளுகின்றனர்.

ஆதலின் வள்ளுவர்கொண்டது தமிழ்நூற்குரிய பாகுபாடே. இவற்றுள் முதற்கூற்றொழிய ஏனையவெல்லாம் பிழைபாகும். அகம் புறம் என்ற தமிழ்ப்பாகுபாட்டால், திருக்குறள்விஷயத்தை விளக்குதற்கு ஏலாது. ஆனதுபற்றி அறமுதலிய பாகுபாடு தமிழ்க்குரியதே

யென நிறுவப் பெரிதும் முயல்கின்றார்கள். அகம் புறம்: என்ற
தொகையின் விரியே அறமுதலிய நான்கும் என்றார்கள். இருவகைப்
பாகுபாடும் வேறுவேறு நோக்கம்பற்றியும் நியாயம் பற்றியும் எழுந்துள்
ளனவாதலின் ஒன்றினைத் தொகையென்றும் மற்றதனை அதன் விரி
யென்றும் கூறுதல் சிறிதும் பொருந்ாது. விரித்தும் தொகுத்துங்
கூறும் மரபு தனித்தமிழிற்கே உரியதென்றார்கள். இவ்வாறுகூற ஐயனு
ரவர்கள் துணிந்தமைக்குப் பெரிதும் ஆச்சரியமடைகின்றேன்! இது
தமிழர்க்கன்றி வடமொழிவாணர்க்கு அறிவென்பதே இல்லையென்று
கூறுவதனோடொக்கும்! முதல் அத்யாயத்தில் கௌடில்யர் தமது நூற்
கருத்தைத் தொகுத்துக்கூறிப் பின் முறைப்பட விரித்துச்செல்கின்றார்.
இஃதொன்றே அவர்கள் கூறியது தவறெனக்காட்டற்குப் போதியது.
அறமுதலிய நாற்பொருட்பாகுபாடு செந்தமிழ்மரபிற்கேயுரியதென்
றார்கள். வடமொழியில் அறமுதலிய நான்கும் 'சதுர்வர்க்கம்' என்ற
சங்கேதத்தால் வழங்குதல் பிரசித்தம். 'சதுர்வர்க்கபலம் ஜ்ஞானம்'
என்பது ரகுவம்சம் (X-22). 'த்ரிவர்க்கோ தர்ம காமார்த்தை: சதுர்
வர்க்க: ஸமோக்ஷகை:' என்பது அமரம். கௌடில்யரும் காமந்தகரும்
'த்ரிவர்க்கம்' 'சதுர்வர்க்கம்' என்பவற்றைப்பற்றிக் கூறுகின்றார்கள்.
ஐயனாரவர்களும் 'பொருள்கள் உலகவழக்கானும் வேதவழக்கானும்
அறமுதலியவாக விரித்துக்கூறப்படும்' எனத் தம்மைபறியாமல் இலக்
கணவிளக்கத்திலிருந்து எடுத்தெழுதிவிட்டார்கள். ஆகவே இக்கூற்
றும் பிழையாம். வள்ளுவர் வீடுங்கூறியுள்ளார் என்றார்கள். முப்பாலாக
வெளிப்பட வகுத்துக்கூறிய நாயனாரை வீடுங்கூறினாரென்றல் எங்ஙனம்
பொருந்தும்? திருக்குறளுக்கு 'முப்பால்' எனவொரு பெயருமுள
தன்றோ? புருஷார்த்தம் நான்குங்கூறினாரெனவுரைத்திருப்பதெல்லாம்
உபசாரமாத்திரையே யென் றறியத்தக்கது. வீடுங்கூறினா ரென்று
கொண்டவிடத்தும் எனது உதாரணம் பாதிக்கப்படுமாறில்லை: அறம்

பொருளின்பம் வீடென்னும் பாகுபாடு தமிழ்க்குரியதன்று என்பது சித்தாந்தமாகலின்.

முதலுதாரணம்பற்றிய ஆராய்ச்சியை யிங்ஙனமுடித்து இரண்டாவது உதாரணமாகிய இராமாயணத்தையெடுக்கிறார்கள். 'கம்பநாடர் வான்மீகிராமாயணத்தைப் படியெடுத்துக் கதைகள் முறைபிறழாமற் செய்தார்' என்பதே அவர்கள் கூறுவது. இராமசரிதமாகியவிஷயத்தை யெடுத்துக்கொண்டதுமாத்திரமன்றிக் கதையினை விரித்துரைக்குமுறையின்கண்ணேயும் வான்மீகியாரைப் பின்பற்றினர் கம்பர் என்பது அவர்கள் கருத்தாகமுடிகின்றது. ஆகவே இவ்வுதாரணமும் பிழையெனக் காட்டப்படவில்லை.

இவ்வாறாக, எனதுமுன்னுரையின் பிரதானமுடிபினைக் கைநெகிழவிட்டு, என்னையும் எனதுகருத்துக்களை யாதரித்துரைத்த ஆசிரியரிருவரையும் மயங்கியுணர்ந்துகொண்டு, யான்தந்த ஹேதுக்களைச் சரிவர அறிந்துகொள்ளாது, அவற்றைக் கண்டித்துக்கூறுவார்போன்று சிலசில எழுதி, இராஜையனவர்கள் மறுப்புரையொன்று வெளியிட்டிருக்கின்றார்கள். தமிழுக்கு வடமொழி செவிலித்தாய்நிலையில் உதவிவந்திருக்கிறதென்றமுடிபு அணுத்துணையும் மறுக்கப்படவில்லை. தமிழ்த்தாய்மீதுள்ள பக்திவிஷயத்தில் ஐயனவர்களுக்கு யான் சிறிதும்பிற்பட்டவனல்லனென்பதைமாத்திரம் அவர்களுக்குத் தெரிவித்து எனது எதிருரையை முடிக்கின்றேன்.

S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L.,

திருவநந்தபுரம்.

உ

* கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(உரையுடன்)

முன்னுரை.

கம்பராமாயணத்தின் பெருமையை அறியாத தமிழர் இல்லை. அதனில் அடங்கியுள்ள மிக்க அருமையும் இனிமையும் வாய்ந்த கருத்துக்களை அறிந்து ஆனந்திக்கும் பயன்பெறவே, தமிழரல்லாதாரும் தமிழைக் கற்கவேண்டுமென்பது மிகையாகாது.

இவ்வாறு அந்நியபாஷையில் உள்ள இலக்கியங்கள் தம்பாஷையிலே மொழிபெயர்க்கப்பட்டவற்றைப் படித்தமட்டிலே திருப்தியடையாமல், அவ்விலக்கியங்களை நேராக அறிந்து ஆனந்திக்கவிரும்பி, அவைகள் உள்ள மூலபாஷைகளைக் கற்றுத்தேறிய அருங்கலைவிநோதர் அநேகர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உளர். நாகரிகமடைந்த மற்றைத் தேசங்களிலும் அத்தகையார் சிலர் இருக்கின்றனர்.

இவ்வுலகத்துச் செல்வமெல்லாவற்றையும் ஒருங்கே அடைந்து சகலபோகங்களையும் ஆசைதீர அநுபவிக்கும் ராசபதவியேயன்றி, எல்லா வகையிலும் அவ் விராசபதவியினுஞ் சிறந்த தேவேந்திர பதவியும் கூடக் கம்பராமாயணம் போலக் கற்றோர்க்கு மனக்களிப்பைத் தரமாட்டாது என்னும் கருத்துப் புலப்பட "இம்பர் நாட்டிற் செல்வமெல்லாம் எய்தி அரசாண்டிருந்தாலும்—உம்பர் நாட்டிற் கற்பகக்கா ஓங்கும் நீழல் இருந்தாலும்—செம்பொன் மேரு அனையபுயத் திறல்சேர் இராமன் திருக்கதையில்—கம்பநாடன் கவிதையிற்போற் கற்றோர்க்(கு) இதயம் களியாதே" என்று கற்றார் ஒருவர் மனம் கனிந்து கூறியது உபசாரமன்று, உண்மையேயாமெனக் கற்றாரனைவரும் ஒப்புக்கொள்வர்.

உலகத்திலே உள்ள பலபாஷைகளிலும் வழங்கும் காவியங்களிலே சிறந்தது வான்மீகராமாயணம் என்பர். வான்மீகி முனிவரது "உரையின்படி நான் தமிழ்ப்பாவினால் இ(து) உணர்த்திய"தென்று கம்பர்

வான்மீகத்தின் வழிநூலாக இயற்றிய ராமாயணம் அழகிலேயன்றி *அளவிலும் வான்மீகத்திலும் சிறந்து விளங்குகின்றதென்று இரண்டு நூல்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்தோர்சிலர் கூறுவர். இதனை வடமொழி தென்மொழி இரண்டிலும் வல்லார் எல்லாரும் ஒப்புக்கொள்ளினும், வான்மீகத்துக்கு இழுக்கு இன்று ; பெருமையுடைத்தாயிற்று. தந்தையினும் மகன் சிறப்புடையனாதல், தந்தையின் சிறப்பைக் குறையாது (அத்தகைய புத்திரனுக்குப் பிதாவாம் பெருமையால்) அதிகப்படுத்துவதாமாதலால் தந்தையின்றேல், மகன் இன்மைபோல, வான்மீகமின்றேல், கம்பராமாயணமுமின்றாம். தக்கவன் ஒருவன் அடைந்த பிதிரார்ச்சிதச் சொத்து, அவனாற் கழித்தற்பாலன கழிக்கப்பட்டுச் சீர்திருத்தற்குரியன சீர்திருத்தப்பெற்று, நூதனமாகச் சேர்க்கத்தக்கன சேர்ப்புண்டு, எல்லாவகைகளினும் மேன்மையுற்றுவிளங்குவதுபோல, முதல்நூலாகிய வான்மீகத்தினும் வழிநூலாகிய கம்பராமாயணம் சிறந்து விளங்குகின்றது. இவ்வாறு கூட்டவும் குறைக்கவும் மாற்றவும்பெற்றபகுதிகளிலே சில, நூலினிமையை அதிகப்படுத்துவனவாம் ; வேறுசில, வான்மீகர்காலநாகரிகத்துக்கு இயைய அவர் கூறியவைகள் கம்பர்காலநாகரிகத்துக்கு ஏலாதனவானதனால், பிந்தியதற்குப் பொருத்தமாகச் செய்யப்பெற்றனவாம்.

தமிழிலே கம்பராமாயணம்போல, ஆங்கிலத்திலே சிறந்த பாரகாவியமாகிய சுவர்க்கநீக்கத்தை (Paradise lost) இயற்றிய மில்டனாது சரித்திரத்தை எழுதிய ஓர் ஆங்கில ஆசிரியர், உலக இலக்கியக் காட்சிச்சாலை ஒன்று நியமித்து அச் சாலையில் ஒவ்வொரு மொழியாளரும் தத்தம் மொழியில் இவ்விரண்டு இலக்கியப் புத்தகங்களே கொண்டுவந்து வைக்கலாமென நிபந்தனை ஏற்படுத்தினால், ஆங்கிலேயர்கள், அங்கே, ஷேக்ஸ்பியரது புத்தகத்தையும் மில்டனாது புத்தகத்தையுமே காட்சிப் பொருள்களாக வைப்பரென்றும், அவ்விரண்டுள் †ஷேக்ஸ்பியரை முதலாவதாகவும் †மில்டனை இரண்டாவதாகவும் வைப்பரென்றும்

---

*வான்மீகம் இருபத்துநாலாயிரம் சுலோகங்களை உடையது ; கம்பராமாயணம் பன்னீராயிரம் விருத்தங்கள் உள்ளது ; ஆயினும் சுலோகங்களின் குறுமையையும் விருத்தங்களின் நெடுமையையும் நோக்கக் கம்பராமாயணமே அளவிற் பெரிதாம்.

† ஆசிரியர் பெயர் நூலைக் குறித்தன, திருவள்ளுவர் என்பது போல.

கூறியுள்ளார். அப்படிப்பட்ட காட்சிச்சாலையில், தமிழ்மக்கள் கொண்டு வைத்தற்குரிய இரண்டு புத்தகங்கள் திருக்குறளும் ஸ்ரீமத் கம்பராமாயணமுமே யென்பதும், அவற்றுள் குறள் முதலாவதாகவும் கம்பராமாயணம் இரண்டாவதாகவும் வைத்தற்குரியன வென்பதும் தெளிவாம். கம்பரும் திருவள்ளுவருமே தமிழுக்குக் கதியென்பது, அவர்கள் பெயர்களில் உள்ள க. தி, என்ற முதலெழுத்துக்களா லாயதென்று ஒருவர் கூறியது மேற்கூறிய கருத்துக்கொண்டே.

கம்பர், ஏகம்பவாணமுதலியாரது புகழை வருணிக்குமிடத்து "வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாளல்லை" என்றபடி, அவர் பாடிய ராமாயணச் சிறப்புக்கு எல்லை, அதனை எடுத்துரைப்போர் சொற்றிறத்தின் எல்லையே. அச் சிறப்பை உரைப்பவர் எத்துணைச் சொல்லாற்றலுடையாராயினும், அவர் அதனை உரைக்க உரைக்க, அது வளரா நின்று அவர் *"உரை குறுக நிமிர்"கின்ற இயல்புடையதாய் ஒருவராலும் முற்றக்கூற முடியாததாயுள்ளது. உலகத்துப் பெருமலைகளெல்லாவற்றினும் பெரிதாய்ப் பொன்மயமாய் ஒளிமிகுந்ததென்று விதந்து கூறப்பட்ட மேருமலைபோலத் தமிழ்ப்பெருங் காவியங்க ளெல்லாவற்றினும் பெரிதாய் ரசமாய் இனிமை மிகுந்தது கம்பராமாயணமேயாம். அதன் சிறப்பு இவ்வா றிருத்தலானன்றே, "கம்பர் கவிச்சக்கரவர்த்தி" யென்றும் "கல்வியிற் பெரியன் கம்பன்" என்றும் ஆன்றோர் நன்காராய்ந்து துணிந்து கூறினர்.

இவ்வளவு சிறப்புடையதாய் அரிய இனிய அறிவாகரமான கருத்துக்கள் நிரம்பிய கம்பராமாயணம் மற்றெந்தத் தமிழ்நூலினும் விரிவாயிருத்தலால், கற்றோருள்ளேயே மிகப்பலர் அதனை முழுதும் படியாராய் அதனிற் சிறந்த பகுதிகளென்று பிறர் சொல்லக் கேட்ட சிலபகுதிகளை மட்டும் படித்து விட்டுவிடுவதும், மேற்கொண்டு படித்தால், அப் பகுதிகளையே திரும்பத்திரும்பப் படிப்பதும் வழக்கமென்பது தெரிந்த விஷயம். ஆதலால், கம்பராமாயணத்தை விரிவஞ்சி முழுதும் படியாத கற்றோரும் மற்றோரும் அதன் இனிமையான பகுதிகள் முழுவதையும் கற்று அறிந்து ஆனந்தித்துப் பயனடையும்படி கருதிச் சேற்றூர்ச் சமஸ்தான வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ மு. ரா. அருணாசலக் கவிராயரவர்கள்

---

* குலமுறை கிளத்துபடலம் ச.

திருநெல்வேலி ஹிந்து கலாசாலைப் பிரதம தமிழ்ப்பண்டிதரும் சக்கரவர்த்தித் திருமகனார் நேராக அளித்த இல்லத்துப் பரிசு பெற்றவரும் ஆகிய மகா-ள-ள-ஸ்ரீ மே. சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் ஆகிய இவர்கள் உதவியுடன் ஆராய்ந்து என் சிற்றறிவுக்குப் பலவகையிலும் சிறந்தனவாகத் தோன்றிய பகுதிகளைத் தெரிந்தெடுத்துத் தொகுத்துக் "கம்பராமாயண இன்கவித் திரட்டு" என்று பெயரிட்டு வெளியிடலானேன். இத் திரட்டின் அளவு "நைடதம்" "பிரபுலிங்கலீலை" போன்ற காவியங்களின் அளவுக்கு அதிகமாயிராது.

தெய்வப் புலமைக் கம்பநாட்டாழ்வார் திருவுளமகிழ்ந்து திருவாய் மலர்ந்தருளிய கவிகள் யாவும் இனியவைகளே யன்றோ? அவ்வாறாக, அவற்றுள்ளே சிலவற்றைமட்டும் இன்கவிகளெனக் கொள்ளலாமோ எனில், கூறுகின்றேன். கம்பராமாயணப் பாட்டுக்களெல்லாம் சுவர்ணாபரணங்களென்னலாம். அவற்றுள்ளே பல, தனித் தங்க நகைகளெனவும், வேறு பல, ஒன்றும் பலவுமான இரத்தினங்கள் இழைத்த பொற்பூண்களெனவும் கூறலாம். பின்னையவற்றுள்ளே சில அருமையினும் அருமையான மதிப்பில் அடங்காத ஒளிமிகுந்த பெருமணிகள் இழைக்கப்பெற்றுப் பேரழகுடையனவாய்க் கழிபேருவகை விளைவிக்கும் கனகபூடணமென்று கழறலாம். அன்றியும், கம்பராமாயணம் முழுதும் தேம்பாகெனவும் அதனிற் காணப்படும் விசேட இனிமையுள்ள கவிகள், அப் பாகிலே விளைந்து திரண்ட கற்கண்டு மணிகளெனவுங் கூறலாம். ஆதலால் யான் தெரிந்தெடுத்துத் திரட்டிய கவிகள் மிக இனியவையென்று கொள்ளவேண்டுமேயன்றி மற்றைக்கவிகள் இனியவை அல்லனவெனக் கருதலாகாது. கற்பனை சமத்காரம் அலங்காரம் நவரசம் இவைகளில் ஒன்றோ பலவோ பொதிந்து மனத்தை மகிழ்விக்கும் கவித்துவ சத்தி மிக்க கவிகள், சிறந்தநீதி உயர்ந்தஞானம் முதிர்ந்த பத்தி பிரபலமான உலகவழக்கு இவைகளை இனிது போதிக்கும் கவிகள் என என் புல்லறிவுக்குத் தோன்றிய கவிகளை இத் திரட்டிலே சேர்த்திருக்கின்றேன்.

தனியாக நின்று இனிமைபயக்கும் கவிகளல்லாமல், அவ்வச் சந்தர்ப்பத்தில் தொகுதியாக நின்று இன்பம் விளைக்கும் தொடர்பான கவிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு தனித்தும் தொடர்ந்தும்

இன்பம் தரும் கவிகள் இன்ன சந்தர்ப்பத்திற் கூறப்பட்டவைகளென்று தெரிந்தாலொழிய, அக்கவிகளின் பொருள்முழுதும் நன்கு புலப்படா தாதலால், தனிக்கவிகள் தொடர்கவிகள் என்ற இரண்டு இனத்துக்கு முன்னும் சந்தர்ப்பத்தை விளக்குதற்கு இன்றியமையாத அளவு சுருக்க மாகத் தலைப்புக்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

பாட்டுக்களைப் பாட்டுக்களாக இசையோடு படித்தற்கு உதவியாகச் சீர்பிரித்தலும், பொருள் எளிதாக விளங்கும் பொருட்டுப் பாட்டிசைக் குப் பழுதின்றி, வேண்டுமிடத்துச் சந்திபிரித்தலேயன்றிச் சீர்களில் பதங்களுக்கு இடையே இடம் விடுதலும், நிறுத்தற்குறி வினக்குறி வியப்புக்குறி முதலிய குறிகள் இடுதலும் செய்யப்பட்டிருக்கின்றன.

இத் திரட்டில் உள்ள கவிகளின் பொருளைச் செய்யுட் பயிற்சி மிக் காரேயன்றி அப்பயிற்சி சிறிதே உடையாரும் அஃது ஒன்றும் இல்லா தாரும் எளிதாக அறிந்து ஆனந்திக்கும்படி அவ்வப் பாட்டின்கீழ்க் கூடிய அளவு விளக்கமான பொழிப்புரை எழுதப்பட்டிருக்கின்றது. பாட்டின் முக்கியமானகருத்து நன்கு விளங்குதற்கு இடையூறுாய் அவ சியமில்லாத அடைமொழிகள் போன்ற பாட்டுப் பகுதிகளுக்கு உரை யெழுதாமல் விடப்பட்டும் பாட்டில் இல்லையாயினும் பொருள்விளக்கத் துக்கு அவசியமான சொற்கள் வருவிக்கப்பட்டும் இருக்கின்றன. வரு விக்கப்பட்ட சொற்கள் ( ) இவ் இருதலைப்பிறைக்குள் அமைக்கப்பட் டிருக்கின்றன. பொழிப்புரையின் கீழ் அரும்பதவுரையும், அதன்கீழ்ப் பொழிப்புரையில் அமையாத கவிநயங்களை விவரிக்கும் விசேடவுரையும் எழுதப்பட்டிருக்கின்றன.

தமிழில் வசனநூல்கள் மிகக் குறைவாயிருத்தலால், வசன ரூப மாக எத்தனை நூல்கள் எழுதினும் அத்தனையும் நன்கேற்றுக் கொள்ளப் படுமென்பது கருதியும், பாட்டுக்களைப் படித்து அவைகளின் பொரு ளைத் தெரிந்துகொள்ளப் போதிய கல்விப்பயிற்சி யில்லாராயினும் வச னத்தில் உள்ள அதிநுணுக்கமான விஷயங்களையும் கிரகித்துக்கொள் ளத்தக்க மதிநுட்பமும் கவிக்கருத்துக்களை விளக்கக்கூறினால் அவற் றைக் கவிஞர்போலவே சுவைத்து ஆனந்திக்கும் ரச உணர்ச்சியுமுள்ள விவேகிகள், கம்பராமாயணக் கருத்துக்களைச் செய்யுட்பயிற்சி மிக்கார்

கவிமூலமாக அறிந்து ஆநந்திப்பதுபோல, வசனவாயிலாகத் தெரிந்து இன்பம் அடையும்படி எண்ணியும், கதைச்சாரமும் கற்பனை வருணனை முதலிய நயங்களும் நன்குவிளங்கக் "கம்ப ராமாயண சார வசனம்" என்று பெயரிட்டு ஒரு நூல் எழுதி வருகின்றேன். அது பிரத்தியேக மாக வெளியிடப்படும்.

கம்பராமாயண இன்கவித் திரட்டிலே சேர்த்தற்குரிய சிலகவிகளின் நயம் எனக்குப் புலப்படாமையால், அவைகள் சேர்க்கப்படாமல் விட்டிருக்கலாம்; அவ்வாறே சேர்த்தற்குரிய நயமில்லாதவைகள் சில,எனது பகுத்தறிவுக்குறைவாற் சேர்க்கப்பட்டிருக்கலாம்.

பொதுவாக எல்லா நூல்களும், விசேடமாகக் கம்பராமாயணம் போன்ற ஆழமுடைய நூல்களும் படிப்பவரது இயற்கைஅறிவு கல்வி கேள்விஅறிவு ஆராய்ச்சிஅறிவு அநுபவஅறிவு இவைகளுக்குத்தக்கவாறு பொருள் புலப்படுவனவாம். ஆதலால் யான் எழுதிய உரை, என் அறிவளவேயாய்ப் பல சிறந்த பொருள்களை விட்டிருத்தலும், அநேக பொருள் களைத் தப்பாகக் கொண்டிருத்தலும் இயல்பே.

ஆதலால், இத்திரட்டிலே தகுதியின்றிச் சேர்க்கப்பட்டிருக்கிற தனி இன்கவிகளும் தொடர்ச்சிப்பட்ட இன்கவிகளும் இவை இவை என் றும், தகுதியிருந்தும் சேர்க்கப்படாது விடப்பட்டவை தனிக்கவியினத் தில் இன்னவை இன்னவை, தொடர்கவியினத்தில் இன்னின்னவை என் றும் காரணத்தோடு காட்டியும், பொழிப்புரை அரும்பதஉரை விசேட வுரைகளில் உள்ள குற்றங்கள் இவை குறைகள் இவையென்று விளக்கி யும் செந்தமிழ்வாயிலாகத் தயைசெய்து தெரிவிக்கும்படி அறிஞர் அனை வரையும் விநயத்துடன் வேண்டிக்கொள்கின்றேன்.

இத் திரட்டு, உரை, ஆகிய இவை சம்பந்தமாகப் பிறபத்திரிகை களில் யாதாயினும் வெளியிடப்பட்டால், அதனை யான் அறிந்து பய னடையும்படி, அது தோன்றிய பத்திரிகைப் பிரதியைத் தயைசெய்து எனக்கு (வெள்ளக்கால், சாண்டைப்போஸ்டு என்ற விலாசமிட்டு) அனுப்புதல் வேண்டும், அல்லது அப்பத்திரிகையின் பெயரும் அது வெளியிடப்பட்ட இடம் காலம் முதலிய விவரமும் தெரிவித்தல் வேண் டும்.

அறிஞர்கள் இந்நூல் விஷயமாகத் தெரிவிக்கும் சீர்திருத்தங்களெல்லாம், மிக்க நன்றியுணர்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்படுதலேயன்றி, நூல் புத்தகமாக வெளிவருங்கால், ஏற்றபெற்றி உபயோகித்துக்கொள்ளப்படும் பயப்பாடுடையனவாம்.

இத்திரட்டிலே சேர்க்கப்பட்டிருக்கிற பாட்டுக்களின் பாடபேதங்களைத் தெரிந்துகொள்வதற்கும், அப் பாட்டுக்களுக்கு உரையெழுதுதற்கும் பின்வரும் புத்தகங்கள் துணையாகவிருக்கின்றன. இவையன்றிக் கம்பராமாயண சம்பந்தமாகச் "செந்தமிழ்" முதலிய பத்திரிகைகளில் வெளிப்பட்ட வியாசங்களும் உபயோகமாக உள்ளன.

1. பாலகாண்டம்:—இராமசாமிநாயுடு உரையுடன் சர்வசித்து ௵ பதித்தது.

2. ,, அ. குமாரசுவாமிப்பிள்ளை, த. கனகசுந்தரம் பிள்ளை அரும்பதஉரையுடன் காலயுக்தி ௵ பதித்தது.

3. ,, வ. வெ. ஸுப்ரம்ஹண்ய ஐயர் அரும்பொருள்விளக்கத்துடன் 1917-ம் ௵ பதித்தது.

4. அயோத்தியா காண்டம்:— சேஷசாஸ்திரியார் உரையுடன் ஸர்வதாரி ௵ பதித்தது.

5. ,, சுப்பராயசெட்டியார் உரையுடன் 1904-ம் ௵ பதித்தது.

6. ,, சண்முகம்பிள்ளை உரையுடன் 1909-ம் ௵ பதித்தது.

7. ஆரணிய காண்டம்:— எம். ஆர். கந்தசாமிக்கவிராயர், எஸ். வெங்கட்டராயலு நாயுடு உரையுடன் 1900-ம் ௵ பதித்தது.

8. ,, வை. மு. சடகோபராமாநுஜாசாரியர், சே. கிருஷ்ணமாசாரியர் உரையுடன் பிலவங்க ௵ பதித்தது.

9. கிஷ்கிந்தா காண்டம்.— } ஷை இருவரும் வை. மு. கோபாலகிருஷ்ண மாசாரியரும் உரையுடன் விரோதிகிருது ௵ பதித்தது.

10. சுந்தரகாண்டம்:—வி. கோவிந்தபிள்ளை எழுதின உரையுடன் இராமாநுஜப்பிள்ளை விளம்பி௵ பதித்தது.

11. ஷை மூலம் கதைச்சுருக்கத்துடனும் ஆங்கிலமூலவுரையுடனும் ஸ்ரீரங்கம் வாணிவிலாச அச்சுக்கூடத்தில் 1907-ம்௵ பதித்தது.

12. கம்பராமாயண அருங்கவி விளக்கம்; கவித்தலம் துரைசாமி மூப்பனார் சர்வதாரி௵ பதித்தது.

13. எழுகாண்டமும் மூலம் மட்டும், அ. கந்தசாமிமுதலியார் தாது, இராக்ஷத வருஷங்களில் பதித்தது.

14. ஷை ஷை அ. சுந்தரநாதம்பிள்ளை 1911-ம்௵ பதித்தது.

15. ஷை ஷை அ. இரங்கசாமி முதலியார் அன் சன்ஸ் 1914-ம்௵ பதித்தது.

16. வால்மீகி ராமாயண வசனம் (பண்டித நடேச சாஸ்திரியார் மொழிபெயர்ப்பு)

இந்நூலைச் "செந்தமிழ்"ப் பத்திரிகையிற் பிரசுரித்தற்கு அன்பு கூர்ந்து அநுமதி அளித்த அப் பத்திராசிரியரவர்கட்கு எனது அத்தியந்த வந்தனங்க ளுரியன.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

புரூரவசரிதை.

(செந்தமிழ் 20-ம் தொகுதியின் ௪௮௰-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓடமேற்றுபடலம்.

மைவார்நெடுங்கண்வணங்கார்நிணங்கமழுஞ்
செவ்வானவேற்கைத்திறலரசர்கோமானு
னைவானமைந்தர்களுநண்ணியவெங்கானகத்தி
லெவ்வாறேவின்னமியற்றுவ்வகையென்றிரங்கும். (1)

சீறடிகணொந்திடவுஞ்செல்லுவரோதீவெயிலிற்
றாறடிகடோறுமொதுங்குவரோதோட்டிநிகர்
கோறடியுமிந்தனங்கள்கூட்டுவரோமைந்தரென
நீறடியிலுற்றநெருப்பின்மெழுகாயுருகும். (2)

இத்தகையளாகிமுழுதின்னற்கடற்படியு
முத்தனையமுல்லைமுறுவற்கனியிதழ்வாய்ப்
பத்தினியாண்முன்னம்பதகரினும்பண்பறியா
வித்தவணிகன்றனித்தவணின்மேயினான். (3)

கற்புக்கணியைக்கமலத்திருக்கோயி
லற்புற்றமர்ந்தவணங்கினையஞ்சுகத்தைச்
சிற்பத்தொழிலுணர்ந்தோர்சித்திரத்துஞ்செய்பரிய
பொற்புக்கணிகலனைநோக்கியெவைபுகல்வான். (4)

பைந்தாதுகழ்ந்தளிகள்பண்பயிலுந்தண்பொகுட்டுச்
செந்தாமரையுனக்குச்செய்தகுறையுளவோ
கந்தாரம்வாய்ந்தகனிமொழியீரிங்கெனைநீர்
வந்தாளயான்புரிந்தமாதவத்தின் ...,றேயோ, (5)

அன்னச்சிறையுமழுந்தப்பொருதபதஞ்
சென்னெற்பரலின்மிதிக்கச்சிவணியவோ

கன்னற்கனிமொழியீர்காந்தட்கரமலரு
மின்னற்படவுலக்கைதாங்குவதுமிவ்வாறே. (6)

முக்கனிநறையைமுழுதுந்துலையானேன்
மிக்கவளமையினுமேலாஞ்சிறப்புடையேன்
றக்கமிலையிடத்துச்சார்ந்துநிரப்பெறுமோர்
துக்கமொழியாததெங்லையோதோகையீர். (7)

இப்பதியுமும்முடையனில்லன்றேவில்லிருந்தார்
செப்பரியவேவற்சிலநியர்நின்னீழன்றே
ஒப்பரியவிந்திரற்குமில்லாச்சிறப்புமது
கைப்புகுதப்பெற்றால்விலக்கல்கடனாமோ. (8)

மும்மையுலகமுழுதும்விலைகொளுமிச்
செம்மைமணித்திரளுமிக்கநிதித்திரளு
மும்முரிமையானுமடிமைக்குரித்தன்றே
கொம்மைமுலைப்பசும்பொற்கொம்பனையகோதையீர். (9)

மந்தாநிலமுமலயத்திலகமும்வா
னிந்தானவெய்யோனெரிகதிரினீட்டமுஞ்
சிந்தாரந்தானுஞ்செழும்பூவணையுமழ
லுந்தாமனின்றுகுளிரவுமென்றுண்டாமோ. (10)

ஊட்டாவமுதக்கடலினிடையுதித்த
தாட்டாமரையிற்றிருவனையதாழ்குழலீர்
தோட்டாமலர்க்கணையாற்சுந்தரவேளென்னுயிரை
வீட்டாதவண்ணமருள்புரியவேண்டுமால். (11)

என்றுங்கியம்பவெரிபழுத்தவேலைபோற்
குன்றுதகற்பிற்குலமடந்தையஞ்செவியிற்
சென்றுழவுள்ளந்திகைத்தாள்செயலழிந்தாள்
நின்றாண்மரம்போலநின்றினையவெண்ணினாள். (12)

ஊரும்பதியுமுயர்ந்தவாசாளரசன்
பெரும்பிழைத்தேன்வினைப்பயனின்பெற்றியாற்

கூருந்தழலனையகற்பினுக்குங்கோளுறுமேற்
றீருமருந்தென்னுயிர்கொடுத்துத்தீர்ப்பேனால். (13)

காதற்புதல்வரொடுகாவலனுங்கானகத்திற்
போதப்புகுந்திவன்வாய்ப்புன்சொல்லுங்கேட்டேனே
? சாதக்கடவேனெனினுந்தருமமுமொன்
றோதக்கடந்தாலதுவுமுனாற்றுவனால். (14)

என்னமனந்தேறியிருகண்பனிதூங்க
நன்னர்நெறியறியாநாய்கன்செவிதுளைப்பத்
தன்னினிகர்பிறிதொன்றில்லாத்தளிரியலாண்
முன்னம்வெறும்வெள்ளிடையைநோக்கியிவைமொழிவாள். (15)

வச்சியர்தங்கோவேமாபிழுக்காவல்லோனே
யச்சமறவெம்மைப்புறந்தவருளோனே
கொச்சைமதியினர்போற்கற்பிற்குலத்தியரை
நச்சுவதுமின்னுயிர்க்குநச்சாய்விளையுமால். (16)

அம்பலத்திலோர்துணையுமின்றியனாருறலுந்
தம்பமெனவைகுமிடந்தந்தளித்ததக்கோனே
நம்பியடைக்கலமாய்ப்புக்கோர்தமைநலிந்தால்
இம்பரினும்மேலும்பழியன்றியெய்தாதால். (17)

வித்தாயகாமத்தாற்கன்னியரைமேவினரும்
வைத்தாரடைக்கலத்தைவஞ்சித்தவஞ்சகரும்
பித்தாலேகற்பிற்பிறர்மனையைவவ்வினரும்
புத்தாநரகிற்புழுவாய்க்கிரையாவார். (18)

ஆலத்தினுங்கொடியகற்பிற்கரசியர்தங்
கோலக்குவிமுலைகளுக்குங்கொடியோரைச்
சாலத்தருமபடர்தண்டனைசெய்தேவிழியி
னீலப்புழுவரிக்கவுய்ப்பார்நிரயத்தின். (19)

வழுவிலாக்கற்பின்மடமங்கையர்கொங்கையிலே
யெழுதுபூணாகமுறவேறும்வெங்காமுகரை

யழலினால்வெந்தவயத்தூண்டனையிறுகத்
தழுவுவாயென்றுநிரயத்திற்றள்ளுமறம். (20)

திறந்தெரிந்தகற்பினர்பாற்சிந்தைவைக்குந்தீயோரை
யிறந்தவரின்வேறாகவெண்ணாரியல்புடையோர்
பிறன்கடைநோக்காமையினுமுண்டோவறம்பிறபி
னறன்கடைநின்றாரினவரேகடையாவார். (21)

மட்டிழிந்தகூந்தன்மடமங்கையர்தங்காமத்தாற்
பட்டழிந்தார்வேலைமணலிற்பலராவார்
விட்டொழிதியன்றிவிரும்பிடிலுன்வாழ்வனைத்துங்
கெட்டொழிவாயின்னகிளக்கலெனமொழிந்தாள். (22)

பாட்டிருந்தவண்டுபயின்றிருந்தபைங்கோதை
சூட்டிருந்தவன்னநடைத்தோகையுரைத்தவெலாங்
கேட்டிருந்துமெண்ணான்முன்கேட்டிருந்ததன்மையினால்
வாட்டிருந்துகண்ணான்முன்பின்னும்வழங்குவான். (23)

அயிற்கதிர்வேற்கூர்வாளலகம்பனையவிழிக்
குயிற்குதலைச்செவ்வாய்க்குறுமுறுவற்கொம்மைமுலைப்
புயற்கரியகூந்தற்பொலன்கொடியீர்பூங்கணையா
லுயிர்க்கிறுதிவேலைதருமமுமொன்றுண்டாமோ. (24)

என்னீருரைத்தீரெனினுந்தமியேனைக்
கொன்னீர்ங்கணைமதனன்கொல்லாமற்காத்தீரே
னன்னீர்மைகாண்பீரதன்றியருணல்கீரேற்
பின்னீர்பெறுதல்பிழையாமெனப்புகன்றான். (25)

வாட்டுந்தழலிற்றளிரியலிவ்வன்கண்ணான்
ஈட்டுந்தருமமிழவாளிவளிருந்த
வீட்டிலிருந்தேனைத்தீண்டவுயிர்விடுவது
காட்டும்பதிவிரதமன்றன்றெனநடந்தே. (26)

மைதீண்டும்வேற்கண்மழைதீண்டுங்காரோதிப்
பொய்தீண்டாவுள்ளப்பொலங்கொடியிப்புன்மையோன்
மெய்தீண்டிற்கற்பின்றழல்...............மவன்
கைதீண்டாவண்ணமரணமொன்றுகட்டுரைப்பாள். (27)

மாதவனேநின்னுழையில்வந்தேற்கொருபுலனும்
போதவுளதோவலையிற்புக்கமான்போலன்றோ
............நீயோர்வரமீந்தாயென்னின்மனக்
கேதமொழிவேன்யானென்றாளக்கேடில்லாள். (28)

பூவைமொழியின்னபுகலமனம்பூரித்தான்
றேவநிதியனையீரொண்சொல்தெரித்திரென
தாவியெனினுமளியேன்றாற்பாலே
னீவிருரைமினினையதெனநேர்ந்தனனால். (29)

நிரதம்வளமைக்கிளமைமிக்கநெடியோனே
புரதகனமூரற்பொருப்புச்சிலைப்புனித
வரதன்றுளோரேழ்வருடம்கருதும்
விரதமுளததனைக்காத்தருளவேண்டுமால். (30)

சாலினியாமின்னினையசாற்றத்தகையிழந்த
மாலினியநெஞ்ச.:மதிமயங்கிமாழாந்து
மேலினியாமொன்றுவிளைத்துளேமென்னினுயிர்
போலினியாள்பொன்றுமெனதாவியும்பின்போகுமால். (31)

வலைந்தவலைப்புகுந்தமானென்றதுஞ்சாதம்
விலங்கியகலவொருவேற்றிடமும்பெற்றவரோ
வலங்கலயில்விழியார்தன்மையறிவோமெனவே
யிலங்குமணிவணிகனுள்ளமியைந்தனனால். (32)

சிந்தையியைந்தான்றிரும்பவுமாங்கொன்றுணர்ந்தான்
மைந்தரொடுங்கானில்விறகெடுக்குமற்றையவ
னிந்துநுதலியொடுமிவ்வூரிருக்கின்மத
னுந்துகணையாலென்னுயிருமிறக்குமால். (33)

தேடற்கரியவுயிர்தீங்குறுவதென்னிவளை
யோடத்திலேற்றியொருவாதுமாற்றரசர்
நாடுற்றிடுவனனுகவுமொண்ணாதிதற்கோர்
ஈடுற்றசூழ்ச்சியினியென்கொலெனவெண்ணியே. (34)

உண்டு நிபக்கருத்தென் றுன்னினான் றன் னுழையிற்
பண்டேழ்முறையிற்பழகிப்பெறுங்கூலித்
தண்டேலங்குத்துர்நளிரியலார்யாருமரி
கொண்டோர்கடற்றுறையில்வம்பினெனக்கூறியே. (35)

அத்துறையினீரோடுமம்பியணைத்தினிது
முத்துறழும்வாலரிசிமொய்குழலார்கொண்டேற்ற
வுய்த்துவிடுத்தனனவ்வோடத்திறேடரிக்கட்
பத்தினியைக்கொண்டுகடற்பாயெடுத்துப்போயினான். (36)

வேறு.

வெய்யோன்விடும்வேலைமரக்கலமேன்
மையோதிவளைக்கைமடக்கொடிவீழ்ந்
தையோவெனவாக்கையுமாருயிரும்
பொய்யோவுறவென....புதுக்கினளால். (37)

நாவாய்கடற்போகநலிந்துயிரும்
போவாடுணைகண்டிலள்பொங்கழலின்
வேவாளெனமெய்பதறப்பதற
வாவாவெனநொந்தழும்வீழுமெழும். (38)

தக்கானெனவேதகவில்லவனிற்
புக்காதுபுறங்கொடுபோயிலமே
கைக்கார்முகமன்னவகண்மணிநேர்
மக்காளெனவேங்கிமயங்கிடுமால். (39)

சேணாடுமிருந்தசெழும்பதியு
காணாளும்வழங்கியநன்னிதியுக்
கோணாவரசின்றிறனுங்குறுகிக்
காணாவிறையெவ்வுழிகாணுமெனும். (40)

இந்தக்கொடிதாமிடரிற்புகுதா
துந்தக்கடவேனுயிரைத்தமியேன்
சிந்தித்தபல்செலவிடமொன்றறியா
மைந்தர்க்குளர்யாரெனமாழ்குமனம். (41)

போர்வாளிறையோடுவனத்திடைபோய்
வேர்வாடியமெய்யொடுவெய்தின்வருஞ்
சோர்வாறிடவன்னையெனச்சுதர்வந்
தார்வான்முகநோக்குவரென்றயரும். (42)

கனிவாய்மழலைச்சுதர்கண்ணுறவோ
வனைவார்கழன்மன்னையெதிர்ந்திடவோ
வனையார்முகநோக்கிடவோவளியே
னெனதாருயிர்தாங்கியிருப்பதெனும். (43)

செ ய்யாமலருங்குளிர்வாசமுமொத்
தெய்யாது திளைத்திடுமின்பநலக்
கையார்கதிர்வேலிறைகண்டிலனே
னுய்யானினியானுயிருய்க்குமெனும். (44)

சுறவேகயலேசுரிசங்கினமே
சிறைவீசியெழுங்குருகின்றிரளே
யறைவாரிதியேயளியேனவல
மிறையேனுமொழிக்கிலிரோவெனுமால். (45)

கங்கைச்சடிலக்கருணைக்கடலே
செங்கட்கடலின்றிருமேனியனே
யெங்கட்கிறையென்றவிளங்குமா
ருங்கட்கபயம்மெனவொன்றுரையா. (46)

பஞ்சேறுபதத்திபயத்தினைவிட்
டுஞ்சேனெனவீயவொருப்படலு
மஞ்சேறுயர்வானிடைநின்றொருசொ
லஞ்சேலெனவஞ்செவியார்த்ததுவால். (47)

அகல்வானிடைநின்றசரீரிசொல
வுகுதாவுயிர்தாங்குமுடம்பினளாய்
மகர்காளென்தாருயிர்மன்னவனே
புகல்யாதுகொலென்றுபுழுக்கமெழா. (48)

பாகொத்தமொழிக்கிளிபூவைபசுந்
தோகைப்பெடையன்னமெனுந்துணையாள்
வேகக்கடலம்பியின்மேலொருகட்
காகத்தையுமன்றுகடுத்தனளால். (49)

இத்தன்மையளோகுமாக்கலமேன்
முத்துர்ந்துகடற்றிரைமோதுவபூங்
கொத்துண்குழலைக்கொடுபோகலெனக்
கைத்துன்றிமறித்தல்கடுத்திடுமால். (50)

கார்க்குன்றுகொடன்றுகடைந்துவளைப்
போர்க்குன்றனையான்கொடுபோகியவவ்
வார்க்குன்றமுலைத்திருமாலுமெனப்
பார்க்கின்றனவொத்தனபாய்திரையே. (51)

முதிருந்திரைமோதியநுண்டுளிகள்
விதிர்கின்றவண்மெய்ந்நனிவீசுதல்விண்
டதிருங்கடலங்கையினிற்பனிநீர்
பிதிர்கொண்டெறிபெற்றிநிகர்த்திடுமால். (52)

இவ்வாறெறிவேலையினேகியகார்
மைவார்விழிமங்கைதவம்புரியப்
பொய்வாழ்வுறுபுன்மைமனத்தவனுஞ்
செய்....சறியாது திகைத்தனனால். (53)

வேறு.

பாரக்கலத்தேற்றிப்பாவிகொடுபோகமனஞ்
சோர்வுற்றுடன்மையினைப்பின்னுந்தொகுத்திடுதூர்
தாருற்றதோளான்றனயரொடுமவ்வனத்திற்
பெறுற்றதன்மையினையிங்கெடுத்துப்பேசுவாம். (54)

ஓடமேற்றுபடலம் முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

உ

ஒரு வேண்டுகோள்.*

செந்தமிழபிமானிகளே! தமிழ்நாட்டுச் செல்வர்களே!!

உலகம், பலதுறைகளிற் பலவிதமாக முற்போக்கையடைந்து போய்க்கொண்டிருக்கிறது. ஒவ்வொருதேசத்தாரும் தங்கள்தங்கள் முற்போக்கைநினைத்துப் பலவழிகளிலும் சீர்திருத்தம்பெற முயற்சிக்கிறார்கள். நம் இந்தியநாடும் அவ்விதமே செவ்விதாக முன்னுக்குவர முயலுகின்றது என்று சொல்லுகிறார்கள். அது எப்படியாயினும் ஆக. கூடியசீக்கிரத்தில், ஜனங்கள், தங்களுடையபாஷாபிவிருத்தியைக்கொண்டே, தங்கள் க்ஷேமலாபங்களைக்கருதும்படியானகாலம் வந்துவிடும். தமிழ்நாட்டுமக்கள் முன்வரிசையில்நிற்க விரும்புவார்களாயின், முன்போல வாளா களித்திருக்காமல், அசைவிலா ஊக்கமுடையராய்த் தாழாதுஞற்றுபவராய்த் தமது தமிழ்மொழியைப் பெரிதும் பரிபாலிக்கவேண்டும்.

ஜப்பானியர்கள் தற்கால நாகரிகசாஸ்திரவிஷயங்களையெல்லாம் ஜப்பானியபாஷையிலேயே ஆராய்ந்து எழுதுகிறார்கள். ஜெர்மானியர்கள், பிரஞ்சுக்காரர்கள், இத்தாலியர்கள், ஆங்கிலேயர்கள் முதலியவர்கள் தத்தமதுபாஷைமூலமாகவே தந்தந்தேசத்துச்சிறார்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் ஜெர்மனி அல்லது பிரான்சு முதலிய இடங்களுக்குக் கல்விபயிலச்சென்றால் அந்தந்தப்பாஷைகளைக்கற்றுத்தான், பிறகு அந்தந்தவிஷயங்களைக் கற்க யத்தனிக்கிறார்கள். ஆனால் நாம்மாத்திரம், ஆங்கிலநாட்டில் நம்காலையெடுத்துவைக்காமலே, நம்மகத்திலேயே, பிறபாஷைமூலமாக நமக்குத் தெரியவேண்டியவிஷயங்களைக் கற்றுவருகிறோம். இது நமக்கு ஒரு பெருங்குறை. இம்மாதிரிக்குறை ஜப்பானியர்களிடமிருந்தது. அவர்கள் அதைத் தீர்த்துக்கொண்டுவிட்டார்கள்.

நமதுதேசத்திலேயும் வங்காளவாசிகள் தங்கள் குறையையும் ஒருவாறு தீர்த்துக்கொண்டு, இன்னும் மேலேபோய்க்கொண்டிருக்கிறார்கள். தம் சொந்தப்பாஷைமூலமாகக் கல்விபயிலுவதின் விசேஷத்தையறிந்த

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் இருபத்தோராம்வருடக் கொண்டாட்டத்திற் படிக்கப்பட்டது.

நிஜாம்மன்னனும் தமது ராஜ்யத்தில் ஊஸ்மானியாயூனிவர்சிட்டியை நிர்மாணித்து, உருதுமூலமாகப் பாடங்கள் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இன்னும் சமீபத்திலே, மைசூர்மன்னனும் தம் ராஜ்யத்தில் ஒரு யூனிவர்சிட்டியை ஏற்படுத்திக் கன்னடபாஷையை முதன்மையாக்க ஏற்பாடுசெய்திருக்கின்றனர். தெலுங்குநாட்டுச் சகோதரர்களுடைய ஊக்கமும் பாஷாபிமானமும் நன்று யின்னும் பலனடைய வில்லை. மலையாளநண்பர்கள் என்னசெய்கின்றனரோ தெரியவில்லை. தமிழர்களாகிய நாம் அயர்ந்து கும்பகர்ணன் நித்திரையில் ஆழ்ந்திருக்கிறோம். நாம் துயிலெழவேண்டும். துயில் தீர்க்கமாயெழவேண்டும்!!

"பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம் ஒருசொற் கேளீர்.

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமானபுலமையெனில் வெளிநாட்டோர் அதைவணக்கஞ்செய்தல்வேண்டும்."

இப்படிச்செய்வதற்குத் தக்க ஒருசங்கம்வேண்டும். அது நமது தமிழ்ச்சங்கமேயாகும். அதற்கு இருபத்தோராவது ஆண்டும் முடிந்துவிட்டது. இன்னும் அது ஒரு மேஜருடைய குணாதிசயங்கள்பெறவில்லை. என்று பெறுமோ ?? தமிழர்கள் "களிக்கின்றாரலால்" இது விஷயமாகக் "கவல்கின்றார் ஒருவரையுங் காணோமே!" நகரத்துச் செட்டிமார்களே! குறுநிலமன்னர்களே!! எழுந்திருங்கள், விழியுங்கள்!! எலக்ஷன்களிலும் கல்யாணகாலங்களிலும் செலவிடும் பணத்தை எண்ணிட்டுப்பார்த்தால் நமக்கு இது விஷயத்துக்கு வேண்டியபணம் கிடையாமற்போகாது. "கண்டெழுது பற்றுவரவினில்மயிர் பிளந்தே கணக்கிலணு வாகிலும்விடார்" ஆகிய "வணிகச்சீமான்களே! உசிதமான" இவ்விஷயத்திற் "தனதிரவியங்கள்விடுவார்"கள் என ஏற்படவேண்டும். வர்த்தகர்களுடைய உதவியின்றி, இவ்விதமானகாரியங்கள் ஈடேறா. நமது நாடுகளில், வர்த்தகர்களுடைய 'மகிமை'யின்பெருமையறியாதார் இல்லை. ஆதலின், தக்க செல்வவான்களே! செல்வாக்கு உள்ளவர்களே!! "வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கும் மேவும்"வண்ணம் முன்வாருங்கள்! முன்வாருங்கள்!! முன்வாருங்கள்!!!

K. O. வீரராகவையர்.

ஸ்ரீ:

ஒரு விக்ஞாபநம்.

சென்ற ஆனிமாதச்செந்தமிழ்ப்பகுதியில் ஸ்ரீமான் ஸி. சிவசங்கர ஐயாவர்கள் தொடுத்த ஐயவினுக்களுக்குச் சென்ற ஆவணிப்பகுதியில் ஸ்ரீமான் K.G. சேஷையாவர்களும் எனது நண்பர் ஸ்ரீமான் T.N. அப்ப னையங்காரவர்களும் விடுத்தவிடைகளைக் கண்ணுற்றேன். "மாதர்கள்கற் பின்மிக்கார்" என்னுங் கம்பராமாயணச் செய்யுளில், "மற்றைச் சாதகை மாந்தரெல்லாந் தயரதன்றன்னையொத்தார்" என்னும் பகுதியின்பொருளை விளக்குமிடத்து ஸ்ரீமான் ஐயாவர்கள் "சாதுகை" என்ற பாடங் கொண்டு "சாது" என்னும் வடசொல்லே ககர அசைநிலைபெற்றுப் பின் னர்த் தமிழிற் "சாதுகை" எனத் திரிந்து வந்ததென்றும், நண்பாவர்கள் "சாதகைமாந்தர்" எனப் பாடங்கொண்டு சாவக்கடவ மூப்பான்முதிர்ந்து தளர்வெய்திவருந்தும் மாந்தரெல்லாரும் இராமனை முடிசூட்டிப்பார்க்கும் பாக்கியந் தமக்கில்லாமைக்கு மனமொழிமெய்களால் வருந்துகின்றாராத லின் அந்நிலைமையுடைய தயரதன்போலானார்கள் என்றும் கூறியுள்ளார் கள். நிற்க,

இராமாபிஷேகவிஷயத்தில் நகரத்தார்க் கெழுந்தவுவகையைப் பொதுவகையாற் கூறியமையாது சிறப்புவகையானுங் கூறப்புகுந்த கம்பர் பெண்பாலரிற் கற்பின்மிக்கமுதுமகளிர் கோசலைமனத்தையொத் தார் என்றுகூறிப் பின் பருவமங்கையரனைவரையும் ஒழிவுபடாது வேறு மகளிரெல்லாஞ் சீதையையொத்தார் என்று கூறினர். ஆண்பாலரைக் கூறக்கருதி வேதியர்வசிட்டனொத்தார் என்று வேதியரைமாத்திரம் பிரித் துக்கூறி ஒழிந்த ஆண்பாலரனைவரையும் ஒழிவுபடாது மற்றைமாந்த ரெல்லாந் தயரதன்றன்னையொத்தார் என வாளாகூறுவதே அமைவுதா யிருக்கவும் "சாதகை" என்னும் அடையைப்புணர்த்தியிருக்கிறார்.

சான்றோர்செய்யுட்களில் அடைச்சொற் புணர்ப்பது தாங்குறித்த பொருள் சிறப்புந் தெளிவுமுறுதற்பொருட்டேயாதலின் இவ் வடைச் சொல்லால் 'மற்றைமாந்தரெல்லாந் தயரதன்றன்னையொத்தார்' என்பத னாற் கம்பர்குறித்தபொருட்குத் தெளிவுஞ் சிறப்புங் கிடைத்தல்வேண் டும். அங்ஙனமிருக்க இவ்வடைச்சொற்குச் சாதுஜனங்கள் எனப்

பொருள்கொள்வதால் அந்நகரில் துஷ்டருஞ் சிலருளரோ என்றும் அவ ரென்னுற்றனரோ? என்றும், சங்கிக்க இடமேற்படுகின்றது. அன்றி நகர மாந்தரனைவரையுங் கூறியது மாகாது. அன்றிச் சாவக்கடவதில்லைமயி லுள்ளமாந்தரெவரிலோ வேதியரொழிந்தாரனைவரும் சாவக்கடவதில்லைமயி லிருந்தாரெனப் பொருள்பட்டு அசம்பாவிதமாம். அந்நிலையிலிருந்த ஒரு சிலரெனக் கொள்வதாயினும் மற்றைப் பலரைவிடுத்து இச்சிலரைக் சொல்லிவிடுவதனாற் பலன்யாது? இராமாபிஷேகவிஷயத்தில் நகரத்தார்க் கெழுந்த மகிழ்ச்சிமிகுதியைவருணிக்கப்புகுந்த கம்பர் இவ்விடத்திற்குச் சிறிதும் இயைபில்லாத மாணுவஸ்தையிலிருந்தாரது துக்கமிகுதியை அநாவசியமாகப் பிரஸ்தாபித்துத் தயாதனது பரிதாபநிலையைக் குறிப்பித்து அமங்கலப்படுத்தத் துணிவரோ? அங்ஙனங்கூறவேண்டுவ தாயின், சாவக்கடவதில்லையிலுள்ளாரும் இராமாபிஷேகங்காணும் உற்சாக பாவசராய்த் துள்ளியெழுந் தார்ப்பரித் தோடிக் கொலுமண்டபத்தை யடைந்தார்கள் எனக் கூறுவது தகாதோ? இங்ஙனம் இப்பொருள் களுக்கு இடர்ப்பாடுகள் காண்பதனாற் கம்பர் அச்சொற்கு வேறுபொருள் குறித்தவராதல்வேண்டும்.

ஊன்றிநோக்கினுல் உஜ்ஜயினீ என்னும் வடசொல் உஞ்சை என் றும், துவாரகாஎன்னும்வடசொல் துவரையென்றும் தமிழிற் சான்றோர் செய்யுட்களில் வழங்கிவருதல்போல அயோத்தியின்பரியாயநாமமாகிய சாகேதபுரீ அல்லது சாகேதம் என்னும் வடசொல்லே இங்கே கல்வி யிற்பெரிய கம்பரால், தமிழ்பாப்புக்கிசையச் சாதகை யெனவழங்கப் பட்டதெனவே தோன்றுகிறது. சாகேதம் என்பது சாதகையென வழங்கப்படுவது தக்கதே. மிக அருகித்தோன்றும் இவ்வழக்கும் தமிழ் மொழிக் கின்றியமையாத தொன்றே. இங்ஙனம் தமிழணங்கிற்கும் தமிழ்ப்புலவ ருலகுக்கும் விருந்தளிக்கத்தக்காரெனக் கல்வியிற்பெரிய கம்பநாடரினும் வேறெவரைச் சொல்வது?

இங்ஙனங்கொள்வதாயின், சாதகைக்கண்வாழ்வாராகிய கற்பின்மிக்க முதுமகளிரெல்லாம் கோசலையனைத்தையொத்தார்; ஆண்டுவாழும் மற் றைப் பருவமங்கையரெல்லாம் சீதையையொத்தார்; சீதை திருவினை யொத்தாள்; சாதகை வேதியரனைவரும் வசிட்டனையொத்தார்; ஆண்டுள்ள மற்றைமாந்தரெல்லாந் தயாதனைபோன்று மகிழ்ச்சிமிக்கு விளங்கினர்

கள் எனப்பொருள்படும். தயாதன் அப்பொழுது மகிழ்ச்சியிலனேயா யினும் இராமாபிஷேகவிஷயத்தில் தயரதனுக்குண்டாகும் மகிழ்ச்சியே போன்று அயோத்திநகரத்திலுள்ள மாந்தரனைவர்க்குந் தனித்தனி மகிழ்ச்சிமிக்கதென்பதே கருத்தாம். யாண்டுளமாந்தரெனிற் சாதகை மாந்தரெனத் தெளிவுபடுவதுடன் எஞ்சாமைப்பொருளும் வலியுறுகின்றது. இப்பொருள்கருதிக் கம்பர் இதனைவழங்கியிருக்கலாமோவென்று எனது சிற்றறிவுக்குத் தோன்றுகிறது. இதனைப்பற்றிக் கற்றகேட்ட பெரியோர்கள் தத்தங்கருத்துக்களை வெளியிடக்கடமைப்பட்டுள்ளார்கள்.

ரெ. இராமையங்கார்,
தமிழாசிரியன்.
கோபாலசமுத்திரம் ஹைஸ்கூல்.

பாமணி சிலாலிகிதம்.

கே. ஜி. சங்கரன்.

பாமணி என்பது தஞ்சாவூர்ஜில்லாவில் திருத்துறைப்பூண்டி ஜங்ஷனிலிருந்து 2 மைல் கிழக்கிலிருக்கும் ஒருக்ராமம். அவ்வூரில் முதலியார்கள் இருக்குமிடத்தருகில் காணப்படும் காளஹஸ்தீச்வரர்கோயில் தொண்டைமண்டலம் முதலியார்களால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்பொழுது அது பாழடைந்திருக்கிறது. அதன் அமைப்பிலிருந்து அது 300 ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்டதென்று தோன்றுகிறது. அதிலிருக்கும் லிகிதத்தை என் பார்வைக்குக்கொண்டுவந்து அதை வாசிப்பதற்கு உதவிய அவ்வூரில் பெரியமிராசுதாரரான கோ. ரெங்கநாதமுதலியார் அவர்களின் தந்தை கோபாலமுதலியார் அவர்களே கோயிலின் அடிவாரத்தை வடபகுதியில் சில இடங்களில் கல்லினால் திரும்பக்கட்டினவர். கோயில் செங்கல்லாற் கட்டப்பட்டது. கீழ்த்திசைநோக்கி யிருக்கிறது. அதில் அடங்கியிருப்பவை (1) லிங்கம், விமானத்துடன் கர்ப்பக்ருஹம்; (2) அர்த்தமண்டபம்; (3) வடபக்கம் நாகங்களை அடுத்து வீற்றிருக்கும் நடராஜருடனும், நடுவில் லிங்கத்துக்கு எதிரில் நந்தி பலிபீடங்களுடனும், வடகிழக்கில் தெற்குநோக்கி ஞானாம்பாள் கோயிலுடனும் முகமண்டபம்; (4) தமிழ்லிகிதத்துடன்

படிக்கல்; (5) க்ரமமாய், தென்கிழக்கு, வடகிழக்கு மூலைகளிலும், விமானத்திற்குப்பின்னும், வடபக்கத்தின் நடுவிலும், எல்லாம் லிங்கத்தைப்பார்த்திருக்கும் விஷ்ணு, விநாயகர், ஸுப்ரஹ்மண்யர், சண்டேச்வரர்கோயில்களுடன் ப்ராகாரம்; இக்கோயில்களின் விக்ரஹங்கள் தந்தமிடங்களில் இராமல் தக்ஷிணாமூர்த்தி பைரவ விக்ரஹங்களுடன் அங்கங்கு குவிக்கப்பட்டிருக்கின்றன; (6) ப்ராகாரத்திற்கு வெளியில் தென்பக்கத்தில் நந்தனவநமும் ஐயனார்குளமும்; (7) ப்ராகாரத்திற்கு வெளியில் வடகிழக்குமூலையில், அகத்தில் அங்குசத்தைக் கையிலேந்திய சாஸ்தாவிக்ரஹத்துடனும் அவர் தேவிகள் பூர்ணை புஷ்கலை விக்ரஹங்களுடனும், முன்னிலையில்நிற்கும் இரண்டு மண்குதிரைகளுடனும் ஐயனார் கோவில்.

அக்ஷயவர்ஷம் பங்குனி பௌர்ணமியில் இந்தலிகிதம் பொறிக்கப்பட்டது. கடைசி அக்ஷயவர்ஷம் கி. பி. 1866–67-ல் வந்தது. தானங்கள் அளிக்க பௌர்ணமி சுபதினமெனக் கருதப்படும். முன்காலத்தில் இந்த க்ராமம் பூராவும் காளஹஸ்தீச்வரரின் அபிஷேகக்கட்டளையாக ஏற்பட்டிருந்தது. இப்பொழுதோ அவருக்கு ஒன்றும் கிடையாது. அவர் நிலங்களை அநுபவித்துவருகிறவர்கள் அவர்கோயிலைச் சீர்திருத்துவதற்குக்கூடப் பணம் உதவமாட்டேன் என்கிறார்கள். இந்தக்ராமம் தெற்கு க்ராமம் என்று கூறப்படுவதால், தானம் அளித்தவர், இதற்கு வடக்கில் இருந்ததாகத் தெரிகிறது. அவர் பெயர் இன்னும் வெளிவராதது வ்யஸனிக்கத் தக்கதே. இந்த க்ராமத்தின் பழம்பெயர் பாம்பணியே. அது இன்றும் இக்கோயிலிற் காணப்படும் நாகங்களையணிந்த சிவன் பெயர் ஆகும். கோயில் கட்டிமுடிந்ததும் இந்தலிகிதமும் வெட்டப்பட்டதாகத் தெரிகிறது. அது இதுவரை வெளிவராததால், கீழே தரப்படுகிறது.

(1) [அக்ஷயவர்]ஷ[ம்]ப (2) ங்கு[னிமாஸத்து] (3) சாந்த்ரமத்ய (4) தனம்மந்தசிதம் (5) [பானம்]திபாக் (6) [கஅபி]ஷேககட் (7) [ட]ளைக்குத் [தெக்கு] (8) [க்]கிராமமான (9) பாண்பணிநா (10) [ன்கெ]ல் லைக்கு (11) மீடப்பட்டதெ (12) ல்லாம் சந்திரா[தித்த] வரையும் (14) அனுபவித்துக் (15) கொள்ளவும்.

புத்தக மதிப்புரை.

1. சளுக்கியவிக்கிரமாதித்தன்சரித்திரம்:—இது சென்னை மேரி ராணியார் மாதர்கலாசாலைச் சரித்திரபோதகாசிரியராகிய ஸ்ரீமத். அ வா. வேங்கடராம ஐயர் M.A., L.T. அவர்களால் எழுதப்பெற்றது. இதில் இதுகாறும் சிலாசாசனங்களால் வெளிவந்த விஷயங்களைக்கொண்டு ஆராய்ந்தறிந்து சளுக்கியவிக்கிரமாதித்தனுக்குப் பூர்வபாரம்பரைகளும் அவனுடைய விருத்தாந்தங்களும் எழுதப்பட்டுள்ளன. இதன்விலை ரூபா 1. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

2 ஆங்கிலகலாசாலை மாணவர்களின் 1923ஞுத்து S.S L.C. பரீக்ஷையின் A பிரிவுக்குரிய செய்யுட்பாடக்குறிப்புரை:—இது ஸ்ரீமத். பண்டித. ரா. திம்மப்ப ஐயரவர்களால்,செய்யுட்களுக்கு உரையும் இலக்கணக்குறிப்புக்களும் ஆங்காங்கு மாணவர்களறிந்துகொள்ளவேண்டிய வரலாறுகளும் நன்குவிளங்குமா றெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

3. தமிழ்வியாசம்(விஷயமும் குறிப்பும்):—இது சென்னை சென்ற் பீட்டர்ஸ் ஐஸ்கூலின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சே. சோமசுந்தரம்பிள்ளையவர்களா லெழுதப்பட்டது. இதனால் இடைத்தரமாணவர்களுக்குத் தமிழ்பயிற்றுவிக்கும் முறை யறியலாம். இதன்விலை அணா 5. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

4. நாயன்மார்:—இது, நவசக்தி ஆசிரியர் ஸ்ரீமத். திரு. வி. கலியாணசுந்தரமுதலியாரவர்களால் நாயன்மார்களி னொழுகலாறன செயல்களின் உண்மைக்கருத்துக்களை யாவரும் படித்துணரும்படி தெளிவாக வெழுதப்பட்டுக் காரைக்குடிச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால் வெளியிடப்பட்டது. வேண்டுவோர் அத்திருக்கூட்டத்தாருக் கெழுதிப் பெறலாம்.

5. நாப்பழக்கத்திற்கான நற்கதைகள்:—இது சென்னை சென்ற் பீட்டர்ஸ் ஐஸ்கூலின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சே. சோமசுந்தரம்பிள்ளையவர்களால் சிறுவர்கள் படிப்பதற்கேற்றவாறு 11 சிறு கதைகளுடையதாய் நன்கு யெழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 2½. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

6: கவிமணிமாலை முதற்பாகம் அரும்பதவுரைக்குறிப்புடன்:— இதில், பெருந்தேவனார்பாரதத்தில் உத்தியோகபர்வத்தில் 150 செய்யுளும், நாச்சியார்கனவு, அம்பரீஷன், தசரதன்சாபம், இளையான்குடிமாற நாயனார், திருவாசகம், நன்னூல், இறைமாட்சி என்னும் தலைப்புடைய சில செய்யுளும் அடங்கியன. இதன்விலை அணா 7. வேண்டுவோர் ஐயம் அண்டு கம்பெனி 35 ஹைரோட், எழும்பூர், சென்னை என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.

7. பாண்டவர்தூதன்:—இது பாரதத்து உத்தியோகபர்வகதையைத் தமிழ்நடையிலெழுதி ஷை கம்பெனியால் வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 6.

8. திணைமொழி ஐம்பது (மூலமும் பழையவுரையும்):— இது சென்னை பச்சையப்பன்காலேஜின் தமிழாசிரியர் ஸ்ரீமத். மணிநாவுக்கரசுமுதலியாரவர்களாற் பரிசோதிக்கப்பட்டுத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தாரால் வெளியிடப் பட்டது. இதன்விலை அணா 5. வேண்டுவோர் மேற்படிக் கழகத்தார்க் கெழுதிப் பெறலாம்.

9. இனியவைநாற்பது (மூலமும் பழைய பொழிப்புரையும்):- இது சென்னைக் கிறிஸ்தவ கலாசாலைத் தமிழாசிரியர் ஸ்ரீமத். வ. மகாதேவமுதலியாரவர்களெழுதிய விருத்தியுரையுடன் ஷை கழகத்தாரால் வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 5.

10. அ. குமாரசுவாமிப்புலவரின் சரித்திரச்சுருக்கம் :— இது உடுவில் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமத்: வ.மு. இரத்திநேசுவரையரவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இதன்விலை அணா 2. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

பத்திராதிபர்.

வேறு.

இருந்தகாலையினிறைந்தவேத்தவையிடையிணைமுலையிறுமாப்பத்
திருந்துநூபுரச்சில்லொலிகல்லெனத்திகழுமேகலையார்ப்ப
வருந்துமெல்லிடைவல்லியிறெனல்கிடவளைக்கரம்புடைவீசி
விருந்துவானவர்க்கூட்டியபேரெழின்மின்னுவிட்டெறித்தோங்க. (15)

விடந்ததும்பியவாளெனக்கணையெனவேலெனப்பாலூடே
கிடந்தநீலமாமலரெனப்பரந்திணைக்கெண்டைகளெனத்துள்ளிக்
கடந்துவார்குழைக்கடைகிழித்தாடவர்கருத்தையும்பறித்தோடி
நடந்துமீண்டகண்ணிரண்டுமேயனங்கவேளடத்தியதூதென்ன. (16)

வடிவின்மேற்புனைசெயற்கையாலியற்கையாம்வனப்பினுன்மதிப்பின்றிப்
பிடியிலோதிமப்பெடையெனமிளிருமோர்பெருமிதநடையாளா
யடியில்யாவரும்வீழ்வபோன்மயல்கொளவரும்புபுன்னகையாளாய்க்
கொடிகுலாயமின்படர்ந்தபோலுருவசிகுறுகினாளவ்வேலை. (17)

வழிந்ததேனிகர்மொழியினாள்வரவினைவல்லைவல்லையினன்றாய்ச்
சுழிந்துவானவர்பன்முறைநோக்கினர்தொன்முறையிலளென்னாப்
பிழிந்துகொள்வபோல்விளங்கியசுந்தரப்பெண்மையினுயர்காட்சிக்
கொழுந்தினுட்கிடைக்குறிப்பையும்பொருக்கெனக்குறித்தனன்முகினூர்தி.()

முனிவர்தேவர்கண்மனனுகர்குறுநகைமுகிழ்முலைமதர்வேற்கட்
கனிவுசேரெழிற்காமமீதூர்ந்தவெங்கதிநடைப்பிடிபோல்வா
யினிதில்யாவனைத்தழுவுவான்வந்தனையென்றுவாசவன்கூறக்
குனிதலைக்கொடுவெள்கியும்வெள்கிலாள்கூறும்வேட்கையின்மிக்காள். (19)

நினைத்துநாடினளாடவர்திலகனைநெஞ்சினுட்குறிக்கொண்டு
நனைத்தகாதலிற்கவிதையாய்ப்புரூரவகாமவேலிறைதன்னை
யினித்தசொல்லினாற்புகன்றனள்புகறலுமிமையவர்நகைத்தெள்ளி
மனித்தனேயவன்றேவர்பானலத்தையென்மதித்திடாநிகழ்ந்தாய்நீ. (20)

என்னக்கேட்டிவளென்செய்தாளெனச்சினந்திந்திரனிமைநீத்துப்
பன்னக்கீழ்ப்படுமானிடனொருவனைப்பாவைநீமனமோடி
நன்னர்க்காதலித்தியாதுகாரணத்தினோநவின்றனையதனாலே
யுன்னைக்காண்டலும்பாவமாம்விரைந்துபாருலகிடைப்போவென்றான். (21)

இந்திரன்செயுஞ்சாபமுமிமையவரிகழ்ச்சியும்பிடித்துந்தப்
புந்திபோழ்படக்கீழ்படுமனத்தளாய்ப்புலம்பியொன்றுரைக்கின்றாண்
மைந்தினாற்றெய்வவலியினாலென்றுடைவல்வினைத்தொடர்பாலே
சிந்தைதேறப்புகர்ந்தவென்றீமொழிதேவர்கோன்பொறுக்கென்னா. (22)

அடியில்வீழ்ந்தனளாற்றவும்புலம்பினளெழுதனளடியாட்குக்
கொடியசாபமிட்டாயடிகேளினிக்கூறுமிச்சாபத்தின்
முடிவுகூறுகவாறுகவென்னிடைமுனிவறக்கடைக்கண்ணு
றொடிவில்பேரருள்செய்கவென்றிரந்தனளுருப்பசிகரங்கூப்பி. (23)

இரந்துநிற்றலுமிமையவர்யாவருமிரங்கினரவரோடும்
புரந்தரன்றனதுள்ளமன்புறத்திடப்பூவைகேளினிப்போந்
துரந்தவாறடைந்தொல்லைமீண்டென்னிடைத்தொல்லைபோலடைகிற்பா
யரந்தைகூர்ந்திடேலென்றருள்புரிந்தனனவையுளார்செவிகேட்ப. (24)

அண்டவாணர்கள்போக்கலுமவையொரீஇயக்கணங்கலைத்திங்கள்
மண்டிலம்புவியிழுக்கிவீழ்ந்தெனவாய்வழுக்கினள்வழிக்கொள்ளாக்
கெண்டையங்கணுண்மனித்தரில்லாததோர்கிடக்கையாம்வனத்தின்கட்
சண்டமாருதமுரித்தபூங்கொம்பெனத்தளர்ந்துவீழ்ந்தனளன்றே. (25)

செய்யசம்படமுடற்பொதிந்தசோகிளஞ்செழுந்தளிர்க்கொம்பென்னக்
கையிணைக்கொடுசெயனபாரிசத்தளாய்க்கவிகயக்கியதாராய்ப்
பையராமுடிப்பார்மகன்மார்பிடைப்படலையாய்விளங்கின்று
ளையகற்பகமெல்லிதழ்வல்லரியலர்ந்தனநலந்தோன்ற. (26)

போர்த்தசெந்துகிற்படாத்தினுண்மறைந்திடைபுடைத்தமெய்யுறுப்பெல்லா
மார்த்தலர்ந்தபூங்கற்பவல்லரியிடையரும்புகண்முளைத்தென்னப்
பார்த்துளங்கியின்னிலையளாய்ப்பிரிவிடைப்பரிவுசூழ்மனத்தாலே
தீர்த்தினம்பிரிதனிப்பிணைமானெனத்தியங்கினண்மயங்குங்கால். (27)

வேறு.

புனைகவிழ்மீகான்போலப்புலம்புறீஇவருத்தந்தன்னாற்
கணையுறைபுகுந்தாலென்னக்கண்முகிழ்த்தயர்தலோடும்
பணைநெடுந்தோளிதன்னைப்பார்மகடரிக்கத்தானுந்
துணையிருப்பவள்போற்சேர்ந்தாயிலெனுந்தெய்வமங்கை. (2£)

கண்படைவளருமாதின்கனவிடைக்கருணைகூர்ந்து
நண்பினோர்புருடன்போலநண்ணுபுகளிலக்கண்ணான்
மண்படக்கிடர்துசோகவாரியிற்றுயில்வாடன்னை
யெண்படமுன்னநோக்கியின்னனமுரைக்கலுற்றான். (29)

தெய்வவான்கொடியேகாமச்செல்வியின்மதர்த்தநல்லா
யைவகைப்புலனுமொன்றவாதரித்தமைச்சிந்தித்து
ளாவதெற்றாலோதுன்பாலிந்தழேலஞ்சேலஞ்சேன்
மைவரித்தடங்கணின்னையாழ்விக்கும்பொருட்டினாலே, (30)

ஈண்டையோவையையென்னுமிருநதிக்கரையின்பாங்கர்க்
காண்டகுகதம்பகானத்தருகுறக்கதிர்விமானத்
தேண்டகுசனகராதியிருடியர்பிறரும்போற்ற
வாண்டுபேர்திரனும்யாமேயமர்ந்தினிதிருக்கின்றோமால். (31)

நின்னிளநலத்தின்செல்வநேர்ந்தெமக்கன்பர்க்கன்பா
மன்னவனொருவற்சேர்ந்துமகிழ்ந்துபல்போகந்துய்த்துப்
பின்னர்வான்பதவிவீடுபெற்றொடுமடைவாயென்னச்
சொன்னபோதிவன்வியூகசுந்தரனுமென்னு. (32)

புனையிழையவள்புராணபுருடவுத்தமனைப்போற்றிக்
கனவிடைக்கண்டுசிந்தைக்கவலைதீர்ந்துவகைகூர்ந்து
நனவுடனெழுந்தாளந்தஞான்றுமாவேட்டைதேர்வா
னனிகாற்றிசையுஞ்சூழப்புரூரவனடைந்தானங்கண். (33)

அவ்வனத்திடையேநின்றவாயிதழ்ப்பானலுண்கட்
கொவ்வைவாய்த்தெய்வமாதைக்கண்டனன்குவவுத்தோளா
னவ்வியுங்கவரிமானுநாம்பெறப்பொருப்பும்வேயு
மிவ்விடைக்கொடியுங்கண்டாம்வேட்டையொன்றிதன்மேலுண்டோ. (34)

போதுகொல்விசும்புகொல்லோபொருப்பகங்கொல்லோசேக்கை
யாதுகொலறிகிலேமாலிருநிலத்தியங்கலானுங்
காதுகொள்குழைமேற்பாயுங்கண்ணிமைப்பானும்பாரின்
மாதுகொலெனிலுநெஞ்சமயங்குமேமாலைசாந்தால். (35)

என்றிவைதன்னிலுன்னியேந்திழையருகிலெய்தி
நின்றுநீயாரையாதுநின்குலமரபும்யாவ
துன்றிருப்பெயர்நீயாண்டையுள்ளவள்யாருமில்லாப்
புன்றரைக்கிடப்பதென்னைபோந்தகாரணமிங்கென்னே. (36)

துன்புறுமுகத்தளாகியுயிருள்ளுஞ்சோகங்கூர்ந்த
தென்புகல்வல்லிநல்லாயென்றிவைவேந்தன்கூறப்
பொன்புரைபொம்மற்கொங்கைபுளகெழவளவையில்லா
வன்புருவாகியின்புற்றிவையுந்தெரியச்சொல்வாள். (37)

போயதோர்முந்தைநாளிற்பொன்னுலகிருக்கைப்புத்தேண்
மேயவேத்தவையிலெய்திமிகுமதர்ப்பொடுநின்றேனை
யாயிரங்கண்ணனோக்கியாடவர்தம்மில்யார்மேற்
சேயிழையுனக்குவேட்கைசெப்பெனப்புகறலோடும். (38)

தேவரையிகழ்ந்துநீத்துச்சிற்றறிவுற்றுநானு
மோவரும்புருடர்யார்க்குமுத்தமன்புரூரவப்பேர்க்
காவலனவன்மேற்பொங்குங்காதல்கூர்ந்துடையேனென்ன
வாவயின்முனிந்தான்வானோரவைநடுவிருந்தகோமான். (39)

அண்ணல்வெஞ்சாபந்தன்னாலமரர்நாட்டமர்தலின்றி
மண்ணிடையடைந்தேனென்பேருருப்பசியென்பர்வானோ
ரெண்ணுடைவேந்தர்வேந்தேயென்மனங்கவர்ந்தாயென்றன்
கண்ணினுக்கினியகாட்சிக்காளைநீயாரையந்தோ. (40)

ஆற்றவுமுன்னைக்காணிலதிசயம்விளைவதென்னே
மாற்றமொன்றுரைத்தியென்றுமதர்விழிமதுரவார்த்தை
சாற்றலுஞ்செவிக்கின்புற்றேன்றையலேநானுஞ்சோமன்
போற்றியபேரனென்பேர்புரூரவாவென்பர்மன்னே. (41)

மாதர்நீயெனதுகாதன்மன்னுயிராகியென்பா
லாதரித்துறைதல்வேண்டுமனங்களுலைப்புண்பேற்கித்
தாதுலாம்பொழிற்கணின்பந்தழைத்திடக்கூடல்வேண்டும்
போதுகென்றிரந்தோர்சூழற்புணர்ந்தனன்மணந்துகூடி. (42)

புடவியில்வானிற்கிட்டாப்போகங்கள்பலவுமீட்டு
மடவரற்பேதைமாதர்மணியைக்கண்மணிபோலேந்தி
விடலரும்வேட்கையென்னும்வெள்ளமீதூர்ந்தவேந்தன்
கடிநகர்க்கொண்டுபுக்கான்கடவுளர்கோமானென்ன. (43)

சிறந்தவிண்ணிழிவிமானசேகரன்கூடற்கோயி
லுறைந்தவன்கமலைகேள்வன்சன்னிதிக்கொருசாராகப்
புறந்தனிற்சமைத்ததெய்வப்புதுமணிக்கோயில்வைகி
நிறைந்தபேரின்பமூழ்கியவளோடுநிருபன்வாழ்ந்தான். (44)

நித்தலுந்தெய்வச்சுந்தநிருத்தம்பல்லியத்தின்மல்குஞ்
சித்திரப்பாடற்கேற்பசெய்துமாதவனைப்போற்றிக்
கொத்தலர்குழலினாளுமருச்சனைகுயின்றுநன்கிற்
பத்தியின்வழிபட்டானப்பார்த்திவனளிக்கைகொண்டே. (45)

சிலபகல்கழிந்தபின்னர்த்தீர்ந்தனள்சாபமீண்டை
யுலகொரீஇச்சுவர்க்கஞ்சேர்ந்தாளுருப்பசியென்னுந்தேவி
நலனுகர்புரூரவாவுஞானயோகத்தின்சார்பான்
மலர்மகள்கொழுநர்போற்றிவைகுந்தமடைந்தானன்றே. (46)

நாரதமுனிவனென்பானாரணன்புகழ்ச்சிநாமச்
சீரினையிவ்வாறென்றுசெப்பினனியாவரேனும்
யாரொருமனித்தரிக்தவியற்கதையுணரப்பெற்றார்
காரணத்தவரேபாவமனைத்தையுங்கடக்கவல்லார். (47)

அனிச்சையாற்பகவனுமமசாமிளனென்போன்றானுந்
தனிச்சபோதுரைத்திட்டன்றேசார்ந்தனன்றிருமால்பாத
மனச்செயலுணர்வாற்சாற்றின்மால்பதமடையார்யாரே
யினிச்செ:ல்வதெவனோநாளுமிடைவிடாப்பத்தியோர்க்கே. (48)

அவமெலாந்தவமாய்ப்பாவமடங்கலுஞ்சுகிர்தமாகிப்
பவமிலாப்பிரமத்தாடேபடிதலுமவர்க்கேயன்றே
வுவமைதீர்புரூரவாவுமுருப்பசியென்பாடானு
நவமுறுங்கதையீதொன்றைநானிலத்தியாவனேனும். (49)

ஒருவனுக்கொருவன்கூறவவனும்வேறொருவற்கோதத்
தெரிபவனவனுங்காமஞ்சிறந்தபல்போகமெல்லா
மருவுவன்மருவிப்பின்னர்மற்றதைத்துடைத்துப்போக்கிப்
பொருவில்வீடடைவனம்மாவுருவசிபுரூரவன்போல். (50)

முதலாவது உருவசிசாபநீங்குபடலம் முற்றும்.

ஆகக்கவி—581.

இரண்டாவது:
மலயத்துவசன்முதலாயினோர் பூசித்தபடலம்.

கார்வளருமெய்க்கடவுள்கூடனகரிற்குரிய
காவலன்மதிக்குலமெலாம்

பேர்வளரவுற்றதோர்புரூரவனுருப்பசி
பிராணபதமொத்தவளர்கா

ளேர்வளருமர்ச்சனையின்மாலருள்படைத்தகதை
யீதுமலயத்துவசனுஞ்

சீர்வழுதிபத்திசெய்துசோலைமலையுற்றகதை
தேறிடவுரைத்துமினிமேல். (1)

மந்திரத்தினுண்மையறிவீரதிபவித்திரகன்
மாட்சியிவனற்புதமரோ
சந்திரற்குநன்மைதருபோரன்வழியிற்சரிதை
சாற்றுவன்மடக்கிவினவீ
ரந்தரத்திவண்மைகொள்புரூரவனளித்தமக
ளுக்கமடன்முற்றுமுடையோ
னிந்திரத்துயிம்பினனல்ஞன்மகனிதிக்கிறையு
மேத்துமலயத்துவசனே. (2)

ஆயமலயத்துவசநாமவழுதிக்குரிசி
லாயிரமொரெட்டுமுடிசேர்
தூயமலையுட்படுதரசபதிகடெற்கிலுறை
சூரர்திசையெட்டிலுறைவோர்
தேயமுழுதிற்குமெழுசேனைகள்பரப்பியெதிர்
சீறினவரைப்பொடிசெய்தே
போயவனிகட்டிவடமேருவரையிற்றனது
பேரெழுதிவைத்தபுகழோன். (3)

வைத்தகுறிவானவருமுய்த்துணரவேபின்மது
ரைப்பதியின்மேவிமரபாம
வித்தகபுராதனவகத்தியரைநாளும்விர
விப்பரவிமேன்மதிஞரோ
டொத்துறையுமாயிரசம்வற்சரமதாடொரு
தினத்திலொருகாலொருமையாய்
முத்தமிழ்சொன்மாமுனிமுகத்தினெதிர்நாடினன்
முனித்தலைவகேளிதெனவே. (4)

காமகமெனும்பெயர்விமானமதையின்றெனது
காதல்கணிரப்பவருண்மோ
நீமனமிரங்கியெனும்வேலையின்மகிழ்ந்துமுனி
நேயமுடனங்கதுதரச்
சோமகுலபுங்கவன்விமானமதையுந்தியதி
தூரமுளகங்கைகடலோ
டேமமுறுசங்கமதின்மூழ்கினனுடன்கயையி
லேகினனடைந்துபடியா. (5)

மாதினுடனங்குளகதாதரனையுங்கலையயின்
மாதவனையும்பரவியே
வேதியர்விளங்குமுனிவோர்பரமதொண்டரிடை
மேவியவர்தங்கண்முகமா
யாதியையவணங்கினனநேகதருமங்கள்செய்
தியானமதையுந்தியுடனே
போதகரொடெங்கடிதகூடலின்வளம்பதியொர்
போதொடுபுகுந்தனனரோ. (6)

நித்தலுமிவ்வாறவன்வழிபடுதலாயின
னெறிக்கொளுமநாளிலொருநா
ளத்தனிடபாசலதலத்திவன்விமானமிழ
லக்கிரமமாகவிழலு
நத்தர்கணநாதர்கள்பிடித்தனர்பொருந்ததை
நபத்திடைசுலாவிவிடவே
மெய்த்தலைவனனவனுமெய்த்தலைவதாயினன்
விடுத்தயலிலோடவரிதாய். (7)

வேறு.

யானந்தலைக்குறியும்பொழுதங்கணெங்கோன்
வானந்தலைகந்தவுருவாகிமறைந்துநின்று
தானந்தலைக்கந்தபுயல்வாய்த்தனிதங்களென்னத்
தேனுந்துசெஞ்சொற்றிருவாக்கிவைசெப்புமன்றே. (8)

வினவாய்மலயத்துவசப்பெயர்வேந்தர்வேந்தே
வனவார்கழனமணிமஞ்சிரநூபுரத்தி
வினிதாய்ப்பிறந்தநதிகோடிகட்கேற்றமாகித்
துனியாயகங்கைப்புனற்குஞ்சிறந்தியாணர்தோன்ற. (9)

ஒப்பின்றியிந்தவிடபாசலத்தூடுபோழ்ந்து
செப்பொன்றுகொங்கைச்செழுங்கங்கைதிரண்டுவெள்ளக்
கொப்பின்பரந்துவருகின்றனன்கோடிசென்மத்
துப்பின்பவமுந்தொலையும்படிவல்லைதோய்தி. (10)

நந்தம்பதத்துற்பவமாய்நமக்கின்பநல்கி
யுந்தும்படிநம்மடியார்க்குறுபோகமீந்து
முந்துந்திரிவிக்கிரமத்திலெம்பாதமொய்ம்பா
லந்தர்த்தடுத்தர்புயத்தண்ணல்குடங்கராட்ட, (11)

நாகாலயத்தம்புயனெம்பதத்தாட்டொன்னீர்
பாகாய்வழிந்துசருமம்பரந்தன்னதோற்றத்
தாகாயகங்கைபெயராத்திரிபதகையாகி
யேகார்ணவமாய்வருகின்றனளென்பமாதோ. (12)

நானூறுமூன்றுபுவனத்தினர்நண்ணுபாவ
நோனாதசிந்துமிவடன்னெறில்வேகமாற்றி
யானாதசூலப்படையண்ணலமலனாகத்
தானாதரித்துத்தரித்தான்சடைக்காட்டின்மன்னோ. (13)

அத்தன்மையாய்நம்பதம்பூஞ்சிலம்பாருமாகி
யெத்தன்மையோர்க்கும்பசுபக்கியெனச்சொல்பேதக்
கொத்தின்னுயிர்க்கும்பதமுத்திகொடுக்குமிந்தப்
புத்தின்னமுதப்புனலுட்புகுந்தாடிநீயும். (14)

அன்பாயினர்முன்கொடுங்கைப்படைத்துப்பூசித்
தின்பாயெமதம்புயப்பாதமிரண்டுமேத்தி
நன்பாவனையெய்துமுயற்சிகடாத்துகிற்பாய்
மின்பாய்திசையெட்டினும்விட்டுவிளங்குவேலோய். (15)

தருமக்கடவுளெனைப்போற்றிடச்சார்ந்தகாளி
னிருமித்தவாசோமவிமானநிகேதனத்தின்
மருமத்துவைகியிருக்கின்றனமண்படைத்த
பிரமப்பெயரோன்பெருநாட்பெருவாழ்வுகாறும். (16)

காலங்கடோறும்பலகோடியகாவன்மன்னர்
காலங்களோடுட்புரிவார்நமைப்பூசைசாலச்
சீலங்குறித்தெம்மடியாரடித்தொண்டுசெய்ய
மேலங்கமர்வோயிவணீயிருந்தின்பமேவி. (17)

ஈட்டும்பெருஞ்செல்வமெல்லாந்திளைத்தெஞ்சுமீற்றில்
வீட்டின்பமெம்மில்விளைவாயிதற்கையமில்லை
நாட்டஞ்செயிவ்வாறெனநாரணமூர்த்திகூறக்
கேட்டன்புகொண்டிடைபாப்பொருள்கண்டதொத்தான். (18)

நிலையத்திலாங்கணிலவுஞ்சிலம்பாற்றின்மூழ்கி
விலையற்றபொன்னான்மணிபாற்புதுக்கோயில்வேய்ந்த
நிலையிற்பொலியுமிடபாசலத்தெய்வமாலை
மலையத்துவசன்வழிபட்டனன்கையமெல்லாம். (19)

Subscriber No. 27.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி- ஹூ மார்கழி-மீ [பகுதி உ.

VOl. XXI. December–January–1922–1923. No. 2.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

சிறப்புப்பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

1. உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்,
நிலைபெ றுத்தலும், நீக்கலும், நீங்கலா
அல(கு)இ லா விளை யாட்(டு)உடை யாரவர்
தலைவர் : அன்னவர்க் கே சரண் நாங்களே.

இதன் பொருள்:—(நாம் வாழும் பூமியையுள்ளிட்டதும், சூரியனை நடுவாக உடையதுமான அண்டத்தையும் அதுபோலவே மற்றைய) எல்லா அண்டங்களையும் தோன்றச்செய்தலும் (தோன்றியவைகளை) நிலைக்கச்செய்தலும் (நிலைத்தவைகளை) ஒடுங்கச்செய்தலும் (ஒடுங்கியவைகளைத் திரும்பத்தோன்றி நிலைத்து ஒடுங்கச்செய்தலுமாக மாறிமாறிப் படைப்பு முதலான முத்தொழில்களையும் காலதேசவரையறையின்றி எக்காலத்தும் எவ்விடத்தும்) ஓயாத அளவிலடங்காத விளையாட்டாக உடையவரே (எல்லா உலகங்களுக்கும்) முதல்வர். (அவரன்றி வேறு பற்றுக்கோடில்லாமையால்) அவருக்கே நாம் அடைக்கலம்.

யாவை தாமும் உள எனக் கூட்டித் தாம் என்பதைப் பகுதிப் பொருள் விகுதியாக்கிப் பொருள்கூறப்பட்டது. தாம் என்பதற்குத் தாமே (—அசகாயகர்த்தாவாய்—வேறு துணை வேண்டாராய்)என்று பொருள் கூறலும் பொருந்தும். அஸஹாயசூரன் என்பதை மொழிபெயர்த்துக் "கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவ"ன் என வாலிவதைப்படலத்தில் அழகிதாகக் கூறப்பட்டிருப்பதை நோக்குக.

உள ஆக்கல்—உள்ளன ஆகச்செய்தல் (—படைத்தல்). நினைவுறுத்தல் நினைவுறச் செய்தலெனவும் பயமுறுத்தல் பயமுறச் செய்தலெனவும் பொருள்படல்போல, நிலைபெறுத்தல் நிலைபெறச்செய்தல் (—காத்தல்) என்று பொருள்பட நின்றது.

'ஜீவேச்வரஜகத்' என வைணவரும் 'பசு பதி பாசம்' எனச் சைவரும் உயிர் ஈசுரன் உலகம் என்னும் முப்பொருள்கள் சிருட்டிக்கப்படாமல் என்றும் உள்ளனவென்னுங் கொள்கையையுடையோராதலால், உலகம் உள ஆக்கல் என்றது சூக்குமநிலையிலிருந்த உலகத்தைத் தூலநிலையடையச்செய்த லெனவும், நீக்கலும் என்றது திரும்பச் சூக்குமநிலையடையச்செய்தலெனவும் கொள்க. இது *சற்காரியவாதம்; சூனியவாதத்திற்கு மறுதலை.

நீங்கலா—இடையறாத. அலகிலா—அளவிலாத. நீங்கலா அலகிலா விளையாட்டுடையார்— (சிருட்டியாதி முத்தொழில்களையும்) இடையறாமலும் அளவில்லாமலும் செய்யும் விளையாட்டாகவுடையவர். நீங்கலா அலகிலா விளையாட்டுடையா ரென்பதற்கு (ஷை முத்தொழில்கள்) நீங்கலாக (—அன்றி) அளவில்லாத (வேறு) விளையாட்டுக்களை யுடையவரென்றும் பொருள்கூறுவர். அவர், "ஆக்கலும் நிலைபெறுத்தலும் நீக்கலும்" என விளையாட்டு மூன்றென்றதனால், அவைகளையே அளவிலா விளையாட்டு என்று கூறல் பொருந்ாதென்பர். ஆக்கல், நிலைபெறுத்தல், நீக்கலென்றதனால் விளையாட்டுக்கள் மூன்றுவகையென்றும் அவை ஒவ்வொன்றும் அளவில்லாதனவென்றும் கொள்ளலாம்.

---

*சற்காரியவாதம்—முன்பில்லது இடையே தோன்றுதென்றும் காரியம் அழிந்தகாலத்துக் காரியவடிவம் காரணத்தில் அழியாது சூக்குமமாய் நிலைத்திருக்குமென்றும் வாதித்து நிலைநாட்டுவது.

விளையாட்டுடையார்—விளையாட்டாக உடையவர். ஆக என்பது தொக்குநின்றது. "விளையாட்டுடையாரவர் தலைவர்" "விளையாட்டுடையாரெவர் தலைவர்" என இரண்டுபாடங்கள் காணப்படுகின்றன. "விளையாட்டுடையாரவர் தலைவர்" என்று பாடங்கொண்டவர்கள், விளையாட்டுடையாராகிய அவர் தலைவர் என 'ஆகிய' என்னும் சொல்வருவித்துப் பொருள் உரைத்தார். "விளையாட்டுடையாரெவர் தலைவர்" என்ற பாடங்கொண்டார், விளையாட்டுடையார் எவரோ அவரே தலைவர் என "அவர்" என்ற சொல் வருவித்துப் பொருள் உரைத்தார். விளையாட்டுடையாரவர் என்பதில் உள்ள அவர் என்பதை "சிவனவனென் சிந்தையுணின்றவதனால்"* என்பதில் உள்ள 'அவன்'போலப் பகுதிப்பொருள் விகுதியாகக்கொண்டு விளையாட்டுடையாரவர் என்பதற்கு இங்கே ஒரு சொல்லும் வருவியாமல், பொருள்கூறப்பட்டது. ஆரணியகாண்டக் காப்பில்'ஆதிதேவர் அவர்'என்பதில் உள்ள அவர் இந்த அவர்போன்றது.

'அவர்' என்பதனால் கம்பர் கடவுளை அவர்க்குரிய இயற்கைப் பெயர்ச்சொல்லாலன்றிச் சுட்டுப்பெயர்ச்சொல்லாற் குறித்தாரெனவும் கொள்ளலாம். "அவன் அசையாமல் அணு அசையாது," "எல்லாம் அவன்செயல்" "எல்லாம் அவர்செயல்" என்னும் உலகவழக்கில் 'அவன்' 'அவர்' என்பவை பலர் அறி சுட்டுப்பெயராய்க் கடவுளைக் குறித்தல் காண்க. இவ்வாறே "அது நீ ஆனாய்" என்ற மகாவாக்கியத்தில் 'அது' என்ற சுட்டுப்பெயர் பரம்பொருளைக் குறித்தலையும் நோக்குக.

இறைவனுக்குச் சிருட்டியாதித் தொழில்கள், 'இஃது இவ்வாறாக' என்ற சங்கற்பமாத்திரையானே நிகழ்வனவாம். அத்தொழில்களை விளையாட்டென்றார். †"விளையாட்டென்றது ஐங்கலப்பாரம்பொறுத்தல் சாத்தனுக்கு விளையாட்டென்பதுபோல, அத்துணை எளிதிற்செய்யும் ஆற்றலுடைமைபற்றியே". அன்றிச் சிறுவர் தட்டாடல் பெரியர் சீட்டாடல் போன்றதன்று; வீண்தொழிலும் அன்று; ஆன்மாக்கள் தனுகரண புவன போகங்களைப் பெற்று அவற்றைக்கொண்டு அடையும் அநுபவத்தால் படிப்படியாகப் பக்குவம் அடைந்து முத்திபெறும் பயன்கருதிச் செய்யப்படுவதாம்.

---

* திருவாசகம்.

† சிவஞானபாடியம் 2-ம் சூத்திரம் க-ம் அதிகாரம்.

இப்பாட்டில், கடவுளது பொது இலக்கணம் கூறி, அடுத்த "சிற்குணத்தர்" என்னும் பாட்டில் "மூன்றனுள் முற்குணத்தவரே முதலோர்" எனச் சாத்விககுணமுடையவரென்னும் விட்டுணுவே முதற் கடவுளெனக் குறிப்பாகப் புலப்படும்படி கூறி, இறுதிக் கடவுள்வாழ்த்துக் கவியாகிய "ஆதி அந்தம் அரி" என்னும் பாட்டில் 'அரி'யென்று விட்டுணு நாமத்தை வெளிப்படையாகக்கூறி, அவன் "பாத மல்லது பற்றலர் பற்றிலர்" என்றதனால், கம்பர், தம் இராமாயணத்தைப் பலமதத்தினரும் உள்ளசபையில் அரங்கேற்றும் ஆரம்பத்தில், அவர்களெல்லாரும் அங்கீகரிக்கும்படி முதற்பாட்டையும், எல்லாச்சமயிகளும் தத்தம் கடவுள் முக்கியாமிசத்தில் சாத்துவிககுணச்சிறப்புடையவரென்பது பற்றியும் வைணவர் தம்கடவுளே சாத்துவிககுணமுள்ளவரென்பது பற்றியும் இருதிறத்தாரும் ஒப்பும்படி இரண்டாம்பாட்டையும், தம் கதாநாயகன் விட்டுணுவின் அவதாரமென்பதற்கு இயைய மூன்றாம் பாட்டையும் உய்த்துணரும்படி இயற்றினரென்பது பொருந்தும். இப்பாட்டினால், விட்டுணு, இந்நூலுக்கு ஏற்புடைக் கடவுளாதலேயன்றி, இந் நூலாசிரியர்க்கு வழிபடுகடவுளுமாகக் கொள்வதற்கு ஆதாரமாகப் புறச்சான்று ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. *அகச் சான்று உண்டோவென்பதை ஆராய்வாம். திருஅவதாரப் படலத்தில்,

கரு முகில் தாமரைக் காடு பூத்து, நீ(டு)
இரு சுடர் இரு புறத்(து) ஏந்தி, ஏந்(து) அலர்த்
திருவொடும் பொலிய, ஓர் செம் பொற் குன்றின் மேல்
வருவ போற் கலுழன் மேல் வந்து தோன்றினன்.

எழுந்தனர் கறை மிடற்(று) இறையும், தாமரைச்
செழுந் தவி(சு) உகந்த அத் தேவும்; சென்(று) எதிர்
விழுந்தனர், அடி மிசை, விண்ணு ளோரொடும்;
தொழுந்தொறும் தொழுந்தொறும் களித்து எங்குவார்.

---

* அகச் சான்று (இந்நூலின்) உள்ளேயே உள்ள சாட்சி; புறச்சான்று வெளியே (கன்னபரம்பரை வரலாறு முதலியவற்றில்) உள்ள சாட்சி; இவற்றுள் முன்னது மறுக்கக்கூடாத வலிமைமிக்கது.

என்ற பாட்டுக்களில் விட்டுணுவுக்குப் பரத்துவம் கூறி, அக்கடவுளே நம் வழிபடுகடவுளெனக் கம்பர் புலப்படுத்தினரென்பது ஓர் அகச் சான்றும். இதனை ஆட்சேபிப்போருள்ளே சிலர், * கறைமிடற்றிறை யென்பது தப்பான பாடமென்றும்; இப் பாடம் உண்மையானதா யிருந்தால், கம்பராமாயணம் ஆதிசைவ சிரேட்டராகிய தில்லைத் தீட்சிதர் களால் அங்கீகரிக்கப்பட்டதாகக் கேட்கப்படுகிறபடி அங்கீகரிக்கப்பட் டிராதென்றும், கம்பர் என்ற பெயரானது கம்பநாடுடையார் கம்பரென்ப தாக இருப்பதன்றிக் காஞ்சிபுரத்துச்சிவன்பெயராகிய கம்பராகவும் இருப் பதனுலும், கம்பர்மகன்பெயர் அவர் பெயர்போற் கவர்படுபொருள் மொழியாயில்லாமல் தெளிவாகச் சிவநாமமாகிய அம்பிகாபதியாக இருப் பதனுலும், சைவருக்குத் திருமாலின் பெயரிடுவது வழக்கமாயினும் வைணவர் சிவ நாமம் பூண்பது மரபாயில்லாதிருப்பதனுலும், தாம் இயற்றிய ஏரெழுபது என்னும் நூலில் விநாயகதோத்திரம் செய்திருப்ப தனுலும் சைவரெனத் துணிதற்பாலராகிய கம்பர் சிவனை யிழித்துக் கூறியிராரென்றும்; ஆதலால் † 'கறைபடிக்கிறை'யென்றுள்ள பாடமே சரியானதென்றும், ‡ வான்மீகத்தில், இந்தச் சந்தர்ப்பத்திற் கூடிய பிரமாதிதேவர்களின் கூட்டத்திற் சிவன் இருந்ததாகக்கூறப்படவில்லை யென்றும்; அந்தக்கூட்டத்தின்முன் பிரசன்னமாக எழுந்தருளிய விட்டு ணுவைப் பிரமன்வணங்காமையும் தேவர்கள் வணங்கினமையும் தெளி வாக விளங்குகின்றனவென்றும்; கம்பராமாயணத்தில் இன்னும் இரண் டோரிடங்களிற் சிவனை விட்டுணுவுக்குத் தாழ்த்திக்கூறும் பகுதிகள் தப்பாக மாற்றப்பட்டவை அல்லது இடைச்செருகல்களென்றும் கூறு வர். வேறுசிலர், மேற்கூறிய சமயத்திற் சிவன் விட்டுணுவைவணங்கின தாக வைத்துக்கொண்டாலும், அவ்வணக்கம், அக் கடவுள் தம் குமாரக் கடவுளை ஒரு தருணத்தில் வணங்கியதாகக் கேட்கப்படும் வணக்கம் போலவும், தற்காலமுறைப்படி ஒருசபையில் தலைமை வகிப்பவரை வாகனத்தில் பவனிவரச்செய்து அவருக்குத் தாழ்ந்தோரேயன்றிச் சம மானோரும் உயர்ந்தோரும் பாதசாரிகளாய்ச் சென்று கவுரவிப்பது போலவும், விட்டுணு தேவசபைத் தலைமைவகித்த சமபத்திற் செய்த

* கறைமிடற்றிறை—சிவன்.

† இந்திரன். ‡ பண்டித நடேசசாஸ்திரி வால்மீகிராமாயணவசனம் பால காண்டம் 61—63-ம் பக்கங்களைப் பார்க்க.

உபாராமேபாமென்று கூறுவர். அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள பிரதிக ளெல்லாவற்றிலும் "கறைமிடற்றிறை" என்பதே பாடமாயுள்ளது. அந்த வெளிவந்துள்ள பிரதிகளைக்கொண்டே நம் ஆராய்ச்சியைநடத்து வாம்.

* "ஓரெனாந்தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்தொருவன்" எனச் சிவனை விட்டுணுவினும் உயர்த்தியும் †"கடவுட்கங்கை நீர்முடித் தான் இரவொழிந்த நீ" என விட்டுணுவைச் சிவனினும் உயர்த்தியும் அவ்வவ் அமயத்துக்கு ஏற்றவாறு இருபெருங்கடவுளரில் ஒருவனை ஏற்றமாகப் பலவிடங்களிற் கூறும் வில்லிபுத்தூரர் பாரதம்போலக் கம்ப ராமாயணமும் சைவ வைணவ பாரபட்சமில்லாத இதிகாசமென்பது அதனை முற்றப்படிப்போர்க்குத் தெற்றெனப்புலப்படும். மேற்கூறிய "ஆதி அந்தம் அரி" யென்னும்பாட்டிற் கம்பர் விட்டுணுவை உயர்த்துக் கூறியவாறே, நாடகைப்படலம் 3-ம் பாட்டில், சிவன் யோகிருந்த காம ளுச்சிரமவருணனையில்,

"பற்(று) அவா வேரொடும் பசை அறப் பிறவிபோய்
முற்ற வால் உணர்வு மேல் முடிகினர் அறிவு சென்(று)
உற்ற வா னவன்."

எனச் சிவனை மேம்படுத்துக்கூறியுள்ளார். இவ்வாறு விட்டுணுவை ஓரிடத்தும் சிவனை ஓரிடத்தும் சிறப்பித்துக் கூறியவர் சிவ விட்டுணுக் களைப்பற்றிப் பொதுப்படக்கூறநேர்ந்த சமயங்களில்,

‡"அரன் அதிகன் உலகு(கு) அளந்த அரி அதிகன் என்(று) உரைக்கும் அறிவிலோர்க்குப்—பரகதி சென்(று) அடைவரிய பரிசே

---

* பாரதம் அருச்சுனன் தவநிலைச்சருக்கம் அஎ.

† ஷை கிருட்டினன் தூதுச்சருக்கம் கடு.

‡ இப் பாட்டுப்பகுதிக்கு வெளிப்படையான செம்பொருளுக்குவிரோதமாக வைணவசமயவாதிகள், '(விட்டுணுவே பரம்பொருளென்பது நிச்சயமாயிருக்க வும்) அரன் அதிகன்...............பரிசேபோல்' என்றும், சைவசமயவாதிகள், 'அரன் அதிகன்; (இவ் உண்மைக்கு மாறாக) உலகளந்த அரி அதிகன்........ பரிசேபோல்' என்றும் பொருள்கூறுவர். இப்பாட்டு நாடவிட்டபடலத் துள்ளது.

போல்" என்றும், * "யாரினும் உயர்ந்த மூலத் தொருவராம் இருவர்" என்றும் இருவரையும் சமமாகக்கூறுவர்.

மேற்கூறிப்போந்ததனால், கம்பர், சைவ வைணவ சமயங்களை ஏற்றத்தாழ்வில்லாத இரண்டுகண்கள்போலக் கருதினரென்னலாம். அவர் உயிருக்குயிராகவும் உணர்வுக்குணர்வாகவும் கொண்ட கடவுள், எவ்வெத் தொழில்களையும் நடத்துவோரையும் நடத்துவிக்கும் முழுமுதற் கடவுளாய்ச் †"சமயவாதிகள், தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றிமலைந்தனர்" ஆம்படி நின்ற சமயாதீதப்பழம் பொருளாய் ¶"மூன்றுகவடாய் முளைத்தெழுந்த மூல"மாய் உயர்வொப்பில்லாத பரமபதியே என்பது, அவர் மேற்கூறியவாறு, "யாரினும் உயர்ந்த மூலத்(து) ஒருவர்" என்று விட்டுணுவின் ஓர் அவதாரபுருடராகிய பரசுராமர் கூற்றாகக் கூறியதனாலும் § "செங் கண் மால் நான்முகன் சிவனென் றேகொலோ—எங்கள் நாயகனையும் நினைந்தது?" என்று தம் கதா நாயகி சீதாதேவி கூற்றாகக் கூறியதனாலும் விளங்கும்.

"ஆதி அந்தம் அரியன" என்றும் பாடமுண்டெனச் செல்வக் கேசவராயமுதலியார் "கம்பர்" என்றபுத்தகத்திற் கூறியுள்ளார். இந்தப் பாடங்கொண்டால், மேலே விவகரித்த மூன்று கவிகளுமே நாத்திகரொழிய எம்மதத்தினரும் சம்மதித்திடும் பொதுத்தெய்வவணக்கமாம்.

அவையடக்கம்.

2. நொய்தின் நொய்ய சொல் நூற்கலுற் றேன்,எனை!
வைத வைவின் மரா மரம் ஏழ் துளை
எய்த எய்தவற்(கு) எய்திய மாக் கதை
செய்த செய் தவன் சொல்நின்ற தேயத்தே!

---

* பரசுராமப்படலம் உஅ.

† திருவாசகம்,

¶ கவந்தப்படலம் சஉ. § நிந்தனைப்படலம்,

இ-ள். (பெரியோர்) சபித்த சாபம் (பலியாமல் தப்பாதது)போல(க் குறிதப்பாத ஓர் அம்பினால்) ஏழு மராமரங்கள் (ஒருங்கே) துளைபடும்படி எய்த (இராகவனுக்கு (உரியதாக) அமைந்த பெருங்கதையைக் கூறிய (வான்மீகி) முனிவனது (பிரபலமான வலிய) காவியம் நிலைபெற்றுள்ள தேசத்திலேதானே அற்பத்தினும் அற்பமான (எளிய) சொற்களால் (அக்கதையையே) யான் கூறப்புகுந்தேன். என் அறியாமை இருந்தவாறு என்னே!

நொய்யின் நொய்ய - மெல்லிதினும் மெல்லிய - அற்பத்தினும் அற்பமான. நூற்கல் - நூல்செய்தல். எனை - என்னை! இது ஆச்சரியம் அல்லது இகழ்ச்சிகுறித்து என் அறிவு இருந்தவாறு என்னை! என்னும் பொருள்பட நின்றது. வைதவைவின் - (முனிவர்) சபித்த சாபம் (தப்பாதது) போல. எய்த எய்தவன் - பொருந்தும்படி (அம்பு) எய்தவன். செய் தவன் - செய்யப்பட்ட தவத்தையுடையவன் அல்லது செய்தற்குரிய தவத்தையுடையவன். சொல், ஆகுபெயராய் நூலை உணர்த்தி நின்றது; ஔவையாரது 'தேவர்குறளும்' என்னும் வெண்பாவில் வரும் 'சொல்' போல.

எ(ன்)னை வைதவைவின்—என்னை யானே வைதுகொண்ட வசவு போல என்றும் பொருள்கூறுவர். இப்பொருள்கொண்டால், எ(ன்)னை வைத வைவின் நூற்கலுற்றேன் எனக் கூட்டுக. மேற்கூறிய பொருள்கள் *"அல்லாமலும் 'வைத வைவில் மராமர மேழ் துளை யெய்த வெய் தவற் கெய்திய மாக்கதை செய்த செய்தவன்' என்பது வேறொரு முக்கிய விஷயத்தை உட்கொண்டு நிற்பதாம். என்னெனில்:—வான்மீகர், ஒருநாள் உச்சிப்போதில், தமசாநதிக்கு நீராடப்போகையில், ஆணும் பெண்ணுமாகக்கூடிக் களித்திருந்த கிரௌஞ்சமென்னும் பக்ஷிகளில் ஆண்பறவையை ஒருவேடன் அம்பெய்துகொல்லப் பெண்பறவைகண்டு துடிக்கும்பரிதாபநிலைமை(முனிவர்)நோக்கி மனம்பொறாமல் 'மாநிஷாத

---

* விவேகபாநு தொகுதி 2, பகுதி 1, பக்கம் 16, சாமிசரவணப்பிள்ளை,

ப்ரதிஷ்டாந்தம்' என்னுந்தொடக்கத்துச் சுலோகம் தானே தமது வாக்கில்வர, அதனால் அவ்வனசரனைச் சபித்துச்சென்று நீராடி மீண்டு வந்தபின்னர், அச் சுலோகத்தின்மேற் சிந்தையோட, அதில் ஸ்ரீராமசரித்திர சங்கிரகப் பொருள் தொன்யார்த்தமாக விளங்கக்கண்டு, இது என்னையோ எனத் தெளியாது நிற்கையில், பிரமதேவர் அங்கு எழுந்தருளி ராமாயணத்தை உபதேசித்துப் பாடச்சொன்னதாகப் பிரசித்தி வழங்கி வருதலால், அப் பொருளையுங் குறிப்பித்தவாறும். இப்பொருளுக்கு 'வைதவைவில் எய்திய மாக்கதை' எனக் கூட்டி, வேடனைவைதவசை மொழியில் மராமரந்துளைத்த 'ஸ்ரீராமனுக்குத் தொன்யார்த்தமூலமாகக் கிடைத்த மகத்துவமான கதை'எனப் பொருள்கொள்க. இந்தச் சுலோகந்தான், முதன்முதலாகச் செய்யுள்வடிவமாக வெளிப்பட்டதென்றும், சோகங்காரணமாக வெளிவந்ததனால் அதற்குச் 'சுலோகம்'என்று பெயராயிற்று என்றும் வான்மீகம் ஆதிகாவ்யமென்றுங் கூறுவர்."

பஞ்சைக்கொண்டு இராட்டினத்தில் நூல்செய்தல்போலச் சொற்களைக் கொண்டு நூல் (—காவியம்) செய்தலை நூற்கல் என்ற சொல்லாற் குறிப்பித்தார். தம் சொற்கள் பஞ்சுபோல மெல்லியனவென்றும் அச் சொற்களைக்கொண்டு செய்யும் நூலும் நூல்போலவே நொய்யதென்றும் உய்த்துணரவைத்தார்.

> பஞ்சி தன் சொல்லாப் பனுவல் இழையாகச்
> செஞ் சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
> கையே வாய் ஆகக் கதிரே மதி ஆக
> மை யிலா நூல் முடியு மாறு.

என்ற வெண்பா மேற்கூறிய கருத்தை இனிது விளக்கும்.

காளிதாச மகாகவி, இரகுவமிச சரிதம் வலிய வயிரமணி யென்றும், தம் மதி மெல்லிய நூலென்றும், அச் சரிதையாகிய வயிரமணியுள் தம் மதியாகிய நூல் புகுந்து செல்லும் வன்மை யில்லாத தென்றும்,

ஆயினும் அவ் வயிரமணி வான்மீகி முதலிய ஆன்றோரது மதியாகிய வயிர ஊசியால் முன்னமே துளைக்கப்பட்டிருத்தலால், அம் மணியுள் அவ் வூசி துளைத்துச் சென்ற வழியே தம் மதியாகிய மெல்லிய நூல் எளிதாக நுழைந்து செல்ல வல்லதாயிற்று என்றும் இரகுவமிசகாவிய அவையடக்கத்திற் கூறியிருப்பதை மேலே கூறிய நூல் என்ற சொல் நினைவுறுத்தாநின்றது.

3. வையம் என்னை இகழவும், மா(சு) எனக்(கு)
எய்த வும், இ(து) இயம்புவ(து) யா(து) எனின்,
பொய் இல் கேள்விப் புலமையி னோர் புகல்
தெய்வ மாக் கவி மாட்சி தெரிக்கவே.

இ - ள். (மேற்கூறியவாறு வான்மீகம் வழங்கும் இடத்திலே இந்நூலைக்கூறத்தொடங்கிய உடனேயே இது நகைக்கிடமாமென்று தெரிந்த யான்) என்னை உலகம் பரிகசிக்கவும் குற்றம் அடையவும் இதனை (முடிவாகவும்) கூறியது எதன்பொருட்டென்றால், ('நிழலருமை வெய்யிலில் நின்றறி'தல் போல, இதனைப்பார்ப்போர் சீ, இது எவ்வளவு கேவலமாயிருக்கிறது, இதனை நோக்க வான்மீகம் எவ்வளவு சிறப்பாயிருக்கிறது என்று சிந்திக்கச்செய்து) வான்மீகி கூறியுள்ள தெய்விக மகா காவியத்தின் மகிமையைத் தெரிவிக்கும்பொருட்டே என்க.

வையம்—உலகம்—உலகத்தார். யாதெனின்—யாதால் எனில்—எதன் பொருட்டென்றால்; யாதால் என்பது யாது என ஆல் உருபு தொக்கு நின்றதாகவாவது, யாது என்பது என் என்னும் பொருளில் வந்ததாக வாவது கொள்க. "யாது ஆவது"—என் ஆவது, அதாவது "இதனால் வருந்தீங்கு என்" என்பதில் யாது என்று பொருள் படுவதைச் சீவக சிந்தாமணி அரும்பதவுரையிற் பார்க்க. தெரிக்க—தெரிவிக்க—தெரிவிக்கும்பொருட்டு.

முற்பாட்டில் வான்மீகி புகழைமட்டும் புகழ்ந்தார்: இப்பாட்டில் அவர்புகழை *அநுவாதமாகக் கூறினரென்று கொள்ளலேயன்றிப் "பொய்யில் கேள்விப் புலமையினோர்" என்பதைப் பொதுப்படக்கூறியதாகக் கொண்டு, மற்றைய ஆரிய திராவிட கவிசிரேட்டரையும் புகழ்ந்தாரென்று கொள்ளலுமாம்.

4. அறையும் ஆ (டு) அரங் கும் மடப் பிள்ளைகள்
தறையில் கிறிடில் தச்சரும் காய்வரோ?
இறையும் ஞானம் இ லாத என் புன் கவி
முறையின் நூல் உணர்ந் தாரும் முனிவரோ?

இ - ள். (விரகறியாத) பேதைப்பிள்ளைகள் சிறுவீடும் (பெரிய) நடனசாலையும் (போல வடிவம் தோன்றும்படி) தரையிலே (கோடுகள்) கிறி (விளையாடி)னால், (அவைகளைப்பார்த்து அவைகள் சிற்பநூற்படி இல்லையென்று) சிற்பம்வல்லார் கோபிப்பாரோ? (கோபியார்: அவ்வாறே நூல்களுக்குரிய) முறையினை உடையநூல்களை (க்கற்று) அறிந்தோர் (ஆகிய வித்துவான்கள், அப்படிப்பட்ட) அறிவு சிறிதும் இல்லாத என்னாலியற்றப்பட்டிருக்கிற (முறையற்ற) அற்பநூலை (நோக்கி, இத் தகைய குற்றங் குறைகள் உள்ள நூலை ஏன் செய்தாயென்று என்னைக்) கோபிப்பாரோ? (கோபியார்).

அறை—சிறுவீடு. ஆடரங்கு—ஆடு அரங்கு—(கூத்து) ஆடும் சபை—நாடகசாலை. பட—உண்டாக—தோன்ற. மடம்—அறியாமை. இறையும்—சிறிதும். முறையின்—முறையினை உடைய.

ஆற்றுப்படலம்.

5. ஆச லம் புரி ஐம் பொறி வாளியுட்
காச லம்பும் முலையவர் கண் எனும்

*அநுவாதம்—முன்னர்க்கூறிய ஒருபொருளை ஒரு நிமித்தத்தாற் பின்னும் எடுத்துக்கூறுதல். (சங்க அகராதி).

பூசலம்பும் நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்(று)அணி கூறுவாம்.

இ - ள். (மன்மதனது) பஞ்ச பாணங்களும் மாதாது கண்ணம்புகளும் (முறையே விரகியர் துறவியர்பாலும் கணவரல்லார்பாலும்) நன்னெறிக்குப் புறம்பாக (க் காமக்கருத்து உண்டாகுமாறு) செல்லாத (படி செய்யும் மகத்துவமுடைய புண்ணிய தேசமாகிய) கோசலநாட்டினை அலங்கரிக்கும் (சரயு என்னும்) ஆற்றின் அழகை (யாம் வருணித்துக்) கூறுவாம்.

ஆசு அலம்புரி—குற்றந்தையும் (மனச்) சுழற்சியையும் செய்கின்ற. ஐம்பொறிவாளி—ஐந்து (என்னும் எண்) ஆகிய அடையாளமுள்ள (மன்மத) பாணங்கள்; (ஐம்பொறி) வழியாக அவற்றிற்குரிய புலன்களை அடைதற்கு அவாவும்படி மனத்தைத்தூண்டும்) அம்புகள் எனலுமாம். காசு அலப்பு — இரத்தினம் (—இரத்தினபாணம்) ததும்பிய (—நிறைய அணிந்த). பூசல் அம்பு—போராடலையுடைய அம்பு. நெறியின்புறம்—(நல்ல) நெறிக்குப் புறம்பானது — தீயநெறி. கோசலம்புனை — கோசல நாட்டினை அலங்கரிக்கின்ற.

இப்பாட்டுத் திரிபாக அமைக்கப்பெற்றது. திரிபின்வனம் சிதையாதபடி திரிபுப்பகுதியான சீர்கள் சந்திபிரியாமல் விடப்பட்டன.

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

விஞ்ஞானதீபம்

மொழிபெயர்ப்புமுறை.

(யாழ்ப்பாணத்துத் தமிழ்வளர்க்கும் பெருங்கழகத்தார்முன்னிலையிற் படிக்கப்பட்டது.)

ஒருமொழியிலுள்ள நூலினை மற்றொருமொழியிற் பெயர்த்து எழுதுமிடத்து முதனூற்பொருள், நடை, இயைபு முதலியவற்றை மாறுபடவிடாது மொழிபெயர்ப்புநூலினுள்ளுங் காட்டுதல்வேண்டும். முதனூல் செய்யுள்நடையினதாயின் மொழிபெயர்ப்புநூலுஞ் செய்யுள் நடையினதாகித் தக்க யாப்பினூற் பொருத்தமுற்று நிற்கவேண்டும். விஞ்ஞானநூல் உண்மைநிச்சயிக்கிற அளவைநூல் ஆதலால் மொழிபெயர்ப்புநூலுந் திரிபில்லாத பொருளினதாக முதனூற்கருத்தொடு மாறுகொள்ளாததாக விருத்தல்வேண்டும். மொழிபெயர்ப்புமுறையை ஆராய்வதற்குமுன் தமிழ்மொழிச்சொற்களின் சிறப்பியல்பையும், ஆற்றலினையும் ஆராய்வாம்.

தனித்தமிழ்மொழிகள் ஓரெழுத்தாலும் ஈரெழுத்தாலும் ஆகிய மணிபோன்ற சிறியமொழிகளாம். திருமுருகாற்றுப்படை யகவலை யுற்று நோக்குக. பின்னுந் தமிழ்மொழியில் ஒற்றுமையும் வேற்றுமையும் பொருந்திய இணைச்சொற்கள் ஒத்த எதுகையின. அறம், மறம்; அன்பு, வன்பு; இன்பம், துன்பம் என்றாற்போல. மேலுந் தமிழ் மொழியில் ஒரே தொடரான சொற்கள் ஒரே விகுதியையுடையன; செம்மை, கருமை என்னும் பண்புப்பெயர்களை நோக்குக. பிறபாஷை களிலிருந்து தமிழ்மொழிக்குச் சேர்க்கப்பட்டசொற்கள் இயற்றமிழ்ச் சொற்களேபோன்று முதனிலை இடைநிலை ஈற்றுநிலைமுதலிய யாவும் தமிழிலக்கணவரம்பு கடவாது பொருந்தநிற்பன. புதியமொழிகளை ஆக்கிக் கொள்ளுமிடத்தும், திசைச்சொற்களை எடுத்தாளுமிடத்தும் மேற்காட்டிய குறிப்புக்களைக் கைக்கொண்டு சுருக்கம், விளக்கம், தெளிவு, தமிழுருவம் இவைபொருந்த மொழிகளை ஆக்கிக்கொள்ளுதல்வேண்டும். தமிழ்

மொழியில் ஆட்சியிலுள்ளசொற்களைப் புறக்கணித்தல் கூடாது. ஆதலால் முதற்கண் தமிழ்நூல்களையாராய்ந்து அவற்றுட் பொதிந்து கிடக்கிற விஞ்ஞான நூன்மொழிகளையெல்லாம் தெரிந்தெடுத்து அவற்றின்பொருளை நிச்சயம்பண்ணிக்கொள்ளுதல்வேண்டும்.

இங்ஙனஞ்செய்யில், தமிழ்மொழியில் வைத்திய நூல்கள், தத்துவ நூல்கள் முதலியவற்றுள் மறைந்து கிடக்கிற ஆயிரக்கணக்கான சொற்கள் வழக்குக்கு வருவனவாம். முன்னாளில் நூலியற்றிய ஆசிரியர் சிலர் மண், நீர், தீ, வளி, வான் என்ற தமிழ்வழக்கிருக்கப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்றும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னுந் தமிழ்மொழிகளைப் புறக்கணித்து ஸப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம் என்றும், நிறுத்தல், நிறைத்தல், விடுத்தல் என்னும்மொழிகளை யாட்சிக்குக் கொண்டுவருதல் தகுதியென்பதைமறந்து கும்பக, பூரக, ரேசகம் என்றும் வழங்கினமையால் வடமொழிகளே வழக்குச்சொற்களாகவும், தனித்தமிழ்மொழிகள் வழக்கில்சொற்களாகவும் ஆய்விட்டன. தமிழ்மொழி யில்லாதவழிப் பொருத்தமுள்ள பிறமொழியை ஆளுதல் தகுதியாகும். தமிழ்வழக்கிருப்பின் உள்ளமொழியையே ஆட்சிக்குக் கொண்டு வருதல்வேண்டும். ஆரியமொழியினும் ஏற்புடையனவற்றை யாளுதலிழுக்காகாது. ஆதலாற் பொருணூன்மொழி வரையறைசெய்யப்புகுவோர் முதற்கண் தமிழ்மொழிவழக்கிலுள்ள பொருத்தமுள்ள சொற்களைக் கண்டெடுப்பது கடனாகும்.

இனிப் பொருணிச்சயம்பண்ணுவது எவ்வாறு என்பதை ஒரு உதாரணத்தால் விளக்குவாம். தொல்காப்பியனார் உயிர்ப்பொருள்களை வகைப்படுத்துவழி,

"ஒன்றறிவதுவேயுற்றறிவதுவே
இரண்டறிவதுவேயதனொடுநாவே
மூன்றறிவதுவேயவற்றொடுமூக்கே
நான்கறிவதுவேயவற்றொடுகண்ணே
ஐந்தறிவதுவேயவற்றொடுசெவியே
யாறறிவதுவேயவற்றொடுமனனே
நேரிதினுணர்ந்தோர்நெறிப்படுத்தினரே" - எனவும்,

"மாவுமாக்களும்ஐயறிவினவே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"
"மக்கடாமேயாறறிவுயிரே
பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே"

எனவும் உரைத்த சூத்திரங்களுக்கு உரைகாணும்வழி "மனம்" என்னும் சொல்லினது பொருளை நிச்சயம்பண்ணுதல்வேண்டும். ஆசிரியர் மாக்களென்றும், மக்களென்றும் வேறுபாடுசெய்துகொண்டது முதற் கண்ணோக்கற்பாலது. இனிப் படிப்படியாக ஒன்றுமுதல் ஆறுவரையும் அறிவுக் கருவிவாயில்களை வகைப்படுத்துச் சொல்லினாரன்றோ? அங்ஙனஞ்சொல்லிய வியல்பை யாராயுமிடத்து நாலறிவுள்ள நண்டிக்கு இல்லாததாகிய செவியென்னும் வாயில் ஐயறிவுள்ள குரங்குக்குண்டு. ஏனைய நான்குவாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுதும் குரங்கு ஐந்தாவது வாயிலாகிய செவியினால் அறிவைப்பெறும்; அங்ஙனமே ஆறறிவுள்ளமக்களும் ஏனையஐந்துவாயிலும் அடைப்புண்டிருக்கும்பொழுது மனம் என்னும் ஆறாவதுவாயிலினால் அறிவினைப் பெறுதற்குரியர். இவ்வறிவும் ஏனைய வாயில்களினாற்பெறுதல் கூடாத அறிவாயிருத்தல்வேண்டும். நித்திரையிற்காணுகிற கனவினில், கண்முதலிய ஏனையவாயில்களாற் பெறப்பட்டு நினைப்பிற் பதிந்துகிடந்த தோற்றங்களே மீண்டும் புலப்படுகின்றனவாதலால் அங்ஙனம் பெறுமறிவு ஏனைய வாயில்களாற்பெறாத புது அறிவு ஆகாது. இவ்வாறு முந்திய தோற்றங்களை நினைத்திருக்கும் நினைப்பும், ஒரு தோற்றத்தோடு பிறிதொன்றனை ஒப்பிட்டுப்பார்க்கு மாற்றலும், பயம், உவகை, வெகுளி முதலியனவும் விலங்கினங்களுக்குமுண்டு. ஆசிரியன் மனவுணர்வினைத் தனித்த ஒருவாயிலாகச் சொல்லுதலால் ஐம்பொறியுணர்வுக்கு நிலைக்களனாகவிருப்பது மனம் என்று வரைவிலக்கணஞ்செய்துகொண்ட பிற்காலத்தார் "மனம்" என்னும் மொழிக்குக் கொண்ட கருத்தும் ஆசிரியன்கொண்டகருத்தும் தம்முள் வேறுபாடுடையனவாம்.

இங்ஙனம் ஆராயுங்கால் "மனம்" என்னும் மொழியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது ஆசிரியர் தொல்காப்பியனார்கொண்ட கருத்தினை யுள்ளவாறுணர்த்துவதாயின் "Intuitive faculty" என மொழிபெயர்ப்பது ஒருவாறு தக்கதாகும். ஏனைய ஐந்துவாயிலும் "Perceptive faculties" என அடங்குவ,

மேற்காட்டிய குறிப்புக்களுக்கியைய இரசாயன நூலுக்குரிய சில மொழிகளை ஆக்கிக்கொண்டமாயினைச் சுருக்கமாகச்சொல்லுவாம். இரசம்-பாதரசம் ; அயனம்- பிறப்பு. முன்னாளிற் பொன்னைப் பிறப்பிக்கலாமென முயன்ற இந்திய, அராபிய, ஐரோப்பிய இரசவாதிகள் அது இரசத்தைக் கட்டுதலினாலாகுமெனப் பலபொருள்களை ஒருங்குசேர்த்துக் காய்ச்சுவதுங் கலப்பதுஞ் செய்ததனாற்கண்ட முடிபுகள் பின்னாளிற் றிருந்து வருந்த நூலாயினமையால் அந்நூல் இரசாயனநூல் எனப்பட்டது. "Elements," "Mixtures," "Compounds" என்னுஞ் சொற்களை முறையே தனிப்பொருள், சலவைப்பொருள், கூட்டப்பொருள் என்று வழங்கலாகும். தனிப்பொருள்கள் எண்பதின்மேற்பட்ட தொகையின. இவற்றுட் டமிழ்வழக்கிலுள்ளன பொன் (Gold), வெள்ளி (Silver) செம்பு (Copper), இரும்பு (Iron), ஈயம் (Lead), கரி (Carbon), சுண்ணமூலம் (Calcium)-சுண்ணம் "சுடு" என்னும் வினையடியினின்றும் பிறந்தது. வங்கம் (Tin), நாகம் (Zinc), தீமுறுவல் (Phosphorus)-இதனைச் சுருக்கநோக்கி "முளி"யென்று வழங்குவாம். ரசம் (Mercury), கந்தகம், சிலை (Sulphur), பாஷாணம், விஷம் (Arsenic)என்பன. ஏனைய தனிப்பொருள்களுக்குப் பெயர்கோள்வதற்கு முன் வைத்தியநூல்களை ஆராய்ந்து பெறக்கூடியசொற்களைப் பெற்றுக் கொள்ளுதல்வேண்டும். ஒவ்வொரு தனிப்பொருளுக்கும் ஒவ்வொரு எழுத்து அறிகுறியாய்நிற்றல் நன்று. ஆதலால் இனி இட்டுக்கொள்ளும் மொழிகள் வேறுவேறு எழுத்துக்களை முதனிலையாகக்கொண்டுநிற்றல் நன்று. சின்னஞ்சிறிய சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் அழகு. கண்ணிற்றீட்டும் மையிலுள்ள தனிப்பொருளாகிய "Antimony" என்னும் பதத்தை "மை" என்பாம். "நிறம்" என்னும் பொருளினதாகிய யவனமொழித் தாதுவினின்றுபிறந்த "Chlorine" என்னும் பதத்தை "நிறம்"என்பாம். களிமண்ணினின்றுபெறும் "Aluminium" "தலம்" எனப்படும். பாரத்தைக்குறிக்கும் யவனமொழித்தாதுவி

வின்றும் பிறந்த "Barium" "பாரம்" எனப்படும். சூரியனைக்குறிக்கும் யவனமொழித்தாதுவினின்று பிறந்த "Helium" என்பதனை "எல்" என்பாம்.-Barium, Helium என்பவற்றுக்கும் "பாரம்" "எல்" என்பவற்றுக்கும் பொருட்பொருத்தத்தோடு ஒலிப்பொருத்தமுமுண்டு.—லவணமூலமாகிய "Sodium" என்பதனை "லவம்" என்பாம். பவனத்திலுள்ள இரண்டுதனிப்பொருள்களாகிய "Oxygen", "Nitrogen" என்பன அறிவும், உடலும்போன்றிருத்தலால் முறையே "மதி", "சடம்" என்றும், நீரின் மூலப்பொருளாகிய "Hydrogen" என்பதை நீரைக்குறிக்கும் "அம்பு" என்னும் மொழியின் பாகமாகிய அம் என்றும் குறியீடுசெய்வாம். வைக்கோல்நிறமாகிய "Fluorine" என்னும்பொருளை "வை" என்பாம். பிறவும் இவ்வாறே. நாம் இட்டுக்கொண்ட பெயர்கள் யாவும் வேறுவேறு முதனிலையையுடையன. ஆதலினால் ஒரு தனிப்பொருளைக் குறிப்பதற்கு ஒரு எழுத்தையே உபயோகித்தல்கூடும். இனி, மை, வை, மதி, சடம், நிரம் என்னாது அன்ரிமணி, வ்ளூஓறின், ஆக்சிஜன், நைத்ரஜன், க்ளோறின் என்று ஆரவாரமொழிகளாற் சொல்லின் அவை தமிழுமாகாது, ஆங்கிலமுமாகாது, மாணுக்கனுடைய நாவுக்கு இடர்விளைப்பனவாய் முடியும். நீண்டசொற்களைக் கண்முன்வரவொட்டாது துரத்தவேண்டும். ஹிந்தி, வங்காளி யாகியபாஷைகளில் விஞ்ஞான பரிபாஷையெழுதியவர்கள் நீண்டசொற்கள் சிலவற்றையுபயோகிக்க அவை வழக்குக்கு வந்தில என்னும் முறையீடு நம் செவிக் கெட்டியது. ஆதலால் அழகுபொருந்திய பைந்தமிழிற் சொற்களையமைக்கவிரும்பும் நாமும் சிறியசொற்களைத் தெரிந்தெடுத்தாள்வோம். சிறியசொற்களின் ஆற்றலை மேல்வருவனவற்றாலும் உணர்ந்துகொள்ளலாம். "Oxides" என்னும் வகுப்புப்பொருள்களைப் பொன்மதி (Gold Oxide), வெண்மதி (Silver Oxide), செம்மதி (Copper Oxide), கரிமதி, சிலைமதி, வங்கமதி, நாகமதி, ஈயமதி, விஷமதி, முளிமதி, சடமதி என்று இவ்வாறு பெயரிட்டாளுதல் எவ்வளவு அழகாகவிருக்கின்றது. "Hydrogen" என்பதை "அம்" என்று

குறியிட்டோமாதலால் (O H) கொண்ட "Hydroxides" என்னும் பதார்த்தங்களை "மதியம்" என்னும் விகுதிதந்து வழங்கலாகும். அவை 'பொன்மதியம்' வெண்மதியம், நாகமதியம், வங்கமதியம், நலமதியம், லவ மதியம் எனவருவன. பொன்மதியம் என்பதற்குப்பதிலாக வடமொழியும் பிறமொழியுங்கலந்து "சுவர்ண ஹைதராக்சிஜம்" என்றால் அது "திலகாஷ்டமஹிஷபந்தனம்"போல ஆரவாரச் சொல்லாய்முடியும். "Hydrogen" என்னும் ஒரு பதார்த்தத்திற்குமாத்திரம் "அம்"என்னும் மொழியோடு அகர முதனிலையையுடைய "அணி" என்னும் மொழியையும் உபயோகிப்பின், (H o H) அணிமதியம், (HCL)அணிநிறம் என்றாகும்.

"Acids", "Alkalis" என்னும் இருவகுப்புப்பொருளையும் முறையே "காடி", "காரம்" எனவழங்குதல் கூடும். மேற்குறித்த சொற்களைப் பிரயோகித்துக்காட்டுவாம்.

காடியுங் காரமுஞ்சேர்வுழி உப்பும் நீரும் பிறக்கும் என்பது இரசாயனநூன்முடிபு. பெருவழக்காகப்பாவிக்கப்படுகிற காடிகள், கரிக்காடி Carbonic Acid) சிலைக்காடி (Sulphuric Acid) சடக்காடி (Nitric Acid), நிறக்காடி (Chloric Acid), அணிநிறக்காடி (Hydrochloric Acid) என்பனவாம். பெருவழக்கிலுள்ள காரங்கள் லவக்காரம் (Na O H) உரக்காரம் (KOH) சுண்ணக்காரம், ஈயக்காரம் முதலியன.

லமஅ+ அநி=லநி+அ₂ ம.

என்னுங் குறியீட்டினால் விளக்கப்படுவது எதுவென ஆராய்வாம். இக்குறியீட்டை "லவ்வொன்று மவ்வொன்று அவ்வொன்று உடன் அவ்வொன்று நிய்யொன்று சமம்; லவ்வொன்று நிய்யொன்றுடன் அவ்விரண்டு மவ்வொன்று"என்று வாசிப்பாம். ல=லவம், ம=மதி, அ=அம், அணி, நி=நிறம் ஆதலால் லவமதியமும் அணிநிறமுஞ்சேரின் லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது பொருள். அதாவது லவக்காரமும் அணிநிறக்காடியுஞ்சேர லவநிறமும் அணிமதியமும் பிறக்குமென்பது. லவநிறம் இரசாயனப்பெயர்; கறியுப்புப் பொதுவழக்கு.

$\text{சு}(\text{ம அ})_2+\text{க ம}_2=\text{சு க ம}_3+\text{அ}_2\text{ம}$

என்பதை இங்ஙனமே ஆராயிற் சுண்ணக்காரமுங் கரிக்காடியுஞ்சேர்வுழி சுண்ணக்கரிமந்தி (சுண்ணக்கல் பொதுப்பெயர்)யும் நீருமாகும் என்பது பெறப்படும். இங்ஙனம் தமிழ் எழுத்துக்களாற் குறியீடுசெய்வதேயன்றி மொழிபெயர்ப்புநூலினுள் ஆங்கிலமொழியெழுத்துக்களை மேலும் மேலும் இழுத்துக் கொண்டிருப்பது தகுதியாகாது.

ஒளிநூலுக்குரிய சில சொற்களை யாராய்வாம். "Plane" "Spherical" என்னும் சொற்களை "மட்டம்" "வட்டம்" என்று கொள்வாம் Mirror=கண்ணுடி; பரிபாடலினுள்ளும் "வான்றுகள்மாசறக் கண்ணடிவயக்கி" என்றூர். கண்ணுடியென்னுஞ்சொல்லைப் பொதுவழக்கில் "Glass" என்பர். இருவேறுபொருளுக்கு ஒருசொல்லைக் குறியீடு செய்தாளுதல் மலைவுறுதலுக்கு இடமாகுமாதலால் "Glass"என்பதனைப் "படிகம்"என்று கொள்வாம். ஆகவே மட்டக்கண்ணுடி(Plane Mirror), மட்டப்படிகம் (Spherical Mirror), மட்டப்படிகம் (Rectangular Prism) முக்கோணப்படிகம் (Triangular Prism) பலகோணப்படிகம் (Poly Gonal Prism) எனவரும்.— Poly - பல; Gonos - கோணம். இவை தமிழ்மொழிகள் யவனமொழியிற்சென்று வழங்கியதற்கு உதாரணமாகும். கோணம் என்பது கோடு என்னும் வினையடியினின்று பிறந்தது.—வட்டப்படிகம் (Lens) "Concave" "Convex" என்னும் மொழிகளை உள்வட்டம், புறவட்டம் என்று கொள்ளுதல் கூடும். "Ray" என்னும் மொழியைக் கதிர் என்று கொள்ளலாம். Pencil, கதிர்த்திரள்; Converging Pencil, குவிகதிர்த்திரள்; Diverging Pencil; விரிகதிர்த்திரள்; Parallel Pencil, நேர்கதிர்த்திரள்; Reflection, கதிரெழுச்சி; Refraction, கதிர்ப்பாய்ச்சல்; Incident Ray, விழுங்கதிர்; Reflected Ray, எழுங்கதிர்; Refracted Ray, பாய்கதிர்; Image, படிமம் (இது படி என்னும் பகுதியிலிருந்துவந்த தமிழ்மொழி; தொல்லாசிரியர் கண்ணுடியைப் படிமக்கலம்

என்றதை நோக்குக). Real Image, மெய்ப்படிமம், Virtual Image பொய்ப்படிமம் (உருவம் என்னும் சொல்லை Figure என்னும் ஆங்கில மொழியை யொத்ததாகக் கொள்ளலாம்) Focus மையம்; Centre நடு என்று இவ்வாறு கொள்ளலாகும்.

பௌதிகசாஸ்திரத்தின்பாலவாகிய ஏனைய சொற்களனைத்தையும் மேற்காட்டிய குறிப்புக்களுக்கமைய ஆக்கிக்கொள்ளுதல் கூடும். தாவர சாஸ்திரத்துக்குவேண்டிய சொற்கள்பல பத்துப்பாட்டிலொன்றாகிய குறிஞ்சிப்பாட்டிற் செறிந்துகிடக்கின்றன. இரசாயனமொழிகளும், மூலிகைகளின்பெயரும் வைத்தியநூல்களிற் காணப்படுவன; மன நூலுக்குரியமொழிகள் சித்தாந்தசாஸ்திரங்களிற் காணப்படுவன, இரேகாகணிதத்துக்குரிய மொழிகள்பல நிகண்டு வடிவுபற்றியபெயர்த் தொகுதியுட்காணப்படுவன; வடமொழிநூல்களுட் சாங்கியம், வைசேடிகம், நியாயம், யோகம் என்னும் வஸ்துநிச்சயநூல்களுள்ளும், அர்த்த சாஸ்திரநூல்களுள்ளும் வாராஹமிஹிரம் முதலிய வானநூல்களுள்ளும் பல மொழிகள் உள்ளன. தமிழ்மொழி, வடமொழி பிறமொழி என்னும் முறையிற் சொற்களைத் தேடி யாராய்ந்தமைத்துக்கொள்ளுதல் நலமாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை.

பண்டித-மயில்வாகனன்
B. Sc. (Lond)

டால்டன்கல்விமுறை.

மேனாட்டார் எழுதும் நூல்களைத் தமிழர் கற்பதில்லையென்றும், அவர்கள் நூல்களில் இன்னது சொல்லியிருக்கிறதென்றுகூடப் பொதுவாகக்கவனிப்பதில்லையென்றும் அலருரைநிகழ்கின்றது. ஆங்கிலபாஷா விற்பன்னர்களும் மேதாவிகளும் இதுவிடயத்திற் கவனம் செலுத்துவார்களாயின் இக்குறை வெகுசீக்கிரத்தில் நீங்குமெனபதில் ஐயமில்லை. யானவாசித்த Education on the Dalton Plan என்னும் நூலைக் கூடியவரை சுருக்கி எழுதித் தமிழ்நாட்டுப் பழையமுறையோடு ஒப்பிடுவது ஒருவாறுநலமாகுமென்றெண்ணி ஈண்டு எழுதலானேன். அதனிற் குறைகளிருக்குமாயின், குற்றங் களைந்து குறைபெய்து முடித்துக் கொள்ள அறிஞர்களைவேண்டிக்கொள்ளுகிறேன்.

இக்கல்விமுறையானது முதன்முதல் அமெரிக்கா ஐக்கியநாட்டு மாதான ஏலன்பார்க்ஹேர்ஸ்ட் (Helen Parkhurst) டால் முதன்முதற் குறிப்பிடப்பட்டு அமெரிக்காவிலுள்ள டால்டன் என்னுமூரில் கையாளப் பட்டதால் இதற்கு டால்டன் (Dalton) முறை என்று பெயரிடப் பட்டது. இம்முறையானது அமெரிக்காவிற் பலஇடங்களிலும் இங்கிலாந்திற் சிலஇடங்களிலும் கையாளப்பட்டுப் பெருநன்மைகளைத் தருகின்றதென்று சொல்லிக்கொள்ளப்படுகிறது. இந்நாட்டிலும் அக் கல்விமுறையை ஏற்படுத்துவது குணத்தைத் தருமோவென்று சிலர் எண்ணுகின்றனர். அதன் வன்மை மென்மைகளைப் பெரியோர்களே அறிந்துகொள்வான்வேண்டுகிறேன். இனி ஏலன்பார்க் ஹேர்ஸ்டு கூறிய படி அம்முறை வருமாறு :—

நான் உபாத்திமைத்தொழிலில் முதன்முதலாக ஒரு நாட்டுப்புறத்துப் பள்ளிக்கூடத்தி லமர்ந்தேன். அங்கே நாற்பதுபிள்ளைகள் எட்டு வகுப்பாக வகுக்கப்பட்டிருந்தார்கள். நான் ஒருவகுப்பைக் கவனிக்கும் போது மிகுதியான ஏழுவகுப்பும் தமக்குத்தாமே வேலைசெய்யும்படிவிட வேண்டிய அவசியமாயிற்று. அதன்பொருட்டு என்னசெய்யலாமென யோசித்தேன். பிள்ளைகளை அவர்கள் கல்விக்குத்தக்கவாறுபிரித்து மாணாக்கர்களிற் பெரியோர்களைச் சிறியவர்களுக்குப் போதிக்கும்படி ஏற்

படித்தினேன். அது சிறிது சௌக்கியமாயிருந்தாலும் எனக்குத்திருப் தியைக் கொடுக்கவில்லை. இவ்வாறு இருக்கையில் யான்விடுமுறை யின்போது ஒருநாள் புகைரதத்திற் பிரயாணம் போகநேர்ந்தது. அக்காலை என்முன்னிருந்த ஒருவர் பேசத்தொடங்கியபொழுது புகைவண்டியில் அங்குக் கூடியிருந்த ஒருகூட்டத்தைக் காண்பித்து இது தற்கால நாகரிக ஏற்பாடாயினும் இன்னும் இம்மனிதர்களை அவர்களிஷ்டப்படிவிடவில்லை' இவர்களை அவர்களிஷ்டப்படிவிட்டிருப்பார்களானல் இவ்வேலைகளை வெருப்பிக்கிரத்தில் முடித்திருப்பார்கள் என்றார். ஏன் அப்படி விடப் படுவதில்லை என்றேன். அவர் இவர்களுக்குத் தலைவன் ஒருவன் இருக் கிறான். அவன்புத்திக்கு எட்டியதைத்தான் இவர்கள் செய்யவேண்டும். அவர்களை இவன் மேய்த்துவருகிறான் என்றார். யான் ஏன் நீங்கள் இவர்களையும் கலந்து செய்யக்கூடாது என்றேன். இப்பொழுது அப்படிப்பட்ட தலைவர் ஒருவர் ஏற்பட்டிருக்கிறார். அவ்விதம் சீக்கிரம் நடைபெறுமென்றார். இதுவே என்னையும் கல்விச்சீர்திருத்தத்திலும் அப்படிப்பட்டஐக்கிய ஏற்பாடுசெய்யமுடியுமாவென்று யோசனைசெய்யத் தூண்டிற்று. அநேகவிதமாக யுக்திசெய்து கடைசியாக இந்தமுறை மேலானதென்று கண்டேன். இதனை யாராய்ச்சிசெய்யப் போதியசாவகாச மில்லாமற்போயிற்று. ஆயினும், யான் சிறுகச்சிறுக உண்டாக்கிய மாறுதல் களில் ஏற்பட்ட பலனைக் கண்ட பெற்றோர்களும், மேலதிகாரிகளும் என்னை மேலானவேலைகளுக்கு மாற்றி முடிவில் உயர்தரக்கலாசாலைப் போதகாசிரியராகச் செய்தனர். அக்காலத்தில் எட்கர்ஜேம்ஸ் ஸ்விப்டு (Swift) என்பவர் எழுதிய திருத்தப்படும் மனம்; அறிவுவிருத்தியில் ஒருகூறு (Mind in the Making; A study in Mental Development) என்ற நூல் கிடைத்தது. அதனை வாசிக்கையில், பின்வரும் வாக்கியமொன்று காணப்பட்டது. "மாணவர்களோடு வேலைசெய்து அவர்களுக்குக் கல்வியில் உற்சாகத்தையுண்டாக்கி அதனில் அவர்களை முழுகச்செய்து அதனால் ஏற்பட்ட அறிவை விருத்திசெய்து அதைச் சுத்தம்செய்தல் நல்லமுறையாம். இப்பொழுது கற்பிக்கும் முறை மத் தியகாலமுறையாகும். அந்தமுறையின் அவசியம் இப்பொழுது இல்லா விடினும் இதுவே மேலாடிவருகிறது. இந்த மத்தியகாலக் கற்குவியல்களை நீக்க உபாத்திமார்களின் அறிவை விருத்திசெய்வதே முதல்வேலையாகும். பிறகு அவர்கள் மாணவர்களுடைய மனோபாவத்தைக் கவனிக்கக் கலா

சாலை ஒரு ஆராய்ச்சிச்சாலையாகும்; அவர்கள் சக்தி கைத்தொழிலபி விருத்தியோடு நிற்காது. அக்கம்பக்கத்தில் நடப்பவைகளைக் கவனித்து அதனால் உண்டாகும் முயற்சி சரிவரக் கவனிக்கப்படவில்லை. மாணவர்களுடையஅறிவைப் பெருக்குவதில் உபாத்தியாயர் அதிகமுயற்சி எடுத்துக்கொள்ளவிரும்புகிருர். எந்தமாணவனை உபயோகமில்லையென்று உபாத்தியாயர் குறைகூறுகிருரோ அவனே பெரியோனுகலாம்" என்று இவ்விதமாக எழுதியிருப்பதை வாசித்தபிறகு யான் அதைப் பலரிடத்திலும் காண்பித்தேன். இப்படிப் பலநாள்கழிந்தபிறகு துணிந்து வேலைசெய்யஆரம்பிக்கப் பிரயத்தனப்படுகையில், போதனுமுறைச்சாலை உபாத்தியாயினி ஒருத்தி என்முறையில் நம்பிக்கையில்லாவிடினும் ஒத்துழைக்கத் தீர்மானித்தாள். அதன்மேல், கொஞ்சம்கொஞ்சமாக மாறுதல்கள்செய்துவந்தேன். இதன் நடுவில் 1914ல் மாண்டஸோரிப்பேறிவாட்டியின் முறைகளைக் கற்க இதாலிதேசம் சென்றேன். அங்கும் என் நண்பர்களோடு என்முறைகளை யாராய்ந்துவந்தேன். திரும்ப அமெரிக்கா தேசம்வந்து மாண்டஸோரிப் பேறிவாட்டியின் உதவியாக இரண்டு வருடம் வேலைபார்த்து அதையும் விட்டு முடிவில் 1919-ம் ஆண்டு முது வேனிற்பருவத்தில் என்முறையை மர்ரேகிரேன் (Murray crane) பெருமாட்டியிடம் தெரிவித்தேன். அவர் அதை அங்கீகரித்து முதலில், பெர்க்ஷயர் கூன்பாடசாலையில் பரீட்சிக்க அநுமதியளித்தனர். அப்பாடசாலை விருத்தியடைந்ததைக் கண்ட அப்பெருமாட்டி தன் சுதேசமான மாஸசூஸட்ஸைச் சார்ந்த டால்டனிலுள்ள மாணவர்பாடசாலையில் இம்முறையை ஏற்படுத்தினர். அக்காலத்திலேதான் இங்கிலாந்திலே கல்விஅபிவிருத்திக்காக உழைத்த மிஸ் பெல்ரெண்ணி என்பார் இப்பள்ளியைப் பார்வையிட வந்தார். அவ்வம்மையார் இதனைக் கண்ணுற்று இதன் மேம்பாட்டையும் குறித்துக்கொண்டு தமது ஜன்ம தேசத்திலே வேலைசெய்ய ஆரம்பித்தார். இதற்கு ஆராய்ச்சிச்சாலை என்ற பெயர் பொருந்துமாறில்லை என்று அவ்வம்மையார் கூறினர்களாயினும் எனக்கு அதனிடத்துள்ள பற்ருல் அதனைவிடச் சம்மதியாமல் டால்டன்ஆராய்ச்சிச்சாலைமுறை Dalton laboratory plan என மாற்ற இசைந்தேன். இதனின்றும் இம்முறை வெகுதூரம் பரவலாயிற்று.

முறைவிவரம்

பொதுப்படப் பேசுவோமாயின், பழையமுறை போதனைக்கும் புதியமுறை பழக்கத்திற்குமாக இருக்கின்றன. என்முறையோ இவ்விரண்டினையும் சேர்த்து ஒருவழிப்படுத்துவது. போதனை அல்லது அறிவு உண்டாயின், பழக்கமுண்டாகுமென்பதுண்டெனினும், அது பள்ளியை விட்டு வெளிவந்தபிறகேயாம். அப்படியில்லாமல், பள்ளியிலேயே இது உண்டாகுமாயின் நன்மையைத் தருமென்பேன். இதற்கு முக்கியம் சுயேச்சை. சுயேச்சையைக்கண்ட மாணவன் தன்னந்தனியேவிடப்பட்டு ஒழுங்குமீறுவதென்று பொருளல்ல. தன் இஷ்டப்படி நடப்பது சுயேச்சையென்றாலும், இம்முறைப்படி கொடுபடும் சுயேச்சை மாணவனது முயற்சியைத் தட்டியெழுப்பி அவனைக் கல்வியிற் புத்தியைச் செலுத்தும்படி செய்வது. இதனால் அவனதுபுத்திக்குச் சுயேச்சையும் நன்னடக்கையிற் சுயேச்சையுந்தான் உண்டாகும். ஜனசமூகத்திற்கு விரோதமான காரியங்களெல்லாம் பிழையானவழியில் திருப்பப்பட்ட முயற்சியால் உண்டாவது.

இந்தச் சுயேச்சை ஒருவகுப்புமாணாக்கரிடத்திலாவது உபாத்தியாயரிடத்திலாவது தனித்தனி இருக்கக்கூடாது. அது கலாசாலை முழுவதும் பரவவேண்டும். மாணாக்கனுக்கு உபாத்தியாயரிடம் எப்படிப்போய்க் கேட்பது என்ற அச்சம் விலகவேண்டும். இம்முறையில், சுயேச்சைதான் முக்கியமானவிடயம். அதாவது ஒருகலையில் ஊக்கமுண்டாகுமானால் அதனில் முன்னேறிச்செல்ல விடுவதாம். அப்படி மாணவனைவிடுவதால், அவன்கல்வி அதிதீவிரமாயிருக்கும். அவனறிவு அதனைப்பற்றிக்கொண்டுமேற்செல்லும். அவ்வாறில்லாமல் அவன் ஊக்கங்கொள்ளுஞ் சமயத்தில் அவனைத் திடீரென்றுநிறுத்தி வேறுதுறையில் திருப்புவோமானால் இதுவுங்கெட்டு அதுவுங்கெட்டுத் திண்டாடுவான். இம்முறைப்படி மணி அடிப்பதில்லை. கால ஏற்பாடென்னும் இராக்கதன் மறைகிறான். ஏனெனில் ஒருவனை அவனவன் சக்திக்குத்தக்கவாறு பயிலவிடாதவரையில் அவன் ஒன்றும் பயிலுவதில்லை. இதனால்தான் சுயேச்சை கொடுக்கப்படுகிறது.

இரண்டாவது ஒற்றுமை: அல்லது கூடி ஒத்துழைத்தல். கல்வியும் ஜனசமூகமும் என்னுநூலில் அதனாசிரியர் ஜனங்கக்கல்வியென்

பது ஒருவன் தன்னைச்சேர்ந்த கூட்டத்தோடு தானும் முற்றுப்பெற்றவ னென்பதற்கன்று; அக் கலாசாலைமுழுவதும் ஒற்றுமைப்படவேண்டு மென்பதே என்பர். அது எவ்விதம் உண்டாகுமெனின் மாணவர்கள் ஒருகலையைப் பயிலும்போது அவர்களுடன் பயில்பவன் மந்தனாயினும், தீவிரபுத்தியுடையனாயினும் அவனைச் சேர்த்துச்செல்வார்களேயன்றிக் கைவிடமாட்டார்கள்.

பழையஏற்பாட்டின்படி ஒருமாணவன் தன்வகுப்பினோடுசேர்ந்தே செல்வன்; சேராமலுமிருப்பன், அவன் பாடஒழுங்கில் (Curriculam) கட்டுப்பட்டவன். இதனால் இவன் ஜனசமூகத்தோடு (Social) ஒத்து வருபவனாகக்காட்டினாலும் எவ்வளவுதூரம் சமூகத்தில் உறவுகொள்ள வேண்டுமோ அவ்வளவு கொள்ளாமற்போகின்றான்.

சமூகஉறவு என்பது ஒருவரோடொருவர் வார்த்தையாடிச் செல்வ தென்று பொருளல்ல; அதைவிடமேலானது ஒருவருடன் ஒருவர் கலந்து உழைப்பது. இப்படிக் கலாசாலையிலேயே ஒருவருடன் ஒருவர் சேர்ந்து பழகினாலன்றிக் கலாசாலையைவிட்டு வெளியேறியபிறகு ஒத்துழைத்துத் தேசத்திற்கு நன்மைசெய்ய இயலாது. இந்த டால்டன்முறையால் அதற் குற்ற சாதனங்கள் ஏற்படுகின்றன. அவனவன் தகுதிக்கேற்ப உறவு ஏற்படுகிறது. சமூகவாழ்வுக்குப் புறம்பானவன் அப்பொழுதே கண்டிக் கப்படுகிறான். கண்டனை தண்டனைமுதலியவைகள் மாணாக்கர்களுக் குள்ளேயே ஏற்படுகின்றன. இவைகளுக்குக் கலாசாலைகளில் உபாத்தி யாயர்கள் ஒழுங்குகள் ஏற்படுத்த இயலாது. மாணவர்கள் ஒருவரோ டொருவர் கலந்து நெருங்கிப் பழகும்படி செய்யவேண்டும். மேலும், ஆசிரியனும் மாணவனும் பிரிந்துநிற்கக்கூடாது. வெளியிற் காணும் போது அதிக அன்போடு நடத்தும் ஆசிரியர்கள் கலாசாலையில் நுழைந் ததும் வேறொருமேற்போர்வை போர்த்து அதிகாரம்செய்வதை நாமெல் லோரும் அறிவோம். அவ்விதம் செய்யாவிடில் தமது மானம் அழிந்து விடுமென்று பலர் எண்ணுகின்றனர். அது பிழையான எண்ணம், அப்படிச்செய்வதால் மாணவனுடைய வலுக் குன்றிக் கட்டுப்பாட்டி னின்றும் தவறுகிறான். இதுபோலவே மாணவனுக்குவிளங்காத பல வகை எண்களையும் பிறவற்றையும் செய்யச்சொல்லும்போது அவன் அதி கக்கவலுற்றுக் கன்றுகிறான். டால்டன் முறைப்படி அவனுக்கு ஒன்றில்

எட்டியமட்டிற்செய்து மிகுதியைக் கொஞ்சங்கொஞ்சமாகச் செய்யத் தூண்டப்படுகிறான். இதற்கு அடிப்படையாக மாணவன் முதலிற் கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்களில் ஓராண்டில் இவ்வளவுதூரம் முன்னேற வேண்டுமென அறிவிக்கப்படுகிறான். அவ்வாறுதெரிந்துகொண்டவுடனே அம்முடிவை அடையத்தக்க சாதனங்கள் எவை என்று நாடுகிறான். சாதாரணமாக ஒன்றைப் பற்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியை நாடுகின்றனர். அது மனித இயற்கை. மாணவனும் அவ்விதமே தனது கடமையைமுடிக்கப்பலவழிகளை ஆராய்ந்து ஒன்றைத் தேடியெடுத்துவிடுகிறான். அப்படி அவன் ஆராயும்பொழுது அவனது தோழர்கள் அவனுக்கு உதவிபுரிகின்றனர். இவ்விதமாகத் தான் எடுத்துக்கொண்ட கருமத்தைச் செய்துவிடுகிறான். இதுதான் கல்வி. இந்த அறிவைத் தனது மனோதிடத்தாலும் கூட்டுறவாலும் வளர்க்கிறான். இப்பொழுது அவன் பயிலுமிடம் கலாசாலையாவதில்லை. வாழ்நாளாகிறது. எமெர்ஸன் சொல்லுவதாவது :—

"கல்வியின்ரகசியம் மாணவனைநடத்தும் முறையிலிருக்கிறது. அவன் என்ன பயிலவேண்டும்; யாதுசெய்யவேண்டுமென்பது உமது கட்டளையல்ல. அது முன்னரே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதனுண்மையை மாணவனே அறிவான். நீர் அவனை அதிகாரஞ்செய்வதாலும் கட்டளையிடுவதாலும் அவன் தனது நோக்கத்தினின்று விலக்கப்பட்டுக் கேடுறுகிறான். சிறுவனைக் கௌரவியும். கடவுளின் அமைப்பைக் கூர்ந்து பாரும். இயற்கைவிநோதம் ஒருபொருளின் உவமானங்களை ஒரு தடவை சொல்ல விரும்புகிறதேயன்றிப் பன்னிப்பன்னிச் சொல்லவிரும்பவில்லை. சிறுவனைக் கௌரவி; இருந்தாலும் அவனதுபெற்றோருக்கு அதிக இடம் கொடாதே. அவனது ஏகாந்தத்தில் பிரவேசிக்காதே."

"நான் இவ்விதமாகச்சொல்வதற்கு எதிராக நீர் இவ்விதமாகச் சிறுவனது ஒழுங்கைக் கைவிட்டுவிடுவீரா; இச் சின்னஞ்சிறுவனை அவனது இஷ்டப்பிரகாரம் எதேச்சையாகவிடுவதைச் சிறுவனதுமனோநிலையின் கௌரவம் என்பீரா ? என்ற எதிரொலியைக் கேட்கிறேன். என்னுடைய விடை, சிறுவனைக் கௌரவி ; கடைசிவரையில் அவனை விடு; ஆயினும், உனது கௌரவத்தையும் இழக்காதே ; அவனது மனோபாவத்திற்குத் தோழமை கொள் ; தோழனுக்குத்தோழனாயிரு ; அவனதுநன்னடக்கை

யைவிரும்பு; ஆயினும், அவன்கேட்டை அவமதி; அவன் தான் செய்வது நியாயமென்று விவகரித்துப் பக்கத்திலுள்ளாரைச் சான்றுக் கழைப்பான். தன் கருத்தை வெளியிடக்கூடியமொழிகளுக்கும் உரைநடைக்குந் தடுமாறி இந்த ஊரில் தன்னை அறிய ஒருவருமில்லையெனினும் வேறு ஏதாவது ஒரு ஊரில் யாராவது ஒருவர் இருப்பரென்றெண்ணுவான்; இவ்விதமாகத் திருப்தியான எண்ணத்துடன் பட்டினங்களிலும் நாடுகளிலும் காடுகளிலும் அலைந்து திரிவான். அவன் நன்மை தீமையான பேச்சுக்களோடும் நல்லார் பொல்லாரோடும் இணங்கட்டும். அது தானே திருந்தும். அது முடிவில் உண்மையாளரது கூட்டத்திற் சேர்க்கும்."

"நாம் மக்களை அவர்கள் எண்ணப்படியும் மனப்பாங்கின்படியும் நடக்கவிடக்கூடாதா? நீ அவனை உன்னைப்போல ஆக்க முயலுகிறாய். நீ ஒருவன் போதும்."

"அல்லதூஉம், மாணவர்களது புத்திக்கூர்மையை, நாமறியாது அவரது புத்தியிற் பதிந்துகிடப்பவற்றை நாமறியாத ஒருவழியிற் திருப்பமுயலுவது முன்னம் யவனர்கள் தங்கள்நாட்டிற் செய்துவைத்திருந்த சிறந்த சிற்பங்களையும் சித்திரங்களையும் துருக்கர் அழித்ததையொக்கும். அன்றி, பிள்ளைப்பருவத்திருந்தபடியே தானேவளரும் ஆண் மகனை நாம் அடைவோம்; அவர்கள் சிறந்த செய்கைளைச்செய்ய வலுவும் புத்தியுமுடையவர்கள். நாம் அடிக்கடி காணும் வலுவில்லாததேகத்தோடு புத்திகூர்மையுடையவர்களா யிரார்."

"அவர்கள் பொய்யினின்றும் மெய்யை வைத்தியனைப்போல வெகு சீக்கிரத்தில் கண்டுபிடிக்கவல்லவர்கள். அவர்களுனது முகத்திலிருந்தே நீ வாய்திறந்து சொல்ல ஓரேழ்நாண்முன்னரே அறிந்துகொண்டு உதவி செய்யமுற்படுகின்றனர். அவர்கள் பிழைசெய்வதில்லை; பெரும்பேச்சுப் பேசுவதில்லை யென்றாலும் தமது அனுபவத்தில் நம்பிக்கை கொள்ளுகின்றனர்."

இங்கே எமர்சன் ஆசிரியர் (Emerson) விநோதமாகச் சொல்லியிருப்பதே டால்டன்முறையின் நோக்கம். அது ஒருவழியைக்காட்டுகின்றது; அதுதான் கலாசாலையை மாணவர் விரும்பச்செய்யும் நல்வழி என்பது திடமான எண்ணம். அப்படிச்செய்வோமானாற்றான் பயமற்ற

தீர்களை நாம் உண்டாக்கலாம். இம்முறையில், சுயேச்சை ஒரு முக்கிய அம்சமாதலாயால், முறையை எங்கும் ஒரேவிதமாக அநுசரிக்க வற்புறுத்தவில்லை. அது நிலைக்குத்தக்கவாறு மாற்றப்படவேண்டும். இதனிற் செய்யவேண்டிய முதற்கடமை எதுவெனின், பிள்ளைகள் தாங்க ளறிவதற்குத் தடையாயிருப்பவைகளை நீக்கவேண்டுவது. அவனை அவனது ஐயத்தினின்றும் நீக்காவிட்டால் அவன் அந்த ஐயத்தை மறைப்பதிற சமர்த்தனாகிறான். இதுவரை அவனது அறிவின் மேற்பாகத்தைச் சோதித்தோமே யொழிய அவனது ஆழ்ந்த அறிவு எது என்று சோதித்தோமில்லை. ஆகவே, அவனையே எல்லாவற்றையும் அறிந்துகொள்ளவிடவேண்டும். இதற்கு ஆசிரியர் உதவி வேண்டும். பழைய ஆசிரியர் கடுமுறையை ஆசிரியன்மார் நீக்கிவிட்டுப் புதுச் சட்டை புனையவேண்டும்.

அநுபவமுறை.

இனி, இதை அநுபவத்தில் எப்படிநடத்தவேண்டுமென்று காட்டுவேன். இம்முறையைக் கையாடப் பாடவற்பாடும், (Curriculam) வகுப்புமுறையும் ஒழியவேண்டும். என்றாலும் இவையிரண்டும் இம்முறையிற் சம்பந்தப்பட்டேநிற்கும். ஒவ்வொரு மாணவனும் இன்ன வகுப்புக்குத் தகுதியுடையவனென்று வகுக்கப்படுவான். அவ் வகுப்புக்கு அதிகமாகப் பயிலுவது இதுவெனவும் இதற்குக்குறைவுபடுதல் தகாதெனவும் ஒரு பாடவற்பாடு உண்டு. ஆயினும், ஒருவருஷத்துக்கு மாணவன் செய்யவேண்டியவேலை இதுவென்று முன்னரே அறிவிக்கப்படும். அது அவனுக்குக் குத்தகையாகிறது. இப்பிள்ளைகள் வகுப்பிற் சேர்க்கப்படுமுன் ஒரு உறுதிமொழிக் கையெழுத்திடவேண்டும். அது

......................வகுப்பில் பயிலும் மாணவனாகிய........................
நான் இந்த......................பாடங்களைப் பயிலச் சம்மதிக்கிறேன்.

கையெழுத்தும் தேதியும்.

ஒரு வருடத்திற்குப் பாடவற்பாடாகையால், அப்பாடங்களை, முக்கிய பாடங்கள் என்றும் சாதாரணபாடங்கள் என்றும் பிரிக்கிறோம். முக்கியபாடங்கள், கணிதம், சரித்திரம்,பூதபௌதிகசாத்திரம், ஆங்

கிலம், பூகோள ககோளங்கள், அந்நியபாஷைகள் முதலியவை. மற்றவை சாதாரணம். இவைகளை ஒருவருடமுழுவதும் போதிப்பதென்றால் ஒவ்வொன்றிலும் ஒருமாதத்திய இடைவிடாப்படிப்பாகும். ஆகவே அவைகளைப் பகுக்குங்கால் இவ்வளவுதான் பயிலவேண்டுமென நிச்சயமாகிவிடுகிறது. மாணவனிடம் இத்தொகுதியை ஒப்பித்தவுடன் அவன் தான் எந்தப்பாடத்தில் தேர்ந்தவனென்றும், எதிற் குறைவுபட்டவனென்றும் உடனே தெரிந்துகொள்ளுகிறான். குறைந்த பகுப்பில் தன் முழுக்கவனத்தையும் செலுத்த முற்படுவான். எவனுக்கு எக்காலத்தில் ஒருவிஷயத்தில் ஊக்கமுண்டாகிறதோ அவன் அதனைக் கற்பானாயின் அது அவனதுமனதில் நன்குபதியும். ஆயினும், அவனை ஒவ்வொரு மாதத்திற்கு இவ்வளவுதான்செல்லவேண்டும் என்றமுறையைத் தாண்டவிடக்கூடாது. அப்படிவிடுவோமாயின் ஒன்றை அதாவது தனக்குப் பிடித்தபாடத்தைக் கவனிக்கவும் பிடித்தமில்லாததைப் புறக்கணிக்கவும் தலைப்படுவான். ஆகையால் அவன் வேண்டிய ஒவ்வொன்றிலும் சமத்துவமடையும்படியாகக் குறைவாகநிற்கும்பாடத்திற்கு அதிகநேரமும், தேர்ச்சியுடையதற்குக் குறைந்தநேரமும் செலவழிக்கப் பார்க்கவேண்டுமென்றாலும் அவனைக் கட்டாயப்படுத்தக்கூடாது. இதுவிஷயத்தில் ஆசிரியனமார் வெகுஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சாதாரணமாக அவ்வகுப்புப்பிள்ளைகளை எவ்வளவு கற்கவியலுமோ அவ்வளவுதான் பயிலும்படி விடவேண்டும்.

இனி மாணவர்களைவிட்டுக் கலாசாலையைப்பற்றிப்பேசுவோம். கலாசாலை பலபகுதிகளாகப் பகுக்கப்படவேண்டும். அவைகளில் எந்தப் பாடம் பயில வமைக்கப்பட்டிருக்கிறதோ அந்தப்பாடம் பயில்வதற்குள்ள சகல சாதனங்களும் அமைக்கப்படவேண்டும். அந்தப்பாடத்தில் தேர்ச்சியுடைய ஒருவரே இருந்து கண்காணிக்கவேண்டும். புஸ்தகங்களில் இப்பொழுதுள்ள குறுகியநோக்கமான இதைத்தான் பிள்ளைகள் பயிலலாம்; இதைப் பிள்ளைகள் தொடக்கூடாது; இதுதான் ஆசிரியன்மாரது சொந்தமென்பதை மறந்து அந்த விநாடிவரை ஏற்பட்ட சகல நூல்களையும் எம்மாணவனும் எளிதிற் படிக்கும்படியானவிதமாக அமைக்கப்படல்வேண்டும். மாணவனது அறிவுவளர்ச்சிக்குப் பெருந்தடையாயிருப்பது கால ஏற்பாடு. இது ஒழியவேண்டும். இக் கால வேற்பாட்டை ஏற்படுத்துமுன் தாங்கள்படும் கஷ்டங்களைக்கூறிய

எத்துணையோ தலைமை ஆசிரியர்களை யறிவேன். அம்மம்மா! அவர்கள் துன்பம் பெரிதே. இவ்வளவுகல்வி பயிலவேண்டுமென்று தீர்மானித்த பின்னர்க் காலவேற்பட்டால் என்னநன்மையுண்டாகும்.

பாடம் பிரித்தல்.

ஆயினும் பாடம்பயிலப் பாடம் எப்படிப் பிரிபடவேண்டுமென்று கவனிப்போம். அதனில்தான் அவன்கல்வி சார்ந்திருக்கிறது. பொது வாகப் பாடத்தைப் பிரித்துக்காட்டினால் அவன் செய்யவேண்டியவேலை இவ்வளவுதானென்று தெரிந்துகொள்ளத் தகுதியிராது. சரியான பிரி வுக்கு முதற்காரணமாகநிற்பது எழுத்துமூலமாகச் சொல்வதாகும். மாணவன் செய்யவேண்டியது இதுதானெனத் திட்டமாகக் குறித்து விடுவதே நலம். ஆசிரியர்கள் தங்கட்குப் பாடப்பிரிவை ஏற்படுத்த வில்லையென்பதையும், குறிப்பது மாணவனுக்கு என்பதையும் மனதி லிருத்தி எழுதவேண்டும். எவ்விதமாக அப்பிரிவு ஏற்படவேண்டு மென்றால் அது ஒப்பந்தமேற்ற மாணவன் கல்வியை எளிதிற் பயில ஏற்றதாகவிருக்கவேண்டும். சிறுவர்கட்கு இவ்விதமாக வேலைசெய்வ தென்று முதலில் தெரியாது. டால்டன்முறை இதற்காகவே ஏற்பட் டிருப்பதால், சிறுகச்சிறுகப் பாரத்தை ஏற்றவேண்டும். பல்வகைத் திறமை (Versatility), சமயோசிதம், பொது அறிவு இவைகள் ஒப்பந்த மேற்படுந் திறமையைப்பொறுத்து விருத்தியாகும். ஒருபொழுதும் அவன் தகுதிக்கு மேற்போகக்கூடாது. ஒருவகுப்பின் பாடப்பிரிவைச் சிலர்முடித்தும், சிலர்முடிக்காமல் தகுதியற்றவர்களாய் இருப்பின் அந்தவகுப்புக்குக் குறைவானபகுதியொன்றும் தகுதிப்பகுதியொன்று மாக வகுக்கவேண்டும். நாளடைவில் இம்முறையின் நன்மையால், குறை வுப்பகுதியிலிருப்பவன் தகுதிபெற்றால் நிறைவுப்பகுதிக்கு மாற்றப்பட லாம். இவ்விதமாகக் குறைந்த அறிவுடையவனும் முன்னேறுவான்.

முதன்முதலாக மாணவனிடம் ஒரே ஒருமாத அட்டவணையே கொடுபடவேண்டும். அதுவும் 4 வாரமாகப் பிரிபட்டுச் செய்யவேண்டிய வேலைகளின் முதற்குறிப்புடையதாக விருத்தல்வேண்டும். இன்னின்ன விருக்க வொழுக்கூடுமென்றும், விடைபிறுத்த லமையுமெனவும் மாண வன் அறியும்படியாக விருக்கவேண்டும். இவைகட்குப் பொறுப்புகல்

(Interest Pocket) என்றுபெயர். இவைகள் எழுதப்படும்விதத்தி லும் கவனம்செலுத்தவேண்டும். பிள்ளைகளை நீ இன்னின்னது முடிக்க வேண்டுமென்று சொல்வதைவிட, இன்னின்னநூல்கள்படித்தால் எடுத்த கருமத்திற்கு அநுகூலமாயிருக்குமென்று சொல்லுதல் பொருத்தமா யிருக்கும். இவ்விதமாக ஏற்படும் காலப்பகுதியை உதவியாசிரியனெனக் கூறலாம். இவைகள் முடியுந்தறுவாயில் ஆசிரியர் தன்னிடம் வரும்படி சொன்னால் மேல்நடக்கவேண்டியதைத் தெரிவிப்பதாகக்கூறலாம். இப் பாடங்கள் வகுக்கும்போது கவனிக்கவேண்டியவைகள்.

மனதிலிருத்தவேண்டியவைகள்.

மாதமொன்றுக்கு முகவுரை.

முதல்வாரம்.

1. விஷயம் (Topic)
2. செய்கைகள் (Problems)
3. எழுத்துவேலை
4. மனனம் (Memory Work)
5. கூட்டுறவும் சம்பாஷணையும்
6. ஆராய்ச்சி (References)
7. சமநிகழ்ச்சி (Equvalents)
8. சம்பந்தமான கல்வி (Bulletin Study)
9. பகுதிக்குறுக்கம் (Departmental Cuts)

இதேமாதிரியாகச் சிலவற்றை நீக்கியும் சேர்த்தும் மற்றவாரங் களுக்கும் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

இதன்விரிவாவது :—முகவுரையாவது ஆடம்பரமின்றிச் சாதாரண மாக விஷயம் இன்னதெனவிளங்கும்படி சொல்லுதல்.

1. பெயர் அல்லது விஷயம் :—இதை ஆங்கிலத்தில் டாபிக் (Topic) என்பது. சிறுதேசம், மண்ணெண்ணை நளன் என்பன. உதாரணமாகப் 'பூகோளம்' எடுப்போம்.

2. செய்கைகள் :—ஆங்கிலத்தில் பிராபிளம் (Problems) என் பது. இதனில் பலவிஷயங்கள்அடங்கும். அவை படம்வரையும்போது கணக்கிடுதல், பலதேசங்கள்செல்லும்வழி கண்டுபிடித்தல், அந்நிய பாஷையிலிருந்து மொழிபெயர்த்தல் முதலியன.

3. எழுத்துவேலை இது கற்றதையும் கற்கவேண்டியதையும் குறிப்பதாகும்.

4. மனனம்:—எது முக்கியமானதோ அதனை மனனம்செய்து ஞாபகப்படுத்தல்.

5. கூட்டுறவும் சம்பாஷணையும் :—இது ஒருவிஷயத்தைப்பற்றி ஆசிரியரும் பிள்ளைகளும் கூடிப்பேசுதல். அக்காலத்துத்தான் பிள்ளைகள் தங்கள் ஐயங்களை யகற்றித் திரிபின்றியறிய அவகாசமாகும்.

6. ஆராய்ச்சி :—இதனில் எடுத்தவிஷயம் சம்பந்தமான புத்தகங்கள் யாவை? அவை எங்கேகிடைக்கப்பெறும்? என்பது முதலான குறிப்புக்களும் விவரங்களும இருக்கவேண்டும்.

7. சமநிகழ்ச்சி:—இது புதியது; விசேஷமானது. ஒருவன் வேலை செய்தது இவ்வளவெனக் குறித்துக்கொள்வது. அது கிராப் (Graph) முறைப்படி குறித்துக்கொள்வது.

8. பத்திரிகைகள் படித்தலாவது:— எவ்வெப்பொழுது புதிதான விஷயங்கள் பத்திரிகைகளிற் காணப்படுகின்றனவோ அவைகளைக் கவனித்தல்.

9. பகுதிக்குறுக்கமாவது:—ஒரு மாணவன் ஒருபகுதியைச் செவ்வனேசெய்து தகுதியுடையவனாகி மற்றொருபகுதியிலும் திறமையுடையவனுவானெனின் அதற்காகவேற்பட்ட காலத்தையும் குறுக்கிக்காட்டுதல்.

இவைகளுக்கெல்லாம் முதன்மையாகநிற்பது சிறுவர்சிறுமிகளின் மனப்பாங்கையறிதல். அதனை ஆசிரியர்கள் நன்கு அறிவார்களாயின் இவ்வேலை இனிது நடைபெறும்.

இவ்விதமாக இப்புத்தகம் எழுதப்பட்டு முன்னர்க்கூறியபடி அமெரிக்காதேசத்தில் அநேக இடங்களிலும் இங்கிலாந்திற் சிலஇடங்களிலும் கையாளப்பட்டுவருகின்றது. இதுதான் டால்டன்முறையிலுள்ள முக்கியாம்சம்.

இனி இதாலிதேசத்து மான்டிஸோரிமுறையைப்பற்றி மற்றொருமுறை எழுதுவேன்.

சோமசுந்தரதேசிகர்.

உடம்படுமெய்.

"இ ஈ ஐவழி யவ்வு மேனை
யுயிர்வழி வவ்வு மேமுனில் விருமையும்
உயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும்"

என்பது நன்னூற்சூத்திரம். இச்சூத்திரத்தால், இ ஈ ஐ என்னு மூன் றெழுத்துக்களையு மீறாகவுடைய மொழிகள் யகரத்தையும், அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னு மேலெழுத்துக்களையும் ஈறாகவுடையமொழிகள் வகரத்தையும், ஏகாரத்தை யீறாகவுடைய மொழிகள் யகரமும் வகரமு மாகிய இரண்டனையும் உடம்படுமெய்யாகப் பெறுமென்பதாயிற்று. எகரம் மெய்யோடீறாகாமையின் இங்கே ஒழிக்கப்பட்டது. அங்ஙனமாதற்குக் காரண மென்னையென இங்கே ஆராயுங்காற் பெரும்பாலும் முயற்சிப் பிறப்பொற்றுமையே அதன் காரணமாகின்றது. எங்ஙனமெனின், இ, ஈ, ஐ என்னுமூன்றும் அண்ணவியையுற்றுப் பிறப்பன. அது, "இ, ஈ, எ, ஏ, ஐ என விசைக்கு—மப்பா லைந்து மவற்றோ ரன்ன—வவைதா—மண்பன் முதனா விளிம்புற வுடைய" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத் தானும், "இ, ஈ, எ, ஏ, ஐ அங் காப்போ—டண்பன் முதனா விளிம்புற வருமே" என்னும் நன்னூற்சூத்திரத்தானும் பெறப்படும். அங்ஙனமே யகரமும், அண்ணத்தையுற்றுப் பிறப்பது. அது, "அண்ணஞ் சேர்ந்த மிடற்றெழு வளியிசை—கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்தானும், "அடிநா வடியண முறயத் தோன்றும்" என்னு நன்னூற்சூத்திரத்தா னறியப்படும். அதனால், அண்ணவியை புற்றுப்பிறப்பனவாகிய இ ஈ ஐ என்னு மூன்றெழுத்துக்களும், அவ் வியைபுற்றுப்பிறப்பதாகிய யகரத்தை உடம்படுமெய்யாகப் பெறுவன வாயின. உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஐந்துஎழுத்துக்களும், இதழியை புற்றுப்பிறப்பன. அது, "உ, ஊ, ஒ, ஓ, ஔ என இசைக்கு—மப்பா லைந்து மிதழ்குவிந் தியலும்" என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தானும், "உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழ் குவிவே" என்னும் நன்னூற்சூத்திரத்தானும் பெறப்படும். அங்ஙனமே வகரமும் இதழியைபுற்றுப் பிறப்பது. அது, "பல்லித ழியைய வகாரம் பிறக்கும்" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்

தானும், "மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே" என்னும் நன்னூற் சூத்திரத்தானும் பெறப்படும். அதனால், இதழியைபுற்றுப்பிறப்பன வாகிய உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னு மைந்தெழுத்தும், அவ்வியைபுற்றுப் பிறப்பதாகிய வகரம் பெறுவனவாயின.

அங்ஙனமாயின் அண்ணவியைபுற்றுப்பிறப்பதாகிய ஏகாரம், யகரமும் வகரமுமாகிய இரண்டையும் பெறுவதென்னையெனிற், கூறுதும். ஏகாரம் அண்ணவியைபுற்றுப்பிறப்ப உச்சரிப்பின் யகரமும், அதனோடு இதழியைபுமுற உச்சரிப்பின் வகரமும் பெறும். ஆதலால் அவ்வுச்சாரணமுறையே காரணமாம். அதனை, 'அவனே யழகன்' 'சேயடி' என வருமுதாரணங்களையும், 'ஏவெலாம்,' 'சேவடி' என வருமுதாரணங்களையும் உச்சரித்துணர்ந்துகொள்க. இவ்வியைபுபற்றிவருத லாற்றான் இதனை இயல்புப்புணர்ச்சி என்றுங் கூறுவாருளராயினர் போலும். இவ்வியைபின்றி, இகரமும், எகரமும், அகர உகரங்களோடொத்து வகரம்பெறாத வினாற்போலும், எகாவினா முச்சுட்டின்முன் வரும் வகரத்தைத் தோன்றல்வகரம் என்றனர். அன்றி, உடம்படுமெய் நிலைமொழிநோக்கியதெனவும் தோன்றல்வகரம் வருமொழிநோக்கியதெனவும் கொள்ளினு மமையும்.

இனி, அகர ஆகாரத்தை உகரமுதலியவற்றோடுசேர்த்து வகரம்பெறு மென்றதென்னையெனின், அவற்றையுச்சரிக்குமிடத்தும் சிறிது இதழின் முயற்சிகூடுதலின் என்க. அங்ஙன மாசிரியர் கூறிற்றிலரேயெனின், அது, "எடுத்தல் படுத்த னலித லுழப்பிற்—றிரிபுந் தத்தமிற் சிறிதுள வாகும்" என்பதனாற் கூறினாரென்பது. அகர ஆகாரம் இதழும் சிறிதியைந்து பிறத்தலை, அவ்விடை எனவும், ஆவிடை எனவும் வருமுதாரணங்களை உச்சரித் துணர்ந்துகொள்க.

இனி வடமொழியினு மிவ்வாறே, இவ்வியையுபற்றி இ, ஈ யகரத்தையும், ஏ, அய் என்பதையும், ஐ, ஆய் என்பதையும், உ, ஊ, வகரத்தையும், ஓ, அவ் என்பதையும், ஔ, ஆவ் என்பதையும் ஆதேசமாகப் பெறுகின்றன. உதாரணம் முறையே, த்ரி + அம்பக:- த்ர்யம்பக: எனவும், நதீ + அத்ர - நத்யத்ர எனவும், நே + அதி - நயதி எனவும், கை + அதி - காயதி எனவும், ஶௌ + அய: ஶாவய:

எனவும், வயு + ஆஹா—வய்வாஹா எனவும், ஹொ + ஈதி—ஹவதி எனவும், தௌ + ஊஹ—தாவூஹ எனவும் வரும். இதனை, "இகோயணசி" எனவும், ஏசோऽயவாயாவ: எனவும்வரும் வியாகரண சூத்திரங்களா னறிக.

இனி உயிரீறு இவ்வுடம்படுமெய்பெறாமலும் வழங்கியதாக, உரையாசிரியர் "எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே—உடம்படு மெய்யி னுருபுகொளல் வரையார்" என்னுஞ் சூத்திரவுரையில், வரையார் என்றமையான் உடம்படுமெய்கோடல் ஒருதலையன்று. என்றுகூறி, கிளி அரிது, மூங்கா இல்லை எனக் கூறினமையால் முற்காலத்திலே உடம்படு மெய்பெறாமலே வழங்கியிருத்தல்வேண்டும் என்பது ஊகிக்கத்தக்கது. இங்ஙனமே விட்டிசைத்துவருஞ் சுட்டுக்களும் எகரவினாவும் வகரம் பெறாதுவருகின்றன. அது, "அஅவனும் இஇவனும் உஉவனும் கூடியக்கால்—எஎவனை வெல்லா ரிகல்." என்பதனு லுணரப்படும். இங்ஙனம் செய்யுளில் வருதலால் இவ் வசையை நேரசையாகக் கொள்வர். இவ்வெழுத்துக்கள் வகரம் பெற்றாலும் நேரசையேயாதலால், இவ்வகரத்தைத் தோன்றல்வகாரமென்றுரைனினு மமையும். இங்ஙனமே வடமொழிக்கண்ணும், க க்ஷம்த, இ ஸம்ஹ்வர, உ உமேஸ எனச் சந்தி பெறாமல் வருதல் காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்.

அரிசில்கிழார்.

அரிசில் என்பது சோழநாட்டுள்ள அம்பர்நகரைச்சூழ்ந்த ஓர் யாற்றின்பெயர்.

"உயர் கொடி அம்பர் சூழ்ந்த
அரிசிலந் தெள்ளற லன்ன"

என்பது நற்றிணை 141-ம் பாட்டிற்கண்டது. அப் பிரதேயத்தைச் சார்ந்தவர் அரிசில்கிழார்.

கிழார் — வேளாளர். "ஊரும் பெயரும்" [தொல்-மரபி-72] என்றதன் உரைநோக்கி யறிக.

இவர் கடைச்சங்கக் கன்மாப்பலகையேறி வீற்றிருந்த புலவர்களுள் ஒருவர். இவர் பாடிய பாக்களுள், குறுந்தொகை 193-ம்பாட்டு ஒன்றொழிய வனையயாவும் புறத்திணையைச் சேர்ந்தவைகளே.

இவர் கடையெழுவள்ளல்களுள் ஒருவனான வேள்பேகன் காலத்தவர். அவ்வேள் பொதுமகள்வயத்தனாகித் தனக்குரிய மனைவியைத் துறந்து உலகநெறிவிலங்கியபொழுது இப் புலவர் அவ்வேளின் இல்லறத்துணைவி கண்ணகியை அவனிடம் பெயர்த்துச்சேர்த்துமாறு அவனைவேண்டிப் பாடினர். [புறம் - 146].

பேய்க்காஞ்சித்துறைக்கு இலக்கியமாக இவர் பாடிய புறப்பாட்டு [281] ஒன்றே இக்காலம் கிடைத்துள்ளது.

தகடூரை எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, அதிகமான்நெடுமானஞ்சியின்மீது வெகுண்டு அவனது தகடூரின்மீது படையெடுத்துச் சென்றவழி, அச் சேரவரையனுடன்சென்ற புலவர்களுள் இவரும் ஒருவர். இவருடன்சென்ற மற்றொருபுலவர் பொன்முடியார் என்பவர்.

தகடூர் கொல்லிக்கூற்றத்தில் உள்ளது.—பெரியமதிலரண்களையுடையது.[1] மிக்க வீரமுடைய வெல்போராடவர் பலராற் காக்கப்படும் சிறப்புடையது.[2]

---

1. பதிற்று - எட்டாம் - பதிகம்.
2. ஷை ஷை 8. (9-10- அடிகள்).

அங்கிலையில் அச் சேரலிரும்பொறை உழிஞைமலர்சூடி மதிலை முற்றுகையிட்டான். அதிகமான் தன் துணைப்படைவருமளவும் சேரனுடன் எதிர்த்துப் போர்புரியாது வாய்மதிலைமூடித் தகடூரகத்தே தங்கியிருந்தான்.[3] அக்காலை இப்புலவர் சேரமான்வளனும் ஆண்மையும் புலப்படத் தானே அதிகமானிடம் சென்று தெரிவித்தனர்.[4] அவனோ தன் அரணின் பெருமையையும் படைவலியையும், தன் துணையாகவரும் இருபெருவேந்தர் ஆற்றலையும் மேம்படமதித்து இப்புலவர்வாக்கைப் பொருட்படுத்தாது அரணகத்தே வீற்றிருந்தான்.[5]

பிற்றைத்திங்கள் முடியுடைவேந்தர் இருவர் (சோழபாண்டியர்) [6], அதிகமானுக்குத் துணையாகிவர இருகட்சியினர்க்கும் பெரும்போர் தொடங்கிற்று.

நொச்சிமலர் அணிந்து அதிகமான்படைவீரர் எயில்காத்தனர். அதனையறிந்து[7] மேல்எழுந்த சேரமான்படையினர் எயிலைவளைத்துத் தாக்கி அரும்போர்விளைத்தனர். அக்காலை அதிகமான் படைத்தலைவருள் ஒருவன் என்றெண்ணப்படும் நெடுங்கோளன் அமரில்மடிய[8] அவன்படை சிதறிப் பிளவுபட்டுப் போர்வீரரும் களிறும் மிக்குமடிய, அதிகமான் வெகுண்டு பெரும்பாக்கன் என்னும் சிறந்தவீரனை முனைப்படைத்தலைவனாக்கிப் பல சிறப்புகள் அளித்துப் போர்முகத்துவிடுத்தான்.[9]

அவன் சேரன்படையினை ஒருபொருளாகக்கருதாது மேல் எதிர்ந்து போர்புரிந்தவழிச் சேரன்படை தன்நிலைதளர்ந்து நிலையாற்றாது பெயர, சேரலிரும்பொறை தானேமுனைப்படைசென்று தன்படைவீரரை யூக்கிப் போர்முனைந்துநின்றான்.[10]

---

3. தொல் - புறத்தி - 7. நச். உரைத்தேற்றம்.

4. பதிற்று - எட்டாம் - 3.

5. தொல் - புறத்தி - 12 - "அகத்தோன்செல்வம்"—என்ற பகுதி மேற்கோள்—"பொருசினமாறு" என்றபாட்டு - நச் - உரை.

6. பதிற்றுப்பத்து - 8-ம் பத்து - பதிகம்.

7. ஷை ஷை - 7 - கருத்துரை.

8. தொல் - புறத்தி - 24 - "மாய்பெருஞ்சிறப்பு"- என்ற பகுதி - நச். உரை. மேற்கோள் & கட்டுரை.

9. ஷை ஷை 8- "பொருளின்றுய்த்த பேராண்பக்கம்"—என்றபகுதி- நச் - கட்டுரை.

10. ஷை ஷை ஷை ஷை ஷை.

அக்காலே இப்புலவர் சோனேக்கண்டு "மெய்ம்மலிமனத்தின்"-என்ற செய்யுளேக் †கூறினர்.[11] ஆண்டுச் சோமான் எயிற்புறத்தே தன்படைபட்டார் தன்மை எத்தன்மையது என இப்புலவரிடமும் (பொன்முடியாரிடமும்) வினவினன். அதன் மறுமொழியாக இப்புலவரும் (பொன்முடியாரும்) படைஇயல்கூறி,

"நாளேநாமே
உயிர்பிசை கொண்ட மயிர்க்கட்
டருமுர சிரங்க வூர்கொள் குவமே".[12]

[வூர் - தகடூர்]

எனக் கண்டது செப்பினர்.

அவ்வாறே அதிகமான்படைவீரர் சோனெடுபொருது குலேவுற்றனர். சோலின்படை விஞ்சிப் புறஎயிலே அழித்து அகமதிலேக் கைப்பற்றின. அதிகமானும் புண்பட்டுநின்றான்.[13]

இறுதியில் பகைவர்வீசியவேல் மார்பிற்றைத்து ஊடுருவிப்போதலினல் அதிகமான்,[14] களத்திடை உயிர்துறந்தான். அவன் மார்பிற்றைத்தவேல் உருவிப்போந்தமையால் அவன் மெய்யை அவனது மனேவியரும் இனக்கண்டறிவது அரிதாயிருந்தது.[15]

அக்கால் இப்புலவரே மனம் இளகி அவன் காலகதியினையெண்ணி உருகிப்பாடினர்.[16].

---

11. தொல் - புறத்தி - 8 - "வருவிசைப்புனல்"—என்றபகுதி - நச்-உரை மேற்கோள் & தகடூர்யாத்திரை.

† இப்புலவருடன் இணைந்து தகடூர்போந்த பொன்முடியார் என்னும்புலவர் அந்நிலேயில் அச் சோலேக்கண்டு "கார்த்தரும்புல்லணல்". [ஷை ஷை ஷை ஷை] என்ற செய்யுளால் புனைந்துரைத்தார்.

12. தொல் - புறத்தி - 12 - "முரணிய புறத்தோன் அணங்கிய பக்கம்" என்றபகுதி - மேற்கோள் - கட்டுரை. & தகடூர்யாத்திரை—"கலேயெனப் பாய்ந்த"—என்ற செய்யுளடிகள்.

13. புறம் - 93. கருத்துரை.

14. புறம் - 235. 15. தொல் - புறத்தி - 24 - "நீத்தகணவற் றீர்ந்த"—என்றபகுதி - நச் - உரைமேற்கோள் & தகடூர் யாத்திரை.

16. புறம் - 230.

அதிகனுக்குத் துணைவலியாகிவந்த சோழபாண்டியர் தத்தமது குடையும் முரசும் கலனும் போர்க்களத்தேபோகட்டுவிட்டுப் புறமிட்டு ஓடினர்[17].

இறுதியில் சேரல் தகடூரையும்[18] கொல்லிமலைசூழ்ந்த நாடுகளையும் கைப்பற்றி மீண்டான்[19].

பின்னர், காமூர் - (அகம் - 365) என்ற ஊருடையானும், இடையர் தலைவனும் இச்சேரனுக்கு குறும்பு மிகச்செய்திருந்தோனுமாய கழுவுள் என்பானைத் தலைமடங்கச்செய்து[20] வைகுறைப்பொழுதில் சென்று, அவன் எயிலைக்கைப்பற்றிய இச்சேரல்[21] அடுத்துத் திறையிறுக்காத குறும்பர்நாடுசென்று அவரையும் ஒடுக்கினன்.[22]

அறத்துறையாக இச்சேரல், தன்கோயிற்புரோகிதன், இல்லறத்திலேயே நரைமூதாளனாகியவளவும் நிலைத்திருப்பதைக்கண்டிரங்கி அவற்கு அறிவுகொளுத்தித் துறவறநெறி ஒழுகுமாறு தெருட்டி நன்னெறி உய்த்தான்.[23]

இவையெல்லாம் விளங்க இப்புலவர் இச் சேரன்மீது (பதிற்றுப் பத்து எட்டாம்பத்தினால்) பத்துப்பாக்கள் பாடினர். அதுகேட்ட இரும்பொறை பெருமகிழ்வுற்றுத் தானும் தன் கோயிலாளும் (பட்டமஹிஷியும்) அரண்மனையின் புறம்போந்து நின்று "கோயிலுள்ளவெல்லாம் கொண்மின் என்று காணம் ஒன்பது நூறாயிரமும் கொடுத்தான்.[24]

இஃதொன்றோ தன் அரசுகட்டிலும் (சிம்ஹாசனம்) கொடுப்ப இப் புலவர் அதனை ஏற்காது "யான் இரப்ப இதனை (நீயே) ஆள்க"[25] என்று (அவனிடமே) அமைச்சுப்பூண்டார். அச் சேரல் அரசுவீற்றிருந்த பதினேழியாண்டும் அவனிடமே அமர்ந்திருந்தனர் என்ப.

---

17. பதிற்று - 8-ம்பத்துப்பதிகம்.
18 - 19. ஷை ஷை ஷை
20. பதிற்று - எட்டாம்பத்து - பதிகம்.
21. ஷை ஷை 1-ம்பாட்டு. (16-18 அடிகள் - உரை)
22. ஷை ஷை ஷை
23. ஷை ஷை 4 (24—28 அடிகள் & உரை)
24. பதிற்றுப்-எட்டாம்-பதிகம்.
25. ஷை ஷை ஷை.

அயிரைமலையும் (பதிற்-79) கொல்லிக்கூற்றமும் இவர்வாக்கில் வந்துள்ளன. சிறுகுடிகிழான்பண்ணனைப் பாராட்டிப் பாடியுள்ளாருள் இவரும் ஒருவர். [புறம் - 304].

இறுதியில் மதுரைக் கடைச்சங்க நிலைகுலைவுகாலத்தில் சங்கக் கன்மாப்பலகையேறி வீற்றிருந்தவருள் இவரும் ஒருவராயிருந்தனர். பொன்முடியார் என்ற புலவரும் உடன் இருந்தனர்.[26]

அக்காலத்துச் சங்கம் குலைக்கவந்த இடைக்காடனுர் என்ற புலவர் இவர்பக்கல்வந்து நிற்ப, இவர் அவரைநோக்கி "நில்லாதேயும்—உட்காரும்-கட்டவிழ்க்காதேயும்" என்றார்.[27]

அதற்கு இடைக்காடர் இவர்குலத்தினைச்சுட்டிக் காலையினை உழவர் செய்யில் ஒட்டுமாற்றினைக் (லக்-லக்) குறிப்புமொழியால் ஓலைமுறியில் ஒலியெழுத்தாளர் குறித்தெடுப்பியவாறு பாடினர். அவ்வளவை ஓரா றெடுப்பில் இவர் இருந்த இருக்கை (பலகை) சுருங்கி இடக்குறுக்கஞ் செய்தது.[28] இவர் கீழ்இழிந்தார்.

இவர் பாடியனவாகக் குறுந்தொகையுள் ஒன்றும் பதிற்றுப்பத்துள் (எட்டாம்பத்து) பத்தும், திருவள்ளுவமாலையில் ஒன்றும் புறநானூற்றுள் ஏழும் மேற்காட்டிய இரண்டும் ஊசிமுறியுள் ஒன்றும் ஆக இருபத்திரண்டு பாக்கள் அகப்பட்டுள்ளன.

பெயர்விழையான்,
தச்சநல்லூர்.

---

26. ஊசிமுறி. ஓராறெடுப்பு—மிக. கட்டுரை.
27. ஷை ஷை ஷை ஷை ஷை
28. ஷை ஷை மிக.

அருவியன் காதை.

[குறிப்பு:—'அருவியன்' என்பவன் 'திருசய' நாட்டிலிருந்த ஓர் இசைப் புலவன்; கல்லும் கனிந்துருகும்படியாகப் பாடுந்திறமை வாய்ந்தவன். இவனது அன்பிற்கினிய மனைவி 'உருதேசி' யென்பவள். இருவரும் ஒருநாள் தம் நகர்க்கருகிலுள்ளதொரு வனத்திற்குச்சென்று காட்சி வளங்கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தனர். அப்பொழுது பாதலத்து அரசனாகிய 'புலுதன்' செய்த கொடிய சூழ்ச்சி யொன்றினால் உருதேசி திடீரென மரணமெய்தினள். இங்ஙனம் நேர்ந்த பிரிவினால் பெருந்துய ருழந்த அருவியன் தனது அருமைநாயகியை மீட்டுவர எண்ணிப் பாதலஞ் சென்றான். அங்கே இவனது ஒப்புயர்வற்ற மதுரகீதத்தால் புலுதன் உருகி யிரக்கங்கொண்டு 'நினது உருதேசிக்கு உயிரளித்தேன். அவள் நின்னைப் பின் தொடர்ந்துவரக்கடவள். ஆனால் இப்பாதலம் நீங்கிப் பூமியில் அவள் அடியெடுத்துவைத்தபின்தான் நீ அவளைப்பார்த் தல்வேண்டும். அதற்குமுன் திரும்பிப்பார்ப்பாயாயின் நீ அவளை இழந்து விடுவது திண்ணம்' என்று கூறிவிடுத்தான். இவ் ஆக்ஞையின்படியே பாத லத்தைவிட்டு அருவியன் முன்னும் உருதேசி பின்னுமாக வந்துகொண் டிருக்கும்பொழுது, பாதல இருளைவிட்டு உலகவெளிச்சத்தில் தான் வந் ததும் அருவியன் அடக்கொணு ஆர்வப்பெருக்கால் புலுதன் ஆக்ஞை யை முற்றும் மறந்தவனாகித் தன்னுயிருக்கிருப்பிடமாகிய உருதேசி யைத் திரும்பிப் பார்த்துவிட்டான். அச்சமயம் உருதேசி பாதலஇருளை முற்றும்விட்டு வெளிச்சத்தில் புகாதிருந்தமையால், புலுதனால் திரும்ப வும் வெளவிக்கொள்ளப்பட்டாள்.]

இதுவே இந்தக் கிரேக்கர்கதையின் சுருக்கம். காலதேசத்திற் கேற்ற சிற்சில வேறுபாடுகளும் தமிழ்க்காவிய வழக்கிற்கேற்பக் கொள் ளப்பட்டிருக்கின்றன; கீழ்வருஞ்செய்யுட்கள் இக்கதையின் முதற்பகுதி யைச் சேர்ந்தனவாகும். அவை யிற்றைக்கு 30 வருஷங்கட்குமுன் இயற்றப்பட்டனவாயினும் இதுகாறும் வெளிவரவில்லை.

(காப்பு).

சரஸ்வதி துதி.

அறிவான தரு ஓங்கும் அறிவான கொம்பே!
அறிவான மலர் வீசும் அறிவான மணமே!
அறிவான காய் தந்த அறிவான கனியே!
அறிவாய் என் உளம் மேவி அருள்வாய் நற்கனியே!

நூல்.

துங்கம் மன்னு கிரேக்கரின் தொல்புகழ்
எங்கள் தீந்தமிழ் நாடறிந் தின்புறப்
பொங்கும் இன்னிசை யாழ்வலன் பொற்கதை
இங்கு முன்னர் இயம்பிடப் போந்ததால். (1)

வேறு.

சிந்து வெண் திரை எனும் சேக்கை மேவலால்,
செந்திரு விளங்கலால் திசைகள் யாண்டினும்
பைந்தழை தருதலால், பச்சை மால் என
வந்தது திருசய* வான நாடரோ. (2)

இலையிலாக் குன்றமும், இலை யடர்தரு
தலை உலாம் சைலமும், சருவி மானொடு
கலை உலாம் சாரலும், கான யாறு பாய்
அலை உலாம் பொய்கையும் அழகு தந்தவே. (3)

அருவியின் குரவையே ஆன்ற குன்றெலாம்,
குருவியின் அரவமே, குழையும் கொம்பெலாம்,
திருவனார் செவ்விரல் தெறிக்கும் யாழிசை
பொருவரும் மறுகெலாம் பொலியும் என்பவே. (4)

போகம் தேர் மாந்தரும் உழல் மனத்தராய்
மோக வாய்ப்படினும் தாம் முனிவு கொள்ளலர்,
நாக லோகமும் அல நண்ணலாததாம்
போக பூமியை இது புரையும் ஆதலால். (5)

மேய சீர் நாட்டொரு விளக்கம் அன்னது,
தூயவர் ஏன்றது, தொன்மை சான்றது,
தீய நல்குரவின்றுத் தெரிகிலாதது,
ஆய ஊர் விருதை; நல்லளகை ஏய்க்குமே. (6)

அருவியன் † என்றொரு நாமம் தாங்குவான்
ஒருவன் அவ்வூரினில் உதித்திலங்கினன்;
பொருவிலா யாழில் ஐம்பூதம் பேதுறப்
பெரும்இசை தந்திடும் பெற்றியானரோ. (7)

---

*Thrace. † Orpheus.

பண் தரும் யாழினைப் பரிதி வானவன்
எண் தர இயற்றி, அவ்வந்தல் மீதருள்
கொண்டளித்தாசியும் கூறிப்போயினன்
மண்டலம் தனில் இசை மாந்தர் மாந்தவே. (8)

அந்த யாழிடை அவன் அமுததாரையே
தந்திட, மைந்தரும் தையலார்களும்
சிந்தையும் செயலும் போய்த் திளைத்தல் மேயினர்
எந்த இன்பமும் ஒவ்வா இன்பவெள்ளமே. (9)

கலை படர் மானினம் கலை மறக்குமே,
வலை படர் புள்ளினம் வருத்தம் ஆறுமே,
அலை படர் வாவியுள் ஆய்கயலும் ஓர்
நிலை படர்கின்ற தண் இசை நிகழ்ச்சியால். (10)

உள்ளமும் உயிரும் ஊர்காலும் ஓதநீர்
வெள்ளமும் ஓடுதல் விடுத்த கீதத்தால்,
கள்ளமும் வஞ்சமும் கழன்றனர் சிலர்,
அள்ளுவர் நீங்கிப் பாலான ஆழிபோல். (11)

வேறு.

இசை தழைத்த இசைவலன் ஈறிலா
வசையில் கேள்வியன் வாய்ந்தனன் என்பவே,
கசியும் ஆகம் கலந்திடும் காதலாம்
வசியம் மீறி மயக்கும் பருவமே. (12)

தேட்டம் செய்து திகைப்புறக் காசைத்தேன்
ஊட்டும் வாள்நகை ஒண்டொடிமாரெலாம்
நாட்டம் செய் ஒரு நாயகம் உண்டு,வான்
மாட்டம் தாரகை வாட்டும் மதியமே. (13)

வேறு.

பால் ஒக்கும் என்னில் அன்னாள் பண்மொழிக் கிழுக்கே, பாயும்
சேல் ஒக்கும் கண்கள் என்னில் செயல்ஒத்தல் இல்லை, நொய்ய
ஆல் ஒக்கும் வயிறோ அல்ல, அழகொக்கத் தவழுங் கோயில்,
நூல் ஒக்கும் என்னில் அந்தோ நோய் ஒக்கும் இடையின் நுண்மை()

கார் எனச்சொல்லலாமோ? கங்குலின் இருள்பட காட்சிச்
சீர் என மொழியலாமோ? மற்றெவை செப்பலாமோ?
தார் எனச்சாற்றின் மென்மை தாங்குமோ? தவத்தின் ஆய
ஏர் எனப் பொலிந்து தோன்றும் ஏந்திழை கூந்தற்பாரம். (15)

வில் எனில் வளைவு தீரும், வெண்பிறைக்கிழுக்கும் உண்டு,
சொல் எனில் நுதற்குக்கூறத் துணைப்பொருள் கண்டேன் அல்லேன்,
கல் எனும் மனமே ஒல்லைக் கசிவுறில், கவின் ஆர் மை தோய்
அல் என்கோ, வண்டில் செய்த அணி என்கோ, புருவச்சீரே? (16)

எட்குலாம் மலரை வாட்டி, எழில் குலாம் சண்பகத்தின்
கட்கொளாப் போகில் ஏசிக், காவி ஊடொதுங்கும் நாசி;
உட்குலாம் உயிரோ ஏனை உயிர்க் குலாம் உயிராம், கிள்ளைப்
புட்குலாம் மொழியும் தேனும் புரிப்பெனும் உரையினுட்கே. (17)

முத்தென்றும், ஒளிகால்முல்லை மூகைஎன்றும், முருந்தம் என்றும்
எத்துணை எழில் என்றெய்யா இன்னகைக் கெதிர் என்றெண்ணிப்,
பித்தர் பேசுவரே அல்லால் பேசிடார் கவிஞர்; மேலாம்
சித்திர இதழ்க்குச் செய்ய பவழமும் கனியும் சோா. (18)

பங்கம் மேற்பாயும் பூவே பங்கம் மேற்பாயாநிற்கும்
சங்குறை கழுத்தினுளின் தாள் மலர் சுமக்கல் ஆற்று
கொங்கு தேன் பிலிற்று கோதை குழற் பெரும் பாரத்தாலே
செங்குமுதத்தின் வாய்ப்பச் சிவந்துடல் நைந்த அம்மா! (19)

(வேறு)

ஈங்குரைத்த எழில் எழில் மும்மடி
தேங்கு தேசி* எனும் திருவை மணப்
பாங்கிற் பற்றினன் யாழ்வலன், பண்ணொடு
ஓங்கு பா சென்றுறழ்ந்தது ஒப்பவே. (20)

* 'உருதேசி' (Eurydice) 'தேசி' யெனச் சுருங்கிற்று.

பூவிலும் மென்மை பூண்டொளிர் பூங்கொடி
நாவுளோர் நறவாம் உரை நாடியே
ஆவல் கூர் அளியென்ன அருவியன்
மேவுவான் கலத்தின்னிசை மீட்டியே. (21)

மழமதர்க்கண் அம்மானினி தன்பதி
பழமை துய்க்கப்பயர்தனளோ ? அல ;
நழுவு நாள் வளர் நாளென வாரல் போல்
தழுவும் இன்பம் தனிச்சுவை மாறுமே. (22)

தீங்கென்றுள்ளவை ஏதும் சிவணிடா
தோங்கும் இன்பமே உற்றனர் ; ஆதலால்
ஈங்கிரண்டறம் தம்மில் இயற்கையால்
தாங்கும் இல்லறமே தலை என்னில் என் ? (23)

நற்றுறவறம் நன்மை அளிப்பது
மற்றுளார்க்கோ ? தன்மட்டோ ? தன்மட்டுமாம் ;
பற்றும் இல்லறம் பாலிக்கும் இன்பமோ
சுற்றுளார்க்கும் பின்தோன்று மவர்க்குமே. (24)

ஓயும் சீர் இடையாள் உருதேசி தன்
நாயகன் ஒருநாள் பிரிந்தேகினும்
காயும் வெம்பக் கலுழும் நீர்க்கண்ணளாய்ப்
பாயும் துன்பப் பகழியின் நைவளே. (25)

தனிமை சேர்பவர் தாரணியில் பலர்
இனிமை சேர்பவர் என்ன இயம்பினர் ;
நனி மகிழ்வுற நன்மணம் பூண் குடும்
பினி மணாளன் பால் பேசி அறிமினே. (26)

புல்லும் அச்சம் புனைதரும் அன்பிவை
இல்லையாயின் இனியதென் றுன்னலாம் ;
சொல் இரு குணம் தோய்பவர்க்குத் தனி
கொல்லும் தீ விடம் தன்னில் கொடுமையே. (27)

அருவியன் அமுதான உருதேசி
இருவுடற்கும் உயிர் ஒன்ருய் ஒன்றினர்;
"ஒரு வினை எனினும் அவர் ஒற்றுமை
இரு வினை" அஃதாக்கிடல் சீர்த்தியே. (28)

காலை தோறும் கடிமலர் கொய்குவார்,
சோலை வாயி லருவி நீராடுவார்,
மாலை தோறும் மகிழ்தருந் துலாவுவார்,
பாலைப் பண்ணைப் பழிக்கவும் பாடுவார். (29)

பாடல் சான்றனர், பைந்தழை மாமலர்
சூடல் சான்றனர் (தொல்லையினோர் புகழ்
ஊடல் என்னும் பெருந்தை கலக்குறுக்
கூடல் என்னும் கடல் குளித்தாரரோ. (30)

வேறு.

இங்கிவர் இன்பம் இவ்வாறெய்திட, இரவெண்நாளும்
தங்கிருட் கிடங்கின்சீரும், தலைவனும் புலுதன்*சீரும்,
மங்குல் ஒர் மங்கும் பாசபன்னி†யா மாதின் சீரும்,
அங்குறை ஏவலாளர் சீருமே அறைதல்செய்வாம். (31)

(தொடரும்).

K. N. சிவராஜபிள்ளை B.A.,

---

* Pluto. †Proserpine.

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரி.

(Sanskrit Prosody)

(குறிப்பு) இவ்விஷயமாய், இதற்குமுன் ப்ரசுரமான இரண்டுவ்யாஸங்களிலும், விட்டுப்போனவைசில இங்கு அநுபந்தமாய் ப்ரசுரிக்கப்படுகின்றன.

வர்க்கம்.	பெயர்.	மாத்ரா	கணம்	விவரம்.
1.	உக்தா			
	ஸ்ரீ	2		ஒ
2.	அயுக்தா			
	ஸ்த்ரீ	4		ஒஒ
3.	மத்யா			
	1. நதி	4	ஸ	நநஒ
	2. ம்ருகீ	5	ர	ஒநஒ
	3. கேஸா	5	ய	நஒஒ
	4. நாரீ	6	ம	ஒஒஒ
4.	ப்ரதிஷ்டா			
	1. ஸுமுகீ	6	பக	ஒ நந ஒ
	2. ஸுமதி	6	ஸக	நந ஒ ஒ
	3. லாலினீ	6	ஜக	நஒ நஒ
	4. வ்ரீடா	7	யக	நஒ ஒஒ
	5. ஸ்ம்ருத்தி	7	ரக	ஒந ஒஒ
	6. கன்யா	8	மக	ஒ ஒ ஒ ஒ =(½வித்யுன்மாலா)
5.	ஸுப்ரதிஷ்டா			
	1. பங்க்தி	8	பகக	ஒ நந ஒ ஒ
	2. மந்தா	8	தலக	ஒ ஒ நந ஒ
	3. ஸதீ	8	ஜகக	ந ஒந ஒ ஒ
	4. ப்ரீதி	9	ரகக	ஒநஒ ஒ ஒ

6. காயத்ரீ

5. ரமணீ 8 (ஸ-ஸ) நநஞ நநஞ
=½ தோடகம்

மலையே, மரனே, மயிலே, குயிலே
கலையே, பிணையே, களிறே, பிடியே

6. வஸுமதி 9 (தஸ) ஞ ஞ ந ந ந ஞ

7. முதலம் 10 (மஸ) ஞ ஞ ஞ ந ந ஞ
=[பொன்னார் மேனியனே]

8. மாலினி 11 (ரம) ஞ ந ஞ ஞ ஞ ஞ

9. ரதி 11 மர ஞஞஞ ஞநஞ

7. உஷ்ணிக்

4. ஹம்ஸமாலா 11 (ஸரக) நநஞ, ஞந ஞ ஞ

8. அநுஷ்டுப்

7. சித்ரபதாகா. 12 (பபகக) ஞநந, ஞநந, ஞஞ
செவ்விகுளநகர்—வாசன் [மந்திரமாவதுநீறு]
தேறுமண்ணுமலை—தாசன்
வண்ணமயில்முரு—கேசன்
வள்ளிபதம்பணி—நேசன்

8. நாகரகம் 12 (பரலக) ஞநநஞ, நஞ, நஞ
=(ஸுமுகீ + லாவிணீ)

9. ஹம்ஸருதம் 13 (மநகக) ஞஞஞ, நநந, ஞஞ

10. நாராசிகா 13 (தரலக) ஞஞ, நஞ, நஞ நஞ

11. விதாநம் {11 (ரஸலல) நஞ, நஞஞ, நஞஞ
{13. ஜதகக ஞந ஞநந ஞநந

[தொடரும்]

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A.,B.L.,
மதுரை.

வேறு.

சுந்தரவாரிதிதிருவுக்கிறைதிருச்சேர்மணிமார்பன்சுந்தரேசன்
சுந்தரஞ்சூழ்வனசயிலமுடையான்சுந்தரத்தோளன்கருதுந்தொண்டர்
தந்துயரந்தீர்க்கவல்லான்சவுமியநாயகன்பரமசாமிபூமி
வந்தமலையலங்காரன்மலைக்கரசுதெய்வசிகாமணிநாமத்தோன். (20)

நம்மைவழிபடுமலயத்துவசனெனுந்தனிவேந்தோவிநீர்வையைச்
செம்மைநதித்தென்கரையிற்சிறந்ததொருவியன்றலத்திற்றேவர்நாட்டுக்
கம்மியனாற்செய்தமைத்தகதிர்மணிவிமானமதன்கண்ணேநண்ணி
மும்மையுலகமும்போற்றவுறைந்தனமாலாங்கனமுமுன்னியேகி. (21)

இனிமையுறுமுபசாரத்தேற்றமாய்நமையருச்சித்தென்றும்வேத
முனிவரருமறையவருமேனதடியார்களுமெம்மைமுறைபூசிக்கும்
புனிதர்களுமாங்கிருப்பரவரோடுமுனதுசெல்வப்பொருள்கடன்னா
னனிமுயற்சிசெய்துவழிபடுதியெனவெதிர்தோன்றிநவின்றானன்றே. (22)

மாயிருஞ்சோலையின்மலிந்துமதிதவழவுயர்ந்தவிடைமலைமேல்வாழு
மாயிரஞ்சொற்றிருநாமத்தணியழகன்பணிதலைக்கொண்டவ்வாறங்கே
போயிருந்துதென்கூடலழகியமாலடிக்கமலம்போற்றிவையந்
தாயிருந்துதலையளித்தமகப்போலக்காத்தளித்தான்றமிழ்நர்கோமான். (23)

பிறந்துளசந்திரகேதுப்பெயர்மகற்குமுடிசூட்டிப்பெருநீர்ஞாலஞ்
சிறந்துபுரிசெங்கோன்மைத்திருவமெலாங்கைக்கொடுத்துத்தெளிந்தோனாகித்
துறந்துதவநிலைபூண்டுதொடங்குவினைமுற்றியபின்சூழுமேல்வை
மறந்துமினிப்பிறவாதவான்கதிபுக்கினிதிருந்தான்வாழியிப்பால். (24)

பொன்மலையிற்பெயரெழுதிவழுதியர்க்குப்புகழினொடுபொருளையீட்டுந்
தொன்மலயத்துவசன்மகன்சந்திரகேதவன்றவம்போற்றேன்றுந்தோன்றல்
வின்மலிபூண்புனைசோமசுந்தரனுமவனிடபவெற்பின்மேவி
நன்மகவேட்டரியைநினைந்தருச்சனைசெய்தான்சருதுநாளுந்தின்றே. (25)

நலந்தருவானிடபவரைநாயகன்கேசவன்றுரிதசாசன்றேசன்
நிலந்தருசீர்ப்பாண்டியன்முனின்றுரைப்பான்வெளிப்பட்டானினக்குத் துயோ
பலந்தழுவுமுனதுதவமுவந்தனமென்றருளுதலும்பயிலுமன்னாண் [ய்
மலர்ந்தபனிவரைச்சாரலிருந்துமையாள்கொழுநனங்கண்வந்தானன்றே. (26)

வேறு.

அமையாவன்பினுங்குறுமீசன்றனைநோக்கி
நமையாள்செங்கண்மாலழகன்றானவில்கின்ற
னுமையாளோடெய்யாதுபொருட்டாலுயர்வென்றி
யிமையாமுக்கட்குலதராநீயிவண்வந்தாய். (27)

யாங்கேசெல்வாயென்னிடைசொல்வாயெனலோடும்
காங்கேயன்றன்றாதையுமாழிக்கடல்வண்ணா
வாங்கேநின்னைக்காண்பதுகருதியடைகின்ற
பாங்கேயென்மீதின்னருணன்றும்படிசெய்வாய். (28)

வானோர்சூடாமணியேபணியாய்விடையென்னத்
தேனார்சொன்னூறச்செஞ்சடையீசன்சிலவாழ்த்தி
யானவன்பாலீங்குதலென்றுமதுபோழ்திற்
றுயோரில்லான்றன்புடைசுட்டித்தனிகாட்டி. (29)

திகழுஞ்சோமசுந்தரனென்னுந்தேர்வேந்தன்
புகழின்மிக்கானீங்கிவனுக்குப்புகழெய்து
மகவின்பான்மைசெய்குனையாகின்மகிழ்வெல்லா
நிகழ்வண்ணமென்னிடையன்புநீசெய்தி. (30)

என்றிம்மாற்றஞ்சுந்தரநாமத்திறைகூற
நன்றுன்வாய்மைப்பேரருள்பானேநனுகிற்கேன்
குன்றின்மாலேயென்றுபராவிக்குறைநேர்ந்து
தன்றம்வேணியண்ணலுமொன்றுசூழ்கின்றான். (31)

வேறு.

தன்னைநாளும்விட்டகன்றிடாவிருப்புடைத்தடங்கட்
பொன்னைவெண்பனிக்குன்றிலேபூத்தபைங்கொடியை
யின்னைநேரிடையின்னுயிர்த்துணைவியைவிரவிப்
பின்னையன்பொடுநோக்கினனின்னணம்பேசும். (32)

மாதர்முற்றெழின்மடந்தைகேள்வருந்திமாதவத்தா
லாதரித்தவிப்புரவலன்புதல்வியாயணுகிச்
சூதினைத்தமும்முலையொடுந்தோன்றுதியென்று
வீதுரைத்தலுந்தன்றுணைபணித்தவாறிசைந்தாள். (33)

அன்னகாலையிலறத்தலையெடுப்பவாரணநூல்
சொன்னதேவருமுனிவருமலர்மழைசொரியத்
தென்னர்சேகரன்செய்தமாதவப்பயன்றிருந்தக்
கன்னியாயவதரித்துமையிருத்தலுங்களித்தான். (34)

மலயமால்வரைநாடனுக்கருண்மகப்பேற்றி
னலகிலாதரம்பிறந்ததவ்வாதரத்தினளாய்
நிலவுநாண்மதிக்கலையெனநாட்குநாணிரம்பிக்
கலவமாமயில்வளர்ந்தனள்கலைபலவுணர்ந்தே. (35)

அகலைவாய்ந்தால்லுருவமும்பருவமுமமைந்து
மகவைவேந்தனுந்தேவியுங்கண்ணெமகிழத்
தகவுமும்மூலத்தடாதகையெனும்பெயர்தாங்கிப்
பகைவர்வென்னிடப்பாண்டிமாமகள்பயின்றிருந்தாள். (36)

கயிலைநாயகன்மீண்டுதன்றேவியைக்காணு
வயிலைநேர்விழிமாதர்நீயிப்புவிக்கரசாய்
வெயில்குலாயவேற்றனைநாற்படைக்கடல்விரித்துப்
பயிலுமாழியொன்றுருட்டுதிதிசையெலாம்பரவ. (37)

விந்தமால்வரைநாட்டில்யாமேற்படுமொருசார்
முந்துவேடர்மாளிகையிலோர்வேடர்கோன்முயன்று
சிந்துநாண்மலர்ப்பூசனைசில்பகலுவந்து
மைந்திணேடுவீற்றிருந்துமான்மதிமுகத்தணங்கே. (38)

அங்குநீயெழுந்தடற்படைநாற்கடலார்ப்பப்
பொங்குதெம்முனைபொருதடல்வாகைமேற்புனைவான்
செங்கைவில்லொடுந்தலைப்படும்போழ்தில்யாஞ்சென்று
துங்கவெஞ்சமர்நின்னொடும்புரிகுவந்தொடர்ந்தே. (39)

செருவிலெம்மையும்வென்றிகொள்பவளெனச்சினந்து
வருவைநாமெதிர்நோக்கலுமொருதனமறையு
முருவவோடரிக்கடைக்கயலுண்கணுமெம்மைப்
பரிவினேக்கிநாணடைகுவாய்மடநடைப்பாவாய். (40)

தலைவனுமெனநம்மைநீவரித்தபின்சார்ந்து
நிலவுநின்னகர்தன்னில்யாங்கடிமணநேரக்
குலவுநன்னலனுகர்தியாலெமதுதோட்குவட்டிற்
சுலவுநீர்க்கடல்சூழ்புவிப்பொறையெலாஞ்சுமத்தி. (41)

சுந்தரப்பெயர்வழுதியென்றியாவருந்துதிப்ப
வந்தளித்தயாஞ்சவுந்தரமாயனைக்காண்பான்
கந்தரத்தெழில்வனகிரிக்கெய்திமால்களிப்பப்
புந்திவைப்பினுலுறைகுவாமந்தகைப்பொருப்பின். (42)

உடற்பொலிந்ததோர்கலையினுலுலகெலாமுணர
வடற்பெரும்படைக்கேத்திரபாலனென்றழகற்
கிடப்புறந்தனிலிருக்குநாமிடபமால்வரையான்
றடப்பெரும்பதிபுரப்பதாலப்பெயர்தரித்தே. (43)

விண்ணுளோர்தொழுமேருமால்வரையினும்விளங்கு
மண்ணன்மாவிருஞ்சோலையாம்வரையிடத்தமரா
நண்ணுமானிடர்நமதடித்தொண்டராயடைவோர்க்
கெண்ணுபோகங்கள்யாவையும்வழங்குவாமெளிதின். (44)

என்னநாயகனிசைத்தவாறியற்றினுளிப்பா
லன்னகாலையின்மணிமுடிபுனைந்தவட்பயந்த
மன்னன்வானுலகடைந்தனன்மண்ணுலகனைத்துங்
கன்னியாண்டனளென்பராற்கற்றுணர்ந்தோர். (45)

உம்பர்மேற்பெருடலோங்குசீர்வனகிரியுறையு
நம்பிமாட்டுமமன்பினுலருச்சனைநடாத்தி
யிம்பர்போற்றியகூடன்மாதவனையுமிறைஞ்சித்
தம்பிராட்டியார்தடாதகைவைகலுந்தரித்தாள். (46)

இன்னவாறிஃதிசைத்தனமினியெதிர்காலம்
பின்னைநாயகனருண்மறைப்பேறநுள்பெற்றி
தன்னையெம்முறைவினுயினேனம்முறைதவத்தான்
முன்னுபுண்ணியவிருடிகாண்மொழிவனென்றுரைப்பான். (47)

இரண்டாவது மலயத்துவசன்முதலாயினோர் பூசித்தபடலம் முற்றும்.

ஆகக்கவி — 628.

மூன்றாவது:

பட்டாசிரியர் மதுரைகாண்படலம்.

மதிகுலேசன்மலயத்துவசனை
முதலினோர்கதையினிமுதுவர்
புதுவைமாநகர்ப்பூசுரன்கூடலம்
பதியிலெய்தும்பரிசையுரைசெய்வாம். (1)

அவ்வவேந்தர்மரபினவதரித்
திந்நிலத்தருமேன்மையன்யாவருஞ்
சொன்னசிவல்லவப்பெயர்குடினுன்
பன்னுநூன்முழுதுந்தெரிபான்மையான். (2)

மிருதிவல்லன்விளங்கியதோற்றத்தன்
குருவைவந்தனைசெய்வன்குரவனை
தருளினுண்மையறிபவனீதிநூ
லொருவிலான்விறல்பூணுமொருவிலான். (3)

உலகம்யாவுமுவப்பவன்செஞ்சொலான்
பலர்மனங்கவர்பண்பினனண்பினு
னிலவுமாழமுடையங்கலைமையா
னிலகுமாநகரேத்துஞ்சதுரனே. (4)

தீரன்பின்செயன்முன்சொலுஞ்சீர்த்தியான்
யாருந்தூயருந்தன்னிடத்தெய்துவோன்
சாரும்பல்லுயிர்க்கேற்பனதான்செய்வோ
னேரும்வேதவேதாங்கமுணர்ந்துளோன். (5)

மெய்யன்றிண்மைவிரதம்பிடித்துளோன்
பொய்யில்செல்வன்புகழ்குணசாத்திக
னையன்மெய்ம்மையர்வேண்டுந்தொடர்பினன்
செய்யுநல்லறம்வல்லதிறமையான். (6)

குரவர்மீதன்புகொண்டமனத்தினன்
பிரியமுள்ளான்கண்ணோட்டம்பெரிதுளான்
பொருளெலாமுடையான்புலவோரையு
மிருமுதுகுரவோரையுமேத்துவோன். (7)

வள்ளியோன்பெருந்தெய்வம்வழுத்துவோ
னுள்ளதன்றிப்பிறர்மனையுள்ளிடான்
றெள்ளிதென்றுந்திருமாலடித்துணை
யள்ளுபன்புளனல்வியமில்லனே. (8)

ஆயநீர்மையராபன்மதுரையின்
மேயநாளொருகாலைமிடைர்திருள்
பாயபாதியிராவிற்பத்யிடைத்
தூயசோதனைசெய்யத்தொடங்கினான். (9)

உறைகழித்துவடிவாளுருவிபோர்
க்கவறமலர்க்கையிலேந்திக்கவசமிட்
டெறழ்வலிக்கடகுந்தரித்தேகினு
னிறைதெருத்தொறுமின்றுதிரிகுவான். (10)

யாவரென்சொல்கின்றாரென்றிருசெவி
மேவவோர்ந்துவினவுவானுங்கொரு
தேவர்கோயினின்றோர்பதிகன்செலக்
காவலோனுமவன்வரல்கண்டனன். (11)

ஒருகணப்பொழுதாங்குநின்றாங்கெதிர்
வருவதியாரெங்குளாயிங்குவந்ததென்
விரவியேயாதெனவேந்தன்வினவலு
மருளும்வாசகமந்தணன்கேட்டனன். (12)

தலைவன்முன்சென்றுதன்மரபாதியா
நலமையாவுந்தெரியநவிற்றுவான்
குலனுங்கோசிகர்கோத்திரத்தெய்தினேன்
மலருஞ்சோமசன்மாவெனும்பேருளேன். (13)

அவந்திநின்றுமவனியிற்புண்ணிய
நவந்தருந்தீர்த்தயாத்திரைநண்ணியின்
றுவந்துவந்திம்மதுரையையுற்றனன்
பவந்தொலைந்திடவென்றிவன்பன்னவே. (14)

கேட்டறிந்தகெழுதகைவேந்தனு
மீட்டுமொன்றுரைப்பானுயர்வேதிய
வூட்டரும்புருடார்த்ததொடுக்கத்தை
யீட்டும்வண்ணமெனக்கிங்கிசைத்தியால். (15)

என்றுகூறப்பரத்தினியற்கையாய்
நன்றியாமிதியாசத்துணட்டதாய்த்
தொன்றதாமொர்கலோசமுணர்த்துவா
னென்றுகேள்வியுளோனுவந்தரோ. (16)

வேறு.

வருடாக்வேண்டிம்பண்டமற்றைபெய்மதியிற்கொள்க
விரவிடைவேண்டிற்றெல்லாடேல்லொளிப்பகலேதேர்க
நரையுநாப்பிற்கேற்பதினாமையினுடச்சேர்க்க
பரகதிக்கேதுவாவதிம்மையிற்றேடற்பால. (17)

என்பதைவினவியில்லத்தெய்தியோரேட்டிற்றீட்டிப்
பொன்பொதியுதயன்றோன்றும்புலரியிலெழுந்துகண்ட
மொன்பதையாளும்வேந்தனுநடனியதிமுற்றி
மன்பதைபுகழத்தாணிமண்டபத்தடைந்தானன்றே. (18)

ஒற்றாலவைச்சர்க்கூவியொல்லையின்மறைநூலெல்லாங்
கற்றறிந்தழுக்காறற்றோர்கணத்தொடும்புரோகிதத்து
நற்றொழிலடாத்துஞ்செல்வநம்பியாங்காமர்நாமம்
பெற்றவற்கொணர்ந்துசெம்பொற்பீடமீதிருத்தியேத்தி. (19)

தத்துவங்கடந்தஞானத்தனிப்பொருட்சாட்சிதன்னை
யுய்த்தெனக்குணர்த்துகென்னவொளிமதிமருமான்கேட்பச்
சித்தநல்லுணர்ச்சிதேருந்தேசிகன்செல்வநம்பி
வித்தகன்பானத்தினோர்ந்துவிம்மிதமடைந்துபின்னர். (20)

நான்மறைமுழுதுந்தேர்ந்த நோன்மைசால்குணத்தின்மிக்கோர்
நான்மறையங்கம்வல்லோர்தன்னதுநாட்டில்வாழு
மேன்மையர்தனைநேர்மாண்பின்வேதியரவையினுப்பண்
வான்மதிவல்லீரீண்டுச்சொல்லுமின்வல்லைமன்னோ. (21)

சாற்றுதத்துவங்களென்னைதனையுணர்ஞானமென்னை
மேற்றருவேதந்தேர்வோர்மேவியபயன்மற்றென்னை
யாற்றிமன்னுயிர்கள்யாதாற்பவப்பிணியகன்றுநீங்குந்
தேற்றுதிர்முழுதுமென்னாச்செல்வர்கோனுரைத்தல்கேளா. (22)

அவ்வவைக்கணிறைந்தசீலத்தாரியர்யாருந்தத்த
நவைதவிர்மதநூலுண்மைநவின்றனராங்கப்போதிற்
சுவையமிர்தெழுத்தின்மல்கித்தொடைபெறுந்தகைத்தாய்வானி
லிவையவையன்றென்றெழுந்ததோர்தெய்வவாக்கு. (23)

சேடில்சீருடையாய்விஞ்சைக்கிழியொன்றிற்பலபொன்றூக்கி
யீடுறச்செய்திஃதவிருந்தனத்திருத்தும்யாமே
பீடுறுகிழியும்வேதப்பெரும்பொருட்டத்துவத்தை
யூடுறவெய்தியாவனுணர்த்தினனவன்கைக்கெய்தும். (24)

அவன்மனத்திருந்துகோற்றவருளியப்பொருளையன்னான்
கவரநாம்புரிதுமென்றுகழறியவ்வானவாணி
மவ்வமாவொழிந்துநிற்பமன்னர்தம்மன்னஃகேளா
வுவகையும்வியப்புமெய்தியொளிமுகஞ்சிறந்துதோன்ற. (25)

திருநிறைசெல்வநம்பித்தேசிகன்றன்னையன்னா
னருகுறையமைச்சரோடுநோக்கியாய்ந்தளவில்வேதப்
பொருண்முடிவனைத்துங்கண்டபுலமையோயெனதுசிர்வத
கருதுமாசங்கைபோக்கக்கடவைநீயென்னலோடும். (26)

வழுதியர்பெருமநீசொல்லன்னமேயாவதென்று
வெழுந்தன்னிருக்கைபுக்கானெழுந்தபின்பிறருஞ்சூழ
முழுதுணர்செல்வர்பிமொய்த்திளங்கதிர்பாட்புஞ்
செழுமணிவிமானவாழ்க்கைச்செங்கணாற்கன்புசெய்வான். (27)

நலந்திகழ்நாமஞ்சாத்திநறுமலர்தூற்றிவாசங்
கலந்தபிற்றூண்டிபோனமெறுசுவைக்கனிக்குவங்கம்
பலந்தருகனிகண்மற்றும்பயில்வுறநிவேதித்தியாணர்
மலிந்ததாம்பூலமாதிமலர்முகவாசநல்கி. (28)

உருக்கெழுபுள்ளூர்ந்துள்ளவுள்ளொளிபுறனுமொன்றிப்
பெருகுசொற்றுதிகள்பேசிப்பின்னைகோனமுதுசெய்த
திருநிவேதனங்களாயபோசனத்திரள்களெல்லா
மருமறைக்கேள்விசான்றவயிணவர்க்கருத்தலூட்டி. (29)

அவர்முகத்தனுச்சைவாங்கிப்பருவப்பெறப்பலகால்வேண்டி
யுவரிபோன்மேனியானையுளப்படுமுணர்விற்பாவித்
திவர்வுறமூன்றுவைகலியன்னம்வழிபட்டன்பிற்
றவலருந்தலைப்பாடெய்தித்தனித்தவோர்மனத்தனாகி. (30)

வேறு.

நேயமொடரியருளொடித்தறல்கருதி
யாயிடைவைகினனவனதாகனவின்
மாயவனெளிவரும்வடிவினனாகித்
தூயவவினவெனவிவையிவைசொலுவான். (31)

முறைபடுமருமறைமுழுவதும்யாமே
மறைகளினெறியுணர்வரதனும்யாமே
பொறையுறுதருமபுராணமும்யாமே
யறைதருமனுவிதியாசமும்யாமே. (32)

கருமமுணர்த்தியகாண்டமுஞான
நிருமலவீடுணர்காண்டமுமிரலே
யருளியபூற்பமும்வாமமுமாமென்
றுரிமையினுரைசெயவுலகினிலிலகும். (33)

விரிதருசாகையின்மிகுமறையானு
மரிதுணராங்கதினங்கமதானு
மருவியெம்மடியிணைவழிபடலானுந்
திரிமலமறுமதருவெவரெனிதெரியும். (34)

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி-ஹு தை-மீ [பகுதி ௩.

Vol. XXI. January-February-1923. No. 3.

இறைவனெண்குணம்.

பரமபதியாகிய இறைவனுக்குச் சிறப்புரிமையாகவெடுத்துக்கூறுங் குணங்களெட்டாம்.

> “கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்—றாளை வணங்காத்தலை” எனத் திருக்குறளிற் கூறியிருக்கின்றார். உரைசெய்த பரிமேலழகரும் எண்குணங்களாவன:—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவேபாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை எனவெடுத்துக் கூறி, இவ்வாறு சைவாகமத்திற் கூறப்பட்டதென்றார்.

இவ் வெண்குணங்களைத்தொகுத்து, “எட்டுவான்குணத்தீச னெம்மான்றனை” எனவும், “எட்டுக்கொலாமவரீறில் பெருங்குணம்” எனவுந் தேவாரத்திற் கூறியிருக்கின்றார்.

இவ்வெண்குணங்களைவகுத்து, காஞ்சிப்புராணத்தில், "முடிவிலாற்றலைதன்வயத்தினைமுற்றுணர்ச்சியைபேருண், மடிவிலாட்சியைதூயமேனியைமற்றியற்கையுணர்ச்சியை, படியிலாவியல்பாகநீங்கியபாசநோயைவரம்பிலின், புடையையுன்னடியேங்களென்றுமுனக்கடைக்கலமையனே" எனக் கூறியிருக்கின்றார்.

இங்ஙனமாயின், திருவாசகத்திலே, "குணங்கடாமில்லாவின்பமேயுன்னைக்குறுகினேற்கினியென்னகுறையே" எனவும், நிர்க்குணன் எனவுங் கூறுவதென்னையெனின்? பிரபஞ்சம்போல் முக்குணரூபமாயளவிட்டறியப்படுவானல்லனுப்த் திரிகுணங்களுங் கடந்துநின்ற நிலைநோக்கிக் கூறியதென்றுணர்க; இன்னும் பஞ்சகிருத்தியமுங்கடந்துநிற்கு நிலைநோக்கிக்கூறியதெனவுமாம்; சிவ.போ. கஞு. உ-வது அதிகரணத்திலே முற்கூறியதுகாண்க.

இனி, இவ்வெண்குணத்தின் றகைமையைச் சித்தாந்த சாத்திரங்களிலே, ஆங்காங்கு விளங்கவுரைத்திருக்கின்றனர்; இப்பொழுதென் சிற்றறிவுக்குத்தெரிந்தவரை யிங்கேயெழுதுகின்றேன்.

1. தன்வயத்தனுதல்.—தானொருபொருளின்வயப்படா தெல்லாந் தன்வயமாக விருத்தலாம்; உலகவனுருவிற்றோன்றி யொடுங்கிடுமாதலால் விச்சுவகாரணன் எனச் சுருதிகூறியதனாற் றன்வயத்தனுதலறிக. சிவ. சித்-உ-சூ-சஅ-ஆங்கவியுரையிற் காண்க. கிழங்கிற்றோன்றிய தாமரையை அதற்காதாரமாயிருக்கிற சேற்றிற்றோன்றியதாகப் பங்கயமெனக் கூறுதல் போல, மாயையிற்றோன்றியவுலகத்தை அதற்காதாரமாயிருக்கிற முதல்வனிற் றோன்றியதெனக் கூறலால், விச்சுவகாரணனென்றாரென்க.

இன்னும், "அவனசையாமலணுவசையாது" என்னும் பழமொழியாலுந் தன்வயத்தனுதலறிக; இக்கருத்தைவிரித்து, அருணைக்கலம்பகத்தில், "எல்லாவுயிர்க்கு முயிரானோசரிவாசைவி—னல்லாதணுவுமசை

யாதெதென்ப தறிந்தனமே—வில்லாடன் மாரனிருக்கவும் யோகம்விளைத்த வன்னாட்—புல்லா திருந்தனவெல்லாவுயிருந் தம்போகத்தையே" எனக் கூறியது காண்க.

இன்னும், அக்கரங்களை யியக்குதற்பொருட்டு, அவ்வக்கரங்களையுடனின்றியக்கும் அகரத்தைப்போல ஆன்மாக்கட்கு அறிவுசெயல்கள் தன்னையின்றிவிளங்காமையால் அவை விளங்குதற்பொருட்டு அவ்வுயிர்களுடன் கலந்துநிற்பன் என்பதனாலுந் தன்வயத்தனாதல்காண்க. இதனை சிவ—சித்—௧—கூ—முதலதிகாரணம், எ—ஆங் கவியிற்காண்க.

இன்னும், சர்வசங்காரகாலத்திற் றானேயாயிருத்தலாலும், நாமங்களிலே சர்வதத்துவாதிபதயே சிவாயநம: எனக்கூறலாலுங்காண்க.

2. தூயவுடம்பினனாதல்—அருளே திருமேனியாகித்தேயத்தொளிகளெல்லாந் தன்றிருமேனியொளியால் விளங்கவிருப்பவனாதலாற் றூயவுடம்பினனாதல்காண்க. இதனை சிவ-சித்-௧-கூ-௬௭-ருஉ-ஆங்கவிகளிற்காண்க.

இன்னும், மாயாவிகாரமெய்திக்கருப்பாசயத்திற்படாமையாலும் பசிநோய்மதமாற்சரியமுதலியவுயிர்க்குணங்களின்மையாலும், நின்மலதேகியெனவேதமுறையிடுதலாலுங்காண்க. கருப்பாசயத்திற்படானென்பதனைவிளக்கி, அருணகிரியந்தாதியில், எல்லார்பிறப்புமிறப்புமியற் பாவலர்தஞ்—சொல்லாற்றெளிந்தேநஞ்சோணேச—ரில்லிற், பிறந்தகதையுங்கேளேம் பேருலகில்வாழ்ந்துண்—டிறந்தகதையுங்கேட்டிலேம்." எனக் கூறியது காண்க.

3. இயற்கையுணர்வினனாதல்—கருவிகளொன்றுமின்றிக், கேவலத்திலறியுமாறின்றிப், பின்னர்க்கலைமுதலாகியகருவிகளோடு கூடியவழி அறிவிக்கவறிந்துவரு மான்மாவைப்போலன்றி, அறிவிப்பாரின்றி எக்காலத்துந்திரிபின்றியாவுமொருங்கே அறிந்தாங்கறிந்துநிற்குஞ்சித்துப் பொருளாதலால் இயற்கையுணர்வினனாதல்காண்க—இதனை சிவ-போ-௩-௬-௯-அதிகரணத்திற்காண்க.

இன்னும், குருமூர்த்தியாயிருந்து, உமாதேவியாருக்கும், நந்தி முதலிய முனிகணத்தவர்க்குந்தேவர்கட்கும் வேதசிவாகமங்களையுணர்த்தியதன்றிமோன முத்திரையத்தனுயிருந்துபதேசித்தமையாலும், சிவஞ்சத்தியாய் நின்றுயிர்களின்கன்மங்களையறிந்து முந்தாமற்பிந்தாமற்கூடாமற்குறையாமற்கன்மபலன்களாகிய இன்பதுன்பங்களை அவ்வுயிர்களுக் கூட்டுவித்தலாலுங்காண்க.

4. முற்றுமுணர்தல்—சிவ. போ. 2. சூ. க. அதிகரணத்தில் பண்ணுமோசையும் போலப்பிரிப்பின்றியாங்கணும் வியாபகமாய் நிற்பவன் எனக்கூறலால், எல்லாமொருங்கேயறிபவனாதல்வேண்டும் எனக்கருதப்படுதலின் முற்றுமுணர்தல்காண்க. அத்துவிதவாக்கியத்தெளிவுரையிலே முற்றுணர்வாவது முழுதும் வியாபகமாய்நின்றறிவதெனக்கூறியதுங்காண்க. இன்னும், "அண்டங்களுள்ளும்புறம்புங்கரியாயினன்" எனக்கூறலாலும், வேதசிவாகமங்களை எல்லாப்பொருளும் விளங்கத் தானேயறிந்துயிர்கட்கிரங்கியோதிவைத்தமையால், முற்றுணர்வுதெளியலாமென, சிவ. சித். அ. சூ. ௰எ. ஆங்கவியுரையிற்கூறியதுங்காண்க. இன்னும், கருவி பொருள் காட்டு கருமம் உருவம் அளவு நூல் அன்றி, ஒருசேதனப்பொருளாலுமறிவித்தலின்றித்தானேதமியனாய், எல்லாவற்றையுமறிந்து நிற்றலால் முற்றுணர்வுபெறப்படுமென்க. சிவ. சித். ரு. சூ. ருக. ஆங்கவியிலறிக.

5. இயல்பாகவேபாசங்களினீங்குதல்—குருமேனி தரித்துக் கல்லாலடியிருந்து, நந்திபாதிமுனிகணத்தவர் முதலோர்க்குபதேசித்துப் பாசங்களைநீக்கிமுத்திமுடிவைத்தெளிபவருளியவாற்றாலே தானியல்பாகவேபாசங்களினீங்கியவனென்பதுணர்க—இதனைச்சிவதத்துவவிவேகத்தில், "திருமாலிந்திரன்" என்னுமுதற்குறிப்புள்ளகவியிற்காண்க. இன்னும், திருவானைக்காப்புராணத்தில், "மும்மலம்வேறுபட்டொழியமொய்த்துயிரம்மலர்த்தாணிழலடக்குமுண்மையைக்—கைம்மலர்க்காட்சியிற் கதவ

நல்கிய—செம்மலேயல துளஞ்சிந்தியாதரோ" எனக்கூறியதுங்காண்க. ஞானமுத்திரைக்கையால், மும்மலநீக்கமும், ஆன்மாத்தன்னடிநிழலடங் குந்தன்மையுங்காட்டியருளியதையுபதேசமுறையாற்கேட்டுணர்க.

6. பேரருளுடைமை:—உயிர்கட்கின்பதுன்பநுகர்ச்சிக் கூறுபாட் டால், அதற்குக் காரணமாகிய இருவினைகளைநீக்கியருள்வதனாற் பேரரு ளுடைமை காண்க. இதனை, சிவ-சித்-அ-ரூ. ௰எ-ஆங்கவியுரையிற் காண்க.

இன்னும் கல்லாலடியிலே யோகிருந்தகாலத்தில், எவ்வுலகிலுமாண் பெண் புணர்ச்சியின்பமின்றி வருந்தல்கண்டு, அவ்வின்புறுமாறு, உமா தேவியுடன் கூடியிருந்தருளுந்தலாலுங்காண்க. இதனை, சிவ-சித்-க-ரூ-ருங- ஆங் கவியிலுங் காண்க.

இன்னும், விருப்புவெறுப்பில்லா அவ்விறைவன் தேவர்முதலோர்க் கிரங்கி, ஆலகாலத்தையருந்திக் கண்டத்தடக்கிவைத்தருளியதாலுங் காண்க.

7. முடிவிலாற்றலுடைமை.—வேதாகமங்களினெறிச்செல்வோர்க் குஞ் செல்லாதோர்க்கும், அம்முறையே சுகதுக்கமளித்தலாகிய வேது வாலே முடிவிலாற்றலுடைமை காண்க. இதனை, சிவ-சித்-அ-ரூ-௰எ- ஆங்கவியுரையிற்காண்க.

இன்னும், ஆலகாலத்தையருந்தியருளிய காலத்திலே, அதனை மிடற்றிலடக்கிவைத்ததும் பேராற்றலுடைமை குறிக்கின்றதுகாண்க. உலகில் யாரேனுமெவ்வகையுணவுப்பொருளை யருந்தியபோதும், அதனை வாயிடையினும் வயிற்றிடையினு மடக்கிவைத்துக்கொள்ளமுடியுமே யன்றி யிடையிலடக்கிவைத்துக்கொள்ளமுடியாது; இக்கருத்தமையக் காஞ்சிப்புராணத்தில், மணிகண்டேசப்படலத்தில், "கோரவல்விடமிடற் றிடையடக்கினன்குழக—ஞரவாயிடைவயிற்றிடையன்றிமற்றிடைக்க— ஞாமைத்திடவல்லவரமிழ்தமேபானும்"எனக் கூறியதுங்காண்க. சர்வ

சங்கார மூர்த்தியாயிருத்தலுங்காண்க. எல்லாப்பொருளும் வியாப்பியமா யடங்கத் தான் வியாபகமாயிருப்பதனால், அவ்விறைவனுக்கே பேராற்ற லுடைமை தெற்றெனப் புலப்படுதலுங்காண்க.

8. வரம்பிலின்பமுடைமை—சார்ந்ததன்வண்ணமாய்நிற்குமான் மாக்களெல்லாம் புண்ணியமேலீட்டாற்பக்குவமெய்திச், சத்திபதியப் பெற்று, வினைபொப்புவாய்ந்து, சற்குருபரம்பரையினுபதேசிக்கப் பெற்றுத், துவிதபாவனையைக்கைவிட்டுச், சிவனேநானெனப்பாவிக்குஞ் சிவோகம் பாவனைசெய்து, ஏகதேசமாய்நின்றறிவதாகியசிற்றறிவினீங்கி, ஞானக்கண்ணினாற் சிவனையான்மாவிற் கண்டு, சிவனேடொற்றுமைப் பட்டுத், தத்தருமதருமியாய்த்தத்தருமமெனப்பட்டமுற்றுணர்வுமுத லியவெண்குணங்களையுமுடையவராய்த், தன்னனந்தமாகியமுடிவுகாண் கிலாப்பேரின்பத்தை நுகர்ந்திருப்பதனால் வரம்பிலின்பமுடைமைகாண்க இக்கருத்தைவிரிவாகஅத்துவிதவாக்கியத்தெரிவுரையிற்காண்க.

இன்னும், உண்மையறிவானந்தவுருவன் என்னுஞ்சச்சிதானந்த வுருவன் எனக்கூறலாலும், எல்லாவுயிர்கட்குமின்பஞ்செய்தலிற் சங்கரன் சம்புஎன்னுநாமங்கள் வழங்கலாலுங்காண்க.

"எல்லாவுயிர்கட்குமின்பங்கொடுத்தலினு
லெல்லாஞ்சிவனையேயெண்ணலா—லெல்லாஞ்
சிவனுருவேயாமாற்றெவிட்டாதவின்பஞ்
சிவன்பாலிருக்குமெனத்தேர்" எனக்கூறலுங்காண்க.

இங்ஙனஞ்சுருங்கவுரைத்திருக்கின்றமையாற் சன்மார்க்கநெறி நிறைந்த நல்லறிவிற் பெரியோர்கள் விரிவாகவெழுதியுலகிற்குபகாரமாக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

* தத்தருமதருமியாய்த்தத்தருமமெனப்பட்ட—என்பதற்கு, அதனியல்பு தன்னியல்பாய் அதனியல்பெனப்பட்ட என்பதுபொருளாம்.

சாதுகை மாந்தர்.

கம்பநாடரது இராமாயணத்திலே அயோத்தியாகாண்டத்திற் கைகேசி சூழ்வினைப்படலத்தில் 66-வது செய்யுளிற் பயின்றுவரும் 'சாதுகை மாந்தர்' என்றதொடரின்பொருளைக்குறித்து, ஒன்றோடொன்று இயைபில்லாத மூன்று அபிப்பிராயங்கள் செந்தமிழில் வெளியிடப்பட்டுள்ளன. அவைவருமாறு:—

(1) 'சாதுகை' யென்பது 'சாதகை' யென்றிருத்தல்வேண்டும். பொருள்: 'சாவக்கடவ'; (அஃதாவது) 'மூப்பான்முதிர்ந்து தளர்வெய்தி எழுந்துவிழுந்து புறண்டு உருண்டு வருந்தும்' மாந்தர். (ஸ்ரீமாந்- T. N. அப்பனையங்காரவர்கள்)

(2) 'சாதகை'யென்பது தான் பாடமாதல்வேண்டும்; அது 'ஸாகேதம்' என்றதன் மரூஉ. பொருள்: அயோத்தியா நகரத்தின்பெயர். அந்நகரிலுள்ள மாந்தர் குறிக்கப்படுகின்றார்கள். (ஸ்ரீமாந்- இராமையங்காரவர்கள்.)

(3) 'சாதுகை' யென்பது 'ஸாதுகம்' என்றதன் திரிபு. ககரம் ஸ்வார்த்திகப் பிரத்யயமாகவந்தது. பொருள்: 'சற்குணம்', 'சாந்தம்'. (ஸ்ரீமாந்- K. G. சேஷையரவர்கள்).

இம்மூன்று பொருள்களுள் எது அங்கீகாரம்பெறுதற் குரியதென நிச்சயிக்க முயலுவோம்.

முதலாவதாக, ஸ்ரீமாந்- அப்பனையங்காரவர்கள்கூறும் பொருளையெடுத்துக்கொள்வோம். இப்பொருள் சிறப்பின்மையோ டொழியாது கவியின்பத்தினையும் அறவே கெடுத்துவிடுகின்றது. இவ்வாறுதல் இராமையங்காரவர்களால் நன்கு காட்டப்பட்டிருக்கின்றது. அன்றியும், அச்சுப்புஸ்தகத்திலும் ஏட்டுப்பிரதிகளிலும் உளதாய பாடத்தினின்று இப்பொருள் பெறப்படுவதன்றும். 'சாதுகை' யென்ற பாடத்தினைச் 'சாதகை'யென்று ஆதாரமில்லாது திருத்தியமைத்துப் பொருள்காணுதல் சிறிதும் ஏற்புடையதாகாது. தாம்கைக்கொண்டபாடம் ஏட்டுப்பிரதி

களில் உளதாகக்காட்டப்படவில்லை. முற்படக்கருதிக்கொண்டபொருளுக் கேற்பத் திருத்திய பாடமொன்று கற்பித்துக்கொள்ளப்பட்டமை வெளிப் படை. கடைசியாய், 'சாதுகை மாந்தர்' என்றதொடர் கைகேசி சூழ் வினைப் படலத்தில் மாத்திரமேயன்றி யுத்தகாண்டத்தில் மீட்சிப்படலத் தின்கண்ணும் காணப்படுகின்றது. ஐயங்காரவர்களது பொருள் இவ் விரண்டாவது பிரயோகத்திற்குச் சிறிதும் பொருந்துமாறில்லை. இது பின்னர்த் தெளியப்படும்.

இரண்டாவதாக, ஸ்ரீமாந் - ரா. இராமையங்காரவர்கள் எழுதிவெளி யிட்ட பொருளை நோக்குவோம். இது மேலைப்பொருள்போன்று கவி யின்பத்தினைக் கெடுத்துவிடுவதன்று. எனினும், 'சாதகை' யென்று ஆதாரமில்லாது மாற்றிக்கொண்ட பாடத்தினின்றும் இப்பொருள் பிறந்ததாகலின், முற்கூறிய ஆக்ஷேபங்களெல்லாம் ஈண்டும் வலியுடை யனவேயாகும். அன்றியும், 'அயோத்தியாபுரியிலுள்ள மாந்தர்' எனக் கூறினாலன்றிப் பொருள்சிறவாதெனக்கொண்டு 'சாதுகை' யென்பது ஸாகேதம் என்பதன் மரூஉவாதல் வேண்டுமென்று துணிகின்றார்கள். ஆனால் செய்யுளின்கண்ணேயே 'அவ்வூர்ச் சாதுகை மாந்தரெல்லாம்'என வருகின்றது. இங்கே 'அவ்வூர்' என்பது அயோத்தியையன்றிப் பிறி தொன்றனையும் குறிக்கமாட்டாது. 'அவ்வூர்' என வந்ததன்மேலும் நகரத்தின் பெயர் வந்ததெனல் சிறிதும் பொருந்துவதன்று. இராமை யங்காரவர்கள் 'அவ்வூர்'எனச் செய்யுளில் வந்திருப்பதனைக் கவனித் தார்களில்லையென்று எண்ணுகிறேன். 'சாதகை'யென்பது 'ஸாகேதம்' என்றசொல்லின் மரூஉவாகலாம் என்றுகொள்ளுவதிலும் பெரியதோர் ஐயப்பாடு நிகழ்கின்றது. கடைசியாய் மீட்சிப்படலத்திற்காணும் பிர யோகத்திற்கு இப்பொருள் ஒருவகையானும் அமைவுடையதாகாது.

இங்ஙனமாக, ஸ்ரீமாந் - T. N. அப்பனையங்காரவர்களும், ஸ்ரீமாந் - இராமையங்காரவர்களும் கூறியபொருள்கள் பலவகையானும் ஏற்புடை யனவாகாமை தெளிவாம். இனி எஞ்சிநிற்பது ஸ்ரீமாந் - K.G. சேஷைய ரவர்கள் தந்துள்ளபொருளொன்றே. அப்பொருள் பொருந்துவதாகு மாவென ஆராய்தற்குமுன்பு, மீட்சிப்படலப்பிரயோகத்தினை நன்குநோக் கிக் கொள்ளுதல் வேண்டும். ஒரு சொல்லின்பொருள் இன்னதெனத் துணிதற்கு, அச்சொல் பிரயோகிக்கப்படுமிடங்களையெல்லாம் ஒருங்கு வைத்தாராய்தல் பெரிதும் பயனுடையதாகும். பிரயோகம் வருமாறு:—

ஆதலா னரக்கர்கோவே யடுப்பதன் றெனக்குமின்னே
சாதுகை மாந்தர்தம்மைத் தடுப்பதென் றருளிச்செங்கண்
வேதநாயகன் முனிற்ப வெய்துயிர்த்தலக்க ணெய்திக்
கோதிலா மனனுமெய்யுங் குலைந்தனன் குணங்கடயோன்' மீட்சி 54.

இச்செய்யுள் விபீஷணனைநோக்கி இராமபிரான் கூறுவதாகவுள்ளது. இராவணவதம் முடிந்ததும் விபீஷணனது பட்டாபிஷேகம் நிகழ்கின்றது; பின்னர் சீதாதேவியைத் தம்மிடம் கொண்டுவரும்படி இராமமூர்த்தி கட்டளையிடுகின்றார்; கட்டளையின்படியே சீதையென்னும் கற்புக்கரசியை ஸ்நானம்செய்வித்து ஆபரணாதிகள் அணிவித்துச் சிவிகையிலேற்றிக்கொண்டு செல்லுகின்றனர்; அப்பொழுது காணுதற்குவந்த தேவர்கள், தேவமாதர்கள், ரிஷிகள், ரிஷிபத்தினிகள், வித்தியாதரஸ்திரீகள் முதலானோர் (மீட்சி - 49) கும்பலாய்த்திரண்டு நெருங்க, சிவிகை முன்பின்செல்லமாட்டாது தடைபடுகின்றது; சீதையைப்பாதுகாத்து உடன்சென்ற அரக்கர்கள் அவர்களை யகன்றுபோம்படி வெருட்டுகின்றார்கள்; இங்ஙனம் நேர்ந்த குழப்பத்தால் கருங்கடல் முழங்கியதுபோல் ஒலியெழுகின்றது; இராமபிரான் ஒலியின் காரணத்தை முனிவர்பால் வினவியறிந்துகொண்டு தம்கருத்தை இச்செய்யுளால் வெளியிடுகின்றார். விருப்பமிகுதியாற் காணவந்தோரை வெருட்டியோட்டிவிடுதல் தக்கதன்றென விபீஷணனுக்கு அருளிச்செய்யப்படுகின்றது: குணங்களால் தூயோனாகிய விபீஷணனும் தான்செய்த அபசாரத்திற்குமனம்வருந்திக் குலைவுறுகின்றான்: இதுவே செய்யுளின் கருத்து.

இங்கே தேவர்கள், ரிஷிகள், ரிஷிபத்தினிகள் முதலாயினோர் 'சாதுகைமாந்தர்' எனக்கூறப்படுகின்றனர். இவர்கள் சாதற்குரிய பருவத்தினராயிருந்தார்களென்றேனும் அல்லது அயோத்தியாநகரிலுள்ளவர்களென்றேனும் கொள்ளுதல் சிறிதும் பொருந்தாமை யெளிதின் அறியலாம். இடம், பருவம், வர்க்கம், ஆச்ரமம், லிங்கம் என்பனவற்றுள் யாதானுமொன்றனை 'சாதுகை' யென்ற சொல்குறிப்பதுமன்று. எனெனின், இவ்வனைத்திற்கும் பொதுவாகவேபிரயோகம்உளது. கைகேசி சூழ்வினைப்படலத்துச் செய்யுளில், தசரதமன்னரோடொத்த மாண்புடைப்பெருமக்கள் உணர்த்தப்படுகின்றனர். ஆகவே, தேவர்கள், முனிவர்கள், ரிஷிபத்தினிகள், மாண்புடைப்பெருமக்கள், என் றிவ்வனைவர்க்கும் பொதுப்படவுள்ளதொரு குணவிசேஷத்தையே 'சாதுகை' யென்னும் அடைமொழிகுறிப்பதாகல் வேண்டும். குணங்களால் தூயராந்தன்மையை நாம்வியவகரிக்குஞ் சொல் உணர்த்துமென்று கொள்ளுதல் மிகப் பொருத்தமானதேயாகும். இப்பொருளொன்றே கொள்ளத்தக்கது.

இதுவே பொருளென்பது வேறொருவகையானும் தெளியக்கிடக்கின்றது. ஏட்டுப்பிரதிகளில் பாடபேதங்கள் மலிந்துகாணப்படுதற்குப் பல காரணங்கள் உள. அவற்றுளொன்று அரிதுணர்சொற்களும் கருகற்சொற்களும் வந்தவிடங்களில் எளியசொற்களை ஏடெழுதுவோர் பெய்து

விடுதலாம். ஏட்டுப்பிரதிகளை பொப்புநோக்குவதிற் பழக்கமுடையார்க்கு மேலதன் உண்மை எளிதின் அறியலாகும் இவ்வகையான நோக்கினால் ஒருபாடத்தின் பொருளை ஆண்டைக்குரிய பிறிதொருபாடபேதம் ஒரோவிடங்களில் விளக்கவல்லதாயிருக்கும். என்னிடமுள்ள இரண்டு இராமாயண ஏட்டுப்பிரதிகளில் ஒன்றின் கண்ணே 'சாதுதைமாந்தரெல்லாம்' எனப்பாடங்காணப்படுகின்றது. 'சாதுதை' யென்பது 'ஸாயுதா' என்னும் வடமொழிப் பண்புப்பெயர்ச்சொல்லின் 'ஆ' ஈறு 'ஐ' யாகத் திரிந்த தற்பவமென்பது வெளிப்படை இச்சொல்லின்பொருள் அகந்தூய்மை. ஆகவே 'சாதுதை' யென்ற பாடபேதம் 'சாதுகை' யென்ற பாடத்தின்பொருளை விளக்குவதோடு அச்சொல்லின் உற்பவத்தையும் தெரிக்கின்றது. இதற்கேற்ப ஸ்ரீ-மான் சேஷையரவர்களும் 'ஸாயு' என்றதன் அடியாகப் பிறந்ததெனக்கூறியுள்ளார்கள்.

ஆனால் 'ஸாயுக' என்பது வடமொழிரூபமென்றும் ககாரம் ஸ்வார்த்தத்தில் வந்த பிரத்தியயமென்றும் ஸ்ரீஐயரவர்கள் கருதுகின்றார்கள். 'ஸாயு' என்பது ஸ்வார்த்திகப் பிரத்தியயம்பெற்று 'ஸாயுக' என்றரூபத்தோடு வடமொழி நூல்களிற் பயின்றுவந்திருப்பதாகத்தெரியவில்லை. ஐயரவர்களும் பிரயோகமொன்றுங்காட்டினார்களில்லை. அன்றியும், 'ஸாயுக' என்பது தமிழில் 'சாதுகை' யென வரமாட்டாது. இவ்விருகாரணங்களாலும் ஸ்ரீஐயரவர்கள் தந்துள்ள சொல்வரலாற்றினை அங்கீகரித்தற்கண்மலைவுண்டாகிறது. 'சாதுதை' என்னும் பாடத்தினைக் கைக்கொள்ளுதல் நேரிதெனத்தோன்றுகிறது.

வேறொருமுறையாற் சொல்வரலாறு கூறுதலும் அமைவுடைத்தாகும் 'ஸாயுதா' என்பதனோடு பெரிதும் பொருளொற்றுமையுடைய 'ஸாத்விக' என்றசொல் 'சாதுகை' யெனத்தமிழில் மருவிவந்ததெனக் கொள்ளுதலும்தகும். ஸ்ரீசேஷையரவர்களது முடிபில் 'ஸாயுக. என்றொருரூபம் வடமொழியில்உளதோவெனச் சந்தேகித்தற்கிடமுண்டு' இதுபோன்ற சந்தேகம் இவ் இரண்டாவது சொல்வாலாற்றிற் சிறிதும் இல்லை.

ஆகவே 'சாதுகை' யென்பதனாற் கம்பநாடர் கருதியபொருள் ஐயப்பாட்டிற் கிடனின்றி விளங்குகின்றது. 'குணங்களால் தூயராந்தன்மை' யென்பதே அதன்பொருள். அச்சொல்லின் வரலாற்றினைநோக்குமிடத்து இருவேறுமுடிபுகள் வரல்கூடும். 'சாதுகை' யென்பதே சுத்தமான பாடமாயிருப்பின் அப்பொழுது அதனை 'ஸாத்விக' என்றதன் மரூஉவாகக் கொள்ளல்வேண்டும். 'சாதுதை' யென்பது சுத்தபாடமாயினை அப்பொழுது அது 'ஸாயுதா' என்பதன் தற்பவமாதல் கூறாமலே அமையும்.

எஸ். வையாபுரிப்பிள்ளை.

சாதுகை மாந்தர்.

“மாதர்கள்கற்பின்மிக்கார்” என்ற கம்பராமாயணச்செய்யுளைப் பற்றிச் ‘செந்தமிழ்’ ப்பகுதிகளிற் சமீபத்திற்சில அரியகட்டுரைகள் வெளிவந்திருக்கின்றன. அவைகள் ஐயநீக்கத்தின்பொருட்டு வரையப் பட்டுள்ளனவாயினும், என்மனத்தில் அவை சிற்சில ஐயப்பாடுகளைக் கிளப்பினவாகையால், இச்சிறு நிருபமெழுதத்துணிந்தேன். சோட சாவதானம் சுப்பராயசெட்டியார் உரையுடன்தக்கோலம் இராமசாமிநாயுடு வெளியிட்டபதிப்பிலும், திருமயிலைவித்வான் சண்முகம்பிள்ளையுரை யுடன்திருவாலங்காடு இராமசாமிமுதலியார் வெளியிட்ட பதிப்பிலும், நமசிவாயமுதலியார் தமது நிரஞ்சனவிலாசஅச்சியந்திரசாலையிற் பதிப் பித்த மூலம் மட்டுமடங்கின பிரதியிலும், அச்செய்யுள் பின்வருமாறு காணப்படுகிறது :—

“மாதர்கள்கற்பின்மிக்கார்கோசலைமனத்தையொத்தார்
வேதியர்வசிட்டனொத்தார்வேறுளமகளிரெல்லாம்
சீதையையொத்தாரன்றடிருவினையொத்தாளவ்வூர்ச்
சாதுகைமாந்தரெல்லாந்தயரதன்றன்னையொத்தார்.”

ஆனால் இதன் மூன்றாமடியின்கடைமொழியையும் நான்காமடியின் முதன்மொழியையும்மாற்றி “மற்றைச்சாதகை” எனப் பாடங்கொண்டு ஸ்ரீமத் T. N. அப்பனையங்காரும் ஸ்ரீமத் ரெ. இராமையங்காரும் வெவ் வேறு பொருளுதவியிருக்கிறார்கள். அவ்வாறு பாடபேதப்படுத்த ஆவசியகம் நன்குபுலப்படவில்லை. “அவ்வூர்ச்சாதுகைமாந்தர்” என்ற பாடம், கல்வியிற்சிறந்த தமிழ்ப்புலவர்கள் உரைதீட்டி வெளியிட்ட பதிப்புக்களிலும், வேறு அச்சுப்பிரதிகளிலும் காணப்படுவது பிழையா? அத்தொடர் பொருளமையப்பெறாது வறுமொழியாகவேற்பட்டால், அதைப் பொருள்படமாற்றுதல்வழுவன்று; முறைமையேயாம். “அவ் வூர்ச்சாதுகைமாந்தர்” என்றதொடர்மொழிக்கு அந்நகரிலுள்ள சாந்த மிக்க அதாவது சற்குணநிறைந்தமனிதர் என்ற பொருள் பொருந்தமா யின், அப்பாடத்தைக் கைக்கொண்டு பொருள்கூற விழுக்காமோ! சந்தர்ப்பம் நோக்கினும் ஒவ்வாதோ?

ஸ்ரீமத் அப்பனையங்கார் காரணங்கூறாமல், சாதுகைமாந்தரேல்லாம் என்றிருப்பது சாதகைமாந்தரேல்லாம் என்றிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது’ என்றெழுதி, அதன் பொருள் சாவக்கடவ மூப்பான் முதிர்ந்து தளர்வெய்திஎழுந்து விழுந்து புறண்டு உருண்டு வருந்தும் மாந்தர்களெல்லோரும்’ என்று விரித்துரைத்து அத்தகையார் இராம

பிரானை முடிசூட்டிப்பார்க்கும் செல்வப்பேறு பெற்றிலமேயென்றெண்ணி வருந்துதலால், கைகேசி சூழ்வினையால் அப் பரிதாபநிலை அடைந்துழலும் தயரதனை யொத்தார் என்று விளக்கினார். சாதகைமாந்தர் என்றதே சுத்தபாடமாக நினைக்கினும், இவ்வாறு பொருள் கொள்ளுதல் உசிதமாகாதென்று என் சிற்றறிவிற் றோன்றுகின்றது. கவிவன்னிப் பான் தொடங்கிய செய்தியும், சந்தர்ப்பமும் யாவை? சக்ரவர்த்தித் திருமகனார் "நாளையேபுவியமை மணிமுடிபுனையும்; இக்கோநகரணிக" என்றுவள்ளுவர் பேரியடிக்கக்கேட்ட ஆடவர் மகளிராகிய இருபாலரும்.

ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
தூர்த்தனர் நீணிதி சொல்லி னார்க்கெலாம்

என்று கவி சிறப்பித்துக்கூறும்படியான நிலையில் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினாராகி, 'ஆழியான்முடி சூடுநாளிடை யானபாவியி தோரிரா' எப்பொழுது விட்டகலுமென் றாத்திரத்தோடு காத்திருந்த நகரவாசிகள் இராமன் முடிசூடும்வைகல் கண்ணுற்ற காலத்து அவ்வூரிற் பொங்கிய வுவகை வெள்ளத்தைச் 'சொல்லலாம்வகை யெம்மனோர்க்காவனவல்ல வென்னினும் உற்றபெற்றியுணர்த்துவாம்'என்றுகூறிக் கம்பர் இப்பகுதி தொடங்குகிறார். இளமங்கையரைக் 'குஞ்சரமனையார்' என்ற செய்யுளி னும், இளம்புருடரைப் 'பொங்கிய வுவகைவெள்ளம்' என்றசெய்யுளினும் வருணித்துக்கூறி, அப்பால் மாதர்கள்கற்பின்மிக்கார் என்ற செய்யுளைக் கம்பர் கூறுகிறார். இச்செய்யுள் அந்நாட்டுமாதரும் மைந்தரும் அடைந்த மகிழ்ச்சிமிகுதியைச் சிறப்பித்துக்கூறும் பாட்டு. அவரவர்களுக்குத் தம்மையறியாது மேலெழுந்த மகிழ்ச்சிப்பெருக்குப் பொங்கிவழிவதை உரைக்குமிடத்து, கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரும் சாவக்கடவமாந்தர் கள் என்ற அவாச்சியம் பிரயோகிப்பாரோ? கம்பர் இச்சந்தர்ப்பத்தில் அமங்கலபதமோ அமங்கலதொனிச் சிலேடைப்பதமோ உபயோகித்தா ரென்று சொல்லத்துணிவது அத் தெய்விகம்வாய்ந்த சான்றோர் கவித் திறமைக்குப் புன்மையு மிழுக்குங் கற்பித்தவாறாகும். அமங்கல வாக் கோடு நிற்காமல், வெந்துயர்க்கடல்வெள்ளத்தில் நகரத்தினரிலொருபகுதி யார் ஆழ்ந்தார்களென்றும், அந்நிலையில் இராமபிரான்தந்தை தசரதனையொத்தாரென்றுங் கூறினால், அது பெருமாள் திருமுடிசூட்டு விழாக்கொண்டாடும்நாள் புலர்ந்ததென்று பூரித்து எக்களிப்புற்றுவிளங் கிய நகரைச் சிறப்பித்துரைத்த கூற்றாகுமா? கைகேசியின் கொடுமை யால் தயரதன், இடியேறுண்ட மால்வரைபோல் மண்ணிடைவீழ்ந்து, பொற்றோள்முற்றும் பூழியடங்கப் புரண்டு, கூறுபடுக்குங் கொலைவாளி னேறும் வன்றுயர் ஆகத்திடைமூழ்கத் தேறானாகிச் செய்கைமறந்தவ னாய் வானுலகுநோக்கிச்செல்லுங் காலமடைந்தவனாயிருக்கும் நிலைக்கோ இச்சந்தர்ப்பத்தில் ஜனங்களின் தகைமையையொப்பாகக்கூறுவது? அது சற்றும் பொருந்தாது.

ஸ்ரீமத் இராமையங்காரும் 'சாதகை' என்றபாடத்தைக் கொண்டாராயினும், அப்பதத்திற்கு வேறு பொருளுரைக்கின்றார். அவர் கொள்வது சாதகை என்றது தமிழ்வழக்குப்பற்றிச் சாகேதபுரியாகிய அயோத்திநகரை யுணர்த்துமென்பதே. சாதகை இவ்வாறு பொருள் படாதென்று நான் சொல்லவில்லை. அதுவே பாடமாயின், இப்பொருள் மற்றையதினும் உரிமையுடையதாகுமென் றெனக்குத்தோன்றுகிறது. ஆனால், இப்பொருள்கொள்ளினும், 'சாதகை மாந்தர்' என்ற பாடத்திற்குச் சில இடர்ப்பாடுக ளுள. சாதகையென்றசொல் அமங்கல தொனிச்சிலேடைப்பதமாயிருத்தல் வெளிப்படை. அன்றியும், "அன்ன மாநகர்.......உற்றபெற்றி யுணர்த்துவாம்" என்று முன்கூறியிருக்க இச்செய்யுளிற் சாதகைக்கண் வாழுமாந்தரென்று மறுமுறைகூற ஆவசியகமில்லை. அதனால், சாதகை எதுகைநோக்கிச்சேர்த்த பதமாய்முடியும். அது கூடிச்சிறப்பன்று. மேலும், முன் குறித்திருப்பதுபோல, மூன்றாமடியின் ஈற்றுமொழி 'அவ்வூர்' என்றாயின, நான்காமடியின் முதன்மொழியாக வைக்கப்பெறும் சாதகை இடத்தைக்குறிக்குமாயின் வீண்சொல்லாகும். செய்யுளின் சீர்நிரப்புதற்பொருட்டுக் கம்பர் இப் பதத்தை வாளாதொடுத்தாரென்று சொல்லவேண்டும்.

அச்சுப்பிரதிகளிற்காணும் 'சாதுகை' என்றபாடத்திற்கு யாது குற்றமேற்பட்டது? ஸ்ரீமத்- இராமையங்கார் அதற் கோர் குறைகூறுகின்றார். அவர் கூறுவதிவ்வாறு: "இவ் வடைச்சொற்குச் சாதுஜனங்கள் எனப் பொருள்கொள்வதால் அந்நகரில் துஷ்டருஞ் சிலருளரோ என்றும் அவரென்னுற்றனரோ என்றும் சங்கிக்க இடமேற்படுகிறது. அன்றி, நகரமாந்தரனைவரையுங்கூறியது மாகாது."இவ்வைய மெளிதில் தீரும் வகையதாம். "கொடுமனக்கூனி" 'சூழ்ந்ததீவினைநிகர்கூனி' 'உள்ளமுங்கோடிய கொடியாள்' என்பனபோன்ற வருணனைக் கிலக்கான மந்தரையும், 'தீயவள்,' 'கொடியாள்,' 'மரந்தானென்னு நெஞ்சினள்' 'இன்னுயிருண்ணும் எரியன்னாள்' என்பனபோன்ற சிறப்புமொழிகளால் வருணிக்கப்படும் கைகேசியும் அயோத்திநகரிலிருக்குமளவில், அவ்வூரில் துஷ்டருஞ் சிலருளரோவென்று ஆசங்கைதோன்றக் காரணமெனனை? அன்றி, துஷ்டர்கள் என்னுற்றனரென்று வினவுகிறார். அதனுடன், நகரமாந்தரனைவரையும் சாதுகை என்றபதத்தாற் கவிகூறியது பொருந்தாதே என்கிறார். சத்காரியமொன்றுநிகழத் துஷ்டர்கள் யாண்டுஞ் சந்தோஷமடையார். கூனியைப்போல மனம்புழுங்கிக் கைகேசியைப்போல நற்சடங்குக்குக் கொடிய இடர்விளைப்பர். சாதுக்களோ நற்சடங்குநிகழ்தல் கண்டுங் களிப்பர். களிப்போரானமாந்தரிற் சிலர் இளையபெருமாளையும், சிலர் வசிட்டனையும், சிலர் தயரதனையும் ஒத்தாரென்று கூறினாரேயல்லது, அவ்வூரிலுள்ளாரெல்லாரையுங்கூறுவதாகக் கம்பர் சொல்லவில்லை. அதுபற்றியே 'உற்றபெற்றியுணர்த்துவாம்' (தக்கவகையை அறிவிப்பாம்) என்ற கவிக்கூற்றுப் பிறந்ததென்று நினைக்கிறேன். ஒருக்

கால் 'மற்றை' என்ற பாடத்தால் ஸ்ரீமத் இராமையங்கார்க்கு நகரில் வாழ்வோரனைவரையும் பற்றிய சந்தேகங்கிளம்பியதுபோலும். 'மற்றை' என்றதே பாடமாகக் கருதினும், அப்பதத்தை அசைநிலையாகவாவது அல்லது வினைமாற்றுப் பொருளிடைச்சொல்லாகவாவது கொள்ளக்கூடுமென் றெண்ணுகிறேன்.

சாதுகைமாந்தர் என்றதொடரை இவ்விடத்துமாத்திரமன்று வேறிடத்தும் கம்பர் பிரயோகித்துள்ளார் யுத்தகாண்டம் மீட்சிப் படலத்தில்

"ஆதலானரக்கர்கோவேயடுப்பதன்றனக்குமின்னே
சாதுகைமாந்தர்தம்மைத்தடுப்பதென்றருளி......"

என்றுவருதல் கவனிக்கத்தக்கது. ஈண்டுச் சாதுகைமாந்தர் என்று கூறியகவி ஆண்டு மதேபொருள்படச் சாதுகைமாந்தர் என்றார். இவ்வாறு ஆன்றோரெடுத்தாண்ட சொல்வழக்கை வழூவெனக்களைதல் முறையன்று. இக்காலத்துத் தமிழ்மொழியிற் 'சாதுகை' என்றபதம் வழங்கவில்லையே என்பார்க்கு முற்காலத்து வழக்கிலிருந்தனவாக ஆன்றோர்பிரபந்தங்களால்விளங்கும் இளகி, தெனித்தல் உவலை போன்றபதங்களை யிலக்காகக்காட்டுவதோடு, எவ்வை (எம்மிளையாள்) என்னை (என் தந்தை) களிறு (ஆண்பன்றி) கண்டி (எருமையினுண்) சேவல் (குதிரை) போன்றபலசொற்கள் பிற்காலத்து வழக்கின்மையையுங் காட்டற்பாலது. வடமொழிச்சொற்களாம் சாதுக: சாதுத, என்றவை முறையே சாதுகை, சாதுதை யென்று தமிழில் மாறிவருத லியல்பு, சாதுகை மாந்தர் என்றாலும் சாதுதைமாந்தர் என்றாலும் பொருளொன்றே. இருமொழிகளும் பொருத்தமுடையனவாம். சாதுஜனங்களென்போர் சற்குணமுடையோர்மாத்திரமன்று ஆங்கார மழுக்காறுபோன்றதீக்குண மில்லாதாரும் அப்பதத்திலுள்படுவர். ஆதலா னவ்வூரில்வாழும் அதமரொழிந்த மற்றெல்லோரும் சாதுகைமாந்தர் என்றபதத்தாற் குறிக்கப் பட்டனராவர். அங்கு அதமகுணமுடையாரிருப்பாராகில் அத்தகையார் இராமசந்திரமூர்த்தியின் மகுடாபிஷேகம் நடக்கப்போகிறதாகக் கேட்டுமனப்புழுக்கமுற்றனரோ அல்லது மனமலர்ச்சி அடைந்தனரோ என்ற விபவகார மிங்கெழ வேதுவில்லை. அன்றி, 'மலையாளவழக்கிற் சாதுஜனங்களென்றபதம் ஏழைஜனங்கள், பேதைஜனங்களென்று பொருள்படுகிறது. அதை நோக்கப் பண்டைக்காலத்தில் தமிழிலும் அம்மொழி யதுபோன்றபொருளு முடையதாயிருந்திருக்கலாமோவென் றையுறற் கிடமுண்டு. அற்றாயின், அவ்வூ ரேழைமாந்தரும் சக்கிரவர்த்தித்திருமகனரைத் தங் காதற்புதல்வன்போனினைத்துத் தயரதச் சக்கிரவர்த்தியேபோல மகிழ்ந்தனரென்றால், ஏனையோர்மகிழ்ச்சிக் கரைகாணாக்கடல்போன்றதென்பது சொல்லாமலே விளங்கும். இக்காரணங்கள்பற்றிச், சாதுகைமாந்தர் என்பதே சரியானபாடமென் றெனக்குத் தோன்றுகிறது.

கே. ஜி. சேஷையர்.

ஸம்ஸ்க்ருத வ்ருத்தமஞ்ஜரி.

(Sanskrit Prosody)

(கூகூ-ம் பக்கத்தொடர்ச்சி)

10. பங்க்தி

4. மேகவிதானம் [14 மாத்ரா] ஸ ஸ ஸ க
நநஞ நநஞ நநஞ ஞ
ரமணி ஸமதி

வரதா மணிநீ யெனவோ ரில்
வருகா தெதுதா னதில்வா ரா

5. மனோரமா [14-மா] =ந ர ஜ க
நநந, ஞந, ஞந, ஞந, ஞ

6. மணிராகம் [15]=ர ஸ ஸ க
ஞந ஞநந ஞநந ஞஞ

7. பணவம் [16]=ம ந ய க
ஞஞ ஞநந நநஞ ஞஞ

8. மயூரஸாரிணீ [16]=ர ஸ ர க
ஞந ஞந ஞந ஞந ஞஞ

9. சுத்தவிராட் [16]=மஸஜக
ஞஞ, ஞநந, ஞந, ஞநஞ.

11. த்ரிஷ்டுப் [14]=ந ந ஸ க க
நநநந நநநந ஞஞஞ

11. ஸமயத்ரகா [14]=ந ந ர ல க
நநநந, நநஞ, நஞநஞ

12. ஸமுகீ [14] ந ஜ ஜ ல க
நநநந ஞநந ஞநநஞ

13. பாணாரஸம் (மௌக்திகமாலா) [16]=பதநகக
=ஞநநஞஞ நநந நஞஞ
பங்க்தி சசிவதஞ

14. வஸந்தமாலிகா [17] ஸ ஸ ஜ க க
நநஞ நநஞ நஞந ஞஞ
ரமணீ ஸதி

15. உக்தா [17]=த ஜ ஜ க க
=ஞஞ நநஞ நநஞ நஞஞ

16. வைதிகா [17]=ர ஜ ர ல க
=ஞ ஞ ஞ, ந, ஞ ஞ ஞ

17. உபஸிதம் [17]=ஜ ஸ த க க
=நஞ நந ஞஞ நஞஞ

18. ஏசரூபம் [18]=ம ஸ ஜ க க
=ஞஞ ஞந ஞ நஞ நஞ ஞ
முகுலம் ஸதி

12. ஜகதீ

16. உஜ்வலா [15]=ந ந ப ர
=நநந நநந ஞநந ஞநஞ

17. புஷ்பிதாக்ரா [16]=ந ந ர ய
=நநநந, நநஞ, நஞந, ஞஞ

18. ப்ரியம்வதா [16]=ந ப ஜ ர
=நநந ஞநநந, ஞநஞநஞ

19. குஸுமவிசித்ரா [16]=ந ய ந ய
=நநநந ஞஞ, நநநந ஞஞ
= 2 சசிவதனு

20. நவமாலினி [16]=ந ஜ ப ய
=நநந நஞந ஞநந நஞஞ

21. புடம் [17]=ந ந ம ய
=நந நந நநஞ ஞஞ ந ஞஞ

22. லளிதா [18]=த ப ஜ ர
=ஞஞ, நஞந, நநஞ, நஞந,ஞ

13. அதிஜகதி

7. சந்த்ரிகா [18]=ந ந த ர க
நநநந, நநஞ, ஞநஞநஞ ஞ

8. சஞ்சரீகாவளி [23] ய ம ர ர க
=நஞஞ ஞஞஞ ஞநஞ ஞநஞஞ

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B A.,B.L.,
மதுரை.

செந்தமிழ்த்தீஞ்சுவை.

செந்தமிழ் என்பது செம்மையாகிய தமிழ் எனவிரியும். கொடுந்தமிழின் நீக்குதற்குச் செந்தமிழ்எனப்பட்டது. திரிபுரமெரித்தவிரிசடைக்கடவுளுங் குன்றமெறிந்த குமரவேளும் பொதியமுனிவனும் முராஞ்சியூர்முடி நாகராயரும் நிதியின்கிழவனும் முதலாயசங்கப்புலவர்களால் ஆராய்ந்து செம்மைசெய்யப்பட்ட தமிழ்என்பது பொருள். "கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து—பண்ணுறத்தெரிந்தாய்ந்தவிப்பசுந்தமிழ்" என்றார்பிறரும், யாண்டிருந்தாராய்ந்தாரோவெனின் பாண்டிநாட்டின்கணிருந்தாராய்ந்தாரேயாவர். அது, "செந்தமிழ்நாடே,—"சந்தனப்பொதியச் செந்தமிழ்முனியுஞ்—சௌந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனுஞ்—சங்கப்புலவருந்தழைத்தினிதோங்கு—மங்கலப்பாண்டிவளநாடென்ப, என்பதனாலறியப்படும். பாண்டிநாட்டினுள்ளுங்கடல்கொண்டமதுரையேயாம்: அது, இறையனாரகப்பொருளுரையானறியப்படும். இதனாற் செந்தமிழ்நிலம்பாண்டிநாடென்பது அறியப்படும்.

இனித்தொல்காப்பிய உரையாசிரியர்கள் செந்தமிழ்நிலம், "வைகையாற்றின்வடக்கும், மருதயாற்றின்றெற்கும், கருவூரின் கிழக்கும், மருவூரின்மேற்கும்" என்ப. அதனாற்செந்தமிழ் நிலம் சோழநாடெனவுணரக்கிடக்கின்றது. பிறரும், "செந்தமிழ்நாடே "மன்றவாணன் மலர்திருவருளாற்—றென்றமிழ்மகிமைசிவணியசெய்த—அடியவர்கூட்டமுமாதிச்சங்கமும்—படியின்மாப்பெருமைபரவுறுசோழனுஞ்—சைவமாதவருந்தழைத்தினிதோங்கு—மைபறுசோழவளநாடென்ப" எனக்கூறுப. சிலர் "செந்தமிழ்க்குவரம்பெனச்செப்பிய—முந்துகாஞ்சியின்" எனக்கச்சியப்பசிவாசாரியர்கூறியவாறு தொண்டைநாட்டுக்காஞ்சிபுரம் என்ப: எனினும் உண்மையைநோக்குமிடத்துச் செந்தமிழ்நாடு பாண்டிநாடேயாம்: அது எதனாலறியப்படுமெனின்?

"தென்பாண்டிகுட்டங்குடங்கற்காவேண்பூழி—பன்றியருவாவதன்வடக்கு—நன்றாய—சீதமலாடுபுனனாடு செந்தமிழ்சே—ரேதமில்பன்னிட்நாட்டென்" என்னுஞ்செய்யுளிலே கொடுந்தமிழ்நாடு பன்னிரண்டனுள்

புனனாடு (=சோழநாடு) மொன்றாகச் சொல்லப்பட்டமையானும், முச்சங்கமும் பாண்டிநாட்டிலிருந்ததாகவே இறையனாரகப்பொருளுரைகூறலானும், முதற்சங்கத்திறுதியிற்செய்யப்பட்டதாக எண்ணப்படும் தொல்காப்பியம், "நிலந்தருதிருவிற்பாண்டியனவையத்" தரங்கேற்றப்பட்டதாக அந்நூற்சிறப்புப்பாயிரங்கூறலானும், அப்பாயிரத்தின்கண் "முந்துநூ"லென்றது அகத்தியத்தையேயாதலின் அவ்வகத்தியத்தைச்செய்தற்கிடமாய பாண்டிநாடே, "செந்தமிழியற்கை சிவணிய நிலமென" அப்பாயிரத்துக்கூறப்பட்டதாதலானும் அறியப்படும் என்க. இன்னும் "தேம்பொழியுஞ் செந்தமிழ் நாட்டினிலெங்குஞ்சென்றிறைஞ்சி" என்னுந் திருத்தொண்டர்புராணச்செய்யுளடியானும் "கண்ணார்கண்ணிக் கடுந்தேர்ச்செழியன்—றமிழ்நிலைபெற்ற தாங்கருமரபின்—மகிழ்நனைமறுகின் மதுரையும்" என்னுஞ்சிறுபாணாற்றுப்படைச்செய்யுளடிகளானும் "உயர்மதிற்கூடலினாய்ந்தவொண்டீந்தமிழ்" என்னுந்திருக்கோவையார்ச்செய்யுளடியானும் அஃது துணிபேயாமென்க. இனித்தமிழ்நாட்டின்கண் எவ்வெந்நிலத்து வழங்கிற்றோ அவ்வந்நிலமே செந்தமிழ்நிலமாக்கொள்ளப்பட்டனவென்பாருமுளர். அங்ஙனமாயின், "செந்தமிழியற்கை சிவணியநிலத்தொடு" எனவும் "செந்தமிழ்நிலஞ்சேர்பன்னிருநிலத்தினும்" எனவும் ஆசிரியர் வரையறைகூறார். ஆதலின் அது பொருந்தாது. இன்னுமிஃதாராயத்தக்கது, வாய்த்துழி ஆராய்தும்.

இனித் தீஞ்சுவை என்பது இனிமையாகியசுவை எனவிரியும். மற்றைச்சுவைகளின் நீக்குதற்குத் தீஞ்சுவையென்றும் ஏனையமொழிகளெல்லாஞ் செவிக்கின்பம்பயவாது புளிப்புச்சுவை, கைப்புச்சுவைபோலாக இஃதொன்றே செவிக்கின்பம்பயத்தலின் செந்தமிழ்த்தீஞ்சுவை எனப்பட்டது. தமிழ் செவிக்கு மிகவு மின்பம்பயப்பதொருமொழி என்பதுபற்றியே "உரையுறைதீந்தமிழ்" என்றும் "ஆய்கின்றதீந்தமிழ்" என்றும் பிறருங்கூறுப. இன்னுந் திருவிளையாடற்புராணநூலாசிரியரும், நடராசபிரான் தென்றிசைநோக்கி சமீபித்துவந்துவந்து ஆடுவது தமிழ்ச்சுவையைத் தன்செவியின் மாந்துதற்கோ: என்னுங் கருத்தமையச்செய்த, "கடுக்கவின்பெறுகண்டனுந்தென்றிசைநோக்கி-யடுக்கவந்துவந்தாடுவானடலினிளைப்பு—விடுக்கவாரமென்காறிருமுகத்திடைவீசி—மடுக்கவுந்தமிழ்திருச்செவிமாந்தவுமன்றோ" என்னுஞ் செய்யுளானும், பசிகொண்டவர் அமுதைஉண்டபொழுது அவ்வமுது அப்பசியைத்தணித்

தலையன்றி, பசிதணிந்தவுடன் வெறுப்புங்கொடுக்கும், உண்ணும் பொழுது உண்ணுவார்க்கு மனவுருக்கத்தையுங் கொடுக்கமாட்டாது; இத்தமிழாகியவமுதோ உணர்வாகிய பசியெடுத்துண்பவர்களுக்கு இன்பம்பயத்தலானே மீட்டும் மீட்டும் உண்ணவேண்டுமென்னும் விருப்பத்தைஉண்டாக்குதலான் அப்பசியைவளர்ப்பதும், அப்பசியைவளர்த்தலானேவெறுப்புக்கொடாததும், தன்னை உண்ணுவாரைமனமுஞ்செவியுமுருகிநின் றுண்ணச்செய்வதுமாயுள்ளது என்னுங் கருத்தமைய, "உவட்டாதணையாதுணர்வெனும்பசியெடுத்—துள்ளமுஞ் செவியுமுருகிநின்றுண்ணும்—பெருந்தமிழமுதம்." என்றும், மகளிர்தனங்களுக்கு ஒப்புக்கூறுங்கால், "தேவர்மருந்துந்தென்றமிழ்ச்சுவையு—மிட்டடைத்தேந்தி" என்றும், கல்லாடரும் செந்தமிழின்மைச் சிறப்பித்துக்கூறுதலானுமறியப்படும். கரும்புக்குத்தீஞ்சுவைபோலச் செந்தமிழ்க்குத்தீஞ்சுவை இயற்கையென்றுசொல்லுவதேயன்றிப் பிறிதொன்றுரைத்தல் கூடாது. எனினும், சீதளதேசங்களிலுள்ளகனிகளினும், உஷ்ணதேசங்களிலுள்ளகனிகள் அதிகம் இனிமைதருதல்போல உஷ்ணதேசத்துப் பாஷையாதலின் இன்பந்தருமென்பாரும், பெரும்பாலும் வலியஉறுப்புக்களிற் பிறவாத எழுத்துக்களாலானமையின் இன்பந்தருமென்பாருமுளர். எங்ஙனங்கூறினும், தமிழ் இன்பம் பயப்பதொன்றென்பதை மறுப்பாரிலர். இய லிசை நாடகம் என்னுமுத்தமிழுள்ளும் இயற்றமிழ் புலவர்க்கே இன்பம்பயக்கும், ஏனைய யாவர்க்குமின்பம்பயக்கும்.

அங்ஙனமாய இச்செந்தமிழ்மொழியும், இயற்சொல், திரிசொல்என இருவகைப்படும். இயற்சொல்லாவது—இயல்பாற் பொருளுணரப்படுஞ் சொல். திரிசொல்லாவது:—அரிதிற்பொருளுணரப்படுஞ்சொல். இவ்விரு சொற்களையும் சேனாவரையர் வழக்குச்சொல்லுஞ்செய்யுட்சொல்லும் என்பர். இவ்விருமொழியுமே செந்தமிழ்நிலத்துமொழியாம். இவ்விருமொழிகளாலுமே சங்கச்சான்றோர்கள் செய்யுளியற்றினார்கள். திசைச்சொற்களும் வடசொற்களும் அருகிவருதலுமுண்டு. அதுபற்றியே இலக்கியங்கண்டிலக்கணமியம்பிய தொல்காப்பியரும், இயற்சொற்றிரிசொற்களை முன்வைத்தும், திசைச்சொல் வடசொற்களைப் பின்வைத்தும், இயற்சொற்றிரிசொல் திசைச்சொல் வடசொலென்—றனைத்தேசெய்யுளீட்டச் சொல்லே" என்று கூறுவாராயிற்று. நன்னூலாரும் "திசைச்சொல் வட

சொலனுகாவழி"என அவற்றைச் செந்தமிழ்ச்சொற்களுக்கு மிகத் தூரமாகவைத்துச் சொல்லினர். இங்ஙனம் தமிழோடு ஒப்புமைபெரிதுமுடைய திசைச்சொல் வடசொற்களையே தமிழ்மொழியோடொருங்கொத்து இன்பம்பயவாவென ஆசிரியர் ஒதுக்கிவைப்பாராயின், ஒப்புமை சிறிதுமில்லாத ஆங்கிலச்சொற்களைத் தமிழ்மொழியோடுகலப்பது வேப்பெண்ணெயை கருப்பஞ்சாற்றோடு கலந்ததுபோலாகுமேயன்றிப் பிறிதொன்றாகாது. திசைச்சொற்களுக்கும் வடசொற்களுக்கும் ஒப்புமை யாதோவெனிற் கூறுதும்:—திசைச்சொற்கள் கொடுந்தமிழாயினும் தமிழொடொருமொழியாதலாலும், வடமொழி பெரும்பாலும் எழுத்தொற்றுமையும் இலக்கணவொற்றுமைபுமுடைமையாலும் ஒற்றுமையுடைய மொழிகளேயாம். எழுத்தொற்றுமையாவது, பொதுவெழுத்துக்கள் யாவும் வடிவானும், உச்சாரணமுறையானும், சிறப்பெழுத்துக்களுள் சிலவொழிய எனைய பெரும்பாலும் உச்சாரணமுறையானும் ஒற்றுமையுடைமை. இலக்கணவொற்றுமையாவது:—தமிழில், உயிர் என்பதை அச்சென்றும், மெய்யென்பதை அல்லென்றும், குறில்என்பதை இரச்சுவமென்றும், நெடில்என்பதைத் தீர்க்கம்என்றும், வல்லினம்மெல்லினமென்பவைகளைப் பரிசாக்கரமென்றும், யரலவ என்பவைகளை அந்தஸ்த அக்கரம் என்றும், வேற்றுமைகளை விபத்திஎன்றும், வினைமுதற் பொருளைக் கருத்தாஎன்றும், செயப்படுபொருளைக் கருமமென்றும், கொள்பவனைச் சம்பிரதானம்என்றும், நீக்கப்பொருளை அவதிஎன்றும், உடைமைப்பொருளைச் சம்பந்தமென்றும், இடப்பொருளை அதிகரணம் என்றும், விளியைச் சம்போதனமென்றும், உலகவழக்கை இலௌகிகப் பிரக்கிரியையென்றும், செய்யுள்வழக்கை வைதிகப்பிரக்கிரியை என்றும், தொகையைச்சமாசம் என்றும், வேற்றுமைத் தொகையைத்தற்புருட சமாசமென்றும், அன்மொழித்தொகையைவெகு விரீகி சமாசம் என்றும், பண்புத்தொகையைக்கருமதாரயசமாசம் என்றும், உம்மைத்தொகையைத்துவந்துவ சமாசமென்றும், தோன்றல் திரிதல், கெடுதல் விகாரங்களை ஆகமம் ஆதேசம் லோபமென்றும், உறழ்ச்சியை வைபாஷிகமென்றும், உருபுத்தொகைவிரிகளை லுக்கு, அலுக்கு என்றும், தொழிற்பெயரைக்கிருற்பாவமென்றும், வினையாலணையும்பெயரைக்கிருதந்தமென்றும், வினைப்பகுதியைத்தாது என்றும், பெயர்ப் பகுதியைப்பிராதிபதிக

மென்றும், எச்சங்களை ஆர்த்ததாதுகமென்றும், வினைமுற்றுக்களைச்சார்வதாதுகமென்றும், ஆகுபெயரை இலக்கணையென்றும், எடுத்தல் படுத்தல் நலிதல் என்பவைகளை முறையேஉதாத்தம், அநுதாத்தம் சுவரிதம் என்றும், இறப்பு நிகழ்வு எதிர்வு என்பவைகளைமுறையே பூதம்வர்த்தமானம் பௌடிகமென்றும், தன்மைமுன்னிலை படர்க்கை என்பவைகளை முறையே உத்தமமத்திமபிரதமபுருடனென்றும் ஆண்பால் பெண்பால்களை பும்லிங்க ஸ்திரீலிங்கம் என்றும், தொகைவிரிகளைச் சமஸ்தவியத்தபதமென்றும் வடமொழியினுங் கூறப்படுதலின் இருமொழி யிலக்கணமும் பெரும்பாலுமொன்றுதல். தமிழ்க்குரிய விசேடவிலக்கணம், பாலுணர்த்தும்வினை விகுதிகளையுடைமையேயாம். தமிழினும், ஆண்பால் பெண்பால்களையுணர்த்தும் விகுதிகள் அஃறிணைக்கண் இல்லை. அது என்பது தமிழின்கண் நபும்சகலிங்கம். (அலிப்பாலாகும்) இதுபற்றியே பிரயோகவிவேகநூலாரும்,

> " சாற்றியதெய்வப்புலவோர்மொழிக்குந்தமிழ்மொழிக்கும்
> வேற்றுமைகூறிற்றிணைபாலுணர்த்தும்வினைவிகுதி
> மாற்றருந்தெய்வமொழிக்கில்லைபேர்க்கெழுவாயுருபுந்
> தேற்றியலிங்கமொருமூன்றுமில்லைசெழுந்தமிழ்க்கே.

என்றார். இங்ஙனந்தமிழ்மொழிக்கும் வடமொழிக்கும் பெரிதும் ஒற்றுமை உண்மைகருதிய ஆன்றோர், வடமொழிச்சிறப்பெழுத்துக்களைத் தமிழெழுத்துக்களாகத்திரித்து, வடசொல்எனத்தமிழில் வழங்குவாராயினர். அங்ஙனமாக்கினமையானே வடசொற்களும் தமிழ்மொழியோடொருங்கொத்து இன்பம்பயப்பனவாயின, "பாதனாதவேதபாத்துவாசனென்பான்—விரதவேள்விதன்னின்மேனகையாலான—சுரததாதுவீழ்ந்ததுரோணகும்பந்தன்னில்—வரதனொருவன்வந்தான்வசிட்டமுனியையொப்பான், என்னுஞ்செய்யுளப்படித்துணர்ந்துகொள்க. தொல்காப்பியரும் திசைச்சொல் வடசொற்களைச் செய்யுட்சொல் என்றது இதுபற்றியே. தமிழொழி நிலம் பதினேழும் திசைமொழிநிலமாகத் தொல்காப்பியர் கொள்ளாமையின் யாழுங்கொண்டிலம். அந்நிலமொழிகள் பிற்காலத்துத்தமிழில் வந்து வழங்கியனபோலும்.

இனிச், சுவையும், சொற்சுவையும் பொருட்சுவையுமென இருவகைப்படும். அது 'சொல்லினும் பொருளினுஞ்சுவைப்படலின்பம்'

என்பதனாலறியப்படும் என்க. சொற்சுவையாவது சொல்லின்கட் டோன்றுஞ்சுவை. பொருட்சுவை—பொருளின் கட்டோன்றுஞ் சுவை நன்னூலார் சொல்லிய பத்தழகினுள்ளே "சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழிபுணர்த்தல், ஓசையுடைமை" என்னுமைந்தும் சொற்சுவைபயப்பனவாகும். "ஆழமுடைத்தாதல், உலகமலையாமை, விழுமியதுபயத்தல், விளங்குதாரணத்ததாகுதல்" என்னும் நான்கும் பொருட்சுவைபயப்பனவாகும். ஈண்டுச்சுவையெனயாம் எடுத்துக்கொண்டது சொற்சுவைபொருட்சுவைகளையே எனக்கொள்க. நவரசத்தையன்று.

சுருங்கச்சொல்லலாவது :—தான் கருதியபொருளை சிலசொற்களாற் சொல்லுதல். சுருங்கச்சொல்லலிலே திருவள்ளுவரும் கம்பருஞ் சிறந்தவர்கள். திருவள்ளுவர் சுருங்கச்சொன்னமைக்கு "ஐந்தவித்தானாற்றலகல்விசும்புளார்கோமா—னிந்திரனேசாலுங்கரி" என்னுஞ் செய்யுளையும், கம்பர்சுருங்கச்சொன்னமைக்கு "வந்தநம்பியைத் தம்பி தன்னோடும்—முந்தைநான்மறைமுனிக்குக்காட்டி" என்னுஞ் செய்யுளடியையும், "அஃதைய" என்பதையும் உதாரணமாகக்கொண்டு விளக்கிக் காட்டுதும். ஐந்தவித்தான், என்னுஞ் செய்யுளிலே, ஐம்பொறிகளெனக் கூறிற்சொற்பல்குமென்றஞ்சி, 'ஐந்து' என்றும், புலன்களிற் செல்ல விடாது அடக்கினவன் எனக்கூறிற், பல்குமென்றஞ்சி 'அவித்தான்' என்றும், ஐந்தவித்தானாகிய கௌதமனெனக்கூறிற் பல்குமென்றஞ்சி, 'ஐந்தவித்தான்' என்றும், தவத்தானெய்தி நின்றசாபவலியெனக்கூறிற் பல்குமென்றஞ்சி, 'ஆற்றல்' என்றும், செல்வவலியும், சேனைவலியும், அரசுவலியும், தேவவலியும், உடைய இந்திரனே எனக்கூறில் சொற்பல்குமென்றஞ்சி, 'அகல்விசும்புளார்கோமான்' என்றும், அகலிகைபொருட்டுக் கௌதமனால் இந்திரன்சாபமெய்தி நின்றகதைமுழுவதையும் கூறிற்சொற்பல்குமென்றஞ்சி, 'கரி' என்றும், அரசவலியினுந்தேவவலிமிக்கதென்பதற்குப்பொருந்திய எனிற்பல்குமென்றஞ்சிச், 'சாலும்' என்றும், வேண்டுஞ்சொற்களையெல்லாம் மிகச்சுருக்கிக்கூறியிருத்தல்காண்க. இங்ஙனமே கம்பரும், தன்பால்வந்த என்பதை, வந்த, என்றும், ஸ்ரீராமனாகிய நம்பி என்பதை, நம்பி, என்றும், தம்பியாகிய இலக்குவன்என்பதை, தம்பி என்றும், இளையோர் போர்க்குரியர் அல்லர் என்பதைஅறியும் முதிர்ந்த அறிவுடையமுனிவனென்பதை, முந்தைநான்மறைமுனிஎன்றும், இரா

மனதுபொருதற்குரிய ஆற்றலில்லா இளமையைக்காட்டி என்பதை, காட்டி என்றும், ஸ்ரீராமன் நகரவாசிகளை நோக்கி, நீரும் உமதுமனைவியரும் மக்களும்வலியரா? உமதுசெயல்களியாவும் வலியவா? என்று வினவியபோது, நகரவாசிகள் யாமும்வலியேம்; எமதுமனைவியரும் மக்களும் வலியர்; எம்செயலும் வலிது என்று சொல்லவேண்டியதை, அங்ஙனமேக்ஷேமம் என்னும் பொருளமைந்த அஃது என்று மூன்றெழுத்துச்சுட்டுப் பெயருளடக்கியும் இவ்வாறு சுருக்கிக்கூறியிருத்தல் காண்க. இங்ஙனமே இவர்களுடைய செய்யுள்யாவும் சுருங்கச்சொல்லப்பட்டிருத்தலும் இன்பம் பயத்தலை அறிஞர் உணராநிற்பார். இச்சுருங்கச்சொல்லலாகிய அழகு ஆங்கிலபாஷைக்கண் இல்லை என, ஸ்ரீமாந்—செல்வக்கேசவராயமுதலியார் அவர்கள் தாமியற்றிய "தமிழ்" என்னும் பெயரையுடைய உரைநூலில் எழுதியிருக்கின்றார்கள். அதனை இங்கே தருகின்றும். தாய்தகப்பன் நீங்கலாக ஏனைய முறைப்பெயர்களெல்லாம் இங்கிலீஷில் தொடர்மொழிகளே................நாம் வந்திலம் சென்றிலம் எனவழங்கும் எதிர்மறை முற்றுக்களை இங்கிலீஷில் உரைப்பதற்கு மூன்றுசொற்கள் வேண்டும்...........உருபேற்றஅடியேனுக்கு என்னும் குறிப்புவினையாலணையும் பெயரை அமைக்க ஆறுசொற்கள்வேண்டும், என்றும், கூறி, இன்னும் கூறுப. ஆண்டுநோக்கியுணர்க.

இனி, விளங்கவைத்தலாவது; சொற்சுருங்கவைப்பினும் அச்சொற்களாலேதாங்கருதியபொருளை, விளங்கவைத்தல். உய்த்தலில் பொருண்மைஎன்பதும் இது. அஃது, "ஐந்தவித்தானாற்றலகல் விசும்புளார்கோமா—னிந்திரனேசாலுங்கரி" என்புழி, ஐந்து என்பது அத்தொகையையுடைய பலபொருளையுணர்த்துமாயினும், ஐம்பொறியையுணர்த்த 'அவித்தான்' என்றும், அங்ஙனமே அவித்தான் என்பதும், முனிவன் என்னும் பொருளையுணர்த்த 'ஐந்தவித்தான்' என்றும், முனிவரைப்பொதுவாகஉணர்த்தும் 'ஐந்து அவித்தான்' என்பது கௌதமனை உணர்த்த 'இந்திரனே' என்றும், ஆற்றல் சாபவாற்றலையுணர்த்தவும், சாபமெய்தினமையைஉணர்த்தவும் 'கரி' என்றும், அவன் வலியினும் இவன்வலிமிக்கதென்பதை யுணர்த்தச் 'சாலும்' என்றும், ஐந்தடக்காதவன் என்பதுதோன்ற 'அகல்விசும்புளார்கோமான்'என்றும், இங்ஙனமே சொற்களை ஒன்றோடொன்று புணரவைத்தலாலேதத்தம் பொருளைவிளங்கவைத்தலோடு, தாங்கருதிய பொருளையும் நூலாசிரியர் விளங்கவைத்தலையானறியப்படும்.

கம்பரும்,

வாரணம்பொருதமார்பும்வரையினையெடுத்ததோளும்,
நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவுந்,
தாரணிமௌலிபத்துஞ்சங்கரன்கொடுத்தவாளும்,
வீரமுங்களத்தேபோட்டுவெறுங்கையோடிலங்கைபுக்கான்.

என்புழி, போட்டென்றது களத்தேபோட்டு என்றதனால், மார்புமுதலியவற்றை இன்றையுத்தகளத்தில் தோற்றசரிதங்களையும், பொருதல், எடுத்தல், உரைத்தல், அணிதல், கொடுத்தல், முதலியவினைகளானே, மார்புந், தோளும், நாவும், மௌலியும், வாளும் முதலியவற்றான் அவன்முன் வெற்றியெய்தினமையையும் விளங்கவைத்தனர். எங்ஙனமெனில், வாரணம்பொருதமார்பும் என்றதினாலே முன் திக்குவிசயத்திலேதிக்குயானைகள் கோட்டாற்குத்தியவிடத்து இராவணன்மார்பு அவைகள் முரியும்படிவலிபெற்று நின்றமையையும், களத்தேபோட்டு என்றதனாலே, இன்று, போர்க்களத்திலே, அநுமன்கையினாற்குத்துண்டு,

"அள்ளாடியகவசத்தவிர்மணியற்றனதிசைபோய்,
விள்ளாநெடுமுழுமினெனவிழவேபொறியெழநின்,
றுள்ளாடியநெடுங்கால்பொரவொடுங்காவுலகுலையத்,
தள்ளாடியவடமேருவிற்சலித்தானறம்வலித்தான்."

என்றுகூறியவாறு, அவன்மார்பும் உடம்பும் சலித்தமையையும்; வரையினையெடுத்ததோளும் என்றதனால், முன்இராவணன் கைலாயத்தை ஒருபுயங்கொடு நிமிர்த்துவலிபெற்றமையையும், களத்தேபோட்டு என்றதனாலே இன்றுபோரிலே,

"தொடுத்தவெண்வகைமூர்த்தியைத்தனக்கிவெண்பொருப்போ,
டெடுத்ததோள்களுங்கெழுந்திலனிராமனுக்கிளையான்." என்றும்.

"எடுக்கலுற்றவன்மேனியையேந்துதற்கேற்ற,
மிடுக்கிலாமையிலிராவணன்வெய்துயிர்ப்புற்றான்." என்றும்.

கூறியவாறு, அப்புயங்களானே இலக்குவனைத்தூக்கமுடியாதுவெய்துயிர்ப்புற்று நின்றமையையும்;

"நாரதமுனிவற்கேற்பநயம்படவுரைத்தநாவும்,"

என்றமையானே, முன் இராமனுடைய முன்னேனாகிய, அனரணியனோடு பொருது, அவனைக்கொல்லப்போனபொழுது, நாரதமுனிவர்வந்து, "மானுடனைக்கொல்லல்வழக்கன்று" எனக்கூறி, வேண்ட, அவன், "எம்பெருமான்கூறிற்றன்றோ இன்று செயுமது" எனத்தனக்குவெற்றி நலம்பொருந்தச்சொன்னதா என்பதையும், களத்தேபோட்டு என்ற தனாலே, இன்றுபோரிலே, இலக்குவன் றன்கையிலுள்ளபத்து வில்லையும், ஒருசேரவெட்டியபோது, அவனைவியந்து,

> "நன்றுபோர்வலிநன்றுபோராள்வலிவீரம்.
> நன்றுநோக்கமுநன்றுகைக்கடுமையுநன்று.
> நன்றுகல்வியுநன்றுநின்றிண்மையுநலனும்.
> என்றுகைமறித்திராவணன்றொருவலீ."

என்று இலக்குவனைப்புகழ்ந்தமையானும்,

> "ஆளையாவுனக்கமைந்தனமாருதமறைந்த
> பூளையாயினகண்டனையின்றுபோய்ப்போர்க்கு
> நாளைவாவெனநல்கினனுகிளைகமுகின்
> வாளைதாவுறுகோசலநாடுடைவள்ளல்."

எனக்கூறியவாறு ஸ்ரீராமன் போரிலே எல்லாமிழந்துநின்ற இராவணனை நோக்கி; இராவண! தனியேநிற்கும் உன்னைக்கொல்லல் அறமன்று ஆதலால் நீ இன்றுபோய்ப்போர்க்கு நாளைவாஎன அவனுக்கு "பேராண்மை என்ப தறுகணொன் றுற்றக்கால் ஊராண்மை மற்றத னெஃகு" எனத்தேவர் கூறியவாறு ஊராண்மை செய்தபொழுது, அவன் ஒன்றும் பேசமாட்டாது சென்றமையானும், அந்நாவானது தோற்றமையையும்; தாரணிமௌலிபத்தும் என்றதனாலே, முன்பலரை வென்றுவாகைமாலைசூடியமுடிகள் என்பதையும், அம்முடிகளை இன்று போரிலே, "தலையில் பொன்னின் மாமணி மகுடத்தைப் புணரியில் வீழ்த்த" என்றுகூறியவாறு, ஸ்ரீராமனால் வெட்டப்பட்டுப்புணரியில் வீழ்ந்தமையையும்; சங்கரன்கொடுத்தவாளும், என்றதனால், அழியாத வாள்என அதன்வென்றியும், களத்தேபோட்டுஎன்றதனால்,

> "மற்றும்வெம்படைவழங்கினன் வழங்குறுமுன்னம்,
> இற்றவிந்துகவெரிகணையிடையறவெய்தான்"

எனக்கூறியவாறு, அப்படைவெட்டுண்டவாற்றையும்; வீரமுங்களத்தேபோட்டு என்ற தனால், இதற்குமுன்போரிலேகாட்டியவீரம், இன்று ஸ்ரீராமன்முன்னே

தோற்று, “அறங்கடந்தவர்செயலிதென்றுலகெலாமார்ப்ப, நிறங்கரிந்திட நிலம்விரல்கிளைத்திட நின்றான், வெறுங்கைநாற்றினன் விழுதுடையாலன்னமெய்யன்.” எனக்கூறியவாறு தலைகுனிந்து காற்பெருவிரலால் நிலத்தைக்கீறிநின்றமையையும் விளங்கவைத்தமையுங்காண்க. இங்ஙனமே இக்கவிகள்யாவும் சுருங்கச்சொல்லினும் பொருள்விளங்கவைத்தலால் சுவைபொருந்த நின்றமைகாண்க.

இனிதினின்றோர்க்கினிமையாவது, படித்தோர்க்குச்சொல்லின்பந் தோன்றுதல் என்றது, சொற்களைத் தொடுக்குங்கால் செவிக்கு இன்பந்தோன்றுஞ் சொற்களைச்சேர்த்துத்தொடுத்தல். செவிக்கின்பந்தருஞ் சொற்களாவன:—வல்லோசையின்றிமெல்லோசை பயக்குஞ் சொற்கள். இதனை, அணிநூலார் ஒழுகிசை என்ப. அது “ஒழுகிசையென்பது வெறுத்திசையின்மை” என்னுஞ் சூத்திரத்தானறியப்படும். உதாரணமாக, வல்லெழுத்துவிரவப்பெற்ற “துடித்துத்துடித்துத்துடுப்பெடுத்த கோடல்” என்பதைப்படித்துச்செவிக்கின்பம் பயவாமையும், “பால்போலுமின்சொற்பவளம் போற்செந்துவர்வாய்” என்பதைப்படித்துச் செவிக்கின்பம் பயத்தலுமறிக. வல்லோசையுடைய வடமொழிகளைச் சேர்த்து இயற்றும் செய்யுள்களும் செவிக்கின்பம்பயவாவென்க. இங்ஙனமே, நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் “அசையுஞ்சீருமிசை யொடுசேர்த்தி—வகுத்தனருணர்த்தலும்வல்லோராறே” என்னுந் தொல்காப்பியச்சூத்திரவுரையில், “தருக்கிப்புணர்ந்து தணந்ததமது—பொருப்புப்புடைத்துப்புடைத்து” என்புழி, வெண்பாவினீற்றடி இன்னோசைத்தாகாமையால், “பொருப்புத்தழைந்தபொழிந்து” எனமெல்லோசைசேர்க்க இன்னோசைத்தாயிற்று எனவும், “கருப்புச்செறுப்புப்பாப்பு” எனின், வெண்பாவினீற்றடி, இன்னோசைத்தாகாமையின், “கருப்புக்கொழுந்துகவர்ந்து” எனமுடிக்கின் இன்னோசைத்தாய் வெறுத்திசையின்றாமாறுமுணர்க. எனவும், முறையேகூறுதல்காண்க,

இன்னும்வரும்,

சி. கணேசையர்,

புன்னாலைக்கட்டுவன்.

பொருணூற்சிறப்பு.*

———(●)———

ஒருமொழியாலுலகனைத்துமுருப்படுமென் றருஞ்சுருதி
யுரைத்தவாற்றால்
வருமறையாகமக்கலையாய்ப்பொருட்டுணிவாயாவுமாய்
வயங்காநின்ற
திருமொழியைச்சித்தியுத்திநிகழ்மொழியையனவரதஞ்
சிந்தித்தேத்தும்
பெருமொழியைக்குருமொழியைப்பிறைமுடித்தோன்
பெறுமொழியைப், பேணிவாழ்வாம்.

அருந்தமிழ்ப் பொருணூற்சிறப்பி |லொருசிலவற்றை யாராய்ந்தறி யப்புகுந்தனம்.

"ஆன்றசிறப்பினறம்பொருளின்பமென
மூன்றுவகைநுதலியதுலகமவற்று
ளறனுமின்பமுமகலாதாகிப்
புறனெனப்படுவதுபொருள்குறித்தன்றே"

என்பது பன்னிருபடலம். "மூன்றுவகைநுதலியதுலகம்" என்றத னால் அறிஞர் வீட்டினைத் தனித்துக்கூறார்; ஏனைய பொருட்பகுதிக ளோடுசார்த்தி அவற்றது மிகுதியாகவும் நீக்கமாகவுங் கூறுவரென்பது பெறப்பட்டது. என்னை? சிற்றின்பம், பேரின்பமெனவும்; இல்லறம் துறவறம் எனவும்; இம்மைப்பொருள், மறுமைப்பொருள் எனவுங் கூறினாராகலின், இவற்றது விரிவைப் பின்னர்க்காட்டுதும். "அறனு மின்பமுமகலாதாகி" என்பதனால், புறத்திணை அனைத்துப்பொருளையுங் கூறுமென்பதும் நடுவண்நின்ற பொருளையே பெருகக்கூறுமென்பதும் பெறப்படுவனவாம்.

---

* இது யாழ்ப்பாணத்துத் தமிழ்வளர்க்கும் பெருங்கழகத்தார் முன்னிலை யிற் படிக்கப்பட்டது.

"இன்பமும்பொருளுமறனுமென்றாங்
கன்பொடுபுணர்ந்தவைந்திணை"

என்பது தொல்காப்பியம். "அன்பொடுபுணர்ந்தவைந்திணை" என்றதனால் எஞ்சிய இருதிணையுள் கைக்கிளைத்திணை ஒருதலையாய அன்பினையுரைப்பது என்றும் பெருந்திணை பொருந்தாவன்பின்புறத்ததாய்ப் பொருந்தாநின்ற அறனும் பொருளும் துறக்கமும் கூறுவது என்றும் அறியலாகும். இங்ஙனம் அகமும் புறமும் ஒற்றுமைப்பட்டபொருளவாயின் இணைச்சொற்களால் வேற்றுமைபுறக்கூறியதென்னையோவெனின், இணைச்சொற்களாற்கூறப்படும் பொருட்கள் ஒற்றுமையும் வேற்றுமையுமுடையவாயிருத்தலன்றோ சால்பு; ஈண்டு உரைப்படும்பொருளை நோக்க அகமும் புறமும் ஒன்றுந்தன்மைய, உரைவோனாகிய தலைமகனை நோக்க வேறுந்தன்மைய. அகம் என்பது இல்லம். பார்ப்பனமகளிர் தங்கணவரை அகத்துக்காரர் என்றுசொல்லும் வழக்கு இன்றுமுளது. இல்லக்கிழத்தியினதுசார்பினாற் றலைமகன் அறமுதலாங்கிளையும் பெறும் ஒழுக்கத்தை அகத்திணையெனவும், மாற்றரசரும் பிறருஞ்சார்பாக நாற்பொருளையும் பெறும் ஒழுக்கத்தைப் புறத்திணையெனவும் வைத்துத் தமிழ்மொழிமாந்தர் புலனெறிவழக்கஞ் செய்தாரென்க. இங்ஙனம் பொருள்கொள்ளுமிடத்து, "அகத்திணை", "புறத்திணை" என்பவற்றை "Life at Home", "Life Abroad" எனப் பெயர்த்தெழுதலாகும். கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றும் அறியும் இன்பமனைத்தும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவவாதலால் வீரப்போரின்பமும் உள்ளமே நிலைக்களமாக அறியப்படுவது; அநுபவித்தார்க்கன்றிப் பிறர்க்குப் புலனாகாதது; அங்ஙனமாதலின் அகம் என்பதற்கு உள்ளம் எனப் பொருள்கொள்ளின் வீரப்போரின்பத்தையும் அகத்திணையெனக் கொள்ளல்வேண்டுமே; ஆதலால் அகம்என்பதற்கு இல்லம்எனப் பொருள் கொண்டதே பொருத்தமாமென்க. அஃதன்றியும், ஒண்டொடி மகளிர் பாற்பெறும் இன்பமாத்திரமே இன்பமெனச்சாதித்தலும் பொருந்தாது;

புயவலிபடைத்த அடலரியேறனையானுக்குப் போர்க்களத்துப்பெறும் இன்பம் சொன்மடங்கு மென்மொழிமாதர்பாற்பெறு மின்பத்திலும் பன்மடங்கதிகமாதலின், அருந்தமிழ்க்கவியைப் படிக்கும்போது கவிஞர் கருத்தொடு நங்கருத்து ஒன்றுபட அனுபவிக்குமின்பமும் "கருத்தொப்ப ஆதாவுபட்டவின்பமேயாகும்."

இனி நுண்மதித் தமிழ்மாந்தர் வீட்டியல்கூறியமரபினை யாராய்வாம். சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாகிய வீடு இலக்கணவகையாற் கூறுந்தரத்ததன்று. வீடுகூறிய வேனையமொழிமாந்தரும் அதனைக்காரணவகையாலும் எடுத்துக்காட்டுவகையாலுங் கூறினரேயன்றிச் சொல்லுக்கடங்காப்பேரின்பத்தைச் சொல்லுக்கடக்கமுயன்றாரல்லர். காரணவகையாற்கூறுமிடத்துப் பெருந்திணையாலுங் காஞ்சித்திணையாலுங் கூறப்படும். பின் அநுபவவகையாற்கூறுமிடத்து அகத்திணை அன்புமார்க்கமாகும்; புறத்திணை அறிவுமார்க்கமாகும். இவற்றை வடநூலார் முறையே பக்தியோகம், ஞானயோகம் என்பர். அருளுங் குரவனுங் கூட்டிவைக்கக் கண்டகாட்சியும் கலந்தவுவகையுங் கம்பலையுங் கண்ணீரும் பிரிவாற்றாமையும் நீடுநினைந்திரங்கலும் அகனைந்திணைக்கேயுரியவாம். ஐம்புலக்கள்வர் ஆவினைத்தந்தோம்ப அவரையடர்த்தெதிர்த்து அஞ்சுதகச்சென்று அரணத்தைவளைந்து வெற்றியுந் துதியும்பெறுவது புறத்திணையொழுக்கமாம். "வேல்கெழுதடக்கைச் சால்பெருஞ்செல்வ"னாகிய தமிழ்ப்பெருங்குரவன் மறவொழுக்கத்தால் மாயைமக்கள் மூவரையுங்கடிந்து அன்பின்மேனதாகிய அறவொழுக்கத்தால் வள்ளிநாயகியாரைமணந்து புறத்திணை அகத்திணை யொழுக்கங்களை உலகிற்கு நன்குணர்த்திய வரலாற்றுண்மையைத் தமிழ்மொழிக் கந்தபுராணத்திலுந் தணிகைப்புராணத்திலுங் காணலாகும்.

இனித் திணைவகையை யாராய்வாம். அந்தணரருமறைநூல் மன்றலெட்டு எனக் கூறிற்று. தமிழருமறையாகிய "அன்பினைந்திணை கந்

திருவழக்கத்தை யைந்தாகக் கூறிற்று. இருமொழிமரபையும் இயைய வைத்து நோக்குங்கால், பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், அசுரம், இராக்கதம், பேய் எனப் பன்னிரண்டாம். இவற்றுட் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும், பெருந்திணை. ஈற்றினின்ற மூன்றுங் கைக்கிளைத்திணை;— "பாங்கமைந்த பன்னிரண்டென்ப," "முன்னைய மூன்றும் கைக்கிளைக்குறிப்பே—பின்னர் நான்கும் பெருந்திணைபெறுமே." என்னும் பொருளதிகாரச்சூத்திரப்பொருளை நோக்குக.—ஆகவே மன்றலெட்டு நிமித்தம்பன்னிரண்டு என்ற வகையாவும் திணை ஏழு என அடங்குவ. பெருந்திணை, குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், கைக்கிளை யென்னும் அகம் ஏழினுக்கும் முறையே காஞ்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை, பாடாண்என்பன புறனாம்.—குறுகு, பகு, முகிழ், நை, மறு(க்), காய், கா(க்), நொ, வெகுள், வகு, வன்பு, துன்பு, உரிஞ் என்னும் வினையடிகளோடு தல், அல், அம், ஐ, சி என்னுந் தொழிற்பெயர் விகுதிகளுள், ஏற்புடையனகூடிப் பிறந்த தொழிற்பெயர்களாமோ குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம், காந்தை, நொச்சி, வெட்சி, வாகை, வஞ்சி, தும்பை, உழிஞை என்னுந் திணைப் பெயர்கள் என்னும் முடிபு ஆராய்தற்குரியது,—அஃதெங்ஙனமாயினும் பாலையும் பாலைப்புறனாகிய வாகையும் "பகு" "வகு" என்னும் அடிகளினின்று பிறந்தனவாமென்றல் பொருத்தமுடைத்து. ஆசிரியன் பாலைக்கு நிலம்வகுத்தானல்லன்; அஃதொழிந்தனகளுக்குமே படுநிலை வையத்தைப் பகுத்துக்கொடுத்தனன்; பாலை ஏனையநான்கனுள்ளுஞ் செறிந்து நிற்குமியல்பினதாதலின். இனி உயிரும் உடலும், மலரும் மணமும்போல ஒருமித்திருந்தாரிருவரை அறமும்பொருளுங்காரணமாகப்பகுத்து நிறுத்துமியல்பினது பாலைத்திணை. பாலைப்புறனாகிய வாகையினியல்பை நோக்குங்காற் பிறப்பொத்து ஒன்றித்திருந்த மக்கட் கூட்டத்தினைச் செய்தொழில்வேற்றுமைச் சிறப்புநோக்கி அந்தணர்

என்றும், அரசரென்றும், வணிகரென்றும், அறிவரென்றும், தாபதரென்றும், பொருநரென்றும் வகுத்து நிறுத்தியது வாகைத்திணை. பாலையும்வாகையும் பெருகக்கூறும் பொருட்பகுதிகள் அறமும் பொருளுமேயாம்; கைக்கிளையும்பெருந்திணையும் துறக்கங்கூறுஞ்சிறப்புடைய எனவும்; கைக்கிளையும் பாடாணும் ஒருதலையாய அன்பின்பாலஎனவும் முன்னர்க் கூறினும். எஞ்சிய அகனைந்தும் சிறப்புடையின்பப்பொருளை, எடுத்துக் காட்டுவகையால் விட்டியல் கூறுவ; அங்ஙனமே எஞ்சிய புறனைந்தும் வீரப்போரின்பப்பொருளை, எடுத்துக்காட்டுவகையால் விட்டியல் கூறுவ.

மனமொழிமெய்களாலறியவொண்ணாப் பேரின்பப்பொருளை யாண்டும் வெளிப்படையாகக் கூறுவது இயலாததொன்றாகலின் ஆசிரியர் குறிப்பாகவுணர்த்தியது மரபாயிற்று. சொற்றொடர் கருவியாக வறிவது பொருள். சொல் பொருளையுணர்த்துவ்வழி வெளிப்படையாகவுங் குறிப்பாகவு முணர்த்தும். அங்ஙனம் உணர்த்தும் பொருளும் பல்வேறு வகைப்பட்ட மாந்தரது மனநிலைக்கேற்பத் திரிவுபட்டுநிற்கும். அவரவர்கொண்டபொருளே அவரவர்க்கு மெய்ப்பொருளாகும். உதாரணமாக இன்பமென்னுஞ்சொற்கேட்டவிடத்துக் கட்குடியான் கள்ளுண்டு களியாடும் இன்பத்தை நினைவுகூருகிறான், அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். பரிசவின்பத்தின்பாலதாகிய இணைவிழைச்சியினது பொய்யியல்பையுணராதான் அவ்விணைவிழைச்சியையே இன்பமென வெண்ணுகிறான், அவனுக்கு அதுவே மெய்ப்பொருள். கண்ணுக்கினிய காட்சியையும் செவிக்கினிய இசையினையும் மூக்குக்கினிய நறுநாற்றத்தினையும் இன்பமென எண்ணுவோர்க்கு அவையே மெய்ப்பொருள்; போர்க்களத்துச்சென்று பகைவரையெறிந்தும் அவர் எறிந்த வேலை மார்பகத்துத் தாங்கியும் புறங்காட்டாது நிற்பதே இன்பமெனக் கொண்டவீரனுக்கு அதுவே மெய்ப்பொருள். இல்லத்திருந்து குலமகளோடுகூடிக் கண்டும் கேட்டும் உண்டும் உடுத்தும் உற்றும் உயிர்த்தும் அனுபவிப்பதே இன்பமெனக்கொண்டோனுக்கு அதுவே மெய்ப்

பொருள். இனிப் பெண் என்பது "ஊற்புச்சட்டம், மூடைக்குரம்பை, புழுப்பிண்டம், மையம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து" என்று இவ்வாறு நினைத்து உலகைத்துறந்து கற்பகக்காநீழலில் அரமகளிர் அடிவருடவீற்றிருப்பேனென நினைந்து தவஞ்செய்வானுக்கு அதுவே மெய்ப்பொருள். இறைவனது பொன்னடிநீழலையடைந்து அழியாவின்பத்தைப்பெறுவேனென்று நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். அதுவும்வேண்டேன் இன்னுயிர்க்குயிராகிய இறைவனுக்குப் பணிசெய்தலை மேற்கொள்வேனென நினைப்பவனுக்கு அதுவே மெய்ப்பொருள். இங்ஙனே மாறுபட்டபலவும் இன்பமென்னும் ஒருமொழிக்கே பொருளாயினவா றுணர்க. "நானேயவள், அவளே தான்" என்னுந் தொடர்மொழி செவிப்படலும் இலக்கணவித்துவான் அது தலைமகனுந் தலைமகளும் பொருவிறந்தாரென்பதை யுணர்த்திற்று என்பான். வேதநூல்வல்ல அந்தணன் முற்பட்டு "அன்று அன்று; இச் சொற்றொடர் 'அது நீ ஆனாய்' என்னும் மகாவாக்கியப்பொருளைக் குறிப்பினால் உணர்த்துவது" என்பான். சைவநூல்வல்லான் முன்னிருவர் பொருளையும் மறுத்துப் பொருவிறந்தாராவார் இறைவனும் இறைவியும், இம்மொழி அவரது நித்தியமாகிய அபேதத்தன்மையை உணர்த்திற்று என்பான். தார்க்கிகன் இவரனைவரையும் மறுத்து, தான் எழுவாய் அவள் முடிபு; பின்னும் அவள் எழுவாய்; தான்முடிபு ஆதலால் இத்தொடர்மொழி இதரேதரம் என்பான். உலோகாயதன் புன்னகைபுரிந்து "ஐயன்மீர்" இல்லதும் இனியதும் புனைந்துரையன்மின். மாவும் வல்லியும்போலும் எள்ளும் அரிசியும்போலும், பாலும் நீரும்போலும் கலந்திருக்கும்நிலைமையைக் கூறிற்று இச் சொற்றொடர் என்பான்; இங்ஙனம் ஐந்திணைத்துறையனைத்தினுக்கும் பொருள் கொள்ளுதல்கூடுமாதலினலன்றோ, வாதவூரடிகளது ஐந்திணைக் கோவையைநோக்கி,

"ஆரணங்காணென்பரந்தணர்யோகியராகமத்தின்
காரணங்காணென்பர்காமுகர்காமநன்னூலதென்ப
ரோரணங்காணென்பரெண்ணரெழுத்தென்பரின்புலவோர்
சீரணங்காயசிற்றம்பலக்கோவையைச்செப்பிடினே."

என ஆன்றோர் வியந்து கூறினர்.

பலதிறப்பட்டமொழியினும் பரந்துபட்டநூல் பலவும் அறம் பொருளின்பம் வீடென நாற்பாலுள் அடங்குவன. இவை தொகை விரியாகத் தமிழ்மொழியகத்துச் செறிந்துநிற்பன. தமிழ்மொழிக்கு நூலாவன சங்கச்சான்றோர்தொகுத்த நூல்களேயாம்; ஏனையநூல்கள் இவற்றின் வேறுபட்டவல்லவாகலான்.—இராமன்கதை, சீவகன்கதை, நளன்கதை என நிற்பனவற்றுள் இராமன், சீவகன், நளன் எனவருமிடங்களில் "தலைவன்" எனக் குறியீடுசெய்தும் ஒழிந்தவற்றையும் ஏற்றபெற்றி தலைவி, பாங்கன், பாங்கி, அடியோர், வினைவலர் என இவ்வாறு கொண்டும் நோக்குங்கால், பிற்காலத்து நூற்பொருள் முன்னோர் நூற்பொருளின் வேறுபடாது நிற்பது புலப்படும். இனிச் சங்கத்தமிழ்நூலனைத்துந் தொல்காப்பியத்தினு ளடங்குவன. தொல்காப்பியத்து எழுத்துஞ்சொல்லும் பொருளினுளடங்குவன. பொருள்கூறும் ஒன்பது இயலும் அகத்திணையியல் புறத்திணையியல் என்னும்இரண்டனுளடங்குவன. புறம் அகத்தினுளடக்கம். அகத்திணை பெருமானடிகள் அருளிச்செய்த "அன்பினைந்திணை"யினு ளடக்கம்; "அன்பினைந்திணை" அன்பினுளடக்கம்; அன்பு அகரவுயிரினுளடக்கமென மேலோர் கூறுவர். இனித் தோற்றப்பொருளனைத்தும் முதல் கரு உரியென அடங்குவன. கருப்பொருளும் உரிப்பொருளும் நிலம் பொழுது என்னும் முதற்பொருளினுடங்குவன. இவை ஆதிபகவனாகிய முதலினையுடையன; "அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றேயுலகு" என்னும் பொய்யாமொழிக்குப் பொருள்கொள்ளுமிடத்து "எழுத்து" என்பது முதல்சார்பாகிய முப்பத்துமூன்றெழுத்தினையும் அவ்வெழுத்துக்களின்

கூட்டத்தினுற்பிறந்த சொற்களையும் சொற்றொடர்கருவியாகிய பொருட் பகுதி யனைத்தினையுங் குறிக்கும். ஆகவே "எழுத்தெல்லாம்" என்பது "சொற்பிரபஞ்சம்." உலகு என்பது நிலம் பொழுது என்னும் முதற் பொருள்களாலாயது. நிலம் என்பது நிலத்துக்குக் காரணமாகிய நீரை யும், நீருக்குக்காரணமாகிய தீயையும், தீக்குக்காரணமான வளியையும், வளிக்குக்காரணமான வானையுங் கருதும். "நிலந் தீ நீர் வளி விசும்போ டைந்துங்கலந்த மயக்க முலகம்," ஆதலின் "உலகு" என்பது "பொருட் பிரபஞ்சம்." சொல்லும் பொருளும் பேதாபேதமாய் நிற்பன. சொன் முதலாகிய அகரவுயிர்போலப் பொருண்முதலாகிய இறைவன் தானே யாய் நிற்பதனோடு யாண்டும்வியாபித்து யாவற்றினும் செறிந்துநிற்பா னென வுணர்த்தும்பொருண்மையது செந்நாப்போதாருரைத்த உத்தர வேத முதற்செய்யுள்.

இவ்வாறம் ஆராயுங்கால் ஒல்காப்பெருந்தவத் தொல்காப்பியனு ருரைத்த பொருணூலும், திருவள்ளுவப்பயனும் பொது நூலாய்ப் பொருணூல்கிளையும் உணர்த்துபவாய் இம்மைமறுமைப்பயனை ஒருங்கு தந்து நிற்பன என்பது புலப்படும். பெருமானடிகள் "என்னைபாவம்; அரசற்குக் கவற்சிபெரிதாயிற்று; அதுவும் ஞானத்திடையதாகலான், யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என அருள்சுரந்து அளித்த "அன்பி னைந்திணை"யும், வாதவூரடிக ளருளிச்செய்த ஐந்திணைக்கோவையும் சிறப்புநூலாய் அருமறைமொழியாய் வீட்டியலைவிளக்கி நிலவுவன. இந்த நான்குநூலும் "தமிழ்நான்மறை"யென ஆன்றோரால் போற்றப் படுவன. பொன்னும் மணியும் பொருளெனக்கருதா நுண்மதித்தமிழ் மாந்தரால் பொருளெனக்காக்கப் படுவனவிவையே. தமிழ்முதுகுடிப் பிறந்த திருவுடைப்பெருமக்களனைவரும் இவற்றைப்போற்றிப் படித்து இம்மை மறுமைப்பயனைப் பெறுவார்களாக.

ஸ்ரீராமகிருஷ்ணமடம், திருமயிலை. } பண்டித-மயில்வாகனன் B. Sc. (Lond)

அருவியன் காதை.

[௯௪-ம் பக்கத்தொடர்ச்சி.]

(வேறு)

எத்திசைக்கு மெல்லைஎண்ணல் அற்றகன்ற பாதலம்
வைத்தகூ ரிருட்டிரள், வளர்ந்தபொங்கர் அங்கமேல்
தொத்துகார், எயிற்றுமின், துவைத்தலாம் மடங்கலும்
பெற்றலால், பிறங்கல்மீ துறங்குவானம் மானுமே. (32)

ஆரவாரத் தானும்மஞ்சும் அஞ்சுகாரி ணானும்மீ
சேரவாம் புலாலினானும் நீயஜீவனானும்நோம்
போரவாவில் உயிர்கள்வவ்வு பெற்றியானும் முற்றினும்
கோரபாதலம் கொதித்தெழுந்த வேலை போலுமே. (33)

கருமையில் கடந்துதோன்று கங்குல்காளம் மங்குல்வான்
பெருமையில் பரந்த அம்பு ராசிமாதர் கேசம்மெய்ப்
பருமையில் சிறந்தமாப் பிறந்தகார்ப் பிழம்பெலாம்
தருமையென்ன மேனிபாத லத்தர்தாங்கு பான்மையே. (34)

உருண்டகண்ணர், ஒழுகுவாயர், உயருமூக்கர், எரியென
மருண்டகோபர், வாங்குநாவர் மடமைவஞ்ச இருளினும்
இருண்டஎண்ணர், எற்றுகாலர், இம்பரற்ற செம்புதோய்
சுருண்டரோமர், சுடுமென்னர்மெய் சொல்லலாம் தரத்ததோ? (35)

நெஞ்சில்வஞ்ச மதுமறந்து நேர்ந்திடார்நன் னெறியுமே,
துஞ்சினும் கனவிலன்ன தோற்றம்என்ன லாகுமோ?
நஞ்சினில் நறவும்,நாறு நாயின்நாவி வாசமும்,
பஞ்சிலுண் பழமும்,பாறை தன்னில்பாலும் வாய்க்குமோ? (36)

மதியிருண்டு மது அயின்று வழிமறித்து மனிதநற்
கதிமறந்து களிசிறந்து கலகமேல் கண்ணுடையராய்
புதியநஞ்சின் மொழிபுகன்று புலைவளர்ந்த குடியர்போல்
விதியில்பாத லத்தர்வாயின் வீழ்வநியில்த் தீயவே. (37)

மைவடிந்த அந்தகாரம் வைத்தகானம் தத்துற
கைவடித்த மாவும்கண் கனல்பொடித்த மாவுமே
மெய்வெடிக்க விட்டஓசை வெடியினோடு மிடையுமேல்
பொய்வெடிக்கும் அன்னர்வாய்ப் புடைஇடிக்கி டென்னலாம். (38)

நல்லர்இல்லை, பொல்லர்இல்லை, நடுவும்இல்லை, நவிலா
வல்லர்இல்லை, வலியர்இல்லை, மெலியர்இல்லை, வாய்வதாம்
எல்லும்இல்லை, இருளும்இல்லை, இன்பம்இல்லை துன்பமும்
இல்லையாகி நின்றவரின் தன்மைஎன்றும் ஒன்றரோ. (39)

ஆயஏத* தேசமென்னும் அந்தகார பந்தமாம்
நீயதேசம் மீதுகோன்மை செய்பவன், திகில்தரு
காயன்,வாய் கடித்தகண்டன், கண்ணில்மின்னல் காட்டுவோன்,
பேய்கள்தாழும் பேயென்றஞ்சும் பெற்றிஉற்ற புலுதனே. (40)

இடிக்குமின்னல் எய்ந்தபோல் இசைந்தசீர்ப் புலுதன்கை
பிடிக்குமாது பாசபன்னி பீடுகூறல் ஆவதோ?
நொடிக்குள்ஜீவன் வல்லிநிற்கும் லோகம்மோதும் நாயகன்
முடிக்குமேலும் ஆட்சிபூக்கும் மூடனெப் பிறங்கினாள். (41)

வேறு.

பாதலத் தெங்கணும் பரவு சீர்த்தியன்,
மாதவள் மனநிற்கும் வாய்த்த காதலன்,
தீதுமுன் செய்தெலாம் தீமை அன்றெனப்
பூதலத் தொருமறம் புரிய எண்ணினான். (42)

மணம்கமழ் மேனியள், வனப்பின் செல்வியள்,
குணம்மிகு உருதேசிக் கொம்பனாள் தனை
கணம்ஒன்றில் இம்பரே கடத்திச்செய்து வல்
அணங்கினுக் கணங்கும் யாழ்வலற்கும் அங்ஙனே. (43)

என்றுமேல் வரவெண்ணி இருந்த தூதர்பால்
ஒன்றுரை செப்பினன்: "உலகில் இந்நொடிச்
சென்றுரு தேசியை திசையெலாம் இசை
துன்றுபெண் மாசியைத் துணைந்து சேர்ப்பிரால்" (44)

---

* Hades.

"அம்மதி கவர்ந்திவண் அடையினே இருள்
செம்முமந் தேயமும் நேசுவீ சிடும் ;
எம்முகம் தனில்நகை இலங்கும்" என்றனன்
தம்முகம் மலர்தரத் தூதர் தாவினர். (45)

வேறு.

பாவி நால்வர் தாவிப் பார்
மேவு முன் அருவி யன்
ஆவி யென்ன உன்ன லாம்
தேவி செய்கை தேர்கு வாம். (46)

வேறு.

கதிரவன் கதிரும்காணுக் கவின்மரப் பொதும்பர்மேவிச்
சதிருற இருளாம்நங்கை தனிக்கொலு விருக்கும் கானம்;
அதிசயம் காணஆங்கே அன்பனை அழைத்துப் புக்காள்;
புதியன வாகும்காட்சிப் பூவையர் விடுவரோ காண் ? (47)

பாதையின் இருபால்பூத்த பன்மலர் நறவினோடு
தாதுகுத் தினியதோழர் தம்பதம் விளக்கி "எம்பால்
போதந்திர், ஏழையோம் என்புரிகுவம்? மனத்தால் நல்லீர்
ஏதமும் இல்லேம்"என்றே இன்னகை அரும்பி நின்ற. (48)

கொம்பனாள் வருதல்நோக்கி கொடியனார் ஒசிந்து "தோழி
வம்பவிழ் மரங்கள்ஆசை வரரையாம் தழுவி நின்றேம்;
அம்புவிக் கழகுசெய்யும் அருவியன் தடந்தோ ளார்வத்
தின்புறத் தழுவிக்கொண்டாய்" என்றகம் ஏங்கி நின்றார். (49)

பஞ்சினிற் பணிக்குநொய்ய பதயுகம் பதைக்கும் என்ன
அஞ்சிய கொம்பனாரும் அலர்மழை வழியில் தூவி
"கஞ்சமென் முகத்தாய்!கானம் காணிய வந்தாய் கொல்லோ
வஞ்சகம் அறியாய்,இங்ஙன் வருந்தவோ வந்தாய்?" என்றார். (50)

காதலன் கையின்தன்கை கனிவினிற் பிணித்து மெள்ள
மாதவள் நடந்தாள்ஏனும் மாழ்கினள், மருங்குல் வாடி
வேதனை உழன்றாள்,முத்த வேர்வினைப் பொடித்தாள் மேனி,
ஆதலி னன்றேமந்த மாருதம் அசையா நிற்கும். (51)

செடிகளாம் தெரிவைமாரும் 'திருமலர் தூவிச் சாரும்'
கொடிகளாம் பேதைமாரும் கொம்பெனும் பெதும்பை மாரும்
முடிகளால் மங்கைக்கெங்கும் முறைப்படி சிறப்புக் காட்ட
கடிமலர்க் குழலினாரும் காந்தனும் கானம் புக்கார். (52)

வேறு.

பாசியின் கறைபடர் பாறை உள்ளது,
தூசியின் அம்பரம் தொடரும் குன்றது,
காசுலாம் கனிபல காட்டும் மாண்பது,
மாசுலாம் லோபர்போல் மறைத்தல் பூண்பது. (53)

குன்றின்வீ ழருவியின் குமுறல் கொள்வது,
பொன்றிகழ் மணல்தடம் புனையும் பொற்பது,
என்றுநீர் பாய்தரும் யாறும் ஏற்பது,
கன்றுறும் கரையெலாம் கரும்புல் போற்பது, (54)

கண்ணகல் நளிர்சுனை கதுவும் தாவது,
விண்ணகல் நெடுமரம் மிடையும் காவது,
மண்ணகல் மாட்சியும் மணமும் சான்றது,
எண்ணரும் இருட்பிழம் பிருக்கை போன்றது, (55)

தாவிவீழ் மாருதம் தடியும் சார்பது,
ஓவியப் புள்பல உலவும் கொம்பது,
கூவுதல் தாவுதல் குழைதல் புல்லுதல்
மேவுதல் உற்றது, மிளிரப் பெற்றது, (56)

உள்ளினில் உவகையோ டுழவை மாமரை
துள்ளிவீழ் தடத்தது, தூக்கம் செய்வது,
நள்ளிருட் பேயொடு நடக்கும் கண்டகக்
கள்ளர்கள் திரிதரும் கடுமை மிக்கது. (57)

இத்தகை வனத்தில் எற்புலரும் காலையாழ்
வித்தக னொடுரு தேசி மேவலும்,
உத்தமர் சேரிடம் உயரும் என்பரால்
அத்தடம் திரிந்ததும் அறைய வேண்டுமோ? (58)

வேறு.

சந்தநீள் தருவாம் தாங்குகா லோங்க,
தழைதரு பாசிலைக் கொம்பாம்
பந்தல்மேல் விரித்துப், பழமொடு பூவில்
பற்பல தீபமும் காற்றி,
செந்திருப் பதங்கள் நொந்திடா வண்ணம்
சீர்கெழு புல்விரி வீழ்த்தி,
பைந்தொடி கானப் பாவையும் இவரைப்
பரிவுகூர்ந் தழைத் தாநின் றனளே. (59)

அழகென்ப தொருசார் அவிர்ந்திட, ஒருசார்
அழகென்ப தடங்கிட, அருகே
அழகென்ப வளர, அழகென்ப தளர,
அழகென்ப அசைந்திட, அன்றி
அழகென்ப ஓட, அழகென்ப ஒலிப்ப,
அழகென்ப தூங்கியே சலிப்ப,
அழகென்ப யாவும் அவ்வன மங்கை
அணிந்தனள் காதலர் அழைப்பான். (60)

பாசிலை யாகும் தூசினைப் புனைந்து,
பம்பு நன்மலர் அணிதிருத்தி,
ஏசலில் மனத்தின் இன்கனி கனிந்தே
எழில்முகை யாம்நகை அரும்பி,
மாசறு கந்தப் பொற்பொடி தூவி,
'வருக'என் றழைப்பபோல் கூவி,
வீசிய கொம்பாம் கைகளால் அவரை
விளித்தனள் தருஎனும் தருணி. (61)

பெரியவர் செய்யும் பெருமையே போல
பெரியவர் எனும்பெயர்க் கின்டு
உரியவ ராவர் சிறியவர் சிறப்பும்
ஒகையோ டேற்றிடு வாரால்,

அருகுறை நெடியாள் அகமகிழ் தூங்கி
ஆடினள், அலர்ந்தவள் ஒத்தே
முருகுறை தாது மூடினள், நிறைந்தாள்,
மொழிவதோ மகிழ்ச்சியின் செயலே? (62)

மரம்பாறும் வன்மை மனத்தரே மகிழின்
மலரினும் மெல்லிய மனத்தர்
தாம்மிகு தொய்யல் தாங்குவர், ஐயம்
சாலுமோ, சார்வுள கொடியார்,
யாரொடு மங்கை வருதலு நோக்கி,
வாய்த்தபேர் வழுதெனக் காட்டி,
இரங்கழு நெஞ்சம் இன்புரை ஒழுக,
இழிகணீர் வாருல்கி ஒசிந்தார். (63)

தண்ணெகு நெஞ்சம் தகையளி மிஞ்ச
சடலமும் கசிந்து தம் முகங்கள்,
ஒண்ணில வளைய ஒளித்திரள் விரிப்ப,
ஓதலாம் நிலைகடந் தருக்கும்
பெண்ணிளங் குயில்போல் இன்னிசை பெய்து,
பேரெழில் வாய்ந்தலைக் காத்தில்
எண்ணாரும் வாச மலர்த்தொகை ஏந்தி,
ஏரியாம் நாரியர் எதிர்ந்தார். (64)

ஓடைதன் முதுகர் ஒடியும், ஒலிதந்
துவைதருந் திவலைநீர்க் கொண்டும்,
ஏடவிழ் வாச மலர்அளைந் தண்டும்,
இளையதென் றியம்பிட இயலா
ஆடவர் மகளிர்க் ககக்கனல் மூட்டும்
அம்முது குன்றலாம் தென்றல்,
சேடவிர் கானம் சிறியர் சேர,
சிறந்தது களிர்ப்புது மணமே. (65)

புதியகல்விமுறை.

[௮0-ம் பக்கத்தொடர்ச்சி].

II

மாண்டிஸோரிமுறை.

மாண்டிஸோரி அம்மை யென்பார் இதாலியதேசத்து மாது, அவருக்கு டாக்டர் என்றபட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மேலைத்தேசங்களில் அவ்வம்மையாருடைய முறையே கையாளப்பட்டுவருகிறது. இவ்வம்மையார் இத்தாலிபாஷையில் அநேக நூல்கள் எழுதியிருப்பினும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருப்பவை இரண்டொருநூல்களே. அவைகள் மாண்டிஸோரிமுறை, மாண்டிஸோரி கையேடு (D. R. Montessori's own Handbook) ஆசிரியக்கூற்றுமுறை (Pedagogical Anthropology) என்பனவே. இவைகளுள் மாண்டிஸோரி கையேடு என்பது ஒருசிறுநூல். அதனில்மிக இளம் பருவமுள்ள மூன்றுவயதுதொட்டு பத்துவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு விளையாட்டு முறையாகக்கல்விபுகட்டவேண்டுமென்றும் இன்னின்னவிதமான விளையாட்டுப்பொருள்களை உபயோகிக்கலாமென்றும் கூறப்பட்டிருக்கிறது. மாண்டிஸோரிமுறை என்னுநூல் இரு பகுதியினையுடையது. முதற்பகுதி 1. குழந்தைகளின் வாழ்க்கையின் மேனோக்கு (A Survey of the child's life) 2. இக்காலக்கல்வியின் மேனோக்கு (A Survey of Modern Education) 3. பிரத்தியட்சக் கல்விஞானத்திற்கு யான்செய்தஉதவிகள் (My contribution to ex-premental Science) 4. ஆசிரியனன்மதி (The preparations of the Teacher) 5. சுற்றிருப்பு; (Enviroaments) 6. கவனம் (Attention); 7. விருப்பு (Will; 8. அறிவுடைமை, (Intelligence) 9. கற்பனை (Imagination) என்பனவைகளையுடையது. இரண்டாம்பகுதியில் எழுமுதல் பதினொருவயதுடைய மக்களுக்குக் கல்விகற்பிக்கவேண்டியமுறைகள் என்றுபெயரிடப்பட்டிருக்கிறது. அது 1. இலக்கணம் (Grammar) 2. வாசித்தல் (Reading) 3. கணிதம் (Arithmetic)

4. பூகணிதம் (Geometry); 5. சித்திரமெழுதல் (Drawing); 6. சங்கீதம் (Music); 7. யாப்பு (Metrics); எனப் பகுக்கப்பட்டிருக்கிறது. அதனில் முதற்பகுதியின் சாராம்சம் பின்வருமாறாகும்.

குழந்தைப்பருவத்தின்மேனோக்கு:—என்னை அநேகர் ஏழு வயதுக்கு மேற்பட்ட சிறுவர்கட்குற்றமுறை அதற்குங் கீழ்ப்பட்டவயதுடையாருக்கும் பொருந்துமா? அக்குழவிகள் பெற்றோர்முதலானவர்களைப்பின்பற்றி நடக்கவேண்டாமா? மானிடவாழ்க்கை மிக்க அரிதாகையான் தன்னலமறுப்புடையவர்களாக விருக்கக்கற்றுக்கொள்ள வேண்டாமா? என்றவினாக்களை எழுப்புகின்றனர். இன்னும் சிலர் ஏழுவயதில்கற்கவேண்டிய எண்சுவடிவருங்கால் இடையூறுகள்பல உண்டாகுமாகலான் அவர்களை அவர்கள் விருப்பப்படிவிடலாமா? என்கின்றனர். இவ்வினாக்களெல்லாம் குழந்தைகளின் 'சுயேச்சை' சுதந்தரம் கொடுத்துக் கல்விபுகட்டவேண்டுமென யான்வெளியிட்டகொள்கைகளைப்பற்றி எழுகின்றன. இவைகள்காலம் செல்லச்செல்லமாறக்கூடுமாயினும், இக்காலத்து அதற்கு ஒருவிதமான சமாதானம் சொல்லியேதீரவேண்டும். முற்காலத்திலே பிள்ளைகளின் கால்கள் வளையாமலிருக்கக்கட்டுகட்டுவதுண்டு, நன்றாகப் பேசுவதற்கு நாவின் அடிபுறத்தைத்திறப்பதுண்டு; காதுகள் அகலப்படாமலிருக்கத்தலைமுடியிடுவதுண்டு; கண்நன்றாகத்தெரியகாதோலையிடுவதுண்டு; நற்றாய் மார்முக்கெடுப்பதுண்டு இவ்வழக்கங்கள் அநேகநாட்டில் நின்றுவிட்டன இன்னும் சில நாட்டில் வழங்குகின்றன. நிற்கக்காரணம் தற்காலக் குழந்தைவளர்க்கு முறையேயாம், இதனில் என்னசொல்லப்படுகிறது? குழந்தை அதனதன் உரியபருவத்தே நடக்கவும்; பேசவும், மூக்குண்டாகவும் பெறுமேயன்றி நாம் அதனைத்தூண்டுவதாற் பிரயோஜனமில்லை; ஆகையால் அவைகளை இயற்கையின்படி காலக்கிரமத்துக்கு விடவேண்டுமென போதிக்கப்படுகிறோம். அப்படிதேகவளர்ச்சிக்குச் சொல்லும்போது அறிவுவளர்ச்சிக்கும் அதேவிதம்தானே செய்யக்கடமைபட்டிருக்கிறோம்? தேகவளர்ச்சிக்குச்சுயேச்சை கொடுக்கும்போது அறிவுவளர்ச்சிக்கும் சுயேச்சையாக அதாவது அவர்கள் விருப்பப்படி விட்டால் அறிவுவளருமென்பதே. எவ்வாறுதேக உறுப்புக்களை நாம் தீண்டாமல் விட்டால்

நடை, கொடி, பாவனைகளில் குழந்தைகள் அழகுபெறுமோ அவ்விதமே கல்வியில் சுயாதீனம் கொடுத்தால் நடக்கை, அறிவு, மனப்பான்மை இவைகள்வெகு தெளிவாக விருத்தியடையும்; ஆசிரியன்மாரான நமக்கும் அது மனோசாந்தியையும் அறிவின் முதிர்ச்சியுண்டாகும் விதத்தையும் காட்டும்.

தேகப்பாதுகாப்புக்கும் அறிவுவளர்ச்சிக்கும் ஒற்றுமையுண்டெனலாம். அதனிலிருந்தே அநேக உதாரணங்கள் காட்டலாம். முற்காலத்தில் குழந்தைமரணம் அதிகமாக இருந்தது. அக்காலத்தில் ஜனங்கள் குழந்தைகள் பிழைத்தால் போதுமென்றிருந்தார்களேயன்றி மூக்கு தட்டையாயிருக்கிறது, நீண்டு கூராகவில்லை; கால்நேராக இல்லை என்று சொன்னதில்லை. இவ்வளவு அதிகப்பட்ட மரணத்திற்குக் காரணம் சில தொற்றுவியாதிகளும், சுத்தமின்மையுமே. இவைகளைக் காப்பாற்றவே சுகாதாரநூல் ஏற்பட்டது. குழந்தைகளைப்பாதுகாக்குமுறையுமுண்டாயிற்று. பாதுகாப்புமுறை இயற்கையான முறைகளை ஏற்படுத்திற்று. வயதுக்குத்தக்கஉணவும், பலகாலஉணவுநீக்கமும், மாசற்ற உடையும், வேண்டியவைகள் என்று குறிப்பிடப்பட்டது, பிள்ளைச்சாலைகள், தொட்டில்கள், குழந்தைகட்கேற்ற உணவுகள் இவைகளெல்லாம் பாதுகாப்புமுறையில் ஏற்பட்டபலனாகும். ஆகையால் குழந்தைகளின் மனவளர்ச்சியை அவைகளின் தேகவளர்ச்சியோடு ஒருவாறு ஒப்பிடலாம்.

இவ்வாறாகச் சுகாதாரமுறை குழந்தைகட்குச்சுயேச்சையைக் கொடுத்தது, இதைவிட குழந்தை மரணத்தை நிறுத்தியும் நோயினின்றும் தவிர்த்ததும் பேருபகாரமாகும். ஆயினும் சுகாதாரமுறையா குழந்தைகளை உயரம், பருமன், அழகு, கனம் இவைகளில் வளர்ச்சியடையச்செய்தது? இல்லை. ஆயினும் அம்முறை அக்குழந்தைகளின் வளர்ச்சிக்குத்தடையாயிருந்தவைகளை நீக்கிற்று. குழந்தைகளை மென்மையான மலருக்கு ஒப்பிடலாம். ஆனால்பூவேறு குழந்தைவேறு என்பதை உணரவேண்டும்.

குழந்தைகள் வேறு என்ற மாத்திரையான் அதன் பாத்தியங்கள், உரிமைகள், தானென்னவென்று உணரவேண்டும். அவைகள் வருங்கால மனிதர்களல்லவா? இப்பொழுது அவைகள் தேகவறு, மனோவறு,

இவைகளையிழந்து வேலை செய்கின்றன. அவைகளின் தாய்மார் ஆரம்பித்துச் செய்து காட்டியவைகளை விடாமற்செய்து வருகின்றனவாயினும் அவைகள் கஷ்டமானவைகளும், வேலைமிகுதியானதுமாம். அவைகள் பிறந்தகாலையில் அவைகளின் சக்தி அடங்கியிருந்தது. அதிர்ஷ்டம், அன்பு, தற்செயல் இவைகளிடம் குழந்தை ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. சமூகநிலையில் அவர்களது இருப்பு என்னநிலையுடையதென்று கவனிப்போம். நாம் இப்பொழுது இருபதாம் நூற்றாண்டில் வசிக்கிறோம்; அநேகநாகரிகம் பொருந்திய நாடுகளில் அநாதாசிரமமும், பால்கொடுக்கும் செவிலித்தாய்மாரும், அரசறிந்த நியமனங்களாம். (Recognised institutions). அநாதாலயம் (Orphan asylums) என்பதென்ன? மத்தியகாலங்களில் இருந்து பேர் அறறுப்போகும்சிறையாளர்கள் வசிக்க அறைகள் போன்ற ஒருதனிப்பட்ட இடம், இருண்ட பயங்கரமானமண்டபம் ஆனால் சிறையாளர்கள் ஆண்மக்களாய், சிலகாரணங்களை முன்னிட்டும் பகைவர்களால் குரூரமாகநடத்தப்படுபவர்கள். குழந்தைகள் ஒன்றுமறியாதவர்களாயிற்றே! அதைக்கவனிக்கவேண்டாமா!! இன்னும், பாற்காரியைக்கவனியுங்கள். இதுவழக்கத்தின் பிழ்வந்தது. அவள் அதிகப்படி என்பது தோன்றவில்லையா? தான் பெற்றபிள்ளைக்குத்தான் பால்கொடுப்பதைவிட்டு வேறு ஒருவரை நியமிப்பது என்னகொடுமை. இதுவன்றி பாற்காரியிடம் பாலுண்ணும் குழந்தைக்கு பாலுடையஇருவர் இருக்க ஒருகுழந்தைக்கு (பாற்காரி குழந்தைக்கு) ஒருவருமின்றி அது தவிக்கிறது. கடவுள் இப்பொருளை அவரவர்களுக்கு அளந்து கொடுத்திருக்கிறார். அப்படியிருக்க ஒருவருடையதை ஒருவர் எடுத்துக்கொள்வது நியாயமாகுமா? ஒருவர் பாத்தியதையை ஒருவர் எடுத்துக்கொண்டால் அதற்கு நியாயமன்றம்செல்கிறவர். இக்கொள்ளையைக்கவனிப்பார் ஒருவருமில்லையே! என்றாலும் இப்பொழுது சுகாதாரமுறையை யெண்ணி செல்வவந்தரின் மனைவிகளும் தங்கள் குழந்தைகளுக்குப்பால்கொடுக்கச் சம்மதித்துள்ளார்கள். அவர்களெல்லோரும் தங்களைபொப்பச்செய்யாதவர்களை நாகரிகமுதிர்ச்சிபெறாதாரென்று கருதுகின்றனர். ஆனால் நோயினால் வருந்தும் தாய்மாரைப்பற்றியும் குழந்தைகளைப்பற்றியுமென்றாலோ, அது தெய்வசங்கற்பத்தைப்பொறுத்தது. எவ்வளவு ஒருவன் வருந்தினாலும் செல்வவானுடைய சொத்தை அடைய நியாயமில்லை. பூர்வகாலத்தைப்போல

இப்பொழுது ஒருசக்கரவர்த்திபிணியால்வருந்த அதற்கு மாற்றாக நல்ல மனிதர்குருதியில் முழுகிஎழுந்தால் குணமடைவனென்றால் நடவாது. இவைகள்தான நாகரீகத்தின் அடிப்படை. கொள்ளைக்காரர்களும் ராமாம்சபட்சிணிகளிலிருந்து நம்மைப்பிரிப்பதும் இதுவே. பெரியோர்களுடைய பாத்தியங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆயினும் குழந்தைகளின் பாத்தியங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆகையால் யாருக்குவாயுண்டோ அவர்களுக்கு ஒருவிதமும், வாயற்றவர்களுக்கு வேறொருவிதமும் என்பது நிலைவரப்படுகிறது. அங்ஙனமாயின் பலவான்வற்படுத்தியது நாகரீகமென்றாகும். ஆகையால் நாம் இதுபொழுது கொடுத்திருப்பது தேகவளர்ச்சிக்குரிய சாதனங்களேயாம் அவர்களுடைய பாத்தியதைகள் கவனிக்கப்படவேயில்லை.

இனி, நாம் சுற்றுமுற்றும் பார்ப்போம். நாம் நல்ல வீடுகளில் சகல வைபவங்களையும் அனுபவிக்க அவர்களோ ஒன்றையும் அனுபவிப்பதில்லை. அவர்களுக்குத்தகுந்த தட்டுமுட்டு சாமான்கள் கிடையாது. நாம் நம்மைவிட பருத்ததேகமுடைய ஒரு ஜாதியாரின் மத்தியில் மாட்டிக்கொண்டதாக வைத்துக்கொள்வோம்.

அவர்கள் தட்டுமுட்டு சாமான்கள் நம்மால் எடுத்து ஆளமுடியாதபடியிருக்குமாயின் நாம் என்ன நினைப்போம்? நம்மனம் என்னபாடுபடும்? அதுபோலன்றோ குழந்தைகளின் மனமும். நம்மைவிட அவைகளுக்கு விருப்பம் அதிகம். அவைகளைத்திருப்திசெய்யவேண்டியது நமதுகடமையல்லவா? திருப்தியுடைய குழந்தைகள் வளர்ச்சிக்கும் அப்படியில்லாத குழந்தைவளர்ச்சிக்கும் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள். குழந்தைகளின் மனம் திருப்தி அடையாவிட்டால் அதன் தேகவளர்ச்சிகுன்றுவது மாத்திரமன்றித்தேகவலுவும் குறைகிறது. அதுவன்றி அன்புடன்நடத்திய குழந்தையும் தேகத்திலும் மனதிலும் வலுவடையும். மேலும் ஆகாரமும், நல்லகாற்றுமிருந்துவிட்டால் குழந்தை

தானேவளர்ந்துவிடுமென்று பொருளல்ல. அது சந்தோஷமுடையதாகவுமிருக்கவேண்டும். உடல்நூல் எல்லா அவயவங்களும் அதற்குத் தகுந்தவேலையைச் செய்யவேண்டுமென்பதால் அதற்குத்தக்கபடி நடப்பது நலம்.

ஆன்மாவளர்ச்சியடைந்தால்தான் தேகம்வளர்ச்சியடையும் என்றுசொல்லவேண்டும். ஏனெனில் துக்கம், சினம், களைப்பு, இன்பம் இவைகளுக்குத் தக்கவாறு தேகம்குன்றுவதும் வளர்வதுமுண்டென்பது எல்லோருமறிந்தவிஷயம். துக்கத்தில் இருதயத்தின் செய்கை குறைகிறது. வேண்டியரஸம் உண்டாவதில்லை, இரத்தப்பைகள் சுருங்குகின்றன; இவைகளால் முகம் வெளுப்படைகிறது. பின்னர்களைப்பு, தேகவூர்க்குறைவு முதலான கெடுதிகள் உண்டாகின்றன. கொட்டாவி விடுவதால் இரத்தம்மேலேறி அவயவங்கள் மறுபடிதன் காரியங்களைச் செய்யஆரம்பிக்கின்றன. சினந்தால் நரம்புகள் ஒன்றுகூடிப்பித்தத்தை வெளிப்படுத்துகிறது. இன்பத்தில் இரத்தாசயங்கள் சுழற்றப்பட்டு அவயவங்கள் நல்லவேலை ஆரம்பிக்கின்றன. அது புதியஉணர்ச்சி (Injuction) உண்டாக்கியது போலாகிறது. இன்னொருஉதாரணம் கூறுவோம். இதாலிதேசத்தில் கொலைத்தீர்ப்பை நிறுத்தி ஆயுள்பரியந்தம் தனிக்காவல் விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆகாயமும் ஆகாரமும் இருந்தும் தனிபாகவிருக்கிறோமென்றகவலையால் வெகுசீக்கிரத்தில் உயிரிழக்கின்றனர். ஆகையால் குழந்தைகளின் நிலை இவ்விதமாக இருக்கிறதென சுருக்கக்கூறினேன்.

தொடரும்,

சோமசுந்தரதேசிகர்.

இலக்கணவிளக்கபரம்பரை.

புத்தக மதிப்புரை.

(ஏழுநகரத்தார்பேரில்) குழுவநாடகமும், பள்ளுநாடகமும்.—இவை ஆண்டிபட்டி ஸமஸ்தானாதிபதியும் மற்றும் பல முதன்மைபெற்றவரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் உப அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமத். சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்கள் விருப்பத்தின்படி ஷை ஸமஸ்தான வித்வான் ஸ்ரீமத். திருஞானசம்பந்தக் கவிராயரவர்களால் நன்கு பரிசோதிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பெற்றன. இப்புத்தகத்தின் முகப்பில் ஸ்ரீமத். பெத்தாச்சிசெட்டியாரவர்களால் எழுதப்பட்ட முக வுரையாலும், அதனையடுத்து ஸ்ரீமத். கவிராயரவர்களாலெழுதிய பதிப் புரையாலும் இந்நூல்களின் வரலாறுகளும், இந்நூல்களாலறியத்தகும் ஏழுநகரத்தார்களது குலபாரம்பரையாகவரும் குணாதிசயங்களும், பெரு மைகளும் இனிது புலப்படும்.

'தமிழ் இலக்கியம் சங்கக்காலம்'.—இது வாலிப கிறிஸ்தவசங்கத் தைச் சார்ந்த திருநெல்வேலி ஸ்ரீமத். ஞா. சா. துரைசாமிபிள்ளையவர்க ளால் ஆராய்ச்சிமுறையிலெழுதப்பட்டது. இதில் தமிழ்மொழியையும், தமிழ்ப்புலவர்களையும், தமிழ்நூல்களையும், தமிழர் ஒழுக்கவழக்கங்களை யும்பற்றி ஆங்காங்கு அறியக்கிடக்கும் பல விஷயங்களும் ஒருங்கு தொகுத்துத் தமிழ்கற்கும் மாணவர்களும் எளிதிலுணரும்படி தெளி வான நடையில் எழுதப்பட்டுள்ளன. இப்புத்தகம் சரித்திரவாராய்ச்சி யில் நுழைவார்க்கு உபயோகமாகும்படி இதுகாறும் வெளியான காலக் குறிப்புகளும் ஆங்காங்கு காட்டப்பட்டுள்ளன. இதன் விலைவிவரங்கள் ஆக்கியோர்க்கெழுதியறிக.

கர்மயோகம்.—இது முதன்முதல் அமெரிக்காக்கண்டத்தில் 1895-ம் ஆண்டில் ஸ்ரீமத். விவேகானந்தஸ்வாமிகளால் ஆங்கிலமொழியில் உபந்யாசரூபமாகச்செய்யப்பட்டது; அதிலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியவிஷயங்களை ஆங்கிலங்கல்லாத தமிழர்களும் எளிதிலுணர்ந்துகொள்ளும்பொருட்டு ஸ்ரீமத். பண்டித. மயில்வாகனனாரால் இனிமையான தமிழ்நடையில் மொழிபெயர்ப்பெனத் தோன்றாவாறு செவ்விதினெழுதப்பட்டு சென்னை ராமகிருஷ்ணமடத்தாரால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைப்படிப்பதனால் நன்மக்கட்கு மனநிலையும் சொல்லும் நல்லமொழிந்தனவாயிருக்கவேண்டுமென்பது வெளியாம். இதன்விலை முதலியன மேற்கண்ட மடத்தார்க்கெழுதித் தெரிக

பத்திராதிபர்.

ஆவதனுலெமதடியவனொருவன்
மாவிதயர்தனின்மகிழ்வுடன்யாமு
மேவினமவனதுமுன்னிலேவிளைவா
லோவறுபொருடனைநிறவுதமுரவோய். (35)

காரணமினியுணர்கெனவளர்கனவி
ஞரணனிவைசொலநாடியசம்பற்
பூரணனுவகையொர்புணையெனவஞராம்
வாரணமறிகடன்மலிகரையடைவான். (36)

ஞாயிலினிருசுடர்நவெழிவிலக
வாயிலினிலேதொறுமணியொலிகதுவுங்
கோயிலினரசிடைகுறுகிமொழிந்தான்
றூயிலுமினியவனருளியசுகவை. (37)

கண்டவனுரைசெய்தகனவையும்வினவி
மண்டலமுழுதுடைவழுதியர்பெருமான்
கொண்டதொருவகையன்மனமதுகுளிரா
விண்டனன்வரும்வகைமதிஞரைவிரைவின். (38)

மந்திரர்வருதலுமதிதெளிவுடையோ
ரிந்தநலருண்மொழிதனையுமியம்பிப்
புந்தியினலமைகொள்புலவிர்களும்மான்
முந்துறமுயல்வதுமுயலுமினிவணே. (39)

சாற்றுதல்சாற்றுகவெனுமொழிதலைமே
லேற்றனர்மதிஞருமெண்ணிலவொற்றூட்
டாற்றினர்நிச்சயமாயதொர்கருமந்
தேற்றினர்செழியனைநோக்கினர்தெளிய. (40)

வேறு.

பாகுபடும்பொழுதிரெழுகோடிபசும்பொன்விரைந்துகொணர்ந்
தாகமவேதமளந்தவரைகொடநாமயமானவனை
நாகணைதுஞ்சியநாரணனைச்சகநாதனையன்புடனு
வாகனமுஞ்செய்துபூசைபுரிந்தனன்மாகனகந்தனிலே. (41)

பூமகளைக்கலைமாமகளைப்புருகூதன்முதற்சுரரை
யாமிருடித்தலைவோரைவசுக்களையாதிமருத்துவரை
யேமவுருத்திரசோடியைமற்றவிராறுவிகர்த்தனரை
மாமையருச்சனைசெலவப்பெயர்மாறணியற்றினனே. (42)

விரித்தலின் றமறைப்பொருளொன் றுகிளத்துமினென் றுவல்லே
வழுத்தினனம்பொனிழுத்துமுடிந்துமனத்தின்மகிழ்ந்துடனே
யெழுத்துவரைந்துவிடுத்துலகெங்குமிருக்குமருந்தவரை
யழுத்தமடைந்தகருத்தினர்தையழுக்கறுமந்தணரை. (43)

தத்துவவாய்மைதிருத்துநரைப்பலதந்திரமோதுநரைச்
சித்தசமம்பெறுமுத்தமரைப்பகைசெற்றமிலாதவரை
வித்தகநான்மறைகற்றவர்தம்மைவிளித்துவிதிப்படியே
வைத்துவணங்கிமுகிழ்த்தகையாளொருவார்த்தைவிளம்புவனால். (44)

ஓதியுணர்ந்துவிழுத்தகைபெற்றவொழுக்கமுடைப்பனவீர்
நீதிமறைப்பொருளுண்மையெலாம்வலநீயிரிவ்வாய்மைதனை
யீதெனயாருமுணர்ந்திடவேசெய்திறத்தவிதிப்பொதிபெற்
றுதியராகுமினென்றவைவோரையுநோக்கியறைந்துவிடா. (45)

வேறு.

தென்னர்கோமகனித்திறமுயற்சிசெய்தொழுகு
மன்னகாலையிலணிதிகழ்கூடன்மாலழகன்
றன்னதாகியவிமானமீதுறத்தனித்திருந்து
மன்னர்மன்னவன்மனக்குறைமுடித்திடமதிப்பான். (46)

சேனையாளுடைமுதலியைத்திண்சிறைப்பறவைக்
கோனைநாடினனினைத்தலும்விரைந்தவர்குறுகிக்
கானநாண்மலர்க்கரங்குவித்தென்கொலோகருமம்
வானநாதநின்றிருவுளம்பணித்தியான்மகிழ்ந்தே. (47)

என்னுயாற்றமாங்கிருவருமியம்பலுமெழில்சேர்
பொன்னின்மார்பினனிருவருளொருவற்குப்புகல்வான்
மின்னுநாகமுநேரிடைவினதைதன்புதல்வா
மன்னுதூய்மையாய்கருமங்கள்யாவையும்வல்லாய். (48)

ஆல்விளங்கியதிருப்பதியதுகுறித்தணுகி
யெல்லைதாங்கியாங்காவிலைத்துயின்றருளெம்மைக்
கால்வணங்கியெம்மனுச்சைகைக்கொண்டுகண்டப்பான்
மேல்விரும்புவதொன்றுளதுனக்குநாம்விரிப்பாம். (49)

அன்பனெம்மிடையொருகொழுந்தோடியவகத்தான்
வன்பிலான்மனப்பொறையுளான்மறைவலானென்று
நன்பெருந்துழாய்நந்தனவனமுதற்சமைப்பான்
பொன்பொலிந்தபூமாலைகைதொடுத்தெமைப்புனைவான். (50)

எமக்குநல்லவனெமக்குரித்தாயவனெமக்குச்
சுமக்குமாதரமியற்றவோன்றென்முனித்தகையோ
னமைக்குமானததியானமேயடைந்துளோவடியார்
தமக்குநல்லவன்பட்டர்கடம்பிரானெனன்போன். (51)

அண்டர்போற்றியவில்லிபுத்தூராரிகோயிற்
றொண்டிமைப்பொறைசுமப்பவன்றென்முனித்தகையோன்
பண்டுரைத்தவாறெம்மையாராதனைபயில்வோன்
விண்டுசித்தனென்றியற்பெயர்புனைந்தவேதியனே. (52)

ஆயவன்றனையவனதுகனவினியனுகி
மேயவிங்குளவிருத்திகளனைத்தையுமுணர்த்திப்
பாயவிஞ்சைமாணுக்கரோடெழுந்திவண்படர
வேயெனப்பொழுதிரண்டுமூன்றெல்லையிற்கொணர்தி. (53)

துறைப்பெருங்கடல்சூழ்புவித்தலத்தின்மற்றவனே
மறைப்பெரும்பொருண்மாறனுக்குணர்த்துதற்குரியா
னிறைப்பகம்பதத்தன்புளான்றனதுமுன்னிலையாய்
முறைப்படும்படிதேற்றுவான்முன்னினேம்யாமும். (54)

ஆதிநூலெனப்புகன்றிமெருமறைப்பயில்வு
மோதும்வேதத்தினந்தமுமதனுரிப்பொருளு
மூதுநான்மொழிவைதிகநடைமுறைபிறவுங்
கோதிலாதனகலியுகத்தொழிந்துகுன்றினவால். (55)

இத்தரைப்படுமென்பதையாயினோர்யாரும்
பத்தியில்லரும்படருழந்துழந்துபட்டிமைசேர்
குத்திரத்தொழிலாளருங்குணமில்புல்லோருஞ்
சுத்தமில்லரும்வேதநிந்தகருமாய்த்துவன்றி. (56)

துடங்குபாசண்டர்படிச்சனரெனுந்துறையினரு
மடங்குமோர்நிலையில்லரும்பற்பல்பாடகரு
நடுங்கவேதியர்தங்களைநவையுரைப்பவருங்
கடுங்கணாளருந்தமதிச்சையோருங்காதகரும். (57)

சீலமில்லரும்வணங்கிடாத்தீயருமகந்தை
மேவிவெஞ்செயலாளரும்வேதியராயுஞ்
சாலவேகுறுக்கிட்டபுண்டரந்தரித்தோருங்
காலமோர்கிலாக்கருமமீமாங்கியத்தவரும். (58)

பிரமபாகையிலமூர்த்திடாமனத்தரும்பிறக்கு
முருவட்யானெனுமகத்தருமுணர்வுகுன்றினரும்
பரவும்மெம்மிடைப்பராமுகரானபாதகருந்
தரணியெங்களுக்தழைத்ததாலிறந்தனதவங்கள். (59)

அறந்தெரிந்திடாரிவர்தமையடியொடுமொழித்துச்
சிறந்ததென்னவன்பரம்பொருளுண்மையேதேற
நிறைந்தநம்மடித்தொண்டனுனிணிலத்தியார்க்கு
மறைந்திடாப்பொருள்காட்டுதல்வருபொருட்டாத. (60)

நாட்டுதாமதச்சுருதிவாக்கியத்திறனடர்த்து
கூட்டுமோகமேற்கொண்டெமக்கயலராங்குழுவை
யோட்டிவென்றிடவின்றுநீவிரைந்தெமதுரைவையக்
கேட்டன்றுனைமுற்கொணர்திபோய்க்கினர்சிறைப்பறவாய். (61)

வேறு.

என்றிவையயினைத்தங்கூறியீறிலாவொருவனேவ
நன்றெனப்பலகாலேத்திநாகர்தங்குலத்தையெல்லாம்
வென்றவன்விண்ணிற்பாய்ந்துவிரைசெலுங்கடுங்காற்றென்னத்
தென்றிசையிலங்கைத்தாதுசென்றவனென்னச்சென்றான். (62)

புதுவையம்பதியைநண்ணிப்புண்ணியங்கிளைத்தாலன்ன
முதுவடதருவினீழல்மூலவாலயத்திற்பண்டே
பதுமமாமூர்த்திபூத்தோன்பாற்கடற்பள்ளிகொள்ளு
மதுகைசேர்காட்சிநோக்கிவணங்கியஞ்சலித்தான்மன்னே. (63)

வடவிலைத்துயிலுமாயன்மகிழ்ந்தருளனுச்சைபெற்று
விடைகொளும்விகக்களுங்கண்மேவியவிண்டுசித்த
னடைதருங்கனவினண்ணியணிதிகழ்கூடற்கோயி
லுடையவனருளிற்றெல்லாமுன்படக்காட்டினானே. (64)

உளமுறக்கனவிற்கண்டவுவகையேயுருவமாக
வளவிலாநந்தமெய்தியஞ்சலித்துரோமப்போம்மற்
புளகாங்குரிப்பவேத்திப்புலரியிலெழுந்துகண்ட
வளவெலாந்தனதுகற்பின்மாதருக்குணர்த்தியப்பால். (65)

ஆலிலைத்துயிலுமண்ணலருமறையளந்தசெம்பொற்
காலிணைசென்னிசூடிக்கைதொழுதிறைஞ்சியன்னான்
கோலியவருளினாணைகொண்டுபொற்கோயினித்துப்
பாலினிற்றொடர்ந்துசெல்லுமாணவர்பாடிச்சூழ. (66)

நத்தணிதடக்கைப்புத்தூர்நம்பிதாணம்புநம்பி
யத்தகையவனுச்செல்லுமளவையிற்கூடனின்று
பத்திமைபழுத்தசிந்தைப்பனவனுஞ்செல்வநம்பி
வைத்தபல்வளத்திஞேடுமெதிர்கொளவழிக்கொண்டானே. (67)

விழியுறவெதிர்ந்துசேணின்றூர்திவிட்டிழிந்துவென்றி
மொழியுமாசிடையான்சாற்றுமுகமனுன்முகிழ்த்தகையான்
ஞெழுதிருகாலிற்பல்கால்வீழ்குவான்றுநித்தவாயான்
வழிபடன்முனியானுகிமாற்றமொன்றுரைக்கலுற்றுன். (68)

மேற்படுகுணத்தின்மிக்கோய்விண்டுவைத்தாங்குஞ்சிந்தை
நூற்பயின்மார்பரேறேசோன்மைசான்மதுரைதன்னின்
மாற்படர்தோற்றந்தன்னோடன்னுசிவல்லதேவற்
கேற்புறவிதிப்பானின்னேயெழுந்தருள்வல்லையென்றான். (69)

இன்னணஞ்செல்வநம்பிவேண்டுகொண்டிசைத்தல்கேளா
வன்னதேயாகவென்னுவவனெடுமெழுந்துவென்றிச்
சின்னமுஞ்சங்குமார்ப்பத்தெய்வநல்லூர்தியேறிப்
பன்னியுந்தானுமாகப்பட்டர்கோன்மதுரைபுக்கான். (70)

மூன்றவது: பட்டாசிரியர் மதுரைகாண்படலம் முற்றும்.

ஆகக்கவி—698.

நான்காவது:

மெய்ப்பொருள்கூறிப் பொற்கிழிபெற்றபடலம்.

மட்டலர்ந்தபூந்துளவினுனுவணர்கோன்வழியாற்
பட்டர்கோனையீண்டழைத்தமைபகர்ந்துமற்றவனே
விட்டிலங்குவேல்வழுதிமுன்மறைப்பொருள்விளக்கிக்
கட்டுமொண்பொருட்கிழிபெறல்கழறுவாமிப்பால். (1)

அக்கரத்திலெட்டுடையவனடற்கரத்தெழுந்து
புக்கரத்தவாட்காலநேமியைப்புவிப்படுத்துச்
செக்கரத்திருமுக்குளநிறைந்திடச்செலுத்துஞ்
சக்கரத்தினையொத்துமேக்கிழிந்தனன்றபனன். (2)

வெய்யவன்கடற்குளித்தலுமீக்கொளுமாலை
மையபுல்லிருண்மாறனாட்டிடைசொலமாட்டாப்
பொய்யநூற்புறத்தவர்கடம்மனமெனப்புழுங்கிக்
கையிறந்தவருரையெனமருட்சிகாட்டினவால். (3)

விண்டுசித்தனார்வந்தனரெனப்புகழ்விளம்பிக்
கண்டுகைத்தலங்கூப்பிமைக்கண்கணீர்வடிக்குந்
தொண்டர்பத்திபோற்றும்பிகள்புலம்பிடக்குவியு
முண்டகத்தயற்றடங்கழுநீர்முகைவிரிந்த. (4)

உடைந்ததானவர்குலமெனவெல்விருளொதுங்க
வடைந்ததேவர்தங்குழுவெனவந்நிலாத்தோன்றக்
குடைந்தபாற்கடற்குமிழெனவுடுத்திரள்குழுமக்
கடைந்தெடுத்ததெள்ளமுதெனக்கலைமதியுதித்தான். (5)

தரளமீன்றுதன்புடைபரப்பியசலஞ்சலம்போற்
றிரளகேசனைத்தொடுமதியுதித்தலுஞ்செழியன்
கரளவாய்விழிமடந்தையரிரட்டும்வெண்கவரி
புரளவீற்றிருந்தாடலிற்பொழுதுபோக்கினனால். (6)

அரம்பையன்னவராடலுட்டிளைத்தமிழ்தூறி
நிரம்புகீதமுண்டாங்கவர்போகமுநீந்தி
விரும்புசிந்தையன்வெண்ணிலாநித்திலமாலை
வரம்பயின்றலர்மடந்தைபோன்மார்பிடைத்தூங்க. (7)

வாலிதாகியநுண்டுகின்மருங்குடீஇப்பொற்ப
மேலில்வானினின்றுகுத்தபூந்தாதுமெய்ம்மறைப்பப்
பாலிரண்டினுந்தீபிகைமணிச்சுடர்பரப்ப
வேலைநீர்க்குடங்கையினடிவிளக்கப்பொறியேந்த. (8)

சித்திரப்படாநிரைத்துமேல்கல்வைகடற்றிக்
கொத்துமென்மலர்பரப்புமெல்லமளிமேற்குமரித்
தத்தைமெய்சொலார்தட்டுருகுறங்கினிவிறங்கூர்
மைத்தவான்புயல்வண்ணனிற்றனித்துயில்வளர்ந்தான். (9)

தன்னைநேரிலாத்தன்குலத்திறைமகன்றனக்கு
நன்னலத்துயில்கொடுத்தனனளிர்மதிக்கடவுள்
பின்னைநானதுபார்ப்பலென்றிரவிபேர்த்திடுமுன்
கன்னலைக்கெனநாணினன்போற்கடிதெழுந்தான். (10)

வேறு.

இதுநிகழ்பின்விண்டுசித்தன்புலரிதன்னி
லியன்றநியதிகண்முடித்துவிமலஞ்சேர்ந்த
புதுமுகுர்த்தநல்லோரைநன்னாள்வாய்ப்பப்
புரவலனைக்காண்குதுமென்றெழுந்துபோந்தா
னதுபொழுதிற்பரியாளர்பலர்முன்செல்ல
வமைச்சர்குழாந்தனைச்சூழவெழுதாக்கேள்வி
முதுமறையோராசிடைச்சொன்முழங்காநிற்ப
முன்னவனைத்தென்னவனுமெதிர்கொண்டானே. (11)

திருமுன்னேவீழ்ந்துபணிந்தடியேன்பொல்லாச்
சிறுகுடிலுக்கெழுந்தருள்கவெனக்கொண்டெய்திக்
குருமன்னுமாதனமேமுதலாயுள்ள
குளிர்முகமன்பற்பலவுங்கொடுத்துப்போற்றித்
தருமன்னையனையாயிவ்வுலகுக்கெல்லாந்
தாயைமகவெனப்படைக்குந்தாய்நந்தா
வொருமுன்னைப்பழம்பொருளைத்தமியன்றேற
வுரைத்தியென்றான்றருமமோருருக்கொண்டன்னான். (12)

விரிமலர்த்தார்வேம்பனிவைகூறக்கேட்டு
விண்டுசித்தனெனுமுனிவன்வினதையீன்ற
பெரியதிருவடியையுஞ்சந்தங்கட்டீசன்
பிரபுவெனுந்தேவனையுமிதயத்தெண்ணிக்
கரியமுகில்பெருவரையின்முழைசேர்ந்தென்னக்
கவின்பெறுமட்டாங்கமணிக்கோயின்மேய
வரிதனையும்பெரிதுநினைந்திருந்தானிப்பா
லாரியனுஞ்செல்வநம்பிக்கரையன்சொல்வான். (13)

வந்தடைந்தபட்டர்பிரானெனக்குத்தேற்றம்
வகுத்துரைக்கவல்லான்கொன்மாட்டான்கொல்லோ
சிந்தைதெளிந்திலனச்சம்பெரிதுங்கொண்டேன்
செப்புவதென்னெனலோடுந்தென்னரேறே
நந்தமதுசங்கையிவர்தாமேதீர்ப்பா
னண்ணினரிதற்கையமில்லையென்றென்
புந்திதனிலுறுதியடைந்திருக்கேன்வாய்மை
புகல்கின்றேனிகழாதிபுகழற்பாலை. (14)

கண்டெனக்குமுன்னுரைத்தகனவின்வண்ணங்
கடனதிகாட்சியினுணரநிகழுங்கண்டாய்
விண்டெரித்தப்பெருமானருளாலென்றே
விளம்புசெல்வநம்பியுரையுளங்கொள்வேந்தன்
மண்டலத்தில்வேறிருப்பப்புறநாட்டுள்ள
மறையவரைத்துறைபலவுங்கலைகண்டோரைக்
கொண்டமைச்சர்புகுவித்தார்புகுந்தோர்யாருங்
குறைகடலுட்புயலுமெனக்குழீஇயினாரே. (15)

காணாதங்காபிலமார்திறத்தோர்யோகர்
கருதுபாதஞ்சலியராயினோர்கள்
பூணுதவறம்புகலுநியாயநூலோர்
புத்தரொடுமொருகதர்சாருவாகர்
கோணுதபாசுபதர்காபாலத்தோர்
குண்டரெனுஞ்சமணர்மற்றுங்கூறுபாடாய்
நாணுதபுறமதத்தோர்பலருமீண்டி
நாட்டுதத்தஞ்சமயநிலைநவின்றபின்னர். (16)

வேறு.

தங்கள்சித்தாந்தமின்னதன்மையென்றேதுக்காட்டி
யங்கதையேட்டிற்றீட்டியமரர்களதிட்டானிப்பத்
திங்கடன்மருமான்றாக்குந்தெய்வவான்கிழிமேலுய்த்தார்
புங்கவரதன்மேனின்றவ்வேடெலாம்போக்கிநீத்தார். (17)

விவிதமார்தருக்கள்கானில்வேனிலம்பருவமெய்தத்
தவிர்தலையொழிந்துகுத்தசருகுபோலருகுவீழ்ந்து
புவிதலைப்படுமேடெல்லாநோக்கியப்புலமைமாக்கள்
கவிதலையடைந்துநாணிக்கலங்கினார்கிலங்கள்குன்றார். (18)

தன்னவைகாட்டியின்னதகையராய்மூங்கைபோன்று
மன்னவையிருக்கலாற்றார்மானமேற்படமேனோக்கி
யன்னவைநிகழ்ந்தவெல்லையருமறைப்பொருளீதென்றுப்
பொன்னவைதன்னினின்றபுண்ணியன்புகலலுற்றான். (19)

நாரணன்பரமேயென்றுநாரணன்பிரமமாய
பூரணந்தானேயென்றுமவனலாற்பொருளின்றென்றுங்
காரணம்பெறுநியாயமனுமுதற்கலைகளெல்லாம்
பாரணங்குடையசொல்லின்பான்மையேநிகழ்த்துமன்றே. (20)

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௧.] துந்துபி-௵ மாசி-மீ [பகுதி ௪.
VOl. XXI. February-March-1923. No. 4.

வஞ்சிமாநகர்.

ஏழெட்டு மாதங்களுக்குமுன் இவண் போந்திருந்த எமது நண்பரும் இத்தமிழுலகுக்கே ஓர்நன்கலனும் ஆண்டிப்பட்டிஜமீன்தாருமான மகா-ா-ா-ஸ்ரீ பெத்தாச்சிசெட்டியாரவர்கள் தமது கரூரினின்றும் "வஞ்சிமாநகர்" "சேரன்செங்குட்டுவன்" என்னும் இரண்டு புத்தகங்களை வரவழைத்துக்கொடுத்து எமது அபிப்பிராயத்தையும் உசாவினதினிமித்தம் அடியிற்கண்டவாறு யெமக்கெட்டியதைக் கூறலாயினம். மகா-ா-ா-ஸ்ரீ செட்டியாரவர்கள் இவண் வதிந்தொழுகிய காலத்தே இவைகளை நேரிற் சொல்லலிலும் அளவளாவலிலுமுண்டாயிருந்த பெரும்பாக்கியத்தை, இடைவிடாதுள்ள வக்கீல்வேலையினாலும் இவ்வாராய்ச்சிக்கேற்றபுத்தகங்களை வரவழைத்துப்பார்க்க போதியவசதிகளின்மையானும் இழந்துள்ள மனக்குறையை மாற்றுவான் செந்தமிழ்ப் பத்திரிகைவாயிலாத் தமக்கும் இத்தமிழுலகுக்குமெட்டும் வண்ணம் பிரசுரித்தலே நன்றென்று, அப்பெருந்தகையருத்தரவளித்ததற்கிணங்கி இதை வெளியிடுகின்றனம்.

வஞ்சிமாநகரென்பதியாது? அது எவணிருந்தது? என்னு மாராய்ச்சிபுதியதன்று, அதைப்பற்றி அநேக சிறந்தபண்டிதர்களவ்வ

வர்க்குத்தோற்றியபடிக் குறித்துள்ளார்கள். அவர்களில் பிரம்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்களும், மு. இராகவையங்காரவர்களும் முறையே வெளிப்படுத்தியுள்ள வஞ்சிமாநகரென்னும் புத்தகத்திலும், சேரன் செங்குட்டுவனென்னும்புத்தகத்திலும் மேற்குறித்த கடாவுகளுக்கு விடைகளும் தங்களபிப்பிராயத்துக்கேற்பச்சான்றுகளும் போதியவளவு கொடுத்துள்ளார்கள். இவர்களையொட்டி "ஹிண்டு" என்னுமாங்கிலப்பத்திரிகையின் சென்ற ஆகஸ்டு மாதம் 30-ம் தேதி சஞ்சிகையில் பிரம்மஸ்ரீ உ. வே. ஆர். அரங்காச்சாரியாரவர்கள் M.A. L.T. தம்மபிப்பிராயத்தையும்வரைந்துள்ளார்கள். இவ்வித்வான்களின் துணிபு வஞ்சிமாநகரென்பது திருவஞ்சிக்களூர்தானென்பது. மற்றொருசாரார் பிரம்மஸ்ரீ கே. ஜி. சுப்பிரமணியப்பரவர்களும் ஏனையசிலரும் அவர்களையொட்டிமேற்கண்ட "ஹிண்டு" பத்திரிகையின் நிகழும் நவம்பர் மாதம் 11-ம் தேதி சஞ்சிகையில் ராவ் பகதூர் பி. ஐ. சின்னசாமிபிள்ளையவர்களும் வஞ்சிமாநகரென்பது கொடுங்கோளூர் தானென்று நிலைநாட்டியுள்ளார்கள். ஆயினும் இவர்கள் தத்தங்கருத்திற் கிணங்கப்போதிய முகாந்திரங்களை யெடுத்துக்காட்டாமலேவிட்டனர். "வஞ்சிமாநகர்" "சேரன் செங்குட்டுவன்" என்னும் புத்தகங்களினாசிரியர்களோ! தத்தங் கருத்திற்கேற்ற வேதுக்களுடனும் கொடுங்கோளூர் வஞ்சிமாநகரென்பது அசம்பாவிதமென்னும் போதிய முகாந்திரங்களும் செவ்வனே காட்டியுள்ளார்கள். மற்றொருசாரார் காலஞ்சென்ற மகா-ா-ா-ஸ்ரீ கனகசபைபிள்ளையவர்களும் அவரையுள்ளிட்டாரும் திருவஞ்சிக்களூருமன்று கொடுங்கோளூருமன்று தற்காலம் கொச்சிநகரத்திற்கு 28 மயில் தூரத்துள்ளதும் நகரற்றுப்பாழாய்க்கிடப்பதுமாய திருக்கரூரென்னும் தலந்தான் வஞ்சிமாநகரென்றாகித்துள்ளார்கள். இவரியற்றியுள்ள "The Tamils 1800 years ago" வென்னும் நூல் இன்னும் எனக்குக் கிடைத்திலதாதலால் அவரபிப்பிராயத்தை நன்காராயவழியின்மையைக் குறித்து விசனிக்கிறேன்.

அது நிற்க. மேற்கண்டவித்வசிரோமணிகள்பலரும் ஆராயாநின்றது வஞ்சிமாநகர் யெவணிருந்தது என்பது முக்கியமான விடயமாயிராமல் சேரன் செங்குட்டுவனுக்குத் தலைமைநகராயும் அவனிருந்து அரசாட்சி புரிந்து வந்தகாலத்து வஞ்சிமாநகரென்று சிலப்பதிகாரத்தும் மணி

மேகலையினும்சிறப்பித்துக்கூறியுள்ளதுமானநகர்யாதென்பது தான்விடய மெனக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆதலின் இவனும் அவ்விடயத்தை யேதலையாக்கொண்டாராய்வாம்.

பிரம்மஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்களும் திருவானிலைக் கருர்தான் வஞ்சிமாநகரென்னும் கொள்கையை நிலைநாட்டுவானெடுத்துக் காட்டியுள்ள வாதாரங்களில் முக்கியமானவையாமாறு:—

I. இக் கருர்த்தலபுராணத்தில் கருருக்கு வஞ்சுளாரணியமென் னும் பெயரிருந்ததென்றும், வஞ்சுளமென்னும் மரங்களடர்ந்திருந்தமை யின் அப் பெயர்பெற்றிருந்ததென்றும் கூறியுள்ளது. மேலும் வஞ் சுளாவென்று ஆகாராந்தப்பதமா யெடுத்துக்கொள்ளின் மிகுதியாகப் பால்கறக்கும் பசுக்களையுடையகாடெனினு மமையுமென்னும் பொருளுக் கிணங்க அவ்வூருக்கே திருவானிலையென்ற பெயரும் அங்ஙனே கோயில் கொண்ட சிவபெருமானுக்குப் பசுபதீச்சுரரென்ற பெயரும் அதையடுத் தோடும் ஆற்றுக்கு ஆன்பொருநையென்னும் பெயரும் தக்க சான்ருகு மென்றும் கூறியுள்ளார்கள்.

II. (a) "நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க்கருவூர்முன்றுறைத்
தெண்ணீருயர்கரைகுவைஇய
தண்ணான்பொருநைமணலினும்பலவே"

(அகநானூறு—93).

(b) "தண்பொருநைப்புனற்பாயும்
விண்பொருபுகழ்விறல்வஞ்சி"

(புறம்—11)

(c) "தண்பொருநைசூழ்தரும்வஞ்சியர்கோமான்"

(சிலப்—29).

(d) "வஞ்சிப்புறமதிலலைக்குங்
கல்லென்பொருநைமணலினும்"

(புறம்—347).

(c) "இவன்யாரென்குவையாயினிவனே
* * * *
விழுநீர்வேலிநாடுகிழவோனே"

(புறம்–13).

இவையு மிவைபோல்வனசிலவும் இக் கருவூரையே குறிக்கின்றன வென்பது,

III. (a) இக்கருவூர்த் துர்க்கை வஞ்சியம்மனென்று பெயர்பூண் டிருத்தல்.

(b) ஆம்பிராவதிக்கு வடக்கே கோயில்கொண்ட சிவபெருமானுக்கு "வஞ்சுளேச்சுரலிங்கம்" எனப்பெயர்.

IV. "செங்குணக்கொழுகுங்கலுழிமலிர்நிறைக்
காவிரியன்றியும்பூவிரிபுனலொரு
மூன்றுடன்கூடியகூடலனையை"

(பதிற்–50).

இதில், காவிரியும், ஆம்பிராவதியும், குடவனாறும் கூடுகின்றன வென்னும் பழையவுரையைத் தழுவியும், இக்கூடற்கப்பால்தான் காவிரி நேர்கிழக்கே யோடுகின்றதெனப் பொருள்கொண்டும் ஆம்பிராவதிக் கரையில்தான் வஞ்சிமாநகருள்ளதென்று நன்குபெறப்பட்டதென்பர்.

V. "ஆடகமாடத்தரிதுயிலமர்ந்தோன்"

சிலப்–26).

என்பது கருவூரிலாசவனத்தில் கோயில்கொண்ட அரங்கநாதர் சந்நிதியைக் குறிப்பித்ததென்பர்.

VI. பழைய ரோமசக்ரவர்த்திகள், அகஸ்டஸ், டைபீரியஸ், கிளாடியஸ் இவர்களுடைய நாணயங்கள் இக்கருவூர்ப்பக்கத்தே கண்டெடுக்கப்பட்டிருப்பதென்பது.

மேற்கண்ட வாருதாரங்களே யெமக்கெட்டியவை. திருவானிலைக் கருர்தான் வஞ்சியெனக்காட்டக்கூடிய பல வாதாரங்களிலும் மேம்பட்டவையெனத் தெரிகின்றன. அவைகளையாராய்வேம்.

I. வஞ்சுளாரணியமென்பது மாவிசேடத்தாலுண்டாகிய பெயர் அல்லது பசுக்கள் மலிந்திருத்தலினலாகிய பெயர். இக்காரணத்தானே கருவூருக்கு வஞ்சிமாநகரென்னும் பெயர் வாய்த்ததெனக் கூறுவர். இப் பெயர் வஞ்சிக்கொடியினுலுண்டாயதன்றென்றும் கூறுவர். ஆயின்,

"பொற்கொடிப்பெயர்படூஉம்பொன்னகர்"

(மணிமேகலை 26–92).

"பூங்கொடிப்பெயர்படூஉம்திருந்தியநன்னகர்"

(மணிமேகலை–28–101–102).

எனச் சீத்தலைச்சாத்தனுர் விசேடித்துரைத்திருத்தலின் வஞ்சி யென்னும் பெயர் வஞ்சியென்னும் கொடியினுலுண்டாயதென்று ஏனைய சிலர் வரைந்திருப்பதை மறுத்து அவ்விரண்டு வாசகங்களுக்கும் பொருள் அதன்று கொடியின் பெயரைப்பூண்ட வூரெனக்கொளல்வேண்டுமென ஸ்ரீமாந் உ. வே. ரா. இராகவையங்கார் பணித்துளார். அதெமக்கும் சம்மதமேயாயினும்,

"உற்றவளாங்கோருயர்நவவ்வடிவாய்ப்
பொற்கொடிவஞ்சியிற்பொருந்தியவண்ணமும்"

(மணிமேகலை. பதி–85–86.)

என வந்திருத்தலால் வஞ்சியென்னுமூர்க்குப்பெயர் கொடியினுலுண்டாகியதெனப் பொருள்கூறினுமிழுக்காகாது. மேலுமப்பிந்தியவடிக்கு "பொற்கொடிமூதூர்" என்று பாடபேதமிருத்தலின் அதற்குக் கொடியினுலுண்டாய வஞ்சியெனப் பொருள்படுமேயல்லாது கொடியின்பெயரைப் பூண்ட வஞ்சியெனப் பொருளாகாது.

"பூங்கொடிவஞ்சிமாநகர்புகுவை"

(மணிமேகலை 21–91)

இதுவுமப்பொருள்படுமாறுணர்க.

தவிர, அநேகமுறை கொடியால்விசேடித்து வஞ்சியையக்கூறியுள்ள சாத்தனார் திருவாவிலைக் கருவூரைக் குறித்துக் கூறினாராயின், மாவிசேடத்தாலாய வூரென்றுவது, பசுவிசேடத்தாலாய வூரென்றுவது, கருப்பத்தாலாய வஞ்சியென்றுவது கூறியிருப்பாரன்றோ? அங்ஙனம் அவர் கூறாததும் இளங்கோவடிகளங்ஙனம் கூறாதொழிந்ததும் வஞ்சிமாநகர் திருவாவிலைக் கருவூரன்றென்று சொல்லுவதற்குத்தக்க சான்றாகுமென்று பலர் துணிவது சிறிது வலியுடைத்தாதல் காண்க.

II. இவ்விலக்கத்தின் கீழ்க்காட்டியுள்ள ஐந்து தாரணங்களும் திருவாவிலைக் கருவூரையே குறித்துள்ளனவே யொழிய வேறெவ்வூரையும் குறித்திலவென்பது திண்ணம். ஆகையினால் வஞ்சியெனப்படுவது கருவூரேயென நிலைநாட்டுவதற் கிவை தக்கசான்றாதல் பெறப்படும்.

III. இவ்விலக்கத்தின்கீழ்க்கண்ட விரண்டுதாரணங்களும் வஞ்சுளாடவியெனும் பெயரைக்கொண்டே வஞ்சியம்மனுக்கும், வஞ்சுளேச்சுரலிங்கத்திற்கும் பெயர்சூட்டப்பட்டனவாகக் காணப்படுமாகையின் அவற்றினின்றும் வஞ்சிமாநகர் திருவாவிலைக்கருவூர்தானெனத் துணிவதிழுக்காகும்.

IV. "செங்குணக்கொழுகு .... கூடலினையெனும் பதிற்றுப்பத்தடிகளுக்கு காவிரியாறும், ஆம்பிராவதியும், குடவனாறும் கூடும் கூடலென்று உரைகூறியுள்ளது பொருந்தாததாகும். இச்செய்யுளில் காவிரியும் ஆன்பொருநையும் கூடுவதென்பது எத்தாற் பெறப்பட்டதென விளக்கிலர். இச்செய்யுள் சேரனைக்குறிக்குமாற்றால் சேரநாட்டின்கண் மிகவும் பிரசித்திபெற்ற கூடலாகிய பவானிக்கூடலென்னும் தலமிருக்க அக்கூடலில் காவிரியும் பவானியும் (அந்தர்வாகினியாக) அமிர்தநதியும் கூடுவதென்னுமை நிகமிருக்கக் கருவூருக்கு 6 மைல் தூரத்துள்ள ஆன்பொருநைக் கூடலையே பதிற்றுப்பத்தாசிரியர் கூறினாரென்றிடர்ப்படுவ தென்னையெனத் தெரிகிலம். அதல்லாமலும் இக்கூடலுக்கும் திருவாவிலைக்கருவூருக்கும் சம்பந்தம் கற்பித்துள்ள தெங்ஙனமென்றும் விளங்கவில்லை. இக்கூடல் கடலாவதெங்ஙனமென்றும் விளங்கவில்லை. "மாதவனார்வடகொங்கில்வானியாற்றின்" (பரமதபங்கம்-53) என்ற தேசிகர்வாக்கே வானியென்பது ஆன்பொருநையன்

புதியகல்விமுறை.

[கசஉ-ம் பக்கத்தொடர்ச்சி].

மாண்டிஸோரிமுறை.

II

தற்காலக் கல்விவிமர்சனம்.

நன்னடக்கையையும் அறிவுறுத்தலையும் மேற்கொண்ட கோள்கைகள்:—இன்னவென ஆராய்வாம். மக்கள் இளம்பிள்ளைகளை விளையாட்டுப்பொருள்களோடு சேர்த்தபோதிலும் நன்னடக்கையில் தம்மைப்போல விருக்கவேண்டுமென விரும்புகின்றனர். குழந்தைகளின் அறிவை வளர்க்கத்தெரியாது தாம் செய்வதுபோல அவையும் செய்யவேண்டுமாம். பிள்ளைகள் பெரியோர் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் முரண்டும்போது நல்லபிள்ளைகளல்லவென்றும் இன்னும் பலவிதமாகவும் பேசுகின்றனர். அவர்கள் நீங்கள்தானே இவ்விதமாக எங்களுடைய மனநிலையைக் கெடுத்ததென்று சொன்னால் பெரியோர்களிற் சிலருக்கு அது அதிசயமாகத் தோற்றலாம்; மற்றுஞ்சிலருக்கு மரியாதையின்மையாகவும் படலாம். குழந்தைகளுக்குக் கல்விபுகட்டி, அதனில் விருப்பமுண்டாக்கி, நற்கதைகளைச்சொல்லித் தன்வயப்படுத்திக்கொண்டு பெரியோர் விருப்பப்படி அவர்களை நடக்கும்படிசெய்தால் நன்மக்களாக்கிவிடலாம். இம் முதல்வரிக்குப் பிறகு, மூத்தோர் இளைஞர்கள் செய்யவேண்டியவை யாவென வாராய்ந்து முட்டுப்பாடின்றிச் செய்யக்கூடியவைகளைச் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். சிலசமயங்களில் தாங்களே செய்வதற்கஞ்சும் பெரும்வேலைகளைச் சிறுவர்க்குக்காட்டுவது பிழையாகும். நாளொன்றுக்கு நாலைந்து மணிநேரம் ஒரேவிதமான சொற்பொழிவை (Lecture)க் கேட்கவிடுவது இதற்கு உதாரணமாகும்.

குழந்தைகளின் மனதைப் பண்படுத்துபவர் ஆசிரியரே:—மேலே கூறிய முறைதான் கலாசாலைக்கும் ஆசிரியர்க்கும் மாணாக்கர்களின் முழுக்கவனத்தையும் தன்வயப்படுத்துதல், பாடங்கேட்டதை அமைவா அவர்

கள் மனதில் பிறக்கும்படி செய்தல் இவைகளில்வல்லவரோ நல்லாசிரியர். அவர் முதலில் உளநூலில் (Psychology) தேர்ச்சியுடையவராக விருக்கவேண்டும்; அல்லது அதன் குறுநிசயங்கள் யாவென அறிந்து கொள்ளவேண்டும். இதற்கு நன்னடக்கைக்குற்ற கல்வி அவசியம். இதற்கு வகுப்பில் ஒழுக்கு ஏற்படவேண்டும். மாணவர்களும் ஆசிரியரது முயற்சியைப்பின்பற்றி நடக்கும்படி அன்பினலாவது, அல்லது, வன்பினலாவது செய்யவேண்டும். இது சரிவர நடக்காவிட்டால் வேறொன்றும் நடவாது. மாணவர்களின் சக்தியைத் தகுதிக்கேற்ப உபயோகப்படுத்தவேண்டும். குழந்தைகள் எவ்வளவுநேரம் படிக்கலாம்? எவ்வளவு ஓய்வுவேண்டும்? அடிக்கடி ஓய்வுவேண்டுமா? எப்பொழுது படிப்பது நன்மையக்கும்? எந்தப்பகுதியை முதலில் படித்தல் நலம்? என்பது முதலான வினக்களை நன்கு கவனிக்கவேண்டும். பலகையில் எழுதுங்கால் குழந்தைகள் அவைகளைப் பார்ப்பதற்கு எவ்வளவு ஒளியிருந்தல் அவசியம்? எழுத்து எவ்வளவுபெரிதாய் இருக்கவேண்டும்? என்பவை கவனிக்கவேண்டும். குறைந்த ஒளியாலும் சிறு எழுத்துக்களாலும் கண்களுக்குக் கேடுண்டாகும். அதனுல் அநேகக் குறும்பார்வைக் கண்ணர்களாகிறார்கள்.

கல்வியிலே முக்கியமாகத் தெளிவு (Clarity), சேர்க்கை (Association), ஒழுங்கு (System) வழி (Method) இந்நான்கும் இருக்கவேண்டுமென முதன்முதலில் வேதர்பாட்டென்பார் கண்டார். பின்னரே பலரும் அதைக்கையாட முயன்றனர். ஒருபொருளைக்காட்டி அதன் கூறுகளை விளக்கிக்காட்டுவது தெளிவு; பக்கத்திலுள்ளவைகளோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கி நிதானித்தல் சேர்க்கை; மேலே காட்டியவைகளிலிருந்து தான்கொண்ட தீர்மானம் ஏற்பாடு; இவைகளைப்பார்த்ததால் நமக்கு உண்டாகிய எண்ணமும் கோட்பாடுகளும் வழியெனப்படும். இந்த வழிகளில் குழந்தைகளின்புத்தியை உபயோகப்படுத்திச் செம்மைசெய்ய ஆசிரியர் முயலவேண்டும். இனி, இளைஞர்களை ஒருவழிப்படுத்தி அவர்கள் நாழிநாழியாக, நாட்களாக, வருடங்களாக ஆசிரியர் சொல்வதைக் கேட்பதென்றல் சாமானியமான காரியமல்ல. ஒருவரிருவரைச் சொல்வதைக் கேட்கச்செய்வதே இபலாதகாரியமாயிருக்கையில், அநேகபிள்ளைகளின் கவனத்தைத் திருப்பித் தன்வயப்படுத்திநிறுத்தல் சாமானிய

காரியமன்று. அதுவே ஆசிரியன் தொழிலாயிருக்கிறது. கற்பித்தல் என்னுந் தொழில் மாணவர்களது கருத்தை எவ்வளவுதூரம் பதியும்படி செய்யலாமென்பதிலிருக்கிறது. அதி சாமர்த்தியமுள்ள ஆசிரியர்கள் தமது மாணவர்களது கருத்தை ஒருபொருளில் உபயோகிக்கச்செய்து அதனுல் களைப்பும் சலிப்பும் அடையாமல் பார்ப்பதாகும்." என்று ஆர்டிகோ (Ardigo) சொல்லுகிருர். இதேமாதிரியாக தன் மாணவர்களின் சக்தியைக் களைக்கச்செய்யாத ஆசிரியரே அதிசமர்த்தராவர்.

மாணவர்களின் நோய்களும் மருந்துகளும்.—முதன்முதலில் மாணவர்கள் சிலநோய்க்கு ஆளாகின்றனர் என்று கண்டுபிடிக்கப்பட்டது. அவைகளில் முக்கியமானவை முதுகெலும்பு(முள்ளந்தண்டு) வளைவான கூனும் அண்மைப்பார்வையுமாம். கூனல் அதிகமாகப் பள்ளியில் மாணவர்களை உட்காரும்படி செய்வதால் ஏற்படுவது. பார்வைக்குறைவு, குறைவான ஒளியில் வாசிப்பதாலும், கரும்பலகையில் எழுதி ஒளியில்லாதவிடத்தில்வைத்து வாசிக்கச்சொல்வதாலும், தூரத்தில்வைத்து வாசிக்கச்செய்வதாலும் ஏற்படுகிறது. பாண்டு, சோகை, குடல்நோய்கள் முதலானவை மாணவர்களுக்குற்ற நோயாயினும், அவைகள் அவ்வளவாக அதிகப்படுவதில்லை. இந்தக் கூனலையும் அண்மைவிழியையும் நீக்க மருத்துவநூல் ஒன்றும் கண்டுபிடித்ததில்லை. அதற்கு என்ன செய்யவேண்டுமென்ருல் மாணவர்கள் உட்காரும் பலகை தகுதியானபடி அமையவேண்டும். இப்படிக்கணக்குப்பார்த்து 40, 50 மாணவர்களுக்கு அமைப்பது சாத்தியமல்ல ஆகையால் கூனர்களைஉண்டாக்குவது நின்றபாடில்லை. இதற்கு இதாலிதேசத்தில் ஒரு இயந்திரம் கண்டுபிடித்திருக்கிருர்களாம். அதனில் 6 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு மாணவனும் தலைகீழாகத் தொங்குவதாம். அதனுல் முதுகுகூன் நிமிருகிறதாம்.

உளநூற்காட்சியினு லுண்டான தோற்றங்கள்.—சுகவழியால் அண்மைவிழியும் கூனலும் கண்டுபிடிக்கப்பட்டதுபோல உளநூற்காட்சியால் மாணவர்களது மூளைகளையும் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வுளநூற்காட்சி பேஷ்னர் (Fechner) என்பவரால் 1860 ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் அது பொருத்தமாயில்லை. உண்ட் (Wundt) என்பார் செம்மை செய்தார். இவைகளும் பிழையாகக்காணப்பட்டன.

இன்னும்பலர் இப்பகுதியை ஆராயத்தொடங்கினர். அதிலிருந்து உள
நூற்காட்சி (Experimental Psychology) தனிப்பகுதியாயிற்று.
அதன்மூலமாக மாணவர்களின் களிப்பு, ஓய்வு முதலானவை கண்டு
கொள்ள ஏதுவாயிற்று. வயது, பால், அறிவின்தன்மை, மாணவனின்
பிரிவு, காலவியல்பு, பழக்கவழக்கங்கள் ஓய்வு, மாணவனது முயற்சி,
கிளர்ச்சி, தேகநிலை, திசையைநோக்க மாணவனிருப்பு இவைகளெல்
லாம் கவனிக்கப்பட்டன. ஆயினும் இவைகளெல்லாம் வரவர அதிக
இடையூறுகளை விளைவித்தன. விளைவிக்கின்றனவேயொழிய இன்னும்
ஒருபகுதியும் விளக்கமுறவில்லை. பெண்ணைவிட ஆண் அதிக சீக்கிரத்
தில் களைப்படைகின்றனரெனச் சிலரும், தன்னிஷ்டம் என்று பிடி
வாதக்காற் சிலர் களைப்படைகின்றனர் எனச் சிலரும் இன்னும் பலபல
விதமாகப் பேசுகின்றனரேயொழிய ஒருவிதமான முடிவுக்கும் வந்தபா
டில்லை. ஆயினும் என்முறையைக்கற்றுத் திரும்பிய ஒருசிற்பி இந்நூல்
வல்லுநர் பலரும் இவைகளெல்லாம் இவ்விதமாயுண்டாகின்றனவென்று
சொல்வதற்குப்பதிலாக அதன் தன்மைகளை விவரித்துக் கூறுகின்றன
ரென்றும் மரம் எப்படி வளருகிறது என்றுகூறாமல் அதன் இலை, கிளை
இவ்வாறு இருக்கின்றதென்று வியவகரிக்கின்றனரென்றும், அம் மர
வளர்ச்சிக்கு அடியிலிருக்கும் ஒரே வேர்தான் காரணமாகலின் அதனை
ஆராய்வதில்லையென்றும் அதுபோல நாம் போதிக்கும்முறை பிழையற்
றது என்றும் கூறுவது கவனித்தற்குரியதாம்.

(தொடரும்)

சோமசுந்தரதேசிகர்.

இலக்கணவிளக்கபரம்பரை.

றென்று வற்புறுத்தும். பவானியாற்றுக்கு "வானி" யல்லது "பானி" "ஆனி"யென்னும் பெயர்கள் தொன்றுதொட்டு இற்றைக்கும் வழங்கி வருவதையும், வடகொங்கில் பவானியாறுதான் சேரர்க்குள்ள பேரியா றென்பதையும் நன்குணர்க. "செங்குணக்கொழுகும்" என்பதற்குப் பொருள் ஸ்ரீமாந். ரா. இராகவையங்காரவர்கள் காவிரி ஆன்பொருநை யுடன் கூடியதினின்றுமே நேர்கிழக்காகவோடுகின்றதெனக் கூறியுள் ளார். அது அங்ஙனம் புலப்படவில்லை. இச்செய்யுள் அக்கூடலையே குறிக்கவில்லையென்ப தொருபாற்கிடக்க, காவிரி தெற்கே பாண்டிநாட்டுக் காகக் கொணர்ந்ததை சோழனுடைய வேண்டுகோளினாலு மிந்திர னுடைய வேண்டுகோளினாலும் மூத்தபிள்ளையார் காகவுருவங்கொண்டு அகத்தியர்கொணர்ந்த கரகத்தைக் கவிழ்த்துக்கிழக்கேயோட்டினாரென்னு மைதிகத்துக்கிணங்கக் கருவூருக்கும் 20 மயிலுக்குமேற்பட்டு வடமேற் கேயுள்ள திருப்பாண்டிக்கொடுமுடிக் கெதிர்க்கரையில் அகத்தியர்பாறை யென்னும் ஒருபாறையும் அதனின்றே காவிரியாறு கிழக்கேயோடுவதை யும் இற்றைக்குங் காணலாம். செங்குணக்கென்பதற்குக் கீழ்கடலையே குறித்துச்செல்லும் காவிரியெனலும் பொருந்துமாதலானு மக்கூட லென்பது பவானிக்கூடலைக் குறிக்கினும் அதுவும் சேரநாட்டதே யாத லானும் ஸ்ரீமாந். ஐயங்காரவர்கள்கொண்டகொள்கை சரியாமாறுகாண்க. ஆயினும் திருவானிலைக் கருவூருக்கும் அக் கூடலுக்கும் யாதாமொரு பொருத்தமுமின்றென்பதும் வெள்ளிடை விலங்கலென விளங்கும்.

V. "ஆடகமாடத்தரிதுயிலமர்ந்தோன்
...."

இவ்வாசகங்களினின்றும் போந்தது ஆடகமாடம் கருவூரிலிரா நின்ற அரசவனத்தரங்கநாதர் கோவிலைக்குறித்ததென்றும் திருவநந்த புரத்தைக்குறித்தது தவறென்றும் ஆடகமாடம் வஞ்சிமாநகரின் கண்ணேயுண்டாயிருந்திருக்கவேண்டுமென்றும் அது அரசனரண்மனைய கத்ததேயென்றும் ஸ்ரீமான்கள் உ. வே. அய்யங்காரவர்களிருவரும் துணிந்துள்ளார்கள். இக்கொள்கைக்கு மாறாய குற்றம் ஒன்றுதெளி வுறக்கிடக்கின்றதையாராய்வேம். ஆடகமாடமென்பது அரங்கநாதர் கோயிலாயினும் சேரன் செங்குட்டுவனதரண்மனையகத்ததாயினும் மிகவுமபலதாயிருந்திருக்கவேண்டும். செங்குட்டுவன் தன்வாளுந்

குடையும் பால்தானப்படுத்தியதும் அவன் மறுநாட்காலையில் புறப்படுந்தெரிந்தே (அவனுணையினால்) சேடங்கொண்டு சிலர் வந்தேத்தினுரென அவ்விருவான்களிருவருங்கூறிக்கின்றனர். அங்ஙனம் "ஆடகமாடம்" ஆயலதாயிருக்குமாயின் சிவபிரானைப்பணிந்தியுமந்தணாக்கினிகோத்திரத்தை நமஸ்கரித்தும் புறப்படுகிற செங்குட்டுவன் ஆடகமாடத்தேபோய் திருமாலைவணங்கி பிரசாதம் பெறுமலியானை யேறினனென்பது அசம்பாவிதமாகும். அவன் சிவபிரானையிறைஞ்சி அக்கினி கோத்திரத்தைநமஸ்கரித்து சிறிதுந்தாழ்க்காதுயானை யேறினதும் ஆண்டு சேடங்கொண்டு சிலரேத்தியதும் சேரன் அச்சேடத்தை யெதிர்பார்த்தவனன்றென்பதையும் ஆடகமாடம் ஆயலதாகாமையும் சேணதென்றே ஏற்படுவதையும் காணலாம். ஆகையின்வஞ்சிமாநகர் கொடுங்கோளூராயினும் வேறெவ்வூராயினுமிருக்கலாமேயொழிய திருவானிலைக்களூராயிராமை நன்குபுலப்படும். "ஆடகமாடம்" என்பதை அரும்பதவுரையாசிரியர் சங்கித்தவாறு இரவிபுரமாயின் இரவிபுரமென்று பெயர் வழங்கிவருமூரின்கண் அரங்கநாதர் மூர்த்தங்கொண்ட திருமால்கோயிலுமுடைத்தாயிருக்கவேண்டுவது அவசியமாகையால் வழங்கிவாராதபெயராகிய பாஸ்கரபுரமெனக்கொண்டு அதன்மொழிபெயர்ப்பாக இரவிபுரமெனக் கூறினரென்பது இயற்கையாயமையும்பொரு ளன்றுமாறும் நன்கு தெரியப்படும். சேடக்குடும்பியும் வஞ்சிமூதூரின்கண்வதியும் வைணவபத்திபொருந்தியவனென்பது எமக்குஞ்சம்மதமே. அதனானே ஆடகமாடம் வஞ்சிமூதூரின் கண்ணிருந்ததாக வேண்டுமென்பது பெறவேண்டுவதில்லை. இற்றைக்கும் மலையாளத்தின்கணுள்ள கோயில்களில் சிவபெருமான் கோயிலினும் ஸ்ரீமகாவிஷ்ணுகோயிலினும் அருச்சகர் சாந்திக்காரரெனப்பெயர் பெறுவர். அவர் மங்களாபுரத்துவேதியராயினும் மலையாளத்திலும் குடும்பத்தோடுவதிந்து எக்கோயிலிலூழியமுண்டாயிருக்குமோ அங்கே குடும்பத்தைத்தம்மூரிலேயே வைத்துவிட்டுத் தனியேசென்று ஆறுமாதங்களுக்கூழியஞ்செய்து மற்றவாறுமாதங்களிலும் குடும்பத்துடனிருப்பது இப்போதைக்குந் தொன்றுதொட்டு நடந்துவரும் வழக்கமாயதால் சேடக்குடும்பி திருவடிபிடிக்குந் திருமாலின் கோயில் வஞ்சிமாநகரிலில்லாமல் வேறு எங்ஙனமாயினுமிருத்தல் இழுக்காது. அதன்றியும் சேடங்கொண்டுவந்தேத்திய சிலருள் இச்சேடக்குடும்பியுமொருவனுயிருக்கவேண்டுமென்பதூஉம் புலப்

காண்குவமெனவப்பார்ப்பான் செல்லவில்லை யென்றும் செங்குட்டுவனுக்கு மாற்றாந்தாய் வேளாவிக்கோமான்பதுமன்றேவி பயந்தமகனும் இளவனுமாய ஆடுகோட்பாட்டுச்சேரலாதனெனக்கொண்டு அவனிருந்தரசாண்டவூர் நறவென்றும் அதுமேல்கடற்கரையையடுத்து மலைநாட்டகத்தேநிலவியதென்றும் ஸ்ரீமான் ரா. இராகவையங்கார் கூறுகின்றார். அலைவைப்பார்ப்பான் பராசரனென்போன் காணப்போயது சேரன் செங்குட்டுவனையன்றென்பது எமக்குந்துணிபு. ஆயினும் பாலைக்கோதமனாருக்கு மவர்மனைவிக்கும் துறக்கங் கொடுத்தவன் ஆடுகோட்பாட்டுச்சேரலாதனன்று, இமயவரம்பன்றம்பிபல்யானைச்செல்கெழுகுட்டுவனென்பது சிலப்பதிகாரம் 23-ம் காதைக்கு அரும்பதவுரையாசிரியரெழுதியவுரையினின்றும், பழமொழி 316-ம் பாட்டினின்றும் ஸ்ரீமான் உ. வே. மு. இராகவையங்காரவர்களெழுதிய "சேரன் செங்குட்டுவனென்னும்" நூல் 11, 12ம்-ம் பக்கங்களினின்றும் போதரும். இப்பல்யானைச்செல்கெழுகுட்டுவன் செங்குட்டுவனுக்குச் சிறியதந்தையும் முற்பட்டவனுமாக விருத்தலினவனும்வார்த்திகனுக்குவயலூரைக்கொடுத்தவனும் அரசுகட்டிலிற்றுஞ்சியவனுமாய நெடுஞ்செழியனும் ஒருகாலத்தரசாண்டவரென்பதூஉம் அந்நெடுஞ்செழியனும் செங்குட்டுவனும் அத்தன்மையர் தானென்பதூஉமிழுக்காகாதெனவுணர்க. இதுவன்றியும் இக்காலத்திலும் மதுரைமாநகரினின்று கொடுங்கோளூருக்குச் செல்லவேண்டின் ஏறக்குறைய அதேபாட்டைதானுள்ளதையும் அது மோட்டார் இரதங்களோடிக்கொண்டிருக்கும் வனப்புவாய்ந்த தென்பதையும் அது பேரியாற்றங்கரையை யடைந்ததற்பினவ்வாற்றங்கரையைக் கொண்டேயொழுகக்கிடக்கின்றதையுங் கண்டு தெளியலாகும்.

VI. சிலப்பதிகாரம் நடுகற்காதை 67 முதல் 77 ஆமடிகளாகவுள்ளவடிகளில் சேரன் செங்குட்டுவன் இமயத்தினின்றும் கற்கொணர்ந்து வஞ்சிமாநகர்மேவி வாளாவிருந்தவமையத்தின் பொழுதுபோக்குவான் பறையூர்க் கூத்தச்சாக்கையனுடலின் மகிழ்ந்தனனெனக் கூறியுள்ளது. இதைப்பகுத்தறியுங்கால் சாக்கையனுடலென்பது திருவானிலைக்கருவூரிலாவ தனையடுத்த சோழபாண்டியர் நாட்டிலாவது கொங்குநாட்டிலாவது எப்போது மிருந்ததின்று. மலைநாட்டிலோவென்றால் பண்டுதொட்டு நாளைக்கும்வழங்கிவரும் சாக்கையார்கூத்தெனப்

படுவதை யறியாதார் யாருமிலர். மேலும் பறையூரெனப்படுவது தற்காலம் திருவாங்கூரிராச்சியத்தைச் சேர்ந்ததும், கொச்சிக்கு 25.மைல் தூரத்தும் கொடுங்கோளூருக்கு 5-மைல் தூரத்துள்ளதுமாய பரூரெனப் படுவதாய வூரையே குறித்திருத்தலின் சேரன்செங்குட்டுவனுக்கு இராச தானியாய வஞ்சிமாநகரம் திருவாஞ்சிலைக்கருவூரா யிருந்திருக்கமுடியா தென்று மது மேற்கேமலைநாட்டிலுள்ள கொடுங்கோளூரோ வேறு யாதா மொரு வூரோவெனத்தான் துணியப்போதிய வாதாரமாகுமெனக்காண்க.

VII. ஸ்ரீமான் உ. வே மு. இராகவையங்காரவர்கள் சிலப்பதி காரமணிமேகலைகளில் காணப்படும் சிற்சிலசொற்களை மலைநாட்டுவழக் கெனசிலர் கூறியதைமறுத்து அவைகள் பொதுவாக பழையதமிழ்வழக் குகளேயன்றி வேறில்லையெனக்கூறியுள்ளார். அதுவெமக்குஞ்சம்மதமே. அதினின்றும் போதருவதுயாதாமெனின் சேரன் செங்குட்டுவனிருந்தர சாண்டதும் மகாமேதாவியாகிய இளங்கோவடிகள்கற்றுக்கொண்ட தமிழ் வழங்கியதுமான வூர் மலைநாட்டகத்ததேயெனத் துணிவதிழுக்கா தென்பதே.

VIII. ஸ்ரீமான் உ. வே. மு. இராகவையங்காரெழுதிய சேரன் செங்குட்டுவனென்னும் நூலினின்றும் செல்வக்கடுங்கோவாழியாத னென்பவனும், இமயவரம்பன்சேரலாதனுமொருகாலத்தவரென்றும் சகலமுறையினரென்றுந்தெரிகிறது. ஆகவேசெல்வக்கடுங்கோவின்ற கப்பன் அந்துவஞ்சேர லிரும்பொறையும், நெடுஞ்சேரலாதன்றகப்பன் உதியஞ்சேரலுமொருகாலத்தவரென்றும் ஏறக்குறையச்சமவயதினரென் றுந்தெரிகிறது. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்பாடிய "இவன் யாரென்குவையாயின்" என்னும்பாட்டு சேரமானந்துவஞ்சேரலிரும் பொறையை முன்னிலைப்படுத்திப்பாடியதாகப் புறப்பாட்டுகூறும். அவ னத்தருணம் கருவூரிலரசாண்டுகொண்டிருந்ததாகத் தெரியவருகிறது. அவனுக்குமுன்னேயிருந்தவொரு சேரன் பெயர் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறை. இவன் கருவூரேறியவெனுமடையி னால் விளங்கினவனாதலால் சேரருக்கியற்கையாகவே இராசதானியா யிருந்தவேறு வூரினின்றும் போந்துகருவூரைத்தனக்கிருப்பிடமாக்கிக் கொண்டானென்றுணரப்படுகின்றது. இவன் வழித்தோன்றலாகிய அந்துவஞ்சேரலிரும்பொறை சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி

யென்பவனுக்குப் பகைவனு மவனுற்றலினற் கருவூரைத்தானே தப்ப வைத்துக்காத்துக்கொண்டிருந்தானென்றுந்தெரிகிறது. ஆகையின் இவருக்குமுன்னரே கருவூரைச்குறித்து சோழருக்கும் சேரருக்கும் பெரும்போர் விளைந்துகொண்டேயிருந்ததினால் ஒள்வாட்கோப்பெருஞ் சேரலிரும்பொறை முன்னம் சோழருடைய வீரராற்காப்புப்பூண்டிருந்த கருவூரில் வந்தடைய வேண்டியிருந்ததென்றும் அது முதல் கருவூரு மொருதலைநகராக்கப்பட்டதென்றும் சேரவரசரிலிளையவங்கி சத்தினரும் தாயத்தாருமாகிய இரும்பொறைமரபின ராண்டுவந்தனரென்றும் தெரியக்கிடக்கின்றது. மேலும் மூத்தவங்கிசத்தனாகிய உதியஞ் சேரன் காலத்தேயோ அதற்கு முன்னரேயோ ஒள்வாட்கோப் பெருஞ்சேரலிரும்பொறை கருவூரில் வந்து வதிந்தனனென்று போதரும். ஆகையின் உதியஞ்சேரலின் பேரனாகிய செங்குட்டுவனும் அந்துவஞ் சேரலிரும்பொறையின் பேரனாகிய பெருஞ்சேரலிரும்பொறையும் ஒரேகாலத்தில் கருவூரில் வதிந்தனரென்பது அசம்பாவிதமாகும். இதனுற் போந்த தென்னவெனின் சேரன் செங்குட்டுவன் சேரவங்கிசத்துத்தாயத் தினரில் ஜ்யேஷ்டவம்சத்தவனென்றுமவன் பழைய இராசதானியாகிய மலைநாட்டகத்தேயுள்ள வஞ்சிமாநகரத்திலரசாண்டவனென்றும் தெளியக்கிடக்கின்றது.

IX. இவைகளை முற்றும் பாகுபாடு செய்யின் திருவானிலைக் கருவூரையும் மலைநாட்டிலிருந்தசேரரது இராசதானியையும் ஆன்றோர் வஞ்சிமாநகரென்றுகூறியிருந்தலொன்று அப்பெயர்வாய்ந்ததற்கு பொற்கொடிமூதூர் முதலாயவடைமொழிகளினின்றும் வஞ்சிக்கொடியின்பூவே காரணமென்றுந்தெரிகிறது. சேரர் பண்டைக்காலத்திற்காத்துவந்த தேயம் மற்றிருதமிழ் மன்னர்காத்துவந்ததேயங்களைப்பார்க்கிலும் எத்துணைபங்கோபரவியிருந்திருக்கின்றது. சேரரிமயமலைகாறும் சென்று வெற்றிகொண்டபொழுது தங்கள் பொறியாகிய வில்லேயல்லாமல் சோழ பாண்டியருடைய புலியையும் மீனையுமிலச்சினையாகப்பொறித்துவைத்தனரென்று கூறப்படுதலாலும் சேரர் மகாவீரர்களாகவும் பகைவர் புலன்களை யெப்போதும் கவரும் முயற்சியேயுடையராயிருந்தவரென்றுந்தெரிகிறது. அம்முயற்சிக்குத்தக்கதமிழ் நாட்டுவழக்கமாக வஞ்சிப்பூச்சூட்டிக்கொண்டிருந்தவரென்றும் அவர் தலைநகருக்கு தம்வெற்றிக்கறிகுறியாக வஞ்சியென்று பெயர் சூட்டினரென்றும் அதற்குச் சான்முகப்

புலவரவர்கள் தலைநகரை வாடாவஞ்சியெனச் சிறப்பித்துக் கூறியுள்ளாரென்றும் போதரும். இத்துணிவுக்கு மாறுயிரண்டு சங்கைகளேற்படுகின்றன. அவை (1) கொடுங்கோளூரை வஞ்சியெனச் சொற்றவர் சேக்கிழாரொருவரேயாயிருக்க திருவாளிலைக் கருவூரை வஞ்சிமாநகரென வரைந்த புலவர் பிறருமாகவும் சேக்கிழாருக்கனேக நூற்றாண்டுகளுக்கு முற்பட்டுச் சங்கபுலவராயுமிருக்கின்றனராகையினத் துணிபுவலியுடைத்தன்றென்பது (2) சேரவரசரில் செங்குட்டுவனைப்போன்று ஜேஷ்டவங்கிரத்தவராயிருந்தபோதிலும் புலவ ரவரைப்புகழுந்தருணத்தி லான்மைமலையும் திருவாளிலைக் கருவூரையுமேபுகழ்ந்து கூறியுள்ளதின்றிச் சேரர்தலைநகர் மலைநாட்டகத்திருந்திருக்கமாட்டாதென்பதுமே. இவைகளுக்குவிடைகூறுவாம் கருவூரேறிய வொள்வாட்கோப்பெருஞ் சேரலிரும்பொறை அந்துவஞ்சேரலிரும் பொறைக்கும், உதியஞ்சேரலுக்கும் முற்பட்டவனாயிருந்தலினாலும் கடைச்சங்கத்துப்புலவருள் சீத்தலைச்சாத்தனாருக்கும், பாணருக்கும் முற்பட்டவராய நரிவேரூஉத்தலையார் காலத்தவனாதலினாலும் அக்கோப்பெருஞ்சேரலிரும் பொறைகருவூரேறி வஞ்சிப்பூச்சூடிப் பகைவராலாக்கிரமிக்கப்படாவின்றிருந்த நாட்டைக்காத்துக்கருவூரை மிகவுஞ் சிறப்புப்படுத்தியிருந்ததனாலும் அவனுக்குப் பின்னரசுக்குவந்த சேரநாட்டில் கிழக்கேயுள்ளபாகங்களுக்கவ்வூரை இராசதானியாக்கியுமாண்டுவந்ததினாலும் சங்கப்புலவர்கள் கருவூரையும் ஆன்பொருநையையும் மேம்படுத்திப்பாடியுள்ளாரென வேற்படுகிறது. (2) சிலபுலவர் ஜேஷ்டவங்கிஷத்தவராயும் மலைநாட்டின் தம் தலைநகரில் வதிந்து வந்த சேரரைப்புகழுங்கால் "தண்ணான்பொருநைமணலினும் பலவே" யெனவாழ்த்தியிருத்தலொருக்கால் அவ்வேந்தர் தங்கள் கீழ்த்தலைநகராய கருவூருக்குச் சென்றிருந்தபொழுது பாடியிருத்தலும் கூடும். அல்லதங்ஙனம்பாடியவப்புலவர் கருவூரையுமான்பொருநையையும் நன்குயறிந்தவருமந்நாட்டவரேயாயும் மலைநாட்டிற் சென்று பெரியாற்றைக்காணாதவராயுமிருந்திருக்கவுங் கூடுமாதலாலச் சங்கைகளையொழித்துச்சேர வரசர்களாண்களை யேற்படுத்தி வதிந்து வந்த நகர்களை வஞ்சிமாநகரெனச்சிறப்பித்துக்கூறியுள்ளாரென்னுந் துணிபு நிலைபெறுதல்காண்க,

X. இதுவன்றியும் கரூர், காஞ்சிவாய்ப்பேரூர், திருக்கொடிமாடச் செங்குன்றூர், கொல்லிமலையாகிய இவைகளடங்கிய நாட்டுக்கே கொங்க நாடென்று பெயருமிந்நாடுசேரநாட்டினொருபகுதியுமின்னாட்டுக்குத்தலை நகர் கருவூராயதூஉம் புலவர் நன்கறிவர். அதுவல்லாமல் கொங்க நாடென்னும் பெயர் கொங்கனென்னுமரசன் பெயராலுண்டாய தென்ப தூஉந்தேற்றம். ஆகையினிவணரசாண்டுவந்த விளையதாயத்தரசரை கொங்கிளங் கோசரென்று புலவர் கூறியுள்ளா ரென்பதையும் சேரசக்கிர வர்த்தியாகிய செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கண்டகாலத்தி வருமவண் போந்திருந்தனரென்று சிலப்பதிகாரம் கூறியுள்ளதையு முற்று நோக்கின் கண்ணகிக்குக் கோயில் கண்டது மலைநாட்டகத்தே யிருந்தபழைய விராசதானியெனவேற்படுகிறது. இளையகிளையினராகிய விரும்பொறையெனுமரசர் தம்மலைநாட்டுக்கடிக்கடிபோவதுமாங்குவதியுந் தம்மரசனாகிய சேரனுக் கடங்கிநடந்ததூஉம் காணப்படும். தவிர சேர சக்கிரவர்த்தியாகிய செங்குட்டுவனுமவனிளங்கிளையினரும் தங்களிராச்சியத் தினெப்பகுதியினுமிருக்கும் பெரும் போருண்டாயகாலத்திலவணேகிப் போர்புரிந்து வெற்றிபெறுவது வழக்கமென்பது கொங்கர் செங்களத்து நடத்தியபோரினாலும், பழையன் மாறனுடன் நடத்திய போரினாலு மென்பது சோழரையும் நேரிவாயிலிற் கோறல்கண்டு தன்மைத்துன னாகிய இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியை சோழநாட்டுக்கதிபனாக்கி முடிசூட்டினனெனப்படுவதனாலும் நன்குபோதருவது காண்க.

XI. மேற்கூறியுள்ள காரணங்களினாற்றிருவானிலைக்கருவூர்தான் மிகப்பழைமையாய சேரர்தலை நகரென்றுமவர் வலியிழந்து சோழருக்குப் பயந்துபோயபிறகே கொடுங்கோளூரைத்தலைநகராக்கியுள்ளாரென்பதற்கு நேர்மாறாகச்சேரவரசருக்கியற்கையாயமைந்தநாடுமலைநாடெனவுமவர்க் குத்தலைநகரம் மலை நாட்டகத்தேதான் தொன்றுதொட்டிருந்ததென்றும் அவரெங்கேனும் படையெடுத்துச்சென்று வென்றுவந்தகாலத்துக் கரு வூரையுமதைச்சேர்ந்தநாட்டையும் கைப்படுத்தி யனேககாலம் சோழ ருடன்பொருதவரைத்தோற்கடித்து நாட்டையுமந்நகரையுந் தமதாக்கி வெகுகாலமாண்டுவந்தனரென்றும் போதருவது காண்க. அதற்குப்பிறகு காலவித்யாசத்தினால் மலைநாட்டிராசதானியிலிருந்தமுடிமன்னர் வலிகுன் றிக் கருவூரினின்று தமக்காகக் காத்துவந்திருந்த விளைய கிளைஞரைத் தக்கவாறடக்கியாளுந்திறனுமிழந்துபோயதினிமித்தம் சேரமான்பெருமா ணாயனாருக்குமுந்தியோ சற்றுப்பிந்தியோ கொங்குநாடு சேரநாட்டினின் றும் விடுபட்டுச்சுதந்தரம்பெற்றிருந்ததென்றும் அன்றுதொட்டுக்கொங்கி லரசாண்டுவந்த மன்னரும் மலைநாட்டின்மேற் படையெடுத்ததைத் தங் கீழ்ப்படுத்த முயன்றனரென்றும் சேரவரசர் அவர்களை முறியடித்துத் துரத்தியஞான்றே கொல்லமாண்டின துற்பத்தியென்றும், கொங்குநாட் டுக்கயலதாயும் சோணாட்டினகத்த தாயுமிராநின்ற சித்தூரின்கண் கொங்கர்படையை பகவதியி னுதவிகொண்டழித்துத் துரத்தியதைச்

சிறப்பித்து கொங்கப்படையென்னுந்திருவிழா நாளைக்குங் கொண்டாடுகின்றனரென்றும், காணலாம். இக்கொங்கநாட்டுக் கிராமங்களில் கண்ணகியைக்குறித்துக் கேட்டினவள் மலையாளத்துக்குப்போய் பகவதியாயினளென்று மைதிகம் கர்ணபரம்பரையா யிருப்பதையுங் கேட்கலாம். ஆகையின் சேரன் செங்குட்டுவனுக்கு மவன் முன்னோருக்கும் பின்னோருக்குந் தலைநகராய் வஞ்சிமாநகரெனச் சிறப்புற்றிருந்த நகர் திருவாஞ்சைக் கருவூரென்று மந்நகர் மலைநாட்டகத்தேயிருந்த தென்றும் மேற்சொன்ன வாதாரங்களினின்றும் போதரும். அந்நகர் கொடுங்கோளூரா அல்லது திருக்கருவூரா வல்லது வேறு யாதாமோரூரா வென்னுமைய மின்னுந் தீர்ந்திலது. ஸ்ரீமான்கள் உ. வே. ரா. இராகவையங்காரவர்களும், மு. இராகவையங்காரவர்களும் எடுத்துக்காட்டியுள்ள சில வேதுக்களினால் கொடுங்கோளூரையே வஞ்சிமாநகரெனத்துணிவதற்கு முடியவில்லை. அவையாதாமெனில் கடற்றுறைப்பட்டினமாய புகாரையிளங்கோவடிகள் ஐயந்திரிபறக்கடற்றுறைப்பட்டினமெனக்காட்டியுள்ளார். அவராவது பெருந்தலைச்சாத்தனாராவது வஞ்சிமாநகரத்தைச் சிறப்பிக்கவநேகவமயங்களேற்பட்ட பொழுதும் கடற்கரைப்பட்டினமாகச் சிறப்பித்துக்காட்டாமையுமவைபோல்வனபிறவும் கடற்கரையிலுள்ள கொடுங்கோளூர்தான் வஞ்சிமாநகரெனத்துணிவதற்கிடங்கொடுக்கவில்லை. காலஞ்சென்ற ஸ்ரீமான் கனகசபைபிள்ளையவர்களின் நூலாகிய The Tamils 1800 years ago வென்னும் புத்தகமின்னும் கிடைத்திலதினிமித்தம் திருக்களூரா வில்லையா வென்பதை யாராயமுடியவில்லை. ஆகையினிதையிவண்ணிறுத்தி வஞ்சிமாநகரெனச் சேரன் செங்குட்டுவன்காலத்துச் சிறப்புற்று வழங்கியது மலைநாட்டின் கணைவலிருந்தது, அதுயாது என்னும் விடயத்தை பின்னாராய்வாம்.

XII. இவ்விடயத்திட்டப்பட்டதூஉம் நம்மாராய்ச்சிக்கேற்றதூஉமாய "செங்குட்டுவன்காலம்" என்னும் விடயத்தை யிவணெடுத்துக் கோடலேற்கனவே விரிந்துள்ள விவ்வியாசம் மிகப்பெருகிப் படிப்போர்க்காயாசமுண்டுபண்ணுமெனப்பயந்து பின்னெடுத்துக்கொள்வாமெனக் கருதி யிவணிறுத்துதும்.

சி. எஸ். செலுவையர்.
(உதகமண்டலம்.)

அருவியன் காதை.

[௧௱௮-ம் பக்கத்தொடர்ச்சி.]

வேறு.

மங்கை உயிரன்ன மணவாளன் வரநோக்கிப்
பொங்குமதி கண்டகடல் போன்றுபொழில் யாவும்
கொங்குவிரி வாவிகளும் கோடுவிரி குன்றும்
அங்கருவி வீழ்தடமும் ஆர்வமுடன் ஆர்த்த. (66)

கொம்பர்இடை வைகும்இளங் கோகிலமும் ஒல்லை
பைம்புனலில் மூழ்கிஇசை பற்பல விரிக்கும்,
அம்பினிடை தூங்கிஅறி வோங்குமுது நாரை
தம்பெடையி னோடுமகிழ் தங்தொலி தெரிக்கும். (67)

மெல்லி தழ்விரி பூந்துணர் மேவிய
வல்லி கள்இவர் மாட்டு நுடங்கலோ
முல்லையம் முறுவல் உருதேசி தன்
இல்லையென் னிடையின் றெழில் எய்தலே. (68)

"நாறு பூங்குழல் நங்கையைப் போலொரு
வீறு வாய்க்கப் பெற்றேம்"என மென்கொம்பர்
ஊறு தேனும் ஒளிமலர் வாசமும்
தேறிச் சிந்தின; செப்பும் தரத்தவோ? (69)

நாடி நாள்மலர் நாயகன் உள்ளொடு
கூடி நின்றஅத் தோகையும் தோன்றல்பால்
ஓடிச் சென்றே உளமகிழ் வோடுரை
யாடிச் சென்ற தறைபகிற் பாமினி. (70)

தீதகன்ற தெளி வுறுஞ் சிந்தையும்
ஏத மில்சுனைம் யாவும் பொருந்துவீர்!
போதுவிண்ட அப்பூப்பெடை வண்டொடு
வாதுண்டேதும்பிக்"கென்றமடமயில். (71)

தன்னை நோக்கித் "தனியிருட் சோலைவாய்
மன்னு மாமணம் வாழ்மலர்க் கூந்தலாய்!
நின்னை நீத்துளேன் என்று மதுகரம்
பின்னைப் போவதைப் பார்"எனப் பேசினான். (72)

"கள் அவிழ்க்கும் கமலமென என
தாள் அவிழ்க்கும் ஒளிமுகத்தீர்! குயில்
கிள்ளை பேசவும் கேட்டுத் தமிழிசை
விள்ள லாததென்?" என்ன வினாவினாள். (73)

"எள்ளின் பூநடு ஏந்தும் குவளைபோல்
அள்ளிக் கொண்ட அழகுகண்ணாய்! மடப்
பிள்ளை பேசும் அன்றிப் பெரியார்முனே
உள்ளதோர்க் தவறும் உரை செய்வரோ ?" (74)

என்று கூறிய இன்மொழி தன்செவி
ஒன்றலும், உள்ளொதுங்கினள், நாணினள்,
நின்ற காந்தனை நீத்துக் கடிதொரு
மன்றலங் கொம்பர் ஊடு மறைந்தனள். (75)

கொம்பின் பூவும் கொடியினப் பூக்களும்
பம்பிக் கற்றை பாப்பயில் பைந்தொடி
செம்பொன் மேனியும் சின்ன முறுவலும்
அம்பர் தேற்றி அறியகிற்பார் எவர்? (76)

அன்ன காலை அருவியன் ஆயிடைத்
துய்வரி வேறொரு மாற்றம் தொடுத்தனன்:
மின்னனார்முனம் மெய்யுரை செய்வதும்
என்ன வாமென இத்துணை ஓர்ந்திலேன்." (77)

இவ்வுரை எரி யூட்டும் இழுதென
நவ்வி நோக்கினள் நாணம் வளர்க்கவும்,
ஒவ்வும் என்ற உருக்கிளர் கைக்கொடே
"அவ்வண் நோக்குதி" என்றழைத் தாள்திரு. (73)

(தொடரும்).

K. N. சிவராஜபிள்ளை B.A.,

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௯௰-ம் பக்கத்தொடர்ச்சி).

ஆற்றுக்குக்காரணமான மேகவருணனை.

௬. பம்பி மேகம் பரந்தது "பானுவால்
நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினன்;
அம்பின் ஆற்றுதும்" என்(று), அகன் குன்றின்மேல்
இம்பர் வாரி எழுந்தது போன்றதே.

இ - ள். மேகம் (இமயமலைக்குமேலே விண்ணிலே) பாவினது, "சிவனுக்கு மாமன் (ஆகிய இமயபர்வதராசன் சூரியனால்) வெப்பமடைந்திருக்கிறான்: (ஆதலால் நாம் மேகமாக விண்ணிலே எழுந்து மழை) நீரினால் (அந்த வெப்பத்தைத்) தணிப்போமென்று அந்த மலைக்குமேலே கடல் பரந்தது போன்றது.

பம்பி - எழுந்து. பானு - சூரியன். மாதுலன் - மாமன். அம்பின் - நீரின், நீரினால். ஆற்றுதும் - தணிப்போம். இம்பர் - இவ்வுலகம். உமாதேவி இமயபர்வதராசன் குமாரியாதலால், நம்பன் மாதுலன் என்பது இமயமலையைக்குறித்தது. நம்பன் - சிவன். மாதுலன் - மாமன் நம்-(கடலாகிய) நமது; பன்னும்-சொல்லும், துதிக்கப்பெற்ற; மாதுலன்-(கங்கைநதியாகிய நமது மனைவியைப்பெற்ற) மாமன் (ஆகிய இமயமலை): என்றும் பொருள் கூறுவர். அவர் நம்பல் மாதுலன்எனச் சந்திபிரித்து நம்புதற்குரிய மாமனென்று பொருள்கூறலுமாமென்பர். நதிகளை மனைவியரென்றும் அவைகள் சங்கமிக்கும் கடலை அவற்றின் கணவனென்றும் கூறுதல் கவிமரபு. (சங்கமித்தல் - கலத்தல்). 'தாயர்வீடுவிட்டுத் தலைவர்வீடுநோக்கிச்செல்லும் கற்புடைத்தலைமகளிர், தாயர்வீட்டுக்கு என்றும் திரும்பிச்செல்ல எண்ணாரன்றே: அப்படிப்பட்ட கற்புடையார் போல, நதிகள் தாம் பிறந்தமலையினின்று புறப்பட்டுக் கடலைநோக்கிச்

செல்லாநிற்பன; ஒருகாலும் திரும்பி மலைநோக்கிச் செல்லுவதில்லை' என்ற கருத்துப்புலப்பட ஓர் ஆங்கில கவி கூறியது மேலேகூறிய கருத்தைத் தழுவியது கவனிக்கத்தக்கது.

7. இரவி தன்குலத் (து) எண் இல் பல் வேந்தர் தம்
பாவு நல்லொழுக் கின் படி பூண்டது ;
சரயு என்பது ; தாய்முலை அன்ன(து,) இவ்
உரவு நீர் நிலத் (து) ஓங்கும் உயிர்க்கெலாம்.

இ - ள். (கோசல நாட்டு ஆறு, என்றும் இடைவறாமல் ஒழுகுதலால்,) சூரியகுலத்தில் (ஒருவர் பின் ஒருவராக நெடுங்காலம் இடையீடின்றி அரசாண்ட) எண்ணிறந்த அரசரது (இடையறாத) நல்லொழுக்கின் தன்மையை உடையது ; சரயு என்னும் பெயருடையது ; உலகத்தில் அபிவிருத்தி அடையாநின்ற உயிர்களெல்லாவற்றுக்கும் (தன் நீரையும் அதனால் விளையும் உணவுபொருள்களையும் உண்ண உதவி, நீரும் உணவும் ஒருங்கே அமைந்த பாலைக்கொடுத்துக் குழந்தைகளை வளர்க்கும்) தாய்முலை ஒத்தது.

பாவு - புகழ்தற்குரிய. படி - தன்மை. ஒழுக்கு - ஒழுக்கம். என்பது - என்றுசொல்லப்படுவது. 'இல்வாழ்வான் என்பான்' என்னும் குறளில் 'என்பான்' எனப்படுவான் எனவருதல் காண்க. உரவு நீர் நிலம் - பரவியகடல் (சூழ்ந்த) பூமி. உரவுதல் (சங்க அகராதி). நீர்-கடல் (உரிச்சொல் நிகண்டு, இடப்பெயர்த்தொகுதி அ). உயிர்க்கெலாம்- உயிர்களெல்லாவற்றுக்கும் - உயிருள்ள சகல சராசரப்பொருள்களுக்கும்

'நீர்நிலம்' என்பது, பூமியைப் பொதுப்படக் குறிப்பதாயினும், இங்கே கோசலநாட்டைக்குறித்தது.

இருபது பாட்டுக்கள், அடங்கிய இந்த ஆற்றுப்படலத்தில் இந்தப் பாட்டிலேதான் 'சரயு' என்று கோசலநாட்டின் ஆற்றுப்பெயர் கூறப்பட்டது.

இப் பாட்டிலே கூறப்பட்டஉயிர்க்கெலாம் சரயு என்பது தாய்முலை அன்னது என்ற உவமை மிகவும் சிறந்த உவமை. உவமானப்பொருளுக்கும் உவமேயப்பொருளுக்கும் உள்ள ஒற்றுமை நயம், ஊன்றிநினை

யுந்தோறும் அதிகமாகப்புலப்பட்டு மேன்மேலும் பெருகும் மகிழ்ச்சியை விளைக்கின்றது. இதன் இனிமையை அவரவர் உணர்ந்தறியலாமே யன்றி, ஒருவர் எடுத்துச்சொல்லி மற்றொருவரை முழுதும் உணரச் செய்தல் முடியாதது. இத்தகைய உவமைகள், வான்மீகர், காளிதாசர், வள்ளுவர், கம்பர் போன்ற உத்தமோத்தமக் கவிகள் உள்ளத்திலேயே உதயமாவன.

மேற்கூறிய உவமையிலே மகர உகரமும் லகர ஐகாரமும் சேர்ந்து வரநேர்ந்த துரதிட்டத்தினால், அந்த உவமை அடங்கிய அருமந்த பாட்டு, பல்கலைக் கழகமாணுக்கருக்கெனப் பதித்த பாலகாண்டப் பதிப் பொன்றில் நீக்கப்பட்டிருந்ததைப் பார்த்தமாத்திரத்திலே ஆச்சரியமும் விசனமும் அடைந்தேன். மாணுக்கருக்குபயோகமாமாறு பதிப்பிக்கும் புத்தகங்களில் காமமூட்டத்தக்க பகுதிகள் அவசியம் விலக்கற்பாலனவே யாம். அப்பகுதிகளில் "தாய்முலை" ஒன்றுதுமாதில்லையென்பதை அஃ பதிப்பாளர் சிந்தித்திலர்போலும். சூரியன் என்ற சோதிமுன் இருள் போலத், தாய் என்ற சொல்லின்முன் காமம் தலைகாட்டமாட்டாது. அம் மட்டோ, 'தாய்' என்றசொல், வெளிப்படையாகத் தன்முன் நிற்கப்பெறு மல் குறிப்பாக முன்னிற்கப்பெற்ற 'முலையூட்டல்' என்றசொற்றொடரைக் காமமூட்டுவதாகவாயினும் *அசப்பியமானதாகவாயினுங் கருதாமல் தமிழர்வழங்குதல்போல, அப்பொருள்தரும் ஆங்கிலத் தொடரை (Breast feeding) ஆங்கிலேயர் கூசாது வழங்குகின்றனர். ஆதலால், சர்வகலாசாலை ஆங்கில அதிகாரிகள் புத்தகப்பதிப்பு விஷயத்தில் சன் மார்க்க சம்பந்தமாக விதித்திருக்கிற விதிகளுக்கு இப்பாட்டு ஒருகால் தோற்றத்தில் விரோதமாயினும் உண்மையில் சிறிதும் விரோதமாகாது. இவ்விஷயத்தை இவ்வளவு விரிவாக எழுதியதன்காரணம், மாணுக்கருக் காகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிற சில புத்தகங்களில் காமத்தை உண் டாக்கி வளர்ப்பனவும் சபைக்குத் தகாதனவும் அல்லாத சில பாட்டுக் கள், விசேடமாகப் போற்றத்தக்க சிறப்புடையனவாயினும், இப்பாட்டைப் போல அநியாயமாக விலக்கித் தள்ளுண்டிருப்பதைப் பார்த்த வருத்த மும் இனி அப்படிப்பட்ட பாட்டுக்கள் விலக்கப்படாது பதிப்பிக்கப்பட வேண்டுமென்ற விருப்பமுமே.

* அசப்பியம் - சபைக்குத்தகாதது.

8. முல்லையைக் குறிஞ்சி ஆக்கி, மருதத்தை முல்லை ஆக்கி,
புல்லிய நெய்தல் தன்னைப் பொரு அரும் மருதம் ஆக்கி,
எல்லையிற் பொருள்கள் எல்லாம் இடை தடு மாறும் நீரால்
செல்லுறு கதியிற்செல்லும் வினையெனச் சென்ற(து) அன்றே.

இ - ள். (அந்த ஆறு, குறிஞ்சிநிலப்பொருள்களைக்கொண்டுவந்து நிறைத்து அப் பொருள்களால்) முல்லைநிலத்தைக் குறிஞ்சிநிலமாக்கி, (அவ்வாறே முல்லை நிலப் பொருள்களால்) மருதநிலத்தை முல்லைநிலமாகவும் (மருதநிலப்பொருள்களால்) நெய்தல்நிலத்தை மருதநிலமாகவும் செய்து, அந்தந்த நிலத்துப்பொருள்களெல்லாம் (தந்தம்நிலத்தைவிட்டு வேறுநிலம்போய்த் நிலைமைபக்கமாக) இடம் தடுமாறச்செய்யும் தன்மையினால், (அந்த ஆறு, தன்னை [வினையை]ச் செய்த உயிரை அது முன்னிருந்த பதவியினின்று) செல்லுதற்குரிய (வேறு)பதவிக்கு (க்கொண்டு) செல்லும் வினையைப்போலச் சென்றது.

புல்லிய - இழிந்த; (மருதத்தை அடுத்துப்) பொருந்திய (எனலுமாம்). பொரு அரும் - ஒப்பில்லாத - சிறந்த. எல்லையிற்பொருள்கள் - (அந்தஅந்த நிலத்து) எல்லையில் உள்ள பொருள்கள். இடைதடுமாறும் நீரால் - இடம் மயங்கச்செய்யும் தன்மையினால். 'தடுமாறல், என்றதன்வினை தடுமாறுவித்தலென்று பிறவினைப்பொருள்பட நின்றது. இவ்வாறு இந்நூலில் வேறு சில இடங்களில் தன்வினை பிறவினையாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. நட்புக்கேட்படலம் ௪௫-ம் பாட்டில் 'விலகும்' என்பது விலக்கும், என்று பொருள்பட வருதல்காண்க. இக் கவியில் 'சென்றது' என்றதற்கு, முன்கவியிலுள்ள 'சரயு' என்பது எழுவாய் அன்று. ஏ - அசைகள்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகியநால்நிலங்களுள் தானிய விளைவு மிகுதிபற்றி மருதத்தைப் 'பொருவருமருதம்' என்றும் அவ் விளைவு குறைதல்பற்றி 'புல்லியநெய்தல்' என்றும் கூறினரெனல்பொருந்தும். மலையில் உற்பத்தியாகிய ஆறு, மலையடுத்த குறிஞ்சிநிலத்துப் பொருளைவாரிச்சென்று அந் நிலத்துக்கடுத்துள்ள முல்லைநிலத்திற் சேர்த்து, அதனில் உள்ளபொருள்களை அதற்கடுத்த மருதநிலத்திற் சேர்த்து அதன்பொருளை அதற்கடுத்த நெய்தல் நிலத்திற்சேர்த்த வரலாறு கூறப்பட்டது.

(பூமியின் மேலுள்ள) நிலங்கள் நிறைந்த விளைபொருள் களைக்கொடுக்கும்; (பூமியின் கீழுள்ள) சுரங்கங்கள் நல்ல இரத்தினங்களைக்கொடுக்கும்; (அவர்களது) பெருந்தற்கருமையான குடிப்பிறப்பு (நல்) ஒழுக்கத்தைக் கொடுக்கும்.

கலம் (-மரக்கலம்) கணக்கிலா (-அளவற்ற) நிதியம் சுரக்கும் (-கொடுக்கும்) எனக்கூட்டுக. கணக்கிலா நிலமென்றும் கூட்டலாம். வளம் - (விளைபொருள்களாகிய) பலபண்டங்கள். நிலம் - கீழ்ப்பூமி (பல உலோகங்களும் மணிகளும் அகப்படும் சுரங்கம் ; அல்லது கனி).

16. கூற்றம் இல்லை,ஓர் குற்றம் இலாமையால்;
சீற்றம் இல்லை,தம் சிந்தையிற் செய்கையால்;
ஆற்றல் நல் அறம் அல்ல(து) இலாமையால்,
ஏற்றம் அல்ல(து) இழிதக(வு) இல்லையே.

இ - ள். (அந்தநாட்டினர்க்குக் கொலை களவு நோய்கிடங்கொடுத்தல் முதலிய குற்றம் இல்லாமையினால் (அகால) மரணம் இல்லை. (அவர்களது நல்) எண்ணத்தினாலும் (நல் வார்த்தையினாலும் நற்) செய்கையினாலும் கோபம் (ஒருவருக்கும் உண்டாகக்காரணம்) இல்லை. நல்ல தரும காரியங்களன்றி (வேறொன்று) செய்தல் இல்லாமையால் (அவர்கள்) உயர்வடைதலன்றித் தாழ்வடைதல் இல்லை.

கூற்றம் இல்லை - நமன் இல்லை, மரணம் இல்லை, அகாலமரணம் இல்லை. சிந்தையில் - சிந்தையால், எண்ணத்தினால். ஆற்றல் - செய்தல். ஏற்றம் - உயர்வு. இழிதகவு - இழிவு, தாழ்வு. நல் அறம் அல்லது ஆற்றல் இலாமையால் எனக்கூட்டுக.

17. நெறி கடந்து பரந்தன, நீத்தமே:
குறி அழிந்தன, குங்குமத் தோள்களே:
சிறிய மங்கையர் தேயும் மருங்குலே:
வெறியவும், அவர் மெல் மலர்க் கூந்தலே.

இ - ள். (அந்நாட்டிலே) வெள்ளங்களே நெறிகடந்து (கரைபுரண்டு) செல்வன ; (மக்கள் தத்தமக்குரிய நெறிகடந்து செல்லார்கள்;) மைந்தரது குங்குமம் அணிந்த தோள்களே (மாதரைத்தழுவி அக்குங்குமக்) குறி அழிவன; (தவசக்குவியல் கிராமியசாலை முதலியவை களவு

செய்யப்பட்டால் தெரியும்படி. இப்பு—முந்தினைக்குறி அழிதல் இல்லை:) மாதர் இடையனே சிறுமையுடையன; (அன்றிச் சிறுமையுடையார் இல்லை:) அவர்களது மலர்(மாலை) உடைய கூந்தலே வெறி (-வாசனை) உடையன; (அன்றி வெறி [-மயக்கம்] உடையார் இல்லை.)

'சிறிய'என்பதற்குச் சிறுமையுடையனவென்று பொருள்கொண்டதுபோல, 'வெறிய'என்பதற்கு வெறுமையுடையனவென்றும் பொருள் கொள்ளலாம். இப்பொருள்கொண்டால், மேலே 'மயக்கம் உடையார் இல்லை' யென்றதனை வெறுமை (—இன்மை - தரித்திரம்) உடையார் இல்லை'யெனக் கொள்ளல் வேண்டும்.

18. தாலி ஐம்படை தழுவும் மார்பிடை,
மாலை வாய் அமு(து) ஒழுகும் மக்களைப்,
பாலின் ஊட்டுவார் செம் கை, பங்கயம்,
வால் நி லா உறக், குவிவ, மானுமே.

இ - ள் : தாலியும் (அதனுடன் தாலிச் சரட்டிற் கோத்த) ஐம்படை அணியும் பொருந்தும் மார்பிலே (அலைந்து வந்தப்பட்டு) வாய் நீர் வடியும் குழந்தைகளுக்குப் பாலூட்டுவார் (ஆகிய மாதர்களுடைய) கை (பாலுள்ள சங்கைப்பிடிக்கக்) குவிவது, வெள்ளிய நிலா உறத் தாமரை மலர் குவிவதனை ஒக்கும்.

ஐம்படை—ஐந்து ஆயுதங்கள்—திருமாலின் ஐந்து ஆயுதங்களாகிய சக்கரம் வில் வாள் தண்டு சங்கு ஆகிய இவைகளின் உருவம் அமையச்செய்த பொன்னணிகள். "தாலி ஐம்படை—தாலியாகிய பஞ்சாயுதம் புறநானூற்றுரை.............புற-என" (குமாரசுவாமிப்பிள்ளை கனகசுந்தரம்பிள்ளை பதிப்பு, பாலகாண்டம், அரும்பதவுரை), தழுவும்—பொருந்திய மாலை—ஒழுங்கு (ஆக). வாய் அமுது—வாய்நீர். மாலைவாய் அமுது ஒழுகும் என்பதற்கு (த்தம் மார்பின்மேல்) மாலை (போல இரு கடைவாய் (நின்றும் உமிழ்) நீர்வடியும் என்றும் பொருள் கொள்ளலாம். மக்களைப்பாலின் ஊட்டுவார்—மக்களுக்குப்பாலை ஊட்டுவார். வால்நிலா வெண்மையான சந்திரிகை 'குவிவது' எனற்பாலது ஈவ்விகுதி நோக்குக் 'குவிவ' என நின்றது, திருஅவதாரப்படலம் கஉ-ம் பாட்டில் 'வருவது' 'வருவ' என வந்ததுபோல, கை, பங்கயம் குவிவ (னவற்றை) மானும் (—ஒக்கும்) எனவும் கொள்ளலாம்.

ஐம்படை, மாதருக்கும் பிள்ளைகளுக்கும் பொது ஆபரணமெனி னும், இங்கே தாலியோடு இயைந்து மாதர்க்குரிய ஆபரணமாகக் கொள்ள நின்றது. மாலைக்கு மாலை நேரமெனப் பொருள்கொண்டு அதனை 'வால் நிலா' வோடுகூட்டுவாரும் உண்டு: அது கடுங் கொண்டு கூட்டு; இன்றியமையாததுமன்று.

19. வண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்:
திண்மை இல்லை, நேர் செறுநர் இன்மையால்:
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்:
வெண்மை இல்லை, பல் கேள்வி மேவலால்.

இ. ள்: (ஒருவருக்கும்) அற்பதரித்திரமும் இல்லாததனால் (இரப்பார் இல்லை, இரப்பார் இல்லாததனால்) கொடை இல்லை: எதிர்த்துப் போர் செய்யும் பகைவர் இல்லாததனால், வலிமை (செறுந்தற்கு இடம்) இல்லை: (எல்லாரும்) பொய் கூறாமையால் (எவரையும் இவர் உண்மை, சிறந்ததெனச் சிறப்பித்துக் கூறுதற்குரிய) உண்மை இல்லை: (எல்லாரும் கல்வி) கேள்வி (அறிவு) பொருந்தியிருத்தலினால், (எவரிடத்தும்) அறிவின்மை இல்லை.

வண்மை—ஈகை. ஓர்வறுமை—சிறிது தரித்திரமும். திண்மை—வலிமை—பராக்கிரமம். நேர்தல்—எதிர்தல். செறுநர்—பகைவர். வெண்மை—வெளிற்றுத்தன்மை—அறிவின்மை.

ஒவ்வோரடியும் பொருள் முடிபுடைமையால், இப்பாட்டு அடிமறி மாற்றுப்பொருள்கோட்கு உதாரணமாம்.

இப்பாட்டில், முதல் மூன்றடியிலும் முற்பாதியில் வண்மை திண்மை உண்மை யென்றநற்பொருள்களும், பிற்பாதியில் வறுமை பகைமை பொய்மை யென்ற தீப்பொருள்களும், இருபாதிகளிலும் இன்மைகுறிக்கும் மொழிகளும் அமையப்பாடிய கவி, அந்த மூன்றடி களுக்கு முழுதும் பொருத்தமாக 'தண்மை இல்லை வெம் தாபம் இன் மையால்' 'ஒண்மை இல்லை பேதறல் இலாமையால், என்பவைபோன்ற யாதாயினும் ஓர் அடியை நான்காம் அடியாகப் பாடாமல், அம்முதல் மூன்றடிகளுக்குக், குறைவான பொருத்தமுடையதாக, 'வெண்மை இல்லை பல் கேள்வி மேவலால்' என்று, முற்பாதியில் 'வெண்மை'

வென்ற நிப்பொருளும், பிற்பாதியில் 'கேள்வி' யாகிய நற்பொருளுடன் இன்மைக்கு எதிர்மறையாகிய உண்மைகுறிக்கும் 'மேவல்' என்பதும் உள்ள அடியை நான்காம் அடியாகப்பாடியது கவனித்து ஆராயத்தக்கது. [ஒவ்வாமை—அறிவு (உ-ம்) 'ஒண்மை உடையம் யாம் என்னும் செருக்கு' வள். அசாச. சங்க அகராதி.]

20. சோலை மா நிலம் துருவி, யாவரே
வேலை கண்டு, தாம் மீள வல்லவர்?
சாலும் வார் புனற் சரயு வும், பல
காலின் ஓடியும் கண்ட (து) இல்லையே!

இ-ள்: (அந்தக் கோசலமென்னும்) பெரிய தேசம் '(முடியச் சென்று) தேடி எவர்தாம் (அதன்) எல்லை கண்டு திரும்ப (வந்து சொல்ல) வல்லவர்? (ஒருவரும் இல்லை இது ஆச்சரியமன்று,) சரயு நதியே எண்ணிறந்த கால்களின் ஓடியும் (அத்தேசத்தின் எல்லை) கண்டதில்லையே!

சோலை—சோலைகளையுடைய—மாநிலம்—பெரிய தேசம்—துருவி தேடி. வேலை—எல்லை. சாலும்—மிகும்—திரண்ட வார் புனல்—நெடுநீர் நீள ஓடிச்செல்லும் நீர். கால், சிலேடையாய்க் கால் என்றும் வாய்க்காலென்றும் இருபொருள்படப்பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. காலின் 1. கால்களால்; 2. வாய்க்கால்களால்—வாய்க்கால்கள்வழியாக.

இப்பாட்டின் கருத்து, பெரிய சரயுநதி எண்ணிறந்த காலாலும் ஓடிக்காணமுடியாத கோசலநாட்டெல்லையைச் சிறியமனிதர் இரண்டு காலாற் சென்று காண்பதெவ்வாறென்றவாறு.

நகரப்படலம்.

21. செவ்விய, மதுரம் சேர்ந்த நற் பொருளின், சீரிய, கூரிய, தீம் சொல்
வவ்விய கவிஞர் அனைவரும் வட நூல் முனிவரும் புகழ்ந்தது வரம்(பு) இல்
எவ் உலகத்தோர் யாவரும் தவம் செய்(து) ஏறுவான் ஆதரிக் கின்ற
அவ் உலகத்தோர் இழிவதற்(கு) அருத்தி புரிகின்ற(து) அயோத்தி மா
நகரம்.]

இ-ள்: அயோத்திமாநகரமானது,—நேரா (கப் பொருள்படுவ) னவும், (மனத்துக்கு) இனிய நயமான அர்த்தமுடையனவும், சிறந்தனவும் நுட்பமுடையனவுமாகிய (காதுக்கு) இனிமையான சொற்களைக் கொள்ளை கொள்ளும் (சடகோபமுனிவர்முதலிய தென்மொழிக்) கவி

வாளரும் (வான்மீகி முனிவர்முதலிய) வடமொழி (க் கவிவாணராகிய) முனிவரும் (வருணித்துப்) புகழப்பெற்ற (சிறப்புடைய) து: எல்லா உலகங்களிலும் உள்ளோரெல்லாம் தவஞ்செய்து ஏறியடைதற்கு விரும்புகின்ற பரமபதத்திலுள்ளோர் இறங்கியடைதற்கு விரும்புகின்ற (மகத்துவமுடைய) தாயுள்ளது.

எவ்வுலகத்தோரும் எனற்பாலது, செய்யுளாதலால், எவ்வுலகத்தோரென உம்மை தொக்கது. ஆதரித்தல்—விரும்புதல். இழிதல்—இறங்குதல். அருத்தி - விருப்பம்.

வைகுந்த நாதன் வைகுந்தத்தைவிட்டு (இராமனாக) அயோத்திக்கு வந்த மகிமையினால், வைகுந்தவாசிகளும் அந்த நகரத்துக்கு வரவிரும்புவரென்பதை உய்த்துணரும்படி கம்பர் கூறி, அயோத்திக்கு அரசராகிய "இராமர் போன இடம் அயோத்தி" என்னும் பழமொழிப்படி வைகுந்த நாதன் போன இடம் வைகுந்த மென்று வைகுந்தவாசிகள் அயோத்தியை வைகுந்தமாகக்கருதும் இயல்பை இனிது குறிப்பித்தார்

22\. நிலமகள் முகமோ? திலகமோ? கண்ணோ? நிறை நெடு மங்கல நாணோ?
இலகு பூண் முலை மேல் ஆரமோ? உயிரின் இருக்கையோ? திருமகட்(கு) இனிய]
மலர் கொலோ? மாயோன் மார்பின் நல் மணிகள் வைத்த பொன் பெட்டியோ? மலரோன்]
உலகின் மேல் உலகோ? ஊழியின் இறுதி உறையுளோ? யாதென உரைப்பாம்?]

இ. ள்: அந்த நகரம், இராமபிரானாக அவதரித்த திருமாலின் மனைவியாகிய பூமிதேவியின் முகமோ? (அம் முகத்தைச் செயற்கையாக அலங்கரிக்கும்) திலகமோ? (இயற்கையாக அழகுசெய்யும்) கண்ணோ? (அவள்) மாங்கலியமோ? (அவள்) மார்பின்மேல் (அணியும்) ஆபரணமோ? (அவள்) உயிர்த்தானமோ? (திருமாலின் மற்றொருமனைவியாகிய) இலக்குமிக்கு (இருப்பிடமாயிருக்கிய தாமரை) மலரோ? திருமால் மார்பில் (அணியும் கவுத்துவ) ரத்தினங்கள் வைக்கப்பெற்ற பொற்பெட்டியோ? பிரமாவின் உலகத்துக்கும் மேல் உலக (மாகிய திருமால்வாழும் வைகுண்ட)மோ? உகாந்த காலத்தில் (எல்லா இடங்களும் அழிந்தொழியத், தானொன்றே, தன்னிடத்தே திருமால் அவதரித்து வளர்ந்து

அரசாண்ட மகத்துவத்தினால், அழியாமல் உயிர்கள் வாழத்தக்கதாய்) உள்ள வாசஸ்தலமோ? (இவற்றுள் அந்த நகரத்தை) யாதென்று (துணிந்து) சொல்வோம்?

இப்பாட்டு முழுதும் திருமால்சம்பந்தமான பொருள்கள் நிரம்பியிருப்பது நோக்கத்தக்கது.

23. மே(வு)அரும் உணர்வின் முடி(வு)இலாமையினால், வேதமும் ஒக்கும், விண் புகலால்]
தேவரும் ஒக்கும்; முனிவரும் ஒக்கும், திண் பொறி அடக்கிய செயலால்;
காவலில் கலை ஊர் கன்னியை ஒக்கும்; சூலத்தால் காளியை ஒக்கும்;
யாவையும் ஒக்கும், பெருமையால்; எய்தற்(கு)அருமையால் ஈசனை ஒக்கும்.

இ-ள். (அந்த நகரத்து மதில்,) அறிவினால் (எல்லைகாண இயலாமல்) முடிவில்லாதிருத்தலால், வேதங்களை ஒக்கும்; (மிகவும் உயர்வாய்) விண்ணுலகத்தை அடைதலால், விண்ணவரை நேரும்; வலியபொறிகளை (—இயந்திரங்களை) அடக்கியிருத்தலால், (ஐம் பொறிகளை அடக்கிய) முனிவரைப்போலும்; காவற்றொழிலால், துர்க்கையை நிகரும்; சூலம் தாங்கலால், காளிக்குச் சமமாம்; (வடிவம் பரிமாணம் இவைகளின்) பெருமையால், (மேருமுதலிய பெரிய பொருள்கள்) யாவற்றுக்கும் உவமானமாம்; அடைதற்கருமையால், கடவுளுக்குச் சமானமாம்.

மதில் பொறி அடக்குதல், காவலுக்குபயோகமாக வைத்திருக்கும் யந்திரங்களைத் தன்னிடத்துடைமையும், முனிவர் பொறியடக்குதல், ஐம்பொறி அடக்குதலுமெனப்பொருள்கொள்க. கலையூர் கன்னி—கலைமானைவாகனமாக ஏறிநடத்தும் துர்க்கை.

(மதில்) யாவையும் ஒக்கும் பெருமையால்—(மதில்தான்) பெரிதாயிருத்தலால் (பெரியவைகளாயுள்ள) எல்லாப்பொருள்களையும் நேரும். 'யாவையும் ஒக்கும் (—பொருந்தும்) பெருமையால்' என்பதற்கு 'மண்ணும் விண்ணும் பரந்து யாவற்றையும்பொருந்தி வியாபிக்கும்பெருமையாலென்று மதிலுக்குப்பொருத்தமாகவும், யாவற்றையும்வியாபித்து பொருந்தும் சர்வ வியாபகனும் பெருமையாலென்று ஈசனுக்குப் பொருத்தமாகவும், பொருள் கொள்ளலுமாம். இவ்வாறு பொருள்கொண்டால், மதிள், யாவையும் ஒக்கும் பெருமையாலும் எய்தற்கருமையாலும் ஈசனை ஒக்கும் என்பது பெறப்படும். "ஒத்தல்—பொருந்தல் (உ-ம்) 'வானொத்த காட்சி நல்கும்' (தாயு பாயப்புலி 2.) (சிந்தா)" சங்க அகராதி.

24. பஞ்சி வான் மதியை ஊட்டிய அனைய படர் உகிர்ப் பங்கயச் செம் கால்,
வஞ்சி போல் மருங்குல், குரும்பை போல் கொங்கை, வாங்கு வேய் வைத்த
மெல் பணைத் தோள்,]
அம் சொலார் பயிலும் அயோத்தி மா நகரின் அழகுடைத்(து), அன்(று),
என அறிவான்,]
இஞ்சி, வான் ஓங்கி, இமையவர் உலகம் காணிய எழுந்த(து) ஒத்துளதே.

இ-ள். வெண் சந்திரனைச் செம்பஞ் சூட்டினாற் போன்ற நகங்களோடு கூடிய செந்தாமரை மலரை ஒத்த சிவந்த பாதங்களையும், வஞ்சிக் கொடி போன்ற இடையையும், குரும்பைகளை நிகர்த்த கொங்கைகளையும் மூங்கில் நேரான மெல்லியதிரண்ட தோள்களையும் இனிய சொற்களையும் உடைய மாதர்கள் (ஆடல் பாடல்) பயிலும் அயோத்திமாநகரம் போலத், தேவலோகம் அழகுடையதோ, அன்றோவென அறிவதற்கு, (அதனைப்) பார்க்கும்பொருட்டு, (அந்த நகரத்து) மதில் உயர எழுந்தாற் போன்று (ஆகாயத்தை அளாவி) இருக்கின்றது.

பஞ்சி—செம்பஞ்சுக் குழம்பு வான்மதி—1. வால்மதி—வெண் சந்திரன்; 2. வானில் (—ஆகாயத்தில்) உள்ளசந்திரன்.—உகிர்—நகம் வஞ்சி—ஒருகொடி.. வாங்குதல்—வளைதல், வேய்—மூங்கில். பணை—பருமை- அம்சொல்—அழகிய சொல்..இனியசொல் அழகுடைத்தன்று—அழகுடைத்து, அன்று — அழகுடையதோ, அழகில்லாததோ. இஞ்சி—மதில். காணிய—காண.

'அழகுடைத்தன்று' என்பதற்கு 'அழகில்லாதது' என்று பொருள்கூறல் இங்கே பொருந்ாது; 'அழகுடைத்து, அழகுடைத்தன்று' எனப்பிரித்துப் பொருள்கொள்ளலே பொருந்தும். இந்த 'அழகுடைத்தன்று' போல அகலிகைப்படலம் எகூ-ம் பாட்டில் 'தக்க தன்றென்ன ஓரான்' என வருவதற்குத் 'தக்கதென்ன, அன்றென்ன ஓரான் என்று பிரித்துப் பொருள் கொள்க' என்று ஸ்ரீ-ரா. ராகவையங்கார் அகலிகை வெண்பா இரண்டாம்பதிப்புக்கு எழுதியிருக்கிற முகவுரை XIX-ம் பக்கத்திற் கூறியிருப்பதை நோக்குக.

25. பாடகக் கால் அடி பதுமத்(து) ஒப்பன;
சேடரைத் தழீஇயன; செய்ய வாயன;
நாடகத் தொழிலன; நடுவு துய்யன;
ஆடகத் தோற்றத்த; அளவு இலாதன.

இ-ள். (அயோத்திமாநகரத்து மாளிகைகள்,) பாடகக் காலடி பதுமத்தொப்பன—1. பெரியவைகளாய் உள்ளிடத்தேயுள்ள தூண்

களின் அடி. (பாகமாகிய பீடங்கள்) தாமரைப்பூ (வைக் கவிழ்த்தாற்) போன்றன; [பாடு—பெருமை. அகம்—உள்ளிடம். கால்—தூண்] 2. (அந்த மாளிகைகள், தம்மை மாதரென்று சொல்லும்படி.) பாடகம் (அணிந்த) கால்களின் அடிகள் (ஆகிய பாதங்கள்) செந்தாமரை (மலரைப்) போல்வன: சேடனைத் தழீஇயன—1. (அம் மாளிகைகள் அத்திவாரத்தின் ஆழத்தினால்) ஆதிசேடனைப் பொருந்தியன; [சேடனை என்றது உயர்வுப் பன்மையாய் ஆதிசேடனை உணர்த்தியது] 2. (அம்மாளிகைகள் தம்மைமாதரென்று சொல்லும்படி.) இளைஞரைத் தழுவியுள்ளன: [சேடு-இளமை]. செய்பவாயன...1. (அம்மாளிகைகள்) சிறந்த (வேலைப் பாடமைந்த) வாயில்களை உடையன; [வாய்-வாயில்—வாசல்] 2. (அம் மாளிகைகள், தம்மை மாதரென்று சொல்லும்படி.) சிவந்தவாயை உடையன: நாடகத் தொழிலன—1. (அம் மாளிகைகள்) நாடு அகத்தொழிலன—அகத்து நாடு தொழிலன—உட்புறத்தே (ஆச்சரியப்பட்டு ஆராயத் தக்க (சிற்பம் சித்திரமுதலிய) தொழில் (அமைந்த அழகிய பணிகள்) உள்ளன; 2. (அம் மாளிகைகள், அவைகளை மாதரென்று சொல்லும் படி.) கூத்தாகிய தொழிலையுடையன: நடுவு நய்யன—1 (அம் மாளிகைகள்) நடுப்பாகம் சுத்தமாக (ஆகாயவெளி) உள்ளன; 2. (அம் மாளிகைகள் தம்மை மாதரென்று சொல்லும்படி) இடைநு(ய்) அ(ன்)ன—இடை, நூற்கும் பஞ்சிற்றொடர் நுனியை ஒத்தன: ஆடகத் தோற்றத்த—1. (அம் மாளிகைகள் பொன் (மேருப்) போலும் காட்சியுடையன; 2. (அம் மாளிகைகள் மாதரென்று சொல்லும்படி) பொன் போலும் பொலிவுடையன: அளவில்லாதன (அந் நகரத்து மாளிகைகள் அந் நகரத்து மாதர்போல) எண்ணிறந்தவைகள்.

முந்தியபாட்டுக்களில் உள்ளமாளிகைகள் இப்பாட்டுக்கு எழுவாய். அந்தமுந்தியபாட்டுக்கள் இந்த இன்கவித்திரட்டில் விட்டுவிடப்பட்டிருக்கின்றன. இப்பாட்டு மாளிகைகளின் வருணனையாய், முழுதும் மாளிகைகளுக்குப் பொருத்தமாகவும் வினைமுடிவுகள் நீங்கலாக மாதருக்குப் பொருத்தமாகவும் தொனிச்சிலேடையாக இயற்றப்பட்டிருக்கிறது. எல்லாவினைகளும், பலவின் பால்வினைகளாய், மாளிகைகளுக்கே பொருந்துவனவாயும், பால்வழுவமைதியாகக் கொண்டாலொழிய மாதருக்குப் பொருந்ாதனவாயும் உள்ளன, ஆதலால் 'வினைமுடிவுகள் நீங்கலாக' என்று கூறப்பட்டது. (தொடரும்)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

மேற்றிசைச்செல்வம்.

(The Wealth of the West.)

(செந்தமிழ்த்தொகுதி-உ௦, பகுதி-கஉ, சஎரு-ம் பக்கத்தொடர்ச்சி).

நாகரீக வரலாறு.

எகிப்திய நாகரீகம்.

11. கோளதேயத்திலிருந்து கப்பலேறிச் சூரியாஸ்தமனதிசையைநோக்கி நேராகப்போவோமாயின் பலநூறுகாவதங்கள்கழிய மேற்றிசைக்கடலின் எல்லைவந்தெய்துவர். இவ்வெல்லையிலுள்ளது ஆபிரிக்காக்கண்டமெனப் பெயரிய பெருநிலப்பரப்பு. இதன்வடபாரிசத்தில் முன்னாளிற் சாகரமாயிருந்து இந்நாளிற் பாலைவனமாயிருக்கிற சகாராவனாந்தரம் பரந்துகிடக்கின்றது. சகாராவுக்குக்கிழக்கே அதாவது ஆபிரிக்காக்கண்டத்தின் வடகிழக்குக்கோடியிலே நீலநதிபாய்தலினாற் பலவகை வளங்களும்பொருந்திய எகிப்துநாடு உளது. இந்நாட்டிற்குச் செல்வமளிக்கும் நீலநதி தெற்கேயுதித்து வடக்குநோக்கியோடி நாட்டின் நீளமுழுவதையும் கடந்து ஆபிரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் நடுவணதாகப் பொருந்தியிருக்கும் மத்தியதரைக்கடலினுட் பாய்கின்றது. ஆசியாவின் தென்மேற்குக் கோடியிலுள்ள அராபிநாட்டினையும் எகிப்துநாட்டினையும் பிரித்துநிற்பன செங்கடலும் சுவெஸ்கால்வாயுமாம். நமது நாட்டிலிருந்து மேனாட்டுக்குச்செல்வோர் செங்கடல் சுவெஸ்கால்வாய் மத்தியதரைக்கடல் இவற்றைக்கடந்து அத்லாந்திக் சமுத்திரவாயிலாகச் செல்வார். முன்னாளிற்போலவே இந்நாளிலும் எகிப்துநாடு மேற்றிசைச் செல்வமும் கீழ்த்திசைச்செல்வமும் ஒன்றுசேர்தற்குரிய நாடாகவிருக்கின்றது. இந்நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் பூர்வசம்பந்தமுளதாதலால் இதனது நாகரிக வியல்பைச் சற்றுவிரிவாக ஆராய்வாம்.

12. எகிப்தியர் நீலநதிக்கரையையடைவதற்குமுன் கிழக்கிலிருந்து கடல்கடந்துவந்ததாக அவர்களது பூர்வசரித்திரஞ்சொல்லுகிறது. தமது பூர்வதேயத்தை எகிப்தியர் "பண்டு" என்னும் பெயரால் வழங்கினர். பண்டுதாம் இருந்துவந்தநாட்டினைப் "பண்டு" என

வருகின்றோரென்பது ஆராயற்பாலது. பூர்வஎகிப்தியர் ஏழாயிரத்துச் சில்வானம் வருஷங்களுக்குமுன்னர் இருந்தார்களெனினும் அவருடைய அரசர் பலர் உடலங்கள் மருந்திட்டுச்சேமிக்கப்பட்டிருக்கின்றனவாதலால் அவற்றையின்றும் பார்க்கலாகும். திராவிடரும் பூர்வஎகிப்தியரும் ஒரேகுலமுறையில் வந்தவரென்பது ஹெக்கிலி முதலிய சாஸ்திரவிற்பன்னர்களுடைய கருத்து. சென்றஆண்டிற் கிரேதீவிற்கண்டு பிடிக்கப்பட்ட கல்வெட்டிலுள்ள மொழி திராவிடமொழிகளோடு சம்பந்தமுடையதென மேனாட்டு அறிஞர் கூறுகின்றனர். பூர்வஎகிப்தியர் ஆதியிற் சித்திரங்களால் மொழிகளைக் குறியீடுசெய்தனர். பின்னாளில் வரிவடிவெழுத்தைக் கிரேதீவத்தாரிடமிருந்து பயின்றுகொண்டனரென்று எண்ண இடமுண்டு. கிரேதீவத்தாருடைய நாகரிகத்தைப்பற்றியும் உலகில் வரிவடிவெழுத்து உண்டாயினகாலத்தைப்பற்றியும் பின்னராய்வாம். எகிப்து நாட்டினது நாகரிகத்தையாராயும்போது முதலிலே காணப்படுகிற சிறப்பியல்பு எதுவோவென்னில் தொன்றுதொட்டு இந்நாடு உணவுப்பொருள் முதலியவற்றாற் குறைவுபாடில்லாததாய்ச் செல்வவளம்பொருந்தியதாய் இருந்தமையினால் இந்நாட்டார் பிறநாட்டுக்குச் சென்றாரல்லர். பிறநாட்டார் இந்நாட்டுச் செல்வத்தைக் கவரவிரும்பிப் பலமுறை படையெடுத்துவந்து இந்நாட்டினைப் பற்றி அரசுபுரிந்தனர் என்பது. தற்காலத்திற் சுவெஸ்கால்வாயைப் பரிபாலிப்பதற்காக ஐரோப்பியராஜாங்கங்கள் எகிப்தின் அரசியலோடு தொடர்புடையனவாயிருக்கின்றன.

3. சென்ற ஒருமாதகாலமாக வர்த்தமானப்பத்திரிகைகள் எகிப்துநாட்டினைப்பற்றி யிருவேறுவகையான விசேஷசமாசாரங்களைத் தந்துவருகின்றன. அவற்றுள் ஒன்று, எகிப்துநாட்டின் தற்கால அரசியல்நிலையைப்பற்றியது. காருண்ணிய ஆங்கில அரசாங்கத்தார் எகிப்துநாட்டுக்குப் பூரணசுதந்தரம் கொடுத்துவிட்டார்களென்றும், அங்ஙனமாயினும் அலன்பி பிரபுவும் ஆங்கிலசைநியங்களும் இன்னும் எகிப்திலிருந்து புறப்படவில்லையென்றும், எகிப்திய தேசாபிமானியாகிய சாக்லுல் பாஷா இன்னுஞ் சிறைச்சாலையிற்றான் இருந்துவருகிறாரென்றுங் கூறுவது, மற்றொன்று எகிப்து நாட்டிலுள்ள லுக்சோர் நகரத்துக்குச் சமீபத்தில் துத்தங்காமன் என்னும் பூர்வீக அரசனொருவனுடைய சமாதிக்கட்டிடங் கண்டுபிடிக்கப்பட்டதென்றும், அதனுட்

பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்ட அழகுபொருந்திய கருங்காலிக்கட்டில்களும், நவமணியிழைத்த ஆபரணங்களும் விலையுயர்ந்த பிறபொருள்கள் பலவும் அகப்பட்டனவென்றும், அவற்றினைக் கண்டுபிடித்த கார்னார்பன் பிரபு அறிவுவிர்த்தியைக்கருதினவரே யன்றிப் பொன்னையும் மணியையும் பொருட்படுத்துபவரல்லராதலால் ஏற்கனவே எகிப்திய அரசாங்கத்தாரோடு செய்துகொண்ட உடம்படிக்கையிற் றமக்குப் பங்குவேண்டாமென்று சொல்லிவிட்டாரென்றும், அங்ஙனமாயினும் வழக்கப்படி அவருக்கு அரைப்பங்குகொடுப்பது மரபாமெனவுங்கூறுவது. துத்தங்காமனுடைய சமாதிக்கட்டிடத்தைப்பார்வையிடுவதற்காக இங்கிலந்து, பிரான்சு, அமெரிக்கா முதலிய தேசங்களிலிருந்து நூற்றுக்கணக்கான கலைநூல்வல்லோருஞ் செல்வப்பிரபுக்களும் வந்துசேருகிறார்கள். மேற்றிசையறிஞருக்கு எகிப்துதேயத்தின்மீது இத்தனை யார்வமுண்டாவதற்குக் காரணமென்னவென்னில், தற்கால ஐரோப்பிய நாகரிகத்துக்குத் தாயகமாகிய யவனபுர ரோமபுர நாகரிகங்கள் உண்டாவதற்கு முற்பட்டதாய் அவையனைத்துக்கும் நிலைக்களமாய் இருந்ததுவும், ஆசுரேய, பாரசீக, எபிரேய, பினீசிய, கிரேத (cretan) நாகரிகங்களோடு தொடர்புடையதுவும் எகிப்திய நாகரிகமாதலானும், பிரேதசேமக் கட்டிடங்களிற் காணப்பட்ட கல்வெட்டுகளைக்கொண்டு எகிப்தின்சரித்திரத்தைத் தொடர்ச்சியாகவே அறிந்துகொள்ளுதல் கூடுமாதலானும் மேற்றிசையறிஞர்கள் எகிப்திய புராதன ஆராய்ச்சி (Egyptology)என ஒருகலைநூற்பிரிவு ஏற்படுத்திப் பெருக ஆராய்ந்து வருகிறார்கள்.

14. அஃதன்றியும் பின்னாளில் ஒருவர்பின்னொருவராய்ப்பலவேறு சாதியார் எகிப்துநாட்டினைக்கைப்பற்றி, அதிகாரஞ்செலுத்தினராதலால் அச்சாதியார் பலருடைய சரித்திரத்தையாராய்வதற்கு எகிப்திய சரித்திரவாராய்ச்சி யின்றியமையாததொன்றாம். பூர்வ எகிப்தின் நாகரிக உயர்ச்சிக்கு அறிகுறியாக இன்றும் நின்றுநிலவுகின்ற (Pyramids "பிறமிட்ஸ்" எனப்படும்) பிரேதசேமக் கட்டிடங்களின் அமைப்பை நோக்கும்போது இற்றைக்கு ஆறாயிரத்துச்சில்வானம் ஆண்டுகளுக்கு முன் அவற்றைக்கட்டிமுடித்த பூர்வ எகிப்தியர் அக்காலத்துக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்பு உயர்ந்த நாகரிகம்படைத்தவர்களாகவிருந்திருக்கவேண்டும் என்பது புலப்படுகின்றது. உலகில் நாகரிகம்

ஏற்பட்டகாலத்துக்கு முற்றெல்லைகூறுவது ஒருவாற்றானும் இயலாத தொன்றும். தற்கால ஐரோப்பியர் நாகரிகம் அடைந்தகாலம் மிகஅணித்தானதாதலின் பல்லாயிரம் ஆண்டுகளுட்பட்ட தமது முன்னோர்நிலைமையை யளவுகோலாகக்கொண்டு எல்லாரும் தம்முன்னோரைப்போலவே யிருந்திருக்கவேண்டுமென்ற சித்தாந்தத்தை யேற்படுத்தி உலகு நாடோறும் மேனிலையை யடைந்துகொண்டுபோகின்றதென்பர். இனி, நாமோவென்றால் பல்லாயிரமாண்டுகளுக்குமுன்பு நமது முன்னோர் சீருற்றிருந்தாரென நமது நூல்கள் கூறுகின்றவாதலின் உலகு காலாந்தரத்திற் கீழ்நிலையை யடைந்துகொண்டுபோகின்றதென்போம். இருசாராருடைய கொள்கையும் ஒருவகையில் உண்மையேயாயினும் இவ்வுலகு உயர்வதுமின்றித் தாழ்வதுமின்றி மிக மிகப் பூர்வகாலந்தொட்டு ஒரேபடித்தாகவிருக்கிறதென்பது பொருத்தமான முடிபெனல் பிழையாகாது. வடகோடியுயரத் தென்கோடிதாழ்வதும், குடபாலிற் செல்வம்மிகுக்கக் குணபால் வறுமையுறுவது, குணபால் உயர்ச்சியடையக் குடபால்தாழ்வதும் இயல்பேயாகும். இக்காலிற் பலதேயங்களுக்கிடையிற் கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டிருப்பதுபோல அக்காலினும் கலத்திற் செல்வதும் பண்டமாற்றுவதும் இருந்ததென்பதற்கையமில்லை. இக்காலிலுள்ள இயந்திரக்கப்பல்கள் விரைவிற்செல்வன அக்காலிலுள்ள மரக்கலங்கள் காற்றோட்டத்துக்கேற்றவாறு விரைந்தோ பதமையாகவோசெல்வன இதுவேவேறுபாடு.

15. எகிப்துநாட்டின் நாகரிகம் கலியுக ஆரம்பத்துக்கும் முந்தியதென அறிகிறோம். ஆயினும் விரிவஞ்சி இவ்வாராய்ச்சியிற் கலியுக ஆரம்பந்தொட்டு மேல்நடந்தகாலத்திற்சம்பவித்த ஒருசில விசேஷக்குறிப்புகளைமட்டுஞ் சொல்லிமுடிப்பாம். கலியப்தம் 5024-ம் ஆண்டு நடக்கிறது. ஆதலிற் கலியுகஆரம்பம் கி. மு. 3101-ம் ஆண்டு ஆதல்வேண்டும். பெப்பி (Pepy I) என்னும் எகிப்தியஅரசனுடைய காலம் கி. மு. 3447-ம் ஆண்டு எனநிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது கலியுக ஆரம்பத்துக்கு 346 வருஷங்களுக்குமுன்னே பெப்பி என்னும் அரசன் எகிப்தில் அரசுபுரிந்தான் என்பதாம். இவன் ஆறுவது இராஜவம்சத்தவன். இவனுடையகாலத்துக்குமுன்பு ஐந்து இராஜவம்சங்கள் அரசாட்சிபுரிந்தன, அவற்றின் காலவெல்லை எத்தனைநூற்றாண்டுகளோ அறியோம். இக்காலத்தில் மெம்பிஸ் (memphis) என்னும் நகரம்

எகிப்தின் ராஜதானியாயிருந்தது. இக்காலம் புராதன பாரம்பரியகால மென்னலாம். இக்காலத்திற்றான் "பிறமிட்ஸ்" என்னும் பிரேதசேமக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. யுகாரம்பத்துக்குமுன்பு கட்டப்பட்ட இக்கட்டடங்கள் இன்றும் அழியாதிருக்கின்றன. இவற்றைக்கட்டின வர்களுடைய சிற்பநூல் வன்மைக்கும் லக்ஷக்கணக்கான சனங்களுக்கு உணவு முதலியனகொடுத்து இப்பாரியகட்டிடங்களைக்கட்டுவித்த அரசர் களுடைய செல்வப்பெருக்கத்துக்கும் இக்கட்டிடங்களே சாட்சியாக நிற்கின்றன. இக்காலத்திற்போல அக்காலத்தில் வரிப்பணம்வாங்கு கிறவழக்கம் இருந்ததில்லை. அறுப்புக்காலம் முடிந்தபின் சனங்கள் மூன்றுமாசத்துக்கு அரசனுடைய பணிசெய்யவேண்டும். அவ்வாறு பணிசெய்கின்ற நாட்களில் அவர்களுக்குவேண்டிய உணவுமுதலியன அரசகளஞ்சியத்திலிருந்து கொடுக்கப்படும். அரசருடைய சொந்தவயல் நிலங்களிலிருந்து விளைந்துவருகிறநெல் பிரஜைகளனைவரும் உண்டு மிஞ்சத்தக்க அளவினதாயிருக்கும். "பிறமித்ஸ்" கட்டப்பட்டிருக்கிற நகரத்துக்குப்பெயர் "கிசே" என்பது. கலியுக ஆரம்பத்துக்கு 234 வருஷங்களுக்குமுன் "தீப்ஸ்" என்னும் நகரம் ராஜதானியாயிற்று. இதுமுதல் கலி 1500-ம் ஆண்டுவரையுமுள்ள காலத்தை மத்தியபாரம் பரியகாலம் என்னலாம். இக்காலத்திற் கட்டப்பட்ட சிறந்த கட்டிட மாகிய "குளத்தலை முற்றக்கோயில்" (Lopero hounit, temple at the head of the lake) மொயெறிஸ் என்னும் குளத்தின் வாயிலில் அமைக்கப்பட்டுப் பேரழகுவாய்ந்திருந்தது. இதனைப்பற்றி ஹெறொ டொற்றஸ் என்னும் யவனபுர அறிஞர் தாம் எழுதிய இதிகாசநூலிற் சொல்லியிருப்பதை மொழிபெயர்த்துத்தருவாம். "இக்கோயிலின் அழகு சொல்லால்வருணிக்குந்தரத்ததன்று; யவனபுரத்திலுள்ள கட் டிடங்கள் அனைத்தும் ஒருங்குசேரினும் இதனோடு இணை சொல்லவாரா. யவனபுரத்தில் எபேசஸ் பட்டினத்திலுள்ள கோயில் சிறப்பு வாய்ந்தது, சமோஸ் நகரிலுள்ளதும் அத்தகையதேயாயினும் யவனரது செய்தொ ழில் வன்மையனைத்துந்திரண்டாலும் செய்துமுடிக்க வொண்ணாத இத்திருமனை எகிப்திபரியற்றிய பிறமிட்ஸினையும் வெல்லுந்தகைமை யது." இவ்வாறு புகழப்பட்ட இக்கட்டிடம் முற்றாக அழிந்து போயிற்று ஆயினும் இது அரசர் வசிப்பதற்காக அமைக்கப்பட்டதொரு பெருமாளிகையென்பது அறியக்கிடக்கின்றது. கலி 343-ல் அரசு

புரிந்த எகிப்திய அரசன் பெயர் உசேர்தசன் என்பது. இவனுடைய காலத்தில் சனங்கள் எவ்வாறு வாழ்ந்தார்களென்று அறிவதற்கு அக்காலத்திலிருந்த அமெனியென்னும் அரமனையுத்தியோகஸ்தன் ஒரு வினைப்பற்றி யெழுதினதை மொழிபெயர்த்துத்தருவாம். "அரசருடைய தொழிற்சாலைகளை நேர்மையொடும் மேற்பார்த்து வந்த அமெனி யெல்லாநற்குணங்களும் நிறையப்பெற்றவனுயிருந்தான். வறியோருடைய சிறுவனையும் கணவனையிழந்த உயவற்பெண்டிரையும் இவன் ஒருபோதும் வருத்தியதில்லை. தனது மேற்பார்வையின் கீழிருந்த நாடனைத்திலையும் செல்வினையும் நாடாக்கினுனதலால்" பஞ்சகாலத்திலும் சனங்கள் பசியால் வருந்தினாரல்லர். முன்னுளிலிருந்த மன்னர்கள் உணவுப்பொருள்களை விருத்திபண்ணுவதிற் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். மத்தியபாரம்பரியகாலத்துக்குப் பிந்திய காலத்தை நவபாரம்பரியகாலம் (New Empire) என்னலாம். இக்காலத்திற்றுன் எகிப்துநாட்டிற் குடியேறியிருந்த எபிரேயர் அந்நாட்டினைவிட்டு மோசேஸ் என்னுந் தலைவரால் வழிநடத்தப்பட்டுப் பாலைவனங் கடந்து பலஸ்தீனத்தையடைந்தது. எபிரேயர் யாத்திரைக் காலம் கலி 1900-ம் ஆண்டாகவிருக்கவேண்டும். இக்காலத்திருந்த பார்வோன் (பரோன், Pharoah, மன்னன்) பெயர் இரண்டாம் இராமேசு. இதனேடு சம்பந்தப்பட்டகதைகளும் பாபிலோனிய ராச்சியம் அழிவுற்ற கதைமுதலியவும் விவிலியநூலின் பூர்வபாகத்திற் காணப்படுவன. இதற்குச்சற்று முந்தியகாலத்தில் "Hyksos" என்னும் பொதுவ மன்னர் (shepherd kings) எகிப்தினைக்கைப்பற்றி அரசியல்நடத்தி வந்தார்கள். ஆசூரடமன்னனுகிய சினக்கிரிபு எகிப்துக்குப்படையெடுத்துவந்த காலம் கலி 2338-ம் ஆண்டு ஆகும். கலி 2485-ல் நெக்கோவென்னும் பார்வோன் அரசுபுரிந்தான். அவனுடைய காலத்தில் எகிப்தியமரக்கலங்கள் ஆபிரிக்காக்கண்டத்தைச்சுற்றியோடினவாக அறிகிறேம். இக்காலத்தின்பின் அரசனுடைய கொடுங்கோலினுலும் சமயக்கணக்கர்களாகிய குருவகுப்பினருடைய கொடுமையினுலும் சனங்கள் வறுமையுற்று வலியிழந்தனராக வேறுசாதியார் ஒருவர்பின் ஒருவராய் எகிப்துநாட்டைக் கைப்பற்றினர். சைறஸ் என்னும் பாரசிக அரசன் கலி 2549-ல் (அதாவது புத்ததேவர் உலகில் வசித்தகாலத்தில்) எகிப்துநாட்டைக் கைப்பற்றினுன்; அவனை மேற்கொண்ட அலெக்சாந்தர்

சக்கிரவர்த்தியென்னும் யவனபுரமன்னர் கலி 2769-ல் எகிப்து நாட்டிற் றம்முடைய அதிகாரத்தை நிலைநிறுத்தினர் இவருடைய இராஜதானி இன்றும் அலெக்சாந்திரியா என்னும் பெயரோடு நின்று நிலவுகின்றது. அலெக்சாந்தருடைய காலத்துக்குப்பின் அவருடைய சக்ராதிபத்தியம் அல்லோலகல்லோலப்பட்டுவிட்டது. எகிப்துநாடு இருநூறு ஆண்டுகளுக்கு சுயஅரசுடைய தாகித்தொலமி (Ptolemy) என்னும் வம்மிசத்தாராற் பராபரிக்கப்பட்டுவந்தது. அந்தொனி என்னும் ரோமானிய மன்னருடைய உள்ளத்தைக்கவர்ந்த பேரழகுவாய்ந்த கிளியோப்பத்திரா என்னும்ராணி தொலமிவம்மிசத்தைச்சேர்ந்தவள். இவளுடைய காலத்தோடு எகிப்திய நாகரிகம் அழிந்துபோயிற்று. தொலமிவம்மிசகாலத்தில் கல்விமிகவும் சிறப்புறப்பரிபாலிக்கப்பட்டுவந்தது வானநூல் முதலியன பெருக ஆராயப்பட்டுவந்தன. கலி 2971-ல் ரோமபுரச்சக்கரவர்த்தியாகிய ஆக்ஸ்டஸ் மன்னர் எகிப்தினைக் கைப்பற்றினர் அதன்பின் சில நூற்றாண்டுகள் கழிய எகிப்தில் கிறிஸ்தவ சபையொன்று ஏற்பட்டது. மதோன்மத்தம்பிடித்த ஆதிக்கிறிஸ்தவர் கல்விச்சாலைகளை யழித்ததுவும் ஹைபேஸியா என்னும் கலைச்செல்விக்குச் செய்த அவமானங்களும் எழுதுந்தரத்தவல்ல. இதன்பின் அராபியர் எகிப்துநாட்டைக் கைப்பற்றி நெறிதவறாது அரசியல் புரிந்து வருவாராயினர்.

16. மேற்காட்டிய சுருக்கவரலாற்றினால் எகிப்து நாட்டுக்கும் பிறநாடுகளுக்கும் உள்ளதொடர்பினை விளக்கினும். எகிப்து நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்குமுள்ள தொடர்பினைச் சுருக்கமாகவிளக்கும் பொருட்டுப் பலகலையும் கற்றுவல்ல அறிஞரும் தவப்பெருஞ்செல்வருமாகிய ஸ்ரீமத் விவேகாநந்தசுவாமிகள் "பரிவிராஜகம்" என்னும் நூலில் எழுதியிருக்கிற சில குறிப்புகளை மொழிபெயர்த்துத் தருவாம் பரிவ்ராஜகமென்னும் நூல் சுவாமிகள் இரண்டாம் முறை மேற்றிசை செல்லும்போது தமது யாத்திரையைப்பற்றி யெழுதிய விருத்தாந்தமாகும்.

" கப்பல் வடக்குநோக்கிச் செங்கடலினூடாகச்செல்லுகிறது. இக்கரையிற் பார்த்து கிடப்பது பூர்விக எகிப்து தேயம். பல்லாயிரவருஷங்களுக்குமுன்பு பண்டு (மலையாளதேயம் என்று எண்ண இடமுண்டு) என்னும் நாட்டிலிருந்து வந்த எகிப்தியர் இந்நாட்டிற் சிறந்த நாகரிகத்தை விருத்திபண்ணினார்கள். யவனபுரத்தார் இவர்களுக்கு மாணாக்காராவார். பூர்வ எகிப்தியருடைய கட்டிடங்கள் இன்னும் நிலைத்திருக்கின்றன. இவர்கள் சுருள்குழலும் காதணியுமுடையவர்களாய் சுத்த வெண்ணிறவேட்டியணிந்தவர்களாயிருந்தார்கள் ".

தொலமியர் காலத்தில் அசோகசக்கிரவர்த்தி எகிப்துக்குப் புத்த சந்நியாசிகளையனுப்பிவைத்தார் ".

" கருநிறமும் நீண்டமயிரும் நேரியமூக்கும் சரிவில்லாதகரியவிழியுமுடைய ஓர் சாதியார் பூர்வஎகிப்திலும் பாபிலோனியத்திலும் வசித்தார்கள் அச்சாதியார் இந்நாளில் இந்தியாமுழுமையிலும் விசேஷமாகத் தெற்குப்பாகத்திலும் வசித்துவருகிறார்கள். ஐரோப்பாவின் சிலபாகங்களிலும் இவர்களைக்காண்டல் கூடும். இவர்களே திராவிடரெனப்படுவர்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர், சென்னை.

பிரபோதசைதந்யர்.

---

9. கல்லிடைப் பிறந்துபோந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லை இல் மறைகளாலும் இயம்(பு)அரும் பொருள் ஈ தென்னத்
தொல்லையில் ஒன்றே ஆகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சி
பல்பெரும் சமயம் சொல்லும் பொருளும்போற் பரந்த(து)அன்றே.

இ - ள். (இமய) மலையிலே உற்பத்தியாகி ஓடிக் கடலிலேசேர்ந்த (அந்த நதி) வெள்ளமானது,—அளவில்லா வேதங்களாலும் சொல்லுதற் கரிய (பரம்) பொருள் (போல்வது) இது என்று சொல்லும்படியாக, ஆதியில் ஒன்றேயாகி (ப்பின்பு பலபிரிவாய் ஏரி குளம் முதலியநீர்த்) துறைகள் ஒவ்வொன்றிலும் பரவிய தன்மையால், பலபெருஞ் சமயங்களும் (தம்தம் தெய்வமென்று) கூறும் (ஒருபரம்) பொருள் (பலவாய் எங்கும் வியாபித்தது) போல வியாபித்தது.

கல்இடை - (இமய) மலையில். போந்து - சென்று. நீத்தம் - (சரயு நதியின்) வெள்ளம். தொல்லை - பூர்வம், ஆதி. துறை - நீர்த்துறை; இடம். சூழ்ச்சி - ஆராயும்படியான தன்மை (யால்). பொருள் - வஸ்து; கடவுள்.

'சூழ்ச்சி'யின்பின் ஆல் உருபு தொக்கது; இதுபோலத் 'தையல் தளிர்க்கை தடக்கை பிடித்தான் (கடிமணப்படலம் கூ0) என்பதில் 'தடக்கை'யின் பின் ஆல் உருபு தொக்கதனை நோக்குக.

10. தாது (உ) கு சோலை தோறும், சண்பகக் காவு தோறும்
போ(து)அவிழ் பொய்கை தோறும், புதுமணற் றடங்கள் தோறும்,
மாதவி வேலிப் பூக வனம்தொறும், வயல்கள் தோறும்,
ஓதிய உடம்பு தோறும் உயிர் என உலாய(து) அன்றே.

இ - ள். (அந்த ஆற்றுவெள்ளம், பலவாக்) காவுகள், சண்பகச் சோலைகள், தடாகங்கள், மணற்கேணிகள், கமுகவனங்கள், வயல்கள் ஆகிய இவைகளெல்லாவற்றிலும் (சென்று,) எல்லா உடம்புகளிலும் உயிர் (புகுந்து உலாவுதல்) போல உலாவியது.

தாது - பூந்தாது, மகரந்தத்தூள். உகுதல் - சிந்துதல், போது - மலரும் பருவத்திலையுடைய அரும்பு. அவிழ்தல் - விரிதல் - மலர்தல், மனைற்றடம் . மனைற்கேணி. மாதவி - குருக்கத்திமரம். பூகம் - கமுகு. உயிர்ப்பன - உயிர் (புகுந்து உலாவுதல்) போல.

உயிரின் சம்பந்தத்தால் உடல்கள் செழித்திருத்தல் போல, சரயு நதிச் சலத்தின் சம்பந்தத்தால் சோலைகள் முதலியவை செழிப்புடையன என்பது கருத்து.

நாட்டுப்படலம்.

11. தண்டலை மயில்கள் ஆடத், தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்கக், குவளை கண் விழித்து நோக்கத்,
தெண்டிரை எழினி காட்டத், தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம்வீற் றிருக்கும் மாதோ!

இ - ள். (கோசலநாட்டிலே) சோலை (ஆகிய நாடகசாலை) யிலே மயில் (களாகிய நடனமாதர்) கள் நர்த்தனஞ்செய்ய, (செந்) தாமரை (க்கொடிகளாகிய பெண்) கள் (மலர்களாகிய) தீபங்களை ஏந்த, மேகங் (களாகிய மத்தளகாரர்) கள் (இடி முழக்கமாகிய) மத்தளமுழக்கம்செய்ய (நடாகங்களாகிய நாடகத்திரையிடுவோர்) அலைகளாகிய திரையிட, வண்டு (களாகிய யாழ்ப்பாணர்) கள் யாழ் (ஓசை) போல (ரீங்காரமாகிய) பாட்டுப்பாடக், குவளை (க்கொடிகளாகிய நாடகம் பார்க்கும் மாதர்) கள் (மலர்களாகிய கண்களைத் திறந்து (கவனமாகப்) பார்க்க, (நிகழும் நாடகத்தின் ஆடல் பாடல்களைக்கண்டு கேட்டுக்களித்து) மருதத்திணை (அரசு) விற்றிருக்கும்.

தண்டலை - சோலை. முழவின் - மத்தளம்போல. தெண் திரை — தெளிவான அலை. எழினி - (நாடகத்) திரைச்சீலை. தேம்பிழியாழின்— இனிமை (உள்ள) தேன் (போன்ற இனிய) வீணை (ஓசை) போல.

இப்பாட்டுப் பொழிப்புரையில் 'அரசு' 'வீற்றிருக்கும்' என்ற எழுவாய் பயனிலை யிரண்டும், படர்க்கையில் அஃறிணை ஒன்றன்பாற்கும்

உயர்திணை ஆண்பாற்கும் பொதுவாகப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. மருதத்திணை அரசுவீற்றிருக்கும்—மருதத்திணையாகிய அரசானது கொலுவிருக்கும்; மருதத்திணையாகிய அரசன் வீற்றிருப்பான்.

12. சேல் உண்ட ஒண்கணாரிற் றிரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப் பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்(று) உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பால் உண்டு துயிலப் பச்சைத் தேரை தா லாட்டும் பண்ணை.

இ - ள். வயல்களிலே அன்னங்கள் தாமரைமலர்களாகிய படுக்கைகளிலே படுக்கவைத்த இளங்குஞ்சுகள், எருமைகள் (ஊரில் விட்டுவந்த) கன்றுகளைநினைந்துக் கனைக்க வடிந்தபாலை உண்டு தூங்கத் தவளைகள் தாலாட் (டுதல்போலச் சத்தஞ்)ம்.

'சேல் உண்ட' என்பதில் 'உண்ட' என்பது அதன் செம்பொருளாகிய 'புசித்த' என்று பொருள்படாமல் 'ஒத்த' அல்லது 'வென்ற' என்று பொருள்படநின்றது, 'உண்ட' உள்ளஇடத்தில் 'வென்ற' இருப்பினும் செய்யுளிலக்கணமும் ஓசைநயமும் குன்று எனினும் உண்ட என்று கவி பாடியது தொடைநயங்கருதி. ஒள் கண்ணாரின் திரிகின்ற- ஒளிமிகுந்த கண்களையுடையமாதர்போல நடக்கின்ற. மால் - (மற்றெல்லா மலர்களினும் சிறந்த) பெருமை. உண்ட - பொருந்திய. நளினப்பள்ளி - தாமரைமலராகிய படுக்கை (யில்). வளர்த்திய - கிடத்திய. வளர்த்தல் — வளரச்செய்தல், கண்வளரச்செய்தல், உறங்கச்செய்தல் - உறங்கப் (ப்படுக்கையிலே) கிடத்தல்: என, இவ்வாறாக, 'வளர்த்தல்' என்பது 'படுக்கையில் (தூங்கும்படி)கிடத்தல்' என்று பொருள்படலுற்றது போலும். கால் உண்ட சேற்று மேதி - காலிற்பொருந்திய சகதியையுடைய எருமை - சகதியில் மிதித்துச் சகதி ஒட்டிய காலை உடைய எருமை. கன்று உள்ளி - (ஊரில்விட்டுவந்த) கன்றை நினைத்து. பண்ணை - வயல் (களிலே).

13. ஈர நீர்படிந்(து) இந் நிலத் தே சில
கார்கள் என்ன வரும் கரு மேதிகள்,
ஊரில் நின்ற கன்(று) உள்ளிட, உண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே.

இ - ள். (விண்ணிலேயன்றி) மண்ணிலே(யும்) மேகங்கள் (உண்டென்று) சொல்லும்படியாக, (மேகங்கள் கடல்நீரிற்படிதல்போலத்தடாக) நீரிற்படிந்து (தாம் ஊர் நோக்கி) வரும் கரிய எருமைகள், (தம்மோடுகூட மேய்ச்சல் நிலத்துக்குவாராமல்) ஊரிலே நின்றுவிட்ட (தம்) கன்றுகளை நினைக்க, (அதனால் அக்கன்றுகள்) உண்ணும் பால் மடி (யிலிருந்து) வடிய, (அந்தப்பால் வயலிற்பாய்தலால்) நெற்பயிர்கள் செழித்தோங்கும்.

ஈரம் - குளிர்ச்சி. உள்ளிட - நினைந்தலால். தாரை கொள்ள - வடிய. சாலி - நெல் ; ஆகுபெயராய் நெற்பயிரை உணர்த்தியது.

14. பெரும் த டம் கட் பிறை நுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்,
வருந்தி வந்தவர்க்(கு) ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே.

இ - ள்: மாதர்களுக்கெல்லாம் செல்வமும் கல்வியும் (ஒருங்கே) உண்டாயிருந்தமையினால், (அவர்கள்) நாள்தோறும் (தரித்திரத்தினால்) வருந்தி (த்தம்பால்) வந்தோர்க்கு (வேண்டுவன) கொடுத்தலும் (விருந்தினர்க்கு) விருந்திடலுமன்றி உண்டாவன (ஆகிய வேறு சிறந்தவேலைகள்) எவை (இருக்கின்றன? ஒன்றுமில்லை).

செல்வம், இரவலர்க்கு ஈதலுக்கும் விருந்தோம்புதலுக்கும் சாதனம் ; கல்வியறிவு அந்த ஈதலையும் ஓம்புதலையும் தக்கவாறு செய்தற்குச் சாதனம். இவ்வாறு கல்வியும் செல்வமும் ஒன்றற்கொன்று பொருத்தமாயிருத்தல்பற்றிப் 'பொருந்து செல்வமும் கல்வியும்' என்றார். கம்பர் காலத்தில் பெண்கல்வி பரவியிருந்ததென்பது இந்தக்கவியினால் பெறப்படுகிறது.

15. கலம் சு ரக்கும் நிதியம் கணக்(கு) இலா,
நிலம் சு ரக்கும் நிறை வளம், நல் மணி
பிலம் சு ரக்கும், பெறுதற்(கு) அரிய தம்
குலம் சு ரக்கும் ஒழுக்கம், குடிக்கெலாம்.

இ - ள். (அந்நாட்டுக்) குடிகளெல்லாருக்கும், மரக்கலங்கள் (பிற தேசங்களினின்று கொண்டுவந்து) அளவற்ற திரவியங்களைக்கொடுக்கும்;

குறைவின்றிநிறைவாய்நிற்குங்கொள்கையால்விண்டுவென்று
பொறையொன்றுமிதியாசங்கள்புராணங்கண் முனிசாத்திக
ரறைகின்றதொன்றேமற்றுங்கடைப்பிடித்தாற்றுநின்ற
மறையென்பதனைத்துமன்னுன்வடிவன்றியுலகின்றென்னும். (21)

யான்மறையனைத்துங்காணநின்றுளோன்யானிவ்வையந்
தான்முழுதுடையேனென்னைச்சார்ந்தவிச்சராசரங்க
ணூன்மணிக்கோத்ததென்னநுடங்குமென்றிறைவன்றானே
மேன்மொழிந்துள்ளபாரதாதிகண்மெய்யேதேற்றும். (22)

இறைவனைப்பூசைசெய்யுமியற்கைபூருவகாண்டத்தின்
முறைபடத்தெரிக்குமிப்பாலொழிந்திடும்பிரமகாண்டத்
தறைபெருங்குணத்திற்றேற்றுமங்கங்களனைத்துங்காட்டு
நிறைபொருளொன்றேயென்றுநெஞ்சகத்தோர்ந்துதேர்ந்தே. (23)

பாசுரமிதனைத்தாலபத்திரத்தெழுதிப்புத்தூர்ப்
பூசுரனெடுத்தானன்னவாவணம்புறநூலோரை
மாசறத்துணிப்பான்சென்றவாளனப்பிறங்கியோடித்
தேசுறநிறுவும்விஞ்சைக்கிழித்தலைச்சிறந்ததன்றே. (24)

அத்தலையமர்ந்ததேவராவணமதுகைக்கொண்டு
மொய்த்தலர்மகிழ்ச்சிதூங்கமுனிவரர்குழாங்களோடுஞ்
சத்தியவாணியென்னுஞ்சாரதாதேவிதோன்றி
வித்தகக்கிழியைப்பட்டர்வேந்தன்கைக்களித்தாளன்றே. (25)

ஆயிடையமரர்யாருமணிநகைமுகத்தராகிச்
சேயிடைகுழீக்கொண்டார்த்துத்தெய்வமந்தாரப்பொற்பூத்
தூவினர்மழைபோல்வானதுந்துமிதுவைத்தார்துன்னி
மாயிருந்திசையும்பாருமலிந்ததுதிமிலப்பம்பல். (26)

தாங்கியகுலிசனாதித்தலைவர்தத்துவத்திளையு
நீங்கினர்மகிழ்ந்தாராங்கணிகழ்ந்தகாரணத்தைநோக்கி
வீங்கியபுயத்தன்றன்னைவிழுங்குமானந்தனூறற்
றேங்கியகளியனாகிச்செழியர்கோனிதனைச்செய்வான். (27)

முத்திருந்தருளும்பட்டர்முதல்வனுமுனிப்பிரானை
மந்திரக்கிழவரோடுமரபுள்வழாதபூசித்
திந்திரவனத்தின்மேயவெழில்வரியணைமீதேற்றிச்
சந்திரன்றபனன்போலுந்தகைமணிப்பூண்கள்பூட்டி. (28)

தோமறுவிலையிற்றீர்ந்ததோய்த்தநுண்டானைசாத்திச்
சாமரைவிசிறிவீசத்தவளவான்குடைநிழற்றக்
காமருதனதுகோயிற்கந்தவாரஞ்சேர்கற்பின்
றேமருகுழலார்யாருஞ்சேவகஞ்செய்துசூழ. (29)

பல்லியம்பெரிதுமார்ப்பப்பரிசனர்பரவிமொய்ப்ப
வெல்லுறுதடக்கையேந்தல்வேழத்தின்பிடரிலேற்றி
மல்லுயர்திணிதோள்வென்றிமன்னவனடந்துபின்னே
செல்லுவதாகிக்கூடனகர்வலஞ்செய்வித்தானே. (30)

வேறு.

ஆனபொழுதிலெட்டுறுப்பினணிவிமானத்திடைநின்றும்
வானமனந்தபெருஞ்சீர்த்திமதுருதனனிம்மாநிலத்தில்
யானமென்றுஞ்சிறைப்பறவைக்கிறைவன்பெருந்தோண்மீதிவர்ந்து
சேனைமுதல்வன்முதற்கணங்கடேவர்பிறருந்திரண்டேத்த. (31)

தன்போலுருவுஞ்சின்னமும்பெற்றழியாதிருக்குந்தலைவரொடு
நன்பேரன்புக்கன்பினனுநால்வேதங்களேத்தெடுப்ப
மின்போழ்விசும்பின்வழிதோன்றிவிளங்குங்காட்சியெதிர்நோக்கி
யன்பூடுருவும்பட்டர்பிராற்கணியனாகியடைந்தனனால். (32)

பைம்பொன்மேனிச்செய்யமுகப்பச்சைச்சிறகர்க்கலுழபிரான்
செம்பொன்மலர்த்தாள்கரத்தேந்தச்சிந்தைக்கடங்காவொளிதுளும்பத்
தும்பைமோலிச்சுரர்நெருங்கச்சூரிசனங்கடொழுதேத்த
நம்பிகூடலழகனங்குநன்றும்வரவையென்றுரைக்கேன். (33)

ஆரமிலகவங்கதத்தோடம்பொற்கடகமின்பரப்பப்
பாரமணியின்மதாணிமின்னப்பதினாயிரத்துப்பதங்கர்திரண்
டீரமதியோடுதித்ததுபோலெறிக்குஞ்சுடர்கான்மணிமகுடர்
தாரினசைப்பத்திருமருவுந்தடமார்பகத்தினிடைதுலங்க. (34)

ஏர்தன்மணியாங்கவுத்துவத்தினிலங்குஞ்சோதிநிலந்துலக்கக்
காந்துவெயிற்பீதாம்பரத்தின்கற்றையொளிரவுத்தரியஞ்
சார்ந்தமணிர்தமணிமார்பினுபவீதத்தினொடுதயங்கப்
பூந்தண்டுளவப்பருமாலைபுயத்திற்பொலிந்துதிகழ்ந்தசைய. (35)

எழுதற்கரியவடிவழகனீர்ந்தண்கமலத்தடங்கண்ணன்
முழுதிப்புவனமனைத்திலுக்குமொருநாயகமார்தனிமுதல்வன்
பொழுதிற்சிறந்தவப்போழ்திற்போந்தானெனலும்வானேச்சித்
தொழுதற்புதமுங்களியுமெய்தித்துளங்காவிடையர்தமோடு, (36)

திருமால்கருணைப்பேரழகார்தெய்வத்திரைப்பாற்கடன்மூழ்கி
வருமாதரத்தாற்பேரன்புவளரத்தளராமொழிவிம்மக்
கருமாணிக்கச்செழுந்திரளேகண்ணேமணியேகற்பகமே
பெருமாவென்றுபுதுவைநகர்ப்பெம்மான்வாழிவாழ்த்துகின்றான். (37)

மல்லாண்டிலங்குமணத்திண்டோண்மாயாதூயபரமேட்டி
தொல்லாண்டிருந்தகுடியடியோமுன்னோடியாமுந்தொழுதொழும்பு
மெல்லார்தருமுன்றிருவடிகளிரண்டும்பண்டையெமதுணர்வும்
பல்லாண்டூழிபல்லாண்டுபலகானூறாயிரத்தாண்டே. (38)

உருளுஞ்சகடமுடைந்தோடவுதைத்தவலர்த்தாள்பல்லாண்டுன்
மருமமாடத்துறைகின்றமங்கைதானும்பல்லாண்டு
பருதிகோடியெனப்பிறங்கும்படைச்சக்கரமும்பல்லாண்டு
தருணமதியமயுதநிகர்சங்கத்திறையும்பல்லாண்டே. (39)

பூணும்பணியான்சிலைமுறித்தபுனிதக்கேண்மைபல்லாண்டு
தாணின்றுதைப்பத்தலைகுனிக்குஞ்சார்ங்கவில்லும்பல்லாண்டு
காணுங்கனகன்மார்பிடந்தகடும்போர்த்திறமும்பல்லாண்டு
வாணன்புயமாயிரமறுத்தமறச்சேவகமும்பல்லாண்டே. (40)

ஆயாவென்றிச்சமர்வீரமனைத்தும்பலகாற்பல்லாண்டென்
றேயாச்சீர்த்திபிறபலவுமுணர்விற்பெரியோன்வாழ்த்துதலுஞ்
சேயாரிடத்தினெதிர்தோன்றுந்தேவர்தேவன்வாய்மலர்ந்து
தூயார்தம்மிற்றூயவனாம்பட்டர்கோனுக்கிவைசொல்வான். (41)

யாதுவேண்டிற்றுனக்கெம்பால்யாமுமதனைத்தரவந்தே
மோதுகெனவம்மொழிகேட்டோனுள்ளக்கமலம்வாய்மலர்ந்து
காதல்பெருகிக்கரைந்துருகக்கனியுமன்புமீதூர
வேதமுறைத்தபெருமானும்விளம்பியிதனைவேண்டுமால். (42)

வேறு.

அண்ணலேயமரர்கட்காதிநாதனே
கண்ணனேயெம்பெருங்கடவுளேயுனை
யெண்ணியானிங்ஙனம்வழிபட்டேத்திட
நண்ணுவாயுலகருண்டாத்தநாடொறும். (43)

என்றவனுரைத்தசொல்வினவியெங்குமாய்
நின்றவன்மறுமொழியிதுநிகழ்த்துவான்
மன்றவன்புரிந்தசீவல்லவன்சவை
மூன்றில்வாயணிபெறமுயங்குமிவ்விடை, (44)

உளங்கவர்மல்லமண்டபமென்றுள்ளதில்
விளங்குறவின்பெருமென்றுமேவுறும்
வளங்கொடுமகிழ்ந்தெனுவழங்கிமாசிலாக்
களங்கவிவண்ணனுங்கரந்துபோயினான். (45)

மருத்துவரிற்றிறன்வாளுளோர்தொழத்
திருத்தகுமார்பினான்சேணிற்சென்றபின்
பருத்ததோட்செழியனும்பட்டர்நாதனை
யருத்தியின்மகிழ்ந்துதன்னகங்கொண்டேகினான். (46)

அன்புறுபாத்தியமாசனாதியாய்
மன்புரியருச்சனைமரபினாற்றியே
தன்புடைமனைவியுந்தானும்வந்தியாப்
பொன்புனையாடைபூண்புனைதல்செய்தரோ. (47)

கரும்பினிற்கோதுண்டுகனியிற்றோலுண்டு
விரும்பினர்க்கமிர்திலோர்வெறுப்புண்டாகுமோ
தரும்பயனுணர்ந்திடாதடியன்முற்சொலும்
பெரும்பிழைபொறுத்தியென்றிரந்துபேசியே. (48)

மட்டலர்ச்சேவடிவணங்கிச்சென்னியாற்
றொட்டகம்பிரிவதற்கஞ்சிச்சூழ்ந்திட
வொட்டகத்தெடுத்துயர்தனங்கொண்டேர்செல
விட்டனன்பட்டர்கோன்றன்னைவேந்தனே. (49)

நல்லிலக்கணத்தின்மாணாக்கர்தம்மொடும்
பல்லியத்தொலியொடும்பாடற்பண்ணொடுந்
தொல்லிபத்தூர்திமுற்சுரர்கள்போற்றிடும்
வில்லிபுத்தூரிடைமேவிவைகினான். (50)

செந்திருமார்பினன்செம்பொற்கோயில்கண்
முந்திருந்திதற்புதிதாக்கிமூதுணர்
புந்தியான்றிருக்கயிற்கரியப்போழ்தினு
மந்தியும்பகலுஞ்சென்றார்வங்கூர்ந்தனன். (51)

என்றிவைநாரதனிசைத்தவிக்கதை
தொன்றதாய்க்கிகழுமுன்சொல்லிவைத்தன
வன்றறிந்திகபரநலனுணர்ந்திட
நின்றமாதவமெனுநீதிபடைத்தவீர். (52)

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] துந்துபி- ஹு பங்குனி-மீ [பகுதி ரு.

Vol. XXI. March–April–1923. No. 5.

பலகவித்திரட்டு.

முற்காலத்திலும், பிற்காலத்திலுஞ் சமீன்தார் செல்வர் முதலானோர் தமிழறிவிற் சிறந்தவர்களாயிருந்தமையால், அவர்கண்மீது பல புலவர்கள் ஒவ்வோர்சமயத்திற் கூறியகவிகள் அநேகமுள்ளன; அவைகளிலே மறவாது ஞாபகத்தில்வருங்கவிகள் அவ்விருவரியல்பும் விளங்க, இச்செந்தமிழில் வெளியிடப்படுகின்றன.

தேவாரஞ்சமீன்தார் கொண்டபொம்முநாயக்கர் சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயர்வீட்டுக்கு வந்தபோது கூறிய கவி.

நவநிதியங்கடலமுதகாவலர்தந்திடுசெல்வநான்முன்செய்த
தவபலன்றென்றுறைசைகுருசாமியருளால்வந்ததகைமைபோலச்
சிவசமயபரிபாலன்றேவாரங்கொண்டபொம்முதீரனிந்தப்
புவனமெலாம்புகழவென்றன்புன்குடினன்குடிலாகப்போந்ததாமே.

சேற்றூர்ச்சத்திரஞ் சுயம்பாகி, கவிராயரிடம் பாட்டுக்கேட்க விரும்பி, அதைவெளிப்படுத்தாமல் ஒருநாள் அழைத்துவந்து விருந்து செய்தபோது, கவிராயர் மகிழ்வுற்றுக்கூறியகவி.

செய்மணக்கும்வளச்சேறைச்சுந்தரதாசேந்திரன்சத்திரத்திலுள்ளான்
பைமணக்கச்செய்வேங்கடாசலமானமக்களித்தபாயசத்தி
னெய்மணக்குமொருகாதம்பான்மணக்குமுக்காதமேசித்துண்ட
கைமணக்குமறுகாதம்வாய்மணக்கும்பன்னிரண்டுகாதந்தானே.

சேற்றூர்ப் பெரியசோலிலுக்குக் கவிராயர் போயிருக்கும்போது மாம்வெட்டியிற்குந் தாசரிராசாவும் வந்திருக்கப்பார்த்த தானபதிக்கரையாளன் நாசரிராசாவுக்குத் தட்டிலமுதும் சட்சாதிகளுடன் ஆறுமனுப்பச்சொல்லிவிட்டுக் கவிராயருக்கு மடைப்பள்ளிக்குச்சீட்டனுப்ப உடனே கவிராயர் பின்வரும் வெண்பாவைக்கூறக் கரையாளன் மறந்துபோயினேனென வணங்கி வேண்டிக்கொண்டனன்.

> *தாசரிக்குத்தட்டமுதுஞ்சட்சாதியோடாளுந்*
> *தேசமெய்க்கத்தந்தெனக்குச்சீட்டமுது—நேசமின்றித்*
> *தந்தாய்வயதுகல்விசாதியொழுக்கம்பழமை*
> *யிந்தவைந்தில்யாதைநினைத்தே.*

திருவாவடுதுறையாதீனத்திற் பதினாறாவது பட்டத்திலிருந்த சுப்பிரமணியதேசிகமூர்த்தி திருவையாற்றுப்பாடகரிருவர் வெகுநேரம் வீணைவாசிக்கக்கேட்டு உங்களிடம் பாட்டுக்கேட்க எட்டுவருடமானாலும் பிரியந்தான் என்றபோது கவிராயர் கூறியகவி.

> *மட்டுவருடம்பொழிகாவுயர்துறைசைச்சுப்ரமண்யவள்ளலாரி*
> *தட்டுவருடன்பகைக்குந்திருவாயாலுமதிடஞ்சங்கீதங்கேட்க*
> *வெட்டுவருடம்பிரியமெனச்சொலையாற்றுப்புலவீரினிமேலும்முன்*
> *மெட்டுவருடவுந்தெரியாதிருப்பர்சங்கீதங்களினுன்மிகவல்லோரே.*

எட்டையபுரஞ் சமஸ்தானத்தில், மானேசராயிருந்த இராமசாமிப் பாண்டியனுங் கவிராயரும் யானைக்கொட்டாரம்பார்க்கச் சென்றபோது பாகன் யானைக்கு அரிசிக் கவளங்கொடுக்கப்பார்த்து மானேசர் இது எந்த அரிசியென்றுகேட்க அவன் கடையரிசி என்றுகூற, மானேசர் கடையரிசியல்லவென்று சொல்லப் பாகன் பின்னு மவ்வாறேகூறக் கவிராயருடனேகூறிய கவி.

> *விடையரிசிவசம்புவையேபணிராமசாமிமன்னுவியந்துநீசொல்*
> *கடையரிசியல்லவெனுங்கருத்ததனைத்தென்றல்வந்துகமழுந்தென்வெற்*
> *புடையவனும்யானுமலைத்தவனென்றுலேவாதிந்துரைப்பார்சொல்வாய்*
> *நடையரிகளுலவுமலர்ப்பொழில்சூழுந்தென்னிளசைராசரேறே.*

இராமநாதபுரம் பாற்கரசேதுபதிமகாராசா ஒருநவராத்திரியில் கவிராயர், "பாண்டித்துரையவர்கள்" முதலானவர்களைப் பரீக்ஷகர்களாக நியமித்து வந்தவித்வான்களைப் பரீக்ஷைசெய்யும்போது, அம் மகாராசா

" கடைக்கிலேயோமற்றையர்தங்கால் " என ஈற்றடியெடுத்துக்கொடுத்து ஏனையடிகளைப் பூர்த்திபண்ணச்சொல்ல, எல்லாரு முடியாமற் பேசாதிருந் தார்கள் ; கவிராயர் இனிப் பரீசைஷக்கர்த்தாக்களில் யாராவது பூர்த்தி செய்யலாமாவென்றுகேட்க, அவ்வாறு செய்யலாமென்று மகாராசா உத் தரவுகொடுத்தபின், கவிராயர் பின்வரும் வெண்பாவைக்கூற, உடனே அம்மகாராசா வியந்து எழுந்துவந்து அரியவிலையுள்ள பெரிய பொற் பீதாம்பரத்தை யெடுத்துக் கவிராயர் தோளிலேசாத்தி நெஞ்சைத்தட்டி யுபசரித்தனர்.

வேற்காலனச்செந்தூர்விமலனையன்பாற்பரவும்
பாற்காசேதுபதிவேந்தே—மேற்கொள்
விடைக்கொடியோற்கன்பன்மிருகண்டுபிறங்
கடைக்கிலேயோமற்றையர்தங்கால்.

பிறங்கடை - புத்திரன் ; மார்க்கண்டமுனிவரென்க. கால் - பிள்ளை.

இராமநாதபுரஞ் சமஸ்தானமந்திரி முத்திருளப்பபிள்ளை இராமே சுரஞ் சுவாமிசந்நிதியிற் சொக்கட்டான்சாரிமண்டபங்கட்டியதைப் பாராட்டி ஒரு கவிஞர்கூறியகவி.

பருப்பதங்களொவ்வொருநூண்பாக்கல்சிவன்வளையாதபாரமேரு
சுரிப்படங்காப்போதிகைகின்றிருப்பணியின்பெருமையென்னசொல் வேனையா
தருப்பொலியுங்காதலத்தாய்மந்திரிமுத்திருளப்பதாய்பாலுன்னைக்
கருப்பணுமுன்றிருப்பணிக்கென்றுருப்பணிஞன்மருப்பொலியுங்கமலத்தோனே

சுரிப்பு—படகு, தோணி, சோங்கு என்பவைபோல்வதொன்று.

தத்துவமாய்த்தசாதனுமறுபதினுபிரவருடந்தவமேசெய்து
புத்திரனைப்பெற்றெடுத்துக்கோசலநாட்டினைமட்டும்புரக்கச்செய்தான்
முத்திருளப்பேந்த்ரமதிமந்திரிநீயிவ்வுலகமுழுதுங்காக்க
வெந்தனைநாட்டவமிருந்தான்சவுந்தரபாண்டியனுனைப்பெற்றெடுக்கத்தானே.

இவர் மந்திரியாயிருக்குநாளிற் குளங்கள் பலவுடைப்பெடுக்க,இவர் ஏனிவ்வாறு குளங்களுடைப்பன எனக் கேட்டபோது, மணமுடியப் பெறுத பெண்குமரிகள் பலர் நம்நாட்டிலிருப்பதனுற் குளங்களுடைப்பன வெனப் பக்கத்துள்ளார் கூற, உடனே இவர் குறுணித்தாலிசெய்துவரச் சொல்லி அவர்க்கெல்லாம் மணமுடித்துவைத்தனர். அப்போது ஒரு கவிஞர் கூறியகவி.

அமரிக்கையாளன்முத்துராமலிங்கச்சேதுபதியவனிக்கெல்லாஞ்
சுமுகப்பிரதாபனெங்கள்முத்திருளப்பேந்த்ரமந்த்ரிதுலங்குநாளிற்
சமருக்கென்றெதிர்த்தமன்னர்தலையிலில்லைமதனொருவன்றவிரமின்னார்
குமரிக்குட்கன்னியாகுமரியல்லான்மற்றிலைப்பெண்குமரிதானே.

இவர், இராமநாதபுரஞ்சமஸ்தானத்தைச் சார்ந்தவூர்களிற் கடன் பத்திரமெழுதிக் கொடுப்போர் இன்னதினத்திற் கொடாவிட்டாற் கொக்குச்சித்தன்பட்டியிற் குடியிருந்தபாவத்திற் போவேனாக என்று வழக்கமாயெழுதிவந்த கடன்பத்திரத்தைப் பார்வையிட்டு, அப்படிப்பட்டவூ ரெங்கேயிருக்கிறதென்று விசாரித்து ஆயிரக்கணக்குள்ள வேலையாட்களுடன் அவ்வூர்க்குச்சென்று அங்கே கிணறு, ஊருணி, வாவி, சோலை, நந்தனவனமுதலியவெல்லாஞ்செய்வித்து அதனை மிக்கவளமுள்ள நகரமாக்கிவைத்து இனிக் கொக்குச்சித்தன்பட்டியிற் குடியிராதபாவத்திற் போவேனாக என்று கடன்பத்திரமெழுதுங்களெனச் செய்தனராம்.

இவர் ஒருபுலவருக்குச் சம்மானஞ்செய்யக்கருதித் தன்னெழுத்தாளனிடத்தில், நான் நூறுரூபாகொடுக்கச்சொன்னதாகக் கசானுக்காரனுக்குச் சீட்டெழுது என்றுசொல்ல, எழுத்தாளன் நானூறுரூபாவுக்குச் சீட்டெழுதிக் கையெழுத்திடச் சொன்னபோது இவர் நூறுரூபாதான் சொன்னேனென்று திருத்தமுயலும்போது, புலவர் பின்வருஞ்செய்யுளைக் கூறக்கேட்டு ரூபா நானூறுங்கொடுக்கும்படி யெழுதிவிட்டனர்.

உறுக்குமதிவேந்தருக்குங்கள்வருக்குநீதிதப்பியொழுகினோர்க்குங்
கிறுக்குவரச்செயுந்துரையேபாவாணரோலையினுங்கிறுக்குண்டாமோ
பொறுக்குமாசரிமைமுத்துராமலிங்கச்சேதுபதிபூமியெல்லா
நிறுக்குமதிமந்திரிமுத்திருளப்பாவருளப்பாநிருபந்தானே.

திருவாவடுதுறையாதீனத்திற் பன்னிரண்டாவதுபட்டத்திலிருந்த மகாசந்நிதானமாகிய திருச்சிற்றம்பலதேசிகர்க்குப் பூசைக்கு இராமநாதபுரஞ்சமஸ்தானம் பிரதானி முத்துக்குமாரபிள்ளை ஆறாயிரரூபா செலவு செய்து, ஒருவெள்ளித்தேர் செய்வித்துக்கொடுத்தனர்; இதனைச் சேதுசமஸ்தானவித்துவானாகிய சீனிப்புலவர் அத்தேசிகருக்குக்கூறிய கலம்பகத்தில், ஒருகவியிற் கூறியிருக்கின்றனர்; அக்கவி வருமாறு.

குருவெள்ளிநேர்திருச்சிற்றம்பலவர்க்குப்பூசைசெய்ய
மருவெள்ளிவெய்பெறுமன்பினன்முத்துக்குமாரன்றந்த

வொருவெள்ளித்தேர்கயிலாசதெரிசனமொத்திருக்குங்
கருவெள்ளிமீக்குடீராசர்தந்திருக்கண்ணருளே.

கன்னிவாடிச்சமீந்தார் மலையாண்டியப்பையநாயுடு பேரையூர் அறைக்கீரையைத் தினமும் அஞ்சல்வழியாக வரவழைத்துப் புசிப்பதுண்டு; ஆதலாலதன்மீது பிரியமுற்று மூன்றுகவி கூறியிருக்கின்றனர். அவை வருமாறு:—

பலபடைப்பையுற்றதனுலன்னமிசையேறியிருப்பதனுலென்று
நிலவுமுடல்பசந்ததனுலரியரியென்றருந்தவர்கணிகழ்த்தலான்மா
நலகையிலேவாய்வாசமுறுதலினுற்சைவர்களுநாடலாலிச்
சொலவரியபேரையூரறைக்கீரைதிரிமூர்த்திசொரூபந்தானே. (க)

பூவினிக்குந்தழையினிக்கும்வேரினிக்கும்விதையினிக்கும்புடைசூழ்கின்ற
காவினிக்குந்தன்மைபெற்றபேரையூரறைக்கீரைக்கறியையுண்ண
நாவினிக்குமன்றியதைக்கண்டகண்ணுமினிக்குமதைநாடிப்பாடும்
பாவினிக்குங்கேட்டசெவியினிக்குமனமினிக்குமெனப்பகரலாமே. (உ)

உரகமுடிச்சுமையுலகிற்பேரையூரறைக்கீரையுவந்தேயாருஞ்
சிரகரகம்பிதம்புரியாநற்பூசைக்கமுதுதவச்செய்யும்போதி
லரகரவென் றுரைக்கிலதுகேட்டோடப்பரங்கிரிமேலையரின்று
மரகதகலாபமயிற்கீழொருகான்மேலொருகால்வைக்கின்றாரே. (ங)

இச்சமீந்தாரின் பெருங்கொடையைவியந்து ஒரு புலவர்கூறிய கவி.

கல்லொக்குஞ்சிந்தையுறுந்துரைகாள்கொடைகற்கவென்றால்
வல்லக்கவார்குலநாரசிங்கையன்வரத்துதித்த
செல்வக்குமாரன்மலையாண்டியப்பையசிங்கத்துக்குப்
பல்லக்குக்கொம்புசுமந்திரென்றாற்புத்திபாலிக்குமே.

இச்சமீந்தார் வித்துவசபையுடனிருக்கும்போதில், ஒருபுலவர் வந்தார். அப்பொழுது சமீந்தார் வந்தபுலவரை வாருங்கள் இருங்களென்றுரைத்தார்; சபையிலிருந்தவர்கள் விலகி இடங்கொடுக்கவில்லை; அதுகண்ட புலவர் எங்கேயிருக்கிறதென்றார்; உடனே அச்சமீந்தா ரெழுந்து கைநீட்டி யென் றலைமேலிருக்கத்தகுமேயென்றார். உடனே யிருந்தவர்கள் விலகிப் புலவரிருக்கும்படி இடங்கொடுத்தார்கள். இச் சங்கதியை வைத்து, அச்சமீந்தார் தேகவியோகமானகாலத்தில் அப்புலவர்கூறிய கவி.

மலைசிறுவைத்தவிளக்காம்வராககிரியருகே
சிலையேந்துசெங்கைமலையாண்டியப்பையசிங்கமெங்கோ
னிலைவாணர்தங்களைக்கண்டேயெழுந்துகைநீட்டியென்றன்
றலைமேலிருக்கத்தகுமென்றவாயுந்தழலுண்டதே.

இர்சமீந்தார் திருவாவடுதுறையாதீனத்தில், திராவிடமாபாடியகர்த்தராயிருந்த சிவஞானமுனிவர்மாணாக்கர் சங்கரமூர்த்திக்கவிராயர் கூறிய ஐந்திணைக்கோவைகேட்டு அவர்க்கு யானைக்கன்றும் வளநாடுங் கொடுத்த பெருந்தியாகி. இவ்விரண்டு கவியுஞ் சங்கரமூர்த்திக்கவிராயர் கூறியனவாகவு முரைப்பர்.

சிவகெங்கைச் சமீந்தார் மருதுபாண்டியத்தேவர் கொடை முதலியவற்றை யொருகவிஞர் கூறியகவிகள்.

தேனுந்துதாமன்மருதேந்த்ரராசன்தியாகங்கண்டு
வானும்பர்தாமும்புலவரென்றார்வடிவேற்குகனென்
போனும்புலவனென்றான்புதன்றானும்புலவனென்றா
னானுங்கவியென்றுசுக்கிரன்றானுங்கவின்றனனே.

பாணுரியல்புணரும்பண்பன்றன்னின்பம்
பாணுரியரறியாப்பண்பன்—பிராணு
ரணிமருதுபாண்டிறனையன்றுதைத்தோன்யாரும்
பணிமருதுபாண்டியபூபன்.

இச்சமீந்தார் சேதுசமஸ்தானவித்வான் சீனிப்புலவரைக்கொண்டு குன்றக்குடிமுருகருக்கு ஐந்திணைக்கோவைசெய்வித்தார். அக்கோவை அச்சிடப்பட்டிருக்கிறது.

பழநிச்சமீந்தார் ஒருபுலியைச்சுட்டுவிட்டுத் தனது அரண்மனைவாயிலில் வந்து பலர்புகழக் களித்திருந்தார். அப்போது புலவரொருவர் கூ கூ என்று சத்தமிட்டுக்கொண்டு வந்தார். சமீந்தார் புலவரை இது என்னவென்று கேட்டபோது புலவர்கூறிய கவி.

பையாடரவப்பணியேந்துசொக்கர்பதியைவிட்டு
வையாபுரிக்குவரும்போதிலேநல்வழிமறித்து
மெய்பாத்தொடர்ந்துகலிப்புலியென்னைவெருட்டுகின்ற
தையாவிசயகிரித்துரையேயுன்னடைக்கலமே.

இக்கவியைக்கேட்டவுடனே அச்சமீந்தார் இக்கொடிய கலிப்புலியை இரட்டைக்குழல்வெடிகொண்டு சுடவேண்டுமென்று சொல்லிவிட்டு, இரண்டுபை ரூபா கொண்டுவரச்சொல்லிக் கொடுத்தாராம்.

போடிநாயக்கனூர்ச் சமீந்தாராகிய மகாவிவேகி தியாகியாயிருந்த வங்காருதிருமலைப்போடைநாயுடுதம்பி சுந்தரபாண்டியநாயுடுகாலத்தில் அங்குவந்த கல்போதுவித்துவான் பிச்சுவையர் தமக்கு மரியாதைசரியாகச் செய்யாதிருந்ததைக்கருதி,

வாடிநகரிருக்கமன்னன் றயவிருக்க
வோடியெதிர்வந்துதவுவோரிருக்கப்—போடிநகர்க்
கேன்றான்பெரியமலையேறிவந்தேனையையோ
நான்றானினிவருவேனு.

என்ற வெண்பாவைக்கூறிப் பின்பு நானிங்குவந்ததற்கு மரியாதை கிடைக்கவில்லை. என் மனையாளுக்கு மரியாதை கிடைத்துவிட்டதென்றாராம்; அது என்னவென்று கேட்டபோது, கோபகாலத்திலே என்மனையாளை நோக்கி, எதிர்நில்லாதே போடி என்று சொல்வதுண்டு; இனி அப்படி அவளைநோக்கிச் சொல்லமாட்டேன். அதனாலே அவளுக்கு மரியாதை கிடைத்ததென்றாராம்

எழுமலைச்சமீந்தார் நல்லகாமயநாயுடு மிருபுகழெய்தியிருந்தபோதொருபுலவர்கூறியகவி.

ஆராயும்வேதியர்க்குளாருமில்லையறிவில்லாவலையருமப்படியேயாகுஞ்
சீரானதுலுக்கருக்குட்சீதக்காதிசிறப்புடையவணிகருக்குட்செந்தில்காத்தான்
காராளர்தங்களுக்குள்வெண்ணையூரான்கருதரியமறவருக்குண்மூவராயன்
போரானமூங்கிலணைநல்லகாமாதொட்டியர்க்குனியொருவன்பேர்பெற்றாயே.

செந்தில்காத்தான்செட்டிஎன்பவர் இருந்தது சாத்தான்குளமென்றும், பன்னிருவருடமழையற்பமானபோது திருச்செந்திற்கோவிற்பூசைக்கு வேண்டியபொருளுதவி நடத்தின புண்ணியரென்றும் கூறுவர்.

மூவராயத்தேவர் நகரம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வடக்கேயுள்ளதென்பர். இவர் பேரிலே மூவராயவண்ணம் என்பதொன்றுண்டு. அதனைப் பள்ளிக்கூடங்களிலே முன்னம்படித்தார்கள். மூங்கிலணை—இவர் குல தெய்வத்தானம்.

இவர் காலஞ்சென்றபோது ஒரு புலவர் கூறியகவி.

பணவரவல்குற்செவ்வாய்ப்பாரதிவறுமையுற்று
டுணையினிவேறுமுண்டோசொற்பெருந்தகைசேர்மூங்கி
லணைதருநல்லகாமனமரர்நாடடைந்தபோது
கணவனையிழந்தமாதாயினேளுக்கவிஞரெல்லாம்.

எட்டையபுரக் கடிகைமுத்துப்புலவர் சிவகிரிச்சமீந்தார் வரகுணராமபாண்டியன்பேரிலே திக்குவிசயமென்னு மொருபிரபந்தம்பாடி யரங்கேற்றினர்; சமீந்தார் புலவர்க்குப் பல்லக்குக்கொடுப்பதாகச்சொன்னதைச் சிலர் தடுத்தார்களென்று கேள்வியுற்றுப் புலவர்,

வாக்கிரண்டுபேசாவரகுணராமேந்திரனே
வாக்கிரண்டுபேசமனம்வைத்தான்—

என்றார் ; சமீந்தார் பின்னடக்கிறதையறிந்தன்றோ சொல்லவேண்டும் என்றுகூறப், புலவர் நான் பின்சொல்வதையறிந்தன்றோ சொல்லவேண்டுமென்று, வெண்பாவைப் பின்வருமாறு பூரணம்பண்ணினார்.

நாக்கு—மருவலரைக்கொல்லென்றான்வந்தடைந்தபோது
வெருவாமற்காப்போமென்றான்.

பின்பு பல்லக்குக் கொடுத்துப் பிரபந்தத்தைச் சேற்றூர்ச்சமீந்தாரிடத்திலுங் கோட்டைச்சமீந்தாரிடத்திலும் வாசித்துக்காட்டிவரச் சொன்னார். புலவர் இரண்டிடத்திற்கும் போனபோது கோட்டையிலே சமீந்தார் தலைமறைவாயிருந்துகொண்டு பட்டிக்குப்போயிருக்கிறதாகச் சொல்லிவிட்டாராம் ; சேற்றூரி லுபசரிந்தார்களாம்; பின்பு புலவர் சிவகிரிக்குப்போய்ச் சொல்லியகவி :—

வேண்டாதமருவலரைவென்றரசுபுரியுமுயர்வேந்தேநாளுந்
தூண்டாதமணிவிளக்கேவரகுணராமேந்திரனேசொல்லக்கேளாய்
கூண்டாரயாருமுடனின்றுறுபதியுடன்யான்கூடப்போனேன்
வாண்டாயன்றலைமறைந்தான்செம்பொன்வடமலைத்திருவன்வழங்கினானே.

வாண்டாயன் — கோட்டைச்சமீந்தார்.

சேற்றூர்ச்சமீந்தாரிடத்திலே ஒரு புலவர்,

படிவாங்கப்படும்பாடுபரமசிவனறிவனவன்பங்கில்வாழும்
வடிவாருமறிவளவன்மக்களுக்குந்தெரியும்

எனக்கூறினர் ; உடனே சமீந்தார் புலவர்கழுத்தைப்பிடித்துக்கொண்டு இனி வசையாகக் கூறாமல், நசையாகக்கூறவேண்டுமென்றார். புலவரும் அப்படியேசொல்கிறேனென்று தலையசைத்தார். சமீந்தார்கையைவிடவே, புலவர் பின்வருமாறு அந்தப்பாடலைப் பூர்த்திசெய்தார்.

இந்தவருத்தந்தீர்ப்பாய்
முடிவேந்தரடிதாழ்ந்து முறைமுறையேபணிந்தேத்துமுத்தாமேலாங்
குடிவேந்தாதிசார்ந்தாதுரைத்திருவாதரைக்கொருவாகவிர்தவானே.

(தொடரும்)

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

பல்லவ உற்பத்தி.

பண்டைக்காலத்திலே தென்னாட்டின்கண் மிகவுங்கீர்த்திவாய்ந்து செங்கோலோச்சிய மன்னர்கள், சேர, சோழ, பாண்டியர்கள் என்பது, தண்டமிழ்நூல்களானுஞ் சாசனங்களானும் யாவர்க்குந் தெரிந்தனவே! அவர்போல வேறுசில இடைப்பட்ட அரசர்சரித்திரங்கள், ஆராய்ச்சிக்கு இன்றியமையாத சாதனங்கள் அகப்படாமையால், இறந்தொழிவன வாயின; அவற்றுளொன்று பல்லவரென்னும் நாமம்வகித்த அரசர்கள் சரித்திரமாகும்.

கி. பி. மூன்றும் நூற்றாண்டுமுதல் பத்தாம் நூற்றாண்டுவரை தொண்டைமண்டலமென்னும் ராஜ்யத்தைக் காஞ்சியிலிருந்து பல்லவரென்னுமோர் அரசவம்சத்தினர் மிகவும் பிரபலமாய் அரசாண்டு வந்தார்களென்பதுகேட்கப்படுகின்றது. சென்ற நாலாண்டுக்குட் சிலமேதாவிகளால் வெளியிடப்பட்ட சிற்சில ஆராய்ச்சி உதவியைக்கொண்டும், சென்னைச் சிலாசாசனபரிசோதகரது பிரகடனஅறிக்கையைக்கொண்டும் ஒருவாறு அவர்களது வம்சாவளியும் ஆண்டகாலமும் வெளியாயின. கிருஷ்ணாநதிமுதல் கன்னியாகுமரிக்குட்பட்ட இடங்களில் அவ்வப்போழ்து கண்டெடுக்கப்பட்ட சாசனங்களினின்றும், அவர்களது ஆட்சிப்பரப்பிவ்வளவென்பதும், அவர்கள் ஆந்திர, சோழ, பாண்டியர்களை வெற்றிகொண்டு இலங்கைவரையுந் தனியாட்சிபுரிந்து கீர்த்திப்பிரதாப முற்றார்களென்பதும், தஞ்சாவூர்ச் சோழவரசரின் சார்வபௌமத்தின் பின் அழிந்து ஒழிந்து போனார்களென்பதுந் தெரியப்படுகின்றன. அவர்கள் ஆட்சிக்காலத்தில், முதலிற் புத்தசமணமதங்களும், பின்பு வைணவ, சைவமதங்களும் மிகவுஞ் சிறப்புற்றோங்கி வளர்ந்திருந்ததற்கு, காஞ்சியிலும் மாமல்லபுரத்திலு மின்றுங்காணப்படுங் கற்றளிகளும், நுண்ணியசிற்பச்சிலைகளுஞ் சான்றுபகரும். ஆனால் அப்பல்லவர்கள் யாவர்? அவர்கள் எங்கிருந்துவந்தனர்? எவ்வம்சத்தினர்? இந்நாமம் எவ்வாறு பெற்றனர்? என்பனவாதியகேள்விகட்கு ஏற்றவிடை இதுகாறு மகப்படாது செம்மைக்கண்ணிருப்பதுகொண்டு ஈண்டாராய்வதற் கெடுத்துக்கொண்டாம்.

வின்ஸென்ற்ஸிமித் (vincont smith) என்னும் ஆங்கிலசரித்திராசிரியர் தாமெழுதிய புராதனஇந்தியாவின் சரித்திரம் என்னும் அரிய நூலின் முதற்பதிப்பின்கண்ணே, காஞ்சி, வெங்கி, பாலக்கடாவென்னும் நகரங்களிலிருந் தரசாண்டவரசர்களைக்கொடுத்த பல்லவரென்னுங் குலத்தினருடைய சாதி, மரபொன்றுந் தெரியவில்லையென்று பகர்ந்து, அவர்களொருவேளை வடவிந்தியக்கிரந்தங்களிலும், சாசனங்களிலுஞ் சொல்லப்படும் "பார்தியன்" அல்லது "பாரசிய" வகுப்பினரைச் சேர்ந்த "பஹ்லவர்"களாய் இருக்கலாமோவென்று ஆசங்கித்தார். ஆனல், வடமேற்குக் கணவாய்வழியாய் வந்து இந்தியாவிற் புகுந்த இப் "பஹ்லவர்" வம்மிசத்தார் மத்திய இந்தியாவையுந் தெக்கணத்தையுங் கடந்து எவ்வாறுவந்தார்கள்? கிழக்குக் கரையோரத்திலிருக்குங் காஞ்சியிற்சென்று தங்கள் இராச்சியத்தை எப்படி நிலைநிறுத்தினர்கள்? வழிகளிலிருந்த ஆந்திரம் முதலிய வலிமைமிக்க இராச்சியங்களை எவ்வாறு தாண்டிச்சென்றார்களென்பதும், காஞ்சியிலுங் காடுகெடுத்து நாடாக்கி உறைந்தார்களா? அல்லது முன்னிருந்த அரசரை வெற்றிகொண்டு இராச்சியபரிபாலனஞ் செய்தார்களா? என்பதும் முதலிய ஆராய்ச்சிகள் சண்டைக்கேற்புடைத்தாகும். டாக்டர் ப்ளீற் (Dr. Fleet) டாக்டர் பேர்ஜெஸ் (Dr. Burgus) முதலிய சாசனஆராய்ச்சிவல்லுநர்கள் பொறித்த மேற்காட்டிய மறுப்புரைகள் முந்தியகொள்கையுடையாருக்கு மயக்கத்தைக் கொடுக்கத்தக்கனவாயின. அதனை முன்னிட்டு ௧௯௦௮-ம் ௵ வெளிவந்த தாமெழுதிய சரித்திரநூலினிரண்டாம்பதிப்பின்கண்ணே, பல்லவரும், பஹ்லவருமொருவரென்பதையும், அவர்களின்பாரசிய உற்பத்தியையும், டாக்டர்ப்ளீற் போன்ற மேதாவிகள் மறுக்கவியலாவிடினும், பல்லவர்கள் சென்னைமாகாணத்தின் வடபக்கத்திற்றோன்றிய ஒருகுலத்தினராகவேண்டுமென்று அச் சிமித் என்பவர் ஒருவாறு ஒப்புக்கொண்டவராயினர்; அதுவுமன்றித் தென்னிந்தியாவிலுள்ள வேளாளர், கள்ளர், பள்ளர் என்னுஞ் சாதியார்கள் பல்லவர்களைச் சேர்ந்தவர்களென்று பாராட்டுவதால், தாம் முந்திச்சொன்னவற்றிலும் பூரணப்படாது இன்னுந் தெற்கே அவர்கள் உற்பத்தியைத்தேடவேண்டுமென்றுங் குறிப்போர்ந்தனர்.

அதன்பின் பதினொருவருடங்களாகப் பல்லவருற்பத்தியைப்பற்றி அறியப் போதிய ஆதாரங்கள் ஒன்றும் அகப்படாதபடியால் ௧௯௧௯-ம்

ஞு பதிப்பித்த ஆக்ஸ்போர்ட் இந்திய சரித்திரத்தில், இனிமேல் வெளி வருஞ் சரித்திராராய்ச்சிக்காரர், பல்லவர்களைப்பற்றிய முழுச்சரித்திரத்தையும் அவர்கள் உற்பத்திமுதலியவற்றையும் நன்காராய்ந்து அறிவிக்கும் வரை, இந்தியசரித்திரத்திலுள்ள இருட்டறைப்பொருள்களில் இதுவுமொன்றாகவைத்து வகிக்கப்படவேண்டுமென்று அச்'சிமித்' என்பவரே கருதினர்.

பின்பு, பல்லவர்களின்சரித்திரத்தையும், வம்சாவளியையும் சாசன மூலமாக எவ்வளவோசிரமத்துடன் ஆராய்ந்து வெளியிட்டவரும், தென்னிந்திய பூர்வசரித்திரத்தில் ஆராய்ச்சிவல்லுநருமாகிய ஜூவோ டுப்றியூல் (Jouveau Dubreiul)என்னும் பிராஞ்சியமேதாவியார், வின்ஸன்ற் சிமித் என்பவரின் ஐயத்தைநீக்குநற்பொருட்டு, ௧௯உ௰௰ம்ஞு வெளிப்படுத்திய "தக்கணத்தின் பூர்வசரித்திரம்" என்னுங்கிரந்தத்திற் பல்லவரின் உற்பத்தியை ஆராயப்புகுந்தும், பல்லவரென்னும்பெயர் பாஹலவ ரென்னும் நாமத்தின் திரிபென்பதைத் தம் மனத்தினின்றும் அகற்றக் கூடாதவராயினர். வேலூர்ப் பாளையத்திலகப்பட்ட தாமிரசாசனத்தில், பல்லவ அரசர்களின் மூலபுருடன் சர்ப்பவரசனின் மகளை (நாககன்னிகையை) மணந்து அரசுரிமையைப்பெற்றான் என்று சொல்லியிருக்குங் கூற்றை ஆதாரமாகக்கொண்டு, பாஹலவ-நாகசம்பந்தத்தைத் தேடுவாராயினர். ஒரு பாஹலவனுக்கும் நாககன்னிகைக்குமிடையில் கல்யாணம் நடந்திருந்தாலும், அக்கன்னிகையின்பிதா கிழக்குக்கரையோரம் வரைக்கும் அரசாண்டிருந்து தன் மருகனுக்குக் காஞ்சியையடுத்த பிரதேச அரசுரிமையைக்கொடுக்கும் பாக்கியமுடையவனாயிருந்தாலும், வேலூர்ப்பாளைய சாசனக் கர்ணபரம்பரைப்படி பல்லவருற்பத்தி ஐயந்திரிபற நிலைநிறுத்தப்படத்தக்க பூரணசாட்சியாயமையுமென நினைத்தார் போலும்.

பின்னும், அக்காலத்துப் பழையசாசனங்களைத் துருவியாராய்ந்து ஆபராந்தா லென்னு நகரி லரசாண்ட சிற்றரசர்களாகிய Western Satrapas என்னும் மாராட்டிர வரசனொருவனிடம் பாஹலவ வம்மிசத்தானொருவன் அமைச்சனாக வமைந்திருந்தானென்பதைக் கண்டுபிடித்து, அவ்வமைச்சனோ அவன் மகனோ மத்தியதேசத்தி லொருசிறு பகுதியை அரசாண்ட நாகவம்மிசத்தாராகிய சுட்டுநாகரில் ஒருபெண்ணை

மணந்த சாதவாகனன் என்னும் ஆந்திரவரசனின்மகனுகிய சிவஸ்கந்த—நாக—சாதகர்ணியின்மகளை மணம் முடித்திருக்கலாமெனக் கூறினர். இதனுடனமையாது, கடலூரில் (Cuddalore) எடுக்கப்பட்ட சிலநாணயங்களில் ஸ்ரீபுளுமாயியென் றிருக்கக்கண்டு, அப் புளுமாயி யென்ற ஆந்திரவரசனே தொண்டைமண்டலத்தையுஞ்சேர்த்துக் கிழக்குக்கரையோரம் வரைக்கும் அரசாண் டிருக்கவேண்டுமென்றும், சிவ—ஸ்கந்த—நாக—சாதகர்ணியே அப்புளுமாயி யென்றும், காஞ்சியைமத்தியாகக்கொண்ட பிரதேசத்தை அவன் தன் மருகனுகிய பாஹலவனுக்குக் கொடுத்து, அவனைக் காஞ்சியில் அரசாளவைத்திருக்கவேண்டுமென்றும், அம்மருகனின் சந்ததியாரே பல்லவரென்னும்பெயருடன் காஞ்சியிலிருந் தாசாண்டவரென்றும், இவ்வாறுன பொலிப்பிரமாணங்களைத் துணைக்கொண்டு பல்லாற்றுனும் இடர்ப்படுவாராயினர். அவையும் நில்லயிலவாயின. சாதவாகனரும், சுட்டுநாகரும், மேற்கு மகாராட்டிரரும் ஒருகாலத்தவரெனச் சாதிப்பதற்கும், கி. பி. மூன்றும் நூற்றுண்டின் முற்பகுதியில் பாஹலவ—நாக கல்யாணத்தைப் பொருத்துவதற்கும் அவர்பட்டபிரயாசமோ சிறிதன்று. ஆனுல் பலவாண்டுகட்கு முன்னமே நிராகரித்த பாஹலவ சம்பந்தத்தைப் பூர்த்தியாக்கிவிட்ட அவர்கூற்றைக் கொள்வதற்கு மாருகப் பிரபலநியாயங்களிருப்பதால், வின்ஸன்ற்ஸிமித் அவர்கள் கொள்கைப்படி, சென்னைக்குத்தெற்கேயுள்ள தமிழர்வம்மிசத்தைப் பல்லவர் சேர்ந்தவரோ அன்றே வென்னும் ஆராய்ச்சியிற் சிறிது நுழைந்து பார்ப்பாம்.

மேலைத்தேசத்துச்சரித்திரஆராய்ச்சிநிபுணர்கள் தங்களாராய்ச்சியில் வேண்டுமிடத்துப் பழையதமிழ்நூல்களைப் பாவித்திருந்தால் இவ்விதமான விபரீதங்களும் ஐயப்பாடுகளும் எவருங்கொள்ளுதற்கு இடமிரா. ஆனுல், இப்போது சிலவருடங்களாக மகாமகோபாத்தியாயர் சுவாமிநாதையரவர்களாலும் வேறுசில புண்ணியசிலர்களாலும் கைம்மாறுவேண்டாக் கடப்பாட்டினைக்கொண்ட நன்முயற்சியால் அநேக தமிழ்நூல்கள் அச்சிவர்ந்து வெளிவந்தபடியால், சரித்திரவாராய்ச்சிக்கு மிகவும் பிரயோசனப்பட்டன. அவைகளுட் கடைச்சங்கநூல்களிலொன்றுகிய மணிமேகலையோ இவ்வாராய்ச்சிக்கு மி க வு ம் உபயோகப்படத்தக்க நூலாயிருப்பதோடு அஃதே பிடமுமாயது.

கி. பி. முதலாம்நூற்றாண்டுமுடிபினும் இரண்டாம்நூற்றாண்டுத் தொடக்கத்திலும் சோழராச்சியத்தைப் புகார் என்றழைக்கப்பட்ட காவிரிப்பூம்பட்டினத்திருந்து அரசாண்டவன் கரிகாற்பெருவளத்தான் என்னும் அரசனாவான். அவனுக்குப்பின் னரசாண்டவன் நெடுமுடிக்கிள்ளி, மாவண்கிள்ளி, வென்வேற்கிள்ளி, கிள்ளிவளவன் என்னும் பல பெயர்களினால் மணிமேகலையில் வழங்கப்பட்ட அக் கரிகாலன்மகனேயாவன். அவன்காலத்திற்றான் புகாரைக் கடல்கொண்டதுமன்றிச் சோழராச்சியங் குன்றிவரவுந் தலைப்பட்டது. இவனே புகாரிற் கடைசியாயாண்ட சோழவரசன். காஞ்சிபுரத்தில் அரசுசெய்தவனும் பெரும்பாணாற்றுப்படையிற் கடியலூர் உருத்திரங்கண்ணனாரற் புகழப்பட்டவனுமாகிய தொண்டைமான் இளந்திரையனென்பான் இக்கிள்ளியின் மகனாவான். மணிமேகலையிற் புகாரைக் கடல்கொண்டமைக்கு நியாயங்கூறுமிடத்துப்

"பொங்குதிரையுலா அம்புன்னையங்கானற்
கிளர்மணிநெடுமுடிக்கிள்ளி"க்குமுன்
"நாகநாடுநடுக்கின்றாள்பவன்
வாகைவேலோன்வளைவணன்றேவி
வாசமயிலைவயிற்றினுட்டோன்றிய
பீலிவளை"

யெனச்சொல்லப்பட்ட நாககன்னிகை,

" இளவேனிலிறுப்பவிறும்பூது சான்ற
பூநாறுசோலையாருமிலொருசிறைத்
தானேதமியளொருத்திதோன்ற"

அவளைவிழைந்து ஒருமாசங்காறும் அவளுடனின்றின்பம்நுகர்ந்தும் அவள் தான் யாரென்றுசொல்லாது,

"பலர்புறங்கண்டோன்பணிந்துதொழில்கேட்ப
வொருமதியெல்லைகழிப்பினுமுரையாள்
பொருவரும்பூங்கொடி"

மறைந்துபோயபின்,

"யாங்கொளித்தனளவ்விளங்கொடியென்றே
....தேர்வுழி",

பொருசாரணன்றோன்றி,

"இரவிகுலத்தொருவனிணைமுலைதோயக்
கருவொடுவருமெனக்கனியெடுத் துரைத்தன
னங்கப்புதல்வன்வரூஉமல்லது
பூங்கொடிவாராள்"

என்றுசொல்லியபடி,

"நாகநன்னாடாள்வோன்றன்மகள்
பீலிவளையென்பாள்பெண்டிருள்மிக்கோள்
பனிப்பகைவானவன்வழியிற்றோன்றிய
புனிற்றிளங்குழவியொடுபூங்கொடிபொருந்தித்
தீவகம் (மணிபல்லவம்) வலஞ்செய்துதேவர்கோனிட்ட
மாபெரும்பீடிகைவலங்கொண்டேத்துழிக்
கம்பளச்செட்டிகலம்வந்திறுப்ப
வங்கவன்பாற்சென்றவன்றிறமறிந்து
கொற்றவன்மகனிவன்கொள்கெனக்கொடுத்தலும்"

அச்செட்டி உவகையோடுவாங்கிச்செல்லலும், மரக்கலங் காரிருளிற் கால் வாங்கிக்கவிழவும், உடன்கொணர்ந்தமைந்தனைக் காணாது கெடுகலமாக்கள் கிள்ளிக்குரைப்ப, அவ்வரசன் மகனுக்குற்றது பொறாஅன் நன்மணியிழந்தநாகம்போன்று, கானலுங்கடலுங்கரையுந்தேடி, எங்குந்திரிவதில் இந்திரவிழாவைமறக்க, மணிமேகலாதெய்வம் விட்டசாபத்தாற் புகாரைக் கடல்கொண்டது எனக் கூறப்பட்டிருக்கின்றது.

இனிப் பெரும்பாணாற்றுப்படையில் " அந்நீர்த் திரைதருமரபின் ....பல்வேற்றிரையன் " என்னுமடிகளுக்கு " நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தேசென்று, நாககன்னிகையைப் புணர்ந்தகாலத்து, அவள் யான் பெற்ற புதல்வனை என்செய்வேனென்ற பொழுது, தொண்டையை அடையாளமாகக்கட்டிக் கடலிலேவிட அவன்.

வந்து கரையேறின் அவற்கு யான் அரசுரிமையை எய்துவித்து நாடாட்சிகொடுப்பனென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின் திரையன் என்ற பெயர்பெற்றகதை கூறினர்" என இளந்திரையனைக் கருதும் உரைக்குறிப்பிலே நச்சினார்க்கினியரென்னும் உரையாசிரியர் எழுதிச்செல்கின்றார்.

ஆகையினால், சோழக்கிள்ளிக்கு நாககன்னிகைபாற் பிறந்தபிள்ளை சார்பளச்செட்டியின் கலங்கெட மாண்டொழியாது திரைதரக் கண்டெடுக்கப்பட்டானென்பதும், தொண்டைமானிளந்திரையனென்னும் பெயருடன் இவனே அவன்தந்தைபால் அரசுரிமையெய்தப்பெற்றுக் காஞ்சியிலிருந் தரசுசெய்தவனென்பதும், அவனுடைய பெயரானே அவனரசாண்டதேசம் தொண்டைமண்டலமென்றழைக்கப்பட்டதென்பதும், இருநூலிடத்துங் கூறப்பட்டவனொருவனேயென்பதும் வலியுறுகின்றமைகாண்க.

இத்திரையன்வழியினரே தெற்கே சோழபாண்டியர்களையும் வடக்கே ஆந்திரர் முதலிய வரசர்களையும் வலிகுறையச்செய்து வெற்றிகொண்டு பலநூற்றாண்டுகளாகச் சார்வபௌமசக்கரவர்த்திகளாய் அரசுசெய்த பல்லவராவார்கள். ஆனால், அவ்வம்மிசத்துப் பிற்காலவரசர்கள் இளந்திரையன்வழிவந்தவர்களென்பதை மறந்தோ அல்லது அதை மறைக்கும் நோக்கமாகவோ, அன்றித் தாங்களுங் கௌரவமானவொரு வம்மிசாவளியை உண்டாக்கிக்கொள்ளவேண்டுமென்னுமாசையினாலோ, யாதோ தாங்கள் பரத்துவாசகோத்திரமென்றும், மகாபாரதத்திற் சொல்லப்பட்ட துரோணாச்சாரியர்மகன் அஸ்வத்தாமன் வழித்தோன்றல்களென்றும், சூரியசந்திரவம்மிசத்தவர்களென்றும், பலபடப் புனைந்து புராணவம்மிசாவளியொன்றை உண்டாக்கிவைத்துக்கொண்டார்கள். ஆனாலும், அவர்கள் சோழவுற்பத்தியை மறைத்தாலும் தங்கள் நாகவுற்பத்தியை மறக்கவில்லை. கி. பி. 330 வரையிலரசாண்ட விஷ்ணுகோபனுக்கு முன்னிருந்தவனென்றெண்ணப்படும் ஸ்கந்தசிஷ்யன் என்னும் அரசன்காலத்தில் வரையப்பட்ட ராயக்கோட்டைச்சாசனத்தில் அவ்வரசன், நாககன்னிகையை மணம் முடித்த அஸ்வத்தாமன் வம்மிசமென்று புகழப்பட்டிருக்கின்றான்.

பிற்காலத்தில் நாகர் பாம்புகளென்றும், தென்னாட்டையுரைத்தாங் "கீழ்நிலம்" என்னும் பதம் பாதாளம் பிலத்துவாரமென்றுஞ் சனங்கள் நம்பியிருந்தகாலத்தில், சோழன் நாகபட்டினத்துப் பிலத்துவாரத்தால் நாகலோகம்போய் நாககன்னிகையை விழைந்தானென்று நச்சினார்க்கினியர் உரையுங்கூறவே, அவர்கள் கொள்கை பின்னும் வலிபெற்று நிலைகொண்டது. இஃது விந்தையினும் விந்தையே! கிள்ளியென்னுஞ் சோழன் நாககன்னிகையைக் காண்பதற்கு அப்படியானவொருபாதாளத்துக்குப் போகவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனின், அக்காலத்தில் மிகநாகரிகமடைந்து புகழ்படைத்து வாழ்ந்த நாகரென்னுஞ் சாதியார் இலங்கையிலும், இந்தியாவின் பலவிடங்களிலும் வசித்தார்களென்பதை இலங்கைச்சரித்திரமாகிய மகாவம்மிசத்திலும் வேறுபலநூல்களிலும் பார்க்கக்கூடலாம்.

இதுகாறுங் கூறியவற்றால், காஞ்சியிலிருந்து பன்னூற்றாண்டுகளாக வரசாண்ட பல்லவவரசர்கள் சோழக்கிள்ளிக்கும் நாககன்னிகைக்கும் பிறந்த தொண்டைமான் இளந்திரையன் வம்மிசத்தவரென்பது பெற்றாம். பெறவே, சோழன்விழைந்த பீலிவளையென்னும் நாகர்சாதிப் பெண் எத்தேசத்தவளென்பதைப்பற்றி யினி யாராய்வாம்.

கிறிஸ்துவுக்குப் 'பன்னூற்றாண்டுகட்குமுன்றொடக்கமாகி நாக ராச்சியமென்னுமோர் அரசுநிலை இலங்கையின் வடபாகத்து நாகதீபத்திலும், மேல்பாகத்துக் கல்யாணியென்னுமிடத்திலும் பிரசித்திபெற்றிருந்ததென மகாவம்மிசத்திற் கூறப்படுகின்றது. மத்திய இந்தியாவிற் போகவதியென்னுமிடத்தே ஒரு நாக ராச்சியமிருந்ததாக இந்தியவிதிகாசங்கள் தெரிவிக்கின்றன இப்போகவதியிலிருந்த நாகரே பின்பு சட்டநாகர்களென் றழைக்கப்பட்டார்கள்போலும். இலங்கையின் நாகதீபமே மணிமேகலையிற்கூறப்பட்ட மணிபல்லவம் என்னும் இடமாகுமென அநுமானிக்கலாம். நாகதீபத்திலிருந்த ஓர் அழகிய மணியிழைத்த ஆசனத்தைக் கவர்தற்கிச்சித்து மாமனும் மருகனுமாகிய இரண்டு நாகவரசர்கள் தங்களுட்பிணங்கிச் சேனைகளுடன்சென்று சமர் செய்யும்பொழுது, புத்தன் அவர்கள்மத்தியிற் றோன்றி, இருவர்க்கும் நீதிகூறி ஒற்றுமையாகிய தர்மத்தை விளக்கிப் போதித்தனர் என்றும், அப்போதணையிற் சாந்தமடைந்து அவரடியிற்பணிந்து அந் நாகவரசர்க

னிருவரும் அவ்வாசனத்தைப் புத்தனுக்குப் பீடிகையாகக் கொடுத்தார்களென்றும் மகாவம்மிசம் கூறுகின்றது. இனி,

"விரிந்திலங்கவிரொளிசிறந்துகதிர்பரப்பி
யுரைபெறுமும்முழநிலமிசையோங்கித்
திசைதொறுமொன்பான்முழநிலமகன்று
விதிமாணாடியின்வட்டங்குயின்று
பதுமசதுரமீமிசைவிளங்கி
யறவோர்க்கமைந்தவாசன"

மொன்றைக்

"கீழ்நிலமருங்கினாகநாடாளு
மிருவர்மன்னவரொருவழித்தோன்றி
யெமதீதென்றேயெடுக்கலாற்றார்
தம்பெரும்பற்றுநீங்கலுநீங்கார்
செங்கண்சிவந்துநெஞ்சுபுகையுயிர்த்துத்
தம்பெருஞ்சேனையொடுவெஞ்சினம்புரிநா
ளிருஞ்செருவொழிமினெமதீதென்றே
பெருந்தவமுனிவனிருந்தறமுரைக்கும்
பொருவறுசிறப்பிற்புரையோரேத்துந்
தருமபீடிகை"

"இருங்கடல்
வாங்குதிரையுடுத்தமணிபல்லவம்"

என்னுந்தீவி லிருந்ததாக மணிமேகலையிற் சொல்லியிருப்பதால், அந்நாகதீபமும் மணிபல்லவமும் ஒன்றெனக்கருதலாகும்.

சமனொளிபாதமென்னும் "பாதபங்கயமலை" இருக்கும் இரத்தினத்தீவமென்று சொல்லப்படும் இலங்கைத்தீவினருகே மணிபல்லவமிருப்பதென,

"ஈங்கிதனயலகத்திரத்தினதீவத்
தோங்கியசமந்தம்"

என்று மணிமேகலையிற் குறிக்கப்பட்டிருப்பதால், அம் மணிபல்லவம் முன்னே தீவமாயிருந்து இப்போது குடாநாடாகிய யாழ்ப்பாணமென்று நிர்மாணிக்கலாம்.

அதுவுமன்றித், 'தேவநம்பியதிஸ்ஸ' வென்னுமிலங்கையரசன் காலத்தில் இலங்கைக்குப் புத்தசமயத்தைக்கொணர்ந்த புத்தபிட்சுக்களும், வெள்ளரசும், சங்கமித்தவென்னும் பிக்குணியும், மகதநாட்டுச் சனங்களும் வந்திறங்கிய ஜம்புக்கோளையென்னுந் துறை நாகதீபத்திலுள்ளதென்று மகாவம்சத்திற் சொல்லியிருப்பதாலும், அக்காலத்தே ஜம்புக்கோளையிற் கட்டிய திஸ்ஸமகாவிகாரையும் நாட்டிய வெள்ளரசுமிருந்தவிடங்கள் இன்றுந் திஸ்ஸமளுவை போதிமளுவை யென்னும் பெயர்களால் வழங்கிவருதலாலும், அந்த ஜம்புக்கோளை யிப்போது யாழ்ப்பாணம் வடகரையிலுள்ள சம்புத்துறையென் றழைக்கப்படுந் துறையென வறியலாம். நாகவரசர்கள் வெகுண்டு போர்செய்து கவர்வதற்கு ஏதுவாயிருந்ததும், புத்தரிருந்து தர்மத்தை உபதேசித்ததும், அநேக நூற்றாண்டுகளாகப் புத்தர்களினால் வணங்கப்பெற்றதும், மணிமேகலைக்கு முந்திய பிறப்புக்களையுணர்த்தியதுமாகியபுத்தபீடிகையிருந்தவிடம் இப்போது அநேகபுத்தகட்டிடங்கள் அழிந்து மண்மேவிட்டுக்கிடக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடையென்னுங் கிராமமென்றெண்ணுவதற்குப் போதிய பிரமாணங்களுள. கந்தரோடையிற் கண்டெடுக்கப்பட்டனவும் கி. மு. ஐந்தாம்நூற்றாண்டு தொடங்கி, கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுவரை வழங்கிவந்தனவுமான பலதேயத்து நாணயங்கள், அக்கந்தரோடையின் பழமைக்கும் புராதன மகிமைக்கும் சாட்சிபகர்கின்றன. அன்றியும், முற்காலத்தில் நாகவரசர்களிருந் தரசாண்ட தலைநகரமாகிய கதிரைமலையாகும் அக்கந்தரோடையையும் ஜம்புக்கோளைத்துறை

யையுங்கொண்ட யாழ்ப்பாணநாடே புராதன மணிபல்லவமும் நாகதீபமு மென நிச்சயிக்கலாம்.

நாகபட்டினத்திலே பிரபல நாகராச்சியமொன் றிருந்ததென்ப தாகச் சரித்திரவாயிலாலேனும் கர்ண பரம்பரையாலேனும் அறியக்கிட வாதபடியாலும், பீலிவளையென்னும்பெண் தான் தங்கிய மணிபல்லவத்தி லிருந்து தன்புதல்வனாகிய இளந்திரையனை வங்கமேற்றி யவன்றந்தை பாற்சேரும்படியனுப்பிய சரிதங்கேட்கப்படுவதாலும், கிள்ளிவிழைந்த நாகப்பெண் மணிபல்லவத்து அரசன்மகளென்றே தீர்மானிக்கலாம். இதனுடன், மணிமேகலையிற்கூறப்படும்,

"பாரகவீதியிற்பண்டையோரிழைத்த
கோமுகியென்னுங்கொழுநீரிலஞ்சியொடு
மாமணிபல்லவம்வந்ததீங்கெனப்
பொய்கையும்பொழிலும்"

காஞ்சியிற் கிள்ளிவளவன் நிர்மாணித்து அழகுபெறச்செய்தானென்று மிவ்வடிகள், தன்னாற்காதலிக்கப்பட்ட மணிபல்லவத்து [நாககன்னி கையை மகிழ்வித்தற்பொருட்டாகவே செய்திருக்கலாமெனக் கருதுவதற் கிடந்தருகின்றன.

இதுகாறுங்கூறியவாற்றால், பல்லவவம்மிசத்தின்மூலபுருடனாகிய இளந்திரையனுடையதாய் மணிபல்லவத்து நாககன்னிகையானபடியால் அவனுடைய சந்ததியார் அந்நாககன்னிகையின்தேயத்தின் பெயரை வகித்துப் பல்லவரென்றழைக்கப்பட்டார்கள். அன்றியும் பல்லவம் என்னும் பதம் 'தளிர்' அல்லது 'கிளையின்பசுமையாகிய நுனி' யென் னுங்கருத்தைக்கொண்டது. அக்காலத்தில் வங்காளக்குடாக்கடலிற் பிரயாணஞ்செய்த தமிழ்வங்கமாக்களுக்கு அத்தீவின்தோற்றம் இந்தியா வின்தென்பாலிருந்தோ, அல்லது இலங்கையின் வடபாலிருந்தோ

முளைத்த தளிர்போலத் தோற்றியபடியால், அத்தீவுக்குப் பல்லவமென்னும் பெயரிடப்பட்டதாயிருக்கலாமென நிச்சயிக்கலாம்.

பிற்றிய பல்லவராசர்கள் 'தளிர்' என்னும் பொருளைத்தரும் 'அங்குர'வென்னும் வடமொழிப்பதத்தை விருதியாகக்கொண்ட "புத்தியங்குர", "நாயங்குர" "தருணாங்குர", "லலிதங்குர" வென்னும் பட்டங்களையும், அக்கருத்தமைந்த "போத்து" என்னும் தமிழ்மொழிப்பதச் சார்புபெற்ற "போத்தராயர்" என்னும் பட்டத்தையும், அக்காலத்தே ஆண்டுவந்திருந்தலால், 'பல்லவம்' தமிழ்ச்சொற்றொடரென்பதும், மணிபல்லவத்துடன் ஒற்றுமையுளதென்பதும், பாரசீயதேசத்துப் பாரதியன் வகுப்பினரைச்சேர்ந்த பாஹ்லவருக்கும் இதற்கும் எவ்விதத்திலும் சம்பந்தம் உண்டாகமாட்டாதென்பதும் யாவருக்கும் ஒப்பமுடிந்த முடிவாயினமை காண்க. இலங்கையின் வடபாகத்திலிருக்கும் யாழ்ப்பாணத்துக்குச்சேர்ந்த பல்லவராயன்கட்டென்னுமூரும், யாழ்ப்பாணத்துப் பலவிடங்களிலும் வழங்கும் போத்தராயர் என்னுந் தெய்வவணக்கமும், பல்லவராயன் தளம்பராயனென்னுங் குலப்பெயர்களும், யாழ்ப்பாணத்துக்கும் பல்லவருக்குமுள்ளசம்பந்தத்தை ஒருவாறு ஆதரிக்கும்.

மேற்காட்டிய கொள்கைப்படி சென்னைக்குத்தெற்கேயுள்ள தமிழ்நாட்டினின்றே பல்லவருற்பத்தியைத் தேடவேண்டுமென்ற சிமித் ஆசிரியரின்கொள்கை வலியடைந்ததும், சிவ–ஸ்கந்த–நாக–சாதகர்ணியின் மகளை மணந்த பாஹ்லவ மந்திரியின் வம்மிசத்தவரென்ற கொள்கை வலியிழந்ததும் தெள்ளிதாயினமை காண்க.

C. Rasanayagam Mudaliyar.

அருவியன்காதை.

[கசுஅ-ம் பக்கத்தொடர்ச்சி.]

நோக்க வும்பொருள் நோக்ககில் லாமலே
ஆக்கம்வின் டவர் போல்அல மந்தனன்
பூக்க ளாம்காம் பொம்மெனக் கொட்டியே
மீக்கொள் மூரல்மின் னாளும் அரும்பினள். (79)

"புல்லும் ஆரப் புயத்து று நித்திரட்
கல்லும் ஏற்கிலா கட்டழ கீர்! கவின்
இல்லை என்றே காடமும் ஈர்ந்திரை
செல்லும் வெண்மையில் சேர்கின்றவே" என்றாள். (80)

வேயும் சங்கமும் வீயிண ரும்நலம்
தீயும் என்னும்மென் றோளிய சேயிழாய்!
"தோயும் தீமைநம் தொல்பிறப் பால்; அவை
மாய்வதற்கு மருந்தும் உண்டோ" வென்றான். (81)

"வம்பறுத மரைமலர் மேனியீர்!
கொம்ப றுத கொடிகள் பறித்திடர்
வெம்பு றுவிழ மீக்குரு விக்குழாம்
கும்பு றுவீழ் கொடுமைஎன்?" என்கின்றாள். (82)

"கோல நாசிக் குமிழ மலருளாய்!
ஞாலம் மேல்சிலர் நாடு நயங்கெடுத்
தாலம்வய் துன்ப ஆழி அமிழ்த்துபுன்
சீலம் ஏய்பல தீயர் உளர்" என்றான். (83)

"வஞ்சம் என்ப மறம்என்ப மக்கட்கோர்
நஞ்சம் என்ன நடுங்குளத் தூய்மையீர்!
மஞ்சரும் சிறுபுல் மருட்டும் முயல்
துஞ்சத் தீத்தொழில் சூழ்வதென்னோ?" என்றாள். (84)

எண்ணில் பல்லுயிர் எய்து மிடியுந்தன்
கண்ணில் எய்திய என்னக் கவல்அருட்
பெண்ணி னாயகமே! இப் பிரபஞ்சத்
துள்நிற்க உயிர்ஒன்றை ஒன்றுண்ணு மால். (85)

கேடென்பாய், கிளர் வன்மையி னால்வரும்,
பாடென்பாய், பலபன்னி உழைக்கு வாய்,
கூடக வெயில் சுற்றும் காத்தினாய்!
நீடியற் கையினை நீதி உயிர்க்கொலை. (86)

வானில் மண்ணில் வளைந்த கடல்தன்னில்
ஊனில் வந்த உயிர்த்தொகை கண்ணுறில்,
மேனின்ற உயிர் கிழவை வெல்லுங்காண்,
தேனின் வந்த செழுமலர்க் கூந்தலாய்! (87)

புல்லைத் தீய்க்கும் புழுவெனில் அப்புழுக்
கொல்லத் தீய்க்கும் குருவியினம்; அவை
சில்லர் தீய்ப்பர்; அச் சில்லர் தமைஅடல்
வெல்லுமா விழுங்கி, முறை வீயுமே. (88)

ஆதலால் இன்மை உண்மையதாய் உண்மை,
ஏதில் இன்மையதாய் இயலாத போல்,
ஓருயிர் கெடின் அன்றி உயிர் வரா,
பூதலத் தினில் என்றறி பூவையே! (89)

என்னுங் காலைதன் காந்தன் எழில்முகம்
தன்னை நோக்கித் ததும்புநீர்க் கண்ணினாள்
பின்னும் பின்னுந்நீர் பில்கிச் சலங்கொளும்
வன்ன நீலம் மதியிடைக் காட்டினாள். (90)

வெப்பம் காய்ந்த விரிமலர் என்னவோ?
ஒப்பில் கால்வந் தடற்றுகொம் பென்னவோ?
தப்புமுன் அசுணம் எனச் சாற்றவோ?
எப்பரி சுரைக்கேன் உருதேசியை? (91)

ஐய! நீர் சொல்வ தாற்றுகிலேன், இவண்
வெய்யர் கூறும் விதியன்றோ நம்முறை,
வையம் மேல்மாறும் மட்டற ஒங்குமே
கையறக் கருணை தான் கழலினே. (92)

என்று கூறி இரக்கம் இரங்கிமுன்
நின்ற பான்மையர் கோிழை வாட்டம்தன்
கன்றும் உள்ளம் கசிந்துருகக் கொளீஇ
"நன்றுபாவை! என்நல்விசை கேள்" என்றான். (93)

வேறு.

இருந்தே ஆங்கோர் தடம் சோலை
இமிழ் நீர் அருவி மாடொலிப்ப
அருந்தேன் அமுதம் ஆம் இவையும்
அல்ல பிறவு மேஇனிமை
பொருந்தா என்ன யாழின் இசை
விருந்தங் களிக்கப், பூங் கொடியும்
முருந்தின் மூரல் சிறிதிலங்க
மோன உருவே தானானாள். (94)

அன்ப னோடும் சிறுகாலை
ஆங்கண் உறைந்தே அகம் அடர்ந்த
துன்பம் துடைத்த பின்னர் அந்தச்
சோலை நாப்பண் சுடர்விரித்துப்
பொன்புல் தாது புடைவிரித்து
புகழ்போல் மணக்கும் மலர்த்திடத்தின்
இன்பூ டகலும் அன்னமென
இலங்கும் பூணாள் ஏகினளால். (95)

வேறு.

செகம் மகிழ்ந்திடும் மாதரார்
அகம் அலர்ந்தெழு மானினி
புகும் இடந்தொறும் இரசம் ஏய்
முகம் மலர்ந்தன உரசமே. (96)

எரித்த சூடக வால் வளை
தரித்த கையினள் சார்தலும்,
விரித்த பற்களின் மேழவாய்
சிரித்து நின்றன முல்லையே. (97)

தளம்பில் வீழ்தமையா வென
ஒசிந்த மெல்லிடை கண்களில்
பரந்த மேனியோ டாகமும்
கசிந்து நோக்கின கருவிளை. (98)

"கோதை தாழ்சரி கூந்தல் நம்
மீது அன்பு செறிந்தனள் ;
காதல் காட்டுவம் நாம்," எனப்
போது விண்டன பாதிரி. (99)

" ஆம்பல் ஒத்தமுதூறும் வாய்
காம்பிணங்கெழில் தோளிபால்
நாம் பிணங்குவதென் ? " எனத்
தேம்பிச்சாம்பின செண்பகம். (100)

" வல்லி நீங்கிவண் ஓர்கிலாள்
நல்ல தீயன ஆகுமே
அல்லதில் "லெனவே துயர்
புல்லி வாடின மல்லிகை (101)

(வேறு)

தத்தை வாய் அமுதெத்துணை யெனச்
சாற்றல் சால் மொழி மாதராள்
ஒத்த மாமலர் ஆனைகைத்தலம்
தொத்துலாம் மலர் சூட்டினள் ;
கத்தன் ஆம் புலுதன் புகுத்த
கடுத்த தூதர்கள் நால்வரும்
இத்திசைதனில் உற்ற பெற்றியும்
ஈங்கெடுத்துரை தாங்குவாம். (102)

(தொடரும்).

K. N. சிவராஜபிள்ளை B.A.,

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(கஅச-ம்பக்கத் தொடர்ச்சி).

26. பொழுது(உ)ணர்(வு) அரிய அப் பொரு(வு)இல் மா நகர்த்
தொழு தகை மடந்தையர், சுடர் விளக்(கு)எனப்
பழு(த்து)அற, மேனியைப் பார்க்கும் ஆசை கொல்
எழுது சித்திரங்களும் இமைப்(பு)இலாதவே!

இ-ள். (எங்கும் இரத்தினப் பணிகள் மிகுந்து, அவற்றின் பேரொளியால் எப்போதும் பகல்போலிருத்தலால், இது பகல் இது இரவு என்று) பொழுது (விகற்பம்) அறியமுடியாத அந்த நகரத்தில் உள்ள மாதரது வடிவத்தைப்பார்க்கும் விருப்பத்தினாலோ (அவர்வாழும் மாளிகையில் எழுதப்பெற்றுள்ள) சித்திரங்களும் இமையாதவைகளாயிருக்கின்றன!

பொருவு - ஒப்பு. இல் - இல்லாத. தொழு தகை மடந்தையர் - (கற்பினால்) தொழுந்தகுதியுடையமாதர். மடந்தையர்மேனி பெண்கூட்டுக. இயல்பாக இமையாத சித்திரங்களை மாதருருவைப்பார்க்கவிரும்பியே இமையாதனவாயிருக்கின்றனவென்று, அவாழகை ஆராவிநோக்கும் ஆடவர்கண் இமையாத்தன்மையைச் சித்திரங்களின்மேலேற்றிக் கூறியது தற்குறிப்பேற்ற அணி இதனை உற்பிரேட்சை அலங்காரமென்பர் வடநூலார். மாதர்வனப்பை வாஞ்சித்து நோக்கும் மைந்தர்கண் இமையாமை பின்வரும் சிந்தாமணிப்பாட்டில் இனிது வருணிக்கப்பட்டிருப்பதைக் காண்க.

மாதர் தன் வனப்பு நோக்கி, மகிழ்ந்துகண் இமைத்தல் செல்லான்,
காதலித்(து) இருப்பக், கண்கள் கரிந்து நீர் வரக்கண்(டு), அம்ம!
பேதமை, பிறரை உள்ளி அழுபவர்ச் சேர்தல் என்றாள்:
வேதனை பெருகி வேற் கண் தீ உமிழ்ந்திட்ட அன்றே.

27. இரவியிற் சுடர்மணி இமைக்கும் தோரணத்
தெருவினிற் சிறியன, திசைகள்: சேண் விளக்(கு)
அருவியிற் பெரியன, ஆனைத் தானங்கள்:
பரவையிற் பெரியன, புரவிப் பந்தியே.

இ-ள். (அந்த நகரத்துத்) தெருக்களைக்காட்டிலும் திசைகள் சிறியவை (=தெருக்கள் திக்குகளினும் விசாலமானவை): யானைகளின் மதநீர் (அருவி)கள் (மலை)அருவிகளினும் பெரியவை: குதிரைப்பந்திகள் கடலினும் பெரியவை.

இரவியின் - சூரியனைப்போல. சுடர்மணி - ஒளியுடைய இரத்தினங்கள். இமைக்கும் - ஒளிசெய்யும். சென் விளங்கு அருவி - (மலையுச்சியில் தோன்றி) ஆகாயத்திலே பிரகாசிக்கும் அருவி. தானம் - மதம். பரவை - கடல். புரவி - குதிரை. பந்தி - நிரை - வரிசை.

தெருக்களின் விசாலமிகுதியும் யானைத்திரள் குதிரைத்திரள்களின் மிகுதியும் விதந்து கூறப்பட்டன.

28. தெள் வார் மழையும் திரை ஆழியும் உட்க, நாளும்
வள் வார் முரசம் அதிர் மா நகர் வாழும் மாக்கள்,
கள்வார் இலாமல், பொருள் காவலும் இல்லை; யாதும்
கொள்வார் இலாமல், கொடுப்பார்களும் இல்லை மாதோ.

இ-ள். (இடிக்கும்) மேகமும் (ஒலிக்கும்) கடலும் அஞ்சும்படி தினந்தோறும் பேரிகைகள் முழங்காநின்ற அந்நகரத்திலே வாழும் மாந்தர்கள், களவுசெய்வாரில்லாமையால், பொருள்களைக் காவல் செய்வதில்லை. (அங்கே எல்லாரும் செல்வராய்) இரப்பாரில்லாமையால், கொடுப்பாருமில்லை.

தெள் வார் மழை - தெளிந்த நீரையுடைய மேகம். திரை ஆழி - அலைகளையுடைய கடல். நாளும் - தினமும் - தினந்தோறும். வள் வார் முரசம் - வளமான தோல்வார் (கட்டிய) பேரிகை. "வள்வு - வார். 'வள்வாய்ந்த பண்ணுக திண்டேர்' வெ. மாலை. பொருந்திணை. 22" (பாலகாண்டம் அரும்பதவுரை, அ. குமாரசுவாமிப்பிள்ளை த. கனகசுந்தரம் பிள்ளைபதிப்பு). 'வள்' என்பதற்கும் 'வார்' என்பதற்கொப்பத் தோல்வார் என்னும் பொருள் உண்டு. அப்பொருள் கொண்டால், வள்வார் முரசமிமிசைஞாயிறுபோன்றதாம்; 'வள்வார்முரசு' என்பதற்கு வார்(கட்டிய) நெடுமுரசென்று பொருள் கொள்ளலுமாம். 'வள்வார் முரசம்' என்பார் சிந்தாமணியாரும் • சிந்தாமணி. ̈. நச்-ம்பதிப்பு ̈ அரும்பதவுரையைப் பார்க்க.

29. கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை; அவை வல்லர் அல் லாரும் இல்லை:
எல்லாரும், எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே,
இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ.

இ-ள். (அந்த நகரத்திலே, பலவகைக்) கல்விகள்முழுதும் கல்லாதவர் (ஆகிய) பிறர் (எவரும்) இல்லாததனால், கல்விகள் முழுதும் (கற்று) வல்லார் (இவரென்று சிறப்பித்துக் கூறுதற்குரியார் எவர்)களும் இல்லை; அவை (=அக்கல்விகள்) வல்லாரல்லார் (இவரென்று இழிவுபடுத்திக் கூறுதற்குரியாரும் எவர்) களும் இல்லை: எல்லாரும் எல்லாச்செல்வங்களையும் பொருந்தியிருத்தலால், (செல்வம்) இல்லார் (இவர் என்று கூறுதற்கு எவர்)களும் இல்லை; (மேற்கூறியவாறு எல்லாரும் செல்வராய் அதனால் வறியார் ஒருவரும் இல்லாததனால், இவர்) உடையார் (என்று பிரித்துக் கூறுதற்கும் எவர்) களும் இல்லை.

'கல்விமுற்ற' என்பதனைத் தாப்பிசைப் பொருள்கோள்முறைப்படி 'கல்லாது நிற்பார்' என்பதன்முன்னும் 'வல்லாரும்' என்பதன்முன்னும் கூட்டிப் பொருள்கொள்ளப்பட்டது. [தாப்பிசைப்பொருள்கோள்—இடையில் நிற்கும் மொழியை முன்னும் பின்னும் கூட்டிப் பொருள்கொள்ளல்.] 'அவை வல்லாரல்லாருமில்லை' என்பதற்குக் "கற்றவர் கூடிய சபையில் வல்லவர்களல்லாதவரும் இல்லை" என்ற பொருளும் உண்டு.

இப்பாட்டின் முற்பாதி இரண்டடிகளுக்குப் பின்வரும் பொருளும் கூறலாம்.—(முடிவுகாண முடியாத இயல்பினையுடைய பலவகைக்கல்விகளையும் எல்லாரும் பயின்றுகொண்டேயிருத்தலால், சிலஅளவு படித்து மேற்கொண்டு) படியாமல் நின்றுவிடுவார் (ஆகிய) பிறர் (எவரும்) இல்லாததனால், (படித்து நிறுத்திவிட்ட ஒருவராது)கல்விகள் முழுதும் (கற்று) வல்லார் (இவர் என்று சொல்லுதற்குரியார் எவர்) களும் இல்லை; (மேற்கூறியவாறு படித்துக்கொண்டிராதவர் ஒருவரும் இல்லாததனால், முடிவில்லாத) அக் கல்விகள் (சிறிதாயினும் கற்று) வல்லாரல்லார் (என்று சொல்லுதற்குரியாரும் எவர்) களும் இல்லை.

இப்பாட்டின் சுருக்கமான கருத்தாவது.—அந்நகரத்திலே எல்லாரும் கற்றவர்களாயிருத்தலால், இவர் கற்றவர், இவர்கல்லாதவரென்று

சொல்லுதற்கில்லை: எல்லாரும் செல்வராயிருத்தலால், இவர் செல்வர், இவர் வறியர் என்று சொல்லுவதற்குமில்லை.

இப்பாட்டில், 'கல்லாது நிற்பார்...............வல்லாருமில்லை' என்ற பகுதியும், இதற்கு முந்திய 'தெள்வார்' என்ற பாட்டின் இறுதியிரண்டடிகளும், நாட்டுப்படலத்தில் 'வண்மையில்லை' யென்ற பாட்டின் முதல் மூன்றடிகளும், சிலசிறப்புக்களை அவற்றின் எதிர்மறையின்மையால், இல்லை என்று கூறிக் குறைபாடின்மையை உணர்த்தும் தன்மையில் ஒத்திருத்தல் கவனிக்கத்தக்கது.

30. ஏகம் முதல் கல்வி முளைத்(து)எழுந்(து), எண் இல் கேள்வி
ஆ(று) ஆம் முதல் திண் பணை போக்கி, அரும் தவத்தின்
சாகம் தழைத்(து,) அன்(பு) அரும்பித், தருமம் மலர்ந்து,
போகம் கனி ஒன்று பழுத்தது போலும் அன்றே.

இ-ள். (அந்த நகரத்திலே) கல்வி (ஆகிய ஒருமர) மூலம் முளைத்து வளர்ந்து, கேள்வியாகிய கிளைகளைத் தாங்கி, தவமாகிய தழை தழைத்து, அன்பாகிய அரும்பு அரும்பித், தருமமாகிய மலர்மலர்ந்து, போகமாகிய பழம் பழுத்தது (என்றுகூறும்படி, அந்த நகரத்து மாந்தர், கல்வி கேள்வி தவம் அன்பு தருமம் போகம் ஆகிய இவைகளைச் சிறப்பாக உடையார்.)

கல்வி ஏகம் முதல் முளைத்து - கல்வியாகிய ஒரு (மரத்து) மூலம் உண்டாகி. கேள்வி ஆறு ஆம் திண் முதல் பணைபோக்கி—கேள்வியாகிய அழகிய வலிய அடிக்கிளை விட்டு. அரும் தவத்தின் சாகம்—அரியதவமாகிய இலை. [தவத்தின் என்பதில் உள்ள அத்து இன் இரண்டும் சாரியைகள்] அன்பு அரும்பி—அன்பாகிய அரும்பு அரும்பி. தருமம் மலர்ந்து—தருமமாகிய பூப் பூத்து. போகம் கனி ஒன்று பழுத்தது—போகமாகிய பழம் ஒன்று பழுத்தது. போகம் என்பதில் அட்டபோகமும் அடங்கும். அட்டபோகம் - எட்டு நுகர்பொருள்கள். அவையாவன:—1. பெண், 2. ஆடை, 3. அணிகலன், 4. போசனம், 5. தாம்பூலம், 6. பரிமளம், 7. பாட்டு, 8. பூ அமளி. [அமளி - மெத்தை].

அரசியற்படலம்.

31. தாய் ஒக்கும், அன்பின்; தவம் ஒக்கும், நலம் பயப்பின்;
சேய் ஒக்கும், முன் நின்(று) ஒரு செல் கதி உய்க்கும் நீரால்;
நோய் ஒக்கும் என்னின், மருந்(து)ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் புகும் கால் அறி(வு)ஒக்கும், எவர்க்கும் அன்னான்.

இ - ள். (இராமாயண கதை தொடங்குங்காலத்தில் அயோத்தி நகரத்திலிருந்து அரசாண்ட அரசர்,) எல்லாருக்கும், அன்பினால் தாயை நிகர்வார்; நற்பலன் அளிப்பதில் தவத்தை ஒப்பார். செல்லுதற்குரிய நற்கதியிற் செலுத்துவதில் (மறுமையில் நற்கதியிற் சேர்க்கும்) புத்திரனை நேர்வார்; (தண்டனைசெய்வதில்) நோய்போல்வாரென்றாலோ, (தயை செய்வதில்) மருந்தும்போல்வார்; நுண்ணியநூல்களை ஆராயப்புகுந்தால் (நுட்பமான பொருள்களைக் கண்டுபிடிக்கும்) அறிவுக்குச் சமானமாவார்.

'எவர்க்கும்' என்பதைத் 'தாய் ஒக்கும்' 'தவம் ஒக்கும்' என்பவை முதலியவற்றுக்குமுன் இயைத்துப் பொருள்கொள்க. நலம் பயப்பின்- நன்மை பயப்பதில். உய்க்கும் நீரால் - செலுத்தும் தன்மையினால். நுணங்குதல் - நுணுகுதல். கேள்வி - நூல். (சிந்தாமணி மூன்றாம் பதிப்பு அரும்பத அகராதி) அன்னான் - அத்தன்மையினான்—இப் படலத்தில் இதற்கு முந்திய மூன்றுபாட்டுக்களிற் கூறிய தன்மைகளை யுடையவன்.

'நோயொக்குமென்னின்மருந்தொக்கும்'என்பதற்கு 'நோய்பொருந்தினால் (அதனைநீக்குவதில்) மருந்துபோல்வார்' என்றும் பொருள்கொள்ளலாம். ஒத்தல் - இயைதல். (பரிபாடல் அரும்பத அகராதி)—பொருந்தல் (சங்க அகராதி).

32. ஈந்தே கடந்தான், இரப்போர் கடல்; எண் இல் நுண் நூல்
ஆய்ந்தே கடந்தான், அறிவென்னும் அளக்கர்; வாளால்
காய்ந்தே கடந்தான், பகை வேலை; கருத்து முற்றத்
தோய்ந்தே கடந்தான், திருவின் தொடர் போக பௌவம்.

இ - ள். (அவர்) யாசகராகிய சமுத்திரத்தை (அவர்கள் திரும்ப இரவாதபடி நிரம்ப)க்கொடுத்தே தாண்டினார்; அறிவாகிய சமுத்திரத்தை

அளவற்ற நுண்பொருள் நூல்களை ஆராய்ந்தே தாண்டினர்; பகைவராகிய சமுத்திரத்தை வாளாற் கொன்றே தாண்டினர், போகசமுத்திரத்தை ஆசைதீர அநுபவித்தே தாண்டினர்;

அளக்கர் - கடல். காய்தல் - கொல்லல் (உ-ம். "தந்தைதனைக் காயில் என்பெறுவாயென" திருவிளை-மாபாத. கக. சங்க அகராதி) கருத்து - இச்சை (உ-ம். "ஒத்தகருத்திலர்" கோயிற்பு. இரணி. எச. சங்கஅகராதி) (கருத்தில் உள்ள) ஆசை. முற்ற - நிறைவேற. தோய்தல் - (இன்பத்தில்) முழுகல் - (இன்பத்தை) அநுபவித்தல். திருவின - செல்வத்தினால். தொடர் - பின்தொடர்கின்ற - வந்தடைகின்ற. போகம், 30-ம் பாட்டின் உரையைப்பார்க்க. பௌவம் - கடல்.

அவர் யாசகக் கடலை கொடைக்கப்பலாற் கடந்து எற்பாரின்மைக் கரை ஏறினர்: அவ்வாறே, முறையாக அறிவு, பகை, போகமாகிய கடல்களை, ஆராய்தல், கொல்லல், அநுபவித்தலாகிய கப்பல்களாற் கடந்து, இனியறியத்தக்கதின்மை பகையின்மை நிராசையாகிய கரைகளை அடைந்தாரெங்க.

33. வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன்,
தள் அரும் பெரும் புகழ்த் தசரதப் பெயர்
வள்ளல், வள் உறை அயில் மன்னர் மன்னனே.

இ - ள். (அவ்வரசர் தமது செங்கோல் முறைமையால், மழை மிகுதல் குறைதலின்றி நிதானமாகப் பெய்தலால்) ஆற்றுவெள்ளம், (குறைவால் முன்பாய்ச்சற்காரர் வாய்க்காலூடு அணைகோலித் தடுத்தலும், மிகுதியாற் கரைகளையுடைத்துச்சிதறிப்போடலும் இல்லாமல், வாய்க்காலே வழியாக) ஒருவழியே செல்லவும், (அந்தச் சமமழையால் நானாவகை விளைவும் புல்புதற்செழிப்பும் உண்டாதலால் எங்கும் உணவிருத்தலால்) பறவைகளும் மிருகங்களும் (எப்போதும் ஒருகால் உணவுதேடிச்சென்ற) ஒருவழியே செல்லவும், (அந்த மத்தியமழையாற் குறைவற்ற செல்வம் பெற்ற வைப்பாளரைப்பெற்று, அவரால் வேண்டியன வேண்டியவாறே பெற்று, வேறுபுருடரைத் தேடாமல்) வேசியர் மனமும் ஒருவழியே செல்லவும் (நீதிநிலையில்) நிற்பவர்; (என்றும்) நீங்காத பெருங்கீர்த்தி

படைத்த தசரதனென்னும் பெயருடைய பெருங்கொடையாளி; (பகைவரின்மையால்) உறையிற்றங்கிய வேற்படையுடைய இராசாதிராசர்.

வள்-வாள் உறை. உறை-இரு-தங்கு. அயில் - வேல். வள் உறை அயில்—உறையிற்றங்கிய வேல்.

இயல்பில் ஒருவழிப்படாத நான்குபொருள்களை அடுக்கிக்கூறி, அவைகளெல்லாவற்றையும் ஒருவழிச் செல்லச்செய்தல், செங்கோல் முறைமையாலாயதென்றார்.

34. நேமி மால் வரை மதில் ஆக, நீள் புறப்
பாம மா கடல் கிடங்(கு) ஆகப், பல் மணி
வாம மாளிகை மலை ஆக, மன்னற்குப்
பூமியும் அயோத்தி மா நகரம் போன்றதே.

இ - ள். சக்கரவாளகிரி மதிலாகவும், பெரும்புறக்கடல் அகழியாகவும், மலைகள் மாளிகைகளாகவும், பூமியும் தசரதருக்கு அயோத்தியை ஒத்தது.

மால் (—பெருமை) நேமி (—சக்கரம்) வரை (—மலை—பெரிய சக்கரவாளகிரி. பாமம் - பரப்பு. மாபுறக்கடல் - பெரும்புறக்கடல். கிடங்கு—அகழி. வாமம் - அழகு. 'புறமாகடல்' என்றிருப்பதை 'மாபுறக்கடல்' என்றும் 'மாளிகை மலை ஆக' என்றிருப்பதை 'மலைமாளிகையாக' என்றும் கூட்டுக.

இக் கவிக்கருத்து, பூமியும் அயோத்திபோன்று தசரதன் ஆளுகைக்குள் அடங்கியதென்பது.

35. வெயிர வான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினன்
உயிர் எலாம் தன் உயிர் ஒப்ப ஓம்பலால்,
செயிர் இலா உலகினில் சென்று நின்றுவாழ்
உயிர் எலாம் உறைவ(து) ஓர் உடம்பும் ஆயினன்.

இ - ள். அவர் மன்னுயிரெல்லாம் தம்முயிர்போலப் பாதுகாத்தலால், உலகத்தில் உள்ள சகல சராசர ஜீவராசிகளும் வாழும் ஓர் உடம்பு போன்றார்.

வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான் - வயிரமிழைத்த சிறந்த ஆபரணங்களை அணிந்த சிங்கம் போன்ற பலமுடையவன். ஓம்பல் - பாதுகாத்தல். சென்றுவாழ் உயிர் - சஞ்சரிக்கும் உயிர்கள் - சரம். நின்றுவாழ்உயிர்-இடம்பெயராத உயிர்கள்-அசரம். உறைவதோர் உடம்பு- உறைவதாகிய ஒப்பற்ற உடல். ஆயினான் - ஒத்தான். "ஆள்வாரிலி மாடாவேனோ" (திருவாசகம்) என்பதினும் ஆதல் ஒத்தலெனப் பொருள் படுதல் காண்க. உடல் உயிரைத்தாங்குவதுபோலத், தசரதர் உலகத்து வாழ்வாரையெல்லாம் தாங்கினார் என்பதும், உடலினும் உயிர் அருமை யானதுபோலத் தம்மினும் தம் குடிகளை அருமையாகக் கருதினாரென் பதும் உய்த்துணரவைத்தார்.

36. மண் இடை உயிர்தொறும் வளர்ந்து தேய்(வு)இன்றித்
தண் நிழல் பரப்பவும், இருளைத் தள்ளவும்,
அண்ணல் தன் குடை மதி அமையும்; ஆதலால்
விண் இடை மதியினை மிகை இ(து) என்பவே.

இ - ள். தசரதருடைய (வெண்கொற்றக்) குடையாகிய சந்திரன், வளர்தலுடையதாய்த், தேய்தல் இல்லாததாய், எல்லா உயிர்களுக்கும் (துன்பமாகிய அக) இருளை நீக்கவும், (இன்பமாகிய அக) ஒளியைப் பரப்பவும் அமையும்; ஆதலால், ஆகாயத்திலுள்ள சந்திரன் அனாவசியக மென்று (அறிஞர்) கூறுவார்கள்.

நிழல்—1. ஒளி - நிலவு; 2. அருள் - (பத்துப்பாட்டு மூல அரும் பத விளக்க அகராதி). இருள்—1. இருட்டு; 2. மயக்கம். பரிபாடல் அரும்பதவகராதி. குடைநிழல் பரப்பல், அருள்செய்தலெனவும், இருளைத்தள்ளல், மயக்கத்தை நீக்குதலெனவும் பொருள்கொள்ளலுமாம். அமையும் - போதும். மிகை - (வேண்டும் அளவுக்கு) மிகுந்தது. என்ப - என்று சொல்லுவர்.

37. குன்(று)என உயரிய குவவுத் தோளினன்
வென்றி அம் திகிரி, வெம் பரிதி ஆம் என,
ஒன்(று)என, உலகிடை உலாவி, மீமிசை
நின்று நின்(று) உயிர்தோறும் நெடிது காக்குமே.

இ-ள். மலைபோல உயர்ந்த திரட்சியுடைய தோளுடையராகிய அவரது வெற்றிபொருந்திய ஆக்ஞைசக்கரம், சூரியனைப்போல (உலகத்துக்கு) ஒன்று (போதும்) என உலகிலே எங்கும் சென்று மற்றைய அரசரது ஆக்ஞை சக்கரங்களுக்கு) மேலாக நின்று நிலையானதாய் எல்லா உயிர்களையும் (அதற்கு அப்போதப்போது வரும் ஆபத்துக்களைநீக்கித்) தனித்தலி பாதுகாவா நிற்கும்.

உயரிய - உயர்ந்த. குவவு - திரட்சி. வென்றி - வெற்றி. ஒன்றெனா—1. உலகத்துக்குச் சூரியன் ஒன்றே அமையும், பலசூரியர் வேண்டியதில்லை என்பதுபோலத் தான்(—தசரதாது சக்கரம்)ஒன்றே உலகத்துக்குப்போதும்; ஏனைய அரசரதுசக்கரங்கள் வேண்டியதில்லையென; 2. (எங்கும் வியாபகமான ஏக பராபரவஸ்துவேபோல).

38. எய்யென எழு பகை எங்கும் இன்மையால்,
மொய் பொரு தினவு உறு முழவுத் தோளினன்,
வையகம் முழுவதும், வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்(து)இனி(து) அரசு செய்கின்றான்.

இ-ள். (அம்புகளை) எய்யென்று (போர்முழக்கஞ்செய்து கொண்டு) தம்மேல்வரும் பகைவர் எவ்விடத்தும் இல்லாததனால், பகைவரோடு போர்செய்தற்கு உண்டாகும் தினவுபொருந்திய தோள்களையுடைய தசரதர், ஒரு தரித்திரன் (மிகுந்த சாக்கிரதையாகப்) பாதுகாக்கின்ற (அவனுக்குள்ள) ஒரே வயல்போல, உலகமுழுவதையும் (கவனமாகக்) காவல் செய்து அரசாட்சி செய்கின்றார்.

மொய்—1. போர்; 2. பகை (புறப்பொருள் வெண்பாமாலை அரும்பத அகராதி). பொருதல் - போர்செய்தல். மொய்பொரு தினவு.—1. போர் பொருதற்கு உண்டாகும் தினவு; 2. பகைவரோடு போர்செய்தற்கு உண்டாகும் தினவு. முழவு—மத்தளம். ஓம்புதல் - காத்தல். செய் என - வயலினைப்போல.

தசரதர் அரசுசெய்ததை நம் கண்ணெதிர் நிகழ்வதுபோலச் செய்யக்கருதி 'அரசுசெய்கின்றான்' என நிகழ்காலத்தாற் கூறினர். இவ்வாறு நடந்தொழிந்ததை நடக்கின்றதாகக்கூறும் நிகழ்காலத்தைச் சாரித்திரநிகழ்காலம் (Historical present) என்பர் ஆங்கிலேயர்.

திருஅவதாரப்படலம்.

[தசரதர் வசிட்டனைநோக்கித் தமக்குப் புத்திரன் இல்லாததனால், தமக்குப்பின், உலகம் காப்பாரின்றி வருந்துமேயென்ற கவலை தம்மை வருத்துகின்றதென, வசிட்டர் முன்பு நிகழ்ந்ததை நினைவுகூர்ந்தார். அது வருமாறு:—தேவர்களெல்லாம் தங்களுக்குத் துன்பஞ்செய்துவந்த இராக்கதரை விட்டுணுவை கொன்றாலன்றிப் பிழைப்பில்லையென்று ஆலோசித்து முடிவுசெய்து அவர் உதவியைவேண்டி அவரைத் தியானித்தார்கள். அப்போது,]

39. கருமுகில் தாமரைக் காடு பூத்து, நீ(டு)
இருசுடர் இருபுறத்(து) ஏந்தி, ஏந்(து)அலர்த்
திருவொடும் பொலிய,ஓர் செம்பொன் குன்றின் மேல்
வருவபோற் கலுழன் மேல் வந்து தோன்றினான்.

இ - ள். கரிய மேகம் (உடல் நிறையத்) தாமரைபூத்துச் சந்திர சூரியரை இரு பக்கங்களிலே தரித்து இலக்குமி (நடுவிலே) விளங்கச் செம்பொன்மலைமேல் வருவதுபோல, (மேகம்போன்ற கரியதிருமேனியை யுடைய திருமால், செந்தாமரைமலர்கள்போலக் கண் வாய் உந்தி கை பாதங்கள் பொலிய, முறையே சந்திரசூரியர்போன்ற சங்கசக்ரங்களை இடப்புறத்தும் வலப்புறத்தும் இருகைகளில் ஏந்தித் திருமகள் திரு மார்பில் வீற்றிருந்து விளங்கச் செம்பொன்மலை சிறகுபடைத்தாற் போலும் கருடன்மேலேறி) வந்தருளி (அவர்களுக்குப்)பிரசன்னமானார்.

தாமரைக்காடு—(செந்) தாமரை (மலர்) மிகுதி. இருசுடர் - சூரியன் சந்திரன். ஏந்து அலர்த்திரு — (தன்னைத்) தாங்கிய (தாமரை) மல ரிடத்துள்ள இலக்குமி. 'ஏடவிழ்திரு' என்று பல பிரதிகளில் உள் ளது. அதற்கு இதழ்விரிந்த (தாமரைமலரிடத்துள்ள) இலக்குமி யெனப் பொருள்செய்யப்பட்டிருக்கிறது. ஏடு என்பதற்கே பூ என்ற பொருள் உண்டு. (ஏடு—பூ. உ-ம் ஏடவிழ்கூந்தலாய். சங்கஅகராதி) 'வருவது' எனற்பாலது செய்யுள்வழக்காக வருவ என ஈறுகுறைந்தது. கலுழன் - கருடன்.

[அவ்வாறு பிரசன்னமானவர் அரக்கரை அழிக்க 'நாலும் சங்கசக்க ரங்களும் ஆதிசேடனும் தசரத குமாரராக அவதரிப்போம். எமக்குத்

துணையாக நீங்களெல்லீரும் வானராகுங்கள்' என்று கூறிச்சென்றார். அவ்வாறே, அவர்கள் வானராகப்பிறந்தார்கள். இம் முன்நிகழ்ச்சிகள் நினைவில்வர, வசிட்டர் தசரதரைப் "புத்திரகாமேட்டி என்னும் யாகம் செய்க" என்றார். அவர் அந்த யாகத்தைச் செய்ய, அவர் மனைவியரில், கோசலைக்கு இராமரும், கைகேயிக்குப் பரதரும், சுமித்திரைக்கு இலக்குமண சத்துருக்கரும் பிறந்தார்கள்.

பிறந்தவர்கள் வளர்ந்து கல்விபயின்று யௌவனப்பருவம்அடைந்த காலத்தில், இணைபிரியாத இராமலக்குமணரைக் காண்போரெல்லாம், மழைகண்டு செழிக்கும் பயிர்போலக் களித்தார்கள். 'இவ் அரசிளங் குமாருக்கு நல் வாழ்வு அருள்க' என்று தத்தம் இஷ்டதெய்வங்களைப் பிரார்த்தனைசெய்வதில் ஆடவரும் மாதரும் முறையே தசரதரையும் கோசலையையும் போன்றனர். அவர்கள், கரியநிறமுள்ள இராமரும் பொன்னிறமுடைய இலக்குமணரும் கூடி உலாவுதலைக்கண்டு களித்து (கண் வாய் உந்தி கை கால்களாகிய) தாமரைபூத்த கருங்கடல் மேருமலை யோடு திரிதலொக்குமென்பார்கள்.

இராமபிரான், தம் எதிர்வருவோரை, அகம் நெகிழ்ந்து, முகம் மலர்ந்து, புன்னகை அரும்ப, கண்கள் கருணைததும்ப, இனிதுநோக்கி, "உமக்குத் துன்பமில்லையே? உம் மனைவியர் மக்கள் சுகமோ? குறித்துச் செல்லும் காரியம் யாது?" என்று அன்புடன் வினவ, அவர்கள், "திக் கற்றவர்களுக்குத் தந்தையாக உள்ள உம்மை அரசாகப்பெற்ற எமக்கு யாதொரு குறைவுமில்லை: நீர் இவ்வுலகத்தை நீடூழி ஆள்வீராக" என்று மனமார வாழ்த்திச் செல்வர். இவ்வாறு அயோத்திமாநகரமாந்தர் அனைவரும் வாழ்த்தத் தம்பியர் தம் திருவடிநிழல் நீங்காராய்ப்போற்ற, இராமபிரான் வாழ்தல்கண்டு, தசரதர், அளவில்லாத ஆனந்தக்கடலுள் ஆழ்ந்திருந்தார்.]

கையடைப்படலம்.

கையடை - அடைக்கலம். (வாலிவதைப்படலம்-கடுக "கையடை யாகும்") படலம்-நூற்பகுதி. இப்படலம், தசரதர், இராமலக்குமணரை, விசுவாமித்திரரிடம், அடைக்கலமாகக்கொடுத்ததைக் கூறுவது.

[இவ்வாறு தசரதர் களித்திருக்குங்காலத்திலே, அவர், ஒருநாள், தேவர்கள் இந்திரசபாமண்டபமே யென்று சந்தேகிக்கும்படியான தமது அரசிருக்கைமண்டபத்தை அடைந்து,]

40. ஆயமேல் அரிஅணைப் பொலிந்து தோன்றினான்,
செய் இரு விசும்பிடைத் திரியும் சாரணர்,
நாயகன் இவன் கொல் என்(று) ஐயிர்த்து நாட்டம் ஓர்
ஆயிரம் இல்லை என்(று) ஐயிர்ப்பு நீங்கவே.

இ - ள். (அந்தச்சமயத்திலே, இந்திரனது காரியமாக, அவ்வழியே) விண்ணிலே சென்றுகொண்டிருந்த (தேவ) தூதர்கள் (பலரும், தனித்தனியே, தம் மனத்தினுள்ளே, இந்தக்கொலுமண்டபம் நம் அரசன் கொலுமண்டபமேயாகத் தோன்றுகின்றது; இதிற் கொலுவிருக்கும் அரசன் தேவராசன்போன்றிருக்கின்றான்; உண்மையிலே) இவன் தேவராசனோவென்று சந்தேகித்து (ப்பின்பு இவனுக்கு இந்திரன்போல) ஆயிரம் கண் இல்லையென்று (தெரிந்து இவன் இந்திரனல்லனென்று) சந்தேகம் நீங்கும்படியாகச் சிங்காதனத்திலே (இந்திரன்போல) விளங்கிக் கொலுவீற்றிருந்தார்.

அரி(-சிங்கம்) அணை (-ஆதனம்) - சிங்காதனம். செய் இரு விசும்பு சிந்தாமணியில் 'சேயுயர்மதில்' 'சேயுயர் உலகம்' என்பவை வருதல்போல வந்தது. (சிந்தா. அரும்பதவுரை பார்க்க). செய் இரு விசும்பு - தூரமான பெரிய ஆகாயம். செய் - தூரம் (பத்துப்பாட்டு உரையிற்கண்ட சொல்லகராதியையும் சங்க அகராதியையும் பார்க்க). 'வாய்மை' 'வாய்' என்பவை உண்மையென்றபொருளில்வருதல்போல, 'சேய்மை' 'சேய்' என்பவை தூரம் என்ற பொருளில் வருகின்றன. சாரணர் - தூதர். நாயகன்-(தேவர்க்குத்) தலைவன். ஐயிர்த்து - சந்தேகித்து. நாட்டம்-கண். ஐயம் - சந்தேகம்.

[மேற்கூறியவாறு வீற்றிருந்த தசரதர்முன்னே, உயிர்களெல்லாவற்றையும் அவைகள் உறையும் உலகங்களையும் தேவர்களோடு பிரமதேவரையும் இதோ! படைக்கின்றேனென்று படைக்கத் தொடங்கிய விசுவாமித்திர முனிவர் வந்தார். அவர் வரவும், தசரதர், பிரமதேவர் வரக்கண்ட இந்திரன்போல விரைந்தெழுந்து வீழ்ந்து வணங்கி ஆதனத்தில் இருத்தி அருச்சித்து அவரைநோக்கி,]

41. "நிலம் செய் தவம் என்(று)உணரின், அன்று,நெடி யோய்!என்
நலம் செய் வினை உண்(டு),எனினும் அன்று;நகர் நீ யான்
வலம் செய்து வணங்க எளி வந்த இது முந்(து) என்
குலம் செய் தவம்" என்(று)இனிது கூற முனி கூறும்.

இ - ள். (இந்த) நகரத்திலே தேவரீரை அடியேன் வலம் வந்து வணங்கும்படி (வருதற்கரிய நீர்) இலேசில்வந்த (இந்தப்பாக்கியத்) துக்குக் காரணம், இந்தப் பிரதேசத்திலுள்ளார் செய்த தவமோ என்று ஆராய்ந்து பார்த்தால், அதுவன்று, தமியேன்செய்தநல்வினை புண்ணியமோ வென்றால், அதுவுமன்று, வேறு யாதெனின், முற்காலத்தில் என் வமிசத்தார்செய்த தவமேயென்று இனிதாகச் சொல்ல, முனிவர் சொல்வார்.

நலம் செய் வினை - நன்மையைச் செய்கின்ற வினை - நல்வினை நகர் - நகரில். இவ்வாறு தாரணி (-பூமி)யில் என்பது தாரணி, எனத் திரு அவதாரப்படலம் 22-ம் பாட்டில் 'தசரதன் மதலையாய் வருதும் தாரணி' யென்பதில் ஏழாம்வேற்றுமை உருபு தொக்கு வருதல்காண்க. எளி வந்த-1. எளிதிற்கிடைத்த; இலேசில்வந்த (சங்க அகராதி.) இது - இந்தச்செயல் - இந்தச்செயலாகிய பாக்கியத்துக்குக் காரணம். முந்து என் குலம்-(எனக்கு) முந்திய என் குலத்தார்.

42. "என் அனைய முனிவரரும் இமையவரும்
இடையூ(று) ஒன்(று) உடைய ரானால்,
பல் நகரும், நகு வெள்ளிப் பருப்பதமும்,
பாற்கடலும், பதும பீடத்(து)
அந் நகரும், கற்பக நாட்(டு) அணி நகரும்,
மணி மாட அயோத்தி என்னும்
பொன் நகரும் அல்லாது புகல் உண்டோ,
இகல் கடந்த புலவு வேலோய்?

இ - ள். பகைவரை(க்குத்தி) வென்ற(தனால் அவரது) ஊன் (தங்கிய) வேலாயுதத்தையுடைய சக்கரவர்த்தியே! என்னைப்போன்ற முனிசிரேட்டர்களும் தேவர்களும் யாதாயினுமோர் இடையூற்றை அடைந்தாரானால், (அவர்கள் அதனைநீக்குதற்கு முருகக்கடவுளைநாடிக் குன்றுதோறாடல் செய்வாராய் அவர் வாழும்) பலமலைகளையும், (அவ்வாறே பரமசிவனையும் திருமாலையும் பிரமதேவனையும் இந்திரனையும் உம்மையும் தேடி முறையே) கைலாயமலையும், பாற்கடலும், சத்தியலோகமும், அமராவதியும், இரத்தினகசிதமான மாளிகைகளையுடைய அயோத்திமாநகரமும் (புகலிடமாக அடைதல்) அல்லாமல், (வேறு) புகலிடமுண்டோ? (இல்லை).

என் (னை) அனைய-என்னைப் போன்ற. முனி-தவசி. வரம்-சிரேட்டம். வரர்-சிரேட்டர். முனிவரர் தவசிரேட்டர்கள். இடையூறு-இடை(யில்)உறுதல்-(ஒருகாரியம் செய்யப் புகுந்தார்க்கு, அது முடியாதபடி இடையே உறும்)தடை-விக்கினம்.பன்னகம்-பல்(-பல)நகம்(-மலைகள்). நகுதல்-ஒளிவிடுதல் பிரகாசித்தல். பருப்பதம்-மலை. 'பதுமபீடத்தன்னகர்' என்றபாடமே பெரும்பான்மையான அச்சுப்பிரதிகளிற் காணப்படுகின்றது. அதன் பொருள், (பதுமபீடத்தன் நகர்-) தாமரைமலரை ஆதனமாக உடைய பிரமனது நகரம் என்பது. னகரம் இப்பாடத்தில்எதுகைநோக்கி இரட்டித்தது. மொழியைமுறித்து எதுகை அமைத்தல் சிறந்த முறையன்று. அதனிலும் இவ்வாறு விகாரமாகப் பதச்சேதம்பண்ணி எதுகைபெறுதல் விலக்கற்பாலது. இராமாயணமுழுவதிலுமே, இப்படிப்பட்ட சிறப்பற்ற எதுகைவேறிருக்குமோ என்பது சந்தேகம்; ஆதலால் 'பதுமபீடந்தந்நகர்' என்றபாடம் சிறந்ததாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதனைப் 'பதும பீடத்து அம் நகர்' எனப்பிரித்துப் (பிரமனது) பத்மாசன (மாகிய சிங்காதன)த்தை (த்தன்னிடத்தே) உடைய அழகிய நகரம் என்று பொருள் கூறலாம்; அன்றியும், 'பதும பீடத்து அந்(த) நகர்' எனப் பிரித்துப் பதும பீடத்தையுடைய (து எந்த நகரம்?)

அந்த நகரம் எனவும் உரைசெய்யலாம். கற்பகநாடு - கற்பகதருக்கள் உள்ள பொன்னாடு. அணிநகர்-அழகுடைய நகரம்-அமராவதியென்னும் இந்திரனது இராசதானி நகரம். புகல்-புகலிடம்-தஞ்சமாகப்புகுமிடம்-பற்றுக்கோடு. இகல் பகை. இகல் கடந்த-பகைவரைக்கொன்று செயித்த. புலவு-மாமிசம்.

"மஹாரிஷியாகியும் விசுவாமித்ரனுக்கு ஜன்மசுபாவமாகிய ரஜோகுணம் நீங்கிற்றில்லை என்பார் 'என்னனையமுனிவரும்' (—என்னைப் போன்ற சிறந்த முனிவர்களும்) என்ற சொல்லால் உணர்த்தினர். சாபாநுக்கிரக சாமர்த்தியத்தால் தேவரையும் பணிகொள்ளும் சிறப்பினால் முதலில் முனிவரையும் பிற்படத் தேவரையும் எண்ணியது. இவர்கட்கு ஓரோர்காலத்தில் யாதானும் துன்பம் தங்களுக்குத் தாமே நீக்கிச் சொல்வதற் கேலாதவாறு சம்பவிக்குமென்னும் கருத்துப்போதர, 'இடையூறு ஒன்று' எனக் கூறினர். 'பன்னகம்'—பல்நகம்—பலமலைகள்; குன்றுதோறாடல் முருகக்கடவுளின் படைவீடாறனுள் ஒன்றாதலானும், [அவர்] குறிஞ்சிநிலத்தெய்வமாதலானும், பலமலைகளைநாடல், அவரிடம் முறையிட்டுத் தங்குறைதீர்க்க வேண்டிக்கொள்வதனிமித்தமாம். இங்ஙனமே, கயிலாயம், பாற்கடல், பிரமனுலகம், இந்திரன் நகரம் இவற்றை முறைப்பட எண்ணினர். ஈசனாலும் அழிக்க இடலாத சூரனை அழித்த பெருமைதோன்ற முருகக்கடவுளை முன்னும் மஹாவிஷ்ணு முதலியோர்க் கிடுக்கண்விளைத்த திரிபுராதியர் சலந்தரன்போன்றோரை ஜயித்த காரணத்தாலும், ஸம்ஹார கிருத்தியத்தலைவனாதலின் தங்கள் சத்துருவைச் சம்ஹரிக்குமாறு வேண்டிக்கொள்ளும் நிமித்தத்தாலும் பரமசிவத்தையும் காத்தற் கடவுளாதலின் தமக்கெய்திய இடுக்கணினின்று காத்தருளும்பொருட்டு மஹாவிஷ்ணுவையும்; ரிஷிகணங்கட்குத் தலைமைபூண்டவனாதலானும் நேரே தம் குறையறிந்து தவிர்க்கும் வழிகூறுவோனாதலானும் பிரமனையும்; முப்பத்துமுக்கோடி தேவர்கட்கு அரசனாய் வச்சிராயுதமும் அயிராவதமும் உடைய சுவர்க்காதிபனாதலா

னும், முன் விருத்திரன் முதலிய அசுரரை வெற்றிகொண்டமையானும் இந்திரனையும்; அவ் இந்திரனுக்குற்ற இடுக்கண்தீரச் சம்பரனைவதைத்து உதவிய கருணை உடைமை ஆதலின் நின்னையும் நாடிக் குறைதீர்த்துக் கொள்ளவருவோமென்று குறிப்பித்தவாறு. எனவே, கைலாயம் பாற்கடல முதலியனபோல், நீ தலைவனாதலின் அயோத்தியும் அவற்றோடு சேர்த்தெண்ணும் தரத்ததாயிற்று எனக் குறிப்பித்தார். ஒருவரை விசேஷித்துரைக்கும்போது, அவர் சாதிதருமங் கூறிச் சிறப்பித்தல் மெய்யுவகை விளைப்பதாகலின், 'இகல்கடந்த புலவுவேலோய்' என க்ஷத்திரிய தருமம் கூறியவாறு. இன்னும் இதனானே, தான் கோரிவந்ததும் ஒரு பகைதீர்க்கும் கருத்தாலே கூறினர் என்பதும் கூறாக் கூற்றாய் விளங்கல் காண்க. 'பன்னகமும் நகுவெள்ளிப் பருப்பதமும்' என்பதற்குப் பல மலைகளையும் தனக்கு இணைசாலா என்று நகைப்பதுபோல வெண்மையாய் விளங்கும் கயிலாயகிரி என்பாரும் உளர். 'மணிமாட அயோத்தியென்னும் பொன்னகர்' என விசேடித்து, ஏனைய இடங்களை அவ்வாறு கூறாமையால், அயோத்தியினிடத்துத் தமது பேரபிமானம் சிறத்தல் விளக்கியவாறாயிற்று. முழுவலிக் கடவுளர்பாற் குறைமொழிந்து ஒருகால் மறுக்கவும்பெற்றுத் தலைதாழ்த்து நிற்றலினும் நின்பால்வரின் உனது வணக்கத்தைப்பெற்று இறுமாக்க எண்ணியதுமையும் தீர்வோமாதலின் எங்கட்குப் பெருமையும் அநுக்கிரகமும் நின்னால் எய்துமென்றே நாங்கள் இங்கு வருவோம், என்பதும் மற்றும் இங்கனி நயமாய் அமைந்தன, அறிக." ஸ்ரீ. அ. வரதநஞ்சையபிள்ளை, 'தமிழன்' [1917 டிஸெம்பர்,] தொகுதி 5 · பகுதி 10, பக்கம் 183–84-ல் வெளியிட்டது.

[தொடரும்]

வெ. ப சுப்பிரமணிய முதலியார்.

செந்தமிழ்த் தீஞ்சுவை.

[கஉஉ-ம் பக்கத்தொடர்ச்சி].

இனி, நன்மொழிபுணர்த்தலாவது, செஞ்சொற்களைச் சேர்த்தல். செஞ்சொல் பொருளினிது விளங்குஞ் சொல். அஃதாவது:—உலக வழக்கினுஞ் செய்யுள்வழக்கினும் பயின்றுவருஞ் சொற்களைச் சேர்த்தல். இவ்வாறுவருநம் இலக்கணச்சொல், குறிப்புச்சொற்களுமடங்கும். இவையல்லாத வழூஉச்சொற்களையும் வழக்கில்லாத சொற்களையும் இசையில்லாதசொற்களையும், சேர்த்தலாகாது. சிலர், 'மேனி கரிதாயிற்று' என்பதை, 'மேனி கறுத்தது' என்றும், சொல்வழங்கினான், என்பதைச் சொற்பாலித்தான் என்றும், அமைதியாயிருங்கள் என்பதை அமரிக்கையாயிருங்கள் என்றும், செவ்விதான உச்சரிப்பு என்பதைத் தீர்க்கமான உச்சரிப்பு என்றும், முயற்சிசெய்தான் என்பதை அலுவல் செய்தான் என்றும், இவ்வாறு பல வழூஉச்சொற்களையும், சாரியைகொடுத்துச் செல்லவேண்டிய வண்டியின்கால், பண்டைக்காலம் என்பவைகளை வண்டிக்கால், பண்டிக்காலம் என்றும், பண்டைநாள் என்பதைப் பண்டுநாள் என்றும். அருளைக்க, பொருளைக்க, சிதளைக்க என வழங்கவேண்டியவைகளை அருட்க, பொருட்க, சிதட்க என்றும், இவ்வாறு பலவழக்கில்லாதசொற்களையும் திரைகடல், அலைகடல், கருங்கடல் செங்கனி என்பவைகளை எறிகடல், ஓங்கடல், மொழிகடல் ஒண்கனி என்றும், இவ்வாறு பல இசையில்லாத அடைச்சொற்களையும் கொடுக்க உரைகளையும் செய்யுள்களையும் இயற்றுகின்றனர். இவையெல்லாஞ் செந்தமிழ்த் தீஞ்சுவையைக் கெடுப்பனவாம். கந்தபுராணக்காரரும், மென்சொல்லும், வெளிற்றுரையும், வீண் புன்சொல்லும் கவிக்கின்பம்பயவாதன வென்பர்.

இனி, ஓசையுடைமையாவது:—செவிக்கின்பம்பயக்கத்தக்கதாகச் செய்யுளின்கண் மாத்திரையளவை யுடைத்தாதல். சங்கச்சான்றோர்களும், அவர்களுக்குச் சிறிதுபின்னிருந்தவர்களாகிய மற்றைச் சான்றோரும் ஓசைகளையளந்தே செய்யுள்களையியற்றப்படச்செய்தனர் ஓசைகாரணமாகச் செய்யுள்களை நான்காகவும் வகுத்தனர். ஓசை அகவலோசை,

செப்பலோசை, துள்ளலோசை, தூங்கலோசை என நான்குவகைப்படும். ஓசை குறைவுபடின், ஓசையை நிறைத்தற்கு அளபெடையுங் கொண்டனர். ஓசைகளை யளத்தற்குச் செவியே கருவியாம். ஓசை குறைவுபடுமாயின், செய்யுள்கள் செவிக்கின்பம்பயவாவென்க. இதுபற்றியே கம்பனார், "யாழ்-நரம்பறுத்த வனையதன் மாச்செவிப்-பறையடுத்தது போலு மென்பாவமோ" என்றார். நச்சினார்க்கினியர்,

"அவற்றுள்—மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்"

என்னுந் தொல்காப்பியச் சூத்திரவுரையிலே, மாத்திரையளவும் என்பது முற்கூறியவற்றுள் மாத்திரையைச் செவி கருவியாக வுணர்ந்துகொள்ளு நிலை எனக்கூறி, "வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி" என்னும் அளபெடைச் செய்யுளை உதாரணமாகக்காட்டுதல் காண்க. பேராசிரியரும், அச்சூத்திரவுரையிலே, மாத்திரையளவு குறுகியும் நீண்டும் வாராது சமப்படவருதல்வேண்டும் என்றும், "வாகு வாகு வாகு வாகு," என்னு மடியினைப் "பனாட்டுப் பனாட்டுப் பனாட்டுப் பனாட்டு" என நிறுத்தின் அது மாத்திரைவகையிற் சிதைவுபட்டதாமெனவும், "அம்ம வாழி கேளாய் தோழீஇ," என்றுழிப் பின்னர்நின்ற இருசீரும் நெடிலாதலால், இன்னாதெனவும், தோழி எனக் குறுக்கியவழி இன்னோசைத்தாமெனவும் அவ்வாறே செய்யுள்செய்ப என்றுங் கூறினர். சான்றோர்கள் செவிகருவியாக அளந்தே செய்யுளியற்றினர் என்பதற்கு,

"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை"

என்னுஞ் செய்யுளே சான்றாகும். எங்ஙனமெனின், அச் செய்யுள்களை அளபெடுக்காது படித்தவிடத்தும் செய்யுளோசை குன்றாதாயினும், இன்னிசை பிறவாமைநோக்கி, அளபெடுத்துக்கூறி இன்னிசைபிறப்பித்தலின். ஆதலின், ஓசையை யளந்து செய்யுள்செய்யும் வன்மை பண்டைக்கவிஞருக்குப்போலப் பிற்றைக்கவிஞருக் கியையாதென்க.

இன்னும், இவ்வழக்கமைந்தகவிகளையன்றி, சித்திரம், மடக்கு, சிலேடை முதலிய கவிகளும் சொல்லின்பம் பயப்பனவேயாம். திருவிளையாடற்புராணத்திலே,

"ஐயங்கொண் டணைவா ரையர் பரிகலத் தையமின்றிக்
கையம்பொன் கிளையும் பெய்வார் கருத்துகா ணன்றிக் காசு
செய்யம்பொன் மருங்கு றுறு மிழப்பர்வெஞ் சிலையம் பன்றிக்
கொய்யுந்தண் மலர்க்கணம்புங் கொங்கையிற் சொரியச் சோர்வார்"

எனவும்,

"மடமயி லனையா ரெங்கள் வளைகளைத் தருதி ரென்றார்
கடல்விட மயின்றா னுங்கள் கந்தரத் துள்ள தென்றான்
றடமதிக் கொம்ப னாரெங் கலையினைத் தருதி ரென்றார்
முடமதி யிலங்கா னுங்கள் முகமதி யிடத்த தென்றான்"

எனவும் வருஞ் செய்யுள்முதலியனவும், கம்பராமாயணத்தில் வரும், "கைவண்ண மங்குக்கண்டேன் கால்வண்ண மிங்குக்கண்டேன்" என்பதும் "வில்லெடுக்கவுரியார்கள்" என்னும் முதலையுடைய செய்யுளில் வரும் "கல்லெடுக்கவுரியானு நின்றனன்," என்பதும் சொல்லின்பம் பயப்பனவேயாம். பாரதத்தில்வரும் "கையானு மொருசாபங் காலானு மொருசாபம்" என்பது மறு. இன்னும் விரிப்பிற் பெருகும்.

இனிப் பொருளின்பம் பயப்பனவற்றுள், ஆழமுடைத்தாதலாவது:—ஆழ்ந்தபொருளையுடைத்தாதல் என்பது பார்க்கப்பார்க்கப் பொருளாழ்ந்து தோன்றல்; இதற்கு உதாரணமாக,

"அகர முதல வெழுத் தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"

என்னுஞ் செய்யுளை ஆராய்வாம். ஆராய்தற்கண் முன் எடுத்துக் காட்டை விளக்கிப் பின் பொருளின்ஆழத்தை விளக்குதும். கடவுள் வாழ்த்துக்கூறப்புகுந்த தேவர், முதலில் இக்குறளானே கடவுள் ஒருவர் உளர் என்பதை வலியுறுத்தினர். எதனால் வலியுறுத்தினரெனில்,—அநுமானப்பிரமாணத்தானென்பது. அநுமானப்பிரமாணமாவது ;—மறைந்துநின்றபொருளை, அதனைவிட்டுநீங்காது யாண்டு முடனாய்நிகழு மேதுவைக்கொண் டுணர்வது ; இங்கே மறைபொருள் கடவுள். அதனோ டுடனிகழ்பொருள் உலகு. யாண்டு உலகு என்னுருபொருள் காணப் படுகின்றதோ, ஆண்டுக் கடவுளும் உளர் என்பது துணிபு ; யாண்டுப் புகையுண்டு ஆண்டுத் தீயுளதாதல்போல என்பது. இங்கே ஆசிரியர்

இவ்வெடுத் தக்காட்டைக் கூறாமல், எழுத்தெல்லாம் "அகர முதல" எனக் கூறிய தென்னையெனின், அதனுனும் சில ஆழ்ந்த பொருணலம்பெறுதற் கென்க. அவையாவையெனின், இறைவனுகிய முதற்பொருள் உலகமாய் வேறாய் உடனுமாய்நின்று உலகைத் தொழிற்படுத்துமாற்றை இவ்வெடுத்துக் காட்டான் விளக்குதலும், காணப்படாத கடவுளருக்குக் காணப்பட்ட உலகத்தைக் கொண்டுணர்வதாகிய கருதலனுமானத்திற்குக் காட்சியனு மானங்கூறுதல் சிறப்பன்றாதலிற் கருதலனுமானங் கூறுதலே சிறப் பாதலுமாகிய பொருணலம் என்க. இங்கே செவி கருவியாக உணரப் படும் எழுத்துக்களைக்கொண்டு அதன் காரணமாகிய நாதம் என ஒன் றுண்டென அறிதலே கருதலளவை. அதுபோலக் கண்ணு லுணரப் படும் உலகத்தைக்கொண்டு கடவுள் ஒருவர் உளர் என் றுணரப்படுத லின், அதுவே அதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுவமையாதல் காண்க. இனி, இது ஆழ்ந்தபொருளாதல் விளக்குதும். உலகம் முத்தொழிற் படுதல் இல்லை என்னும் உலகாயதமதத்தையும், இல்லது தோன்றும் என்னும் சவுத்திராந்திகர் முதலியோர் மதத்தையும், இல்லது முள்ளது மல்லது தோன்றும் என்னும் பாட்டிமர் முதலியோர் மதத்தையும், இல்லது முள்ளது மாயது தோன்றும் என்னும் சமணன்மதத்தையும், உலகம் நித்தமென்னும் மீமாஞ்சர்மதத்தையும், அணுவே காரணமென் னும் தார்க்கிகர்மதத்தையும், மாயையேகாரணமென்னும் சாங்கியர்மதத் தையும், பரிகரிக்கும்பொருட்டு முதற்று என்றும், தான், அவனவளது வெனும் அவயவப்பகுப்புடைமையும் முத்தொழிற்படுமாறும் தனக்கு முதற்பொருளாகிய மாயையும் முத்தொழிற்படுமாற்றிற்குக்காரணமாகிய மலமும் தன்னுள் தோன்ற உலகு என்றும், மூவராயுநின்ற ஒருவன் என்பது தோன்ற, ஆதிபகவன் என்றும், உலகை இயற்றும் கர்த்தா வாதற்கேற்ற குணங்களுடைமைதோன்றப் பகவன் என்றும், அகர முத லிய உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்களும், பிறபாடையெழுத்துக்களும் அடங்க எழுத்தெல்லா மென்றும், எழுத்துக்கள் யாவற்றையும் அவை யாயும் தானுயும் அவையே தானுயும்நின்று இயக்குமாறு தோன்ற முதல என்றும், நாதமென்பது தோன்ற அ என்றது அகரமென்றும் கூறப் பட்டு,

"அவனவ ளதுவெனு மவைமூ வினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்
அந்த மாதி யென்மனார் புலவர்"

என்னுஞ் சிவஞானபோதச்சூத்திரப்பொருள்முழுவதையுமடக்கி இது மிகவு மாழ்ந்தபொருளதாய்நிற்றல் காண்க. அகரம் ஆகுபெயர். இங்ஙனமே ஒவ்வொருகுறளும்,

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என ஔவையார்கூறியவாறு ஆழ்ந்தபொருடந்து இன்பம்பயந்துநிற்றல் அறிஞர்நோக்கி யுணர்வாராக. இங்ஙனமே கச்சியப்பசிவாசாரியரும், "கல்லகந்துடைந்த" என்னுஞ் செய்யுளில், "பல்லுயிர்க் கருளைப் பூத்துப் பவநெறி காய்த்திட் டனபர், எல்லவர் தமக்கு முத்தி இருங்கனி யுதவு மென்றும்" என்னும் அடிகளிலே, பூத்துக் காய்த்துக் கனியுதவு மென்றதனாலே, கேவல சகல சுத்தாவத்தைகளை முறையேயுணர்த்திச் சித்தாந்தக்கருத்துமுழுவதையும் பொதிந்துவைத்திருத்தலும அறிஞர் நோக்கியுணரத்தக்கது. கம்பரும்,

"பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் றுணைவ னான செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலைத்து வெள்ளிமலையெடுத் துலக மூன்றுங்
காவலோன் பின்னை காம வல்லியாங் கன்னி யென்றாள்"

என்னுஞ்செய்யுளிலே, புதல்வி என்றதனாற் குலமும், தங்கை என்றதனாற் செல்வமும், பின்னையென்றதனால் துணைவலியும், காமவல்லி என்றதனால் எழிலும், கன்னி என்றதனால் விவாகஞ்செய்யப்படாமையும், முதலிய பலபொருள்கள் ஆழ்ந்துகிடக்கவைத்திருத்தல் காண்க; இங்ஙனமே கம்பன்கவி ஒவ்வொன்றும் ஆழ்ந்தபொருளவாய் இன்பம்பயப்பன வாகும்.

இனி உலகமலையாமையாவது:-உயர்ந்தோர்வழக்கொடு மாறுபடாமை; மாறுபடுதலாவது சான்றோர்கள் சொற்களையும் பொருள்களையும் எவ்வாறுகொண்டு வழங்கினரோ அவ்வாறே கொண்டுவழங்காது மாறுபட வழங்கல்; உதாரணமாக, மேகம்போலுங்கூந்தல் என்பதைக் காகம்போலுங் கூந்தல் எனவும் யானைக்கோடுபோலுந் தனமென்பதை எருத்துக்கோடு போலுந் தன மென்றும், குதிரைமேய்ப்பானை இடையனென்றும், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்றும் வழங்கல் முதலாயின. சிலர்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்,
வழுவல கால வகையி னானே"

என்னும் ஒரு புறனடைச்சூத்திரங்கொண்டு புதியனபுகுத்தி ஆன்றோர் வழக்கொடு முரணாக்கொள்வர். அவ்வாறுகொள்வது பெரியநோர் வழுவாம். என்னை, புதியனபுகுத்துங்காலும் ஆன்றோர்வழக்கொடு முரணலாகாதாகலின்.

இனி, விழுமியதுபயத்தலாவது:—சிறந்தபொருளைப் பயத்தல்; என்றது வைக்கப்பட்ட சொற்கள் ஒவ்வொன்றும் சிறந்தபொருளவாதல். சிறந்தபொருள்தாநதன இன்பம் பயவா. அவை கற்றோர்புகழுங்கவிஞன் என்பதற்கு மாந்தர்புகழுங் கவிஞன் என்றலும், சக்கரவர்த்தியை மன்னர்மன்னன் என்பதற்குப்பதிலாய் நிலமன்னன் என்றலும் போல்வன. திருவள்ளுவர்கூறிய ஆதிபகவன் என்பதும், வாலறிவன், என்பதும், "வேண்டுதல்வேண்டாமையிலான்" என்பதும் "யாண்டும் இடும்பையில" என்பதும், கம்பர்கூறிய,

"ஆசலம்புரி யைம்பொறி வாளியும்,
காசலம்பு முலையவர் கண்ணெனும்
பூசலம்பு நெறியின புறஞ்செலா"

என்பதும், புறநானூற்றில்வரும்

"மண்டிணிந்தநிலனும்
நிலனேந்தியவிசும்பும்
விசும்புதைவருவளியும்
வளித்தலையதீயும்
தீமுரணியநீருமென்றாங்
கைம்பெரும்பூதத்தியற்கைபோலப்
போற்றார்ப்பொறுத்தலும்"

என்னுஞ் செய்யுளடிகளும் மிக விழுமிய பொருள்பயந்து இன்பம்பயத்தல் காண்க. இச்செய்யுள்களில்வரும் அடைமொழிகள் யாவும் மிகவும் விழுமியபொருள்களைப் பயந்துநிற்றலின் இவற்றையே காட்டினும். அவற்றை ஓர்ந்துணர்க. விரிப்பிற் பெருகும். தொல்காப்பியர் இதனை நோக்கு என்பர். அதனை,

"மாத்திரை முதலா வடிநிலை காறும்
நோக்குதற் காரண நோக்கெனப் படுமே"

என்னுஞ் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் உரைத்த உரைநோக்கி யுணர்ந்துகொள்க.

இனி, விளங்குதாரணத்ததாதலாவது :—தான்சொல்லும் பொருளை வலியுறுத்துமாறு எடுத்துக்காட்டும் உதாரணம் எவர்க்குந் தெரிந்ததாக இருத்தல். அது "அகரமுதலஎழுத்தெல்லாமாதி-பகவன்முதற்றேயுலகு"

எனவும், "ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா - னிந்திரனே சாலுங் கரி," எனவும் வருங் குறள்களினும்,

"அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்ச ருங் காய்வரோ
இறையு ஞான மிலாதவென் புன்கவி
முறையி னானுணர்ந் தாரு முனிவரோ"

என்னுஞ் செய்யுளினும் உள்ள எடுத்துக்காட்டுக்களை நோக்கியுணர்க.

இங்ஙனமே நன்னூலார்கூறிய பத்தழகினுள்ளும் நூற்குரிய இலக்கணமாகிய முறையின்வைப்பொன்றொழிய வனைய சொற்சுவை பொருட்சுவைகளைப் பயப்பனவாதல், அவற்றிற்குக் கூறிய உதாரணங்களை நோக்கியுணர்ந்துகொள்க. இவ்வழகமைய இயற்றும் உரைகளும் செய்யுள்களுமே செந்தமிழ்க்குத் தீஞ்சுவைபயப்பனவாகும். உரைநடைப் பயிற்சி அக்காலத் தின்று எனினும், தொல்காப்பியர்,

"பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
பாவின் றெழுந்த கிளவி யானும்
பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானுமென்
றுரைவகை நடையே நான்கென மொழிப"

எனக் கூறியவற்றுள், பாட்டிடைவைத்த குறிப்பினானும், பாவின்றெழுந்த கிளவியானும், வழங்கும் உரைநடைகளானே உரைநடைகளின் போக்கு நாமுணரக்கிடக்கின்றது. அவற்றுள், பாவின்றெழுந்தகிளவிகளுள், களவியலுரை சேனாவரையருரை பரிமேலழகருரை முதலியன மிகவுந் தீஞ்சுவைபயப்பனவாகும். களவியலுரையுட் சில வாக்கியத் தொடரை அதன் போக்குணர்தற்காக இங்கே காட்டுதும்.

அவை, "விசும்பு துடைத்துப் பசும்பொன் பூத்து, வண்டு துவைப்பத் தண்டேன் றுளிப்பதோர் வெறியுறு நறுமலர் வேங்கை கண்டாள், கண்டு பெரிதோர் காதல்கூர்ந்து தன் செம்மலர்ச்சீறடிமேற் சிலம்பு கிடந்து சிலம்புடைப்ப அமராலணிக்கெம்பர் நடைகற்பதென நடந்து சென்று, நறைவிரிவேங்கை நண்மலர்கொய்தாள்" என்பன.

இவ்வாறு எதுகைத்தொடை, மோனைத்தொடைமுதலியனவமையவும், பத்தழகவாய்ப்பவும் உரையியற்றுவோர் இக்காலத்து மிக அரியர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் இயற்றிய வசனநூல்கள் பத்தழகும் வாய்ந்து செந்தமிழ்க்கு மிகவுந் தீஞ்சுவைபயப்பனவேயாம். செய்யுளியற்றியவர்களுள், சங்கச்சான்றோர்களும் சங்கத்தாரகேறிய நூலாசிரியர்களும், கம்பர், கல்லாடர், கச்சியப்பசிவாசாரியர், சேக்கிழார்

முதலியோரும் மிகச்சிறந்தவர்கள். சங்கச்சான்றோர்கள்கவிகள்யாவும் பொருள்களின இயற்கைகளைக்கூறுவதில் மிகவு மின்பம்பயப்பன: ஏனையோர்கவி அதனோடு கற்பனைகளாலும் மிகவும் இன்பம் பயப்பன வாகும். கற்பனையாலின்பம்பயப்பதற்குக் கல்லாடர்கவியுட் சிலகாட்டி முடிக்குதும்.

> "முலையென விரண்டு மூட்குவடு மரீஇக்
> குழற்காடு சுமந்த யானைமகட் புணாநதோய்"

என்னு மடிகளைநோக்குமிடத்துக் குவடுமருவலும் காடுசுமத்தலும் யானைக்கு முண்மையின் அவ்வியல்புதோன்ற, "முலையென விரண்டு மூட்குவடுமரீஇ—குழற்காடுசுமந்தயானைமக"ளென வைத்த வைப்பும்,

> "செங்கட் குறவர் கருங்காட்டு வளர்த்த
> பைங்கொடி வள்ளி படர்ந்த புயமலையோய்"

என்னுமடிகளில் வள்ளிக்கொடி குறவர்களால்வளர்க்கப்பட்டு, மலைகளிற் படர்வனவாதலின, அவ்வியல்புதோன்றச் "செங்கட்குறவர் கருங்காட்டு வளர்த்த, பைங்கொடிய வள்ளிபடர்ந்த புயமலை"என்று வைத்தவைப்பும் நோக்குமிடத்துச் செந்தமிழ்த்தீஞ்சுவைகளை உணரும்வன்மையுடையார்க்கு அவருள்ளத் தென்றுநீங்காதுகிடந்து இன்பம்பயவாதொழியா.

இவ்வாறு, கற்பனைகளாலும், இயற்கையமைப்பாலும் தீஞ்சுவை பயப்பன, கல்லாடர்கவியுட் பலப்பல. அவற்றையெல்லாம் அறிஞர் நோக்கியுணர்வாராக. இங்ஙனம் கவியியற்றவல்லோரும் இக்காலத்து மிக அரியர். அதன்காரணம் பிறவுளவேனும் செந்தமிழைப் பரிபாலிப்பாரும் சன்மானிப்பாரும் இன்மையே முதலாகவுள்ளது. ஆகையால் அதனையுணர்ந்து செந்தமிழைப் பரிபாலித்தும் சனமானித்தும் மதுரைத்தமிழ்ச்சங்கம் நீடூழி வாழ்வதாக.

இதுகாறுங்கூறியவாற்றானே செந்தமிழாவது சங்கப்புலவர்களாலாராய்ந்து செம்மைசெய்யப்பட்டதென்பதூஉம், செந்தமிழ்நாடு பாண்டிநாடேயென்பதூஉம், செந்தமிழ்க்குத் தீஞ்சுவை இயற்கை என்பதூஉம், சுவை சொற்சுவை, பொருட்சுவை என இரண்டுவகைப்படு மென்பதூஉம், நன்னூலார்கூறிய பத்தழகினுள்ளே சுருங்கச்சொல்லல் முதலிய ஐந்தும் சொற்சுவை பயப்பனவென்பதூஉம், ஏனைய பொருட்சுவை பயப்பன வென்பதூஉம், செந்தமிழ்த் தீஞ்சுவைபயப்ப உரையுஞ்செய்யுளு மியற்றும் வன்மை அக்காலத்தார்க்கன்றி இக்காலத்தார்க்கரிதென்பதூஉம், அதன்காரணம் செந்தமிழைப்பரிபாலிப்பாரும் சன்மானிப்பாரும் இல்லாமையேயென்பதூஉம், நம் சங்கத்தார் இன்னும் அவற்றின் அதிகம் முயல்வார்கள் என்பதூஉம் உணரக்கிடத்தல்காண்க.

இங்ஙனம்,

சி. கணேசையர், புன்னாலைக்கட்டுவன்.

சூரியசந்திரோற்பத்தி.

(௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

[படலத் துட்பிரிவாகிய அதிகாரப்பெயரைத் தலைப்பெயராகத் தந்தனம்; நூற்பெயரும் படலவகையும் முகவுரைக்கண்ணே தந்துரைக்கப்பட்டனவாகலின். இனிமேல்வரும் "மேற்றிசைச்செல்வப்" பொருளுரை வகைக்கும் இஃதொக்கும்.]

7. புதனுலகம் (Mercury), சுக்கிரனுலகம் (Venus), பூவுலகம் (Earth), செவ்வாயுலகம் (Mars), வியாழவுலகம் (Jupitor), சனியுலகம் (Saturn), குபேரனுலகம் (Uranus), வருணனுலகம் (Neptune), ஆகிய கிரகங்களும், உபக்ரகங்களாகிய சந்திரர்களும் இவையனைத்தினுக்கும் ஆதாரமாய் நடுவினின்ற சூரியனும் பலவூழிக்காலங்களுக்கு முன்பாக ஒருதனிப்பழற்பிழம்பாகவிருந்தனவாமெனவும், பின்னர்ப் பிரிவுண்டு தம்மிற்றாம் (பம்பரம்போலச்) சுழலுவதோடு, கிரகங்கள் சூரியனையும் உபக்ரகங்கள் முதற்கிரகங்களையும் சுற்றிவருகின்றனவாமெனவுங் கண்டாம். இனி இவற்றின் இடைவெளித்தூரவெல்லை, சுழற்சிக் காலவெல்லை, சுற்றோட்டக்கால எல்லை, பரிமாணம் என்னும் இவற்றைத் தந்து அப்பாற்செல்வாம். பூவுலகத்தின் சுழற்சிக்காலவெல்லையாகிய நாளை மானமாகக்கொண்டு ஏனைய காலவெல்லைகளைக் கணக்கிடுதல் நன்று. தூரவெல்லையைக் கணக்கிடுவதற்குச் சந்திரனுக்கும் பூவுலகத்துக்கும் இடையில் ஏற்படுகிற இடைவெளித்தூரமாகிய இரண்டிலக்ஷத்து நாற்பத்தெண்ணாயிரம் மைல் தூரத்தை அளவுகோலாகக் கொண்டு அதனைச் சந்திரபதமெனப் பெயரிட்டு வழங்குவாம். [சந்திரபூவுலக இடைவெளிப் பேரெல்லை இரண்டிலக்ஷத்து ஐம்பத்து மூவாயிரம்; சிற்றெல்லை இரண்டிலக்ஷத்திருபத்தீராயிரம் மைலாகும்]: சூரியனுக்கும் பூவுலகுக்கும் இடைவெளித்தூரவெல்லை மூந்நூற்றெழுபத்தைந்து சந்திரபதமாகும். ஒன்பதுகோடியேழுப்பதிலக்ஷம் மைல் என்பதனினும் பார்க்க மூந்நூற்றெழுபத்தைந்து சந்திரபதமென்பது வாய்ப்புடைத்து; பேரிலக்கங்களை உள்ளம் நன்கு பற்றிக்கொள்ளமாட்டாதாகலின்.

8. இது விஞ்ஞானநூலாதலின், தூரவெல்லை காலவெல்லை முதலியவற்றைக் கணித்தறிந்த தெய்வப்புலவரைக் காட்டுதல்வேண்டும். இதனை முற்றுக ஆராய்வதற்கு நுண்ணியற் கணிதமுறைகள் பல வேண்டப்படுவன; அத்தகைய முறைகளைக்கூறும் நூல்கள் தமிழ்மொழியிலில்லாதிருக்கின்றமையால் இயன்றவரை சுருக்கமாகக் காட்டுவாம். வானமண்டலத்தில் மேற்சொல்லப்பட்ட கிரகங்களின் சலனங்களைக் கண்கூடாகவாவது தூரதிருஷ்டிக் கண்ணாடிமூலமாகவாவது பார்த்து மதிப்பிட்டுச் சுற்றோட்டக் காலவெல்லையைக் கண்டறியலாகும். இங்ஙனங் கண்டறிந்த சுற்றோட்டக்காலவெல்லைகளாவன :—புதனுலகம் 88 நாள், சுக்கிரனுலகம் 224½ நாள், பூவுலகம் 365¼ நாள், செவ்வாயுலகம் 780 நாள், வியாழவுலகம் 4333 நாள் (ஏறக்குறைய 12 வருஷம்), சனியுலகம் 10759 நாள் (ஏறக்குறைய 29½ வருஷம்), குபேரனுலகம் 30687 நாள் (ஏறக்குறைய 84 வருஷம்), வருணனுலகம் 60181 நாள் (ஏறக்குறைய 165 வருஷம்). சுற்றோட்டவட்டத்தின்பாகத்துக்கு இத்தனைநாட் செல்லுகிறதென்பதைக் கண்கூடாகவாவது தூரதிருஷ்டிக்கண்ணாடிமூலமாகவாவது நேரிற்கண்டு முழுவட்டத்துக்கு இத்தனைநாளாகும் என்பதைக் கணித்தறிவது.

9. இடைவெளித்தூரவெல்லையை யறிவதற்குக் கணிதநூலிற் கண்டமுடிபு வருமாறு:—சுற்றோட்டதினத்தை வர்க்கிக்க; (வர்க்கித்தலாவது ஒரு எண்ணைவைத்து அதனையேகொண்டு பெருக்கித் தொகை காண்பது. உதாரணமாக ஏழினது வர்க்கம் நாற்பத்தொன்பது). அங்ஙனம் வர்க்கித்துக் கண்டதொகையினது கனமூலத்தைக் கண்டெழுதுக; (கனங்காணுதலாவது ஒருஎண்ணைவைத்து அதனையே கொண்டு பெருக்கிவந்ததொகையை மீண்டுமொருமுறை பெருக்கிக்காண்பது; உதாரணமாக இரண்டின்கனம் எட்டு, மூன்றின்கனம்இருபத்தேழு. இனி இருபத்தேழின்கனமூலம் மூன்று; எட்டின்கனமூலம் இரண்டு என்று அறிவது. எந்த எண்ணுக்குங் கனமூலங் காணுகிறமுறையைக் கணிதநூல்களிற் காண்க). இங்ஙனங்கண்ட கனமூலங்களை இடைவெளியெண் என ஒருபடியாக எழுதுக. சுக்கிரசூரியசமாகமகாலத்திற் குறிப்பிட்ட சில முடிபுகளைக்கொண்டு சுக்கிர சூரிய இடைவெளித்தூரம் ஆறுகோடியே எழுபதிலக்ஷம்மைல் அதாவது இருநூற்றெழுபது சந்திரபதம் எனக்

கணிக்கப்பட்டது. இதனைப் புதனுக்குரிய இடைவெளியெண்ணினாற் பெருக்கிச் சுக்கிரனது இடைவெளியெண்ணினாற் பிரிக்கவருவது புதனுடையஇடைவெளித்தூரமாகும். அவ்வண்ணமே சுக்கிரனிடைவெளித்தூரத்தைச் செவ்வாயினது இடைவெளியெண்ணினாற்பெருக்கிச் சுக்கிரனிடைவெளி யெண்ணினாற் பிரிக்கவருவது செவ்வாயினது இடைவெளித்தூரம்; ஏனையவற்றுக்கும் இவ்வாறாகும். (செவ்வாய், வியாழத்துக்கு வேறுசில நுண்ணியற் கணிதக்கிரியைகளுஞ் செய்தல்வேண்டும்) இங்ஙனம் கணித்துப்பெற்ற இடைவெளித்தூரவெல்லைகள், அதாவது சூரியனுக்கும் குறிக்கப்பட்ட கிரகங்களுக்கும் இடையேயுள்ள தூரவெல்லைகளாவன:—புதன் 145 சந்திரபதம், சுக்கிரன் 270 ச. ப., பூவுலகம் 375 ச.ப., செவ்வாய் 573 ச.ப., வியாழம் 3577 ச. ப., குபேரனுலகு 7098 ச. ப., வருணனுலகு 11274 ச. ப. சந்திரபதத்தை வைத்து நாலிற்பெருக்கி மூன்றில்வகுக்கவருவது ஒளியெண்ணெனப்படும். இவ்வெண் சூரியனுடைய ஒளி குறிக்கப்பட்ட கிரகத்தை சென்று சேர்வதற்கு இத்தனை "செகன்ட்" ஆகும் என்பதனைக் காட்டுவது. பூவுலக ஒளியெண் 500, ஆதலால், சூரியனுடைய ஒளி பூவுலகிற் சென்றுசேர 500 "செக்கன்ட்" கழியும் என்பது. இத்தொகையை 24-ல் வகுத்து விநாடியாக்கலாம். ஒளியினது வேகம் ஒரு செக்கண்டுக்கு ஒரு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல் ஆதலால் ஒளியெண்ணை வைத்து ஒரு லக்ஷத்துஎண்பத்தாறுயிரத்தாற் பெருக்கி இடைவெளித்தூரம் இத்தனை மைல் என்று சொல்லுதல் கூடும்.

10. சுழற்சிக்காலவெல்லை தூரதிருஷ்டிக்கண்ணாடியால் நேரிற் கண்டறிவது; புதனுடைய சுழற்சிக்காலவெல்லை அளந்தறியப்படவில்லை. இது பூவுலக சு. கா. எல்லையினின்று மிக வேறுபட்டதன்றென ஊகிக்க இடமுண்டு. சுக்கிரன் சு. கா. எ. 23 மணி. 21 மினிற். செவ்வாய் சு. கா. எ. 24 மணி, 37 மினிற் 23 செக்கன்ட். வியாழவுலகின் சு.கா.எ. 9 மணி 55 மினிற், சனியுலகின் சு. கா. எ. 10 மணி 14 மினிற் 24 செக்கன்ட். குபேரனுலகு வருணனுலகின் சுழற்சிக்காலவெல்லை அளந்தறியப்படவில்லை. கிரகங்களும் உபக்ரகங்களும் சூரியனும் உடுக்கணங்களும் கோளவடிவின. கோளத்தினது விட்டத்தையறியின் அதன் மேற்பரப்பு, கனம் முதலியவற்றைக் கணிதநூன்முறையாகக் கண்டறிதல்கூடும், புதனுலகவிட்டம் 2990 மைல், சுக்கிரனுலகவிட்டம்

7600 மைல், பூவுலகவிட்டம் 7900 மைல், செவ்வாயுலகவிட்டம் 4200 மைல், வியாழவுலகவிட்டம் 87000 மைல், சனியுலகவிட்டம் 73000 மைல், குபேரனுலகவிட்டம் 32000 மைல், வருணனுலகவிட்டம் 35000 மைல், பூவுலகத்துக்கு உபக்கிரகமாகிய சந்திரன் ஒன்று, செவ்வாய்க்குச் சந்திரர் இரண்டு, வியாழனுக்கு நான்கு, சனிக்கு எட்டு, குபேரனுலகத்துக்கு இரண்டு, வருணனுலகத்துக்கு ஒன்று. நமது சந்திரனது விட்டமளவு 2160 மைல், இவையெல்லாம் தூரதிருஷ்டிக்கண்ணாடியால் நேரில் விளங்கக் கண்டமுடிபுகள்.

11. கிரகங்கள் சிலவற்றையும் நக்ஷத்திரவருக்கங்களும் விலங்கினங்களும் மக்களும் வசித்தல்கூடியவென அளவைநூல்வல்லார் ஊகிக்கின்றார்கள். நாம் வசிக்கும் பூவுலகும் ஏனைய கிரகங்களைப்போன்றதொருகிரகமேயாதலினால், இத்தன்மையோர்கள் பல ஏனையகிரகங்களிலும் உள என்பதற்கு ஐயப்பாடில்லை. செவ்வாயுலகிலுள்ளாரோடு வசனிப்பதற்குவேண்டிய கருவிகள் சிலவற்றை மேற்றிசையறிஞர்கள் மிகமுயன்று அமைத்துவருகின்றார்களாம். தோற்றமுறையிற் செவ்வாய் பூவுலகத்துக்கு முன்பு உண்டாயது. நமக்கு மிகவும் அணித்தாயுள்ள சுக்கிரனுலகம் அளவு முதலியவற்றாற் பெரிதும் பூவுலகத்தை நிகர்த்ததாகும். செவ்வாயுலகு சுக்கிரனுலகிலிருப்பவருக்கு நமது பூவுலகம் காட்சிக்கினிய அழகிய சிறிய நக்ஷத்திரமாகத்தோன்றும். புதனுலகு சூரியனுக்கு மிகவும் அணித்தாயிருத்தலினாலே ஆங்குள்ள சீவர்கள் மிகுந்த வெப்பநிலையைத் தாங்கத்தக்கவர்களா யிருத்தல்வேண்டும்.

12. உலகுகளனைத்தும் ஐம்பெரும்பூதக்கலப்பினாலமைந்தனவென முன்னமே சொன்னோம். இனி மண், நீர், தீ, வளியாகிய நான்கு பூதங்களும் வானினின்று தோற்றியவாமெனவும், ஊழியிறுதியில் இவை யாவும் நிலனாய் ஒடுங்கி, அதன்பின் பசும்பொனுலகமும் மண்ணும் பாழ்பட்ட நிலையில் வானாகி ஒடுங்குவனவாமெனவும் விஞ்ஞானநூன் முறைப்படியறிந்தனம்; மேல் எடுத்துக்காட்டிய பரிபாடல் விசும்பு கெட்ட நிலைமையும் உண்டென்று கூறுகின்றதே; இக்கூற்றுக்கு மேலைத்தேசநூலாசிரியர்களது ஆராய்ச்சியின்பாலவாகிய ஆதாரங்கள் உளவோவெனவிசாரிப்பின் உள என்போம்; ஆயினும், அம்முடிபுகளை முறைப்படி தாபித்துக்காட்டுவதற்கு நுண்ணியற் கணிதமுறைகள் பல வேண்டப்

படுவவாதலால், சிலஆதாரங்களைக்காட்டி ஒருவகையாக முடிபுசெய்வாம். பதார்த்தவியல்பினை ஆராய்ந்த மேற்றிசையாசிரியர்கள் சடப்பொருளனைத்தும் அணுக்களாலமைந்தனவென முடிபுசெய்தார்கள். நீர் என்னும் பொருள் தனிப்பொருளன்று; அணரி (Hydrogen), மதி (Oxygen) என்னும் இருவகையணுக்களாலமைந்ததாமென்றும், மாம், சீனி, மா (starch) என்னும் இவை கரி (carbon), அணரி, மதி என்னும் மூவகை அணுக்கள் வேறு வேறு அளவிற்சேரக்கூடிய கூட்டப்பொருட்களாமெனவும், பொன், வெள்ளி போன்றன தனிப்பொருட்களாமெனவும் இரசாயன முறைப்படி ஆராய்ந்து கண்டார்கள். இங்ஙனங் கண்டறிந்த தனிப்பொருள்கள் எண்பதிற்றுச்சில்வானமாம். பிரபஞ்சத்திலுள்ள பொருள்களனைத்தும் இந்த எண்பதிற்றுச்சில்வானத் தனிப்பொருள்களுள் ஒன்றோ பலவோ கூடியாயினவெனவும், இப்பொருள்கள் பரமாணுக்களால் (atoms) அமைந்தனவாமெனவும், ஒருபொருளின் பரமாணு மற்றொருபொருளின் பரமாணு ஆகாதெனவும் சில ஆண்டுகளின்முன் மேற்றிசையறிஞர்கள், தீர்ப்பிட்டார்கள். பின்னரிற் சோதி, (றேடியம், Radium) என்னும் உலோகப்பொருளை யாராய்ந்து கண்ட முடிபினாலே பரமாணுக்கள் அனைத்தும் தம்மினும் நுண்ணியவாய மின்னுரு (Electrous) க்களால் அமைந்தனவாமென நிச்சயித்தார்கள்; நிச்சயிக்கவே ஒருவகைப் பரமாணு மற்றொருவகைப் பரமாணு ஆதல்கூடும் எனவும், பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப்பொருளும் மின்னுருக்களா லாயினவெனவும் புதிதாக ஒரு உண்மை புலப்பட்டது. அங்ஙனம் புலப்பட்டபின் விஞ்ஞானநூலாசிரியர்களும் கணிதநூலாசிரியர்களும் ஒருங்குசேர்ந்து மின்னுருக்களின் இயல்பு பரிமாணம் முதலியவற்றை நுண்ணியமுறைகளா லாராய்ந்தார்கள்; அவ் வாராய்ச்சியின் பயனாக மின்னுருக்கள் நிறையுடைய சடப்பொருள்களன்று எனவும், அவை சுழற்சிவேகத்தினால் நிறையுடையனவாகத் தோற்றுகின்றன எனவும், அகிலலோகங்களினும் பரந்திருக்கிற வான் (Ether) என்னும் பூதத்தில் நீர்ச்சுழிபோன்று நிலைபெற்றிருக்கும் இயல்பின இம்மின்னுருக்கள் எனவுங் கண்டார்கள். காணவே பொருள் எனப்படுவது வான் (Ether) ஒன்றுமாத்திரமேயெனவும், ஏனைய அதனது பரிணாமத்தோற்றங்களேயா மெனவும் புலப்பட்டது. அதன்மேற் கணிதமுறையினால் வானின் இயல்பை யாராய்ந்தார்கள். விஞ்ஞானநூலினும்

கணிதநூலினும் வல்லவரும் உலகெங்கும்பரம்பிய இசைமலிந்த புலமையாளருமாகிய ஜெர்மனிதேசத்தாசிரியர் எயின்ஸ்டயின் (Einstein) என்பவர் நுண்ணிய கணிதமுறையாக ஆராய்ந்து கண்ட முடிபினால் வான (Ether) வெறுவெளியின் (space) இயல்பினதா மெனவும், காண்போர் உள்ளத்தே நிலவுவதன்றித் தனக்கென ஒரு பொருட்டன்மையில்லாததாமெனவும் நிறுவினர். (இவ்வாசிரியர் தாபித்த "The Principle of Relativity" என்னும் விஷயத்தைப்பற்றி வேதாந்த கேசரி யென்னும் ஆங்கிலப்பத்திரிகையில் நாம் எழுதிய வியாசத்தை நோக்குக) இங்ஙனம் நிறுவப்படவே புறப்பூதங்கள் அனைத்தும் பொய்த்தோற்றமாமென்னும் உண்மை விஞ்ஞானநூற்படி நிறுவப் பட்டது.

13. இங்ஙனம் நிறுவப்பட்ட முடிபினை ஆதாரமாகக்கொண்டு மேற்றிசை விஞ்ஞானசாஸ்திரிகளுட் சிலர் சூனியவாதம்பேசத் தலைப் பட்டார்கள். இன்னோர் சிறிது ஆழ்ந்து சிந்திப்பாராயின் புறப்பொருளை அநித்தியப்பொருளென்றுகண்ட நாம் அவற்றின் வேறாய நித்தியப் பொருளாமெனவும் தூல பூதங்களுக்குக்காரணமாய சூட்சுமபூதங்கள் தமது ஞானேந்திரியங்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமேயாம் என்பதையும் அறிந்துகொள்வார். பஞ்சபூதங் களைக்குறிக்கிற சொற்கள் அதிதூலம், தூலம், சூட்சுமம் ஆகிய மூன்று நிலையில் மூவேறு பொருளினைப் பெறுவன. மண் என்பது மணல் முதலிய பொருள்களையும் (Earth), கடினத்தன்மையையும் (solid), நாற்றமூலத்தையும் (smell-potential) குறிப்பதாகும். நீர் முதலிய பொருள்களும் (Water), திரவத்தன்மையும், சுவை மூலமும் (Taste-potential), நீரெனப்படுவ. நெருப்புமுதலிய பொருள்களும் (Fire), திரவத்தன்மைக்கும் வாயுத்தன்மைக்கும் இடையே நிற்கும் ஆவித்தன்மையும் (Vapour), ஒளிமூலமும் (Sight-potential) தீயெனப்படுவ. காற்றுமுதலிய பொருள்களும் (Air), வாயுத்தன்மையும் (Gas), பரிச மூலமும் (Touch-potential) வளியெனப்படுவ. மின்னணுக்களும் (Electron), அகலிடமும் (Ether. space), ஓசைமூலமும் (sound-potential), வான் எனப்படுவ. இங்ஙனம் ஆராயும்வழித் தோற்றப் பொருள்களனைத்தும் மகாஆகாசமாகிய பூதாகாசத்திலிருந்து தோற்றிய

வாமெனவும், பூதாகாசம் மனத்தின் சார்பாகிய சித்தாகாசத்திலிருந்து தோற்றியதெனவு மறியக்கிடக்கின்றது. சித்தாகாசத்துக்கு மூலமாகிய சிதாகாசம் ஒன்றுஉண்டெனச் சாந்தோக்கியம் முதலிய சுருதிவாயிலாக அறிவோம். ஈண்டைக் காராய்ச்சியின்மையின் விரிக்காது விடுகின்றோம், ஆயினும் ஒரு குறிப்புமாத்திரஞ் சொல்லிமுடிப்பாம்.

14. திருவுடையாளொருநங்கையைப்பார்த்து என்பும் இறைச்சியும் உதிரமுந் தோலும் என்னும் இவற்றாலமைந்தது இவ்வுருவம் என்று சொல்வது பூரணவியல்புகூறிய முடிபுரையாகாது. அங்ஙனமே, மணந்தார்க்கு இன்பினையுந் தணந்தார்க்குத் துன்பினையுந் தாவல்லதாய் நீல ஆகாயத்தில் அழகுபொருந்திய வெள்ளி வெண்கலசம்போலத் தோற்றிக் காடுங்கரையும் நீரும்நிலனும் வனப்புமிக்கொளிர மனக்கு வப்பளிக்குந் தண்மதியை மண்ணுங்கல்லும்பொருந்தி விண்ணின்று சுழலும் ஒளியிலாக் கோளமெனவும், குமுதங்குவியவும் கமலம்மலரவுங் குணதிசையுதித்துக் கதிரொளிபாப்பிக் குவியிருளகற்றும் பரிதியங் கடவுளை உணர்விலா அக்கினிக்கோளமெனவும் விஞ்ஞானவாதிகள் உரைத்தாங்கு உரைத்தல் பூரணவியல்புகூறிய முடிபுரையாகாது. மகாகாசத்திற் பரிதி, மதி, குரு, புகர், சனி, பூமகன், மதிமகன் என்னுங் கோள்களுக்கும் நமது உடலத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு, மேலேகாட்டியவாறுபோல் இவையும் பூவுலகமும் ஒரு பிழம்பாயிருந்து பிரிவுண்டனவாதலின். இனிச் சித்தாகாசத்தில் எமது உள்ளங்களுக்கும் கோள்களின். தனைமைகளுக்குந் தொடர்புண்டு; எம்முயிர்க்குயிராகிய இறைவனே யாண்டும் பரந்திருக்கிறானாதலால், சிதாகாசத்திலுந் தொடர்புண்டு என்பது. சூரிய சந்திரோற்பத்தியைச் சுருக்கமாகக்கூறிமுடித்தாம்; மேல்வரும் அதிகாரத்தில் மலைகடலுற்பத்திகூறுவாம்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
மயிலாப்பூர், சென்னை.

பிரபோதசைதந்யர்.

புத்தக மதிப்புரை.

I. பிரபந்தத்திரட்டு:—இது, திருவருட்பிரகாசவள்ளலார் என்னும் சிதம்பரம் ஸ்ரீமத். இராமலிங்கசுவாமிகள்மீது ச. மு. கந்தசாமிப்பிள்ளையவர்களால் இயற்றப்பட்டது. இதில், சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் சரித்திரக்குறிப்புடன் சற்குருவெண்பாவந்தாதி முதலிய சில பிரபந்தங்களடங்கியுள்ளன. இப்புத்தகத்தால் வள்ளலார்தம் அற்புதச் செயல்களும் ஞானசீலாதிகளும் நன்குவிளங்குவதோடு அவரிடத்து ஆக்கியோர்க்குள்ள பேரன்புடைமையும் நன்குபுலப்படும். இப்புத்தகம் அச்சிடுவதற்குப் பொருளுதவிபுரிந்த இராமசந்திரபுரம் ஸ்ரீமான் தி. நா. முத்தையாசெட்டியாரவர்களது வித்வதபிமானம் பாராட்டத்தக்கது. இதன் விலை ரூபா இரண்டு. இப்புத்தகம விலைக்குக் கிடைக்குமிடங்கள்:—(1) காரைப்பட்டு ஸ்ரீமத் ச. மு. கந்தசாமிப்பிள்ளையவர்கள், நல்லாத்தூர்ப்போஸ்டு, புதுச்சேரி பார்க்கம். (2) S. P. ராஜாராம், லைன் ஆப் இந்தியா பிரஸ், கூனி, வேப்பேரி போஸ்டு, சென்னை என்பன.

II. தோத்திரக்கோவை:—(முதற்பாகம்) இது, மட்டுநகர்வித்துவான் ஸ்ரீமத் ச. பூபாலபிள்ளையவர்களியற்றிய கணேசர் கலிவெண்பா முதலிய பத்துப்பிரபந்தங்கள் அடங்கியது. இதனால் ஆக்கியோரது தெய்வபக்தியும் கல்வித்திறனும் நன்குவிளங்கும். இவர்கள்செய்த பிரபந்தங்கள் இன்னுஞ் சிலவுள. இவர்கள் தமிழ்ச்சுவைநுகர்விற் பொழுது போக்குதல் பாராட்டத்தக்கது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், 20, காரணீசுவரர்கோயில்வீதி, மயிலாப்பூர், சென்னை என்றவிலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

III. ஸ்ரீ மாதவச்சிவஞானசுவாமிகள் பிள்ளைத்தமிழ் — இது திருவொற்றூர் ஸ்ரீமத். திருஞானசம்பந்தமுதலியாரால் முன்னைந்து பருவமும், ஆலங்காடு ஸ்ரீமத். வை. செல்லையாசெட்டியாரால் பின்னைந்து பருவமும் நல்ல பாடல்களாகப் பாடப்பெற்றிருக்கிறது.

VI. ஞானமிர்தக்கட்டளை.—இது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும் வெளியிடப்பெற்றது. இதிற் சைவசித்தாந்த தத்துவங்களும் ஸம்பிரதாய முடிபுகளும் அறிய விரும்புவோர் எளிதிற் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையி லெழுதிப் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. இதன்விலை அணு 4. வேண்டுவோர் மேற்படி கழகத் துக் கெழுதிப் பெறலாம்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோத்காரி- ஹூ சித்திரை-மீ [பகுதி சு.
Vol. XXI. April–May–1923. No. 6.

புறநானூறு.

(இரண்டாம்பதிப்பு.)

இந்நூலின்பெருமையையும், உரையின்பெருமையையும், அவற்றைப் பரிசோதித்து அச்சிற் பதிப்பித்துதவிய ஸ்ரீமாந். மஹாமஹோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களுடைய ஒப்புயர்வற்ற கல்வியறி வூக்க முழைப்புக்களையும் அறிந்தவர்கள் இப்பதிப்பின்மதிப்பைத் துதிப்பொருட்டாகக்கொள்ளார்களென் றெண்ணுகிறேன். ஐயரவர்களால் இந்நூல் இற்றைக்குச் சற்றேறத்தாழ முப்பதுவருடங்கட்கு முன்னமே அரிதிற் பரிசோதித் தச்சிடப்பட்டு முதற்பதிப்பாக வெளிப்பட்டிருந்தது. அதைப்படித்தவர்களுக்கெல்லாம், ஐயரவர்கள் கல்வியறிவாராய்ச்சிகளின்பயனை உலகுக் குபகரித்திருப்பது அதிசயிக்கத்தக்கதாயிற்று. அதன்பிறகு இதுகாறும் முப்பதுவருடகாலங்களாகப் பழைய அருந்தமி ழிலக்கிய இலக்கணநூல்களை யச்சிடுதற்கு ஆராய்ந்துபோந்தறிந்த பலவிடயங்களாலும், பழைய உரைகளிற்கண்ட மேற்கோட்காட்சிகளாலும், பின்புகிடைத்த மூலமும் உரையும் அடங்கிய சிலபிரதிகளாலும் பல திருத்தப்பாடுற்று இவ் விரண்டாம்பதிப்புப் பதிக்கப்பட்டிருக்கிறது.

இதிற் பாடினோர்வரலாறுகளும், பாடப்பட்டோர்வரலாறுகளும் முற்பதிப்பிலுள்ள விஷயங்களோடு பலநூல்களின் ஆராய்ச்சியாலும், விசாரணையாலும் பின்பறிந்த பலவிஷயங்களும் சேர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. அவை பெரும்பாலும் பழையதமிழரசர் புலவர் சரித்திரங்களைக் காலக்கிரமமாக முறைப்படுத்தி யெழுதவிரும்புமவர்களுக்கும் பிறர்க்கும் மிகவும் பயன்படத்தக்கன.

இந்நூலுள்வழங்கிய பொருள்வகைகள் பலவும் எளிதி லறிந்துகொள்ளும்படி விசேடக்குறிப் பெழுதிச்சேர்த்திருப்பதோடு, பாட்டின் முதற்குறிப்பகராதியும், அரும்பதமுதலியவற்றின் அகராதியும் எழுதிச் சேர்த்திருப்பதால் இந்நூலிலுள்ள சொற்களையும் பொருள்களையும் விஷயங்களையுங் கொண்டு அவை பயின்ற பாடல்களைக் காண்பது சுலபமாயிருக்கிறது.

அன்றியும், பாட்டுக்களிலும் உரைகளிலு முள்ள பதப்பிரயோக முதலிய விஷயங்களுக்குப் பிற பலநூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டியிருக்கும் கீழ்க்குறிப்புக்களைப் பார்க்குந்தோறும், ஒருவ ராயுள்ளவும் பலநூல்களையும் படித்தாலும் அறிந்துகொள்ளமுடியாத பல விஷயங்களையும் எளிதி லறிந்துகொள்ளும்படி செய்திருக்கும் ஐயரவர்களது பேருபகாரம் தமிழறிஞரால் அதிசயிக்கத்தக்கதே.

அன்றியும், உரையில்லாதிருந்த பாடல்களுக்கு இப்பதிப்பிற் குறிப்புரையெழுதிச் சேர்த்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்கது.

ஐயரவர்கள் இவ்வாறு தமிழுக் குழைத்துவருவதனால், குற்றுயிரும் குறையுடலுமா யிறந்துபடுநிலையிற்கிடந்த பழந்தமிழ்நூல்கள் ஒன்றன்பின்னொன்றாக வுயிர்த்தெழுந் துலவுகின்றன. தமிழ்நூல் படிப்பவர்க்கு இதுகாறும் பதிப்பிப்போர் செய்யாத பல சௌகரியங்களையும் ஐயரவர்கள்பதிப்பிற் செய்துகொடுத்திருப்பது அருமைபாராட்டத் தக்கது. அவர்கள் நம் தமிழுலகின் பாக்கியமாயிருந்து பலநன்மைகளைப் புரிந்துவருகிறார்கள் என்றாலும், அந் நன்மையையுணரும் தமிழுலகம் அவர்களுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

இவ்வாறே ஒவ்வொரு தமிழ்ப்பெரும்புலவர்களும் உழைத்து வருவாராயின், இன்னும் பல தமிழ்நூல்க ளிறந்துபடாமற்காக்கலா மென்பதிற் சந்தேகமில்லை. அதற்குப் புலவர்களை ஊக்குவாரும், உப கரிப்பாரும் இல்லையென்று பலர் குறைகூறக்கேட்டிருக்கிறோம். அக் குறை ஐயாவர்களுக்கு முள்ளதே. ஆயினும், அவர்கள் தாம் அரிதிற் பயின்று பெற்ற அருந்தமிழறிவை உலகிற்குபகரிக்கவேண்டி ஊக்கங் கொண்டுழைத்துவருதல்கண்டு, அவர்களுக்குப் பொருட்கவலை சிறிது முண்டாகாதபடி. பலவருடங்களாக உபகரித்துவரும் ஸ்ரீ ஸேதுஸம் ஸ்தானத் தலைவர்களும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராஸனாதி பதிகளும், சென்னைச் சட்டநிரூபணஸபையங்கத்தினர்களுமாகிய இரணியகர்ப்பயாஜி ரவிகுலதிலக முத்துவிஜய ரெகுநாத ராஜராஜேசு வர ஸேதுபதி மஹாராஜா அவர்களுடைய பேருதவி தமிழகத்தால் மிகப் பாராட்டற்பாலது.

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும், பெருமை முயற்சி தரும்" என்ற பொய்யாமொழியை மெய்பாகக்கொண்டொழுகும் ஐயாவர்க ளன்முயற்சிக்குப் பொருண்முதலியவற்றால் முட்டுப்பாடின்றி எண்ணிய கரும மினிதுமுடியுமாறு புண்ணியசீலர்கள் தாமே தண்ணளிபுரிவா ரென் றெண்ணுகிறேன்.

இனிக் கூடியவிரைவில் ஐயாவர்கள் பெருங்கதையை வெளிப் படுத்துவார்களென்று தெரிந்து மிகுந்த ஸந்தோஷமடைகிறோம்.

இவ்வா றொன்றன்மேலொன்றாக அரும்பெரும் பழந்தமிழ்நூல்களை ஆராய்ந்து அச்சிட்டுபகரித்துவரும் ஐயாவர்களுக்கு ஆயுராரோக்கியங் கள் மேன்மேல் வளர்ந்துகொண்டிருக்கும்படி எல்லாம்வல்ல இறைவன் திருவருள்பாலிக்கவேண்டுவோமாக.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

உ

களப்பிரரும் சங்ககாலமும்.

சென்ற துந்துபியாண்டு புரட்டாசித்திங்களில் வெளிவந்த, "செந்தமிழ்"த்தொகுதி ௨௰, பகுதி–11-லும் அதன் முன் வந்த பகுதிகளிலும் மேற்குறித்த தலைப்பெயரோடு, திருவாளர் கே. ஜி. சங்கரன் அவர்களாற் சில கொள்கைகள் நாட்டப்பெற்றிருக்கின்றன; சில கொள்கைகள் வீட்டப்பெற்றிருக்கின்றன ; அவ்வாறு நாட்டப்பெற்றவை நிலை நிற்பனவா? வீட்டப்பெற்றவை நில்லாது வீழ்வனவா? என்பதன்மேற்று இவ்வாராய்ச்சி. இக்கொள்கைகள் வேள்விக்குடிச்செப்பேடுகளிற் சொல்லப்பட்ட பொருள்களை அடியாகக்கொண்டுள்ளன என்பது அத்திருவாளர் எண்ணம்போலும். அவர்க்கும் பிறர்க்குமுள்ள கொள்கைவேறுபாட்டுக்கு அச் செப்பேடுகளிற்சொல்லிய சொற்களின் பொருள்வேறுபாடே காரணமாகலின் அவ்வேறுபட்டபொருட்கிடனாய சொற்களின் உண்மைப் பொருள் யாவையென ஆய்வது முதற்கடனாகும்.

"அளவரிய ஆதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக்
களப்ரனென்னுங் கலியரைசன் கைக்கொண்டதனை இறக்கியபின்"

என்பது செப்பேட்டிலுள்ளபடி. இதில் "ஆதிராசரை" என்பது பாண்டியரை என்றே பொருள்படும். முன் "பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி யென்னும் பாண்டியாதிராசனால்" என்றும், பின்னும் "படுகடன்முளைத்த பருதிபோல பாண்டியாதிராசன் வெளிப்பட்டு" என்றும், "அற்றமில் பரவைத்தானை ஆதிராசன் அவனிசூளாமணி....மாறவர்மன்" என்றும் பாண்டியனுக்கே அப்பெயர் வழங்கப்பட்டிருக்கின்றமையின் "நீக்கி" என்னும் வினைக்கு வினைமுதல் "கலியரைசன்" என்பதேயாம். "களப்ரன் என்னுங் கலியரசன்" என்பதில் "களப்ரன்" எனப்படுவது ஓரரசனின் சிறப்புப்பெயராகாது சோழன் பாண்டியன் என்றாற்போல ஓரரசகுலத்தைக் குறிக்கின்றது. அக்குலத்தின்கொடுமைபற்றிக் "கலியரைசன்" என உருவகப்படுத்தி ஒருமையாற்சொல்லப்பட்டிருப்பினும், பின்

"களப்பிரரால் இறக்கப்பட்டது" எனப் பன்மையாய் வெளிப்படச்சொல்லப் படுதலினால், ஒருவனுக்குமேற்பட்ட பல களப்ர அரசர் அவ் வகலிடத்தை ஆண்டார்களென்பதே துணிவானபொருளாம். அன்றி, ஒரு களப்ர அரசனையே இது குறிக்குமாயின், அவனையே கடுங்கோன் வென்றானு மாயின் அவ்வுண்மை வெளியாகச் செப்பேட்டிற் சொல்லப்பட்டிருக்கும்; அவ்வாறின்றி, "கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கி........பிறர்பா லுரிமை....நீக்கி........மன்ன ரொளிநகரழித்த கடுங்கோன்" எனப் பொது வாகவும் பன்மையாகவும் சொல்லியிருக்கின்றபடியால் ஆதிராசரை அகல நீக்கிய களப்ர அரசனையன்று, அவனுக்குப்பின் வழித்தோன்றியவ ராயினுமாக; பிறர்வழித்தோன்றியவராயினுமாக; பிறரையே கடுங்கோன் வென்றான் என்பதுவே செம்பொருளாகும். இனி, "கைக்கொண்டதனை இறக்கியபின்" என்புழி, "கைக்கொண்டு"என்னும்வினைக்குச் செயப்படு பொருள் "அகலிடம்" என்பதும் "அதனை" என்னுஞ் சுட்டு நீடு அனு பவிக்கப்பட்ட "வேள்விக்குடி என்றப்பதி" என முன்கூறிப்போந்ததை யே சுட்டி நிற்ப தென்பதும், "இறக்கிய" என்ற வினைக்கு வினைமுதல் "கலியரைசன்" என்பதும் நேர்பொருளாக விளங்குகின்றன. "வேள்விக் குடி என்னப்பட்டது........களப்ரால் இறக்கப்பட்டது" என்று பின் (114-ம் வரியில்) வருகின்றமையின் யாம் காட்டிப் போந்ததே செப்பேட் டின் உண்மைக்கருத்தாகும்; மேற்குறித்த முறைவழி சொற்களைச் சேர்த்துக் கருத்தை ஆராயுமிடத்து,

(1) பாண்டியரைநீக்கின களப்ரனையே கடுங்கோன் வென்றான்;

(2) களப்ரனைநீக்கி ஆண்டவன் கடுங்கோன்;

என்று திருவாளர் கெ. ஜி. சங்கரன் அவர்கள் கொண்டமுடிபுகளுக்கு ஆதாரங்காணக் காணேம். இவை ஆதாரமற்றனவைகளாகவே வீழ்வன வாயின.

"பாண்டியரை அகலநீக்கிக் களப்ரகுலத்தினர் அகலிடத்தைக் கைக்கொண்டு வேள்விக்குடிப்பதிந்தானத்தை இறக்கினர்; பின் (ஓர் காலத்து) பாண்டியாதிராசன் வெளிப்பட்டு, கடுங்கோனென்னுங்கதிர் வேற்றென்னன், அவற்குமகனாகிய மாறவர்மன், அவற்குமகனாகிய சேந்தன், அவற்குவழித்தோன்றிய மாறவர்மன், ஷை ஷை ஷை

கூ கூ கோன் னெடுஞ்சடையன், அவன்றன் ராச்சிய வத்சலம் மூன்றாவது செல்லாநிற்ப......களப்ராவிறக்கப்பட்டது என்று விஞ்ஞாப்பஞ் செய்ப" என்று செப்பேட்டின் பொருண்முடிவு நோக்குக.

இதில், "கடுங்கோன்" என்னும் பெயர்க்கு அடுத்து முன்வந்த பாண்டியாதிராசன் என்னுஞ்சொல் அவனைமாத்திரங் குறியாது பாண்டியர்குலத்தைக் குறித்துநிற்பதும் நோக்கத்தக்கது; அல்லாவிடில், சொன்முடிவு பொருந்தாமை அறிக.

(3) "களப்ரன் கைக்கொண்டதை இறக்கியபின் கடுங்கோன் வெளிப்பட்டான் என்றே இருக்கிறது. இறக்கியவன் வேறு என்று குறிக்கப்படாதவரை கடுங்கோனே என்று கொள்வதே செம்பொருளாம்" என்பதும் அத் திருவாளர்முடிபு. (இதிலே இறக்கிய என்னுஞ் சொல்லுக்குச் செப்பேட்டிலில்லாத வேறுபொருள் கொள்ளுகின்றார்.) இறக்கியபின் வெளிப்பட்ட கடுங்கோன் எவ்வாறு அவ் விறக்கியவனாவான்? பகைவனைவென்று அரசு கைப்பற்றுதலாகிய செயலை மறைவிற் செய்துமுடித்துப் பின் வெளிப்பட்டான் என்பரேல் அது இயல்புவிரோதமாகும். "வெளிப்பட்டு" என்றதன்பின்தான் கடுங்கோனின்செயல்கள் கூறப்படுகின்றன. ஆதலின் வெளிப்படாமுன் நிகழ்ந்தசெயல் பிறருடையதென்பது துணியப்படும். "கைக்கொண்டதை இறக்கிய" என்பதற்குத் திருவாளர்கொண்ட பிழைக்கருத்தைத்தான் ஒத்துக்கொண்டாலும் இறக்கியவன் கடுங்கோனுக்குமுன்னுள்ளஒருவனே என்பது செம்பொருளாம். ஆயினும், இச்செப்பேடுகள் நிட்டவேண்டிவந்தகாரணம் வேள்விக்குடிப்பதித்தானத்தைக் களப்ர ரிறக்கியதேயாமாகலின் அவ் விறக்கிய செய்தியைப் பாண்டியர் மீட்டு அரசெய்துமுன் கூறவேண்டியது ஒருதலையாம்; ஆதலால் இச்செய்தியையே அச்சொற்றொடர் கூறும் என யாம் தொடக்கத்திற் சொல்லியதே உண்மைக்கருத்தென்பதும், கடுங்கோனே இறக்கியவனென்று படைத்துச்சொல்லுதல் மிகவுங் கோடியபொருள் என்பதும் விளங்குகின்றது. திருவாளருடைய மேற்காட்டிய மூன்று முடிபுகளும் இவ்வாறு பிழைபடவே பல்பாகமுதுகுடுமிப்பெருவழுதிக்கும் களப்ரனுக்கும் கடுங்கோனுக்கும் அவர்படைத்துக்கொடுத்த காலவரையறை பெரிதும் பிழைபடுவதென்பது சொல்லாமலே விளங்கும்.

(4) திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரால், சைவனாக்கப்பெற்ற பாண்டியன் மாறவர்மனென்றும் கூறுகின்றார். அவ்வாறு கூறுதற்கு ஏதுக்கள் யாவையென்று சொன்னாரல்லர்; ஒருதலையாக அவ்வாறுகொள்ளுதற்குச் செப்பேட்டில் ஒன்றுங் காணேம். நெல்வேலிச்செருவென்ற ஒன்றேபற்றி அவ்வாறுகொண்டாரெனில், நெல்வேலியில் இந்த மாற னேயன்றி வேறு மாறனொருவனும் செருவென்றி பெறவில்லையென்பது காட்டுதல்வேண்டும். சகாத்தம் 1474 வரையில் ஒரு நெல்வேலிமாறன் இருந்தானாகப் பிற்காலப் பாண்டியரின் சாசனத்தில் தெரிந்திருப்பதனா லும், ஒருபோர்க்களத்திற் பலமுறையும் போர்நடப்பது உலகசரித்திரத் திற் புதுவதன்றாகலானும், இம்மாறவர்மனும் சைவனாக்கப்பெற்ற மாற னும் வேறாயிருக்கலாம் என்று தோற்றுகின்றது. இவ்விருவரும் ஒருவ ரென்பதற்கு வேறு ஏதுக்களுளவேல், தயைகூர்ந்து திருவாளர் வெளியிடுவாராயின், ஒவ்வுமாயின் அவர்கொள்கையைத் தழுவுதற்குத் தடையில்லை. இச் செப்பேட்டிலுள்ள பாண்டியர்களின் காலவரையறை யைத் தீட்டியதற்கு ஆதாரம் என்ன என்பதைத் தயைகூர்ந்து வெளி யிடும்படி வேண்டுகின்றேம்.

மாறவர்மனின் மெய்க்கீர்த்தியில், நாயனாரால், சைவனாக்கப்பெற்ற பாண்டியனின் சமணப்பற்றறுத்தது, சங்கம்வைத்தது முதலிய பெருஞ்செயல்கள் கூறப்படாமையானும், சோழனை வென்றதாக இச் செப்பேடுகூற, "மன்னெலா நிகழ மன்னனாய் மன்னும் மணிமுடிச் சோழன்" என்று தங்காலச் சோழனை நாயனார் குறித்துள்ளமையானும் நாயனார்காலப் பாண்டியனும் வேறு; இம் மாறவர்மனும் வேறு என்பது வலியுறும்.

மேலும், நாயனார்காலத்துப்பாண்டியன் சங்கம்வைத்தது அந் நாய னார் திருவாக்கானும், நம்பியாண்டார்நம்பிமுதலிய பின்னோர் திருவாக்கா னும் அறிகின்றேமாகலினானும் (தே. 3. திருப்பா.; ந. நம்பி. திருவா. குலச். சேக். பெரியபு.) கடைச்சங்க மிரீஇய முதற்பாண்டியன் முடத் திருமாறனென்று அச்சங்கப்புலவர்சிங்கத்தின்வழிவந்த செந்நாப்புலவர் சொல்லினராகலானும், அம்மாறன்முடம் நிமிரும்வண்ணம் "வேந்தனு மோங்குக"என்று பாடியது அந் நாயனாரேயாகலானும், நாயனார்காலத்து வணிகமகளின் கற்புநிலையிட்ட வன்னியைக் கடைச்சங்கக் கடைப்பகுதி

யிற் பிறந்த சிலப்பதிகாரம் எடுத்துக்கூறுவதனாலும், புத்தர் சமணர் முதலியோரது பொய்களைக் கண்டித்து நால்வேதநெறியை நிலைநிறுத்தினோர் கௌணிய கோத்திரத்து அந்தணமுன்னோர் என்று சோழன் நலங்கிள்ளிகாலத்து ஆவூர்மூலங்கிழார் சொல்வதனாலும் (புற. 166), இக்குறிப்புப் பாசமயகோளரியுங் கௌணியகோத்திரச் செல்வருமாகிய நாயனாருக்கே ஒக்குமாகலானும் சிந்தாமணியில் நாயனாருடைய தேவாரத்தினுள்ள சொற்பொருட்களைப் பின்பற்றிக்கூறியுள்ளனபோலத் தோன்றுதலானும், நம்பியாண்டார்நம்பிகாலத்துத் தேவாரம் பெறுதற்கருமையாய்ச் சிதல்வாய்ப்பட்டிருந்தமை, நாயனாரால் வெல்லப்பட்டுத் தேய்ந்த சமண புத்த சமயங்கள் பின்னோர்காலத்து மேம்பட்டுவிளங்கச் சிலப்பதிகாரம் மணிமேகலை சிந்தாமணி முதலிய அச்சமயநூல்கள் மிக்குப் பயின்று வந்தமையாலாகிய கேடென்று கொள்ளலாமாகலானும், நாயனாரும் அவர் காலப் பாண்டியனும் இச் செப்பேடுகளிற் சொல்லிய பாண்டியருக்குக் குறித்தகாலத்துக்கு மிக முற்பட்டகாலத்து விளங்கியவரென்றும், அக்காலந்தான் கடைச்சங்கமுற்பகுதியாமென்றும் உய்த்துணர்ந்துகொள்ள வேண்டியதாயிருக்கின்றது. நாயனார்காலத்தை ஆராய்ந்து வரையறவு செய்யப்புகுந்த பெரியாராகிய சுந்தரம்பிள்ளை முதலியோரது ஆராய்ச்சியெல்லாம், இன்னகாலத்துக்குப்பின் நாயனார் இருந்தாரல்லர் என்று கீழ் எல்லையை முன்னுள்ள கலங்கல் மயக்கங்களை நீக்கி நிறுவிய பயத்தவாக முடிந்தவேயல்லது, அந் நாயனார் இருந்த மேல் எல்லை நிறுவிற்றில. இது தனிமையாக ஓர் ஆராய்ச்சிக்குரியதாகலின் இவ்வளவில் எடுத்துக் கொண்டதை முடிப்பாம்.

மு. தம்பையா.

நால்வகைப்பொருள்.

நால்வகைப் பொருள்களாவன:—நந் தெய்வத்தமிழ்நூல்வல்லபெருமக்களா லெடுத்துக்கொள்ளப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடென்பனவாம். இந்நான்கும் மக்கட் குறுதிப்பொருளாம்.

அந் தமிழ்நூல்கள் எவையெனின் முத்தமிழ்க்கழகத் தான்றோராகிய பொய்யடிமையில்லாப் புலவர்கள் இயற்றிய நூல்களும், அந் நூல்களைக்கற்ற பேரறிவுடைய நல்லியற்புலவரியற்றிய நூல்களுமேயாம்.

அவ் வான்றோர் பல்லாயிரவர்குழுமி ஆயிரக்கணக்கானவாண்டுகளிருந் தியற்றிய முத்தமிழ்நூல்கள் இத்தனையெனக் கூறமுடியாதனவாயிருந்தன. அவற்றின் பெயர்முதலியனவற்றைக் களவியலுரையிற் காண்க. அவைகளிற் கடனீர்க்கிரையாயினவும்,* துருக்கர் ஆட்சிபுரியுங் காலத்து நந் தமிழகத்து நூல்களெல்லாம் அவர்கள் குரானுக் கொவ்வாமையாற் போற்றப்படாதனவு மாகி யொழிய எஞ்சியிருந்த நூல்களே யிக்காலத் துள்ளனவென் றறிக.

அந்நூல்களாற் கூறப்பட்டபொருள்கள் யாவையெனில் "ஆன்றசிறப்பி னறம்பொரு ளின்பமென, மூன்றுவகை நுதலிய துலகம்" எனப் பன்னிருபடலத்திற் கூறியவாறு, தொகை வகை விரியாக் அறம் பொருள் இன்பம் எனப்படும் மூன்றுவகைப்பொருளா மென்க. வீடு கூறவில்லையோ வெனில், வீடென்பது சிந்தையும் மொழியுஞ் செல்லாநிலைமைத்தாகலின், இவ்வாறென இலக்கணவகையாற் கூறவியலாது. காரணவகையாலு முதாரணவகையாலுங் கூறுவ துண்டென்க. ஆகவே, நால்வகைப்

* "ஏரண முருவம் யோக மிசைகணக் கிரதஞ் சாலந்
தாரண மறமே சந்தந் தம்பநீ ரில முலோகம்
மாரணம் பொருளென் றின்ன மான நூல் யாவும் வாரி
வாரணங் கொண்ட தந்தோ வழிவழிப் பெயரு மான"
என்னுங் கவியை நோக்குக.

பொருளாமென்பது மொருவகையாகப் பொருந்துமென்க. இதனைத் திருக்குறளிலும், மெய்யுணர்தல் அவாவறுத்த லென்னு மதிகாரங்களாற் புலப்படுமா றுரைத்தார்.

ஔவையாரும், "ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங், காதலிருவர் கருத்தொன்றி—யாதரவு, பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" எனச் சுருக்கிக் கூறியது காண்க. எல்லாநூலுள்ளுஞ் சொல்லப்படுவன அறிவதுஞ் செய்வதுமேயன்றி வேறின்மையின் அறிவது வீடும், அறிந்து செய்யப்படுவன அறம்பொருளின்பங்களுமா மென்றுணர்க.

க. இனி, அறமாவது இல்லறந் துறவறமென விருவகையாம். அவற்று ளில்லறமாவது:—கற்புடைமனைவியுடனிருந்து, இடம் பொருளேவல் பொருந்தவைத்துத், "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங்—கைம்புலத்தா றோம்ப றலை" எனக்கூறிய இவ் வைவகைநெறியும் வழுவலடையா தோம்புதலாம். இவ் வைவகை நெறியும்,சிறப்பாகவைத்துக்கூறிய 'ஈதலறம்' என்பதனு ளடங்குமெனக் கொள்க. வழுவாவன—இவ் வைவகைநெறியிலே இவ்வாறு செய்கவென விதித்தனவற்றைச் செய்யாதிருத்தலும், விலக்கியனவற்றைச் செய்தலுமா மென்க. விலக்கியனவை—பிறனில்விழைதல், அழுக்காறு செய்தல், வெஃகுதல், கள்ளுண்ணல், கொலைபுரிதல், பொய்கூறல், களவு செய்தன் முதலியவா மென்க.

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமு—மறத்து வழிப்படூஉந் தோற்றம் போல" எனக்கூறலால், அறத்தாற் பொருளு மின்பமு மெய்தலா மென்க. இவ் வில்லறத்தை யொழுக்குறப் புரிந்து சரியைமுதலிய நால்வகைநெறியினின்று குரு லிங்க சங்கமபத்தியி னுறைத்து நிற்போர் பதமுத்தி பரமுத்தி யடைவரென்பதற் கையமில்லை. அவ்வாறு நின் றடைந்த நாயன்மார்கள் பலருளர்; பெரியபுராண முதலிய நூலுட் காண்க.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு—நல்லாற்றி னின்ற துணை" "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை" "வையத்து

வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்—தெய்வத்துள் வைக்கப் படும்" எனக் கூறலால், இவ் வில்லறந் துறவறத்தினரு நன்குமதிக்கத் தக்கதாம்.

மேற்கூறிய தென்புலத்தார்முதலிய ஐம்புலத்தாரோம்புதலே ஐவகை வேள்வியென்பர் தமிழகத்துச் சைவத்திருவாளராகிய புலவர்கள். தென்புலத்தார்—அழகிய இடத்தைச்சார்ந்தவர்; உயர்பதஞ்சார்ந்தவரென்பது கருத்தாம். அவர் யாரெனில், சிவனுலகுமுதலிய பதமடைந்தோரும், சிவனடியாகிய பதமடைந்தோருமாகிய தாய் தந்தை ஆசிரியர் மெய்படியார்களாவர். அவரைக்குறித்துச் செய்யும் வேள்வியாவது அவர் உயர்பதஞ் சார்ந்தநாளிலே தெய்வம் அடியவர் முதலானவர்கட்குச் செய்யும் பூசையா மென்க. ஏனைய நான்கு மிவ்வாறே யுய்த்துணர்க. இவ் வில்லறத்தின்பெருமையை விரிக்கிற் பெருகுமாதலாற் சுருங்கவுரைத்தமை யுட்கொள்க.

துறவறமாவது:—மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து, மிக்க காம வேட்கை தீர்ந்தவழி, நிலையாமையுணர்ந்து மனைவியை மகன்பால் வைத்தாயினும், உடன்கொண்டாயினும் வனத்திற்கேகித் துறவற வொழுக்கமுற்று விரத யோக ஞானங்களை யடைந்திருத்தலா மென்பரொருசாரார்.

இல்லறம்புரிந்தவர், இல்லிலிருந்தே யிருவகைப்பற்றுமற்றுத் துறவறநெறிநின்று விரத யோக ஞானங்களை யடைந்து, சுத்தாத்துவித பாவனையைப் பெற்றிருத்தலாமென்பர் நந் தமிழகத்துச் சைவத் திருவாளராகிய புலவர்கள்.

இவ்வாறாதலால், கற்பழித்தூ மாறுபட்டிருக்கின்ற மனைவிக்கஞ்சி வெளியேகினவரும், இடம் பொரு ளேவல்க ளில்லாதவர்களும், வேலை செய் துண்டு காலங்கழிக்கமாட்டாத சோம்பலுள்ளவர்களும், மாதர் புணர்ச்சிக்கு வலிமையில்லாத வுடலினருமாகிய இவர்கள் துறவற வேடம்பூண் டொழுகினால், அது துறவறமாகாதென்க.

உ. இனிப் பொருளாவது:—"தீவினைவிட்டீட்டல் பொருள்"எனச் சுருக்கிக் கூறினாராயினும் "வடுவிலா வையத்து மன்னிய மூன்றின், னடுவண தெய்த விருதலையுமெய்தும்," "ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க்

கெய்பொருளினை யிரண்டு மொருங்கு" என்றவாறே, அறமு மின்பமு மெய்தற் கேதுவாயிருப்பதா மென்க. அதுதான், அரசநீதி துணைக் காரணமாகக்கொண்டு அறுவகைத்தொழில்களானு மியற்றப்படுமென்க. அறுவகைத்தொழிலாவன :—உழவு, சிற்பம், வாணிகம், வரைவு (எழுதுதல்) தொழில், வித்தை எனப் பண்டைக்காலத்தே நம்மனோர் கைக்கொண்டு நடத்திவருவனவாம். தொழில்—இவ்வறுவகையின்வேறாகிய பல்வகைச் செயல்களாம்.

இவற்றுள்ளே தலைமையாயதொழில், உழவேயாம். அதன்சிறக் கூறுதும்; எல்லாம்வல்ல இறைவன் படைத்தகாலத்தின் முதலிலே யெல்லாமக்களு மொற்றுமையாயிருந்து, சிறப்புள்ள பொதுத்தொழிலாக விவ்வுழுதொழிலைக் கைக்கொண்டு செய் துய்த்திருந்தனர். பின்னரைவகைத்தொழிலுங் கைக்கொண்டனர். அவ்வாறு செய்தொழில் வேற்றுமையாற் சாதிகள் பலவாகப் பகுக்கப்பட்டனவென்க.

இவ் வுழுதொழிலால் விளைபயனை ஆறுகூறாக்கித் தென்புலத்தார் முதலிய வைவகைச்செலவிற்கு மைந்துகூறுவேண்டுதலால் ஐந்துகூறெடுத்துக்கொண்டு, அரசனுக் கொருகூறுதவுவாராயினர். அதனாலரசனுக் கிறைப்பொருளாறிலொன்று கடமையாயதென்க. அவ்வொரு கூற்றால் அரச னாக்கிற்குவரு *மிடையூறுகிய மாங்கடிந் தறம்பெருக்கிக் காப்பானுமினன்; அரச னிங்ஙனஞ்செய்தற்குக் குடிகளியு மிறைப் பொருளு மொருகாரணமாம்: குடிகள் பொருளீட்டித் தொகுத்து வைத்து வாழ்வதற் கரசநீதியும் ஒருகாரணமாமென்க.

பின்னர், அறிவு பலவிதமாதலால், அம் மக்களிற் பல்லோர் செய்தொழிற் சிறப்புவேற்றுமைபற்றி யுழுதொழிலைக் கைக்கொள்ளாது விட்டனர். சிலர், அவ்வுழுதொழிலை விடாது கைக்கொண்டு, எல்லார்க்கு முபகாரஞ்செய்திருந்தனராதலா லவர்கள் வேளாளரெனப் பெயர்பெறுவாராயினர். (வேளாண்மை - உபகாரம்)

இவ் வுழுதொழில்விளைபயனா லெவ்வகைமக்களும், பசிவருத்தமின்றி வாழ்கின்றனர். "உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்,

* இடையூறைந்து:—தன்னால், தன்பரிசனத்தால், பகைத்திறத்தால், கள்வரால், ஏனை யுயிர்வருக்கங்களால் வருவன வென்க.

விட்டேமென் பார்க்கு நிலை" என்பதனாலறிக. இவ்வுழுதொழில் விளைவினாலே, அரசன்வாழ்வுந் திருக்கோயிற்பூசையு நடைபெறுகின்றன; திருக்கோயிற்பூசை முட்டுப்படில், அரசனுக்குத் தீங்குண்டாம்; மழையும் பெய்யாது; எனத் திருமந்திரத்தில், "முன்னவ னார்கோயிற் பூசைகண் முட்டிடின், மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும், கன்னங் களவு மிகுந்திடுங் காசினிக், கென்னரு ணந்தி யெடுத்துரைத் தானே" என்றெடுத்துக்கூறியது காண்க. இதனாலே மழைபெய்வதற்கு வேறுகாரணமில்லை; இவ் வுழுதொழிலுந் திருக்கோவிற்பூசையுமே காரணமாமென்பதுங் காண்க.

இவ்வுழவினரேர்க்கோலால், அரசன்செங்கோ னிலைபெறுவதெனக் கூறிய பெரும்புலவராகிய, கம்பர் உழவைச் சிறப்பித்து ஏரெழுபது என ஒரு நூலாகவே கூறினாராதலால், இவ்வுழுதொழிலே யெல்லாத்தொழிற்குந் தலைமையானதொழிலென யாவருக்கும் விளக்கமாமென்க.

எல்லாத்தொழிற்கும் பழுதுண்டு, இவ்வுழுதொழிற்குப் பழுதில்லை யென்பது விளங்க "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு" என்றார். இன்னும், "உழுவா ருலகத் தார்க் காணியஃ தாற்றா, தெழுவாரை யெல்லாம் பொறுத்து" "சுழன்று மேர்ப் பின்ன துலக மதனா, லுழந்து முழவே தலை" எனக் கூறுமாறு காண்க. விரி வஞ்சி யிங்ஙனஞ் சுருங்கவுரைத்தமைகொண்டு உழுதொழிலே தலைமையானதொழிலாமென்க.

ஆதலாற் றீவினைவிட் டீட்டியபொருளாலே யறங்கள்பலவு மோம்ப வேண்டுமென்பதும், தீவினையாலீட்டியபொருளாற் செய்கின்ற வறங்கள் பயனுறாவென்பதுங் காண்க.

௩. இன்பமாவது:—இல்லறம் புரியுங்காலத்து, அம்மனைவிக்கு உண்ண, உடுக்க, அணியப் பூச வேண்டுவனவற்றை மனமகிழுமாறுதவி, அவளினையும்வண்ணம்புரிந்து, "பூத்தநீ ராடியநாண் முதலாகப் பன்னிருநாட் பூவை யார்க்கு, வாய்த்தகரு வுறுங்கால மாதலினா லந்நாளுண் மகமே மூலம், பார்த்தசிர் விரததினந் *தனக்காகா நாள்பஞ்ச பருவ†

* தனக்காகாநாள் - தான் பிறந்தநாள், பத்தாநாள் அப்பத்துக்குப் பத்தாநாளென்பர்.

† பஞ்சபருவம் - மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, அமாவாசை, பௌர்ணை, அட்டமியென்பர்.

மெல்லா, மீத்தூறால் விதித்தநிலம் புணராவேனேற் கருவொன்று நீக்கினால்" எனத் திருவாலவாய்க்காப் புராணத்திற் கூறியவாறும், "பூவையே யனையார் தம்மிற் பூத்தநாள் முதனு மூன்றின், மேவிடார் புணர்ச்சி பின்னை விரும்புநாள் பன்னிரண்டி, லேவுறு கருப்ப முண்டா மிங்கிதி னிரட்டி நாளாய், பாவின தொற்றை நாளேற் பெண்ணெனப் பகர்வர் தாமே" என வுள்ளமுடையானிற் கூறியவாறுந் தெரிந்து விதித்தநாளிற் புணர்ந் தின்புறுவதாம். இதுவே "புலைந்துறை யுலகிய லெனுந்திற மிரண்டிலும், தொல்லியல் வழாமற் சொல்லவும் படுமே" எனக் கூறிய வாறு தொல்லியல்வழாமற் சொல்லப்பட்ட வுலகியலின்பமா மென்க. புலைந்துறை பின்வரும்.

இனி, இன்பத்தை, அகத்தே நிகழு மின்பம், புறத்தே நிகழு மின்பம் என இருவகையாக்கி, இவற்றை அகப்பொருள், புறப்பொருளென எடுத்துக்கூறி, அவற்றினொழுக்கத்தை அகத்திணை, புறத்திணையெனப் பெயரிட்டு, அகத்திணையை யெழுவகையாக்கிக் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணையெனக் கூறுவர். (கைக்கிளை - ஒருதலைக்காமம். ஐந்திணை- அன்புடைக்காமம். பெருந்திணை - பொருந்தாக்காமம்) இவற்றுள்ளே, ஐந்திணையாவன,—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலாகிய வைந்திடத்து நிகழு மொழுக்கமாம். இவ் வைந்திணையைக் கந்தருவவழக்கத்தோ டொத்தவழக்கமாகக் கொண்டு கூறுவர். இவ் வகத்திணையின்பம் அகத்தே நிகழு மன்பினெறியா யனுபவித்தார்க்கன்றிப் புறத்தார்க்குப் புலனாகாமை யறிக. இதனை யுலகியல்வழக்கமாகக்கூறாது புலனெறி வழக்கமாகக்கொண்டு கூறுவர்.

புறத்திணை , புறம்பே நிகழு மொழுக்க மின்பமாக, அறிவிற்குப் புலனாய் வீரர் போர்க்களத்தே பெறு மின்பமாம்; இஃது, எல்லாரு மநுபவித்துப் புறத்தேயுள்ளார்க்கு மிவ்வாறிருந்தது என வுரைக்கப்படுவதாய், அறத்தையும் பொருளையும்பற்றி நிகழ்வதாம். இப் புறத்திணையொழுக்கத்தை வெட்சித்திணைமுதல் வாகைத்திணையீறாக வெண்வகைப் படக் கூறுவர்; அவை:—"நிரைகவர்ந் திடுதல் வெட்சி நிரைமீட்டல் கரந்தை யென்ப, வெருவமேற் சேறல் வஞ்சி மீட்டெதி ரூன்றல் காஞ்சி, வருமொச்சி புரிசை காத்தல் வளைத்திட லுழிஞை யாகும், பொருவது தும்பை யென்ப போர்வெல்லல் வாகை யாமே" எனக் கூறுதலா லறிக.

இவற்றைக் கூறு நூல்களிலே பண்டைக்காலத் தாசர்முதலானோர் போர்முறைகளும் வீரமு நன்குவிளங்கும். இன்னுங் காஞ்சித்திணை, வஞ்சித்திணைக்கு மறுதலைத்திணையான வகை கூறுவதன்றி வீடுபேறு நிமித்தமாகப் பலவிதமான நிலையாமையைச் சான்றோர் கூறுதலுங் காண்க.

புறப்பொருள்வெண்பாமாலையுரையிலே, பாடாண்டிணை, பொதுவியல், கைக்கிளைத்திணை, பெருந்திணையென நான்கும், இவ்வெட்டுடன் கூட்டிப் பன்னிருதிணையாகவுங் கூறுவர். வெட்சிமுதல் தும்பையீறாக வுள்ள வேழும் புறமென்றும், வாகை பாடாண் பொதுவியல் மூன்றும் புறப்புறமென்றும், கைக்கிளை பெருந்திணை யிரண்டும் அகப்புறமென்றுங் கூறுவர். இப் பன்னிருதிணை விவரங்களைப் புறப்பொருள்வெண்பா மாலையுரையிற் காண்க. விரிவஞ்சி யீண்டுக் கூறவில்லை. புறத்திற் கூறிய கைக்கிளை பெருந்திணை யிரண்டுக்கும் பொருள்வேறுண்மையும் அகத்திற்கூறிய கைக்கிளை பெருந்திணை யிரண்டுக்கும் பொருள்வேறுண்மையு முணர்க.

இவ் வகப்பொருள் புறப்பொருளிலக்கணங்களைத் தமிழில் எழுத்துமுதலிய ஐவகையிலக்கணங்களுட் பொருளிலக்கணமாகக் கொண்டுவைத்துக் கூறுவர். இவ்விலக்கணம், நங் தெய்வத்தமிழ்நாற்கே யுள்ளதெனவும், ஏனைமொழிநூல்கட் கின்றெனவுங் கண்டுகொள்க. இவ் விருவகை யொழுக்கத்தையும், ஆட்டுவா னொடி முனங் காட்டுதல் போலக் குறிஞ்சிவேந்தாகிய, அறுமுகக்கடவுள் வள்ளிநாயகியை மணந் தின்புற்றும், சூரனுதியருடன் போர்புரிந்து வெற்றியின்புற்று முலகிற் குக் காட்டியருளினு ரென்க.

௪. வீடாவது:—மேலே சுருக்கவுரைத்தாம். ஔவைப்பிராட்டியும், "பரனை நினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" என வுரைத்தார். எல்லாப்பற்றும் விடுதலை வீடாதலால், இம்மூன்றும் விட்டதே பேரின்பவீடென்றார். விடுதற்குச் சிறந்த காரணம் பற்றற் றான் பற்றினைப் பற்றுதலென்பார் பரனை நினைந் தென்றார். "யானெனை தென்பதிருந்திடுகாறும் ஞானமுறாு" தென்பதனுல் வீடு காதலிப்போர், எனதென்பதும், யானென்பதுமாகிய புறப்பற் றகப்பற்றுக்களை நீக்கி ஞானநூலோதி ஞானமெய்தி, "உருவன்றி யேநின் றுருவம் புணர்க்குங்,

கருவன்றி யேநின்று தான்கருவாகு, மருவன்றி யேநின்ற மாயப்பிரானைக், குருவன்றி யாவர்க்குங் கூடவொண்ணாதே" எனத் திருமந்திரத்துக் கூறலால், நல்லாசிரியர் அறிவுறுக்கும்வழி நின்று, துவிதபாவனையைக் கைவிட்டுக் கந்தழியெனக் கூறும் பொருளைத் தானாகப் புரியும் பாவனையிலுறைத்து நின்று தன்னானந்தமாகிய முடிவுகாண்கிலாப் பேரின்பத்தை நுகர்ந்திருத்தலே பேரின்பவீடென்க. கந்தழி என்பதற்குப் பொருள் ஒரு பற்றுக்கோடுமின்றி யருவாகித் தத்துவங்கடந்தபொருளெனக் கூறுவர். கந்து - பற்றுக்கோடு. கந்தழி யென்பதனைத் தொல், பொரு, அஅ-ஞ் சூத்திரங்கொண் டுணர்க. ஈண்டுக் கந்தழியென்பதற்கிப்பொருளேயாம். புறப்பொருள்வெண்பாமாலையுரையிற் கந்தழியென்பதற்குப் பொருள் வேறாம். அதனை ஆண்டுக் காண்க.

இங்ஙனங் கூறிய பாவனையே சிவமேதானாகப் பாவிக்கும் பாவனையென்பதும், இரண்டறப் பாவிப்பதாகிய சுத்தாத்துவிதபாவனையுமாமென்பதும் அறிக. இப்பாவனையையு மிதனாலாகு மின்பத்தையும் காஞ்சிப்புராணம் தழுவக்குழைந்த படலத்தில், "உணர்பொருளு முணர்வானு முணர்வு மெனும் பகுப்பொழியா தொழிந்து பானுப், புணர்விழியு நீர் நிழலுந் தீயிரும்பும் புனலுவரும் பரிதி மீனுந், துணையிரண் டறுகலப்பி னெம்முடனுப் பேரின்பந் துய்த்து வாழ்வா, ரிணர்விரைத்த மலர்க் கோதா யவர்வடிவே யெமக்கினிய கோயி லாமால்" எனக் கூறுமாறு காண்க.

எல்லாம்வல்ல விறைவன், ஒருங்கே படைக்குங்காலத்தில், "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா, செய்தொழில் வேற்றுமையால்' என்றபடி பிறப்பொத் தொற்றுமையாயிருந்த மக்கட்கூட்டத்தினைப் பின்பு செய்தொழில்வேற்றுமைச்சிறப்புநோக்கித் தொல்காப்பிய முதலியவற்றில், அந்தணரென்றும், அரசரென்றும், வணிகரென்றும், வேளாள ரென்றும், மற்றையோ ரென்றும் பிரித்துவைக்கப்பட்டிருக்கின்றமையால், அவர்களுக்கெல்லா முறுதிப்பொருளாகக் கூறப்பட்டன விந் நால்வகைப்பொருளுமேயென் றுணர்ந்துய்ப, உணர்வோருணருமாறு, இங்ஙனஞ் சுருக்கவுரைத் தமைகொண் டாராய்ந்து தெளிக.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(உருக-ம்பக்கத் தொடர்ச்சி).

43. "இன் தளிர்க் கற் பக நறும் தேன் இடை துளிக்கும்
நிழல் இருக்கை இழந்து போந்து
நின்(று) அளிக்கும் தனிக் குடையின் நிழல் ஒதுங்கிக்
குறை யிரந்து நிற்ப நோக்கிக்
குன்(று) அளிக்கும் குல மணித் தோட் சம்பரனைக்
குலத்தோடும் தொலைத்து நீ கொண்(டு)
அன்(று) அளித்த அர(சு) அன்றோ, புரந்தரன் இன்(று)
ஆள்கின்ற(து) அரசு" என்றான்.

இ-ள். "இனிய தளிர்களையுடைய கற்பகதரு இடையிடையே வாசனையுள்ள தேன் துளிதூவும் நிழலில் (உள்ள சிங்காதனத்தில் அரசு வீற்றிருக்கும் பதவியைச் சம்பராசுரன் பறித்துக்கொண்டதனால் அந்த) இருத்தலை இழந்து (அயோத்திக்கு) வந்து, உமது ஏக (வெண்கொற்றக்) குடை நிழலில் ஒதுங்கி (நின்று இந்திரன்) குறை (கூறி) இரந்து நிற்க, (அவனது பரிதாபநிலையைக்) கண்டு, மலைபோலும் தோள்களையுடைய (அந்தச்) சம்பராசுரனை (அவனுடைய) குலத்தோடு (நிர்மூலமாகப் போரிலேகொன்று) நாசமாக்கி (அவன் கைப்பற்றியிருந்த இந்திரபதவியை) நீர் (கைப்பற்றி உம்மதாக்கிக்) கொண்டு (பின்பு இந்திரனுக்கு) அக் காலத்திற் கொடுத்த இராச்சியமன்றோ, அவன் இக்காலத்தில் ஆள்கின்றது!" என்று விசுவாமித்திரர் கூறினார்.

போந்து-வந்து. நின்று அளிக்கும் தனிக்குடை-(உலகத்துக்கு ஆதாரமாக) நின்று காக்கும் ஒப்பற்றகுடை. "பலகுடைநீழலும் தம் குடைக்கீழ்க்காண்" கின்ற சக்கரவர்த்தியின்குடையாதலால், உலகத்துக்கெல்லாம் ஒரு குடையாகவுள்ளதென்பதைக் குறிக்கத் 'தனிக் குடை' யென்றாரெனலுமாம். "நின் தளிக்கும் குடை-உனது குளிர்ந்த குடை" என்னலும் உண்டு. குன்று அளிக்கும்-மலையை ஒத்த. அளித்தல் என்பதற்கு இயல்பாக ஒத்தல் என்ற பொருளில்லையாயினும், அது

எதுகையில் வருதலால் அதற்கு அப்பொருள் கூறப்பட்டது. புறப்பொருள்வெண்பாமாலையில் 'பிணங்கடருள்' என்ற வெண்பாவில் 'சிலையளித்த தோளான் சினவிடலைக் கன்றோ-தலையளித்தான் றண்டையுந் தந்து' என வருதல் காண்க. அளித்தல்-ஈந்தல் (ஷை நூல் அரும்பதவுரை) குலம் மலி தோள்-மேலான அழகுடைய புதாள்.

முன் பாட்டில், தேவரும் முனிவரும் சரணமடையும் மஹாபுருடருள் ஒருவராகத், தசரதனைத் துதித்த விசுவாமித்திரர், அத்துதிக்கு மேல்துதியாக, இப்பாட்டில், அந்த மஹாபுருஷருள் ஒருவனுகிய இந்திரனே தசரதனைச் சரணடைந்தானென்று, அவருக்கு முன்னைய துதியில் உண்டாயிருந்த மகிழ்ச்சியை மிக அதிகப்படுத்திய சாதுரியம், கம்பர் கவித்திறத்தை விளக்குகின்றது. இவ்வாறு துதி மேல் துதிசெய்தது, அடுத்தபாட்டிற் கூறும் "கரைசெய்ய அரிய(து) ஒரு பேருவகைக் கடல் பெருக"ச் செய்தது காண்க.

44. உரைசெய்யும் அளவில் அவன் முகம் நோக்கி
உள்ளத்தில் ஒருவ ராலும்
கரை செய்ய அரிய(து) ஒரு பே ருவகைக்
கடல் பெருகக் கரங்கள் கூப்பி
"அரசு எய்தி இருந்த பயன் எய்தினன் மற்(று)
இனிச் செய்வ(து) அருளு(க)" என்று
முரசு எய்து கடைத் தலையான் முன் மொழியப்
பின் மொழியும், முனிவன் ஆங்கே.

இ - ள். (அவ்வாறு) சொல்லவே, (தசரதது) மனத்திலே யாவராலும் கரைகாணமுடியாததோர் பெருமகிழ்ச்சிக்கடல் பெருகாநிற்க, முனிவர்முகத்தைப்பார்த்து அஞ்சலிசெய்து "(யான் இவ்வாறு முனிராசராகியதம்மால் நன்குமதிக்கப்பெற்றதனுல், இப்போது தான் அறுபதினுயிரம் வருடம்) அரசாள்பதவியை அடைந்திருந்ததின் பயனை அடைந்தேன். (யான்) இனிமேற் செய்யவேண்டியகாரியத்தைக் கூறியருள்வீராக" என்று சக்கரவர்த்திகூற, முனிவர் கூறுவார்.

முரசு எய்து கடைத்தலை - முரசு (முழங்குதல்) பொருந்திய தலைவாசல். கடை - வாசல். தலைக்கடை கடைத்தலையாக மாறியது,

இக்கவியில், தசரதர்மனமகிழ்ச்சிக் கெல்லையில்லாததுபோல, வாசிப்போர் மனமகிழ்ச்சிக்கும் எல்லையில்லை; சொல்நயம் பொருள்நயம் தொடைநயம், நடைநயம், தொனிநயம் எல்லாம் சிறந்திருத்தலால்.

45. "தரு வனத்துள் யான் இயற்றும் தவ வேள்விக்(கு)
இடையூறாத் தவம் செய் வோர்கள்
வெருவரச் சென்(று) அடை காம வெகுளி என,
நிருதர் இடை விலக்கா வண்ணம்
'செரு முகத்துக் காத்தி' என, நின் சிறுவர்
நால்வரினும் கரிய செம்மல்
ஒருவனைத் தந் திடுதி" என, உயிர் இரக்கும்
கொடும் கூற்றின் உளையச் சொன்னான்.

இ - ள். "தவஞ்செய்வோர் (தவத்துக்கு இடையூறாக அவர்) கள் அஞ்சும்படி (அவர்களிடம் வந்து)சேரும் காமத்தையும் கோபத்தையும் போல, யான் செய்யும் யாகத்துக்கு இடையூறாக (வந்து தாக்குகின்ற சுவாகு மாரீசன் என்னும்) அரக்கர்கள் இடையே (புகுந்து அந்தயாகத்தைத்) தடுக்காதபடி '(அவர்களைப்) போரில் (எதிர்த்து விலக்கி என் யாகத்தைப்) பாதுகாப்பாயாக', என்று (இராமருக்குக் கட்டளையிட்டு அவ)ரை(எனக்குஉதவியாக)த் தருவீராக"என்று உயிரை(க்கொடு என்று) யாசிக்கும் கொடிய யமன்போலத் தசரதர் மனம்வருந்தும்படி விசுவாமித்திரர் கூறினர்.

தருவனம் - மரங்கள் (அடர்ந்த) வனம். தவவேள்விக்கு - 1. தவ வேள்விகளுக்கு—தவத்துக்கும் வேள்விக்கும்; 2. தவத்தோடுகூடிய வேள்விக்கு. வெருவர-வெருவ - அஞ்சும்படி. நிருதர் - இராக்கதர். செரு முகத்து - போரில். காத்தி - காப்பாய். செம்மல் - புத்திரன். தந்திடுதி - தந்திடுவாய். கூற்றின் - யமனைப்போல. உளைய - மனம்வருந்த.

உயிர் இரக்கும் கொடும் கூற்று என்றது பலவகையில் மிகப் பொருத்தமான உவமானம். தசரதருக்கு இராமர் உயிரென்பது, பின்னவர் காட்டுக்குச் செல்வாராய் நீங்கியபோது முன்னவருக்கு உயிர்நீங்கியதனால் தெளிவாம். இராமர் தசரதர் உயிரெனப் பலசமயங்களிற் கூறப்பட்டிருக்கிறது.

'இரக்கும்' என்றதனால், கயமாக இராமனைத் துலையாகத் தா வென்று வேண்டியதலையும், 'கொடும் கூற்று' என்றதனால், தசரதர் அவ் வேண்டுகோளால் அளவிறந்த மனவேதனையடைந்து இராமனுக்குப் பிரதியாகத் தாம் வேள்வியைக் காப்பதாக (இதன் முன்னும் பாட்டில்) கூறியபோது (நான்காம் கவியில்) விசுவாமித்திரர் இரக்கமின்றிப் பெருங் கோபங்கொண்ட கொடுமையையும், உயிரைவேண்டிய யமன் அதனைக் கொண்டுபோகாதொழியாததுபோல, இராமனைவேண்டிய விசுவாமித்தி ரர் அவரைக் கொண்டுபோகாதொழியா ரென்பதையும் குறிப்பித்தார்.

46. எண்ணிலா அரும் தவத்தோன் இயம்பிய சொல்,
மருமத்தின் எறி வேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும் புழையில் கனல் நுழைந்தால்
எனச், செவியில் புகுத லோடும்,
உண்ணிலா விய துயரம் பிடித்(து) உந்த
ஆருயிர் நின்(று) ஊசல் ஆடக்,
கண்ணிலான் பெற்(று) இழந்தான் என உழந்தான்
கடுந் துயரம் கால வேலான்.

இ-ள். அவர் கூறியவார்த்தை, (தசரதருக்கு) மார்பிலே வேல் பாய்ந்த புண்ணிலே உண்டாகிய பெரும்புரையினுள்ளே நெருப்புநுழைந் தாற்போலக் காதிலே புகுந்தவுடனே, (அவர்) மனத்தில் உண்டாகிய துன்பம் (அவர் உயிரைப்) பிடித்து (உடலினின்று வெளியே) தள்ள, உயிர், (தான் நெடுங்காலம் வாழ்ந்த உடலாதலால், அதனைப் பிரியமாட் டாமல் திரும்ப உள்ளேபுகத், துன்பம் மறுபடியும் வெளியேதள்ள, உயிர் மீண்டும் உள்ளே புக, இவ்வாறாக, உயிர் போவதும் வருவதுமாகி) ஊஞ்சல்போல ஆட, (அவர் நெடுங்காலம் பிள்ளையில்லாதிருந்து வருந்தி அருமையாகப் பெற்ற பிள்ளையை இழந்துவிட்டதாக நினைந்து,) ஒரு பிறவிக்குருடன் கண்பெற்று (ப் பின்பு) இழந்தான் (ஆனால் அவன்) போலக் கடுந்துன்பத்தை அடைந்தார்.

எண்ணிலா—1. எண் இல்லா - சங்கியை இல்லாத - அளவில்லாத; 2. எண்ணுதல் இல்லாத - (விசுவாமித்திரர் தம் வார்த்தையால் தசரத ருக்கு எவ்வளவு துன்பமுண்டாமென்று) எண்ணிப்பாராத; "அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு" என்பதில் 'அஞ்சாமல்' என்பது 'அஞ்சா'

என வந்ததுபோல, 'இலாமல்' என்பது 'இலா' என வந்ததாகக்கொண்டு 'எண் இலா' என்பதற்கு 'யோசனையில்லாமல்' எனவும் பொருள்கொள்ளலாம்; 3. எண்(=எளிமை) இலா - வலிய. 4. எண் (=மனம்) நி(ல்)லா (விசுவாமித்திரரது தவத்தின் பெருமையை நினைவாரது) மனம் (இடம் போதாமையால் அதில் அடங்கி) நில்லாத. "எண் - மனம்" சங்க அகராதி. "எண்ணிலா" என்பதற்கு இந்த நான்காம்பொருள்கொண்டால் இப்பாட்டுத் திரிபு என்னும் கவியாம். எண்(=மனத்தில்) நிலாவு(விளங்கிய) அருந்தவத்தோனென்னும் பதம்பிரித்துப் பொருள்கொள்ளலுமாம். புழை - துவாரம். உள்(=மனத்தில்) நிலாவிய துயரம் (-துன்பம்) பிடித்து உந்த (-தள்ள) ஆருயிர் (-அருமையான உயிர்) நின்று (தள்ளப்பட்டும் வெளியேபோகாது உடலுள்நின்று) ஊசல் ஆட (-ஊஞ்சலைப்போல ஆட) ஊஞ்சலைப் பிடித்துத்தள்ளத்தள்ள, அது திரும்பத்திரும்பத் தான் இருந்த இடத்துக்கு வருவதுபோலத், துன்பம் வெளியே பிடித்துத் தள்ளத்தள்ள, உயிர் தன்நிலையமாகிய உடலுக்கு மீண்டும்மீண்டும் திரும்பியதாகக் கவி துக்கவருணனைசெய்தது மிக்க பொருத்தமானது. அவர் இப்படிப்பட்ட மற்றொரு சந்தர்ப்பத்தில் "ஆவி வருவதுபோவதாகி" என்று கூறுவர்; வேறோரிடத்தில் "உண்டிலை யென்னநின்றஉயிர்" என்பர். 'காலவேலான் கடுந்துயரம் உழந்தான்' என மாற்றிக் காலனை ஒத்த வேலாயுதத்தையுடைய தசரதர் கொடிய துன்பத்தை வருந்தியநுபவித்தார் என்று பொருள்கொள்க.

அறிஞர்கள், "தவத்தோன் இயம்பிய சொல் மருமத்தின் எறிவேல் பாய்ந்த புண்ணில் ஆம் பெரும் புழையிற் கனல்நுழைந்தாலெனச் செவியிற் புகுதல்" என்பதனில் உள்ள உவமான உவமேயப் பொருத்தத்தைநோக்கி மிக்க மகிழ்ச்சி அடைவர். அடைந்தவர் அதனினும் அதிக இன்பம் பயக்கும் "உள் நிலாவிய துயரம் பிடித்துந்த ஆருயிர் நின்றூசலாட" என்பதனில் உள்ள அரிய கருத்தின்சுவையை ருசித்து நுகர்ந்து ஆனந்தித்தபோது அதுபோலச் சுவையுடைய கவிக்கருத்திராதென்று இயல்பாகக் கருதுவர். ஆயினும், அதனை அடுத்து வருகின்ற அதற்குப் பிந்தாத சிறப்புடைய "கண் இலான் பெற்றிழந்தான் என உழந்தான் கடுந்துயரம் காலவேலான்" என்பதனால் அவர்கள் அடையும் ஆநந்தத்துக்கு எல்லை இல்லை.

இவ்வாறாக இப்பாட்டு, துவக்கமுதல் இறுதிவரையும், மேன்மேல் மகிழ்ச்சி விளைக்கும் மூன்று சிறந்த கருத்துக்கள் அடங்கியுள்ளது. இப்படலத்தில் இதற்குமுந்திய இனிமைமிகுந்த கவிகள் மற்றைய அங்கங்களில் அணியும் ஆபரணங்களாக, இது சிரசில் அணியும் மகுடம் போல விளங்குகின்றது.

47. தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறும் தாரான்
ஒரு வண்ணம் துயரம் நீங்கிப்
படை ஊற்றம் இலன், சிறியன்; அவர் பெரியோர்:
பணி இதுவேல், பணி நீர்க் கங்கை
புடை ஊற்றும் சடையானும் நான்முகனும்
புரந்தரனும் புகுந்து செய்யும்
இடையூற்றுக்(கு) இடையூறாய் யான் காப்பன்:
பெரு வேள்விக்(கு) எழுக வென்றான்.

இ - ள். (பின்பு அவர் சமாளித்து) ஒருவாறு துன்பம் நீங்கி "இராமன் படைகளையாளும் பலமில்லாதவன்; சிறியவன்; அவரோ [-அரக்கரோ] பெரியவர்: (ஆதலால் உமது வேள்வியை) நான் காப்பேன். வேள்விசெய்தற்குப் புறப்படுக" என்றார்.

தொடை ஊற்றின் தேன் துளிக்கும் நறும் தார்—தொடுத்தலாக ஊற்றைப்போலத் தேன் சொட்டும் வாசனையுடைய மாலை.

ஊற்றம்—வலி. பணி—கட்டளை. பணிநீர்க்கங்கை—குளிர்ச்சியுடைய நீரையுடைய கங்கையை. புடை ஊற்றும்—(ஒரு) பக்கத்தில் வடியச் செய்யும்—பாயவிடும். புரந்தரன் - இந்திரன்.

48. என்றனன் என்றலும் முனிவோ(டு) எழுந்தனன் மண்
படைத்த முனி! இறுதிக் காலம்
அன்(று) எனா, ஆம் எனா, இமையோர் அயிர்த்தனர் மேல்
வெயில் காந்த(து!) அங்கும் இங்கும்
நின்றனவும் திரிந்தனவும் சிவந்த கொழும்
கடைப் புருவம் நெற்றி முற்றச்
சென்றன வந்து நகையும் சிவந்தன கண்
இருண்டன போய்த் திசைகள் எல்லாம்.

இ - ள். என்று (இவ்வாறு தசரதர்) கூறினர். • கூறின • உடனே, ('பிரமா முதலிய சகல ஜீவராசிகளோடு உலகத்தைச் சிருட்டிப்பேன்' என்று சிருட்டிக்கத்தொடங்கி ஒருபாகம்) உலகத்தைச் சிருட்டித்து விட்ட(பெருவல்லபமுடைள்ள) விசுவாமித்திரமுனிவர் கோபத்தோடு (புறப் பட) எழுந்தார்! (அவருடைய கோபாக்கினி எங்கும் பரவ, இந்தப் பிர ளய காலாக்கினி இப்போது எப்படிவந்தது, யுகமுடிவுகாலம் வர இன் னும் நெடுங்காலம் உண்டே, ஆதலால் இப்போது உலகமுடிவுகாலம் போலத் தோன்றினும், உண்மையில் உலக) முடிவுகாலம் அன்று என்றும், (இவ் அக்கினி உலகத்தை முடித்தேவிடுமாதலால், இது முடிவு காலமே) ஆம்என்றும் (எது நிச்சயமென்று துணியக் கூடவில்லை யே என்றும்) தேவர்கள் சந்தேகிப்பாராயினர்! (அந்தக் கோபாக் கினியின் புகையினால்) சூரியனும் மறைந்தது! (விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும் உள்ள நிலைபெயர்ந்து சரிக்கும் இயல்புடைய சரப்பொருள்களோடு நிலைபெயராத) அசரப்பொருள்களும் (நிலைபெயர்ந்து) அங்கும் இங்குமாக அலைவனவாயின! (கோபத்தால்) மேலேறிய (உரோம அடர்ச்சி) வளமுடைய (அவருடைய) புருவக்கடைகள் நெற்றிமுழுதும் (வியாபிக்கும்படி மேல்நோக்கிச்) செல்வனவாயின! (கோபச்) சிரிப்பும் உண்டாயிற்று). கண்களும் (அந்தக்கோபத்தாற்) சிவந்தன! (அப்படிப் பட்ட கோபமாகிய நெருப்பினது புகையினால்; மேலேகூறியவாறு, சூரி யன் மறைந்ததேயன்றி) எல்லாத் திக்குகளும் இருண்டுபோயின!

என்றலும் - என்றவுடனே. முனிவு - கோபம். இறுதி - முடிவு. வெயில் - 1. வெயில்; 2. சூரியன். கரந்தது - மறைந்தது. மீ - மேல். நிவந்த - உயர்ந்த - ஏறின. இருண்டன போய் - இருண்டுபோயின. 'திசைகளெல்லாம் போய் இருண்டன' என மாற்றித் திசைகளெல்லாம் (விளங்குதல்) போய் (க் கண்ணுக்குத் தெரியாதனவாக) இருளடைந்தன என்றும் பொருள்கொள்ளலாம்.

இப்பாட்டில் விசுவாமித்திரரது கோபம் அதி காம்பீரியமாய் மிக்க அதிசயம்விளைப்பதாய்ப் பாரித்து வருணிக்கப்பட்டிருக்கிறது.

விசுவாமித்திரரைக்குறிக்க, எத்தனையோ சொற்றொடர்கள் இருக்க, இங்கே 'மண்படைத்த முனி' என்றுகூறியது,—அவர் கோபம், உலகு

முடிவுவந்துவிட்டதோ என்று தேவர்கள்சந்தேகிக்கவும் சூரியன்மறைய வும் திசைகள் இருளவும் செய்ததென்பது அசம்பாவிதமன்றெனக் கொள்ளும்படி பூர்வபீடிகையாகக் கூறியதென உய்த்துணரவைத்தார்.

49. கறுத்த மா முனி கருத்தை உன்னி, "நீ
பொறுத்தி" என்(று) அவற் புகழ்ந்து, "நின்மகற்(கு)
உறுத்தல் ஆகலா உறுதி எய்தும் நாள்
மறுத்தி யோ?" என வசிட்டன் கூறினான்.

இ - ள். வசிட்டர், (இவ்வாறு) கோபித்த விசுவாமித்திரர் (இராம ருக்கு மிக்க நன்மைசெய்யக் கருதியிருக்கும்) கருத்தை ஆராய்ந்தறிந்து கொண்டு, ("அளவற்ற தவவலிமையுடைய நீர் கோபித்தால், யார்தாம் தாங்கவல்லார்" என்று) அவருக்குப் புகழ்மொழிகூறிச் (சாந்தப்படுத்தி விட்டுத் தசரதனைநோக்கி) "உமது மகனுர்க்கு (விசுவாமித்திரரன்றி வேறெவராலும்) அடைவிக்கமுடியாத நன்மைகள் அடையுங்காலத்தில் (அவைகள் அடையவொட்டாமல்) தடுக்கிறீரோ?" என்று கூறினர்.

கறுத்த - கோபித்த. உன்னி - ஆராய்ந்தறிந்து. "உன்னினேன் உனதுள்ளத்தின் உள்ளத்தை உரவோய்" என அநுமார் சக்கிரீவனை நோக்கிக் கூறியதிலும், உன்னுதல் ஆராய்ந்தறிதல் எனப் பொருள்படல் காண்க. பொறுத்தி - பொறுப்பாய். அவற்புகழ்ந்து - அவனைப்புகழ்ந்து 'அவற்புகன்று' என்ற பாடத்துக்கு 'அவனுக்குச் சொல்லி' என்பது பொருள். உறுத்தலாகலா - உறுவிக்கலாகலா -- அடைவிக்கமுடியாத. உறுதி - நன்மை. (சங்க அகராதி); நல்லது (சிந்தா. அரும்பத அக ராதி). மறுத்தியோ - மறுப்பாயோ - தடுப்பாயோ.

50. "பெய்யும் மாரியால் பெருகு வெள்ளம் போய்
மொய் கொள் வேலை வாய் முடுகும் ஆறு போல்,
ஐய, நின் மகற்(கு) அள(வு) இல் விஞ்சை வந்(து)
எய்து காலம் இன்(று) எதிர்ந்த(து)" என்னவே,

51. குருவின் வாசகம் கொண்டு, கொற்றவன்
"திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்(று)" என,
"'வருக' என்றனன்" என்ற லோடும் வந்(து)
அருகு சார்ந்தனன் அறிவின் உம்பரான்,

இ - ள். "மழையினால் பெருகும் வெள்ளங்கள் கடலினிடத்து விரைந்துசென்றடைதல்போல, உம்முடைய மகனுர்க்கு அளவற்ற வித்தைகள் வந்து சேருங்காலம் இன்று நேர்ந்தது" என்று வசிட்டர் கூறத், தசரதர் அவர் வார்த்தையை ஏற்று உடம்பட்டு (த் தூதர்களை நோக்கி " நீங்கள்) போய் இராமனை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று ஏவ, (அவ்வாறே அவர்கள்போய்ச் "சக்கரவர்த்தி உம்மை) 'வருக' என்ருர்" என்றவுடனே அவர்வந்து (தசரதர்) அருகே அடைந்தார்.

மொய் - கூட்டம் (பிங்கல நிகண்டு). மொய்கொள்வேலை - (மூந்தி வந்த வெள்ளக்) கூட்டத்தை (த் தனக்குள்ளாக்கி)க்கொண்டிருக்கின்ற கடல். வெள்ளங்கள் விந்தைகளுக்கும் கடல் இராமருக்கும் உவமான மாதலால், மேற்கூறிய பொருளுக்கேற்ப உவமேயத்தில் முன்னமே வசிட்டர் கற்பித்துத்தந்த வித்தைக்கூட்டங்களைத் தம்முடையனவாக்கிக் கொண்டிருக்கின்ற இராமர் என்று பொருள் வருவித்துக்கொள்க. மூடுகும் ஆறு - விரைந்து அடையும் விதம். விந்தை - வித்தை. கொண்டு— ஏற்றுக்கொண்டு (உடம்பட்டு). திருவின்கேள்வன்—இலக்குமிநாயகன்— விட்டுணுவைப்போன்றவன்—இராமன். கொணர்மின் சென்று என - (தூதரைநோக்கி நீங்கள்) சென்று கொணர்மின் (-கொண்டுவாருங்கள்) என. வருக என்றனன் - (உன்பிதா உன்னைத் தன்பால்) வருவாயாக என்ருன். அருகு —(தசரதன்) அருகு. அறிவின் உம்பரான் - அறிவின் மேலோன் - அறிவுக்குமேற்பட்டவன் - அறிவுக்கெட்டாதவன் - கடவுள் (அவதாரமானவன்—) இராமன். 'திருவின் கேள்வன்' தசரதர் கூற்று. 'அறிவின் உம்பரான்' கம்பர்கூற்று. தசரதருக்கு இராமர் விட்டுணுவின் அவதாரமென்பது தெரியாததலால், 'திருவின் கேள்வன்' என்பதற்கு விட்டுணுவின் அவதாரமான இராமன் என்று பொருள் கூறவில்லை.

'கொணர்மின்' என்பதற்குமுன் 'தூதரைநோக்கி' என்று சொல்லற்பாலது, சொல்லாதிருக்கவும் விளங்குகின்றது. அத்தூதர் இராமனை அடைந்து அவனைநோக்கி, 'உன் தந்தை உன்னைத் தன்பால்வருக என்றனன்' எனக் கூறற்பாலதை 'வருக என்றனன்' எனச் சுருக்கிக் கூறியநிற் பொருள்விளக்கம் அமையாதிருக்கவில்லை. இவ்வாறுக, இப்

4

பாட்டு, 'சுருங்கச் சொல்லல்' 'விளங்கவைத்தல்' என்ற ஒன்றுக்கொன்று இயல்பிலே முரணான இரண்டுவனப்புக்கள் ஒருங்கே அமைய இயற்றப் பெற்றிருப்பது கவனிக்கத்தக்கது.

52. வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நால் மறை முனிக்குக் காட்டி, நல்
தந்தை நீ, தனித் தாயும் நீ இவர்க்(கு)
எந்தை! தந்தனன்: இயைந்த செய்(க) என்றான்.

இ - ள். (தம் அருகு) வந்த இராமனைத் (தசரதர்,) இலக்குமனைரோடு விசுவாமித்திரருக்குச் சுட்டிக்காட்டி. "இவர்களுக்கு நீரே தாயும் தந்தையும்: (தேவரீர் கேட்டபடியே) இவர்களை உமக்கு(அடைக்கலமாக)க் கொடுத்தேன். (இவர்களைக்கொண்டு உமக்கு) வேண்டிய காரியங்களைச் செய்துகொள்வீராக" என்றார்.

நம்பி - ஆடவரிற் சிறந்தோன் - இராமன். தம்பி - இலக்குமணன்' முந்தை - பழமை. காட்டி - சுட்டிக்காட்டி. எந்தை! - எமது தந்தையே. இயைந்த - இயைந்தவை - பொருந்தியவை - பொருத்தமான காரியங்கள்.

[அவ்வாறு கொடுத்த குமாரரை ஒப்புக்கொண்டு முன்கொண்ட கோபத்தை நீக்கித் தசரதரை வாழ்த்தி, இனி நாம் தொடங்கிய வேள்வியை முடிக்கச் செல்வோமென்று விசுவாமித்திரர் புறப்பட்டார். இராமரும் இலக்குமணரும் தசரதருயிர் அவரைப் பிரிந்துசென்றாற்போலவும் விசுவாமித்திரரை நீங்காமல் அவர் நிழல்சென்றாற்போலவும் சென்று அயோத்தியைக் கடந்து சரயுநதியைத் தாண்டி அத்தமனசமயத்தில் ஒரு சோலையை அடைந்தார்கள். "அது யாது" என்று இராமர் விசுவாமித்திரரைக் கேட்டார்].

தாடகைவதைப்படலம்.

"சிவன் மன்மதனை எரித்தகாலத்தில் அவன் அங்கம் (-எலும்பு) விழுந்ததனால், இந்த இடமெல்லாம் அங்கநாடு எனப் பெயர்பெற்றது. இந்தச்சோலை காமாச்சிரமம் என வழங்கலானது" என்று விசுவாமித்திரர்கூறிப் பின்னும் கூறுவார்.]

53. பற்(று) அவா வேரொடும் பசை அறப், பிறவி போய்
முற்ற, வால் உணர்வு மேல் முடுகினர் அறிவு சென்(று)
உற்ற வா னவன் இருந்(து) யோகு செய் தனன் எனில்,
சொற்ற ஆம் அளவதோ! மற்(று) இதன் தூய்மையே.

இ - ள், (யான் எனது என்னும் இருவகைப்) பற்றும் ஆசையும் வேரோடு (முழுதும்) ஈரப்பசையற்றுக் கெட்டழியவும், பிறவி அற்றுப் போயொழியவும் மெய்யுணர்வு (பரம்பொருளை அறியும்படி) மேல்(நோக்கி) விரைந்து சென்றார் (ஆகிய ஞானி)களின் அறிவு (முடிவாகச்) சென்று அடையும் (திருவடிகளையுடைய) பரமசிவன் இவ் ஆச்சிரமத்திலிருந்து யோகஞ்செய்தாரென்றால், இதன் தூயதன்மை சொல்லுக்கடங்கும் தரத்தினதாமோ!

பற்று - முன்னமே அடைந்திருக்கிற பொருள்களின்மேலுள்ள அபிமானம். அவா - அடையாத பொருள்களை அடைய விரும்பும் இச்சை. 'பற்று அவா' என்பவைகளைப் 'பற்று ஆர்வம்' என்பர் சிந்தாமணி யாசிரியர். "பற்று - உள்ளதன்மேற்று. ஆர்வம் - பெறக்கடவதன் மேலது" (சிந்தாமணி அரும்பத அகராதி). பற்று அவா வேரொடும் பசை அற - பற்றும் அவாவும் என்னும் மரங்கள், இலை வளார் கொம்பு கிளை பணை தூரேயன்றி வேரும் ஈரப்பசையற்றொழிய. வால் - அறிவு - மெய்யுணர்வு. வானவன் - தேவன் - மஹாதேவன் - சிவன். சொற்ற (- சொன்ன) ஆம் அளவதோ - (இதுவரை) சொல்லப்பட்டனவாம் அளவினதோ - (இவ்வாச்சிரமத்தின் தூயதன்மை இதுவரை தன்னைப்பற்றிப் பலராலும் வியந்து) சொல்லப்பட்டன ஆகிய அளவுடையதோ (அன்று: அவ்வளவுக்கு மேற்பட்டது).

அறியாமை அல்லது மயக்கஅறிவு காரணமாக உண்டாகும் பற்றும் அவாவும் ஒழியப் பிறப்பொழியும், பிறப்பொழிய வீடு (-இறைவன் திருவடியடைதல்) சித்திக்கும் என்ற ஞான விஷயம் இப்பாட்டிற் கூறப்பட்டது. இதனைச் சுருக்கமாக "அற்றது பற்றெனில், உற்றது வீடு" என்னும் ஞானவாக்கியத்திற் காணலாம்.

[அன்று அவர்கள் அங்கே தங்கி மறுநாள் உதயம் ஒரு பாலை நிலத்தை அடைந்தார்கள்].

54. பரிதி வான வன் நிலம் பசை அறப் பருகுவான்
விருது மேற் கொண்(டு) உலாம் வேனிலே அன்றி வே(று)
இருது ஒன்(று) இன்மையால், எரி சுடர்க் கடவுளும்
கருதின் வேம் உள்ளமும்! காணின் வேம் நயனமும்!

இ - ள். (அந்தப் பாலைநிலம்) அதன் ஈரப்பசை முற்றும் அற்றுப்போம்படி உறிஞ்சிவிடச் சூரியன் வெற்றிக்கொடியை மேல் உயர்த்துப் பிடித்துக்கொண்டு சஞ்சரியாநின்ற கோடைப்பருவமொன்றேயன்றி வேறெந்தப்பருவமும் (அந்தப் பாலைநிலத்தில் எக்காலமும் வருதல்) இல்லாததனால் (அந்த நிலத்தை) அக்கினிதேவனே சிந்திப்பானானால் அவன் சிந்தை வெந்துவிடும்! காண்பானாயின், கண்ணும் வெந்துவிடும்!

பரிதி (- சூரியன்) வானவன் (-தேவன்) -சூரிய (னாகிய) தேவன். பருகுவான் - பருகும்படி, குடிக்கும்படி. விருது - வெற்றி, வெற்றிச் சின்னம் - வெற்றிக்கொடி. மேல் கொண்டு - மேலாகக்கொண்டு. உலாம் - உலாவும், சஞ்சரிக்கும். வேனில் - கோடை. இருது - பருவம். எரி சுடர்க்கடவுள் - சுவாலிக்கும் அக்கினிதேவன். கருதின் - கருதினால். வேம் - வேகும்.

55. படியின்மேல் வெம்மையைப் பகரினும், பகரும் நா
முடிய வேம்! மூடிய மூ(டு) இருளும் வான் முகடும் வேம்!
விடியுமேல் வெயிலும் வேம்! மழையும் வேம்! மின்னினோ(டு)
இடியும் வேம்! என்னில் வே(று) யாவை வே வாதவே!

இ - ள். (அந்தப் பாலை) நிலத்தில் உள்ள வெப்பத்தை(ப்பற்றி)ச் சொன்னாலும் சொல்லும் நாக்கு முழுதும் (அடியோடு) வெந்துபோம்! (அந்த வெப்பத்தால், அந்த நிலத்தை) முழுதும் மூடிய இருளும் ஆகாய முகடும் வெந்துவிடும்! விடியுமானால் (அந்நிலத்தின் மேல் எறிக்கும்) வெயிலும் வெந்துவிடும்! (அந்நிலத்துக்கு மேலாகவந்தால்) மேகமும் வேகும்! அந்நிலத்தில் (மின்னும்) மின்னும் (இடிக்கும்) இடியும் வெந்துவிடும்! என்றால், வெந்துவிடாதபொருள்கள்தாம் யாவை இருக்கின்றன.

படி - நிலம் - அந்தப்பாலைநிலம். முடிய வேம் - முழுதும்வேகும். மூடிய மூடு - (அந்த நிலம்) முழுதும் மூடிய. வேவாத - வேகாதவை.

56. விஞ்சு வான் மழையின் மேல் அம்பும் வே லும் படச்
செஞ்செவே செரு முகத்(து) அன்றியே, திறன் இலா
வஞ்சர் தீ வினையினால், மானம் ஆம் மணி இழந்(து)
அஞ்சினார் நெஞ்சு போல் என்றும் ஆ றா (து!) அரோ.

இ - ள். மிகுந்த மழைத்தாரைகளினும் அதிகமாக அம்புகளும் வேல்களும் தாக்க, மிக நேர்மையாக (க் கிரமமான) யுத்தத்திலே (இயல்பாகத் தோல்வி அடைதல்) அல்லாமல், (போர்செய்யும்) வல்லமையில்லாத வஞ்சகர்களது (யுத்தமுறைக்கு விரோதமாக, எதிர்நில்லாமல், பின்புறத்து நின்று காயப்படுத்தல்போன்ற கபடமான) கொடிய செய்கையால் மானமாகிய மணியை யிழந்து (அநியாயமாகவும் அவமானமாகவும்) தோல்வியடைந்தார் (ஆகிய வீரர்) களுடைய மனம் (கொதிப்பு) ஆறாதது போல, என்றும் கொதிப்பாறாதது (அந்தப் பாலைவனம்).

வான் - மேகம் - மேகத்தின். மழையின்மேல் - மழைத்தாரையினும் அதிகமாக. மான மா மணி யெனக்கொண்டால், மான மென்னும் பெரிய இரத்தினம் என்பது பொருளாம். "அஞ்சல் - தோல்வி (பிங்கலம்)".

57. தா வரும் இரு வினை செற்றுத், தள் அரும்
மூ வகைப் பகை அரண் கடந்து, முத்தியில்
போவது புரிபவர் மனமும் பொன் விலைப்
பாவையர் மனமும் போற் பசையும் அற்றதே.

இ - ள். (நல்வினை தீவினையென்னும்) இருவினைகளாகிய காடுகளாம் கோட்டைப்புறத்து அரண்களையும் தொலைத்து, (காமம் வெகுளி மயக்கமென்னும்) மூன்றுவகைப் பகைக்கோட்டைகளைத் தாண்டி, முத்தி (நகரத்தில் ஜெயசாலிகளாய்ச்) சேர்தற்கு விரும்புவோரது மனத்தையும் வேசையரது மனத்தையும் போல ஈரப்பற்று இல்லாதது (அந்தப் பாலைவனம்.)

தாவரும் - துன்பம்வரும் - துன்பம் வருதற்குக் காரணமான. இருவினை - நல்வினை தீவினை. நல்வினையும் பிறவிக்குக் காரணமாதலால் துன்பம்தரும் வினையென்றார். இருவினைக்குப் பெரியவினையென்றும் பொருள் கொள்ளலாம். செறுதல் - அழித்தல். செற்று - அழித்து,

தள் அரும் - நீக்குதற்கரிய. மூவகை-மூன்றுவகை. அரண்-கோட்டை. புரிபவர் - விரும்புபவர். பொன்விலைப் பாவையர் - (போகத்துக்குப்) பொன்னை விலையாகக் கொள்ளும் பெண்கள் - வேசியர். பசை - 1. பற்று (செய்யுள்வழக்கு, சிந்தாமணி அரும்பதவுரை); 2. ஈரம் (உலகவழக்கு). முத்தியை விரும்புவோர்மனம் ஈசன் திருவடிப் பற்றன்றி வேறு பற்றில்லாதது; வேசியர்மனம் பொருட்பற்றன்றி வேறு பற்றில்லாதது; பாலைவனம் கொதிப்புப்பற்றன்றி வேறு பற்றில்லாதது - ஈரப்பற்றில்லாதது.

[இராமர், "தசரதர்நாட்டில் ஒருபகுதி இவ்வாறு அழிந்ததற்குக் காரணம் யாது?" என, விசுவாமித்திரர் கூறுவார்.]

58. பெருவரை இரண்டொடும் பிறந்த நஞ்சொடும்
உரும் உறழ் முழக்கொடும் ஊழித் தீயொடும்
இருபிறை செறிந்(து) எழு கடல் உண்டாம் எனின்,
வெருவரு தோற்றத்தள் மேனி மானுமே.

59. சூடக அர(வு) உறழ் சூலக் கையினள்,
கா(டு) உறை வாழ்க்கையள், கண்ணிற் காண்பரேல்,
ஆடவர் பெண்மையை அவாவு தோளினாய்!
தாடகை என்ப(து) அச் சழக்கி நாமமே.

இ-ள். புருடர்கள் (எப்படிப்பட்டதோள்களைக்) கண்களாற்காண்பாரானால் அவைகளின் அழகில் ஈடுபட்டு அவைகளைத்தழுவப் பெண்ணாகப் பிறந்தோமில்லையே யென்று) பெண்தன்மை (அடைய) விரும்பு(வார்களோ, அப்படிப்பட்ட) தோள்களையுடையவரே! யுகமுடிவுகாலத்துத் தீயும் (இரண்டு) ஆலகாலவிடமும் இரண்டு பிறையும் இரண்டு மலையும் இடிமுழக்கமும் பொருந்தித்தோன்றும் (பெருங் கருங்) கடல் (ஒன்று)உண்டாமானால், அந்தக்கடல், (பெருநெருப்புச் சுவாலித் தெரிதல்போன்ற செம்பட்டைத் தலைமயிரும் இரண்டு ஆலகாலவிடங்கள் போன்ற பெரிய கரிய கொடிய கண்களும் இரண்டு பிறைகள்போன்ற கோரப்பற்களும் இடிமுழக்கம்போன்ற ஆரவாரமும் ஆகிய இவைகளோடு பார்த்தோர்) பயப்படும்படியான தோற்றமுடைய (இந்தப்பிரதேசத்தைப் பாழ்படுத்திய) வள் தேகத்தை ஒக்கும் அவள் பெயர் தாடகை.

பிறந்த நஞ்சு - கடலில் (தேவர்கள் அமுதத்துக்காகக் கடைந்த காலத்தில்) உண்டாகிய ஆலகாலவிடம். உறும் - இடி. உறழ்தல்-உவமையாதல். செறிதல் - இயைதல் - பொருந்தல். எழுதல் - தோன்றுதல். வெருவால் — பயப்படல். வெருவருதோற்றத்தள் - பயப்படுதற்குக் காரணமான தோற்றத்தையுடையவள். மானும் - ஒக்கும்.

சூடக அரவு உறழ் சூலம் - (கையில் அணிந்த) சூடகமாகிய (படம்விரிந்த) பாம்புபோலும் (ஒடுங்கி நீண்ட உடலும் பரந்த தலையும் உடைய) சூலாயுதம். சூடகம் - கைவளை. 'சூடக அரவு உறழ் கை' எனக் கூட்டிச் சூடகமாக அணிந்திருக்கிற பாம்புபோன்ற கை யென்றும் பொருள் கூறலாம். பின்வரும் காஞ்சிப்புராணப் பாட்டிலும் பாம்பைக் கைக்கு உவமானமாக வருணித்திருத்தல் காண்க.

முருகு கொப் புளிக்கும் கொன்றை நறுந் தொடை முடித்த வேணி
ஒருவர் வாள் முகத்துக் கண்ணாய் உறையினும், விடேங்கள் என்(று) அவ்
இரு திறத்(து) அரவும் கூடி எல்லை பார்த்(து) உண்ட(து) ஒக்கும்,
விரி மலர்க் காங்கள் தம்மால் விழித் துணை புதைத்த தோற்றம்.

காடு உறை - வனங்களில் வாழ்கின்ற. சழக்கு-நீதிக்குமாறானது; வழக்கிற்குமாறானது என்பது கருத்து (உ - ம்).

'இழக்கின்றேன் மைந்தனையென் றெல்லீருஞ் சொல்லியவிச்
சழக்கின்று நானிசைந்தாற் றருமந்தான் சலியாதோ'
பெரிய புரா. திருவாரூர்-௩௫. (சங்க அகராதி)

60\. "உளப் பரும் பிணிப்பு உறு உலோபம் ஒன்றுமே
அளப்பு அரும் குணங்களை அழிக்கும் ஆறு போற்,
கிளப்பு அரும் கொடுமைய அரக்கி, கேட்(டு)இலா
வளப் பரும் மருத வைப்(பு) அழித்து மாற்றினாள்."

இ - ள். "உலோபகுணம் ஒன்றே (எனினும் அது ஒருவனது) உள்ளத்தின் பெரியபந்தமாக உற்று, (அவனுடைய) அளவற்றநற்குணங்களை அழிந்து விடுதல்போல, சொல்லமுடியாத கொடுமைகளையுடைய (இந்த) இராட்சசி, (முன்) குறைவில்லாத வளப்பத்தையுடைய விசாலமான மருதநிலமாயிருந்த (இந்த இடத்) தை (அடைந்து இதன் வளங்களெல்லாவற்றையும்) அழித்து (ப் பாலைநிலமாக) மாற்றினாள்."

பரும் - பருமையான - பெரிய. பிணிப்பு - கட்டு. உறு - உற்று. அளப்பு அரும் - அளத்தல் அரிய - அளவற்ற. ஆறு - விதம். கிளப்பு

அரும் - சொல்லுதல் அரிய - சொல்லமுடியாத. கேடு - குறைவு. (உ-ம்) "வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை" (நாலடி-கசச) சங்க அகராதி. வளம் (உடைய) பரும் (-பெரிய-விசாலமான) மருதவைப்பு (-மருதநிலம்). வைப்பு - இடம், இங்கே நிலத்தைக் குறித்தது.

ஒருவனது எல்லா நற்குணங்களும் நிறைந்திருந்த மனத்தில் உலோபகுணம் ஒன்று தோன்றுமானால், அது அந்த நற்குணங்கள் அனைத்தையும் நாசமாக்கி அம் மனத்தைப் பாழ்மனமாக்குதல்போல, சகலவளங்களும் நிரம்பியிருந்த மருதநிலத்தில் தாடகை ஒருத்தி தோன்றி எல்லா வளங்களையும் அழித்து அந்தநிலத்தைப் பாழ்நிலமாக்கினாள் என்பது கருத்து.

61\. அங்(கு) இறைவன் அப் பரிசு(உ) ரைப்ப அது கேளாக்,
கொங்(கு) உறை நறைக் குல மலர்ச் சென்னி குலுக்கா,
"எங்(கு) உறைவ(து) இத்தொழில் இயற்றுபவள்?" என்றான்,
சங்(கு) உறை கரத்(து) ஒரு தனிச் சிலை தரித்தான்.

இ - ள். என்று இவ்வாறாகத் தவராசராகிய விசுவாமித்திரர்கூற, (திருமாலாக இருந்தபோது) சங்குதங்கிய இடக்கையிலே (தசரத குமாரராய்) வில்லைத்தாங்கிய (இராம) வர் கேட்டு, வாசனைதங்கிய மலர்மாலையணிந்த (முடித்) தலையை (அப்படியா! என்று) அசைத்து "இப்படிப்பட்ட (கொடிய) தொழில்செய்பவள் தங்குவது எங்கு?" என்றுகேட்டார்.

இறைவன் - 1. இராசன் - தவராசன் ஆகிய விசுவாமித்திரன். 2. திரு. அப் பரிசு - அவ்வாறு. கொங்கு - வாசனை. நறை - தேன். குலமலர் - சிறந்தபுட்பம். சென்னி - சென்னி - தலை. குலுக்கா - குலுக்கி-அசைத்து. தனிச்சிலை - ஒப்பற்றவில்.

இங்கே இராமர் தலையசைத்துக்கேட்டதைக் கம்பர், நமது மனக் கண்ணெதிரே இப்போதுதான் நிகழ்வதுபோலத்தோன்றும்படி, தொனி வருணனைகளும் சொல் இயைபுகளும் கொண்டு, கவிப்படத்திற் சித்திரித்திருப்பது கவனித்து நோக்கிக் களிக்கத்தக்கது. இராமர் திருமாலின் அவதாரம் என்பதைச் 'சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்' என்று நயம்படக் கூறியதும் மிக்க மகிழ்ச்சி விளைக்கின்றது.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

புதியகல்விமுறை.

மாண்டிஸோரிமுறை.

III

[௧௮௧-ம் பக்கத் தொடர்ச்சி].

நான் காட்சியளவையால் ஆராய்ச்சிச் சாஸ்திரத்துக்குச் செய்த வேலை யாதெனில், மூன்றுமுதல் ஆறாண்டுவரையுள்ள இளங்குழந்தைகளுடன் பழகநேர்ந்ததில் அவர்களை யுற்றுநோக்கி, அவர்களது செய்கைகளைக் கண்டறிந்து, ஒருமுடிவுக்குவந்ததேயாம். ஒரு குழந்தை ஒன்றை முதன்முறையாகக் கண்டால் அதனை ஓபாது திரும்பத்திரும்பப் பார்த்துச் சலிப்படைந்தபின்னரே அதனை நிறுத்துகின்றது. அவ்வாறுசெய்வதில் அதற்குக் களைப்பில்லை. அது தன்வேலையில் ஊக்கமாகவிருக்கும்போது பக்கத்தில் எது நடந்தபோதிலும், என்ன இருந்தபோதிலும், கவனிப்பதில்லையென்பதையும் கண்டேன். இதனால் ஒருவன் தனது வாழ்நாளிற் பல துறைகளிற் படர்ந்தாலும் அவனுள்ளத்திற்கேற்றதொரு பொருள் தோன்றும்வரை அவனது மதிவலி புலப்படாது. அது வெளிப்பட்ட பின்னரே அவனைப் பலரும் அறிஞனென்பர். ஆகையால் இதற்கு அடிப்படையாகநிற்பது கவனம்.

உளவர்ச்சி, (Physical Development) பக்கத்திலுள்ளவற்றைக் கண்ணுற் காண்டலினாலுண்டாகின்றதெனலாம். சிசுக்களின் சரீரம் வளருதற்குத் தாய்ப்பால் ஏற்பட்டிருப்பதுபோல, அவற்றின் உளம் விருத்தியடைதற்குப் பக்கக்காட்சிகளும் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் அக்குழந்தைகளை இன்னதுதான்செய்யவேண்டுமென நாம் வற்புறுத்துவதற்குப் பதிலாக அவைகளுக்குத் தேவையானவை எவையெனக் கவனித்து, அப்பொருள்களையெல்லாம் அவைகள் பார்வைக்குக் கொண்டுவருதல் நன்மைபயக்கும்; என்றாலும் வெளிப்புற ஊக்கத்தின் வகையும் அளவும் இவைதாமெனக் காட்ட இயலும். சிறு குழந்தை

கள் சிறு பொருள்களிடத்தில் அதிகப் பற்றைக் காட்டும். சில வர்ணங்களைக் கண்டு களிப்படையும். சில வட்டமாயும், சதுரமாயும், கோணமாயும் உள்ள பொருள்களைக்கண்டு வியப்படையும். சில மண்ணாற் செய்யப்பட்ட பொருள்களைக்கண்டு மனமகிழும். எவ்வகைப் பொருள்களைக்கண்டால் ஒவ்வொன்றும் அதிகவிருப்பும் விடாமுயற்சியுங் காட்டுகின்றனவோ அப்பொருள்களிடத்து அவை அவ்வகையிற் பற்றுடையனவெனக் காணலாம்.

இனி அளவைப்பற்றிக் காண்போமாயின் மூன்றுவயதுக்குட்பட்ட பிள்ளைகட்குற்றது ஆறுவயதுக்குட்பட்ட பிள்ளைகட்குப் பொருந்தாது. சிறுகுழந்தைகள், பெரியோர் பல்லாங்குழியில் விளையாடக்கண்டபோது தாங்களும் அவர்களைப்போல விளையாட எண்ணிப் பல்லாங்குழியிற் காய்களைத் தாறுமாறாகப் போடுகின்றன. சற்று வயதுமுதிர்ந்த பிள்ளைகளோ அதன் எண்ணிக்கைகளை அறியாமற்போனபோதிலும், சிறுகுழந்தைகளைக் காட்டிலும் சற்றுப் புத்தியோடு விளையாடுகின்றனர் என்பதைக் கண்கூடாக அறிவோம். இந்த ஒரு உதாரணத்தாலேயே அளவு வயதுக்குத் தக்கபடி மாறும் என்பது தெளிவு. என்றாலும், ஒரு குழந்தையின் தேவைக்கு அதிகமாகப் பொருள்களை நிரப்பினாலும் அக்குழந்தை பல பண்டங்களைக்கண்டு இதனிற்றான் தன்மனம் பற்றுகின்றது எனக் கண்டறிய இயலாமல் தத்தளிக்கும்; ஆதலால் அப்படியும் செய்யவிடக் கூடாது. குறைவாக இருந்தாலும் துன்பமேயொழிய இன்பமுண்டாகாது. (சில குழந்தைகள் விடாது அழுவதையும், அவற்றையுடையோர் அவ்வழுகையைநிறுத்தப் பல பண்டங்களைக் காட்டியும் ஓயாது அழுவதையும், அவை தாம் நினைத்தபொருளைக் கண்டமாத்திரத்தே அழுகையை நிறுத்தி அப்பொருளை வெகு ஆசையோடு எடுத்தணைத்துக்கொள்வதையும் அறிவோம்.) ஆகையால், குறைவானபொருள்களை வைப்பதும் தகுதியன்று. விருப்பப்படிவிடுவதும் தகுதியன்றெனினும், குழந்தையின் உளவளர்ச்சிக்குச் சுயேச்சையே வேண்டியிருப்பதால் அக்குழந்தையை நல்வழியிற் புத்திசெலுத்துமாறு இயக்குவித்தல் வேண்டும்.

மேலும், மூன்றுவயதுக்குழந்தை தன் மனதுக்கிசைந்த ஒரு செய்கையை நாற்பதுதடவை செய்யுமானால் ஆறுவயதுடைய ஒருகுழந்தை

அதற்குகந்த செய்கையை இருநூறுதடவை செய்ய இயலும். இதனால், மூன்றுவயதுக் குழந்தைக்குற்றது ஆறுவயதுக் குழந்தைக்கு ஏலா தென்பது புலப்படும். மேலும், வயதுக்குத்தக்கவேலையே கொடுக்கப் படல் வேண்டும். மூன்றுவயதுக் குழந்தையை எழுதும்படிசெய்தல் சாத்தியமோ ? இல்லையல்லவா ? பெரும் வரிவடிவுடைய எழுத்துக்களைத் தாமேதொடும்படியும் தடவும்படியும் குழந்தைகளை விட்டுவிட்டால் அவை கள் எழுத ஆரம்பிக்கும்போது எழுத்துக்களின் உருச் சரியாக எழுதப் படலாம். அதனால் கைத்தசைகளுக்கும் ஒருவித நன்மை ஏற்படும். இதுவே நான் இந்தச் சாத்திரத்துக்குச்செய்த முதலுதவியாம்.

வெளித்தோற்றம் உளவளர்ச்சி ஆரம்பிப்பதற்குமட்டும் வேண்டும். பின்னர் எப்பொழுதும் வேண்டியதில்லை. எவ்வாறு ஆகாயவிமானத் துக்கு விமானம் புறப்படும் இடம் தேவையோ அதுபோலவே உளவளர்ச் சிக்கும் வெளித்தோற்றங்கள் தேவையாயிருக்கின்றன. முன்னர்க் கூறி யாங்குப் புலனுகர்ச்சியால், குழந்தைகளின் குணத்தையும் அளவையும் கண்டு உள அறிவை வளர்த்துப் பலப்படுத்தவேண்டும். குழந்தைகள், இவ்விதம் சிறிதுசிறிதாக மனத்திற் பொருள்களை ஏற்றுப் பலமடைவ தால் வேகமாக வளர்ந்து சமநிலையால் ஒழுங்கையும் அடைகின்றன. இவ்விதம் அடைவதால் அவற்றின்கல்வி விருத்தியாக இடமுண்டா கிறது. இங்ஙனம் கல்விகற்கப்பழகுவதால் அது ஒரு வேலையாக முடிந்து பழக்கமாகிவிடுகிறது. பழக்கமாகவே அறிவு தன்னளவில் முற்றி ஒழுங்கான வேலைசெய்ய இடம் தருகிறது. இவ்வளவு நூற் றத்துவங்களையும் காண்பதற்குற்றவழியாவது:—

குழந்தைகள் ஒருவேலையில் அதிகநேரம் செலவிட்டால் அதனையும் அவ்வேலை என்ன ? எவ்வளவுகாலம் செலவிடுகின்றன? என்பவற்றையும், குறித்தவேலையில் அக் குழந்தைகள் செய்யும் விநோத நடவடிக்கைகளை யும், ஒரேநாளில் அவை ஒரு குறித்தவேலையைச்செய்ய எவ்வளவுதரம் முயல்கின்றன என்பதையும், விடாமுயற்சியோடு செய்கின்றனவா வென் பதனையும், குறித்தவேலையையே சிலதினங்கள்வரைசெய்தால் எத்துணை முறைசெய்கின்றன என்பதனையும், மேலே விருத்தியடைய அவை எப் படிச் செய்கின்றன என்பதையும், அதைப்போன்ற வேறு ஏதாவதொரு வேலையைச் செய்கின்றனவா என்பதையும், பக்கத்தில் மனதைக் கவரக்

கூடிய வேறுவேலைகள் நடந்தும், அவற்றைக் கவனியாது, தாம் கொண்ட முயற்சியிற் கண்ணுங்கருத்துமா யிருந்தமாயின் அதனையும், வேண்டுமென அவற்றின்மனம் பிரிக்கப்பட்டகாலத்தும், அவை தாம் கொண்ட முயற்சியிலே மனத்தைச் செலுத்துமாயின் அதனையும், அவற்றின் நடவடிக்கைகளில் ஒழுங்கு, ஒழுங்கீனம் இரண்டையும், ஒருவேலையைச் செய்யுங்காலத்து அவற்றின்குணம் மாறுபடுமாயின் அதனையும், ஒழுங்காக வேலைசெய்யும்போது இன்பமேலீடு, சாவதானம் அன்பு இவைகளிருக்கின்றனவா என்பதனையும், தோழர்களின்வளர்ச்சியில் இவற்றின்செயல் என்ன என்பதனையும், அவற்றை அழைத்தவுடன் வருகின்றனவா என்பதனையும், பிற குழந்தைகளின் வேலைகளில் இவை புத்திசாலித்தனமாக நடந்துகொள்ளுகின்றனவா என்பதனையும், இவை அழைத்தவுடன் எப்பொழுது சரியாகவருகின்றன என்பதையும், கட்டளைக்குப் பணிவு எப்பொழுது உண்டாகிறதெனபதையும், சொல்லுவதற்குமுன் சந்தோஷமாகக் கீழ்ப்படிவது எப்பொழுது என்பதையும் கவனித்துக் குறித்துக்கொள்வதாம்.

IV. ஆசிரியனமைதி.

மக்களின்மனம் மாறுபடுந்தன்மையை யூன்றிநோக்குதலே உளநூலின் உண்மையாம். அவ்வாறு ஊன்றிநோக்குவதே தொழிலாக ஒரு கலாசாலை வெகுசீக்கிரமாக ஏற்படவேண்டும். அங்ஙனம் உண்டாகுமாயின், அதுவே சிறுவர்களைத் தகுந்தவழியிற் பழக்கவும், கல்விகற்பிக்கவும் ஏற்ற இடமாகும். ஆயினும், அதற்கு முதற்காரணமாயிருப்பது ஆசிரியனது அமைதியாம், (The preparation of the teacher). சாதாரணமாகப் புதிய பூதபௌதிகநூல்களிற் பழகுவார்க்கு, அவைகளைக் கண்டுபிடிக்குமுன்னம் எவ்வளவு அடக்கமும் ஊக்கமும் விடாமுயற்சியும் வேண்டியிருக்கிறது என்பது நன்குவிளங்கும். பௌதிக நூல் விற்பன்னன் ஒருவன் ஒருவஸ்துவை ஆராயுமுன் அவ்வஸ்துவையும் அதனை வைக்குமிடம் முதலியவற்றையும் சுத்தம்செய்துகொண்டு ஆராய்ந்து அறிஞன் எனப் பெயர்பெறுகிறான். அதுபோலவே, கவிஞனும் ஒவ்வொருநூலையும் வெகுநாள் பிரயாசப்பட்டுப் படித்துக் கவிபற்றிக் கவிஞன் எனப் பெயர்பெறுகின்றான். ஆயினும், அவர்கள்,

முதன்முதலாகவே (அதாவது பிறக்கும்பொழுதே) அறிஞன், கவிஞன் எனப் பிறப்புரிமையாகப் பேர்பெற்றுவந்தனரோவெனில் இல்லை; நாளடைவில் தமது விடாமுயற்சியினால் அப்பெயர் பெற்றார்கள். ஆயினும், அவர்கட்கு முன்னாளில் ஒருவிதமானபெருமையிருந்ததுடன், அவர்கள் சொல்வதை மற்றவர் கேட்டு அதன்படி நடப்பதும் இருந்தது. இந்நாளிலோ நூலாராய்ச்சியின்திறனால் ஒவ்வொன்றையும் கண்கூடாகக் காணவேண்டுமென்கின்றனர். இவ்வாறு கண்கூடாகவிளக்குவதைப் பிரத்யக்ஷப்பிரமாணம் (Experimental Science) என்று பெயரிட்டு வழங்குகின்றனர். அவ்வாறு முன்னர்ச் செய்துவந்த ஆசிரியன் இப்போது தான் ஒரு தாழ்ந்த நிலையிலிருந்துகொண்டு மாணவர்களைக் கொண்டு செய்யும்படி ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஆசிரியனுக்குள்ள மரியாதை குறைகிறதென்று கொள்ளக்கூடாது. அங்ஙனம் தான் முன்னர்க் கொண்டகொள்கையைப் பலரும் சோதித்து அறியும்படி செய்வானாகில் இவன்பெருமை அளவிலடங்காததாம். ஆகையினால் இதற்கு அடக்கம் இன்றியமையாதது. இவ் வடக்கம் எளிதில் வரக்கூடியதன்று; இதனை ஆசிரியன் உடையனாயிருத்தல்வேண்டும்.

அடுத்தபடியாகப் பொறுமை (Patience) வேண்டும். இதுவின்றி எக்காரியமும் நடைபெறாது. சாதாரணமாக, நூல்களையறியாதவர்களுக்கு அவைகளை யெடுத்துச்சொல்லமுன்வந்தோமானால், அவர்கட்கு நாம்கூறும்விடயங்களை வெகுசீக்கிரம் சொல்லாவிடில் அவர்கள், தங்கள் வேலைகளெல்லாம் பாழாய்விட்டனவென்றும், அதுவரை காலம் வீணே கழிந்ததென்றும் எண்ணுகின்றனர். ஒருவன் ஒரு விஷயத்தைப் பிறர்க்குச்சொல்லவேண்டுமாயின், அவன் வெகுஜாக்கிரதையாகவும், பிறர்கூறும் பழிப்பைக் கவனியாதவனாகவும் இருந்து சொல்லவேண்டும். அவ்வாறுசெய்வானாயின் அவனிடம் பொறுமை மிகுந்துவிடும். இதைப் பொறுமை ஆசிரியரிடத்தில் இருக்கவேண்டியது அவசியம். இப்பொறுமையென்பது இல்லையாயின், அவர்கள் தம் மாணவர்களுக்கு ஒன்றும் கற்பிக்க இயலாதுபோவதுடன் உளநூலின் உண்மைகளையறியவும் இயலாது. அன்றியும், பொருள்நூல், ஒளிநூல், ஒலிநூல், பிரகிருதிநூல் முதலிய நூலறிஞர்கட்கெல்லாம் அந்தந்தநூல்களில் வல்லமைவேண்டுமேயொழிய மற்றவைகளில் வல்லமைவேண்டியதில்லை; இருக்கவும் மாட்டாது. சிறுவர்களையுஞ் சிறுமிகளையும் பழக்கும் ஆசிரி

யர்க்கோ ருஷிகளைப்போன்று எல்லாவிடயங்களிலும் பொறிவுடைமை வேண்டும். பொறிவுடைமையின்றேனும் அவற்றிற் சொற்ப அறிவும் அது இருத்தற்கு முதற்காரணமாக அடக்கமும் பொறுமையும் இன்றி யமையாதனவாம்.

V. சுற்றிருப்பு.

முன்னர் ஆசிரியன் இவ்வாறு அமைதிபெறுதல் வேண்டுமெனக் கூறினும். அதுமட்டுமன்று. குழந்தைகளின்வளர்ச்சிக்கு அவர்கள் இருக்குமிடமும் கல்விபயிலுமிடமும் வேண்டியாங்கு இருக்கவேண்டும். முன்னாட்களைவிட இப்பொழுது சுகவழியை உத்தேசித்து ஒருமாணவனுக்கு இவ்வளவு இடம் வேண்டுமெனவல்லவா கணக்கிடப்படுகிறது. இப்பொழுது, உடலை வளர்ப்பதற்குமட்டுமன்றி உளத்தை (மனதை) வளப்படுத்துவதற்கும் சுகவழி உபயோகப்படுத்தப்படுகிறது. அதன் படி இப்பொழுது ஏற்படுத்தப்பட்ட இடம் இருமடியாக, உளப்பெருக்குச் சுகவழியையநுசரித்து ஏற்படுகிறது. ஆயினும் முன்னைநாட்போலக் கனத்த பலகைமுதலியசாதனங்கள் இப்பொழுது வேண்டுமென்ற நியதியில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அவைகள் குறைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு தாராளமாக இடமும் ஏற்படும். இதனால், சீராய்வாழப் பயில்வதற்கு இடமும், இன்பப்பெருக்கையொழிக்க வழியும் ஏற்படுகிறது.

இவைகளன்றியும், குழந்தைகள் தாங்களே தங்கள் விருப்பின்படி விளையாடும்படி விடப்படவேண்டும். கட்டுப்படுத்தப்படக் கூடாது. இருந்தாலும், உயர்ந்த இடங்களில் ஏறிக் கிழேவிழும்படி பார்த்திருக்கலாகாது. அவ்வாறு நடக்குங்கால் ஆசிரியர்கள் அவர்களுடைய நடையைத் திருத்தவேண்டும். நமது முன்னோர்கள் எவ்வளவு சீரும் சிறப்புமாக வாழ்ந்துவந்தார்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். அவர்கள் தாங்களே குளிக்க முழுகப் பழகும்படி செய்யவேண்டும். அதற்குத் தகுந்தகருவிகளையும் அமைக்கவேண்டும்.

VI. கவனம்.

சாதாரணமாகக் குழந்தைகள் ஒருபொருளேக்கண்டால் அதனே விடாது பற்றிக்கொண்டு சிறிதுநேரம் விளேயாடுவது இயற்கை. இது உளத்திலிருந்துண்டாகும் ஒருவித ஆசையால் ஏற்படுவது. உளவளர்ச்சிக் குற்றதொரு செய்கையாகும். நீர்வேட்கையுடையா னொருவன் எவ்வாறு இரண்டொருசொட்டு நீரால் வேட்கைதணியாது நிரம்பப் பருகி வேட்கைதீர்த்துக்கொள்வானே அவ்வாறே குழந்தைகளும் தாம் ஒருமுறைசெய்த செயலே மற்றொருமுறை செய்வதற்காகப் பூரணமாக அறிந்துகொள்ளும். இதுதான் உளவளர்ச்சியின் தத்துவம். சிலர் இளங்குழந்தைகளின் மனத்தை ஒரு பொருளிலோ அல்லது வரிசையிலோ திருப்புவது இயலாதகாரிய மென்கின்றனர். அது முழுவதும் உண்மையே; ஆயினும், குழந்தைகள் ஒருபொருளிற் கவனஞ்செலுத்தும்போது தம்மைச்சுற்றி வேறு என்னநடந்தாலும் கவனிப்பதில்லே யன்றோ? ஆகையால் அவர்களின் உளவளர்ச்சி இயற்கையமைப்பான் (Nature) உண்டாவது என்று கொள்வதே தகுதியாம்.

இவ்வியற்கையமைதி யுண்டெனெ 'நீக்கம்' Purgatario XVIII என்னும் நூலில், 'மனிதனுக்கு அவனது புத்தி எப்படி எண்ணங்களே (நினைப்பை) உதிக்கச்செய்ததென்பது தெரியாது.; விருப்பமே முதன் முதலான தாக்கல் என்பதனையும் அறியான். வண்டுகள் தேனேச்சேர்க்க முயல்வதுபோல் உன்னிடமும் ஒரு ஆவல் உண்டு' என்று வெகுகாலத்திற்குமுன்னரே டாண்டேஎன்பவர் கூறியிருக்கிறுர். மனிதர்க்கு வெளித்தோற்றங்களேயறிய ஒரு விருப்பம் உளது. அவ்விருப்பத்துக்கு அந்தக்காரணம் காரணமாக இருக்கிறது. இதுவன்றி நாம் ஒருவன்வரவை எதிர்பார்த்திருப்போமாயின், அவன் வெகுதூரத்திற் காணப்படும்போதே அவன்தானெனஊகிப்ப தெப்படி? அது பொறியுணர்ச்சியாலும் அவன் வரவேண்டுமென்று எதிர்பார்த்தலினுலும் உண்டாவது.

இந்த வரவுபார்த்தலே (Expectation) தயாரித்தல் (Preparation) அல்லது நினைவுக்கருவிகளை வளர்த்தல் என்று சொல்லப்படும். இதனுலேயே வெகுதூரத்திற் காணப்படும் பொருள் இன்னதென்றும், வெகு மெதுவாகக் கேட்கும் ஓசை இன்னதென்றும் அவரவர்கட்குப் புலப்படுகிறது. இதுபோலவே, ஆசிரியரின் ஒழுக்கமும், குழந்தைகளை அவர் ஏதோ ஒன்று கற்பிக்கப்போகின்றாரென எதிர்பார்த்திருக்கும்படி செய்வதாய் இருக்கவேண்டும்.

இதுபோலவே, குழந்தைகளிடத்தும் சாவகாசத்திற் பலவித வர்ணங்கள், உருமானங்கள், தொனிகள் முதலானவைகளைச் சிறிதுசிறிதாகக் காட்டுவதால் அவைகள் மனதிற்பதிந்து ஒரு ஒழுங்காகி இது நீட்சி, இது குறுக்கம், இது வட்டம், இது சதுரம், இது வளைவு, இது பிறை, இது சிவப்பு, இது கருப்பு, இது வெண்மை என்பது முதலிய பாகுபாடுகள் எளிதிற் புலப்படும். இதுதான் குழந்தைகளை எதிர்பார்க்கச்செய்வதென்பது. இவ்விதமாகக் குழந்தைகளின் கவனத்தை ஒருவழியிற் றிருப்பியவுடனே இயற்கை அவ்வழியைப் பூர்த்தி செய்கின்றது. ஆகையால், குழந்தைகளின் நோக்கம் எவ்வழியிற் செல்கிறதோ அவ்வழியில் அதனைப் பெருக்குவதே குழந்தைகளின் கவனத்தைக் கவர வழியாம்.

இலக்கணவிளக்கம் வைத்தியநாததேசிகர் பரம்பரை,
சோமசுந்தரதேசிகன்,
திருவாரூர்.

அருவியன் காதை.

(௨௨0-ம்பக்கத் தொடர்ச்சி).

கூடு கார் இருள் மூடு பாதலம்
　　ஊடு புக்கு பல் காதம் மேல்
வீடு சேவகன் நாடு வெஞ்சிலை
　　ஓடும் ஓர்சரம் என்னவே
சூடிலாம் கதிர் தோயும் விண்ணெனும்
　　தூய்மை சால் இடம் உய்த்துாய்க்
காடுங் கானமும் நாடும் நண்ணினர்,
　　நால்வர் மேல் நடை எண்ணினர். (103)

"வையகத்துறை மாந்தரும் அறம்
　　வையகத்துறை மாதரும்
உய்யவந்த மருந்தினை,
　　உவட்டா அருங்கண் விருந்தினை,
செய்யும் நன்மை மிகச்சிறந்துரு
　　வாய்த் திரண்டெழு செல்வியை,
நையும் நுண்ணிடையார்கள் நாயகம்
　　ஆய் நலம் கிளர் காரிகை, (104)

இல்லறம் எனும் தாரு ஓங்கியே
　　இன்பலர்ந்து கமழ்ந்திட
நல்லறம் எனும் ஆறுபாய் அமு
　　தாகும் நீரினை, சீரினை,
மல்லல் மாடவிர் மாலையை,
　　மறுவின்றி வந்தொளிர் இந்துவைச்
சொல்லல் ஆவதுமல்ல ஆகிய
　　சோதியை, உருதேசியை, (105)

எத்திறத்தினில் அண்டுவேம்? உயிர்
　　எத்திறத்தினிற் பற்றுவேம்
இத்துணைப்படர் இன்னலை இது
　　காறும் யாமும் அறிந்திலேம்;

'மைந்தரா உருவோடு பற்றுதிர்'
என்னவும் பதி நம்மிசை
வைத்த மேனுமா உள்ளின் ஊடுறை
வாள் என அற ஈர்வதே" (106)

என்று கூறினர், ஒன்றும் என்னுவ
தோர்கிலர், வினை தேர்கிலர்,
நின்ற தூணெனப் பொன்றினர், உயிர்
பொன்று கில்லவர் என்னவோ?
மன்றலங்குழல் மாதரார் எழில்
வந்த தூதர்கள் சிந்தையைத்
துன்று தீமை அகன்று சாய்தரச்
சுற்றி மூடின முற்றுமே; (107)

விண் மறந்தனர், விண்ணின் ஊடுழல்
மீன் மறந்தனர், தாம் உறை
மண் மறந்தனர் மக்கள் புள் விலங்
கான வவ்வுயிர் வாழ் இடம்
என் மறந்தனர், எங்கும் என்றும்
எலாம் மறந்தனர் என்ப, தம்
கண் மறந்தவர் அல்லர்; அங்குறை
பெண் மறந்தன ரல்ல ரால். (108)

அன்னகாலை அந்நால்வரில் அகம்
ஐய வெய்யவன் ஆகியே
இன்னகாலையில் அன்முவே மென
யாதும் முற்குறி சாதியா
தின்னல் வாய் உயிர் பற்று தியன்,
இரக்கம் அற்ற உருக்குளன்,
வன்னி சாம்பரின் வாய் எழும்பிய
வாறு வந்துரை சிறுவான். (109)

"நன்மை என்பன, தீமை என்பன,
நாடொறு வன்மை என்பன,
மென்மை என்பன, மேல என்பன,
கீழ என்பன, மெய் எழிற்

நன்மை என்பன, அன்மை என்பல,
ஆன வேற்றுமை சாற்றிடின்,
இன்மை என்பன வன்றோ? நம்மிடை
இன்றை உள்ளன ஆகுமோ?" (110)

என்று கூறி இருண்டு புன்மனம்
ஏதமோடு புகைந்தயல்
நின்ற ஒருரசச்செடிக்குள் அந்
நீசன் பாம்புருத் தாங்கியே
சென்றிருந்தனன், செல்வியாம் உரு
தேசி இன்னுயிர் தீர்தாப்
பொன்றுவிப்பன் எனப் புகன்று தன்
புன்மையில் தலை போயவன். (111)

(வேறு)

அணங்கும் அவ்வயின் அடைந்தலர் கொய்தரு காலை
வணங்கும் நுண்ணிடை வார்குழல் திருமலர்க் காமும்
பிணங்கு கொம்பரும் பின்னிடக் கடித்தவன் பெயர்ந்தான்,
உணங்கல் உற்றன உயிரினேடுயிர் இலா உலகும். (112)

கையைவாங்கினள், கடித்ததென்னும் எனக் கருதப்
பையராவினைப் பார்த்தலும் பதைத்துடல் துடித்தாள்,
மையழிந்திடக் கண் கலும் சிந்தினள், மனத்தே
செய்யத் தக்கன தெரிகிலாள் தெருமா லுற்றாள். (113)

நடுங்கினுள், உளம் நைந்தனள், நலம் தரும் உடலம்
ஒடுங்கினுள், உலர்ந்தாள் கங்கினிடை உய்த்த மலர் போல்,
கொடுங்கணுர் செய்த வினைப்படும் கூட்டமே ஒப்ப
அடங்கல் ஆகமும் அரும்பினள் வெயர்த்துளி அந்தோ. (114)

(வேறு)

மாந்தளிர் மேனிய மங்கையாம் அவள்
தான்தனி இடர்ப்படச் சலம் கொள்கின்றிலள்,
ஆந்துணை என்ன அன் றணைந்த அன்புசால்
காந்தனை எண்ணி உள் கலங்கிச் சாம்புவாள். (115)

நியகம் நுழைதரத் திகைக்கும் நெஞ்சினள்,
சாயகம் பட உயிர் தவிக்கும் மானென
வாயகம் திறக்கிலள், மறுகினாள், வரு
நாயகன் தனிமையை உன்னி நையுமால் . (116)

எண்ணிலர் தனைமணம் இயற்றுவான் முனம்
நண்ணின காலை யாழ் நாயகன் வர
உள் நிறை நாணொடும் ஒதுங்கினாரெனக்
கண் நிறை காதலன் கவிழும் என்னுவாள். (117)

சீரிய குணங்களால் தெளிந்த ஞானத்தால்
காரிய வலிமையால் கருணை மேன்மையால்
நாரியர் நயப்புறு நலத்தினால் ஒளிர்
ஆரியர்ப் பிரிவதும் ஆற்றல் ஆவதோ ? (118)

தந்தை தாய் உலகினில் தநயர் முன்னுயிர்
சிந்துவர் ஆதலின் திகழ் மணத்தினால்
மைந்தரைப் போற்ற நன்மாது வேண்டுவர்
நிந்தையன்றோ இவர் நீத்துச் செல்லினே. (119)

"தன்னுயிர் என்னினும் தையலார்க்கவை
மன்னுயிர் என்னினும் வதுவை ஆற்றினால்
இன்னுயிர் ஒன்றுவ தியல்பன்றே; எனின்
என்னுயிர்க் கிவ்விடர் இடுக்கண் ஆகுமோ ?" (120)

இன்னணம் பற்பல எண்ணும் எல்லையில்
பொன்னணங்கும் விடம் பொறுக்கலாது பூம்
கன்னலின் மேலொரு கமலம் பூத்தெனத்
தன் எழில் முகம் காதலத்திற் சாய்த்துமே ; (121)

ஆற்றொணா விடம் மலிந் தாகம் எங்கணும்
கூற்றென நிறம் எலாம் கொள்ளை கொண்டிடத்
தோற்றமும் உணர்ச்சியும் துறந்து வீழ்ந்தனள் ;
தேற்றம் உண்டோ எனத் திகைத்த தண்டமே. (122)

K. N. சிவராஜபிள்ளை B.A.,

ஸ்ரீ:

மதிப்புரை.

I. புத்தகங்கள்.

1. திருஞானசம்பந்தர்.—இது, மேரியரசியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும், 'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமத். கா. நமச்சிவாயமுதலியாரவர்களால்தெளிவான செவ்வியதமிழ்நடையிற் கலாசாலை மாணவர் விரும்பிக் கற்குமாறு இடையிடையே பொருத்தமுள்ள பாடல்களும் படங்களும் சேர்த்தெழுதிப் பெரிய எழுத்தில் நன்முய்ப் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இதன் விலை அணு 10. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

2. பெரியபுராணச்சுருக்கம் (முதற்பகுதி):— இது, சென்னை, ஸி. குமாரஸாமிநாயுடு கம்பெனியாரால் வெளியிடப்பட்டது. பெரிய புராணத்தினின்று சில நாயன்மார் சரித்திரங்களை சுருக்கிச் செய்யுளும் உரைநடையும் விரவிவரும்படி எழுதப்பட்டது. கலாசாலை மாணவர்க்குப் பாடமாக வைக்கத்தக்கது. இதன்விலை அணு 14. வேண்டுவோர் மேற்காட்டிய கம்பெனிக்கு எழுதிப் பெறலாம்.

3. சசிகுலதீபம்:—இது, உடுமலைப்பேட்டை ஸ்ரீமத். U. N. இராமசாமிநாயுடு அவர்களால், மஹாபாரத தத்துவார்த்தங்களில் முக்கியமான சிலவிஷயங்களை ஆராய்ச்சிமுறையாக வசனநடையில் எழுதப் பெற்றிருக்கிறது. இதன்விலை அணு 6. வேண்டுவோர் U. N. இராமசாமி முதலியாரவர்கள், பச்பதிமுதலியார்வீதி, உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர்ஜில்லா என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

4. பாலபாகவதம்.—இது, பாகவதபுராணத்தின் முக்கியமான கதாபாகங்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கலாசாலை மாணவர் தெரிந்துகொள்ளும்படி தமிழ்நடையில் எழுதி ஜயம் அண்டு கம்பெனியிற் பதிப்பிக்கப் பெற்றிருக்கிறது. இதன் விலை அணு 5. வேண்டுவோர் ஜயம் அண்ட் கம்பெனி, 35 ஹைரோட், எழும்பூர், சென்னை என்றவிலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

5. திருவோத்தூர் நான்மணிமாலை:—இது, சேயாறு போர்டு ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். சோ. வீரபத்திர பிள்ளையவர்களாற் பாடப்பெற்றது. ஸ்ரீமத். வீ. திருஞானசம்பந்த முதலியாரவர்கள் எழுதிய குறிப்புரையுடன் பதிக்கப்பெற்றது. இதன்விலை அணா 3. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

6. அருச்சுனன் தீர்த்தயாத்திரை:—இது, பவானி தளவாய்ப் பேட்டை ஸ்ரீமான். தே. ர. அரங்கநாதக்கவிராயரவர்க ளியற்றிய ஆயி ரத்து நானூற்றுமுப்பத்தேழு பாட்டுக்களுடையது. பலபுலவர்கள்பாடிய சாத்துக்கவிகளுடன் பதிக்கப்பெற்றது. இதன் விலை ரூபா 2. வேண்டு வோர் தே. ர. வேங்கடராம செட்டியாரவர்கள், குமாரபாளயம், பவானி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

II. பத்திரிகைகள்.

1. வேதம்:—இது, ரிக்வேதத்தைத் தமிழில் மொழிபெயர்த் தியற்றிய பாடல்களையும் அவற்றின் உரையையும் உடையதாய், ரங்கோன் பார்வீதி (31, 32) வேதபிரோவினின்று மாதாந்தர ஸஞ்சிகையாக வெளி வருவது. இதன் ஆசிரியர் சிவத்தியாநாநந்தமஹர்ஷி யாவர். தனிக் காப்பி விலை ரூபா. 1. மற்றவிவரங்கள் ஷை வேதபிரோவுக்கு எழுதித் தெரிக.

2. ஜனரஞ்சனி:—இது, ஸ்ரீமத். M. S. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களால் வெளியிடப்படும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில், ஜனஸமூகம், கல்வி, தேச சரித்திரம், மதம், சாஸ்திரங்கள், சிறுகதைகள், வேடிக்கை முதலிய விஷயங்கள் வெளிவரும். இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 2. வெளிநாடுகளுக்கு ரூபா 3. வேண்டுவோர் V. நாராயணன் & கம்பெனி, 4, கொண்டிசெட்டிதெரு, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

3. பைந்தமிழ்:—இதுவும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்றொகுதியின் முதற்பகுதி நமது பார்வைக்கு வந்தது. இதன் வருடச்சந்தா ரூபா 2–8–0. வெளிநாடுகளுக்கு ரூபா 3–12–0 வேண்டுவோர் மானேஜர், பைந்தமிழ், திருவல்லிக்கேணி, சென்னை என்ற விலாசத்துக்கு எழுதுக.

4. செந்தமிழ்ச்செல்வி:—இது, தமிழறிஞர்களால் எழுதப்பட்ட பல விஷயங்களுடன் வெளிவரும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் வருடச்சந்தா உள்நாடுகளுக்கு ரூபா 3. வெளிநாடுகளுக்கு ரூபா 3—8—0. வேண்டுவோர் சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், 306. லிங்கச்செட்டித்தெரு, ஜி. டி. சென்னை, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

5. தமிழ்:—இது, யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கழகத்தாரால் வெளியிடப்படும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில், தமிழறிஞரால் எழுதப்பட்ட விடயங்கள் பல உள்ளன. இதன் வருடச்சந்தா ரூபா 3. வேண்டுவோர், யாழ்ப்பாணத்துத் தமிழ்க்கழகத்தின் காரியதரிசி ஸ்ரீமான். சி.இ. இராசரத்தினம் B.A., அவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

6. ஆயுள்வேதம்:—இது, வைத்தியம், சுகாதாரம் முதலானவைகளில் வேண்டிய விஷயங்களைக்கொண்டு மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்வைத்தியஸஞ்சிகை. இதன் வருடச்சந்தா ரூபா 1. வெளிநாடுகளுக்கு ரூபா 1—4—0. வேண்டுவோர் இதன் ஆசிரியரான வேலூர் ஸ்ரீ ராம. வே. தாஸ் அவர்களுக்கு எழுதிக்கொள்க.

7. ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்:—இது, ஆங்கிலத்திலும் தமிழிலும் விஷயங்கள் எழுதப்பட்டுவரும் ஒரு மாதப்பத்திரிகை. இதில் வைத்தியவிஷயங்களும் சுகவழியும் வெளிவரும். இதன் வருடச்சந்தா ரூபா 3. தனிப்பிரதி அணு 6. வேண்டுவோர் திருநெல்வேலி டாக்டர் அன்னு தாமஸ் அம்மாளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

8. தாய்நாடு:—இது, திங்கட்கிழமைதோறும் வெளிவரும் ஒரு தேசீய வாரப்பத்திரிகை. இதன் வருடச்சந்தா ரூபா. 5. வெளிநாடுகளுக்கு ரூபா 6—8—0. வேண்டுவோர் மானேஜர், 'தாய்நாடு' ஆபீஸ், திருச்செங்கோடு என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

உ

1923-ம் வருடம் ஏப்ரல்மீ 30உ (ருதிரோற்காரி வருடம் சித்திரைமீ 18உ) மாலை 4-30 மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகசபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

---

1. மாட்சிமைதங்கிய கனம் B. இராஜராஜேஸ்வரசேதுபதி மன்னரவர்கள்—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C.
3. „ M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.,
4. „ N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.,
5. „ K. ராமையங்காரவர்கள் B.A., B.L.,

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1922-ம் வருடம் ஆகஸ்டுமீ முதல் 1923-ம் வருடம் மார்ச்சுமீ முடிய உள்ள சங்கம் வரவுசெலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. 1922—23 ம் வருஷத்திய சங்கம் வரவுசெலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கத்தின் வருஷாந்தக் கணக்குகளைப் பரிசோதனைசெய்வதற்கு மதுரை ஹைக்கோர்ட்டு வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ V. சுந்தரமையரவர்களை ஆடிட்டராக நியமிக்கலாயிற்று.

IV. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

1. மகா-ள-ள-ஸ்ரீ ராய. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள், பத்திராதிபர், "தனவைசியஊழியன்", காரைக்குடி.
2. „ K. கிருஷ்ணையரவர்கள், Short Hand Sub Inspector of Police, Short Hand Bureau, வேலூர்.
3. „ கா. உ. பொன்னுச்சாமி முதலியாரவர்கள், தமிழ்ஆசிரியர், போர்டு செகண்டரி பாடசாலை, உத்திரமேரூர், செங்கற்பட்டு ஜில்லா.
4. „ T. K. சிதம்பரநாதமுதலியாரவர்கள், B.A., B.L., வக்கீல், வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி.

மதுரை,
30-4-1923.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருத்ரோத்காரி-௵ வைகாசி-ஆனி௴ [பகுதி ௭.

Vol. XXI. May-June-1923. No. 7.

ஓம்

'குடம்பை' என்னுஞ் சொல்லுக் கிட்ட வயிரக்குப்பாயம்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் திருப்பெயரைக் கேளாதவர் தமிழராவரோ? அவர் இயற்றியருளிய திருக்குறளைக் கல்லாதவர் கற்றவராவரோ? ஒப்புயர்வற்ற இவ் வருமருந்தன்ன நூல் பலமொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் பல நாட்டாராலும் கொண்டாடப்பெற்று வருகின்றதென்பது அறிஞர்பலரும் அறிந்ததொன்றே. இவ்வரிய நூலுக்கு உரையிட்டார் பலராவர்.

"தருமர் மணக்குடியர் தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே லழகர்—திருமலையர்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லையுரை செய்தா ரிவர்"

என்னும் பண்டைச்செய்யுளா னறியக்கிடக்கும் பதின்மரே பண்டையுரையாளராவர். இவ் வுரைகளுள் மணக்குடியார் உரையும், பரிமேலழகர் உரையுமே நமக்கு இன்று முழுநூல்களாகக் கிடைத்துள்ளன. அடியும் முடியும் அற்றுப் பாணவாய்ப்பட்டு அழிவுற்றுப் பெயர்விளங்காத பழைய உரையேடுகளும் சில கிடைத்துள்ளன. இவ்வுரைகளு ளெல்லாம் திட்பநுட்பஞ்செறிந்து செந்தமிழ்ச்செழுமை மலிந்து விளங்குவது 'பரிமேலழகர்விருத்தி'யே யாகும்.

இனி, 'நச்சர்' என்பது நச்சினார்க்கினியரென்று கொண்டு அவரும் குறளுக்கு ஓர் உரையிட்டாரென்றும், அவர் அந்நூலுள், "குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே, உடம்பொடுயிரிடைநட்பு" என்னுங் குறளுக்குக் கூடும் புள்ளு மென்று பொருள்கண்டனரென்றும், அவ்வுரையைக் கண்டித்து ஆசிரியர் பரிமேலழகர் முட்டையும் குஞ்சு மென்று பொருள் உரைத்திட்டாரென்றும், அங்ஙனம் உரைத்தபோது உடனிருந்து கேட்ட உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியர் அவ்வுரைநயத்தை மெச்சி அவரைத் தழுவிக்கொண்டனரென்றும் ஒருசிலர் கூறுகின்றனர். இக்கதைக்கு ஆதாரம் எங்குளதென்று அவர்கள் கூறினார்களுமில்லை. *ஆசிரியர் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் இருவேறுகாலத்திருந்தவராவர். இங்ஙனம் இருவேறுகாலத்திருந்த இரு பெரும்புலவரை ஒருகாலத்திற் சந்திக்கச்செய்து, ஒருவரையொருவர் தழுவிக்கொள்ளும் பெரும்பேற்றைத் தருதற்கு ஒருகாரணத்தையும படைத்த பிற்காலத்துப்புலவனது புனைந்துரையின் திறத்தை என்னென்போம்! ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி, குறுந்தொகையின் இருபதுபாட்டு ஆகிய இவற்றிற்கே உரையெழுதினரென்பது, "பாற்கடல்போலப்பரந்த நன்னெறி........தொல்காப்பியமெனுந்தொடுகடற்பரப்பை... ...உரையிடையிட்டகாண்டிகையுரைத்தும்,....ஒருபதுபாட்டுமுணர்பவர்க்கெல்லாம் உரையறமுழுதும் புரைபடவுரைத்தும்,........கலித்தொகைக் கருத்தினைக்காட்சியிற்கண்டதற்கு........ இன்னுரைபொருள்பெறவிளம்பியும், ...சிந்தாமணி....வினைபெறமுடியப்புனையுரையுரைத்தும்,........குறுந்தொகையிருபதுபாட்டிற்கேற்பவுரைத்தும்" என்னும் நச்சினார்க்கினியர் உரைச்சிறப்புப்பாயிரச் செய்யுளானும்,

'பாரத்தொல்காப்பியமும்பத்துப்பாட்டுங்கலியும்
ஆரக்குறுந்தொகையுளைந்நான்கும்—சாரத்
திருத்தகுமாமுனிசெய்சிந்தாமணியும்
விருத்திநச்சினார்க்கினியமே.'

---

* The Age of Nachinarkiniyar. By S. Anavaradhavinayagam Pillai Christian College Magazine. XVII 1900.

என்னும் பண்டை வெண்பாவானும் அறியப்படுகின்றது. ஆதலான் அவர் திருக்குறளுக்கு உரைவகுத்தாரென்பது எங்ஙனம் பொருந்தும்? இது நிற்க.

இனிக்' குடம்பை'என்னுங் குறளுக்கு ஆசிரியர் பரிமேலழகர்கூறிய உரை ஆசிரியர் நச்சினார்க்கினியர் வியக்கத்தக்கபெருமையுடைத்தா என்பதைச் சிறிது ஆராய்வாம். அவர்கூறும் உரை வருமாறு:—'முன் றனியாத முட்டை தனித்துக்கிடப்ப அதனுள்ளிருந்த புள்ளுப் பருவம்வந்துழிப் பறந்துபோன தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு. தனித்தொழிய வென்றதனான், முன் றனியாமை பெற்றாம். அஃதாவது கருவுந் தானும் ஒன்றாய்ப் பிறந்து வேறாந்துணையும் அதற் காதாரமாய் நிற்றல். அதனால் அஃது உடம்பிற் குவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றிநின்றே பின் புகாமற்போகலின், புள் உயிர்க் குவமையாயிற்று. முட்டையுட்பிறப்பன பிறவு முளவேனும், புள்ளையே கூறினார், பறந்துபோதற்றொழிலான் உயிரோ டொப்புமையெய்துவது அதுவேயாகலின். நட்பெனறது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின் றிப் போத லுணர்த்திநின்றது. சேதனமாய் அருவாய் நித்தமாய உயிரும், அசேதனமாய் உருவாய் அநித்தமாய உடம்பும் தம்முண் மாறாகலின், வினைவயத்தாற் கூடியதல்லது நட்பிலவென்ப தறிக. இனிக் குடம்பை என்பதற்குக் கூடென்றுரைப்பாரு முளர். அது புள்ளுடன் றோன்றாமையானும் அதன்கண் அது மீண்டு புகுதலுடைமையானும் உடம்பிற் குவமையாகாமை யறிக'.

இவ்வுரையில் ஆசிரியர் பரிமேலழகர் 'குடம்பை' என்ற சொல்லுக்கு முட்டையென்று பொருள்கூறி முட்டையின் ஓட்டை உடலுக்கும், கருவை உயிர்க்கும் உவமைகாட்டிக் கூட்டினுள், புள் பன்முறை புகுதலினாலும், உடலும் உயிரும்போல், கூடும் புள்ளும் உடன்றோன்றாமையானும் கூடும் புள்ளும் என்ற உவமை பொருந்தாதென்று மறுத்திட்டனர்.

இனிக் 'குடம்பை' என்ற சொல் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்காலத்தும் அவர்க்கு முற்பட்டகாலத்தும் எப்பொருளில் வழங்கப்பட்டுளதென்பதே முதற்கண் ஆராயவேண்டுவது. ஆசிரியர் திருவள்ளுவனார் கடைச்சங்கத் திறுதிக்காலத்திற்குச் சிறிது முன்னர் அஃதாவது

முதனூற்றாண்டில் இருந்தவராதலால், கடைச்சங்கத்து நூல்களில் அம்மொழிக்கு எப்பொருள் காணப்பட்டுளதோ அப்பொருளே ஆசிரியர் 'குடம்பை'க்கும் பொருளாகும். "மீனார்குருகின்மென்சிறைத் தொழுதி— குவையிரும்புன்னைக்குடம்பைசேர" (௪0) "முரியம்பார அரை யலங்க லஞ் சினைக் குடம்பை புல்லென" (௧௧௩) 'முண்மிடை குடம்பைச் சேவ லொடு புணாச் சிறக்கும் பேடை' (௨௯௪) 'கற்றரிக்குடம்பை' (௩௮௧) என்று அகநானூற்றிலும். 'மேக்குயர் சினையின் மீமிசைக்குடம்பைத்— தாய்ப்பயிர் பிள்ளை வாய்ப்படச் சொரியும்' (௬௧) 'இருங்கழி—யிரையார் குருகின் விரைப்பறைத்தொழுதி—வாங்குமடற்குடம்பைத் தூங்கிருட்டு வன்றும்' (௧௨௩), 'குடம்பைப் பெடைபுணரன்றில்'(௧௫௨) 'பழனப்பாகல் முயிறுமூசுகுடம்பை' (௧௮0), 'பேடை செறிகிள ரிவ்வைப் பூவி னன்ன—சிறுபல் பிள்ளையொடு குடம்பை கடிகவின்' (௧௮௧), 'ஓங்குமணல் உடுத்த நெடுமாப் பெண்ணை—வீங்குமடற் குடம்பைப் பைதல்வெண் குருகு' (௧௯௪) 'தடந்தாட் டாழைக் குடம்பை' (௨௭0), 'மன்றப் பெண்ணை வாங்கு மடற் குடம்பைத்—துணைபுணர் அன்றில்' (௩0௩), 'கொடுவாய்ப் பேடைக் குடம்பை சேரிய' (௩௩௮) 'முதுக் குறைக் குரீஇ முயன்று செய் குடம்பை' (௩௬௬), 'புள்ளினங் குடம்பை யுடன் சேர்' (௩௮௨), 'கலைமுட் கள்ளி முளரியங் குடம்பை— யீன்றிளைப்பட்ட வுயவு நடைப்பேடை' (௩௮௪) என்று நற்றிணையிலும், 'பெண்ணைக்—கொழுமடலிழைத்த சிறுகோற்குடம்பைக்—கருங்காலன் றில்' (௩0௧) என்று குறுந்தொகையிலும், 'புள்ளு-முயர்சினைக்குடம்பைக் குரற்றோற்றினவே' (௩௯௭) என்று புறநானூற்றிலும், 'பழனப்பாகன் முயிறு மூசு குடம்பை' (௯௯) என்று ஐங்குறுநூற்றிலும், 'குடம்பை மடலொடு புட்கலாபால்' (௩௧௮) என்று பழமொழியிலும் 'குடம்பை' என்ற சொல் 'கூடு' என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுளது. முட்டை என்ற பொருளில் வழங்கப்பட்ட இடம் ஒன்றாயினுங் காணப்படவில்லை. கடைச்சங்ககாலத்தே தோன்றியதும், கல்லாடனார், ஔவை இவர்களாற் பாடப்பெற்ற அம்பர்க்கிழவன் சேந்தன் அருவந்தை ஏவித் திவாகரரால் தொகுக்கப்பட்டதும், ஆசிரியர் அடியார்க்குநல்லாரால் ஆளப்பட்டதும், சங்ககாலத்தே வழங்கிவந்த சொற்பொருள்களை யெல்லாம் தொகுத்துக்கூறுவதுமாகிய சேந்தன் திவாகரத்தில், 'கூட்டின் பெயர்—குடம்பை, பஞ்சரம், கட்சி, கூடாகும்' (தொகுதி-௫) 'பறவை

முட்டையின்பெயர்—அண்டமுஞ்சினையும் அவற்றின் முட்டை' (தொகுதி ௩) என்று கூறியிருத்தலால் அக்காலத்தே 'குடம்பை' என்ற சொல்லுக்கு 'முட்டை' என்ற பொருளில்லை என்பது நன்கறியக்கிடக்கின்றது.

நாயனார்க்குப் பிற்பட்டு ஆசிரியர் பரிமேலழகர்காலங்காறும் 'குடம்பை' என்ற சொல் 'கூடு' என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுளது. ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியம் (அகம். ௬. அ.) உரையில் 'புள்ளெல்லாம் குடம்பை நோக்கி உடங்குபெயரவும்' என்றும் 'பெருங்குறிஞ்சி உரையில்'(அடி ௨௨௮) 'பறவைகள் குடம்பைக்கண்ணே நின்று ஆரவாரிக்கையினாலே' என்றும், கலித்தொகை உரையில் (௧௧௯) 'புட்கள் தம் பார்ப்புக்களை நினைத்துக் குடம்பையைச் சேர' என்றும் கூறியிருத்தலே அதற் குறுசான்றாம். 'வீறுழை குடம்பையுந்தானென்னும் கொள்கைத்தே' (திருவிளை. புரா. இந்திரன்பழிதீர்த்தபடலம். ௩௩), 'செறிந்தமண்ணின்—குடம்பையுட் புழுமுன்னாதுங்குளவி' (கைவல்லியம் தத்துவவிளக்கப்படலம். ௧௮), 'செறிகின்றபுள்ளெல்லவே கூடு......குடம்பையும் பறவையும் போல' சசிவன்னபோதம் (௪௯) என்று ஆசிரியர் பரிமேலழகர்க்குப் பிற்பட்டெழுந்த நூல்களிலுந்தான் அச்சொல் அப்பொருட்டாய் வழங்கப்பட்டுளது. என் சிற்றறிவுக்கெட்டியவரையில் அச்சொல் முட்டை என்ற பொருளில் வழங்கப்பட்ட இடம் புலப்படவில்லை. பிற்காலத்தில் அச்சொல் ஓரோவிடங்களில் முட்டை என்ற பொருளில் வழங்கப்பட்டு மிருக்கலாம். ஆயின் அவை ஈண்டை ஆராய்ச்சிக்கு ஏலாதனவாகும்.

பிங்கலந்தையார் தமது நிகண்டில் 'அண்டஞ் சினை கோச மரிட்ட முட்டை' என்ற விடத்துக் 'குடம்பை' என்ற சொல்லை விடுத்துக் 'குடம்பை முட்டையுங் கூடுமாகும்' என்ற இடத்து அதைக் கூட்டிக் கொண்டதற்குக் காரணம் புலப்படவில்லை. ஆயினும், பிங்கல நிகண்டிற் குடம்பை என்ற சொல்லுக்கு முட்டை என்ற பொருளுங் காணப்படுதலால் நாயனார் குறளுக்கு அந்நூற்சூத்திரம் மேற்கோளாகாதோவெனின் ஆகாது. என்னை? பிங்கலந்தை ஆசிரியர் பரிமேலழகருக்குப் பிற்பட்டுத் தோன்றியவராயினமையின். அது சங்க காலத்திற்குச் சுமார் பத்து நூற்றுண்டுக்குப் பிற்பட்டதாகும்

சங்கநூல்களின் இலக்கணமுடிபுகளைத் தெரித்தற்குத் தொல்காப்பியத்தை யொழித்து நன்னூலினின்று விதிகாட்டுவது எங்ஙனம் பொருத்தமுடையதாகாதோ, அங்ஙனமே சங்கநூற் சொற்பொருளைத் தெரித்தற்குத் திவாகரத்தையொழித்துப் பிங்கலந்தையினின்று விதிகாட்டுவதூஉ பொருந்தாதாகும். ஆசிரியர் பரிமேலழகர் தாம்கொண்டகருத்திற்கியையக் குடம்பை என்ற சொல்லுக்கு 'முட்டை' என்ற ஒரு புதிய பொருளைக் கற்பித்து வழக்காற்றில் விட்டுவிடவே. அவர்க்குப் பிற்பட்டுவந்த பிங்கலந்தையார் தமக்குமுன்வழங்கிவந்த ஒருசொற்குரிய பலபொருள்களையெல்லாந் திரட்டி யொருங்கிகண்டு கோத்தெடுத்தாரேயொழியத் தேவர் 'குடம்பை'க்கு முட்டை என்று பொருள்கூறினாரல்லர். மண்டலபுருடர் 'வள்ளுவன்' என்ற சொல்லுக்கு 'நிமித்திகன்' ('வருநிமித்திகன்பேர் சாக்கை வள்ளுவனென்று மாகும்') என்று பொருள்கூறினர் எனறுகொண்டு: 'வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்-குள்படுங் கருமத் தலைவர்க் கொன்றும' என்று கூறிய திவாகரர் காலத்தும் அச்சொல்லுக்கு அப்பொருள் கோடுமென்று கூறுதல் எங்ஙனம் பொருந்தாதோ அங்ஙனமே மேலைபதுமாகும். இஃதன்று ஒருவன் ஒரு நிகண்டு நோக்கப்புகுவானாயின் ஒரு சொல்லுக்கு இனறுகாறும் வழங்கிவரும் பலபொருள்களையும் எடுத்துக்காட்டவேண்டியது முறைமையாயினமையின், அது கொண்டு முற்காலத்துச் சொல்லுக்குப் பிற்காலத்த ப்பொருளை அமைத்துக் காட்டுவது, கலப்பையின்பின் மாட்டைக் கட்டி ஏருழத்தொடங்கினவன் செய்திபை யொக்கும். ஆதலினாற் பிங்கலந்தையிற்கூறப்பட்ட முட்டை என்ற பொருள் சங்ககாலத்தே வழங்கிவந்த குடம்பை என்ற சொல்லுக்குப் பொருளாகாது. ஆகவே நாயனார் குடம்பை என்ற சொல்லைக் கூடென்றபொருளிலேயே அமைத்தாரென்பதும், ஆசிரியர் பரிமேலழகரே தம் கருத்திற்கியைய அச்சொல்லுக்கு முட்டை என்ற புதியபொருளைக் கற்பித்தாரென்பதும் நன்கு அறியக்கிடக்கின்றன.

இனி இரண்டாவதாக ஆராயவேண்டியது நாயனார்க்கு முற்பட்ட காலத்தும், பிற்பட்டகாலத்தும் உடலுக்கும் உயிர்க்குமுள்ள தொடர்பை எவ்வுவமானத்தால் ஆன்றோர்கள் விளக்கியுள்ளார்களென்பதே. ஆராய்ந்தவரையில் திருவருள் நிலையினின்ற பெரியோரும் மற்றையோரும் உடலை

நீந்தகும் உயிருக்குக் கூட்டைவிட்டேகும் இளம் புள்ளையே உவமித்துள்ளார்களேயன்றி, முட்டையினின்றுவெளிவரும் பிள்ளையைக் கூறினார்களில்லை. 'மூரியம்பாரரை யலங்க லஞ்சினைக் குடம்பைபுல்லெனப்—புலம்பெயர்மருங்கிற் புள்ளெழுந்தாங்கு—மெய்யிவணொழியப்போகியவர்—செய்வினைமருங்கிற்செலியரென்னுயிரே' என்று கல்லாடனார் அகநானூற்றிலும் (கக௨), 'கேளாதே வந்து கிளைகளா யிற்றோன்றி—வாளாதே போவரான் மாந்தர்கள்—வாளாதே—சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல—யாக்கை தமர்க்கொழிய நீத்து' என்று சமணமுனிவர் நாலடியாரிலும் (௩௦), 'சரணலாம் பரமேகட்கிறந்ததோர்—வானிலாப் பொருளேயிங்கொர்பார்ப்பெனப்—பானனேன்படிற்றுக்கையைவிட்டுனைப்—பூணுமாறறியேன் புலன் போற்றியே!' என்று உண்மையானுணர்ந்த பெரியார் திருவாசகம் திருச்சதகத்திலும் (கைம்மாறுகொடுத்தல் ௪௪), 'உயிரெனுங் குருகுவிட் டோடும் குரம்பையை—எலும்பொடு நரம்பு கொண் டிடையில் பிணித்துக்—கொழுந்தசை மேய்ந்தும் ஒழுக்குவிழுங் குடிலை' என்று திருவருள் கைவரப்பெற்ற பட்டினத்தடிகள் கோயிற் றிருவகவலிலும் : (மூன்றாவது), 'தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்—கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே' என்று சிவ ஞானச்செல்வரான திருமூலயோகிகள் திருமந்திரத்திலும் (யாக்கைநிலையாமை ௨௫.) 'ஓம்பினேன் கூட்டைவாளா' என்று தவராஜசிங்கமாகிய அப்பமூர்த்திகள் திருவொற்றியூர்த் திருநேரிசையிலும், 'துயர்க்கெலாங் கூடாய தோற்குரம்பைபுக்கு' என்று நக்கீரதேவர் கைலைபாதி காளத்திபாதி யந்தாதியிலும் (௩௭), 'மறைகின்ற வென்பு நரம்போடிறைச்சி யுதிரமச்சை—பறைகின்ற தோல்போர் குரம்பை' என்று சேரமான்பெருமாணாயனார் பொன்வண்ணத்தந்தாதியிலும் (எ௨): 'பொய்க்கூடு கொண்டு புலம்புவனோ வெம்மிறைவர்-மெய்க்கூடு சென்று விளம்பிவா பைங்கிளியே' என்று தாயுமானார் பைங்கிளிக்கண்ணியிலும் (௪௨), 'கூடுவிட்டுப் போயினபின் னேதுபுரிவீ ரெங்கே குடியிருப்பீ ரையோ' என்று இராமலிங்கசுவாமிகள் அருட்பா ஆறாவது திருமுறை உறுதிகூறலிலும் (௨௨) கூடுவிட்டிங்காவிதான்போயினபின்' என்று நல்வழியிலும் (௨௨), 'அறிகின்றபொருளென்று மறிவானின்வேறெயானு லிவ்வூனை நானென்னலாமோ செறிகின்ற புள்ளல்லவே கூ டிவ்வகையே செடமானவுடனின்னில் வேறென்று தெளியே—அறிவையறியும் அறிவு நீ குடம்பை

யும் பறவையும்போலப் பகுத்தறியென்றது' என்று சசிவன்னபோதத்திலும் (௬௬) கூறியிருத்தலே அதற்குப் போதிய சான்றும். தமிழ் மொழியில் அல்லாமல் மற்றமொழிகளிலும் உடலுக்கும் உயிருக்குமுள்ளநட்புக்குக் கூட்டுக்கும் அதன்கண் வளரும் இளம்புள்ளுக்குமுள்ள தொடர்பையே உபமானமாகக் காட்டியுள்ளார்களென்று அம்மொழிகளில் வல்லவர் கூறுகின்றனர். 'When the bird has flown away from it one cares no longer for the nest. So when the bird of life has flown away no one cares any longer for the carcase' என்று ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர் தம்முடைய வங்காளவுபதேசத்தில் (உஅ௭) கூறியிருத்தல் அதை மிக்கு வலியுறுத்துகின்றது.

விக்கிரமாதித்தன்கதையில் அரசன் விக்கிரமாதித்தனும், சங்கராசாரியர் சரித்திரத்தில் ஸ்ரீ-சங்கராசாரியசுவாமிகளும் ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுட்புகுந்தபோது 'கூடுவிட்டுக் கூடுபாய்ந்தார்கள்' என்று உலகவழக்கிற் சொல்லும் உரையை யாவருங் கேட்டுள்ளோம். இவ் வரிய சித்தியை அங்ஙனமே கூறுதல் மரபென்பதைக் 'கூடுவிட்டுக் கூடுபாயுங் கொள்கையுடைய குருவின்' என்று *பாம்பாட்டிச்சித்தர் தமது பாடலில் (கக) கூறுதலாலும் அறியலாம். ஒருவன் இறந்தவிடத்துக் 'கூட்டைவிட்டுப் பட்சி பறந்துபோய்விட்டது' என்று உலகத்தார் கூறுகின்றனரேயொழிய 'முட்டையினின்று குஞ்சு வெளியேபோய்விட்டது' என்று கூறுவார் ஒருவரையுங் கேட்டிலோம். எனெனின் உவமேயத்திற்குப் பொருந்தியதும் இயற்கைக்கொத்ததும் அவ்வுவமானமேயாதலின் அதனையே யாண்டும் என்றும் கூறுவர். யான் ஆராய்ந்த அளவில் முட்டையுங் குஞ்சு மென்ற உவமானம் பரிமேலழகருரையைத் தவிர்த்து வேறுஇடங்களிற் காணப்படவில்லை. ஆதலான் உடலினீத்தேகும் உயிருக்குக் கூட்டைநீத்தேகும் புள்ளையே உவமித்தல் ஆன்றோர் வழக்கென்பதும், அதனையே ஆசிரியர் வள்ளுவனார் உவமைகூறினாரென்பதும் யாவரும் நன்கு அறியக்கூடியனவையே.

---

*சாதாரணவழக்கிலும் இவ்வுவமானமே யாளப்பட்டுளதென்பதைவிளக்க இந்நூல் இங்காளப்பட்டுளது.

இனிக் கல்லாடனார்தொட்டுத் திருவருள் சைவப்பெற்ற ஸ்ரீமணிவாசகப்பெருமான், பட்டினத்தடிகள் உள்ளிட்ட பெரியார் யாவரும் கூடும் புள்ளுமே உவமைகாட்டியிருக்க, அவ் வுவமையைக் கண்டித்து ஆசிரியர் பரிமேலழகர் முட்டையும் குஞ்சும் என்று கூறியிருத்தலான், அப் பெரியார்கள்வாக்கு மருள்வாக்கு எனறு பெறப்படுகின்றது. உண்மையைப் பிறழ உணர்ந்து பொருந்தா உவமை கூறியவர் யாரென்பதே இனி மூன்றாவதாக ஆராயவேண்டியது. ஆசிரியர் பரிமேலழகர் தம்கூற்றை வலியுறுத்த இரண்டுகாரணங்கள் காட்டியுள்ளார். ஒன்று உடம்பினுள் உயிர் மீண்டும் புகாமற்போதற்குக் கூட்டினுள் மீண்டும் மீண்டும் புகுதலையுடைய புள்ளை உவமைகூறியது பொருந்தாதென்பது மற்றொன்று உடலும் உயிரும் உடன்றோன்றுதல்போற் கூடும் புள்ளும் உடன்றோன்றாமை. இவற்றைச் சிறிது ஆய்வாம்.

உடம்பை நீத்தேகும் உயிர் மீண்டும் அவ்வுடம்பினுட் புகுதலின்மை யாவரும் அறிந்ததொன்றே ஆனால், கூட்டைவிட்டேகிய இளம்புள் மீண்டும் அதன்கண் புகுதலுடைமையைக் கண்டவர் யார்? அத்தகைய நிகழ்ச்சியிருப்பின் ஆன்றோர்கள் அவ்வுவமையை ஆளாதொழிந்திருப்பர்; மற்று ஆசிரியர் பரிமேலழகர் கூறியது எக்காரணம்பற்றியெனின், மக்கள் உறைதற்கு ஒரு குடிலமைத்து அதன்கண் இருந்து வைகறையில் துயிலொழிந்து வினையாற்றுதற்காக வெளிப்போந்து மீண்டும் மாலையில் அதனுட்புகுந்து துயிலுதல்போலப் பறவைகளும் கூடமைத்து விடியலில் இரைதேட வெளிப்போந்து மாலையில் மீண்டும் கூட்டையடைகின்றன வென்று மயங்க உணர்ந்தமையின் அங்ஙனம் கூறினர். பறவைகள் மக்களைப்போல் வாழ்தற்கு இல்லமைத்துக்கொள்வதில்லை. மாலைக்காலத்தில் நூற்றுக்கணக்கான காக்கைகள் ஒரேமரத்தில் தங்கிக் காலையில் வெளிப்போதலை யாவருங் கண்டுள்ளார். ஆனால் அம்மரத்தில் ஒரு கூடாயினும் இல்லாமையை யாவருங் கவனித்திருக்கலாம். ஏனெனின் அவை இரவில் மரக்கிளைகளில் தங்கி உறங்குவதே வழக்கம். கூடுகட்டிக் கூட்டில் உறங்குவதில்லை. அற்றாயின், கூடும் புள்ளுமென்பது எற்றுக்கெனின், கூறுதும். பறவைகள் முட்டையிடும் பருவம் வந்துழி அவை கொம்புங் கோலும், நாரும், பஞ்சுங்கொண்டு கூடுகட்டும். கூடுகட்டி அதன்கண் முட்டையிடும். முட்டையிட்டு அடைகாக்கும். அடைகாத்துக் குஞ்சுபொரிக்கும்,

குஞ்சுபொரித்து அப்பிள்ளைகளை வளர்த்துவரும். வளர்த்துவருங்கால் இரைதேட வெளியேபோம். வெளியேபோய் இரைகொண்டு மீண்டும், கூட்டிட்புகும். இங்ஙனம்புகுதலே யாவரும் பற்பல அமயங்களிற் கண்டது. இதுகொண்டு பறவைகள் உறைதற்குக் கூடமைத்துக்கொள்ளுகின்றன வென்று கூறுதல் பொருந்தாது. மற்றக் குடம்பைகளெல்லாம் குஞ்சுறைவதற்கே கட்டப்படுவன. இவ்வியற்கைநிகழ்ச்சியை நம் ஆன்றோர்களும் நன்கு கவனித்துள்ளார்களென்பதைக் 'குஞ்சுறை, கட்சி, கூண்டு, குடம்பைபே கூட்டின்பேராம்.' என்று மண்டலபுருஷர்கூறிய வாக்கா னறிந்துகொள்க.

இனித் தாய்ப்பறவை மீண்டும் மீண்டும் கூட்டுட் புகுதலுடைமையான் உவமை பொருந்தாதெனின், அறியாது கூறினை. ஈண்டு உவமைக்குக் கொள்ளப்பட்டது கூட்டின்கண்வளரும் இளம்புள்ளையேயன்றிப் பெரும்புள்ளையன்று. பெரும்புள்ளைக்கொள்ளுதல்தவறுடைத்தேயாகும். கூட்டின்கண்வளரும் பார்ப்பிற்குப் பறத்தற்குரிய ஆற்றலிராமையின் இறகுகள் வளர்ந்து முதிரும்பருவம் வருங்காறுங் கூட்டின்கண் வைகி அப்பருவம் வந்துழிக் கூட்டைவிட்டு வெளியே பறந்து போய்விடும். அது மீண்டும் கூட்டுட்புகுதலின்று. கூடு புல்லென்றாகிக் காலவளவிற் காற்றாலும் மழையாலுந் தாக்கப்பட்டு அழிந்துபோதலை யாவருங் கண்கூடாகக் கண்டுள்ளோம். ஆகவே உடலுட்டோன்றி அறிவுமுதிருங்காறும் அதனிடத்தே வைகிப் பருவம்வந்துழி அதனைநீத்துப் பின் புகாமற்போகும் உயிர்க்குக் கூட்டின்கண் தோன்றி இறகு முதிருங்காறும் அதனிடத்தேவைகிப் பறக்கும் பருவம் வந்தவிடத்துப் பின் புகாமற்போகும் இளம்புள்ளையே உவமை கூறுதல் எவ்வாற்றானும் பொருந்தியதாகும். பார்ப்புப்பருவம் முழுதுங் கழியாத புள்ளைப்போல் முதன்முதற் பறந்துவெளிப்போந்தன்மையை நோக்கியன்றே திருவருட்பேறு நிரம்பிய ஸ்ரீமணிவாசகப்பெருமான் 'இங்கோர் பார்ப்பெனப்—பாணனேன் படிற்றாக்கையைவிட்டுனைப்—பூணுமாறறியேன்' என் றருளிச்செய்தனர். இறகுமுதிர்ந்து பெரும்புள்ளைப் போற் காணப்பட்டு, அதுபோற் பறக்குமாற்றலைப் பெற்றமைகொண்டு அவ்விளம்புள்ளையே மற்றையோர் புள்ளென்றே கூறினர். "மூரியம்பாரஅரை—பலக்சலஞ்சினைக் குடம்பைபுல்லெனப்—புலம்பெயர்மாக்கிற் புள்ளெழுந்தாங்கு — மெய்பிவணொழியப்போகியவர் — செய்வினை மருங்கிற்

செலியரென்னுயிரே' என்று கல்லாடனாரும், 'செக்கைமாணெழிபுச் செவிங்குடட்போல-யாக்கைதமர்க்கொழியநீத்து' என்று நாலடியாருடையாரும், 'உயிரெனுங் குருகுவிட்டோடுங் குரம்பையை' என்று பட்டினத்தடிகளும் கூறியவற்றை நோக்கி யுணர்ந்துகொள்க.

இதனை உய்த்துணர்ந்தே இக்குறளுக்கு மணக்குடியார் 'கூடு தனியேகிடக்கப் புள்ளுப் பறந்துபோனாற்போலும் உடம்போடுயிருள்ள நட்பு என்றவாறு' என்றும், சென்னைக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பெயர்மறைந்த ஓர் ஏட்டுப்பிரதியில் ஓர் உரையாசிரியர் 'பட்சி முட்டையிட்டு வளர்க்கிற கூடு முயிரும் போலும் உடலு முயிரும்' என்றும் கூறிப்போந்தனர். சிறந்த குறட்பாக்களுக்குச் சிறந்தவுரைபோன்றது நாலடியாராயாகும். நாலடியாரின் உவமான உவமேயங்கள் பல குறளிற் காணப்படுதலால் ஒன்று ஒன்றைப் பின்பற்றியதாகும். உடலுக்கும் உயிருக்கு முளதாய நட்பை நாலடியார் கூட்டுக்கும் புள்ளுக்கு முளதாய நட்பால் விளக்குவதால் அஃதே நாயனாருடைய கருத்துமாகும். ஆகவே, கூடும் புள்ளும் என்ற உவமையில், புள்ளெனபது கூட்டில் வளர்க்கப்பட்ட இளமபுள்ளென்பதும், அப்புள் பறந்துசெல்லும் பருவம் வருங்காறும் கூட்டில்வைகுமென்பதும், பருவம்வந்துழிக் கூட்டைநீத்தேகுமென்பதும், நீங்கியவிடத்து மீண்டும் கூட்டுட் புகுதலின்றென்பதும், ஆகவே உடம்பினுள் மீண்டும் புகாதொழியும் உயிர்க்கு அஃதே உவமையாகு மென்பதும், எனவே ஆன்றோர்கூறிய உவமை தவறின்றென்பதும், ஆசிரியர்பரிமேலழகர் பிறழ உணர்ந்தமையின் வேறு உவமை கூறினாரென்பதும் நன்கு பெறப்படுகின்றன.

இனி, முட்டையின் ஓடுங் கருவும்போற் கூடும் புள்ளும் உடன்றோன்றவில்லையே யெனின், உடலும் உயிரும் உடன்றோன்றுதலின்மையான் அது வேண்டற்பாற்றன்று. என்னை? முட்டையுள் அசேதனமாயுள்ள கரு அடைகாக்கப்படும் பருவத்தே உறுப்புக்கள் அமையப்பெற்றுப் பின்னர் அதனகண் உயிர் வியக்தமாகிப் பிள்ளையாய் வெளிவருவது போல், கருப்பையுட் டரித்தகரு நாட்செல்லச்செல்ல உடலுறுப்புக்கள் அமையப்பெற்று அதன்கண் அவ்வியக்தமாயிருந்த உயிர வியக்தமாகி நாள்நிரம்பியவிடத்துப் பிள்ளையாய் வெளிவருகின்றது. ஆகவே, எலும்பும், நரம்பும், தசையுங்கொண்டு யாக்கப்பட்ட உடல் தோன்றியபின்

உயிர் அதனிடத்தே வியத்தமாகி இயங்குகின்றது. அங்ஙனமே கோம்புங் கோலுங் கொண்டு யாக்கப்பட்ட கூடு முன் உண்டாகி அதனிடத்தே பொரிக்கப்பட்ட குஞ்சு பின் தோன்றி இயங்குகின்றது. இடையே தோன்றிய உயிரானது ஒருகாலத்தில் உடம்பைவிட்டு நீங்குவதுபோல, இடையே தோன்றிய புள்ளானது ஒரு காலத்திற் கூட்டைவிட்டு நீங்கிவிடுகின்றது. '..ன்று பீ அன்று நாவ' எனறகொள்கைபோல் உடன் றோன்றியபொருள்கள் உடனேதான் அழியுமே யல்லாமல் வேறாய் அழிதலில்லை. ஆனால், கருவும் ஓடும் உடனதோன்றுதல் உண்டோ வெனின், இல்லை. கருவானது கருப்பையுட்டோன்றி முதிர்ந்த பக்குவத்தையடைந்து வெளிவரும்பொழுது அஃது ஒருவிதமான பசையால் மூடப்படுகிறது. அப்பசையே இறுகி ஓடாய்விடுகின்றது. கரு உண்டாகிய பன்னாட்களின்பின்னர் ஓடானது தோன்றுகிறதே யொழிய உடன்றோன்றுகின்று. இவ்வுவமானத்தால், கருவை யொத்த உயிர் முன்றோன்றி ஓட்டையொத்த உடல் பின்றோன்றுதல் வேண்டுமென்பது பெறப்படுகின்றது. ஆனால் உடல் முன்றோன்றிப் பின் உயிர் வியக்தமாதலே உண்மையாயுள்ளது. சேதனமாய் இயங்குந்தன்மைத்தாய் உடலைவிட்டு நீங்குமுனபும் நீங்கியபின்பும் ஒரேபடித்தாயிருக்கும உயிர்க்கு, சேதனமாய் இயங்குந்தன்மைத்தாய்க் கூட்டைவிட்டு நீங்குமுன்பும், நீங்கியபின்பும் ஒரே படித்தாயிருக்கும் புள்ளை உவமைகூறுதல் பொருத்தமுடையதன்றி ஓட்டைவிட்டு நீங்குமுன்பு அசேதனமாய் இயங்குந்தன்மையின்றி நிற்கும் கருவாய், நீங்கியபின்பு சேதனமாய் இயங்குந்தன்மையுடைய பார்ப்பாகும இருவேறு தன்மையுடைய ஒரு பொருளை உவமைகூறுதல் பொருத்தமின்றாகிறது. ஆகவே, கூடும் புள்ளும் என்ற உவமை பொருந்தியவாறும் ஓடுங் கருவும் என்ற உவமை பொருந்தாமையுங் கண்டுகொள்க.

இனிக் 'குடம்பை தனித்தொழிய' என்பதற்கு ஆசிரியர் பரிமேலழகர் 'முன் றனியாதமுட்டை தனித்துக்கிடப்ப' என்று பொருள் படுத்தினர். 'அண்டமுஞ் சினையும் முட்டையாகும்' ஆதலினால் முட்டை என்பது கருவும் ஓடும் சேர்ந்த பொருட்கே வழங்கப்படும். கருவற்றது முட்டையன்று: 'கருப்பையுள் முட்டைக்கும்' 'எறும்பின் முட்டை' 'மீனின் முட்டை' என்ற இடங்களிலெல்லாம் அச்சொல் அக்கருத்தையே யுணர்த்தும். கருவைமூடிக்கொண்டுள்ளபொருளுக்கு

முட்டையோடு (Egg shell) என்ற பெயரேயன்றி முட்டையென்றபெயரின்று. ஆனால் இக்குறள் உரையாசிரியர் ஓட்டிற்கே முட்டையென்று பொருள்கூறியுள்ளார். அங்ஙனம் கூறுமிடின் 'குடம்பை தனித்தொழிய' என்ற தொடருக்கு அவர் கொண்டகருத்துக்கியையப் பொருள்படுத்த இயலாது. உடலும் உயிரும் இருவேறுபொருளாயிருத்தல்போல் முட்டையுங் கருவும் இருவேறுபொருள்களாகா. முட்டையென்றது கருவோடுகூடியதொன்றாயினமையின், முட்டையோடுங் கருவுமே இருவேறுபொருள்களாகும். ஆகவே 'குடம்பை தனித்தொழிய' என்றவிடத்து 'ஓடு தனித்துக்கிடப்ப' என்றே பொருள்படுத்தவேண்டியதாயுளது. ஆனால், உடலும் உயிரும்போல், கூடும் புள்ளும் இருவேறு பொருள்களாகும். உடல் உயிரோடுகூடியுந் தனித்தும் நிற்குமாறு போல், கூடு புள்ளோடுகூடியுந் தனித்தும் நிற்கும். முட்டை கருவோடு கூடியல்லது தனித்தின்று. ஆகவே குடம்பை என்ற சொல்லுக்குக் 'கூடு' என்பதே பொருத்தமுடையதென்பதும், 'முட்டை' என்பது பொருத்தமின்றென்பதும் அறிந்துகொள்க. இவையெல்லாம் ஆராய வேண்டிய அவசியமிலவேனும் ஆசிரியர் பரிமேலழகர் நயங்கள் பலவற்றைக்காட்டிக் 'கூடு' என்ற உரையை மறுத்திட்டமையான் ஈண்டு இவற்றை ஆராயவேண்டியதாயிற்று.

'புள்' என்பதை ஆசிரியர் பரிமேலழகர் ஓட்டினுள்ளிருந்த கருவுக்கும், வெளிவந்த குஞ்சுக்கும் பரியாயச் சொல்லாக வழங்கியுள்ளார். அச்சொல் இறகுமுதிர்ந்து பறக்குந்தன்மையுடைய பறவைக்கே வழங்கப்படுதலல்லது கருவுக்காவது புதிதாய்ப்பிறந்த குஞ்சுக்காவது வழங்கப்படுத லின்று. 'பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற்றிளமை' என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியபடி அதற்குப் பார்ப்பென்றாவது பிள்ளையென்றாவது கூறுதல்வேண்டுமேயன்றிப் புள்ளென்று கூறுதல் பொருந்தாது.

'பறந்தற்றே' என்பதற்குப் 'பறந்துபோன தன்மைத்து' என்பது பொருள். உடலைவிட்டுப் பறந்துசெல்லும் உயிர்க்குக் கூட்டைவிட்டுப் பறந்துசெல்லும் புள்ளை நாயனார் கூறியது உவமம் நான்குவகையுள் வினையுவமம்பற்றியே யாகும். பறத்தற்றொழில் உவமானத்தின்கண் நிகழாதொழியின் அஃது உவமேயத்திற்குப் பொருந்தாதாகும்.

முட்டையீன்று வெளிவரும் பார்ப்பிற்குப் பறத்தற்றொழி லில்லையென்பது யாவரும் நன்கறிந்ததொன்றாயினமையின், அதனை உவமைகாட்டுவது எவ்வாற்றானும் பொருந்தாதாகும். வெளிவருந்தொழில்பற்றியே உவமையாம் பொருந்துமெனின், முட்டையுட் பிறக்கும் பாம்பு, பல்லி, ஆமை முதலியவற்றைக்கூறாது, புள்ளையே கூறியது பறத்தற்றொழில் பற்றி என்று ஆசிரியர் பரிமேலழகர் கூறியதே அத்தொழில்பற்றி யன்றென்பதை வலியுறுத்தும். ஆகவே உயிரோடொப்புமையெய்தப் பறத்தற்றொழிலுடைய புள்ளையே நாயனார் கூறினாரெனபது நன்குபோதரும்.

இவற்றையெல்லாம் நன்குணர்ந்தே மணக்குடியாருள்ளிட்ட தொல்லுரையாசிரியன்மாரெல்லாரும் கூடும புள்ளும் என்றவுரையையே கூறிப் போந்தனர். ஆகவே, 'குடம்பை' என்ற சூறளுக்குப் பண்டை உரையாசிரியர்கள் கூறிய கூடென்ற பொருளே சிறக்குமெனபதும், ஆசிரியர் பரிமேலழகர்கூறிய முட்டை என்ற பொருள் சிறக்காதெனபதும் வெள்ளிடைவிலக்கல்போல் அறியலாம்.

'திருத்தகுசீர்த் தெய்வத் திருவள்ளுவர்தம்,—கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்—பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனனும,—மன்னு முயர்நாமன் வந்து.' 'நூலிற்—பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்—றெரித்த வுரையாமோ தெளி' 'தெள்ளு பரிமேலழகன் செய்தவுரை' 'தெய்வப் புலமைத் திருவள்ளுவர் குறளில், உய்விக்கு நூலெல்லா முள்ளதெனச்—செய்வித்தான்,—தத்துவமெல் லாமுடம்பிற் றந்துணர்வார் போலுலக—மொத்தபரி மேலழக னோர்ந்து.' 'வள்ளுவன் மீளவும் வந்துதித் துலகோர்க்—குள்ளிய பொருளை யுரைத்தன னென்ன ......—விழுப்பொருள் தோன்ற விரித்துரைத்தான்...பரிமே லழகனெனப்பெயர் படைத்துத்—தரைமே லுதித்த தலைமை யோனே!' என்று ஆன்றோரால் ஆசிரியர் பரிமேலழகர் விதந்தோதப்பட் டிருத்தலான் ஈண்டு உரையைப் பிறழவுணர்ந்தாரென்று கூறுதல் தகுதியுடைத்தாவெனின், 'யானைக்கும் அடிசறுக்கும்' (Even Homer Nods) என்ற முதுமொழிப்படி முக்குணவயத்தாற் கட்டுண்ட ஆன்மாக்கள் ஒரோவிடங்களில் மயங்கிக்கூறுவர். அதனான் அவருடைய பெருமை குறைபாடுடையதன்று. இதனை "நூலுரை போதகாசிரியர் மூவரு—முக்குணவசத்தான் முறைமறந்தறைவரே" என்று ஸ்ரீ சுவாமிநாததேசிகர் இலக்

கணக்கொத்துப் பாயிரத்திலும் 'அங்ஙன மோரோவழி மயங்குதல்பற்றி அவரை யிகழற்க; நச்சினார்க்கினியர் முதலியோர்போல யாம் பிடித்ததே சாதிப்பேமென்னுஞ் செருக்கால் யாண்டு மயங்காமையின். முக்குணங்களும் மாறிமாறி வருதலின், அதுபற்றி யெனைத்துணை நுண்ணறிவாளரும் ஓரோவழி மயங்குத லியல்பென்க இக்கருத்தேபற்றியன்றே "அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா—லின்மை யரிதே வெளிறு" 'குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்—மிகைநாடி மிக்க கொளல்' என்றார் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரு மென்பது. இங்ஙனமாகலின் வடமொழியிலும் ஆசிரியர் பாணினியார் தொல்லாசிரியர் சூத்திரங்களுட் சிலவற்றைத் தம்முடைய சூத்திரங்களா லெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அவர் சூத்திரங்களுட் சிலவற்றை ஆசிரியர் வரருசியா ரெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அவ்விருவரையும் ஓரோரிடங்களி னாசிரியர் பதஞ்சலியா ரெடுத்தோதி மறுத்து வேறுவிதி கூறுவர். அதுபற்றி யவ ரிகழப்படாரென்க. அஃதேல் ஆசிரிய ரகத்தியனார் தொல்காப்பியனார் பதஞ்சலியார் முதலாயினாரு மோரோவழி யவ்வாறு மயங்கிக்கூறுபவாலோவெனின், "அவர் தவத்தான் மனந்தூயராய் முக்குணங்களையுங் கடந்து இறைவனருள் பெற்றுடையாராகலின் அன்னரல்லரென வுணர்க." என்று ஆசிரியர் சிவஞானசுவாமிகள் தொல்காப்பியச் சூத்திரவிருத்தியிலும் கூறியவாற்றானறிக. ஆதலினால் ஆசிரியர் சிவஞானசுவாமிகள் முதலியோர் ஓரோவிடங்களில் ஆசிரியர் பரிமேலழகாருள்ளிட்ட தொல்லாசிரியர் உரைகளை மறுத்திட்டு உண்மைப்பொருளை நாட்டிச்சென்றனர். எனவே, ஆசிரியர் பரிமேலழகர் தமிழ்மக்கள்யாவரானும் என்றும் பாராட்டப்படும் பெருமையுடையாரென்பதை நன்று அறிதல்வேண்டும்.

இதுகாறு மாராய்ந்தவற்றான், 'குடம்பை' என்ற சொல்லுக்கு நாயனார்காலத்திற் 'கூடு' என்பதே பொருளாமென்பதும், அவர்க்குப் பிற்பட்டகாலத்தும் அச்சொல் பலரானும் அப்பொருளிலேயே வழங்கப் பட்டதென்பதும், ஆசிரியர் பரிமேலழகரே அதற்கு முதன்முதல் முட்டை என்ற பொருள் கற்பித்தாரென்பதும், அதுகண்டு பிங்கலந்தையார் அம்மொழிக்கு 'முட்டை' என்ற பொருளையுங் கூட்டிக்கொண்டாரென்பதும், அதுபற்றி வள்ளுவர் குடம்பைக்கு முட்டை என்ற பொருள் காட்டுதல் பொருந்தாதென்பதும், உடலுக்கும் உயிருக்கு

முளாதாய நட்பை விளக்குமிடத்துத் திருவருள் கைவரப்பெற்ற ஆன்றோர்கள் கூட்டையும் அதன்கண் வளர்ந்து அதை நீத்தேகும் புள்ளையுமே உவமைகூறினார்களென்பதும், முட்டையுங் குஞ்சு மென்ற உவமை ஆன்றோர்கள் கூறவில்லை எனபதும், அறிவுமுதிருங்காறும் உடலில் வைகிப் பருவம்வந்துழி அதனை நீத்துப் பெயர்த்தும் அதனுட் புகா தொழியும் உயிர்போல், இளம்புள் இறகு முதிருங்காறுங் கூட்டில் வைகிப் பறக்கும் பருவம் வந்துழி அதனைநீத்து அதனுள் மீண்டும் புகாதொழிதலால் அஃதே தக்க உவமையாமென்பதும், உடல் முன் தோன்றிப் பின் உயிர் வியக்தமாதல்போற் கூடு முனபும் புள் பின்பும் தோன்றுதலான் அஃதே பொருத்தமுடையதென்பதும், வினையுவமம் பற்றி யாளப்பட்ட உவமை முட்டையென்று பொருள்கொண்டக்கால் அவ்வுவமப்பொருள்கோடலமையாதென்பதும், ஆகவே தொல்லாசிரியர் உரைத்த உரையே குடம்பைக்குறட்பாவுக்குச் சிறந்த மெனபதும் பிறவும் அறிந்தாம்.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

இதுகாறும் இக்குறளைப்பற்றி வெளிவந்த ஆராய்ச்சியுரைகளும் குறிப்புகளும்.

1. The age of Manickavasagar By S. A. Tirumalai kolundu Pillai, B. A. (Page 114 Foot note)

2. பரிமேலழகர் உரை ஆராய்ச்சி ஸ்ரீலஸ்ரீ சுவாமிவேதாசலம் அவர்கள். ஞானசாகரம் பதுமம் ௧ இதழ் ௧௧.

3. செந்தமிழ்த்தொகுதி 2. பகுதி ௧ ஸ்ரீமான் கல்குளம் குப்புசாமி முதலியார் அவர்கள்.

4. செந்தமிழ்த்தொகுதி 5. பகுதி ௩ ஸ்ரீமத் மு. இராகவையங்கார் அவர்கள்.

5. இலக்கணசந்திரிகை பக்கம் ௨௮ ஸ்ரீமான் அ. குமாரசாமிப் புலவர் அவர்கள்.

பெ. ச. இரத்தினவேல் முதலியார்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௨௮௭—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

62. கை வரை என நந் தகைய காளை உரை கேளா,
ஐவரை அ கத்(து) இடை அ டைத்த முனி "ஐய,
இவ் வரை இ ருப்ப(து) அவள்" என்பதனின் முன்(பு) ஓர்
மை வரை நெ ருப்(பு) எரிய வந்த(து) என வந்தாள்.

இ—ள். இராமர் கூறியதைக்கேட்டு "அவள் இருப்பது (இதோ! சமீபத்தில் தோன்றுகின்ற) இந்தமலைதான்" என்று விசுவாமித்திரர் சொல்லிமுடிவதன்முன், கரியமலை (ஒன்று உச்சியிலே) தீஎரிய (எதிரே நடந்து) வந்ததுபோல (த் தாடகை) வந்தாள்.

கை (யையுடைய) வரை(-மலை) - யானை. எனத்தகைய - என்று சொல்லத் (தக்க) தகுதியை உடைய. காளை - கட்டிளமையுடையவன். ஐம்பொறிகளை ஐவரென உபசரித்தார். அடைத்த - (புலன்வழிச் செல்லாமல் அடக்கிக் காவல்செய்து மனச்சிறைக்குள்) அடைத்துவைத்த. ஐய - ஐயனே - அப்பா. மை - கறுப்பு. மைவரை - கரியமலை.

கரியமலை தாடகையின் கரிய பெரிய உடலுக்கும், நெருப்பு எரிதல் அவள் தலையில் உள்ள செம்பட்டைமயிர்த்தோற்றத்துக்கும், மலை(நடக்குமானால் அதன்) நடத்தல் அவள் நடத்தலுக்கும் உவமானம்.

பொறிகள் என்ற பொருள்களை நேராகக்கூறாமல், அவற்றின் எண்ணாகிய ஐந்தையும் கூட்டி ஐவரென மாற்றிக்கூறி, அந்த ஐவர், பாண்டவர் ஐவர் கன்னியர் ஐவர் என்பவர்போன்ற ஐந்தெண்ணுடைய உயர்திணைப் பொருள்களெவற்றையும் மற்றைய ஐந்தெண்ணுடைய அஃறிணைப்பொருளெவற்றையும் குறியாமல், 'அகத்திடை அடைத்தமுனி' என்ற சொற்சேர்க்கையால் ஐம்பொறிகளை ஐயமின்றித் தெளிவாகக் குறிக்கும்படி கூறிய சமத்காரம் வியப்பும் நயப்பும் விளைப்பது. 'மைவரை நெருப்பெரியவந்ததென வந்தாள்' என்று தாடகையின் உடல் அவள்

செம்பட்டைத் தலைமயிர் என்ற உவமேயப் பொருள்களைக் கூறாமலே அவைகளின் சிறந்த உவமானங்களால் அவைகளை நன்கு புலப்படுத்தியது என்றிநோக்கி உள்ளங் களிகூரத்தக்கது. இவ்வாறே, இதற்கு முந்திய 'கருமுகில்' என்ற 39-ம் பாட்டிலும் 'பெருவரை' என்ற 58-ம் பாட்டிலும் இதற்கடுத்தபாட்டிலும் அகலிகைப்படலத்தில் 'பெய்யும் மாமுகில்' என்னும் பாட்டிலும் மிகப் பொருத்தமான உவமானங்களால் உவமேயப்பொருள்களைக் கூறாமற் கூறியிருத்தல் காண்க. இங்கு உள்ளாள் என்று கூறுகிற்கையிலேயே தாடகை வந்தது நாடகநிகழ்ச்சி போலக் கூறப்பட்டிருப்பதையும் நோக்குக.

63. இறைக் கடை து டிக்த புரு வத்தள், எயி(று) என்னும்
பிறைக் கடை பி றக்கிட ம டித்த பில வாயள்,
மறக் கடை அ ரக்கி, வட வைக் கனல் இ ரண்டாய்
நிறைக் கடல் மு ளைத்தென, நெ ருப்(பு) எழ வி ழித்தாள்.

இ - ள். இறுதி (ப் பாகத்திலே) சிறிது துடிக்கின்ற புருவங்களையுடையவளும் இளஞ்சந்திரனது ஈற்றுப்பகுதிகளென்று சொல்லத்தகும்(கோர) தந்தங்கள் (நன்குவெளிப்பட்டுக்கடைவாய்களுக்குப்)பின்னாகும்படி மடித்த குகையொத்த வாயையுடையவளும் மிக்க பாவியும் ஆகிய அந்த இராட்சசி, (கரிய) கடலிலே (சிவந்த) வடவாமுகாக்கினி இருகூறாகித் தோன்றினாற்போல (க் கருங்கடல் போலப் பரந்த கரிய பெரிய முகத்திலே பெருந்தீச் சுவாலித்தெரிவதுபோலக் கண்கள் சிவந்து விளங்கக் கோபத்) தீத்தோன்ற (க் கண்களை) அலர விழித்துப் பார்த்தாள்.

இறை—சிறிது. கடை—இறுதி (ப் பாகம்). 'இறை கடைதுடித்த' எனற்பாலது எதுகைநோக்கி 'இறைக்கடைதுடித்த' எனப்பட்டது. எயிறு - பல்—வக்கிரதந்தம்—கோரப்பல். பிறை — இளஞ்சந்திரன் கடை—இறுதி. பிறக்கிட—பின்ற—பிந்த. "பின்றல் பிறக்கிடல் பிறகிடலாகும்" (பிங்கல நிகண்டு—௧௪௬௩). பிலம்—குகை. மறக் கடை—பாவத்தின் முடிவு - அத்தியந்த பாவம்—மிக்கபாவம். வடவை —வடவாமுகாக்கினி. நிறைக்கடல்—நிறைவுள்ளகடல். இப்பாட்டிற் கூறும் தாடகையின் வலிய கொடிய செயல் தோற்றம் குணங்களுக்கேற்ப, இப்பாட்டு வல்லோசை மிக்குடைத்தாயிருப்பது காண்க,

[பார்த்தவள், "இக்காட்டில் உள்ள யாவும் நிர்மூலமாக அழித்து விட்டேனாதலால், இனி இவளுக்கு உண்ண மாமிசமில்லையே என்று, கருணையுண்டாகத் தியாகபுத்தியுடன்வந்தீர்களோ? அல்லது, உங்கள் விதி பிடர்பிடித்துத்தள்ளவந்தீர்களோ? சொல்லுங்கள்" என்று சொல்லிக் "கொல்வேன்" என்று அதட்டிச் சூலத்தை யெறியத்தொடங்க, அவளைக் கொல்வது முனிவர்கருத்தென்று குறிப்பால் தெரிந்தும், 'பெண்கொலை பாவம்.' என்று இராமர் எண்ண, அதனை யறிந்துணர்ந்த விசுவாமித்திரர் கூறுவார்.]

64. தீ(து) என்(று) உள்ளவை யாவையும் (செய்து,) எமைக்
கோ(து) என்(று) உண்டிலள்; இத்தனை யே குறை:
யா(து) என(று) எண்ணுவ(து) இக் கொடி யாளையும்
மா(து) என்(று) எண்ணுதி யோ! மணிப் பூணினாய்.

இ-ள். (கொலையாதி) சகல பாவங்களையும் செய்தவள். (தவத்தால் வற்றித் தசையற்ற எலும்பும் தோலுமேயுள்ள முனிவர் உடல் சாரமற்ற, சக்கையென்று எங்களைத் தின்னாமல் விட்டிருக்கின்றாள், (இவள் செய்யாதுவிட்ட பாவக்) குறை (பின் அளவு எங்களைமட்டும் கொல்லாது விட்ட) இவ்வளவே. இப்படிப்பட்ட கொடியவளை (ப் பூதங்கள் பேய்கள் துட்டமிருகங்கள் முதலிய நாசகாரமான கொடியவைகளுள்) எது என்று கருதுதல் தக்கது? (இன்னதென்று தெரியவில்லை; அப்படியிருக்க, இவளைப்) பெண்ணென்று கருதலாமோ!

தீது - பாவம் (ஐங்குறுநூற்றின் அரும்பத அகராதி). கோது - சக்கை. மணிப்பூணினாய் - இரத்தினாபரணங்களையுடையவனே.

65. நாண்மை யே உடை யார்ப் பிழைத் தால், நகை:
வாண்மை யே பெற்ற வல் திறல் ஆடவர்,
தோண்மை யே இவள் பேர் சொலத் தோற்பரேல்,
ஆண்மை என்னும் அ(து) ஆர் இடை வைகுமே!

இ-ள். "(நாணம் மாதர்க்குரியது. அது இம்மியளவும் இல்லாத இவள் பெண்ணெனற் குரியளல்லள். ஆதலாற் கொல்லற்குரியவளே.) நாணமுடையாராகிய பெண்களைக் கொன்றால், அது இகழ்ச்சிக்

கிடமாம். வாளாண்மையுடைய வலியபுருடர்கள், தம் தோள்வல்லமையை இவள் போர்செல்லவோ நோற்பாராகுல், ஆண்மையென்பது (இவளிடத் தன்றி வேறு) யாரிடத்தே தங்கும்!"

நாண்மை - நாணின் தன்மை - நாணம். பிழைத்தல் - தவறுசெய் தல்; இங்கே கொல்லுதலைக் குறித்தது. நகை - இகழ்ச்சி; இகழ்ச்சிக் குக் காரணமானதைக் குறிக்கும். வாண்மை - வாள்மை - வாள் (உப லக்ஷணம்) வல்லமை. வல - வலிய. திறல் - வலி. மிக்க வலிமை என்னும்பொருள் பட 'வல் திறல்' எனப்பட்டது. தோண்மை - தோள்மை- தோள் ஆண்மை. ஆண்மை எனவும் அது - ஆண்மக்களின் தன்மை (-வீரம்) என்ற பொருள்பட 'ஆண்மை' யென்று சொல்லப்படுகின்ற, (சிறந்ததென்று) சுட்டிக் கூறுதற்குரிய குணம். இத்தகைய பொருள் குறித்தமைக 'ஆண்மையெனபதியாரிடை வைகுமே' என்றது 'ஆண்மையென்னும் அ(து) ஆரிடைவைகுமே' என்றார்.

66. ஐயன் அங்(கு) அது கேட்டு "அறன் அல்லவாய்
எய்தினும 'இது செய்க' என்(று) ஏவினல்,
மெய்ய! நின் உரை வேதம் எனக் கொடு
செய்கை அன்றோ அறம் செயும் ஆ(று)" என்றான்.

இ - ள். என்று விசுவாமித்திரர் கூறியதைக்கேட்டு இராமர் "சத் தியமூர்த்தியே! தருமவிரோதமானவைகளாய் (க் காரியங்கள்) நேரு மானல், (அவற்றுள் எதனையாவது) 'இதனைச்செய்வாயாக' என்று தேவ ரீர் கட்டளையிட்டால், உமது வாக்கை வேதவாக்காகக்கொண்டு (நீர் கட் டளையிட்டபடி) செய்தலன்றோ தருமம் செய்யும் முறை" என்றார்.

உண்மையோனே, உண்மையே உருவெடுத்தாற்போன்றோனே யென்று பொருள்படும் 'மெய்ய' என்ற விளியினால் விசுவாமித்திரர் கூறி யது உண்மையல்லாமல் வேறுபிராதென்றும், உண்மையின் வழி ஒழுக லே தருமமென்றும், அவர் கூறுவன தோற்றத்தில் அதருமமாக இருந் தாலும் உண்மையில் தருமமேயென்றும் இராமர் குறிப்பித்ததாகக் கொள்க.

[இவ்வளவில், தாடகை இராமர் கருத்தை அறிந்து, சூலம் முதலிய வற்றை யெறிந்து போர்செய்ய, அவர் எதிர்த்துப் போர்செய்தார். முடிவில்,]

67. சொல் ஒக்கும் கடிய வேகச் சுடு சரம் கரிய செம்மல்
அல் ஒக்கும் நிறத்தி னாள் மேல் விடுதலும், வயிரக் குன்றக்
கல் ஒக்கும் நெஞ்சில் தங்கா(து) அப் புறம் கழன்று, கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள் எனப் போயிற்(று)அன்றே

இ - ள். இராமர் (முனிவர் தசாப) வாக்குப் போலத் தப்பாத) பாணத்தைத் தாடகையின்மீது எவினவுடனே, அது, அவள் நெஞ்சிலே(தைத்து அங்கே) தங்காமல் மறுபுறம் (உருவி) நீங்கிக் கல்லாத கீழ்மக்களுக்கு (க் கற்ற) மேல் மக்கள் கூறிய நூற்பொருள் ('ஒரு காதுவழியே புகுந்து-இடையே மனத்தே தங்காது - மறுகாது வழியே போனது' என உலகவழக்கிலே சொல்வது) போலப் போய் விட்டது.

'கடிய' 'வேக' என்ற செற்கள், ஒரு பொருள் குறித்தவை; 'அதிவேகமான' என்று பொருள்பட நின்றன. கல்—மலை. வயிரக் குன்றக் கல் ஒக்கும் நெஞ்சு—(சாதாரணமான கல்மலையாகிய மலையா யில்லாமல்) வயிரமலையாகிய மலையை (க் கடினத்திலும் பருமையிலும்) ஒத்த நெஞ்சு. 'கடிய வேக' 'குன்றக்கல்' என்பவைகள் 'மீமிசை ஞாயிறு' 'உயர்ந்து ஓங்கு பெருவரை' போல ஒரு பொருட் பன்மொழி. 'கல்லாப் புல்லர்க்கு' எனறு கூறிப் பின் 'நல்லோர்' என்றதனால், நல்லோர் என்பது கற்றோரெனப் பொருள் கொள்ளப்பட்டது. இவ்வாறே,

"நல்லார் பிறர் குற்றம் நாடார்: நலம் தெரிந்து
கல்லாதார் என் குற்றம் காண்பரோ?—அல்லாத
என் போல்வார் என்னை இகழ்வரோ? என் கவிக்குப்
பின்(பு) ஆரோ சொல்வார் பிழை"

என்ற வெண்பாவினும்,

"நல்லார்கட் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

என்ற குறளினும் 'நல்லார்' என்பது 'கல்லாதார்' என்பதற்கு எதிர் மறையாய்க் 'கற்றோர்' என்று பொருள்படவருதல் காண்க. சொல்—நூற்பொருள் (சிந்தாமணி அரும்பதவுரை). பொருளுக்கு உண்மை யென்றும் பொருள் கொள்ளலாம்.

68. பொன் நெடும் குன்றம் அன்னான் புகர் முகப் பகழி என்னும்
அம் நெடும் கால வன் காற்(று) அடித்தலும், இடித்து, வானில்
கல் நெடு மாரி பெய்யக் கடை உகத்(து) எழுந்த மேகம்
மின்னொடும் அசனி யோடும் வீழ்வது போல வீழ்ந்தாள்.

இ - ள். இராமனது பாணமாகிய பெருங்காற்று மோதவே, கல்மழை பெய்வதற்காக யுகாந்தகாலத்திலே இடித்துக்கொண்டு ஆகாசத்திலே தோன்றிய மேகம் மின்னோடும் இடியோடும் (பூமியிலே) வீழ்வது போலத் தாடகை (மடிந்து) விழுந்தாள்.

புகர் - கருமைகலந்த பொன்னிறம். பகழி - அம்பு. அசனி - இடி. கரிய பெரிய மேகம் கரிய பெரிய தாடகைக்கும், இடித்தல் அவள் போரில் ஆரவாரித்தலுக்கும், மின் அவள் கோரதந்தத்துக்கும், இடி அவள் சாகும்போது கதறியதற்கும் உவமானம். ஆகாசம் அதிர்வுறுதலும் கல்மழைபெய்தலும் உவமானமாகிய மேகத்துக்கும் உவமேயமாகிய தாடகைக்கும் பொதுத்தன்மைகள்.

69. பொடி உடைக் கானம் எங்கும் குருதி நீர் பொங்க வீழ்ந்த
தடி உடை எயிற்றுப் பேழ் வாய்த் தாடகை, தலைகள் தோறும்
முடி உடை அரக்கற்(கு) அந் நாள் முந்தி உற் பாதம் ஆகப்
படி இடை அற்று வீழ்ந்த வெற்றி அம் பதாகை ஒத்தாள்.

இ - ள். அந்தக் காடெல்லாம் இரத்தம்பொங்க விழுந்த தடாகை, இராவணனுக்கு இனி நிகழும் தீமையைத் தெரிவிக்கும் அபசகுனமாக அற்றுவிழுந்த அவன் வெற்றிக்கொடியை ஒத்(துக் கிடந்)தாள்.

பொடி உடை - புழுதியையுடைய. குருதி - இரத்தம். தடி - (தாடகை உண்ட பிராணிகளின்) தசை. எயிறு - பல். பேழ்வாய் - பெருவாய். அரக்கன் - இராக்கதன் - இராவணன். உற்பாதம் - பின் நிகழும் தீமைகளைக்காட்டும் குறி. படி - பூமி. பதாகை - கொடி. தாடகையினது நீண்டவுடல் கொடியின் கம்பத்துக்கும், அவள் உடலினின்று பொங்கிய இரத்தப்பரப்பு கொடிச்சீலைக்கும் உவமம். கீழ்வீழ்ந்துகிடத்தல் இரண்டுக்கும் பொது.

70. கான் திரிந்(து) ஆழி ஆகத் தாடகை கடின மார்பத்(து)
ஊன்றிய பகழி வாய் ஊ(டு) ஒழுகிய குருதி வெள்ளம்,
ஆன்ற அக் கானம் எல்லாம் ஆயின, அந்தி மாலைத்
தோன்றிய செக்கர் வானம் தொடக்(கு) அற்று வீழ்ந்த(து) ஒத்தே.

இ - ள். (அவன்விழுந்த அந்தக்) காடு (தன் நிலை) மாறிக் கடலாகும்படியாக, அவன் மார்பிலே அழுந்திய அம்பு (தைத்த) வாய்வழி ஒழுகிய இரத்தப் பிரவாகமானது, சாயங்காலத்திலே தோன்றும் செவ்வானம் (ஆகாயத்திலே தொடுப்புண்டிருந்த) தொடுப்புஅற்றுக் கீழ்வீழ்ந்ததுபோல, அக் காடெல்லாம் பரவியது.

கான் - காடு. ஆழி - கடல். மார்பம் - மார்பு. பகழி - அம்பு. குருதி - இரத்தம். ஆன்ற - அகன்ற. ஆபின - பரவின; "எங்கும் ஆபிய உன்னை" (பாரதம் பதினேழும் போர்ச்சருக்கம்-உ௪௬). தொடக்கு-கட்டு. தூக்கப்பட்டுத் தொங்கிக்கொண்டிருந்த ஒரு விதானம் தூக்கியிருந்த கயிற்றின்கட்டு அறுபட்டுக் கீழேவிழுவதுபோல, செயற்கையாகவன்றி இயற்கையாக ஆகாயத்தில் தங்கிய செவ்வானம் "தொடக்கற்று வீழ்ந்தது" எனச் சாதுரியமாகக்கூறிக் கவி, வாசிப்போர் மனத்திலே மயக்கவுணர்ச்சி உண்டாம்படி செய்தது கவனிக்கத்தக்கது.

71\. வாச நாள் மலரோன் அன்ன மா முனி பணி மறாத
கா(சு) உலாம் கனகப் பைம் பூட் காகுத்தன் கன்னிப் போரில்,
கூசி, வாள் அரக்கர் தங்கள் குலத்(து) உயிர் குடிக்க அஞ்சி
ஆசையால் உழலும் கூற்றும் சுவை (சிறிது) அறிந்த(து) அன்றே.

இ - ள். விசுவாமித்திரர் கட்டளையை மறுக்கா(து செய்)த இராமரது முதற்போரிலே, அரக்கர்கூட்டத்தின் உயிரை உண்ணக் (கருதி, உண்டால், தன் உயிர்க்கு அபாயம் வருமேயென்று, நோயுற்ற கண் ஒளியைநோக்கக் கூசுவதுபோலக்) கூசிப் பயந்து (சமயம் வாய்த்தபோது உண்ணவேண்டுமென்று) ஆசைபோடு அலைந்துகொண்டிருந்த யமன் (அரக்கர் உயிரின்) உருசியைச் சிறிது தெரியலானான்.

நாள் மலர் - அன்றுபூத்த பூ - புதுப்பூ மலரோன் - (அப்படிப்பட்ட தாமரைமலரில் வசிக்கும்) பிரமன். காசு - இரத்தினம். உலாம்- (-உலாவும்) இங்கே எதுகையில் 'இழைத்த' என்று பொருள்படநின்றது. 'கனகப் பைம்பூண்' என்பதைப் 'பைங்கனகப்பூண்' எனக் கூட்டிப் பசும்பொன்னாபரணம் எனப் பொருள் செய்க. பூட்காகுத்தன் - பூண் காகுத்தன்—பூணையுடைய அல்லது பூணையணிந்த இராமன். கன்னிப் போர் - முதற்போர். கன்னி முதலாவதென்று பொருள்படநின்றது. முதல்முறையாகச் செய்யும் தொழில்களைக் கன்னி (-Maiden) என்ற

அடைசேர்த்துக் கூறுவது ஆங்கிலத்தும் உண்டு. ஒருவருடைய பிரதமப் பிரசங்கத்தைக் கன்னிப்பிரசங்கம் (Maiden speech) என்பது ஆங்கில வழக்கு. குலம் - 1. கூட்டம்; ('பேடிப்போர் வல்லரக்கர் பெருங்குலத்தை' இராமா. சூர்ப்ப. கஉ௩ சங்க அகராதி.) 2 வமிசம். அரக்கர் குலத்துயிர் - 1. இராட்சச வமிசத்தாரது உயிர்; 2. ராட்சச சமூகத்தின் உயிர். உழலும் - (சமயம் நோக்கி) அலையும். " ஆட்பார்த் துழலும் அருளில் கூற்று" நாலடி.

72. "யாமும்எம் இருக்கை பெற்றோம்! உனக்(கு) இடை யூறும் இல்லை!
கோமகற்(கு) இனிய தெய்வப் படைக்கலம் கொடுத்தி!" என்று
மாமுனிக்(கு)உரைத்துப்பின்னர், வில்கொண்டமழை அன்னான்மேல்
பூ மழை பொழிந்து, வாழ்த்தி விண்ணவர் போயி னாரே.

இ - ள். ("தாடகைவதை, இராவணாதி அரக்கர் முடிவதற்கு நிச்சயமான அறிகுறி! அவர்கள் முடியவே, அவர்களாற் பறிக்கப்பட்ட) எங்கள் இருப்பிடங்களை நாங்கள் பெற்றோர்களாயினோம்! (உம்முடைய தவத்துக்கும் வேள்விக்கும் இடையூறுசெய்யவரும் அரக்கர் இராமரால் மடிவாராதலால்) உமக்கு (இனி) இடையூறு (வருதல்) இல்லை. (எங்கள் அமிசமாக உம்மிடத்தேயுள்ள) தேவாஸ்திரங்களை அவருக்குக் கொடுப்பீராக!" என்று (நிகழ்ந்தபோரை விண்ணினின்று நோக்கிக்கொண்டிருந்த) தேவர்கள், விசுவாமித்திரருக்குக்கூறி (வான) வில்லோடுகூடிய மேகத்தை ஒத்தவராகிய (கோதண்ட) ராமர் மீது பூ மழை பொழிந்து, அவரை ஆசீர்வதித்து (த் தத்தம் இடங்களைநோக்கி)ச் சென்றார்கள்.

இருக்கை—இருப்பிடம்—குடியிருக்குமிடம். கோமகன்—இராசகுமாரன்—இராமன். தெய்வப்படைக்கலம்—தேவாஸ்திரங்கள்; " ஆறிய அறிஞன்" என்னும் வேள்விப்படலப்பாட்டில் இவைகளையே "உம்பர்தம் படைகள்" என்றார். கொடுத்தி—கொடுப்பாய். வில்கொண்டமழை—வானவில்லோடும் விளங்கும் மேகம். அது வில்லேந்திய கருநிறமுள்ள இராமனுக்கு உவமானம். 'எம் இருக்கைபெற்றோம்' 'உனக்கு இடையூறும் இல்லை' என்பவைகளில் எவ்வளவு விரிவான பொருள்கள் எவ்வளவு சுருக்கமான சொற்களால் உய்த்துணரவைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நோக்குக.

வேள்விப்படலம்.

(விசுவாமித்திரர்செய்த வேள்வியைக் கூறுவது.)

[விசுவாமித்திரர் ஆயுதங்களை மனமுவந்து இராமருக்குக் கொடுத்தார்.]

73. ஆறிய அறிஞன் கூறி அளித்தலும், அண்ணல் தன் பால்
ஊறிய உவகை யோடும் உம்பர் தம் படைகள் எல்லாம்,
தேறிய மனத்தான் செய்த நல் வினைப் பயன்கள் எல்லாம்
மாறிய பிறப்பில் தேடி வருவ போல் வந்த அன்றே

இ-ள். தேவாயுதங்களெல்லாம், தம்மை விசுவாமித்திரர் இராமருக்குக் கொடுத்தவுடனே, ஒருவன் முன்சென்மத்திற் செய்த புண்ணிய பலமெல்லாம் அவனுடைய மறு சென்மத்தில் அவனைத்தேடி அடைவது போல, இராமரிடம் சந்தோஷத்துடன் அடைந்தன.

ஆறிய—1. "(காமவெகுளி மயக்கங்கள்) தணிந்த;" 2. ("அரக்கராலாயதுயர்) தணிந்த." "ஆறிய கற்பின அடங்கிய சாயலள்" என்றும், "ஆறிய கற்பிற் றேறிய நல்லிசை—வண்டார் கூந்த லொண்டொடி" என்றும் பதிற்றுப்பத்தில் 16—ஆம் பாடலிலும் 90—ஆம் பாடலிலும் வருகின்றன. இவற்றில் 'ஆறியகற்பு'க்கு 'அறக்கற்பு' என்பது பொருள். (பதிற்றுப்பத்து அரும்பதவுரை). இதனால் 'ஆறிய அறிஞன்' என்பதற்கு 'அற அறிவு உடையவன்' என்று பொருள் கொள்ளலாம் போலும். கூறி—(அந்த அந்த அஸ்திரங்களுக்குரிய மந்திரங்களை) உபதேசித்து. தேறிய—'சந்தேகம் இல்லாமல்) தெளிந்த. 'வருவன,' 'வருவ' எனத் தவ்விகுதி கெட்டுநின்றது. மாறிய பிறப்பு—மாறுகியபிறப்பு - வேறுகிய பிறப்பு - மறுபிறப்பு. "தேறிய மனத்தான் செய்த நல்வினைப் பயன்க ளெல்லாம்— மாறிய பிறப்பில் தேடி வருவ போல்" என்றது,

"பல் ஆவுள் உய்த்து விடினும் குழக் கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே தற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"

என்ற நாலடியார் வெண்பாவின் கருத்தைத் தழுவியது.

[பின்பு மூவரும் வழிச்சென்று ஒரு சோலையை அடைய, "இது யாது" என்று இராமர் வினவ முனிவர் கூறுவார்.]

74. தங்கள் நா யகரிற் றெய்வம் தவம் பிறி(து) இல என்(று) என்னும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது ; மற்றும் கேளாய்,
எங்கள் மா மறைக்கும் தேவர் அறிவிற்கும் பிறர்க்கும் எட்டாச்
செம் கண் மால் இருந்து மேல் நாள் செய் தவம் செய்த(து) அனறே.

இ - ள். " தங்கள் கணவரினும் சிறந்த தெய்வமும் தவமும் வேறில்லையென்று கருதும் (கற்புடைய) மாதர் மனம்போலப் பரிசுத்தமாயிருப்பது (இந்தச்சோலை): இன்னும் (இதன்பெருமையைக்) கேளும். நான்குவேதங்களுக்கும், தேவரது அறிவுக்கும மற்றெவர் (அறிவு)க்கும் எட்டாத திருமால் முன்னாளிலே இங்கேயிருந்து தவஞ்செய்யப்பெற்ற (மகிமை உடைய)து.

[அவர் இங்கிருந்தகாலத்தில், மாவலிச்சக்கரவர்த்தி மூன்றுலகங்களையும் கவர்ந்து, ஒரு பெரிய யாகஞ்செய்யத்தொடங்கி, யாசகர்க்கு வேண்டியவை யாவையும் கொடுக்கத்துணிந்தவனாயிருந்ததை அறிந்து "அவனை ஒடுக்கி இந்திரனுக்கு அரசுநல்கவேண்டும்" என்று தேவர்கள் திருமால்பால் இரந்தனர். அவர் அதற் கிசைந்தார்.]

75. காலம் நு னித்(து) உணர் காசிப னுக்கும்
வால் அ தி திக்கும் ஓர் மா மக(வு) ஆகி,
நீல நி றத்து நெ டும் தகை வந்(து) ஓர்
ஆல் அமர் வித்தின் அ ரும் குறள் ஆனான்.

இ - ள். காசிபருக்கும் (அவர்மனைவி) அதிதிக்கும் பிள்ளையாய் (மிகப்பெரிய) ஆலமரம் அடங்கிய (அதன் நுண்ணிய) விதைபோலத் தமது விசுவரூபமடங்கிய சிறிய வாமனமூர்த்தியாய் மகாவிட்டுணு அவதரித்தார்.

நுனித்து உணர்-நுட்பமாக அறிகிற. வால்-தூய. குறள்—குள்ளன்.

[" அவர் மாவலிபாற் போக, அவன் உபசரித்து, 'உம்மினும் சிறந்த பிராமணோத்தமர் இலர் ; நீர் வரப்பெற்ற என்னினும் சிறந்தாரும் இலர்' என்று கூற, அவர் யாசகருக்கு அவர் ஆசைக்கும் அதிகமாகக் கொடுக்கும் நின்பால் வந்தவர் சிறந்தவர் ; வாராதவர் சிறவாதவர் என, அவன் 'உமது விருப்பம் யாது?' என, அவர் 'மூன்றடிமண்' என, உடனே அவன் 'தந்தேன்' என, அப்போது சுக்கிராசாரியார் 'இவ்வுருவம் வஞ்சகமானது; இவர் அண்டம் உண்ட நெடுமால் என்று தெரிந்து

கொள்' என்று கொடுப்பதைத் தடுக்க, அவன் அவரைநோக்கிக் கூறுவான்.]

76. நினைக்கிலை என் கை நிமிர்ந்திட வந்து,
தனக்(கு) இயலா வகை தாழ்வது தாழ்(வு) இல்
கனக் கரி யானது கைத் தலம் என்னில்,
எனக்(கு) இதன் மேல் நலம் யாது கொல்! என்றான்.

இ - ள். "(கொடுத்தற்கு) என்கை மேலாக உயர, (வாங்குதற்கு) தன் தகுதிக்கு ஏலாதவாறு (கீழாகத்) தாழ்வது திருமாலின் கையே யானால், எனக்கு இதனினும் மேம்பட்ட நன்மை யாதுளது!" என்றான்.

நினைக்கிலை - (சரியாக) நினைக்கின்றாயில்லை - உன் எண்ணம் தப்பு. தாழ்வு இல் - எவ்வகைத் தாழ்வும் இல்லாத. கனக்கரியான் - மேகக் கறுப்புநிறமுடையான் - விட்டுணு. கனம் - மேகம்.

77. வெள்ளியை ஆதல் விளம்பினை மேலோர்,
வள்ளியர் ஆக வழங்குவ தல்லால்,
எள்ளுவ என்? சில இன் உயி ரேனும்,
கொள்ளுதல் தீது; கொடுப்பது நன்றால்.

இ - ள். (நீர்) வெள்ளறிவுடையீர் ஆதலை(க் கொடுப்பதைத் தடுத்துக் கூறியதனால் வெளிப்படும்படி) உரைத்தீர். மேலோர், கொடையாளராகக் கொடுப்பதல்லாமல், (கொடுத்தால் இகழ்வாரென்று) இகழ்வன யாவை? (அவை, மாதராதுகற்பு, மைந்தராதுமானம் போன்ற) சிலவே. இனிய உயிரையாயினும் (அதனைநீக்கப் புகுந்தானைக் கொல்லுதல் முதலிய வேறு வகையால் விலக்கமுடியாமல் அவனை) யாசித்து (அது நீங்காது நிற்க)ப் பெறுதல் தீமையாம்; (கன்னன் தனக்குப் பிராணாதாரமாய்ப் பிரானைனயாகிய கவசகுண்டலங்களைக் கொடுத்ததுபோல உயிரையும்) கொடுப்பது நன்மையாம்.

வெள்ளியை-1. சுக்கிரன் என்னும் பெயருடையாய்; 2. வெள்ளறிவுடையாய். வெள்ளறிவுடையாய் என்று வெளிப்படையாகக் கூறாமல், குறிப்பாக 'வெள்ளியை' என்று ஆசிரியனாதலின், சிலேடையாகக் கூறினான். 'வெள்ளியை' என்பதற்குச் சுக்கிரன் என்னும் பெயருடையாய் என்று பொருள்கொள்ளும்போது, 'ஆதல் விளம்பினை' என்பதற்கு (உன் புத்திக்கு நல்லது)ஆதலைச் சொன்னாயென்று பொருள்கொள்க. இப்பாட்

டின் நான்காம் அடியில், கொள்ளுவது தீது என்பது 'கொள்ளுதல் தீது' என வந்ததுபோல ஆவது ஆதல் என வந்தது. ஆவது-ஆகும் காரியம்; "ஆவது கருதாளுகில் அமைச்சர்சொற் கேளாளுகில்" (பாரதம் கிருட்டிணன் றூதுச்சருக்கம் ௩௪உ). எள்ளுவ - எள்ளுவன-இகழ்வன. என் - என்ன - யாவை? "என்னே செயவேண்டிற் றவையெல்லாம்" கந்தபு. அசுரர் தோற்ற. ௩. (சங்கஅகராதி). "கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்" என்றது "நல்லாறெனினும் கொளல் தீது மேலுலகம்—இல்லெனினும் ஈதலே நன்று" என்ற குறட்கருத்தைக் கொண்டது. ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்பிள்ளையும், ஸ்ரீ. த. கனகசுந்தரம் பிள்ளையும் 'அமலோய்! வள்ளியராகி வழங்குவதல்லார் எள்ளுவதென்சில'என்ற பாடங்கொண்டு, 'வழங்குவதல்லார் எள்ளுவதென்சில' என்பதற்குக் 'கொடுப்பதைக் கொடாதவர் சிலவார்த்தை கூறி இகழுவதென்' என்று பொருள் கூறியிருக்கின்றனர்.

78. மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள்; மாயா(து)
ஏந்திய கைகொ(டு) இ ரந்தவர், எந்தாய்!
வீந்தவ ரென்பவர்: வீந்தவ ரேனும்
ஈந்தவ ரல்ல(து) இ ருந்தவர் யாரே!

இ-ள். இறந்தவர் இறந்தவரல்லர்; (பின்னை யாவர் இறந்தவரெனின், இரத்தலினும் இறத்தல நன்றென்று) இறவாமல் (பொருள்வாங்குதற்கு) ஏந்திய கையோடு இரந்தவர் (இருந்தும் செத்தாரொத்தாராதலால்) இறந்தவர்: ஈந்தவர் (பூத உடம்பு ஒழிய) இறந்தாராலும் அவரன்றி (உலகத்திற் புகழுடம்போடு) இருந்தவர் யாவர்!

கைகொடு - கைகொண்டு. எந்தாய் - எம் தந்தையே, குருவாதலால் இவ்வாறு விளித்தான். வீந்தவர் - இறந்தவர். 'இல்வாழ்வானென்பான்' என்ற குறளில் 'என்பான்' என்பது 'என்று சொல்லப்படுவான்' என்றபொருளில் வருதல்போல, 'வீந்தவரென்பவர்' என்பதனில் "என்பவர்" என்று சொல்லப்படுவர் என்று பொருள்பட வந்தது.

இக்கவி, மேல்நோக்காக நோக்க, விரோதப்பொருள்களும், உள் ஆழ்ந்துநோக்க, மிகப் பொருத்தமான பொருள்களும் உள்ளது; ஈந்து (புகழுடம்பை நிறுத்தி) இறந்தார், தோற்றத்தில் இறந்தாரேயன்றி, உண்மையில் இருந்தாரென்றும், இரந்து (அந்தஇழிவினுல் நடைப்பிண

மாய்) இருந்தார், தோற்றத்தில் இருந்தாரேயன்றி, உண்மையில் இறந்தாரென்றும் உய்த்துணரும்படி கூறி, ஈதலின் சிறப்பையும், ஈயாததலின் இழிவையும் மிகஇனிமையாகப் பசுமரத்தாணிபோல மனத்தில் நன்கு அழுந்தும்படி வற்புறுத்திக் கூறுவது. இது, இனிய கவிகளுட்சிறந்த இனிய கவிகளுள் ஒன்று.

['கொடுப்பவனைத் தடுப்பவன் கொடுப்பவனையும் தன்னையும் பாவத்துக்குள்ளாக்கிக் கெடுப்பவன்; இருவரையும் கெடுப்பதால், கொடுப்பதைத் தடுப்பதைப்போலக் கெடுப்பதொன்றுமில்லை. ஆதலால், கொடுப்பது தடுப்பது உமக்கு அழகன்று என்று கூறினன்].

79. கயம் தரும் நறும் புனல் கையில் தீண்டலும்,
பயந்தவர் களும் இகழ் குறளன் பார்த்(து) எதிர்
வியந்தவர் வெருக் கொள, விசும்பின் ஓங்கினன்
உயர்ந்தவர்க்(கு) உதவிய உதவி ஒப்பவே.

இ - ள். (பின்பு அவன் 'நீர் வேண்டிய மூன்றடி மண் தந்தேன்' என்று வார்த்த தான) நீர் கையிற் பட்டவுடனே, ('காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு,' 'குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி' என்றவாறு தம் பிள்ளை எவ்வளவு விரூபியானாலும் கண்டுமகிழும் இயல்புடைய) பெற்றோருமே (அருவருத்து வெறுத்து) இகழுமபடியுள்ள குள்ளர், எதிர்(நின்று) பார்த்தோர் (முதலில்)ஆச்சரியப்பட்டு(ப் பின்பு) பயம் அடையும்படி, உத்தமர்க்கு உபகரித்த உபகார (பல)ம் (ஒன்று பலகோடி மடங்காக வளர்தல்) போல, ஆகாயம் (அளாவ) வளர்ந்தார்.

கயம் - குளம். நறும்புனல் - நல்லநீர். நறுமை - நன்மை. 'நறுந்தொகை' என்னும் நூற்பெயரில் 'நறும்' என்பது 'நல்வழி' 'நன்னெறி' என்பவற்றிலுள்ள 'நல்' போல, 'நல்ல' என்ற பொருள்பட நிற்றல் காண்க. பயந்தவர் - பெற்றவர். குறளன் - குள்ளன் - வாமனராக அவதரித்த திருமால். 'எதிர் (எதிரில) பார்த்து' என வரற்பாலது செய்யுளாதலால், 'பார்த்தெதிர்' எனப் பிறழ்ந்துவந்தது. வியந்தவர் - அதிசயித்தவர் (ஆகி). வெரு - பயம்; வெருவு எனவும் வரும்.

தம் பிள்ளைகள் விகாரரூபமாயிருப்பினும், பெற்றோருக்கு அழகாகத் தோன்றுவதும், வாமனர் வடிவத்தை முதலிற்கண்டபோதும் அது

வளரத்தொடங்கியதைக் கண்டபோதும் ஆச்சரியப்பட்டவர்கள் அவ்வடிவம் பயங்கரமான பரிமாணம் அடையவுறவே பயப்படலுற்றதும் ஆகிய இயல்பான மனத்தன்மைகளைக் கவி இனிது கூறியிருக்கின்றனர். அவர், தாம் இப்பாட்டிற் கூறக்கருதியது 'மூக்கினான்' என்று மூன்றாம் அடி முடிந்ததனோடு கூறிமுடிந்துவிட, நான்காம் அடியைப் பூரிப்பாராய், "உதவி வரைத்(து) அன்(று) உதவி; உதவி - செயப்பட்டார் சால்பின் வரைத்து" என்ற குறளிற்கூறிய வுண்மையைத் திருட்டாந்தப்படுத்திப் பூரித்தார்போலும். அத் திருட்டாந்த விளக்கம் வருமாறு:—இப்போது கூறப்பட்ட உபகதையில் 'உதவிசெய்யப்பட்டார்,' உலகம் தோன்றிய காலமுதல் உதவிசெயப்பட்டாரெல்லாரினும் உத்தமரென்பதை விளக்கும் புருடோத்தமப் பெயரினராகிய மகாவிட்டுணுவே. அவருக்குச் செய்த வுதவி எவ்வளவு சிறிதாயினும் அவ்வுதவிப்பயன் அவரவ்வளவு பெருமையை யுடையதாம். அவர்க்குச்செய்த வுதவி அவரது வாமனவடிவம்போலச் சிறிது; அவ்வுதவிப்பயன் அவரது விசுவரூபம்போலப் பெரிது.

மேற்கூறியவாறு, கவி, மூன்றும் அடியோடு தம் கருத்துக் கூறப்பட்டு முடிந்துவிட, நான்காம் அடியை ஒரு சிறந்த திருட்டாந்தத்தால் நிரப்பினாரென்பதன்றி, வாமனர் விசுவரூபமெடுத்தற்குச் சிறந்த திருட்டாந்தமாகவும், உயர்ந்த நீதிபோதிப்பதாகவும் 'உதவிவரைத்தன்று' என்ற குறள் தம்மனத்தே உதயமாக, அதனை அழகாகச சுருக்கி, "உயர்ந்தவர்க் குதவிய உதவி யொப்பவே" என்ற மகுடமாக முற்று மோனைபெற்ற நான்காம் அடியை முதலில் ஆக்கிக்கொண்டு பின்பு மற்றை மூன்றடிகளைச் சமர்த்தித்தும் இருக்கலாம். அப்படியிருப்பினும், அதுவும், அம்மூன்றடிப் பொருட்பொலிவை நோக்குவார்க்கு அவரது கவி சாதுரியத்தை நன்கு விளக்குவதாம்.

["ஆகாயம் அளாவ வளர்ந்தவரது ஒரு கால், பூமிமுழுதும் வியாபித்து, அதற்குமேற் பூமியில்லையாதலால், அவ்வளவில் நின்றது; பூமி விரியுமாயின், அதுவும் விரிவதாய் நின்றது: மற்றொருகால் வானமெல்லாம் பரந்து மேற்செல்ல இடமின்றி மீண்டது; வானம் மேற்கொண்டு பரவுமாயின், அதுவும் பரவுவதாம். இவ்வாறு அவர் மண்ணையும் விண்ணையும் இரண்டடியாக அளந்து, மூன்றாம் அடி அளவுக்கு வேறிடமின்

மையால், மாவலியின்சரீரத்தையே அளவிடமாக்கி அவனைத் திருவடிக் கீழ் இருத்தினார். பின்பு இவ்வனம்நீங்கிச் சென்றார். அவர் இருந்த இந்த இடத்திலேயே யான் யாகம்செய்வேன்" என்று கூறி விசுவாமித்திரர் வேள்விசெய்யத் தொடங்கினார்]

80. எண்ணுதற்(கு) ஆக்(க) அரி(து) இரண்டு மூன்று நாள்
விண்ணவர்க்(கு) ஆக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற இமையின் காத்தனர்.

இ - ள். இராம லக்குமணர்கள், கண்ணை இமைகாத்தல்போல, விசுவாமித்திரரது வேள்வியை (மற்றவர்கள்) நினைத்தற்கும் (நினைத்தாலும்) செய்தற்கும் அரிது (ஆனவிதமாகக்) காத்தார்கள்.

எண்ணுதற்கு அரிது ஆக்க அரிது என இயைக்க. ஆக்க—செய்ய. ஆக்கல்—செய்தல் (உ-ம்) "திக்கோர் நாலிரண்டினுந் தன்செய்ய—கோல் வரும்படியே யாக்கிக் கொணர்ந்தன திறைகள்" பாரதம். இராச ௬௬. (சங்க அகராதி). இரண்டு மூன்று நாள்—ஆறு நாள். விண்ணவர்க்கு ஆக்கிய—தேவர்களுக்காக (அவர் பிரீதிப் பொருட்டு)ச் செய்த. இமையின்—இமைபோல.

எண்ணுதற்கு ஆக்க அரிது (ஆகக்) காத்தனர் எனக் கூட்டுக. இவ்வாறு கூட்டிப் பொருள் கொண்டாரன்றி, "எண்ணுதற்காக்கரிதிரண்டு மூன்று நாள்—விண்ணவர்க்கு ஆக்கிய முனிவன் வேள்வி" என்பதற்கு "நினைக்கவும் செய்யவும் அருமையாக ஐந்து நான் மீன்களைத் தன் கட்டளையை அவமதித்த தேவர்கள்பொருட்டுப் படைத்த முனிவனது யாகத்தை" என்றும், "நினைக்கவும் செய்யவும் அரிய, ஆறுநாளும் தேவர் பொருட்டுச் செய்த முனிவனது யாகத்தை" என்றும் பொருள் கொண்டாரும் உண்டு. நாள், மீன், நட்சத்திரம் என்பவை ஒருபொருள் குறித்தவை. வேள்விசெய்த நாள்கள் ஆறு என்று வான்மீகத்திற் கூறப்பட்டிருக்கின்றது. மன்னன்—தசரதன். மைந்தர்கள்—இராமலக்குமணர்கள்.

"இமையின் காத்தனர்"—இதற்கு நிலையாயிருக்கும் விழிமையை அசைந்துகொண்டிருக்கும் மேலிமை தட்டிவருவதுபோல, ராமன் சாரிவந்து, ஓரிடத்தில் நின்ற லக்ஷ்மணனைத் தட்டிக்கொடுத்தான் என்று விசேஷார்த்தம் சொல்வது வழக்கமாயிருக்கிறது. இது, கம்பனாலேயே சொல்லப்பட்டதாகவும் கர்ணபரம்பரை. ஆனால், 'இமைகள் கண்ணைக் காப்பதுபோல அருமையாகக் காத்தார்கள்' என்ற பொருளில் உள்ள சுவை, இந்த விசேஷார்த்தத்தில் இல்லை. இதற்கடுத்தபாட்டில் இரண்டு வீரரும் திரிந்தார்கள் என்று கவி சொல்லுவதைக்கூடக் கவனிக்காமல் விசேஷார்த்தம் கற்பித்திருப்பது விநோதமாயிருக்கிறது.

"விசேஷார்த்தங்களில், பெரும்பான்மை உண்மையானருசியற்றவைகளாகவேயிருக்கின்றன. ஆனால், செய்யுளுக்கு அமோகமாக விசேஷார்த்தங்கள் சொல்லுகிறவர்கள் மகா ரஸிகர்கள் என்ற அநர்த்தமான அபிப்பிராயம் நாட்டில் மிக அதிகமாயிருக்கிறது. இந்த அபிப்பிராயம் என்று நீங்குகிறதோ அன்றுதான் உண்மையானசுவை பிறக்கும்" (ஸ்ரீ. வ. வெ. ஸுப்ரம்ஹண்ய ஐயர் கம்பராமாயணச்சுருக்கம் பாலகாண்டம் அருட்பொருள்விளக்கம் பக்கம் ௧௪௦—௪௧.)

[அவ்வாறு காத்த ஆறுநாள் முடிவிலே வில்லும் வாளும் தாங்கிய அரக்கர்படை, வில்லோடும் மின்னோடுங்கூடிய கார்மேகம்போல, ஆகாயத்திலே திரண்டு இடிபோல ஆரவாரித்து, மழைபோல அம்புபொழிய, இராமர் அவைகளைத் தமது பாணங்களால் விலக்கி, ஓர் அம்பால் தாடகைமக்கள் இருவரில் மாரீசனைச் சமுத்திரத்திலே யெறிந்து, மற்றோரம்பால் சுவாகுவைக் கொன்று, வேறுகணைகளால் அரக்கர் தலைமலைகளும், இரத்த ஆறும் புரளும்படிசெய்ய, உயிர்தப்பிய இராக்கதர் ஓடியொழிந்தார்கள். வேள்வி விக்கினமின்றி முடிந்தது. அப்போது விசுவாமித்திரர் மனமுவந்து இராமனை நோக்கிக் கூறுவார்.]

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

4000 பிரபந்தங்களின்சாற்றுப்பாக்கள்.

நாலாயிரதிவ்வியப்பிரபந்தங்களின் பதிகங்களின் இறுதியிற் காணப்படும் சாற்றுப்பாசுரங்கள், அந்தந்த ஆழ்வார்கள் இயற்றியவை யாகவே கருதப்பட்டுவருகின்றன. ஆனால் இக்கொள்கை சமீபத்தில் உண்டானதல்ல. கி. பி. பதினான்காவது நூற்றாண்டிலிருந்த வேதாந்த தேசிகர் இயற்றிய "பிரபந்தசார"த்திலேயே இது ஆதாரவுபெற்றிருக் கிறது. இந்நூலில், ஆழ்வார்கள் பன்னிருவருடைய அருளிச்செயல் களின் பாசுரத்தொகை 4000 என்று கணக்கிட்டுக் கூறப்பட்டிருப்ப துடன் அவர்களில் ஒவ்வொருவரும் இயற்றிய பாக்களின் தொகையும் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனல், பிரபந்தங்களின் பதிகமுடிவிற் காணப்படும் சாற்றுப்பாக்களை விடுத்தால் இவ் விருவகைக்கணக்கையும் தலைக்கட்டமுடியாது.

பிள்ளானுடையநோக்கம்.

கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டில் திருவாய்மொழிக்கு மணிப்பிரவாளநடையில் வியாக்கியானம்செய்தருளிய திருக்குருகைப் பிரான்பிள்ளான் திருவாய்மொழியின் சாற்றுப்பாக்கள் சடகோபரால் இயற்றியவை என்றாவது அல்லவென்றாவது ஒருதலையாக ஒன்றும் கூறினாரில்லை. ஆனால் இப்பாக்களுக்கு இவருதவிய வியாக்கியானத்தை உற்றுநோக்குமிடத்து, இவை சடகோபர் அருளியவையல்லவென்று இவர் கொண்டனரெனத் தோன்றுகிறது.

சாற்றுப்பாக்கள் இல்லாத பிரபந்தங்கள்.

நாலாயிரத்தின் பிரபந்தங்கள் எல்லாவற்றிலும் இப்பாக்கள் பொருந்தியிருக்கின்றனவென்று கொள்ளுதற்கு இடமில்லை. பொய்கை யாருடைய திருவந்தாதிமுதலிய ஐந்து திருவந்தாதிகள், திருச்சந்த விருத்தம், அமலனாதிபிரான், திருவாசிரியம், திருவெழுகூற்றிருக்கை, பெரியதிருமடல், சிறியதிருமடல் ஆகிய இந்த 11 பிரபந்தங்களிலும் சாற்றுப்பாக்கள் காணப்படவில்லை. மற்ற 12 பிரபந்தங்களுமே அவைக ளுடன் பொருந்திவிளங்குமவையாகும்.

ஆராய்ச்சிமுக்கியம்.

சிலர் இப்பாசுரங்களை இயற்றியவர் யாவர் என்பதை இப்பொழுது ஆராய்வது பயனுடைத்தல்லவென்று கொள்ளுவர். ஆனால் இது சரியாகாது. திருமங்கையாழ்வாருடைய பெரியதிருமொழியின் 18 ஆவது பதிகத்தின் கடைசிப்பாட்டில் "தொண்டையர்கோன்வணங்கும் வயிரமேகன்" என்று, வயிரமேகதந்திதுர்க்கன் என்பான் ஒரு சாளுக்கியசக்கிரவர்த்தியின்சிறப்புக் கூறப்பட்டிருக்கிறது. ஒருநண்பர், இப்பாட்டு இவ்வாழ்வார் இயற்றியதாகக்கொண்டு இவர் இச்சாளுக்கிய மன்னன்காலத்துக்குப் பின் தோன்றியவரென்று இவருடையகாலத்தை நிர்ணயத்திருக்கின்றனர். ஆகையால் சரித்திரஉபயோகத்துக்கு இவ்விஷயத்தை ஆராய்ந்து முடிவுகட்டுவது இன்றியமையாததாகும். ஆனால் ஆராயுமிடத்து, இப்பாக்கள் ஆழ்வார்கள் அருளியவைபல்லவென்று முடியுமேனும், இது இவைகளின் தொன்மைக்கும் பெருமைக்கும் எவ்வகையினும் இழுக்காகாது.

(1) பெரியாழ்வார்.

பெரியாழ்வாருடைய திருமொழியின் சாற்றுப்பாசுரங்கள் அவ்வாழ்வார் இயற்றியவையல்லவென்றுகொள்ளுதற்குச் சிலகாரணங்கள் தோன்றுகின்றன.

நூற்புகழ்ச்சி.

இவர் திருமொழியின் சாற்றுப்பாக்கள் அவைகளையோதுவோர நன்மக்களையும், செல்வத்தையும், பேரின்பவீட்டையும் பெறுவர் என்று கூறுவதுடன் ஆழ்வாரையும், "பாராரும் புகழ்புதுவைப் பட்டர்பிரான்" என்றும் "நால்வேதக்கடலமுதை * * வேதாந்தவிழுப்பொருளின் மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன் விரித்தனனே" என்றும் "மெய்ந்நாவலன் மெய்யடியான் விட்டுசித்தன்" என்றும் பலவிதமாகப் புகழ்கின்றன.

ஆனால், ஆழ்வாருடைய உண்மையான எளியசுபாவம் அவருடையதிருமொழியிலேயே பலஇடங்களிலும் வெளியாகிறது.

அவர், "வாக்குத்தூய்மையிலாமையினாலேமாதவாவுன்னை வாய்க்கொள்ளமாட்டேன்" (41—1) என்றும், "சழக்குநாக்கொண்டு புன்கவி சொன்னேன் சங்குசக்கரமேந்துகையானே" என்றும் தம் கவித்திறமையை இகழ்ந்துள்ளார்.

"நன்மைகள் தீமைகள் ஒன்றுமறியேன் நாரணனென்னு மித்தனை யல்லால்" என்றும், "போது இல்கமலவன்னெஞ்சம்" என்றும் தமது ஞானபக்திக்குறைகளை நிரைந்தும் கூறியுள்ளார். ஆனதுபற்றி ஆழ்வாருடைய பெரும்புகழ்ச்சி மலிந்துகிடக்கும் இச்சாற்றுப்பாக்களை இவர் செய்தவையென்றுசொல்லுவது சிறிதளவும் தகாததாகும்.

ஆழ்வாரின்தோன்மை.

இதுமட்டுமல்ல; இப்பாக்களே, அவைகள் உண்டானகாலத்தில் ஆழ்வார்பெற்றிருந்த, தொன்மையைக் காட்டாநிற்கின்றன.

"பாரணிந்ததொல்புகழான்விட்டுசித்தன்" (12–11)
"பாரார்தொல் புகழான்புதுவைமன்னன் (13–13)
"பார்மலிதொல்புதுவைக்கோன்" (14–10)
"பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்"(21–11)
"சீரணிதொல்புகழ்விட்டுசித்தன்"(36–10)

சிலர், இவைகளினால் ஆழ்வார் தம்முடைய கருடாம்சமான தொன்மையானபுகழைத் தாமே விளக்கினர் என்று கூறுவர். ஆனால் இக்கூற்று எவ்வித ஆதாரமுமன்றியிருப்பதுடன், இது ஆழ்வாருடைய இயற்கைக்கும் முழுதும் விரோதமாயுள்ளது.

ஆழ்வாரியற்றிய சாற்றுப்பாசுரம்.

திருப்பல்லாண்டுப் பதிகத்தில் 11-வது செய்யுள் ஆழ்வாருளிய சாற்றுப்பாவாகும். அதற்கும் அதையடுத்த 12-வது செய்யுளுக்குமுள்ள பேதம வெளிப்படை. முந்தியதில் ஆழ்வாருடைய தன்மையொருமையும் எளியசுபாவமும விளங்காநிற்கும். பிர்தியது மற்றச் சாற்றுப் பாக்களைப்போலப் படர்க்கையில் ஆழ்வார்புகழ்ச்சி நிரம்பிநிற்கும்.

பதிகச்செய்யுட்கணக்கில் முரண்.

ஆழ்வாருடைய ஆறுவது திருமொழியிற் சாற்றுக்கவியைச் சேர்த்து 11 பாக்களிருக்க ஈற்றுப்பாசுரம் அப்பதிகத்தில் 10 செய்யுட்கள் உளதாகவே சொல்லிநிற்கும். ஈற்றுப்பாசுரமாகிய சாற்றுக்கவியைப் பதிகக்கணக்கினின்றும் விடுத்ததற்குக் காரணம் விளங்கவில்லை. இவ்விடுதலையை 7, 25, 27, 29 ஆவது பதிகங்களின் கணக்கிலும் காணலாம். ஆனால் 10, 11, 24, 36 ஆவது பதிகங்களின்கணக்கில் இச்

சாற்றுப்பாக்களும் சேர்க்கப்பட்டன. இவ்விதம் மூன்றடைக் கணக்கிட்டிருப்பதே இப்பாக்கள் யாவும் ஒருவரால் இயற்றப்பட்டவையல்லவென்பதைக் காட்டுவதாகும்.

கண்டு எடுத்துக்கூறியவிஷயங்களைக்கொண்டு பெரியாழ்வார்திருமொழியின் பதிகாற்றின்கணுள்ள சாற்றுப்பாக்கள் அவரியற்றியவையல்லவென்று முடிவுபெறுவது மிகையாகாதெனத் தோன்றுகிறது.

(2) ஆண்டாள்.

ஆண்டாளுடைய பிரபந்தங்களின் சாற்றுப்பாக்களிடத்தும் மேற்கூறிய இழுக்குகள் மூன்றும் பொருந்திக்கிடக்கின்றன. "பட்டர்பிரான் கோதைசொன்ன சங்கத்தமிழ்மாலைமுப்பதும்" "வேயர்புகழ்வில்லிபுத்தூர்க் கோன்கோதைசொல்—தூயதமிழ்மாலைஈரைந்தும்" "எய்ந்தபுகழ்ப் பட்டர்பிரான்கோதை" " * * "குழற்கோதை முன்கூறிய பாடல் பத்தும்வல்லார்க்கில்லை பாவமே" (4—11) என்பவை புகழ்ச்சியையும் தொன்மைக்குறிப்பையும் காட்டும். பதிகத்தொகைமுறைக்கு 4, 6, ஆம் திருமொழிகளின்கணக்கை 3, 7, ஆவது திருமொழிகளினகணக்கொடு ஒத்துப்பார்க்க.

ஒரு விசித்திரப்பாசுரம்.

நாச்சியார் திருமொழியின் 11-வது பதிகத்தின்கடைசிப்பாசுரம் பின்வருமாறு :—

"செம்மையுடைய திருவரங்கர்தாம்பணித்த
மெய்ம்மைப்பெருவார்த்தைவிட்டுசித்தர்கேட்டிருப்பர்
தம்மையுகப்பாரைத்தாமுகப்பாரென்னும்சொல்
தம்மிடையேபொய்யானால்சாதிப்பாரினியே."

இது மற்றச்சாற்றுப்பாக்களைப்போலில்லாமல், விட்டுசித்தரைப் புகழ்ந்து நிற்கின்றது. குருபரம்பரை நூல்கள் இது ஆண்டாள் அருளியதாகவே கொள்ளும். ஆனால், பதிகத்தில் இதன்பொருத்தம் சரியாய் விளங்கவில்லை. ஆண்டாள் அரங்கரையுகந்தது பற்றி, அரங்கரும் ஆண்டாளை யுகந்தவார்த்தையை விட்டுசித்தர் கேட்டிருப்பர் என்பது இதற்குப்பொருளாயின் ஆண்டாளே இதைக் கூறியதாகக்கொள்ளுவது தகாததாகும்.

(3) நம்மாழ்வார்.

நம்மாழ்வாருடைய பிரபந்தங்களில், திருவாய்மொழியிலும் திருவிருத்தங்களிலுமே சாற்றுப்பாக்கள் காணப்படுகின்றன. ஏனைய திரு

வாசிரியம் பெரியதிருவந்தாதி ஆகியவைகளில் இவை இல்லாததற்குக் காரணம் காணமுடியவில்லை.

திருவிருத்தம்.

இந்நூலின் இறுதிப்பாகத்தைப் பெரியதிருவந்தாதி, திருவாசிரியம் ஆகியவைகளின் கடைப்பாக்களுடன் ஒத்துப்பார்க்குமிடத்து, இதிற் காணப்படும்சாற்றுப்பா நூதனமானதென்பதும் ஆழ்வார்பாடினதல்ல வென்பதும் புலப்படும்.

திருவாய்மொழி.

திருவாய்மொழியின்பதிகங்கள் இப்பொழுது காணும் கடைப்பாக்கள் இல்லாமலே இனிதுமுடிகின்றன. இப்பாக்கள் மற்றவைகளின் கவித்திறமும் வாய்ந்தில. பெரியாழ்வார்திருமொழியின்கண் எடுத்துக் காட்டின மூன்றுவகைக்குற்றங்களும் இங்கும் தோன்றுகின்றன.

"புகழ்நண்ணித் தென்குருகூர்ச் சடகோபன் மாறன்சொன்ன" "ஏற்கும் பெரும்புகழ் வண்குருகூர்ச் சடகோபன் சொல்—ஏற்கும் பெரும்புகழ் ஆயிரத்துள்" "பொய்யில்பாடல் ஆயிரத்துள்" "நாட்கமழ் மகிழ்மாலை மார்பினன் மாறன் சடகோபன்" "காரிமாறன் சடகோபன் ஒலிபுகழ் ஆயிரம்" "சடகோபன்சொல் பாலொடு அமுதன்ன ஆயிரம்" என்கிற சாற்றுப்பாக்களின்கூற்றோடு, ஆழ்வார் தம்மை 27, 29, 80 முதலிய திருவாய்மொழிகளில் இழிவுபடக் கூறிக்கொள்ளுவதை ஒத்துப்பார்க்கவும்.

அழைக்கின்றவடிநாயேன் நாய்கூழைவாலால் குழைக்கின்றது போல வென்னுள்ளங்குழையும்" (84—3). "எந்தைபிரான்றனக்கு—அடியாரடியார் தம்மடியாரடியார்தமக்—கடியாரடியார்தம் அடியாரடியோங்களே."

முந்தைஆயிரம்.

"வழுவாதசொல்புகழ் வண்குருகூர்ச்சடகோபன்" (36–11) "வண்குருகூர்ச்சடகோபன்முந்தைஆயிரத்துள்" (55–11) என்பவையும் இப்பாக்களின் கூற்றாகும். இங்கு ஆழ்வார் தம்மைத்தாமே "முந்தை" என்று அழைத்துக்கொண்டாரென்று சொல்லுவது முற்றும் அசம்பாவிதமாகும்.

துவாதசநாமப்பதிகம்.

ஆழ்வாருடைய 17வது திருவாய்மொழி சித்திரக்கவிதை வாய்ந்தது. அதனுடைய முதற் பன்னிரண்டுபாக்களிலும் பகவானுடைய

அவாசதநாமங்கள் பதிக்கப்பெற்றிருக்கின்றன. ஒவ்வொருபாசுரமும் ஒரு நாமத்துடன் தொடங்கி அடுத்தநாமத்துடன் முடிகிறது, ஆனால் இச்சிறப்புக் கடைசிப்பாசுரமாகிய 13வது பாவுக்குக் கிடையாது.

திருவாய்மொழிஆயிரம்.

திருவாய்மொழியினசெய்யுட்டொகை 1000 என்பது பிரசித்தம். "அருள்கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்" என்ற மதுரகவியாரின் கூற்றும், "ஆன்றதமிழ்மறைகள் ஆயிரமும்-ஈன்ற முதல்தாய்சடகோபன்" என்னும் தனியனும் இதை வலியுறுத்தும். ஒவ்வொருபதிகக் கடைப் பாசுரமும் இத்தொகைக்குறிப்பை முறையிட்டேநிற்கின்றது. ஆனால், சாற்றுப்பாக்களைச்சேர்க்குமிடத்து, திருவாய்மொழியின் பாத்தொகை 1102 ஆகவும், அவைகளை விடுத்தவிடத்து 1002 ஆகவு மிருக்கிறது. திருவாய்மொழியில் 100 பதிகங்கள் அமைந்திருக்கின்றன. ஒவ்வொரு பதிகத்திலும் 11 செய்யுட்கள்காணப்படினும், பத்தைமட்டுமே அப்பதிகச் செய்யுட்கள் கணக்கிடுகின்றன. ஆகையால் இவைகளின்கணக்கை ஏற்றுக்கொண்டு திருவாய்மொழி 1000 பாக்களையுடையதென்று கொள்ளுமிடத்து அதன்கணுள்ள சாற்றுப்பாக்களைத் தவிர்த்து எண்ணவேண்டியது அவசியமாய்முடிகிறது.

ஒரேஅந்தாதி.

திருவாய்மொழி இப்பொழுதிருக்கும்நிலையில் சாற்றுப்பாக்களுடன் கூடி ஒரேயந்தாதியாக விளங்குகிறது. சடகோபர் அதன் 100 பதிகங்களையும் 100 அந்தாதிகளாயமைத்ததை, * * "குருகூர்ச்சடகோபன் சொன்ன—அவாவில் அந்தாதிகள் இவையாயிரமும் முடிந்த—அவாவில் அந்தாதிப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே" (100–11) என்பதே காட்டுவதாகும்.

(4) மதுரகவிகள்.

"கண்ணிநுண்சிறுத்தாம்பு" என்னும் பதிகத்தில், மதுரகவியாழ்வார் தாம் பெண்டுபிள்ளைகளுடன் உழன்றதையும், பின்பு சடகோபனை யடைந்து உய்வுபெற்றதையும், மெலிந்தமனதுடன் தன்னமையொருமையில் வெளியிடுகிறார். ஆனால் அதனுடையகடைப்பாசுரம் ஆழ்வாரின் இச்சுபாவவிசேஷத்துக்கு விரோதமா யமைந்துளது.

(5) திருமங்கையாழ்வார்.

முற்கூறிய மூவகைஇழுக்குகளில் முதலிரண்டும், இவ்வாழ்வாரின் சாற்றுப்பாக்களிலும் காணப்படுகின்றன. (அ) "பொய்ம்மொழியொன்

றில்லாத மெய்ம்மையாளன்புலமங்கைக்குலவேந்தன்" (56–10) "கல்லங் கல்இல்லாப்புகழான் கலியன்" (83–10) "மன்றிலார்புகழ் மங்கைவாள் கலிகன்றி" (101–10) " * * கலிகன்றி செஞ்சொலாலெடுத்ததெய்வ நன் மாலை * * " (1–10) என்றுள்ள சாற்றுக்கவிக்கூற்றுகள் ஆழ்வாருடையசுபாவத்துக்கு முற்றும் விரோதமானவை.

" கூடினேன்கூடி இளையவர் தம்மோடவர் தரும்கலவியே கருதி " (1–1) " மானேய்கண்மடவார்மயக்கத்திற்பட்டுமாநிலத்து—நானேநானாவித நரகம்புகும் பாவஞ்செய்தேன்" (9–2) "நலந்தானொன்றுமிலேன் நல்லதோரறஞ்செய்துமிலேன் " என்பவை ஆழ்வார் மனவமைப்பைக் காட்டும் (9–4).

" தொண்டாயதொல்சீர்வயல்மங்கையர்கோன்கலியன் " (28–10) " பாரணிந்ததொல்புகழான்கலியன் " (34–10) " நன்றாய தொல்சீர்வயல்மங்கையர்கோன்கலியன் (96–10) என்பவை இவருக்குத் தொன்மைபிறந்தகாலத்தில் இச்சாற்றுக்கவிகள் உண்டானதைக் காட்டும்.

(6) குலசேகரன்.

பெருமாள்திருமொழியின்சாற்றுப்பாக்களில், குலசேகராழ்வாருடையபிருதுகள்முழுதும்கூறப்பட்டிருக்கின்றன—உதாரணமாக, "கொல்லிநகர்க்கிறைகூடற்கோமான்குலசேகரன் இன்னிசையில்மேவி, சொல்லிய இன்தமிழ்மாலைபத்தும்—சொல்லவல்லார்க்கில்லை துன்பந்தானே" "கோழியர்கோன் குடைக்குலசேகரன்" என்பவைகளை நோக்குக. எவரும் தம் பிருதைத் தாமேகூறிக்கொள்ளுதல் சாதாரணமானதல்ல.

பாசுரத்தொகைசம்பந்தமாகத் தோன்றும் குற்றத்துக்கு 1, 8, 10 ஆவது பதிகங்களின்கணக்கை 5, 6 ஆவது பதிகங்களின் கணக்குடன் ஒத்துப்பார்க்க.

(7) தொண்டரடிப்பொடியாழ்வார்.

திருமாலையைப் பாடியவரும் திருப்பள்ளியெழுச்சியை ஆக்கியவரும் ஓரே தொண்டரடிப்பொடியார் என்று கருதப்பட்டுவருகிறது. ஆனால் இவ்விரண்டு நூல்களையும் ஆராய்ந்துபார்க்குமிடத்து அவைகளைச் செய்தவர் ஒரேயடியாரல்லவென்பது எளிதிற் புலப்படும். இதை இங்கு விரிக்கிற் பெருகும். ஆனால், திருப்பள்ளியெழுச்சியை இயற்றியவர்

தொண்டரடிப்பொடியாரென்பதைக் குறித்தும் அப்பதிகத்தின் இறுதியிலுள்ள சாற்றுப்பாசுரம் அவராலேயே இயற்றப்பெற்றதென்பதைக் குறித்தும் சந்தேகமிருக்க இடமில்லை. அப்பாசுரமே இவைகளுக்கு முக்கியசான்றாகும். நாலாயிரப்பிரபந்தங்களிற் காணப்படும் சாற்றுப்பாக்களில் திருப்பள்ளியெழுச்சியின்கணுள்ளதும் திருப்பல்லாண்டின் 11வது பாசுரமுமே அவ்வாழ்வார்களால் இயற்றப்பட்டவை என்று துணிய முடியும். இவ்விரண்டு உண்மைச்சாற்றுக்கவிகளுக்குமுள்ள ஒற்றுமையும் கவனிக்கத்தக்கது.

"செல்வனைப்போலத்திருமாலே! நானுமுனக்குப்பழவடியேன்
பல்வகையாலும் வித்திரனே! உன்னைப் பல்லாண்டுகூறுவனே"

" * * * தொண்டரடிப்பொடியென்னும்
அடியனை அளியனென்றருளி யுன்னடியார்க்
காட்படுத்தாய் பள்ளியெழுந்தருளாயே"

மற்றவைதமக்குள்ளிருக்கும் ஒற்றுமையும் வியக்கத்தக்கது.

ஆராவமுதே யென்னும் திருவாய்மொழி.

மேற்கூறிய இரண்டொழிந்த மற்றச்சாற்றுப்பாக்கள் எப்பொழுது ஏற்பட்டிருக்குமென்று ஆராய்வது சுலபமானதல்ல. திருவாய்மொழிக்கு 6000 படி வியாக்கியானம் ஏற்பட்டபொழுது அது இப்பொழுது காணப்படும் சாற்றுப்பாக்களுடன் அமைந்திருந்தமையால் பிரபந்தங்களில் நாம் காணும் சாற்றுப்பாசுரங்கள் யாவுமே அக்காலத்துக்குமுன்பு அதாவது (கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டிலிருந்த இராமானுஜர் காலத்துக்குமுன்பு) ஏற்பட்டிருந்தனவென்று கொள்ளுதல் தகும். கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டிலிருந்த நாதமுனிகள் காலத்தில் திவ்வியப்பிரபந்தங்கள் லுப்தமாயிருந்தனவென்றும் அப்பொழுது அவைகளில் பிரகாசித்துவந்தது "ஆராவமுதே" யென்னும் திருவாய்மொழி மட்டுமேயென்றும் குருபரம்பரைநூல்கள் கூறுகின்றன. அப்பொழுது இத்திருவாய்மொழியில் 10 பாட்டுக்கள் இருந்ததாகவும் இவைகள் கூறுநிற்கின்றன. இது சரியாயின் சாற்றுப்பாக்களிற் பெரும்பான்மையும் நாதமுனிகள் காலத்திலும் அவர்காலத்துக்குப்பின் இராமானுஜர்காலத்துக்குமுன்பும் ஏற்பட்டவை யென்று கொள்ளுதல் தகும்.

கிடாம்பி அனந்தன்.
சேலம்.

குறுந்தொகை.

இந்நூற் குறைபெழுதியச்சிட்டவர் ப்ரம்மஸ்ரீ சௌரிப்பெருமாள் அரங்கசுவாமி ஐயங்கார். அதை யென் நண்பரொருவ ரென்னிடம் கொடுக்கப் பார்த்து மிகவு மகிழ்ந்தேன். அதில் மூன்றாம்பாட்டினுரை ஆசிரியர்கருத்தைச் சரிவரக் காட்டவில்லையென்று, என் சிறறறிவிற் கெட்டியவண்ணம் ஓருரையெழுதி ஐயங்காரவர்களுக் கனுப்பினேன். அதையே "செந்தமிழ்" வாயிலாத் தமிழுலகறியுமாறு பிரசுரிப்பான் வேண்டுகின்றனன்.

பாட்டு:—

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே"

இப்பாட்டில் 3, 4 ஆம் அடிகளுக்குப் பொருள் யாதாமெனின், குறிஞ்சியென்னும் சிறுசெடி பன்னீராட்டைக்கொருகாலே பூத்து ஆங்கே யுலர்ந்துபட்டழியுந் தகைத்து:— அந்தருணத்திற்றானே அச்செடி பருத்துக் கருங் (திண்ணிய) கோலையுடைத்தாகும். அக்காலத்திற் றானே பெரிலையானென்னும் வகுப்பினவாகிய தேனீக்கள் அப்பூக்களி னின்று மெடுத்துப் பெருந்தேனென்னு மொருவகைத் தேனை யிழைக்கும். அவ்வீக்கள் மரக்கொம்பு, பொந்து முதலிய சிறிய இடங்களில் இறால்கட்டாது பெரியபாறைகளிலும் முழைகளிலுமே கட்டும்.

குறிஞ்சி பூக்குங்காலமனைத்துமுள்ள வெற்பிற்கிலுமிருள்கள் செறிவுற்று விளங்குவ. அக்குறிஞ்சித்தேன் செந்நிறமமைந்து தடித்து மற்றைத்தேனினும் சிறந்தவின்சுவையும் நறுமணமுமுடைத்து.

இக்குறிஞ்சிக் கிருக்கை பெரும்பான்மையும் மலைச்சாரலே. அதனானே மலையும் இவ்வாயு மதன்பெயரையே கொண்டது தேற்றம். குறிஞ்சி செடியாதலினதற்குக் கிளைகள் கிடையா. அது பன்னீராட்டைப் பிராயமெய்துங்கால் முன் பசுத்தும் வெளுத்து மிருந்த வதன் தண்டு (கோல்) நீலநிறமெய்தும். இவையனைத்துமோர்ந்தே தேவகுலத்தார் "கருங்கோல்" எனச் சொல்லியுள்ளார்.

இப்பாவில் தலைமகன்றன் நட்பின்பெருமையையும் உயர்ச்சியையும் ஆழத்தையும் புலப்படக்கூறிய தலைமகள் அந்நன்சுவையையும் கூறும விரான். ஆயினு மதை வெங்ஙனம் வெளிப்படையாக் கூறுவள். நாண் வருத்துமன்றோ. ஆகையின், குறிஞ்சித்தேனுக்கிய வறிய தேனினைப் பண் பயிலு மாண்டகை யென்று குறிப்பினாற் கூறியுள்ளது மிகச் சிறப்புடைத் தன்றோ. தலைமகன்றன் நட்பின்சுவை குறிஞ்சிப்பூக்களினின்றும் பேரிலைபானென்று மீக்கள் இழைக்கும் பெருந்தேனின் சுவை போலுமென்று கூறியுள்ளாள்.

குறிஞ்சிநாட்டில் வதியும் யான் குறிஞ்சிச்செடியி னியல்பையுந் தேனீக்களின் பாகுபாட்டையும் வழக்கங்களையும் நேரிற் கண்டிருக்கின்றனன். அவைகளை யெத்தனையோ நூற்றாண்டுகளுக்குமுன்னர் எழுதியுள்ள இவ்விலக்கியத்திற் கண்டு பேருவகை கொண்டேன். குறிஞ்சி நாட்டிற் பழகாத எத்துணைக் கல்விகற்றவருக்கும் தேவகுலத்தாரெழுதிய பாவின் பொருள் நன்கு புலப்படாதெனக்கருதி இதையு மப்பாட்டின் குறிப்புரையிற் சேர்த்துக்கொள்ள வேண்டிக்கொள்கிறேன்.

செலுவையர்.

ஸம்ஸ்க்ருத வ்ருத்த மஞ்ஜரீ.

(௯௯௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

14. சக்கரி.

9. இந்துவதநா. (19) = பஜ ஸஙகக.

= { ஞாநந ஞாநந
ஞாநந ஞஞ

{ ஏறு மயி லேறி விளை
யாடு முக மொன்றே
{ ஈச னுடன் ஞான மொழி
பேசு முக மொன்றே.
{ ஸாகர ஐ டாஸவித
யாத்வமஸி ஒஜிநஃ
{ கேவலமி தோஷிவபு
வைஷவமபி மாநஃ

10. அலேலா. (24)=மஸமபகக

= { ஞஞ ஞாந ஞஞ
ஞஞ ஞாந ஞஞ

= 2 ம த லே க ா.

[குதில் ஜயித்தவன்]—

வென்றால் நீவிடுவாயோ
(நீ!) தோற்றால் நாம்விடுவேமோ!

15. அதிசக்கரி.

5. அதிலேகா. =லலா = 19 = ஸஜநய
=நநஞ ஞாநக ககநந ஞஞ.

6. ப்ரபத்ரகா = ஸுகேசரம் = 20
= நஜபஜர
= நநந, நஞந, ஞநந, நஞந, ஞநஞ,

7. சந்த்ரலேகா = (27) = மரமயய
= { ஞஞஞ ஞநஞ
= { ஞஞஞ நஞஞ நஞஞ

16. அஷ்டி.

4. ரிஷப கஜவிலஸிதம் (20)
= பரநநநக
= ஞநந, ஞநஞ, நநந, நநந, நநந, ஞ

18. த்ருதி.

6. ஹாரநர்த்தகம். (26) = ரஸஜஜபர

(Compare).

ஞந—ஞநந	ராகவம் கரு	பாதிமதிநதி
ஞந—ஞநந	ஞாகரம் முனி	போதுமணிசடை
ஞந—ஞநந	ஸேவிதம் ஸுர	நாதனருளிய
—ஞநஞ	வந்திதம்	குமரேசா.

20. க்ருதி.

3. ப்ரமதாரவம். (28)
= ஸ ஜ ஜப ரஸ லக
= { நந ஞநஞ
= { நந ஞநஞ
ஞந ஞநஞ
நந ஞநஞ

4. வ்ருத்தம் (30) ரஜ ரஜ ரஜ கல
= { ஞந, ஞந, ஞந, ஞந, ஞந,
= { ஞந, ஞந, ஞந, ஞந, ஞந.

5. மத்தேபவிக்ரீடிதம் (30)
= ஸ ப ர ந ம ய வ க
= { நநஞ ஞநந
ஞந ஞநநந
ஞஞஞ நஞஞ நஞ

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,
மதுரை.

பாடாந்தரமும் பொருள்கோடலும்.

இராமாவதாரம்.

நாட்டுப்படலம்.

வெண்டளக் கலவைச் சேறுங் குங்கும விரைமென் சாந்துங்
குண்டலக் கோல மைந்தர் குடைந்த நீர்க்கொள்ளை சாற்றின்
கண்டலைப் பரப்புஞ் சாலி வேலியுந் தழீஇய வைப்பும்
வண்டலிட் டோடு மண்ணு மதுகர மொய்க்கு மாதோ. (கஉ)

இச்செய்யுளுக்கு, உரைகூறியமுன்னுரைகாரர், "நீர்க்கொள்ளைசாற்றின்" என்பதற்கு நீரின்மிகுதியைச்சொல்லுமிடத்து எனவும், நீரின் மிகுதியானது சொல்லுமிடத்து எனவும் பொருள்கூறினர். அங்ஙனம் பொருள் கொள்ளிற் சாற்றின் என்பது நின்றுபயனின்மை என்னுங் குற்றத்துட்படும். ஆதலால் "நீர்க்கொள்ளை சாற்றின்" என்பதை "நீர்கொள்ளைசாற்றி" எனப் பாடங்கொண்டு கலவைச்சேற்றையும் குங்குமச் சாந்தையும் நீரானது கொள்ளைகொண்டு வண்டலிட்டோடு மெனமுடித்தல் சிறப்பாகும். சாற்றி என்பது சிந்தாமணியிலும்,

"வேனெடுங்கண்களம்பாவிற்படைசாற்றியெங்குந்
தேனெடுங்கோதைநல்லார்மைந்தனைத்தெருவினெய்ய
மானெடுமழைக்கணோக்கிவானவர்மகளுமொப்பாள்
பானெடுந்தீஞ்சொலாளோர்பாவைபந்தாடுகின்றாள்"

என்னும் (விமலை—சுங) செய்யுளிலும்,

"எரிமணிக்குப்பைபோலவிருளறவிளங்குமேனித்
திருமணிச்செம்பொன்மார்பிற்சீவகன்சிலைகையேந்தி
யருமணிடாசராவிர ரசம்பிற்கொள்ளைசாற்றி
விரிமணிவிளங்குமான்றேர்விண்டொழவேறினானே"

என்னும் (மண்மக—கஞச) செய்யுளிலும்வருகின்றது: சாற்றி என்பதற்கு நச்சினார்க்கினியர் அமைத்து எனப் பொருள்கொள்வர். "கொள்ளைசாற்றி" என்பதை ஒருசொன்னீர்மையாக்கிக் கொள்ளைகொண்டு எனப் பொருள்கோடல் சிறப்புப்போலும்,

நகரப்படலம்.

"அன்னநீரகன்கிடங்கு சூழ்கிடந்தவாழியைத்
துன்னிவேறுசூழ்கிடந்த தூங்குவிங்கிருட்பிழம்
பென்னலாமிரும்புசூழ் கிடந்தசோலையெண்ணிலப்
பொன்னின்மாமதிற்குடுத்த நீலவாடைபோலுமே" (௨௧)

என்னும் செய்யுளில் "அன்னநீ ரகன்கிடங்கு சூழ்கிடந்த" என்பதில் கிடந்த என்பதை வினைப்பெயராக்கி இரும்பு என்பதனோடுமுடித்து, அந்த அகழியைச்சூழ்ந்துகிடந்தமலையரண்புறவாழியைச்சூழ்ந்துகிடந்த இருட்பிழம்புபோலும் என்று சொல்லலாம் எனவும், அம்மலையரணைச் சூழ்ந்துகிடந்தசோலை மதிற்குடுத்த நீலவாடைபோலும் எனவும், பொருள்கோடலே சிறப்பாம். மதிலரணை அகழியும் அகழியை வெளி நிலமும் அதனை மலையரணும் அதனைக் காட்டரணும் சூழ்ந்துகிடத்தலே முறை. திருவள்ளுவரும்,

"மணிநீருமண்ணுமலையுமணிநிழற்
காடுமுடையதரண்"

எனக் கூறுதலானுமுணர்க.

"கோவையின்னகரொடெண்குறிக்கலாதவத்
தேவர்தன்னகரியைச்செப்புகின்றதென்
யாவையும்வழங்கிடத்திகலியின்னகர்
ஆவணங்கண்டபினளகைதோற்றதே. (௫௧)

இச்செய்யுளில் "யாவையும்வழங்கிடத்திகலி" என்பதற்கு எப்பொருள்களையுங்கொடுக்குமிடத்து இந்நகரோடுமாறுபட்டு எனப்பொருள் கூறுவர். அங்ஙனம் பொருள்கொள்ளுமிடத்து ஆவணத்துள்ள யாவற்றையுமே வழங்கியதாகலின் பின் ஆவணங்கண்டுதோற்றதென்றல் சிறப்பின்றாதலின் "யாவையும் வழங்கிடத்து" என்பதற்கு அந்நகரம் யாவையும் அயோத்தி முதலாகவழங்குமிடத்து முதலில் வழங்கிய இவ்வயோத்தியோடுபகைத்து இந்நகராவணங்கண்டபின் அளகை தோற்றது என்று பொருள்கோடலே சிறப்பாகும். வழங்குதல்—சொல்லுதல். அது,

"இன்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது"

என்னுங்குறளில்வரும் வழங்குவதென்பதனு மறியப்படும். அளகை உலகி லெழுகபமே சிறந்தன'; அவை அயோத்திமுதலியவெனச் சிலர் சொல்லக்கேட்டபோதே என்னினும் சிறந்ததோவென முதலினுள்ள அயோத்தியோடு முன்பகைத்து அதனைப்பார்க்கவந்து அதன் ஆவணங் கண்டபின் தோற்றது என்பதே இதன்பொழிப்பு. இது எதுபோலு மெனின் அறிவுடையானொருவன் தன்னினுஞ்சிறந்தானொருவன்பெயர் சொல்லக்கேட்டுப் பகைத்து அவனைநேரேகண்டபின் அவன் சிறப்பு நோக்கித் தோற்றதுபோலுமென்க.

சி. கணேசையர்,
புன்னாலைக்கட்டுவன்.

புத்தகமதிப்புரை.

———:(o):———

I. கலிங்கத்துப்பரணி :—இது, வீரச்சுவையைமுதன்மையாகக் கொண்டு, அதற்கங்கமாகப் பிறசுவைகளும் விரவிவரச் சொன்னயம் பொருணயங்கள் பொருந்தப் பாடப்பட்டதொருசிறந்தபிரபந்தமாயிருந்தமையால் இதற்கு முன்னும் இரண்டு மூன்றுமுறை தக்கபண்டிதர்களாற் பதிக்கப்பட்டுள்ளது. அதை இப்போது ஸ்ரீமத் பண்டித் அ. கோபாலையரவர்கள் பின்னும் பல எட்டுப்பிரதிகளோடு ஒப்புநோக்கி வேண்டியதிருத்தங்கள் செய்து நன்கு பதிப்பித்திருக்கிறார்கள். இதற்குச் சிலாசாசனலிகிதங்களிலிருந்தும் பலநூல்களிலிருந்தும் கிடைத்த விஷயங்களைக்கொண்டு, காலம், சரித்திரம் முதலியவற்றோடு பொருள்விளங்கும்படி அரும்பொருள்விளக்கம் என்னும் ஒருரையும், அரும்பதஅகராதி முதலியனவும், முகவுரையும் நன்றாய் எழுதிச்சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பதிப்புக்குப் பொருளுதவிபுரிந்த திருப்பனந்தாள் ஆதீனகர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சொக்கலிங்கத்தம்பிரான் ஸ்வாமியவர்களது தமிழபிமானம் பாராட்டத்தக்கது. இதன்விலை ரூபா 1—12—0. வேண்டுவோர் ஸ்ரீமத் பண்டித அ. கோபாலையரவர்கள, செந்தமிழ்மந்திரம், ராபர்ட்ஸனபேட், மைலாப்பூர், சென்னைஎன்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

II. சருவஞானோத்தர ஆகமம் ஞானபாதம் தமிழ்மூலமும் முத்திரத்நவிருத்தியும் :—இது, சருவஞானோத்தரமெனப்பெயரிய வடநூலின் ஞானபாதம் தமிழிற் செய்யுள்வடிவாக மொழிபெயர்க்கப்பட்டுச்

சைவசமயிகளால் நன்கு மதிக்கப்பட்டிருந்ததொரு தமிழ்நூல் இதுகாறும் உரையில்லாதிருந்ததனால் திருவாவடுதுறையாதீனசைவப் பிரசாரகரும், தேவகோட்டையிலுள்ள சிவாகமசித்தாந்தபரிபாலன சங்கத்தின் சித்தாந்தசாத்திர போதகருமாகிய ஆத்தங்குடி, ஸ்ரீமத், பொ. முத்தையபிள்ளையவர்களால் ஒவ்வொருசெய்யுளுக்கும் அவதாரிகை, பதவுரை பொழிப்புரை கருத்துரை, விசேடவுரைகளடங்கிய விருத்தியுரையொன் றெழுதிப் பதிக்கப்பட்டது. இதன் உரைநடை, மிகவும் தெளிவாயெழுதப்பட்டமையோடு, அரிதற்குரியபொருள்களையெல்லாம் விசேடவுரையில் தடைவிடைகளாலும் உதாரணங்களாலும், விவரணங்களாலும் விளக்கக்காட்டியிருத்தலாலும் படிப்பவர்களுக்கு விருப்பளிக்கத்தக்கது. முகவுரையும் நன்குஎழுதப்பட்டிருக்கிறது. வடமொழி மூலமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதனை அச்சிடுதற்குத் தேவகோட்டை ஸ்ரீமான்களான அரு. அரு. சோம. சோம. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களும், மே. அரு. நா. இராமநாதன்செட்டியாரவர்களும், மே. சித. வைரவன்செட்டியாரவர்களும் போதுமான பொருளுதவிபுரிந்திருப்பது பாராட்டத்தக்கது. இதன் விலை ரூபா 1–8–0. வேண்டுவோர் உரியோர்க்கெழுதிப் பெறலாம்.

III. கொங்குமண்டலசதகம் மூலமும் உரையும் :—இது, தொண்டைமண்டலசதகமுதலியனபோலக் கொங்குமண்டலச்சிறப்புத் தோன்ற விஜயமங்கலம் கார்மேகக்கவிஞர் என்பவரால் இயற்றப்பட்டதொரு பிரபந்தம். இதனைத் திருச்செங்கோட்டிலிருக்கும் விவேகதிவாகரன்பத்திராதிபர் ஸ்ரீமத் தி. அ. முத்துசாமிகோனாரவர்கள் நன்கு பரிசோதித்து நூதனமாக உரையுமெழுதி அச்சிட்டிருக்கிறார்கள். உரையிற் பிற பலநூல்களினின்றும் மேற்கோள்காட்டியும், சரித்திரங்களை வரைந்துமிருப்பது தேசகாலசரித்திர ஆராய்ச்சிசெய்வோர்களுக்கெல்லாம் மிகப் பயன்படத்தக்கது; இப்புத்தகத்தால், பதிப்பித்தவருடைய கல்வியறிவு ஆராய்ச்சி தேசபாஷாபிமானங்கள் நன்குபுலப்படுகின்றன. இதற்குப் பொருளுதவிபுரிந்த பழையகோட்டைப்பட்டக்காரர் ராயபஹதூர் ஸ்ரீமான் நல்லதம்பிச்சர்க்கரைஉத்தமக்காமிண்டமன்றாடியாரவர்களது தேசபாஷாபிமானம் பாராட்டற்பாலது. இதன் விலை ரூபா 1–4–0. வேண்டுவோர் கோனாரவர்களுக் கெழுதிப் பெறலாம்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோத்காரி- ஹு ஆனி-மீ [பகுதி அ.
Vol. XXI. June–July–1923. No. 8.

மலைநாடு உற்பத்தி.

(உ௱க-ம் பக்கத்தொடர்ச்சி).

15. பொன்னின் றுகளையும் கருமணலையுங் கலந்து கொல்லுலையி லிட்டு நன்றாகக் காய்ச்சினாற் பொன் உருகிக் கீழேசெல்லும்; மணல் மேல் நிற்கும், மணலினும்பார்க்கப் பொன் கனமுடையதாதலின், நீரின்மீது இலைச்சருகு மிதப்பதுபோல, உருக்கப்பட்ட பொன்னின்மீது மணலானது மிதக்குந்தகையதாயிற்று. கொல்லுலைவெப்பத்தினும் பார்க்கப் பன்மடங் கதிகமான வெப்பத்தைத் தரவல்ல மின்சாரஉலையின் மீது பொன்றுகளையும் கருமணலையுங் கலந்து இட்டு உருக்கினால் மணலும் உருகி நீர்த்தன்மையையடையும். உருகிய பொன்னின்மீது உருகிய மணல் நீரின்மீது நெய்மிதப்பதுபோல மிதக்கும். படிகக்கண்ணாடிசெய்வோர் மணலை உருக்கி நீர்த்தன்மையதாக்கி வேறுசிலபொருட்களையுஞ்சேர்த்துக் கண்ணாடியாக்குவர். கொல்லுலைவெப்பத்தில் மணலுருகுதலைக் கண்டிலமாதலின் மணல் உருகாப்பொருள் எனக் கொள்வோம் என்றல் பொருந்தாது. ஜகத்திலுள்ள பொருட்களனைத்தும் உருகுந்தன்மையவே. சிலவற்றையுருக்குவதற்குச் சிற்றளவாகிய வெப்பம் போதியதாகும்; வேறுசிலவற்றுக்குப் பேரளவாகியவெப்பம் வேண்டிவதாகும்; இதுவே வேறுபாடு. சூரியகோளத்தின் வெப்பநிலையில் உலகிலுள்ளபொருட்களனைத்தும் பிருதிவி(கட்டித்தன்மை), அப்பு (நீர்த்தன்மை), நிலையை விடுத்துத் தேயு, வாயு, ஆகாயம் ஆகிய நிலைகளையடைவன. இனி, குறை இருநூற்றெழுபத்துமூன்று(—273)பாகை

என்னும் தட்பநிலையில், பிருதிவிநிலையும் (solid) ஆகாயநிலையும் (ether) என்றிவிருக்க இடைநின்ற அப்பு (liquid), தேயு (vapour), வாயு (Gaseous) நிலைகள் ஒழிந்துபோவன.

16. அக்கினிப்பிழம்பாக உலகு இருந்தகாலத்தில் அதனைச் சூழ வாயுமண்டலமும் ஆகாயமண்டலமும் இருந்தன. மண்ணும் நீரும் இருந்ததில்லை. சுருங்கச்சொல்லின் இந்நாளில், சூரியகோளம் இருக்குநிலையில் உலகு இருந்தது. பழுக்கக்காய்ச்சிய இரும்பை இருட்டறையில்வைப்பின் ஒளியுள்ளதாகத்தோற்றுவதுபோல உலகு சுயமாகிய ஒளியோடுவிளங்கிற்று. அவ்விரும்புத்துண்டம் வெப்பங்குறைந்து சிறிதுசிறிதாகத் தட்பமுற்றுச் செக்கர்வானிறம்போலச் சிவந்து ஈற்றில் ஒளியிழந்துவிடுவதுபோல உலகுங் குளிர்ந்து தன்னொளியிழந்து நின்றது. இங்ஙனம் குளிர்ந்துவரும்போது, அக்கினிக்கோளத்தைச் சூழவிருந்த வாயுகோளத்திற் றங்கிநின்றநீராவி குளிர்ந்து நீராகி உருக்குண்டபொன்போன்றிருந்த உலகின்மேல்விழுதலினாற் பழுக்கக்காய்ச்சிய இரும்பின்மேற்பட்ட நீர்த்துளிபோல நீர் மீட்டும் ஆவியாதலும் உலகு இருந்தநிலையினின்று சற்றுக் குளிர்தலும் இயல்பேயாம். இவ்வாறு பல ஊழிகள் கழிந்தன (பரிபாடல் 2-ம் செய்யுளை நோக்குக). பொன் வெள்ளி, இரும்பு, செம்புமுதலிய லோகப்பொருட்களும், மணல் கல் முதலிய பிறபொருட்களும் ஒருங்கு உருக்கப்பட்ட நிலையில் மணல் கல் முதலியவை மேல்மிதக்கப் பொன் முதலிய உலோகவகைகள் ஆழ்ந்து சென்றன. பொன்றுகளையும் கருமணலையும் உருக்கியவிடத்து ஒருசில துகள்கள் மண்ணின் இடைவெளியிற்றங்கிநிற்பதுபோலச் சிற்றளவு பொன் கற்பாறைகளினுள்ளே தங்கிநின்றது. பலவூழிக்காலங்களாகக் குளிர்வெய்தியவுலகம் பறவையண்டத்தின் மேலோட்டைப்போன்ற மேலோடும் உள்ளிருக்குந் திரவப்பொருளைப்போன்ற உருக்குண்ட திரவப் பொருளும் பொருந்திப் பூ (பிருதிவி) கோளம் என்னும் பெயர்க்கு உரிமைபூண்டுநின்றது. இந்நிலையில் வாயுமண்டலத்திலுள்ளநீராவி குளிர்ந்து மழையாகப்பொழிந்து நிலப்பரப்பின்மீது மலை, கடல் என்னும் பேத மேற்படாமையினால் யாண்டும் பரந்து பூகோளத்தைச்சுற்றிய நீர்க்கோளமாகநின்றது.

“செந்தீச்சுடரியவூழியும்பனியொடு
தண்பெயறலைஇயவூழியுமவையிற்

"றுண்முறைவெள்ளமூழ்கியார்தருபு
மீண்டும்பீடுயர்பீண்டியவற்றிற்கும்
உள்ளீடாகியஇருநிலத்தூழியும்"

என்பது இங்ஙனம் உணரற்பாலது. இவ்வாறு பலவூழிக்காலங்கள் கழிந்தன. உள்ளிருந்த உருக்குண்டபொருள் இறுகிக் கட்டியாதலும் மேனின்றஓடு வெடிப்புண்டு பள்ளமுந் திடருமாவதும் இயல்பேயாம். அஃதெதுபோலவோவெனின், கிச்சிலிப்பழத்தை வெயிலிற்போட்டால் உள்ளேயிருக்கும் ரசம் சிறிது வற்றி அளவிற்குறைய மேற்றோல் சுருக்கமடைவதுபோல வென்க. இங்ஙனம் பள்ளமுந் திடருமாகுமிடத்து மேனின்றவெள்ளமானது பள்ளத்தைநோக்கியோடுதலும் திடர்நிலம் நீரின்மேற்றோற்றுவதும் இயல்பேயாம். பூகோளத்தின்மேற்பரப்பிற் காற்பங்கு நிலனாக முக்காற்பங்கு நீராகவே நின்றது. நிலத்தில் நனியுயர்ந்தபாகங்கள் மலையெனப்பட்டன. பின்னர்ச்சூரியனுடையவொளியினாற் கடனீரானது நீராவியாய்மாறுதலும் அந்நீராவியானமைந்த மேகம் மலைகள்மீது தங்கி மழையாகப்பொழிதலும் நடந்துவருதல் இயல்பாயிற்று. இச்செயல் இன்றும் மாறுவியல்பினதாய் நடந்துவருகிறது. இன்னணம் மலைகளினின்றிழிந்த நீரருவி பல ஒருங்குதிரண்டு கடலினுட்பாயுந்நதிகளாயின. இவ்வூழியில் உலகின் மேற்பரப்பிருந்ததோற்றத்தை ஆராய்ந்து சிந்திப்போமாயின், கருங்கல்லும் வெண்பாறையும் பொருந்திய பெருமலைகளும் திடர்களும் மும்முரமாய் அலையெறிந்தார்க்குங் கடலும், கரைபுரண்டோடும் பெருநதிகளும் வெப்ப தட்பநிலை அடிக்கடி மாறுதலால் ஏற்பட்ட பிரசண்டமாருதமும் எங்குந்தோற்ற, மரம், செடி, கொடி, புல்வாய் என்னும் உயிர்த்தோற்றங்க ளொன்றுமின்றி வெங்காரவெளியாய்ப் பகற்காலத்தில் அளவுகடந்தவெப்பமும் பரிதி மேற்றிசைமறையக் கடும்பனியும் பெருங்குளிருமாய் அமைந்திருந்த நிலையாமெனவறிவாம்.

18. உலகு இந்தநிலையிலிருந்தவூழியில் இக்காலத்துள்ள சுழற்சி வேகத்தைப்போல் இருமடங்கினதாகிய சுழற்சிவேகத்தையுடையதாயிருந்தது. அதாவது உதயகாலத்துக்கும் உச்சிக்காலத்துக்கும் இடையிலுள்ளகாலவெல்லை ஏழரைநாழிகை (மூன்றுமணி) மாத்திரமாய் இருந்ததென்பது. இப்படிச் சிலவூழிகள் கழியப் பூமி சூரியனைச்சுற்றி

யோடும் சுற்றோட்டப்பாதையில் ஒருவகை விகற்ப மேற்பட்டது. இப் பாதை இந்நாளிலுங்கூடச் சுத்தவட்டமாயில்லை. இரண்டுகேந்திரங் (Focus)களுடைய நீள்வட்ட (Ellipse)மாயிருக்கிறது. இரண்டுகேந்திரங் களுள் ஒருகேந்திரம் அருக்கனிலையாம். பலவூழிகளின்முன் இரண்டு கேந்திரங்களுக்குமிடையிலுள்ள இடைவெளி இப்பொழுதிருக்கும் இடைவெளியினும்பார்க்க மிகவும் அதிகமாயிருந்தது. ஆதலினால், மூன்றுமாதங்களுக்குச் சூரியனுக்கு அணிமையாகவும், எஞ்சிய ஒன்பது மாதங்களுக்குச் சேய்மையாகவும் பூவுலகு அசைந்துசெல்வதாயிற்று. இந்நிலையில் ஆண்டின்பெரும்பாகத்துக்குப் பூகோளமேற்பரப்பு உறை நீரினால் மூடுண்டுகிடந்தது.

19. அக்கினிக்கோளமாயிருந்தவுலகு குளிர்ந்து பிருதிவிகோள மாயிற்றெனக் காட்டினோம். மேலும் கல், மண்முதலியவற்றாலமைந்த மேலோட்டினுள்ளே பறவையினண்டத்துள் திரவப்பொருள் இருப்பது போல உருகிய லோகப்பொருள் இருக்கிறதென்பது பல விஞ்ஞானசாஸ் திரிகளுடைய முடிபு. அற்றன்று; உள்ளிருக்கும்பொருளும் இறுகிக் கட்டியாயிற்றெனபது மற்றொருசாராரது கொள்கை. அஃதெங்ஙன மாயினும், சுரங்கமறுத்துக் கீழேசெல்லச்செல்ல வெப்பநிலை மிகுந்து கொண்டுபோகிறதென்பது அநுபவத்திற்கண்டமுடிபு. இனி, பூகோளத் தினது நிறை இவ்வளவெனபதாகக் கணிதசாஸ்திரிகள் கண்டறிந் திருக்கிறார்கள். எங்ஙனம் கண்டறிந்தார்களெனின், பூமி பொருட்களைத் தன்னிடத்திற் கவர்ந்துகொள்ளுகிற கவர்ச்சிவேகத்தை (acceleration due to gravitation) அளந்தறிந்து இவ்வளவு கவர்ச்சிவேகத்தைத் தருதற்குவேண்டிய நிறை இவ்வளவாகவிருத்தல்வேண்டும் எனக் கணக் கிட்டறிந்தார்கள். பொன்னினாலாகிய ஒருகோளத்தையும், அதே அள வினதாகக் கருங்கல்லினாலாகிய மற்றொருகோளத்தையும் நிறுத்துப் பார்ப்போமாயின் இருகோளங்களும் ஒரே அளவினவாகவிருப்பினும் பொற்கோளம் கருங்கற்கோளத்தைப்போல ஏறக்குறைய ஐந்துமடங்கு நிறையுடையதாயிருக்கக் காண்போம். பொன்னுங் கல்லுங் கலந்து ஆகியகோளம் இடைநிகர்த்த நிறையினதாய் இருக்கும் என்பது சொல் லாமலே முடியும். பூகோளத்தினுடைய நிறையானது பூகோளத்தளவின தாகக் கல்லினாலமைந்தகோளத்தின் நிறையினும்பார்க்க மிகுந்திருத்த லால், கல் மண்ணாலமைந்த மேலோட்டினுள்ளே கனத்த நிறையினவாகிய

பொன்முதலியலோகங்கள் நிறைந்திருக்கவேண்டுமென்பது முடியாநின்றது. பூகோளமத்தியிற் பெரியதோர் பொற்கோளமிருப்பதாகவும், பொன்னினும் கனத்தபொருளாகிய பிளாற்றினம் (Platinum) அதனுள்ளிருக்கப் பொற்கோளத்தைச் சூழ வெள்ளி, செம்பு, இரும்புமுதலிய லோகங்களாலமைந்த கோளங்களிருப்பதாகவும், கல், மணல், கரி, பின்னாம் இவற்றாலமைந்த மேலோடு மேற்குறித்த கோளங்களைத் திணயும் மூடிப் பறவையண்டத்தின்மேலோட்டைப்போன்றிருப்பதெனவும் நிலநூல் ஆராய்ச்சியோர் (Geologists) முடிபுசெய்திருக்கிறார்கள். மணலினுள்ளே பொன்னின்றுகள் மீந்துநிற்பதுபோலச் சிற்றளவாகியபொன் மேலோட்டினுள் எஞ்சியிருக்கும் என்பதை மேலே 16ம் பிரிவினுட் காட்டினும். மன்னர் மண்டலீகரும், வணிகமாக்களும் பிரபுக்களுஞ் சண்டையிட்டுக்கொள்வது பூகோள மேலோட்டினுள்ளே அமைந்திருக்குஞ் சிற்றளவாகிய பொன்னுக்குத்தான். பூமத்தியத்திலமைந்திருக்கும் பொற்கோளம் இரண்டாயிரமைல் உயரமுடையதாய் மாற்றுயர்ந்த பசும்பொன்னால் ஆகியது. இதனை யெடுப்பதற்கு வழியறியாமையினாற் பொனசையுழைமாக்கள் அவாவடங்காதலைகின்றனரென்பதொருதலை.

20. பூகோளமேற்பரப்பிலேற்பட்ட மாறுதல்களைப் பின்னும் ஆராய்வாம். (i) "மெல்லெனப்பாயுந்தண்ணீர் கல்லையுங் கரைத்துப் பாயும்" என்னும் முதுமொழிக்கிணங்க ஓடுகின்றநதிகள் தாஞ் செல்லுங் கால்வாயினுட் டலைப்படுகிற கற்களையுருட்டி ஒன்றினோடொன்றுரையப்பண்ணிக் கற்றுகளாகியமணலை யீர்த்துச்சென்று சங்கமுகங்களிற் படியப்பண்ணுவன. (ii) கற்குகைகளில் நிறைந்துநின்றநீர் குளிரினால் இறுகிக் கட்டியாதுமிடத்துக் கற்பாறைகள்பிளப்புண்ணுவன. (iii) கடும்வெயிலினால் வெப்பமடைந்திருக்கும் கற்பாறைகளின்மீது சட்டென்று பனிக்குளிர்வீசுவதனால் அக்கற்பாறைகள் சிறுசுக்கல்களாக வெடிப்புண்டுபோவன. மேலேகாட்டிய மூவகையேதுக்களினாலும் கற்பாறையாயிருந்த பூகோளமேற்பரப்பு வெண்மணலுங் கருமணலுமாக மாறுபட்டது. இனி, வெப்பமிக்கிருக்கும் பூகோளமேலோட்டினுள்ளே நீர்செல்லுதலும் அந்நீர் ஆவியாகி யுதைக்க, அவ்வுதைப்பினால் மேலோடு வெடிப்புண்ண அவ்வெடிப்பின்வழியாக உருக்குண்டகற்பாறையும் (Lava) உலோகப்பொருட்களும் புறந்தோற்றி வாயுமண்டலத்தின்

குளிரினால் இறுகுவன. இவ்வாறு ஏற்பட்ட எரிமலைகள் காலத்துக்குக் காலம் அக்கினியையும், உருக்குண்டசாரங்கட்பொருட்களையும் புகைப் படலத்தையுங் கக்குவனவாம். (சிசிலி யென்னும் இடத்திலுள்ள எட்ன —Etna—எரிமலை சிலவாரங்களின்முன் அக்கினிகான்றதனாற் பெருநஷ்டமேற்பட்டிருப்பதாக ஆங்கிலவர்த்தமானப்பத்திரிகைகள் கூறுகின்றன). எரிமலையதிர்ச்சியினால் உண்டாகும் பூகம்பங்கள் பலவோரிடத்தும் பூமியின்மேற்பரப்பில் வெடிப்புண்டாக்குவனவாம். இனி, நதிகளினால் ஈர்த்துச்செல்லப்பட்டுச் சங்கமுகங்களிற்படிந்த மணலுக்கு யாதுசம்பவிக்கின்றதென ஆராய்வாம். ஆற்றங்கரையில் மணல் இடிந்துவிழுந்திருக்கும் இடங்களைநோக்குவோமாயின், கருமணல், வெண்மணல்கள் முதலியன படலம்படலமாக அமைந்திருக்கக் காண்போம். சிறிது காலத்துக்கு வெண்மணல் படிந்தமைந்திருக்க அதன்பின் நதியின் போக்குவேறுபாட்டாலோ, காலவேறுபாட்டாலோ கருமணல் படிதல் கூடும். ஆதலின் இவை இருவேறுபடலமாக இயைந்திருப்பது இயல்பேயாம். இங்ஙனம் படிந்தமணல் காலாந்தரத்தில் இறுகுண்டு மணற்பாறையாகும். இங்ஙனம் ஏற்பட்ட பாறையைப் பூழிக்கற்பாறை (Sedimentary rocks) எனப்படும். கலங்கனீர் தெளியும்போது அடியில் உறைகின்ற பொருளைப் பூழியென்போமாதலின், இப்பெயர் ஏற்புடையதேயாம். மேல்வருந்தாவரசங்கமோற்பத்தியில், சிப்பி, ஊரி முதலியவற்றாற் கற்பாறைகள் ஏற்படுவன எனக் காட்டுவாம். இவற்றினை ஊரிக்கற்பாறை (Organic rocks) என்பாம். முன்புகாட்டியவாறுபோல எரிமலைகள் மூலமாக எழுந்தகற்பாறைகளை அங்கிக்கற்பாறை (Igneous rocks.) என்போம். ஆதியிலே, அக்கினிப்பிழம்பாகவிருந்து குளிர்ந்தபூகோளத்தில் ஏற்பட்ட பாறைகளை மூலக்கற்பாறை (Plutonic rocks) என்போம். படலம்படலமாக இயைந்திருக்குங் கற்பாறையைப் படலக் கற்பாறை (stratified rocks) எனவும், பூகம்பத்தினலேற்பட்ட கற்பாறைகளைப் பூகம்பக்கற்பாறை (Eruptive rocks) எனவும் பொருத்தமேயாம்.

21. இவ்வாராய்ச்சியில் வரப்போகுஞ் சிலசொற்களின் பொருளை வரையறுத்துக்கொண்டு அப்பாற் செல்வாம். நிலத்தின் மேற்பரப்பிலுள்ள பொருட்களின் அமைப்பைப் பொதுவாகவாராயுந்நூலைப்

புடவியியல், பிருதிவிசாஸ்திரம் (Geology) என்பாம். கற்பாறைகளைச் சிறப்பாகவாராயும்நூலைச் சிலைநூல், பருப்பதசாஸ்திரம் (Petrology) என்பாம். சுரங்கத்துள்ளபொருட்களைச் சிறப்பாக ஆராயும்நூலினைப் பிலப்பொருள்நூல், சுரங்கவஸ்துசாஸ்திரம் (Mineralogy) என்பாம். இதன் ஒருபகுதியதாய் நவமணிகளை யாராயும்நூலினை மணிநூல் அரதனசாஸ்திரம் (Study of gems) என்பாம். பூகம்பஅசைவை யாராயும்நூலினைப் பூகம்பநூல் (seismology) என்பாம். பூமியின் மேற்பரப்பைத் தலம் (crust) என்பாம். தலத்தின் கீழுள்ளது அதலம் (subterranean). ஓங்கல் (elevation), ஞெள்ளல் (depression), பிளப்பு (cleavage), சுருக்கம் (shrinkage), அமுக்கம் (pressure), அநேரமுகம் (delta), கழிமுகம் (mouth), பூழி (sediment), அயல் (fine sand), முருகைக்கல் (coral), சுண்ணக்கல் (limestone), பருக்கைக்கல் (sandstone), ஒருநீர்மை (homogeneous), பலநீர்மை (heterogeneous), கலந்தொன்றுதல் (aggregation), கட்டியாதல் (solidification), நீராதல் (Liquefaction), ஆவியாதல் (vaporization), அரித்துச்செல்லல் (denudation), படலமாக்கல் (stratification), படிகநிலை (crystalline), துகள்நிலை (amorphous), என்னும் சொற்கள் ஆட்சியினால் அறியற்பாலன.

22. பூவுலகின்மேற்பரப்புநாடோறும்வேறுபட்டடைந்துகொண்டு போகிறது. மலை கடலாகவும், கடல் மலையாகவும், மருதம், பாலையாகவும் பாலை மருதமாகவும் காலாந்தரத்தில் மாறுதலடைவது மியல்பே. பல்லாயிரவருடங்களுக்குமுன்பு இமயமலை கடல்மட்டத்திற்கீழிருந்த தென்பர். அந்நாளில் விந்தமுதற் குமரிவரையும் உள்ளநாடு ஒருஅகன்ற தீவாகஇருந்ததெனவும், இலங்கை மிகவும் அகன்று பரந்திருந்ததெனவும், ஆஸ்திரேலியா, இலங்கை, மடகாஸ்கர் என மிகவும் சேய்மைக்கண் இருக்குந்தீவுகள் ஒன்றாய் லெமூரியா என்னும் பெயருடைய பெருங் கண்டமாயிருந்த தெனவுங் கூறுவர். "குரங்குசெய்கடற்குமரியம்பெருந் துறை" என மணிமேகலைநூலார்கூறுவதை உற்றுநோக்கும்போது "பஃறுளியாற்றுடன்பன்மலையடுக்கத்துக், குமரிக்கோடுங்கொடுங்கடல் கொண்டது" ஸ்ரீராமபிரான்சேதுபந்தனஞ்செய்தகாலத்திலென்பது புலப்படுகின்றது. அருந்தமிழ்முனியாகிய அகத்தியனார் தமிழ்நாட்டுக்கு வந்தகாலமும் இதுவே. அகத்தியனார்மாணாக்கராகிய தொல்காப்பிய

ஞர் தமிழ்நாட்டிற்குக் குமரியைத் தெற்செல்லையாகக்கூறினாராகலின், குமரிக்குத்தெற்கேயிருந்த அவர்காலத்தி லழிந்துபட்டநாடுகள் தமிழ் நாடன்மை யுணர்க. இந்நாளிற் சஹாரா என்னும் பெயரோடு அகன்று பரந்துகிடக்கும் பாலைவனம் முன்னாளிற் சாகரமாயிருந்ததென்பர். இப்பொழுது அத்லாந்திக் சமுத்திரம் இருக்குமிடத்தில் ஒரு பெரிய கண்டம் இருந்ததாகவும் நாகரிகமிகுந்த மக்கட்கூட்டத்தினர் ஆண்டு வசித்ததாகவும் கூறுவர். ஐரோப்பாவுக்கும் ஆபிரிக்காவுக்குமிடையிற் பரந்துகிடக்கும் மத்தியதரைக்கடல் முன்னாளிற் றரையாயிருந்ததென்பர். முன்னாளில் இவ்வண்ணம் இருந்து மாறுபாடடைந்தனவென்றால், மேல் வருங்காலத்தில் வேறு பல மாறுதல்கள் உண்டாகுமென்பது திண்ணமே.

23. இவ்விகற்பங்களையெல்லாம் நிலநூல்வல்லார் எங்ஙனம் மட்டிட்டறிந்தார்களென்றால், நுண்ணுணர்வுடையோருக்கு அவனியே பெரியதொரு புத்தகமாமென முதியோர் கூறியபடி, ஆராய்ச்சிமுறையினால் நிச்சயித்தறிந்தார்களென்பது. ஆற்றங்கரையும், கழிமுகமும், கற்பாறையும், எரிமலையும், பெருநதியும், சிறுமணலும் என்றின்னோரன்னவெல்லாம் தந்தங்கதையைத் தாந்தாமே கூறுபவாம். தெருவிற் போகும்போது கருநீலநிறமான பருக்கைக்கல் ஒன்று கிடக்கக்கண்டாரிருவர்; அவருள் ஒருவன் "அதோ, ஒரு நூதனமான கல்" என்று வாளாசொல்லிவிட்டுப் போய்விட்டான். மற்றவன் அக்கல்லினை எடுத்தேகிப் பலவகைத் திராவகங்களிற் கரைத்துப் பரிசோதித்து அதன் பெரும்பகுதி பயன்படும்பொருளாகிய இரும்பு எனக் கண்டான். கண்டதும் அந்தக்கல்லகப்பட்ட இடத்தைப்போய்ப் பார்வையிட்டு ஆண்டுத் திரளான இரும்பு அகப்படும் என அறிந்து நிலத்துக்குரிமையாளனிடம் அந்நிலத்தை விலைகொடுத்துப்பெற்றுச் சுரங்கமறுத்து இரும்பை வெளிக்கொணர்ந்து பயன்படுத்திப் பெரும்பணக்காரனானான். அவனியாகிய பெரும்புத்தகத்தைப் படித்தறிந்தவன் பெரும்பயனடைவானென்பதற் கையமில்லை.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதகலாசதுர்யர்.

பலகவித்திரட்டு.

(௨௦௪-ம் பக்கத்தொடர்ச்சி.)

செற்றார் சிவகிரிச்சமீந்தார்கள் போர்செய்வது கேள்வியுற்றுச் செற்றாரார்க் குதவியாகச் சொக்கம்பட்டித்தானாபதி பொன்னம்பலம் பிள்ளை தண்டிகையிலேறிப் படையுடன் வந்தார். வந்தவுடன் சிவகிரியா ருடைந்து பின்னிட்டனர். இதை யொரு புலவர்கூறிய கவி:—

செற்றாரார்நெஞ்சந்திடம்பெறவேதென்மலையான்
றோற்றோமென்றோடித்துயர்படுமே—மாற்றரசர்
தெண்டனிடுஞ்சின்னணைஞ்சான்சேனாபதிப்பொன்னன்
றண்டிகையைக்கண்டவுடன்றான்.

தென்மலை - சிவகிரியாருக்குப்பிரதானமானதோரூர்.

சொக்கம்பட்டிச் சமீந்தார் பசுத்தொழுவில்வந்த புலியைத் தடிக் கம்பாலடித்துக் கொன்றதுகண்டு, அந்தச்சமஸ்தானவித்துவானாகிய கிருட்டிணாபுரத்துக் கவிராயர் சொல்லிய கவி:—

செப்பும்வீரர்க்குட்புலிசெம்புலிவலங்கைப்புலியா
முப்புலிவாழுமிடந்தேடிவந்துமுரண்டுசெய்து
தப்பிலியானமடப்புலியேதடியாலடிபட்
டிப்படியேனிறந்தாய்சூரவானுக்கியல்பல்லவே.

இச்சமீந்தார் மானிபநிலங்களாற் சமஸ்தானத்துக்கு நட்டமுண் டாகிறதென்று முதலிலே இக்கவிராயருக்குதவியிருந்த மானிபநிலங்க ளைக் கைப்பற்ற முயன்றபோது இவர்கூறிய கவி:—

வட்டங்கொண்டபுவிமன்னர்கும்பிட
வாங்குங்கீர்த்திவடகரையாதிக்கந்
திட்டங்கொண்டதுமானிபச்சேகரஞ்
செய்யிலாயிரங்கோட்டைக்குமேலுண்டு
நட்டங்கொண்டதுநான்மட்டுமாவிது
ஞாயமாசெம்புலிவலங்கைப்புலிப்
பட்டங்கொண்டபெரியசுவாமிபூ
பாலராசனேபோர்கெம்பீரனே.

பழனி மாம்பழக்கவிராயர் போடிநாயக்கனூர்ச் சமீந்தார்முன் பிரசங்கஞ்செய்தார். அப்பொழுது, கண்டு கேட்டிருந்த தேவாரம் சினைச் சமீந்தார்,

"மாம்பழமேல்வாய்மையுற்றமாம்பழமேயிவ்விடத்தி
லாம்பழமைகண்டுமுடியாட்டிலனேன்"—

என்று கூற, உடனே கவிராயர்,

—நாம்பழமை

"பின்காசினிபொறுந்நாமென்றுமோவென்றிருந்நான்
மன்காமராசயபூமான்"

என்று கூறினர்.

முல்லா னென்று மொரு மகமதியப்பிரபுவின் குணத்தை வியந்து ஒரு கவிஞர் கூறியது.

காலையிலோன்றுவர்கடும்பகலிலொன்றுவர்
மாலையிலோன்றுவர்மனிதரெலாஞ்—சாலவென்று
முல்லாவைப்போலமுகமுமகமுமலர்
நல்லாரைக்கண்டிலோநாம்.

இப்பிரபுவின்மகள் ஊமை நீங்கும்படி பலதலங்கட்குப்போய் ஊமை நீங்காமையால், இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சார்ந்திருக்கிற நயினார்கோயிலில்வந்து வரம்வேண்டியிருந்தபோது ஊமைநீங்கக்கண்ட புலவரொருவர் கூறிய வெண்பா;—

ஆரோகாரிணுரென்றம்புவியெல்லாமலைந்தோ
நீரோநயினார் நீசக்கண்டோம்—சீரேறு
முல்லாவின்பெண்வாயின்முடந்திறந்ததனு
லல்லாவுநீராகுமால்.

சேற்றூர்ச் சமஸ்தானவித்துவான் இராமசாமிக்கவிராயர் எழுமலைச் சமீந்தார் எரசின்னுகாமநாயுடுவைக் கண்டபோது அவர் ஏழுமலைவரும் படி ஒருகவி கூறவேண்டுமெனக் கவிராயர்கூறியது:—

ஒருமலையக்காற்குருகியுளமலையும்பொழுதினிலவ்வுவரிமீது .
வருமலையுமெழுந்ததம்பாச்செம்மலையுமெடுத்தெய்யவந்தான்வந்தான்

பொருமலையும்விரசமுநானினிச்சகியேனென்சகியேபோகியென்றுந்
தருமலையானெழுமலைவாழரசின்னுகாமயன்பாற்சாற்றுவாயே.

செம்மல் - பழம்பூ. வந்தான் - மன்மதன்; தென்றற்காற்றை யுடையவனென்பது பொருள். வந்து - தென்றல்.

இராமநாதபுரம் ஸமஸ்தானபதி பாஸ்கரஸேதுபதி குமாரர் முத்துராமலிங்கஸேதுபதி விவாகநிறைவேறியபின்பு, தல்லாகுளத்தில் வந்திருந்தபோது நீங்கள் என் விவாகத்துக்கு வரவில்லையென்று கேட்க, நீங்கள் சிலருக்கு மணவோலைவிடுக்கவில்லையென்றுஞ் சிலர் வஸ்திரதிரவியங்கள் வாங்கவில்லையென்றுந் தெரிந்தேன்; அதனால் வரவில்லையென வியப்புறத் திருவாவடுதுறையாதீனவித்துவானும் மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகரும் ஆகிய சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறிய கவிகள்:—

பூமேவுசீர்முத்துராமலிங்கத்துரை
புரிந்தகலியாணமகிமை
போற்றுபலபுலவர்க்குமமைவுறுதொருவனுப்
புகலுதற்கெளிதாகுமோ
மீமேவுசந்திரனுமிருகளங்கன்பகல்
விளக்குகதிரவனும்வெய்யோன்
விண்ணரசன்மிகுபோகியென்னலாலவருகிலன்
விரிஞ்சனொருதலையிலாதான்
மாமேவுகின்றமாலவ்வேலையிற்பள்ளி
மருவுறவிருப்பனிறையோன்
மன்னுநிருவாணியதனலவர்க்கெழுதாது
வாழ்த்துமுன்னோனைகையா
லேமேவுகணபதியைவேண்டியேவரவழைத்
தினிதுபசரித்துமற்றோ
றேவர்க்குமங்கலத்திருவோலையெழுதியுய்த்
தெச்சிறப்புஞ்செய்தானே.

களங்கன்-குற்றமுள்ளவன், கருநிறமுள்ளவன். வெய்யோன்-கொடியவன், வெம்மையுள்ளவன். போகி-போகுகிறவன், போகத்தையநுபவித்

திருப்பவன். விரிஞ்சன்-பிரமன். ஒருகலை-துணிவு, ஒருசிரம். அவ்வேலையில்-அந்தவேலையில், அந்தப்பாற்கடலில். எனப் பொருள்கொள்க.

பார்கொண்டிலங்குமுயர்சோமனெனவருபவன்
பதினாறுகலையையுடையான்
பரிதியொருபரிவட்டமுறவிருப்போன்றேவர்
பதியெனச்செப்புமகவா
னோர்கொண்டவாயிரமிலங்குநேத்திரமுளா
னெழிலய்புயந்துவேத
னேந்துமுன்றன்குவத்திரமுளானவனுந்தி
யிலிரில்வாவிருந்ததிருமால்
வார்கொண்டபொன்னுடைமாறுதுபுனைதலான்
மன்னுபீதாம்பரனென்று
வாழ்த்துபெயர்பெற்றனனரன்புலித்தோலுடையன்
மற்றுடைகொளாறுதலாற்
றார்கொண்டவவர்வந்துபெற்றிலாநலகுளார்
நாம்பெறுநாருமுண்டோ
தமிழ்முத்துராமலிங்கத்துரைமணஞ்செய்து
தக்கவுடைதருபோதிலே.

பார்-உரோகிணி. கலை-வஸ்திரம், மதிப்பங்கு. பரிவட்டமுற-வஸ்திரமுற, பரிகள் மண்டிலமாகவோட. நேத்திரம்-பட்டாடை, கண். வத்திரம்-வஸ்திரம், முகம்.

குலவுவடக்குத்திசைக்கிறைவன்கோதிலாதவநிதியன்
கொண்டல்வாகன்றன்பதியுங்கோலச்செம்பொனுகவுள்ளா
னிலவுவேதன்றனுயிராணிபகருப்பனவற்றந்த
நெடுமால்கோடிபொன்னுடையானீலகண்டன்வெள்ளிமலை
வலமுற்றிருப்போனன்றியும்போன்மலையானுரியோனிவர்கள்வந்து
வாங்காதவர்கள்பலவளங்கண்மலிந்தோங்கியதென்முகவையெனும்
நலமான்முத்துராமலிங்கத்தமிழ்த்துரையாஞ்சேதுபதி
தான்செய்மணத்திலிருநிதியந்தந்தானெவரும்வாங்கினரே.

இரணியகருப்பன்-பொன்மயமான கருப்பத்தையுற்றவன். பொன்னுடைப்பீதாம்பரம். பொன்மலையாளுரியோன்-பொன்மலையையாள்கின்ற உரிமையுடையோன், உமாதேவிக்குநாயகன்.

இவர் ஒரு மகாமகத்துக்கு வந்தபோது அக்கவிராயர்கூறியது :—

பரவுவர்கொள்பயநீக்கிவருணனைமுத்தகங்கொண்டுபாருள்ளாரெண்
மருவுதிருவணையுறச்செய்தக்காற்றேரிராவணனைமதனால்வென்றங்
குரவுறுமம்பலவாணர்மெச்சுசேதுபதியாய்க்குலவித்தேவை
வருமுத்துராமலிங்கன்ராமனைப்போன்மாமகத்துவந்திட்டானே.

இராமனைக் குறிக்கும்போது,பரவுவர்கொள்பயநீக்கி-பரவுகின்றகடல் கொண்டநீரை அக்கினியம்பாலே நீக்கி. வருணனைமுத்தகங்கொண்டு-வருணன்கொடுத்த அழகிய முத்தாரத்தை மனதங்கீகரித்து. பாருள்ளாரெண்மருவு திருவணையுறச்செய்து-உலகிலுள்ளாரெல்லாமெண்ணத்தக்க திருவணையை மிகச்செய்து. அக்காற்றேரிராவணனைமதனால்வென்று—அந்தக்காலத்திற் றேரேறிவந்த இராவணனை வலியால் வெற்றிகொண்டு. அங்குரவுறுமம்பலவாணர்மெச்சுசேதுபதியாய்க்குலவி- அங்கெஅறிவுடையாராகிய அழகிய பல அன்புடையார் மெச்சுகின்ற சேதுவுக்கு நாயகனாய்விளங்கி என்றும், முத்துராமலிங்கசேதுபதியைக் குறிக்கும்போது, பர...நீக்கி-துதிக்கின்றவர்கொண்டபயத்தையகற்றி. வரு... கொண்டு—புலவர்கூறும் வருணனையோடுகூடிய முத்தகச்செய்யுளையும் கொண்டு. பா.......செய்து-உலகத்திலார்ந்த எட்டாகமருவிய இலக்குமியைத் தன்னுடன்பொருந்தச்செய்து. அக்.......வென்று-அந்தத்தென்றற்றேரையுடைய இராவண்ணனாகிய மன்மதனை அழகால் வெற்றிகொண்டு. அங்............குலவி-அழகியகுருத்தன்மையுறும் அம்பலவாணதேசிகர்மெச்சத்தக்க சேதுகாவலனாய் விளங்கி யென்றும் பொருள் கொள்க. மாமகத்துவந்திட்டான்என்பதற்கு இராமனைக்குறிக்கும்போது பெரியயாகத்திலவதாரமானனென்றும், சேதுபதியைக்குறிக்கும்போது மகாமகத்திருநாளில் வந்தான் என்றும் பொருள் கொள்க. இட்டான் எனவும்பிரித்து யாவருக்குங்கொடுத்தானென்றும்பொருள்கொள்ளலாம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்த பாண்டித்துரை ஒரு மாமகத்துக்கு வந்திருந்தபோது அக்கவிராயர் கூறியது:-

அலமருவார்கலியடக்கலாற்கோவில்வளைகையுறலான்மாச்செண்டு
செலவிடலால்வரையில்வருபொன்கொளலாற்றென்மதுரைதிகழ்தலானன்
னலமுறவங்குரவாரம்பலவாணனையுள்ளநயத்தலானின்
னிலகுபெற்றோர்சைவமன்னுக்கிரபாண்டியனெனநிற்கிசைத்தார்பேரே.

உக்கிரபாண்டியனைக்குறிக்கும்போது, அலமருவார்கலியடக்கலால்-சுழலுகின்ற ஆர்கலியாகிய கடலை அடக்குதலால். கோவில்வளைகையுறலால்-இறைவருற்கொடுத்தசக்கரத்தைக் கையிற்பொருந்தலால் வரையில் மாச்செண்டு செலவிடலால்-பெரிய செண்டு என்னு மாயுதத்தால் மேரு வரையில் அடித்தலால். வருபொன்கொளலால்-அடித்தபின்பு அவ்வரை யாற் றனக்குவருகின்ற பொருளை யெடுத்துக்கொள்ளுதலால். தென் மதுரை திகழ்தலால்-அழகிய மதுரைப்பதியில் விளங்கியிருத்தலால். நன்னலமுறவங்குரவாரம்பலவாணனையுள்ளநயத்தலால் — மிக்கநன்மை யுற அங்கே அறிவுடையவராகிய பலகலைவாணரை யுள்ளத்தில் விருப்புற லால் என்றும், உக்கிரபாண்டித்துரையைக் குறிக்கும்போது, அலமரு வார்கலியடக்கலால்-சுழன்றுதிரிவாராகிய இரவலர்வறுமையை அடக்குவ தால் கோவில்வளைகையுறலால்-ஆலயத்தை வலம்வருதலுறுவதனால். மாச் செண்டுசெலவிடலால்-குதிரைகளை வையாளிவீதியிலேநடத்தலால். வரையில்வருபொன்கொளலால்-அளவில்லாத வருகின்ற திரவியங்களைக் கொள்ளுதலால். தென்மதுரைதிகழ்தலால்-அழகியமதுவைப்போன்ற வசனம்விளக்குதலால். நன்னலமுறவங்குரவாரம்பலவாணனையுள்ள நயத்தலால்-மிக்கநன்மையுறஅழகிய ஆசிரியராகிய அம்பலவாணரை மனத்தில் விரும்பலால் என்றும் பொருள்கொள்க. வருபொருள்-இறைப் பொருளுமாம்.

சேற்றூர்ச்சமீந்தார் ஒருமாமகத்துக்குவந்திருந்தபோது அக்கவி ராயர் கூறியகவி.

பூமகத்தியங்களெல்லாந்தெரிந்தவதென்சேறைமன்னவபுகழ்ந்தெந்நாளு
நாமகத்தின்புறுதுறைசைக்குருநசாமிமன்னருந்துணைவில்பன்னூல்க
டாமகத்தியந்தெரிந்தபோதனெனநின்னைமெச்சுந்தகைமையெல்லா
மாமகத்திற்குவந்தோரேவருமுரைத்தாராலுமடங்காதன்றே.

பூம—பூமியனே. கத்தியம்—கதைகள்.

இவர் ஒருபுலியைச்சுட்டபோது அக்கவிராயர் கூறியது.

அலகிலுயிர்ப்பயிர்விளைக்கும்வானதிலோரம்புலிபொன்னம்பலத்தா
னிலகுநடம்பலவுயிர்க்கீந்தளிக்குமோரம்புலியுலகினினீவாழும்
பலவுயிரைவதைத்திடலாலம்புலியாகாயுன்னைப்பார்மேல்வைப்ப
திலையெனவோர்புலியினைச்சுட்டான்சேறைச்சுந்தரதாசென்கோமானே.

சிங்கம்பட்டிச்சமீந்தார் ஒருமாமகத்துக்கு வந்திருந்தபோது அக்கவிராயர் கூறியது :—('தென்னாட்டுப்புலி' என்பது சிங்கம்பட்டிச்சமீந்தார்பட்டப்பெயர்.)

தாயினுநல்லாய்தென்னாட்டுப்புலிநீவேறில்லாத்தகைமையோர்ந்து
வேயினுமென்றோள்பெறுமானின்னுறவுகொண்டிருக்கும்வேளையெங்கும்
பேயினும்விடாதுதென்பாலொருசிறுகாற்புலிபாய்ந்துபுகிலென்செய்வா
ளோயினுநின்பெயர்க்கீது தகுமோ சுப்பிரமணியவிறைவரேயே.

முன்னாட்டுவாகனங்கொள்சாமியையைங்கரப்பொருளைமுன்னாட்டந்தோன்
றன்னாட்டுக்கால்விரும்பிப்பணிபுலிபோற்பணிந்துதென்பாற்றங்கலானுங்
கன்னாட்டும்படியெதிர்ததோர்தமைப்புலியேயென்னவெல்லுகையினுந்தான்
றென்னாட்டுப்புலியெனப்பேர்பெற்றாய்சுப்பிரமணியசெயசிங்கேறே.

பேரையூர்ச்சமீந்தார் சேற்றூரில் அதிகாரஞ்செய்யவந்திருந்தபோது என்னை உங்கள் மன்னரைப்போலச்சொல்கின்றார்களா? எனக் கேட்க அக்கவிராயர்கூறியவெண்பா :—

சேற்றூராண்மன்னன்றிருவனென்போரிந்நாளில்
வேற்றூராண்மன்னனைவிள்ளார்கள்—போற்றுலகில்
நாகையசாமியெனுமன்னுமணீகொண்ட
தாகையினாலேதிருவனாம்.

பாற்கரசேதுபதிமகாராசா சேற்றூருக்கு வந்தபோது அக்கவிராயர் கூறியகவி.

மேனாட்டுத்தேவகுலத்துபேந்திரனுவருமொருமால்வேந்தர்மெய்க்கப்
பூனாட்டுத்தேவகுலந்தன்னிற்பாற்கரவிறையும்புகழும்வாய்மை
தானாட்டுஞ்சுந்தரதாசரசுமாவுதித்ததற்கோர்சான்றேதென்னின்
மானாட்டுஞ்சேதுபதிவடமலைத்திருவனெனப்பேர்வாய்ந்ததாமே.

சுந்தரதாசு, வடமலைத்திருவன் இவ்விருபெயருஞ் சேற்றூர் மன்னர்க்குப்பெயர்.

எங்குமாஞ்சிவத்தின்வியாபகமுமுயிர்பாசமெனுமிரண்டுங்கூடித்
தங்கும்வியாத்தியுமவைகள்சிவத்தின்வியாப்பியமாகுந்தன்மையுஞ்சொற்
பொங்குபன்னூலாலுணர்ந்துமெய்ஞ்ஞானச்சனகனைப்போற்புவியைக்காக்குந்
துங்கன்பாற்கரசேதுமன்னனைப்போற்புவியிலெவர்சொல்லுங்காலே.

வெம்புத்தூர்ப் பிச்சுவையரை நோக்கிச் சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயர் 'கழுதையைப்பெற்றானன்றாங் காண்' என ஈற்றடியெடுத்துச்சொல்ல, அவர் கூறிய வெண்பா.

சாரமுள்ளகாமாசஞ்சற்றுமறியாநமட
வாருடனேகூடிமகிழ்தலினால்—மீர
விழுதையுலரியும்பால்கொளின்பநல்லார்காலி
கழுதையைப்பெற்றானன்றாங்காண்.

திருவாவடுதுறையாதீனமகாசந்நிதானமாகிய சுப்பிரமணிய தேசிக மூர்த்தி சேற்றூர்ச் சமஸ்தானவித்துவான் கந்தசாமிக்கவிராயரைநோக்கி இந்தச்சந்நிதானைப்பற்றி ஒருகவி சொல்லவேண்டுமென்றபோது கூறிய கவி. [இக்கவிராயர் இச்சந்நிதானத்துடன்கற்றவர்—இராமசாமிக்கவிராயர்தமையனார்.]

வாடிவருவார்க்கனையாஞ்சற்குருசுப்பிரமணியமாதவன்றன்
கோடிநிதிபாவருக்குக்காவலர்பெற்றிடக்கொடுக்குங்குணத்தினாலே
நாடிமதணிமதியுங்கலாநிதியென்றுவந்துநம்மைநல்கவெண்ணித்
தேடிலென்செய்குவமென்றேதிங்களும்பந்நாத்தோடித்திரிகின்றானே.

செங்கோட்டைக்கு மேற்கேயிருக்கிற ஆரியங்கா ஐயனார்பேரிலே பூழியன்குடிப் புலவர் கூறியகவி.

ஊராரைப்பின்சொல்லியுற்றாரைப்பின்சொல்லியொன்றெனினுந்
தாராரைப்பின்சொல்லித்தந்தாரைப்பின்சொல்லிச்சற்றுமுகம்
பாராரைப்பின்சொல்லிப்பார்ப்பாரெனச்சொல்லிப்பாழ்த்தகும்பிக்
காராரைப்பின்சொல்லுவேன்றிருவாரியங்காவையனே.

(தொடரும்.) இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௩௩௨—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

81. "பாக்கி யம் எனக்(கு) உள(து) என நினை(வு) உறும் பான்மை
போக்கி நிற்(கு) இது பொருள் என உணர்கிலேன்; புவனம்
ஆக்கி, மற்றவை அகிலமும் மணி வயிற்(று) அடக்கிக்
காக்கும் நீ ஒரு வேள்வி காத் தனை எனும் கருத்தே!"

இ - ள். "(என் வேள்வியை நீர்காக்கும்) பாக்கியம் (நான் முன் செய்த தவத்தால்) எனக்கு உள்ளது (ஆகியது) என்று நினைப்பதை விட்டு, உமக்கு இது (சாதிக்கத்தக்க) காரியமென்று நினைக்கின்றிலேன்; (ஏனெனில்) அகிலாண்டங்களையும் சிருட்டித்து அவைகளைப் பிரளய கால ஆபத்துக்குத் தப்பும்படி) திருவயிற்றினுள் அடக்கி (வைத்து)க் காக்கும் (அவ்வளவு அபாரவல்லமையுடைய) நீர்! சிறியவேள்வியை (க் கடைபோகக்)காத்தீரென்று கருதும்கருத்து (மனத்தில் உண்டாமோ! உண்டாயின் அது எவ்வளவு பேதைமையானது!")

நினைவுறும் பான்மை - நினையும் தன்மை. போக்கி - நீக்கி - விட்டு; அன்றி யெனலுமாம். பொருள் - காரியம்; (உ - ம்) "துணிபெவனோ பொருள்விளங்கச் சொல்லென்றான்." சேதுபு. பிரமகத். ௨௨. (சங்க. அகராதி). 'கருத்தே' என்பதற்கு வினைமுடிபு இல்லாமல், வேண்டுமென்றே விடப்பட்டிருக்கிறது. மனம் அவசமுறுங்கால், சொல்லக் கருதியதில் ஒருபகுதியைச்சொல்லி, சொல்லாமலே அறிந்துகொள்ளக் கூடிய எஞ்சிய பகுதியைச் சொல்லாதுவிடுதல் உலகவழக்கிற்போலச் செய்யுள்வழக்கிலும் உண்டென்பதற்கு இஃது ஓர் உதாரணமாம். பாரதத்தில், கன்னன் மாணுங்காலத்தில், "மாதவத்தால் ஒரு தமியன் வாழ்ந்தவாறே" என்பது மற்றோருதாரணம். பிற பல உள. வந்துழிக் காண்க.

பாலகாண்டம் பதிப்பித்தாருள் ஒருவர் மேற்கூறிய 'கருத்து' என்ற முடிபில்லாததை 'உளத்து ஆருமா' என்றும், மற்றொருவர் 'எப்படி உண்டாகும்' என்றும் கூறி முடித்திருக்கின்றார்கள்.

[என்று விசுவாமித்திரர் கூறினார். எல்லாரும் அன்று அங்கே தங்கியிருந்தார்கள். மறுநாள் இராமர், "இனி எனக்குக் கட்டளை யாது?" என, முனிவர் "நீர் செய்தற்கரியது ஒன்றுமில்லை. பெரிய காரியங்கள் பின் முடிக்கவேண்டுவன இருக்கின்றன. இப்போது மிதிலை அரசர் செய்யும் வேள்வியைப் பார்க்கப் புறப்படுவோம்" என்றார்.]

அகலிகைப்படலம்.

[அவ்வாறே புறப்பட்டுப் பல ஆறுகள் சோலைகளைக் கடந்து]

௪௨. பள்ளி நீங்கிய பங்கயப் பழன நன் னாரை
வெள்ள வான் களை களைவுறு கடைசியர் மிளிர்க்க
கள்ள வாள் நெடும் கண் நிழல் கயல் எனக் கருதா
அள்ளி நாண் உறும் அகன் பணை மிதிலை நா(டு) அடைந்தார்.

இ - ள். நித்திரைநீங்கிய தாமரை (கள் மலிந்த) வயலில் (உள்ள) நாரை, (அந்த வயல்) நீரில் (முளைத்த) களைகளைப்பிடுங்கும் பள்ளிகளது கண் நிழலை (த் தூக்கமயக்கத்தில்) மீனென்று கொத்தியெடுத்து (மீனல்லாமையால்) நாணுகின்ற மருதநிலம் (சூழவுள்ள) மிதிலாநகரத்தை (த் தன்னிடத்தே) உடைய (விதேக) நாட்டை (அவர்கள்) அடைந்தார்கள்.

பள்ளி - நித்திரை. பழனம் - வயல். வெள்ளம் - நீர். வான் - பெருமை; இங்கே மிகுதியைக்குறித்தது. கடைசியர் - பள்ளப்பெண்கள். மிளிர்தல் - பிரகாசித்தல். கள்ள - கள்ளத்தன்மையுள்ள. வாள் - ஒளி. கயல் - கெண்டைமீன். அகன் - அகன்ற. பணை - மருதநிலம்.

களைபிடுங்கும் மாதர் கண் நிழல் அக்களைகள்உள்ள நீரிலேதோன்ற, அதனை மீனென்றெண்ணி நாரைகள் மயங்கின என்பதற்குப் பொருத்தமாகக் களைக்கு 'வெள்ள' என்ற அடைகொடுத்ததும்,—மாதர்கண் மீன் போல்வனவாதலால் அவர் கண்நிழல் மீன்போலத்தோன்றி மீனென மயங்குதற்கேதுவாயிருப்ப, அவ்வேதுவைப் பலப்படுத்த நாரைக்குப் 'பள்ளிநீங்கிய' என்ற அடைகொடுத்ததும் கவனிக்கத்தக்கவை.

83. வரம்(பு) இல் வான் சிறை மதகுகள் முழ(வு) ஒலி வழங்க
அரும்பும் நால் மலர் அசோகுகள் அலர் விளக்(கு) எடுப்ப,
நரம்பின் நான்ற தேன் தாரை கொள் நறுமலர் யாழின்
சுரும்பு பாண் செயத் தோகை நின்(று) ஆடுவ சோலை.

இ - ள். (அந்த விதேகநாட்டிலே) சோலைகளிலே (உள்ள) குளங்களின் மடைகள் (அவற்றின்வழியே நீர்செல்லும் ஒலியாகிய) மத்தள முழக்கம் செய்ய, அசோகமரங்கள் மலர்கள் (ஆகிய) விளக்குகளை ஏந்த, வண்டுகள் யாழ்போல இசைபாட மயில்கள் (தோகைவிரித்து) நின்று கூத்தாடும்.

வரம்பு இல் - அளவில்லாத. வான் - பெரிய. சிறை - குளம். அரும்பும் - அரும்புகின்ற - தோன்றுகின்ற. நரம்பின் - நரம்பைப் போல. நான்ற - தொங்கி (நூற்போல ஒழுகி)ய. தாரைகொள் - ஒழுக்கைக்கொண்ட. யாழின் - யாழ் (இசை) போல். பாண்செய - இசை பாட. பாண் - இசைப்பாட்டு. தோகை - மயில். சோலை - சோலையில்; ஏழன் உருபு தொக்கது.

மரங்கள் நெருங்கி நிழல் மிகுந்து பகலும் இரவுபோலத்தோன்றும்படி இருண்டசோலை,—மதகோசை மத்தளவோசை ஆக, மலர் விளக்கு ஆக, வண்டிசை பாட்டு ஆக, மயில் ஆடல் கூத்தியராட்டமாக,—இரவில் சதுர்நடக்கும் நடனசாலைபோன்றதென்பது கருத்து. இப்பாட்டு நாட்டுப்படலத்தில் "தண்டலை மயில்களாட" என்ற பாட்டுப்போன்றது.

84. பட்ட வாள் நுதல் மடந்தையர் பார்(பு) எனும் தூதால்
எட்ட ஆதரித்(து) உழல்பவர் இதயங்கள் வெறுப்ப,
வட்ட நாள் மரை மலரின் மேல் வயல் இடை மள்ளர்
கட்ட நாவிகள் கண் கடை காட்டுவ கழனி.

இ - ள், (அந்த விதேகநாட்டு) வயல்களிலே மாதரது பார்வையாகிய தூதினால் (அழைக்கப்பட்டு அவரை) அடையவிரும்பி (ச் சமயம் பார்த்து)த் திரிகின்ற ஆடவர்கள் மனம்வெறுக்கும்படியாகத் தாமரைமலர்மேல் மள்ளர் பறித்தெறிந்த குவளைமலர் (பிறமாதர் பார்ப்பதுபோலக்) கடைக்கண் காட்டும்.

பட்டம் - (பொற்)பட்டம். வாள் - ஒளி. நுதல் - நெற்றி. பார்ப்பு - பார்வை. ஆதரித்து - விரும்பி. உழலல் - அலைதல். நாள் மரை மலர் - அன்றலர்ந்த தாமரைமலர் மரை - தாமரை; முதலெழுத்துக் குறைந்து வந்தது. காட்டுவ - காட்டுவன. கழனி - கழனியில் வயலில்; ஏழாம் வேற்றுமை உருபு தொக்கது. தாமரைமலர்மேல் குவளைமலர் கிடத்தல் மாதர்முகத்தில் கண் விளங்குதலுக்கு உவமையாகும்.

85. தூவி அன்னம் தம் இனம் என்று நடை கண்டு தொடர்க்
கூவும் மென் குயிற் குதலையர் குடைந்த தண் புனல் வாய்
ஓ(வு)இல் குங்குமச் சுவ(டு)உற, ஒன்றொ(டு)ஒன்(று) ஊடிப்,
பூ உறங்கினும், புள் உறங் காதன பொய்கை.

இ - ள். (அந்த நாட்டுப்) பொய்கைகளிலே, மாதர்கள் குளித்த நீரிலே, (அம்மாதர் பூசியிருந்த) குங்கும(ம்) தோய, (அக்குங்குமம்பட்ட) அடையாளம் (சேவல்களும் பேடைகளும்) பொருந்த, (நிறம் மாறியதன் காரணம் அறியாமல், இச்சேவல் என சேவலன்று இப் பேடை என் பேடையன்று என்று கருதித் துணைப்) பறவைகள், ஒன்றோடொன்று ஊடல்செய்து, (இரவில் அந்தக்குளத்துத் தாமரை) மலர்கள் (இதழ் குவிந்து) உறங்கினும், உறங்காதிருப்பனவாம்.

தூவி - இறகு. மெல் குயில் குதலையர்-மென்மையான குயிலோசை போலும் மழலைமொழிகளையுடைய மாதர்கள். குடைந்த - குளித்த. புனல் வாய் ஓவு இல் — நீரில் (கலந்து அதனினின்று) நீங்குதல் இல்லாத. சுவடு - அடையாளம். பொய்கை - மானிடர் ஆக்காத நீர்நிலை. தொடா(ச் சென்று) குடைந்த எனக் கூட்டுக.

மலர் கண்ணுக்கும் மலர்மடல் கண்மடலுக்கும் மலர்மடல் ஒன்றோடொன்று பொருந்தல் கண்மடல்கள் பொருந்தலுக்கும் ஒப்பாம். இதனை உட்கொண்டே, கவி, இரவில் தாமரைமலர்கள் குவிவதனை அம் மலர்கள் உறங்குவதாகக் கூறிய நயம் பாராட்டத்தக்கது.

86. படைநெடுங்கண் வாள் உறை புகப் படர் புனல் மூழ்கிக்
கடைய முன் கடற் செழுந் திரு எழும்படி காட்டி,
மிடையும் வெள் வளை புள்ளொடும் ஒலிப்ப, மெல் லியலார்
குடைய, வண்(டு) இனம் கடி மலர் குடைவன குளங்கள்.

இ - ள். (அந்த நாட்டுத்) தடாகங்களிலே, மாதர்கள், கண்களாய வாளாயுதங்கள் இமைகளாகிய உறைகளிலே புகும்படி நீரில் முழுகி, முன் (காலத்தில் தேவர்கள்) கடல் கடைய (அதனின்றும்) திருமகள் மேலெழுந்த தன்மையை (அந் நீரில் முழுகிய தாம் அந் நீரின்மேலெழுதலால்) காட்டி (அத் தடாகங்களில்) குடைந்துகொண்டிருக்க, வண்டுகள், (அங்குள்ள) மலர்களைக் குடையா நிற்பனவாம்.

'நெடுங்கண்வாட்படை' யெனவும் 'முன்கடல் கடைய'எனவும் கூட்டுக. படர் புனல் - பரவியநீர். மிடையும் - நெருங்கிய. குடைதல் - 1. நீராடுதல்; 2. (வண்டுகள் தேனுக்காகப் பூக்களைக்) குடைதல்.

நீராடும்போது இயல்பாகக் கண்மூடுதலைக் 'கண் வாள் உறை புக' என்று நயம்படக் கூறினர். நீருள் முழுகின மாதர் எழுதலைப் பாற்கடலில் திருமகள் எழுந்ததுபோலுமென, (உவமான உவமேயங்களாகிய) இருகாட்சிகளும் நம் மனக்கண்ணெதிரே தோன்றும்படி கூறிய வனப்பு நோக்கத் தக்கது. 'பூ உறங்கினும் புள் உறங்காதன பொய்கை' என்பதனிலும் 'மெல்லியலார் குடைய வண்டினம் கடிமலர் குடைவன குளங்கள்' என்பதனிலும் இனிதாகப் பொருள் வேறுபடச் சொற்களை அடுக்கியிருக்கும் கவி சாதுரியம் கவனிக்கத்தக்கது.

[அந்த விதேக நாட்டிலே அவர்கள் சிறிது தூரம் சென்று மிதிலை நகரத்துக்கோட்டையை அடுக்க உற்றபோது, அங்கே கல்லுருவாயிருந்த அகலிகை, இராமபிரான் பாததூளிபடவே, தொல்லுருவாகிநிற்க, முனிவர் "இவள் கௌதமர்மனைவி" என, இராமர் "இவள் இவ்வாறுவானேன்?" என, அவர் "இந்திரன் இவளை இச்சித்துக் கௌதமரைக் குடிலினின்று வெளியே போம்படி உபாயம் செய்து அவர் வடிவத்தோடு உள்ளே புகுந்து தன்னைக் கௌதமரென்று நம்பிய இவளைச் சேர்ந்திருந்த சமயத்தில், கௌதமர் வந்து, அவனைக் கண்டார்; நகைக்கும் விகார உரு அடையும்படி சபிக்க அவன் விகார உரு அடைந்து வெட்கப்பட்டு ஓடிப்போக, பின்பு இவளைக் கல்லாகும்படி சபிக்க, இவள் 'அச் சாபத்துக்கு முடிவு அருள்க' என, 'இராமர் கழலிலொட்டிய புழுதிபட்டிட முடிவாம்' என்றார். பின்பு, தேவர்வேண்ட, இந்திரன் விகாரஉரு நீங்கி ஆயிரங்கண்ணுடைமை அநுக்ரஹித்தார்." என்று பின்னும் கூறுவார்.]

வேறு.

87. "இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம் இனி இந்த உலகுக் கெல்லாம்,
உய்வண்ணம் அன்றி, மற்(று)ஓர் துயர்வண்ணம் உறுவ(து) உண்டோ?,
மைவண்ணத்(து) அரக்கி போரில், மழைவண்ணத்(து) அண்ணலே,உன்
கைவண்ணம் அங்குக் கண்டேன் கால்வண்ணம் இங்குக் கண்டேன்!"

இ - ள். "இந்த வண்ணம் நடந்தவண்ணம் (என்று தெரிகிறதாக. இவளுக்குச் சாபம் நீக்கி அருளிய உமது பாத மகிமையால்) இனிமேல் இந்த உலகத்தாரெல்லாருக்கும் உய்யும்வண்ணமன்றி நையும்வண்ண மொன்றும் உண்டாகுவதில்லை. (மெய்யின் வண்ணம்) மையின்வண்ணமான தாடகை யுத்த(ம் நிகழ்ந்த அந்தஇட) த்திலே உமது கையின் வண்ணத்தைக் கண்டேன்! (அகலிகை சாபநீக்கம் நிகழ்ந்ததை)இந்த இடத்திலே உமதுகாலினவண்ணத்தைக் கண்டேன்!" (என்றான்).

'வண்ணம்' என்பது, 'இவ்வண்ணம்' 'நிகழ்ந்தவண்ணம்' என்பவைகளில் விதத்தையும், 'உய் (யும் - உச்சீவிக்கும்) வண்ணம்' 'துயர் (வரும் - துன்பம் உறும்) வண்ணம்' என்பவைகளில் ஆறு அல்லது வழியையும், 'மைவண்ணம்' 'மழைவண்ணம்' என்பவைகளில் நிறத்தையும், 'கைவண்ணம்' 'கால்வண்ணம்' என்பவைகளில், குணம் அல்லது தன்மையையும் குறித்தல் காண்க.

இந்தப்பாட்டுக்குப் பல பாட்டுகளுக்கு முந்திய "அவ்வுரை இராமன் கூற அறிஞனும் நோக்கி" என்றபாட்டிலுள்ள 'நோக்கி' என்ற வினையெச்சம் இப்பாட்டில், 'கண்டேன்' என்ற வினைமுற்றுக்கொண்டு முடிகின்றதேயன்றி, 'அறிஞன்' என்றபடர்க்கை எழுவாய்க்குப் பயனிலை இல்லை. 'என்றான்' என்ற பயனிலை வருவித்து முடிபுசெய்க. இவ்வாறே இத்திரட்டு 85-ம்பாட்டில் 'தொடர (ச்சென்று) குடைந்த' என்று 'சென்று' என்ற சொல் வருவித்து முடிவுசெய்யவேண்டியிருந்தது காண்க.

மிதிலைக்காட்சிப்படலம்.

[பின்பு அவர்கள் அகலிகையைக் கௌதமனிடம் சேர்த்துவிட்டு, வழிச்சென்று மிதிலை நகரத்து மதிலைக் கண்டார்கள்.]

88. "மையறு மலரின் நீங்கி, யான் செய் மா தவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்" என்று, செழுமணிக் கொடிகள் என்னும்
கைகளை நீட்டி, அந்தக் கடி நகர், கமலச் செங் கண்
ஐயனை, "ஒல்லை வா!" என்(று) அழைப்பது போன்ற(து), அம்மா!

இ - ள். (அப்போது, அந்த மதிலுக்கு மேலாகத் தோன்றிய கொடிகள் காற்றால் அலைந்தது,) அந்த நகரம் (ஆகிய பெண்), "இலக்குமிதேவி (எப்பொழுதும் வசிக்கும்)செந்தாமரைமலரினின்று நீங்கி (ச்சீதாதேவியாகி) யான் செய்த பெரும் புண்ணியத்தினால் (என்னிடம்) வந்திருக்கின்றாள்" என்று கைகளை (உயர) நீட்டி (அசைத்துச் சைகை செய்து திருமாலாகிய) இராமபிரானை (அவளை அடையச்) "சீக்கிரம் வருவீராக" என்று அழைப்பதுபோன்றிருந்தது.

மை அறு - குற்றமற்ற. மலரின் - (செந்தாமரை) ப் பூவினின்று. செய்யாவள்-இலக்குமி. கடிநகர் - காவலையுடைய நகரம். ஒல்லை-சீக்கிரம்.

89. நிரம்பிய மாடத்(து) உம்பர் நிரை மணிக் கொடிகள் எல்லாம்,
தரம் பிறர் இன்மை உன்னித் தருமமே தூது செல்ல,
வரம்(பு)இல்பேரழகினாளை மணம்செய்வான் வருகின்றான் என்(று),
அரம்பையர் விசும்பின் ஆடும் ஆடலின், ஆடக் கண்டார்.

இ - ள். (அன்றியும் அந்தக்) கொடிகள், (தூதுபோதற்கு) வேறொருவரும் தகுதியில்லாமையை உட்கொண்டு தருமதேவதை தானே தூதுபோ (ய் அழைக்)கச், சீதாதேவியைக் கல்யாணம் செய்வார் (ஆகிய இராமபிரான்) வருகின்றாரென்று (மகிழ்ந்து) அரம்பையர்கள் வான(ரங்க)த்தில் ஆடுதல் போல ஆட, (அக் கொடிகள்) ஆடலை (அவர்கள்) கண்டார்கள்.

நிரம்பிய-(சிற்பசித்திரவேலைப்பாடுகள்) நிறைந்த. மாடத்து உம்பர் - மாளிகைகளின்மேல். நிரை - வரிசை. தரம் - தகுதி. வரம்பு இல் - எல்லையில்லாத. ஆடலின் - ஆடலைப்போல.

90. ஆதரித்(து) அமுதில்கோல்தோய்த்(து), அவயவம் அமைக்கும் தன்மை
யா(து)எனத் திகைக்கும்அல்லால்,மதனற்கும்எழுதஒண்ணாச்
சீதையைத் தந்த லாலே திருமகள் இருந்த செய்ய
போ(து)எனப் பொலிந்து தோன்றும் பொன்மதில் மிதிலை புக்கார்.

இ - ள். (அழகின் தன்மையை அறிதலிற் சிறந்த மன்மதன், "வரம்பில் பேரழகினாள்" ஆகிய சீதையின் வடிவத்தைச் சித்திரிக்க இயல்பாக) ஆசைபூண்டு, (தனது சித்திரம் எழுது) கோலை (அமிழ்தமே தக்க வர்ணப்பொருளென்று) அமிழ்தத்திலே தோய்த்து (அவளது) அவயவங்களை (ச் சித்திரத்தில் புலப்பட) அமைக்கும்வகை எவ்வகை

கண்டு திகைப்பதேயல்லாமல், (அந்தமன்மதனாலும் சித்திரிக்கக்கூடாத சீதை (யாகிய இலக்குமி)யை (க் காண்போர் களிக்க) அளித்ததனால் இலக்குமி (காண்போர்களிக்க) வீற்றிருக்கின்ற சிவந்த (தாமரை) மலர் போல விளங்கும் மிதிலைநகரத்தினுள்ளே (அவர்கள்) பிரவேசித்தார்கள்.

ஆதரித்து - விரும்பி. திகைக்கும் - திகைப்பான். செய்ய - 1. சிவந்த; 2. அழகிய.

'திகைக்கும்' என்பது 'செய்யும்' என்னும் வாய்பாட்டுவினைமுற்று. இவ்வாய்பாடு, 'அது செய்யும்' 'அவைசெய்யும்' என உலக வழக்கிலும் இவையல்லாமல் 'அவன் செய்யும்' 'அவள் செய்யும்' எனச் செய்யுள்வழக்கிலும் வழங்கும்.

91. சொற்கலை முனிவன் உண்ட சுடர்மணிக் கடலும் துன்றி
அற்கலந்(து) இலங்கு பல்மீன் அரும்பிய வானும் போல,
விற்கலை நுதலி னாரும் மைந்தரும் வெறுத்து நீத்த
பொற்கலன் கிடந்த மாட நெடுந்தெரு வதனிற் போனார்.

இ - ள். அகஸ்தியர் குடித்த (காலத்தில் நீர்வற்றித் தரை தெரிய அற்றபோது வெளியாய்ப்) பிரகாசித்த இரத்தினங்களையுடைய கடலையும் இரவில் நக்ஷத்திரங்கள் தோன்றப்பெற்ற வானத்தையும்போல, ஆடவரும் மகளிரும் (செல்வ மிகுதியால் புதியபுதியனவாக ஆபரணங்கள் அணியும்போது) வெறுத்துக் களைந்தெறிந்த (பழையனவாகிய, இரத்தினமிழைத்த) பொன்னாபரணங்கள் கிடந்த தெருக்கள் வழியே (அவர்கள்) சென்றார்கள்.

சொல் கலை முனிவன் - சொல்லாலாகிய நூல்கள் அல்லது சாத்திரங்களை அறிந்த அல்லது அருளிச்செய்த அகஸ்திய ரிஷி. சுடர்மணி - பிரகாசிக்கின்ற இரத்தினங்கள். அல் கலந்து இலங்கு பல்மீன் - இரவிற் பொருந்தி விளங்குகின்ற பல நக்ஷத்திரங்கள். வில் கலை நுதலினார் - 1. (வடிவத்தில்) வில்லைப்போன்ற பிரகாசத்தையுடைய நெற்றியையுடைய மாதர்; 2. ஒளியையுடைய சந்திரகலை (-பிறை) போன்ற நெற்றியையுடைய பெண்கள்.

கடலும் வானமும் பாட்டினுலும் தெருக்களுக்கு உவமமாதல்காண்க.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

சோழன் மணக்கிள்ளி.

சோழன் மணக்கிள்ளியைப்பற்றி யான் செந்தமிழ் XX-ம் தொகுதி 43–46 பக்கங்களில் எழுதியதையும், அதனை மறுத்து உ. வே. ஸ்ரீ. ந. நா. அப்பனையங்காரவர்கள் ஷை தொகுதி மூன்றும்பகுதியில் எழுதியிருந்ததையும் பெரியோர் பலரும் படித்திருப்பார்கள். அவர்கள் எழுதிய மறுப்பினால் எனது ஐயங்கள் தெளிவுறாமையால் அவற்றைப் பெரியார் நீக்குவரென்னுங் கருத்தால் அவைகளை வெளியிடுகிறேன். இவ்வாறு யான் எழுத முன்வந்தது சிற்றம் பொறாமை காரணமாக எழுந்ததென்று எண்ணாமலிருக்கும்படி வேண்டிக்கொள்வதோடு சேரன்செங்குட்டுவனாசிரியரது ஆராய்ச்சியின்றிறனைக் குறைகூற எழுந்ததாகவும் கொள்ளாதிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். சேரன்செங்குட்டுவனாசிரியர் தாமே இவைகளெல்லாம் தம்மால் ஊகிக்கப்பட்டனவேயன்றி முடிவுடையனவல்லவென்றும், அவைகளை ஏற்றபெற்றி கொள்ளுமாறும் கூறுவதால் அவர்களுக்கு இவ்வாராய்ச்சியால் யாதொரு இழுக்கு மேற்படாதென்பதும் திண்ணம்.

ஸ்ரீமத் அப்பனையங்காரவர்கள் முதலில் ஒருகொள்கையை நிறுத்திக்கொண்டு அதற்குற்ற ஆதாரங்களைப் பின்னர்த் தேடுகின்றார்கள். கூறவேண்டியவைகளையெல்லாம் எடுத்துக்கூறி, அதனினின்றும் முடிவு கட்டுவதுதான் நேர்முறையாகுமென் றெண்ணுகிறேன். இவர்கள் முடிவாகக்காட்டியவைகளாவன :—

I. மணக்கிள்ளி என்பது ஆண்பாற்பெயராகவே ஈன்றமகன் என்பதிற் பொருளெய்துமாறில்லை. மணக்கிள்ளிமகள் ஈன்றமகன் என்பதே பொருத்தமுடையதாம்; ஆகையால் மணக்கிள்ளி என்பது ஆண்பாற் பெயரென்பதே தகுதி என்பது.

2. உறந்தைச்சோழர், புகார்ச்சோழர் என இரண்டுகிளையினர் உண்டென்பது,

சோழன்மணக்கிள்ளி என்ற தொடரை நோக்கும்போது அது ஆண்பாற்பெயரென்பது யார்க்கும் புலனாகாநிராது என்றார்கள். மணக்கிள்ளி என்பதில், கிள்ளி என்பதுமாத்திரம் பால்குறிக்காதென்பது எல்லோர்க்கும் ஒப்பமுடிந்ததே. மணக்கிள்ளி என்ற தொடர்மாத்திரம் கொண்டு பால்குறித்தலும் இயலாதாம். நெடுங்கிள்ளி, திருமுடிக்கிள்ளி பெருவிறற்கிள்ளி என்பன ஆண்பாலை உணர்த்தினவே யெனின் இச்சொற்கள் முன்னுள்ள அடைமொழிகளால் வெவ்வேறுபொருள்களைத் தருகின்றன; கிள்ளியில் நீண்டவன் என்றும், கிள்ளிகளுள் முதன்மையானவனாய்ப் பட்டமெய்தியவன் என்றும், அதிகவல்லமையையுடைய கிள்ளி என்றும் ஆண்மக்களுக்குரிய செய்கைகளைக் காட்டுங் குறிகளைத் தம்மிடத்தே அடக்கிக்கொண்டிருக்கின்றனவாகையால் இவ்வடைமொழிகளே பாலைப்பகுத்தற்குப் பெருஞ்சாதனமாயிருக்கின்றன எனக் கூறல்வேண்டும். இங்ஙனமே இம் மணக்கிள்ளிக்கும் கொள்ளலாகாதோ வெனின் மணத்திற்குரியபெயரோடு அழைக்கப்படுபவர் பெண்பாலரே. சோழன்மணக்கிள்ளி என்றல்லவோ காணப்படுகிறதெனின் சோழன் என்றசொல்லே அவ்விடமிருந்ததென்று உறுதியாகக்கூறுவதற்கில்லை. மகாமகோபாத்தியாய: ஐயரவர்கள் முதலில் இவ்விடத்தைப் புள்ளிகளால் நிறைத்துச்சென்றார்களென்றும், பின்னரே இவ்வாறு அச்சிட்டார்களென்றும் எழுதியுள்ளேன். இவர்கட்கு இவ்வாறுகொள்ளக் காரணமாயிருந்தது ராசாங்கத்துக் கையெழுத்துப்பிரதியே. அது 1891-ம் ஆண்டுவாக்கில், காலஞ்சென்ற சி. வை தாமோதரம்பிள்ளையவர்களது உதவியால் எழுதிப் புத்தகசாலைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சோழ மணக்கிள்ளி என்றிருக்கவேண்டியதைச் சோழன்மணக்கிள்ளி என்று எழுதியிருக்கவேண்டும் என்றுதோன்றுகிறது. இதையெழுத அது வன்மைதானென்பது இயலாதகாரியமாயிருப்பதால், பாலைநிச்சயித்தலும் முடியாதகாரியமாம்.

இனி, ஈன்ற என்ற எச்சத்தோடொட்டிவரும் மகள் என்ற சொல்லையுங் கூட்டி ஈன்றமகள் என்ற தொடரை யாராயுங்கால், ஈன முதற் காரணமாயிருந்த சொல் யாண்டும் தொக்குநிற்கக் கண்டோமில்லை. அன்றியும், அந்த 'ஈன்ற' என்ற சொல் மணக்கிள்ளி யென்பதைத் தழுவுதலன்றி மகள் என்ற சொற் பெய்யும்வகை காக்க வழக்கில்லை.

அப் பதிற்றுப்பத்துப் பதிகங்களுள்ளேயே 'ஈன்ற' என்ற மொழிகளெல்லாம் முன்னிற்கும் நல்லினி, பதுமன்றேவி, ஆவிக்கோமான்றேவி, பொறையன்பெருந்தேவி, அந்துவஞ்செள்ளை என்பவற்றைத் தழுவுகையில் இத்தொடர்க்குமாத்திரம் வேறுசொற்பெய்து முடிக்கக் காரணந்தானென்னை? இவர்கள் மணக்கிள்ளி மகளீன்றமகன் என நடுவில் ஒருசொற்பெய்து அதனைப் பொருளோடுபொருத்திக்காட்டி, சேரன் செங்குட்டுவனுக்குத் தந்தை நெடுஞ்சேரலாதன் என்றும், தாய் மணக்கிள்ளி ஈன்ற மகளென்றும் வெளிப்படுத்திச் சென்றனர் என்றார்கள். அச் சேரன்செங்குட்டுவனாசிரியர் தம்கொள்கை யூகித்தனவேயன்றி உறுதியுடையனவென்றுகூறினாரில்லையென முன்னரே குறித்துளேன்.

இனி, யான் வெளியிட்ட "கொள்கைக்குமே ஒருசொல் வருவித்துப் பொருள்கொள்ளவேண்டியிருக்கிறது ; அது முன்னே பின்னே என்பது ஆராய்ந்தறியவேண்டிய" தென்றார்கள். இதற்கு வேறுவிடை கூறாது, முன்னரே பதிற்றுப்பத்துப்பதிகங்களிலிருந்து காட்டியிருப்பதே போதியதென்றும், ஆண்டு எவ்வாறு ஆன்றோராற் கொள்ளப்பட்டிருக்கிறதோ அவ்வாறே இப்பதிகத்திற்கும் பொருள் கொள்ளவேண்டியதென்றும், அதனில் மறுப்புரைகாரருக்கும் தடையில்லையென்றுங் கூறி நிறுத்துகிறேன்.

மேலும், "மற்றொரு சான்றோடு மாறுகொள்ளுதலின், அக்கொள்கை வலியற்றதாகின்ற" தென்றும், " 'திகழொளிஞாயிற் றேழ்பரிநெடுந் தேர்ச்சோழன்றன்மக ணற்சோணையீன்றமக்கள் இருவருள் முன்னோன்' எனச் செங்குட்டுவனைக் குறிப்பித்தலானே, அவன்தந்தை நெடுஞ்சேரலாதனென்பதும், தாய் நற்சோணை என்பதும் தெள்ளிதிற் புலனாம். ஆகவே அவன்தாய் மணக்கிள்ளி யென்பது சிறிது மொவ்வாதாம்" என்றார்கள். முழுதும் உண்மையே. இவர்கள்கூற்றுன, "திகழொளிஞாயிற் றேழ்பரிநெடுந்தேர்ச்சோழனே மணக்கிள்ளி என்பதற் குற்ற ஆதாரத்தை விளக்காதகாரண மென்னை? இவ்வாறு தாம்கூறவில்லை யென்பார்களாயின் அதுவே இவர்கள் எழுதிய உரைநடையினின்றும் தொனிப்பதாம். ஆயினும், ஆசிரியர் அடியார்க்குநல்லார் தாமும், சூரியவங்கிசத்துச்சோழனென்றதைக் கவனியாததென்னவோ? ஞாயிற்றுச்சோழன் என்ற தொடருக்குச் சூரியவங்கிசத்துச்சோழன்

என ஆசிரியர் அடியார்க்குநல்லார் கூறிய உண்மையை வித்வான் ஸ்ரீமத் ம. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள் சந்திரவமிசத்திற்புகுந்து ஆண்டுவந்துள்ள திங்கட்சோழரினின்றும் பிரித்துக்காட்ட ஞாயிற்றுச் சோழரெனக் கூறினர் என விவரித்து அதற்குற்ற வாதாரங்களுங் காட்டு கின்றனர். ஆகவே ஞாயிற்றுச்சோழன் என்பது சூரியவமிசத்திலே வந்த கீர்த்திவாய்ந்த அப்பொழுதாண்ட மன்னன் எனறு பொருள்படுவ தல்லது மணக்கிள்ளி ஆகாதது காண்க. இதுவன்றி யானமுன்னர்க் காட்டிய 'சோழம்' என்பது 'சோழன்*' என்ற சொல்லாயிருக்கவேண்டு மென்றதற்கும் 'சோலையின்றமக்கள் இருவருள்' என்பது ஒருதலை யொத்தலையுங் கவனிக்கவேண்டுகிறேன்.

இதுகாறும் கூறியதுகொண்டு மணக்கிள்ளி என்பது ஆண்பாற் பெயராகாது என்று துணியலாம்.

இனி, இரண்டாவதான உறந்தைச்சோழர், புகார்ச்சோழர் பிரிவு களைப்பற்றி அவர்கள் ஆராய்ந்து கண்ட முடிவாவது:—"மதுரை, வஞ்சிபோன்று சோழர்க்கு ஒரு நகரமில்லாது இருநகர்கள் இருப்பதான் இருநகர்களிலும் அரசர்கள் ஆண்டுவந்திருக்கவேண்டுமென்பதும், பலவர சர் ஒரேவமிசத்தில் ஏககாலத்தில் இருந்தவராகக் காணப்பட்டுச் சரித் திரவொற்றுமைபெறுவதில் மயக்கங்கொள்ளநேருமாகையால் இருவேறு பிரிவினராய சோழர்கள் ஆண்டுவந்திருக்கவேண்டுமென்பதுமே யாம்" என்பதாகும்.

சோழர்கட்கு இருதலைநகர்கள் என்று சொல்ல இடந்தந்தது பின்வரும்,

நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன னாட்டு
மாட மதுரையும் பீடா ருறந்தையுங்
கலிகெழு வஞ்சியும் ஒலிபுனற் புகாரு
மரைசு வீற்றிருந்த உரைசால் சிறப்பின்
மன்னன் மாறன் மகிழ்துணை யாகிய
இன்னிள வேனில் வந்த திவண்

---

* இதுவே யான் கண்டுபேசிய பண்டிதர் பலருடைய கொள்கையாகத் தெரிகிறது.

என்னும் சிலப்பதிகார வேனிற்காதை முதலேழு வரிகளேயாம். வேறுநூல்களில் இவ்விதம் ஆதாரமிருப்பதாக இவர்களி லொருவரும் காட்டவில்லை. மேற்காட்டிய அடிகளுக்கு ஆசிரியர் அடியார்க்குநல்லார் உரைகூறுமிடத்து "ஈண்டு என்சொல்லியவாறோ வெனின் காமனுக்குத் தேர் தென்றலும், புரவி கிள்ளையும், யானை அந்தியும், சேனை மகளிருமாதலால், தேர் தென்னர்காவலும், புரவி கிள்ளிகாவலும், யானை சேரமான் காவலுமாக்கித் தானுந் தன்சேனையும் புகாரில் வீற்றிருந்தானென்பது கருத்து" என்றார். ஆகவே இவர்கட்கு உறந்தையிலும் புகாரிலும் வேறு வேறு அரசர்கள் அரசாண்டனர் என்றுகோடற்கு அவண் ஆதார மொன்று மில்லை யென்பதும், கிள்ளியின்நகர் உறந்தையேயென்பதும், புகாரைக் குறித்தது காமன்றன்செயலைக்குறித்ததொருபெருமையே யென்பதும் தெளியுறக் காணலாம். மேலும்,

'திண்பரித் தென்றலந் தேருந் தார்புனை
வண்பரிக் கிள்ளையு மாலை யானையுங்
கண்கடைப் படுகோலக் காமர் சேனையு
மெண்படப் புகுந்தன னிரதி காந்தனே'

என்ற செய்யுளை எடுத்துக்காட்டியிருப்பதையும் நுணுகி யாராய்ந்து பொருள்கொள்ளவேண்டுகிறேன்.

இனி, புகாரிலும், உறந்தையிலும் வேறுவேறுசோழர் ஆண்டனரா எனக் கடாவெழும்போது, சிலப்பதிகாரம் 28-வது நடுகற்காதை 116—118 வரிகளில்,

"ஆர்புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரி வாயி லிலச்செரு வென்று
நெடுந்தேர்த் தானையோ டிடும்பிற்புறத் திறுத்துக்
கொடும்போர்கடந்த" என்றும்,

27-நீர்ப்படைக்காதை 117–123 வரிகளில்,

"மாடல மறையோன் மன்னவர்க் குரைக்குநின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா :
வொத்த பண்பின ரொன்பது மன்ன
ரிளவரசு பொருஅ நேவல் கேளார்

> வளநா டழிக்கு மாண்பின ரகலி
> னொன்பது குடையு மொருபக லொழித்தவன்
> பொன்புனை திகிரி யொருவழிப் படுத்தோய்"

என்றும் விடையிறுக்கும். இதனாலே இவ்வரசர் ஒன்பதின்மர் இருந்தன ரென்பதும், வளநாடழிக்கும் மாண்பினர் என்பதால் இவர்கள் கலாம் விளைத்துவந்தனரென்பதும், வளவன் கிள்ளியொடுபொருந்தா ரென்பதாலவனே இவர்கட்குத் தலைவனாய் விளங்கியவனென்பதும் பெறுகின்றுமாயினும் இவரொன்பதின்மரும் தலைவர்க்கு ஒத்தவர்கள் என்பதிலும் ஐயமில்லை; அவன் வலவழி நின்றவர்கள் என்பதும் மறுக்கமுடியாதது. மேலும், முதலாவது உரைபெறுகட்டுரையில் "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து................" என்று காணப்படுவதால் அக்காலத்தேயே புகார் அழிந்துபட்டது என்று காண்கிறது. கோழியகத்திருந்தவனும் வளவன்கிள்ளியேயாம்.

இனி, பண்டித ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள் மரபு அட்டவணையில், பின்வருமாறு காட்டுகின்றனர்.

உறையூர்.		புகார்.
மணக்கிள்ளி.		கரிகாலன்.
காரியாற்றுத் துஞ்சியநெடுங்கிள்ளி	—	கிள்ளிவளவன்
இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி.		சேட்சென்னி நலங்கிள்ளி.

I. இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப்பற்றி ஆராய்வோமாயின், புறநானூறு முதற்பதிப்பிலே மகாமகோபாத்யாய: ஐயரவர்கள் பாடப்பட்டோர்வரலாற்றில், சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியுடனிருந்தார் திருக்குறள் அரங்கேற்றுவித்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்றும், அவனைப்பாடிய புலவர்கள் ஔவையார், ஐயூர்மூலங்கிழார் முதலியோராவர் என்றும் குறித்துள்ளார்கள். அவர்கள்கொண்டகருத்து நிறையுடையதேயன்றிப் பிறிதன்றாம்.

II. மேற்குறிப்பிடப்போந்த புரவலர்களைப் பாடிய புலவர்கள் யாவரென ஆராய்வோமாயின், புறநானூற்றிற் பின்வருமாறுகாணப்படுகிறது:—

1. நெடுங்கிள்ளியைப்பாடியவர் கோவூர்கிழாரொருவரே;

2. சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியவர் பாண்டரங்கண்ணனார், ஔவையார், உலோச்சனார்.

3. கிள்ளிவளவனைப் பாடியவர்கள் ஆலத்தூர்கிழார், வெள்ளைக்குடிநாகனார், மாறோக்கத்து நப்பசலையார், ஆலூர் மூலங்கிழார், கோவூர்கிழார், இடைக்காடனார், ஆடுதுறை மாசாத்தனார், ஐயூர்முடவனார், நல்லிறையனார், எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்.

4. நலங்கிள்ளியைப்பாடியவர்கள் உறையூர் முதுகண்ணன் சாத்தனார், கோவூர்கிழார், ஆலத்தூர்கிழார்.

இராசசூயம்வேட்டபெருநற்கிள்ளியைப் பாடிய பாண்டரங்கண்ணனாரும், உலோச்சனாரும் வேறு ஒருவரையும் பாடாதது கொண்டும், சேரமான் மாவெண்கோ, பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியோடு உடனிருந்தமையானும் இவன் நலங்கிள்ளி கிள்ளிவளவனுக்குப் பின்னிருத்தல் ஏலாதாம்.

III. கரிகாற் பெருவளத்தானுடன்பொருத சேரன் பெருஞ்சேரலாதனவான்.* இவனேசெங்குட்டுவன்றந்தையெனச்சேரன்செங்குட்டுவனாசிரியர் காட்டினர்—(பக் 10—12). இந்த ஆதனைப் பரணரும் கழாத்தலையாரும் பாடியிருக்கின்றனர். இக்கழாத்தலையார் சோழன் வேற்பஃறடக்கைப்பெருநற்கிள்ளியைப் பாடியுள்ளார். இவனுக்குப் பெருவிறற்கிள்ளி யென்றும் ஒருபெயருண்டு. இவனைப்பற்றிச் சேரன்செங்குட்டுவனாசிரியர், "செங்குட்டுவன் தந்தையாகிய நெடுஞ்சேரலாதன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்னுஞ் சோழனுடன் பெரும்போர் புரிந்தபோது அவ்விருவருமே போர்க்களத்தில் ஒருங்கிறந்தனர் என்பது அவர்கள் இறந்துகிடந்தநிலையை நேரிற் கண்டு கழாத்தலையாரும் பரணரும் உருகிப் பாடியபாடல்களால், தெரியவருகின்றது"† என்பர். இந்த ஆதன் ஒருமுறை கரிகாலனோடு வெண்ணிற் பரந்தலையிற் பொருது நாணி வடக்கிருந்தானென்பது புறம் 65-ல் தெரிகிறது.

---

* இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் குடவர்கோமான் நெடுஞ்சேரலாதனும் ஒருவரோ, வேறோ என்ற ஐயம் நீக்கப்படவேண்டும்—சோம.

† பக் 21.

இதன்பின்னரே இவன் (அதன்) பெருநற்கிள்ளியோடு பொருது களத்தவிந்திருக்கவேண்டுமாகையான் இப்பெருநற்கிள்ளி, நெடுங்கிள்ளி, நலங்கிள்ளிக்குப் பின்னிருந்தலமையாதென்பது வலியுறுவதோடு, இவன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியோ என்பது ஐயத்துக்கிடமாகிறது. அன்றியும், இவனைப்பற்றிச் சேரன் செங்குட்டுவனாசிரியர் "செங்குட்டுவன் அம்மானாகிய நெடுங்கிள்ளி இறந்ததும் இவன் மகனான பெருநற்கிள்ளி உறையூரிற் பட்டமெய்தினன்; திருக்கோவலூர்ச் சிற்றரசனும் பெருவீரனுமாகிய மலையமான் திருமுடிக்காரி என்பவன் உறையூர்ச்சோழர்க்குச் சேநாதிபதியாகவிருந்து உதவிபுரிந்துவந்தான்; ஆனால் இவனும் அதிர்ஷ்டவீனத்தால் இடையில் இறந்துவிட்டான். விடவே ஆய்ச்சியில் இளையனாய்ப் பட்டமெய்திய பெருநற்கிள்ளியுடன் அவன் ஞாதியரெல்லாம் கிளம்பிப் பெருங் கலகம் விளைப்பாராயினர். இக்காலத்தே அவ்விளஞ்சோழன் தனக்குப் பெருந்துணைவனாக விருந்த மலையமானது முள்ளூர்மலையில் ஓடி ஒளிக்கும்படி நேர்ந்தது. இவனை இவ்வாபத்துக்காலத்திற் காத்துவந்தவன் முற்கூறிய மலையமான் மகன் திருக்கண்ணான் என்பான். இங்ஙனம் தன் அம்மான்மகனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்டதும் செங்குட்டுவன் விரைந்துசென்று அவனுக்குப் பகைவராய்த்தோன்றிய சோழ ரொன்பதின்மரை உறையூரைபடுத்த நேரிவாயிலில் அழித்துத் தன் மைத்துனச்சோழனைப் பட்டத்தில் நிறுவினான். இச்செய்தி முன்னரும் விளக்கப்பட்டது. * * * இவ்வாறு செங்குட்டுவனால் உதவிபுரியப்பெற்றவனே பிற்காலத்திற் பெருவீரனாய் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி யெனச் சிறப்பிக்கப்பெற்றவன் எனத் தெரிகின்றது" என்பர். புறநானூற்றை யாராயும்போது, இக்கிள்ளி தேர்வண்மலையன் என்பானைத் துணையாகக்கொண்டு சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறையொடு பொருது அவனை வென்றான் என்றும், சோமான் மாவெண்கோவொடும், கானப்பேர்தந்த உக்கிரப்பெருவழுதியொடும் நட்புடையவனாயிருந்தானென்றும் காணப்படுகிறது என்று முன்னரே காட்டியுள்ளேன். மாந்தரஞ்சேரலிரும்பொறைபோ கபிலர்* இறந்துபட்டார்; யார் எனது விளக்கில்வெற்றியைக் கூறப்போகின்றார் எனக்

* கபிலர் என்று ஒரு ஆராய்ச்சிப்புத்தகம் வெளியாகியிருப்பதாகக் கேள்விப்பட்டேனெனினும் அதன் ஆசிரியர்கொள்கை இன்னதெனயான் அறியேன். சோம,

கவலைப்பட்டிருக்கின்றனன். கபிலனை இவன் நேரிலறிந்திருந்தாலன்றி இவ்வாறுகூறுவது தகுதியாகாது. ஆகவே இராசசூயம்வேட்டானும் கபிலர்காலத்துக்குச் சற்று முன்னோ பின்னோ இருந்திருக்கவேண்டுமாதலால், செங்குட்டுவன்காலத்திருந்தானென்றல் பொருந்துவதெங்ஙனம்?

II. i. நெடுங்கிள்ளியைப்பற்றி யாராய்வோமாயின், அவனைப் பற்றி, "செங்குட்டுவன்தாயுடன்பிறந்த அம்மானும் சோழன்மணக் கிள்ளியின்மகனுமாகிய நெடுங்கிள்ளி உறையூரை யாண்டுவந்தனன். புறம் (44, 45, 47). இவ்வுறையூர்ச்சோழர்க்கும் புகார்ச்சோழர்க்கும் பெரும்பகைமூண்டு போர்நிகழ்ந்துவந்ததாகப் புறநானூற்றால் அறியப் படுகின்றது. .... இவருடன் காரியாற்றங்கரையில் நடந்த போரிலே செங்குட்டுவனம்மானாகிய நெடுங்கிள்ளி இறந்தானென்பது, காரியாற்றுத்துஞ்சிய என அவன் விசேடிக்கப்படுதலானும் .... புலப்படுகின்றன" என்பர் சேரன்செங்குட்டுவனாசிரியர்.

இந் நெடுங்கிள்ளியைப்பற்றிப் புறநானூறு பாடப்பட்டோர்வரலாற்றில் "இவன் சோழபரம்பரையைச் சேர்ந்தோன்; ஆவூரும் உறையூரும் இவனுடையவை; சோழன்நலங்கிள்ளி இவற்றை முற்றியிருந்த பொழுது கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டு உள்ளேயிருந்த இவன் பின்பு கோவூர்கிழாரால் தேற்றப்பட்டான். காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி எனவும் இவனுக்குப் பெயருண்டு. இவனைப்பாடிய புலவர் கோவூர்கிழார் 44, 45, 47" என்று காணப்படுகிறது.

ii. அ. புறப்பாட்டுக்களை யாராய்வோமாயின் 44-ல் "அவன் (மாவளத்தான்) ஆவூர் முற்றியிருந்தகாலத்து அடைத்திருந்த நெடுங்கிள்ளியைக் கோவூர்கிழார் பாடியது" என்று காணப்படுகிறது. இப்பாட்டில், புலவர் நெடுங்கிள்ளியைநோக்கி "யானை உருமேறுபோல முழங்கவும், பாலில்லாதகுழவி அழவும், மகளிர் பூவில்லாதவறியதலையை முடிப்பவும், நீரில்லாத தொழில்புனைந்த நல்லமனையிடத்துள்ளார் வருந்திக் கூப்பிடும் கூப்பீட்டைக்கேட்கவும் இவற்றிற்கு நாணாது, இவ்விடத்தில் நீ இனிதாக இருத்தல் இன்னாது; அறத்தை யுடையையாயின் இது நினதன்றோவென்றுசொல்லித் திறத்தல் செய்வாயாக; மறத்தை யுடையையாயின் போரால் திறத்தல்செய்வாயாக" என்கின்றார்.

b. 45-வது பாட்டில் 'சோழன் நலங்கிள்ளி உறையூர் முற்றியிருந்தானையும், அடைத்திருந்த நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் பாடியது' என்று காணப்படுகிறது. அதனில் கோவூர்கிழார் "சேரனல்லன்; பாண்டியனல்லன்; நின்னுடன் பொருவோனுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக்கட்டப்பட்டது; நின்னுடைய கண்ணியும் ஆத்தியாற் செறியக்கட்டப்பட்டது: ஆதலால் நும்முள் ஒருவீர் தோற்பினும் தோற்பது நுங்குடியன்றோ? இருவீரும் வெல்லுதல் இயல்புமன்று; ஆதலால் நுங்குடிக்குத் தக்கதொன்று அன்று நுமது செய்கை" என்கின்றார்.'

c. புறம் 47-ல் நலங்கிள்ளியுழைநின்று உறையூர்புகுந்த புலவன் இளந்தத்தனை நெடுங்கிள்ளி இவன் ஒற்றுவந்தானென்று கொல்லப்போகுங்கால், கோவூர்கிழார் அந்நெடுங்கிள்ளியை நோக்கி இவர் "வாழ்க்கை பிறர்க்குச்செய்யும் கொடுமையறிந்ததோவெனின், இல்லை; கூடுபடக் கல்விமுகத்தால் தம்மொடுமேலாந்தோர்நாணத் தமது கல்வியால்வென்று தலையெடுத்து நடப்பவர்" என்றும், "ஓங்குபுகழ் மண்ணாள்செல்வமெய்திய-நும்மோரன்ன செம்மலுமுடைத்தே" என்றுங் கூறியிட்டார். உரைகாரர் இச்செய்யுளின் கருத்தாகப் "பரிசில் வாழ்க்கை யென்றோர்க்காள இனிதொழுகினல்லது, நும்மோரன்ன செம்மலுமுடைத்து: ஆதலால், பிறர்க்குத் தீதறிந்தன்றோ? இன்றெனக்கூட்டுக" என்று கூறுதலான் நெடுங்கிள்ளி பிழைபட்டான் என்று திட்டமாகக் கூறுதற் கிடமிருக்கிறது.

d. சோழன்நலங்கிள்ளி புறம் 75-ல் "தங்குடியின் முதியோரை முதியோரைக் கூற்றம் கொண்டுபோயிற்றாக; விதிதரப்பட்டுத் தம்பால் வந்த பழையவெற்றியாலுண்டாகிய அரசுரிமையைப் பெற்றோமானால் இத்தலைமையைப்பெற்றோமெனக்கொண்டு தங்குடிமக்களை இறைவேண்டியிரக்கும் மிகுதியில்லாத ஆண்மையையுடைய உள்ளஞ் சிறியோன் பெறின் அத்தாயம், அவனுக்குப் பரிக்கவொண்ணாதாம்படி கனத்தது மிகவும், சிறியோன் பெறுவானாயின் வெளியகிடேச்சினது கோடைக்கு உலர்ந்த சன்னியைப்போலப் பெரிதும் நொய்து" என்பர். கிடேச்சு என்பது நெட்டி.

௬. புறம் 73 ல், “மெல்ல வந்துஎன் நல்லடி பொருந்தி
‘ஈ’ என இரக்குவ ராயின், சீருடை
முரசுகெழு தாயத் தரசோ தஞ்சம் ;
இன்னுயி ராயினும் கொடுக்குவன் இந்நிலத்து ”

அமைச்சர், படைத்தலைவர் முதலாகிய வலியையுடையோரது வலியைப் பாதுகாவாது என்னுள்ளத்தையிகழ்ந்த அறிவில்லாதோன் யாவர்க்கும் விளங்கத் துயில்கின்றபுலியை இடறிய குருடன்போலப் பிழைத்துப் போதலோ அரிது; மூங்கிலைத் தின்னும் வலியையுடைய யானையினது காலின்கணகப்பட்ட வலிய நிரைய மூங்கிலது நீண்ட முளையையொப்ப மேற்சென்று அவ்விடத்து வருந்தும்படி பொருதிலேனாயின், கூடிய நீதியில்லாத நெஞ்சத்தாற் காதல்கொள்ளாத பலவகைப்பட்ட கரிய கூந்தலையுடைய பொதுப்பெண்டிரது பொருந்தாதபுணர்ச்சியிடை என்மாலை துவள்வதாக; என்கின்றான் சோழன் நலங்கிள்ளி.

இதுகாறும் கூறியதினின்றும், நலங்கிள்ளி, பழைமையான தங்குடியிலே இரண்டு தலைமுறையினரை முதியோரை, முதியோரை)க் கூற்றம் கொண்டுபோகத் தாம் பெற்ற அரசுரிமையாகுமென்றும் (75), இவன் கீழ் இளவரசனாகவோ, ராசப்பிரதிநிதியாகவோ சோழநாட்டில் ஒரு பகுதியை நெடுங்கிள்ளி யாண்டுவந்தானென்பது கோவூர்கிழார் “இது நினதன்றேவென்று சொல்லித் திறத்தல் செய்வாயாக (புறம் 44) என்பதுகொண்டு பெறுதலாலும் அவரே இளந்தத்தனை மீட்குமுகந் தானே ‘நின்னோரன்ன செம்மலு முடைத்து’ (47) என இழிவுசிறப் பும்மையாற் கூறுதலாலும், நலங்கிள்ளியே தன்னடிபணிந்து எனக்குக் கொடு என்று இரப்பாராயின் உயிரையும் கொடுக்க மறுக்கேன் (73) என்பதனால் நெடுங்கிள்ளியைச் சுட்டுதலாலும், பிறிதொருபொருள் கூறுவான்போன்று தான் குடிகளை ஒறுக்காதவனென்றும், தாயம் சிறியோன் பெறின், குடிமக்களைக் கொள்ளுங்கடமையன்றி மிகத்தரவேண்டு

மென்று இரப்பன் என்றும் கூட்டுதலாலும் (75), நெடுங்கிள்ளி தனியர சுடையவனல்லனென்றும் கொள்ளவேண்டியிருக்கிறது.

மேலும், இந்நலங்கிள்ளியைக் கோவூர்கிழார் புறம் 45ல் "உறந்தை யோயே" என்றும், 69-ல் 'பிறங்குநிலைமாடத் துறந்தையோனே' என்றும், மாறோக்கத்து நப்பசலையார் 39 ல் 'உறந்தையவையத் தறநின்று நிலையிற் றாகலின்' என்றும் கூறுதலான் இந்நலங்கிள்ளி உறந்தையையே தலைநகராகக் கொண்டு அரசாண்டவன் என்பது வலியுறும். இவனுக்குப் பகைவர்களில்லை என்பதும் பெறப்படுகிறது. (இதன் விரிவெல்லாம் கிள்ளிவளவன் என்னும் உரைநடையிற் காண்க) ஈண்டுவிரிக்கிற் பல்குமென் றஞ்சி விடுத்தாம்.

III. கரிகாலன் ஆசிரியர் கூற்றுக்கும் (பக்-21) அவரால் பின்பற் றப்பட்ட சேதுஸம்ஸ்தானவித்வான் ம. வே. ரா. இராகவையங்காரவர்கள் கொள்கைக்கும் முற்றும் மாறுமென்பதையும் கவனித்து இவ்வாறு பல்வகையினுமுண்டாகும் ஐயங்களை நீக்குதல் மறுப்புரைகாரர் கடனாகு மென்பேன்.

இலக்கண விளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

முதற்கண்டராதித்த சோழதேவர்.

இவ்வரசர்பெருமான் சோணாட்டில், தஞ்சையில்வீற்றிருந்து அரசு புரிந்த சோழமன்னர்களுள் ஒருவர்; முதற்பராந்தக சோழதேவரது இரண்டாவது புதல்வர். இவரது தமையனாராகிய இராஜாதித்தன் என்பார் தக்கோலத்தில், கி. பி. 949-ல் இரட்ட அரசனாகிய கன்னர தேவனோடு புரிந்த பெரும்போரில் இறந்தமையின், பராந்தகசோழதேவருக்குப்பின்னர் இவர் சோழமண்டலத்தின் அரசராக அரியணையேறினர். அப்போரின்பயனாக, பகைவனாகிய கன்னரதேவன் சோழமண்டலத்தின் வடக்கிற் சிலபகுதிகளைக் கவர்ந்துகொண்டமையின் எஞ்சியவற்றையே கண்டராதித்தர் ஆண்டுவந்தனர்.

சோழமன்னர்கள் ஒருவர்பின் ஒருவராகத் தரித்துக்கொண்டுவந்த இராஜகேசரி பரகேசரி என்றபட்டங்களுள் இவர் இராஜகேசரியென்னும் பட்டம் புனைந்தவர். கண்டராதித்தச் சதுர்வேதிமங்கலம் என்ற ஒரு நகரைக் காவிரியின் வடகரையில் இவர் தம்பெயரால் அமைத்தாரென்று லேய்டன்நகரச்செப்பேடுகள் கூறுகின்றன. அதுவே, இப்போது திருச்சிராப்பள்ளிஜில்லாவிலுள்ள கண்டராதித்தம்* என்ற ஊர்போலும்.

இவர் தமிழ்மொழியிற் சிறந்தபுலமையும் சிவபெருமானிடத்துப் பேரன்பும் வாய்ந்தவரென்பது இவர் பாடியுள்ள திருவிசைப்பாவினால் தெரிகிறது. திருவிசைப்பாவில் இவர் பாடிய பதிகங்கள் பல இருத்தல்வேண்டும். ஆனால், தற்காலத்திலுள்ளது 'மின்னாருருவமேல் விளங்க' என்னும் தொடக்கத்துக் கோயிற்பதிகம் ஒன்றே. அப்பதிகத்தின் எட்டாவது பாடலில், 'வெங்கோல்வேந்தன்றென்னாடீழமுங் கொண்டதிறல்—செங்கோற்சோழன்கோழிவேந்தன்செம்பியன்' என்று தம் தந்தையாராகிய முதற்பராந்தகசோழதேவரைக் குறித்திருப்பதோடு அவர் தில்லையம்பலத்திற்குப் பொன்வேய்ந்ததையும் கூறியுள்ளனர்.

---

* S. I. I. Vol. II No. 6.

அன்றியும், பத்தாம்பாடலில், "காரார்சோலைக்கோழிவேந்தன்றஞ்சையர்கோன்கலந்த,—வாராவின்சொற்கண்டராதித்தன்" என்று தம்மையே இவர் குறித்திருப்பது அறியத்தக்கதொன்றாம்.

இஃதிங்ஙனமாக; சோழவமிசசரித்திரம் எழுதிய அறிஞர் து. அ. கோபிநாதராயர் அவர்கள் திருவிசைப்பாப்பாடியவர் இரண்டாங் கண்டராதித்தரென்று அந்நூலில் வரைந்துள்ளனர்; அதற்கு அவர்கூறுங் காரணமாவது:— கண்டராதித்தர், முதல்இராஜராஜ சோழதேவர் தஞ்சையில் எடுப்பித்த இராசராசேச்சுரத்தைத் தம் திருவிசைப்பாவில் பாடியிருக்கின்றனர்; முதல்இராஜராஜசோழதேவர், முதற்கண்டராதித்தரது தம்பியாகிய அரிஞ்சயன் என்பாரது பெயரர்; சுந்தரசோழரென்று அழைக்கப்பெறும் இரண்டாம்பராந்தகசோழரது புதல்வர்; ஆதலால், தஞ்சை இராசராசேச்சுரத்தைத் திருவிசைப்பாவிற் பாடியவர் முதற்கண்டராதித்தரெனக்கொள்ளின், அவர், தம் தம்பியின்பெயரரது ஆட்சிக்காலத்தும் இருந்தவராதல்வேண்டும்; ஆனால், முதற்கண்டராதித்தர் இறந்தபின்னரே அவரது தம்பியாகிய அரிஞ்சயனென்பார் செங்கோல் கைக்கொண்டனரென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன; எனவே, திருவிசைப்பாப் பாடியவர் முதற்கண்டராதித்தர் ஆகார்—என்பது. திருவிசைப்பாவிலுள்ள பதிகங்களுள்: கண்டராதித்தர் இயற்றியது ஒன்றேயாகும். அப்பதிகமும் கோயிலெனப்படுந் திருச்சிற்றம்பலத்தைப்புகழ்வது. ராயர் அவர்கள் கூறியவாறு கண்டராதித்தர் இராசராசேச்சுரத்தைப்பாடியபதிகம் திருவிசைப்பாவிற் காணப்படவில்லை. ஆனால், திருவிசைப்பாவிலுள்ள இராசராசேச்சுரப்பதிகம் கருவூர்த்தேவர் பாடியதாகும். கங்கைகொண்டசோழேச்சுரத்தைப் பாடியவரும் இக்கருவூர்த்தேவரேயாவர். ஆகவே, கருவூர்த்தேவரியற்றிய இராசராசேச்சுரப்பதிகத்தைக் கண்டராதித்தர் இயற்றினரெனப் பிழையாகக்கொண்டு, அதனால், திருவிசைப்பாப்பாடியவர் இரண்டாம் கண்டராதித்தர் என்று ராயர் அவர்கள் எழுதியிருப்பது தவறுடைத்தென்க. எனவே, முதற்கண்டராதித்தரே திருவிசைப்பாப் பாடியவரென்பது திண்ணம்.

இனி, கண்டராதித்தரது ஆட்சிக்காலம் மிகச்சுருங்கியதொன்றேயாம். இவர், தம்கீழ்வாழுங் குடிகளிடத்தில் அன்பும் இரக்கமுமுடையவராய்ப் பல நற்கருமங்களைச் செய்துள்ளனர். இவர்காலத்திற் போர்

முதலியன நிகழவில்லையாதலின், குடிகள் எல்லோரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர். ஆதலால், அன்னோர் தம் அரசர்பாற் பேரன்புடையராய், அவரைக் கடவுளின் அவதாரமென்றே கருதுவாராயினர். இவருக்கு வீரநாரணியார், செம்பியன்மாதேவியார் என்ற இருமனைவியர் இருந்துள்ளனரென்று தெரிகிறது. அவ்விருவருள் முன்னவர் இவரது வாழ்க்கையின் முற்பகுதியிலிருந்தவர். அவ்வரசியார் பலகோயில்கள் கட்டுவித்துப் புகழுற்றனரென்று கி. பி. 931 ல் வெட்டப்பெற்ற முதற்பராந்தகசோழதேவரது கல்வெட்டுக் கூறுகின்றது. இவரது வாழ்க்கையிற் பிற்பகுதியிற், பட்டத்தரசியாக விளங்கியவர் செம்பியன் மாதேவியார்* எனப்படுவர். அரசரது இரண்டாம்மனைவியாகிய அவ்வம்மையார் மழநாட்டரசரது புதல்வியென்று கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. நமது கண்டராதித்தருக்கும் செம்பியன்மாதேவியாருக்கும் மதுராந்தகன் என்ற ஒரு புதல்வர் பிறந்தனர். அவரை உத்தமசோழரென்று அழைப்பது வழக்கம். புதல்வர் பிறந்தவுடன் அரசர் வானுலகஞ்சென்றாரென்று லேய்டன் செப்பேடுகள் கூறுகின்றமையின் இவர் செம்பியன்மாதேவியாருடன் நெடுங்காலம் வாழ்ந்திருக்கவில்லையென்று தெரிகிறது. ஆனால் அவ்வரசியார்மாத்திரம் தம் நாயகர் இறந்தபின்னர் நீண்டகாலம் உயிருடனிருந்துள்ளனர். முதல்இராஜராஜ சோழதேவரது ஆட்சியின் 16-ஆம் ஆண்டாகிய கி. பி. 1001 வரை அவர் இருந்தனரென்பது கல்வெட்டுக்களால் அறியப்படுகின்றது. எனவே, தம் நாயகர் இறந்தபின்னர் சற்றேறக்குறைய நாற்பத்தைந்து வருடங்கள் அவர் உயிருடனிருந்திருக்கின்றனர். அவர், அரசரது முதன்மனைவியாரைப்போல் தாமும் பல கோயில்கள் எடுப்பித்து அவற்றிற்கு நிலங்கள் அளித்தனரென்று பலகல்வெட்டுக்கள் புகழ்ந்துரைக்கின்றன.†

---

* செம்பியன்மாதேவியாருக்கு உடையபிராட்டியார் என்ற பெயரும் உண்டு. (See Ep. Rep. 1910. pp. 87).

† S. I. I. Vol. III No. 151 A. Ep. Rep. 1910 pp. 87.

நம் கண்டராதித்தர் கி. பி. 955-ல் இறந்தபோது இவரது புதல்வர் மதுராந்தகசோழர் என்பார் முடிசூடிக்கொண்டு அரசுபுரிதற்கு ஏற்ற பருவத்தினராயில்லை. ஆதலால் இவரது தம்பியாகிய அரிஞ்சயனென்பவர் இவருக்குப்பின்னர் ஆட்சிபுரியத்தொடங்கினர். அரிஞ்சயனும் அவரது புதல்வர் சுந்தரசோழனும் அரசாண்டபின்னர், மதுராந்தகசோழர் கி. பி. 969-ல் முடிசூடிக்கொண்டு 16-வருடகாலம் ஆட்சிபுரிந்து கி. பி. 985-ல் விண்ணுலகெய்தினர் என்ப.

மதுராந்தகசோழர் அவரது தாய்நங்கையாகிய செம்பியன்மாதேவியார், முதற்கண்டராதித்தர் என்ற மூவரது படிமங்களும் தஞ்சை ஜில்லாவிலுள்ள கோனேரிராஜபுரம் சிவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

T. V. சதாசிவபண்டாரத்தார்,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,
வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்.

ஆங்கிலத் தமிழ்ப் பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1923-ஆு மார்ச்சுமீ 3உ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

பீ. ஏ. பரீக்ஷை.

தொடர்க் கிர. எண். | ரிஜிஸ்டர் எண்.

2-வது வகுப்பு.

1. 1. F. S. வரதராஜன், பிஷப் ஹீபர்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2. 2. M. கோவிந்தராஜன், ஷை ஷை

எப். ஏ. பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 26. J. S. பொன்னையா, பிஷப் ஹீபர்காலேஜ், திருச்சிராப்பள்ளி (முதற்பரிசு ரூபா 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்)

2-வது வகுப்பு.

1. 16. G. A. இராமநாதன், நாஷனல்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
2. 70. G. கல்யாணம், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்.
3. 24. V. S. K. துரைசாமி, பிஷப் ஹீபர்காலேஜ், திருச்சிராப்பள்ளி.
4. 87. A. செபாஸ்டியன், ஸெண்ட் ஜோசப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

5. 75. P. V. துரைராகவன், ஸ்ரீமீனாக்ஷிகாலேஜ், சிதம்பரம்.

6. 14. P. ஜோதிமுத்து, அமெரிக்கன் காலேஜ், மதுரை.

7. 67. R. கோபாலஸ்வாமி, பின்டிலே காலேஜ், மன்னார்குடி.

8. 9. S. C. ஞானமன், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

9. 51. J. ஞானவதி (பெண்), H. H. The Maharajah's College, for Women, திருவனந்தபுரம்.

10. 61. P. நடராஜன், மஹாராஜாஸ் காலேஜ், புதுக்கோட்டை.

11. 31. ஞானசெல்வம், சம்புசாமி (பெண்), பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

12. 74. K. M. நடேசன், ஸ்ரீமீனாக்ஷி காலேஜ், சிதம்பரம்,

13. 71. S. ராதாகிருஷ்ணன், ஷை ஷை

14. 50. S. கனகாபாய், (பெண்) H. H. The Maharajah's College for Women, திருவனந்தபுரம்.

15. 18. E. ராமஸ்வாமி, நாஷனல் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

16. 25. L. G. சுந்தரராஜுலு. பிஷப் ஹீபர் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

17. 36. ஜி. ஆறுமுகம். ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சிராப்பள்ளி.

மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 198. இளங்கோ, கோ. முருகையன், ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி.

[முதற்பரிசு ருபா 30 (வெள்ளிப்பதக்கமும் மீத ருபாவும்)]

2. 191. T. R. சிவசுப்பிரமணியன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

(இரண்டாவது பரிசு ருபா 25)

3. 154. P. முத்தையா, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

(மூன்றாவது பரிசு ருபா 20)

4. 176. A. பொன்னம்மாள் (பெண்), சர்க்கார் ஸெக்கண்டரி பெண் பாடசாலை, திருப்பாப்புலியூர்.
(நான்காவது பரிசு ரூபா 15)

5. 106. K. S. ஸ்ரீநிவாஸன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.
(ஐந்தாவது பரிசு ரூபா 12)

6. 146. K. பசுபிராஜன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

7. 319. M. ஷண்முகசுந்தரம், போர்டு ஹைஸ்கூல், பட்டுக் கோட்டை.

8. 189. T. R. புருஷோத்தமன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

9. 316. T. S. சுப்பிரமணியன், போர்டு ஹைஸ்கூல், திருத்தருப் பூண்டி.

10. 338. K. ரகோத்தமராவ், போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.

11. 136. V. P. அனந்தராமன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

12. 164. M. துரைசாமி, ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம் புத்தூர்.

13. 196. S. கோதண்டபாணி, ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

14. 107. P. S. சுப்பிரமணியன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

15. 342. V. T. நாதநேசிகன், போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.

16. 315. M. சுவாமிநாதன், போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி.

2-வது வகுப்பு.

1. 166. P. I. சுப்பிரமணியன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

2. 207. D. L. மேரியாள் (Mary Ann Lazarus), A. A. M. G. High School, ராணிப்பேட்டை.

3. 183. S. குப்புசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

4. 147. A. V. ஆவுடைநாயகம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

5. 155. J. பீற்றர் பிஞ்ஞேயிர, St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

6. 170. N. T. திருவேங்கடாச்சாரி, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

7\. 186. N. ரங்கநாதன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

8\. 289. C. ஆறுமுகம், இந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

9\. 299. R. லெக்ஷ்மிநாராயணன், ஹைஸ்கூல், பத்தமடை.

10\. 115. A. V. முத்துசாமி, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

11\. 293. S. கோதண்டராமன், இந்து நாடார் உயர்தரக்கலாசாலை, சாத்தூர்.

12\. 142. S. சிவசுப்பிரமணியன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

13\. 194. P. S. இராஜகோபாலன், ஸெய்ண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

14\. 250. V. ஸ்ரீநிவாஸவரதன், போர்டு ஹைஸ்கூல், Cheyar, (திருவத்திபுரம்) N. A. Dt.

15\. 321. A. வேலு, போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.

16\. 335. K. S. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.

17\. 195. M. A. நடராஜன், ஸெண்ட் பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

18\. 161. T. S. சுந்தரம், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.

19\. 348. A. ராஜம், ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம்.

20\. 216. C. ஏகாம்பரையர், பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீவரம்.

21\. 251. A. வேதபுரிநாயகன், போர்டு ஹைஸ்கூல், Cheyar (திருவத்திபுரம்), N. A. Dt.

22\. 148. D. முத்தையா, C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

23\. 278. S. கிருஷ்ணமூர்த்தி, டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல் திருவண்ணாமலை.

24\. 139. T. D. சுப்பிரமணியம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

25\. 245. V. அருணாசலப்பா, பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீவரம்.

26\. 318. K. S. இராமசாமி, போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை.

27\. 341. R. சின்னசாமி நாயுடு, போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.

28\. 287. V. S. ஸ்ரீநிவாஸன், இந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

29\. 288. S. S. சுப்பிரமணியன், ௸ ௸

30\. 137. K. N. அம்பலவாணன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

31. 188. G. ரெங்கநாதராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
32. 131. N. S. ராமஸ்வாமி, ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி.
33. 129. S. A. சுந்தரராஜன், ஷை ஷை
34. 184. D. மாரிமுத்து, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
35. 197. G. கிருஷ்ணசாமி, ஸெண்ட் பீடர் ஸ்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
36. 208. A. S. நடேசமுதலி, முனிசிபல் ஹைஸ்கூல், குடியாத்தம், N. A. Dt.
37. 227. S. பொன்னுக்கண், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.
38. 302. R. மகாலிங்கம், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
39. 212. S. V. மீனாக்ஷிசுந்தரம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
40. 215. V. K. சின்னப்பன், ஷை ஷை
41. 325. U. G. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
42. 356. K. முத்துக்குமாரஸ்வாமி, பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
43. 209. T. கிருஷ்ணசாமி, C. R. C. ஹைஸ்கூல், புரசபாக்கம், சென்னை.
44. 267. N. முருகேசமுதலியார், டேனிஷ் மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை.
45. 168. K. லக்ஷ்மிநாராயணன், மஹாராஜன ஹைஸ்கூல், ஈரோடு.
46. 242. R. ஸ்ரீநிவாஸன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
47. 254. R. பெரியசாமி, விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
48. 255. K. நடராஜன், ஷை ஷை
49. 313. P. வெங்கட்டராமன், போர்டு ஹைஸ்கூல், திருத்தருப்பூண்டி
50. 368. A. திருஞானசம்பந்தன், ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
51. 252. V. ராகவாசாரி, போர்டு ஹைஸ்கூல், Cheyar (திருவத்திபுரம்) N. A. Dt.
52. 374. V. சுந்தரேசன், ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
53. 112. S. V. கிருஷ்ணன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
54. 132. M. N. அருணாசலம், ஷை ஷை

55. 163. C. N. ராமகிருஷ்ணன், ஸெண்ட் மிக்கேல் ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

56. 140. R. சுப்பிரமணியன், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

57. 211. R. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

58. 372. M. D. சங்கரராமாநுஜம், ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

59. 135. C. சுப்பையா, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

60. 158. K. வெங்கிடகிருஷ்ணன், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

61. 165. E. V. சிங்காரவேலு, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

62. 139. T. சுடலைவேலானந்தம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

63. 292. T. ஆசீர்வாதம், ஹிந்து நாடார் உயர்தரக்கலாசாலை, சாத்தூர்.

64. 103. K. தொண்டிமுத்து, ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

65. 151. A. வள்ளிநாயகம், C. M. S. காலேஜ், திருநெல்வேலி.

66. 171. J. கிருஷ்ணசாமி, ஸெண்ட் ஜோசப் ஹைஸ்கூல், கடலூர்.

67. 206. S. N. முனிரத்தினம், ஸ்ரீமகந்த் ஹைஸ்கூல், வேலூர்.

68. 157. K. G. ஸ்ரீநிவாஸன், St. Francis Xavier's High School, பாளையங்கோட்டை.

69. 167. S. D. சுப்பிரமணியன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.

70. 180. S. சுப்பிரமணியன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

71. 217. A. கலியாணசுந்தரம், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

72. 104. V. வீரபத்திரன், ராஜா ஹைஸ்கூல், இராமநாதபுரம்.

73. 280. கி. கி. குரு, டேனிஷ்மிஷன் ஹைஸ்கூல், திருவண்ணாமலை.

74. 301. R. ராமலிங்கம், கவர்ன்மெண்டு ஹைஸ்கூல், திருவாரூர்.

75. 79. L. N. S. ராமலிங்கம், ஸௌராஷ்டிர ஹைஸ்கூல், மதுரை.

76. 222. S. ராமய்யா, முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

77. 230. J. நாராயணசாமி, நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

78. 286. A. ஞானகிரி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.

79. 352. C. R. இராமையன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.

80. 367. A. பூவராகசாமி, ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.

81. 82. P. சதாசிவன், ஸௌராஷ்டிர ஹைஸ்கூல், மதுரை.
82. 169. E. ஆனிமுத்து, மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
83. 200. (a) S. சௌந்தரராஜன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
84. 311. K. கோவிந்தசாமி, கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
85. 181. P. தியாகராஜன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்
86. 294. M. குருசாமி இந்து நாடார் உயர்தரக்கலாசாலை, சாத்தூர்.
87. 303. S. வேதம், கவர்ன்மெண்ட் ஹைஸ்கூல், திருவாரூர்.
88. 340. C. P. துரைசாமி, போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.
89. 95. M. ரெங்கசாமி, யூனியன் கிறிஸ்டியன் ஹைஸ்கூல், மதுரை.
90. 172. A. ஜெயராமலு, ஸெண்ட் ஜோசப் ஹைஸ்கூல், கூடலூர்.
91. 371. P. கோவிந்தராஜன், ராமசாமி செட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
92. 128. D. ஆறுமுகம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.
93. 159. K. S. மிருத்தியுஞ்சயன், கவர்ன்மெண்ட் காலேஜ், கோயம்புத்தூர்.
94. 185. T. S. ஹநுமந்தராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
95. 249. T. C. வரதராமாநுஜன், போர்டுஹைஸ்கூல், Choyar (திருவத்திபுரம்) N. A. Dt.
96. 339. G. லக்ஷ்மண அய்யர், போர்டு ஹைஸ்கூல், பண்ருட்டி.
97. 224. N. சுவாமிநாதன், முனிசிபல் ஹைஸ்கூல், மாயவரம்.
98. 343. A. நடராஜன். ஸ்ரீ பூமீஸ்வரஸ்வாமி ஹைஸ்கூல், ராமச்சந்திரபுரம்.
99. 78. N. ஸ்ரீநிவாஸன். ஸௌராஷ்டிர ஹைஸ்கூல், மதுரை.
100. 240. V. முத்துச்சிதம்பரம், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.
101. 256. T. A. நாகராஜராவ், விக்டோரியா ஹைஸ்கூல், பாபநாசம்.
102. 291. K. மாரிசாமி, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
103. 366. V. S. லக்ஷ்மணாசாரி, ராமசாமிசெட்டியார் டவுன் ஹைஸ்கூல், சிதம்பரம்.
104. 336. K. S. ராமையா, முனிசிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்.
105. 354. N. வெங்கிட்டராமன், பச்சையப்பா ஹைஸ்கூல், சிதம்பரம்.
106. 349. S. தெக்ஷிணாமூர்த்தி, ஷை ஷை

மதுரை,
18-7-1923.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை.

உ

தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் துந்துபிஹு பங்குனிமீ 20, 21, 22 (1923-ஹு ஏப்ரல்மீ 2, 3, 4)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

பண்டிதபரீக்ஷை.

தொடர்ந்த எண். | [illegible] எண்.

2-வது வகுப்பு.

1. 2. N. பத்மாசனி அம்மாள், c/o K. தணிகாசலம், பருத்தித் துறை, யாழ்ப்பாணம்.

பாலபண்டிதபரீக்ஷை.

1-வது வகுப்பு.

1. 14 D. மாசில்லாமணி, புதுப்பேட்டைத்தெரு, பாளையங் கோட்டை.

(முதற்பரிசு ரூபா 70 பெறுந்தக்க தங்கப்பதக்கம்).

2-வது வகுப்பு.

1. 3. க. பழநிக்குமாரு, மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
2. 10. மு. நல்லசுவாமி நாடார், பரங்குன்றுப்புரம், வீரகேரளம் புதூர் போஸ்டு, தென்காசித் தாலூகா.

பிரவேசபரீக்ஷை.

2-வது வகுப்பு.

1. 15. இ. கோவிந்தசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.
2. 40. R துரைசாமி ஐயர், தர்மபாடசாலை, திருப்பாதிரிப்புலியூர், தென்னார்க்காடு.
3. 49. K. S. பழநிவேற்பிள்ளை, ஆசிரியர், Board H. B. School, களம்பூர் போஸ்டு N. A. District.

மதுரை,
18-7-1923.

B. இராஜராஜேஸ்வரசேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி- ஷூ ஆடி-மீ [பகுதி கூ.
Vol. XXI. July-August-1923. No. 9.

பலகவித்திரட்டு.

(ருகுச-ம் பக்கத்தொடர்ச்சி.)

திருவாவடுதுறையாதீன மஹாசந்நிதானமாகிய சுப்பிரமணிய தேசிகமூர்த்தி, சொக்கம்பட்டி மாஜி ஜமீந்தார் பெரியசாமித்தேவருக்குப் பேட்டிகொடுத்துபசரிக்கவேண்டுமென்று, இராமநாதபுரம் ஸமஸ்தான மானேசராயிருந்த பொன்னுச்சாமித்தேவருக்குத் திருமுகம் விடுத்தபோது, அப் பொன்னுச்சாமித்தேவர், சந்நிதானத்துக்கு எழுதியனுப்பிய பதிற்கவி:—

உக்கம்பட்டிடையார்களுயர்த்தவிமிர்பெருவாழ்வுமுயர்வேலாய
வக்கம்பட்டிடைந்தவர்பாலனுபவிக்குமின்பமுமெய்யாகாவந்தோ
பொக்கம்பட்டியமனுணவாகாதீரொறுந்துறைசைப்புனிதவாழ்வே
சொக்கம்பட்டித்தலைவற்காண்குவலுன்சொல்வழியான்றுறவரேறே.

உக்கம் - ஆலவட்டம். அக்கம் - கண். பொக்கம் - பொய்.

இராமநாதபுரம் ஸமஸ்தானத்தில். கோட்டைச்சாமித்தேவர் அதிகாரம் செய்திருந்தபோது, மகாநவமித்திருநாளில் வந்தவித்துவான்களையெல்லாம் பரீக்ஷைசெய்து ஸம்மானங்கொடுக்கும் ஸமயத்தில், அவதாத் திரிம்சதவதானம் - சரவணப்பெருமாட்கவிராயரையும் பரீக்ஷைசெய்ய வேண்டுமென்றாராம்; உடனே கவிராயர்கூறிய வெண்பா:—

கற்றபுலவோர்கவியிருக்கமாற்றியிசை
பெற்றவாகோட்டையன்றுபோகக்கேள்—சிற்றறிவை
யெங்கேநீகற்றுயெவருனக்குச்சொல்லிவைத்தார்
துங்காநீவாழ்ந்ததுபோதும்.

செங்கோட்டைக் கவிராசபண்டாரத்தையா மலையாளத்துக்குப் போயிருந்தபோது கூறியகவிகள்:—

தேங்காயைத்தின்றுற்றேங்காய்வெடிக்குந்தினந்தினமு
மாங்காய்தின்றுன்மிகுவன்காச்சொரிந்திடும்வாழையின்காய்
பாக்காயிராதுபலாக்காயும்வாயுப்பதார்த்தமக்
காங்காய்வழுதுணங்காய்மாத்திரமல்லையாளத்திலே.

காற்றுடர்நெய்கொடுப்பானதிற்பாதிகாயடியிற்போக்
கீற்றுமதான்வயிற்பாதியும்போமழுகின்னத்திலே
யூற்றியுருக்கையிற்பாதியும்போமுன்றுயபோதினிலே
சோற்றிலவிழ்வதுபோமாத்திரமன்னசுதறியதே.

துடர் என்பது மல்லயாளத்தில் நெய்க்கரண்டிக்குப் பெயராம்.

மகற்றூர்ச்சமீந்தார் சுந்தரதாசுத்தேவர் திருவாவடுதுறை மகாசந்நிதானமாகிய சுப்பிரமணியதேசிகமூர்த்தியைத் தெரிசிக்கப் போனபோது கூறியகவி:—

காவடியிலாசபுரிமகவான்மற்றுளபுலவோர்களிப்புற்றேங்க
மாவடியிலோர்வேலைவிடுத்தவுருசெழிக்கப்பேர்யாற்றுதிகழ்ப்
பூவாரக்குபவெய்தவருதுறைவாசப்பதிபுறையும்புனிதமூர்த்தி
சேவடியைக்கண்டுபணிந்தன்றேஎன்பவவிருளைச்செகுத்திட்டேனே.

திருவாவடுதுறையாதீனமடலாயத்துவான்—தாண்டவராயசுவாமி, தன்மாணாக்கராகிய சேற்றூர்க் கந்தசாமிக்கவிராயருக்கு விவாகஞ்செய்ய வுதவிசெய்யவேண்டுமென மேலகரம் வைத்தியலிங்கக்கவிராயருக்கு எழுதிய கவி:—

தேவரெலாம்பரவுதிருக்குற்றாலச்சிவன்கதைசெந்தமிழாற்செய்த
நாவலர்தம்பரம்பரையிலுதித்தவயித்தியலிங்கநாவலோயிப்
பூவலயமுழுதுமுன்றனைபெருமையேபெருமையெனப்புகழும்வண்ண
மாவலுடன்வருகந்தசாமிநாவலன்மணத்தையணிசெய்வாயே.

இவர் கல்விடைக்குறிச்சிமடத்திற் சிலகாலம் இருந்தபோது கூறிய கவி:—

தாய்போலுந்தாம்பிரபன்னிநதியுமென்சற்குருவுஞ்
சேயானசெந்திற்பதிக்கந்தவேளுந்தினமவனை
வாயாரவாழ்த்திவருவீரபத்திரவள்ளலுமே
யோயாதென்னுள்ளத்திலுள்ளேயுறைகின்றவொண்பொருளே.

வீரபத்திரவள்ளல் - அக்காலத்துத் திருநெல்வேலியில், சிரஸ்தாருத்தியோகத்திலிருந்தவர்.

அறிவில்லாரிடங் கவிசொல்லிவருந்திய புலவர்கூறிய கவிகள்:—

வணக்கம்வருஞ்சிலநேரங்குமரகண்ட
வலிப்புவருஞ்சிலநேரம்வலியச்செய்யக்
கணக்குவருஞ்சிலநேரம்வெட்டைநாய்போற்
கடிக்கவருஞ்சிலநேரங்கயவர்க்கெல்லா
மிணக்கம்வரும்படிதமிழைப்பாடிப்பாடி
யெத்தனைநாட்டிரிந்துதிரிந்தெய்த்தேனையா
குணக்கடலேயருட்கடலேயசுரரான
குரைகடலைவென்றபரங்குன்றுளானே.

துங்கயானைக்கால்படுத்தினும்படுத்துகசுடர்விழிப்பகுவாய
சிங்கவாயிடைசெலுத்தினுஞ்செலுத்துகதென்புலத்தவர்கோமான்
வெங்கண்மாநாகத்திடைவீழ்த்தினும்வீழ்த்துகவிடையேறு
மெங்கணாயகாதமிழறியார்கண்முன்னியம்புதறவிர்ப்பாயே.

பாட்டியற்செந்தமிழ்பன்னிப்பன்னியீக்
கூட்டியதேனெனக்கோவைசெய்ததை
மோட்டர்கள்பாற்சென்றுமொழிந்தவண்ணம்வின்
ணூட்டவாமிர்தத்தைநாய்க்குவார்த்ததே.

இலக்கணம்பார்த்துப்பொருத்தமும்பார்த்தங்
கிபவரூர்பெயர்பார்த்தே
யிசைகவிசெய்துசகுனமும்பார்த்தே
யேகியவ்வூர்புகுந்தவர்வாழ்

தலைக்கடைபார்த்துச்சென்றுநின்றேங்கித்
தருவரோதாரார்கொலோவென்னச்
சார்ந்தவர்தம்மையலைவிக்காநிற்குஞ்
சகத்திலிரப்பதென்றொன்று
கலக்கமுற்றேங்கிவாடிமெய்மிடக்கிற்
கடைக்கண்பார்த்தருளவொண்ணாதோ
காமனைமுனிந்தயோகிபிரானுங்
கலியறச்செய்திடுங்கனியே
மலைக்கடலமுதேகமலைத்தாயகளே
யம்மையேவெண்ணெய்நல்லூர்வா
ழன்பரைத்தடுத்தாட்கொண்டவர்க்கருளு
மழகியமங்கைநாயகியே.

இப்படித்தெளிவித்துவாவென்றுசென்று
இலக்கியம்பார்க்கவேணு
மியல்வரவும்வேணுமொருபயல்வரவும்வேணுமுக
விங்கிதஞ்சொல்லவேணும்
வாக்கொடுநிராகத்தையொன்றுபத்தாப்புமுகி
மனதுமெய்ப்பிக்கவேணும்
வாய்வேணுமிசைவேணும்லோபியர்கண்மேற்சொன்ன
வசைசொலிக்காட்டவேணு
முரத்தொடுகடுக்கனசையப்பேசிமோதிர
முநாட்டுவிரனீட்டவேணு
முல்லாசம்வேணுமிவையெல்லாமுன்னடிமைக்
குபாயமுடன்வாராமையா
னரத்துதிசெயாமற்சிவத்துதிசெயக்கிருபை
நாடினேன்றந்தருளுவாய்
நாதர்தாந்தழுவுமுயர்வேதபாந்தவிமோன
ஞானசாந்தகியம்மையே.

சொற்கலைக்கன்னிக்குத்தந்தைசொன்றோனெங்குந்தோன்றதில்லை
நிற்கும்படிச்சுப்படிப்பவன்றுபவதரிணிதிபுந்
தக்ககொடுத்துப்புலவோர்பதிதமிழ்க்கன்னிகையின்
பொற்புறசாரதேசியர்ச்சோதரர்பேசன்றவரோ.

ஒருவர்க்குப் பிணிவந்தால் அறிவிலரும் அறிவினருங்கூறுமாறு:—

குலதெய்வக்குறையென்பான்பேய்கொண்டாடி
குறிகாரன்கன்னிவந்துகுதக்குதென்பான்
பலநோயின்வகைசொல்வான்வாகடத்தான்
பரிந்துண்ணுவினையென்பார்பாவைமார்கள்
கலகமிடுநோவலென்பான்மந்த்ரவாதி
கணிதத்தோன்கிரகசைமதன்காலமென்பா
னலகிலிவிப்படியறியார்பலர்தாஞ்சொல்வா
ருழ்வினையின்பயனென்பாருணர்வான்மிக்கோர்.

வைற்றுமலைச்சமீந்தார் தாஞ் செய்திருக்கிற சுந்தரவிலாசத்தைச் சேற்றார்ச்சமஸ்தானவித்துவான் இராமசாமிக்கவிராயரைப் பார்க்கச் சொன்னபோது கவிராயர் கூறியகவி:—

முந்தரவிலாசகலநடித்தவுபர்திருமாலைமுப்புரந்துன்
பந்தரவிலாசமதால்வென்றவனைப்பணியிதயாலயபண்பாநின்
சுந்தரவிலாசநிறைசுந்தரத்தைப்பார்த்திடலத்துறக்கவாழ்வு
மந்தரவிலாசபலையாவெனச்சொல்வார்க்கும்விருப்பாகுந்தானே.

முந்து அரவில் ஆசு அகல எனவும், முப்புரம் துன்பம் தர எனவும் பிரித்துப்பொருள்கொள்க. இரண்டாம் அடியில் விலாசம் என்பதனை வில் ஆசம் எனப் பிரித்து ஒளிபொருந்தியநகை எனக்கொள்க. அந்தரவில் - வானவில். சபலை - மின்னல்.

சென்ற ரௌத்திரிஞ மாமகத்திற் திருப்பனந்தாள் மடாதிபதி காசிவாசி சொக்கலிங்கசாமிசெய்த அன்னதானமுதலிய சிறப்புநோக்கி, சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறியகவிகள்:—

மாமகத்திலனதானமுதற்செய்சொக்கலிங்கமுனிவரனைப்போலத்
தாமகத்தின்புறவனதானஞ்செய்வார்பல்லோருந்தாவிவின்மேற்
போமகத்திபலவுமோர்கற்பகத்துக்கிணையாமோபுரவிமேத
மாமகத்தினுக்குமற்றைவேள்விகளுமிணையாமோவறிவுள்ளீரே.

குமாரகுருபரமுனிவர்செய்பலதானத்து மனங்குலவுதான
மெமர்சொல்வித்திடிபா தானஞ்சொக்கலிங்கசாமிபுரிந்திசைசிர்கண்டே
தமையுமிசையெய்தவெண்ணியவ்விருதானமும்பல்லோர் தாஞ்செய்கின்று
ரமர்கானமயிலாடக்கண்டிருந்தவான்கோழியாடுமாறே.

மிக்கசீர்க்குமாரகுருபரமேலோர்செய்
    மிளிர்காசிமுதற்றானத்தறங்கள்காக்கச்
சொக்கலிங்கமுனிவானுஞ்சாமிநாத
    சுகுணமுனிவனுஞ்சேர்ந்ததோற்றங்கண்டே
யக்கமணிபுனைந்தாவரசும்பிள்ளை
    யாருமுடன்சேரமகிழடியார்போல
விக்கடற்பூமியிற்சைவரினுமற்றோர்க
    ளெய்துமகிழ்ச்சியினையெம்மாலியம்பொணாதே.

தவவொழுக்கர்வித்தைபனஞ்சொனதானந்திருப்பணிபூதலவிருத்தி
சிவமெனுநற்குமாரகுருபரர்காசிமுதன்மடத்திற்செய்துவைத்தா
ரிவைகளிலொவ்வொன்றோரோர்முனிவர்செய்தார்நீயிங்கெலாஞ்செய்கின்று
யவரெலாமொருருவாஞ்சொக்கலிங்கசாமியுன்சீர்திகந்தானே.

எட்டையபுரம் சமஸ்தானத்தில் ஊரிலுள்ள பிள்ளைகட்குப் பாலுதவுவது கண்ட வொருபுலவர் கூறியகவி:—

ஆர்க்கின்றவண்டபகிரண்டகூடத்திற்கப்புறத்தும்
பார்க்கின்றகீர்த்திக்குமாரெட்டவேள்பண்ணைப்பாங்மகப்பால்
வார்க்கின்றபோததையேற்கின்றபேர்கையில்வள்ளஞ்சிந்தி
யீர்க்கின்றதுள்ளிகண்டாற்கடல்வீழ்வதிலைக்கண்ணனே.

எட்டையபுரத்தில் மகேசராயிருந்த ராமசாமிப்பாண்டியன் ஒரு பிள்ளையையெடுத்து வளர்த்தபோது கடிகைப்புலவரு ளொருவராகிய நமச்சிவாயப்புலவர் கூறிய கவி:—

முன்னம்பிள்ளையெனவேவளர்த்திட்ட
    முன்றவேந்தரைத்தின்றவென்வாய்தனக்
கன்னம்பிள்ளைமருந்தாயினதிதை
    யாரிடஞ்சொல்லியாற்றிடுவேனையா

தென்னம்பிள்ளைதெருத்தொறும்வைத்தது
செல்லப்பிள்ளைகள்போல்வாடக்கண்டுமே
பின்னம்பிள்ளைவளர்க்கத்துசங்கட்டு
மெங்கள்ராமசுவாமியெட்டேந்திரனே.

ஊர்க்காட்டுச்சமீந்தார் தம் கலியாணம் நிறைவேறினபின் வந்த சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் இராமசாமிக்கவிராயரை நோக்கிக் கலியாணமாகும்போதி லேன்வரவில்லை யென்றபோது கவிராயர் கூறிய கவி:—

துணையெனச்சொல்வோர்க்கருளுஞ்சிவன்சேதுராயசெயதுரைகல்யாண
மணவரையின்சிறப்பதனைப்பார்ப்பதனுக் காயிரங்கண்வான்கோனுற்றான்
குணமுடையபிரமனுமேயெண்கணுற்றான்பன்னிருகண்குமரனுற்றா
னிணைவிழியாற்பார்ப்பதனுக்கடங்காதென்றன் றுவாரா திருந்தேன் யானே.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்த பாண்டித்துரைத்தேவரவர்கள் இராமாயணத்தில் அங்கதன்றூதுப்படலத்தை யொருநாட்பிரசங்கித்தபோது சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறிய கவி:—

அரசங்கமுடையாருட்கல்வியினுமதிகனெனலாஞேனென்று
ரசங்கத்தொருமதிபோலுதித்தபாண்டித்துரைமாராசனிந்தத்
திரசங்கத்தவர்கேட்பராமகதையிலேயெடுத்துத்தேன்மேகம்போற்
பிரசங்கமழைபொழிந்தானெவ்வகையோர்களும்வியந்துபேசத்தானே.

வேடர்சேரியில் ஒருவன் கத்தூரிவிற்றதை யொரு புலவர் கூறிய கவி:—

நானமென்பதுமணங்கமழ்பொருளெனநாவினுண்குதுமென்று
றூனவேல்விழிமங்கையரணிகுவதுயர்முலைத்தடத்தென்ன
வானதங்கதுபூசினுல்வீங்கியதடங்குமோவெனக்கேட்டார்
கானவேடுவச்சேரிவிட்டகன்றனன்கடிதினில்விலைவாணன்.

திருவாவடுதுறையாதீனத்துத் தம்பிரான்சாமியொருவர் மலையாளத்தரசரைக்காணச்சென்று காண்டற்கிடங்கொடாமையாற் கூறியகவி:—

மாறிடத்துழலும்வெற்படையஞ்சிமன்னவசெந்தமிழ்மயில்யாங்
கூறுமூவேந்தர்திருமுடிதுளக்கக்குலவிஞேம்வில்லவன்கயிலை

யாறுசேர்சடையானவைமுனமெய்ம்மையணிசெய்தாருரியப்பொருட்பெண்
சிறுமென்றுணர்ந்தாய்பேயினிமதியாய்திருமுனிமலையிலேகுறுமே.

பாற்கரசேதுபதியவர்கள் பிதா முத்துராமலிங்கசேதுபதியவர்கள்மீது திருவாவடுதுறையாதீன மஹாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய செய்யுள்:—

அளந்தறியவொண்ணாதபரம்பொருளினிடத்தன்புமமையாநீதி
விளங்குபெருங்கோடாதசெங்கோலும்பல்லுயிர்க்குமேவநன்கு [ந்த
துளங்குமுழுமதிக்குடையுந்தூவாதகொடைத்தொழிலுந்தோன்றவாய்
வளர்தலையுமுகவைமுத்துராமலிங்கச்சேதுபதிமன்னன்வாழ்க.

என்வலியவான்சீர்த்திமுத்துராமலிங்கச்சேதுபதியேந்தானின்பா
ணண்ணியவர்கழறுமுனநனிகருணையாற்கொடுத்துநயக்குநின்னைப்
புண்ணியத்தின்பொருளறிந்துகொடுத்திடுங்கற்பகங்கொல்லோபொருளோமற்று
கண்ணியசிந்தாமணியோதேனுவோவிகொதல்கருதினின்றே. [ன்

ஒரு மாமகத்திலே திருவாவடுதுறையாதீனத்துக்கு வந்த சேற்றூர்ச் சமஸ்தானபதிமீது, மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களியற்றிய செய்யுள்:—

திருவியலுஞ்சேறைநகரிராசதானித்தலத்திற்றிங்கள்போல
வுருவியலுங்களிசைமுத்துச்சாமிப்பாண்டியனுயிர்களுவப்பமேவி
மருவியசுந்தரமகாலிங்கவேளமைச்சியற்றவழிநடாத்தும்
பொருவியலாவரசுரிமைக்கொப்பேதின்றியாவர்களும்புகலுவாரே.

இன்னகாரியத்தால் இன்னபாவஞ்செய்தவரென அறியலாமெனக் கூறியகவி:—

பிறந்தவரிற்சப்பாணிபித்தர்குருடூமையுடற்பெருநோயாளர்
குறைந்தகால்பெருவயிறுதட்டமிலையயனைத்தையுமேகூறக்கேண்மி
னறமழித்தார்கற்பழித்தாரரசனைக்கொன்றார்குருவினடிபோற்றாதார்
பிறன்கடையிற்றிரிந்தவர்களிவரென்றேயாகமங்கள்பேசுமாறே.

(தொடரும்.)

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான,
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௩௭௨—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

92. தாறு மாய் தறுகண் குன்றம் தட மத அருவி தாழ்ப்ப,
ஆறும் ஆய்க் கலின மா வி லாழியால் அழிந்(து)ஓர் ஆ(று)ஆய்ச்,
சேறும் ஆய்த், தேர்கள் ஓடத் துகளும் ஆய், ஒன்றோ(டு) ஒன்று
மாறு மா(று) ஆகி வாளா கிடக்கிலா மறுகிற் சென்றார்.

இ-ள். (தம்[-தெருக்களின்] இடத்திலேசெல்லும்) யானைகள் (கருமையான) பெரிய மத அருவிபொழிய (அதனால் தாம்[-தெருக்கள்]கருநிற) ஆறாகி, (அங்கேசெல்லும்) குதிரைகளின் (வெண்மையான) வாய் நுரையால் (கருநிறம்) சிதைந்து (மாறி வேறு) ஓர் ஆறாகித், தேர்கள் ஓட(ப் புழுதி கலப்புற்று)ச் சேறாகி, (திரும்பவும் தேர்கள் ஓடப் புழுதி அதிகமாகக்கலந்து) புழுதியாகி, (இவ்வாறாக) ஒருசமயநிலைமையினின்று மறுசமயநிலைமை மாறி மாறி வேறுபட்டுச் சும்மா (இருந்தபடியே ஒரு தன்மையாகக்) கிடவாத தெருக்களிலே (அவர்கள்) சென்றார்கள்.

தாறு—இரும்புமுள்; மதங்கொண்டயானைகளை அடக்க, அவைகளின் மதம்வழியும் கன்னத்துளையுட்செலுத்தப்படுவது. மாய்—மாய்க்கின்ற" முரிக்கின்ற. தறுகண்—கடுகக்கொல்லுதல் (பத்துப்பாட்டு அரும்பத அகராதி). தாழ்ப்ப—தாழச்செய்ய—சொரிய. கலினம்—கடிவாளம். மா—குதிரை. விலாழி—குதிரைவாய்நுரை. வாளா—சும்மா.

93. நெய் திரள் நரம்பின் தந்த மழலையின் நிறைந்த பாடல்,
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்,
கை வழி நயனம் செல்லக், கண் வழி மனமும் செல்ல,
ஐய நுண் இடையார் ஆடும் ஆடக அரங்கு கண்டார்.

இ-ள். (வீணைவாசிக்கும் மாதர்) நரம்பு (ஓசையோடு ஒற்றுமைப்பட, அது) போலப் பாடும் பாடலோடுகூடிய வீணை (வாசிப்பு)க்குப் பொருத்தமாய் மிருதங்கம் ஒலியாநிற்க, (நாட்டியப்)பெண்கள் (அப்பாடலின்கருத்துப் புலப்பட அபிநயிக்கும்) கைவழியே கண்கள் செல்லவும்

கண்கள்வழியே மனமும் செல்லவும் நர்த்தனம்புரியும் நாடகசாலைகளை (அவர்கள்) கண்டார்கள்.

நெய்—தேன். நெய் திரள் நரம்பு—தேன் தாரை போல உருட்சியான நரம்பு. ("நரம்பின் நான்றதேன்" அகலிகைப்படலம் ௪௪) இங்கே நரம்பு ஆகுபெயராய் அதன் ஓசையைக் குறித்தது. நரம்பின்—நரம்பின் ஓசைபோல. தந்த (பாடிக்) கொடுத்த—பாடிய. மழலையின் இயன்ற பாடல்—மழலைச்சொல்லால் அமைந்த பாட்டு. தைவரு—(விரலால்)தடவுகின்ற வீணை, ஆகுபெயராய் வீணையின் ஒலியைக் குறித்தது. ஐயறும் இடையார்— 1. (உண்டோ இன்றோவென்று) சந்தேகித்தற்குரிய மிகச்சிறிய இடையையுடைய மாதர்; 2. அழகையுடைய மிகச்சிறிய இடையையுடையமாதர். ஐயம்—சந்தேகம். ஐ—அழகு. ஐய—அழகையுடைய.

மனம், எல்லா அவயவங்களிடத்தும் சென்று, அவற்றோடுகூடி அவற்றைத் தொழிற்படுத்துவதாதலால், அது, அபிநயக்குறிகாட்டுக் கையைச்செலுத்திக் கைவழியே கண்ணைச்செலுத்திக் கண்வழியே தானும் சென்றதென்றார்.

94. பூசலின் எழுந்த வண்டு மருங்கினுக்(கு) இரங்கிப் பொங்க,
மா(சு) உறு பிறவி போல வருவது போவ(து) ஆகிக்
கா(சு) உறு பவளச் செம் காய் மரகதக் கமுகில் பூண்ட
ஊசலின், மகளிர், மைந்தர் சிந்தையோ(டு) உலாவக் கண்டார்.

இ-ள். (ஊஞ்சலாடும் மாதர்கள் அணிந்த பூமாலைகளிலிருந்து சண்டையிட்டு, அந்தச்)சண்டையினால் மேலெழும்பியவண்டுகள் (மாலைப் பாரத்தோடு தம்பாரமும் சேர்ந்தால், இடை முறிந்துவிடுமென்று) இடை (யின்மென்மை)க்கு இரங்கி (எழுந்தாற்போல) எழாநிற்க, (மாறிமாறி வரும்) பிறப்புப்போலச் செல்லுவதும் திரும்புவதுமாகிக் கமுகமரத்தி லேபூட்டப்பட்டுள்ள ஊஞ்சலிலே (இருந்து அந்த) மாதர்கள் (தம் அழகிலே யீடுபட்டுத் தம்மைவிட்டுப்பிரியாத) ஆடவர்மனத்தோடு ஊஞ்சலாட(அவர்கள்) கண்டார்கள்.

பூசல்—சண்டை. மருங்கு—இடை. இரங்கி—1. வருந்தி; 2. கருணை செய்து. பொங்கல்—எழுதல் (புறவெண்பாமாலை. அரும்பத அக

ராதி); கிளர்தல் (பரிபாடல் அரும்பத அகராதி); மென்மேற்கிளர்தல் (புறநானூற்று அரும்பத அகராதி). மாசு—குற்றம். காசு—குற்றம். மரகதக் கமுகு— 1. பச்சை (இலை)க் கமுகு; 2. "மரகதமணியாற் செய்த கமுகு". ஊசல்—ஊஞ்சல். மகளிர் உலாவ—மாதர் அலைய.

95. வள் உகிர்த் தளிர்க் கை நோவ மாடகம் பற்றி வார்ந்த
கள் என நரம்பு வீக்கிக், கண்ணொடு மனமும் கூட்டி,
வெள்ளிய முறுவல் தோன்ற விருந்(து) என மகளிர் ஈந்த,
தெள் விளிப் பாணித் தீம் தேன் செவி மடுத்(து), இனிது சென்றார்

இ-ள். (வீணைவாசிக்கும்) மாதர்கள் கூரியநகங்களையுடைய தளிர் போலும் கைவருந்த வீணை முறுக்காணிகளைப் பிடித்து (முறுக்கி), ஒழுகும் தேன் (தாரை) போன்ற நரம்பைக் கடுமைப்பட (இறுக)ச் செய்து, கண்ணும் மனமும் ஒன்றுபடச்செய்து (நோக்கி), (சிறிதே) வெண்பற்கள் தோன்ற (ப் புன்னகைசெய்து) விருந்துணவுபோல அளித்த தெளிந்த இசைப்பாட்டாகிய இனியதேனைச் செவிவாயால் உண்டு (அவர்கள்) இனிதாகச்சென்றார்கள்.

வீணைவாசிக்கும் மாதர்கள் தாம் விருந்தூட்டுவோராகக் கேட்போர் விருந்துண்போராக, விருந்தூட்டும் மனமகிழ்ச்சி வெளிப்பட உள்ளன்போடு நோக்குதலும் புன்னகையும்செய்து, வீணைவாசிப்பாகிய விருந்துணவை அவ்விருந்தினர் செவிவாயால் உண்ணும்படிசெய்தாரென்பது கருத்து.

வீணைவாசிப்போர்க்கு அவ்வாசிப்பால் இயல்பாகவுண்டாகும் மனமகிழ்ச்சியைக் காட்டும் இனியபார்வையையும் புன்னகையையும் விருந்தினரை இனிதுநோக்கிப் புன்முறுவல்புரிந்து இன்முகங்காட்டி உபசரிக்கும் குறிகளாக் கவி ஆக்கிக்கொண்ட நயம் கவனிக்கத்தக்கது.

96. வான் அரம் பொருத வேலும், மன்மதன் சிலையும் வண்டின்
கேளொடும் கிடந்த நீலச் சுருளும், செம் கிடையும் கொண்டு
நீள் இரும் களங்கம் நீக்கி, நிரை மணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும் சந்திர வுதயம் கண்டார்.

இ-ள். வேலும், வில்லும், வண்டுகளோடுகிடக்கும் நீலமலர்ச் சுருளும், செங்கிடைச்சும் தன்னிடத்தேகொண்டு மாளிகைகளின்முகப்

புக்களில் உள்ள பலகணிகள்தோறும் தோன்றும் சந்திரோதயத்தை (அவர்கள்) கண்டார்கள்.

மாதர்முகத்துக்குக் களங்கம்நீங்கிய சந்திரனும் அவர்கள் கண்ணுக்கு வேலும் நெற்றிக்கு வில்லும் முடித்தகூந்தலுக்கு நீலமலர்ச்சுருளும் இதழுக்குச் செங்கிடைச்சும் உவமம்.

வாள் அரம் பொருத வேல் - ஒளியையுடைய அரத்தினால் அராவப்பட்ட வேலாயுதம். பொருதல் - போர்செய்தல்; இங்கே தாற்பரியார்த்தமாக அராவுதலைக்குறித்தது. வண்டின் கேளொடுகிடந்த - வண்டின் உறவொடு கிடந்த - வண்டுமொய்க்கப்பட்டுக்கிடந்த. செம்கிடை— சிவந்தகிடைச்சு. நீள் இரும் களங்கம் - நீண்ட (காலமாக வுள்ள) பெரிய களங்கம். நிரை மணி மாட நெற்றிச் சாளரம் - வரிசையாகவுள்ள இரத்தினகசிதமான மாளிகைகளின் முன்பக்கத்தில் உள்ள பலகணிகள்.

பலகணிவழியாகத் தெருவில் நிகழ்பவைகளைப் பார்க்கும் மாதர் முகங்கள் தோன்றுதலைச் சந்திரோதயமென வியப்பும் நயப்பும் உறும்படி கூறினார். சந்திரன் ஒன்றே. அதுவும் பகலில் ஒளிமழுங்குந்தன்மையுள்ளது. அன்றிக் களங்கமுடையது. அவ்வாறிருக்கவும் பகலிலே ஒளிகெடாத களங்கமில்லாத பல சந்திரன்கள் உதயமாயின என்ற நயம் பாராட்டத்தக்கது.

97. மெய் வரு போகம் ஒக்க உடன் உண்டு விலையும் கொள்ளும்
பை அர(வு) அல்கு லார் தம் உள்ளமும் பளிங்கும் போல
மை அரி நெடும் கண் நோக்கம் படுதலும் கருகி வந்து
கை உறச், சிவந்து காட்டும் கந்துகம் பலவும் கண்டார்.

இ - ள். காம இன்பத்தை (ஆடவரோடு தாமும்) சமமாக அநுபவித்தும் (அதிகமாக அவ் இன்பத்துக்கு) விலையையும் வாங்கிக்கொள்கின்ற விலைமாதர்மனத்தையும், பளிங்குக்கல்லையும் போல, (மாதர்களுடைய கருமையான) கண் பார்வைபடக் கறுத்தும் (அவர்களுடைய சிவந்த) கைபடச் சிவந்தும் (தம்மைச்சார்ந்தபொருளின் நிறமாகத் தம் நிறத்தை மாற்றிக்) காட்டும் பந்துகளை (மாதர் ஆடுதலை அவர்கள்) கண்டார்கள்.

மெய் வரு - (ஐம்புலநுகர்ச்சிக்கிடமான) உடம்பினால் வருகின்ற. ஒக்க - ஏற்றம் தாழ்வு இல்லாமல். உடன் உண்டு - கூட அநுபவித்து. ‘பை அரவு அல்குலார்’ என்பதை ‘அரவுப்பை அல்குலார்’ எனக் கூட்டிப் ‘பாம்பின்படத்தையொத்த அரையையுடையார் (ஆகிய வேசியர்)’ எனப் பொருள்கொள்க. “அரை நிதம்பம் அல்குல்” (உரிச்சொல் நிகண்டு—௫௭). “கடிதடம் நிதம்பம் அரையே அல்குல்” (பிங்கல நிகண்டு—௧௦௦௨) இந்தச்சொற்கள் ‘ஜனனேந்திரியத்துக்கு மேலாகவுள்ள அவயவம்’ என்ற பொருள் குறித்தவை. ஆன்றோர், மாதர் அல்லது மைந்தர்களுடைய அவயவவருணனைசெய்யுமிடங்களில் வரும் இச்சொற்கள், சாதாரணமாகக்கருதப்படுகிறபடி, இடக்கரடக்கற்பொருள் குறிப்பனவல்ல. “அல்குல் கடிதடம் என்னும் பதங்கள் ஆண்மக்களை வருணிக்குமிடத்தும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ‘பூந்துகில் சேர்அல்குல் காமரெழில் விழலுடுத்து’ எனத் தசரதன் ராமனைநோக்கிப் புலம்புவதாகக் குலசேகராழ்வார் கூறுகின்றார். தவநிலையில்நின்ற அருச்சுனனும் வேடவடிவங்கொண்டுவந்த சிவபெருமானும் மற்போர் செய்கின்றகாலத்தில், கடிதடத்தாலும் மற்போர்செய்தாரென்று வில்லிபுத்தூரார் கூறுகின்றார்” (செந்தமிழ் 20-வது தொகுதி ௩-வது பகுதி ௨௨௫, ௨௨௬-ம் பக்கங்களைப் பார்க்க;)

வேசியர், தம்மையடைந்த ஆடவர்பால், காதல் இல்லாராயினும் உடையார்போல நடித்தலால், வேசியர்மனத்தில் இல்லாதகாதல் உள்ளதாகத் தோன்றும்; பளிங்குக்கல்லை அடுத்த பொருளின் நிறமும் அக்கல்லில் இல்லையாயினும், உள்ளதாகத்தோன்றும்; அவ்வாறே பந்துகளைச்சேர்ந்த மாதர் கண்ணிறம் கைந்நிறங்கள் அப்பந்துகளில் இல்லாதிருந்தும் உள்ளனவாகத் தோன்றின என்றார்.

இப்பாட்டின் முதலடிக்கருத்துப் பின்வரும்பாட்டில் இனிதெடுத்தாளப்பட்டிருப்பது காண்க.

அலை விழிக் கணிகை மாதர் ஆடவர் தமக்கு நல்கும்
இலை நிகர் எனும் இன் பத்திற்(கு) இன்பமும் சமமாக் கொண்டு
விலை என நிதியும் கோடல் வியப்பிற்றே! ஏற்றம் ஆக,
மலை நிகர் தனங்கள் ஈந்தோர் மலை நிகர் தனமும் கொள்வார்.

(காஞ்சிப்புராணம்—நகரப்படலம்—௫௪).

வேறு.

98. பொன்னின் சோதி போதினின் நாற்றம் பொலிவே போல்,
தென் உண் தேனின் தீம் சுவை, செம் சொற் கவி இன்பம்
கன்னிம் மாடத்(து) உம்பரின் மாடே, களி பேடோ(டு)
அன்னம் ஆடும் முன்துறை, கண்(டு) அங்(கு) அயல் நின்றார்.

இ - ள். பொன்னின் சோதியும், பூவின் மணமும், தேனின் சுவையும், கவியின் இனிமையும்போலச் சிறந்த சீதாபிராட்டியை, (அவர் வாழும் கன்னிகா) மாடத்தின்மேடையிலே, (அம்மாடத்துக்கெதிரே) பெட்டை (அன்னங்) களோடு (ஆண்) அன்னங்கள் கூடிவிளையாடுகின்ற (தடாகத்) துறைமுன் (அவர்கள் சென்றபோது) கண்டு அவ்விடத்தில் (அந்தமாடத்துக்குச்) சமீபமாக (ப் பிராட்டியாரைச் செவ்வையாகப் பார்க்கும்படி) நின்றார்கள்.

பொன்னொளி, பூமணம், தேன்சுவை, கவியின்பம் உவமானங்கள்: சீதை உவமேயம். உவமேயத்தைக் கூறாமல் உய்த்துணரவைத்தார். இவ்வாறே இப்படலம் ௫௯-ம் பாட்டில் "வில்லொடும் இழிந்ததோர் மேகம்" என உவமானமட்டும் கூறி (இராமன் ஆகிய) உவமேயத்தைக் கூறாமையை நோக்குக.

போதின் இன் நாற்றம்—பூவின் இனிய மணம். பொலிவு—சிறத்தல். 'பொலிவேபோல்'—சிறத்தல் போன்ற—சிறத்தல் போன்ற சிறப்புடைய' 'பொலிவேபோல்' என்பதைச் சோதி பொலிவேபோல், நாற்றம் பொலிவே போல், சுவை பொலிவேபோல், இன்பம் பொலிவேபோல் எனக் கூட்டிப் பொருள்கொள்க. தென் உண் தேனின் தீம் சுவை—வண்டு உண்ணும் தேனின் உருசி. எதுகைக்கு இயையத் 'தேன்' (—வண்டு) 'தென்' ஆயினது என்பர் சில உரையாசிரியர். இவ்வாறு நெட்டெழுத்துக் குற்றெழுத்தாக்கப்பட்டிருப்பது அரிதாகச் செய்யுளிற் காணப்படும். 'நீயேன்' 'கூறினும்' என்பவையிரண்டினும் முதல்நெட்டெழுத்துக் குறுக்கப்பட்டு முறையே "திருத்தார்நன் றென்றேன் றியேன்" என நன்னூல் ௫-ம் சூத்திரவுதாரணத்தினும், "கோலாற்கடாய்க் குறினும்" என நாலடியாரினும் வருதல் காண்க. 'தென் உண் தேன்' என்பதற்கு '(வண்

டின்) இசைபொருந்தியதேன்' என்றும் பொருள் கூறலாம். தென்—இசை (பிங்கலநிகண்டு—ருகூஎ௫). மாடத்து உம்பரின்மாடே—மாடத்தின் மேல் இடத்தில்-மேல்மாடத்தில்-மேல்மாடியில்-மேடையில். உம்பர்—மேல். மாடு—இடம். பேடு—பெட்டை (அன்னம்). ஆடல்—விளையாடல். 'முன்துறை' என்பது 'துறைமுன்' என்ற பொருளில், மணிமேகலையினும், ஐங்குறுநூற்றினும், பரிபாடலினும் வருகின்றது. (ஷை நூல்களின் அரும்பதவுரைபார்க்க,) 'கன்னிம்மாடம்' 'அன்னம்மாடும்' என்பவைகளில் ஓசையின்பம்பற்றி மகர ஒற்றுக்கள் மிகுக்கப்பட்டன.

'சோதிப்போதினில்' 'தேறற்றீஞ்சுவை' 'கழிபேடு' என்ற இவை பாடபேதங்கள்.

இப்பாட்டினுள், பின்னிரண்டடிகட்குப் பேதப்பட்ட பல உரைகள் உள்ளன. அவை வருமாறு :—

"கன்னிகாமாடத்தினருகில் அன்பின் மிக்க பெட்டையன்னங்களுடன் ஆணன்னங்கள் கூடிவிளையாடாநின்ற முன்றில்களைப் பார்த்து அவ்விடத்தை சமீபமாய்நின்றார்கள்" ஸ்ரீ-இராமசாமிநாயுடு.

"கன்னிமாடத்தின் மேலிடத்தில்(சீதாபிராட்டிவீற்றிருக்கின்றாள்). இளமைமிகுந்த பெட்டை அன்னங்களோடு ஆணன்னங்கள்விளையாடுகின்ற முன்னிடத்தைப்பார்த்து அவ்விடத்துக்குப்பக்கத்தில் நின்றார் எ—று."

"உபமானத்திற்கேற்ப உபமேயம் வருவிக்கப்பட்டது. 'கழிபேடோடன்னமாடும்' என்பதை உபமேயமாகக்கொள்ளலாகாதோவெனின், சீதாபிராட்டி வீற்றிருத்தலை யாண்டு மோதாமையானும், 'அன்றம்மாடத்தும்பரிக்கும் மழுதன்னள்' என்று இம்மாடத்தைச் சுட்டிக்கூறினமையானும் அன்னத்தைக்கொள்ளலாகாதென்க" ஸ்ரீ-துரைசாமிமூப்பனார்.

"பொன்னின்சோதியை, நாற்றத்தை, சுவையை, இன்பத்தை முன்றுறைக்கு அயல்மாடத்து உம்பரின்மாடே கண்டு நின்றார் என்க. சோதி, நாற்றம், சுவை, இன்பம் என்னும் நான்கும் சீதையைச்சுட்டி நின்றன. 'பொன்னினொளி பூவின்வெறி சந்துபொதிசீதம்—மின்னின் நிழலன்னவள்' என்பர் பின்னும் (கோலங்காண்—உஅ). "அன்னமாடுறையுளுக் கருகுநின் றுளையக்—கன்னிமாடத்திடைக்கண்டதும்" என்

பர் பின்னும் (நாடவிட்ட—கூள). ஸ்ரீ-அ. குமாரசுவாமிப்பிள்ளை ஸ்ரீ-த. கனகசுந்தரம்பிள்ளை.

இங்கே சீதாதேவியை விசுவாமித்திரமுனிவரும் இராமலக்குமண ரும் பார்த்தபார்வை சாதாரணமாக ஒருவரை ஒருவர் பார்க்கும் பொதுப் பார்வையென்பதும், இதன்பின் இத்திரட்டில் 110-ம் பாட்டில் "அண்ண லும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்ற இடத்தில் இராம்பிரா னும் சீதாபிராட்டியும் ஒருவரையொருவர் பார்த்தபார்வை காதற்பார் வையென்பதும் கவனிக்கத்தக்கவை.

கவி, கதாநாயகிக்கு உவமானமாகக் கூறியபொருள்களெல்லாம் மிக இனியபொருள்களிற் சிறந்தவைகளாயிருப்பதும், அவைகளை அடுக்கிக் கூறி முடிவில் அவற்றின் மகுடமாகச் 'செஞ்சொற்கவியின்பத்தைக் கூறியிருப்பதும், சொல்நயம், பொருள்நயம் ஒருங்கமைந்து இனிமை மிகுந்த அரியகவிகளை ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து அனுபவித்து ஆனந்திக்கும் அறிவாளர்க்கு அளவிறந்த அகமகிழ்ச்சியை அளிப்பன வாம். இதுவரையும் மிதிலைநகரிலே பல இனியகாட்சிகளைக்கண்டு கொண்டு ஓரிடத்தும் நில்லாமற் சென்றவர்கள், இப்போது சீதாபிராட் டியைக்கண்ட காட்சிநிகழ்ந்த இடத்தில் நின்றாரென்றதனால், அந்தக் காட்சி தன்னைக் காணலுற்றார் அவசமாய்ப் பிரமித்து நிற்கச்செய்யும் நவியினிய அதிசயற்புதக்காட்சியாமென உய்த்துணரவைத்தார்; அன்றி, நின்றவர் சென்றாரென்றால், சென்றவர்காணும் வேறுகாட்சிகள் கூறற் பாலனவாய், இப்போது பிண்டமாகக்கூறிய கதாநாயகிவருணனை விரி வாய்க்கூறற் கியலாதாமாதலால், அவ்வாறு விரித்துக்கூறுதற்கு அவகா சம் அமைத்துக்கோடலும் செய்தாரெனக.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

இரண்டாம் ராஜாதிராஜன்.

மத்தியகால சோழவரசர்பரம்பரையிலே விஜயாலயன்முதல் மூன்றும் ராஜேந்திரன்வரை 24 தலைமுறைகள் சோழஅரசர்கள் ஆண்டதாகக் கல்வெட்டுக்கள், செப்புப்பட்டயங்கள்மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ராசாங்கச் சிலாசோதகர்கள் அவ்வவ் வருடத்திற் கண்டெழுதும் சாசனங்களின் முடிவை யப்படியப்படித் துண்டுதுண்டாக எழுதினார்களேயன்றிக் கோவைப்பட எழுதினார்களில்லை. அப்படிச் சிதறுண்டுகிடந்த விடயங்களை வரிசையாகக் கிரமப்படுத்தினோர் இருவராவர். அவர்களுள் இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகச் சரித்திரப்போசிரியராயிருக்கும் ஸ்ரீமத்: Dr. எஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் ஒருவர். இவர்கள் வெகுகாலத்துக்குமுன்னரே தென்னிந்தியாவில் சோழராஜ்யம் ["The Chola Empire in South India"] என்ற தலைப்போடு ஆங்கிலத்தில் ஒரு உரைநடை எழுதிவெளியிட்டுள்ளார்கள். மற்றொருவர் சென்னை அரசாங்கத்தில் உதவிக் கல்வெட்டுப் பரிசோதகராயும் பின்னர்த் திருவாங்கூர்ராஜ்ய சிலாசாசனபரிசோதகராயுமிருந்த T. A. கோபிநாதராயரவர்களாவர். இவர் 'செந்தமிழ்' வாயிலாகவே சோழவம்ச சரித்திரச்சுருக்கம் என ஒன்று எழுதி அதனிறுதியிலே அவரவர்களது சரித்திரங்களைவிளக்கும் மெய்க்கீர்த்திகளில் ஒவ்வொன்றும் சேர்த்து வெளியிட்டுள்ளார். இவைகளே இப்பொழுது தமிழகத்தில் மத்தியகால சோழவரசர்பரம்பரைகளைக்கூறும் ஒழுங்கான நூல்களாம்.

இவ்விருநூல்களும் தொகுத்துச் சுருக்கக்கூறு நூல்களாகையாற் சில அரசர்கட்குப்பின் சில அரசர்கள் நேர்முறையில் எவ்வாறு வந்தனரென்று சொல்லவில்லை. அன்றியும், அதற்குற்ற ஆதாரங்களும் சாதனங்களும் இன்னும் போதுமானபடி அகப்படவுமில்லை. உதாரணமாக, விஜயாலயன்வமிசத்தார் வீரராஜேந்திரனவரையில் ஆண்டிருக்க இவ் வீரராஜேந்திரனுக்குத் "தயரதத்தன்புடைமக்களிருக்கக்"* கீழைச்சளுக்

* S. I. I. Vol. III.

கிய வமிசத்தானான ராஜேந்திரனெனும் குலோத்துங்கன் எவ்வாறு சோழசிங்காதனமடைந்தனன் என்று விளக்கமாகக் கூறப்படவில்லை.

கலிங்கத்துப்பரணியிலே,

"ஒருகளிற்றின்மேல்வருகளிற்றையொத்
துலகுயக்கொளப்பொருதுகொப்பையிற்
பொருகளத்திலேமுடிகவித்தவன்
புலிகவிப்பதோர்குடைகவித்ததும்" ×27.

என்பது ராஜேந்திரசோழன் மகனாகிய ராஜேந்திரனை. இவன் ராஜராஜ னென்று முடிசூட்டப்பட்டான் † இவனுக்குப்பின்னர்,

"பனுவலுக்குமுதலாயவேதநான்கிற்
பண்டுரைத்தநெறிபுரக்கிப்பழையர்தங்கள்
மனுவினுக்குமும்மடிநான்மடியாஞ்சோழன்
மதிக்குடைக்கீழறந்தளிர்ப்பவளர்த்தவாறும்" ×28.

என்று காணப்படுகிறது. இதன் பொருளாவது:– "நூல்கட்கெல்லாம் தலையாய இருக்கு, யசுசு, சாமம், அதர்வணமென்கின்ற வேதங்கள் நான் கினும் முற்காலத்திற்சொல்லிய முறைப்படி அரசாட்சிவிளங்கச் செங் கோல்செலுத்திப் பழையர்குடியில்வந்த பாண்டியர்க்கு அரசனாக இருக் கும்(பழையர்‡ தங்கள் மனுவினுக்கு) மும்மடிச்சோழன் § அரசுகட்டி லேறினகாலத்து நான்மடிச்சோழனாகி, அவனது வெள்ளிதான குடை நிழலிலே தருமநெறிபிறழாது நடந்தவிதமும்" என்பதாம். இவனை ராஜமகேந்திரனென்றும், இவன் ராஜேந்திரனதுமகனென்றும் டாக்டர் ஹுல்ஷ்துரை முதன்முதலாகக் கூறினர். ¶ அவரைப் பின்பற்றியே மற்றையோரும் கூறிச்சென்றனர்.

ராஜேந்திரன் என்னும் இரண்டாம் ராஜராஜனது அச்சிட்ட மணி மங்கலத்துக் கல்வெட்டொன்று,.........."திண்கலிபெயர்த்து, தன்சிறிய

† S. I. I. Vol. III. P. 33. இவனை இரண்டாம் ராஜராஜனென்று சொல்லவேண்டும்.

‡ பழையன்மாறன் என்பதுபோன்ற தொடர்களை நோக்குக.

§ I B. I D. P. 60 Line 2.

¶ S. I. I. Vol. III. P. 196.

தாதையாகிய எறிவலி கங்கைகொண்டசோழனைப் பொங்கிகல் இருமடிச் சோழனென்றும், பெருமுரட்டன் தன்திருத்தம்பியர்தம்முள் வென்றி கொள் மும்மடிச்சோழனை தெம்முனையடுதிறற் சோழபாண்டியனென்றும் கோழிமன்றேடுகழல் வீரசோழனைப் படிபுகழ்கரிகாலச்சோழனென்றும், பொருதொழில் வாள்வலித்தடக்கை மதுராந்தகனைச் சோழகங்கனென் றும்தோள்வலிமேவு இகல்பராந்தகதேவனைச்சோழவயோத்தியராஜனென் றும், தயாதத்தன்பொடு கருதுகாதலருள் இத்தலப்புகழ் ராஜேந்திர சோழனை உத்தமசோழனென்றும், கொத்தணி முகையவிழலங்கல் முடி கொண்டசோழனைச் சுந்தரசோழனென்றுஞ், செந்தமிழ்ப்பிடி கவிரட்ட பாடிகொண்ட சோழனைத் தொல்புவியாளுடைச் சோழகன்னகுச்சிய ராஜ னென்றும்*" என்று கூறுவதாலே, இவ்வாசனது (ராஜேந்திரனது) இளவலான மும்மடிச்சோழனே பாண்டிநாட்டிலே சோழப்பிரதிநிதியாக விருந்து அரசாட்சிசெய்து, பின்னர் நான்மடிச்சோழன் என்றபேரோடு அரசாண்டனன் என்பது விளங்கும். இதுவே கலிங்கத்துப்பரணிக் கும் ஒற்றுமையுடையதாகக் காணப்படுகிறது.

இவனுக்குப்பின்னர் அரசாண்டவனைக் கூறும்போது, கலிங்கத் துப்பரணியில்,

"குந்தளரைக்கூடற்சங்கமத்துவென்ற
கோனபயன்குவலயங்காத்தளித்தபின்னை
யிந்தநிலக்குலப்பாவையிவன்பாற்சேர
வென்னதவஞ்செய்திருந்தாளென்னத்தோன்றி" ×29.

என்று காணப்படுகிறது.

குந்தளரைக் கூடற்சங்கமத்து வென்றவன் வீரராஜேந்திரனுவான். இவனே வீரசோழன், வளவநாராயணன், விக்கிரமசோழன் எனப் பல பேர் படைத்தவன். வீரசோழியம் என்றநூல் இவன் பேராலே செய் யப்பட்டது. இவன் ராஜேந்திரனது இரண்டாவது தம்பி என்பது முன்னர்க்காட்டிய மணிமங்கலத்துக் கல்வெட்டாற் பெறப்படுகிறது.

* S. I. I. Vol. III. No. 29.

இந்தச்செய்யுளின் பின்னடியிற்கண்டவனைப்பற்றி இப்பொழுது ஒன்றும் திட்டமாய்ச் சொல்வதற்கில்லை. இவனைப்பற்றியும் இவ்வடியைப்பற்றியும் ஆராய்ந்து சொல்லவேண்டியிருக்கிறது. இதற்குமேலுள்ள 32-வது செய்யுளில்,

"எழுநிமற்றதனைசெய்தவர்கள்செய்பிழையெலா
மெமர்பொறுக்கவெனவிப்படிமுடித்தவிதனைத்
தொழுதுகற்றனமெனத்தொழுதுசொல்லுமளவிற்
சோழவம்சமிதுசொன்னவறிவென்னவழகோ"

என்று காணப்படுகிறதுகொண்டு சுத்தசோழவமிசமான விஜயாலயன் வமிசம் முடிவுபெற்றதெனலாம்.

இனி, கீழைச்சளுக்கியான குலோத்துங்கன் எவ்வாறு சோழஅரசு கட்டிலேறினன் என்பதற்கு இதுவரை போதுமான ஆதாரமென்றுங் கேட்டிலேம். முன்னர்க் கூறியதுபோலவே, இச் சோழசளுக்கியான* குலோத்துங்கனது வம்சமும் இரண்டாம்ராஜராஜனென்று இப்பொழுது வழங்கிவரும் திரிபுவனசக்கரவர்த்திகள் ராஜராஜனோடு முடிவடைந்ததாகக் காணப்படுகிறது. இத் திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜராஜ தேவர்க்குப்பின்னர் ராஜாதிராஜனென ஒருவன் அரசாண்டனனென்றும், அவனுக்கடுத்தவனே மூன்றாங்குலோத்துங்கனென்றும் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

ராஜாதிராஜனைப்பற்றி இதுவரை யாதொன்றும் திட்டமாகத் தெரியவில்லை என்று கோபிநாதராயரவர்கள் தமது சோழவமிச சரித்திரத்தில் நன்கு கூறிப்போந்தனர். சிலாசாசனபரிசோதகர்களோ இவன் ராஜராஜனுக்குத் தம்பியாக விருக்கக்கூடுமென ஊகிப்பதாகச் சரித்திர ஆசிரியாண்பரொருவர்மூலமாக வறிந்தேன். டாக்டர் ஹுல்ஷ் தென் இந்தியக்கல்வெட்டுக்கள் மூன்றாந்தொகுதியில் (பக். 206)பின்வருமாறு எழுதுகிறார்:—

*குலோத்துங்கன் கீழைச்சளுக்கியான ராஜராஜனைத் தகப்பனாகவும் கங்கைகொண்டசோழனது மகன்வயிற்றுப்பெண்ணைத் தாயாகவும் உடையவனாகையால் இவனைச் சோழசளுக்கி என்றும்,

i. 1898-99-ம் ஆண்டு விண்ணப்பபத்திரத்தில், திருவாளர் வெங்கையா அவர்கள், (இலங்கைச் சரிதத்தைக்கூறும்) மஹாவமிசம் 76, 77-வது பந்தியிற் கூறப்பட்ட இலங்கையதிபன் பராக்கிரமபாஹுவின் மதுரைப்படையெடுப்பு இரண்டாம் ராஜாராஜனுடைய ஆட்சியில் ஏற்படுகிறதென்று காட்டியிருக்கின்றார். இந்தப்போரில் மதுரை ஆட்சிக்கு இருவர் நின்றனர். அவருள், பராக்கிரமபாண்டியனின் புதல்வனான வீரபாண்டியன் சிங்களரால் உதவிசெய்யப்பட்டுநிற்க, குலசேகரன் சோழர்களது உதவியைப் பெற்றான். மூன்றாங்குலோத்துங்கனால், தோற்கடிக்கப்பட்டு அவமானமடைந்த வீரபாண்டியனாகவே இவன் இருக்கலாமென்றும், ராஜாதிராஜனால் உதவிசெய்யப்பட்டவனும், குலசேகரதேவனது பின்னோனும், மூன்றாங்குலோத்துங்கனின் உதவியை அடைந்தவனும் விக்கிரமபாண்டியனா யிருக்கலாமென்றும் திருவன் வெங்கையா சொல்வது தகுதியாக விருக்கலாம்.

ii. மேலேகூறியவை ஒப்புக்கொள்ளப்படுமானால், சோழ அரசர்களில் ராஜாதிராஜன் மூன்றாங்குலோத்துங்கனுக்குமுன் அடுத்து ஆண்டவனென்றாவது முன்னோர்களில் ஒருவனென்றாவது ஏற்படும். இவர்கள் இருவரும் (குலோத்துங்கன் III-ம் இராஜாதிராஜனும்) ஒருவருடன் ஒருவர் சேர்ந்தவர்களென்பது மூன்றாங்குலோத்துங்கனின் 17-ம் ஆண்டுக் கல்வெட்டொன்றின் முதலும், ராஜகேசரிவர்மன் திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜாதிராஜனுடைய ஏழாம் ஆண்டுக்கல்வெட்டின் (262 of 1902) மெய்க்கீர்த்தியும் ஒன்றாயிருப்பதுகொண்டு தெளியப்படும். இவ்விருஅரசர்களையும் இணைக்கும் மற்றொரு குறிப்புப் பின்வருமாறு:— இவ்விராஜகேசரிவர்மன் ராஜாதிராஜதேவனின் 11-ம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் (3 of 1899) கடல்சூழ்ந்த பார்மாதரும் என்று ஆரம்பித்து மதுரையும் ஈழமுங்கொண்டருளின என்று காணப்படுவது பின்னரும் குலோத்துங்கனுடைய மெய்க்கீர்த்தியிலும் காணப்படுகிறது.

iii. "கடல்சூழ்ந்த பார்மாதரும்" என்று ஆரம்பமாகும் 6 கல்வெட்டுக்களில் 4-ல் இவன் ராஜகேசரிவர்மன் என்றழைக்கப்படாமல், பரகேசரிவர்மனெனப்படுகின்றான். இந்நான்கினுள் ஒன்றில் ராஜாதிராஜனுடைய 8-ம் ஆண்டு இரண்டாம் ராஜாராஜனுடைய 19-ம்* வரு

*One of these 4 inscriptions shows that the 8th year of Rajadhi Raja II was about 15 years later than the 19th year of Raja Raja II, as will appear from the following extract.

ஷத்திற்குச் சரியென்றும், அதாவது 15 வருடம் பின்னென்றும் காட்டும். அது,

"1. ஸ்வஸ்திஸ்ரீ கடல்சூழ்ந்த பார்மாதரும்............கோபாகேசரி பன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜதேவற்குயாண்டு (எட்டாவது) அவது கார்த்திகைமாஸத்து முதற்றியதி நாள் உடையார் (உ) ராஜாதிராஜதேவற்கு யாண்டு ம (கூ) † வது தைமாஸமுதல், திரிபுவன சக்கரவர்த்திகள் ராஜாதிராஜதேவற்கு யாண்டு 8-வது ஐப்பசி மாசம்வரை யாண்டு பதினைஞ்சில்."‡ என்பதாம்.

iv. "ஆகையால் ராஜராஜன் II ராஜாதிராஜன் II-க்கு முன் அடுத்தவனுகவாவது முற்பட்டவர்களில் ஒருவனுகவாவது இருக்க வேண்டும்" ஆகவே யான் முன்னர்க்குறித்தபடி ராஜாதிராஜனைப்பற்றியவை ஐகமேயாம்.

ஆயினும் சேதுஸமஸ்தானவித்வானுன ஸ்ரீ உ. வே. இராகவ ஐயங்காரவர்கள் தமது "'கூத்தரும் குலோத்துங்கன்கோவையும்' என்ற ஆராய்ச்சியில் (செந்தமிழ்த்தொகுதி III) சங்கரசோழனுலாவில், சங்கமன் என்பானுக்கு நல்லமன் குமாரமகீதரன், சங்கரன் எனப்பட்ட மூவரும் புதல்வராவார்" என்றூர்கள். மேல் "முன்னுயகரில் அவன் ....தவம்போல்" எனக் கூத்தர்பாடிய மூன்றுவதுலாப்பெற்ற ராஜராஜன்முதலாகிய பலர்க்குப்பின்னே, சங்கமாசனைக்கூறி அவனுக்குப் புதல்வர் மூவரென்றுகூறிச் சென்றூர்கள்; அவர்கள் எடுத்துக்கொண்ட விடயம் இதுவல்லவாகையான் இதுபற்றியவர்கள் ஆராய்ந்தார்களில்லை எனல்வேண்டும்.

---

†க என்பது ஹூல்ஷ்துரையால் பூர்த்திசெய்யப்பட்டது. 15 வருடம்மூந்தியதென்றிருக்கவேண்டும் என்பதைப் பின்னர்க் காட்டுவேன்.

‡ ராஜாதிராஜன் இரண்டாம் ராஜராஜனுடைய எட்டாம் ஆண்டில் அரசாளத்தொடங்கிஞன்; ஆயினும், இவன் ராஜராஜன் இறந்த 4 ஆண்டு கழித்தே பட்டாபிஷேகம் செய்யப்பட்டதால் இச் சாஸனத்திற்கண்ட வருடங்கள் முறையுடையனவே. ராஜாதிராஜனுடைய பட்டாபிஷேகஆண்டு ராஜராஜனுடைய 12-ம்ஆண்டாகையால் அதிலிருந்தஎட்டாண்டெக்குப் பத்தொன்பதாண்டாகும்; ஆனுலும் மூன் 19-ல் ஒன்பது என்று ஹூல்ஷ்துரையால் பூர்த்திசெய்யப்பட்டிருப்பது பின் காணும் 15 கொண்டும் இனி எழுதப்பெறும் கல்வெட்டுக்கொண்டும் 15 என்றே இருக்கவேண்டும்.

இனி, முற்கூறிய சங்கரசோழனுலாவிலே,

கூடியசீர் தந்தவென்றெடுத்தகூத்தனுலாச்
சூட்டியவிக்கிரமசோழனும்— பாடிய
வெள்ளைக்கலியுலாமாலையொடுமீண்டுமவன்
பிள்ளைத்தமிழ்மாலைபெற்றோனுந்— தெள்ளித்தம்
முன்னுயகரிலவன்முதலாக்கண்ணிதோறும்
பொன்னுயிரஞ்சொரிந்தபூபதியு— மென்னுமிவர்
மாசக்ரமேருவலஞ்சென்மகாசல
பூசக்ரமேழும்புரந்ததற்பின்— நேசம்

... ...

பணியுமருகுலம்பாற்கடலீன்ற
மணியுமமுதமுமானக்— குணபா
லுவந்தவளவர்குலவசலத்துச்சி
நிவந்தபரிதிநிகர்ப்ப— அவந்திமன்
வங்கமன்கங்கமன்னுதித்தன்வந்தித்த
சங்கமன்றொல்லைத்தவம்போலப்— பங்கா
யெழுந்திகிரிவெற்பையெனத்திகிரியுந்தன்
செழுந்திகிரியின்றிமிரந்தீர்ப்ப— மொழிந்தனைத்தும்
வல்லவனுதிமனுவினுமேதக்க
நல்லமனென்கின்றநாயகற்குந்— தொல்லை
மலைக்குங்கடற்குநடுமண்முழுதுங்காத்துச்
சிலைக்கும்பாதாளத்தைச்சீறித்— தொலைத்துப்
பருந்துநிழற்பந்தர்ப்பல்லாயிரம்பேய்
விருந்துகளிப்பவிடுத்துக்— கருந்தலையின்
குன்றுகுவித்துக்குவித்தபிணக்குவடு
சென்றுகுருதித்திரைமிதிப்ப— வென்றதற்பின்
பைத்தபொருபுலியைப்பல்கோடிவேந்தணிய
வைத்தகுமாரமகீதரற்கு— மெய்த்துணையாத்
தோற்றியசங்கரராசன்."

என்று காணப்படுகிறது. 'சீர்தந்த' என்ற தலைப்பையுடைய உலாவைப்பெற்றவன் விக்கிரமசோழன். உலா, மாலை, பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களைப்பெற்றவன் இரண்டாங்குலோத்துங்கன். கண்ணியொன்றிற் காயிரம்பொன்கொடுத்தவன் ராஜராஜன். இப்படி இவர்கள் திரிபுவனசக்ரவர்த்திகளாய்ப் பூசக்ரம் நடாத்தியபிறகு, வளவர்குலத் தலைவனான, சூரியனை நிகர்த்த, அவந்திநாட்டரசன், வங்கதேசாதிபதி, கங்கநாடாள்வானான ஆதித்தன்முதலாயினோர் போற்றும் சங்கமன் என்னும் இயற்பெயரினை யுடையோன்; வல்லவன்; ஆதிமனுவைவிடமேலான நல்லவரசன் என்று பேர்பெற்றவர்க்கும் அவன்மகனான குமாரமகீதரற்கும் தலையாய் நின்றவன் சங்கரன் என்று காணப்படுகிறது.

இக்குமாரமகீதரன் குமாரகுலோத்துங்கன் என்றும், மகீதரனென்றும், சங்கமராஜகுலோத்துங்கனென்றும் வழங்கப்படுவான் என்பது குலோத்துங்கன்கோவையை வாசிப்பார்க்குப் புலனாம். அவற்றிற் சில காட்டுதும்.—

" கூறுஞ்சிலைக்கைக்குமாரகுலோத்துங்கன்கோழிவெற்பில்" 38

" வாமாநகுலன்குமாரகுலோத்துங்கன்வாழுறந்தை" 53

" களந்தோடினரைக்கொல்லேனெனுஞ்சொற்குமாரகுலோத்துங்கன்" 89

" சங்கமராஜகுலோத்துங்கன்சோழன்வெற்பில்" 40

"சங்கமராசகுலோத்துங்கன் கோழிவெற்பில்" 41

" அண்டமெலாங் கோனகுஞ்சங்கமன்முன்னோன்குலோத்துங்கன்" 42

என்பனஆதியவாம். உலாவிற்கண்ட குமாரமகீதரனும் கோவையிற்கண்ட குலோத்துங்கனும் ஒருவனே என்பது வெகுகாலமுன்னரே தீர்மானிக்கப்பட்டது. (செந்தமிழ் III) இவன் குலோத்துங்கன் என்னும் பேர் தரித்தவரசர்களில் மூன்றாமவன். இந்த மூன்றாங்குலோத்துங்கனுக்கும் இரண்டாங்குலோத்துங்கனுக்கும் நடுவே இரண்டாங்குலோத்துங்கனுக்குப்பிறகு இராசராசன் ஆண்டானென்று ராஜராஜதேவருலாவாலும், சங்கரசோழனுலாவாலும்பெறுவதோடு, இவனுக்குப்பின்னர்ச் சங்கமராசனென் றொருவன் ஆண்டனனென்று சங்கரசோழனுலாவாலும் பெறுகின்றும். இவன் யாரென ஆராயவேண்டுவதுதான் நமது முக்கியநோக்கமாகும்.

தமிழ்நூல்களிற்கூறிய சரித்திரங்களெல்லாம் உண்மைக்குமாறான தல்லவென்று இப்பொழுது தெரிந்துவருவதால் இச் சரிதவிடயமும் தவறாகக்காண நியதியில்லை. டாக்டர் ஹுல்ஷ் துரையும் குலோத்துங்கனையடுத்தோ அவற்குமுன்னோ ராஜாதிராஜனென ஒருவன் ஆண்டிருக்கவேண்டுமென்றும், அவனுக்கு முன்னும் ராஜராஜன் ஆண்டிருக்கவேண்டுமென்றும் ஊகித்துள்ளார்களென முன்னர்க் காட்டினும். சங்கரசோழனுலா இவ்விடயத்தில் நமக்குப் பெரிதும் உபகாரமாகநிற்கிறது; எனினும், இதனில் பூசக்ரமேழுமபுரந்ததற்பின் என்ற பகுதிக்குப் பின்னர்ச் சில அடிகள் ஏட்டிற் சிதைந்திருக்கவேண்டுமென ஊகிக்கவேண்டியிருக்கிறது. அவ்விடத்தில், பொருள் சரிவரப் பொருந்துமாறில்லை என்பதை ஊன்றிநோக்கவேண்டுகிறேன். உலாவில் சங்கமராசன் என்றும் கல்வெட்டுக்களில் ராஜாதிராஜனென்றும் இருக்கும் பேர்வேற்றுமையை யொற்றுமைப்படுத்த யான்கண்ட *பல்லவராயப்பட்டுக்கல்வெட்டுப் பெரிதும் பிரயோஜனமாகிறது.

அன்றி, ராஜராஜனும் ராஜாதிராஜனும் சகோதரர்கள் எனக் கல்வெட்டுப் பரிசோதகர்கள் கொள்வது ஏலாதோவெனில், இவர்கள் சகோதரர்களாயின், அங்ஙனமே கல்வெட்டுக்கள் கூறும். இதற்கு ஆதாரம் இவ்வுரைநடையின் முதலில் ராஜேந்திரனது கல்வெட்டுக்களிலிருந்து காட்டப்பட்டிருக்கிறது. அப்படி இல்லாவிட்டாலும் குலோத்துங்க சோழனுலாவிலே, இக் குலோத்துங்கனுக்குப் பலபிள்ளைகளிருந்தனவென்று படித்தோமில்லை. அல்லது ராசராசதேவருலாவாவது சங்கர சோழனுலாவைப்போன்று உதவிசெய்யத்தகுந்த துணைவனொருவன் இருந்தானென்று கூறவுமில்லை. இவைகளாலும் யான்கண்ட பல்லவராயப்பட்டுக் கல்வெட்டினாலும் இது பொருந்துமாறில்லை என்பது ஒருதலை.

இப்பல்லவராயப்பட்டுக் கல்வெட்டினால் ராஜராஜனுக்குப் பட்டமெய்துவதற்குமுன் இவனது பாட்டனான விக்கிரமன்பேர் இடப்பட்டிருந்ததென்றும் இவன் எரிந்து கோயிற்கண் (அரண்மனையில்) கிடந்தானென்றும், கலியாணமாகாது இறந்தானென்றும், இறக்குமுன்னர்,

---

* இது மாயூரத்துக்கு வடக்கே ஒருமைல் தூரத்திலுள்ளதொரு ஊர். இக் கல்வெட்டுமுழுவதும் எடுத்தபிறகு வெளியிடப்படும்.

எரிந்துகோயிற்கிடந்தபொழுது இறை ஆகும்படி தனது மாபெருந் தண்டநாயகனை திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிக்குக் கட்டளையிட்டானென்றும், இறக்கையில் அத்தண்டநாயகனைக்கொண்டே சோழமாளிசத்திலேயே ஒருபிள்ளையைக்கொண்டு வந்து திருஅபிஷேகம் பண்ணுவிக்கும்படிக்கும், அவனுக்கு ராஜாதிராஜனென்று பட்டமிடும் படிக்கும், கட்டளையிட்டானென்றும் தெரிகிறது. இதனோடு நில்லாது பாண்டியநாட்டுக் குலசேகரதேவர் பாண்டிய அரசாட்சியைத் தான் அடைவதன்பொருட்டு உதவிவேண்டியதும் விளங்க வெட்டப்பட்டிருக்கிறது. இக்கல்வெட்டு இடையிடையே சிதைந்திருந்தபோதிலும் வேண்டிய அளவு விடயங்கள் காணப்படுகின்றன.

இனி இக்கல்வெட்டிற்கூறிய ராசராசதேவர் இவர்தான் என்பதும், ராஜாதிராஜதேவர் இவர் பின்னவர்தானென்பதும், இவ்விருவருடைய கல்வெட்டுக்களும் ஒரேமெய்கீர்த்தியோடு காணப்படுகின்றனவென்று டாக்டர் ஹுல்ஷ்சொல்லுவதாலும், அவர்கொடுத்த சாசனமொன்றால் இவ்விராஜாதிராஜன் அரசாட்சி ராஜராஜனுக்கு எட்டு வருடம் கழிந்து எனது காணப்படுவது பல்லவராயப்பட்டுக்கல்வெட்டால் நிச்சயப்படுவதாலும் தெரியலாம். மேலும், இவ்விராசராசனது பதிப்பிக்கப்பட்ட கல்வெட்டொன்றைக் கீழே குறிக்கிறேன்.

"பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜயமாதும், நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க, அருமறைவிதியனைத்தும் அருந்தமிழும் தனிதழைப்ப, வருமறை உரிமையின் மணிமுடி சூடித், திங்கள் வெண்குடைத் திசைக்களிறெட்டுந், தங்குதனித்திடந்தானென விளங்கக், கருங்கலிப்பட்டியைச் செங்கோல்வரப்ப, பொருவலியாழி புவிவளர்ந்துடன்வர, வில்லவர் தெலுங்கர் மீனவர், சிங்களர், பல்லவர் முதலிய பார்த்திவர் பணிய, எண்ணருங்கற்ப மண்ணகம் புணர்ந்து, செம்பொன் வீரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோ பரகேசரிபன்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ-ராஜராஜதேவற்கு யாண்டு எட்டாவது (S. I. I. III. 79.)

யான்கண்ட இவருடைய பத்தாம்வருடக்கல்வெட்டுப் பின்வருமாறு:—

ஸ்வஸ்திஸ்ரீ பூமருவிய திருமாதும் புவிமாதும் ஜயமாதும், நாமருவிய கலைமாதும் புகழ்மாதும் நயந்துபுல்க, அருமறை நெறி விதியனைத்து

மருந்தமிழுந் தனிதழைப்ப, வருமுறை உரிமையில் மணிமுடி சூடிக், திங்கள் வெண்குடைத் திசைக்களிறெட்டிந், தங்குதனித் திடந்தானென விளங்கக், கருங்கலிப்பட்டியைச் செங்கோல் துரப்பப், பொருதுகதிராழ் புவிவளர்ந்து மாறுடன்வர, வில்லவ, மிரட்டர், மீனவர், சிங்களர், பல்லவர் முதலிய பார்த்திபர் பணிய, எண்ணருங்கற்ப மண்ணகம் புணர்ந்து (இதன்மேல் உள்ள கல்லில் ஒருபாகம் வெட்டிஎடுக்கப்பட்டிருக்கிறது. மேலே) வம்மரான திரிபுவந சக்ரவத்திகள் ஸ்ரீராஜராஜதேவற்கு யாண்டு பத்தாவது, ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைகுளத்தூர் மான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியானேன் ராஜ ராஜ வளநாட்டுத் திருவிந்தளூர்நாட்டுக் குளத்தூரி (உ)ல் எழுந்தருளுவித்த உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் என........"

என்று போகிறது. இக்கல்வெட்டு வெட்டியிருக்கும் இடத்திற்கு மேல் புறமாகவுள்ள ராஜராஜனது எட்டாம் வருஷத்ததாகக் காணப்படும் கல்வெட்டைக் கிடைத்தவரை கீழே குறிக்கிறேன்.

(வரி 4)"வீரஸிம்ஹாஸநத்து உலகுடை முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய கோராஜகேசரி பன்மரான சக்கரவர்த்திகள் ஸ்ரீராஜாதிராஜ தேவற்கு யாண்டெட்டாவது (5) ஜயங்கொண்ட சோழமண்டலத்து ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்றநாட்டுக் காரிகைக் குளத்தூருடையான் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பியான பல்லவ (6) ராயர் பெரியதேவர் ராஜராஜதேவர் எரிந்து கோயிற்கிடந்தும் அவர்க்குத் திறை ஆம்படி நியாயம் உள்ளிட்டதுறைகளுக்குமாய் முதலிகள்......................காரியத்துக்கும் (7) கடவமாய்; எ(ல்)லா வரிசைகளும் முன் எ (ன்) கிலே உள்ளிட இ முதலிகள் பெறக்கடவ வற்றங்களும் பெற்றுநின்று பேசிவித்தருளி பிள்ளை ஒன்று கோடுபோந்து [8-9 வரிகள் உடைந்து சிதைந்துவிட்டன] (10) வேண்டியபத்து.... ....தேவர் சீவித்தநாளிலே திருஅபிஷேகத்துக்கு உரியன பிள்ளைகள் இன்றி உடையார் விக்கிரமதேவர் போனர், (11) நாட்டிலே.....................க்குமன் நாளிலே காரியமும் இருநதபடி............ ....செய்து கங்கைகொண்ட சோ(ழர்)அருளி..... ....இருக்கிற பிள்ளை..................(12) நெறி உடைபெரும்.........................திருமகனர் எதிரி மேருமா...பெரி....இந்தப்படி அருளினநாளிலே பண்டை நாளில் இருந்தவாறே இவரைத் திருஅபிஷேகம் பண்ணுவிக்கக் கடவராக. நாலாந்திருநக்ஷத்திரத்திலே ராஜாதிராஜதேவர் எ(13)ன்று திருஅபிஷேகம் பண்ணுவித்து உடன் கூட்டமும் நாடும்.......... ....ய பட்ட இச்செல்லும்படி................"

என்று காணப்படுகிறது. இக்கல்வெட்டிலிருந்து இந்த ராஜாதிராஜன் ராஜராஜனுடைய எட்டாம்வருடத்தில் அரசாளத்தொடங்கினனென்

றும், இவன் ராஜராஜனுக்கு ஒருவிதத்திலும் உறவுடையவனல்லவென்றும் இவன் ராஜராஜன் இறந்த 1-வது வருஷத்தில் முடிசூட்டப்பட்டான் என்றும் தெரியவருகிறது. இந்த நாலுவருஷம்வரையிலும் ராஜராஜதேவர்போரலேயே ஆண்டுவந்தனன் என்பதும் மற்றொரு கல்வெட்டாலும் அறிகிறோம். கல்வெட்டைக்கொண்டு இவனது இயற்பெயர் அறியமுடியாவிடினும், உலா, கோவை முதலிய நூல்களால் இவனது இயற்பெயர் சங்கமன் என்று அறியக்கிடக்கின்றது. இவனே ராஜாதிராஜனெனப் பட்டஞ்சூடினன் என்பதற்கு இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள இவ்விரு அரசர்களது கல்வெட்டுக்களும் ஹூல்ஷ்துரையவர்களது அபிப்பிராயமுமே போதியதாம்.

இவைகளைத்தவிர்த்துப் பாண்டிய அரசனான குலசேகரதேவர்காலத்தில் அவர் பாண்டியநாட்டிலிருந்து துரத்தப்பட்டார் என்ற மேலே குறிக்கப்பட்ட மகாவமிசச்செய்தியும் பல்லவராயப்பட்டுக்கல்வெட்டின் பிற்பாகத்தால் தெரியவருகிறது. அதனில், குலசேகரதேவர் ராஜாதிராஜனது உதவியை வேண்டினாரென்றும், அக்காலத்து இந்தத்திருச்சிற்றம்பல முடையானுக்கே கட்டளைபிறக்க அவனே சென்று இலங்கையிலிருந்துவந்த இலங்காபுரித்தண்டநாயகனைக் கொன்று மதுரைவாசலிலே தைப்பித்ததாகவும் படிக்கிறோம். ஆகவே மேற்கூறிய கூற்றுக்கள் வலிபெறுதல்காண்க.

இன்னும் இச்சோழனுக்கிவமிசம் இவ்விராஜராஜனோடு முடிவடைந்ததென்பது பல்லவராயப்பட்டுக் கல்வெட்டால் அறியலாவதோடு கம்பர்கூறிய "நின்குலத்தைச் சுட்டதடா என்வாயிற் சொல்" என்னும் அங்கதச்செய்யுளாலும் வலிபெறும். ராஜராஜன் கூத்தரால் உலாப்பெற்றவனாகவே கம்பர் காலத்திருந்தவன் இவன்றான் என்பதில் ஐயமேற்படக் காரணமில்லை.

இதுகாறும் கூறியதுகொண்டு, ராஜாதிராஜன் சங்கமன் என்னும் இயற்பெயருடையவனென்பதும் நாகபட்டினத்திலிருந்த பழைய சோழவமிசத்தானென்பதும்*, விக்கிரமனான ராஜராஜனது விருப்பப்படி சோழசிம்மாசனம் ஏறினனென்பதும், சோழனுக்கிவமிசமான குலோத்துங்கனது பரம்பரை ராஜராஜனோடு முடிவடைந்தது என்பதும் பெறப்படும்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

---

*நாகபட்டினத்திலிருந்தவனென்பது குலோத்துங்கன்கோவையாலும், நாகபட்டினம் சோழராஜதானியாக விருந்ததென்ற கன்னபரம்பரைச் செய்தியாலும் பெறுவதுடன் இவன் பழையவமிசத்தான் என்பது கல்வெட்டாலும் தெரிகிறது.

ஓலோகமாதேவீச்சுர சிலாசாசனம்.

இவ்வாலயம், தஞ்சைநகர்க்கு வடக்கில் ஏழுமைல் தூரத்தில், காவிரியாற்றின் வடகரையில், மூவர் திருப்பதிகம்பெற்றுச் சிறந்து விளங்கும் சிவக்ஷேத்திரங்களுள் ஒன்றாகிய திருவையாற்றில், ஸ்ரீ அறம் வளர்த்தவம்மையாரோடு வீற்றிருக்கும் ஸ்ரீஐயாறப்பர் ஆலயத்தின் வடக்குத் திருச்சுற்றுமாளிகைக்கண் உள்ளது. இது ஓலோகமாதேவி என்பவரால் எடுப்பிக்கப்பட்டதாகலின், ஓலோகமாதேவீச்சுரம் எனப் பெயர் பெற்றது. இவர், கி. பி. 985 முதல் 1013 வரையில், தஞ்சையின்கண் செங்கோலோச்சியிருந்த-முதலாவது இராஜராஜனது முதற் பெருந்தேவியாவார். இவ்வாலயத்திலுள்ள சாசனம் இவ்வரசனது இருபத்துநான்காம் ஆண்டிற் பொறிக்கப்பட்டதாகலின் இப்பொழுதைக்கு 915 வருடங்கட்கு முற்பட்டதாகும்.

செந்தமிழ்நூல்களிற் காணப்படும் பண்டைக்கால வழக்குகளையும் சரித்திரங்களையும் ஆராய்தற்கண் ஆர்வமுற்றவர்க்குப் பயன்படுதல் காரணமாக இச்சாசனத்தை யான் இங்கு எழுதுகின்றேன்.

ஸ்வஸ்திஸ்ரீ திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வெங்கை நாடுங் கங்க பாடியும்
நுளம்ப பாடியும் தடிகை பாடியும்
குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள் ளெல்லா யாண்டும்
தொழுதெழ விளங்கும் யாண்டே செழியரைத்தேசுகொள்

ஸ்ரீ கோவிராஜகேசரிவன்மராகிய ஸ்ரீ ராஜராஜதேவர்க்கு யாண்டு உச ஆவது ஸ்ரீ ராஜராஜதேவர்நம்பிராட்டியார் தந்திசத்திவிடங்கியா

ரான ஒலோகமஹாதேவியார் வடகரை இராஜேந்திரஸிம்ஹவளநாட்டுப் பொய்கைநாட்டுத் தேவதான திருவையாற்றுப்பால் எடுப்பித்த திருக்கற்றளி ஒலோகமாதேவீஸ்வர முடையார்க்கு இந்நாட்டு மிறைக்கூற்றத்து தேவதானம் தலையார்ந்நலை ஸாஸநப்படி நிலம் எழுபத்து நாலரையே முக்காணிக்கீழ் எழுமாவரை முந்திரிகைக் கீழ் அரையே இரண்டுமாவும் இந்நாட்டு இக்கூற்றத்து தேவதானம் இ...நிலம் இருபத்தாறரையே இரண்டுமாவின் கீழ்மூன்றுமாவின் கீழ்அரைக்காணி முந்திரிகை கீழ் நான்மாவும் இவ் ஒலோகமாதேவீஸ்வர முடைய மஹாதேவர்க்கு இட்டபடியில் ஸாஸநத்தில் செய்த நிலநிவந்தங்களும் நெல் நிவந்தங்களும் ஒலோகமாதேவீ ஈஸ்வரத்துக் கல்லில் வெட்டுவிக்கவென்று உடன்கூட்டத்ததிகாரஞ்செய்கின்ற கோவலூருடைய......................
......................அதிகாரி எழுதன்குஞ்சரமல்லனும் அருளிச்செய் ஸாஸநப்படி பார்த்து வெட்டுவித்தபடி. உலகளந்தகோலால் நூறுகுழி கொண்டது ஒருமாவாகவும் இரண்டாயிரக்குழிகொண்டது வேலியாகவும் அரையே இரண்டுமாக்கொண்டது ஒருபங்காகவும் பெற்றார்பெற்ற படி. நிவந்தக்காரர் தலைவாயில் ஸ்ரீவீரநாராயணச் சதுர்வேதிமங்கலத்தார்க்கு நீர்போம் ஸ்ரீகுஞ்சரமல்லவாய்க்காலுக்கு வடக்கே பெறுவார்க்கு இட்டபடி. ஆச்சார்ய போகம் பங்கு நாலும் பணிசெய்யும் மாணிகள் அறுவர்க்கு மூன்றும் திருக்களுக்குப் பங்கு அரையும் பதியிலார் ஒருத்திக்குப்பங்கு ஒன்றரையாகப் பதியிலார் முப்பத்திருவர்ப்பங்கு நாற்பத்தெட்டும் நட்டுவனுக்குப் பங்கு நாலும் கரணனுக்குப் பங்கு இரண்டும் மெய்ம்மட்டிக்குப் பங்கு இரண்டும் மோரலியனுக்குப் பங்கு இரண்டும் வங்கியனுக்குப் பங்கு இரண்டும் வீணைக்காரனுக்குப் பங்கு இரண்டும் உடுக்கைவாசிப்பானுக்குப் பங்கு இரண்டும் உவச்சுத்தலைப்பறையொன்றும் மத்தளம் எட்டும் தாளம் ஒன்றும் கரடிகை யொன்றும் கண்டை யாறும் திமிலை யொன்றும் கைம்மணி யொன்றும் சங்கிரண்டும் காளம் நாலும் சேகண்டிகை ஒன்றும் ஆக ஆள் இருபத்தறுவர்க்கு இருகலனே முக்குறுணியாகப் பங்கு பதின்மூன்றரையும் குசவனுக்குப் பங்கு அரையும் வண்ணத்தானுக்குப் பங்கு அரையும் வண்ணானுக்குப் பங்கு அரையும் பிராணஉபகாரிக்குப் பங்கு அரையும் காச்சுவானுக்குப் பங்கு அரையும் கொல்லனுக்குப் பங்கு அரையும் மரத்தச்சனுக்குப் பங்கு அரையும் ஊர்ப்பறையனுக்குப் பங்கு காலும் ஆகப் பங்கு எண்பத்தெட்டேமுக்காலினால் நிலம் ஐம்பத்துமூன்றே காலும் ஸாஸநத்தில் நெல் நிவந்தம் செய்த நிவந்தங்களுக்கு நெல்லோபாதி நில நிவந்தமாக்குகவென்று அருளிச்செய் நில நிவந்தம் ஆக்கின படி திருவாராதனைசெய்வானுக்கு நிசதம் நெல்லு முக்குறுணிக்குப் பங்கு ஒன்றரையும் தேவர்கரணத்தானுக்கு நிசதம் நெல்லுப்பதக்குக்குப் பங்கொன்றும் நந்தவானக்குடிகள் அறுவர்க்கு நிசதம் நெல்லு தூணி நானாழியும் திருமேனிகளும் திருப்பரிகலங்களும் விளக்க புளிக்கு நிசதம் நெல்லு நாழியும் நின்மாலிய நீர் போகட்டுவானுக்கு நிசதம்

நெல்லு முந்நாழியும் ஆக நிசதம் நெல்லு ஐங்குறுணிக்குப் பங்கு
இரண்டரையும் அயன சங்கிரமமிரண்டுக்கும் விஷுஸங்கிரம மிரண்டுக்
கும் நூற்றெட்டுக்கலசம் ஆடி அருள ஒருசங்கிரமத்துக்கு நெல்லு
பதினெண்கலமாக நாலுசங்கிரமத்துக்கு நெல்லு அறுபதின்கலத்துக்குப்
பங்கு ஒன்றும் திங்கள் சங்கிரமம எட்டுக்கு ஸங்கிரம மொன்றினுக்கு
நெல்லு முக்கலமாக ஸங்கிரம மெட்டினுக்கு நெல்லு இருபத்துநாற்கல
மும் கார்த்திகைவிளக்கீட்டு நெல்லு பதினெண்கலனே இருதூணிப்பதக்
கறுநாழியுரியும் இவைச்சோம எற்றம் அருளிச்செய்த நெல்லு
குறுணி ஒருநாழியும் ஆக நெல்லு பதினறுகலத்துக்கும் புதியிது
அமுதசெய்தருள நெல்லு அறுபதின்கலத்துக்குப் பங்கொன்றும்
உடையார் திங்கள் சதயவிழாப் பன்னிரண்டினுக்கு நெல்லு நூற்றிருப
தின்கலத்துக்குப் பங்கிரண்டும் ஆக பங்கு ஒன்பது உள்பட பங்கு
தொண்ணூற்று ஏழேமுக்காலினால் ஸ்ரீகுஞ்சரமல்லவாய்க்காலுக்கு
வடக்கு இட்டநிலம் ஐம்பத்தெட்டரையே மூன்றுமாவும் தேவற்கு
பரிசட்டத்துக்கு ஆண்டுவரை காசுபத்தும் அடைக்காயமுதுக்கு நிசதம்
வெறுங்காய் அம்பதும் வெற்றிலைபற்று இரண்டரையும் ஆக ஆண்டு
வரை வெறுங்காய் பதினெண்ணாயிரமும் வெற்றிலைபற்று தொள்ளாயிரத்
துக்கும் ஆக காசு மூன்று திரிமெய்ப்பூச்சுக்கும் சீதாரிக்கும் ஆக நிசதம்
சந்தனம் முப்பலமாக ஆண்டுவரை சந்தனம் ஆயிரத்து எண்பதின்
பலத்துக்கு காசு ஒன்றுக்கு சந்தனம் அறுபதின் பலமாக காசு
பதினெட்டும் சித்திரைபெருந்திருவிழாவுக்குக் காசு முப்பத்திரண்டும்
ஆக காசு அறுபத்துமூன்றினால் காசு ஒன்றுக்கு நெல்லு எண்கலமாக
நெல்லு ஐஞ்ஞாற்று நாற்கலத்துக்கு இவ்வடகரையில் இட்டபங்குகளால்
வந்த நிலத்தில் நின்ற காற்பங்கால் வந்த நிலம் மூன்றுமாவும் ஸ்ரீகுஞ்
சரமல்லவாய்க்காலுக்கு தென்கரை புன்செய்யும் ஓடையும் மேடும்
படுகையும் விளைநிலமும் ஆகக்கிடந்த பதின்மூன்றேமுக்காலே இரண்டு
மா அரைக்காணிக் கீழ் எழுமா அரை முந்திரிகைக் கீழ் அரையே
இரண்டுமாவும் ஆக நிலம் பதினாலே அரைக்காணிக்கீழ் எழுமாவரை
முந்திரிகைக்கீழ் அரையே இரண்டுமாவும் ஆகக் கல்வாய்த்தலை நிலம்
எழுபத்திரண்டரையே மூன்றுமாவரைக்காணிக்கீழ் எழுமாவரையே முந்
திரிகைக்கீழரையே இரண்டுமாவும் இந்நாட்டு இக்கூற்றுதத்துத் தேவதானம்
இளநிலம் இருபத்தாறரையே இரண்டுமாவின் கீழ்மூன்றுமாவின் கீழ்
அரைக்காணி முந்திரிகைக்கீழ் நான்மாவில் உடையார்க்கு திருவமிர்தரிசி
போது குறுணியாக நாலுபோதைக்கு அரிசி தூணியும் ஒலோகவிடங்க
தேவர்க்கு திருவமிர்தரிசி போது நானாழியாக மூன்றுபோதைக்கு
அரிசி குறுணி நானாழியும் கணபதியார்கருக்குத் திருவமிர்தரிசி போதிரு
நாழியாக மூன்றுபோதைக்கு அரிசி அறுநாழியும் இவர்க்கே அப்பவ
மிர்துக்கு அரிசி நாழியும் ஆக ஒருநாளைக்கு அரிசி தூணிப்பதக்கு
முந்நாழிக்கு ஐஞ்சிரண்டுவண்ணாததால் வந்தநெல்லு கலனேமுக்குறுணி
எழுநாழியுரியும் பருப்பமிர்து போதுரியாக நாலுபோதைக்குமாகப்

பருப்பமிர்து இருநாழிக்கு நெல்லறுநாழியும் கறியமிர்துக்கு போது நெல் இருதூணியாக நாலுபோதைக்கு நெல்லு குறுணியும் மிளகு ஆழாக்கே இருசெவிடனைக்கும நெல்லறுநாழியும போனகத்துக்கும பொரிக்கறியமிர்துக்கும் நிசதம் நெய் நாழிக்கு நெல்லுத் தூணியும் தயிரமிர்து நிசதம் நானாழிக்கு நெல குறுணிநானாழியும சர்ககரையமிர்து உடையார்க்கு நிசதம் முப்பலமும் கணபதியார்க்கு அப்பஅமிர்துககுச் சர்ககரை ஒரு பலவரையும் ஆகச் சர்க்கரை நாற்பலவரைககு நெல்லு நானாழி உரியும் வாழைப்பழம் நிசதம் எட்டினுக்கு நெல்லு நானாழியும் மஞ்சள்காப்பு நிசதம அரைப்பலத்துக்கு நெல்லு நாழியுமாக ஒருநாளைக்கு நெல்லு ஒருகலனே குறுணி ஒருநாழியாக ஆண்டுவரை நெல்லு எழுநூற்றைம்பத்து முக்கலனே இருதூணி குறுணிக்கு வேலி நூற்றுக்கல வரிசைக் கீழ் நிலம் ஏழரையே முக்காணி. திருநொந்தாவிளக்கு இருபதினுக்கு எண்ணை அறுநாழியும சந்திவிளக்கு நாற்பதினுக்கு போது நாழியாக மூன்று போதைக்கு முந்நாழியும் ஸ்ரீபலிஓலக்கத்துக்கு எண்ணை நானாழியும் ஆக எண்ணை குறுணிநானாழியால் நாழி எண்ணைக்கு நெல்லு தூணியாக நெல்லு நாற்கலததினுல் ஆண்டுவரை நெல்லு ஆயிரத்து நானூற்று நாற்பதின்கலத்துக்கு வேலி நூற்றுக்கலம்மாக வந்த நிலம் பதினாலே எட்டுமாவும் திருப்பள்ளித்தாமம் பறித்து தொடுப்பார் மூவர்கு நிசதம் நெல்லுக் குறுணி நானாழியும் திருமெழுக்கிடுவார் நால்வர்கு நிசதம் நெல் குறுணி நானாழியும் நாயகஞ்செய்வானுக்கு நிசதம நெல்லுப் பதக்கும் விறகிடுவானுக்கு நிசதம் நெல்லுப் பதக்கும் திருமெய்காபபார்கள் இருவர்க்கு நிசதம நெல்லுப் பதக்கும் கவரிப் பிணாக்கள் பதினறுவர்க்கு போரால் நிசதம் நெல்லு முந்நாழியாக தூணிப்பதக்கும நிலவண்ணமிட உம்மாரப்பிண்டிக்கு நிசதம் நெல்லு நாழியும் நிலவண்ணமிடுவாருக்கு நிசதம் நெல்லு முந்நாழியும் ஆக நெல்லுக்கலனே முக்குறுணி நானாழியினல் ஆண்டுவரை நெல்லு நானூற்று அறுபத்தைங்கலத்துக்கு வேலி நூற்றுக்கல வரிசையால் இட்ட நிலம் நாலரையே மூன்றுமா ஆக பலநிவந்தத்தாலும் இந்நிலத்தில் இட்டநெல்லு இரண்டாயிரத்து அறுநூற்றைம்பத்து எண்கலனே இருதூணிக்குறுணிக்கு இட்ட நிலம் இருபத்து ஆறரையே ஒருமா முக்காணி. சித்திரைப் பெருந்திருவிழாவில் கணபதியார் திருவிழாவெழுந்தருளி அவல் முத்தூணிப்பதக்குக்கு நெல்லு கலனே முக்குறுணி நானாழிக்கு அருளிச்செய்ய இட்ட நிலம் காணிக்கீழ் மூன்றுமாவின் கீழ் அரைக்காணி முந்திரிகைக்கீழ்நான்மா. ஆக நெல்லு இரண்டாயிரத்து அறுநூற்று அறுபதின்கலனே நானாழிக்கு இந்நிலம் இருபத்தாறரையே இரண்டுமாவின் கீழ்மு...வின்கீழ் அரைக்காணி முந்திரிகைக் கீழ் நாமாவும் நிலமும் நெல்லும் நேர் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

பண்டிதர் L. உலகநாதபிள்ளை,
கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

ஸ்ரீ:

நாலாயிரப்பிரபந்தச்

சாற்றுப்பாக்களின் ஆராய்ச்சி.

சென்ற வைகாசிமாதச் செந்தமிழ்ப்பகுதியில், நாலாயிரப்பிரபந்தங்களின் சாற்றுப்பாக்கள் என்ற தலைக்குறிப்பிட்ட ஒரு கட்டுரை, ஸ்ரீமாந். கிடாம்பி அனந்தன என்பவரால் எழுதப்பட்டு வெளிவந்தது. அதிற் பல ஆக்ஷேபங்கள் தோன்றுகின்றமையான் அவற்றுள், சில வற்றைத் தொகுத்தெழுதலானேன்.

க. திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவாய்மொழியின் சாற்றுப் பாக்கள் ஆழ்வார்கூற்றென ஒருதலையாகக் கூறினாரில்லையாயினும், அவர் வியாக்யானத்தையாராய்வுழி அப்பாக்கள் ஆழ்வார்கூற்றன்றெனப் புலனு மெனவுரைத்தனர். இது பொருந்தாதென்பது பின்வருவனவற்றால் விளங்கும்.

'நாயகன் முழுவேழுலகுக்குமநாதன்' என்றபாட்டிற்குத் திருக்குருகைப்பிரான்பிள்ளான 'நாயகன்' 'கீழிரண்டுதிருவாய்மொழியாலும் சொன்னவர்த்தத்தை நிகமிக்கிறது' என்று இதற்கவதாரிகை கூறினர். கீழ்த்திருவாய்மொழியின் சாற்றுப்பாட்டினைத்தும் பலத்தை முக்கியமாகவுரைத்துப்போந்தனபோலன்றி இத்திருவாய்மொழி கீழுரைத்தன வற்றைத் தொகுத்துக்கூறுதலே முக்கியப்பொருளாமென்பார் கீழிரண்டு திருவாய்மொழியாலும்சொன்னவர்த்தத்தை நிகமிக்கிறதென்கிறார்.

நிகமப்பாட்டு நூலாசிரியர்கூற்றெனக் கொள்ளல்வேண்டுமேயன்றிப் பிறர்கூற்றெனப்படாவாம். என்னை? முன் விரிவாய்க்கூறியவற்றைப் பயிறலுறுவோர் மனத்திற் றெள்ளிதிற் புலனுமாறு பின்னருஞ் சுருக்கிக்கூறி விஷயத்தோடு பொருத்தமுறவைத்தலான். 10-ம் பத்து 11-ம் பாசுர வியாக்கியானத்தில் 'எனக்கெளியனாய்' என ஆழ்வாருடைய உக்தியே அநுகரிக்கப்பட்டது.

இதனால் திருக்குருகைப்பிரான்பிள்ளான், சாற்றுப்பாக்களை ஆழ்வார்கூற்றெனக் கொண்டனரென அறியலாம். யாண்டும் பிறர்கூற்றென

ஆராய்தற்கு ஆதாரவுகூறினாரில்லை. இச் சாற்றுப்பாட்டின் தற்புகழ்ச்சி மலிந்துகிடக்கின்றமையாற் பிறர்கூற்றாகாதோவெனின் ? ஆகாது; என்னை ?

"மண்மிசைப்பெரும்பாரம்நீங்கவோர்பாரதமாபெரும்போர்
பண்ணிமாயங்கள்செய்துசேனையைப்பாழ்படநூறிட்டுப்போய்
விண்மிசைத்தனதாமமேபுகமேவியசோதிதன்றாள்
நண்ணிநான்வணங்கப்பெற்றேனெனக்கார்பிறர்நாயகரே."

என்னும் இப்பாட்டினும் தற்புகழ்ச்சி மலிவுற்றிருக்கின்றமையான் இதையும் பிறர் கூற்றெனக் கழிக்கவேண்டுமாகையால் என்க.

உ. சில பிரபந்தங்கள் சாற்றுப்பாக்களைப்பெற்றும் பெறாதுமிருக்கின்றன என்றார்.

பிரபந்தங்கடோறும் சாற்றுப்பாக்களிருத்தல்வேண்டுமென்பதும், இல்லாதிருக்கலாகாதென்பதும் யாப்புறவின்றாம். அதனாற் சில பிரபந்தங்கள் சாற்றுப்பாக்களைக்கொண்டும் கொள்ளாதும் வந்தன. சில பிரபந்தங்கள் சாற்றுப்பாக்களைக் கொள்ளாதிருக்கின்றகாரணத்தாற் சாற்றுப்பாக்களை ஏற்ற பிரபந்தங்களிலுள்ள அப்பாட்டுக்களைப் பிறர்கூற்றெனவலியுறுத்தற் கியலாதெனவறிக.

ந. பெரியதிருமொழி 13-வது பதிகத்தில், 'தென்னன் தொண்டையர்கோன்வணங்கும் வயிரமேகன்' என்ற இறுதிப்பாட்டில் வயிரமேகனது சிறப்புக்கூறுகின்றமையான் அவ்வயிரமேகன் காலத்துக்குப் பிற்பட்டவர் திருமங்கைமன்னனெனக் காலவாராய்ச்சி செய்வார்கூற்றைக் கடிவதற்குச் சாற்றுப்பாட்டைப் பிறர்கூற்றெனக் கூறினார்.

ஒரு குலத்தில் உரைசான்ற ஒரு பெரியோன்றோன்றின் அவனது பெயர் அக்குலத்திற் பின்னுள்ளோர்கட்கும் இட்டு வழங்கிவருவதோர் அடிப்பட்ட வழக்குண்டு. அவ்வழக்குப்பற்றி வயிரமேகனதுவழியிற் றோன்றிய ஒருவனுக்கு வயிரமேகனெனப் பெயர்வந்திருக்கலாம். ஆதலால் அப்பெயரைக் கொண்டு காலநிர்ணயம் பண்ணலாகாதென்பது சிறந்த ஆராய்ச்சியாளர் துணிபாயிருக்கிறது. அதனால் இவர்

கூற்றுப் பயனில்கூற்றென்றறியலாம். வயிரமேகனுக்குப் பிற்பட்டவர் ஆழ்வார் என்பவர்கூற்று உண்மையாய்விடுமாயின், அவ் வுண்மையைக் கடியக்கருதிச் சாற்றுப்பாக்கள் ஆழ்வார்கள்பாடியவை என்னும் ஒருண்மையை இல்லையென்பதனாற்போந்தபயனென்னவோவென மறுக்க.

௪. சடகோபர், மதுரகவியார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருமங்கைமன்னன் இவர்களருளிய பிரபந்தச்சாற்றுப்பாக்களில் இவர்தம் தற்புகழ்ச்சியும் பிருதுகளும் காணப்படுகின்றன. மற்றப்பாக்களில் ஆழ்வார்தம் எளிவரவு காணப்படுகிறது. இவ்விரண்டையும் ஒப்புநோக்குமிடத்துச் சாற்றுப்பாக்கள் பிறர்கூற்றெனத் தெற்றென அறியலாமெனக்கூறினர்.

ஆழ்வார்கள் தம்மைக்குறித்துப்பேசுமுகத்தால், தம்மை இழித்துக்கூறியும், தாம்பெற்ற பேறுபற்றிக்கூறுமுகத்தானும், அறிவிலிகளாகிய சம்சாரிகளைக்குறித்து உபதேசிக்கும் முகத்தானும் தம்மைப்புகழ்ந்துரைத்தும் ஆப்தவசனமென யாவரும எடுத்தாள்வதற்குத் தம்மைப் படர்க்கையாக்கித் தம்பெருமைகளையும் தம் பிருதுகளையும் தாமே எடுத்துரைத்தும் செல்வர். இங்ஙனஞ் சொல்வது இவர்களுக்குமாத்திர முரியதொன்றன்று. ஏனைபகவிகட்கு முண்டெனக் கொள்க. ஏனையகவிகளும் தம்மைப் படர்க்கையாக்கிப் புனைந்துரைத்தமை பின்வரும் உதாரணங்களால் அறிக.

ஸ்ரீராமாயணத்தில் 'வால்மீகிர்மஹாந்ருஷி:' என்று வால்மீகி மஹருஷியும்,

பழமொழியில்,

“பிண்டியினீழற்பெருமானடிவணங்கிப்
பண்டைப்பழமொழிநானூறுங்—கொண்டினிதா
முன்றுறைமன்னவனான்கடியுஞ்செய்தமைத்த
இன்றுறைவெண்பாவிவை.”

என முன்றுறையரையனாரும்,

திரிகடுகத்தில்,

“உலகிற்கடுகமுடலிநோய்மாற்று
மலவிலநோயகற்று—நிலைகொள்

நிரிகடுகமென்னுந்திகழ்தமிழ்ச்சங்கம்
மருவுநல்லாதன்மருந்து."

என்று நல்லாதனாரும்,

சிறுபஞ்சமூலத்தில்,

"மல்லிவர்தோண்மாராயன்மாணாக்கன்மாநிலத்துப்
பல்லவர்நோய்நீக்கும்பாங்கினற்—கல்லா
மறுபஞ்சநீர்மழைக்கைமாக்காரியாசான்
சிறுபஞ்சமூலஞ்செய்தான்".

என்று காரியாசானும்,

தேவாரத்தில்,

"நித்திலன்மிழலையைநிகரிலிபுகலியுள்
வித்தகமறைமலிதமிழ்விரகனமொழி
பத்தியில்வருவனபத்திவைபயில்வொடு
கற்றுவலவருலகினிலடியவரே."

என்று சம்பந்தரும் ஆகிய இவர்கள் தம்மைப் படர்க்கையாக்கித் தம்புகழைச் சிறப்பித்துரைத்தமை காண்க. இவற்றைப் பிரயோகவிவேக நூலாசிரியர், "சம்பந்தர் சடகோபர் முதலாயினாரும், திவாகாரும் பதினெண்கீழ்க்கணக்குச்செய்தாரும் முன்னாக பின்னாக பதிகம் கூறுவதுங் காண்க" எனக் கூறியவாற்றானு முணரலாம்.

"மன்னுடைமன்றத்தோலைத்தூக்கினும்
தன்னுடையாற்றலுணரரிடையினும்
மன்னியஅவையிடைவெல்லுறுபொழுதினும்
தன்னைமறுதலைபழித்தகாலையும்
தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே."

என்று இன்னின்ன இடங்களில் தற்புகழ்ச்சி கூடுமெனவும்,

கவயஸ்த்ரிவிதா ஜ்ஞேயா ஹ்யுத்ததாஸ்ச பராஸ்ரயா:।
உதாத்தஸ்ச ததோ ஹ்யுத்ததோ பேதேநீசதயோ: ஸ்ம்ருதா:॥

உதாத்தர், உத்ததர், பிரௌடர், விநீதர்என்ற நால்வகைப்புலவருள் விநீதகவியல்லாத மற்றை மூன்றுகவிகள், தம்மைத் தாமே புனைந்துரைக்கும் பான்மையினரெனவும் ஆன்றோரானைதந்தனவும் இதனை வலியுறுத்தும்.

அன்றியும், பிரபந்தங்களின் இடையேயும் தற்புகழ்ச்சிப்பாடல்கள் உள்ளன. அவை,

திருவாய்மொழி.

"நின்றநின்றபலநாளுய்க்குமிவ்வுடனீங்கிப்போய்ச்
சென்றுசென்றாகிலுங்கண்டுசென்மங்கழிப்பானெண்ணி
யொன்றியொன்றியுலகம்படைத்தான்கவியாயினேற்கு
என்றுமென்றுமினிமற்றொருவர்கவியேற்குமே." (29-10.)

"கரியமேனிமிசைவெளியநீறுசிறிதேயிடும்
பெரியகோலத்தடங்கண்ணன்விண்ணோர்பெருமான்றன்னை
யுரியசொல்லாலிசைமாலைகளேத்தியுள்ளப்பெற்றேற்கு
அரியதுண்டோவெனக்கின்றுதொட்டுமினியென்றுமே." (35-6.)

"நமக்கும்பூவின்மிசைநங்கைக்குமின்பனேஞாலத்தார்
தமக்கும்வானத்தவர்க்கும்பெருமானைத்தண்டாமரை
சுமக்கும்பாதப்பெருமானைச்சொன்மாலைகள்சொல்லுமா
றமைக்கவல்லேற்கினியாவர்நிகரகல்வானத்தே" (35—8.)

"கண்டுகொண்டேன்கண்ணிணையாரக்களித்துப்
பண்டைவினையாயினபற்றோடறுத்துத்
தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்
அண்டத்தமரர்பெருமானடியேனே" (84—9.)

பெரியதிருவந்தாதி.

"என்னில்மிகுபுகழார்யாவரேபின்னையுமற்
றென்னில்மிகுபுகழேன்யானல்லால்—என்ன
கருஞ்சோதிக்கண்ணன்கடல்புரையுஞ்சீலப்
பெருஞ்சோதிக்கென்னெஞ்சாட்பெற்று" (4.)

பெரியாழ்வார்திருமொழி.

"எம்மனாவென்குலதெய்வமேயென்னுடைநாயகனே
நின்னுளேனாய்ப்பெற்றநன்மையிவ்வுலகினிலார்பெறுவார்" (45-3.)

திருமாலை.

"காவலிற்புலனைவைத்துக்கலிதன்னைக்கடக்கப்பாய்ந்து
நாவலிட்டுழிதருகின்றோம்நமன்தமர்தலைகள்மீதே" (1)

பெரியதிருமொழி.

" இற்பிறப்பறியீரிவரவரென்னீரின்னதோர்தன்மையென்றுணரீர்
கற்பகம்புலவர்களைகளென்றுலகிற்கண்டவாதொண்டரைப்பாடுஞ்
சொற்பொருளாளீர்சொல்லுகேன்வம்மின் " (1—7.)

என்பனவும் இவைபோன்றனவாகியபாடல்கள் இன்னும் பலவும் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் தற்புகழ்ச்சிதோன்றுதலாற் பிறர் கூற்றெனச் சொல்லுமாறு யாங்ஙனம்?

ரு. 'அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியர்கோன் அபிமானதுங்கன்—செல்வனைப்போலத்திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்' என்ற திருப்பல்லாண்டின் பதினோராம்பாட்டைமட்டும் ஆழ்வார்கூற்றென ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இப்பாட்டில் இரண்டு பழ அடிமைகள் புலப்படுகின்றன. அவற்றுள் ஒரு பழஅடிமை உவமை. மற்றொரு பழஅடிமை பொருள். பழமை தொன்மை என்பன ஒருபொருட்கிளவி. இங்கு உவமையாய் நின்ற பழஅடிமையையுடைய செல்வநம்பிக்கும், பொருளாய்நின்ற பழஅடிமையையுடைய பெரியாழ்வார்க்கும் காலம் சமமே. உவமை பொருளைக்காட்டிலும் நூறுமடங்கு அதிகமாயிருத்தல்வேண்டுமென்பது அணியிலக்கணநூலார் துணிபு. அத்துணிபுபற்றி இங்குவந்த பழஅடிமைகளை ஊகிப்போமாகில், செல்வநம்பியின் பழஅடிமை மிகப்பழமையென்றும், ஆழ்வாரின் பழஅடிமை அத்துணையன்றென்றும் பொருள்கொள்ளவேண்டும். இவர்கூறிய தொன்மையின்பொருளை உட்கொண்டு இங்குவந்துள்ள பழஅடிமைகட்குப் பொருளாராயின், ஸமகாலத்தவராகிய செல்வநம்பியை மிகப் பழஅடிமையுடையவரென்பதும், புது அடியவராகிய தம்மைப்பழஅடியேனென்பதும் அவர்க்குப்பொருந்துமாறெங்ஙனம்? இந்தப் பழமை என்பது அடியேன் என்பதனை விசேடியாமல் அநாதிசித்தமாயுள்ள அடிமையையே விசேடித்ததென அறியத்தக்கது. இப்பழமைகளை விவாதிக்காமல் அங்கீகரித்துக்கொண்டு பின்வரும் 'தொல்சீர்' முதலியவற்றைமட்டும் அதுபயன்னமெனச்சொல்வது நியாயவிரோதமாகும்.

௬. பெரியாழ்வார்திருமொழியிற் சிலபதிகச்சாற்றுப்பாக்கள் இவைத்தெனத் தொகை குறிக்கப்பெற்றும், பெறாதும், சிலபதிகங்களிற் பயன்கூறியசாற்றுப்பாக்களையும் பதிகச்சனக்குடனெண்ணி இத்தனை யெனத் தொகை குறித்தும், சிலபதிகங்களில் அங்ஙனமில்லாமலும் பல் வேறுவகையாகக் காணப்படுகின்றன. இவ்வாறு காணப்படுதலானே பிறர்கூற்றெனத்தெற்றெனவறியலாம் எனக் கூறினர்.

பயன்கூறிய சாற்றுப்பாக்களைப் பதிகத்துடன் கணக்கிட்டும் இடாதும் வருவதோர் வழக்குண்டு. அவ்வழக்கைப்பற்றியெழுந்தது இப்பெரியாழ்வார்திருமொழியென அறிக. இவ்வாறன்றிச் சாற்றுப் பாக்களைப் பிறர் கூற்றெனக் கொள்ளின், பத்தெனத் தொகைகுறிக்கப் பட்டபதிகங்களில் ஒன்பது ஒன்பதுபாடல்களே ஆழ்வார் கூற்றெனக் கொள்ளவேண்டும். கொள்ளிற் பதிகமாமா றெங்ஙனம்? அதுநிற்க, பயன் கூறியசாற்றுப்பாக்கள் இவ்வொன்பதுமெனத் தொகை குறித்திருக்க வேண்டும். அவ்வாறு ஓரிடத்தும் குறிக்காததனாலும் பிறர்கூற்றன் றென அறியலாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் சுந்தரமூர்த்திநாயனாருரைத்த தேவாரப் பதிகங்கள் மேற்கூறியாங்குச் சாற்றுப்பாக்களைவிடுத் தினைத் தெனத் தொகைபெற்றும் பெறாதும் சாற்றுப்பாக்களைச்சேர்த் தினைத் தெனத் தொகைபெற்றும் பெறாதும் ஒன்று தலையிட்டபத்துப்பாக்களை யும், இரண்டு தலையிட்டபத்துப்பாக்களையும் ஏற்றிருக்கின்றன.

ஆதலால், இங்ஙனம் வருவதோர்பெற்றியுண்டென அடிப்பட்ட சான்றோர்பால் முறைப்படக்கேட்டுணர்ந்தோர் யாவருமறிவர்.

௭. "செம்மையுடையதிருவாய்கர்தாம்பணித்த
மெய்ம்மைப்பெருவார்த்தைவிட்டுசித்தர்கேட்டிருப்பர்.
தம்மையுகப்பாரைத்தாமுகப்பரென்னுஞ்சொல்
தம்மிடையேபொய்யானாற்சாதிப்பாராரினியே.

என்றபாட்டுப் பொருத்தமுடையதன்றென்கின்றார்.

இப்பாட்டுக்கு இவருரைத்தது பொருளன்று. இது தனியே விரி வுரைபெழுதிப் பயிறற்பாலதொன்றும். அத்துணைப் பெருஞ்சிறப்புவாய்ந் தது. அஃது நீண்டுரைக்கத்தக்கதுமன்று. ஆதலால் வியாக்யானம் வல் லுநர்பால் நன்குகேட்டுத் தெளியத்தக்கது.

௮. திருவிருத்தத் திற்றப்பாசுரத்தைத் திருவாசிரியம் பெரியதிருவந்தாதிகளின் கடைப்பாக்களுடன் சீர்தூக்கிப்பார்க்குமிடத்து அப்பாட்டு நூதனப்பாட்டு என எளிதின் வெளியாகும் என்றார்.

இதற்குக் காரணங் காட்டாமையால் ஆராயத்தக்கதன்று; ஆயினும் ஒருவாறாராய்வோம்.

திருவிருத்தம் அந்தாதித்தொடரான் நூறு கட்டளைக்கலித்துறைகளடங்கிய அகப்புறமென்னும் பொருடழுவப்பெற்ற ஒருபிரபந்தமென யாவருமறிவர். அந்தாதிப்பிரபந்தத்திற்கு இறுதிப்பாட்டின் இறுதி முதற்பாட்டின் முதலோடு மண்டலித்து வரவேண்டுமென்பதோர் யாப்புறவுண்டு. அவ் யாப்புறவு, முதற்றிருவந்தாதியில், "மாயவனையேமனத்து வை" என்ற இறுதிப்பாட்டில் வை என்னும் இறுதிச்சீர், "வையந்தகளியா" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், இரண்டாந்திருவந்தாதியில் "அளவன்றால் யானுடையவன்பு" என்ற இறுதிப்பாட்டின் 'அன்பு' என்ற இறுதிச்சீர், 'அன்பேதகளியா' என்ற முதற்பாட்டின் முதற்சீருடன் மண்டலித்தும், மூன்றாந்திருவந்தாதியில், "தேனமரும்பூமேற்றிரு" என்னும் இறுதிப்பாட்டின் 'திரு' வென்னும் இறுதிச்சீர், 'திருக்கண்டேன்' என்னும் முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், நான்முகன் திருவந்தாதியில், நாரணன்சீர் நன்கறிந்தேன்நான் என்ற இறுதிப்பாட்டின் 'நான்' என்னும் இறுதிச்சீர், "நான்முகனைநாராயணன்படைத்தான்" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், பெரியதிருவந்தாதியில், "மொய்கழலேயேத்தமுயல்" என்ற இறுதிப்பாட்டின் 'முயல்' என்ற இறுதிச்சீர், "முயற்றிசுமந்தெழுந்து" என்னும் முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும், திருவாய்மொழியில் "அவாவிலந்தாதியிப்பத்தறிந்தார்பிறந்தாருயர்ந்தே" என்னும் இறுதிப்பாட்டின் 'உயர்ந்தே' என்னும் இறுதிச்சீரின் முதலசை, "உயர்வறவுயர்நலம்" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்தும் வந்தமை காண்க. அங்ஙனமே இத் திருவிருத்தத்திலும், "பொல்லாவருவினைமாயவன்சேற்றள்ளற்பொய்ந்நிலத்தே" என்ற இறுதிப்பாட்டின் இறுதிச்சீராகிய மூவசைச்சீரின்முதலசை, "பொய்ந்நின்றஞானமும்" என்ற முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலித்துவந்தமையால் ஆழ்வார்கூற்றென்றறியலாம். இவ் விறுதிப்பாட்

டையும் பிறர்கூற்றென எடுத்துக்கொள்ளல் அந்தாதியாமாறெங்ஙனம்? “சொல்லார்தொடையலிந்நூறும்வல்லாரழுந்தார்பிறப்பில்” என்ற அடியி னுள்ள பொருளையத்தனைக் கருதியன்றே,

“கருவிருத்தக்குழிநீத்தபின்காமக்கடுங்குழிவீழ்ந்
தொருவிருத்தம்புக்குழலுறுவீருயிரின்பொருள்கட்
கொருவிருத்தம்புகுதாமற்குருகையர்கோனுரைத்த
திருவிருத்தத்தோரடிகற்றிரீர்திருநாட்டகத்தே”.

என்று கிடாம்பியாச்சான் தனிய னருளிச்செய்தது. ஆதலால் இச்செய் யுள், சொற்சுவையானும் பொருட்சுவையானும் இலக்கணவமைதியானும் திருவாசிரியம் பெரியதிருவந்தாதி என்ற பிரபந்தச்செய்யுள்களிற் றாழ் வுற்றதன்று.

௯. ஆழ்வார் அருளிய துவாதசநாமப்பதிகத்தில் ஒவ்வொரு பாசுரமும் ஒருநாமத்துடன் றொடங்கி அந்நாமத்துடன் முடிவது போல், பதின்மூன்றாவது பாசுரத்திற்கு அச்சிறப்பொன்றுமில்லையெனக் குறைகூறினர்.

திரயோதசநாமப்பதிகமெனப் பெயர்பெறினன்றே அச்சிறப்பெய்தி நிற்கும். இது துவாதசநாமப்பதிகமாதலான் அச்சிறப்பெய்தாதற்கோர் விதியின்றென விடுக்க. அன்றியும், இங்கு அச்சாற்றுப் புறவுரையாயிற் றெனினுமாம்.

௧0. திருவாய்மொழியின்செய்யுட்டொகை ஆயிரமென யாவரு மறிவர் என்றும், அவை ஓரந்தாதியாகாதென்றும், சாற்றுப்பாக்களைச் சேர்த்தெண்ணின 1102 பாடல்கள் இருக்கின்றனவாதலான் ஆயிரமென்று கூறியதற்கு முரண்படுகிறதென்றும், அதனாற் சாற்றுப்பாக்களைப் பிறர் கூற்றாக வைத்தெண்ணவேண்டுமென்றும், விடுத்தெண்ணினும் பதிகங் கள் இனிதுமுடிகின்றனவென்றும், வேண்டியாங்கெல்லாம் உரைத்துப் போந்தார்.

ஆயிரமென்ற பேரெண்ணால் வழங்கப்படுமெண்ணில் நூற்றுக்கணக் கானதொகை கூடினும் குறையினும், நூறெனவழங்கப்படுமெண்ணில், பத்து முதலிய தொகைகள் சில மிகினும் குறையினும், பத்தெனவழங்

கப்பிமென்னில் ஒன்றிரண்டு ஏற்றிழிவெய்தினும் கூறப்பட்டபேரெண்ணால் வழங்கப்பட்டுவருவது உலகப்பிரசித்தம். பயன்கூறியபாடல்களை விஷயங்கூறியபாடல்களோடு சேர்த்தெண்ணப்படாததோர்மரபுமுண்மையால் அம்மரபுபற்றியும், பதிகங்கடோறும் பாட்டின்றொகை பத்துப்பத்தெனச் சுட்டிப்போந்தார். அதனால் ஆயிரமென்ற பிரசித்திக்குக் குறையின்றெனக்கொள்க. பயன்கூறியபாடல்களையுஞ் சேர்த்தெண்ணும் பந்தியைச்சேர்ந்தது பெரியதிருமொழி எனவும், இவ்விருவகையினையும் ஒருசேரக்கொண்டது பெரியாழ்வார்திருமொழி எனவும், வேறுபாடறிக. இவ்வாறே தேவாரத்திருமுறைகளிலுங் காணலாம். திருப்பல்லாண்டு, கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற இவ்விருநூல்களில் ஒவ்வொருசெய்யுளைப் பிறர்கூற்றாகக்கழித்து எஞ்சியபாடல்களைப் பதிகமாகவும் பெரியதிருமொழியின் சாற்றுப்பாக்களைப் பிறர்கூற்றாகக்கழித்து ஒன்பதொன்பது பாடல்களைப் பதிகமாகவுங்கொண்ட இவர் திருவாய்மொழியிற் பதினொருபாடல்களைப் பதிகமாகக்கொள்ளாததற்கு நியாயமில்லை. நூற்றெட்டுச்செய்யுளுள்ள இராமாநுஜர் விஷயமான அந்தாதிப் பிரபந்தத்தை இராமாநுஜநூற்றந்தாதியென வழங்குவதுபோல 1102 பாடலுள்ள திருவாய்மொழியைப் பேரெண்ணால் ஆயிரம்பாட்டென வழங்கின் ஒரு குறையின்றுமெனப் பொருள்கொள்ளினும் பொருந்தும். ஆயிரம்பாட்டுச்சேர்ந்து அந்தாதியன்று; நூறுபதிகமெனின் ஒவ்வொரு பதிகமும் ஒவ்வொரு அந்தாதியாகக் கொள்ளவேண்டும். அங்ஙனம் கொள்ளின், சாற்றுப்பாட்டில் அந்தாதிப் பிரபந்தங்களான்முடிந்த என்றிருக்கவேண்டும். அவ்வாறன்றி "அவாவிலந்தாதிகளாலிவையாயிரமுமுடிந்தஅவாவிலந்தாதி" என்றிருத்தலான் ஆயிரம் பாசுரங்களும் ஒரு அந்தாதியேயெனக் கொள்ளற்பாற்று.

"எண்ணிற்சோர்விலந்தாதியாயிரம்" (26—11)
"பண்ணியதமிழ்மாலையாயிரம்" (17—11)
"நிரைக்கொளந்தாதியாயிரம்" (43—11)
"திறங்கிளர்ந்தவந்தாதியாயிரம்" (44—11)
"ஆகநூற்றவந்தாதியாயிரம்" (50—11)
"கேழிலந்தாதியோராயிரம்" (63—11)
"தீதிலந்தாதியோராயிரம்" (72—11)
"சொற்றொடையந்தாதியோராயிரம்" (94—11)

என்ற இக்கூற்றுக்களும் மேற்கூறியாங்கு ஆயிரமுஞ்சேர்ந்தே அந்தாதி யென்பதை வற்புறுத்தும்.

பதிகங்டோறுமுள்ள சாற்றுப்பாக்களின்றிப் பதிக மினிது முடியவில்லை. இப்பதிகமனைத்தும் அந்தாதித்தொடர்களாம். அத ஞன் மேற்கூறியாங்கு இறுதிப்பாட்டின் இறுதிச்சீர் முதற்பாட்டின் முதற்சீரோடு மண்டலிக்கவேண்டுமன்றே. "பத்துடையடியவர்க்கெளிய வன்" என்ற திருவாய்மொழியின், பத்தாவது பாட்டின் இறுதியடி "அயற் பிலனலற்றுவன் றழுவுவன் வணங்குவனமர்ந்தே" எனவும், "வளவே ழுலகின்முதலாய" என்ற திருவாய்மொழியின் பத்தாவது பாட்டின் இறுதியடி, "நேர்ந்தவுருவாயருவாகுமிவற்றி னுயிராம்நெடுமாலே" எனவும், முடிவுபெற்றிருக்கின்றன. இவ்விறுதியடியின் சீராவது, அசை யாவது, எழுத்தாவது, பொருளாவது முதற்பாட்டின் முற்சீரோடு மண்டலித்ததென வுரைப்பதற்கியலாதாம். இவைபோலவே பலபதிகங் களுமிருக்கின்றன. ஆதலாற் பதிகம் அந்தாதித்து இனிதுமுடியுமாறு யாண்டையதென விடுக்க.

௧௧. மதுரகவிகள் அருளிய கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற பிர பந்தத்திற் காணப்படும் இறுதிப்பாட்டும் அவரருளியதல்லவென மறுக் கிறார்.

ஆசார்யன்பக்கல் கிருதஜ்ஞதை செய்யுங்கால் தன் றாழ்வுடைமை யைப் புலப்படுத்தவேண்டியது கடமையாதலான் அம்முறைபற்றி மதுர கவிகள், "நம்பினேன்பிறர் நன்பொருடன்னையும்—நம்பினேன்மடவாரையு முன்னெலாம்" எனவும், "நன்மையால்மிக்கநான் மறையாளர்கள்—புன்மை யாகக்கருதுவர்" எனவும் தம தாழ்வுடைமையைத் தெரிவித்தும், தாம் பெறும்பேற்றின் மகிழ்வான், "அண்ணிக்குமமுதூறுமென் னாவுக்கே" எனவும், "நாவினாலநவிற்றின்பமெய்தினேன்" எனவும், "எண்டிசையுமறிய வியம்புகேன்" எனவும், "அடியேனைச்சோர்ந்தெனின்றே" எனவும் தம் மைப் புனைந்துரைத்துமுள்ளார். முன் தம்மை இழித்துக்கூறியதோடு இப்புனைந்துரை முரணுறுகிறதெனக் கொடுத்துக்கொளயினன்றே ஈற்றுப் பாட்டையும் அவர்கூற்றன்றென விடுக்கவேண்டும். அன்றியும், இப்பிரபந்தமும் அந்தாதித்தொடரான் அமைந்ததாதலான் இறுதிப் பாட்டைவிடுத்தெண்ணின் மண்டலிக்காமையின், இதுவும் அவர் கூற்

றெனக்கொள்க. அற்றேல், "மநாசலிசென்னசொல்—நம்புவார்பதிவை குந்தம்காண்மினே" என்ற ஈற்றடியின் காண்மின் என்னும் இறுதிச்சீர், "கண்ணிநுண்சிறுத்தாம்பினால்" என்ற முதற்பாட்டில் 'கண்ணிநுண்' என்ற முதற்சீரோடு மண்டலித்ததெனக் கூடுமோவெனிற் கூடுமென்க. என்னை? திரிந்ததின்றிரிபு வேறன்று என்ற நியாயத்தாற் காண்மின் என்பதன் ஏகதேசமாகிய காண் என்பது கண்ணெனத்திரியுமாதலான். அது அக்காணெனபதில்வேறாகாத சப்தஸ்வரூபமாத்திரத்தால், கண்ணிநுண்சிறுத்தாம்பு என அந்தாதித்து முடிந்தது.

௧௨. திருப்பள்ளியெழுச்சி, திருமாலை என்ற இவ்விருநூல்களையும் இயற்றியவர் ஒரே தொண்டரடிப்பொடியாரல்லரென்றார்.

திருப்பள்ளியெழுச்சியின் சாற்றுப்பாட்டில் "தொடையொத்த துளவமுங் கூடையும் பொலிந்து தோன்றியதோள் தொண்டரடிப்பொடியென்னுமடியனை" என்ற அடியையும், திருமாலைச்சாற்றுப்பாட்டில், "துளவத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடிசொல்" என்ற அடியையும் உற்றுநோக்குமிடத்து இரண்டிடங்களிலும் துளவத்தொண்டையுடைய தொண்டரடிப்பொடி எனக் குறிக்கப்படுகின்ற ஒற்றுமையால் இவ்விருபிரபந்தங்களையும் இயற்றியவர் ஒருவரேயாயிருத்தல் வேண்டுமெனபதுபோதரும். அஃதன்றெனின் இவர்கூறியாங்குத் திருப்பள்ளியெழுச்சி இயற்றியவர் ஒரு தொண்டரடிப்பொடியாரென்றேனும், திருமாலையியற்றியவர் வேறொரு தொண்டரடிப்பொடியாரென்றேனும் கொள்ளவேண்டும். அன்றி, வேறுயாரேனுமாகுக. திருமாலையென்னும் நூலைச்செய்தவர் யாரேனும் ஓர் ஆழ்வாராயிருத்தல்வேண்டுமென்பது ஒருதலையாம். அங்ஙனமாக, சாற்றுப்பாட்டாகிய,

"வளவெழுந்தவளமாடமதுரைமாநகரந்தன்னுள்
கவளமால்யானைகொன்றகண்ணனையரங்கமாலைத்
துளவத்தொண்டாயதொல்சீர்த்தொண்டரடிப்பொடிசொல்
இளையபுன்கவிதையேனுமெம்பிராற் கினியவாறே"

என்ற இப்பாட்டையும் ஆழ்வாருடையபாட்டென ஒப்புக்கொள்ளுதற்கு உரிமையுடையோராவர். இதுவும் பிறர்கூற்றெனின் ஆகாதென்க. பிறர் கூற்றாயின் ஆழ்வாரின்கவியைப்புனைந்துரைத்திருத்தல்வேண்டும். ஈண்டு 'இளையபுன்கவிதை' யெனத் தம் எளிவரவு தோன்றச் சுட்டியதனால் ஆழ்

வார்கூற்றென்பதற்கோர் ஐயமின்றும். அங்ஙனமிருக்க, இவர் 'தொல் சீர்த்தொண்டரடிப்பொடி' என்ற சொற்றொடரோடு, 'இனியபுனகவிதை' என்ற சொற்றொடர் தாம் கொண்ட தொல்சீர்ப்பொருளோடு முரண்படு கின்றமையால் விடுத்தனர்போலும். இங்குவந்ததொல்சீர்க்குப் பொரு ளெதுவோ அதுவே அவர்காட்டிய தொல்சீர்க்கும் பொருளாமென அறிக. தொல்சீர்ப்பொருள் பிறவருவனவற்றால் விளங்கும்.

க௫. "பாரணிந்ததொல்புகழான்விட்டுசித்தன்"
"பாரார்தொல்புகழான்புதுவைமன்னன்"
"பார்மலிதொல்புதுவைக்கோன்"
"வீரணிதொல்புகழ்விட்டுசித்தன்"
"குழற்கோதைமுன்கூறியபாடல்"
"வழுவாததொல்புகழ்வண்குருகூர்ச்சடகோபன்"
"வண்குருகூர்ச்சடகோபன்முந்தையாயிரம"
"தொண்டாயதொல்சீர்வயன்மங்கையர்கோன்கலியன்"
"பாரணிந்ததொல்புகழான்கலியன"
"நன்றாயதொல்சீர்வயன்மங்கையர்கோன்கலியன்"

என்பவை இவ்வாழ்வார்கட்குத் தொன்மைபிறந்தகாலத்தில் இச்சாற்றுப் பாக்கள் உண்டானதைக்காட்டும் எனக்கூறினர்.

'தொல்புகழான்விட்டுசித்தன்' என்பதில், 'தொல்புகழ்' என்பதற்கு அநாதியானவாழ்த்தென்பது பொருளாம். ஆசி,வணக்கம்,புகழ், வாழ்த்து எனபன ஒருபொருட்கிளவி. கடவுள் அநாதியாகலான் அவனைவாழ்த்து அநாதியாயிற்று. புகழான்விட்டுசித்தன் என்பது அவ்வாழ்த்தை யுடைய விட்டுசித்தன் என்றவாறு. அஃதாவது அவ்வாழ்த்தைச் சொல்லுமவரென்றபடி. ஸநாதனதர்மத்தைக் கைக்கொண்டொழுகுமவர் களை ஸநாதனதர்மிகளென வழங்குவதோர் வழக்குண்மை கண்டா மன்றே? ஸநாதனத்வம் தர்மத்திற்குளதாமேயன்றி அதைக் கைப்பற்றி யவர்கட் கின்றும். அவ்வாறே, தொல்சீர் சிருக்குவிசேடணமாவதனறிச் சீரையெடுத்துரைப்பார்க்கு விசேடணமாகாது. இனி, 'பார்மலி தொல் புதுவைக்கோன்' என்றதில், தொன்மை புதுவைக்கடைமொழியாய்நின்ற தால், அப்பாட்டு பின்னகர்த்துருகமாகமாட்டாதெனக்கொள்க. 'குழற் கோதைமுன்கூறிய' என்பதில் முன் என்றது இங்குப் புராதனவசன மன்று. பூர்வசப்தபர்யாயமாய்ச் சாற்றுப்பாட்டுக்கூறுவதனமுன்பு

கூறினமையை விசேடித்து அவ்வழியாகப் பாடல்பத்திற் கடைமொழியாய்நிற்றலால் இதுவும் பின்னர்த் தருகமாகவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை. அப்பாடல்கள் ஸமானார்த்த நாமமாகக் கொள்வதில் விரோதமில்லை. 'வீரணிதொல்புகழான் விட்டுசித்தனை' என்பது வீரப்பாடுற்ற அநாதியான வாழ்க்கைக்கும் விட்டுசித்தனென்றபடி. ஈண்டு வீரப்பாடென்றது இந்திரியஜயத்தை. 'முந்தையாயிரம்' பழமையான வேதார்த்தத்தை வெளியிட்ட ஆயிரம்பாட்டு என்க. அன்றியும், வேதார்த்தங்களை வெளியிடுவதில் முற்பாடுடைய ஆயிரம்பாட்டு எனினுமமையும். இனைய தொன்மைக்கும் சொற்பொருளொற்றுமையாற் பொருளின் றொன்மை சொன்மேனின்றதெனக் கொள்க.

௧௪. நாலாயிரப்பிரபந்தங்களின் சாற்றுப்பாக்களனைத்தும் கி. பி. 9-ம் நூற்றாண்டிலிருந்த நாதமுனிகள் காலத்திற்குப்பின்பும், கி. பி. 12-ம நூற்றாண்டிலிருந்த இராமாநுஜர்காலத்திற்கு முன்பும் ஏற்பட்டிருத்தல் வேண்டுமென ஆராய்ச்சிமுடிவு கூறிற்று.

நாதமுனிகளிருந்த வீரநாராயணபுரத்திற்கு யாத்திரைவாசிகளாகிய சில ஸ்ரீவைஷ்ணவர்கள் சென்று அங்கெழுந்தருளியிருக்கிற பெருமானையடிவணங்கி "ஆராவமுதே" என்ற திருவாய்மொழிதொடங்கி,

"உழலையென்பில்பேய்ச்சிமுலையூடவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்டகுருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொன்னவோராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார்காமர்மானேய்நோக்கியர்க்கே" (48—11)

என்று சாற்றுப்பாட்டையும் பாடிமுடிக்க அதுகேட்ட நாதமுனிகள் அவ்வைஷ்ணவர்களையழைத்து நீவிர் பாடிய இறுதிப்பாட்டில் ஆயிரத் துளிப்பத்தும் என்று வந்துளதே? உங்கட்கு ஆயிரம்பாட்டும் தெரியுமோவெனவினவ அவர்கள் எங்கட்கு இப்பத்துப்பாட்டுமாத்திரமே தெரியுமென்றனரெனக் குருபரம்பரை புகலாநிற்கும். இதனான் நாதமுனிகள்காலத்திற்கு முன்னரே சாற்றுப்பாக்களிருக்கின்றன என்பது போதரும். போதரவே நாதமுனிகள்காலத்திற்குப்பின் சாற்றுப்பாக்களுண்டாயிருத்தல்வேண்டுமெனக்கூறியது சரியன்றெனவிடுக்க.

ஆ. அரங்கராமாநுஜப்பிள்ளை,
தலைமைத்தமிழ்ப்பண்டிதர், சேதுபதிஹைஸ்கூல், மதுரை.

புத்தகமதிப்புரை.

க. விமலாதேவியென்னும் சரித்திரசம்பந்தமாயுள்ளதொரு தமிழ் நாவல் :—இது, சாத்தூர் ஹிந்துநாடார்கள் நிறுவி நடத்திவரும் எட்வர்டு உயர்தரவித்தியாசாலைத்தலைவர் ஸ்ரீமத். V. K. ராமமேனன் B.A., L.T., அவர்கள் மலையாளத்தில் எழுதியதன் தமிழ் மொழிபெயர்ப்பாகப் பாண்டுரைச் சார்ந்த சேந்தமங்கலத் தள்ள பாளயம் பாலிகாபாடசாலைத்தலைவரான ஸ்ரீமத். R. அப்பாத்துரை ஐயரவர்களால் எழுதப்பட்டது. இதனைத் திருச்சியிலுள்ள தேசீயகலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் பார்வையிட்டு ஆகவேண்டிய விஷயங்களைச் சேர்த்துப் புதுப்பித்து மிகவும் திருப்திகரமாய்ப் பதிப்பித்திருக்கிறார்கள். இது சரித்திரசம்பந்தமான விஷயங்களைக் கொண்டு தெளிவான தமிழ்நடையில் யாரும் விரும்பிப் படிக்கும்படி யெழுதப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. ஸ்ரீமத். ம கோபாலகிருஷ்ணையரவர்கள் தாம் எழுதிய பல புத்தகங்களையும் அச்சிட்டுத் தமிழ் பயில்வார்க்குதவிவருவதோடு பிறரெழுதுமவற்றுள் நல்லனவற்றைத் தெரிந்தெடுத்துப் பரிசோதித்து அச்சிடுவிக்கும் ஊக்கமும் உழைப்பும் பாராட்டத்தக்கன. இப்புத்தகத்தின்விலை ரூ. 1–2 வேண்டுவோர் ஸ்ரீ த. இ மா கோபாலகிருஷ்ணக்கோனார், புத்தகவியாபாரி, புதுமண்டபம், மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

உ. நாலடியார் :—இதன் 25ம் அதிகாரம் முதல் 36ம் அதிகாரம் முடியவுள்ள செய்யுள்களுக்குத் திருச்சி நேஷனல் வித்தியாசாலைத் தமிழ்ப்பிரசங்கியாரான ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்களால், பதவுரை, குறிப்புரை, கருத்துரை முதலிய எழுதப்பட்டு ஆங்கிலகலாசாலையுயர்தரமாணவர்களுக்கு மிகவும் உபயோகமாகும்படி பதிக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் ஸ்ரீமத். இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார், புத்தகவியாபாரி. புதுமண்டபம், மதுரை என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ங. மேருமந்தரபுராணம்:– இது. வீரர் ஸ்ரீமத். கு. அப்பாசாமி சாஸ்திரியாரியற்றிய உரையுடன் சென்னை பிரஸிடென்ஸி கலாசாலைத் தத்துவசாத்திரபோதகாசிரியரான ஸ்ரீமத். அ. சக்கரவர்த்தி M.A., I.E.S,

அவர்களால் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்நூலாசிரியர்வரலாறு காலம் முதலியனவும், ஜைனசமயக்கோட்பாடுகளும், பிறசமயக்கோட்பாடுகளும் மேருமந்தரபுராணக் கதைச்சுருக்கமும், ஸ்ரீபுராணத்திலுள்ள மேருமந்தரபுராண மணிப்பிரவாளப்பகுதியும் நன்குவெழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் ஜைனசமயக்கோட்பாடறியவும், தமிழ்கற்கவும் விரும்புவோர்க்கு மிகவும் பயன்படத்தக்கது. இதன் விலை ரூபா ஆறு. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கெழுதிப் பெறலாம்.

௪. கண்ணப்பர் கலம்பகம்:—இது, புதுவைக் கவர்ன்மெண்டுக் கல்விச்சாலைத் தமிழ்ப்பண்டிதரும், தமிழ்மகவுப்பத்திராதிபருமான ஸ்ரீமத். வீ. துரைசாமிமுதலியாரவர்களாற் கலம்பகவுறுப்புக்களமையச் செவ்விய செய்யுள்களாற் செய்யப்பட்டிருக்கிறது. இதற்குப் பல சிறந்த பண்டிதர்களாற்கொடுக்கப்பட்ட சிறப்புப்பாயிரமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இலக்கணமுறையானமைந்த சிறந்த பிரபந்தங்களியற்றும் புலவர்களருகிய இக்காலத்தில் இப்பிரபந்தமியற்றிய முதலியாரவர்களது செய்யுளியற்றுந் திறமை பாராட்டத்தக்கது. இதன் விலை அணா மூன்று, வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

௫. மணிமேகலை (30-வது பவத்திறமறுகெனப்பாவைநோற்ற காதை மூலமும் உரையும்):—இது; சென்னையிலுள்ள தென்னிந்திய பௌத்தசங்கத் துணைத்தலைவரான பிரம்மை ஸ்ரீமான் சி. மாணிக்கம் அவர்களால் எழுதப்பட்டு, அப்பௌத்தசங்கத்தலைவரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பதார்த்தவிஞ்ஞானசாத்திர போதகாசிரியருமான புலவர் ஸ்ரீமத். P லக்ஷ்மிநரசு B.A., அவர்களாற்பரிசோதிக்கப்பட்டு அச்சிடப்பட்டது. இதனாற் புத்தசமயக்கோட்பாடுகள் தெளிவாயறியத்தகும். இவ்வாறு புத்தசமயநூல்களைத் தாம் பரிசோதித்துப் பதிப்பிக்க முன்வருதல் பாராட்டத்தக்கது. இதன் விலை அணா ஆறு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

௬. பிரசங்கரத்தினதீபம்:—இது, யாழ்ப்பாணத்து உடுவில் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். வ. மு. இரத்தினேசுவரையரவர்களால் எழுதியச்சிடப்பட்டது. மகிபாலன்பட்டிவித்வான் மு. கதிரேசச்செட்டியாரவர்களால் முகவுரையும், மற்றும் பல தக்கபண்டிதர்களால் நன்மதிப்பும் கொடுக்கப்பெற்றிருக்கிறது. சைவசமயப் பிரசங்கஞ்செய்பவர்களுக்கும் பிறர்க்கும் பயன்படத்தக்கது. இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

உ

செந்தமிழ்.

தொகுதி உக.] ருதிரோற்காரி-ஹு ஆவணிமீ [பகுதி கo
Vol-XXI. August-September-1923. No. 10.

பலகவித்திரட்டு.

(சoச-ம் பக்கத்தொடர்ச்சி.)

தருமபுர ஆதீனத்திலிருக்கிறசமாதியை யொருசோழராசன் வரும் வழியிற்கண்டு கோயிலெனக்கும்பிட்டவுடன் கோயிலன்றெனத்தெரிந்து சமாதியை இடித்துவிடச்சொல்ல, அப்படியே வேலைக்காரர்வந்து இடிக்கும்போது, அப்போதிருந்த தேசிகசுவாமிகள் பின்வரும் வெண்பாவைக் கூற வேலைக்காரர் இடித்தவிடத்திலே இரத்தம்புறப்படக்கண்டு இடிப்பதைவிட்டோடி அரசனிடம் தெரிவிக்க, அரசன் பயந்துவந்து பணிந்து சிலகிராமங்களைத் தானஞ்செய்தானென்பர். தேசிகசுவாமிகள் கூறிய கவி வருமாறு:—

ஈசன்பலவீனனென்றக்காலாலயத்தின்
மோசம்வருமென்றுமொழியலாம்—ஈசன்றான்
ஆக்குவதுஞ்செய்தேயழிப்பதுவுஞ்செய்தக்கா
ளேக்குவதென்னும்பிறரைநொந்து.

தருமபுர ஆதீனத்திலிருந்த ஒரு சின்னப்பண்டாரசந்நிதி தம் வயலுக்குத் தண்ணீர்விடாமையால் வருத்தமுற்றுக் கூறியவெண்பா.—

சைவசமயஞ்சமயமெனிலச்சமயத்
தெய்வம்பிறைசூடுந்தேவெனின்—லைவரைவென்
றுனந்தவெள்ளத்தழுந்துவதேமுந்தியெனில்
வானங்கள்பெய்யாவீர்மழை.

இவ்வெண்பாவைக் கூறியவுடனே அவ்வயலுக்குமாத்திரம் மழை பெய்தது. அவ்வயல் இப்பொழுது திருநெல்வேலியிற் புகைவண்டிநிலய மாக இருக்கிறது.

திருவாவடுதுறையாதீனத்திற் றசகாரியஞ்செய்த தெக்ஷணாமூர்த்தி தேசிகரியற்றிய வெண்பா:-

சலக்குழியின்மிக்கசகதியிலேயங்கச்
சலக்குழியையின்பமெனச்சார்ந்தச்—சலக்குழியைக்
காமித்தார்தங்களுக்குக்காட்டாமனல்லறிவைச்
சேமித்தானன்றோசிவன்.

தடிக்கம்பு கையிலிருப்பதனாலாகும் பயன் கூறியகவி:—

முள்ளரிக்குநாயடிக்குமோடுபள்ளந்தான்றெரிக்குங்
கள்ளருக்குமெண்ணாங்கலக்குமே—மெள்ள
வடிபெடுக்கமாட்டார்க்குமாதாரமாகுந்
தடிகையிலேயிருக்கிற்றான்.

உண்ணுமிலைக்குக் கூறியகவி:-

வாழையிலேபுன்னைவளர்தேக்குமாப்பலாத்
தாழையிலேயூணையிலேதாமாகும்—வாழையிலே
தண்டுரித்தாலாகாது தார்வேந்தர்க்காணாலும்
பண்டுரைத்தார்நூலின்பயன்.

வீட்டிற் சுவர்விளக்கிற் பலனறியக் கூறியகவி:-

குடதிசைதனத்தைப்பண்ணுந்துணதிசைவிளக்கினுசம்
வடதிசைவிளக்கினன்மைவலியதோர்சாவுதெற்கா
கடலையிற்படுத்துமங்கிரவதிநிருதிகாட்டு
முடலினைப்பிளக்குமீசனுறுசாவுவடமேற்காமே.

கறையானெழும்புவதா லுண்டாம்பயன் கூறியகவி:-

செஞ்சிதனுறிற்கிழ்த்தொழுவெனிற்காலிசேதமாமடிக்கவீரிச்சான்
மஞ்சமதின்கிழ்விபாதியாங்கோயிலு மணிமன்றமாதவத்தோர்
மிஞ்சிவாழ்பள்ளியதிலெழுமாகின்மிகவுநெடுங்கேடாகும்
பஞ்சின்மெல்லடியாய்நடுமனைபெழுமேற்படுமெரியெனப்பகர்ந்தனரே,

பல்லிவிழ்பலன்கூறிய கவிகள்:—

உச்சியிற்சிலுகுபிடரியின்மரணமுயர்நெற்றிபயம்புருவத்தின்
மெய்ச்சிறைகலகம்வலச்செவிசெல்வமிடச்செவிலாபமீக்கண்ணோ
லச்சமில்சுகமோதாடியேற்கூறைவலக்கலோலவனியாள்பவனுஞ்
செச்சையாரிடத்தோளிறைபயநாசிசேர்பிணிமேலிதழ்மோசம்.

மோசமில்குக்கிகுமாருக்காகாமொழிவலத்துடைமகவுண்டா
மேசிலாவிடதுதுடைதிரிபோகமிடதுமுன்காலத்தநாச
மாசிலாமார்புபுத்திரனுண்டாமண்ணினிற்றன்மூனேல்வதுவை
கோசரவலக்காலிலம்புலஞ்சாருங்கூறியபல்லிவிழ்பலனே.

பாஞ்சாலங்குறிச்சி வித்துவானொருவர் வேற்றூர்க்குப்போயிருந்த போது ஒருவர் உங்கள் ஜமீந்தாரும் இறந்தனரேயென்றிழித்துக்கூற அவ்வித்துவான்கூறிய கவி:—

மனுவிறந்தனன்மாந்தாதாதுஞ்சினன்வானவர்முடிசாயத்
தனுவளைத்தபோர்முசுகுந்தன்றுஞ்சினன்றசரதன்சமைந்தற்று
னினிநமக்கெனவிரவியுமதிபமூமிலங்கையிற்புகவிட்ட
புனிதவெஞ்சிலைராமனும்போயினானினிப்பொன்றுதார்.

ராக்கன் என்னும் ஒருவனை ஒருவித்துவான் புகழ்ந்துபாட அவன் இந்தக் கற்பனைக்கவியை ஒப்புக்கொள்ளமாட்டேன்; உள்ளதைச்சொன்னாற்றருவேனென்றுசொல்ல உடனே வேடிக்கையாக அவ்வித்துவான் கூறிய கவி:—

பாக்காவதுகமூகம்பழம்பருப்பாவதுதுவரை
மேற்காவதுகிழக்கேநின்றுபார்த்தாலதுதெரியு
நாற்காதமுமிருகாதமுநடந்தாலறுகாதம்
ராக்காவுனைக்காத்தேன்ரக்ஷிப்பாயோபக்ஷிப்பாயோ.

பதினெட்டுத் துட்டுக்கொடுத்த முத்துக்குமாரசுவாமிமீது ஒரு புலவர்கூறிய கவி,—

முந்தப்பாட்டுக்குச்சிதக்காதித்துரைமோதிரங்கொடுத்தான்குழி மீதினிற், சந்தப்பாட்டுக்குக்காளத்தியப்பனுஞ்சர்ப்பமாமணியீந்தனனே ரத, பந்தப்பாட்டுக்குஞ்சிட்டுக்கவிதைக்கும்பதினெட்டுத்துட்டுத்தந்

நிட்டபாண்டியா, சொந்தப்பாட்டுக்கும்வீட்டுக்குமென்செய்வாய்சொல்லு முத்துக்குமாரசுவாமியே.

திருநெல்வேலிக்குத் தெற்கிலுள்ள ஓமநல்லூர் அநந்தபற்பநாப பிள்ளையிடம் ஒரு புலவர்கூறியகவி:—

குலைவைக்குஞ்செந்நெல்வயனல்லூர்ச்சங்காமூர்த்திகுமாரமன்னர்
தலைவைக்குங்கிள்ளாக்கையநந்தபற்பநாபாவென்றன்மைகேளாய்
விலைவைக்குங்கடையரிசிவாங்கியுண்ணமுடியாதென்வீட்டிலிப்போ
துலைவைக்கச்சொல்லிவந்தேனெற்கொடுத்தாலரிசிகுத்தியுண்ணலாமே.

இதைக்கேட்ட அப்பிரபு புலவர்வீடுநிறையநெற்கொண்டுகுவிக்கும் படி செய்ய அதையறிந்த புலவர் பின்புகூறிய கவி:—

எந்தக்காலமுமநந்தபற்பநாபன்சுகமாயிருக்கவேண்டும்
வந்தக்காலவன்றனக்கேமகத்தானபெருஞ்செல்வம்வரவும்வேண்டும்
பந்தறகால்போலுயர்ந்துபருத்திருக்குமடையர்களைப்பாடிப்பாதி
தந்தக்காலென்னதாராதிருந்தக்காலென்னசொல்லுந்தமிழ்சொல்வீரே.

ஒருபழங் கவி:—

நறைபட்டதொங்கலழகப்பூபதிநாமஞ்சொல்லி
முறையிட்டபோதவன்பாரியெறிந்தமுறத்திருகா
தறைபட்டுவீணையுடைபட்டநாளுமவிடம்விட்டுப்
பறிபட்டுவந்ததென்பாரிமுன்னாட்செய்தபாக்கியமே.

திருவாழிடம்:—

முல்லைநறுமலருடனேபதுமஞ்சங்கமொழிதருவெண்கவரிகுடைமூரியானை
சொல்லரியசவுரியன்பத்தினிப்பெண்மெய்யன்றூயமனைகண்ணாடிகளபச்சேறு
வெல்லவருபதாகைபரியாவின்பீட்டம்வேசைமுகமரசர்பதிவிளக்குச்செம்பொன்
செல்வவளஞ்சிறந்தோங்குமிடங்கடோறுஞ்செந்திருவாழிடமென்னச்செப்பலா
[மே.

சத்தாங்கவரிசை:—

பஞ்சலோகமாத்ரம்பலதானியங்கேத்திர
மிஞ்சுமணிவாகனம்வெப்பதிலே—பஞ்சணை
வைத்தாங்குவந்தகவிவாணருக்குப்பூவேந்தர்
சத்தாங்கஞ்செய்வரிசைதான்.

சந்திரனுக்குத் தேர் கொடி குதிரை சாரதி யுண்டென்பது:—

வெண்குதிரைபத்துவிளங்குமயிலின்றாவி
நண்ணுகொடிப்பாகநாட்டியே—விண்ணுலகிற்
சங்கவண்ணான்றேரூரத்தாவிருந்தான்றிங்களுமே
யெங்கொளிப்பேன்மாதேயினி.

சேற்றூர்ச்சமீந்தார் சுந்தரதாசுத்துரைசெய்த பாரதப் பிரசங்கத்தை வியந்து அவர்க்குக் கல்விகற்பித்த ஆசிரியரும், ஸம்ஸ்தானவித்துவானுமாகிய இராமசாமிக்கவிராயர்கூறிய கவிகள்:—

சொல்லவரையாருளுஞ்சுந்தரதாசேந்த்ரசிங்கஞ்சொலும்பிரசங்கம்
வெல்லவரைமீதுமதுப்புயல்பொழிதற்கதிகமெனவிளம்பன்மெய்யே
கொல்லவரைசேதுவரைகுமரிவரையுறைகவிஞர்க்குள்ளிவன்போல்
வல்லவரையாங்கண்டுவரையுமறிந்திலமறிந்தோர்வழுத்தலாமே.

தனங்கொடுத்துந்துகில்கொடுத்துஞ்சந்ததமுமற்றவர்வதனம்பாராம
லனங்கொடுத்துந்தன்பிரசங்கமறிந்துமெய்க்கின்றோர்க்கின்றாலென்றெற்குங்
கனங்கொடுத்தசுந்தரதாசேந்திரற்கெண்டிருவும்பாற்கடல்போன்மேன்மே
லினங்கொடுக்கத்தவம்பெற்றுள்சீரடிப்போதெப்போதுமிறைஞ்சுவேனே.

அவர்பிரசங்கத்தை வியந்து ஊற்றுமலைச் சமஸ்தானவித்துவான் முத்துவீருப்புலவர்கூறிய கவி:—

அக்காலத்திற்கும்பன்கம்பனருந்தமிழின்
மிக்கானவரென்றுவிள்ளுவார்—இக்காலத்
திந்துமுனந்தாரகைபோலின்றமிழ்க்குக்குன்றுவார்
சுந்தரதாசேந்த்ரதுரைக்கு.

திருவாவடுதுறையாதீனமஹாவித்துவான் தாண்டவராயசுவாமிகள்மீது சென்னையிலிருந்த வித்வான் மஹாலிங்கையர்கூறிய கவி:—

விரிந்தமகாலயத்துமின்னுளுக்கணியாகிமேம்பாடுற்றுப்
பரிந்தசிவயோகியர்வாழ்துறைசையுளாயிருகலையின்பண்பைநன்கு
தெரிந்ததாண்டவராயமாதவசித்தாந்தமுணர்செல்வாநின்னைப்
பிரிந்ததனுன்மணியிழந்தகண்ணதுபோல்வாடுகின்றேன்பேதையேனே.

சேற்றூர்ச்சமஸ்தானவித்துவான் இராமசாமிக்கவிராயர் தமது நிரியாணதசையிற் றம்மைப்பார்க்கவந்த பாண்டித்துரை மீது கூறியகவி :—

முன்பாண்டிப்புரவலனுஞ்சங்கம்வைத்தோர்சாமமதின்முடக்கிவிட்டான்
இன்பாண்டித்துரையோசங்கப்புலவர்தனிகரெனவிருத்தற்கெண்ணித்
தன்பாண்டிறனைநடத்திப்பொருடேடிக்கொண்டுவந்துதந்துகாத்தே
யென்பாண்டியெனுங்கடவுடிருவருட்செல்வமுமெய்தியிருக்கின்றானே.

[பாண்டிப்புரவலன்—பாண்டியராசன். ஓர்சாமம்—1. ஒரு பஞ்சகாலம். 2. ஒருசாமநேரம். தனிகரென—1. தனக்கொப்பாக 2. பொருளுடையரென. தன்பாண்டில்—தனது ஆக்கினைசக்கரம்.]

இதைக்கேட்டபாண்டித்துரை மிகவியந்து, நான்சொல்லுகிற சொல்லைக்கருதாது கருத்தைமாத்திரங்கருதவேண்டுமென்றுசொல்லிக் கொண்டு, "மழைக்காலிருட்டானாலும் மந்திகொம்பிழக்கப்பாயாது" என்றபழமொழிபோலக் கவிராயரவர்கள் நிரியாணதசையிலும் கவிசெய்யும் வல்லமையிற் குறையாதிருக்கின்றார்களென மகிழ்ந்துரைத்தார்கள்.

எட்டையபுரங் கடிகைமுத்துப்புலவர் வெளியேபோயிருந்தபோது ஒருபுலவர் பாடிவந்தபிரபந்தத்தை அங்குள்ளவித்துவான்கள் அரங்கேற்றியதை, வந்துதெரிந்தபின் அப்புலவர் கூறியவெண்பா :—

சிங்கமிருந்து திறஞ்செலுத்திக்கொண்டுவருஞ்
சங்கமெனுமெட்டபுரந்தன்னிலே—யெங்களுடை
யெட்டாகுமாரெட்டாயாளில்லாமற்பயல்க
ளிட்டசட்டமாய்விட்டதே.

சேற்றூர்ச்சமீந்தார் திருக்குற்றாலத்துக்குப்போயிருந்தபோது பாரதப்பிரசங்கஞ்செய்யக்கேட்டுச் சமஸ்தானவித்துவானாகிய இராமசாமிக் கவிராயர்கூறியகவி:—

திடபுருடசிங்கமெங்கள்சுந்தரதாசேந்திரன்முன்செயும்பிரசங்கம்
வடவருவியென்பாருமேற்போமாசெவிக்கினிக்குமாமுந்நீர்சூழ்
புடவியெங்குந்தொனித்திடுமோபன்னூலையாராய்ந்தபுலவீரென்று
முடலழுக்கையொழிப்பதன்றியகத்தழுக்கையொழித்திடுமோவுரைசெய்வீரே.

[இக்கவி சொல்லிவரும்போது உடலழுக்கையென்றுகூறிப் பின்வருவதுசொல்லுமுன்னே அறிந்து ஜமீந்தார் சபாசெனக்கூறினார்; அங்ஙனங் கூறியவுடன் அதற்காகமகிழ்ந்து கவிராயர் பின்வருங் கவியைக்கூறினார்.]

முன்னமுபாங்கமன்னன்கவிகேட்டுச்சிரமசைப்புமொழியுமலக்கம்
பொன்னெனச்சொல்லும்புலவீர்சுந்தரதாசேந்திரனைப்போலப்பாவின்
பின்வருங்கற்பனையிஃதென்றறிந்துசபாசென்பதுண்டோபேசுங்காலிம்
மன்னரிருவரிலெவரேதமிழ்த்திறமுற்றுந்தெரிந்தோர்வழுத்துவீரே

[உபாங்கமன்னன் என்றது உடையார்பாளையத்துச்சமீந்தாரை].

அச்சேற்றூர்ச்சமீந்தார் திருக்குற்றாலத்திலிருந்து சேற்றூருக்கு வந்தபோது காணவந்த அக்கவிராயர்கூறியகவி :—

தேவருக்கையுறுதலினுற்றிருவனிறையாயிருக்குஞ்செயலாலென்று
மாவலுடன்சம்பகக்காவலர்வாசமுறவிருக்குமதனுலிந்தப்
பூவிலுயர்சித்ரசங்கம்பொருந்தியதாற்குற்றாலம்போற்சேற்றூரை
நாவலரோடெண்ணியுனைச்சுந்தரதாசேந்த்ரவிங்கோநாங்கண்டோமே.

இதில், திருக்குற்றாலத்தைக்குறிக்கும்போது, தேவருக்கை—தெய்வத்தன்மையுள்ளபலா. திருவனிறையாயிருத்தல்—திருமால் சிவபிரானுயிருத்தல். சம்பகக்காவலர்வாசம்—சண்பகாடவியின் பூவாசனை. சித்திரசங்கம்—சித்திரசபை என்றும், சேற்றூரைக்குறிக்கும்போது, தேவருக்கை—தேவமாருக்கழகு. திருவனிறையாயிருத்தல்—திருவனென்னும் பெயரையுடையான் அரசனுகியிருத்தல். சம்பகக்காவலர்வாசம்—சம்புவாகிய சிவபிரானை அகத்திற்கொண்ட அரசர்கள் இருப்பிடம். சித்திரசங்கம்—ஆச்சரியமுள்ள வித்துவக்கூட்டம், என்றும் பொருள்கொள்க.

பெரியகுளந்தாலூகா இரசக்கநாயக்கனூர்ச்சமீனைச்சார்ந்த ராயப்பன்பட்டி ராயப்பவுடையார்மேல் அக்கவிராயர்கூறியகவி :—

அநந்தபற்பநாபன்மன்றுளாடிமுதற்செல்வரெலாமகத்துமெச்சக்
கனந்திகழக்கொடுத்தவரென்றுரைசெய்வாரவர்தம்மைக்கருதுங்காலைத்
தினங்கவிசொல்வோர்க்குமிகுவாசிகொடுப்பாயுனைப்போற்செய்தாரோவிற்
பனம்பொருந்துராயப்பேந்திரவுடையாயுனையவர்போற்பகரொணுதே,

இக்கவிகேட்டு உடையார் கவிராயருக்கு ஒரு குதிரைகொடுத்து அவருடன் வந்திருந்த அவர் குமாரர் சுப்பிரமணியக்கவிராயர் அப்போது சிறுபிள்ளையாய் நிகண்டுமுதலியனகற்றுக்கொண்டிருந்தமையால் அவரை அப்பாடங்களில் உடையார் பரீக்ஷித்து மெச்சிக் 'குட்டிக்கவிராயர் இந்தக் குட்டிக்குதிரையைப்பெறுக' என்று ஓர் குதிரைக்குட்டி கொடுத்தார், அப்போது ஷை சுப்பிரமணியக்கவிராயர்கூறியவெண்பா :—

குட்டிக்குதிரையினைக்குட்டிக்கவிராய
ரிட்டமுடன்கொள்கவென் றீந்ததனால்—வட்ட
வுலகுபுகழ்ராயப்பாவொன் றல்லவாசி
பலவாகக்கொள்வனினிப்பார்.

[வாசி—குதிரை ; இலாபமுமாம்.]

௸ இராமசாமிக்கவிராயர் தம் தமயனார் கந்தசாமிக்கவிராயர் பொருளால் முகவூரில் நாயக்கமார்தெருவின் மேல்புறமந்தையில் ஒரு விநாயகர்கோயில் கட்டத்தொடங்கும்போது நாயக்கமாரிற் சிலர் தடுக்க, உடனே ஸ்ரீவில்லிபுத்தூரில், தாசிலதிகாரமும் மேஜிஸ்டிரேட் அதிகாரமும் பெற்றிருந்தசரவணமுத்துப்பிள்ளையிடம் கவிராயர் கூறிய பிராதுக் கவிகள் :—

மன்னவநின்றிருமுகத்தைக்கண்டமடவார்கரத்துவளைபோகாமன்
முன்னமொருதடையிடுவதியற்கையன்றியொருதருமமுடிக்கும்போது
பின்னமுறத்தடையிடுதெனின்னதிகாரத்துமுண்டேற்பிறர்யார்காப்பார்
பன்னுதமிழருமையறிசரவண்முத்தேந்திரசம்பனபூமானே.

அரக்கரைவென்றவனெனச்சொல்சரவணமுத்தேந்திரநின்னதிகாரத்தி
லிரக்கமில்லாதவர்களுக்குஞ்செல்வருக்குங்கலகமுண்டாமிதுவல்லாலோர்
வருக்கொருவர்கலகமியற்றுதபடியொடுக்கியதைமறந்துசெய்யுங்
குரக்குமனத்தரையொடுக்கவுத்தரவுகொடுத்துச்சீர்கொள்கநீயே.

[கலகம் கல்லையொத்தமனமென்றும் கல்லாலாகியவீடு என்றும் பொருள்கொள்க.]

பிள்ளையவர்கள் எதற்காகத்தடுத்தார்கள் என்றுகேட்டபோது கவிராயர்கூறியகவி :—

இக்கடவுண்முகந்தூங்கலடிக்கடிநாம்பார்ப்பதனுக்கெட்டாதென்றோ
தக்கநற்சிற்றுண்டிபெருவயிறுநிரம்பாதென்றோசந்தியெல்லா
மிக்கவுந்தன்வாகனத்தானமதகத்தைத்துளைப்பனென்றோவிலக்குதற்கே
யக்கரையுற்றனர்தவஞ்சேர்சரவணமுத்தேந்த்ரமன்னுவறைகுவாயே.

இதனைக்கேட்டபிள்ளையவர்கள் உடனே அவர்களைக் கண்டித் தடக்கிக் கோவிலைக் கட்டும்படிசெய்தார்.

யாழ்ப்பாணவடகோவைச் சபாபதிநாவலர் தேவகோட்டையிற் பிரசங்கம் செய்தபோது வித்துவானாகிய வன்றொண்டச்செட்டியாரை மதியாதுரைத்ததுகேட்டு, வெம்பந்தூர்ப் பிச்சுவையர் பின்வருங் கவியைக்கூற உடனே சபை கலைந்துவிட்டது.

நதியோகடலைப்பொருவது நாளுக்குநாட்குறையு
மதியோகதிரவனையொளிமாய்ப்பதுமத்தெறிதண்
டதியோமத்திற்குத்தயிரியஞ்சொல்வதுதாழ்ந்தசபா
பதியோநம்வன்றொண்டர்முன்பாற்பிரசங்கம்பண்ணுவதே.

பண்டாரமென்னும் பட்டப்பெயருடைய ஒரு தேசிகனும் ஒருசெட்டியாரும் சிநேகமுற்றுத் தலயாத்திரை செய்துவரும்போது பண்டாரத்தின் சுவாமிக்குப் பரிவட்டமில்லாமையாற் செட்டியாரிடங்கேட்கமுடியாமற் பூசைமுடிவிலே பின்வருங் கவியைக் கூறினார்.

நரிவட்டமிடுங்களத்திலந்தகாசுரனைவென்றநம்பரசெம்பொற்
கிரிவட்டத்தனத்துமையாள்பங்காளாவெளியன்மொழிகேளாதென்னே
கரிவட்டத்தரிபுனைந்தகுறையோநஞ்செட்டியார்கையின்மேவும்
பரிவட்டந்தனினினைவோவேணுமென்றுலவர்கிருபைபாலிப்பாரே.

இக் கவியைக்கேட்ட செட்டியார் பூசை முடிவிலே பின்வரும் கவியைக்கூறினார்; பின் னிருவரும் பிரிந்துபோயினர்.

கொத்தாருங்குழலுமையாள்பங்காளாவெளியன்மொழிகொள்ளாதென்னே
அத்தார்தம்மானையுயரன்னையானையாண்டார்களானையெனதையனானை
பத்தர்களானையுன்றன்பாதத்தானைபண்டாரந்தொண்டைகட்டப்பாடிப்பாடிச்
செத்தாலுமெலும்பெலும்பாக்கழிந்திட்டாலுந்தேவரீர்னுடைமையொன்றுஞ்
செலவிடேனே.

வடகரைச்சமஸ்தானத்துத் தானாபதி பொன்னம்பலம்பிள்ளை விரோதம் நேரிட்டமையாலே அச்சமஸ்தானத்தை நீங்கித் தென்னாடெல்லாம் அதிகாரஞ் செய்துகொண்டிருந்த தளவாய் அழகப்பமுதலியாரிடஞ்சென்று கூறிய கவி:—

தானாபதியென்றபேர்மாத்திரமென்றமிழருமை
யானறிவதுமீமாத்திரமெனக்காதரவு
நானாவிதத்திலுங்காணேனுனைமுற்றுநம்பிவந்தேன்
மானாபரா தொண்டைவேந்தா அழகப்பமன்னவனே.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான்களாகிய கந்தசாமிக்கவிராயரும், இராமசாமிக்கவிராயரும் ௸ சமஸ்தானாதிபதியாகிய முத்துசாமித் துரைபேரிற் குறவஞ்சியென்னும் பிரபந்தம்பாடி அரங்கேற்றியவுடன் இருவரையுஞ் சிவிகையில்வைத்து நகர்வலஞ்செய்விக்கும்போது, தானாபதியாயிருந்த சுந்தரமஹாலிங்கம்பிள்ளை சிவிகைசுமக்க, அப்போது இராமசாமிக்கவிராயர் கூறியகவி:—

செய்தாங்குஞ்சேறைத்துரைமுத்துசாமிசிங்கேறமைச்சன்
மெய்தாங்குசொற்சுந்தரமகாலிங்கவிவேகனென்று
மைதாங்குலகிற்பெருங்கீர்த்திதாங்கிடவாணர்சிவி
கைதாங்கிமிக்கசனந்தாங்கினனெந்தக்காலத்துமே.

முறையூர் ஜமீந்தார் பழ. சி. சண்முகஞ்செட்டியார்க்கு சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரெழுதிய சீட்டுக்கவி :—

சீர்கொண்டசேறையம்பதியிலுயர்நீதியிற்சிவபத்தியிற்பெருமைசேர்
செல்வன்முத்துச்சாமிதுரையவன்சேயெனத்திகழ்பாரதத்துரையெலாந்
தேர்ந்தசுந்தரதாசுதுரையவன்செம்மலாஞ்சேவகப்பாண்டியனெனச்
செப்புமொழிமாருவரிச்சந்திரன்சீர்செழித்தவிம்மூவருக்குஞ்
சேர்வித்துவான்கவிமழைப்புயலெனப்புலவர்தெரிராமசாமிகவிஞன்
சிறுவர்களினடுவாகவந்திபமுகற்கிளையதேவனுமம்புனைந்து
செகமதில்விளங்குநாமெழுதிவிடுபாசுரந்தென்கயிலைகோமுத்தியாச்
சிந்தைகொண்டுற்றன்பருக்கருளவுமைமேவுதிருவுருமறைத்துமனிதப்
பேர்கொண்டவடிவுற்றதேசிகனெனச்சொல்சுப்பிரமணியகுருசாமிதன்
பின்னமசிவாயதேசிகனுதவுகல்வியைப்பெட்பினவ்வாதீனம்வாழ்
பெரியவடியாரேனையோர்கட்குநன்குகற்பிக்கவேண்டுமெனவோதப்
பிறங்குமவ்வாக்கின்படிக்கவணிருந்துபலபேர்க்குமேகற்பித்தனம்
பீடுபெறுமவர்களிற்பலர்கலாசாலையிற்பேசுபண்டிதராயினர்
பின்னரிதிற்கமீனாட்சிசொக்கேசரடிபேணியென்றும்பணிகுவோம்
பெறுநன்றிபிலர்பிதாசோதரர்களாயினும்பெரிதுள்வெறுத்துவிடுவோம்
பிசியுரைக்கிலமீதுரைப்பார்களைநண்பிலோம்பிங்கலன்போற்செல்வராய்
ஏர்கொண்டிருக்கினுங்கல்வியறிவில்லரேலெள்ளளவுமென்றுமதியோம் [லோ
இயம்புமுன்பின்னுள்ளகவிஞர்போற்பொருள்வேண்டியெவர்மீதுநற்கவிசொ
மின்னுநாங்கற்றநூல்யாவுநம்பாற்கற்பரேவரெனவெண்ணுகின்றோ
மினியசிவபத்தியாற்கல்வியானற்குணத்திசைநண்பினுற்றன்னரே.

ரில்லையிந்நாண்மன்னவர்க்குளெனவந்தபாண்டித்துரைதென்மதுரைதன்னில்
இரீஇயநான்காஞ்சங்கமதனிற்கலாசாலையினிலெவருமெச்சும்வண்ண
மிருபொருட்சைவநூற்பரிசோதகப்பெயரையீந்துவைத்தானென்றுமே
யிதுவரையுமோரேழுவருடமாயினதவனிருந்துவாழ்ஞென்றேமுயர்
தார்கொண்டசோலைசூழரிமழந்தனிலிருந்தருளுமீநாட்சிபிள்ளைத்
தமிழெனும்பிரபந்தமதுவொன்றுசெய்தனமதனையரங்கேற்றிவந்தோர்
தயையுடன்றருதலாற்றருமன்மிகுபொருமையாற்றருமன்மாப்போகமதனாற்
றருமனுவலவர்புகழ்தருமன்மிகுபுண்ணியத்தருமன்பிறனுரைக்கத்
தக்கவன்முனென்றுமுறையூர்போலெத்தலத்தாருமேத்துகின்ற
தகைமையோனெனவணிகர்திலகமாயுறுதலாற்சார்ந்துனைக்காணவந்தோஞ்
சண்முகவசிகாகுணாகரதயாபரசலாபசந்தானவள்ளால்
தகுபுண்ணியம்புகழுனக்கெய்திபிலவித்தழைக்குமுலகுளமட்டுமே.

கோமுத்தி—ஆவடுதுறை. பிசி—பொய். பிங்கலன்—குபேரன். சைவநூற்பரிசோதகர்— 1. சைவநூற்பரிசை ஓதும் அகத்தையுடையர். 2. சைவநூலைப்பரிசோதிப்பவர். தருமன்—1. தருமென்றமன். 2. தருமராசன். 3. இந்திரன்.

மானிடராய்வரலரிதுவடிவுகுணங்கல்விசெல்வம்வந்துற்றாலுந்
தானமுஞானமுஞ்சிவநேசமும்பெறுதலரிதாமித்தனையிலொவ்வொன்
றேனையமாப்பிரபுவென்பாரெய்தினர்நீயிவையெல்லாமெய்தப்பெற்றா
யானதனுன்முறையூர்ச்சண்முகவேளிந்நாளுன்பேரதிகந்தானே.

எல்லார்க்குமெலாங்கொடுப்பான்முறையூர்ச்சண்முகவேளென்றிசைப்பார்தச்
சொல்லாகுமுற்றும்மையெரோவழியெச்சப்பொருளுந்தோன்றுமென்ன
நல்லார்சொல்லிலக்கணத்தின்படியமிழ்தத்தமிழறிந்தாண்ணுவல்லீர்
பொல்லாதபகைவர்வரிற்புறங்கொடானென்றுநாம்புகலுவோமே.

உலகுபணிசிவஞானரையிரவலரைமருவலரையுரிமையாக
நலமருவுநல்லாரையன்பினாற்கருணையினனவில்கோபத்தாற்
பலமுதவுமகிழ்ச்சியினாற்பார்க்குமறுமாதர்களெப்பரிசுற்றாலு
மலமருவப்பாராதுமுறையூர்ச்சண்முகவேள்கண்ணுமென்பாரே.

மன்னுமாதவனெனலான்மன்மதனைப்பெறலானுமருவுகல்வி
யன்னபணவரவுமேலுறலானம்பானேயமார்தலாலப்
பன்னுபொறைமேற்கொள்கையான்முத்தமிழூர்கலியகற்றும்பான்மையாலே
தென்னவனுமுறையூர்ச்சண்முகவேளைமுகுந்தனைப்போற்செப்பலாமே.

இதில் முதுந்தலைக்குறிக்குமிடத்து மாதவன்-இலக்குமிநாயகன், மன்மதன்-மாரன், பணவரவு-படத்தையுடையபாம்பு, அம்பானேய மார்தல்-அழகிய பாலும் நெய்யு முண்ணுதல், பொறைமேற்கொள்கை-மலையைக்குடையாகமேற்கொண்டகை, ஆர்கலியகற்றல்-கடலைவற்றச் செய்தல் எனவும், பாட்டுடைத்தலைவனைக்குறிக்குமிடத்து உமாதவனெனலால்-உமாபதியென்று ஜெபம் செய்தலால், மன்மதன்-மிக்கவலி, பணவரவு-பொருள்வருவாய், நம்பால் நேயமார்தல்-நம்மிடத்து அன்பு நிறைதல், பொறைமேற்கொள்கை-பொறுமையைமேலாகக்கொள்ளல், கலிபகற்றல்-தரித்திரத்தைநீக்கல் எனவும் பொருள்கொள்க.

செட்டியார் உங்களையும் உங்கள் தமையனாரையும் என்னிரு கண்மணியாகவைத்திருக்கின்றேன் எனக்கூறியதற்காக ஷை கவிராயர்கூறிய கவி.

என்னையுமென் றமையனையுமுன்னிருகண்மணியாகவிசைத்தாயாங்கள்
உன்றுசிந்தாமணியாகவுன்னையிந்தவுலகமெலாமுரைக்கின்ருேமால்
இன்னவகைநண்புகொண்டசெல்வமுறுவணிகரையுமெந்தநாளும்
பன்றுகவிவாணரையுங்கண்டிலஞ்சண்முகமுறையூர்ப்பதிக்கோமானே.

மாட்டிலக்கண கொண்டிச்சிந்து. ஷை கவிராயர்செய்தது.

திருவளர் சேறைநகர்—அம்மையப்பர்
திருவடி யன்புடன் சிந்தைவைத்து
வருமாட்டிலக்கணத்தை—அறிவுள்ள
மானிடர் மனங்கொள வகுத்துரைப்பேன் (௧)

சோடுதட்டி கால்வாரி—அரைகுளம்பு
சொல்லுமாட்டுக்குளம்பு திருகுகுளம்பு
நாடுகுத்துக்குளம்புடனே—விரிகுளம்பு
நண்ணுஞ் சிறுகுளம்பு குறையெலும்பு (௨)

முன்சுழி விலங்குச்சுழி—பஞ்சைச்சுழி
மூக்கடைப்பன் பாவைச்சுழி தாரைச்சுழி
பின்சுழி பெண்டிழந்தான்—சுழியொடு
பேசும் பொதிச்சுழி கோடைச்சுழி (௩)

இடிச்சுழி வாசகச்சுழி—ஒற்றைநாடி
பேலாத வொருபுள்ளி யானையின்கண்

படித்தவர்சொல் வெள்ளிக்கண்—ஊற்றுக்கண்
பரிய சுழைக்கண்மிகு கடைக்கண்புள்ளி (௪)

ஆலம்பாடி யானைப்பாய்ச்சி—அருங்கழுத்
தானவெக் காலிநீள் குறட்டைவாங்கி
மேலுஞ்சொல் கும்பக்குண்டி—கூம்பற்குண்டி
விளம்பு துறப்புக்குண்டி யானைச்செவி (௫)

பசுமுகஞ் செங்கோலாட்டங்—கூழைவால்
பகர்கின்ற வெடிவா லுதைத்திடுங்கால்
நிசமிவை குற்றமென்று—தெரிந்தவர்
நிகழ்த்தின ரினிக்குணஞ் சொல்லுகிறேன் (௬)

பிடிகொம்பு சன்னக்கொம்பு—கிளிக்கொம்பு
பிறங்கு மூச்சக்கொம்பு குடைக்கொம்பு
வடிவுறு மிரட்டைநாடி—இளரோமம்
வாய்ந்த குறுங்கழுத்துத் தெரிச்சவிழி (௭)

கருங்கண் வெளிச்சி மயிலை—கருமயிலை
கலப்பில்லாமயிலை காண்முன்னுரம்
வரும்பின் னுரம்பருங்கால்—பருங்கண்கள்
மருவும் பருங்குளம்பு பருவெலும்பு (௮)

ஆறுபல் பரியுடம்பு—சிறுதலை
யமைந்த சிறுத்தவால் சிறுகொம்பு
கூறுநற் சிறுநாடி—சிறுவயிறு
கோலச் சிறுத்தசிமிழ் சட்டஞ்சேர்தல் (௯)

வேகநடையுடையடிப்பு—முன்னின்று
மேக்கா லெடுத்திடிற் கழுத்திடுதல்
ஆகிய விவைகளெல்லாம்—இருந்தாலும்
அமைத்திடு புல்லைக்கோ லெதுவேனும் (௰)

எடுத்திடி லாவலுடன்—றின்றுபின்
னெந்தநீர் விட்டாலு மந்தநீரைக்

குடித்நிட வேண்டுமிந்த—நயமான
குணமுடன் பிடிபதின் மூன்றிறுக்கு (மக)

மேலா யிருத்தல்வேண்டும்—இம்மாடே
மேதினி யுழவுக்கும் பண்டிக்குமே

நூலோர்க ளாகுமென்றார்—அவ்வாறு
நுவலிதைத் தள்ளாது கொள்ளுவீரே. (மஉ)

(தொடரும்.) இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான
சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

"தொல்காப்பிய வாராய்ச்சி."

செந்தமிழ் 20-ஆம் தொகுதியின் 498-ஆம் பக்கத்தொடர்ச்சி.

கககூ. மருவின் றொகுதி மயங்கியன் மொழியு
முரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே.

இது பொருள்கோளை நழுவிச் செய்யுட்கண் மருவிமயங்கிய மொழியும் புணர்ச்சிக்குரியது என்றுணர்த்துகின்றது. "அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய" என்றவர் அவ்விருவகைச் சொற்களும் தம்மிற்புணராது பிறசொற்களோடு பொருள்கோள் காரணமாகப் புணரும் என்று கூறுகின்றாராதலின் மேலைச்சூத்திரத்தோடு இஃதியைபுடைத்தாயிற்று.

இ-ள். மருவுதலின் கூட்டங்காரணமாக நிறுத்தசொல்லோடு குறித்துவரு கிளவி நேராகப் புணராது மயக்கம்பெற்று இயலுகின்ற மொழிகளும் புணரும் நிலைமைக்கண் உரியனவுள என்றவாறு.

நிறுத்தசொல்லோடு குறித்துவருகிளவி நேரே மருவாது மயங்கி இயன்றமையானே அம்மொழி "மருவின் றொகுதி மயங்கியன் மொழி" எனப்பட்டது. "அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய" என்ற மைக்கேற்ப அதனின் வேறுபட்ட இதனையுங் கூறுதலே ஏற்புடைத்தாகுமென்க.

"இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற் பரலவ லடைய விரலை தெரிப்ப" எனவும் இஃது இனவொருமைக் தொகுதி ஒன்றே படைத்ததென்னற்க, பால் அவலை அடைதற்கு இரலை தெறித்தல் காரணமாகவிருத்தலின் என்க. இன்ன பலவாகிய நலன்கருதியே நிறுத்தசொல்லுக்கும், குறித்துவருகிளவிக்கும் இடையே பிறவந்து புகுமென்க. இத்தகைய வற்றையெல்லாம் பொருள்கோளை விளக்குமிடத்து விரித்துரைக்குதும். இன்னவை கருதியன்றே பொருள்கோள் என ஒன்று வந்ததென்க.

மருவிவந்தமைக்கு விதிகூறல் அசம்பாவிதமாகும் ஆதலினானும் அங்ஙனம் கூறுதற்குப் புகினும் ஒருவரையறையின்றி மிகப்பல்கி வடமொழியாளர் அணிவகை விரித்தாங்குச் சென்றுதேய்ந்திற்றுவிடும் ஆதலினானும் ஆசிரியர் அவற்றிற்கெல்லாம் புறனடையானன்றி வேறு விதந்து விதிகூறார் என்க. ஆயிற் "பலரறி சோன்முன் யாவ ரேன்னும்" என்றமை குற்ற மாகாதோவென்னின்? ஆகாது; என்னை? அது வினைக்குறிப்புச் சொல்லோடு வேற்றுமைபறிவான விதித்துப் போந்தமையானும், ஆண்டு மருஉமுடிபை விளக்கவந்தமை யன்றாதலி னானும் என்க.

இனி இலக்கணத்தோடு பொருந்திய மரூஉமொழிகளையும், இலக் கணமல்லா மரூஉமொழிகளையும் எவ்விதிகொண்டு அமைப்போம் என்று ஐயங்கொள்ளற்க, "வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்", "அன்னவை யெல்லா மருவின் பாத்திய-புணரிய னிலையிடை யுணரத் தோன்று" என்றாங்கு வரும் புறனடைகளானும், பிறவற்றானும் அவை யெல்லாஞ் செவ்வே அமைதலின் என்க.

இனி, மண்ணாங்கட்டி, கானங்கோழி, வடசார்க்கூரை, மேல்சார்க் கூரை, கல்லாம்பாறை என்பனவற்றை "உணரக் கூறிய புணரியன் மருங்கின்" என்னும் சூத்திரத்தானும்; அருமந்தான், சோணாடு, தொண்டைநாடு, மலாடு, பொதியில், முதலாயினதம்மை அதிகாரப்

புறனடைச்சூத்திரத்தானும் உரையாசிரியரும், ஆசிரியர் நச்சினார்க்கினிய ரும் தத்தமக்கேற்கு முறையறிந்து அமைத்துச் சேறலானும் அவ்விரு வகைய மரூஉமொழிகளையும் ஆண்டாண்டமைத்தலே பொருந்தமாகும் என்பது அவர்தமக்கும் உடன்பாடென்க.

இனி, "அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய—புணரியனிலை யிடை யுணரத்தோன்று" என்று ஆசிரியரும் விரித்துப்போதலின் அவற் றிற்குப் புணர்ச்சியுண்டென்றல் அவர்க்கும் பிறர்க்கும் கருத்தன்றென்க.

மரூஉமொழிகள் பிறசொற்களோடு ஏற்றவாறு புணர்தற்குக் குற்றியலிகரவுகரங்களைப்போன்று தனித்து விரிகூறுதற்கு இடனில்லை யாதலின் ஈண்டு அன்னவரெல்லாரும் பலவாறு விரித்துப்போதல் பொருத்தமுடையதன்று. ஆதலின் அன்னவுரையெல்லாம் இடைச் செருகலென்று தள்ளுக.

"அன்னவை யெல்லா மருவின் பாத்திய" "மருவின் பாத்தியிற் றிரியுமன் பயின்றே" எனப் பிறண்டும் "இன்" என்பதைத் தனித்துப் பிரித்தற்கின்மையின் ஈண்டும் அங்ஙனமே பிரித்தற்காகாதென்க.

மரூஉமொழிகளை "வழங்கியன் மருங்கின் மருவொடு திரிநவும்" என்றாங்கு ஈண்டுக் கூறாது "மருவின் றொகுதி வழங்கியன் மொழியும்" என ஆசிரியர் கூறிப்போதலே எமது கருத்தை வலியுறுத்தாநிற்கும் என்க. "மயங்கியல்", "வழங்கியல்" என்பன ஆராயற்பாலன.

அன்றியும், "மரு", "இன்றொகுதி" என்றாங்குக் கண்ணழித்த லும் பிறவும் ஆசிரியரது சூத்திரப்போக்கிற் கிழுக்காகும். அங்ஙனம் கூறுதல் கருத்தாயின் "மரூஉ மொழியின் றொகுதி மயங்கியன் மொழியெனு மிரண்டும் புணர்நிலைக் குரியவே" என்றாங்குச் சூத்திரத் துச் செல்வர் என்பது தொல்காப்பியப் போக்கறிந்தார் தமக்கெல்லாம் புலனாகும்.

இவற்றானே, உரையாசிரியரை உள்ளிட்ட பெரியாருரைத்த உரையின் இடையிடையே பின்னுள்ளார் தமதுகொள்கைக் கேற்றவா றெல்லாம் பொருந்தாத பலபலவற்றைச் செருகிவிட்டனர் என்க.

(தொடரும்.)

நவநீதகிருஷ்ணன்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(சஉ—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

99. செப்புங் காலைச் செங்கம லத்தோன் முதல் யாரும்,
எப் பெண் பாலும் கொண்(டு) உவ மிப்போர் உவமிக்கும்
அப் பெண் தானே யாயின போ(து) இங்(கு) அயல் வே(று) ஓர்
ஒப்(பு) எங் கே கொண்(டு) எவ் வகை நாடி உரைசெய்வேம்.

இ-ள். பிரமதேவர் முதலிய யாவரும் (தாம் வருணிக்க) எந்தப் பெண்ணையாயினும் (எடுத்துக்) கொண்டு (அவளுக்கு) ஒப்புக்கூறுகிற் போர் (ஆனபோது நாம் தாம் குறித்தபெண்ணுக்கு) ஒப்பாகக்கூறும் அந்தப்பெண் (ஆகிய இலக்குமிதேவி) தானே (சீதாதேவி) ஆகியிருக் கின்றதனால், (அவருக்கு) அந்நியமான வேறோர் ஒப்பை எப்படித் தேடி எங்கே (கண்டு) கொண்டு யாம் கூறுவேம்.

செப்புங்காலை—சொல்லுங்கால்—சொல்லுமிடத்து. செங்கமலத் தோன்—பிரமன். பெண்பால்—பெண். உவமித்தல்—ஒப்புக்கூறுதல். அயல் —அந்நியமானது.

100. உமையாள் ஒக்கும் மங்கையர் உச்சிக் கரம் வைக்கும்
கமையாள் மேனி கண்டவர், காட்சிக் கரை காணார்,
"இமையா நாட்டம் பெற்றிலம்" என்றார்: "இரு கண்ணால்
அமையா(து)" என்றார் அந்தர வானத் தவரெல்லாம்.

இ-ள். சீதாபிராட்டியின் திருமேனி அழகைக்கண்டவர்கள் (தாம் கண்ட) காட்சிக் (கடற்குக்) கரைகாணார் (ஆக, அவர்களுள் மண்ணவர்கள் இக் காட்சியை இடைவிடாமல் நோக்கிக்கொண்டிருக்க, விண்ணவர் போல,) "இமையாத கண்கள் பெற்றிருந்தேமில்லையே" என்றார்கள். விண்ணவர்கள், (இக் காட்சி) "இரண்டுகண்களால் (பார்த்தற்கு) அடங்காது" என்றார்கள்.

உச்சிக் கரம்வைக்கும் கமையாள் - தலையிற் கைவைத்துத் தொழுதற்குரிய (சிறந்த) பொறுமையுடையாள். சீதாபிராட்டி, ஒருவர் வயிற்றிலும் பிறவாததனால், 'அயோநிசை' என்ற பெயர்படைத்து, "அகழ்வாரைத் தாங்கும் நிலம்" என்றுகூறும்படி. பொறுமைக்குச் சிறந்த உவமானமான பூமியினின்று தோன்றி, பின் நாளில், இலங்கையிலே, சிறையிலிருந்தகாலத்தில் அநுமானை நோக்கி "அல்லல் மாக்கள் இலங்கையதாகுமோ - எல்லேழுத்த உலகங்கள் யாவும் என்-சொலலினுற் சுடுவேன்: அது தூயவன் - வில்லின் ஆற்றற்கு மாசென்று வீசினேன்." என்று கூறிய அறக்கற்புடைய பொறுமைசாலியாதலால், 'கமையாள்' என்றது மிகப் பொருத்தமானது.

101\. வெ(ன்)அம் மானை, தார் அயில் வேலும் கொலை வாளும்
பின்றும் மானப் பேர் கயல் அஞ்சப் பிறழ் கண்ணாள்,
குன்றம் ஆடக், கோவின் அளிக்கும் கடல் அன்றி
அன்(று)அம் மாடத்(து) உம்பர் அளிக்கும் அமு(து)அன்னாள்.

இ-ள். சீதாபிராட்டி, கடல் (கொடுத்த அமுதம்) அல்லாமல் மாடம் கொடுத்த அமுதம் போன்றார்.

அம் மானை வென்று - அழகியமானைச் செயித்து. தார் அயில் வேல் - (வெற்றி) மாலை (அணிந்த) கூர்மை (பொருந்திய) வேலாயுதம். பின்ற - (கொலைத்தொழிலில்) பிந்த. பேர் கயல் அஞ்சப் பிறழ் மானக் கண்ணாள் - பெயர்கின்ற (தன்மையுடைய) கெண்டை மீன் அஞ்சும்படி பிறழ்கின்ற பெரிய கண்களையுடையாள். குன்றம் - (மந்தர) மலை. கோ - 1. அரசன்; 2. பெருமையிற்சிறந்தோன்; இங்கே திருமாலைக் குறித்தது. கோவின் அளிக்கும் கடல் - திருமாலினாற் (பள்ளிகொள்ளப்பட்டுக்) காக்கப்படும் (பாற்) கடல், 'எழுதும் ஓலை' என்பது எழுதப்படும் ஓலையென்று பொருள்படல்போல, 'அளிக்கும்கடல்', அளிக்கப்படும் (=காக்கப்படும்) கடலெனப் பொருள்படநின்றது.

102\. பெரும்தேர் அல்குற் பெண் இவள் ஒப்பாள் ஒருபெண்ணைத்
தரும் தாம் என்றால் நால்முகன் இன்னும் தரலாமே:
அருந்தா வங்(க)அத் தேவர் இரந்தால், அமிர்(து)என்னும்
மருந்தே அல்லா(து) என்.இனி நல்கும் மணி ஆழி?

இ - ள். (தாம் படைத்த) சீதாபிராட்டியை ஒப்பவள் (ஆக வேறு) ஒரு பெண்ணைப் பிரமதேவர் இன்னமும் தாலாமே என்றால், தாலாம்: (அப்படித் தருவது, தம்மையே தாம் ஒத்த பிராட்டியையன்றி வேறொரு பெண்ணையன்று. இது 'எதுபோலெனில், தாம் கொடுத்த அமுதத்தைச்) சாப்பிட்டுவிட்டுத் தேவர்கள் (தன்னிடம்) வந்து ("முன்கொடுத்த அமிழ்தத்தைப்போன்ற வேறோர் அமிழ்தம் தா" என்று) இரந்தால், கடல் அமிர்தத்தையே கொடுப்பதல்லாமல் (அமிழ்தையொத்த பொருள் அமிழ்தன்றி வேறின்மையால்) வேறு எதனைக் கொடுக்கும்? (ஒன்றும் கொடுத்தல் முடியாததுபோல என்பது போல என்க.)

பெரும் தேர் அல்குல் பெண் - பெரிய தேர் (த்தட்டினை ஒத்த) அரை (யையுடைய) பெண். தரும் - தருவான். தான் அசை. அருந்தா - அருந்தி - புசித்து. அமிர்தென்னும் மருந்து - அமிர்தென்று சொல்லப்படுகின்ற (சாவைத்தடுக்கும்) மருந்து. என் - யாது. மணி- 1. இரத்தினம். 2. அழகு. ஆழி - கடல்.

'அல்லாது' என்பதன் முன் 'நல்குதல்' என்ற சொல்லை (ப் பின் வரும் 'நல்கும்' என்பதற்குப் பொருத்தமாக) வருவித்துக்கொண்டு பொருள் காண்க.

உணவுப்பொருள்களுள் அமிழ்தத்தை ஒத்தது வேறு இல்லாதது போல, மாதருள்ளே சீதாபிராட்டியை யொத்தார் வேறு இலர் என்பது கருத்து.

103. அனையாள் மேனி கண்டபின், அண்டத்(து) அர(சு)ஆளும்
வினையோன் மேவும் மேனகை ஆதி மிளிர்வேற் கண்
இனையோர் உள்ளத்(து) இன்னலி னோர் தம் முகம் என்னும்
பனிதோய் வானின் வெள் மதிக்(கு) என்றும் பகல் அன்றே.

இ - ள். சீதாபிராட்டியின் திருமேனி (அழகைக்) கண்டபின்பு மேனகை முதலியோர் (ஆகிய அழகிற்சிறந்த தேவமாதர்கள் அம் மேனி யழகுக்குத் தம் மேனியழகு மிகவும் குறைவானதனால்) மனத்துள்ளே துன்பமுடையோர் (ஆக,) அவர்களுடைய முகமெனனும் சந்திரனுக்கு எப்போதும் பகற்போதே (யாகவிருந்தது).

அண்டத்து அரசு ஆளும் வினையோன் - இந்திரன். மேவுதல் — விரும்புதல். மிளிர்தல் - பிரகாசித்தல். இனையோர் - இத்தன்மையி னோர் - இவர்கள். இன்னலினோர்—துக்கமுடையோர். பனி - குளிர்ச்சி.

“அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்—கடுத்தது காட்டும் முகம்” என்றபடி மேனகை முதலியோர் மனத்துன்பத்தை அவர்கள் முகம் பொலிவிழந்து காட்டினதை ‘அவர் முகமதிக்கு என்றும் பகல்’ என்றதனால் இனிது குறிப்பித்தார்; சூரியன் எதிரே சந்திரன் பொலிவழிதல்போலச் சீதாதேவி எதிரே மேனகை முதலியோர் அழகழிந்தன ரென்பது கருத்து.

104. மலர்மேல் நின்(று)இம் மங்கை இவ் வையத் திடை வைகப்
பல கா லும் தம் மெய் நனி வாடும் படி நோற்றார்,
அலகோ இல்லா அந்தண ரோ?நல் அறமேயோ?
உலகோ? வானோ? உம்பர் கொ லோ?ஈ(து) உணரேமால்!

இ - ள், இந்தப் பிராட்டி (தாம்வாழும்) தாமரைமலர்மேலிருந்து (இறங்கி) இந்த உலகத்திலே தங்கும்படியாகப், பலமுறை தம் உடம்பு மிகவும் வாடும்படி தவஞ்செய்தவர்கள் அந்தணர்களோ? தருமதேவதையோ? மண்ணுலகோ? விண்ணுலகோ? (பிரமாதி) தேவர்களோ? என்பதை யாம் அறியேம்!

வையத்திடை-பூமியில். வைக-தங்க. அலகு-அளவு. ஓ அசை.

சீதாபிராட்டி (பின் நாளில்) இலங்கையிலே சிறையிருந்ததனால் இராவணாதி இராக்கதர் நாசமடையப் பாவம் தாழப் புண்ணியம் ஓங்க அந்தணர் முதலிய மண்ணுலகத்தோரும் பிரமதேவர் முதலிய விண்ணுலகத்தோரும் உய்ந்தார்களாதலால், இவர்களில் எவர்செய்த புண்ணியத்தினால் இலக்குமிதேவி சீதாதேவியாகப் பூமியில் அவதரித்தாரோ? தெரியேமென்றார். எல்லாரும் செய்த புண்ணியத்தின் பயனாக அவதரித்தாரென்பது போந்த பொருள்.

105. தம் நேர் இல்லா மங்கையர், ‘செங்கைத் தளிர் மானே!
அன்னே! தேனே! ஆரமிர் தே!’என்(று) அடிபோற்றி,
முன்னே முன்னே மொய் மலர் தூவி முறை சாரப்,
பொன்னே சூழும் பூவின் ஒதுங்கிப் பொலிகின்றாள்.

இ - ள். (சீதாபிராட்டி, செவிலித்தாயர் முதலிய) மாதர்கள் 'மானே! தேனே! அமுதே! அம்மே!' என்று (அருமையாகக்) கூறி (அழைத்து, இந்தப்பூத்திரள்மேல் நடப்பாயாக, இந்தப் பூத்திரள்மேல் நடப்பாயாக (என்று சொல்லிக்கொண்டு) அவர் பாதங்கள் நோவாமற் காப்பதற்காக (அவர் செல்லும் வழிக்கு) முன்னாகமுன்னாகத் திரளான மலர்களைச் சொரிந்துகொண்டு முறையாகப் பக்கத்திலே வர, அந்தப்பூத் திரள்மேல் நடவாநின்று விளங்குகின்றாள்.

அன்னே - அன்னையே - தாயே. ஆரமிர்து - அருமையான அமிழ்தம். அடிபோற்ற மலர் தூவி - (சீதையின்) பாதங்கள் நோவாமற் காக்கும்படி (அவள் செல்லும் இடங்களிலே) பூச்சொரிந்து. முறைசார - முறையாக அடுத்துவர. பொன்னே சூழும் - அழகுபொருந்திய ஏகாரம் அசை. பூவின் — (தூவிய) பூமேல். ஒதுங்கி - நடந்து. (பத்துப்பா. அரும்பத உரை); சென்று (பரிபாடல் 2. அடி ௧௬). பொலிகின்றாள், சரித்திர நிகழ்காலவினை.

106. கொல்லும் வேலும், கூற்றமும், என்னும் இவை எல்லாம்
வெல்லும், வெல்லும், என்ன மதர்க்கும் விழி கொண்டாள்,
(சொல்லும் தன்மைத்(து) அன்(று)அது.) குன்றும் சுவரும்திண்
கல்லும், புல்லும் கண்(டு)உரு கப்,பெண் கனி நின்றாள்.

இ - ள். (சீதாபிராட்டி,) கொல்லுகின்ற வேலும் கூற்றும் என்று சொல்லப்பட்ட இவை (முதலிய கொலைசெய்வன) எல்லாவற்றையும் நிச்சயமாக வென்றுவிடுமென்று சொல்லும்படி களிக்கின்றகண்களைக்கொண்டாள். (அவ்வாறு கொண்டது (இன்னதென்று புலப்படும்படி) சொல்லக்கூடிய தன்மையதன்று.) அவர் (பெரிய) மலையும் (சிறிய) சுவரும் வன்மையான கல்லும் (மென்மையான) புல்லும் (முதலிய எல்லாப் பொருள்களும்) கண்டுஉருகும்படி பெண் (நலம் கனிந்த) கனியாக நின்றாள்.

சீதாபிராட்டியைக் காணும் சேதனராகியமாதரும் சேதனசிரேட்டராகிய இராமரும் எவ்வளவு இன்பமடைவாரென்பதை மனத்தினுற் பாவித்துக்கொள்ளுமாறு அடுத்தபாட்டிற்கூறுதற்குப் பூர்வபீடிகையாக, இப்பாட்டில், மலை முதலிய அசேதனங்களை 'கண்டுருகப் பெண் கனி

நின்றாள்' என்றார். சேதனர் - அறிவுடையோர். அசேதனம் - அறிவில்லாதது.

வேறு.

107. வெம் களி யினுக்(கு)ஒரு விழவும் ஆய்,அவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலால்,
மங்கையர்க்(கு) இனிய(து)ஓர் மருந்தும் ஆயவள்
எங்கள் நா யகற்(கு)இனி யாவ(து) ஆம் கொலோ!

இ - ள். (கண்டு) களித்தற்கு ஒரு திருவிழாவும் ஆகி, மாதர்கள் கண்களாற் கண்ட அளவிலேயே களிப்பை அளிப்பதால் அவருக்கு இனிய அமிர்தமும் ஆகிய சீதாபிராட்டி இராமபிரானுக்கு வேறு எப் பொருளாவளோ!

வெம் களி - விருப்பமான களிப்பு. விழவு - திருவிழா. அவர், மூன்றும் அடியில்வரும் மங்கையரைச் சுட்டியது. ஓர் - ஒப்பற்ற. மருந்து - அமிர்தம். இனி - மற்று (உரிச்சொல்நிகண்டு-கசுo) யாவது - யாது. ஆம் - ஆவாள்.

முந்நிபபாட்டில் மலை முதலிய பொருள்களுக்குச் சீதாபிராட்டி கனியானளென்று, இந்தப்பாட்டில் மாதருக்குக் கனியினுமினிய அமிழ்தமானளென்று, அமிழ்தினுமினியபொருளின்மையால் இராம பிரானுக்குஎப்பொருளாவளோ என்றதனல் அமிழ்தினும் இனியவராயினு ரென்பதை இனிது புலப்படுத்தினர்.

'வெங்களிவிழிக்கு' என்ற பாடம்கொண்டால், அதற்கு (மாதரது) விருப்பத்தைத் தருகின்ற களிக்கின்ற கண்களெனவும், அதற்குப் பொருத்தமாக 'அவர் கண்களிற் காணவே' என்பதற்கு அவர்களுடைய அந்தக் கண்களாற்கண்ட மாத்திரையே எனவும் பொருள் கொள்க.

108. இழைகளும் குழைகளும் என்ன முன்னமே
மழை பொரு கண் இணை மடந்தை மாரொடும்
பழகிய தெனினும், இப் பாவை தோன்றலால்,
அழ(கு)எனும் அணியும் ஓர் அழகு பெற்றதே!

இ - ள். (தான் தோன்றியநாள்தொட்டுத் தன்னை அணிவார்க்கு) அழகு (செய்வது) என்னும் (காரணத்தினால் அழகென்னும் பொருள் உள்ள) அணி (என்னும் பெயரையுடைய ஆபரணமானது, கழுத்திலணியும் மாலைகள் முதலிய) பேரணிகலன்களும் (காதிலணியும்) குழை (கள் முதலிய சிற்றணிகலன்) களுமென (ச் சீதாபிராட்டி பிறக்கும்) முன்னேயே மாதரோடு (அவர்களால் அணியப்பட்டுப்) பழகியுள்ளதென்றாலும், (தான் அவர்களுக்கு அழகு அளித்ததேயன்றி அவர்களால் தான் அழகு பெறவில்லை;) சீதாபிராட்டி அவதரித்ததினால் (அவரது திருமேனியில் அணியப்பட்டுப் புதிதாகிய) ஓர் அழகினைப் பெற்றது.

இழை - பேரணிகலம் (பத்துப்பாட்டு அரும்பதவுரை). குழை — குண்டலம். மழை பொரு - குளிர்ச்சி பொருந்திய. 'விண் பொரு புகழ்' எனப் புறநானூற்றில், ௧௧-ம் பாவில் வருதல் பார்க்க.

'இன்ன முன்னமே' என்றும் 'அழகெனுமதுவும்' என்றும் 'அழகெனுமழகும்' என்றும் பாடபேதங்கள் உண்டு.

109. எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்(ற)உழிக்,
கண்ணொடு கண் இணை கௌவி ஒன்றை ஒன்(று)
உண்ணவும், நிலை பெறா(து) உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்.

இ - ள். அளவிடற்கரிய அழகுடையசீதாபிராட்டி இத்தன்மையளாய் நின்றகாலத்தில், ஒருவர் பார்வையோடு ஒருவர் பார்வை ஒன்றையொன்றுபற்றி விழுங்கினாற்போல ஒற்றுமைப்படவும், (இருவர்)உணர்வுகளும் (தத்தம் இடத்தே) நிலைபெறமாட்டாமல் (ஒன்றையொன்று நாடிக் கூடி) ஒன்றாய்க் கலக்கவும் (காதற்பார்வையாக) இராமபிரானும் பார்த்தார், சீதாபிராட்டியும் பார்த்தார்.

'எண் அரும்' என்பது "பார்த்தற்கும் சொல்லுதற்குமேயன்றி நினைத்தற்கு மரிய என்பதுபட நின்றமையின் எண் என்பதனீற்றில் தொக்குநின்ற வும்மை இறந்தது தழீஇயது. எண் முதனிலைத்தொழிற்பெயர்" (ஸ்ரீ இராமசாமிநாயுடு).

110. பருகிய நோக்(கு)எனும் பாசத்தால் பிணித்(து)
ஒருவரை ஒருவர் தம் உள்ளம் ஈர்த்தலால்
வரி சிலை அண்ணலும் வாட் கண் நங்கையும்—
இருவரும்—மாறிப்புக்(கு) இதயம் எய்தினர்.

இ - ள். இராமபிரானும் சீதாபிராட்டியும் (கண்ணாகிய வாயால் ஒருவரை ஒருவர்) விழுங்கிய (வர்போலப் பார்த்த) பார்வையென்ற கயிற் றினாற் கட்டி ஒருவரை மற்றொருவர் மனம் இழுத்தலால்—இருவரும்— (அவரவர் மனமாகிய இருப்பிடம் விட்டு) மாறி (ஒருவர் மற்றொருவர்) மனத்துட் பிரவேசித்திருந்தார்கள்.

பருகுதல்-விழுங்குதல் (பத்துப்பாட்டு அரும்பதவுரை). வரிசிலை- கட்டியவில். (வரி வில் - வரிந்தவில். (பத்துப்பாட்டு அரும்பதவுரை).

ஒருவர் மனத்தில் ஒருவர் குடிகொள்ள, இருவரும் தம்மைமறந்து மற்றவரையே நினைப்பாராயினரென்பது கருத்து.

111. மருங்(கு)இலா நங்கையும் வசை இல் ஐயனும்,
ஒருங்கிய இரண்(டு)உடற்(கு) உயிர் ஒன்(று) ஆயினர்
கருங் கடற் பள்ளியிற் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ?

இ - ள். இருவரும் ஈருடம்பிற்கு ஒருயிராயினர்: (பாற்)கடலிலே (சர்ப்ப) சயனத்திலே கூடியிருத்தலைவிட்டுப் பிரிந்துபோனவர்கள் (திரும்ப எதிர்பாராதெதிர்ப்பட்டுக்) கூடினால் (அவர்களுக்குண்டாம் அன் புப்பெருக்கைச்) சொல்லவேண்டுமோ? (வேண்டா).

ஒருங்கிய - ஒருங்கும்படி—ஒன்றும்படி. இது 'செய்யும்படி' என்று பொருள்படும் 'செய்திய' என்னும் வாய்பாட்டு வினையெச்சம். கருங்கடல் - பெருங்கடல்; கரிய கடலன்று, பாற்கடலைக் குறித்தலால். பள்ளி - படுக்கை. போய்ப் பிரிந்தவர் என்பதைப் 'பிரிந்துபோயவர்' என விகுதிமாற்றிக் கூட்டுக.

112. அந்தம் இல் அழகனை அணங்கு இலாமையால்
பைந் தொடி ஓவியப் பாவை போன்றனள்;
சிந்தையும் நிறையும்மெய்ந் நலனும் பின் செல,
மைந்தனும் முனிவொடு மறையப் போயினன்.

இ - ள். எல்லையில்லாத அழகுடையாராகிய இராமபிரானை அடையப்பெறுமையால் சீதாபிராட்டி (உயிரில்லாத) சித்திரப் பாவையை ஒத்தார்: அவருடைய மனமும் கற்பும் தேகசௌந்தரியமும் தம்மைப் பின்தொடர இராமர் விசுவாமித்திரமுனிவருடன் கண்மறையச் சென்றார்.

113. பிறை எனும் நுதலவள் பெண்மை என்படும்?
நறை கமழ் அலங்கலான் நயன கோசரம்
மறைதலும், மனம் எனும் மத்த யானையின்
நிறை எனும் அங்குசம் நிமிர்ந்து போயதே.

இ - ள். (அவர் சென்றதனால் அவரைப் பார்த்துக்கொண்டிருந்த பரமானந்தத்தை இழந்த) பிராட்டியின் (நாணம் முதலிய) பெண்மைக் குணங்கள் என்னபாடுபட்டன? (அது சொல்லும் தரத்தினதன்று; ஒருவாறு சொல்லின், இராமர் கண்பார்வையினின்று மறைந்தவுடனே, சீதாதேவியின் மனமென்ற மதயானையினது நிறையென்ற தோட்டி (அவ் யானை அடங்காது செல்வதை அடக்குதற்குப் பலமாக இழுக்கப் பட்டபோது) நிமிர்ந்துபோய்விட்டது.

பெண்மை—பெண்தன்மை-யாதர்க்குரிய அமைதி அல்லது அடக்கமுடைமை; (பெண்மை — அமைதித்தன்மை. சிந்தா. அரும்பதவுரை) நறை - நறுநாற்றம். கோசரம் - புலனுக்கு விடயமானது. நயனகோசரம்- கண்ணுக்குத் தெரிதல். மத்த யானை - மதயானை. ('மத்தப் புகர்முகக் களிறு' மணிமேகலை அரும்பத அகராதி). நிறை—நெஞ்சைக் கற்புநெறியில் நிறுத்தல் (ஷை பக்கம் ௧௬௫).

மனம் விவேகத்துக்கடங்காமல் காமாவேசமுற்றதென்பது கருத்து.

114. மால் உற வருதலும், மனமும் மெய்யும் தன்
நூல் உறு மருங்குல் போல் நுடங்கு வாள் நெடும்
கால் உறு கண் வழி புகுந்த காதல் நோய்
பால் உறு பிரை எனப் பரந்த(து) எங்குமே.

இ - ள். ஆசை அதிகமாக வளர்ந்தவுடனே, மனமும் தேகமும் இடைபோல மெலிவுற்ற சீதாதேவியின்கண்வழியாக உள்ளேபிரவேசித்த காமநோய் பாலில் உற்ற பிரைபோல (க் கண்ணோடு மற்றைப்பொறிகளும் அடங்கிய உடல்) எங்கும் வியாபித்தது.

மால் உற வளர்தலும் - மோகம் மிகுதியாக வளர்ந்தவுடனே. வருதல் - வளர்தல் (சங்க அகராதி). நூல் உறு - நூல் போன்ற. உறுவது - ஒப்பது (சிந்தா. அரும்பதவுரை). கால் உறு கண்வழி புகுந்த - காதல் நோய் - தான் புகுதற்கு வழியாக உற்ற கண்வழியாக உள்ளே பிரவேசித்த காம வியாதி. கால் - வழி (பிங்கலம் ௩௩௩௩). பிரை - உறை — பால் தயிராவதற்கிடும் மோர்த்துளி.

காரணம் மிகச்சிறிதாயினும் காரியம் மிகப்பெரிதாவதற்கும் பாலிலிடுபிரை சிறந்த உதாரணம். இதனை இன்னும் சிறப்பாகச் "சீரிய பாலின் வேலை சிறுபிரைதெறித்ததன்னான்" என்பர் பின்னர்.

[மனத்தில் நினைந்ததை வாயாற் சொல்லமாட்டாத ஊமர்போலத் தாம் உற்ற காமநோயைச் சொல்லமாட்டாதவராய்த் தேவர்கடைய யாவையும் கொடுத்து வெறுமையான பாற்கடல்போல, உடையும் வளையும் உணர்வும் உள்ளமும் உடலொளியும் இழந்திருந்த சீதாதேவியைத் தோழியர்கள் கொண்டுபோய் மலர்கள் பரப்பிய படுக்கையிற்சேர்த்தார்கள். அப்போது அவர், காம பரவசராய் வில்லேந்திய கரியமேனியையுடைய இராமபிரானை நினைந்து வில்லோடு பூமியிலே இறங்கிய மேகமென்பார்].

115, "நெருக்கி உள் புகுந்(து),அரும் நிறையும் பெண்மையும்
உருக்கி,என் உயிரொடும் உண்டு போனவன்
பொருப்பு உறழ் தோள் புணர் புண்ணியத்தது
கருப்பு வில் அன்(று;)அவன் காமன் அல்லனே.

இ - ள். "வலாற்காரமாய் (என்) நெஞ்சினுள்ளே பிரவேசித்து (எனது) அருமையான நிறையையும் பெண்தன்மையையும் நெகிழச்செய்து (அவற்றை) என் உயிரோடும் கவர்ந்துகொண்டுபோனவருடைய மலையொத்த தோளைச் சேரும் பாக்கியத்தையுடையது கரும்புவில்லன்று: (ஆதலால்) அவர் காமன் அல்லர்.

நெருக்கி உள் புகுந்து - வலாற்காரமாய் மனத்தினுட்பிரவேசித்து. உண்டு போனவன் - கவர்ந்துகொண்டுபோனவன் (தாற்பரியப் பொருள்) பொருப்பு உறழ் - மலைபோன்ற.

"அழகினால் மன்மதனே வென்றெண்ணின பிராட்டி, அவன் தோளிலிருப்பது மூங்கில் வில்லே, கரும்புவில்லன்றென் றுணர்ந்து, அத னால் அவன்மன்மதனல்லனென்று தேறினாளென்பது கருத்து மூங்கி லாற் செய்யப்பட்ட வில் அவர் தோள்களைப் புணர்தற்குரிய புண்ணியஞ் செய்திருந்ததே அதுவும் யாம் செய்திலமே யென்றிரங்கினாளென்பது குறிப்பு". (ஸ்ரீ இராமசாமிநாயுடு.)

116. "பெண் வழி நலனொடும், பிறந்த நாணொடும்,
என் வழி உணர்வும் நான் எங்கும் காண்கிலன்:
மண் வழி நடந்(து)அடி வருந்தப் போனவன்
கண் வழி நுழையும் ஓர் கள்வ னே கொல் ஆம்?

இ. ள். "எனது பெண்நலங்களையும் அவற்றுடன் தோன்றிய நாணத்தையும் என் அறிவையும் நான் (என் அகத்துள்ளே) எங்கும் (தேடிப்பார்த்தும்) காண்கின்றிலேன். (ஆதலால் அவைகளவு போயி ருக்கவேண்டும் அவை அவர் வருமளவும் இருந்து பின்பு காணாமையால் அவைகளை அவரே களவுசெய்திருக்கவேண்டும். ஆயின் அவர் எவ்வழி யே என் அகத்துட் புகுந்து களவாண்டா ரென்பது தெரியவில்லை. வேறுவழியில்லை யாதலால் அவர்) கண்வழியே நுழையும் கள்வர் போலும்.

பெண்வழிநலன்—பெண்களுக்கு வழிவழியாகவரும் நற்குணங் கள். பிறந்தநாண்—(அந்த நலங்களோடு கூடவே) தோன்றிய (அவற் றுள்ளே சிறந்த) நாணம். என்வழி உணர்வு—"மனத்தினிடத்துள்ள அறிவு. என்வழி—என்னுமிடத்து".

சீதாபிராட்டி, இராமபிரானைக் கள்வர் என்றதனால் வெறுப்பது வெளிப்படையும் தோற்றமுமாகவும், மென்மையான பூமேல் நடவாமல் வன்மையான மண்மேல் அடிவருந்த நடந்துபோனவர் என்றதனால் விரும்புவது குறிப்பும் உண்மையுமாகவும் இருத்தல் கவனிக்கத்தக்கது.

117. "இந்திர நீலம் ஒத்(து) இருண்ட குஞ்சியும்,
சந்திர வதனமும், தாழ்ந்த கைகளும்,
சுந்தர மணி வரைத் தோளு மே அல!
முந்தி என் உயிரை அம் முறுவல் உண்டதே!

இ. ள். "நீலரத்தின (க் கதிர்க் கூட்ட) த்தை ஒத்து (இனிதாக) இருண்டகேசமும், பூரணசந்திரன்போன்றமுகமும், (முழந்தாள்வரை) தாழ்ந்த கைகளும், அழகிய நீலமலைபோன்றதோள்களும் அல்ல, முதல் முதலாக என் உயிரை உண்டவை! (மற்று எது முன்னதாக உண்டதெனின், என் மனத்தைவிட்டு நீங்காத அந்தப்) புன்னகையே!

இந்திரநீலம்—நீலரத்தினம். குஞ்சி—ஆண்மக்கள் தலைமயிர். மணி—நீலரத்தினம். முறுவல்—சிரிப்பு; இங்கேபுன்சிரிப்பென்று பொருள்பட நின்றது.

அவர் சம்பந்தமான எல்லாம் என் உயிரை உண்டன; ஆயினும் அவற்றுள் முற்பட்டு என்னுயிரை யுண்டது அவர் புன்னகையே: புன்னகை உண்டு எஞ்சிய உயிர்ப்பகுதியைக்கேசம் முதலியவை உண்டன வென்பது கருத்து.

118. "படர்(ந்து)ஒளி பரந்(து)உயிர் பருகும் ஆகமும்
தடம் தரு தாமரைத் தாளு மே அல,
கடம் தரு மா மதக் களி நல் யானை போல்
நடந்தது கிடந்த(து)என் உள்ளம் நண்ணியே.

இ. ள். "விசாலமாய் ஒளிபரவப் பெற்றதாய் என் உயிரை உண்ட மார்பும் தாமரைமலர் போன்றபாதங்களும் (ஆகியவைகளில் ஒன்றும்) அன்று (என்மனத்தே நீங்காதுள்ளது; வேறெது வெனில்,) மிகுந்தமதம் பொழிகின்ற செருக்குடைய யானை போல (க்கம்பீரமாக) நடந்தது என் உள்ளத்தை ஒட்டிக்கிடந்தது (என்பது).

தடம் தரு தாமரை—1. தடாகம் (உண்டாக்கிக்) கொடுக்கின்ற தாமரைமலர்; 2. மலர்களிற்சிறந்ததென்ற) பெருமையைக்கொண்ட தாமரைமலர்.) தருதல் - கொள்ளுதல் (புற. வெண். மாலை. அரும் அகராதி.)

மார்பழகினும் தாளழகினும் அதிகமாக நடையழகு மனத்தில் நிலைத்திருக்கின்றதென்பது கருத்து.

119. "பிறந்(து)உடை நலநிறை பிலிர்த்த எந்திரம்
கறங்குப திரியும்என் கன்னி மா மதில்

எறிந்த அக் குமரனை இன்னும் கண்ணிற் கண்டு
அறிந்(து)உயிர் இழக்கவும் ஆகு மே கொல் ஆம்?"

இ - ள். "என்னுடன் கூடப்) பிறந்து என் உடைமையாயுள்ள கற்பென்னும் யந்திரம் எவரும் அணுகாமல் காத்தற்கு எப்பக்கமும்) சுழன்று திரியப்பெற்ற எனது கவனித்தன்மையாகிய மதிலை அழித்த அந்த (அரசிளங்) குமாரனை இன்னும் (ஒருமுறை) கண்ணாரப்பார்த்து அவரை நன்கு) அறிந்து (கொள்ளும் பாக்கியம் பெற்ற பின்பு இறந்தால் சந்தோஷத்தோடு இறப்பேன்; அப்படி) இறக்கவும் கூடுமோ?"

உடை - உடைமை (சங்க அகராதி). நல நிறை - நல்ல கற்பு. பிணித்த - கட்டிய. கறங்குபு - சுழன்று. ம தி ல் எ றி ந் த - மதிலை அழித்த.

[என்று இவை போல்வன பல கூறி, இராமபிரானது உருவெளித் தோற்றத்தைக்கண்டு 'இதோ வந்தார்" என்றும் அது மறையவே "அதோ! போய்விட்டார்" என்றும் புலம்பிச் சீதாபிராட்டி வருந்தும் போது, அவரைச்சுட்ட காமாக்கினி தன்னையுஞ்சுடத் தாங்கமாட்டாதவனாய் அச்சூட்டைத்தணிக்க மேற்கடலில் விழுந்தான்போலச் சூரியன் அஸ்தமித்தான். தென்றலாகிய பாசத்தைவீசி, செவ்வா ன மா கி ய சிவந்த தலைமயிரும் இருளாகிய கருநிறமுங் கொண்டு காலன் வந்தது போல மாலைப்பொழுது வந்தது. பொழுதுபோயினமையால் கூடுதேடி அடையும் பறவையொலி தான் கொட்டும் பறையொலியாக கடலொலி காற்சிலம்பொலியாக, இருள் கருநிறச்சட்டையாகப் பூதம் புறப்பட்டதென்று சொல்லும்படியாக அந்தி மாலை தோன்றியது. அதனை நோக்கிச் சீதாபிராட்டி கூறுகின்றார்.]

120. மை வான் நிறத்து மீன் எயிற்று வாடை உயிர்ப்பின் வளர் செக்கர்ப்
பை வாய் அந்திப் பட அரவே! இன்ன விளைத்துப் பகைத்தியால்?;
எய்வான் ஒருவன் கை ஓயான்; உயிரும் ஒன்றே; இனி இல்லை!
உய்வான் உற:இப் பழிபூண உன்னே(டு) எனக்குப் பகை உண்டோ?

இ - ள். "ஆகாய நிறத்தையும் நட்சத்திரப் பற்களையும் வாடைக் காற்றுப் பெருமூச்சையும் செவ்வான வாயையுமுடைய அந்திப்பாம்பே! துன்பம் உண்டாக்கி (என்னை) விரோதிக்கின்றாய்? என் உயிருக்காக

வென்றால், அதற்காக, நீவருமுன்பே (எதற்காக வந்து என்மேல் அம்பு) எய்வானாயினான் ஒருவன்; (அவன் அதைக்கொண்டாலன்றி எய்யும்) கை ஓயான்; உயிரோ, (எனக்கு) ஒன்றே (உள்ளது); அதை அவன் கொண்டபின், நான்) பிழைத்திருக்க வேறு (உயிர்) இல்லை; (உயிர் இல்லாது போகவே, நீ என்மீது பகைசெலுத்தலால் என் உயிரை உண்ணும் பயனைப் பெறாய்; பெறாயாகவும்என்னை வீணே பகைக்கின்ற) இந்தப் பழி பூணுதற்கு (முன் பகை யிருத்தல்வேண்டும்; அப்படி) உனக்கும் எனக்கும் பகையுண்டோ? (இல்லை: உண்டேல், சொல்வாயாக.)

வான் மை நிறத்து - ஆகாசம் கரு நிறத்தையுடைய. மீன் எயிற்று - நட்சத்திரப் பற்களையுடைய. வாடை உயிர்ப்பின் - வாடைக் காற்றுப் பெருமூச்சினையுடைய. வளர் செக்கர்ப் பை வாய் - பெருகிய செவ்வானமாகிய பை போன்ற வாயினையுடைய 'பைவாய்' பாந்தவா யெனலுமாம். பைத்தல் - பாத்தல் (சங்க அகராதி). இன்னா - துன்பம். பகைத்தி - பகைக்கின்றாய். 'ஒருவன்' மன்மதனைக்குறித்தது. இனி - மற்று - வேறு (உரி. நிக. ௧௬0) உய்வான்உற - உய்தலை அடைய உய்தல் - பிழைத்தல் - சீவித்தல். (புறநா. அரும்பத.). 'உய்வான் உற இனி இல்லை' எனக்கூட்டிப் 'பிழைத்திருக்க வேறு (உயிர்) இல்லை' என்று பொருள் கூறப்பட்டது. உய்வான் உறவு இனி இல்லை - உய்தல் உறுதல் இனி இல்லை (யெனலுமாம்.)

'மீனெயிற்று' என்ற பாடமேயன்றி, 'மின்னெயிற்று' என்றபாடமும் உண்டு. இப்பாடம், இரவிலேயன்றி மாலையிலே நட்சத்திரங்கள் காணப்படுதல் இல்லை யென்பது பற்றிக் கொள்ளப்பட்டதுபோலும் 'இப்போதுமாலை போயிற்று', இப்போது இரவு வந்தது' என்று சொல்லக்கூடாத நேரமும் உண்டன்றே? அந்த மாலை முடியாமலும் இரவு தொடங்காமலும் உள்ள சந்திநேரத்திலே, இரவிற் பேரொளி வீசும் நட்சத்திரங்களிற் சிறந்தன சில, மற்றைச் சிற்றொளி நட்சத்திரங்கள் தோன்றுமுன் தோன்றுபவைகளையுட்கொண்டு, கவி 'மீனெயிற்று' என்று பாடினாரெனல் பொருந்தும்.

121. "ஆலம் உலகில் பரந்ததோ! ஆழி கிளர்ந்த தோ அவர்தம்
நீல நிறத்தை எல்லாரும் நினைக்க அது ஆய் நிரம்பியதோ!
காலன் நிறத்தை அஞ்சனத்தில் கலந்து குழைத்துக் காயத்தின்
மேலும் நிலத்தும்.மெழுகியதோ! விளங்கும் இருளாய் விளைந்ததுவே!"

இ. ள். "ஆலகாலவிடம் உலகத்திலே பரவியதோ! சமுத்திரம் (மேலோங்கி எங்கும்) பெருகியதோ! அவருடைய நீல நிறத்தை யெல்லாரும் நினைக்க அந்த நிறமே எங்கும் ஆகி நிறைந்ததோ! இயமனது நிறத்தை (க் கண்ணுக்கிடும்) மையோடுகலந்து குழப்பி ஆகாயத்தின் மேலும் பூமியின்மேலும் மெழுகியதோ! (இவற்றுள் எது, இவை ஒவ்வொன்றும் செய்யும் துன்பத்தைச் செய்கின்ற) இருளாய்விளைந்தது!"

கிளர்தல்—பெருகுதல் (புறப் வெண் மாலை அரும்பத அகராதி) காயம்—ஆகாயம்.

இப்போது கூறிய இருள் மாலையிருள்போனபின் வந்த இரவின் இருளை. அவ் விருளினும் இவ் விருள் மிகுந்து புலப்பட்டதனால் 'விளங்கும் இருள்' என்றார். ஆலகாலவிடம் முதலியவை விதையாக, அவை முளைத்து வளர்ந்து, விளைந்தது இருள்என்றும், விதையைநோக்க அவ்விதையின் விளைவு மிகவும் பெருக்கமாயிருப்பது போல, ஆலாலவிட முதலியவற்றினும் இருள் (இருண்ட தன்மையினும் துன்பஞ் செய்தலினும்) மிகவும் பெரிதாயிருந்ததென்றும் 'விளைந்ததே' என்றதனால் குறிப்பித்தார்.

[மேற்கூறியவாறு சீதாபிராட்டிகூறித் துன்புறும்போது அவருக்கு வெப்பஞ்செய்யுமென்று சாதாரண விளக்கேற்றாமல் தாதியர் தூண்டுதல் வேண்டாத(இரத்தினதீபம்வைத்து இரவைப் பகல்போலச்செய்தார்கள்]

122\. பெருந்திண் நெடுமால் வரை நிறுவிப் பிணித்த பாம்பின் மணித்தாம்பால்,
விரிந்த திவலை உதிர்ந்த மணி விசும்பின் மீனின் மேல் விளங்க,
அருந்த அமரர் கலக்கிய நாள் அமுதம் நிறைந்த பொன் கலசம்
இருந்த(து) இடைவந்(து) எழுந்த(து)என எழுந்த(து) ஆழி வெண்திங்கள்.

இ - ள். திருமால் (மந்தர) மலை(யாகிய மத்திலே)கட்டின வாசுகி என்னும் பாம்புக் கயிற்றினால் (பாற்கடலைக் கடைந்து அமுதம்எடுத்து) உண்ணும்படி தேவர்கள் (அந்தக்கடலைக்) கலக்கிய காலத்தில் நீர்த்துளிகளோடு தெறித்த மணிகள் நட்சத்திரங்களினும் அதிகமாக விளங்க, அமிர்தகலசம் (அக்கடலினுள்) இருந்தது (அக்கடலிலிருந்து வெளிப்பட்டு) எழுந்ததுபோலக் கடலிலே சந்திரன் உதயமானது.

நிரை நிறுவிப் பிணித்த - (மந்தர) மலை யாகிய மத்திலேவிலகாது நிற்கும்படி செய்து கட்டின. அருந்த - (பாற்கடலினின்று அமுதம் நடைந்தெடுத்து) உண்ணும்படி. ஆழி - கடல்.

"பிரதான உபமானமான அமுதகலசத்துக்குத் துணையாகவந்த நீர்த்திவலைகளும் ரத்தினங்களும் உபமேயங்களாகவும், பிரதான உப மேயத்துக்குத் துணையான நக்ஷத்திரங்கள் உபமானங்களாகவும் சொல் லப்பட்டிருக்கின்றன"

உதயமாகும் சமயத்தில் சந்திரன் சிவந்து தோன்றுதலால் செம் பொற் கலசம் உதயசந்திரனுக்குப் பொருத்தமான உபமானம். வெண் சந்திரனென்றது உதயகாலத்துக்குப் பிந்திய பெரும்பான்மையான காலத்தில் உள்ள நிறம்பற்றியென்க.

123. வண்டாய்அயன்நால்மறைபாட,மலர்ந்த(து)ஒருதாமரைப்போது,
பண்டு)ஆல்இலையின்மிசைக்கிடந்துபாரும்நீரும் பசித்தான்போல்
உண்டான்உந்திக்கடல்பூத்த(து)ஓதக்கடலும்தான்வே(று)ஓர்
வெண்தாமரையின்மலர்பூத்த(து)ஒத்த(து)ஆழிவெண்திங்கள்.

இ - ள். முன் காலத்தில் ஆலிலைமேற் பள்ளிகொண்டு பசித்தவன் போலப் பூமியையும் கடலையும் உண்ட திருமாலின் நாபியாகிய கடலா னது, பிரமன் வண்டுபோன்று (அகன் ரீங்காரம் போல) வேதங்களைப் பாடாநிற்க, ஒரு(செந்)தாமரைப்பூப்பூத்தது (என்று) கடலும் வேறொரு வெண்டாமரைப்பூப் பூத்ததை ஒத்தது கடலிற் (பிறந்த) சந்திரன்.

ஆய் - போன்று. மலர்ந்ததொரு தாமரை எப்போது மலர்ந்ததா கிய ஒரு தாமரைப்பூவை. நீர் - கடல். உந்தி - கொப்பூழ். ஓதம் — அலை (ஐங்குறுநூறு அரும்பதவுரை). ஆழி - கடலில் (பிறந்த); 2. வட்டவடிவமான.

'தாமரைப்போது' என்றதற் கியைய அதனிற் றோன்றிய பிரமனை 'வண்டு' என்றும் வண்டு ரீங்காரம் செய்தல் போல 'அயன் நால்மறை பாட' என்றும் பூமியை யுண்டதற்கும் பொருத்தமாக (இயல்பிலே பசி யில்லாதவனைப்) 'பசித்தான் போல்' என்றும் ஒருகடல் ஒருதாமரைப் பூப்பூத்ததை நோக்கி மற்றொரு கடல் தானும் அதுபோலப் பூப்பெ னென்று 'வேறோர் வெண்டாமரையின் மலர் பூத்தது, என்றும் பலவகை நயம்படக்கூறினர். (தொடரும்)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

புரூரவசரிதை.

(௪0-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கட்பிணியுறுபடலம்.

அன்றுமன்னவன்சென்றவருஞ்சுர
மொன்றுதன்மையுரைப்பதெனுச்சிசே
ரென்றுமந்நிலவெப்பினுக்கீரமாய்
நின்றியங்குமோர்சாய்கைநிகர்க்குமே. (க)

விரியுமந்நிலந்தாங்கியவெம்மையை
யரவினுக்கிறையாற்றலனாகியே
கரியவெவ்வழல்வாய்வழிகான்றிட
வுருகியெந்தவுலகுமெரிப்பதே. (உ)

நீறுதுன்றுமந்நீணிலமேன்மையை
யாறுகின்றநிழலென்றருணமா
வேறுசெல்லிடமின்றிவிரிசிறைப்
பாறுசெல்லுநிழல்வழிப்பற்றுமால். (ங)

படவராவந்நிலத்தழல்பாயவெந்
துடலம்வெம்புரிவெந்தனவொக்குமாற்
சுடிகைவெங்கனலாகருந்தோன்றிடும்
விடரின்மும்மதவேழமும்வீழுமால். (ச)

காரையின்டைமுட்கள்ளிமராவிடத்
தேரைவன்னிவிளாமுதிர்தேறுவேய்
சூரைபுன்குபொன்பாவையுந்தூர்முத
லீரமின்றியெரிந்துசரிந்திடும். (ரு)

அவ்வழற்பொலிகானிடையண்ணலுஞ்
செவ்வியுற்றசிறார்களுஞ்சென்றனர்
வெவ்வெயிற்குமெலிந்துநலிந்திடா
தவ்வயிற்புயறன்னிழலாக்கிற்றே. (சு)

எரியில்வெந்துமுரிந்தனவிந்தனங்
தெரியல்வேந்தன்றெரிந்துபிறக்கியே
பரியகட்டொன்றுசேர்த்தனன்பாலருக்
குரியதாஞ்சிறுசும்மையுஞற்றியே. (எ)

மக்கள்சென்னிமணிமுடியோவெனத்
தொக்கவிந்தனச்சும்மைகள்சூட்டியே
சக்கரத்தலைமைத்தனிநாயகன்
மிக்கவிந்தனந்தானுமிலைச்சியே. (அ)

வேறு.

மைந்தர்காளொல்லைவருகிறெனச்சுமக்கு
மிந்தனமுங்கொண்டுதிரும்பியவனெய்துதனு
மந்தமனையிலடைக்கலமாய்ப்புக்கிருந்த
கந்தமலர்க்கூந்தற்காந்தைதனைக்கண்டிலனால். (கூ)

நொய்யறுமைழதுசப்புநோனுதுவீங்குழலைத்
தையலெவண்கொலெனத்தானேவினவுதனு
மைபல்வணிகன்மரக்கலத்தின்மேலேற்றிக்
கொய்புமலர்க்குழலைக்கொண்டகன்றனென்றனரால். (க௦)

என்றமொழிதன்னிருசெவியிற்கேளாமுன்
சென்றதுயி ருடம்பைத்தீர்ந்துயிர்ப்புந்தீர்ந்ததான்
மன்றிலெவர்க்குமொருதம்பமெனும்வாய்மையினு
னவறுமெதிர்ந்தவர்க்கோர்தம்பமெனலாயினன். (கக)

நெக்கவுயிரிவ்விடையினீங்கலறனன்றென்வே
புக்கதெனமீட்டுமுயிர்த்துப்பொருமினன்
மிக்கவுளமுமுடம்புமிகநிக்கு
மக்கடமைத்தழுவிவாய்திறந்துமாழ்கினன். (கஉ)

தருமச்சரக்கறைபேகற்பின்றழற்பிழம்பே
பெருமைத்திருவின்றிருவனையபெண்ணமுதே
யிருமைக்குமெம்முயிருக்கின்பம்பெறவளித்த
வருமைப்புதல்வர்துயராரேயோவாற்றுவார். (கங)

கொற்பிரியாவைவேலின்கூர்விழிபாய்பங்கயத்தோ
னறபிரியசௌரியாகமௌச்செபதிலனை
பெற்பிரியாவன்றிவினைபிரியாவாறெய்ந்த
நிற்பிரியினுவிநிலைநில்லாதுநீங்காதே. (க௪)

பந்தவினையின்பகுதியெனவேயெதிர்ந்து
வந்தவணிகன்மனையிடத்திற்புக்கிருந்தவ்
வந்திநிறத்தானளிமயலிசமலிநந்த
விந்துகுலத்துக்கிபூக்குவைத்துக்கொண்டதென். (க௫)

வாயிழந்தவுண்ணீர்மடையிழந்தகண்ணீரு
டாயுழந்ததாதைபவலத்தழுந்துதனு
நோயுழந்தநெஞ்சினராய்த்தந்தைமுகநோக்கித்
தாயிழந்தகன்றிற்றனயருமங்கேகினர். (க௬)

கண்டவனைவோருமாற்றாதுகண்கலுழ
வண்டமருந்தாமமார்பன்மக்கள்விழிநீர் துடைத்துப்
புண்டரிகனிட்டபொறியிதெனப்புந்திதெளிந்
தெண்டருமிவ்வேந்தற்கியம்புவனென்றேகினன். (க௭)

அவ்வேந்தன்வைகுமவைகாணப்பெற்றிலனால்
நொவ்வேந்துநெஞ்சினொடுநோக்கினனைக்கரிய
விவ்வேந்தனாட்டிலிருப்பதறனன்றெனவே
தெவ்வேந்தர்போற்றுந்திறல்வேந்தன்போயினன். (க௮)

போனான்மறுநகரம்புக்கப்பொருகளிற்று
வேனாறுசெங்கைவிறல்வேந்தன்வெய்யவன்றன்
வானாறிலதாமறைக்குந்தருநிரந்த
கானாறுநண்ணினான்மக்களையுங்கைப்பிடித்தே. (க௯)

வேறு.

மைந்தர்காள்கடிதேகிவருதிரென்
றந்தவாளுழவன்செலுமாயிடை
முந்தைநாளின்வினைப்பயனால்முகி
றந்துவீசினதாங்கருந்தாரையே. (௨௦)

வீசுகின்றவிடாமழைத்தாரையா
லாசைவெள்ளமீதூர்ந்துமொன்றாகியே
யெயின்மன்னவனெருப்வழியிடை
யோசையாறுபெருக்கோடலாயதே. (உக)

மலைபுரட்டிமரங்களைவேரறத்
தலைபுரட்டித்தடங்கரைதள்ளிவான்
விலைபுரட்டிவிளங்குமணிக்குவை
யலைபுரட்டிப்பெருகியதாறரோ. (உஉ)

ஆற்றின்வான்கரைமேவியரும்பெறன்
மாற்றிலாநிதிபோலுமவர்மக்களை
யேற்றுவார்பிறரின்மையினுலிகழ்
கூற்றுலாயவென்மன்னவன்கூறுவான். (உங)

அகாதநீரினளவறிந்தேகுது
மகார்கலரின்பினென்றேமறிநீரிடைத்
தகாததுன்பந்தரிக்கிலனாகியே
புகாதமுன்னம்புதல்வர்முன்போதுவார். (உச)

போந்தமைந்தரில்முன்னைப்புதல்வனை
வேந்தனில்லெனமற்றவ்விடலையை
யேந்தியேகவிருந்தபுதல்வனுந்
சார்ந்துசெல்லுந்தனிமைபொறாமலே. (உரு)

இனையாகியமைந்தர்க்கினிச்செயும்
வினையம்யாதெனத்தன்னுள்வினவியே
வனையும்வன்கொடியாலொருமைந்தனைச்
சிலைசெய்பாதவந்தன்னொடுஞ்சேர்த்தினன். (உசா)

பின்னையோரிளம்பிள்ளையைப்பேரெழிற்
றன்னதாரவிதோண்மிசைதாங்கியே
யன்னநீரையரிதினீந்திப்போய்
மன்னுமற்றக்கரையினில்வந்தரோ. (உஎ)

அப்பனையவ்வருந்துணையன்னாலை
யிப்புறத்தேடித்தேதுங்காணுநீ

தப்பிடாதிவனில்லெனத்தன்மன
வெப்பறுமையல்வேந்தனைத்தொடர்தலும். (௨௮)

அக்கரைப்பெருமைந்தனலறிட
விக்கரைக்குமோர்மைந்தனையேங்கிடச்
சிக்கெனப்பெருந்தாருவிற்சேர்த்தினான்
புக்கவூழின்வினைவழிப்புந்தியான். (௨௯)

மீண்டுமந்தவிடலைதனையெடுத்
தீண்டுபோதுதற்கெண்ணியிறங்கியே
நீண்டதோளவனீந்தினனீந்தலுந்
தூண்டும்வல்வினைப்பவ்வஞ்சுழித்ததே. (௩0)

சுழித்தநீரிலமிழ்த்தினதத்திமே
லெழுத்தியுய்த்தனவீர்த்துப்புரட்டின
தழைத்ததூற்றிடைச்சாடினநீடிய
நிழற்குடைப்பிரான்றன்னையந்தீத்தமே. (௩௧)

உந்துதெண்டிரைமோதவுணர்வொழிந்
திந்தியங்களுந்தன்மையிழந்திடக்
கந்தடுங்களிற்றுத்தனிக்காவலன்
வந்துசேர்ந்தனனங்கோர்மருங்கினே. (௩௨

அம்மருங்கினணிதிரிகர்த்தமாம்
வெம்மைமாநகர்சேர்ந்தவவ்வேந்தர்கோன்
றன்மைநிற்கத்தருவொடுஞ்சேர்த்திய
செம்மைமைந்தர்கள்செய்தியியம்புவாம். (௩௩)

மக்கட்பிணியுறுபடலம் முற்றும்.

கும்பப்படலம்.

இழுக்காவறத்துத்திறல்வேந்தனிறங்கிநீந்துமேல்வையினி
லொழுக்காறிழுத்துக்கொண்டேகவுள்ளந்தெரியாதுடன்போந்து
விழுக்காதலித்துநெக்காதவிசியாற்சிறிதுநங்குயிர்பிழைத்த
குழுக்காதலரங்குறுதுயரமெம்மாலுரைக்கக்கூடாதே. (௧)

மனையுமிழந்து நகரிழந்து வளநாடிழந்து மன்னறத்தின்
வினையுமிழந்து குலமிழந்து மேன்மையிழந்து மெய்யுயிரா
மனையுமிழந்து செயலிழந்து வருநகரிடையோராற்றிலைபன்
றனையுமிழந்த தனயர் துயரெம்மாலுரைக்கத்தகாதன்றே. (௨)

ஐயன்போனான்போனானென்றலறுமன்னேயன்னையென்று
மெய்யின்றலையாமெம்பியிங்குவாராய்வாராய்வினவவெனுங்
கையுமுடம்புமிளரியவிழ்ப்பார்க்காணேன்காணேனெனக்கசியுஞ்
செய்யுஞ்செயல்யாதெனச்சிரத்தைமாத்திற்புடைக்குமொருசெம்மல். (௩)

கண்ணாலருவிக்கடல்பெருகக்கையுமுடம்புமிகநடுங்க
வண்ணாவண்ணாவென்றழைக்குமையனைவன்கொலடைந்ததென்று
மண்ணுடிழந்து விண்ணடைந்தான்கொல்லோநம்மைமறந்ததென்று
முண்ணாவுலாவெம்பிமரத்தொடுநின்றழுங்குமொருகாளை. (௪)

நல்லாள்போனகடற்றுறையினண்ணநயந்தயப்பென்று
மெல்லாமொழிந்தவழுக்காற்றையிவ்வாறொழிக்கிற்றேவென்றுங்
கல்லாமைந்தர்போன்றமெனத்தொடாதொழிந்தகருத்தென்று
நில்லாவுயிரைத்துன்பவழிப்படுத்துமொருமான்முனைநினறே. (௫)

சிந்தாகுலந்தீர்த்தருளுமன்னைதிரைவாரிதிக்கேயிரையாக
நந்தாதெம்மைநனிபுரக்குநீயுநதிக்கேடன்றேதக
வந்தாயரசர்முடிவணங்கவரியாசனத்தினரசிநக்கு
மெந்தாபார்க்கோவாளாநியிருக்கவுயிர்கொண்டிருக்கின்றேம். (௬)

என்றுபலவும்பன்னியழுதிரங்கியாற்றினிருமருங்கு
மொன்றின்முகத்தையொன்றுபார்த்துயிர்நெக்குநந்துமயர்த்துத்
துன்றுதிரைவாரியின்வீழ்ந்துகலாகாணார்க்குத்தொல்வினைபி
னன்றிப்பெருமாக்கலனுய்த்ததென்னவொருவனண்ணினான். (௭)

வேறு.

பெருந்தண்புனலாற்றின்மாப்பெருங்கரைமருங்கே
பருமரத்தொடுநின்றவம்மைந்தரைப்பார்த்தான்
றருமமன்னவர்குலத்தவர்போலுமித்தவயர்
இருமரத்தொடுநின்றதென்காரணமெனவே. (௮)

கொன்றைவாய்ந்தவேய்ங்குழலுடைக்கோவலர்கோமான்
கன்றவிக்கியகட்டொடுங்கண்ணினீரோடு
நின்றமைந்தனையாவனீகட்டியநிபமென்
ஒன்றுகூறெனக்கோமகன்கோமற்குரைப்பான். (௯)

தந்தைபோலுநீகேட்டியத்தம்பியும்யானு
மெந்தையோடுவேற்றூர்புகுந்திடவிரைந்திங்ஙன்
வந்தவேலையிலாற்றுநீரகாதமாய்வரலுஞ்
சிந்தைவேறுபட்டேயெந்தையொருமொழிதெரித்தான். (௧0)

இளவறன்னையுமென்னையுநோக்கியிவ்வாற்றி
னளவறிந்திடாமீள்குது நின்மினென்றைய
வுளமிசைபர்திலங்கலுழ்ந்தனமாயிடையுரவோய்
தளைசெய்தானிந்தமரத்தொடுங்கொடியினாற்றந்தை. (௧௧)

எம்பியைக்கொண்டுநீந்தினனக்கரையிவர்ந்தான்
நம்பிநிற்றியவ்வண்ணலைத்தாவெனநகில
வெம்பியாங்கவன்றொடர்ந்திடப்பொருமலவ்வேந்தன்
கம்பமுற்றிடவன்னவன்றன்னையுங்கட்டி. (௧௨)

இறங்கியென்னையுமெடுத்துக்கொண்டேகுவானீந்தக்
கறங்குதெண்டிரையாற்றுநீரழுவத்துட்கலந்த
திறங்கொளெந்தையைக்கண்டிலனெனப்பெருஞ்சிரத்தை
வறைந்தவம்மரத்தோடறைந்தாகுலித்தழுதான். (௧௩)

அழுதிரங்கிநின்றிபம்பலுமாயர்தங்கோமான்
மழலைமைந்தரைவருந்தன்மினெனப்பிணியாற்றித்
தழுவிமெய்யெலாந்தைவந்து தடங்கணீர்துடைத்து
முழுதுணர்ந்திடப்பின்னருமோர்மொழிமொழிவான். (௧௪)

அருந்தவத்தினிற்பெற்றவனியம்புவையனையா
யிருந்ததெவ்வயினின்னையர்காமமேதிங்ஙன்
பிரிந்தநும்பிபேர்யாதெனப்பெரியவன்வினவப்
பொருந்தலார்தொழுங்கழன்மகன்றலைமகன்புகல்வான், (௧௫)

வேறு.

அன்போடிறையும்பரிசேயிட்டானமெனுமோரணிகாம்
பொன்போலியவென்னிலைபெயர்புண்டரிகவல்லியென்பா
டன்போலில்லாப்புரூரவாவென்றுமோநவன்றந்தைநின்ற
வெம்போர்மாக்கதனிளவல்கனகாங்கதனென்றியம்பினான். (௧௪)

ஆரேவெளிறுங்கிடக்கதிர்கவாட்டின்பாலுமடிசிறுகன்
னீரோடளிப்பன்வருதிர்கொல்லோவென்னவவனுநேர்ந்திடலும்
போரார்தையின்மன்றுறுநதியக்கரையிற்பிரித்தபிள்ளையுங்கொண்
டோராடுற்றான்கும்பனெனுமாயர்குலத்திறையோனே. (௧௭)

ஆற்றினகன்றதிருக்காதையுருவடைந்தப்பவிடையன்
வேற்றுருவடிவங்கொண்டேகிர்ந்தானென்னவியங்குமொழிவகன்றார்
பொற்றுமாசர்குலக்குமார்புதல்வரிவரேயெனப்புரப்ப
மாற்றமறியாமைந்தரவன்மைந்தராகவளர்கின்றார். (௧௮)

இடையர்குலத்துச்சிறார்விளையாட்டியற்றார்தம்மிசைவோ நம்
படைகள்பயிற்றல்கரிபரிதேர்நடத்துமியற்கைபலபயிற்றல்
அடையலாற்செற்றிடுதிறங்களெண்ணலெழுதலாதியவா
யுடையசெயலேவிளையாட்டாய்விழைவாராந்தவயோரே. (௧௯)

இற்றையதிற்தேயன்னவர்கட்கெவைவேண்டுவனவவையெல்லாங்
கற்றல்புரிவித்திடப்பவங்கோளனம்போலவருங்கற்றுணைக்
கொற்றவரசர்குலக்குமார் குறிபோன்றுளரிக்குமாரென
முற்றுமுணர்ந்தேதமைக்கரிறு வளர்த்தான் முல்லைமுதலோனே. (௨௰)

சிந்தைகளிப்பத்துயரொளிப்பச்செழுந்தார் முல்லைக்கும்பனிடை
மைந்தரடைந்ததன்மையினைவகுத்தோந்திரைமன்னுறுநதியின்
முந்தைவினையின்பதுதிபாலிறக்கிகிடந்தமுடிந்தான்போ
லுந்துபெருநீரொடுஞ்சென்றான்றவ்வமையினிமேலுரைசெய்வாம். (௨௧)

கும்பபடலம் முற்றும்.

(தொடரும்.)

உதவிப்பத்திராதிபர்.

உ

களப்ரரும் சங்ககாலமும்.

கே. ஜி. சங்கரன்.

செந்தமிழ்த்தொகுதி 21 பக்கங்கள் 256–260-ல் ஸ்ரீ மு. தம்பையா அவர்கள் நான் களப்ரரைக்குறித்தும் சங்ககாலத்தைக்குறித்தும் எழுதியவற்றை மறுத்திருக்கிறார்கள். என் கருத்து உண்மையைத் தெளிந்து வெளிப்படுத்துவதேயாகையால் அவர் கூறுவதை ஆராய்ந்து ஒப்பமுடிந்தவைகளை ஒத்துக்கொண்டும் மறுக்கவேண்டியவைகளை மறுத்தும் இங்கு சிறிது எழுதத்துணிந்தேன். இதை வாசிக்கும் நண்பர்கள் இதையும் முடிவுரையாகக் கொள்ளாது நன்காராய்ந்து முடிவுரை கூறவேண்டுமென்பதே என் விண்ணப்பம்.

முதலில், வேள்விக்குடிச்செப்பேடுகளில் வரும் "அளவரிய ஆதிராசரை அகலநீக்கி அகலிடத்தைக், களப்ரனென்னுங் கலியரைசன்கைக் கொண்டதனை இறக்கியபின்" என்ற வரிகளுக்கு "பாண்ட்யரை அகல நீக்கி, களப்ரவரசர்கள் அகலிடத்தைக் கைக்கொண்டு வேள்விக்குடியை இறக்கியபின்" என்று பொருள்கூறி, பாண்ட்யரை நீக்கியபின் பலகளப்ரர்கள் ஆண்டனரென்றும், அவர்கள் இறக்கியது வேள்விக்குடியே யென்றும், அவர்களை நீக்கியது கடுங்கோனல்லவென்றும், தம்பையா அவர்கள் வரைந்துள்ளார்கள்.

இவற்றில், இறக்கப்பட்டது வேள்விக்குடியே என்று நானும் இப்பொழுது ஒத்துக்கொள்கிறேன். ஆனால், பாண்ட்யரை அகலநீக்கியவன் களப்ரன் என்றிருப்பதால், பல களப்ரர்கள் ஆளவில்லையென்றும், கடுங்கோனே வெளிப்பட்டுத் தன்னாட்டை மீண்டும் பெற்றதாக கூறப்படுவதால், அக்களப்ரனை நீக்கியது கடுங்கோனே யென்றும் துணியப்படும். ஆகையால், என் முடிவுகள் ஒன்றும் சிறிதும் அசைக்கப்படவில்லை யென்று தெளிவாம். "களப்ராலிறக்கப்பட்டது" என்ற மொழிகளிலும் வேள்விக்குடியை இறக்கியவன் ஒருவனேயாகவேண்டுவதால், களப்ரரைப் பன்மையாகக்கூறியது அவர்குலத்தைக் குறித்ததாகும்.

இனி, செப்பேடுகளிற் கூறப்படும் பாண்ட்யர்களின் காலங்களையும் தம்பையா அவர்கள் தாக்க முயன்றார்கள். அவர்கள் எழுதியிருப்பதிலிருந்து, இச் செப்பேடுகளுக்கு நான் எழுதியிருந்த முகவுரையை

அவர்கள் படிக்கவில்லையென்று தெளிவாகிறது. ஆனைமலைச்சாஸனத்தி லிருந்து ஜடிலவர்மன்காலத்தையும், தலைமுறைக்கு 25 ஆண்டுகள் வீதம் கொடுத்து அவன் முன்னவர்கள் காலங்களையும் நான் நிர்ணயித்திருக்கி றேன். செப்பேடுகளில் நெல்வேலியில் வென்றதாகக் கூறப்படும் மாறவர் மன் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இருந்தவன். சம்பந்தரால் சைவனுக்கப் பெற்ற நெடுமாறநாயனாரும் நெல்வேலியில் வென்று 7-ஆம் நூற்றாண்டி லேயே இருந்தவர். ஆகையால் இருவரும் ஒருவரேயாகவேண்டும்.

சம்பந்தர் காலத்தையும் தம்பையா அவர்கள் தாக்கமுயன்றார்கள். ஆனால், அப்பர் பல்லவன் முதலாவது மஹேந்த்ரன் காலத்திலும், சம் பந்தர் நெடுமாறன்காலத்திலும், சிறுத்தொண்டர் முதலாவது நரஸிம்ஹ வர்மன் காலத்திலும் இருந்தார்களென்றும், நெடுமாறன் நெல்வேலியி லும், சிறுத்தொண்டர் வாதாபிலும் வென்றதால், இவர்கள்காலம் கி. பி. 7-ஆம்நூற்றாண்டேயென்றும் நன்குநாட்டப்பட்டிருக்கிறது. புறநானூறு 166ல் சம்பந்தர் குறிக்கப்பட்டிருப்பது உண்மையாயின், புறநானூறு கி.பி 7-ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதென்றே முடிவுகூறவேண்டும்.

இம்முடிவை வலியுறுத்தும் செய்தியொன்று மணிமேகலையில் காணக்கிடக்கிறது. இந்நூலில் குச்சரக்குடிகையென்ற சிற்றில் இரு முறை கூறப்படுகிறது. இதற்கு மஹாமஹோபாத்தியாய ஸ்வாமிநாத ஐயரவர்கள் குர்ஜரதேசத்துப் பணியமைந்த ஒரு சிறு கோயில் என்று பொருள் கூறுகிறார்கள். ஆயினும், சிலர் இதுவல்ல பொருள்என்றுகூறி, குச்சரம் என்ற பதம் குத்தரம் என்றதன்மரூஉவாய் இருக்கலாம் என்கி றார்கள். இது தவறென்பது தெளிவாம். வடமொழியில் குத்ரம் என் றிருப்பது குத்திரம் என்றே தமிழிலாகும். குத்தரம் அல்ல. நிகண்டு களிலும் குத்திரமென்றே காணப்படுகிறது. குத்திரம் குச்சரமாக மாறி யிருப்பதற்கு வேறுசான்றொன்றுமில்லை. மேலும் குர்ஜரதேசம் சிற்பத் தில் பெயர்பெற்றிருப்பதை Encyclopaedia Brittanica வில் Indian Architecture என்றவ்யாஸத்தைப்படித்தறியலாம். குர்ஜரர்கள் இந்திய சரித்ரத்தில் முதன்முதற்கூறப்படுவது கி பி. 6-ஆம் நூற்றாண்டிலேயே ஆதலாலும், அவர்கள் ப்ரமுகர்களானபிறகே அவர்களின் சிற்பப்பணிகள் தென்னாட்டிலும் பரவியிருக்குமாதலாலும், குச்சரக்குடிகையைக்கூறும் மணிமேகலைநூல் கி. பி. 6 ஆம் நூற்றாண்டிற்குப்பிறகே இயற்றப்பட் டிருக்கவேண்டும். சங்ககாலமும் 6, 7-ஆம்நூற்றாண்டுகள் ஆகவேண்டும்.

உ

பெருமிழலைக்குறும்ப நாயனாரது திருப்பதி.

சிவனடியார் அறுபத்துமூவருள் ஒருவராகிய பெருமிழலைக்குறும்ப நாயனார்வாழ்ந்து வீடுபேறெய்தியதிருப்பதி பெருமிழலை யென்பது திருத்தொண்டர்புராணம்படித்தோர்யாவரும் நன்கறிந்த தொன்றாம். இஃது இங்ஙனமாக, சைவசமயாசாரியர்களால் பாடப்பெற்றதும் திருஞான சம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் படிக்காசு அருளப்பெற்றது மாகிய திருவீழிமிழலை யென்னும் திருப்பதியே இந்நாயனாரது பெருமிழலையெனக்கொண்டனர் பிற்காலத்தினர். ஆதலால் இத்திருப்பதிகளிரண்டும் ஒன்றோ? அன்றி வேறோ? வேறாயின் பெருமிழலை யாண்டையது? என்பவற்றை ஆராய்வாம்.

சுந்தரமூர்த்திகள் அருளிய திருநாட்டுத்தொகையிலுள்ள 'மிழலை நாட்டுமிழலையே வெண்ணிநாட்டுமிழலையே' என்றவடியால் மிழலை யென்னும் பெயருடைய திருப்பதிகள் இரண்டு உண்டு என்பது வெளியாகின்றது. அன்றியும், இவ்விருமிழலைகளுள் ஒன்று மிழலைநாட்டிலும் மற்றொன்று வெண்ணிநாட்டிலும் இருத்தல்வேண்டுமென்பது அவ்வடியாலேயே அறியப்படுகின்றது. ஆசிரியர் சேக்கிழார் நம்து பெருமிழலைக் குறும்பநாயனாரது திருப்பதி மிழலைநாட்டிலுள்ள பெருமிழலையென்று மிகத்தெளிவாய்க் கூறியுள்ளனர். அதனை,

> சூதநெருங்குகுலைத்தெங்குபலவுபூகஞ்சூழ்புடைத்தாய்
> வீதிதோறுநீற்றினொளிவிரியமேவிவிளங்குபதி
> நீதிவழுவாநெறியினராய்நிலவுங்குடியானெடுநிலத்து
> மீதுவிளங்குந்தொன்மையதுமிழலைநாட்டுப்பெருமிழலை. [1]

என்ற பாடலாலுணர்க. அன்றியும் அவ்வாசிரியர், வீழிமிழலையை மிழலைநாட்டிலுள்ள திருப்பதியென்று யாண்டுங் குறிப்பிடவில்லை. ஆத

---

1. பெரியபுராணம்—குறும்பநாயனார்புராணம்—1.

லால், அவர் வீழிமிழலையும் பெருமிழலையும் வெவ்வேறு திருப்பதிகள் என்றே கருதியுள்ளாரென்பது ஒருதலை. எனவே, சுந்தரமூர்த்திகள் கூறியுள்ள மிழலைநாட்டு மிழலையும் வெண்ணிநாட்டுமிழலையும் முறையே பெருமிழலையும் வீழிமிழலையுமாயிருத்தல்வேண்டுமென்பது நன்கு துணியப்படும். ஆகவே, இவ்விரண்டும் வெவ்வேறு திருப்பதிகளே யாம். இங்ஙனமே, ஆனாயநாயனாரது மங்கலமும்[2] ஏயர்கோன்கலிக் காமநாயனாரது பெருமங்கலமும்[3] அரிவாள்தாயநாயனாரது கணமங் கலமும்[4] பொதுவாக மங்கலமெனப்படினும், வேறுவேறு திருப்பதி களாயிருத்தல் ஈண்டு அறியத்தக்கது. இதுகாறுங்கூறியவாற்றால் பெருமிழலைக்குறும்பநாயனாரது திருப்பதி வெண்ணிநாட்டு வீழிமிழலை யன்றென்பதும் மிழலைநாட்டுப் பெருமிழலையேயாமென்பதும் இனிது புலப்படும்.

இனி மிழலைநாட்டிலுள்ள பெருமிழலை எவ்விடத்துள்ளதென் பதைத் துருவிநோக்குவாம். வளநாட்டின் உட்பிரிவு நாடு அல்லது கூற்றமெனப்படும் என்பர் கல்வெட்டு ஆராய்ச்சியாளர். எனவே, மிழலை நாட்டை மிழலைக்கூற்றமெனினும் பொருந்தும். மிழலைக்கூற்றம் கடலைச் சார்ந்துள்ளதொருபகுதியென்று 24 ஆம் புறப்பாட்டு அறிவிக்கின்றது. இம்மிழலைக்கூற்றம், கடைச்சங்கநாளில் வேளிரது ஆட்சிக்குட்பட்டிருந் தது. அக்காலத்தில் இதனை ஆட்சிபுரிந்தவர்களுள் வேள் எவ்வியென் பானும் ஒருவன்[5]. அவனது தலைநகர் நீடூர் என்பது[6]. நாகபட் டினத்தைச் சார்ந்த வைப்பூரும் அவனுக்குரியதென்று அகநானூற்றுப் பாடலால் தெரிகிறது[7]. நீடூர்மாயூரத்திற்கண்மையிலுள்ளதொரு திருப் பதி. சைவசமயாசாரியரால் பாடப்பெற்றது. ஆகவே, திருநீடூர், மாயூரம், வைப்பூர், நாகபட்டினம் முதலான நகரங்களைத் தன்னகத்துடைய தாய்ச் சோழநாட்டிற் குணகடலைச்சார்ந்துள்ள பகுதியே மிழலைநாடென்று கூறப்பட்டதென்க. இஃது, ஒருகாலத்தில் தன்பெயர்கொண்டு பெருகி

2. பெரியபுராணம்—ஆனாயநாயனார்புராணம்—7.
3. ௸ ஏயர்கோன்கலிக்காமநாயனார்புராணம்—1.
4. ௸ அரிவாள்தாயநாயனார்புராணம்—1.
5. புறநானூறு—24.
6. அகநானூறு—266.
7. ௸ 126.

ஆளுடையார்கோயிலெனப்படும் திருப்பெருந்துறை, திருப்புனவாயில் முதலான திருப்பதிகளையும் புதுக்கோட்டை ராஜ்யத்தின் ஒரு பகுதியையும் தன்பாலடக்கிக்கொண்டு விளங்கியது என்பர் சரித்திர நூல்வல்லார். இம்மிழலைநாட்டிலுள்ள மாயூரத்திற்கு மேற்கில் 12 மைல் தூரத்தில், கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் போகும் பெருவழிக்கருகில் மிழலை என்ற திருப்பதி யொன்றுளது. யாம் நேரிற் சென்று அதனைப்பார்த்தபோது அழிவுற்ற நிலையிலுள்ள ஒருபழைய சிவாலயம் அங்கேகாணப்பட்டது. எக்காரணத்தாலோ அச்சிவாலயமும் அதனைச்சூழ்ந்துள்ள ஊரும் அழிந்துபோய்விட்டன. அங்கிருந்தோர் அதற்கருகிலுள்ள களம்பரம் என்ற ஊரிற் குடியேறியுள்ளனர். மிழலையும் அதிலுள்ள சிவாலயமும் பழையகாலத்தில் நல்ல நிலையிலிருந்திருத்தல்வேண்டும். அழிவுற்ற அவ்வாலயத்திலுள்ள படிமங்கள் அதில் ஒருபுறத்தில் புதியதாக அமைக்கப்பெற்றுள்ள ஒரு சிறு அறையுள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டுவருகின்றன. அவ்விடத்திற் பெருமிழலைக்குறும்பநாயனரது படிமம் இன்றும் உளது. அஃது உருத்திராக்கமாலையுடன் சடைமுடியுடையதாய்க் காணப்படுகின்றது. ஆகவே, பெருமிழலைக்குறும்பநாயனரது திருப்பதியாகிய பெருமிழலை, மிழலை நாட்டிலுள்ள மிழலையேயாதல் அறிந்துகொள்க.

T. V. சதாசிவபண்டாரத்தார்,

தலைமைத்தமிழ்ப்பண்டிதர்,

வாணாதுறை ஹைஸ்கூல், கும்பகோணம்.

உ

ஸம்ஸ்க்ருத வ்ருத்த மஞ்ஜரீ.

(௩௪௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

21. ப்ரக்ருதி.

3. மந்தா. (விலாஸினி)=29 மாத்ரா.

=பபப பபப ர

= { ஞநந ஞநந
ஞநந ஞநந
ஞநந ஞநந—ஞநஞ

22. ஆக்ருதி.

1. ப்ரபத்ரகம் (30)=பர நர நர நக

= { ஞநநஞ
நஞ ந நநஞ
நஞ ந நநஞ
நஞ ந நநஞ

2. ஹம்ஸீ (32)=மமதநநநஸக

= { ஞஞ ஞஞ=கன்யா } வித்யுன்மாலா
ஞஞ ஞஞ
நநநந நநநந
நநநந ஞஞ =சசிவதஞ.

{ காலம் நீயே
பத்மா ரஞ்யே
பவனப தனபரி
தாளய ராகே

23. விக்ருதி.

1. அத்ரிதநயா=அச்வலலிதா=30.

=நஜபஜபஜபலக.

= { நநந நஞந
ஞநந நஞந
ஞநந நஞந
ஞநந நஞ

2. மயூரகதீ =(32)=ப ப ப ப ப ப ப க க

$$=\left\{\begin{array}{ll} \text{ஞநந} & \text{ஞநந} \\ \text{ஞநந} & \text{ஞநந} \\ \text{ஞநந} & \text{ஞநந} \\ \text{ஞநந} & \text{ஞஞ} \end{array}\right.$$

(last two lines: தோதகம்)

பற்றில வீசனும்
முற்றவு நின்றனன்
பற்றிலை யாயவன்
முற்றி லடங்கே

(வஞ்சித்துறை கோயில்திருவாய்மொழி (செஞ்சுருட்டி))

3. மத்தக்ரீடா (32)=மமத நநநந லக

$$=\left\{\begin{array}{ll} \text{ஞஞ} & \text{ஞஞ} \\ \text{ஞஞ} & \text{ஞஞ} \\ \text{நநநந} & \text{நநநந} \\ \text{நநநந} & \text{நநஞ} \end{array}\right.$$

(last two lines: சசிகலர்)

24. ஸம்ஸ்கிருதீ (ஸங்க்ருதி)

தந்வீ. (32) பத நஸ பப நய

$$\left\{\begin{array}{ll} \text{ஞநந} & \text{ஞஞ=பங்க்தி} \\ \text{நநநந} & \text{நநஞ} \\ \text{ஞநந} & \text{ஞநந} \\ \text{நநநந} & \text{ஞஞ=சசிவதஞ} \end{array}\right.$$

25. அதிக்ருதீ.

க்ரௌஞ்சபதம் (32)=பம ஸம நநநந க

$$=\left\{\begin{array}{ll} \text{ஞநந} & \text{ஞஞ=பங்க்தி} \\ \text{ஞநந} & \text{ஞஞ} \\ \text{நநநந} & \text{நநநந} \\ \text{நநநந} & \text{நநஞ} \end{array}\right.$$

(first two lines: சம்பகமாலா; last two lines: சசிகலா)

26. உத்கிருதீ

1. ஆக்யா (32) பநந நநஸ க க

ஞஞ ஞநந
நநநந நநநந
நநநந நநநந
நநஞ ஞஞ

2. புஜங்கவிஜ்ரிம்பிதம். (38)

=மமத நநந ரஸலக

ஞ ஞ ஞ ஞ
ஞ ஞ ஞ ஞ } 8
நநநந நநநந நநஞ 11
நஞந நஞந ஞ 7

மந்தா ரமணீ
கானே கடலே கணமே மாமே
வானே புவியே மறையே விரையே
பானே மதியே பகாந் விதமே
மானே தேனே மலையின் மகளே.
கன்யா

தோதகம் 11/16. ஞநந ஞநந ஞநந ஞஞ
மந்தரம் வேலையில் வந்ததும் வானத்
தந்திர ஞார்பிடி யென்னவு மானுள்

கனமட வார்தம்
சிலையத ஞலும்
கனவிளை யாலும் கரைமேலே

சசிவதஞ ஸுமதி
=நநநஞஞ =நந ஞஞ

கஜகதி 8/10 நநஞ நநஞ
{ரவிஸுதா பரிஸரே
{விவிரதோ த்ரிவிஹரே

{பெரியைந் சிறியைந்
{பெண்ணுந் ஆணுந்

ஸோமராஜீ 6/10 நஞஞ நஞஞ
சாத்தே யுதித்தா
யாத்தே குதித்தே
சமர்த்தா யெதிர்த்தே —யமுனை,

(தொடரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,

மதுரை.

உ

தொல்காப்பியதேவரின் காலக்குறிப்பு.

திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகமென்னும் நூல் தொல்காப்பிய மியற்றிய தொல்காப்பியரின் வேறான வொரு தொல்காப்பியதேவரென் பாரா லாக்கப்பட்டதென்னும் விவரம் மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ உ. வே. ஸ்வாமிநாத ஐயரவர்கள் வெளியிட்ட அக்கலம்பகத் தின் முகவுரையா லினிது விளங்குகிறது. இக்கலம்பகத்தை நோக்கிய தன்பின்னரே "பண்பாயகலம்பகத்திற் கிரட்டையர்கள்" என்று புகழ் கொண்ட இளஞ்சூரியர், முதுசூரியரெனப்பட்ட இரட்டைப்புலவர்க ளால், சிதம்பரத்தடியார்கள் சிலர் வேண்டுகோளின்படி தில்லைக்கலம்பக மும் அதன்பின்னர், திருவாமாத்தூர்க்கலம்பகம் என்ற சிறந்த பிரபந்த மொன்றும் இயற்றப்பட்டனவென்கிற கர்ணபரம்பரைச் செய்தியொன்று தமிழ்நாவலர்சரிதையிற்* கூறியிருப்பதாயும் விளக்கியுள்ளார். அவ் விரட்டையர்களோ, பாரதம் பாடிய வில்லிபுத்தூராரை யாதரித்த வரபதி யாட்கொண்டானென்னும் பிரபுவைத் தாமும் பாடுதலாலும், வில்லிபுத் தூராருக்குச் சமகாலிகரென்று கருதப்படுகிற ஸ்ரீ அருணகிரிநாதர் தம் திருப்புகழொன்றினிறுதியில் கி. பி. 1449௵ முதல் 1465௵ வரை அரசுபுரிந்த விஜயநகரத்தரசனை ப்ரௌடதேவ மஹாராஜாவைப் புகழ்ந்துள்ளாராதலாலும், இந்நான்குநாவலர்களும் பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில்விளங்கிய கவிதிலகரென்றேற்படுகிறது.†

ஆகவே, திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகமுடையாரான தொல்காப் பியதேவர்காலம் பதினைந்தாம்நூற்றாண்டிற்கு முன்னதென்பதே தெரி யக்கிடக்கிறது.

---

* "தொல்காப்பியதேவர்சொன்னதமிழ்ப்பாடலன்றி
நல்காத்திருச்செவிக்குநாமுரைப்பதேறுமோ
மல்காப்புனறதும்பமாநிலத்திற்கண்பிசைந்த
பல்காற்பொருமினர்க்குப்பாற்கடலொன்றீந்தார்க்கே"—

தமிழ்நாவலர்சரிதை.

† செந்தமிழ், Vol. VII. பக்கம் 405.

இனி, பாதிரிப்புலியூர்க்கலம்பகத்தின் பாயிரத்து முதற்காப்புச் செய்யுளில் *சொன்னவாறறிவிநாயகரென்ற நாமம்வாய்ந்த கணநாதர் போற்றப்படுகிறார். தஞ்சைஜில்லா நீடூர்த்தலத்தெழுந்தருளியுள்ள உமைபொடுநிலாவியபெருமானார் (அருட்சோமநாதேசுவரர்) ஆலயத்துள் கர்ப்பக்கிரகச்சுவரிற் பொறித்துள்ள குலோத்துங்கசோழனின் நாற்பத்தாறாமாண்டுச் சிலாசாதனமொன்றில் † மிழலைநாட்டுவேள்கண்டன் மாதவனென்பான் அச் சோழவரசனின் முப்பத்தெட்டாமாண்டில் நீடூர்ப்பெருமாற்குக் கற்றளி விருப்புடனமைத்த செய்தி கூறப்புக்க சமயத்தில் தன்னால் சொன்னவாறறிவார்கோயிலும் எடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளான். இச்சாஸனத்தில் தில்லையம்பலத்திற்கும் குறிப்புக் காணப்படுவதாற் சிதம்பரத்திற்கணித்தாயுள்ள பாதிரிப்புலியூர்க் கோயிலில்தான் இந்த விநாயகர்கோயிலும் கட்டப்பட்டிருக்கவேண்டுமென்று மேற்படுகிறது. நாற்பத்தாறாண்டு அரசுவீற்றிருந்த சோழவரசன் கி. பி. 1070 முதல் 1!20 வரையாண்ட முதலாம் குலோத்துங்கனைத் தவிர வேறெவருமில்லையாதலால் இச்சாதனத்தில் குறிக்கப்பட்டுள்ள சொன்னவாறறிவார்கோயில் சற்றேறக்குறைய கி. பி. 1108ஆண்டில் அதாவது பன்னிரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலே ஏற்பட்டிருக்க வேண்டும். தானியற்றிய கலம்பகத்தில், காப்புச்செய்யுளை இவ்விநாயகருக்குச் சிறப்பாக அர்ப்பணம் செய்யவேண்டுமானால், இக்கோயில் கட்டப்பட்டுக் குறைந்தது ஐம்பது அறுபது ஆண்டுகளுக்குப் பிறகாவது தான் தொல்காப்பியதேவர் திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகத்தை யியற்றியிருக்கவேண்டுமென்றெண்ணுவது பொருத்தமாயிருக்கிறது.

ஆகவே, தொல்காப்பியதேவர்காலம் 12-ம் நூற்றாண்டினிறுதிக்கும் 14-ம் நூற்றாண்டினிறுதிக்கும் இடைப்பட்ட காலமென்னலாம்.

A. S. R.

---

*பொன்னினான்மாடமோங்கும்பாதிரிப்புலியூரைய
னென்னையாளுடையவீசன் றன்னிடத்திருந்தவோங்கற்
கன்னிமானீன்றெடுத்தகடம்பொழிகவுட்டூால்வாய்ச்
சொன்னவாறறியும்யானை துணையடிதொழுவோமியாமே.

திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் செய்யுள் 1.

† "கூறியவுலகனைத்தையுங்குடைக்கீழாக்கியகுலோத்துங்கசோழற்
.. காண்டொருநாற்பத்தாறதன் இடை.........சொன்னவாறறிவார்
.. கோயிலும்............நிலாவினான்......................மிழலைநாட்டு
.. வேள்கண்டன்மாதவனே."—நீடூர்ச்சாதனம்.

உ

மலையாளம்.

மலையாளம் என்னும் சொல் இப்பொழுது தேசத்தையும் பாஷையையும் குறிக்கின்றது. இச்சொல்லைச் சிலர் மலையென்றும் ஆழமென்றும் பிரித்து, ஆழமென்பது ஆழியென்னும் சொல்லின் திரிபுஆனதால் மலைகளினாலும் ஆழி(கடல்) யாலும் சூழப்பட்ட இடமென்று பொருளுரைக்கின்றனர். ஆயின், தமிழிலோ மலையாளத்திலோ ஆழமென்பதற்கு ஆழியென்னும் பொருள் இருப்பதாகக் காணப்படவில்லை. ஆழமுடையது ஆழி. ஆழமும் கடலும் ஒன்றாகமாட்டாவன்றோ? ஆனதால் இவ்விதம் பொருள் கொள்ளுவது உசிதமாகத்தோன்றவில்லை. நோயுள்ளவனை 'நோயாளன்' அல்லது 'நோயாளி' என்றும், இரப்பவனை 'இரப்பாளன்' அல்லது 'இரப்பாளி' என்றும், தலைவனை 'தலையாளன்' அல்லது 'தலையாளி' என்றும், காட்டில் வசிப்பவனை 'காட்டாளன்' என்றும் வழங்குவதுபோல மலைகளையுடைய நாட்டில் இருப்பவனை 'மலையாளன்' அல்லது 'மலையாளி' என்று சொல்லுவது உசிதமாகத் தோன்றலாம்.*

---

* இது போற் பொருளுரைக்கக்கூடிய சொற்கள் ஆவன—(1) கலையிலங்குமொழியாளர் (2) பேராயிரமுடையபேராளன் (3) தண்குடந்தை நகராளன் (4) உருவாளன் (5) திருவாளன்.

இவ்விதம் பொருளுரைப்பதற்கு அத்தாட்சியாகத் திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய ஓர்பாட்டு ஈண்டு எடுத்தெழுதப்படுகிறது.

கலையாளாவகலல்குல்கனவளையும்கையாளாவென்செய்கேன்நான்
விலையாளாவடியேனைவேண்டுதியோவேண்டாயோவென்னும்மெய்ய
மலையாளன்வானவர்தம்தலையாளன்மராமரமேழெய்தவென்றிச்
சிலையாளன்என்மகளைச்செய்தனகள்எங்ஙனம்நான்சிந்திக்கேனே."

இப்பாட்டடிகளில் 'மெய்யமலையாளன்' 'தலையாளன்' 'சிலையாளன்' முதலிய சொற்கள் சிந்திக்கத்தக்கன. விலைக்குக்கொண்ட அடிமையை 'விலையாளன்' என்றும் திருமெய்யமென்னும் மலையில் எழுந்தருளிய தேவனை 'மெய்யமலையாளன்' என்றும், வானவருக்கு முதல்வனானவனை 'வானவர்தம்தலையாளன்' என்றும் வெற்றியுள்ள சிலையையாளுபவனை 'வெற்றிச்சிலையாளன்' என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இப்பாட்டடியில் 'மலையாளன்' என்னும் பேர் நேரிற்காணப்படுவதால் அது அத்தேசத்தாருக்குப் பெயரென்று விளங்குகிறது.

இன்றும் 'கொல்லிமலை' முதலிய உள்நாட்டுமலைகளிற் குடிகொண்டிருக்கும் ஜனங்கள் 'மலையாளிகள்' என்றே வழங்கப்பட்டுவருகிறார்கள். அவ்விடத்தில் மலைகளைத்தவிர மற்றொன்றும் இல்லாதது இங்குக் கவனிக்கத்தக்கது. ஆனால் மலையாளம் என்ற சொற்கு மலையாளிகள் குடியிருக்கும் இடமென்றும், அவருடைய பாஷையென்றும், கூறும் பொருள், வெகுகாலம் சென்றபின்னர் வந்திருக்கக்கூடுமென்பது சிலரது கொள்கை.

மேற்குக்கடலுடன் சமமாய்ச்சேர்ந்துகிடக்கும் மலையாளத்தைக் கடைச்சங்கநூல்களிலும் சிலாசாஸனங்களிலும் 'மலைநாடு'* என்றுகூறியிருப்பதும் தவிர, அது தமிழ்நாடுகளில் ஒன்றாயும் கணிக்கப்பட்டிருக்கின்றது. 'புதைத்தல் போர்த்தல்' 'இது மலைநாட்டுவழக்கு' என்று சிலப்பதிகார உரையிலும், 'போகட்டே என்றுமாம்' 'அது மலைநாட்டு வழக்கு' என்று ஜீவகசிந்தாமணி உரையிலும், 'மலைநாட்டுச்சடையன் கருணன்தன்மேல் பழைபொய்' என்று கழுகுமலைச்சிலாசாஸனத்திலும், 'ராஜாதித்ததேவர் பெரும்பனழநாயகர் மலைநாட்டு நந்திக்கரைப்புத்துவர்' என்று மற்றொரு சாஸனத்திலும், 'தென்மதுராபுரித்திருவிளையாட்டத்தில் கண்டு மன்னரெல்லாம் வந்திறைஞ்ச மலைநாடு கொண்டருளி' என்று சுசீந்திரம் சாஸனத்திலும், 'மலைமண்டலத்துத் திருவிதாங்கோட்டு இரவிவன்மராய குலசேகரப்பெருமாள்' என்று திருவிதாங்கோட்டுச் சாஸனத்திலும், 'மலைநாட்டுத்திவ்விய தேசங்கள்' என்று ஸ்ரீவைஷ்ணவ நூல்களிலும் இப்பதம் பிரயோகிக்கப்பட்டிருப்பது காணற்பாலது.

---

* சேக்கிழாருடைய பெரியபுராணத்தில் சேரமான்பெருமாள்நாயனார் சரித்திரத்தில் சேரவரசரின் நாட்டையும் தலைநகரையும்பற்றி இவ்விதம் காணப்படுகின்றது.

"மாவீற்றிருந்தபெருஞ்சிறப்பின்மன்னுந்தொன்மைமலைநாட்டுப்
பாவீற்றிருந்தபல்புகழார்பயிலுமியல்பிற்பழம்பதிதான்
சேவீற்றிருந்தார்திருவஞ்சைக்களமுநிலவிச்சேரர்குலக்
கோவீற்றிருந்துமுறைபுரியுங்குலக்கோமூதூர்கொடுங்கோளூர்"

பிறகு நாளடைவில் விஜயநகர அரசரின் காலத்தில் 'மலையாளம்' என்னும் சொல் நேரில் உபயோகத்தில் வந்துவிட்டது.*

இம்மலைநாடு, தமிழ்நாடுகளில் ஒன்றென்று பழைய தமிழ்நூல்களிற் சொல்லப்பட்டுளது. அந்நாட்டின் எல்லையை வரையறுத்துச் சொல்லும்பொழுது,

"வடவேங்கடம்தென்குமரியாயிடைத்-தமிழ்கூறுநல்லுலகம்"

என்று பனம்பாரனாரும்,

"நெடியோன்குன்றமும்தொடியோள்பௌவமும்
தமிழ்வரம்பறுத்ததண்புனனாட்டு"

என்று இளங்கோவடிகளும்,

"வடதிசைமருங்கின்வடுகுவரம்பாகத்
தென்றிசையுள்ளிட்டெஞ்சியமூன்றும்
வரைமருள்புணரியொடுகரைபொருதுகிடந்த
நாட்டியல்வழக்கநான்மையில்கடைக்கண்
யாப்பினதிலக்கணமறைகுவன் முறையே"

என்று காக்கைபாடினியாரும், கூறியிருக்கின்றனர்.

இதனால் தமிழ்நாட்டின் எல்லை வடக்குத் திருமால் சயித்தருளும் வேங்கடமலையும், தெற்குக் கன்னியாகுமரியும், மேற்கும் கிழக்கும் கடலுமாம் என்று விளங்குகிறது. இவ்வெல்லையில் மலையாளமும் உட்பட்டிருக்கின்றது.

தொல்காப்பியத்தில் மலையாளர் மொழிந்துவரும் பாஷையில் திசைச்சொற்கள், அதாவது தேசசம்பந்தமான சிற்சிலபேதங்கள் வந்திருப்பதாகவும் அவையின்னவெல்லாமென்றும் காணப்படுகின்றது.

---

*"കാശീവാസസ്യയാത്രാ തസ്സൈ നദ്യാഹ ।
ദന്തഗ്രാമാദ്ദക്ഷിണസ്യാം മലയാളമിതി സ്മൃതഃ ॥

ശ്രീമദ് ദന്തഗ്രാമദക്ഷിണസ്യാം വാടീയില്‍ ഹരിഹര ക്ഷേത്രവാസി ശ്രീവാസുദേവമലയാളക്ഷേത്ര വിശ്വനാഥദേവര ശ്രീ ചരണവിംശകേ."

"செந்தமிழ்சேர்ந்தபன்னிரு நிலத்தும்
தங்குறிப்பினவே திசைச்சொல்......"

என்னும் சூத்திரத்தின் உரையில் உரையாசிரியர் ஆகிய சேனவரையர் திசைச்சொற்கள் வழங்கும் பன்னிரண்டு நாடுகளையும் திட்டம் செய்யும் பொழுது மலைநாட்டினையும் உட்படுத்தியிருக்கின்றனர். இதனால், சேனவரையரது காலத்தில் பாண்டியநாட்டின்கண் உபயோகித்துவந் திருந்த தமிழ்மட்டுமே சுத்தமாயிருந்ததெனச் சொல்லக்கூடும். சேர சோழதேசங்களில் அது தேசசம்பந்தமான பேதங்களையுடைத்தாயிருந் தது. 'முடிகெழுவேந்தர் மூவருடைய நாட்டிலும் இருந்த ஆசிரியர் களின் கவிகளை இப்பொழுது நாம் கடைச்சங்கக்கவிகள் என்று ஆதரித்து வருகிறோம். சிலப்பதிகாரம் முதலிய நூல்களை இயற்றி யோர் மலைநாட்டுக்கவிகள் என்று அவர்கள் செந்தமிழ்வர்க்கத்தில்நின்றும் தள்ளப்படவில்லை.

மலையாளம் தமிழகத்திற் காணப்படுவதால், அத்தேசத்திலுள்ள வர் தமிழ்மொழியை வழக்கில் கொண்டுவந்திருந்தவர் என்றும், தமிழ ருடைய பழக்கவழக்கங்களையெல்லாம் கைக்கொண்டிருந்தவர் என்றும், தெரியக்கிடக்கின்றது. இவ்விதம் ஆலோசித்துவரும்பொழுது மலை யாளிகள் தமிழரில் நின்றும் பேதப்பட்ட ஜனங்கள் அல்லரென்பதும், ஆயின், பண்டைக்காலத்திலுள்ள தமிழர்தான் என்பதும், அவரது பாஷை தமிழினது மகளோ சோதரியோ என்னும் ஐயங்கள் அகன்று சுத்தரூபத்தையுடைய தமிழ்தான் என்பதும் விளங்கக்கூடும்.

பாஷை.

ஒரு நாட்டையடக்கி ஆளும் அரசன் எத்தேசத்தவனாயினும் எந்த பாஷையை வழங்கிவந்தாலும், அந்நாட்டிலுள்ள பாஷையை உபேக்ஷிப் பதில்லை. சோழமன்னர் தென்பாண்டிநாட்டைக்கீழ்ப்படுத்தி அவரது வெற்றிக்கு அடையாளமாகிய சாஸனங்களைப் பொறிக்கும் தருணம் அந்நாட்டில் வழக்கமுற்றிருக்கும் வட்டெழுத்தையன்றித் தமிழக்கரங் களை உபயோகித்தவரல்லர். விஜயநகரவாசர் தென்திசை முழுவதும் கீழ்ப்படுத்திச் சாஸனங்கள் வரையும்பொழுது, அவர் வழக்கமாகச்

சாஸனங்கள் எழுதுவது வடமொழியிலாயினும், நிலங்களுடைய எல்லையும் மற்றும் கூறும்பொழுது ‘ஸ்ரோவிஷிவ்யே த தேஸபாஷயா’ (நாட்டுப்பாஷையில் எல்லை சொல்லப்படுகிறது) என்று அந்தந்த விடங்களிலுள்ள பாஷையை யுபயோகித்துவந்தனர். இதுபோலவே பாண்டியமன்னரும் நாட்டுநடவடிக்கைகளை நாட்டுப்பாஷையில் எழுதக்கூடாதென்று தடுக்கவில்லை. இதனால் ஓர்நாட்டிற் காணக்கூடிய சிலர்சாஸனங்களும் செப்புப்பட்டயங்களும் அந்நாட்டுப்பாஷையில் தான் காணப்படவேண்டுமென்பது விளங்கிற்று. ஆனதால் மலையாளநாட்டிலுள்ள சாஸனங்கள் எந்தமொழியிற் காணப்படுகின்றனவென்று சிந்திப்போமாக—

மலைநாட்டின்கண் இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்ட சாஸனங்களில் சில முழுதும் தமிழாகவும் சில தமிழ் நிறைந்ததாகவும், சில முக்காற்பாகம் தமிழாகவும், கால்பாகம் மலையாளமாகவும் மற்றும் சில தனி மலையாளம் என்றுசொல்லக்கூடியதாகவும் இருக்கின்றன. நாளடைவில் தமிழ்மொழி மலையாள உருவமாக ஆவது இச்சாஸனங்களில் நின்றும் அவற்றின் காலங்களில் நின்றும் தெரியவருகிறது. தமிழ்ப்பாஷை தேசபேதம் கொண்டும் மற்றும் மலையாளமாய்த்தீர்ந்ததென்றும் சிலர் கூறுவதுண்டு.

இது மலையாளத்தைப்பற்றிய ஓர் செய்யுள்—

“மலையாளிகளிடையாயொருமலையாளமிதுதகம்
மலர்கொண்டிவிகுடிகொண்டொருதாணீஸ்ரரருளாம்
மணிஸம்ஸ்கிருதமணியும்தளிர்மொழியும்பரிமிளிதம்
மலையாளமிதொருவாணியுமுளவாயொருஸரஸம்”

வித்தியாபூஷணவெங்கடராமசர்மா,

Pandit, English High School, Chenganur,

Travancore.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

க. அதிகமான் நெடுமோன் அஞ்சி:—இது, பழந்தமிழ்ப்பெருமக்கள்வரலாறு என்னும் தொகுதியின் முதலாவது இலக்கமுடையதாக இலக்கணவிளக்கபரம்பரை ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகரவர்களால் எழுதி அச்சிடப்பட்டிருக்கிறது. இதில், அதிகமான் நெடுமானஞ்சியின் கல்வி நிலை, வீரம், கொடைத்திறன் முதலிய குணங்கள் மேற்கோள் கொண்டு விளக்கிக்காட்டப்பட்டுள்ளன. இவ்வரலாற்றைத் தேசிகரவர்கள் எழுதிவரத் தொடங்கியிருப்பதானது அவர்களது கல்வித்திறமையோடு தமிழபிமானத்தையும் குலப்பெருமையையும் காட்டத்தக்கதாயிருக்கிறது. இதன் விலை முதலியன ஆக்கியோர்க்கெழுதித் தெளிக.

உ. ஆத்திரேயன் பேராசிரியன் அருளிய தொல்காப்பியப் பொதுப்பாயிரம் மூலமும் உரையும்:— இது, கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் திருப்புறம்பயம் ஸ்ரீமத். வை. சதாசிவபண்டாரத்தாரவர்களாற் பரிசோதிக்கப்பட்டு, ஸ்ரீமத். சோ சிவானந்தம்பிள்ளையவர்களால் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா நான்கு. வேண்டுவோர் T. S. சிவானந்தம்பிள்ளை, பாப்பு நாயக்கன்தெரு, கும்பகோணம் என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ங. இங்கிலாந்திற் கூட்டுறவு இயக்கம்:—இது, கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்களால் எழுதப்பட்டது. பொருணெறியுடையோரால் போற்றத்தக்கது. இதனாற் கூட்டுறவின் இயல்பும் இயக்கமும் பயனும் தெளிவாயறியத்தகும். இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் ஆக்கியோர்க்கு எழுதிப் பெறலாம்.

உ

கடவுள்துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருத்திரோத்காரி ஹூ-புரட்டாசி-மீ [பகுதி கக.
VOl. XXI. September-October-1923. No. 11.

யவனபுரத்துக் கலைச்செல்வம்.

(ககஉ-ம்பக்கத் தொடர்ச்சி)

17. இனி, யவனபுரத்துநாகரிகவளர்ச்சியை ஆராய்வானெடுந்துக்கொண்டாம். இந்நாடு அழகு, அன்பு, ஞானம், கவித்துவம் என்னும் இவற்றிற்கு உறைவிடமாய் மேலைநாடனைத்தும் உய்யுமாறு அறிவுச்சுடர்பரப்பிநின்றது என முன்னமே கூறினும். ஹோமர் என்னும் கவிச்சக்கரவர்த்தி பிறந்த நாடிது ; சாக்கிரட்டீஸ், பிளேற்றோ, அறிஸ்றோட்டில் என்னும் தத்துவஞானிகளைத் தோற்றுவித்த தாய்நாடிது ; கண்கவர்வனப்பினையுடைய ஆடவரையும் பெண்மக்களையும் அளித்த அழகுவாய்ந்த நாடிது. அரசியல்மரபும், அறநெறிமரபும், பொருள்வினைமரபும், கலைதெரிமரபும் சிறந்துவிளங்கிய நாடிதுவாதலின் இதன் பெருமையை ஆயிரம் அறிஞர் ஆயிரம் எழுதுகோல்கொண்டு எழுதுவாரெனினும் நிறைவுறக்கூறுரென்பது புனைந்துரையாகாது. அங்ஙனமாதலின், மிகச்சுருங்கிய இவ்வாராய்ச்சியில் இப்பரந்தபொருளை யாங்ஙனம் நடாத்துவோமெனின், பலதுறைப்பட்ட பொருண்மீதும் சிலச்சிலகூறிக் கலைச்செல்வமாகிய ஒருதுறைப்பொருளை விரிவுறக்கூறி ஒருவாறு முடிப்பாமென்பது.

யவனபுரவாசிகள் எங்கிருந்து யவனபுரத்துக்கு வந்தனர், இவரோடு ஒத்தகுலத்தினராவார் யாவருளர், தமிழரும் பரதகண்டவாசிகளும் ஆகிய எமக்கும் இவர்க்கும் இயைந்த தொடர்புதான் என்னை, என்னும் இவை முதற்கண் ஆராயற்பாலன. கலி 2774-ம் ஆண்டில் அலக்சாண்டர் என்னும் யவனபுரத்துச் சக்கரவர்த்தி சிந்துநதிதீரத்தைநோக்கிச் சைந்யங்களோடுவந்து பரதகண்டத்தின் ஒருபாகத்தில் வெற்றிக்கொடி நாட்டினாரெனவும், அதற்கு இருபத்திரண்டு ஆண்டுகளுக்குப் பின் சந்திரகுப்தன் என்னும் பெயர்பூண்ட பரதகண்டத்துச் சக்கரவர்த்தி யவனசேனைகளை வென்று வாகைமாலைசூடிச் சார்வபௌமனாக அரசுபுரிந்தனனெனவும், இவன் யவனபுரத்து அரசிளங்குமரி யொருத்தியை மணந்தானெனவும், இவனது சமஸ்தானத்திற் சிலகாலம் வதிந்த மெகஸ்தினீஸ என்னும் யவனபுரத்தறிஞர் பரதகண்டத்தின் இயல்பினை விரித்துரைக்கும் ஒருநூல்செய்திருக்கிறாரெனவும், இம்மன்னனுக்குப்பின் அரசுபுரிந்த பிந்துசாரமன்னனது காலத்திலும் அதற்குப்பின் பட்டத்துக்குவந்த அசோக சக்கரவர்த்தியின்காலத்திலும் பரதகண்டத்துக்கும் யவனபுரத்துக்கும் நெருங்கியதொடர்பிருந்ததாமெனவும், பௌத்தமத சந்நியாசிகள் யவனபுரத்துக்குச்சென்று மதபோதனை செய்தார்களெனவும், தாலேஸ், எமபெடோக்கிளீஸ், அனெக்ஸாகோரஸ், டெமோகிறிற்றஸ், பைதாகோராஸ் என்னும் யவனபுரத்தறிஞர்கள் பரதகண்டத்துக்கு வந்திருத்தல்கூடுமெனவும், எம்பெடோக்கிளீஸினுடைய கொள்கை சாங்கியமதக்கொள்கையையும், சாக்கிரட்டீஸினுடைய ஞானம் வேதாந்தஞானத்தையும் நிகர்த்திருப்பதாமெனவும் பலநூல்வாயிலாக அறிகின்றோம்.

மன்னன் கரிகால்வளவனுடைய காலத்திலும் அதற்கு முன்னும் பின்னும் முசிறியினும், காவிரிப்பூம்பட்டினத்தினும் யவனவர்த்தகர் வந்து வதிந்திருந்தனரெனச் சிலப்பதிகாரம் ஆதியாய தமிழ்நூல்களானறிகின்றோம். அஃதன்றியும், யவனபுரவாசிகளது பூர்வநிலையம் ஆசியாக்கண்டத்திலேயே இருந்தது; அவரது சமயநெறி உலோமாபு ஆதியன நமது ஆரிய முன்னோரது ஒழுக்கவழக்கங்களை நிகர்த்திருந்தன. யவனபுரத்துமொழி வடமொழியோடு நெருங்கிய தொடர்புடையது. இவற்றாலும் இன்னோரன்ன பிறகாரணங்களாலும் யவனபுரத்தார் ஆரிய

வகுப்பினரென்பதாக ஆராய்ச்சிவல்லபண்டிதர்கள் நிச்சயித்துச்சொல்லு கிறார்கள். கலி இரண்டாயிரம் அதாவது கிறிஸ்தவாப்தத்துக்கு ஆயி ரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலே யவனபுரத்தார் வடக்கிலுள்ள அயற்றேயங்களிலிருந்து வந்து யவனபுரத்திற் குடியேறினரென்பதாக அறிகின்றோம். இவர் வருதற்குமுன்பு அந்நாட்டிலிருந்தோர் ஏஜியர் என்னும் ஜாதியார். உயர்ந்த நாகரிகமுடைய இச் சாதியாரும் கிரேத தீவத்தாரும் திராவிடவகுப்பினராமென ஐரோப்பியபண்டிதர்கள் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். பூர்வயவனர் அக்கேயர், டோரியர், அயேலியர், அயோனியர் எனப் பலவகுப்பினராயிருந்தனர். ஒன்றுசேர்ந்தபின்னர் ஹெல்லேனியர் என்னும் பொதுப்பெயர் இவர்க்கு உளதாயிற்று. இவர் உறைந்தநாடு ஹெல்லாஸ் என்னும் பெயரினைப்பெற்றது. யவனபுர நாகரிகத்துக்கு முற்பட்ட பாபிலோனிய, ஆசுரேய, பினீசிய, எகிப்திய, கிரேத, ஏஜிய நாகரிகங்கள் ஹெல்லேனிய நாகரிகத்துக்கு வழி காட்டிகளாக நின்றன.

ஹோமர் என்னுங் கவிச்சக்கரவர்த்தியியற்றிய வீரகாவியங்கள் இரண்டும் பலநூற்றாண்டுகளாக எழுதாமரபினவாகவிருந்தனவாமென அறிகின்றோம். நமது சுருதிகளும் அவ்வண்ணமேயிருந்தனவாகலின் அக்கரவிலக்கணம் தோற்றுதற்கு முன்னமே அருங்காவியங்கள் தோற் றுதல் கூடுமென்னும் உண்மை நிலைபேறுடையதாகின்றது. இத்தொடர் பிலே, தமிழெழுத்துவரலாற்றைப்பற்றி ஒருசிலகுறிப்புகள் கூறுதல் மற்றொன்றுவிரித்தலாமாயினும் தமிழாராய்ச்சியாளர்க்குப் பயன்றருவ தாமாதலின் எழுதன்மேற்கொண்டாம்.

18. பழமைவாய்ந்த வடமொழி தென்மொழியிலக்கணநூல்கள் எழுத்துக்களின் வரிவடிவவிலக்கணத்தையுந் தருகின்றனவாதலின் அக் கரவிலக்கண மேற்பட்டகாலம் அவற்றுக்கு முற்பட்டகாலமாக விருத் தல்வேண்டும். வடமொழியிலக்கணநூல்களாகிய காலாப, சாந்திர, சாரஸ்வத, முக்தபோத, சுபத்ம, ஹேமச்சந்திர வியாகரணங்க ளனைத் தினுக்கும் முற்பட்டதாய்த் தனித்தலைமைசான்றுவிளங்குவது பாணி னீயவியாகரணம். பாணினிமுனிவர்க்கு முற்பட்ட யாஸ்கமுனிவரர் சாகடாயனம், சாகல்யம், கார்க்கியம் என்னும் வியாகரணநூல்களை மேற் கோளாகக் காட்டினர்; இவையனைத்தினுக்கும் முற்பட்டது ஐந்திர

வியாகரணம். பாணினிமுனிவர் தந்த சிறந்தநூல் தோன்றியபின்னர் அதற்குமுற்பட்ட நூல்கள் வழக்கொழிந்து வீழ்ந்தன. இக்காலத்தில் வழங்குஞ் சாகடாயனம்வேறு பூர்வசாகடாயனம் வேறு என்ப. தமிழிலக்கணநூல்களாகிய நன்னூல், தொன்னூல், சின்னூல் எனப் பெயரிய பன்னூல்களுக்கும் முற்பட்டு ஒப்புயர்வின்றி விளங்குவது தொல்காப்பியம். தொல்காப்பியம் எழுந்தகாலத்து ஐந்திரவியாகரணம் வழக்கிலிருந்தமையானும்; தொல்காப்பியர் நூலியற்றியகாலம் வியாசபகவான் வேதங்களை வகுத்தகாலத்துக்கு முற்பட்டதாமென ஆசிரியர் நச்சினார்க்கினியாருரைத்தாராதலினானும் பிறகாரணங்களானும் தொல்காப்பியமானது பாரதயுத்தகாலமெனச் சரித்திர ஆராய்ச்சியாளரால் நிச்சயித்துரைக்கப்பட்ட கலி 1600 (கி.மு. 1500) க்கு முற்பட்டதாதல்வேண்டும். பாணினீயம் கலி 2700 வரையிற் றோன்றியதென ஆராய்ச்சியாளர் கூறுவர். தொல்காப்பியத்துக்குமுற்பட்ட ஐந்திரம் சுருதிநூல்போல் எழுதாமரபினதாயிருந்ததோ எழுதப்பட்டிருந்ததோ, வரிவடிவ இலக்கணத்தைத் தந்ததோ, நாதொழிந்ததோ என்பன ஒருவாற்றானும் நிச்சயித்தல் கூடாத முடிபுகளாம். வடமொழியாளர் வரிவடிவெழுத்தைத் தமிழ்மொழியாளரிடமிருந்து பயின்றுகொண்டாரென்பது றைஸ்டேவிட்ஸ் முதலிய ஆங்கிலபண்டிதர்களுடைய சித்தாந்தமாகும். தேவநாகரலிபி பூர்வத்தில் எழுதப்பட்ட உருவத்தில் மேலிழுக்கப்பட்ட கோடின்றியிருந்ததெனவும், அவ்வுருவத்தில் அதற்கும் தென்னாட்டில்வழங்குகிற கிரந்தலிபிக்கும் ஒற்றுமையிருந்ததெனவும் அறிஞர் கூறுவர். கிரந்தலிபி பழந்தமிழெழுத்தைப் பின்பற்றியெழுந்தது. பழையசாசனங்களில் வழங்குகிற வட்டெழுத்துத் தொல்காப்பியர்காலத் தெழுத்தினின்றுந் திரிவுபட்டதாமாயினும் உள்ளவற்றுட் பழமையானதாதலின் அதனையே பழந்தமிழெழுத்தெனக் கொள்வாம். இப்பழந்தமிழெழுத்துக்கும் யவனபுர அக்ஷரத்துக்கும் உருவவொற்றுமையிருக்கிறது.

யவனபுரமொழியின் நெடுங்கணக்கு இருபத்துநான்கு எழுத்துக்களைக் கொண்டது; உயிரெழுத்து ஏழு, மெய்யெழுத்துப் பதினேழு; சந்திபக்கரங்கள் பலவுளவாயினும் அவை ஈரெழுத்துக்கூடிய வரிவடிவினவாதலின் தனியெழுத்தென ஆராய்தல்வேண்டா. மெய்யெழுத்துப் பதினேழனுள் தமிழ்மொழிக்கும் யவனபுரமொழிக்கும் ஒலியுருவத்தாற் பொதுவெழுத்தாவன ப, க, த, ல, ம, ந, ர, ச என்னும் எட்டுமாம்.

இருமொழிக்கும் பொதுவாகிய இவ்வெட்டுமெய்களும் ஒத்த வரிவடிவினவாகவிருக்கின்றன. உயிரெழுத்துக்களுள் ஏகார ஓகாரங்கள் ஒத்த வடிவின. எகர ஒகரங்கள் வேறுபட்ட வடிவின. யவனமொழி இகர உகரங்கள் பழந் தமிழ் யகர வகரங்களை நிகர்த்தன; யவனபுரத்தார் யகர வகர ஒலியுருவை முறையே இகர உகரங்களாற் குறியீடு செய்வாராதலின் இவையும் ஒப்புமையுடையனவாம். யவனமொழியில் ஆகார, ஈகார, ஊகார ஒலிவடிவங்கள் அவற்றோடு இனச்சார்புடைய குற்றெழுத்துக்களாற் குறியீடுசெய்யப்படுவன. எஞ்சிநின்ற ஒன்பதுமெய்களுள் ஒரு மூன்று ஒலிவடிவினாலும் வரிவடிவினாலும் ஷ, ஹ, ஜ, ஆகிய கிரந்தாக்ஷரங்களை நிகர்த்தன. மற்றொருமூன்று ஒலிவடிவத்திற் ப, க, ட என்பவற்றோடு ஹ சேர்ந்து எழுந்த பஹ, கஹ, டஹ என்பனவற்றை நிகர்த்தன. எஞ்சிநின்ற ஒருமூன்றும் ப, க, ட என்பவற்றுக்கு இனமாய் நலிந்த ஓசையுடையன. ஈற்றிற்காட்டிய ஆறுமெய்களும் எகர ஒகர உயிர்களும் பிற்காலத்தில் யவனமொழியிற் சேர்க்கப்பட்டனவாமென்று எண்ண இடமுண்டு. அங்ஙனமாதலின், யவனபுர நெடுங்கணக்குத் தமிழ்நெடுங்கணக்கோடு பூரணஒற்றுமையுடையதென்பது நிறுவப்படுகின்றது. இவ்விருமொழியின்வரிவடிவங்கள் ஒன்றினின் றொன்றெழுந்தனவாமோ, அன்றேல் இவற்றின்வேறாகிய மற்றொருமொழியின் வரிவடிவத்தினின்று எழுந்தனவாமோ என்பதனை மேலாராய்வாம்.

இனி வடமொழித் தேவநாகரலிபியில் க, ச, ட, ப, ல, ம, ந, ர எனநின்ற எட்டுமெய்களைக் குறிக்கின்ற வரிவடிவெழுத்துக்களை மேல்கோடும் கீழ்நோக்கியிழுத்த நேர்கோடும் தவிர்த்து எழுதுங்காற் பெறப்படும் உருவம் பழந்தமிழுருவத்தை நிகர்த்தது. இவ்வெட்டுமெய்களும் தமிழ்மொழிக்கும் யவனபுரமொழிக்கும் பொதுவாகிய மெய்யெழுத்துக்களாமென்பது இத்தொடர்பில் உளங்கொளற்பாலது. இனித் தேவநாகரலிபியில் ஒகாரம் அகரவுயிரோடு நேர்கோடு ஒன்றும் மேல்விசிறியிரண்டுஞ் சேர்ந்த வரிவடிவத்தையுடையதேயன்றிக் கிரந்த, யவன, தமிழ் மொழி ஒகாரத்தைப்போலத் தனக்கென் றொருசிறப்புருவ மில்லாதது. தேவநாகரலிபி யகர, வகர, மெய்களை மேல்கோடு நேர்கோடுதவிர்த் தெழுதப் பெறப்படும் உருவம் பழந்தமிழ் யகர வகரங்களை நிகர்த்தது. தேவநாகரலிபி, அகர, இகர, உகர, ஏகாரங்களை மேல்கோடு நேர்கோடு

தவிர்த்தெழுதப்பெறப்படும் வரிவடிவங்கள் பழந்தமிழ் அ, இ, உ, எ என்பனவற்றை நிகர்த்தன. இங்ஙனம்கண்ட ஒற்றுமை வேற்றுமைகளை உளங்கொண்டு யவனமொழி, தமிழ்மொழி வடமொழி என்னும் இம் மொழிகளின் வரிவடிவெழுத்துவரலாற்றை யாராய்வாம்.

யவனபுரத்தார் தாம் வரிவடிவெழுத்தைப் பினீசியரிடமிருந்து பயின்றுகொண்டதாக உரைக்கின்றனர். அங்ஙனம்பயின்றுகொண்ட காலம் கி. மு. எழாவது நூற்றாண்டு என்பர். பினீசியஎழுத்து எகிப்திய சித்திரவெழுத்தின் வழிவந்தது ; மிகப் பூர்வீகமானது. எகிப்திய சித்திரவெழுத்துப் பொருளை அதன் வடிவத்தினாற் குறிக்குநீர்மையதாதலிற் பிறமொழியினின்று தோன்றுவது. எகிப்திய அக்கரவிலக்கணத்தையறிந்த பினீசியர் தமதுமொழியை எழுதுவதற்காகிய ஒரு வரிவடிவெழுத்துமுறையை வகுத்துக்கொண்டகாலம் கலி ஆயிரம் (கி. மு 2100) வரையிலிருக்கலாம் என அறிஞர் அபிப்பிராயப்படுகின்றனர். தமிழ்வரிவடிவெழுத்துக்கும் யவனபுரவரிவடிவெழுத்துக்கும் உள்ள தொடர்பினை நோக்கும்போது தமிழரும் யவனபுரத்தாரும் பினீசியரிடமிருந்து எழுத்துமுறையைப் பயின்றுகொண்டார்களென்றெண்ணவேண்டியிருக்கிறது. சிலகாலத்துக்குப்பின் தமிழ்நாட்டார் வடமொழியை எழுதுவதற்குத் தமிழக்கரங்களைச் சிறிது திரிவுபடுத்தியும் புது அக்கரங்களை வகுத்தும்வருங்கால் யவனமொழியிலிருந்து எடுக்குந்தகையவாகவிருந்த ஸ, ஜ, ஷ, என்னும் மூன்று எழுத்துக்களையும் எடுத்துக்கொண்டார்களென்பது பூர்வீக யவனவெழுத்துக்களுக்கும் பூர்வீகக் கிரந்த அக்ஷரங்களுக்கும் இடையேயமைந்த உருவவொற்றுமையாற் புலப்படுகின்றது. பரந்த விப்பொருளை நன்காராயின் இந்தியாவி லிக்காலத்தில்வழங்குகிற அக்ஷரமுறைகளனைத்தும், அராபிமுதலிய செமித்தியமொழியக்ஷரங்களும், யவனபுர ரோமபுர அக்ஷரங்களும், இவற்றின் வழித்தோன்றி இக்காலில் மேற்றிசையில்வழங்குகிற ஆங்கிலேயமுதலிய அக்ஷரங்களும், ஆகிய அனைத்தும் பினீசிய அக்ஷரங்களின்வழிவந்தனவாமெனவும், பினீசியஅக்ஷரம் எகிப்தியஅக்ஷரமுறையினின்றுந் தோற்றியதாமெனவும் அறிவாம்.

19. இனி, யவனபுரத்து வீரகாவியங்களைப்பற்றி ஒருசிலகூறி அப்பாற் செல்வாம். ஹோமர் என்னும் மகாகவியைபற்றிய இலியட்

(Iliad), ஒடிஸி, (Odyssey) என்னுங் காப்பியங்களிரண்டும் யவன புரத்தாருக்கு நாற்பொருள்பயக்கும் நீர்மையவாகப் பின்னால் பலவற்றுக்கு முதனூலாக நிலைபெற்றிருந்தன. இந்நூலிரண்டினொடுங் கதையினாற் றொடர்புடையதும் ரோமாபுரியில் அகஸ்டஸ் மன்னனது அவைக்களத்திருந்த வேர்ஜில் என்னும் மஹாகவியினாலியற்றப்பட்டதுமாகிய "ஏனேயிட"த்தைப்பற்றிச் செந்தமிழ் 14-ம் தொகுதி 8-ம் பகுதியில் ஒரு கட்டுரை எழுதியிருக்கின்றோம். அக்கட்டுரையில் இலியட், ஒடிசி என்னுங் காவியங்களின் கதைச்சுருக்கமுந் தரப்பட்டிருக்கிறது.

இக் காவியங்கள் ஒவ்வொன்றும் இருபத்துநான்கு காதைகளானமைந்தன. முப்பதுகாதைகளானமைந்த மணிமேகலைநூலின்செய்யுட்டொகை முப்பது அகவற்பாவானதுபோல இவ்விருகாப்பியங்களும் இருபத்துநான்கு இருபத்துநான்கு வீரப்பாக்களால் முடிந்தன. வீரப்பா பலவாய அடிகளால் நீண்டுநடக்கு நீர்மையது. இதன் யாப்பினை யாராயுமிடத்து அடியொன்றுக்கு ஆறுசீராய் முதலைந்துசீரும் குரு லகு லகு என நிற்க ஈற்றுச்சீர் குரு குரு என முடிவது எனக் காண்போம். ஒரோவொருசீர் இடையினுங் குரு குரு என நிற்பதுண்டு. வடமொழி யாப்பின்வழிவந்த செய்யுளினங்கள் தமிழில் வந்துநடப்பதுபோல யவனபுரமொழியின்வழிவந்த வீரப்பாவையும் தொல்லாசிரியருரைத்த கலிப்பாவகையினுளடக்கித் தமிழில் எழுதுவாம். குரு லகு லகு குரு லகு லகு குரு குரு என்பது பாதி அடியாகவும் இதனையிரட்டித்தது ஓரடியாகவும்கொள்ளுங்கால் யவனமொழி வீரப்பா வடி பலவகையினுள் ஒருவகை வந்தெய்தும். இலியட், ஒடிசி யென்னுங் காப்பியத்தினுட் சிறந்த சில பாகங்களை இவ் யாப்பினிலமைத்துத் தருவாம்.

(தொடரும்)

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்.

நற்றிணை நாற்பது.

———:(o):———

நற்றிணை நாற்பது என்றது இவ்வுலகத்தார்க்கு நல்ல துணையாகிய விஷயங்களை நாற்பது (அகவற்)பாக்களால் விளக்குவதாஎன்றவாறு. தீத் தன்மையினின்றும் விலக்கப்பட்டமை போதர 'நற்றிணை' எனப்பட்டது.

இந்நாற்பது உரையோடு தனிப்பனுவலாகப் பின்னர் வெளியிடப் பெறும். கடவுளுஞ் சான்றோரும் கூறியவற்றையெல்லாம் மறித்தழித்து வரும் இக்காலத்தார் கொள்கையை நினைக்குந்தோறும் அறிவும் அநுபவமும் உடையார் வருந்தாமலிரார் என்பது எனது நம்பிக்கை. போவாவென்பது பெரியதொரு வறுமையாகும் என்பதற்கிணங்க ஆற்றலில்லாத இக்காலத்தார் இருந்து வருகின்றனர் என்பது மெய்யுரையாகும். இவ்விருக்கையர் சான்றோர் கட்டுக்களையெல்லாம் அவிழ்த்துவிட்டுத் தம்மைமுட்டாளராக அமைத்துக் கொண்டு பேரிடர்புரிந்து பிதற்றி வருகின்றனர். அவர்பிதற்றை அறவே ஒழித்தற்றுப் பெரிதும் நோக்கங்கொண்டுளேன். நோக்கத்தை நிறைவேற்றும் ஆற்றல் சிறிதும் இல்லேன். அணைகட்டமுயன்ற ஆற்றலில்லாத அணிலின் கதையொன்றுண்டெனல் எனது நெஞ்சத்திற்கு ஞாபகம் வருகின்றது.

இந்நூலைச் செந்தமிழில் வெளியிட்டுவருதற்கெண்ணி ஒருபாடலை முதற்கண் இதுபோது ஈண்டுத் தருகின்றேன். பகை, நண்பு, பொதுமை என்னும் இவற்றின்பாற்பட்டு என்னும் எழுதிற்றிலேன். அறிஞர்கள் ஆதரித்து நல்லபிப்பிராயத்தை யறிவிப்பார்களாக. (நா. கி.)

தம்மொழி பயிற்றுந் தகையரை வெறுப்பவர்
வடமொழி பயிற்று தவரையும் வெறுக்குநர்
பிறர்மொழிப் பயிற்சி தம்மொழிக் கேடா
மறையு மறிகிலர் வாய்வந்த வுரைக்குந
ரிங்குள கொண்டுசெல் லியல்பினர் வெறுப்பவ
ரீங்குள விழைபார் தம்மையும் வெறுக்குநர்
மறைநூல் பாடிப் பிறையின் வளர்த்தாங்
கிறைமை யெய்தின ரவரெனப் பொறாஅ
தவர்காப் பகற்றி யதனையு மேட்டிற்
படுத்துத் துயிலப் பண்ணினர் மன்ற
னூலும் பொருளு நிலனுமில் லவர்தாம்
வேத்தவை யினையின் மேயினர் மேவல்கண்
டதற்கு மாற்று ரவரொடு முரணுந
ரிரண்டொரு நூலையு மிருக்கவைத் திலராய்ச்
சிதலைக் கிரையாக் செய்த
மதலைத் தமிழர் மாண்புமனி நன்றே,

(தொடரும்).

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(௪௱௧—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

124. புள்ளிக் குறியிட் டெனப் பல் மீன் பூத்த வானம் பொலி கங்குல்
கள்ளில் செறிந்த இருட் பிழம்பை நக்கி நிமிர்ந்த நிலாக் கற்றை,
கிள்ளைக் கிளவிக்(கு) என் ஆம் கொல் கீழ் பால் திசையின் மிசைவைத்த
வெள்ளிக் கும்பத்(து) இளம் கமுகின் பாளை போன்று விரிந்துளதால்.

இ-ள். புள்ளிகளாகிய அடையாளம் போட்டாற்போலப் பல நட்சத்திரங்கள் தோன்றப்பெற்ற ஆகாயத்தில் அர்த்தராத்திரியில் நெருங்கிய இருட்கூட்டத்தை உண்டு மேலோங்கிய நிலாத்திரள், கிளிமொழி (யாளாகிய சீதாபிராட்டி)க்கு யாதாமோ! (அந்த நிலாக் கதிர்த்தொகுதி,) கிழக்குத்திக்கில் தாபித்த வெள்ளிக்குடத்தில் (சொருகி வைத்த) இளங் கமுகம் பாளை (விரிந்து பரந்ததை) ஒத்துப் பரந்திருக்கின்றது.

"என்னாங்கொல் என்றது துன்பத்தைச் செய்யுமென்பது பட நின்றது. சந்திரனுக்கு வெள்ளிக்கும்பமும், நிலாக்கற்றைக்குக் கமுகம் பாளையும் உவமை." ஸ்ரீ இராமசாமி நாயுடு.

125. வண்ண மாலைக் கை பரப்பி உலகை வளைந்த இருள் எல்லாம்
உண்ண எண்ணித் தண்மதியத்(து) உதயத்(து) எழுந்த நிலாக்கற்றை,
விண்ணும் மண்ணும் திசை அனைத்தும் விழுங்கிக் கொண்ட விரிநல் நீர்ப்
புண்ணை வெண்ணெய்ச் சடையன்தன் புகழ்போல் எங்கும் பரந்துளதால்,

இ-ள். மாலைப்பொழுதாகிய கையைப் பரப்பி உலகத்தைச் சூழ்ந்து (தனக்குள் ஆக்கிக்) கொண்ட இருள் முழுவதையும் உண்டுவிடக் கருதிச் சந்திரோதய சமயத்திற் கிளர்ந்த நிலாக்கூட்டமானது, சடையப்பவள்ளலது—மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் (அவைகளைச்சூழ்ந்த) திசைகளெல்லாவற்றையும் விழுங்கிவிட்ட—கீர்த்திபோல எங்கும் பரவியது.

வண்ணம்--நிறம். வண்ணமாலை--செவ்வானச் செந்நிறமும் இருளின் கருநிறமும் உடையமாலை. தண் மதியம்--குளிர்ச்சியுடைய சந்திரன். பண்ணை--வயல் (சூழ்ந்த) வெண்ணெய்--திருவெண்ணெய்நல்லூர். விழுங்கிக்கொண்ட புகழ் எனக் கூட்டுக.

"சடையப்பமுதலியார்புகழ் எங்கும் பரந்ததுபோல நிலாக்கற்றை எங்கும் பரந்ததென்பது கருத்து" ஸ்ரீ இராமசாமிநாயுடு.

126. நீத்த மதனில் முளைத்(து) தெழுந்த நெடுவெண் திங்கள் எனும் தச்சன்,
மீத்தன் கரங்க ளவை பரப்பி, மிகுவெண் நிலவு ஆம் வெண் சுதையால்
காத்த கண்ணன் மணி உந்திக் கமல நாளத் திடைப் பண்டு
பூத்த அண்டம் பழையதென்று, புதுக்கு வானும் போன்றுளதால்.

இ - ள். கடலில் உதயமாகி மேலெழுந்த சந்திரனென்னும் தச்சனானவன்; திருமால், (தனது) நாபிக்கமலநாளத்தினிடத்தே ஆதிகாலத்தில் உண்டாக்கிய உலகம் (ஆகிய மாளிகை) பழையதாய்ப்போயிற்றென்று (அதன்) மேலே தன் (கிரணக்) கைகளைப் பரப்பி நிலவாகிய சுண்ணாம்புக்குழம்பினால் (தீற்றிப்) புதுப்பித்தல்போன்று (அந்த நிலாக் கூட்டம்) உள்ளது.

நீத்தம் - வெள்ளம், இங்கே கடலைக்குறித்தது. நெடுவெண் திங்கள் - மிகுந்தவெண்மையுடைய சந்திரன். மீ - மேல். கரங்கள் - 1. கைகள்; 2. கிரணங்கள். அவை, பகுதிப்பொருள் விகுதி. சுதை - சுண்ணச் சாந்து - சுண்ணாம்புக்குழம்பு. மணி உந்திக் கமல நாளம் - அழகுடைய கொப்பூழாகிய தாமரைத்தண்டு, பூத்த - உண்டாக்கிய. புதுக்குவான் - புதுக்குதல். வருதல் ஏன், செய்தல் ஏன் என்ற பொருள்பட 'வருவானேன்' 'செய்வானேன்' என்பவை வருதல்போலப், புதுக்குதல் என்ற பொருளில் 'புதுக்குவான்' வந்தது. 'உளது' என்றபயனிலைக்கு எழுவாய் முந்திய பாட்டில் உள்ள 'நிலாக்கற்றை'.

127. நீங்கா மாயை அவர்தமக்கு நிறமே தோற்றிப் புறமே போய்
எங்காக் கிடக்கும் எறி கடற்கும் எனைக்கும் கொடியை ஆனாயே!
ஓங்கா நின்ற இருளாய் வந்(து), உலகை விழுங்கி மேல்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பின் இடையே எழுந்த வெள் நெருப்பே!

இ - ள். பெருத்த இருளுருவாய் (ப் பரிணமித்து) வந்து உலகத்தை விழுங்கி (நூற்போல முழுதும் மூடிக் கவர்ந்து) வரவர அதிகமாக வளர்ந்துகொண்டிருந்த கருநெருப்பின்நடுவிலே உண்டாகிய வெண்ணெருப்பே! (எனக்கு) நீங்காத மயக்கத்தைச்செய்த அவருக்கு நிறத்திலே தோல்வியடைந்து தூரமாகப்போய் ஏங்கிக்கொண்டு கிடக்கும் கடற்கும் எனக்கும் கொடுமையுடையோனாகின்றயே!

'மாயை அவர்', என்பது மாயையைச்செய்கின்ற அவர் என்றுபொருள்பட நின்றது, 'சங்காரமூர்த்தி' சங்காரத்தைச்செய்யும் மூர்த்தியென்று பொருள்பயத்தல்போல. ஏங்குதல் - 1. ஒலித்தல்; 2. ஏக்கமுறுதல். 'ஏங்கா (-ஏங்கி)க்கிடக்கும்' என்பதில் இவ்விருபொருளும் இனிது பொருந்தியிருக்கின்றன. எறிகடல் - (அலைகளை) வீசும் சமுத்திரம். கொடியை - கொடுமையுடையாய்.

சீதாபிராட்டி தம் விரகத்தையும் கடலின் நீரையும் பொங்கிப்பெருகச் செய்தலாற் சந்திரனைக் 'கொடியை' யென்றார். விரகிகளுக்கு வெப்பஞ் செய்தலால் இருளையும் நிலவையும் முறையே கருநெருப்பென்றும் வெண்ணெருப்பென்றும் உருவகித்தார். இயல்பிலே குளிர்ச்சியான இருளையும் நிலவையும் பொருத்தமாக நெருப்பென்றதும் அவை தம்முள் மாறுபடுதலைக்குறிக்கக் கருநெருப்பு வெண்ணெருப்பென்றதும் அருமையும் இனிமையும் ஆச்சரியமுமாக விருக்கின்றன.

வேறு.

128. "கொடியை அல்லை நீ யாரையும் கொல்கிலாய்,
மடி(வு)இல் இன் அமு தத்தொடும் வந்தனை
பிடியின் மெல் நடைப் பெண்ணொ(டு)என் றால், எனைச்
சுடுதி யோ! கடல் தோன்றிய திங்களே!"

இ - ள். "(குளிர்ந்த) கடலிலே தோன்றிய சந்திரனே! (எனக்குக் 'கொடியை ஆனாய்' என்றேன். அதுகிடக்க, பிறர் திறத்தில் நீ) கொடுமையுடையா யல்லை; யாரையும் கொல்லமாட்டாய்; (தன்னை உண்டார்) மரணத்தை நீக்கும் இனிய அமுதத்துடனும் மெல்லிய பெண்பாலான் திருமகளுடனும் பிறந்தாய் என்று (உலகத்தார்) கூறுவது உண்மையானால், என்னைச் சுடுவாயோ!"

'சாவா மருந்து' சாதல் இல்லாமற் செய்யும் மருந்து எனவும் 'மூவா மருந்து' மூத்தல் இல்லாமற் செய்யும் மருந்து எனவும் வருதல்போல, 'மடிவில் அமுதம்' மடிதல் இல்லாமற் செய்யும் அமுதமென வந்தது. 'வடிவின் வமுதத்தொடும்' என்றும் பாடம். அமுதத்தொடும் பெண்ணொடு(ம்) வந்தனை என்றால் எனக் கூட்டுக. என்றால், என்று கூறுவது உண்மையானால் என்றபொருள்பட நின்றது, 'நீ யோக்கியனென்றால், கொண்டகடனைக் கொடுத்துவிடு' என்பதிற்போல. பிடியின் மெல்நடைப் பெண் - பெண்யானையின் நடைபோலும் மெல்லிய நடையையுடைய இலக்குமி. சுடுதியோ - சுடுவாயோ.

'சுடுதியோ' என்பதற்குச் சந்திரனே, நீ பிறந்த இடம் குளிர்ந்த கடல்; உன் கூடப் பிறந்தபொருள்களோ, இனிய அமுதமும் மெல்லிய பெண்ணும்; ஆதலால் உனக்குச் சுடுதல் இயல்பன்று; ஒருகால் சுட்டாலும் பெண்ணொடுபிறந்த நீ பெண்ணாகிய என்னைச் சுடலாமோ என்றும்: 'கொடியை அல்லை' என்பதற்கு மென்மைத்தன்மையுடைய பெண்ணுடன் பிறந்ததனால் இரக்கமுடையை; ஆதலால் கொடுமையுடையாயல்லை என்றும்: 'கொல்கிலாய்' என்பதற்குச் சாவை நீக்கும் அமுதத்தொடு பிறந்ததனால் உயிரைக் காப்பாற்றுவாய்; கொல்லமாட்டாய் என்றும் பொருள் விரித்துரைக்க.

'நீங்காமாயை' என்ற பாட்டுக்குமுன் 'சீதை' என்பதும் 'கொடியையல்லை' என்ற பாட்டுக்குப்பின் 'என்றாள்' என்பதும் வருவித்துப் பொருள் முடிவுசெய்க.

129. நீக்கம் இன்றி நிமிர்ந்த நிலாக் கதிர்
தாக்க வெந்து தளர்ந்து சரிந்தனள்:
சேக்கை ஆகி மலர்ந்த செந் தாமரைப்
பூக்கள் பட்ட(து)அப் பூவையும் பட்டனள்.

இ-ள். (மாலை சிறிது பொழுதிருந்து நீங்கியது; அதன் பின் வந்த இருளும் நெடுநேரம் நில்லாது கழிந்தது. அவற்றுக்குப் பின்பு தோன்றி, அவைகள்போலல்லாமல், அதிக நேரமாக) நீங்காததாய் (அடிவானத்திலிருந்து) மேல் எழுந்துகொண்டிருந்த சந்திரனது

கிரணங்கள் மேல்விழுதலால், சீதாபிராட்டி வெதும்பித் தளர்வடைந்து சாய்ந்திட்டார்: (அவருக்குப்) படுக்கை யாகி (அவர்தேக வெம்மையால்) தாமரைமலர்கள் பட்டபாட்டை (நிலவு தம்மேல் விழுந்து தாக்குதலால்) அவர்பட்டார்.

சேக்கை—1. இருப்பிடம்; 2. படுக்கை. பூவை-பூவை (—நாகணவாய்ப் பறவை) மொழிபோலும் மொழிகளையுடைய பெண்—சீதை.

சீதாதேவி இலக்குமிதேவியாயிருந்தகாலத்தில், அவருக்கு இருப்பிடமாகி அதனால் மகிழ்ச்சியடைந்தனபோல மலர்ந்த செந்தாமரை மலர்கள் நிலவினாற் பட்ட பாட்டை அந்நிலவால் தாமும் பட்டாரென்றும் 'சேக்கையாகி................பூவையும் பட்டனள்' என்பதற்குப் பொருள் கூறலாம். மேலே, பொழிப்புரையில், நிலவால் அதிகப்பட்ட விரகதாபத்தால் வெதுப்புண்ட சீதாதேவியின் தேக வெம்மையால் தாமரைப்பூக்கள் பட்டபாடென்றது, இப்பாட்டுக்கு முந்தியதும் இத்திரட்டிலே சேர்க்கப்படாததுமான பாட்டில் 'போது மொய்த்தம ளிப்புரண்டாளரோ' என்று கூறியிருப்பது பற்றிக் கூறப்பட்டது. போது மொய்த்(த)அமளி—பூக்கள் நெருங்கிய படுக்கை.

130. வாச மெல் கல வைக் களி வாரி, மேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்:
வீச வீச வெதும்பினள் மெல் முலே;
ஆசை நோய்க்கு மருந்தும் உண் டாம் கொலோ?

இ-ள். (தோழியர்) கலவைச் சந்தனக் குழம்பை அள்ளி (அள்ளி) மேலே பூசப் பூச (அக்குழம்பு) உலர்தலுற்று (அவர்) வெதும்பினர்: (அவர்கள் விசிறி கொண்டு) வீச வீச (அதிக) வெப்படைந்தார்: (அவர்கள் செய்த சைத்தியோபசாரம் ஒன்றும் பயன்படவில்லை: மற்ற நோய்களுக்கு மருந்திருத்தல் போல) ஆசை நோய்க்கும் மருந்துண்டோ?

கலவைக்களி—சந்தனத்துடன் வேறு பரிமளப்பொருள்கள் கலக்கப்பட்ட குழம்பு. வாரி—அள்ளி. புலர்ந்து—உலர்ந்து. மெல் முலே வெதும்பினள்—1. மென்மையான கொங்கைகள் (சந்தனம் பூசப்பட்டும் விசிறி

விசப்பட்டும்) வெதுப்புண்டாள்; 2. மென்முலையுடையாள் (ஆகிய சீதை) வெப்பமடைந்தாள். சைத்தியோபசாரம்—சைத்தியம் (—குளிர்மை உண்டாம்படி செய்யும் உபசாரம்.

[மேற் கூறியவாறு சீதாதேவி வருந்திக்கொண்டிருந்தார். அவரைக் கன்னிகாமாடத்திலே கண்டு சென்ற விசுவாமித்திர ராம லக்குமணர்கள் சனகமன்னனைக்காண, அவர் அவர்களை வரவேற்று உபசரித்துச் சிறந்த மாளிகை யொன்றில் அமரச் செய்தனர். அங்கே கௌதம புத்திரராகிய சதாநந்தமுனிவர் வந்தார். வந்தவரை இராமர்வணங்க அவர் அவருக்கு ஆசிகூறியபின்பு, விசுவாமித்திரரை நோக்கித் "தேவரீர் எழுந்தருளுவதற்கு இந்நகரம் செய்த புண்ணியம் யாதோ" என்று உபசாரவார்த்தை கூறினார்; அவரை நோக்கி விசுவாமித்திரர்,]

131. வடித்த மாதவ கேட்டி இவ் வள்ளல் தான்
இடித்த வெம் குரல் தாடகை யாக்கையும்
அடுத்(த)என் வேள்வியும் நின் அன்னை சாபமும்
முடித்(து)என் நெஞ்சத்(து) இடர் முடித் தானென்றான்.

இ-ள். இந்த வள்ளல் (இராமர்) இடி ஒத்த சத்தத்தையுடைய தாடகையின் தேகத்தையும் எனது யாகத்தையும் உம்முடைய தாயினது சாபத்தையும் முடிவுறச் செய்து (தாடகையின் தேகம் எனது யாகம் உமது தாயின் சாபம் ஆகிய மூன்றும் முடிவுறாதிருந்ததனால் நீடித்திருந்த) என் மனவருத்தத்தையும் முடிந்தொழியச் செய்தவர் என்றார்.

வடித்த—திருத்தமாகச் செய்த (புறநானூறு அரும்பத அகராதி). கேட்டி—கேட்பாய், இடித்த—இடிபோல் முழங்கிய (புறப் பொருள் வெண்பாமாலை அரும்பத அகராதி). அடுத்தென்—(தம்மை உதவி செய்யும்படி வேண்டி) அடுத்த (—அடைந்த) என்னுடைய. இதன் முந்தியபாட்டின் உரையிற் குறித்த 'மொய்த்த அமளி' 'மொய்த்தமளி' என வந்ததுபோல, 'அடுத்த என்' 'அடுத்தென்' என வந்தது. முடித்தல்—1. (யாக்கையை) அழித்தல்; 2. (வேள்வியை) நிறைவேற்றல்; 3. (சாபத்தைத்) தீர்த்தல்; 4. (நீடித்திருந்த இடரை) முடிவா யொழிந்துபோகச் செய்தல். இடர்—வருத்தம்.

முடித்தல் என்ற ஒரு வினைச்சொல்லைப் பல செயப்படுபொருள்களுக்குப் பொருந்தப் பலபொருள்படப் பிரயோகித்திருக்கும் சாதுரியம் பாராட்டத்தக்கது.

[மேற்கூறியவாறு விசுவாமித்திரர் கூறியபோது, சதாநந்தர், "உமது அருளைப்பெற்ற வீரர்க்குச் செய்தற்கரியது யாதுமில்லை" என்று சொல்லி, இராமனை நோக்கி "இந்த விசுவாமித்திர முனிசிரேட்டர் ஆதியில் அரசராயிருந்தார். ஒருநாள் இவர் வேட்டைக்குச் சென்றபோது, வசிட்டர் காமதேனுவைக்கொண்டு இவருக்கும் இவருடைய அளவிறந்த பரிசனங்களுக்கும் அதிசயமான விருந்து செய்வித்தார். இவர் அவரை அக் காமதேனுவைத் தமக்குக் கொடுக்கும்படி வேண்ட, அவர் மறுக்க, இவர் வலாற்காரத்தினால் அதைக் கவரமுயன்று போர்புரிவாராகி, விட்ட அத்திர சத்திரங்களொன்றும் காமதேனுவையாவது வசிட்டரையாவது ஒன்றும் செய்ய முடியாமை கண்டு, அரசினும் தவசியர் வலியரென்று அரசை வெறுத்துத் துறந்து அளவற்ற காலம் அகோர தவஞ்செய்து பிரமசிருட்டிக்கு எதிர்ச் சிருட்டி செய்யவல்ல அபூர்வ தபோபலம் பெற்றவர். இப்படிப்பட்ட மகா புருடருடைய அருளைப்பெற்ற உமக்கு எது தான் அரிது, யாதும் எளிதே" என்று கூறி இராமனை ஆசீர்வதித்து எல்லாரிடத்தும் விடைபெற்றுத் தம் மிருப்பிடம் சென்றனர்.]

132. முனியும் தம்பியும் போய் முறை யால் தமக் (கு)
இனிய பள்ளிகள் எய்திய பின், இருட்
கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும் அத் தையலும் ஆயினன்.

இ-ள், விசுவாமித்திரரும் இலக்குமணரும் (அந்த மாளிகையில் தங்கள் பள்ளியறைகளுக்குச்) சென்று முறைப்படி (என்றும் போல இன்றும் இனிது தூங்கும்படி) தம் படுக்கைகளை அடைந்த பின்பு, இராமர் (அவ்வாறு படுக்கையை அடையாராய்) இரவும் சந்திரனும் தனிமையும் தானும் சீதாதேவியும் (கவர்ந்து கவல்விக்கப்பட்ட மனத்தினர்) ஆகினர்.

முறையால் - முறைமைப்படி - (என்றும் உள்ள) வழக்கப்படி. பள்ளி - படுக்கை, எய்திய - அடைந்த, இருள் கனிபோல்பவன் -

இருள் முதிர்ந்து கனிந்தது போன்றவன் - மிக இருண்ட நிறத்தினன்- இராமன். கங்குல் - இரவு. திங்கள் - சந்திரன். தனி - தனிமை. தையல் - பெண் - சீதை - சீதையின் ஞாபகமும் அவளுடைய உரு வெளித்தோற்றமும்.

'முனியும் தம்பியும் போய் முறையால் தமக் கினிய பள்ளிகள் எய்திய' என்றதனால், இராமர் படுக்கைக்கு என்றும் போல இன்று செல்லவில்லை யென்பதும் அவருக்குப் படுக்கை இனியதல்லாத தாயிற் றென்பதும் குறிப்பித்தார்.

இராமருக்கு இன்றளவும் பழகியவைகளாய் இன்பஞ் செய்வனவா யிருந்த இரவும் சந்திரனும் இன்று புதிய (குணமுடையன)வாய்த் துன்பஞ்செய்வனவாயினதற்கும், முன் சில சமயங்களில் தனித்திருக் கும்படிநேர்ந்தபோதிருந்தபடியில்லாமல் இப்போது தனிமை தன் தன்மை மாறிச் சகிக்கக்கூடாததா யிருப்பதற்கும், தாம் தம்மை இது வரை அறிந்தவாறின்றிவேறுபட்டுத் தமக்கே தாம்அந்நியமாய்வெறுப்பா யிருப்பதற்கும் காரணம் சீதாதேவியே என்பது விளங்கக் 'கங்குல் திங்கள் தனி தான்' என்பனவைக ளெல்லாவற்றுக்கும் பின் இறுதியில் 'தையல்' என்றார்.

இராமபிரான், பள்ளிகொள்ளும் சமயத்துக்குமுன் துணையா யிருந்த விசுவாமித்திரர் முதலியோரது துணை யில்லாமல், அந்தச் சமய முதல் விடியுமளவும் இயல்பாகத் துணையாக இருக்க வேண்டிய தூக்கத் துணையுமில்லால் இரவும் நிலவும் தனிமையும் தானும் சீதாதேவியைப் பற்றிய நினைவுமே துணையாக இராப்பொழுது முழுதும் வருந்திக் கழிப்பாராயினா ரென்பது கருத்து.

133. விண்ணின் நீங்கிய மின் உரு இம் முறை
பெண்ணின் நல் நலம் பெற்றதுண் டேகொலோ?
எண்ணின், ஈ(து,)அல(து,) என் (று)அறி யேன்; இரு
கண்ணின் உள்ளும் கருத்துள்ளும் காண்பனால்!.

இ-ள், "(கை கால் முதலிய அவயவப் பகுப்பில்லாத) மின்னுரு வம் (கணநேரத்தில் மறைந்தொழிவதல்லது நிலையானதாய்) இவ்வாறு (அவயவப் பகுப்புடைய) பெண்போலச் சிறந்த அழகு பெற்ற

துண்டோ? (இதுவரை இல்லை). ஆராய்ந்தால், (நான் காண்கின்ற இவ் உரு) மின்னுருவோ அல்லது பெண்ணுருவோ என்று தெரிகிலேன். (எது என்று தெளியேனாயினும் இவ்வுருவை வெளியே) கண்ணினும் (உள்ளே) கருத்தினும் காண்கின்றேன். விண்ணின் - மேகத்திலிருந்து. இம்முறை - இப்படி. பெண்ணின் - பெண்போல. நல் நலம் - சிறந்த அழகு. 'நல்லறம்' என்பதில் 'நல்' சிறந்த என்று பொருள்படல் காண்க.

"என்று, இடைச்சொல்; பெயர்ப்பொருளில் வந்தது; என்பது என்று பொருள்படும்". "காண்பன் என்பதிற் பகரவிடைநிலை தனக்குரிய எதிர்காலத்தைக் குறியாது நிகழ்காலத்தைக் குறித்து நின்றது".

134. வள்ளற் சேக்கைக் கரியவன் வைகுறும்
வெள்ளப் பாற் கடல் போல் மிளிர் கண்ணினாள்
அள்ளற் பூமகள் ஆகும் கொ லோ?என(து)
உள்ளத் தாமரை உள் உறை கின்றதே.

இ - ள். இருண்ட நிறமுள்ள பாம்பாகிய படுக்கையையுடைய கரிய நிறத்தினன் (ஆகிய திருமால்) தூங்குகின்ற வெண்மையான பாற்கடல்போல விளங்குகின்ற கண்ணிணையுடையாள் (ஆகிய அவள்), என்னுடைய மனத் தாமரைமலரில் வசிக்கின்றதனால், தாமரை மலரில் இருக்கும் இலக்குமிதானோ?

சேக்கை - படுக்கை - சர்ப்ப சயனம். கரியவன் - திருமால், வைகல் - துயிறல் (*சிலப்பதிகாரம்)—தூங்குதல்.

இந்த மிதிலைக்காட்சிப்படலம் கஅ௪ம் பாட்டில் 'புட்டிருப்பாகன்' என்பதில் புள் (-பறவை), கருடப்புள்ளைக் குறித்ததுபோல, 'சேக்கைக் கரியவன்' என்பதிற் சேக்கை, பாம்புச்சேக்கையைக் குறித்தது. 'வள்ளல் சேக்கை' - பாம்பாகிய படுக்கை என்ற உரை உண்டு. இதற்கு ஆதாரமாக, 'வள்ளல்' என்ற சொல் 'பாம்பு' என்ற பொருளில் எங்கும்

* இனி, இவ்வாறு மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்கள் பதிப்பித்திருக்கும் நூல்கள் மேற்கோள்களாகக் காட்டப்படுமிடங்களில், அந்நூல்கள் அவற்றின் அரும்பத அகராதிகளைக் குறிப்பனவாகக் கொள்க.

பிரயோகிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை: வெள் அப் பாற்கடல் - வெண்மையான அந்தப் பாற்சமுத்திரம்; வெள்ளப் பாற்கடல்—பெருக்கு உடைய பாற்கடல் எனினுமாம். மிளிர்தல் - ஒளிர்தல். அள்ளல் பூமகள்- சேற்றில் (உண்டாகும் தாமரை) மலரில் (வசிக்கும்) பெண் - இலக்குமி. உறைகின்றது-உறைகின்றதனால்: இந்த மிதிலைக்காட்சிப்படலம் அச-ம் பாட்டில் 'காய் எரியால் கரிய' என்பது 'காய் எரிக்கரிய' எனவும், கடிமணப்படலம் ௬௦-ம் பாட்டில் 'தடக்கையால் பிடித்தான்' என்பது 'தடக்கை பிடித்தான்' எனவும் வருதல்போல, இங்கே 'உறைகின்றதால்' என்பது 'உறைகின்றது' என வந்தது.

கருமையும் குளிர்மையும் பரப்பும் காணுதற் கினிமையும் உடைமைபற்றிக் கடலை மாதர்கண்ணுக்குவமித்தல் மரபு. வெண்மையான பாற்கடல் கண்ணின் வெண்மையான பாகமாகிய வெள்விழிக்கும், அந்தப் பாற்கடலின் மத்தியில் மண்டலித்த கரிய சர்ப்பசயனம் கண்ணடுவில் உள்ள வட்டமான கரிய பகுதியாகிய கருவிழிக்கும், அந்தச் சர்ப்ப சயனத்திற் கண்வளரும் கரிய திருமால் அந்தக்கருவிழியில் தோன்றும் கிருஷ்ணனுக்கும் உவமை. ஒன்றோடொன்று தொடுத்த சம்பந்த முடைய மூன்று உவமேயங்களுக்கு அவைகள்போல விடாத தொடர்புள்ள மூன்று உவமானங்களை ஒருசேரப் பொருத்தமாக எடுத்துத் தொடுத்தது மிக்க இனிமை விளைப்பது.

ஒருவருடைய கண்ணுள்ளே உற்றுநோக்குவோரது பிரதிபிம்பமாய் நோக்கப்பட்ட அந்தக் கண்ணினுள்ளே தோன்றும் வடிவத்தைக் 'கிருஷ்ணன்' என்பது உலகவழக்கு. இந்த வடிவத்தைக் "கண்மணியிற் பாவை" என்பர் வள்ளுவர் (குறள். ககஉக). உவமேயத்திற் குறிப்பாக வுள்ள 'கிருஷ்ணன்' என்ற சொல்லும் உவமானத்தில் வெளிப்படையாக வுள்ள 'கரியவன்' என்ற சொல்லும் 'கருநிறமுள்ளவன்' என்றுபொருள் படலும் அந்த இரண்டு சொற்களும் திருமாலைக் குறித்தலும் மேற் கூறிய விசேடவுரையின் பொருத்தத்தையும் கம்பரது கவிநுட்பத்தை யும் விளக்குதல் காண்க.

135. அருள் இலாள் எனினும், மனத்(து) ஆசையால்
வெருளும் நோய் விடக், கண்ணன் விழுங்கலால்,

தெருள் இ லா உல கிற் சென்று நின்று வாழ்
பொருள் எ லாம் அவள் பொன் உரு ஆனவே.

இ-ள். (அவள் என்மீது) இரக்கமில்லாதவளாயினும், (நான் அறிவின்றி அவள்மேற்கொண்ட) ஆசையினால் (உண்டாகிய) பயங்கரமான (விரக) நோய் தீரும்படி, (மருந்தாக அவளை என்) கண்களா (கியவாயா)ல் விழுங்கியதனால், (என் கண்களுக்குச்) சகல சராசரப்பொருள்களும் அவளுடைய அழகிய வடிவமாகிவிட்டன.

வெருளும் என்ற தன்வினை வெருள்விக்கும் என்ற பிறவினைப் பொருள் தந்து நின்றது. வெருளல் - அஞ்சுதல். நோய் விட - வியாதி நீங்க. தெருள் - தெளிவு. சென்று நின்று வாழ்பொருள்கள் - இடம் பெயர்ந்தும் இடம் பெயராதும் வாழும் (இருவகைப்) பொருள்கள் - சராசரப் பொருள்கள். பொன் உரு - அழகுடைய வடிவம். அசரப் பொருளில், மரங்கள் முதலிய உயிருள பொருள்களும், மலைகள் முதலிய உயிரில் பொருள்களும் அடங்கி யுள்ளன. திசை தெரியாது மயங்கியவன் 'திசை மயங்கியது' என்பது போல, உலகப் பொருள்க ளெல்லாவற்றையும் சீதா தேவியாக மயங்கிக் காணும் தம் தெருளாமையை இராமர் உலகின்மேல்வைத்துத் 'தெருளிலாவுலகம்' என்றுரென்று கவி கூறிய நுட்பம் கவனிக்கத்தக்கது.

136. வண்ண மேகலைத் தேர் ஒன்று, வாள் நெடும்
கண் இ ரண்டு, கதிர் முலை தாம் இரண் (டு)
உண் நி வந்த நகையும் என் (று) ஒன்(று) உண்டால்;
எண்ணும் கூற்றினுக் (கு) இத் தனை வேண்டுமோ!

இ—ள். அழகிய மேகலாபரணம் அணிந்த தேர் (போன்ற அரை) ஒன்று, வாள் (போலும்) நீண்ட கண்கள் இரண்டு, இறுமாந்த தனங்கள் இரண்டு, (மனத்தினால்) அநுபவித்தற்குரிய பல்வரிசை ஒன்று (ஆகிய இவைகள், யான்) நினைந்துகொண்டேயிருக்கின்ற (கன்னியாகிய) இயமனுக்கு உண்டு. (இவற்றுள் ஒன்றைக்கொண்டே என்னைக் கொன்று விடலாம். அப்படியிருக்க, என்னைக் கொல்லுதற்கு உதவியாக)இத்தனை (ஆயுதங்கள்) வேண்டுமோ!

வண்ணம் - அழகு. கதிர்த்தல் - இறுமாத்தல் (சங்க அகராதி). கதிமுலை என்ற பாடத்தில், கதித்தல், எழுதல் என்ற பொருளுடையது. உண்ணல் - அநுபவித்தல் (ஐங்குறுநூறு). நிவந்த-மேலான(—ஐங்குறுநூறு). என்னும் - 1 (கண்டார் அஞ்சி)மதிக்கும்; 2. நினையும் - நினைந்து கொண்டேயிருக்கப்பட்ட. இப்பாட்டு, பின்வரும் இனிய பாட்டுக்களின் கருத்தை உட்கொண்டது.

பண்டறியேன் கூற்றென் பதனை இனி அறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு (குறள்-௧0அரு).

கண்ணினு ளின்று கண்டாம் கூற்றினை; காமர் செவ்வாய்
ஒண்ணுதல் உருவக் கோலத் தொருபிடி நுசுப்பிற் றீஞ்சொல்
வண்ணித்த லாவ தில்லா வருமுலை மதர்வை நோக்கின்
பெண்ணுடைப் பேதை நீர்மைப் பெருந்தடங் கண்ணிற் றம்மா.
(சீவக சிந்தாமணி-2458)

137\. கொள்ளை கொள்ளக் கொதித்(து) எழும் பாற்கடற்
பள்ள வெள்ளம் எனப் பட ரும் நிலா
உள்ள உள்ள உயிரைத் துருவிட;
வெள்ளை வண்ண விடமும் உண் டாம் கொலோ?

இ—ள். (கரை மீதுள்ள பொருள்களைக்) கவரும்படி பொங்கி யெழுகின்ற பாற்கடற் பெருவெள்ளம்போல, நிலாவானது (என்) உயிரை (க் கவருதற்கு அதனை) த் தேடும்படி பரவுகின்றது. (ஆலகால விடம் உலகெங்கும் பரந்து உயிர்களைக் கவர்ந்ததென்று கேட்டிருக்கின் றேன். அதன் நிறம் கரிது. அது போலப் பரந்து உயிரைக் கவரும் இந்த நிலாவோ வெண்மையானது. ஆதலால், நான் இதுவரை கண் டேனும் கேட்டேனும் இல்லாத) வெண்ணிற விடமும் இருக்கின்றதோ?

கொள்ளைகொள்ளல்—கவர்தல். கொதித்தல்—பொங்குதல். பள்ள வெள்ளம்—(பரப்போடு)ஆழமுடைய பெருக்கு. படருதல்—1. பரவுதல்; 2. செல்லுதல். உள்ள—1. நினைக்க; 2. இருக்கின்ற. உள்ள உள்ள உயிர்—(அவளை) நினைக்க இருக்கின்ற உயிர்—(வேறெப்பயன்கருதியும் வாழ்தல் இல்லாமல் அவளை) நினைத்தற்கே (வாழ்ந்து) இருக்கின்ற

உயிர். துருவுதல்—(கவருதற்காகத்) தேடுதல். 'நிலா, வெள்ள மென்ன, உயிரைத்துருவிடப் படரும்' எனக் கூட்டுக. 'உள்ள முள் ளூற்றுயிரைத் தொடருமால்' என்றும் பாடம்.

138. "ஏதும் நல் வழி அல்வழி என் மனம்
ஆது மோ? அதற்(கு) ஆகிய காரணம்
பாகு போல் மொழிப் பைந் தொடி கன்னியே
ஆகும்; வே(று) இதற்(கு) ஐயுற(வு) இல்லையே"

இ. ள். "என் மனம் நல்ல வழியிலே செல்லும் (இயற்கை யுள்ளது); அது தீய வழியிலே (செல்வது) ஆதுமோ? (ஆகாது. நல் வழியிலேயே செல்வதாகும்) அதற்கு (—இச் சமயத்தில் நல்வழியிற் சென்றதற்கு—அவள் பாற் சென்றது நல்வழியென்பதற்குத்) தகுதி யான காரணம் அவள் கன்னிகை (யாயிருத்தல்) ஆகும்: இதற்கு வேறு (காரணமிருப்பதாகச்) சந்தேகமில்லை."

அல்வழி—(நல்வழி) அல்லாத (தீய) வழி. பைந்தொடி—பசுமை யான (பொன்) வளையல் (உடையாள்). கன்னி—கல்யாணமாகாதபெண். ஐயுறவு—சந்தேகம்.

'ஏகும் நல்வழி அல்வழி' என்பதற்குச் 'செல்லுதற்குரிய நல்வழி அல்லாத(தீய)வழி' யென்றும் பொருள் கொள்ளலாம்.

இத்திரட்டின் 132-ம் பாட்டில் உள்ள 'கனியும்போல்பவன்' என் பதை எழுவாயாகவும் 133 முதல் இந்த 138-ம் பாட்டுவரை கூறியிருப் பதைச் செய்படுபொருளாகவும் கொண்டு 'என்றான்' என்ற பயனிலை வருவித்துப் பொருண்முடிபுசெய்க.

எப்பொழுதும், தீய கருத்துக்களைத் தோன்றினமாத்திரையே விலக்கி, நல்ல கருத்துக்களைமட்டும் தொடுத்துச் சிந்திக்கும் இயல் புடையாரது மனத்திலே அபூர்வமாக ஒரு கருத்துத்தோன்றி நீடித் திருப்பதானால், அது தீக் கருத்தாயிருத்தல் இயல்பன்றென்பதைக் குறிப்பித்துக் கம்பர் தம் கதாநாயகரது மனத்தூய்மையை இந்தப் பாட் டிற் புலப்படுத்தியிருக்கின்றார். இங்கே இராமர் கூறியதுபோலச் சாகுந் தலநாடகத்தில், கதாநாயகன் கதாநாயகியை ஆலோசியாது காதலித்த

பின்பு அவள் மணஞ்செய்தற்குரியளோ என்ற சந்தேகம் தோன்றிய போது கூறியதையும், அவள் கொண்டிருந்த தவவேடம் நிலையான தன்றென்றும் அவளைவளர்த்த பிதா அவளைக் கல்யாணம் செய்விக்கக் கருதி யுள்ளாரென்றும் தெரிந்தபோது அவன் தன் மனத்தை நோக்கி, 'மனமே! நீ நீண்டக்கூடாத நீக் கங்கென்று பயந்தவள் மகிழ்ந்து விளைந்துகொள்ளும் மாணிக்கமாயுள்ளாள்' என்று கூறியதையும் இப் பாட்டு நினைவுகூரச் செய்கின்றது.

சீதாபிராட்டிபோல இராமபிரானும், மாலை, மாலைக்குப் பின்னும் நிலவுக்கு முன்னும் உள்ள இருள், நிலவு ஆகிய மூன்றினாலும் வருந்தினு ராயினும், சீதாதேவி அம் மூன்றையும் நொந்தாரென்றும், இராமர் நிலவைமட்டும் நொந்தாரென்றும் கவி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. இதன் காரணம் இராமரது விரகதாப வருணனையைக் கவி ஆரம்பிக்கும் சமயம் மாலையும் இருளும் நீங்கிச் சந்திரோதயமாயிருந்ததே. அதுவரை இராமர் விசுவாமித்திராதியரோ டிருந்ததனால் நம் வேட்கையை அடக்கியிருந்தாரென்பது தெளிவாம்.

[இரவு கழிந்தது. இராத்திரியாகிய இராசனது வெண்கொற்றக் குடை வீழ்ந்தாற்போலவும் மேற்றிசைப் பெண்ணின் முத்துச்சுட்டி அற்றுவீழ்ந்தாற்போலவும் சந்திரன் மேற்புறக் கடலுள் தாழ்ந்து மறைந்தான். திசைகளாகிய மாதர்கள் தங்கள் நாயகனாகிய சந்திரன் பிரிந்துபோனதனால்; தங்கள் மேலேபூசியிருந்த வெண்கலவைச்சாந்தை அழித்தாற்போலச் சந்திரிகை ஒழிந்தது. அந்தச்சமயத்திலே, கருமை யான யானைத்தோலைப்போர்த்த சிவபெருமான்போல, இருள்மூடிய உதய கிரியிலே, அக் கடவுளது நெற்றியைப்பிளந்து விளங்கும் சிவந்த அக் கினிக்கண்போலச் செஞ்ஞாயிறு உதயமாயினது].

வேறு.

139. பண்டு வரும் குறிபகர்ந்து பாசறையில்
பொருள் வயினில் பிரிந்து போன
வண்டு தொடர் நறும் தெரியல் உயிர் அனைய
கொழுநர் வர மகிழ்த் தேரோடும்,

கண்டு, மனம் களி கூர ஒளி சிறந்து
மெலி வகலும் கற்பி னார் போல்,
புண்டரிக முகம் மலா, அகம் மலர்ந்து
பொலிந்தன பூம் பொய்கை யெல்லாம்.

இ - ள். (பிரியும்) முன் (திரும்பி) வரும் (காலத்தின்) அடையாளத்தைச் சொல்லிப் போரையும் பொருளையும்விரும்பி (ப் பிரிந்து)போன நாயகர் வரக்கண்டு, உளம் களிகூர (உடல்)ஒளிமிகுந்து (பிரிந்த) மெலிவு நீங்கும் கற்புடையமாதர்போல, (சூரியன் தேரில் வரக்கண்டு) தடாகங்களெல்லாம், தாமரைமுகங்கள் மலரா நிற்க, (அழகு மிகுந்து) விளங்குவனவாயின.

பண்டு - முன். வரும்குறி - திரும்பிவரும் காலத்தின் அடையாளம், அதாவது கார்கால ஆரம்பம் என்பது போன்றது. பாசறை - பகைவர்மேல் யுத்தஞ்செய்யச் சென்றோர் தங்கும் இடம்; இது பாடிவீடு படைவீடு என்றும் கூறப்படும்; இங்கே போர்வயிற்பிரிதல் (-யுத்தம் காரணமாக நாயகர் தம் நாயகிகளைப் பிரிதல்) குறித்து நின்றது. பரிந்து—1. அன்புகொண்டு - விரும்பி; 2. விரைந்து. சிறத்தல் - மிகுதல்.

பொய்கைகளுக்குக் கற்புடையமாதரும் அவைகளைச் சூரியன் பிரியும் காலமாகிய அத்தமனசமயத்துக்கு நாயகர் பிரியும் காலமும் தாமரைகளுக்கு மாதர் முகங்களும் இரவுக்கு நாயநாயகியர் பிரிந்திருக்குங் காலமும் இரவில் தாமரைகள் கூம்பியிருத்தலுக்குப் பிரிவுக்காலத்தில் மாதர்முகங்கள் வாடியிருத்தலும் உதயகாலத்திற் சூரியன் தேரில் உதித்தலுக்குத் தாம் வரக்குறித்த காலத்தில் நாயகர் தேரில் வரலும் தாமரைகள் மலர்ந்து பொய்கைகள் பொலிதலுக்கு முகமலர்ந்து மாதர்கள் ஒளி சிறத்தலும் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உவமானங்களாயிருத்தல் கண்டு களிக்கத்தக்கது.

140. எண் அரிய மறையினொடு கின்னரர்கள்
இசை பாட உலகம் ஏத்த,
விண்ணவரும் முனிவர்களும் வேதியரும்
கரம் குவிப்ப, வேலை என்னும்
மண்ணு மணி முழ(வு) அதிர, வான் அரங்கில்
நடம் புரி வாள் இரவி ஆன
கண் நுதல் வா னவன் கனகச் சடை விரிந்தால்
என விரிந்த கதிர்கள் எல்லாம்.

இ-ள். வேத (பாராயண)த்துடன் கின்னரர்கள் இசைபாடவும், (ஞானத்திலும் பக்தியிலும்) உயர்ந்தோர் துதிக்கவும், தேவர்களும் தபோதனரும் அந்தணரும் அஞ்சலிவந்தனஞ் செய்யவும், சமுத்திரமாகிய முரசு முழங்கவும் ஆகாயமாகிய நடனசபையில் நர்த்தனம் செய்யும் சூரியனாகிய சிவனுடைய பொன்னிறச்சடை (நர்த்தனம் செய்தலால் அவிழ்ந்து நாற்றிசையும்) பரந்தாற்போல (ச் சூரிய) கிரணங்கள் (எங்கும்) பரந்தன.

எண்ணரிய—அளவில்லாத. மறை—வேதம். இசை —1. இராகம்; 2. புகழ். மறையினொடு இசைபாட—1. வேதத்தை (உச்சரித்தலுடன்) இராகத்தோடுபாட; 2. வேதத்துடன் புகழைப்பாட. உலகம்—உயர்ந்தோர். கரம்—கை. வேலை—கடல். மண்ணும் மணி முழவு—மார்ச்சனை பூசப்பட்ட அழகிய முழவு. அதிர்தல்—முழங்குதல். வான்—ஆகாயம். அரங்கு—நடனசாலை. வாள்—ஒளி. இரவி—சூரியன். கண்ணுதல் வானவன்—(ஒரு) கண் நெற்றியில் (உள்ள) தேவன்—சிவன். கனகச் சடை—பொன் (நிறச்) சடை.

ஆகாயம் சிற்சபைக்கும், சூரியன் அச்சபையில் ஆடும் சிவனுக்கும் உதய சூரியனது சிவந்த கதிர்க் கற்றை சிவனுடைய செஞ்சடைக் கற்றைக்கும், அந்த உதய சூரியன் எதிரிற் கடல் ஒலித்தல் நடேசர் சந்நிதியில் முரசு முழங்குதலுக்கும் ஒப்பு. கின்னரர் வேதத்துடன் இசைபாடலும் விண்ணவரும் முனிவரும் வேதியரும் கரம் குவித்தலும் ஆகிய வழிபாடுகள் உதயசூரியனுக்கும் சிவனுக்கும் பொது.

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

திருமங்கையாழ்வாரின் காலம் எது?

திருமங்கையாழ்வாரின்காலத்தைப்பற்றித் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுள் நீண்டகாலமாய்ப் பத்திரிகைவாயிலாலும் புத்தகமூலமாயும் பெரும்போர் நிகழ்ந்துவருகிறது. இவர் எந்தக்காலத்தில் இருந்தார் என்று நிச்சயமாய்த் தெரியாவிட்டாலும் இவர் எழுதியுள்ள பாசுரங்களின் உதவியால் ஒருவாறுநிச்சயிக்கலாம். இவர் இயற்றியுள்ள 1253 பாசுரங்களுள் ஒருசில, அக்காலத்து மிகவும் கீர்த்திபெற்றிருந்த தென்னிந்திய மன்னரையும், போரில்நிகழ்ந்த வெற்றிகளையும் இதர சரித்திரநிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்றன. இவற்றின் உதவியாலும் சமீப சரித்திர ஆராய்ச்சியிற் கிடைத்துள்ள பல்லவ வம்சத்தாரின் சிலாசாஸனங்களின் உதவியாலும் திருமங்கையாழ்வாரின் காலத்தை ஒருவாறு நிர்ணயிக்கக்கூடும்.

திருமங்கைமன்னன் வைணவ ஆழ்வார்களுள், கடைசியானவர் என்பது மட்டில்,

"பொய்கையார்பூதத்தார்பேயார்புகழ்மழிசை
ஐயனருள்மாறன்சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர்தாட்டூளிநற்பாணன்நன்கலியன்
ஈதிவர்தோற்றத்தடைவாமிங்கு".

என்று மணவாளமாமுனிகள் அருளிச்செய்துள்ள ஆழ்வார்களின் அவதாரக்கிரமச்செய்யுளாலும், வேதாந்ததேசிகர் அருளிச்செய்த அதிகார சங்கிரஹத்துள்ள,

"பொய்கைமுனிபூதத்தார்பேயாழ்வார்தண்
பொருநைவருங்குருகேசன்விட்டுசித்தன்
துய்யகுலசேகரனம்பாணநாதன்
தொண்டரடிப்பொடிமழிசைவந்தசோதி

வையமெலாமறைவிளங்கவாள்வேலேந்து
மங்கையர்கோனென்றிவர்கள்மகிழ்ந்து பாடுஞ்
செய்யதமிழ்மாலைகளுந்தெளியவோதித்
தெளியாதமறைநிலங்கடெளிகின்றோமே".

என்னும் செய்யுளாலும் நன்குவிளங்குகிறது. மேலும், திருமங்கை மன்னன் தனக்கு முற்காலத்திருந்த ஆழ்வார்கள் சென்று பாசுரங்கள் இயற்றாத அநேக திவ்விய தேசங்களைத் தமது பாசுரங்களிற் பாடியிருப்பது இக்கொள்கையை வற்புறுத்தும்.

நிற்க, திருமங்கையாழ்வார் அடிக்கடி தமது பாசுரங்களில் அக்காலத்துத் தமிழ்மன்னரையும் இதர ராஜீய சம்பவங்களையும் குறிப்பிட்டிருக்கிறார் என்று முன்பே சுட்டியுள்ளோம். இவற்றுள், பல்லவரின்புகழைப் பன்முறை தமது பாசுரங்களில் இறந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் இவர் குறிப்பிடுவதிலிருந்து இவர் பல்லவமன்னர் தென்னிந்தியாவில் ஆட்சிசெய்திருந்தகாலத்தில் இருந்தவர் என்று நன்கு விளங்குகிறது. சமீப சரித்திர ஆராய்ச்சியின் ஆதாரத்தால், பல்லவ வம்சத்தார் காஞ்சீபுரத்தைத் தலைநகராகக்கொண்டு கி. பி. மூன்றாம் நூற்றாண்டுமுதல் சுமார் 9-ஆம் நூற்றாண்டுவரை தொண்டைமண்டலத்தில் ஆட்சிபுரிந்துவந்தனர் என்றும், அவர்கள் சிவபக்தியும் விஷ்ணு பக்தியும் நிறைந்தவரென்றும், அநேக ஆலயங்களைக் கட்டினார்களென்றும் தெரிகிறது. எனவே,

'பல்லவன் வில்லவ னென்றுலகிற் பலராய்ப் பலவேந்தர் வணங்கு கழற் பல்லவன் மல்லையர்கோன்' 'பார்மன்னுதொல்புகழ்ப் பல்லவர்கோன்' என்பன ஆதியவற்றால், பல்லவஅரசரின் பெருமையையும் ஆட்சியின் பரப்பையும் அவர் வெற்றியையும் பாடியிருக்கும் நமது ஆழ்வார் பல்லவர் இறுதிக்காலமான கி. பி. 9-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியே இருந்திருத்தல்வேண்டும். மேலும், கி. பி. இரண்டாம்நூற்றாண்டிலோ அதற்குச் சற்றுப் பிந்தியோ சோணாட்டில் ஆட்சிசெய்திருந்த கோச்செங்கணான் என்னும் அரசனை ஆழ்வார் திருநறையூர்ப்பதிகத்திற் புகழ்ந்திருப்பதால் ஆழ்வார் இச்சோழமன்னருக்கு வெகுகாலம் பிந்தியவர் என்பது வெளியாகின்றது.

மேற்குறித்தவற்றால் திருமங்கையாழ்வார் கி. பி. மூன்று நூற்றாண்டுக்குப்பின்னர்க் கி. பி. 9-ம் நூற்றாண்டுக்குள் இருந்திருக்கவேண்டும் என்பது ஒருதலை. இவர் அட்டபுயகரப் பதிகத்தின் இறுதிச்செய்யுளில் வ யி ர மே க ன் என்ற மன்னனைக் குறிப்பிட் டிருக்கிறார்: அச்செய்புளாவது :—

மன்னன்தொண்டையர்கோன்வணங்குநீண்முடிமாலைவயிரமேகன்
தன்வலிதன்புகழ்சூழ்ந்தகச்சியட்டபுயகரத்தாதிதன்னைக்
கன்னிநன்மாமதின்மங்கைவேந்தன்காமருசீர்க்கலிகன்றிகுன்று
இன்னிசையாற்சொன்னசெஞ்சொன்மாலையேத்தவல்லார்க்கிடம்வைகுந் [தமே.

இப்பாசுரத்தின் பொருளைப்பற்றித் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்காரர்களுள் வெகுகாலமாய்ப் பெரும்போர் நிகழ்ந்துவருகிறது. சென்னைச் சர்வகலாசாலையில் இந்திய சரித்திர வித்வான் ஸ்ரீமான் டாக்டர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரும் லெக்ஸிகன் கமிட்டி தமிழ்ப்பண்டிதர் மு. ராகவையங்கார் அவர்களும் இப்பாசுரத்திற் குறிக்கப்பட்டிருக்கும் வயிரமேகன் என்னும் மன்னன் இரட்டபாடி அரசன் என்றும் தொண்டைமன்னனால் அவன் வணங்கப்படுபவன்என்றும் கச்சியை அந்த இரட்டபாடி அரசனின் வலியும் புகழுஞ் சூழ்ந்திருப்பனவென்றும் பொருள்செய்து, அவ்வரசன் இரண்டாவது தந்திதுர்க்கனென்றும், அவனே வயிரமேகனென்ற பட்டப்பெயருடையவனென்றும், அவன் காஞ்சியின்மீது படையெடுத்துவந்தவனென்றும், ஆழ்வார் அக்காலத்துத் தொண்டைமன்னனான நந்திவர்மன் பல்லவமல்லன்காலமான 8-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் என்றும் கருதுவர்.

ஆனால், காலஞ்சென்ற ஸ்ரீமான். வீ. வெங்கையரோவெனில் வயிரமேகன் என்பது பல்லவசிலாசாஸனங்களில் 'வயிரமேகதடாகம்' 'வயிரமேகச்சதுர்வேதிமங்கலம்' 'வயிரமேகவாய்க்கால்' என்றுவருவதைக் கவனித்து கி. பி. 9-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விளங்கியிருந்த பல்லவமன்னனான தந்திவர்மன் என்பவனே ஆழ்வாராற்குறிக்கப்பட்ட வயிரமேகன் என்றும் அவனுடையகாலமே ஆழ்வாரது காலமென்றும் 'திருவல்லிக்கேணித் தந்திவர்மன்சிலாசாஸனம்' என்ற தலைப்பின்கீழிருந்த ஆராய்ச்சித்திறத்துடன் எழுதியிருக்கிறார். (E. P. Ind. Vol. 8, p. 290).

சமீபத்தில் ஸ்ரீமான் K. G. சேஷையர் அவர்கள் இவ்விஷயமாய் ஆராய்ச்சிசெய்து 'திருமங்கையாழ்வாரின்காலம்" என்று பங்களூர் மிதிக் ஸொஸைடியின் போனவருஷத்திய சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்கள். ஸ்ரீமான் சேஷையர் ஆழ்வார் பாசுரத்திற் குறிக்கப்பட்டிருப்பவன் ஒரே அரசன் என்றும், அவன் பல்லவ வம்சத்தவன் என்றும், பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தின் குறிப்புகள் இதை வலியுறுத்துவனவென்றும், எடுத்துக்காட்டி வயிரமேகன் என்னும் பல்லவ மன்னன் மூன்றாவது நந்திவர்மனான தெள்ளாற்றெறிந்த நந்திப்போத்தவர்மனென்றும், அவன் இருந்தகாலமான கி.பி. 9-ம் நூற்றாண்டே ஆழ்வார்காலமென்றும் ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள்.

தஞ்சை ராவ்பஹதூர் K. S. ஸ்ரீநிவாஸபிள்ளையவர்கள் தாம் எழுதியிருக்கும் "தமிழ்வரலாறு" என்னும் நூலில் (பக். 122–129) ஸ்ரீமான் K. G. சேஷையர் அபிப்பிராயங்களைப், பெரும்பாலும் அனுசரிக்கிறார்கள்.

ஆனால், ஸ்ரீமத் சேஷையர் சீனிவாஸபிள்ளை இவர்கள் கூற்று ஒரு பாகத்தில் உண்மையெனினும், ஒரு பாகத்திற் பொருந்தாதிருக்கிறது. ஆழ்வார் குறித்திருக்கும் வயிரமேகன் பல்லவனே யென்கிறமட்டில் (அது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தை அனுசரித்திருப்பதாலும் பாசுரத்திற்கு இயற்கையான பொருளைத் தருவதாலும்) இவர்கள்கூற்று உண்மையெனலாம். ஆனால் வயிரமேகன் என்பவன் எந்தப் பல்லவமன்னன் என்ற விஷயத்தில் இவர்கள் கூற்றுக்குப் போதுமான ஆதாரமில்லை; என்னை? மூன்றாவது நந்திவர்மன் ஆழ்ந்த சிவபக்தன் என்பது வேலூர்பாளையச்செப்பேடுகளின் இறுதியிற் குறிக்கப்பட்டிருக்கும்வடமொழிச்சுலோகத்தாலும் நந்திக்கலம்பக97ம்பாட்டில்வரும் 'சிவனைமுழுதுமறவாதசிந்தையன்'என்ற குறிப்பாலும் நன்குவிளங்கும். ஆழ்வார் பரமவைஷ்ணவ பக்தராதலின், சிவபக்தியுள்ள மன்னனைத் தமது பாசுரங்களிற் பாடியிருத்தல் அரிது.

ஆயின் வயிரமேகன் யார்? மூன்றாவது நந்தியின்பாட்டனான நந்திவர்மன் பல்லவமல்லனேயாகும். இவனே ஒருசமயம் நந்திபுரத்தில் தமிழ்அரசர்களால் முற்றுகைபோடப்பட்டுப் பிறகு உதயசந்திரன் என்

னும் தனது சேனாபதியின் உதவியின்மூலமாய்த், தமிழ்மன்னரைப் பன்முறை 'நெடுவயல்' பாழி முதலிய யுத்தகளங்களில் முறிய அடித்தவன். இவனே நந்திபுரவிண்ணகரம் முதலான பல விஷ்ணுவாலயங்களுக்குத் திருப்பணிசெய்தவன். இது திருமங்கையார் நந்திபுரவிண்ணகரப் பதிகச்செய்யுள்களால் விளங்கும். இம்மன்னனையே தண்டந் தோட்டத்துச்சாஸனம், 'அச்சுதனைத் தன் ஹிருதயசன்னிஹிதமாகவுடையவன்' என்றும், 'முகுந்தனைவிட ஒருவரையும் வணங்கியறியாத முடியுடையன்'என்றும் புகழ்வது இவனது விஷ்ணுபக்தியைக் காட்டும். இம்மன்னனையே திருமங்கையாழ்வார் அட்டபுயகரப்பாசுரத்தில் 'மன்னவன்றொண்டையர்கோன் வணங்கு நீண்முடிமாலை வயிரமேகன்' என்று பாடியிருப்பதாய்த் தோன்றுகிறது. இம்மன்னன் 62 வருஷம் ஆட்சி புரிந்தனன்; எனவே திருமங்கையாழ்வார் அக்காலத்துச் சரித்திர நிகழ்ச்சிகளில், சிலவற்றை இறந்தகாலத்தில், சிலவற்றை நிகழ்காலத்தில், சுட்டுவது இயல்பாகும். அட்டபுயகரப்பாசுரத்தில் இறந்தகாலத்தில் எழுதாது நிகழ்காலத்ததாகக் குறிப்பிட்டிருப்பது ஆழ்வார் வயிரமேகன் சமகாலத்தவர் என்பதைக் காட்டும். ஆனால் வயிரமேகன் என்ற பெயர் பல்லவமல்லனுக்கு இருந்ததாய்ச் சிலாசாஸனங்களின் ஆதாரம் ஒன்றும் இல்லை. எனினும், இனிவரும் சாஸனங்களில் இத்தகைய சான்று ஏற்படலாம். மேலும், மஹாபலிபுரத்துச் சிலாலிகிதங்களில் 'மஹாமேகன் ஸ்ரீமேகன் என்று பல்லவமன்னருக்குப் பட்டப்பெயரும் பிருதுகளும் இருப்பதைக் கவனித்தால், 'வயிரமேகன்' என்பதும், பெரியவாச்சான்பிள்ளை சொல்கிறபடி பல்லவர்க்குக் குடிப்பெயராகும்.

மேற்கூறியவற்றால், திருமங்கையாழ்வார் எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடங்கிச் சுமார் 62 வருஷங்கள் ஆண்டிருந்த நந்திவர்மன் பல்லவமல்லன் காலத்தவர் என்று ஒருவாறு நிச்சயிக்கலாம். காலஞ்சென்ற ஸ்ரீமான்கள் வெங்கையரும் து. அ. கோபிநாதராயரவர்களும் (History of Sri Vaishnava's பக் 25–6) தனித்தனி ஆதாரங்

களைக்கொண்டு ஆழ்வார்பாசுரத்திற் குறிக்கப்படும் வயிரமேகன் நந்திவர்மனென்றும் அவன்காலமே ஆழ்வார் காலமென்றும், கருதினர். முன்பே குறிப்பிட்டபடி ஸ்ரீமான் Prof. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரும் மு. ராகவையங்காரும் சுமார் இருபது வருஷங்களுக்குமுன்பே வெளியிட்டிருந்த அபிப்பிராயத்தை ஒட்டியே வயிரமேகன் இரண்டாவது நந்திதுர்க்கனென்றும், அவன் சமகாலத்தவனான நந்திவர்மன் பல்லவமல்லன் காலமே ஆழ்வார்காலமென்றும் கருதாநிற்பர். Justice K.G. சேஷையரும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ பிள்ளையும் மேற்கூறியவற்றிற்கு விரோதமாக மூன்றாவது நந்திவர்மனே வயிரமேகனென ஆழ்வாரால், சுட்டப்பட்டிருக்கலாம் என்கின்றனர். இவர்கூற்றிற்கு ஆதாரமாய்த் தண்டத்தோட்டச்சாஸனத்தைக் குறிப்பிட்டு அதன் ஆதாரத்தைக்கொண்டு மூன்றாவது நந்திவர்மன் விஷ்ணுபக்தனெனக் கருதுகின்றனர். ஆனால், தண்டத்தோட்டத்துச் செப்பேடுகள் உண்மையில் இரண்டாவது நந்திவர்மனான பல்லவமல்லன்காலத்தனவேயாம்.

மேற்கூறியவற்றால் இரண்டாவது நந்திவர்மன் (அதாவது நந்திவர்மன்பல்லவமல்லன்) காலமே ஆழ்வார் இருந்தகாலம் என்பது ஒருவாறு நிச்சயப்படுகிறது. எனவே ஆழ்வாரின்காலம் இவ்வரசன்காலமான கி.பி. 7 1?—777 A.D. ஆகும். இவ்வரசனையே ஆழ்வார் நந்தி பணி செய்த நகர் நந்திபுரவிண்ணகரநண்ணுமனமே' என்று குறித்திருப்பதும், அவன் அடைந்திருக்கும் வெற்றிகளைக் குறித்திருப்பதும் ஆழ்வார் இவ்வரசன்காலத்தில் இவற்றை நேரிற் கண்டவர் என்பதையும் விளக்குகின்றன. மேலும், அட்டபுயகரச்செய்யுளில் 'வணங்கும்' என்று நிகழ்காலத்திற் குறிப்பிட்டிருப்பது இக்கொள்கையை நன்கு வலியுறுத்தும்.

Y.M.C.A.
Madras E. } K. நீலமேகன்.

உ

ஸம்ஸ்க்ருத வ்ருத்த மஞ்ஜரீ.

(௬௧௨-ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்ருதவிளம்பிதம். 12/22.

நநந ஞநந ஞநந ஞநஞ

கமல மாதும ருந்தநி யுந்துநி
செயவொ ஞுதம டந்தையர் சந்தன
களப சீதள கொங்கையி லங்கிய

—இருபோதே.

ஸுமதி.

மத்தமயூரம். 13/22,

(கம்பன்)
(மாரீசன் ராவணனுக்குரைத்தது)

ஏதே மேகா
கர்ஜித கம்பீ
ரனிநாதேள

ப்ராவ்ரிட் காலம்
மத்த மயூராः
கதயந்தி

மாண்டார் மாண்டார்
நீயினி மான்வார்
தொழில்செய்ய

வேண்டா வேண்டா
செய்கெனி னுய்வான்
விதியுண்டோ.

சந்த மலர்த்தண்
கற்பக நீழல் —தலைவர்க்கும்
அந்தக னுக்கும்
அஞ்ச வடுக்கும் —அரசான்வாய்

பங்க்தி — ஸுமதி

ஞ நந ஞஞ — நந ஞஞ

தூணகம். 15/23

ஞந ஞந ஞந ஞந
ஞந ஞந ஞந ஞ

தாது கொண்ட சீத மேவு
சந்து சந்த மென்ற ளிர்
போது கொண்ட வோத்த போது
பொங்கு நீம ருந்தி ஞல்
ஓரா தொன்றைப்
பாரா தந்தத்
தேடே வந்திட் டுயிர்சோரா
கூடு வன்பிற்
சோரா நின்றக்
கோயா நின்றாட் —நிலையாதே.

கன்யா ஸூமதி
௫௦ ௫௦ ௩௩ ௫௦.

லீலா கேலம் 15/30 (15 நெடில்)

வெங்கா ளம்பா ணஞ்சேல் கண்பால்
மென்பா கஞ்சொற் குயில் மாலே.

௩௩=௫

ஆறுமாத்திரையளவுள்ளவை.

சங்கானே சங்கானே
சம்போகங் காதானே
முத்தொழிலின் வினைமுதனீ
மூவர்க்கும் முழுமுதனீ
எத்தொழிலும் இறந்தோய்நீ
இறவாத தொழிலினனீ.

ஸர்வக்ஞோ தேவானும் } நாரி
மர்த்யானும் சாஸ்தாஸ்யாத் } (௫௫)

லோககுரும் புத்தமஹம் } ஸூமுகி
துக்கநுதே நௌமிஸதா } (௬௩௫)

மனஸாஹம் வசஸாஹம் } ஸூமதி
வபுஷாஹம் ஜினமிச்சே } (௩௫௫)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.,

மதுரை.

ஸ்ரீ:

பெருந்தொகை.

[முன்னுரை]

'செந்தமிழ்'ப் பத்திரிகையின் அடுத்துவரும் பகுதிமுதலாக, பெருந்தொகை என்ற பெயரிட்டு என்னால் தொகுக்கப்பட்டுள்ள செய்யுட்டிரட்டொன்று, கிரமமாக வெளியிடப்பெற்றுவரும். அடியளவாற் குறுமையும்நெடுமையுமுடைமைநோக்கிக் குறுந்தொகை நெடுந்தொகை* என முன்னோர் தொகைநூல்கட்குப் பெயர்வழங்கியவாறுபோல, எண்ணளவாற் பெருமையுடைமைபற்றி, இந்நூற்குப் 'பெருந்தொகை' எனப் பெயர்தரலாயிற்று. இத்தொகையுட்கண்டசெய்யுள்கள்— தொல்காப்பியம் யாப்பருங்கலம் காரிகை வீரசோழியம் முதலியஇலக்கணநூல்களின் பழைய உரைகளினின்றும், முற்காலத்தவும் பிற்காலத்தவுமான இலக்கிய உரைகளினின்றும் தனிப்பாடல்களாக—ஏட்டுப்பிரதிகளாலும் பத்திரிகைகளாலும், வாய்மொழியாலுந் தெரிந்தவற்றினின்றும், சிலா தாமிரசாஸனங்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவை. பழைய இலக்கணவிலக்கிய உரைகளில் மேற்கோளாக ஆளப்பட்ட பாடல்கள் சொற்செறிவும் பொருட்பொலிவும் பெரிதுமுடையவேனும், அந்நூல்களைக் கற்போர் அவற்றை ஆங்காங்கு உதாரணவளவிற்கொண்டுநோக்கி நெகிழவிடுவதே பெரும்பான்மை வழக்கமாயுளது. அப்பாடல்களெல்லாம், முறைப்பட அதிகாரவடைவில் வைத்துத் தனிநூலாகத் தொகுக்கப்பெறின், அஃது ஒரு சிறந்த இலக்கியமாகிப் பழம்பாடல்களின் அருமைபெருமைகளைத் தமிழ்மக்கள் அறிந்து மகிழ்தற்கு இடமாகும் என்றுகருதி, இதனைத் தொகுக்கலாயினேன். சங்கத்துச்சான்றோராற் றொகுக்கப்பட்ட நற்றிணைமுதலிய நூல்கள் இங்ஙனமே நம்மவர்க்கு இன்பம் பயப்பன என்பது தெரிந்ததே.

இத்தொகைநூல்—கடவுள்வாழ்த்து. அறவியல், பொருளியல், இன்பவியல், ஒழிபியல் என்ற ஐந்தியல்கள் கொண்டது. இதன் 'மொத்தப் பாடற்றொகையை இப்போது வரையறுத்துக்கூறுதல் இயலாது; ஆயினும், உத்தேசம் 2000 செய்யுட்களுக்குக் குறையாதென்றேசொல்லலாம்.

* நெடுந்தொகை - அகநானூறு,

பழைய உரைகளிலே மேற்கோளாக ஆளப்படும் பாடல்களிற் பெரும்பாலவும் இப்போது அச்சேறிய நூல்களிற் காணக்கூடியனவே. இவையன்றி, உரைகாரர்காலத்து வழங்கி, இப்போது பெயர் தெரியாத நூல்களினின்று உதகரிக்கப்பட்ட செய்யுட்களும் பலவுள. இவற்றுள் வெளிவந்த நூற்பாடல்களை விடுத்து, இன்னநூலென்று தெரியாத உதாரணச் செய்யுட்களும், உரையாளர்களாற் பெயர்கூறி யாளப்பட்டு இப்போது கிடைத்தற்கரியவாயுள்ள பாரதம், தகடூர்யாத்திரை முத்தொள்ளாயிரம் ஆசிரியமாலை போன்ற நூற்பாடல்களுமே இதனுள்ளே தொகுக்கப்பட்டுள்ளன. இவையன்றிப் பேரரசர் சிற்றரசர், வள்ளல்கள், பெரியோர் முதலியவரைப்பற்றியும், தமிழ்நாட்டின் நிலைமைநிகழ்ச்சிகளைப்பற்றியும், உள்ள பழம்பாடல்களைப் பலவிடங்களினின்றுந் திரட்டி முறைப்படுத்தியுள்ளேன். இவையாவும் தமிழறிஞர்க்கேயன்றிச் சரித்திரவாராய்ச்சி செய்வார்க்கும் பெரிதும் உதவக்கூடியன வென்பது திண்ணம்.

இங்ஙனந் தொகுக்கப்பெற்ற பழையசெய்யுட்களிலே, பொருள் செவ்வனே புலப்படாத இடங்களுமுண்டு. வேறு ஏட்டுப்பிரதிகளின் துணையின்றி வெளிவந்த அச்சுப்பிரதிகளினின்றே திரட்டப்பெற்றமையால், உள்ளவாறே அவைபதிப்பிக்கப்படலாயின. ஒருசெய்யுளே பலவுரைகளிலும் உதகரிக்கப்பட்டவிடத்து, ஒப்புநோக்கிப் பாடபேதங்களும் உண்மையுருவமும் தெரியநேர்ந்தன. அத்தகைய பாடங்கள் கீழ்க்குறிப்பிலே நூற்பெயர் இடங்களைக் குறித்துவருமிடத்து, அவ்வப்பாட்டெண்களை பொட்டிக்காட்டப்பட்டுள்ளன. நூலிறுதியிற் பாடல்களின் விசேடக்குறிப்பும் அரும்பதவுரையும் விஷயசூசிகையும் சேர்த்து வெளியிடக் கருதியுள்ளேன்.

இந்நூல் அச்சேறிமுடிந்ததும் விவரமாக முகவுரையொன்று எழுதியமைக்கப்படும்; ஆயினும், தொடக்கத்தில் அதனைப்பற்றி முக்கியமாக அறிதற்குரியவற்றைச் செந்தமிழபிமானிகட்குத் தெரிவிக்கவிரும்பி இம்முன்னுரை எழுதலாயினேன்.

மு. இராகவையங்கார்,

ஸ்ரீ:

புரூரவசரிதை.

(௪அ௪-ஆம் பக்கத் தொடர்ச்சி)

காந்திமதிப்படலம்.

பொறுமைக்குலகமெனும்புகழானிவ்வாறிருப்பப்போற்றுரைத்
தெறுமைக்களிற்றான்றிரிகத்தன்றிண்டோள்வரைவீழ்ந்துண்டாடும்
நறுமைக்குழற்காஞ்சனமாலையென்னுமழகினாலையின்வாய்
மறுவற்றொளிருங்காந்திமதியுதித்ததுலகம்வழுத்தவே. (க)

கூந்தற்கமுகைக்கொலைப்படுத்தியிருளைப்பகலேகுடிபோக்கி
நீந்தப்புனலிற்சைவலத்தையறலைவீழ்த்திநெறிநின்று
சாந்தப்புகையைமணந்துபுயன்மாலைசூட்டித்தழுவியவோ
காந்தட்செழும்பூங்கொடிக்காத்துக்கன்னித்திருவின்கருங்கூந்தல். (உ)

முதலாம்பக்கத்திடைகுடபான்முளைத்தமதியங்கீழ்நோக்கி
னுதலோடொப்புச்சொல்லலாம்பகலும்விளங்குநோன்மைத்தே
யெதிராய்நின்றபாசடைகளிரண்டாய்நடுவோரிளந்தளிரும்
கதிராய்த்தோன்றுநிம்பமிவள்புருவந்திலகங்கடுக்குமால். (௩)

செய்யகமலமல......நீலம்பூத்துநனிசிவந்துள்
ளையமில்லாக்கருஞ்சுரும்பர்நடுவணமர்ந்துபாவையடுத்
தெய்யுஞ்சிலைவேள்கணையினைவென்றிதயங்குடைந்துள்ளுயிர்பருகி
யுய்யுமருந்துதருமென்றாற்கண்ணுக்குவமையொண்ணுமால். (௪)

கொள்ளைக்கொலைவாளனையகயல்குதிப்பக்குழைவாய்க்குழைவாய்ந்த
வள்ளைக்கொடியுமுளதென்றாற்காதுக்குவமைமதிக்கலாம்
எள்ளைக்கடிந்துபொன்னிறமாயியங்குமுயிர்ப்பூரிருபாலுந்
தொள்ளைக்குமிழ்தோன்றினவெனிலுமூக்கென்றுரைக்கச்சோர்வாமால். (௫)

தெரிக்குமதுரப்பண்ணேழுங்குடிகொண்டிருந்தசெங்கனிவாய்
விரிக்குமுறுவற்றாளநகையொப்பென்றுரைக்கவேண்டுமேன்
முருக்குஞ்சிவந்தகயிரவமும்போக்கியமுதமுளையொருங்காய்க்
குருக்கும்பவளப்பாலிகையென்றுரைக்கிலதுவுங்கூடாதால். (௬)

புாரூர்திரைவாரிதியின்வலம்புரியுங்குமுகுமிவள்பசும்பொற்
றாளம்பெறலாற்றிறிதேய்க்கும்வனப்பாலுவமைசாலாதாற்
றிாளும்வடிவாய்ப்பொன்பொதிந்தவேய்நேர்தோளிமுன்கையினுக்
கிரவும்பகலும்பயில்வீணையிரங்கல்யாமொப்பலவென்றே. (௭)

உள்ளத்துறையுமன்மதனளிரதியுடனேயுண்ணறவ
வள்ளத்தினைமேற்கவிழ்த்தினவோதுழையத்தோன்றுமகுடமோ
மெள்ளக்கடவுங்கடாக்களிற்றினெடுங்கோடெழுந்தவிக்கமோ
வள்ளச்செறிகாரிருட்கூந்தலயில்வேல்விழியாட்கம்மம்மா. (௮)

குடம்போல்விம்மிப்பணைத்தமுலைக்கூர்ங்கோட்டியானைமன்மதன
னெடுந்தேரினைநின்றீர்க்கும்வகைகருங்கைநீளநீட்டியவோ
கடம்பாய்ந்தொழுகக்கறுத்ததோவல்லிகிடந்தகாட்சியோ
வடம்போலிலகுமணிவயிற்றினுரோமவொழுக்கின்வனப்பம்மா. (௯)

கிளியைக்குயிலைப்பூவைதனைத்தேனைப்பாகைக்கிடைத்தமொழிப்
பளிதத்தனத்தாளுந்திமதனமிழ்ந்தச்சுழிக்கும்பவ்வமோ
தெளியக்குலவுமின்னிறூற்செய்யிற்றெரியுமெனத்தெரியா
வெளியைக்கொடியாய்ச்செய்திடையின்வைத்தான்கமலமேலோனே. (௧௦)

வாய்ந்தமடற்குட்பூங்கதலியென்னின்மணிமேகலையாதி
யேந்தியழகுபெற்றிடுமோசிலகால்வெம்மையெய்துமோ
சேந்தநிறம்வாய்ந்திடுவதுண்டோமேலேதுன்றுஞ்செயலுண்டோ
சாந்தமுலையாளுருவினுக்கதுவேயுவமைசாலுமால். (௧௧)

வேலைப்பழித்துக்கூர்ங்கணையின்விறலைமாற்றிமறலியைவென்
றுலத்தினையுள்ளருத்தியகணார்வைகணைக்காலாவமோ
கோலக்கருப்புச்சிலையினான்றென்றற்றேரிற்கொளுந்திகிரிக்
காலிற்கிடந்தவச்சென்றூன்முடிமேன்மகுடங்கவலாதே. (௧௨)

மாற்றினடங்காப்பொன்னிறமாய்ச்சிறிதும்பெரிதுமாய்வளர்ந்து
தோற்றுஞ்சிரமோரைந்தாகிமென்மைதோன்றியலத்தகச்செஞ்
சேற்றினையுங்கமடமனச்செலவும்பெறுமேற்சித்தசன்று
னேற்றுஞ்சிலவாறுதற்றொடிக்கையேழைசரணமேய்க்குமால். (௧௩)

இன்னதாயபோழகின்மடந்தைதருணமெய்தினளென்
றன்னைமாருந்தோழியருமாசற்றுணர்த்தவவ்வாசன்
பொன்னதாயவெழிலைமுலைப்போகந்தினைக்கும்புயமுடைய
மன்னன்யாவனெனக்கருதிமருகன்றனக்கேமணமென்ன. (௧௪)

அன்னானழகுமின்னவள்போழகுமழகுற்றிடுமென்ன
நன்னான்மறையோர்தம்மைமணவோலைநவிறிரெனநவில
வொன்னாருயிருண்டுறங்குகதிருடைவாட்படையோயின்றொழிந்த
பின்னாட்பகலேபகலென்னவுரைத்தாரந்தப்பெரியோரே. (கரு)

விரித்தமறைநூல்வல்லோர்கண்மணநாள்விதித்தவிதம்விண்ணைச்
சிரித்தநகரிலுறைவோர்களறியவுரைமின்சென்றென்னக்
குரைத்தகழற் றாவிறைபணிப்பக்கோணைக்கரடக்கடாக்களிற்றி
னெருத்தமிசையோர்பறையேற்றிக்கருமத்தலைவரியம்பினார். (கசு)

வாட்டாழ்விழியாள்காந்திமதிமணநாளையெனச்செவியிற்
கேட்டார்கேட்டார்விண்ணமுதங்கிடைத்தாரென்னமகிழ்வுற்றார்
தீட்டாவடிவத்திருமகளைத்திருந்தவளஞ்செய்பவர்போலத்
தொட்டாமலர்ப்பூங்குழலினார்நகரம்புதுக்கத்தொடங்கினார். (கஎ)

வேய்ந்துவெறுத்தநறுந்தொடையுஞ்சுவையென்றொழித்தமேகலையுந்
தோய்ந்தமகளிரூடலிடைவெறுத்தகலனுந்தோயுங்கா
லேந்துமகரத்திடைதடையென்றுதிர்த்தசாந்துமிளவெயிலிற்
காந்துமணியுங்குப்பையெனக்களைவார்தத்தங்கடைதோறும். (கஅ)

கலைகொண்மதியைவென்றமுகக்காந்திமதியைக்காணவுயர்
நிலமன்னியநாளிழிந்தனபோற்றாளவிதானநிறுத்திடுவா
ருலகையளந்தபெருங்கீர்த்தியுடையவேந்தனுயர்புகழி
னலகையளப்பதெனநெடியகொடிகணிரைப்பாரளவில்லோர். (கக)

மன்னன்மகட்குமணநாளைமறுநாட்டரசரனைவோரு
மின்னகரின்மேவுவர்நம்மேவல்கேட்பரினியென்ன
வன்னமனையார்சிலவுறுப்பினழகுகவர்ந்ததிதுவென்னக்
கன்னலெழிற்பூங்கதலிநெடுந்தூண்கடோறுங்கட்டுவார். (உ0)

தூபமிடுவார்சாந்தநறுஞ்சுண்ணந்தூவுவார்தூண்டாத்
தீபமிடுவார்நிறைகுடங்கணிரைப்பார்முளைப்பாலிகைசேர்ப்பா
ரோவமெழுதுவார்தூண்களுறைநன்பொதிவாரொண்டாளத்
தாமமலர்கணாற்றுவார்பொற்றோரணங்களைச்செய்வார். (உக)

ஆறுகாரணத்தைதந்தினையுள்ளடக்கிநான்குமறைவழியே
யேறுதழன்மூன்றியற்றுமிருபிறப்போர்க்கொருமையுடனீவார்
கூறுமிசையேழ்பாடியெட்டுவகைமங்கலங்கள்குயிற்றுவா
ரூறுமிசைகளொன்பதொடுநடிப்பார்திசைபத்துவப்பாக. (உஉ)

வேறு.

கன்னிநகரின்னனகளிப்பொடுகெழிப்ப
மன்னவன்மகட்குமணமண்டபமமைத்தான்
பொன்னினகரன்னதுபுலன்புலனைவென்ற
வன்னவர்மனத்திறுமகன்றனதுயர்ந்தே. (௨௩)

அப்புரியமாடநடுவெவ்வரசனெய்திச்
செப்பிவிடுமோலைவழிமன்னவர்செறிந்தார்
விப்பிரர்கள்வேதமுனிவோர்களுமிடைந்தார்
மைப்படுகுழற்றிருமணத்திறலுணர்ந்தே. (௨௪)

அங்கணிலமன்னவருங்கடனியற்றித்
தங்கண்மனைநேர்விடுந்தோறுமவர்சாரக்
கொங்குவிரிதாரிறைகுலக்கொடியினோடு
மங்குருடுகோயிலின்வதிந்தனன்மகிழ்ந்தே. (௨௫)

அவ்வரசனவ்ழியமர்ந்தனனிருப்ப
மைவளர்விழிச்சியொருமந்திரமினைந்தாள்
கைவளர்கிளிக்கனிமொழிக்கதிர்முலைப்பூண்
டெய்வமகளைத்தன்மருகற்குதவிசெய்வான். (௨௬)

இத்திருவையிம்மருகனெய்திடிலிவ்வேந்தன்
மெய்த்திருவனைத்தினையுமேவறிடனன்றே
வத்திருவையெள்ளலறிவன்றெனவலார்பூண்
கொத்திருமலர்க்குழலியுள்ளமகிழ்கொண்டாள். (௨௭)

அன்னநடையின்னமுதமன்னவளுமன்ன
மன்னவனுமின்னணம்வதிந்திடுமம்மாலை
பொன்னினகரும்பரயன்மால்சசிபுணர்ந்தோன்
உன்னரியஆழிமுதல்வன்சபையிலுற்றார். (௨௮)

காந்திமதிப்படலம் முற்றும்.

உதவிப்பத்திராதிபர்.

பல்லவர்கோயில்கள்.

(செந்தமிழ் உ௧-ம் தொகுதியின் ௬௦௦-ம் பக்கத்தொடர்ச்சி)

V. இராஜஸிம்ஹன் காலத்தியவடிவு.

கிழப்புரம் தாலூகா பனமலைக்கிராமத்திலுள்ள குகைக்கோயில்(1) ஒற்றை ஸம்ஸ்கிருத சுலோகத்தாலாகிய வொருசாஸனம் (2) இருக்கிறது. அச்சுலோகம் காஞ்சிபுரம் கைலாஸநாதஸ்வாமிகோயிலில் உள்ள முக்கியமான கல்வெட்டின் கடைசிச்செய்யுளைப் பெரிதும் ஒத்திருக்கின்றது. இப்பனமலைச்சாஸனத்தின் புகைப்படம் ஒன்று வானூர் இராகவேந்திராசார்யரால் டாக்டர் ஹூல்ஷுக்கு அனுப்பப்பட்டது. அச்சுலோகத்தின் மொழிபெயர்ப்பிலிருந்து, டாக்டர் ஹூல்ஷு அக்குகை காஞ்சிபுரம் கைலாஸநாதர்கோயிலைக் கட்டிய இராஜஸிம்ஹன் என்னும் அரசனால் செதுக்கப்பட்டது என்னும் முடிவிற்கு வந்துவிட்டார்.

அக்குகையின் புகைப்படம் ஒன்று எடுப்பதற்காகவும், அதில் இராஜஸிம்ஹன் சாஸனம் ஒன்று இருப்பதால், அவன்காலத்தில் வெட்டப்பட்டுள்ள கோயிலின்வடிவத்தை அறிவதற்காகவும் நான் 1915ஆம் ஜனவரிமீ முதல்தேதி பனமலைக்குச் சென்றேன்.

அங்குச் சென்றதும் மேலேசொன்ன சாஸனத்தைப் பார்த்தேன். அது பாறையிற் குடையப்பட்டகோயிலிற் பொறிக்கப்படவில்லை. ஆனால் அது ஒரு காளி (மஹிஷாஸுரமர்த்தனி) யின் சிலையையுடைய ஒரு வளைந்தவழியின்கண் செதுக்கப்பட்டிருக்கிறது.

---

1. List of Antiquities in the Madras Presidency by Swell Vol I page. 209 and Madras District Gazetteers. South Arcot by Francis (1906) p. 385.

2. South Indian Inscriptions. Vol I. No. 31. page 24.

இச்சிறிய குடைவரைக்கோயில் ஒரு பாறையின் அடியில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்பாறையின் உச்சியிலும் ஒருகோயில் இருக்கிறது. நான் அதையும் போய்ப் பார்த்தேன். அதனெதிரிற்போய் நின்றவுடன், நான்,

1. அக்கோயில், காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலைப்போலவே கட்டப்பட்டிருக்கிறது.

2. அக்கோயிலினடியில் அதைச்சுற்றிக் கிரந்த - பல்லவ எழுத்தால் ஒற்றைவரிச்சாஸனம் ஒன்றிருக்கின்றது.

என இரண்டு தீர்மானங்களைச் செய்துகொண்டேன்.

இச்சாஸனம் இதுவரையில் ஓரிடத்திலாவது கூறப்படவில்லை. நான் இதைப்பற்றி மகா-௱-௱-ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகளுக்குத் தெரிவித்தேன். அவர்,

"நீங்கள் 20௳ அனுப்பியகடிதத்துடன் அனுப்பிய பனமலைப் பல்லவ சாஸனத்தைப்பற்றிய அச்சுக்குறிப்பை ஏற்றுக்கொள்வதுடன், நான் உங்களுக்கு இது ஒரு புதியசாஸனமென்பதை அறிவிக்கிறேன். இது, இதுவரையில் பிரசுரிக்கப்படாததோடு ஒருவராலும் கண்டுபிடிக்கப்படவுமில்லை."

என 1915ஆ ஆகஸ்டு மீ 28௳ பதில் எழுதினர்.

காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயில் கட்டப்பட்டிருக்கும் மாதிரியை ஒத்ததும், ஒருசாஸனத்தையுடையதுமான ஒருகோயிலைக் கண்டுபிடித்தது பல்லவசிற்ப சரித்திரத்திற்கு ஒரு முக்கிய சாதனமாகும். ஆகையால் நாம்,

1. சாஸனத்தின் நடை.

2. கோயில் கட்டப்பட்டிருக்கும் வடிவு.

3. சாஸனத்து எழுத்துக்களின் வடிவு.

ஆகிய இவைகளைப்பற்றி ஆராய்வோம்.

1. சாஸனத்தின் நடை.

அச்சாஸனத்தின் ஆதியும் முடிவும் கோயிலுக்கு முன்பக்கமாகக் கட்டப்பட்டுள்ள செங்கற்கட்டிடத்தால் மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் முதல் அடியின் ஒருபாகமும், கடைசிப்பாகமுழுவதும் காணப்படவில்லை. மத்தியில், சிலஎழுத்துக்களையுடைய ஒருகல் மட்டும் எடுக்கப்பட்டிருப்பதைத்தவிர அச்சாஸனத்தின் எழுத்துக்கள் ஜாக்கிரதையாகவும் (3) நன்றாகவும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

பனமலேச்சாஸனம் காஞ்சிபுரம் கைலாஸநாதர்கோயிலிலுள்ள விமானத்தின் அடியிற் பொறிக்கப்பட்டுள்ள சாஸனத்தைப் பெரிதும் ஒத்திருக்கின்றது.(4) இரண்டு சாஸனங்களும் அவ்வமிசத்தை ஏற்படுத்திய பல்லவன் வமிசாவளியுடன் ஆரம்பிக்கின்றன.

பிறகு பல்லவ அரசர்களது வீரப்பிரதாபங்களது வரிசையொன்று இருக்கின்றது. கடைசியில், பரமேச்வரன் எப்படி குகனை அடைந்தானோ அதேவிதமாக அடையப்பட்ட இராஜஸிம்ஹன் என்னும் ஓர் அரசன் அவ்வமிசத்திற் பிறந்தான் எனக் கூறப்பட்டிருக்கிறது.

இது ஒரு சாதாரண உவமானமட்டுமல்ல. அதாவது, இராஜஸிம்ஹன் என்பவன் பரமேச்வரன் என்னும் பெயரையுடைய ஒரு அரசன் புதல்வன் என்பதை நிச்சயமாகத் தெரிவிக்கின்றது.

அப்பால் இராஜஸிம்ஹனது வீரப்பிரதாபங்களைக் கூறுகின்றன. இரண்டுசாஸனங்களிலும் இராஜஸிம்ஹன் யானைகளை ஜெயித்த வொரு சிங்கத்திற்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றான். அந்தயானைகள் இவனது விரோதிகளாகிய அரசர்களைக் குறிக்கின்றன. இராஜஸிம்ஹன் 'சிங்கங்களுக்கு அதிபன்' எனவுங் கூறப்பட்டிருக்கின்றான்.

நமக்குக் கட்டிடங்களில் உள்ள சாஸனங்களின் உதவியால் அவை கட்டப்பட்டகாலத்தை நிர்ணயிக்கத் தடையாயிருப்பது யாதெனில்

---

3. சிலாசாஸன பரிசோதகர்கள் அக்கல்லை மீட்டும் கண்டுபிடித்துவிட்டனர். இச்சாஸனம் மிகத்தெளிவாகத் திருவனந்தபுரம் K. G. சங்கரையர் அவர்களாற் படிக்கப்பட்டுப் பங்களூரில் Quarterly Journal of the Mythic Society யிலும், Indian Antiquary லும் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றது.

4. South Indian Inscriptions Vol I p. 12. No. 24

அநேக பல்லவ அரசர்கள் ஒரே பெயர்மட்டுமேல்லாமல் ஒரேபட்டங்களையு முடையராயிருப்பதே; ஆதலால் அப்பட்டங்களைக்கொண்டு நம்மால் அவை எந்த அரசனைக் குறிக்கின்றனவென அறியமுடியவில்லை.

ஆனால், இங்கு அப்படிச் சந்தேகப்படவேண்டிய இடமொன்று மில்லை; ஏனென்றால், பல்லவர்களில் இராஜஸிம்ஹன் என்னும்விருதை யுடையவன் நரஸிம்ஹவர்மன் II ஒருவன்தான். வாயலூர் வியாக்ர புரீசுவரர் கோயில் தூணிலுள்ள சாஸனத்தில் (5) இராஜஸிம்ஹன் என்னும் விருதையுடைய அரசனின் (6) வமிசாவளிமுழுவது மிருக்கின்றது.

நரஸிம்ஹவர்மன் II முதலாம் பரமேச்வரவர்மனின் புதல்வனுவன். பனமலைச்சாஸனம், இவனுடையபிறப்பைக் குகனது பிறப்பிற்கு ஒப்பிடும்போது, ஒருவன் பரமேச்வரன் என்னும் கடவுளின் புதல்வன் என்றும் மற்றவன் அதே பெயருள்ள ஒருஅரசனின் புதல்வன் என்றும் தெளிவாகக் கூறுகின்றது.

வேலூர்பாளையம் ஏடுகளின் நடையைப்பற்றிய அறிக்கையில் (7) மகா-ா-ா-ஸ்ரீ H. கிருஷ்ணசாஸ்திரிகள்,

"இவ்விதமாகச் சொல்லிவரும்போது இங்கே கவனிக்கத்தக்க விஷயம் ஒன்று உளது. அதாவது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட பல்லவவமிசாவளியிற் கூறியபடி முதலாம் நரஸிம்ஹவர்மனுக்குப் பிறகு இரண்டாம் மஹேந்திரவர்மனைக் கூறவில்லை. தவிர, முதலாம் பரமேச்வரவர்மனுக்கும் இரண்டாம் நரஸிம்ஹவர்மனுக்கும் மத்தியில் ஒரு அநாமதேய அரசனைக்கூறி நரஸிம்ஹவர்மனை முதலாம் பரமேச்வரன் பெயரனாக (பிள்ளையின்பிள்ளையாக)ச் செய்திருக்கின்றது."

என எழுதியிருக்கிறார். அவர் அப்படிக்கூறியதற்குக்காரணம் 'வேலூர் பாளையம் ஏடுகளை எழுதியவற்கு, தான் எழுதியதிற்கு ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்திற்குமுன்பு ஆண்ட அரசர்களின்முறை நன்றாகத்தெரியாது' என்பதேயாம்.

---

5. G.O. No. 538. 28th July 1909. p. 41. No. 368.
6. Do. p. 78.
7. G. O. No. 832. 28th July 1911. Part II. p. 61. Published in the South Indian Inscriptions Vol., II,

வேலூர் பாலையம் ஏடுகளிற் "சிவனுக்குக் கைலாஸத்தைப்போலப் பாறைகளால் ஒரு கோயில் கட்டுவித்தான்" எனக்கூறப்பட்டிருப்பதால், காஞ்சீபுரத்திற் கைலாஸநாதர் கோயில் கட்டியது நரஸிம்ஹவர்மன் II காலத்தில் நடந்த ஒருமுக்கியமானசெய்தியாகத்தான் கருதப்பட்டு வந்தது. இதனுடன் காசாக்குடி (8) உதயேந்திரம்(9) வேலூர்பாலையம்(10) ஏடுகளிற் கூறியதிலிருந்து இவ்வரசன் சிவனையலங்கரிப்பதும் பிராமணர்களுக்கு யதேஷ்டமாகத் தானம்செய்வதும் கோயில்கள்கட்டுவதுந் தவிர வேறொன்றும் செய்ததாகத் தெரியவில்லை.

இவ்வரசன், பரமேச்வரன் I முதலாம்விக்கிரமாதித்தனை வென்றதற்கும் (கி.பி. 655–680) விக்கிரமாதித்தன் II நந்திவர்மன் பல்லவமல்லனை ஜெயித்ததிற்கும் (740) இடைப்பட்டகாலத்து ஆண்டான் என்பது அறிந்தவிஷயமே. ஆகையால் பனமலைக்கோயிலும் காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலும், எட்டாம் நூற்றாண்டின் முதலில் (700–710) ராஜஸிம்ஹனால் கட்டப்பட்டிருக்கின்றன எனக் கூறவேண்டியிருக்கிறது.

2 கோயில் கட்டப்பட்டிருக்கும் வடிவு.

காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயில் கட்டப்பட்டுள்ளமாதிரியைப் பற்றி நாம் இங்கு அதிகமாக எழுதவில்லை. அது, அலெக்ஸாண்டர் ரே (Alexander Rea) எழுதிய 'பல்லவர்சிற்பம்' (Pallava Architecture) என்னும் புத்தகத்திலும், என்னால் எழுதப்பட்ட 'தென்னிந்திய சிற்பசாஸ்திர ஆராய்ச்சி' (Archeologic du Sud de l' Inde. Tome I Architective. pp. 103-111) என்னும் ப்ரெஞ்சு புத்தகத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. நாம் இங்குப் பனமலைக்கோயிலைமட்டும் விவரித்துக்கூறுவோம்.

1. அக்கோயிலின் நிலப்படம் ( ) மற்றஇடங்களிற் காணப்படாததும், காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலிற்காணப்படுவதுமான

---

8. South Indian Inscriptions Vol. II p. 342.
9. South Indian Inscriptions Vol. III p. 371.
10. G. O. No. 832 28th July 1911 Part II p. 61 and South Indian Inscriptions Vol. II Part V.

ஒரு அதிசயத்தைத் தெரிவிக்கின்றது. கர்ப்பக்கிருஹத்தின் நான்கு பக்கங்களிலும் அதையொட்டிய அறைகள் காணப்படுகின்றன. அவை கிழக்கு அல்லது மேற்குமுகமாகவேதான் இருக்கின்றன. (அவை ஒருபொழுதும் தெற்கு அல்லது வடக்குமுகமாக இருப்பதில்லை.) அம் மாடங்களில் லிங்கங்கள் இருக்கின்றன.

2. பனமலையிலுள்ள லிங்கங்களும் காஞ்சிபுரம்கோயில் லிங்கங் களும் மற்ற லிங்கங்களைப்போல இல்லை. மற்ற லிங்கங்கள் எல்லாம் உருண்டைவடிவினதாகவிருக்க இவைமட்டும் எட்டு அல்லது பதினாறு பட்டைகளையுடைய ஸ்படிகலிங்கங்களாக இருக்கின்றன. அநேகமாக இம்முகங்களெல்லாம் சிறிது வட்டமாகத்தான் இருக்கின்றன.

3. இந்துக்களதுகோயில்களின் கர்ப்பக்கிருகத்தினுட்புறம் ஒரு பொழுதும் அலங்கரிக்கப்படுவதில்லை. ஆனால் பனமலையிலும், காஞ்சி புரத்திலும் கர்ப்பக்கிருகத்தின பின்மதிலில் ஸோமாஸ்கந்தரைப்போன்ற விக்கிரகம் விளங்குகின்றது. சிவனுக்கு இருபுறங்களிலும் ஆனால், சற் றுப் பின்னால், பிரும்மாவும் விஷ்ணுவும் நிற்கின்றார்கள்.

4. பின்கால்களில் நிற்கும் சிங்கங்கள் கட்டடங்களின் மூலைகளி லுள்ள தூண்களைத் தாங்கிநிற்பதைப் பார்க்கின்றோம். பனமலையிலும், காஞ்சிபுரத்திலும் இவை பெரியனவாகவும் தற்காலக்கோயில்களிற் காணப்படும் சிங்கங்களைப்போலல்லாமலும் இருக்கின்றன. பனமலையை விட இவை கைலாஸநாதர்கோயிலில் அதிகமாகக் காணப்படுகின்றன.

5. பனமலைக்கோயிலின் சுவர்கள் மாடங்களால் அலங்கரிக்கப்பட் டிருக்கின்றன. அவை, காஞ்சிபுரம் கைலாஸநாதர்கோயிலில் அதிக மாகக் காணப்படும் சித்திரவேலையுடன் இருக்கின்றன.

பனமலையிலுள்ள 'திருவாட்சி' இரண்டு மகரங்களின் வாயிலிருந்து புறப்படும் ஒற்றைவளைவாலாகியது. மஹேந்திரன்காலத்ததைப்போல் இரண்டுவளைவும் நடுவில் ஒரு மேடையும் இல்லாமல் இருத்தலால் இதற்கு 'ஒற்றைத் திருவாட்சி' எனப் பெயர்.

6. கடைசியாகக் காஞ்சீபுரம்கோயிலும் பனமலைக்கோயிலும் ஒரே பாறையால் ஆனவையல்ல. ஆனால், பாறைகளை ஒன்றன்மேல் ஒன்றாக வைத்துக்கட்டப்பட்ட வகுப்பைச்சேர்ந்தன எனக் கூறிமுடிப்போம்.

3. சாஸன எழுத்துக்கள்.

நாம் சாஸனநடையாலும், கோயில்கட்டப்பட்டுள்ள வடிவாலும் காஞ்சீபுரம் கைலாஸநாதர்கோயிலும் பனமலைக்கோயிலும் ஒரேகாலத் தனவென ஆராய்ந்தோம். ஆனால் இரண்டு சாஸனங்களின் எழுத்துக் களையும் ஆராய்ந்துபார்த்தால் அவை சமகாலத்தனவல்ல எனச் சுலப மாகக் கூறிவிடுவார்கள்.

அவற்றை நன்றாக ஆராய்ந்துபார்த்தால் அவை இரண்டுவிதங்க ளில் மாறுபடுவது காணப்படும்.

1. காஞ்சீபுர சாஸன எழுத்துக்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கின் றன. நேர்கோடுகள் இருக்கவேண்டிய இடங்களில் வளைந்தகோடுகள் காணப்படுகின்றன. பனமலைச் சாஸன எழுத்துக்கள் சாதாரணமாக இருக்கின்றன.

2. சாஸனங்களின் எழுத்துக்களும் ஒரேமாதிரியாக வளர்ந்து வந்ததாகக் காணப்படவில்லை. காஞ்சிபுரம் எழுத்துக்கள் சுமார் ஐம் பதுவருஷம் பழமையுடையனவாகத் தோன்றுகின்றன. அவற்றிலும், ம, ஜ, ண, ந, ஷ, வ, ய, ல, முதலிய எழுத்துக்கள் மிகப்புரா தனமாகத் தோன்றுகின்றன.

இரண்டுசாஸனங்களும் சமகாலத்தனவல்லவென்பது முடிபு அல்ல ஆதலின், நாம் ஒருசாஸனம் மற்றொன்றைவிடப் புராதனமானது என நிர்ணயிக்க அவற்றின் எழுத்துக்களின் வடிவம் மட்டும் போதாது என ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஆயினும், இதுவரை அப்படித் தான் செய்துவந்திருக்கிறார்கள்.

நாம் மேலேகூறிய காஞ்சீபுரச்சாஸனம் கைலாஸநாதர்கோயிலில் இராஜஸிம்ஹேச்வரர் கர்ப்பக்கிருகத்தின் அடியிற் பொறிக்கப்பட்டுள்ள

தாகும். அது 'தென்னிந்திய சிலாசாஸனங்களில்(11) மொழிபெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

அதே கோயிலில், பிராகாரத்தைச்சுற்றி, கர்ப்பக்கிருகத்தின் கீழ் பாகத்தில் இன்னும் சாஸனங்க ளிருக்கின்றன.

அச்சாஸனங்கள் நான்குவரிசையாக எழுதப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொருவித எழுத்தால் எழுதப்பட்டிருக்கின்றன. அதிலும், இரண்டாவதுவரிசை பனமலையில் உள்ள எழுத்தாலேயே எழுதப்பட்டுள்ளது. மூன்றாவதுவரிசை மேலேசொல்லப்பட்ட இராஜஸிம்ஹேச்வரர்கோயிலடியிலெழுதப்பட்டுள்ள எழுத்தாலேயே(12) பொறிக்கப்பட்டுள்ளது. ஆகையால் இவ்விரண்டுவரிசையும் ஸமகாலத்தனவென்பது நிச்சயம். ஆனால், டாக்டர் ஹுல்ஷ் எழுத்துக்களின் வடிவையே ஆதாரமாகக்கொண்டு மூன்றாவதுவரிசை இராஜஸிம்ஹன் காலத்தில் எழுதப்பட்டதென்றும், இரண்டாம்வரிசை இராஜஸிம்ஹனுக்குப்பின்னால் வந்த அரசரால் செய்யப்பட்ட பிரதியாக இருத்தல் வேண்டும் என்றும் கூறுகிறார்.

“மூன்றாவதுவரிசை, இராஜஸிம்ஹேச்வராலயத்தைச்சுற்றி இருக்கும் சாஸனம் எழுதப்பட்ட எழுத்துக்களாலேயே எழுதப்பட்டிருக்கின்றது. ஆகவே, அது அக்கோயிலைக்கட்டிய இராஜஸிம்ஹன்காலத்தைச் சேர்ந்தது. இவ்விதமாக, முதல்வரிசையும் இரண்டாவதுவரிசையும் இராஜஸிம்ஹனுக்குப் பின்னால்வந்த அரசர்களில் எவராலாவது பொறிப்பிக்கப்பட்டனவாகவும் மூன்றாம்வரிசையின் பிரதியாகவும் இருத்தல்வேண்டும்”.(13)

நாம் இதுவரையில் முதல்வரிசையும் நான்காம் வரிசையும் எழுதப்பட்டிருப்பதைப்பற்றி ஒன்றுமே கூறவில்லை. அவை மேலே கூறப்பட்ட எழுத்துக்களாலேயே எழுதப்படவில்லை. மேலேகூறியன “நாகரி” எழுத்துக்களாலும் இவை “கிரந்த” எழுத்துக்களாலும் எழுதப்பட்டிருக்கின்றன. “நாகரி” வேறுதேசத்து எழுத்துக்களே. முதல்வரிசையும் நான்காவது வரிசையும் எக்காலத்தில் எழுதப்பட்டன? இரண்டா

11. South Indian Inscriptions. Vol. 1 p. 12.
12. South Indian Inscriptions. No. 24.
13. S. I. I. Vol. I p. 16.

வது வரிசையும் மூன்றாவதுவரிசையும் எப்படி ஒரேகாலத்தனவோ அப்படியே இவையும் ஒரேகாலத்தனவாயிருத்தல்வேண்டும். அதாவது அந்த நான்கு வரிசைகளும் இராஜஸிம்ஹனால் அக்கோயில் கட்டப்பட்டகாலத்திலேயே பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இது டாக்டர் ஹூல்ஷ் கூறுவதற்கு மாறாக இருக்கின்றது. "இரண்டுவிதமான எழுத்துக்களால் எழுதப்பட்டசாஸனங்களை விக்கிரமாதித்தன் (கி. பி. 733–34 முதல் 746-47) பல்லவர்மேல் அடைந்த வெற்றிக்கு முன்பாக வைக்கலாம்." (14)

ஆகவே டாக்டர் ஹூல்ஷ் இச்சாஸனங்கள் ஸமகாலத்தனவல்ல என்னும் எண்ணமுடையவராக இருக்கின்றார்: வளைவுகோட்டால் எழுதப்பட்டதே இராஜஸிம்ஹன்காலத்தைச் சேர்ந்ததென்றும், மற்றவை அவனுக்குப்பின்னால் வந்த இரண்டாம் பரமேசுரன் நந்திவர்மன் பல்லவமல்லன் முதலியவர்கள் காலத்தைச் சேர்ந்தனவென்றும் தெரிகிறது என்று கூறுகிறார். பனமலைக்கோயிற்சாஸனத்தைக் கண்டுபிடித்தது, மேலே கூறியதற்கு மாறாக இராஜஸிம்ஹன்காலத்திற் பலவித எழுத்துக்கள் வழங்கிவந்தன என்பதையும், எழுத்துக்களின் மாறுதல்களால் உண்டாகும் வித்தியாசம் நிச்சயமாகக் காலமாறுபாட்டைக் குறிக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்தியது.

இங்ஙனம் இரண்டாம் நரஸிம்ஹவர்மன் எனப்படும் இராஜஸிம்ஹன்காலத்திற் கற்பாறைகளிற் பொறிக்கப்படும் சாஸனங்களுக்கு மூன்றுவித ஸம்ஸ்கிருத எழுத்துக்கள் வழங்கிவந்தன என்பது போதரும்,

1, சாதாரண க்ரந்தபல்லவ எழுத்து:— (பனமலை எழுத்து) இது செப்பேடுகளில் எழுதுவதற்கு உபயோகப்படும் எழுத்துக்களை மிகவும் ஒத்திருப்பது (கூரம் காசாக்குடிச்செப்பேடுகள்.)

2, முன்னதைவிடப் புராதனமான அலங்கார கிரந்தபல்லவ எழுத்து." இவ்வகை இராஜஸிம்ஹனுக்குமுந்தியோரால் ஐம்பதுவருஷங்களுக்குமுன்பே உற்பத்தி செய்யப்பட்டன. இது அதிகமாகச்சித்தி

14. Epigraphia Indica. Vol X No. 1. p. 3.

ரிக்கப் பட்டிருந்ததால் அதிகமாக உபயோகப்படவில்லை. ஆகவே மாறுதல் உண்டாகாமற் பிறந்தமேனியாகவே இருந்தது. அதனாற்றான் இவ்வெழுத்துக்களை உபயோகிக்க எண்ணங்கொண்ட இராஜஸிம்ஹன் காலத்துச்சிற்பிகள் அவன்காலத்து நாகரிகப்படி எழுத்துக்களை அலங்கரிக்காமல் இதெழுத்துக்களை இவ்விதமாகவே அலங்கரித்தார்கள்.

3. நாகரி-பல்லவ எழுத்துக்கள் இவை அநேகமாக வடபாகத்திற்றான் உபயோகப்பட்டுவந்தன. இவ்விதமாகப் பனமலைக்கோயிலைக் கண்டுபிடித்தது சரித்திர உலகத்திற்கு அநேகவிஷயங்களை நிர்ணயித்ததுடன் இராஜஸிம்ஹன்காலத்திற் கோயில்கள் கட்டப்பட்டிருந்தவடிவையும் உறுதிப்படுத்தியது.

1. நிலப்படம்:— கர்ப்பக்கிருகத்தைச்சுற்றிப் பல அறைகள் கிழக்குநோக்கியாவது மேற்குநோக்கியாவது இருக்கும். அவற்றிலும் லிங்கங்கள் காணப்படும்.

2. லிங்கங்கள்:— இந்த லிங்கங்கள் பூராவாக எட்டு அல்லது பதினாறுபோன்ற முகங்களையுடைய பட்டைலிங்கங்கள். ஒருபொழுதும் உருண்டைலிங்கமில்லை.

3. ஸோமாஸ்கந்தர்:— கர்ப்பக்கிருகத்தின் பின்சுவர் அக்காலத்திற்கு உரிய ஸோமாஸ்கந்தவிக்கிரகத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

4. பின்னங்கால்களில் நிற்கும் சிங்கங்கள் வேண்டிய அளவு காணப்படுகின்றன.

5. மாடங்களின்பேரில் உள்ள 'ஒற்றைத்திருவாட்சி' என்னும் தோரணம் உண்டு.

6. கடைசியாக அக்கோயில்கள் எல்லாம் ஒன்றின்மேல் ஒன்றாகக் கற்களை அடுக்கிக்கட்டப்பட்ட கோயில்களேயாம்.

(தொடரும்.)

தி. நா. சுப்பிரமணியம்.

உ

பலகவித்திரட்டு.

———:(o):———

தருமபுரவாதீனத்திலும், திருவாவடுதுறையாதீனத்திலுமுள்ள சந்நிதானங்கள் தினமும் பூசைமுடிந்தபின்பு ஒடுக்கத்திற்குவந்து திருமுறைகளைப் பூசித்தொருதிருப்பாட்டாயினும் வாசித்துச்சிவதலங்களினின்று வந்திருக்கும் விபூதியெல்லாஞ்சேர்த்துவைத்திருக்கிறபையை விரித்து விபூதியெடுத்துத்தரித்துக்கொண்டு பின் நமஸ்காரம்பண்ணுகிற எல்லாவடியார்களுக்கும் அவ்விபூதியெடுத்துக்கொடுக்கும்போது பின்வருங்குருதோத்திரக்கவிகளை யொருவதுவாமூர்த்திகூறுவதுண்டு.

அருண்ஞானப்பிரகாசகுருஞானசம்பந்தானந்தபரவசஞ்செ
  யருள்சச்சிதானந்தர்மாசிலாமணிமூர்த்தியணிஞானசம்பந்தராந்
திருஞானசம்பந்தர்திருவம்பலக்குரவர்சின்மயத்திருமேனியாய்த்
  திகழுமழகியதிருச்சிற்றம்பலக்குரவர்திருநாவுக்கரசகுரவர்
தருமைநகர்மேவுசிவஞானதேசிகாசார்சச்சிதானந்தகுரவர்
  தாழ்விலாமுத்துக்குமாரதேசிகருண்மைதருஞானசம்பந்தராங்
கருதரியவாழ்வுதருகர்தப்பதேசிகர்கவின்மாசிலாமணியெனுங்
  கத்தாருள்சச்சிதானந்தகுருமாணிக்கவாசகர்கழல்பணிகுவாம்.
திருநந்திகுருசனற்குமரர்சத்தியஞானதெரிசனிபாஞ்சோதியார்
  திகழுமெய்கண்டாருணந்திமறைஞானசம்பந்தருமாபதிதேசிக
ருணமச்சிவாயர்சித்தர்சிவப்பிரகாசாணிதுறைசைநமசிவாய
  ராரணம்பரவுமறைஞானாம்பலவாணரவிருத்திரகோடியார்
பொருவில்வேலப்பரிருகுமாரசாமிக்குரவர்புகழ்மாசிலாமணியர்தம்
  புதல்வரெனவருராமலிங்கரிருவேலப்பபோதரெமையாளவேண்டி
வருதிருச்சிற்றம்பலக்குரவாம்பலவாணகுருசுப்பிரமண்ய
  வரதாம்பலவாணகுருசுப்பரமணியகுருமருமலர்த்தாள்கள்போற்றி.

சேற்றூர்ச் சமஸ்தானபதியாகிய சேவகப்பாண்டியத்துரைத்தேவர் அடிமதியில் எல்லாரும் வந்து சந்திக்கும்போது காட்சி கொடுப்பு

தாண்டு. அப்போது சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கூறியகவி. இப்படி வருடந்தோறுங் கூறுங்கவிக்குச் சந்திப்புக்கவி யென்று அங்குக்கூறும் வழக்கமுண்டு.

ஒருவனுருடைநாதனருளாலெந்தாளைதயினுமுபர்ச்சிதோன்ற
வருமோனவகைப்பயனீர்த்தெந்நாளுங்காத் துமினிமருகவீரென்
றருள்விளங்கவெவிளம்பியாடிமதியிற்காட்சியருளினனெந்
திருவன்னவாங்காமுடியன்சேவகப்பாண்டிபராசசிங்கந்தானே.

ஐவகைப்பயமாவன — தன்னாற்றன்பரிசனத்தாற்பகைத்திறத்தாற் கள்வராலுயிர் தம்மாலானபயமைந்தாம்.

திருவாவடுதுறை யாதீனத்தில், நமசிவாய மூர்த்தி குருபூசைத் தினத்திற் பீடங்களெல்லாம்வரும்படி குருபூசைத்திருமுகத்தை ஒருசுப தினத்திற் சபாபதிசந்நிதியிலிருந் தெழுதுவது வழக்கம். இது வருடந்தோறுமுண்டு அப்போது ஷை கவிராயர் கூறிய கவி.

தெரிவரியபுகழ்த் துறைசைக்குருமணியம்பலவாணதேசிகன்றன்
குருபூசைத்திருமுகத்திலைமுகமையிருகரங்கள்கொண்டிருந்தே
யரியபலதுறைசேர்கோவைப்பதங்கள்வரைந்தருளுமதனாலென்றும்
பெரியஞானியாகத்தேயறிபொருளாய்விளங்குசிவபெருமான்றானே.

இது, சிவபிரானுக்கும் அம்பலவாணதேசிகர்க்குஞ் சிலேடையாகக் கூறியது. சிவபிரானைக்குறிக்கும்போது ஐமுகம்— அஞ்சுமுகம், ஐயிரு கரம்—பத்துக்கரம், பலதுறைசேர் கோவைப்பதம்—காட்சிமுதலாகப்பல துறைகள்பொருந்துகின்ற திருக்கோவையாரிலுள்ள சொற்கள் என்றும், மகாசந்நிதானத்தைக்குறிக்கும்போது அழகியமுகம், அழகிய விரண்டு கரம். பலவிடங்களுஞ்சேரத்தக்க ஒழுங்காகியசொற்கள் என்றும் பொருள் கொள்க.

இஃதோர்வருடத்திற்கூறியது.

திருநமசிவாயகுருவெனவருமம்பலவாணதேசிகன்றன்
குருபூசைகண்டுயர்வாழ்வுறவடியாரேவரையுங்கூடும்வண்ண
மருவியநல்லோரையினிலெண்ணிறந்ததிருமுகத்தைவரைதல்செய்தா
னொருசோர்கெழு திருமுகமோவித்திருமுகமோவுயர்வேதாமே.

எண்ணிறந்த திருமுகமென்றதனால் சொற்கருளியது ஒருதிருமுகமென்றும், அடியாரேவரையும் என்றதனால் ஒருசொற்கு என்றும், வாழ்வுற என்றதனால், சொற்த எழுதியது வாழ்வாகிய செல்வத்தைக் கொடுக்கும்படிக்கென்றும் பொருள் கொள்ளக்கிடத்தலால் இங்கெழுதிய இத்திருமுகமே உயர்வென்னும் பொருள் தோன்றநின்றது.

குருபூசைத்திருநாட்காக முதனாளிலே அன்னக்கொடியேற்றினபோது கூறியகவி.

செயநமசிவாயகுருவெனவருமம்பலவாணதேசிகன்று
ணயமலிவிண்ணவர்வரினுநல்லமுதமாம்பதத்தைநல்குவோமென்
றியலுமன்னக்கொடிவானிலங்குறத்தம்பத்தின்மிசையேற்றினனவ்
வயனுயரன்னக்கொடியுங்கண்டு பயங்கொளத்துறைசையதனின்மீதே

அமுதமாம்பதம்—அமுதத்துக்கொப்பாகிய அன்னம். அழிவில்லாததாகியபதவி.

இஃதோர்வருடத்திற்கூறியது.

நதிநதமுன்னுந்தீர்த்தம்படிந்துபலதலம் பணியுஞாலத்தீரவ்
விதமெதற்குத்துறைசையினம்பலவாணசற்குவாம்விமலமூர்த்தி
பதமிலங்குகொடியேற்றிப்பதமுதவலானல்லபதமுட்கொள்வீ
ரதமுறுநும்பசிநோயும்பிறவியெனும்பெருநோயுமகலுந்தானே.

பதம்—அன்னம், பதவி, சமயம், நதம்—மேற்கு நோக்கிச் செல்லும் ஆறு.

குருபூசைத்தினத்திற் கொலுவீற்றிருந்தபோது கூறிய கவி.

குருபூசைதனிற்கொலுவீற்றிருந்தருளம்பலவாணகுருவைக்கண்டோர்
திருமானன்முகன்மகவான்றினகரன்போலாமென்னச்செப்பினரியா [ம்
னுரைசெயினச்சணையுற்றான்மால்கொள்ளுமகன்வைரமுளனெஞ்ச'ன்று
பாவல்பொருந்தாதவனென்றெப்பாகாமுறைபவர்க்குப்பகர்ந்திட்டேனே.

[மகவான்—இந்திரன். தினகரன்—சூரியன். நச்சணையுற்றான்—1. பாம்பணையுடையான் 2. நச்சுதல் பொருந்தியவன். நச்சுதல்—விரும்புதல். மால் கொள்ளுமகன்—1. திருமாலாற் கொள்ளப்பட்டமகன்.

2. மயக்கங்கொண்ட அகத்தையுடையான். வைரம்—1. வஜ்ராயுதம். 2. கோபம். பாவல்பொருந்தாதவன்—1. அடியர்களாலே தோத்திரஞ் செய்யப்படாதவன். பாவிய இருளைப்பொருந்தாதவன்.]

இஃதோர்வருடத்திற்கூறியது.

சேற்றிருந்தமரையுமலருறச்செய்யுந்திருமுகத்தாய்திருமேனிக்குக்
காற்றிருந்தமதன்றவவேடங்கொளினுஞ்சிறிதுநிகர்காணாதென்னக்
கூற்றிருந்தநகர்புகுதாதெற்கருளம்பலவாணகுருவேநீதான்
வீற்றிருந்தகொலுக்காணவிண்ணரசின்மிகக்கண்கள்வேண்டுந்தானே.

மரை—தாமரைமலர் அலருற—விரிதலுற, முகத்தையொவ்வாமையாற் பழியுற

குருபூசைத்திருநாள் முடிந்தபின் பலவிததானங்கள்செய்ததைப் பற்றிக்கூறியகவி.

அன்னதானக்களிறூர்துறைசையினம்பலவாணகருணைமூர்த்தி
யன்னதானமுமதற்குபாதானதானமுமற்றதனுக்கேற்பச்
சொன்னதானமுமின்னுங்கோடிதானமுஞ்செய்தான்சொன்னுவல்லீ
ரின்னதானம்போலவெத்தானத்தெவர்செய்கின்றாரியம்புவீரே.

அதற்குபாதானம்—அவ்வன்னத்துக்கு முதற்காரணமாகிய அரிசி. சொன்னம்—பொன். கோடி—வஸ்திரம்.

மகாசங்கராந்தியிலே யெல்லாருக்குங்காட்சிகொடுத்திருந்தபோது கூறியகவி.

மருவுபுகழ்த்துறைசையினம்பலவாணகுருவைத்தைம்மதிமுன்னாளி
லருதுவந்துபணிசெய்யத்தவமுன்னருடைமையினாலடியேன்போல்வார்
வருசிரத்தைத்தலையென்றுமுயருத்தமாங்கமென்றும்வளர்தேகத்தைத்
தருமுலகின்மெய்யென்றுந்தாவரமென்றும்புகலல்சாலுந்தானே.

தாவரம்—1. நிலையுள்ளது. 2. உடம்பு.

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

குருகைபார்வாவிதிகழ்துறைசையினம்பலவாணகுருவையுள்ளந்
திருகைபாயுழலாதன்புறமகரமதிமுதலாந்தினத்திலென்கை
வருகைபாவணங்குகைபாலவனருள்செல்வம்பெறுகைவாய்ந்தேவர்க்குந்
தருகைபாமன்றிமன்னர்தம்பாலேற்றிடுகைபாச்சாற்றொணாதே

குருகையார்—பறவைகளைப்பொருந்திய. திருகை—திருகுதல்—மாறு படுதல். வருகை—வருகின்றஒழுங்கு.

மஹாசன்னிதானம் தீபாவளித்தினத்திலே யெல்லார்க்குங்கோடி தானஞ்செய்த பெருமையைப்பற்றிக் கூறியகவி.

பெருகோடியருந்தியமானரகசதுர்த்தசிகண்டபெரியோனே னு
மொருகோடிபொன்னுடையானுதவினுலுதவுகிலனுற்றோர்க்கென்றுந்
தருகோடிவள்ளலெனுஞ்சற்குருவம்பலவாணசாமிதானிங்
கிருகோடிகோடியெனவெத்தனையோகோடிதந்தானியம்பொணுதே.

பெருகு—தயிர். ஒருகோடிபொன்—1. ஒருபீதாம்பரம். 2. ஒருகோடி திரவியம். கோடிவள்ளல்—புதியவள்ளல். கோடி கோடி—கொள்வாய் கொள் வாய்; (அடுக்கு).

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

முனமூன்றுவள்ளல்களுங்கோடிகொடுத்தாரெனயாமொழியக்கேளா
மனைநிகரம்பலவாணகுருநரகசதுர்த்தசிநாளதனில்வந்தோர்
மனமகிழும்படிகோடிபலகோடியெனநன்குவழங்கினுனு
வினையநாளிக்குருவேகோடிவள்ளலாமென்னவியம்புவோமே.

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

இருபொருள்சேர்குருமணியம்பலவாணவள்ளலனமிசைந்திருக்கத்
தருதலினுமயனுனேன்பொன்வாசமுதவலின்மாதவனுமானேன்
சிரமலியவிளங்கியவெண்கலையுதவலாலுமுருத்திரனுமானே
னெருநரகசதுர்த்தசிநாளதனிலினிப்பெறும்பேறென்னுலகின்மீதே.

அனமிசைந்திருக்க—1. அன்னவாகனத்திசைந்திருக்க. 2. அன் னத்தையுண்டிருக்க, பொன்வாசம்—பீதாம்பரம். சிரம்—1. தலை 2. நெடுங்காலம். விளங்கிய வெண்கலை—1. பிரகாசிக்கின்ற வெள்ளிய சந்திரகலை 2. விளங்கிய வெள்ளைவஸ்திரம். எண்கலையென்று பிரித்து எண்ணத்தக்கநூலென்று கொள்ளலுமாம்.

இஃதோர்வருடத்திற்கூறியகவி.

கார்மலிசோலைத்துறைசைக்குருபணியம்பலவாணகருணைவள்ள
லோர்நரகசதுர்த்தசியிற்பொன்னுடைமுதற்பலவுமுற்றோர்க்கெல்லாம்

வாரியளித்தனன்கனுற்றனக்கெனவொன்றையும்வேண்டாவதனன்றிப்
பாரிலகுநிகம்பாலுமிக்குருவென்பதையறிந்தோம்பாவல்லீரே.

ஏறுமுகங்கண்டிகையருளியபோதுகூறியகவி.

உலகினென்றும்வழியடியானென்பதனையேவருகன்குணர்வநற்கோ
குலவுமிகபரமேலாமின்பமுறும்படியுள்ளங்கொண்டுதானே
மலர்புகழும்பலவாணகுருமணிதன்னடையாளமாலையிட்டா
னிகலடிமைபணிபூண்டாலாண்டானுக்கழகிதென்பாரெனக்கொண்டேனே.

திருவடையாளமாலையென்பது உருத்திராக்கமாலைக்கொருபெயர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தாபகரும் பாலவனத்தஞ் சமீன்தாருமாகிய பாண்டித்துரைபேரிற்கூறிய நடுவெழுத்தலங்காரக்கவி.

கனமருவுசிவனார்பேரொன்றுசங்கின்பேர்நால்
கருதுறுநெட்டெழுத்தின்பேரன்பின்பேர்கடம்ப
வனநகர்ப்பேர்மணஞ்செய்கையின்பெயரோராறின்
மன்னுநடுவெழுத்தாறும்வளர்பெயராக்கொண்டா
யனையபெயர்முன்பின்சோலைமுறையேகற்றோர்க்
ககற்றித்தன்குலத்துமுறுதகற்றிவிளைத்துண்டு
நிலைவிருத்தியப்பதிதாட்கிட்டறிந்துநீதி
நிகழ்த்தரசேநிலையடைந்தோர்நிதிபதியாகுவரே.

சிவனார்பேரொன்று—கபாலி.
சங்கின்பேர்—வண்டு.
நெட்டெழுத்தின்பேர்—நெடில்
அன்பின்பேர்—பத்தி.
கடம்பவனநகர்ப்பேர்—மதுரை.
மணஞ்செய்கையின்பேர்—வரைகை.
இவற்றின்நடுவெழுத்துப்பாண்டித்துரை.

அனையபெயர்முன்பின்சோலை
கலி—வறுமை.
வடு—குற்றம்.
நெல்—செந்நெல்.
பதி—சிவம்.
மரை—தாமரைமலர்
வகை—முறைமை, எனப்பொருள்கொள்க.

சேற்றூர்ச்சமஸ்தான வித்துவான் கந்தசாமிக்கவிராயர் இராமசாமிக்கவிராயரிருவரும், முகவூரில் ஓராலயஞ்செய்துசிவலிங்கத்தையும் விநாயகரையும் பிரதிட்டைசெய்ததைக்குறித்துக்கூறிய கவிகள்.

சீராருமுலகினிற்பற்பலநாட்டிற்சிறந்தனதென்றமிழ்நாடங்க
ணோராருஞ்செந்தமிழ்க்காகரமாகுமிஃதுயர்ந்ததென்றதேவ
நாராருமறிவறியபராஞ்சோதிவழுதியாயாகசெய்த .
வாராரும்பொருனைதிகழ்பாண்டிநாட்டினின்முகவூர்மருங்கின்மாதோ.

மூவர்தமிழ்த்தேவாரமாவாரங்கொண்டுதினமொழிவோன்பூவிற்
பாவலருங்காவலருமொருகொடியில்வியப்படையப்பகர்வோன்முருகு
காவனத்தில்வருமாணிக்கத்தில்வைத்தபெருமாணிக்கவிஞர்சேறைத்
தேவனைநற்பாமாலைசெய்துளத்திலாமாலைத்தீர்த்தாளென்போன்.

இத்தகைபோனெவனெனிற்பல்காவியமுஞ்செயவல்லவென்னையன்முன்னோன்
சுத்தநிலைசேர்பழனிக்குமாரமுனிவரனையான்றுதிக்கவின்றோன்
மெத்துபுகழ்ச்சேறைபாசனகவிஞர்குலதிலகமென்னவந்தோ
னுத்தமமாங்கந்தசாமிக்கவிஞனெனும்பெயர்பெற்றுயர்ந்தோனம்மா.

திருக்கோவிலொன்றமிகுபொருள்கொடுத்தென்றந்தையாற்செய்தான்கண்ட
வருக்கோவியப்பதனைத்தருவதுகேட்டவர்க்குமதுவழங்குமெய்யன்
பருக்கோவிலாக்கருணைபுரிதேவைப்பதிட்டிக்கும்பான்மையுன்னி
யிருக்கோவியமெனவிருந்தறிவினர்கற்குந்துறைசையிருந்தமூர்த்தி.

ஆகியசுப்பிரமணியதேசிகன்பாலுரைத்தவன்றுனறைந்தவாறே
யேகனுகியசிவலிங்கப்பெருமான்றனைப்பதிட்டையியற்றியன்று
ஞானையுடன்றன்னிறைமையீந்துமுன்னர்வைத்ததுபோலொருகொம்பானும்
வாகையுறுசெந்தமிழ்ச்சுந்தரவிநாயகற்பதிட்டைவகுத்திட்டானே.

தருமபுரவாதீனத்திலாதியிவிருந்த ஞானசம்பந்ததேசிகர் தமது குருவாகிய கமலைஞானப்பிரகாசதேசிகர்பாற்கூறியகவி.

கனக்கும்பொதிக்குமெருதிற்குந்தன்னிச்சைகண்டதுண்டோ
வெனக்குமுடற்குமெனதிச்சையோவிணங்கார்புரத்தைச்
சினக்குங்கமலையுண்ஞானப்பிரகாசசிதம்பரவின்
றனக்கிச்சையெப்படியப்படியாகவுரைத்தருளே.

குமாரகுருபரசுவாமி காசியிலிருந்து மூன்றுமுறைவந்து தருமபுரவாதீனத்திலே தமது ஞானசாரியாராகிய மாசிலாமணிதேசிகர்பாற் காசிக்குச்செல்லா திருக்க வேண்டினேனக்கூற அப்போது; அத்தேசிகர் கூறியகவி.

காட்டிருந்தாலுமலையிருந்தாலுங்கருதரிய
நாட்டிருந்தாலுமங்கென்னகாணல்லதோர்கமலை
வீட்டிருந்தாண்டருஞானப்பிரகாசன்விரைமலர்த்தாள்
கேட்டிருந்தாலும்பிறவாநெறிவந்துகிட்டிடுமே.

தருமபுராதீனத்துத் தம்பிரான்சாமிகளிலொருவராகிய சம்பந்த சரணாலயரென்பவர் மைசூர் அரசரைக்கண்டபோது அவ்வரசர் உங்களாதீனத்தி லடியார்களெல்லா மென்னசெய்துகொண்டிருப்பார்க ளெனக் கேட்க உடனேகூறியகவி.

ஆய்வார்பதிபசுபாசத்தினுண்மையையாய்ந்தறிந்து
காய்வார்பிரபஞ்சவாழ்க்கையெல்லாங்கல்விகேள்வியல்ல
லோய்வார்சிவானந்தவாரியுளேயொன்றிரண்டுமறத்
தோய்வார்கமலையின்ஞானப்பிரகாசன்மெய்த்தொண்டர்களே.

ஓர் நவராத்திரித் திருநாளில் இராசா பாற்கரசேதுபதியின்மீது பாண்டித்துரைதேவர் கூறியகவி.

ஈசனங்கணொருமதன்கணையெய்திடானுனையெய்தினோர்க்
கிரவொழிந்திடுமதியுநின்குடையென்னவின்னொளிதுன்னுமால்
வீசுதென்றலுமுன்வரைப்படும்வேலையங்கடன்மேலைநாண்
மேவுநின்குலவீரனம்பினில்வேதையுற்றதுதூதெனு
வாசைநெஞ்சைவிடுக்கின்மீளவுமனுகுருதசுகத்தினோ
டனமடைந்திலனீவசஞ்செயலாவதொன்றையுமேவிலாள்
வாசமென்குழலாடியங்கிமயங்கிடாதுகலந்தருள்
வளமிகுந்திடுமுகவையம்பதிமருவுபாற்கரநிருபனே.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உக.] ருத்ரோத்காரி-ஹு ஐப்பசி மீ [பகுதி கஉ

Vol.-XXI. October-November-1923. No. 12.

குச்சரம்.

மணிமேகலையிற் போன்றும் 'குச்சரக்குடிகை' என்றதொடர்மொழியின் பொருளை ஆராயக்கருதி 1919-ம் வருஷத்துச் 'செந்தமிழ்' 17-ம் தொகுதி 11-ம் பகுதியில் சிறியதோர்கட்டுரை நான் வெளியிட்டதில் அத்தொடரின் பொருள் 'கற்பாறையிற் குடைந்த சிற்றில்' என்றிருக்கக்கூடுமென்றேன். நற்றமிழ்க்காவலர் மகாமகோபாத்தியாயசாமிநாதையரவர்கள் இதற்கு 'கூர்ச்சரதேசத்துப்பணியமைந்த சிறியகோயில்' என்று பொருள் விளக்கியிருப்பது நான் நன்கறிந்திருந்தும், வேறு பொருள் கூறத்துணிந்ததற்கு சிலகாரணங்கள் வரைந்திருந்தேன். இப்பொழுது வெளிவந்த 'செந்தமிழ்' தொகுதி 21 பகுதி 10-ல் ஸ்ரீமத் கே. ஜீ. சங்கரையரவர்கள் என் கூற்றை மறுத்தெழுதியிருக்கிறார்கள். வடமொழிப் பதமாகிய குத்ரம் தமிழில் 'குத்தரம்' 'குச்சரம்' என்றாயிற்றென்று நான் எழுதியிருந்ததைக்கண்டித்து ஸ்ரீமத் சங்கரையரவர்கள்: "இது தவறென்பது தெளிவாம். வடமொழியில் குத்ரம் என்றிருப்பது குத்திரமென்றே தமிழிலாகும். குத்தரம் அல்ல: நிகண்டுகளிலும் குத்திரமென்றே காணப்படுகிறது. குத்திரம் குச்சரமாக மாறியிருப்பதற்கு வேறு சான்றொன்றுமில்லை." என்கிறார்கள். குத்ரம் குத்தரமாதல் இலக்கண முறையாலிசையாதென்று துணிவுறக்கூறத்தகுமா?

வடமொழியாக்கத்தைப்பற்றிய நன்னூற்சூத்திரங்களுள் "இணைந்தியல்காலை' என்று தொடங்கும் சூத்திரம் இவ்வியவகாரத்திற்குப்

பொருந்தும். அச்சூத்திரத்தின் கடையில் நிற்கும் 'பிற' என்ற மிகையால், வடமொழியில் இரண்டெழுத்திணைந்தோரெழுத்தைப்போல நடக்கும்போது, அது தமிழில் வருங்கால் பின்னிற்கும் யரலக்கு இகரமும், மவக்கு உகரமும், நகரக்கு அகரமும், முன்னின்ற ரகரத்திற்கு உகரமும் யாண்டும் வரக்கடவனவென்றேற்படாது வேறு விதங்களிலுந்திரிந்து வருதல் இலக்கணமுறையேயாமென்பது விளங்குகின்றது. சக்ரம் என்ற வடமொழிப்பதம் தமிழில் சக்கரம் என்று வழங்கிவருதல் இங்கு கவனிக்கத்தக்கது. உதாரணம்:—

"சக்கரநெறிநில்" ஔவை

"சக்கரச் செல்வம் பெறினும் விழுமியோர், செக்கானுஞ் சொல்லார் மிகுதிச்சொல்"—நாலடியார்

"சக்கரக்கை மன்னுயிர் முதல்வன்,"—மணிமேகலை.

"சக்கரக்கையன் தடங்கண்ணால் மலரவிழித்து"—பெரியாழ்வார்.

"சக்கரத்தண்ணலேயென்று:"—நம்மாழ்வார்

"சக்கர மாற் கீந்தானும்:"—ஞானசம்பந்தர்

"சக்கரந்தானவனுடலிற்றுக்கது:—கம்பராமாயணம்.

சூடாமணிநிகண்டும் சக்கரமென்றே கூறுகின்றது. 'சக்கரப்பேர் நேமி பரிதியே வலயமெஃகாய'. "யரலக்கிகரமும்" என்றிருத்தலால் சக்கிரமென்றே யிருக்கவேண்டும். சக்கரம் பிழையேயாமென்று கூறலாமா? சக்கிரமென்றும் பிரயோகமிருத்தல் ஸ்ரீமத். பி. இராமநாதனது 'தமிழ்ப் பேரகராதி'யை நோக்க நன்குவிளங்கும். "சக்கிரிகுயவன் செக்கான் றராபதி நெடுமால்பாம்பு" என்று சூடாமணிநிகண்டிலும் வருகின்றது. சக்கிரம் என்ற பிரயோகத்தைவிட்டு, சக்கரம் என்றெழுதினோர் பிழைபடக் கூறினோர்களென்று சொல்வதிசையாது. இதுபோலவே, வக்ரம் என்றவார்யபதம் வக்கிரமென்று வரவேண்டும் 'வக்கிரங்கொடுமைமீளன் மடங்குதலுடனேவட்டம்' என்பது சூடாமணிநிகண்டு. ஆயினும், ஞானசம்பந்தர் 'வக்கரவாளைபேனமருப்போடவைபூண்டழகார்' என்றார். மேலும், 'நகரக்ககரமும்' என்றதற்கு மாறுபாடாக, 'சங்கிதனையலகத்தி ரத்தினத்தீவத்து' என்று மணிமேகலை வாக்கியத்தில் ரத்நம் இரத்தினமாக மாறியது. இதுவும் வழுவாகுமா? இவைபோன்ற பிரயோகங்கள் பிழையாகமாட்டாவாயின், குத்ரம் குத்தரமாதல் ஏன் தப்பாகவேண்டும்?

குத்தரமாகுமானால், தகரம் சகரமாகத் திரிந்து குச்சரமாதல் மரபேயாம். நிற்க, கூர்ஜா குச்சரவாயிற்றென்று சொல்லுமிடத்தும், 'மிசை வரும் ரவ்வழியுவ்வும்' என்ற விதிக்கு விபரீதமாகத் திரிந்துவந்த தென்றே கூறவேண்டும்.

பின்னர், கூர்ஜரர் சிறந்த சிற்பியரென்றும், அவர் நூதனவிதப் பணியேற்படுத்தினரென்றும், அவர், தென்சார்கடந்தேகினரென்றும் நானறிந்தமட்டிலும் சரித்திர நூல்களில் காணவில்லை. ஆனால் ஸ்ரீமத் சக்கரையர் Encyclopædia Britanica வில் Indian Architecture என்ற வியாசத்தால் கூர்ஜரதேசம் சிற்பத்தில் பெயர்பெற்றிருப்பதை அறியலாமென்கிறார். நான் அப்புத்தகத்தில் அந்தப்பாகத்தைக் கவனமாய் வாசித்துப்பார்த்தேன் (11th Edition , Vol. 14 p. 431). கூர்ஜரதேசம் சிற்பத்திற் சிறந்ததென்று அங்கு சொல்லியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. 12-ம் நூற்றாண்டிற்குமுன் குஜராத்தில் பல சிறந்த கோயில்கள் இருந்திருக்கவேண்டுமென்றும், ஆனாலவைகளில் முக்கியமானவை மகமதியரா லழிக்கப்பட்டனவென்றும், மதுரையில் இக்காலத்தில் ஜீர்ணமடைந்துநிற்கும் சூரியன்கோவில் அது பணிந்தமைக்கப்பெற்ற 11-ம் நூற்றாண்டினாரம்பகாலத்தில் விளங்கின சிறந்த சிற்பப்பணிக்குச் சான்றாகுமென்றும் அங்கு சொல்லியிருக்கிறது. 10 முதல் 12-ம் நூற்றாண்டுகளில் குஜராத்தில் பல சிறந்தகோயில்களிருந்தனவென்றே வைத்துக்கொள்வோம். அந்நாட்டில் நூதனவிதப் பணியொன்றிருந்ததாக இதனாலேற்படாது. சிற்பத்தில் திராவிடரீதி, சளுக்கியரீதி, சீனரீதி, காச்மீரரீதி என்றிருப்பனபோல கூர்ஜரரீதியொன்றிருந்ததாகக் காணப்படவில்லை. ஒருவேளை இருந்ததாகக் கருதினாலும், எக்காலத்தி லதுதோன்றியது? 10 அல்லது 11-ம் நூற்றாண்டுக்குமுன் பலநூற்றாண்டுகாலமாக விளங்கிவந்ததென்றுசொல்ல ஆதாரவொன்றுங் காணோம். அன்றியும் பழைய கூர்ஜரதேசம் இக்காலத்து குஜராத்தென்று வழங்கும் பிரதேசமன்று.

பௌத்தர்களின் கற்பாறையிற் குடைந்த குடிகைகள் கி. மு. 2-ம் நூற்றாண்டுமுதல் இருந்துவருவனவாகத் தெரிகிறது. கி. மு. 3-ம் நூற்றாண்டுமுதல் தென்னிந்தியாவில் வியாபிக்க ஆரம்பித்தது. இக்காரணங்களால் 'குச்சரக்குடிகைக்கு, கற்பாறையிற்குடைந்த சிற்றில்' என்று பொருள்கொள்வது இலக்கணத்திற்கும் சரித்திரத்திற்கும் பொருந்துமென்று நினைக்கிறேன்.

கே. ஜி. சேஷையர்.

பொருணூற்சிறப்பு—II.

(௧௨0—ம் பக்கத்தொடர்ச்சி)

அன்பினைந்திணையுரை.

இறையனாருரைத்த இந்நூலுக்கு இரண்டு உரைகள் உள்ளன. ஒன்று கணக்காயனார் மகனார் நக்கீரனாருரைத்த புறக்கருத்துரை மற்றொன்று குமாரநாயகனுரைத்த அகக்கருத்துரை. நக்கீரனாருரையைக் கற்றுணர்ந்தோர் மண்ணகத்துப் புலவராற் போற்றப்படுவாரெனின், குமாரநாயகனுரையின் உண்மையையுணர்ந்தோர் மண்ணகத்துப்புலவரும் வானகத்துப்புலவரும் போற்றத்தேவரினும் மிக்கோராயந்தமிழின்பத் தமிழில்வீட்டைப்பெறுவாரென்பது கூறாமலேயமைகின்றது. மேலாகியவீடுபேறே அகப்பொருணூலுக்குப்பயனாக அமைந்தது. அஃதன்றி வாளா ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையே நிகழ்ந்த அன்பின் பெருக்கத்தைக்கூறுவதற்கு அண்டராலும் வேதங்களாலும் அளவிடற்கரிய பரம்பொருளாகிய எம்மிறைவன் ஒருநூல் செய்தளித்தானென்பது ஒருவாற்றானும் பொருந்தாததாகும். தமிழ்மொழியறிஞர்பலர் நக்கீரனாருரைத்த புறக்கருத்துரையில் ஈடுபட்டு மறுமைப்பயனையிழக்குந்தகையராயினர். இது எற்றினானாயிற்றென்றால், குமாரநாயகனுரைத்த குறிப்புரையின்திறத்தை யுணராமையினான் ஆயிற்று. இவ்வுண்மையுரையின்றன்மையிதுவெனவும், இதனைக்கற்பதற்கு அதிகாரியாவார் இவர் எனவும் எமது சிற்றறிவுக்கு எட்டிய அளவு எடுத்துக் காட்டுதற்கெண்ணினார். முதற்கண் உரைவெளியிடப்பட்ட அவைக் களத்தினியல்பைக் கூறி அப்பாற்செல்வாம்.

நான்மாடக்கூடலாகிய மதுரைத்திருநகரியிலே, சரஸ்வதிதேவியின் அம்சமாகிய நாற்பத்தொன்பதின்மர் தமிழ்ப்புலவர், கன்மாப்பலகை யேறியிருந்து தமிழாராய்ச்சி செய்துகொண்டிருந்தகாலத்திலொருநாள், அழகே யோருருவெடுத்தாலனைய ஐந்துவயதுப் பாலகனொருவன், புலவரவைக்களத்து வந்து நின்றான். வெள்ளைவஸ்திரந்தரித்து, வெண்ணிற மலர்மாலைசூடிய மாசற்றதோற்றமும், பால்மணமாறாச் சிவந்த வாயும், அன்றலர்ந்த தாமரைபோன்றதிருமுகமும் குறுநகையும் விளங்க

நின்ற அச் செல்வச்சிறுவனைக் கண்டமாத்திரத்தே, புலவர் அனைவரும் இருக்கைவிட்டெழுந்து சிரத்திற்குவித்த கரத்தினராகிப் பலவாறுய மங்கல நன்மொழிகளால் வாழ்த்துரைகூறி அவ்விளஞ்சிறுவனை ஆசனத்திருத்தித் தாங்கீழிருந்து அவனது திருமுகமண்டலத்தின் பொலிவைப் பார்த்தவண்ணமாக விருந்தனர்.

கபிலர் என்னும் பெரும்புலவர் அச் சிறுவனைப்பார்த்து, "உப்பூரி குடிகிழார் இழைத்த அருந்தவத்தின் பெரும்பேறே! சிறியேமாகிய யாங்கள் பொருளிலக்கணம் கிடைக்கப்பெறாமையாற்கவலுற்றேமாக ஆலவாயிலவிர்சடைக்கடவுள் எம்முறுதுயர்க்கிரங்கி, அறுபது சூத்திரங்களாலாய ஒருநூலையருளிச்செய்தனன்; அந்நூற்குப் பொருள்வரையறை செய்து உண்மையுணர்த்தவல்ல ஒரு காருணிகனைத் தருமாறு அக் கடவுளையே வேண்டிநின்றேம், இளமைச்செவ்விவாய்ந்த தேவரீரைப்பெற்றேம்; பொருள்வரையறுத்து உண்மை யுணர்த்தியருளவேண்டு"மென்று இரந்து வேண்டினர்". உருத்திரசர்மன் என்னும் அக்குழவிப்பருவத்து அறிஞன் குளிர்ச்சிபொருந்திய தனது பசியகண்ணினாற் கபிலரைப் பார்த்துவிட்டு ஒன்றும் பேசாதிருந்தனன். புலவருட்சிலர் தாந்தாங் கொண்ட உரையினைவிரித்துச் சொல்லிமுடித்தபின்னர், கணக்காயனார் மகனார் நக்கீரனார் எழுந்து தாங்கண்ட உரையினை எடுத்துமொழிந்தார். அவ்வுரையைக் கேட்டமையினாலோ பிறிதெக்காரணத்தினாலோ சிறுவன் "பதந்தோறுங்" கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்ப்பப் புலவரனைவரும் ஆர்ப்பரித்து, மெய்யுரை பெற்றாம்" இந்நூற்கென்றார். அன்றுமுதல் இறையனாரகப்பொருள் என்னும் அருநூலுக்கு நக்கீரனாருரையே உரையாகவழங்கிவருகின்றது.. நூல் அருநூல்; ஆதலினாலே; அதற்கு நக்கீரனாருரைத்த மொழிவயிற்கிடந்த பொருளுரையைவிட, மொழித்திறத்தா லுரைக்கவொண்ணாத ஒரு அருளுரையும் இருத்தல்வேண்டுமென ஆராய்தல் ஒருதலை. என்னை? அருமறைமொழியுரைத்தமுடிபும் பொருணூன்முடிபும் ஒன்றேயாதலினாலும், ஆரணநூலும் அன்பினைந்திணையுங் காரணங்கடந்த கடவுள்வாக்காதலினாலும் ஐந்திணையுரைக்கும் அன்பின்றிறம் உள்ளத்துணர்வாலனுபவிப்பதேயன்றி இன்னவாறிருந்ததெனப் பிறர்க்குச் சொல்லுந்தரத்ததன்றாகலானும், நக்கீரனாருரைத்த உரை சொற்பொருளாகவிருக்குமியல்பினதேயன்றி அநுபவப்

பொருளாகாதென்பது அனைவர்க்குமொப்பமுடிந்த முடிபேயாம். அன்பினைந்திணைக்கு இலக்கியமாய் நின்ற ஐந்திணைக் கோவையினது உண்மைப்பொருளே அன்பினைந்திணைக்குமுண்மைப்பொருளாதல்வேண்டுமெனத் துணிந்துகோடல்மாபேயாம்.

பிற்றைநாளில், மணிவாசகப்பெருமான் ஐந்திணைக்கோவையை முற்றுவிக்க, அதனைத் திருச்சிற்றம்பலமுடையார் தமது அருமைத் திருக்கரத்தினால் எழுதித்தர, அங்ஙனம் எழுந்தநூலைப் பஞ்சாக்கரத் திருப்படியிற்கண்ட பெரியோர் வாதவூரடிகளைநோக்கி "ஐய! இந்நூற்குப் பொருள் கூறியருள்கவென வினவினர். அங்ஙனம் வினவினார்க்கு, அடிகள் மௌனமாக நின்று, தம்மொருகரத்துச் சுட்டுவிரலினால் மணிமன்றுணடிக்கும் இறைவனைச்சுட்டிக்காட்டிப் பரவெளியோடொருமைப் பட்டனரெனப் புராணங் கூறுகின்றது. இங்ஙனம் ஐந்திணைக்குப் பொருள்கூறிய ஆற்றினை நோக்கும்போது பெரியதோர் ஞானமுடிபு புலப்படுகின்றது. சொல்லினாற்சொல்லும் உண்மையுமுளது; சொல்லாமற் சொல்லும் உண்மையுமுளது. கல்லாலின்புடையமர்ந்து எம்மிறைவன் நால்வர் முனிவருக்கு மேலாகிய உண்மைப்பொருளினைச் சொல்லாமற் சொல்லினான். மணிமன்றுண் முன்னின்ற மணிவாசகஅடிகள் தமது அருணூற்பொருளினைச் சொல்லாமற் சொல்லியருளினார். இப் பரிசே ஐந்துவயது மூங்கைப்பிள்ளையின் உருவொடுதோற்றிய குமாரநாயகனாகிய உருத்திரசருமனும் இறைவனளித்த அருணூலின்பொருளைச் சொல்லாமற் சொல்லியருளினார்

அன்பின்வயத்தினீடுபட்டுக் கண்ணீருங் கம்பலையுமாகித் தம்மை மறந்து பரவசராகி நின்ற உருத்திரசருமனார் குறிப்பினாலுணர்த்த உண்மையை இலக்கணநூலில் ஈடுபட்டுநின்றமுதுதமிழ்ப்புலவர் பொருட் படுத்தினாரல்லர். நக்கீரனார் உரைவிரித்த தருணமும் குமாரபசனாகிய உருத்திரசருமர் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்த்த தருணமும் ஒன்றாயிருந்தமையினால் அவைக்களத்திருந்தோர் காகதாலீயநியாயமாக உரையைக்கேட்ட இளையபிள்ளையார் அவ்வுரையிலீடுபட்டுக் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்த்தாரென்ப. இது பொருந்தாது. "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் அருளுரைச் செய்யுள் ஒன்றனுக்குப் பொருள் காணவொண்ணாது தியங்கிய நக்கீரனார் அன்பினைந்திணைக்குப்

பொருள்கண்டாரென்பது அன்பாயினர்க்கு நகைவிளைப்பதொன்றன்றோ? அங்ஙனமாயின் அன்பினைந்திணைக்கு மெய்யுரைகண்டார் யாரோவெனின் முருகமூர்த்தியே மெய்யுரைகண்டாரென்பது. தமிழ்ப் பெருந்தாவனது அவதாரமாகிய உருத்திரசருமர் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர்சிலிர்த்து உரையாடாது பரவசராயிருந்த குறிப்பே அன்பினைந்திணைக்குப் பெரியதோருரையாயிற்று. இக்குறிப்பினுட்பட்டுநின்ற முதுபுகழை உரைக்கவல்லார் யாவர்? "அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று, அதுவும் ஞானத்தினுடையதாகலான் யாம் அதனைத் தீர்க்கற்பாலம்" என அருள்சுரந்தளித்த நூலன்றோ அன்பினைந்திணை. இறைமொழியாகிய இந்நூல் நவின்றுயர்ந்த வீடுபேற்று ஞானத்தையுணர்த்துவது.

"எழுத்துஞ்சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளின்பொருட்டு" ஆதல்போல அறமும் பொருளும் இன்பமும் ஆராய்வது வீடுபேற்றின் பொருட்டு. வீடுபேற்றின்பொருட்டு இறைவனுரைத்த இந்நூலுக்குப் புலவர் அறத்தின்பாலெனப் பொருளின்பாலென இன்பத்தின்பாலெனப் பலவுரைகூறி மயங்குவாராயினர். இதுகண்டு பரிவுற்ற கறைமிடற்றண்ணல் "ஐயாட்டைப்பிராயத்து மூங்கைப்பிள்ளைபால் உரையுணர்ந்து தெளிமின்" எனப்பணித்தருளினன். எம்மண்ணல் தென்முகக் கடவுளாய்க் கல்லாலின்புடையமர்ந்து சொல்லாமற் சொல்லிய உண்மையைக் குமரநாயகனுஞ் சொல்லாமற்சொல்லினன்.

உளத்துக்கொண்ட பெருமிதத்தினால் உண்மையுணராது அலைவுற்ற முதுதமிழ்ப்புலவரை நோக்கி, "பலவாயசொற் பெருக்குங் கல்வியினாற் பரஞானமடையப்பெறீர், உண்மையுணரவேண்டின் நீவிர் ஊமராதல்வேண்டு"மென்னுங்குறிப்பினையுணர்த்துதற்கோ, எம்மிறைவன் "ஊமைப்பிள்ளைபால் உண்மையுணர்மின்," எனப்பணித்தனன்,

"சொல்லாடாலூமைப்போற் சொல்லிறந்து நீயாகி
னல்லாலெனக்குமுத்தியாமோபராபரமே,

பேசாதமோனநிலைபெற்றன்றோநின்னருளாம்.
வாசாமகோசரந்தான்வாய்க்கும்பராபரமே,"

என்றபெரியாருரையின்படி. பொருளுணர்ப் பொருளுணரவேண்டினோர் மௌனமாதல்வேண்டும், அஃதன்றியும் வஞ்சம், பொறாமை, லோபம் மதம் என்னும் அழுக்குப்படியாத ஐயாட்டைப்பிராயத்துப்பாலர் சீர்மையை யாதல்வேண்டும்; "அன்பாற்கரைந்து கண்ணீராறுகண்ட புண்ணிய ரா"தல்வேண்டும் இவையாவும் உருத்திரசருமரிடத்துக்காணப்பட்ட குணங்களாதலின் அவருரைத்த உரையின் பெருமையில் ஒரு சிறிதை யாயினும் யாமுணர்ந்து கொள்ள விரும்புவோமாயின்யாமும் அச்சீர்மை யாதல்வேண்டும். இறைவனுடைய பொருளின் இரகசியத்தையார் தாமறிய வல்லார்? முதுதமிழ்ப்புலவர் நாற்பத்தொன்பதின்மராலறிதற் கரியவுண்மை ஐயாட்டைப்பிராயத்து மூங்கைப்பிள்ளையால் உணர்தற் கெளியதாயிற்று. வாரீர், தமிழ்ப்புலவீர், கரிவலைக்கொண்டு கடலாழங்காணவல்லிரோ? அருண்ஞானவொளியின் முன்னர் நும்மறிவு ஆதவன்முன் மின்மினியாகுமன்றோ? அன்பின்மேனதாகிய இவ்வரு ணூலுக்குப் பொருள்காணவிழைவீரேல் நுமது நூற்கல்வியனைத்தினை யும் தென்றிசைக்கடலினுள் வீசியெறிந்துவிட்டு, அன்பின் வயத்தராய் உளமுருகிக் கண்ணீருங்கம்பலையுமாய் உரையொழிந்து நின்மின்; அந்நிலையில் அன்பின்பெருக்கத்தை யுணர்ந்தநுபவிப்பதற்குரிமை பூணுவீர்; இதுவேவழி" என்னுங் குறிப்பை வெளிப்படுத்து தற்காகவோ தமிழ்ப் பெருங்குரவனாகிய குமரநாயகன் ஐயாட்டைப் பிராயத்து மூங்கைப் பிள்ளையாய்க் கண்ணீர்வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்த்து நின்றனன்.

ஸ்ரீராமகிருஷ்ணமடம்,
திருமயிலை, சென்னை.

பிரபோதசைதந்யர்,

ஸ்ரீ

சிலப்பதிகாரவாராய்ச்சி.

இந்நூல் சிலம்புகாரணமான நிகழ்ச்சியைக் கூறும் கூற்றிற்கு நிலைக்களமாயிருத்தலின் சிலப்பதிகாரமென்னும் பெயர்த்து. அல்லதூஉம் சிலம்பின் துணையால் நடைபெறுகின்ற கதையைக்கூறுதலின் அப்பெயர்த்தாயிற்றெனினும் இழுக்காது.

சிலப்பென்பது திரிபுபற்றிய செய்யுட்சொல்லாக ஈண்டு வலிந்து நின்றது. இலக்கணநெறியானே மெய்த்தொடர்மொழிகளைப் புணர்க்குமிடத்து வன்றொடராகத் திரித்துவழங்குதல் மரபாயினும் சிலப்பென்னுஞ்சொல் பாம்பிற்பாரி என்பதுபோலச் சிலம்படி, சிலப்பொலி, சிலம்பாறென யாண்டும் திரிபின்றியே வழக்குப்பெறுதலின் சிலப்பதிகாரமென்னுமித்தொடர் செய்யுட்சொல்லால்வழங்கியதென்றே கொள்ளத்தகும்.

அற்றேல், சிலம்பதிகாரமென்னுது சிலப்பதிகாரமெனச் செய்யுட்சொல்லாற்கூறிய தெற்றிற்கெனிற் கூறுவன். தமிழ்மொழிக்கண்ணுள்ள சொற்கள் செய்யுட்சொல்லென்றும் வழக்குச்சொல்லென்றும் இருதிறப்படுவன. அவற்றுட் செய்யுட்சொற்கள் அரிதுணர் பொருளன. வழக்குச்சொற்கள் எல்லோராலும் எளிதிற் பொருளறியத்தருவன. இவற்றைப் புலவர் ஏற்றபெற்றி எடுத்தாளுவர். மிகத் திரிசொற்களின்றி, மிக எளிதுணர் வழ்க்குச்சொற்களுமின்றி நூலியற்றுவதே புலமையின்பாற்படும். விளங்குதலரியனவற்றை விளக்கியும், மிகத்தெளிவுள்ளனவற்றைச் சிறிது திரித்தும் வழங்குவது கற்போர்க்கு அறிவுவளரச்செய்து பயனுடையதாகின்றது. அன்றியும், திரிசொற்களே பொருளுணர்ச்சிபெற்றுழிச் சிறிது மகிழ்ச்சியை விளைவிப்பனவுமாகும். ஆதலின் ஆன்றோர்பலரும் அவற்றையே சிறந்தன

வாகக்கருதுப. ஆசிரியர் நச்சினார்க்கினியரும் சிந்தாமணியுள் "தென்றிசையயனைமுன்னி" என்புழி இக்கருத்தோடு உரைகூறினார். அது பற்றியே இந்நூலாசிரியரும் சிலப்பதிகாரமெனச் செய்யுட்சொல்லாற் பெயரிட்டாரென்க. அன்றியும் சிறிதேனும் புலமையுடையாரே இந்நூல்பயிலுதற்குரிய ரென்பதற்கும், இதுகேட்டார் மேலும் புலமை எய்துவரென்பதற்கும் அப்பெயர்தானே அறிகுறியாயும் நிற்றல் உய்த்துணரற்பாலது.

அற்றேல் அஃதாக; காப்பியத்தலைவர் பெயரோடு தொடர்புபடுத்து நூற்பெயர்கூறுதலே முறைமையாகலானும், இந்நூன் முழுதும் கோவலன்கண்ணகிகளின் கதையையே நிகழ்த்துதல் காண்டுமாகலானும், இதனிடைச் சிலம்பினியைபு மிகச்சிறுபான்மையேயாகலானும்,

"மத்தகமணியொடுவயிரங்கட்டிய
பத்திச்சேவணப்பசும்பொற்குடைச்சூற்
சித்திரச்சிலம்பு—"

என இப்பெற்றியே ஓரோவிடத்தன்றிப் பலவிடங்களினும் அதன்றன்மை பாராட்டப்பெறுதலில்லையாமாகலானும், சிலப்பதிகாரமென்னும் பெயர் இதற்கேற்குமாறென்னையெனின் அது நன்கு விளக்கிற்றும்.

இக்காப்பியத்தின் உள்ளுறை மூவகைப் பொருள்களாகப் பகுக்கப்படுகின்றது. அவை மூன்றும் சிலம்புகாரணமாகப் பிறந்தனவென்ப. என்னை?—

"அரைசியல்பிழைத்தோர்க்கறங்கூற்றாவதூஉம்
உரைசால்பத்தினிக்குயர்ந்தோரேத்தலும்
ஊழ்வினையுருத்துவந்தூட்டுமென்பதூஉம்
சூழ்வினைச்சிலம்புகாரணமாக
நாட்டுதும்யாமோர்பாட்டுடைச்செய்யுள்"

என்றாசிரியரருளி னென்பது.

அஃதாக; அவை மூன்றற்கும் தனித்தனியே சிலம்பு காரணமாயிற்றென்றலென்னையெனிற் கூறுவன், கண்ணகியின் காலணிகளுள்

ஒன்றனைக் கோவலன் கைக்கொண்டு மாறிவருவனென மதுரைத்தெருவழியே போந்தனன். போந்தவனைக் கள்வனென்று பொற்கொல்லனரசற்குணர்த்தினனாக, அவனு மாராய்வின்றிக் கோவலனைக் கொன்றுவருமாறு ஏவலாளரை விடுத்தான். இங்ஙன மரசன் பிழைத்தது சிலம்பு காரணமாகவேயாயிற்று.

அன்றியும் கோவலன் கொலைக்களப்பட்டவாறே சீறிய கற்புடையளாய அவன்மனைவி அரசன்பால் வழக்குரைப்பதாயினாள். அஞ்ஞான்று சிலம்பே அரசன்பிழையை மெய்ப்பித்து அவனுந் தேவியும் உயிர்துறப்பக் காரணமாயமைந்தது. ஆதலால் அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றாவது சிலம்பின் செய்தியானே விளங்கிற்றென்க.

உரைசால்பத்தினிக் குயர்ந்தோரேத்தலும் அச்சிலம்பின் கதையானே புலப்படுகின்றது. கண்ணகியின் அணிகலன்கள் பிறவெல்லாவற்றுள்ளும்வைத்து இச்சிலம்பிடை ஓரேற்றமுண்டு. கோவலன் நாடகக்கணிகையோ டாடியகொள்கையின் அரும்பொருள் கெடுத்தஞான்றே பிறகலன்களெல்லாம் அழிதலுற்றன. அவற்றுள் இஃதொன்றுமே எஞ்சிநின்று பிற்பட்ட கதைப்போக்கிற் கின்றியமையாவுறுப்பாயுதவி, தன்னையணியும் பேறு தனக்களித்த தலைவியின் கற்புமிகவிளங்குமாறு செய்து கதையை நிறைவேற்றுகின்றது.

அதுவேயுமன்றி, அச்சிலம்பே கண்ணகிகற்பின் எல்லைநிலந் தெரித்துக் காட்டியதாயிற்று. கோவலன் மாதவிமயக்கிற்பட்டஞான்றுதொட்டுக் கற்புடையணங்காகிய கண்ணகியை அறவே மறந்தொழிந்தான். அன்றியும் அவன் நாடகக்கணிகையின்பொருட்டாகத் தன் மனையாளின் அணிகலன்களு மகப்படப் பொருள்முழுதுந்தோற்று வறியனாயினன். அவ்வாறாயினபின்றை அவன் கண்ணகியை எய்தித் தன்வருத்தங்கூறி நாணுற்று நின்றான். அப்பொழுது தன் அணிகளுள் எஞ்சிநின்றதாகிய சிலம்பினையே கண்ணகி அணியாளாயிருந்தாள். கற்புடைமகளிர் தம் கணவர்க்குப் பயனுறுவதாயினன்றே தாம் கோலங் கொள்ளுவது? அன்னளாய கோவலன்மனைவி தன் தலைவன் மாதவிக் களிக்கும் பொருட்டுறைபாட்டாற் றன்னையடைந்தானாகக் கருதி அவன் துன்பநீங்கப் புன்முறுவலோடும் 'இன்னும் சிலம்பு ஓரிணையுள; அவற்

றைக் கொண்மின்' என்றாள். "கண்டா ரிகழ்வனவே காதலன்றான் செய்திடினுங், கொண்டானை யல்லாலறியாக் குலமக"ளாகிய கண்ணகி பிற மகளிர் புலத்தற்குற்றதொரு நிலையினும் அது செய்யாது, தன் கொழுநன் எவ்வாற்றானு மின்புறுவதையே தனக்குறுதியாக மேற்கொண்ட கடைப்பிடியுடையளென்பதை உலகறிய விளக்கிக்காட்டி, அத்தன்மை பற்றிப் பின் தெய்வமும் அவளேவல்கேட்குமாறு செய்தது அச்சிலம்பின காரியமேயென்பது நன்குபெறப்பட்டது.

நிற்க: கோவலனையும் பாண்டியனையும் ஊழ்வினையுருத்து வந்தூட்டியதற்கும் சிலம்பேபற்றுக்கோடாக அமைந்தது. கண்ணகிபால் வறியனாயடைந்த கோவலனுக்கு அவளுந் தன காற்சிலம்பை யளித்தாளாக அவன், 'சேயிழாய்! கேட்பாயாக; யான் மாடமதுரையகத்துச்சென்று இச் சிலம்பை வாணிகமுதலாகக்கொண்டு, சென்றகலனோ டுலந்தபொருளீட்டுதற் குற்றேன்; நீயும் என்னோடெழுக, என றவட்குக்கூறி வினைகடைக்கூட்ட வியங்கொண்டான்.

அவ்வாறு வினையினதுவலிக்கொண்டு மதுரைபுக்க கோவலன் றன்கையிற் சிலம்புகண்டவாறே அரசனும்பிறரு மவனைக் கள்வனென் றயிர்த்துக் கொலைபுரிவித்தனர். ஆதலாற் கோவலனையூட்டிய வூழ்வினை சிலம்பையே வாயிலாகக்கொண்டமை தெளியப்பட்டது.

அரசனுக்குரியவினையும் அச்சிலம்பேவழியாக அவனைப்பற்றியது. அவன் கண்ணகிபால் வழக்கிழந்தவனாகவே உயிர்தோற்றதற்கு அச்சிலம்பே உடலாயிற்றென்பது வெளிப்படையாகலின் அஃதீண்டு விரித்துரைக்கவேண்டுவதின்று.

இங்ஙனம் இருவேறு வினைவிளைவுகளையும் இடைநின்று மூட்டுவிக்கின்ற அச் சிலம்பின் தன்மையை என்னென்று வியப்பது? அன்றியுங் கதையிடைப் பலசிறப்பட்ட தொழினிகழ்ச்சிகளையும் தானே கருவியாக நின்று இக்காப்பியத்தை நடத்துவிக்கின்ற அதன் சிறப்பெல்லாம் முற்றச் சொல்லிமுடியாததாகின்றது. அதுபற்றியன்றே ஆசிரியரும் "போற்றருஞ்சிலம்பு" என அதன் தன்மையைப் போற்றியுரைப்பாராயினதூஉமென்க.

எனவே, ஒருதலையா ஆய்ந்துநோக்குவார்க்குக் கோவலன் கண்ணகிகளின் கதை இச் சிலம்பையொழியச் செல்லாததாயிற்றென்றலும் இழுக்காகாது. ஆதலின் ஆசிரியர் இந்நூற்குச் சிலப்பதிகாரமென்னும் பெயர் எய்தவைத்தது பொருத்தமுடையதே எனக.

அஃதாக; சிலம்பின் சிறப்பினையே ஒருதலையாணாய்தலென்னை? கண்ணகி பெருமையையும் சொல்லிக்காணுமோ? அவளது பெருங்குணங்களையும் அருஞ்செயல்களையும் நினைந்து மகிழாதார் யாவர்? முடிகெழுவேந்தர் முதலாயினூரற் கோயிலெடுத்துக் கொண்டாடுந் தொழுந்தகைமையுடையா ளவளன்றே? அன்றியும் நூன்முழுதும் அவள் சீர்மையே வெள்ளிடைவிலங்கலாய் விளங்கிக்கிடக்குமன்றே? ஆதலின் அத்தகு திருவினையுடையதலைவியின் பெயரானே காப்பியத்தைப் பெயரிடுதலும் வேண்டற்பாலதாகலானும், உடனொத்த ஆசிரியர் கூலவாணிகன்சாத்தனூர் தம்நூலுக்கு மணிமேகலைதுறவு எனப் பெயர்பொறித்திட்டாராகலானும், இந்நூலினையும் கண்ணகிகதையென்றே கூறுதலின் உற்ற இழுக்கென்னை? எனின், அற்றன்று; இவ்வாசிரியர் சிலப்பதிகாரமென்னும் பெயரானே வேறொரு சிறந்தபயனைக் கருதினூரென்க.

அப்பயன்றான் யாதோவெனிற் கூறுவன். சிலப்பதிகாரமென்று பெயரிட்டமையானே ஆசிரியர் கண்ணகிபெருமைக்கொரு குறைபாடியற்றினூரென்றல் அமையாது. அவர் சிலம்பைப்பாராட்டிப்புரைத்ததை மனத்துட்கொண்டவாறே அதனைத்தன் உடைமையாகப்பெற்ற தலைவியின் மேம்பாடுகள்யாவும் நினைவின்கண் உடனிகழ்தல் யார்க்குமுண்டாகாதிராது. கண்ணகி பெருமைகளெல்லாம் பல்லாற்றானும் பாராட்டற்பாலனவாயினும் அவை விளக்க முறுதற்குக் காரணமாயமைந்த சிலம்பின்றன்மையும் மறக்கற்பாலதன்றே? ஆதலாற் சிலம்பின் பெருமையைக் குறித்து வழங்கிய அப்பெயரால் ஆசிரியர் கண்ணகியின் ஏற்றமும் புலப்படுத்தியதாகவே கொள்ளப்படும்.

அஃதன்றியும் நூலினுள் மிகவெளிப்பட்டுநிற்கும் கதைத்தலைவியின்பெருமையையே நூற்பெயர்முகத்தும் பெயர்த்தும் விளக்கியதாற் போந்தபயனென்னை? ஆசிரியர் எதனிடைச் சிறந்ததன்மைகள் உள்ளனவாகக்கொண்டனரோ அதன்தன்மை நூலுள்ளே மிகவெளிப்படுதலின்றி

மறைந்து கிடப்பதாயிற்று. ஆதலின் அதனைச் சிறிது வெளிப்படுத்தல் அவர் பெரிதும் வேண்டிற்றொன்றாகலின் அது தோன்றச் சிலப்பதிகார மென்று பெயரினை அமைத்துச்செல்வாராயினர். பின்னர் அது தானும் தமதுட்கோளை யேற்றவாறுணர்த்துதற்கு ஆற்றல்பற்றாததென நினைந்தே, அவர் பதிகத்துக்கண், நூலின் மூவகையுள்ளுறைகட்கும் சிலம்புகாரணமாமாறுகாட்டித் தம் நூற்பெயர்க்காரணத்தை வற்புறுத் தினாருமென்க.

இன்னும், அப்பெயர்தானே வேறொருபயனையும் விளைவிக்கின்றது. சிலப்பதிகாரமென்றதனையே நூலுக்குப்பெயர் ஏற்குமாறென்னையெனை ஆராய்ச்சிநிகழும். நிகழவே, அதன்கட் பொதிந்துகிடக்கும் பொருள் நயங்களையெல்லாம் அறிந்துந்தெளிந்து பெரிதும் மாணாக்கர் மனமகிழ் வெய்தும். அங்ஙன மாராய்ச்சியா னறிவுபெருக்கலும் மகிழ்ச்சிவிளைத் தலும் எல்லா நூற்கும் ஒப்ப முடிந்ததாகலானும், 'கண்ணகிகதை' என்ற பெயர் மிகவெளிப்படையாய் அச் சிறப்பியல்பில்லா தொழிதலானும் சிலப்பதிகாரமென்னும் பெயரையே வேண்டினர் இவ்வாசிரியரென்க. அன்றியும் அடிகள் இந்நூலைத் தமிழ்ப்புலவர்க்கு விருந்தாகப்படைக் கின்றாராகலின் அதன்பெயர் புதியதொருமுறையைப் பின்பற்றியதா யிற்று. மற்று மணிமேகலையாசிரியர் தம்நூற்குப் பிறவாறு பெயர்தந் தாரேயெனின், அவர் அதனினுஞ்சிறந்தது வேறொன்று காணாமை யின் அங்ஙனஞ் செய்தாரென்பது. எனவே, இதுகாறுங் கூறிய தனானே இந்நூற்குக் கண்ணகிகதையென்று பெயர்கூறாது சிலப்பதிகார மென்றதே மிகுதியும் வாய்ப்புடைத்தாயிற்றென்பது முடிந்தது.

(தொடரும்.)

T. N. அப்பனையங்கார்,
இராமேசுவரம் தேவஸ்தான வித்தியாசாலை; மதுரை.

அறியவேண்டிய சிலபழங்கதைகள்.

தமிழ் நாட்டிலே அநேக பழஞ்சரிதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அவை கேட்பாரும் சொல்வாருமின்றி மறைந்து வருகின்றன. சில உண்மையுடையனவாகலாம். சிலகட்டுக்கதைகளாகவுமிருக்கலாம், எது எதுவென உண்மையுடையது என்று அறியவேண்டியது கற்றறிந்தார் கடன். இங்கேயான் கேட்ட சிலசரிதங்களைக் கூறுகிறேன்.

(க) கழுக்காணி.

"ஊத்தைதிரண்டகழுக்காணி" என்றும், "ஆள்வாரற்றகுந்தாணி அடக்குவாரற்ற கழுக்காணி" என்றும் இரண்டு பழமொழிகள் வழங்குகின்றன. இப்பழமொழிகளால் இது சரிவரவேலைசெய்யாத பெண்ணொருத்தியைக்குறிக்கு மொருவசைமொழி என்றுகிறது. அன்றி பிணம் முதலிய அழுகிப்போகும் புலாலுற்றமுடைப்பிராணிகளைத் தின்னக்கொத்தும் கழுகுக்கும் அசைடாதவளென்னும் பொருள் பயக்குமோவென்று நிச்சயிப்பது பெரியோர் கடனும்.

இப்படிப்பட்ட கழுக்காணி என்பவளொருத்தி மாயூரத்திற்கு நேர் வடக்கு ஒருமைல் தூரத்தில்உள்ள மடத்தில் வசித்துவந்தனள். அவள் மிக்க சிவநேசமுடையாள். அன்பின் மிகுதியால் தான்சமைத்துவைத்த கறிமுதலிய பண்டங்களைத் தன்னைத்தேடிவந்த சிவநேசர்களுண்ணாதவரை அவர்களை எவ்வுபாயத்தாலாவது உண்ணும்படி செய்தல் அவ்வம்மையார் தொழில். இஃதிங்ஙனமாக; மாமாத்திரர் தங்குலம் பெருக வந்துள்ளார் பலர்புகழுந்திருநாமம் பரஞ்சோதியாரெனப்பட்ட சிறுத்தொண்டரென்பார் தாம்தமது மனைவியே அறிந்து சமைத்துச் சிவபெருமானுக்கிட்டோமென்று செருக்கடைய, சிவபிரான் அவரது யான் எனுஞ்செருக்கடக்கக்கருதி அவரை ஒளித்து வைத்துத்தாமொரு சிவ

நேசர் உருவந்தாங்கிப்போந்து அம்மையாரைக்காண அவள் கூசாதுவிருந்திட அக்காலத்துப் பிள்ளையில்லாவீட்டில் தாயுண்ணும் வழக்காறு இல்லையென்றவளவிலே அம்மையார் பிரிந்தெழுந்து நடையிற் சாற்றியிருந்த நடையுலக்கையை எடுத்து உண்ணாவிடில் நையப்புடைப்பதாகக் கூறினாளாம். நீலமார்கண்டத்தெண்டேசனிருந்தாம் எம்பெருமான் மறைந்து ஆனேறுடையானைக் காட்சிதந்தானென்றும் அந்நாட்டொட்டு அத்திருமடம் இருந்தவர் கழுக்காணிமடம் என்று வழங்கவும் அவ்வம்மையார் கோயில் பெற்று வாழவும் மறைந்திருந்த தங்களிற்றுரிமை முறையினாற்சிவனடிமைத் தொழும்புபூண்டசிறுத்தொண்டர் அவரது ஆலயத்துக்குத் தென்கிழக்கிலுள்ள சிவலிங்கத்தில் ஒடுங்கியதாகவும் கூறுகின்றனர். அதற்குச் சான்றாகத் தென்கிழக்கில் கைலாசநாதர் கோயில் என்றொருகோயிலும் அதனுள் சிவலிங்கத்திற்குப் பக்கத்தில் தாடியையுடைய ஒரு உருவத்தை சிறுத்தொண்டரெனவும் காட்டுகின்றனர்.

இவ்வாலயம் மிகவும் பழுதுபட்டும் அதனிலிருந்து கல்வெட்டுக்கள் பேர்க்கப்பட்டும், வெகுகேவலமான ஸ்திதியிலிருக்கிறது தென்புறமுள்ளமேடையில் ஒரேயொருகல்லில் மாத்திரம் ஏற்கனவே கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருந்தனவென்பதைக்காட்டக்கூடிய அடையாளங்களிருக்கின்றன. (தொடரும்)

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

(இஉ௪—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

141. கொல் ஆழி நீத் (து) அங் (கு) ஓர் குனி வயிரச்
சிலை தடம் கை கொண்ட கொண்டல்,
எல் ஆழித் தேர் இரவி இளங் கரத்தால்
அடி வருடி அனந்தல் தீர்ப்ப,
அல் ஆழிக் கரை கண்டான், ஆயிர வாய்
மணி விளக்கம் அழலும் சேக்கைத்
தொல் ஆழித் துயிலாதே துயர் ஆழி
இடைக் கிடந்து துயில்கின் றானே!

இ-ள். (உலகத்தார் துன்பம் நீங்கும்படி இராவணாதி யரக்கரைச் சங்கரிக்கும் பொருட்டுச்) சக்கரத்தை நீக்கிக் கோதண்டத்தைக் கைக் கொண்ட (திருமாலாகிய) இராமபிரான், ஆயிரம் வாய்களிலும் இரத்தின தீபங்கள் ஒளிர்கின்ற (அநந்த) சயனத்திலே திருப்பாற்கடலிலே (இனிதாகத்) தூங்காமல் (விரகவேதனைப்பட்டுத்) துன்பக் கடலிலே தூங்குகின்றவரை (உதய) சூரியன் இளங் கிரணக் கைகளால் அடிவருடித் தூக்கம் நீக்க, இரவாகிய கடலினது கரையைக் கண்டார்.

கொல் — (பகைவரைக்) கொல்லும். ஆழி — சக்கரம். குனித்தல் — வளைத்தல். வயிரச் சிலை — வன்மையான வில். தடம் — அகலம். கொண்டல் — மேகம் (போன்ற இராமன்). எல் — ஒளி. ஆழி — உருள்— சக்கரம். இரவி — சூரியன். கரம் — 1. கை; 2. கிரணம்: சிலேடையாக இருபொருளும் குறித்தது. அனந்தல் — நித்திரை. தீர்ப்ப — நீக்க. அல் — இரவு. ஆழி — கடல். சேக்கை — படுக்கை. தொல் ஆழி — பழமையான (திருப்பாற்) கடல். துயர் ஆழி — துன்பக்கடல்

துன்பம் எட்டிப்பார்க்கக் கூடாத பரமாநந்த தசையிலிருக்கும் புகவான் மனிதர் துன்பத்தை நீக்க மனிதனாகப் பிறந்த இடத்தே சாதாரணமனிதர்போலத் துன்பமுறுதல் பரிதாபகரமான தென்பதனை

உணர்த்தப் பாற்கடலிற் றூங்குவோன் துன்பக்கடலுள்ளே தூங்கு கின்றானென்று நயம்பட வுரைத்தார்.

“உயர்ந்தோர் துயிலாநிற்பின், அவரைத் துயிலுணர்த்தவேண்டு வோர் அடிவருடல் முறைமையென்பது அறநூலின் துணிபாதலால் ‘இரவி இளங் கரத்தா லடிவருடி அனந்தல் தீர்ப்ப’ என்றார். மெல்லென் றிருத்தல் வேண்டுதலின் ‘இளங்கரத்தால்’ என்றுங் கூறினர். ஸ்ரீராம சாமிநாயுடு.

[சூரியோதயத்தில் நித்திரை நீங்கி யெழுந்த இராமபிரான், காலைக் கடன்களை முடித்து, விசுவாமித்திரர் இலக்குமணருடன் சனகராசாது வேள்விச்சாலையை அடைந்தார். சனகர் வேள்வியை நிறைவேற்றிவிட்டுத் தம் அரண்மனையைச் சேர்ந்து அங்கே சபாமண்டபத்திலே தம் பக்கத் திலே இராமலக்குமணரை இருக்கச்செய்து முனிவரோடு வீற்றிருந்தார். அப்போது,]

142. இருந்த குலக் குமரர்தமை இரு கண்ணும்
முகந்(து)அழகு பருக நோக்கி,
அருந் தவனை அடிவணங்கி “ஆரை இவர்?
உரைத்திடுமின் அடிகள்” என்ன,
“விருந்தினர்கள்; நின்னுடைய வேள்வி கா
ணிய வந்தார்; வில்லும் காண்பார்;
பெரும் தகைமைத் தசரதன் தன் புதல்வர்;” என
அவர் தகைமை பேச லுற்றான்.

இ-ள். (சனகர்) விசுவாமித்திரரை அடிதொழுது (தம்பக்கத் திலே) இருந்த இராசகுமாரரை அவர்களுடைய முகத்தின் அழகை அருந்தும்படி (விரும்பியவர்போலப்) பார்த்துச் “சுவாமிகளே! இவர் கள் யார்? (இவர்கள் வரலாற்றைச்) சொல்லுங்கள்” என, (அவர் “இவர் கள் உமது) விருந்தினர்; உமது வேள்வியைப் பார்க்க வந்தார்கள்; (‘இதனை எவர் வளைத்தாரோ, அவர் சீதாதேவியை மணஞ்செய்யப் பெறுவர்’ என்று நீர்வைத்திருக்கும்) வில் (லின் ஆற்ற) லையும் (பார்க்கச் சொன்னால்) பார்க்கத்தக்கவர்கள்; தசரதகுமாரர்;” என்று சொல்லி அவர்களுடைய (குலத்தின்) பெருமையைக் கூறுவாராயினர்.

'குலக்குமரர்' என்பதில் குலம், 'குலமகள்' 'குலமணி' என்பவை களிற்போல உயர்ந்த சாதியைக் குறித்துநின்றது. பருகல்—1. குடித்தல்; 2. விழுங்குதல். ஆரை என்பதில் ஐ அசை (சிந்தாமணி) அடிகள்—தேவரீர். காணிய—காண. இரண்டாம் 'தகைமை'யின் பொருள் 'பெருமை' (உரிச்சொல்நிகண்டு உ.௩௬) 'அடிகள்! இவர் யாரை உரைத்திடுமின்' எனக்கூட்டுக.

'வில்லும் காண்பார்' என்பதனில் வரும் உம்மையிற் குறிப்பாகவுள்ள இனியபொருள் ஊன்றி நோக்கத்தக்கது. இவர்களும் மற்றவர்களைப்போல வேள்வியைக் காணவந்தவர்களாயினும், இவர்கள், அந்த மற்றவர்களைப் போலல்லாமல், வில்லின்வன்மை முழுவதையும் பார்க்க வல்லரென்றகருத்தை அந்த உம்மைகுறிப்பித்து நின்றது. இராமலக்குமணர் அவ்வாறு பார்க்கவல்லவரென்பதை நம்பச்செய்ய, 'மகனறிவு தந்தையறிவு' என்றபடி அவர்கள் (சம்பராசுரனை வென்றது முதலிய) பெருந்தகுதிப்பாடுகளுடைய தசரதரது குமாரரென்று கூறி, அந்த நம்பிக்கையை வலியுறுத்த், அவர்கள் குலத்து முன்னோர் 'செயற்கரிய செய்வார் பெரியோர்' என்பதற்கு உதாரணங்களாக விளங்கினார்கள் என்பதைக்கூறுமுகத்தால் அடுத்த 'குலமுறைகிளத்துபடல'த்துக்குத் தோற்றுவாய் மிகப்பொருத்தமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. 'அவர் குலப்பெருமை அவர் பெருமை' யென்றுணர்த்த 'அவர் குலத்தகைமை பேசலுற்றான்' என்னாது 'அவர் தகைமை பேசலுற்றான்' என்று குலமுறைகூறத் தொடங்கி 'ஈதிவர்குலவரலாறு' எனமுடியாமல் 'ஈதிவன்றன்வரலாறு' எனமுடித்தார் (குலமுறைகி உ௬).

'வில்வல்லான்' என்பது வில்லைவளைத்தலும் நாணேற்றலும் அம்பெய்தலும் செய்யவல்லானென்று பொருள்படுதலைக்கொண்டும், "முனைவன் கண்டது (—செய்தது) முதல் நூலாகும்" என்பதிற்போலக் காணலுக்குச் செய்தலென்னும் பொருளுண்மைபற்றியும் 'வில்லுங் காண்பார்' என்பதற்குச் சீதாதேவி மணப்பொருட்டுள்ள வில்லை வளைத்தல் முதலிய மேற்கூறிய முத்தொழிலும் செய்வாரென்றும் பொருள் கொள்ளலாம்.

குலமுறைகிளத்து படலம்.

இராமரது குல மரபு கூறுவது (முறை—முறைமை—மரபு—பாரம்பரியம். சூடாமணிநிகண்டு).

143. பிணி அரங்க வினை அகலப் பெரும் காலம் தவம் பேணி,
மணி அரங்க நெடு முடியாய், மலர் அயனே வழிபட்ட
பணி அரங்கம் பெரும் பாயற் பாஞ்சுடரை யாம் காண
அணி அரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்.

இ-ள். "ஸ்ரீரங்கத்தில் பாஞ்சோதியாகிய ரங்கநாத சுவாமியைக் கொண்டு வந்(து பிரதிட்டை செய்) தவனை அறியாதவர் (ஒருவருமிலர் எவரேனு முளரேல், அவர்) மூடரே.

பிணி—நோய். அரங்க—சிதைய—கெட. அரங்குதல் தன்வினை; அரக்குதல் பிறவினை: அரக்குதல்—சிதைத்தல் (சூடா நிகண்டு) மணி அரங்கும் நெடும் முடியாய்—இரத்தினங்கள் அழுந்திய (அழுத்தப்பட்ட) பெரிய கிரீடத்தையுடைய சனகாசனே. பணி அரங்கப்பாயற் பாஞ்சுடர்—பணிகளை(—காளிங்கன் ஆதிசேடனென்னும் பாம்புகளை முறையே) அரங்கு (ஆடும் இடம்) பாயல் (—படுக்கை) ஆகவுடைய பாஞ்சோதி. யாம் காண—நாங்கள் தரிசனைசெய்ய. அணி அரங்கம் தந்தான்—அழகுடைய ஸ்ரீரங்க ஸ்தலத்தில் கொண்டுவந்தவன் (ஆகிய இக்ஷ்வாகு என்ற அரசன்) அறியாதார்—1. தெரியாதவர்; 2. மூடர். இப்பாட்டுத் திரிபாக அமைந்துள்ளது காண்க.

'அறியாதார் அறியாதா'ரென ஒருசொல்லையே மடக்கியுரைத்து இக்குவாகு என்ற பிரசித்தனை அரசனைப்பற்றிய அறிவில்லாதவர் அறிவில்லாதவரென நயம்படக்கூறியது பாராட்டற்பாலது.

144. "அரசன் அவன் பின்னோரை என்னுலும் அளப்(பு) அரிதால்.
உரை குறுக நிமிர் கீர்த்தி இவர் குலத்தோன் ஒருவன்காண்,
நரை திரை மூப்(பு) இவை எய்தி இந்திரனும் நந்தாமல்
குரைகடலை நெடு வரைபால் கடைந்(து)அமுதம் கொடுத்தானும்.

இ-ள். "அவனுடைய பின்னோர்களை (எத்தனையரென) எதனாலும் கணக்கிடுதல் இயலாதது. இந்திரன் இறவாமல் (அவனுக்குக்)

கடலை மலைகொண்டு கடைந்து அமுதம் கொடுத்தோன் இவர்குலத் தோன் ஒருவனே.

அரசனவன்—அரசனாகிய அவன்—இப்படலத்து ரு-ம் பாட்டிற் குறித்த ககுத்தன். என்னுனும்—எதனுனும்—எந்த அளவுகருவி யாலும். என்—யாது—எது. என்னுனும் என்பதனில் உள்ள 'என்', "என்னுனும் வேண்டுவ என்றிகழ்வர்" (நாலடி) என்பதனில் உள்ள 'என்' போல்வது. உரை குறுக நிமிர் கீர்த்தி—தன்னை எடுத்துச் சொல்லப்புகுந்தார் சொல்லச்சொல்ல அமையாமல் அவர் சொல் குறுகும் படி மேலும்மேலும் வளாகின்ற கீர்த்தி. இவர்—கீர்த்தியையுடைய இவர். இந்திரனும் என்பதில் உம்மை அசைநிலை (புறநானூறு, உகச உரை) நந்தாமல்—கெடாமல்; இங்கே இறவாமல் என்ற பொருள்குறித்தது. குரைகடல்-ஒலிக்கின்ற கடல். நெடுமலை—பெரியமலை. நெடுமை—பெருமை. (சிந்தாமணி) கொடுத்தானும் என்பதில் உம்மை இறந்தது தழுவியது.

"என்னுனும் அரிது—எனக்கும் அரிதாகும்" என்றும், இதில் உள்ள "உம்மை உயர்வு சிறப்பு" என்றும் உரைஉண்டு. இவ் உரைகாரர் விசுவாமித்திரர் தற்புகழ்ச்சியாக 'என்னுனும்' என்ருரென்று கருதினுர் போலும்.

'நரை திரை மூப்பிவை மாற்றி,என்றும் பாடம். அதற்கு நரைதிரை மூப்பாகிய இவைகளை இந்திரனுக்கு நீக்கி அவன் இறவாமல் அவனுக்கு அமுதங்கொடுத்தவன் எனப் பொருள் கொள்க. மாற்றுதல்—நீக்குதல் (ஐங்குறுநூறு).

'உரை குறுக நிமிர் கீர்த்தி' என்ற சொற்றொடர், சொற் சுருக்க மும் பொருட் பெருக்கமும் தொனிப் பொருத்தமும் வாய்ந்து, நினைக் கும் தோறும் மனத்துக்கின்பம் பயப்பதாயுள்ளது. கம்பர் ஒருதனிப் பாட்டில் "வாணன் புகழ்க்கெல்லை வாழ்த்துவோர் நாவெல்லை" என்றதை இச் சொற்றொடர்க்கு வியாக்கியானமாகக் கொள்ளலாம்.

145. "வில் என்னும் நெடு வரையால் வேக(த்)என்னும் கடல் கலக்கி
எல் என்னும் மணி முறுவல் இந்துமதி எனும் திருவை,
அல் என்னும் திரு நிறத்த அரி என்ன, அயன் என்பான்
மல் என்னும் திரள் புயத்துக்(கு) அணி என்ன வைத்தானே.

இ - ள். (இவர்கள் பாட்டனாகிய) அயனென்ற அரசன், வில்லாகிய மலையினால் அரசாகிய கடலைக் கலக்கி, (மலையாற் கடலைக் கலக்கித்திருமகளை மார்பில் அணிந்த) திருமால்போல, இந்துமதியென்னும் திருமகளைத் தோளில் ஆபரணமாக அணிந்தான்.

எல்-ஒளி. மணிமுறுவல்—1. முத்துப் (போன்ற) பல்; 2. அழகு (ஆன) சிரிப்பு. திருவை—இலக்குமியை. திருநிறத்த—அழகான நிறத்தையுடைய. அரி—திருமால். தோளில் ஆபரணமாக அணிந்தான் என்பது மணஞ்செய்து கொண்டான் என்பதைக் குறிப்பித்தது.

'எல் என்னும்' என்பதிலும் 'மல் என்னும்' என்பதிலும் வரும் 'என்னும்' என்றசொல், தனக்குச் செம்பொருளான 'என்கின்ற' அல்லது 'ஆன' எனப்பொருள்படாமல், அடுத்துநின்ற சொற்களின் பொருளுக்குப் பொருந்தச் 'செய்கின்ற' என்று பொருள்பட நின்றதன் காரணம் அச்சொல் எதுகையில் வந்ததே.

கடலைக் கலக்கித் திருவை அடைந்து அணியென வைத்ததாக, அயன் அரி இருவருக்கும் பொருந்தக் கூறிய நயம் ஓர்ந்து உணர்ந்து உவத்தற்குரியது.

["அந்த அயனுடைய குமாரர் தசரதர். அவருடைய பெருமையையறியாதவரில்லை. அவர் குமாரர் இவர்கள். இவர்களது பெருமை பிரமதேவர்க்கும் சொல்லுதற் கரியது. ஆயினும் யான் அறிந்தபடி ஒருவாறு சொல்கிறேன்: கேளும். இவர்கள் பிதா, தமக்குப்பின் உலகத்தைக் காக்கச் சந்ததி யில்லையென்று வருந்தி இரந்து, கலைக்கோட்டு முனிவர் அருளால், இவ்வுலகமேயன்றி எவ்வுலகமும் காக்க வல்ல புத்திரராக, இந்த ராமலக்குமணரையும் பரதசத்துருக்கனரையும் பெற்றார். இவர்கள் நால்வரும், நால் வேதங்களை ஒத்தவராய், தீவினை செய்த தீவினைப்பயனும், நல்வினைசெய்த நல்வினைப்பயனும் சேர்ந்து உருவெடுத்து வளர்ந்தாற்போல வளர்ந்து, கலைகள் கற்பதில் கலைமகட்குத் தலைவரானார்கள் இவர்களைப் பெற்றதனால் தசரதர் பெயர்மட்டில் பிதாவாக, உபநயனஞ் செய்வித்துச் சகல கலைகளுடன் வேத மோதுவித்து வளர்த்து உண்மைப் பிதாவானவர் வசிட்டர். எம் வேள்விக்கு இராக்கதர் இடையூறியற்றாமல்

காக்கும் துணையாக இவ்விருவரையும் தசரதரிடம் பெற்று இவர்களுடன் வனத்துக்குவந்தேன். வரவே, அரக்கரியாரினும் அதிமூர்க்கமுடைய தாடகையே முதல்முதலாக எதிர்ந்தாள்.]

146. "அலை உருவக் கடல் உருவத்(து) ஆண்டகை தன் நீண்(டு)உயர்ந்த
நிலை உருவப் புய வலியை நீ உருவல் நோக்(கு)ஐயா!
உலை உருவக் கனல் உமிழ் கண் தாடகை தன் உரம் உருவி,
மலை உருவி, மரம் உருவி, மண் உருவிற்(று) ஒரு வாளி!

இ. - ள். "சனக ராசரே? - அலைவடிவமான கடலின் நிறத்தை யுடைய, ஆண்மையிற்சிறந்த இவருடைய நிலைமையான அழகுடைய தோள்களையும் (அத் தோள்களின் பருமைக்குத்தக்க) பலத்தையும் நீர் (உமது கண்கள் தைத்து) உருவும்படி (ஊன்றிப்) பார்ப்பீராக! (அந்தத் தோட் பலத்தினால் எய்த) ஓர் அம்பு, (கொல்லனது) உலை (யில் உள்ள) செந்தீ (ப்போலும் அக்கினி) கக்கிடும் கண்களையுடைய தாடகையின் மார்பையுருவி (அடுத்து நின்ற) மரத்தை உருவி (அப்பால்) மலையை உருவி (இறுதியாக) மண்ணையும் உருவிப் போனது!

உருவம்—1. வடிவம்; 2. நிறம் (பரிபாடல்); 3. அழகு (சிந்தாமணி); 4. சிவந்த நிறம் (பத்துப்பாட்டு) ஐயன் அரசன் (சங்க அகராதி) மண்—பூமி. இச்செய்யுள் திரிபாக இருத்தல்காண்க.

'ஐயா!' என்ற அருமைச் சொல்லில் அமைந்து கிடக்கும் அருத்தம் ஆழ்ந்து ஆராயத்தக்கது. அது, 'அரசனே!' என்ற சாதாரணப் பொருளைத் தந்தமட்டிலே நில்லாமல், விசுவாமித்திரருக்கு, அவர் 'காதல் என்தன் உயிர்மேலும் இக்கரியோன் பால்உண்டால்' என்று பின்னர்க் கூறுமாறு ராமர்பாலுள்ள அன்பையும் அவர் வீரத்தின் பாலுள்ள வியப்பையும் சனகரும் உற்று ஈடுபடச் செய்யும்படி கருதித் தாம் கூறப்போவதைக் கூர்ந்து கவனிக்கச் செய்தற்காகப் பிரியமொழி கூறி அழைத்த விசேடமான பொருளையும் தந்து நின்றது.

(இத்திரட்டு 142-ம் கவியில்) 'வில்லும் காண்பார்' என்றதை நம்புவிக்க இராமரது முன்னோர் அருஞ் செயல்களைக் கூறியவர் இப்போது இராமரது அருஞ் செயல்களைக் கூறத்தொடங்கினர்.

["இவர் விட்ட அம்பு ஒன்றினால் அவள் புத்திரரில் ஒருவனாகிய சுவாகு மடிந்தான்; மற்றொருபுத்திரனாகிய மாரீசன் போன இடம் தெரிந்திலேன். யான் தவஞ் செய்து பெற்றனவாய், ஏவினால் உலகமுழுவதையும் கடலோடும் மலையோடும் எரித்து விடவல்லனவாய், என்னால் இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற ஆயுதங்கள், அவைகளைக் கொடுத்த நானுமே நாணமடைய, இவருக்கு ஏவல் செய்கின்றன. இன்னும் இவர் மகிமையைக் கூறுகின்றேன்: கேளும்.]

147. "கோதமன் தன் பன்னிக்கு முன்னை உருக் கொடுத்த(து), இவன்
போது நின்ற(து) எனப் பொலிந்த பொலன் கழற் காற் பொடி கண்டாய்!
காதல் என் தன் உயிர் மேலும் இச் கரிபோன் பால் உண்டால்!
ஈ(து) இவன் தன் வரலாறும் புய வலியும்!" என உரைத்தான்.

"(ஒரு நாள் மலர்ந்து, மறு நாள் நிலைபா தழியும் இயல்புடையது பூ. அப்படிப்பட்ட) பூவானது நிலைபெற்றதுபோல விளங்காநின்ற, இவருடைய பாத (த்திற்படிந்த அளவற்ற பல தூளிகளுள் ஒரு) தூளியே (சாபவசத்தினால் நெடுங்காலம் கல்லாயிருந்த) அகலிகைக்கு (ச் சாபவிமோசனஞ் செய்து) முந்திய வடிவத்தை அருளிய (மகிமையுடைய) து! (என்றால், அப்படிப்பட்ட பாதத்தின் மகத்துவத்தைக் கூற முடியுமோ! அது வேகூற முடியாதென்றால், கேவலம் அதமாங்கமேயான அப்பாதத்தோடு உத்தமாங்கம் (—சிரசு)உள்பட மற்றெல்லா அங்கங்களும் அமைந்த முழுத்திருமேனியின் வைபவம் இவ்வளவென்று கூறுவது எங்ஙனம்! (இத்தகைய பெரியாராகிய) இந்தக்கரியார் பால் (எனக்கு) என் உயிர்மேலுள்ளதிலும் அதிகமான அன்பு உள்ளது. (யான் இப்போது ஒருவாறு கூறியவாறு) இவ்வளவு பெருமையுடையது இவர் வரலாறு!; இவ்வளவு பெருமையுடையது இவர் புயபலம்!; (என்று தெரிவீராக:)" என்று கூறினார்.

பன்னி-மனைவி. போது—மலர். நின்றது—நிலைத்தது—நிலையானது. பொலன்—பொன்; 'பொலம்' என்பதன் மரூஉ. கழல்—வீரர் காலில் அணியும் ஓர் ஆபரணம். கரிபோன்—கருநிறமுள்ளவன்—இராமன். ஈது—இத்தன்மையுள்ளது; இவ்வளவு பெருமையையுடையது. "ஈது" (தொகுதி பொருண்மை) என்றாயினும், 'வரலாறு ஈது' 'புயவலியீது' என்று பிரித்துக்கூறியாயினும் இலக்கண அமைதி செய்து கொள்க.

மேற்கூறிய 'இத்தன்மை உள்ளது' 'இவ்வளவு பெருமையுடையது' என்ற கருத்துக்களை வியப்போடு கூறுமிடங்களில் கம்பர் 'இது' 'ஈது' என்ற சொற்களால் நயம்படக் கூறுவர். 'குலம் இது! கல்வி ஈது!' என்ற வாலிவதைப்படலப் பாட்டையும் 'அறிவும் ஈதே! உருவும் ஈதே!' என்ற சுந்தரகாண்டப்பாட்டையும் நோக்குக.

காலிற் பட்டவற்றுள் ஒருதூளே சாபவிமோசனஞ் செய்ததென்று உரைசெய்ததைக் 'கொடுத்தது' என்ற ஒருமைப் பயனிலை வலியுறுத்துதல் காண்க. தூள், துகள், தூளி, தூசி, சுண்ணம், பூழி, பூழ்தி, பொடி என்ற சொற்கள் புழுதி என்ற கூட்டப்பொருளாகிய ஒருபொருள் குறித்தவை. இந்தத்தொகுதிப் பொருளில் ஒருபகுதியை 'ஒருதூளி' யென்றது, புழுதிபோலச் சமுதாயப் பொருளாகிய மணலின் ஒருபகுதியை "மணல் ஒன்று" என்று "அணிகொண்ட குரங்கினங்கள் அலைகடலுக்(கு) அப் பாலை—மணல் ஒன்று காணாமல் மலையெடுத்து மயங்கினவே." என்ற கலிங்கத்துப் பரணிப்பாட்டிற் கூறப்பட்டது போலக் கூறப்பட்டது. [ஒரு மணலின் குடகடலை வற்றச்செய்திருக்குமென்பது குறிப்பு.]

'முன்னையுரு' வென்றது, இந்திரனாற் கற்பழிக்கப்பட்ட பின்னும் கல்லாகு முன்னும் இருந்த இழிவுற்ற வடிவத்தையன்று; (அது கௌதமர் ஏற்றுக்கொள்ளத்தகாததென்று கூறவேண்டுவதின்று) கற்பழிக்கப்படுமுன் கௌதமரது மனைவியாயிருந்த வடிவத்தையுமன்று; (அது புதியதல்லாததனால் இராமர் கௌதமருக்குக் கொடுத்தற்குரியதன்று); மற்றெவ்வடிவத்தையோவெனின், கௌதமபன்னியாதற்கு முன்னிருந்த கன்னிப்பருவ வடிவத்தையே: என்பது புலப்படுமாறு கம்பர் 'அகலிகைக்கு முன்னையுரு' வென்னாமல் 'கோதமன்றன் பன்னி (ஆனது)க்கு முன்னையுரு' என்றாரென்ற கருத்தை ஸ்ரீ ரா. ராகவையங்கார் அகலிகை வெண்பா உ-ம் பதிப்பு முகவுரை XXIX-ம் பக்கத்தில் 'முந்த இவள் (அகலிகை) உற்ற உரு முண்டகத்தோன் கைசமைத்த(து,)—இந்த உரு நின் (இராமருடைய) திருத்தாள் ஈந்ததால்;— அந்த உரு—மா(சு) அடைவும் மாய்வும் உற்ற வா(று,) இவ் உரு, என்றும்—ஆ(சு) அடைவும் வீவும் இல(து) ஆம்.' என்ற பாட்டுப் பொருளை விளக்குதற்குப் பீடிகையாகக் கூறியுள்ளார்.

கார்முகப் படலம்.

'இதனை வளைத்தவன் சீதையை அடைவான்' என்று சனகர் வைத்திருந்த வில்லை இராமர் முறித்ததைக் கூறுவது (கார்முகம்—வில்.)

148. மாற்றம் யா(து) உரைப்பது? மாய விற்கு நான்
தோற்ற ஆ(று) என, மனம் துளங்கு கின்றதால்!
நோற்றனள் நங்கையும் நொய்தின் ஐயன் வில்
ஏற்றுமேல், இடர்க் கடல் ஏற்றும்" என்றனன்.

இ-ள். (இவ்வாறாக, விசுவாமித்திரர்கூற, சனகர் "தேவரீர் 'இவர் வில்லும் காண்பார்' என்றீர். அதற்கு மறு) மாற்றம் நான் யாது கூறுவது? (இதனை எவரேனும் வளைத்து என் பெண்ணை மணப்பரென்ற என் எண்ணம் நிறைவேறாமற் செய்து என்னைத் தோல்வியடையச் செய்த அந்த) மாயமான வில்லுக்கு நான் தோற்ற விதத்தை நினைக்க என் மனம் நடுங்குகின்றது. (அந்த நடுக்கத்தினால் முன் வளைக்க முயன்றவர்போல இவரும் வளைக்கமாட்டாமற்போவரோ என்ற பயம் உண்டாகின்றது) இவர் (அந்த) வில்லில் (நாண்) ஏற்றுவாரானால் சீதை தவஞ் செய்தவளாவாள்; (அவள் கல்யாண மாகாமையால் வருந்திக்கொண்டிருக்கும் எங்களையெல்லாம்) துன்பக் கடலினின்றும் (இன்பக் கரையில்) ஏற்றினவராவார்." என்றார்.

மாற்றம்—வார்த்தை. மாய வில்—வஞ்சனையையுடைய வில் (மாயப் பொய்—வஞ்சனையையுடைய பொய். பரிபாடல் இருபதாவதன் உரை.) மாரீசனை மாயமானை 'வஞ்சனைமான்' என உருக்காட்டுபடலம் கஎ-ம் பாட்டிற் கூறுதல்காண்க. அறிவில்லாத வில்லை வஞ்சனையையுடைய வில்லென்று பொருள்பட 'மாயவில்' என்றது அது தோற்றத்தில் மற்ற விற்களைப் போன்று உண்மையில் அவ்விற்கள் போல வளைக்கப்படாதிருத்தமை பற்றியென்க. துளங்குதல்—நடுங்குதல். நோற்றனள்—தவஞ் செய்தனள்—தவப்பயனை அடைந்தவள்—புண்ணியவதி. நங்கை—பெண்ணிற் சிறந்தாள். நொய்தின்—இலகுவாக.

வில்லின் வன்மையையும் அவ்வன்மையால் அது இதுவரையும் ஒருவராலும் வளைபடாமையையும் அதனால் நெடுங்காலம் சீதாதேவி கல்யாணமாகாதிருத்தலையும் கருதி மனம் நிரங்குகின்ற சனகர், அவ் வில்லை இராமர் மிகவும் வருந்தியாயினும் வளைத்து நாணேற்றவேண்டு மென்று கூறற்பாலராயிருக்க, 'நோய்தின் (—எளிதாக—வருத்தமின்றி) ஐயன் (—இராமன்) வில்(லைவளைத்து நாண்)ஏற்றுமேல்' என்றது ஆராய் தற்குரியது. 'நொய்தின்' என்ற சொல் நிற்கும் தானத்தில் அது சிறந்த பொருள் பயக்கவில்லையாயினும், அத்தானம் மோனைத் தான மாதலால், பொருட்சிறப்பைப் பிரதானமாகக் கருதாமல் அச் சொல் புணர்க்கப்பட்டதென, ஒருசமாதானம் கூறலாம். பின்வரும் விசேட வுரையைக் கொண்டால், ஒரு சமாதானமும் கூறவேண்டிய ஆவசியகம் இல்லாமற் போதலேயன்றி, அந்த'நொய்தின்' என்ற சொல் மிகச்சிறந்த பொருள் பயக்குமாறு பிரயோகிக்கப்பட்டுள்ளதாகும்.

மேற்குறித்த விசேடவுரையாவது:—சனகர், இராமரைக்கண்ட வுடனே மிகுந்த அன்பு பூண்டு விட்டாராதலால், அவர் இராமர்திறத்தில் 'என் பெனக்(கு) உருகு கின்ற(து) இவர் கின்ற(து) அள(வு)இல் காதல்—அன்பினுக்(கு) அவதி இல்லை' (அநுமப்படலம் கடு.)என்ற சிந்தையராய், இராமர் வருந்தி வில் வளைத்தற்கு மனம் சகியாராய் 'நோய்தின் ஐயன் வில் ஏற்று மேல்' என்று ரென்பது.

'நோற்ற பேற்றைப் பெற்றவளாவாள்' என்பதை 'நோற்றனள்' என்றும் 'வில்லை வளைத்து நாணேற்றுமேல்' என்பதை 'வில் ஏற்றுமேல்' என்றும் 'இடர்க் கடலினின்றும் எங்களை இன்பக்கரை யேற்றும்' என்பதை 'இடர்க்கடல் ஏற்றும்' என்றும் பொருள் விளக்கம் சிறிதும் குன்றாமல் சுருக்கக் கூறியிருத்தல் கவனிக்கத்தக்கது.

[மேற்கூறியவாறு கூறிச் சனகர் அந்த வில்லைத் தருவித்து இராம ரது கம்பீரத் தோற்றத்தையும் வில்லின் வலியினையும் சீதாதேவி கல்யாணமாகா நிலையினையும் சிந்திக்க, அச்சிந்தனையை அவர் முகக்குறி யால் சதாநந்தர் அறிந்து விசுவாமித்திரரை நோக்கி, தக்கன் உமா தேவியை அவமதித்தானென்று சிவாமிசரான வீரபத்திரர் இந்த வில்லுடன் அவன் யாகசாலை சேர்ந்து, அவனையும் அவனுக்குத் துணை

யாயிருந்த தேவர்களையும் சிதைந்தோடச் செய்து, அவன் வேள்வித்தீ ஆறத் தம் கோபத்தீயும் ஆறினர். அப்போது அவர் இந்த வில்லை இந்தச் சனகராது முன்னோரொருவரிடம் வைத்துச் சென்றார். இனி, இவ்வில்லுக்குரியவள் வரலாறும் கேளும்: நாங்கள் யாகம் செய்தற்கு நிலத்தைச் சுத்தப்படுத்தும் பொருட்டு வயிரக் கொழுவையுடைய பொற் கலப்பையினால் உழுதோம்.]

வேறு.

149. உழுகின்ற கொழு முகத்தின், உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவி மடந்தை உரு வெளிப்பட் டெனப், புணரி
எழுகின்ற தெள் அமுதோ(டு) எழுந்தவளும் இழிந்(து) ஒதுங்கித்
தொழுகின்ற நல் நலத்துப் பெண் அரசி தோன்றினள்.

இ-ள். உழுத கொழுவின் முனையிலே, உதய சூரியன் போல ஒளி வீசுகின்ற பூமிதேவியினது உருவம் வெளிப்பட்டாற் போல, கடலில் உண்டாகிய அமுதத்துடன் தோன்றிய இலக்குமி தேவியும் (தன் அழகு) தாழ்வுற்று (நாணி எதிர் நிற்கமாட்டாமல் ஒருபுறம்) ஒதுங்கி (நின்று) வணங்கும்படியான மிக்க அழகுடைய பெண்ணரசி (யாகிய சீதாதேவி) தோன்றினள்.

கொழுமுகம்—கொழுவின்முனை. முகம்—முனை (சங்க அகராதி) உதிக்கின்ற கதிர்—உதயமாகின்ற சூரியன். புணரி—கடல். இழிந்து—இழிவடைந்து—தாழ்ச்சியுற்று. நல்நலம்—நல்ல நலம்—மிக்க அழகு. நன்மை—மிகுதி (சங்க அகராதி) நன்று—பெரிது (புறநானூறு).

உதய சூரியனது ஒளி, செம்பொன்னிறமுடையதாய், (இளவெயிலெனப்பெற்று,) இதமானதுமுடையதாய், இனிதாயிருப்பதால், சுவர்ண நிறமுடைய சீதாதேவியினது திருமேனியின் திவ்விய தேசசுக்குச் சிறந்த உவமானமாயுள்ளது. இப்பாட்டின் பின்னிரண்டடிக் கருத்தை மிக இனிதாக வேறோராசிரியர் "தாமரை இருந்ததையல் சேடிஆம் தரமு மல்லள்" என்று பின்னர்க் கூறுவர்.

150. குணங்களை என் கூறுவது? கொம்பினைச் சேர்(த்து) அவை உய்யப்
பிணங்குவன! அழ(கு) இவளைத் தவம் செய்து பெற்றது காண்!

கணம் குழையாள் எழுந்ததன் பின் கதிர் வானில் கங்கை எனும்.
அணங்(கு)இழியப் பொலி(வு)அழிந்த ஆ(று)ஒத்தார் வே(று)உற்றார்.

இ-ள். (அவளுடைய நாணம் முதலிய பெண்மைக்) குணங்களை (ப்பற்றி) யாது கூறுவது? அவைகள் (அந்தப்பூங்) கொம்பு போல் வாளை அடைந்து வாழ்வுறுதற்கு ('யான்முந்திக்கொள்வேனாகயான் முந்திக்கொள்வேனாக' என்று ஒன்றோடொன்று) சண்டைசெய்வன வாயின. (ஏனை மாதர் தாம்செய்த தவத்தினால் அழகைப்பெற்றிருக்க,) இவளை அழகு தவஞ்செய்து பெற்றிருக்கின்றது. கங்கையாறு ஆகாயத்தினின்றும் (பூமியின்மேல்) இறங்கி (த்தோன்றி) னவுடனே அழகழிந்த (மற்ற) ஆறுகள் போல, இவள் (பூமிக்குள்ளிருந்து வெளிப் பட்டுப் பூமியின்மேலே) தோன்றினவுடனே ஏனைமாதர்கள் (எல்லாரும் அழகழிந்தவர்) ஆனார்கள்.

என் - யாது. உய்தல் - பிழைத்தல் - வாழ்வுறுதல். பிணங்குதல்- சண்டை செய்தல். காண்-முன்னிலை அசை; 'இதனைத் தெரிந்துகொள் வாயாக' என்னும் பொருளுடையதுமாம். கணம் - திரட்சி (பத்துப் பாட்டு) கணக்குழை - திரட்சியான குண்டலம். கதிர்வான் - ஒளி(யை யுடைய) ஆகாயம். அணங்கு—1. தெய்வப்பெண்; 2. பெண். இழிய— (பூமிமேல் பகீரதன் செய்த தவத்தினால்) இறங்க. பொலிவு—1. அழகு; 2. விளக்கம் - பிரகாசம். வேறு உற்றார் - (சீதைக்கு) வேறாக உற்றார் ஆகிய பெண்கள் - மற்றைய மாதர் (அனைவரும்).

இப்பாட்டின் பின்னிரண்டடிகளில் உள்ள உவமான உவமேயப் பொருத்தம் மிகச் சிறந்தது. ஆறுகளையும் மாதரையும் ஒப்பிடுவது பலவகையிலும் பொருத்தமானது. பூமி தோன்றியகாலமுதலாக உள்ள புராதனமான ஆறுகளெல்லாம் கங்கை ஆறு (முன் இல்லாதது) புதிதாக வந்தவுடனே அதன் பொலிவு மிகுதியல் தம் பொலிவழிந்தது போல, ஆதிமுதல் இதுவரையும் அழகிற்சிறந்தாராயிருந்தமாதரெல்லாம் புதிதாக உண்டாகிய சீதாதேவியின் பொழுகினால் அழகழிந்தாராயின ரென்ற கருத்து மிக்க இன்பம் பயப்பது. சற்றேறக்குறைய இக்கருத் துப்போலவே இப்பாட்டின் முன்னிரண்டடியில் 'கொம்பினைச் சேர்ந்து உய்யக் குணங்கள் பிணங்குவன' என்றும் 'அழகு இவளைத் தவம்

செய்து பெற்றதுகாண்' என்றுங்கூறிய கருத்துக்களும் மிகவும் இனியவைகளே. இத்தகைய சிறந்த அழகுடைய மூன்று கருத்துக்களைப் பொருத்தமாக ஒருபாட்டில் அமைத்திருக்கும் கவிசாதுரியம் கண்டு களிக்கத்தக்கது. 'அழகிவளைத் தவஞ்செய்து பெற்றது' என்பதனை ஒப்ப வேறோரிடத்தே 'தவம் செய்த தவமாம் தையல்' என்பர்.

["வீரிலே பிறந்த அந்தத் திருமகளை விண்ணரசரெல்லாரும் காதலித்ததுபோல, நிலத்திலே பிறந்த இந்தத் திருமகளை மண்ணரசரெல்லாரும் காதலித்து மணம் பேசினார்கள். அவர்களுக்கு 'இவ் வில்லை வளைத்தவரே இவளை மணக்கப் பெறுவர்' என்றோம். அவர்கள் வில்லை வளைக்கமாட்டாராய், இவள் காதலையும் விடமாட்டாராய், வலியினால் இவளை அடையக்கருதிப், போர்செய்து தோற்றுப்போனார்கள். பின்பு, இவ்வில்லருகே எவரும் வந்திலர். இனி யெக்காலமும் இவளுக்குக் கல்யாணமில்லை யென்றிருந்தோம். இவர் வளைத்தால், இவள் அழகு பயனற்றுப்போகாது" என்றார். இவ்வாறு சதாநந்தர் கூறியதைகேட்டு, விசுவாமித்திரர் வில்லின் வன்மையைப்பற்றி வியப்படைந்து இராமன் முகத்தைப் பார்த்தார். அப் பார்வையினால் அவர் தம்மை வில்லை வளைக்கும்படி கருதிய குறிப்பறிந்து, இராமர் வில்லை நோக்கி,]

வேறு.

151. பொழிந்த நெய் ஆகுதி வாய் வழி பொங்கி
எழுந்த கொழுங் கனல் என்ன எழுந்தான்:
"அழிந்தது வில்!" என விண்ணவர் ஆர்த்தார்:
மொழிந்தனர் ஆசிகள் முப் பகை வென்றார்.

இ - ள். (ஓமகுண்டத்திலே) சொரிந்த நெய்யாகிய ஆகுதி (வீழ்ந்த) இடத்தினின்று (அந்த நெய் விழுந்த) வழியே ஓங்கி எழுகின்ற (ஓமத்) தீப்போல எழுந்தார்: "அழிந்தது வில்!" என்று தேவர்கள் ஆரவாரித்தார்கள். முனிவர்கள் வாழ்த்தினார்கள்.

வாய் - இடம். ஆர்த்தல் - ஒலித்தல். ஆசி - வாழ்த்து. முப்பகை வென்றார் - முனிவர். முப்பகையாவன காமம், வெகுளி, (-கோபம்) மயக்க மென்பன.

வன்மையுடைய இராமர் எழுதலுக்கு வன்மையுடைய தீ எழுதல் உவமானமாயினும் நன்மையுடைய இராமருக்குத் ("தீயவே தீய பயத்த லால், தீயவை-தீயினும் அஞ்சப்படும்" என்றவாறு) தீமையுடைய தீ ஒவ்வாத -ஒவ்வாதது ஒவ்வுவதாம்படி, தீமையை ஒழிப்பதாய் வன்மை யுடன் நன்மையும் ஒருங்குடையதாயுள்ள ஓமாக்கினியை உவமானமாக உபயோகப்படுத்திய கவிசாதுரியம் உவகைவிளைப்பதாயுள்ளது.

[அவர் அந்த ஒரு வில்லை ஒடிக்குமுன், அவர்மீது காதல் கொள் ளும்படி, மாதர்கள் ஒவ்வொருவர் நெஞ்சிலும் அளவிறந்த அம்புகளை ஏய்க்க மன்மதன் ஆயிரம் வில்லுகளை ஒடித்தான். "இவர் இந்தவில்லை வளையாராயின், சீதையும் நாமும் தீயில் வீழ்ந்து இறப்போம்" என் பாரும் "இவர் சீதையைக் கல்யாணம் செய்யவிரும்பினால், இவர் கேட்கு முன் 'இவளைக்கொள்வீராக' என்று கொடுப்பதைவிட்டு, (இளமைப்பரு வம் நீங்காத இந்தப்) பிள்ளையார்முன் ஈசனது வில்லையெடுத்துவைத் தது மடமையே" என்பாருமாக, மாதர்கள் பரிந்துபேசாநிற்ப, அவர் சிங்கம்போல அந்த வில்லை நோக்கிச்சென்று, சீதாதேவி தமக்குச்சூட்ட நீட்டிய மாலையைப்போல அதைச் சந்தோஷமாகவும் எளிதாகவும் எடுத் தார்.]

152. தடுத்(து)இமை யாமல் இருந்தவர், தாளின்
மடுத்ததும் நாண் நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினின்; யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்!.

இ - ள். (அவர் வில்லை எடுத்தது முதல் நாண் ஏற்றும் வரையும் செய்யும் ஒவ்வொரு செயலையும் இம்மியும் விடாது நுணுகி நோக்கும் இச்சையுடையாராய், இடையே இமைத்தல் செய்தால், இமைத்த சமயத் திலே நிகழ்வது பார்க்க முடியாது தப்பிப்போமென்று, இயற்கையாக இமைக்கும் இமையைச் செயற்கையாக மனமுயற்சியினால்) தடுத்து இமையாமலிருந்தவர்கள் (ஒருவரொழியாமல் எல்லாரும், அவர் வில்லின் ஒரு முனையைக்) காலி(ன் பெருவிரலி)னால் அழுத்தியதையும் (வில்லை வளைத்து மற்றொரு) முனையில் நாணை (ப் பூட்டுதற்கு) வைத்ததையும் (அச் செயல்கள் செய்யப்பட்ட) வேகத் தினால் (கண்ணினால்) கண்டிலர்; (அவ் எல்லாருள்ளே சிறந்த அறி வாளர்) எவரும் (தாம் இமையாதிருந்தும் அச் செயல்களைக் காணாதபடி செப்படி வித்தைபோல எப்படிச் செய்தாரென்று கருத்தினாலும்) தெரிந்

திலர்; (வில்லைக்) கையால் எடுத்ததைக் கண்டார்கள். ஒடிந்த (சத்தத்) தைக் கேட்டார்கள்! (அவ்வளவே அவர்கள் அறிந்தது.)

தடுத்து—(இமைத்தலைத் தடை செய்து. தாள்—கால்; இங்கே முதலாகு பெயராய்க் காற்பெருவிரலைக் குறித்தது. மடுத்தல்—அழுத்தல் (சங்க அகராதி) அடுத்த அடியில் வரும் 'அறிந்திலர்' போல 'நோக்கிலர்' (—பார்த்திலர்—பார்க்கவில்லை) எனற்பாலது, செய்யுளுக்குப் பொருந்த, 'நோக்கார்' என நின்றது. கடுப்பு—விரைவு. இற்றது—ஒடிந்தது; ஒடிந்ததனால் உண்டாகிய ஓசையைக்குறித்தது.

'தாள்' என்பதற்குச் சில அகராதிகளில் 'விற்குதை' என்றபொருள் உளது. அப் பொருள்கொண்டால், 'தாளின் மடுத்ததும் நாண் நுதி வைத்ததும்' என்பதற்குத் தாளில் (—வில்லின் ஒரு முனையில் உள்ள விற்குதையில்) நாலை (—நாணின் ஒருதலையை) மடுத்ததும் (—சேர்த்ததையும்) நுதி (-மற்றொரு முனையில் வைத்ததும் (—நாணின் மற்றொரு தலையைப்பூட்டுதற்கு வைத்ததையும்) எனப் பொருள்கொள்ளலாம். இப்படலத்தில் 'இரும்பனைய'என்றுதொடங்கும் சக ம்பாட்டில் 'பொற் கலப்பை(யில்) வயிரத்தின் கொழுமடுத்திட்டு' என்பதிலும் 'மடுத்தல்' சேர்த்தலெனப் பொருள்படப் பிரயோகிக்கப்பட்டிருத்தலைக்காண்க.

நாண் பூட்டுதற்குமுன் வில் முறிந்ததைக்குறிக்க 'நாண்பூட்டியது மென்'னுது 'நாண்வைத்தது' என்றார். 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்றது கவி சமத்காரத்துக்கோருதாரணமாம் என்பர் (ஸ்ரீ செல்வக்கேசவமுதலியார். (கம்பநாடர் பக்கம் 57—58).

[அந்த ஓசை, சுவர்க்க மத்திய பாதலமென்ற மூன்று லோகங்களிலும் சென்றடித்தது. இனிச் சீதாகல்யாணம் நிறைவேறினதேயாமென்று எல்லாரும் குதூகலித்தார்கள். ஆடவரினும் பெண்டிர் அதிகமாக மகிழ்ந்தார்கள். சனகராச சபையில் நிகழ்ந்தது இதுவாக, நிலவினும் இருளினும் வருந்தி நீங்கலுற்ற உயிரை, இராமனைக் காண் வேண்டுமென்னும் ஆசை மருந்தினுற், சிறிது மீளப்பெற்ற சீதாபிராட்டி படுக்கைவிட்டெழுந்து, பாங்கியர் சூழச்சென்று, கன்னிகா மாடத்தை அடுத்துள்ள ஒரு தாமரைத் தடாகமத்தியில் உள்ள பளிங்கு மாளிகையில் அமைத்த பூ அணையைச் சேர்ந்தார். சேர்ந்தவர் அத்தடாகத்துத் தாமரைகளை நோக்கிக் கூறுகின்றார்.]

(தொடரும்.)

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

மதிப்புரை.

திருவள்ளுவர் நூல்நயம்:-இது, ஸ்ரீமான் ஆர். பி. சேதுப்பிள்ளை (பி. ஏ., பி. எல்.) அவர்களால், திருக்குறளைப்பற்றிய நுவலும்பொருள் பலவும் தெளிவாய்விளங்கும்படி ஆராய்ச்சிமுறையான இனிய வுரை நடையி லெழுதப்பட்டிருக்கிறது. இதனை யெழுதிய பிள்ளையவர்களது தமிழ்மொழிவன்மையும், களவியலுரைமுதலிய தமிழ்நூற்பயிற்சியும் பாராட்டற்பாலன. இப்புத்தகத்தைப்பற்றிச் சொல்லத்தக்க சிறந்தன பலவும் ஸ்ரீமான். கா. சுப்பிரமணியபிள்ளை (எம். ஏ., எம். எல்.) அவர்கள் எழுதிய உயர்ந்த முகவுரையானே நன்கு விளங்கும். இவ்வாறான ஆராய்ச்சிகளே விரைவாகத் தமிழ்கற்பவர்களுக்கு மிகவும் பயன்படத்தக்கன. இக்காலத்தியல்புபற்றி, நூலுள்ளும், உரையுள்ளும் இடையிடையே நுழைக்கப்பட்டிருக்கும் சில புதியகருத்துக்கள் ஆராயத்தக்கன. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் ஸ்ரீமான் எம். இ. வீரபாகுப்பிள்ளையவர்கள், பி. ஏ., 21, தர்மராஜாகோயில்தெரு, சைதாப்பேட்டை, சென்னை என்ற விலாசத்துக் கெழுதிப்பெறலாம்.

ஸ்ரீ ஈசுவரசந்திரவித்தியாசாகரர், ஸ்ரீமான் சேலம் ராமசுவாமி முதலியார்: இவர்களுடைய சரித்திரப்புத்தகங்களும் ஒவ்வொன்று இரண்டணாவீதம் மேற்கண்டவிலாசத்திற் பெறலாம்.

அகநானூறு மூலமும், பழையவுரையும் —இது, அகப்பொருட் டிணைபற்றித்தொகுக்கப்பட்ட சங்கத்தமிழ்நூல்களுளொன்றென்பது யாவரு மறிந்ததே. இந்நூல் இதுகாறும் அச்சிடப்படாதிருந்தகுறை தீருமாறு, ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத் ரா. ராகவையங்காரவர்களாற்பரிசோதிக்கப்பட்டு, சென்னை மயிலாப்பூர் கம்பர்விலாசம் ஸ்ரீமத் வே. ராஜகோபாலையங்காரவர்களால் அச்சிற்பதிப்பித்து வெளியிடலாயிற்று. அதற்கு அநுபந்தமாக இப்பொழுது நூல்வரலாறு முதலியனவும், அகப்பொருளைப்பற்றியகருத்துக்களும் பிறவும் விளங்கும்படி ஸேதுஸமஸ்தானவித்வான் ஸ்ரீமத் ரா. ராகவையங்காரவர்களெழுதிய முகவுரையுடன், பாடினோர்வரலாறு, இந்நூலுள் வழங்கப்பட்ட அரசர் முதலியோர் வரலாறு, ஆராய்ச்சிக்குறிப்பு, இலக்கணக்குறிப்பு, பொருட்குறிப்பகராதி, அபிதானக்குறிப்பு முதலியனவும் எழுதி அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. இந்நூல் தன்னோடொத்த பிறதொகைநூல்கள்

போலச் சிதல்வாய்ப்பட்டுக்குறைபாது முழுதமுள்ளபொழுதே அச்சிட விரும்பிப் பரிசோதிப்பதற்கும் பணவுதவிபுரிவதற்கும் தக்கோர்களை யடுத்து இப்பெரியகாரியத்தை முடித்த ஸ்ரீமத் வே. ராஜகோபாலையங்காரவர்களது ஊக்கமும் உழைப்பும் நன்குமதிக்கத்தக்கன. இதன் அநுபந்தத்தின் விலை ரூ 1. முழுப்புத்தகத்தின் விலை ரூ 10. வேண்டுவோர் பதிப்பித்தோர்க்கு எழுதிப் பெறலாம்.

கற்புடைபமகள் சாவித்திரி.—இது, கற்புடையமகளிர் ஒழுகும் ஒழுக்கங்களையும், அவரது ஆற்றலையும் சிறுமிபருந் தெரிந்தொழுகும்படி, தஞ்சைக் கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் எல். உலகநாதபிள்ளையவர்களால் எளிய தமிழ்நடையிலெழுதப்பட்டதொரு சிறியகதைப்புத்தகம். இதன் விலை அணா. 2. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

ஆன்றோர்சரித்திரச்சுருக்கம்.—இது, சென்னை வி. ஆர். வி. ஸெகண்டரிஸ்கூலில் தலைமையுபாத்தியாயராயிருந்த ஸ்ரீமத் எம். வீ. சுசுவரையரவர்களால், கலாசாலைமாணவர்கள் உபபாடமாகப்படிக்கும்படி எழுதப்பட்ட சிலசரித்திரங்கள் அடங்கிய சிறுபுத்தகம். இதன் விலை அணா. 5, வேண்டுவோர் 55 லிங்கசெட்டிதெரு டெம்பிள் அண்ட் கம்பெனி, சென்னை. என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

பப்புதிம்மபநாயக்கன்:—இது ஸ்ரீமத் சோ. சா. கிருஷ்ணசாமி ஐயரவர்களால் எழுதப்பட்டதொரு கதைப்புத்தகம், இதன் விலை அணா. 4.

கம்பநாடர்.—இது, காரைக்குடியிலிருந்து, ராமாயணப்பிரஸங்கவித்வான் ஸ்ரீமத் மோ. வே. கோவிந்தராஜையங்காரவர்கள் தாம் வடமொழி தென்மொழிகளிற் பன்முறைபயின்றபயிற்சியானாராய்ந்தறிந்த ராமாயண விஷயங்களை முறையாக வெளியிட்டுக்கொண்டுவரும் ஒருமாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதில் 1. கம்பரும் வான்மீகரும்; 2. கம்பராமாயண ஆராய்ச்சி; 3. கம்பராமாயணக்கவி; 4. கம்பராமாயணவசனம் என்ற விஷயங்கள் வெளிவருகின்றன. கற்றோர்களிக்கும் கம்பர்கருத்துக்களை மற்றோருமறிந்து மகிழ்ச்சியடையும்படி வசனநடையிலெழுதி வருதலால் இது எல்லாராலும் ஆதரிக்கத்தக்கதே. இதன் வருடச்சந்தா ரூபா 5. வேண்டுவோர் (இதன் ஆசிரியர்க்கு) கம்பநாடர் கார்யாலயம்; காரைக்குடி; ராமநாதபுரம்ஜில்லா என்ற விலாசம் எழுதிப் பெறலாம்.

நச்சினார்க்கினியன்.—இது, திரிசிரபுரத்தினின்றும் நாஷனல் காலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணைய ரவர்களால் மாதாந்தப்பத்திரிகையாக வெளியிடப்பட்டுவருகிறது. இதில் இனிய வியாசங்கள், நாவல், நாடகம், விநோதக்கூற்று, விடுகதை முதலிய பலவிடயங்கள் வெளிவருகின்றன. இதன் வருடச்சந்தா தபாற் கூலியுள்பட ரூபா 2. வேண்டுவோர், பண்டித ம. கோபாலகிருஷ்ணைய ரவர்கள் ;நச்சினார்க்கினியநிலயம் ; 9. ஆணி முத்தம்மாள்தெரு; தெப்பக் குளம் ; திருச்சி. என்ற விலாசமெழுதிப் பெறலாம்.

தமிழ்ப்ரகாச.—இது, மதுரைக்காலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் சு. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் பத்திராசிரியராயிருந்து நடத்தி வரும் ஒரு மாதாந்தப்பத்திரிகை. இதன் முதலாவது இதழ் வெளிவந் திருக்கிறது. அதில், பத்ரோதிபரின்முன்மொழி, திருஞானசம்பந்தர், அநுபவசங்கீதம், காமந்தகீய நீதிசாரம், வரருசிசரிதம், விடுகதைவினை, சம்பகமாலீ, நல்லிசைப்புலவர்கவித்திறம். என்னும் விஷயங்கள் பல பண்டிதர்களால் நன்றாயெழுதப்பட்டுள்ளன. இதன் வருடச்சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4. வேண்டுவோர் இதன் ஆசிரியர்க்கெழுதிப்பெறலாம்.

லக்ஷ்மீ.—இது, ஒரு மாதப்பத்திரிகையாக ஸ்ரீமத் கே. எஸ். முத் தையா அவர்களால் சென்னையினின்றும் வெளிவருகிறது. இதில் தமிழ்நாடும் தமிழ்மக்களும் முன்னேற்றமடைதற்குவேண்டும் பலவிட யங்களும் யாரும் படித்துணரும்படி தெளிவான தமிழ்நடையிலெழுதப் பட்டுவருமென்று தோன்றுகிறது. இதன்வருடச்சந்தா ரூபா 2. வெளி நாடுகளுக்கு ரூ 2-8-0. வேண்டுவோர் கே. எஸ். முத்தையாகம்பெனி ஸில்க்ஹௌஸ் ; 188 கோவிந்தப்பநாயக்கன் தெரு ; சென்னை. என்ற விலாசத்திற் பெறலாம்.

ஜீவானந்தபோதினி.—இது, தமிழ்மக்களின் அறிவு வளர்ச்சிக் கேற்றபலவிடயங்களுமவெளியிடுதற்குரிய மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதற்குத் தமிழ்மொழிவல்லபண்டிதர்களும், அறிஞர்களும் கட்டுரைக ளெழுதலால் நன்கு நடைபெறுமென்று தோன்றுகிறது. இதன் வருடச்சந்தா ரூபா 1, வெளிநாடுகளுக்கு ரூ 1—4—0, வேண்டுவோர் ஜீவானந்தபோதினி ஆபீஸ் நெ. 1-382, சௌக்கார்பேட்டை, சென்னை, என்ற விலாசத்திற் பெறலாம்.

ஆசிரியர்போதினி.—இது, யாழ்ப்பாணத்துத் தமிழாசிரியர்சங்கத்தினின்றும் மாதந்தோறும் வெளிவரும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. இதில் நம் தமிழ்மக்கள் கல்வி, அறிவு, ஆற்றல் முதலியவற்றால் முன்னேற்றமடையும்பொருட்டு, அவர்களைக் கற்பிக்கும் ஆசிரியர் தெரிந்துகொள்ளவேண்டிய பலவிடயங்களும் நன்றுபெழுதப்படுகின்றன. இதன் வருடச்சந்தா ரூபா 2. தனிப்பிரதி அணா 4. வேண்டுவோர், "மானேஜர், ஆசிரியர்போதினி, சுன்னாகம், யாழ்ப்பாணம்." என்ற விலாசமெழுதிப் பெறலாம்

ஆத்மசக்தி:—இது, தமிழ்மக்களின் அறிவு, ஆற்றல், ஒழுக்கம் முதலியவற்றை வளர்த்தற்குரியபலவிடயங்களை வெளியிட்டுவரும் ஒரு மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகை. இதன்வருடச்சந்தா ரூபா 1. வெளிநாடுகளுக்கு ரூபா 1—4—0 (மணிபார்டர் செய்யவேண்டும்.) வேண்டுவோர் ஆத்மசக்திகாரியாலயம்; புதுச்சேரி என்ற விலாசத்திற் பெறலாம்.

காலிஅன்வர்பாஷா.—இது துருக்கியின் மாஜிமந்திரி காலி அன்வர்பாஷாவின் சரித்திரச்சுருக்கமென்றும், கிலாபத்பதவியைக் காப்பாற்றிய துருக்கியர்களின் மார்க்கவிசுவாசமுதலியவற்றைக்காட்டுவதற்கு எழுதப்பட்டதென்றும் இதன்முகவுரையால் வெளியாகிறது. இதன் விலை அணா 6. வேண்டுவோர் இதனையெழுதிய இ. சே. முகம்மது இபுராஹீம் அவர்களிடம் மதுரைப்புதுமண்டபம் புத்தகக்கடையிற் பெறலாம்.

பாலர்மித்திரன்.—இலங்கையிலுள்ள இந்துகலாசங்கத்தாரால் வாசகபாடம்படித்து அறிவுதிருந்துதற்குரியபாலர்களுக்கெல்லாம் பயன்படும்படியாக ஒழுக்கமுறைகளையறிவிக்கும் சிறியவியாசங்களும், கதைகளும், வினா, விடைகளும், செய்யுள்களுமடங்கியதாய் மூன்றுமாதத்துக்கு ஒருமுறை புத்தகரூபமாக வெளியிடப்பட்டுவருகிறது; இதன் வருடச்சந்தா ரூபா 1. வேண்டுவோர் "இந்துவிட்டசெரிசொலைவடி செட்டிதெரு கொழும்பு" என்ற விலாசத்திற் பெறலாம்.

பர்த்துருஹரியார்.—இது பர்த்துருஹரிஸுபாஷிதம் என்று வடமொழியிலுள்ள 300 சுலோகங்களுக்கும் சரியான தமிழ்மொழிபெயர்ப்புச்செய்யுளாக எட்டயபுரம் ஸ்ரீமத் கடிகைநமச்சிவாயப்புலவரவர்களால் இயற்றப்பட்டது. இதனால் சிருங்காரம், நீதி, வைராக்கியம் என்னும் விடயங்களைப்பற்றிய பலபகுதிகளினியல்பும், அவற்றின் நன்மை தீமைகளும், அவைபற்றிய அருமையானபலகருத்துக்களும் அறியத்தகும். இதனை அச்சிடுதற்கு ஊக்கி உதவிபுரிந்த திருநெல்வேலிவக்கீல் ஸ்ரீமத் கிருஷ்ணஸாமி ஐயரவர்களது ஆர்வமுடைமை பாராட்டத்தக்கது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் எட்டயபுரம் புலவர் சண்முகம்பிள்ளையவர்களுக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீ:

பெருந்தொகை.

முதலாவது

கடவுள் வாழ்த்தியல்.

முதற்கடவுள்.

1. பூமலை நீருறையுள் புள்ளேறு புட்கொடி
வாய்மைவே லாழி படைக்கலம்—நாமம்
பிரம னிறைகண்ணன் பொன்றீக்கார் மேனி
கருமம் படைப்பழிப்புக் காப்பு.

கந்தழி

2. சார்பினுற் றோன்றாது தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று மின்பந் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான் மனத்தா னறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்.

(பெருந்தேவபாணி வகை)

3. மணிவிளங்கு திருமார்பின் மாமலராள் வீற்றிருப்பப்
பணிதயங்கு நேமியும் பானிறத்த சுரிசங்கும்
இருசுடர்போ லிருகரத்தி லேந்தியமர் மாயோனும்
பங்கயத்தி லுறைவோனும் பாகத்தோர் பசுங்கொடிசேர்
செந்தழற்க ணுதலோனுந் தேருங்கா னீயென்பார்க்
கவரவர்த முள்ளத்து ளவ்வுருவா யல்லாத
பிறவுருவு நீயென்னிற் பிறவுருவு நீயேயாய்
அளப்பரிய நான்மறையா லுணர்த்துதற் கரியோனே.!

(எட்டடித்தரவு)

எவ்வுயிர்க்கு முயிரேயா யியங்குதனின் றொழிலாகி
அவ்வுயிர்க்க ணடங்கியே யருளாது நிற்றலினால்
வெவ்வினைசெய் தவையுழந்து வெம்பிறவிக் கடலழுந்த
அவ்வினையை யகற்றுமவ னிற்பதுநின் னருளன்றே ;

(1) யாப். வி. 94. (2) தொல். பொரு. 88. நச். உரை ; திருமுரு. நச். உரை. (3) தொல். பொரு. செய். 146; பேரா...உரை; நச்...உரை.

பல்லுயிரும் படைப்பதுநின் [1]பண்பன்றே பகலின்றல்
வல்வினையின் வலைப்பட்டு வருத்தங்கூ ருயிர்தம்மை
நல்வினையே பயில்வித்து [2]நடுக்கஞ்செய் பகைநீக்கி
அல்லல்வா யழுந்தாம லகற்றுவது மருளன்றே;

அழிப்பதுநின் ஹொழிலென்றே யறைந்தாலு முயிரெல்லாம்
ஒழித்தவற்றன் ஹுணர்வுகளை யொருவாம லுடனிறுத்திப்
பழிப்பின்றிப் பலகாலு மிப்பரிசே பயிற்றுதலின்
அழிப்பதுவு மில்லையா லாங்கதுவு மருளன்றே.
(தரவின்பாகம்பற்றிய நான்கடித்தாழிசை)

வேள்வி யாற்றி விதிவழி யொழுகிய
தாழ்வி லந்தணர் தம்வினை யாயினை;
வினையி னீங்கி விழுத்தவஞ் செய்யும்
முனிவர் தமக்கு முத்தி யாயினை; (ஈரடியிரண்டு)

இலனென [3]விகழ்ந்தோர்க் கில்லையு மாயினை;
உளனென வுணர்ந்தோர்க் குளையு மாயினை;
யருவுரு வென்போர்க் கவையு மாயினை;
பொருவற [4]விளங்கிய போத மாயினை; (ஓரடி நான்கு)

பானிற வண்ணனீ; பனிமதிக் கடவுணீ;
நீனிற வுருவுநீ; நிறமிகு கனலிநீ;
அறுமுக வொருவனீ; ஆனிழற் கடவுணீ;
பெறுதிரு வுருவுநீ; பெட்பன பிறவுநீ; (இருசீரெட்டு)

மண்ணுநீ; விண்ணுநீ; மலையுநீ; கடலுநீ;
எண்ணுநீ; எழுத்துநீ; இரவுநீ; பகலுநீ;
பண்ணுநீ; பாவுநீ; பாட்டுநீ; தொடருநீ;
அண்ணனீ; அமலனீ; அருளுநீ; பொருளுநீ; (ஒருசீர் பதினாறு)
ஆங்க—(தனிச்சொல்)

இனைய யாகிய விறைவநின் னடியிணை
சென்னியின் வாங்கிப் பன்னாள் பரவுதும்
மலர்தலை யுலகின் மன்னுயிர்க் கெல்லாம்
நிலவிய பிறவியை நீத்தல் வேண்டி

[1] பண்பென்றே. [2] நடுக்கஞ்செய்பவை நீக்கி. [3] விகழ்ந்தோர்க், விதர்ந்தோர்க். [4] விளங்கிப்.

முற்றிய பற்றொடு செற்ற நீக்கி
முனிமை யாக்கிய மூவா முத்தியை
மயலற வளித்தநின் மலரடி
அரிய [1]வென்னு யுரிதினிற் பெறவே. (சரிதகம்)

4. நல்லார் வணங்கப் படுவான்பிறப் பாதி நான்கும்
இல்லா னுயிர்கட் கிடர்தீர்த்துயி ரின்ப மெய்துஞ்
சொல்லான் தருமச் சுடரோனெனுந் தொன்மையினன்
எல்லா முணர்ந்தா னவனேயிறை யாக வேத்தி.

5. புகலிரும் பனிச்சோலைப் பொன்மலைபோற் பொலிந்திலங்கி
யகல்விசும்பிற் சுடர்மாட்டி யைம்பூத மகத்தடக்கி
மண்ணக மிருணீங்க மன்னுயிர் படைத்தக்கால்
அண்ணலேற் றெழிலூர்தி யருமறை முதல்வனுந்
தண்ணறுங் கமழ்துழாய்த் தாமரைக் கண்ணனும்
வண்ணம்வே றுடம்பொன்றாய் வானவில் லனையரே.

திருமால்.

6. என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிரானவான்—என்றும்
பிறவாத பேராளன் பேரா யிரமும்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

7. வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறாய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழிந்த—மேன்மை
அரியே யனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை.

8. விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானச்
சுரநதிபா யுச்சி தொடுத்த—அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்ட பெருநாவா
யாம்பொலிவிற் றாயினதா லன்று.

9. வானகி மண்ணாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாந் திருமாலே—ஆனாயா

---

[1]வன்று. (4) யாப். வி. 94 (நீலகேசி). (5) தொல். செய். 149 நச். (6) மியூசி. காட். II. 2. (7) தண்டி. 105 உதா. (8) ஷை. 35 உதா. (9) ஷை. 122 உதா.

வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.

10. வண்டடைந்த கண்ணி வளராய்ச்சி வாணெடுங்கண்
சென்றடைந்த நோக்க மினிப்பெறுவ—தென்றுகொல்
கன்றெடுத் தோச்சிக் கனிவிளவின் காயுதிர்த்துக்
குன்றெடுத்து நின்ற நிலை.

(வினைநிரனிறை.)

11. இறுத்தொசித் தட்டுதைத் தேந்திப்போழ்ந் தாடிப்
பறித்தெறிந் தூர்ந்தணைந்து காத்தான்—செறுத்த
விடைகுருந்த மல்லரு ளருள்மலைமா கூத்துப்
படைவிளவு புட்பாம் பிணம்.

12. உண்டேர்ந் துதைத்தழித் தூறிக்காத் தேற்றளந்து
கொண்டெடுத்து வாய்போழ்ந்து சென்றாக்கிக்—கண்டறுத்தான்
பேய்முலை புட்சகடஞ் சோகோடான் நீர்நிலம்
பூமலைமா தூதமிர்த நஞ்சு.

13. பேய்முலை வியன்ஞாலம் பூங்குருந்த மதவேழம்
வாய்மருப் பெழிலேறு வாட்கண்ணார் குரவைச்சீர்
உண்டானு மளந்தானு மொசித்தானுங் காத்தானுங்
கொண்டானுங் கொடுத்தானுங் கொடியுவணத் தானரோ.

(தேவபாணிவகை.)

14. உறைபதியி னுடனயனை யுந்தியாற் படைத்தோயும்
அறைகடல்சூழ் நிலமுதலா வனைத்துலகும் புரப்போயும்
இருநிறமே கரிபோகத் திருமேகம் பயந்தோயும்
ஒருநிறமே நிறமாக [1]வொள்ளெரியை யுயிர்த்தோயும்
[2]மறுவித்து மார்பென்ன மலர்மகளை வைத்தோயும்
நிறத்தோடு நெஞ்சொத்த நிலமடந்தை கணவனுநீ; (இது தாவு).

பின்னமா யொன்றாகும் பெருமாயை யியற்றுவாய்
இன்னமா யந்தெளிய வெமக்கருளி யிமையவர்க்கும்
அன்னமாய் முன்னொருகா லறம்பயந்த [3]வறனுநீ;

---

(10) முல்லைப்பாட்டு இறுதி. (11–13) யாப். வி 94. (14) தொல். செய். 146 நச், பேரா. [1] வெள்ளொளியை. [2] மறுவகத்த. [3] வறிவனீ.

குறியாதும் பிழையாத [1]குலமறையை முதன்மயக்கி
வெறியாதி மலரோற்கு வெளிப்படுத்து வேறுபடுத்
தறியாத மறையெமக்கு மறிவித்த [2]வறிவனீ;

மாணாத[3] மதிகொடுத்து வானவரை மயக்கியுங்
கோணாத மதிவாங்கிக் கொடுத்தருளி யடியவர்க்குக்
காணாத மதிகாட்டுங் கருணைகூர் காட்சியைநீ; (மூன்றாந் தாழிசை.)

வானுநீ நிலனுநீ மதியுநீ விதியுநீ
தேனுநீ யமுதுநீ திருவுநீ யுருவுநீ
அன்புநீ யருளுநீ யாதிநீ யந்தநீ
இன்பநீ துன்பநீ யின்மைநீ யுண்மைநீ; (ஒருசீர்ச் சின்னம்.)
எனவாங்கு; (தனிச்சொல்.)

நால்வகை யுருவிற் பால்வே றாகிய
கால[4] முதல்வரிற் பரவுது ஞாலத்து
[5]நல்லவை யல்லவை யெல்லா நினைஅது
செல்வ நோக்கி னெய்திய வல்லிதிற்
றயரொடு தொல்வினை நீங்கிப்
பெயராச் சுற்றம் பெறுகம்யா மெனவே (சுரிதகம்).

விளக்கத்தனார்பாட்டு.

(அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா.)

15. கெடலரு மாமுனிவர் கிளர்ந்துடன் றொழுதேத்தக்
கடல்கெழு கனைசுடரிற் கலந்தொளிரும் [6]வாலுளை
[7]யழல்விரி சுழல்செங்க ணரிமாவாய் மலைந்தானைத்
தாரோடு முடிபிதிரத் தமனியப் பொடிபொங்க
வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்! (தரவு)

முரசதிர் வியன் மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியோடு முடியிறுப்புண் [8]டயர்ந்தவ ணிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ;

---

[1] குறிமறைய. [2] அறவனீ. [3] மாணாக. [4] கோல. [5] நல்லவை நல்லவை; நல்லவை யாவை யெனா அது நினைந்து—செல்வ நோக்கியனெய்தினி வல்லிதிற்.
(15) யாப். வி. 83; யாப். கா. செய். 2 உரை; தொல். செய். 147 பேரா; நச். [6] வாலுளைய. [7] யழலவிர். [8] டயர்ந்தவர் நிலஞ் சேராப்.

கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணுதா ருடம்பொடு மறம்பிதிர [1]வெதிர்கலங்கச்
சேணுய ரிருவிசும்பிற் [2]செகுத்ததுநின் சினமாமோ;

படமணி [3]யினநிரைகள் பரந்துட னிரிந்தோடக்
கடமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநொடு மருப்பொசிய [4]வீழ்ந்ததிறம் வேருக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ;
(இவை மூன்றுந் தாழிசை)

இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅ னின்னிறம்;
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை; (பேரெண்)

கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை;
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை;
ஒலியிய லுவண மோங்கிய கொடியினை;
வலிமிகு சகட மாற்றிய வடியினை; (அளவெண்)

போரவுணர்க் கடந்தோய் நீ; புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ; நிழறிகழும் படையோய் நீ (இடையெண்)

ஊழி நீ; உலகு நீ; உருவு நீ; அருவு நீ;
ஆழி நீ; அருளு நீ; அறமு நீ; மறமு நீ; (சிற்றெண்)

எனவாங்கு (தனிச்சொல்)

அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
றொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் [5]தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்றுமுதிர் கடலுலக முழுதுடன்
ஒன்றுபு திகிரி யுருட்டுவோ னெனவே. (சுரிதகம்)

(கலிப்பாவகை.)

16. அணிகினர் சிறைபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணிபிரும் பனிமுந்நீர்த் [6]தோட்டவிழ்ந்து மலர்ந்தனையே
[7]ஆர்கலி யுயாக வெழில்வானத் தமரர்கண முடனேர்ப்ப

---

[1] வெதிர் கலக்கி. [2] சேர்த்தது நின். [3] பினநிரை. [4] வீழ்ந்துதிறல், வீழ்ந்துதிறம். [5] தடக்கைச்செவ்வே. (16) யாப். வி. 94. [6] தொட்டுழந்து, தொட்டுத்துயி லமர்ந்தனையே. [7] வார்புகல் கழன்மறவர்.

வார்புன லிகன்மிகல மறமல்லனை மாய்க்கலிற் பொங்கினை
முன்னெயிற் றரிமருள்க ணுய்த்தியொடு நிரைநடுங்க
வரைதிர ணிமிர்தடக் கையினனி மலையெடுத் தேந்தினை
காமரு தகைய கல்லியன் மார்பினை
கண்பொரு சுடரொளி நேமியை
பூமலி வினைபுனை தாரினை
பொன்புனை வினைபுனை யுடுக்கையை
அனையன
பலவுடன் புகழ்தகப் பயந்தோய்நின்
இணைபுணர் கழலடி பரவுதும்
துணைபுண ருவகையொடு மன்னுது மெனவே.

(ஆசிரிய மண்டில விருத்தம்).

17 நிலங்கா ரணமாக நீர்க்கங்கை யேற்றான்
நீண்டதா ளாலங்கோர் நீர்க்கங்கை யேற்றான்
சலங்கா ரணமாகச் சங்குவாய் வைத்தான்
தாயலா ளவியநஞ் சங்குவாய் வைத்தான்
துலங்காச்சீர்த் தானவரைத் துன்னத்தா னட்டான்
[1]துன்னுவார்க் கின்னமிர்தந் துன்னத்தா னட்டான்
இலங்கா புரத்தார்தங் கோமானை யெய்தான்
[2]எத்தாதார் நெஞ்சத்து ளென்ஞான்று மெய்தான்.

(தேவபாணி).

18. மலர்மிசைத் திருவினை வலத்தினி லமைத்தவன்
மறிதிரைக் கடலினை மதித்திட வடைத்தவன்
இலகொளித் தடவரை கரத்தினி லெடுத்தவன்
இனநிரைத் தொகைகளை யிசைத்தலி னழைத்தவன்
முலையுணத் தருமவ ணலத்தினை முடித்தவன்
முடிகள்பத் துடையவ னுரத்தினை யறுத்தவன்
உலகினைத் தையுமொரு பதத்தினி லொடுக்கினன்
ஒளிமலர்க் கழறரு வதற்கினி யழைத்துமே.

அரியைப்பாடவேண்டுமென்னக் கூத்தர் பாடியது.

19. ஆரோ வெனுமொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்தன்
பேரோ வருமென்ன பேறுபெற் றேன்பெரு நான்மறையின்

(17) யாப். வி. 77 உரை. [1]துன்னலார்க். [2]எய்தாதார். (18) சிலப். 6:35 உரை.
(19) தமிழ்நா. 130.

வேரோ மிதிலையின் மின்றுட னேவெய்ய கானடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.

கம்பர்பாட்டு.

20. நாரா யணாய நமவென்று நன்னெஞ்சர்
பாராளும் பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காராரு மேனிக் கருணா காமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே.

திருமால் திருநாமப்பெருமை.

21. வான்சொல்லுமே புவிசொல்லுமே மறைசொல்லுமே நிறைசேடன்வாய்
தான்சொல்லுமே முனிவோர்பெருஞ் சபைசொல்லுமே சசிசொல்லுமே
தேன்சொல்லிபங் கிறைசொல்லுமே திசைசொல்லுமே நிசையாமலே
நான்சொல்லவு மெளிவந்தவா நாராயணா நாராயணா.

பாரதம்பாடிய பெருந்தேவனார்பாட்டு.

22. தேனோங்கு நீழற் றிருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றுந்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

திருவரங்கத்துத் திருமால்.

23. நாவுண்டு நீயுண்டு நாமந் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே பயமுண்டோ—பூவுண்டு
வண்டுறங்குஞ் சோலை மதிலரங்கத் தேயுலகை
யுண்டுறங்கு வானொருவ னுண்டு.

திருவரங்கத்துச் சுற்றாவரணம்.

24. மாடமாளிகை சூழ்திரு வீதிபு மன்னர் சேர்திரு விக்ரமன் வீதியும்
ஆடன் மார னகளங்கன் வீதிபு மாலி நாட னமர்ந்துறை வீதியும்
கூடல் வாழ்குல சேகரன் வீதியுங் குலவிராச மகேந்திரன் வீதியும்
தேடு த ரும வருமாவின் வீதியுந் தென்னரங்கர் திருவா வரணமே.

திருவேங்கடத்துத் திருமால்.

25. கூனிந்று போனவன் ஜூனியிர்ந் தோடக் குருடன்கொம்பிற்
றேனென்று காட்ட முடவன் குடங்கொண்டத் தேன்பிழியத்
தானின்ற ஊமை தனக்கென்று கேட்கத் தருவர்வரம்
வானின்ற சோலை புடைசூழ் வடமலை மாயவரே.

(20) சில இராமாயணவேடுகளிற்கண்ட பாயிரசெய்யுள். (22) பாரத வெண்பா: செந்தமிழ் 3. 400. (23) நன்னூல், 338 மயிலைநாதருரை. (24) கோயிலொழுகு, தலைப்பு.

திருமுட்டத்துத் திருமால்.

26. முட்டத்துப் பன்றி முளரித் திருப்பதத்தைக்
கிட்டத்துப் பன்றிக் கிடந்தேனே—தொட்டு
மருங்கிலே சங்கெடுத்த மாலே யெனக்கு
வருங்கிலே சங்கெடுக்க வா.

திருக்கண்ணமங்கைத் திருமால்.

27. நீல மழைமுகிலோ நீலமணிக் குன்றமோ
கோல நிறைந்த குரைகடலோ—சோலையிளங்
காயா வனமோ கழுநீரோ கண்ணமங்கை
மாயா னுனதுவடி வம்.

சவரிப்பெருமாள்.

28. முன்போம் புலவற்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின்போஞ் சவரிப் பெருமாளே—யன்பாகப்
பேய்முலைப்பா லுண்டவனே பேதையே னின்னமொரு
தாய்முலைப்பா லுண்ணுமற் று.

கச்சித் திருமால்.

29. ஆடவர்க ளெவ்வா றகல்வாரணி வெஃகாவும்
பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
நின்று னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
மன்றார் [1]கலிக்கச்சி மாண்பு.

அத்திகிரி.

30. அன்றயனை யுந்தியி னளித்தபரன் மேவுவது மத்தி கிரியே
சென்றுகரி கவ்வுமுத லைக்கனிற மேவுவது மத்தி கிரியே
வென்றவன் வணக்குவது மேலில கெயிற்றரிய தான வரையே
தன்றொழின் முருக்குவது தானில கெயிற்றரிய தான வரையே.

திருமோகூர்த் திருமால்.

31. பொன்னனைவா ளரக்கனைநூற் றவரைக் காவைப்
பொருசிலையைக் கனைகடலைப் பொன்ன னீன்ற

(27, 28) தொண்டைமண். சத. மேற்கோள். (29) யாப். வி. 94; இது திருமழிசையாழ்வார்க்கு அடியாராகிய கணிகண்ணர்வாக்காகும். [1] மலிகச்சி, மதிற்கச்சி, பொழிற்கச்சி. (30) வீரசோ. யாப். 16 உரை. (31) காளமேகப்புலவர் பாடியது என்பர்.

நன்மகற்காய்ச் சூர்ப்பணகையை வருக்காய்க் காத
நப்பின்னைக்காய்ச் சானகிக்காய் நடவைக் காக
மன்னுசிரால் வடிக்கணையால் வளையாற் புள்ளால்
வயங்குதோள் வலியால்வா னரங்க ளாலும்
மூன்றுடற்கீ றிச்சிரங்கொண் டமரில் வீழ்த்தி
முதலொடுங்கொண் டிறுத்தடைத்த மோகூ ரானே.

ஸ்ரீவில்லிபுத்தூர்க்கோபுரம்.

32. இருக்கோது மந்தணர் சூழ்புது வாபுரி யெங்கள்பிரான்
மருக்கோதை வாழும் வடபெருங் கோயின் மணிவண்ணனார்
திருக்கோ புரத்துக் கிணையம்பொன் மேருச் சிகரமென்றே
பருக்கோத லாமன்றி வேறுவ மானப் பணிப்பில்லையே.

குறுங்குடித் திருமாலைக் கூத்தர்பாடியது.

33. திக்குவெட் டுக்கயந் துக்கமுற் றுத்திடுக் கிட்டலற
மைக்கடற் குட்சாந் தைக்கவிட் டோற்கிட மாமதுர
இக்குமுற் றிக்கனுச் சற்றுவிட் டுத்தெறித் திட்டமுத்தைக்
கொச்சுமொக் கிக்கக்கி விக்குமச் சோலைக் குறுங்குடியே.

ஷை புகழேந்திபாடியது.

34. எட்டெழுத் தைக்கருத் திற்குறித் திட்டுநித் தம்பரவும்
சிட்டர்கட் குத்திருப் பொற்பதத் தைச்சிறக் கத்தருமவ்
வட்டநெட் டைப்பணித் தற்பநித் [1]தற்கிடம் வாரிசப்பொ
குட்டினத் துக்குலந் தத்திமுத் தீனுங் குறுங்குடியே.

திருமால்பதி.

35. ஆழ முடைமையினு லாழியா மந்தரத்து
வாழ நிமிர்தலான் மந்தரமாம்—எழுலகுந்
தந்தளிக்கும் வண்ணத்தாற் றுயாஞ்செந் தாமரைக்கட்
பைந்தெரியன் மாயோன் பதி.

சிவபிரான்.

36. மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
ஆதிரையா னாதிரையா னென்றென் [2]றயருமால்
ஊர்திரைநீர் வேலி யுலகு.

• (32)ஸ்ரீவில்லிபுத்தூர்க் கீழைக்கோபுரத்துக்கண்டசாஸனப்பாட்டு. [1]மெத்தையத். (35)வீரசோ அலங். 19உரை. (36)முத்தொள்ளாயிரக்காப்பு. [2]அயர்வுறுமீ.

37. நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியா மன்றி—மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரா [1]னொருவனிய மானனுமாய்
எண்ணிறந்த வெப்பொருளு மாம்.

38. கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்றாழ் சடையர்—பொறிவிரவு
நாகத்தர் சூலத்தர் நன்னுதலா டாணிருந்த
பாகத்த ரென்றே பாசு.

39. தலைபினமர் கங்கைத் துகிலுடையான் றன்னைச்
சிலைபினமர் செங்கண்மால் பாகன்—நிலைபினமர்
தானவரைக் கொன்று விழக்கெடுத் தான்றனியே
வானவரெல் லாமதிக்க வந்து.

40. மாத ருமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையி னொலியாலோ—யாதாலோ
கோல மிருதிறனுக் கொண்டான் றிருமிடற்றின்
ஆல மமிர்தான வாறு.

41. கொடியார் கொடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பனைத்தடக்கை நால்வாய்க்—கடியார்
உரியா ருரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம்.

42. கரவோடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவோடு நிற்பித்த தெம்மை—யரவோடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.

(தரவுகொச்சகம்)

43. நீறணிந்த திருமேனி நெருப்புருவங் கிளைத்ததுபோற்
கூறணிந்த குங்குமங்கொண் டொருமுலையோ குறிசெய்ய
வேறணிந்த [2]சுடரெறிப்ப வேணிலாற் கெரிவிழித்த
ஏறணிந்த வெல்கொடியோ யெவ்வுயிர்நிற் றவிர்ந்தனவே.

---

(37) தண்டி. 74 உரை; வீரசோ. அலங். 29 உரை: [1]னொருவனுயிர்க்குயிராய். (38) வீரசோ. அலங். 10 உரை. (39) ஷை. 19 உரை. (40) தண்டி. 63 உரை. (41) ஷை. 93 உரை. (42) வீரசோ. அலங். 26 உரை; தண்டி. 61 உரை; (43) தொல். செய். 149; பேரா; நச். உரை. [2]குவடெறிப்ப.

(நாலியலாக்கோச்சகம்)

44. பூணாக வெண்பணிந்தான் பூதத்தான் வேதத்தான்
கோணாகக் கச்சையான் கோடேந்து கொல்லேற்றான்
மாணாக வெண்ணூலான் வாணுதலாள் பாகஞ்சோண்
[1]ஊணாரும் பிச்சையா னுண்ணாத நஞ்சுண்டான்
வாணாறு தோய்ந்த [2]சடையான் மழுவலத்தான்
[3]யாணர்வஞ் செய்யு மிறை;

எனவாங்குப் பாடி யிறைஞ்சுவோர்க் கெல்லாம்
வினைமாசு தீரும் விளக்காகுந் தோற்றத்
தனையோய் மறலிக்கு மச்சம் [4]பயந்த
புனைபூங் [5]கழற்கான்மேற் பூவொடுநீர் தூஉய்
மனைமாண்ட பாக முளப்பட வாழ்த்தி
எனைநாளு மேத்துது மெந்தையே நின்னை
நினையா தொழியற்க நெஞ்சு.

(கொச்சக வகை.)

45. கடாமுங் குருதியுங் கால்வீழ்த்த பச்சைப்
படாமும் புலித்தோலுஞ் சாத்தும் பரமன்
இடாமுண்ட நெற்றியா னெஞ்ஞான்றுங் கங்கை
விடாமுண்ட வார்சடையான் வெண்ணீ றணிந்தான்
மெய்புறு நோயில்லை வேறோர் பிறப்பில்லை
ஐபுறு நெஞ்சில்லை [6]யாகாத தொன்றில்லை.

(பெருந்தேவபாணி வகை)

46. பலியுருவிற் கேலாத படைமழுவாள் வலனேந்திப்
புலியுரிமேற் பைத்தலைதாழ் பூங்கச்சை யிரித்தமைத்துக்
கண்கவருந் திருமேனி வெண்ணூலின் கவின்பகைப்பத்
தண்கமழ்பூந் தாரிதழி தலைமலிந்து பிறைதயங்க
மொழிவலத்தான் மயங்காதே முறுவலாற் றேலாதே
விழிவலத்தா னுருவழிந்தோன் வேடங்கண் டுணர்வழியாக்
கலிகெழு கடற்கச்சிக் கமழிணர்த் தேமாவின்
ஒலிதளிரு [7]மூலைச்சுவடு முடன்சிறப்ப வுலவுங்கால்; (எட்டடித்தாவு)

---

(44) தொல். செய். 149; பேரா. நச். உரை. [1]ஊணாரும். [2]சடையான்வண் மாகத்தான். [3]யாறேர் வஞ். [4]பயக்கும்; [5]கழற்றூண்மேற் பூவொடுநீர் தூவி. (45) தொல். செய். 149. ஷை. [6]யாவதொன் றில்லை. (46) தொல். செய். 146. பேரா. நச். [7]முலைச்சுவட் டுடன் சிறப்ப.

நீறேறுந் திருமேனி நெடும்பகலே நிலவெறிக்க
ஏறேறிக் கடைதோறு மிடுபலிக்கு வருதிரால்
ஏறேறி யிடுபலிக்கு வரும்பொழுது மிடைபிரியாக்
கூறேறும் பசும்பாகங் கொள்ளுமோ கொள்ளாதோ ;

பல்லேற்ற பரிகலத்துப் பலியேற்றன் மேலிட்டு
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப வருதிரால்
வல்லேற்ற முலைமகளிர் மனமேற்ப நீர்வருங்காற்
கொல்லேற்றுக் கறுகிடலுங் கொள்ளுமோ கொள்ளாதோ;

நாணாக மடந்தையர்பாற் பலிக்கென்று நடந்தக்காற்
பூணாகந் தழீஇக்கொளினும் பொங்காது போலுமால்
பூணாகந் தழீஇக்கொளினும் புகையுயிர்த்துப் பொங்காத
கோணாகம் யாந்தருபால் குடிக்குமோ குடியாதோ;
(நான்கடித்தாழிசை மூன்று)

[1]எரிகல னிமைக்கு மிடவயிற் றொருகைக்கை
பரிகல னேந்தும் [2]பரிசிறந் ததுகொல்;
உமையவள் விலக்கவு மொலிகட னஞ்சம்
இமையவர் தம்மை [3]யிரந்துண் டதுகொல்; (ஈரடியிரண்டு)

இடையேழு பொழில்கட்கு மிமைப்பளவிற் [4]செல்லேறே
கடைதோறு மதுநிற்பக் கற்பித்த வாறெவன்கொல் ;
இரப்புநீர் வேட்டதுகேட் டிமையவரென் பட்டனரே;
பரப்புநீர்க் [5]கங்கையே படர்சடையிற் கரந்ததே ; (ஓரடி நான்கு)

பூண்டன வென்பு; [6]புனைவது தும்பை ;
ஆண்டன பூதம்; அறைவது வேதம் ;
இசைப்பன [7]பல்பேய் ; எழீஇயது வீணை ;
அசைப்பன வேணி; அதிர்வன பொற்கழல் ; (இருசீரெட்டு)
எனவாங்கு ; (தனிச்சொல்)

எல்வளை மகளி ரிடுபழி நகைஇப்
பல்கடை திரிதருஉஞ் செல்வநிற் பரவுதும்
கொடியணி யேனம் பொடியணிந்து கிடப்ப
வடதிசை வாகை சூடித் தென்றிசை

---

[1]எரிவளை தரிக்கு மிடவயிற் றொருகைக்கை. [2]பரிசிரங். [3]யிரந்துகொண் டனை கொல். [4]கொல்லேறே. [5]கங்கையோ, கங்கையோர். [6]புனைந்தது. [7]பல்வேய்.

வென்றி வாய்த்த வன்றாள் [1]வளவன்
இமிழிசை வேங்கடம் போலத் [2]தமிழ்ந்து
நாவலொடு பெயரிய ஞாலங்
காவல் போற்றி வாழிய நெடிதே. (சரிதகம்)

(சிறுதேவபாணி)

47. வண்ணமலர்ச் சரங்கோத்து மதனவேண் மிகவெய்யக்
கண்ணனவோர் புலனல்லாக் கனல்விழியா லெரித்தனையால்
எண்ணிறந்த தேவர்களு மிருடிகளு மெழுந்தோட
ஒண்ணுதலாள் பாகங்கொண் டொருதனியே யிருந்தனையே.

(கோச்சகவகை)

48. பிறையணிந்த சடைமுடியோன் பிஞ்ஞகன் பெம்மான்
கறையணிந்த கண்டத்தான் கையிலங்கு சூலத்
திறையணிந்த நெஞ்சினோர்க் கின்றும் பிறவி
இம்மைப் பிணியு மியலும் பசியொடு
தம்மைத் துறந்திடும் தாவில் புகழுளதாம்.

49. கல்லாலந் [3]தண்ணிழற்கீழ்க் கல்வித் துறைபயந்த காமர்காட்சி
நல்லானை நல்லா னொருபாக மாகிய ஞானத்தானை
எல்லாரு மேத்தத் தகுவானை யெஞ்ஞான்றும்
[4]சொல்லாதார்க் கெல்லாந் துயரல்ல தில்லைத் தொழுமின் கண்டீர்.

50. வண்டணி கொண்ட மதுமலர்க்கொன்றை யினமாலை
தொண்டணி செஞ்சடைக் கோட்டிளந் திங்கள்போலப்
பண்டணி யாகப் பலர்தொழுங் கங்கைநீர் வைத்தான்
உண்டணி கொண்டநஞ் சுண்பார்க் [5]கமிழ்தாகுமே.

51. இடங்கை வெஞ்சிலை வலங்கை வாளியி
னெதிர்ந்த தானையை யிலங்கு மாழியின் விலங்கியோள்
முடங்கு வாலுளை மடங்கன் மீமிசை
முனிந்து சென்றுடன் முரண்ட ராசனை முருக்கியோள்

---

[1]விடலை. [2]தமிழகத்து.(47) சிலப். 6. 35 அடியார்க்.(48) தொல். செய். 149 நச். (49) தொல். செய். 149 பேரா; நச்: [3]தன்னிழற்கீழ்க் " [4]சொல்லா டார்க். (50) தொல். செய். 149 பேரா; நச். [5]கழிந்தாமே. (51) யாப். வி. 25.

வடங்கொள் மென்முலை நுடங்கு நுண்ணிடை
மடந்தை சுந்தரி வளங்கொள் பூமழை மகிழ்ந்தகோன்
தடங்கொ டாமரை யிடங்கொள் சேவடி
தலைக்கு வைப்பவர் தமக்கு வெந்துயர் தவிர்க்குமே.

52. ஒரு வான் யாறோடு சடாடவிப்
பெரு நாகமே பூணும் பெருமான்
அரு வாயினு ளுயினு மன்பர்க்
குரு வாயினு னுள்ளதி னுள்ளே.

(கொச்சகவகை)

53. மையணி கண்டனை வானோர்தம்
ஐயனை யாயிரம் பேழ்வாய்ப்
பையா வம்பல பூணும்
மெய்யனை மேயது வீடே.

54. எரியெள் ளுவன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்று
ரெயிலெரி யூட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாட னீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கறைந்து
வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிறந்தை யிரட்டும் விரல னிரண்டுருவா
யீரணி பெற்றவெழிற் றகைய னேரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேர்க்கும் பண்பின் மறுமிடற்றன் றேறிச்
சூலம் பிடித்த சுடர்ப்படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே.

(ஆசிரியத்துறைவகை)

55. பாடகஞ்சேர் காலொருபாற் றுபம்பொற் கழகழற்கா லொருபாற்
நீடு குழலொருபா னீண்ட சடையொருபால் [றொன்றும்
வீடிய மானி னதளொருபான் மேகலைசேர்ந்
தாடு துகிலொருபா லவ்வுருவ மாண்பெண்ணென் றறிவார் யாரே.

(52, 53) தொல். செய். 149. பேரா; நச். (54) தொல். புறத். 26, நச். (55) யாப். வி. 76; வீரசோ. யாப். 16.

(திரிபங்கி)

56. ஆதாந் தீரன்னை போலினி யாயம்பி காபதியே
மாதுபங் காவன்னி சேர்சடை யாய்வம்பு நீண்முடியாய்
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம் பிரானினியார்
ஓதுமொன் றேயுன்று வாரமுதே யும்பர் நாயகனே.

(மடக்கணிவகை)

57. வருமறை பலமுறை வகையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
அருநட நவில்வது மழகுபெற் றமன்றே
அருளொடு கடவுவ தழகுபெற் றமன்றே
திருவடி மலரன திகழொளிச் சிலம்பே
தெளிவுட னுறைவது திருவடிச் சிலம்பே
இருவினை களைபவ ரடைபதத் தனன்றே
இமையவர் புகலிறை யெனநினைத் தனன்றே.

சிவபிரான்சடை.

58. வாளரவின் செம்மணியும் வன்னியிலம் பாசிலையும்
நாளிளைய திங்க ணகைநிலவும்—நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானிலவு விற்போல் வரும்.

சிவபிரானணியும்பாம்பு.

59. பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற—மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா னார வமுதணங்கின்
பாகத்தான் சூடும் பணி.

---

(56) தண்டி 95 உரை; திரிபங்கியாவது, ஒருசெய்யுளாய்நின்றே ஒருபொருள் பயப்பதன்றி, அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறுபொருள் பயக்கத்தக்கதாகவும் பாடப்படுவது; இச்செய்யுள்—[1]ஆதாந்தீர், மாதுபங்கா, ஏதமுய்ந்தா, ரோதுமொன்றே. [2]அன்னைபோலினியாய், வன்னிசேர் சடையாய், இன்னல்சூழ் வினைதீர், உன்றுவா ரமுதே. [3]அம்பிகா பதியே, வம்புநீண் முடியாய், எம்பிரா னினியார், உம்பர்நா யகனே—என்று மூன்று பிரிவாதல் காண்க. (57) ஷை. 93 உரை: (58) ஷை. 31, (59) ஷை. 28.